பிரஜாநுகூலன்

மாதப் பத்திரிகை.

1921 - 1923.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

Vol. 17. | திரிச்சி : ஜனவரி 1920. | No. 1.

பிரபஞ்ச விலாஸம்!

176. அன்னையர் அன்பு.— தாய்மார்களுக்கு ஆண்பிள்ளைகளிடத்து, அவர்களுக்கு விவாகம் ஆகுமுன் வரையில்தான் அதிக ஆசையாம். பெண் குழந்தைகளிடத்து அவர்களுக்கு விவாகம் ஆன பிறகுதான் அதிக ஆசையாம். ஆனால் தாய் பாசம் என்பது வேறே தனியாக இருக்கும். அது ஆபத்துக்காலங்களில் தான் வெளிப்படும்.

177. உடனே வேறு விவாகம்.—புருஷர் தங்களுக்கு வாய்த்த மனைவியால் ஏதேனும் தாறுமாறு இருக்குமாகில், அது ஸகிக்க முடியாததாய்ப் போய்விடுமாகில், உடனே வேறு விவாகம் செய்துகொள்ளத் துணிந்து விடுகிறார்கள். ஸ்திரீகளோ தமது கணவன் பரம சண்டாளனாயிருந்தாலும் அவனுடன்தான் காலம் கழிக்கவேண்டும். கொட்டு முழக்கத்தோடு பிடித்த சனி ஸ்திரீகளுக்குக் கட்டையோடுந்தான் விடும். இந்தத் தலைவிதி இவர்களுக்கே. புருஷர்களுக்கு இல்லைபோலும்!

178. தாராளமும் சிக்கனமும்.—ஒருவனுடைய தாராளமும், சிக்கனமும், அதாவது செட்டும் பார்க்கவேண்டுமானால், அவன் கஷ்டப்பட்டுத் தேடிய சொந்த சம்பாதனையைச் செலவிடும்போது பார்க்கவேண்டும். பிறாது வீட்டில் இருக்கையில் அந்த வீட்டிலிருந்து வெகு தாராளமாய் எடுத்துக் கொடுத்துவிடுவதைக்கொண்டு தீர்மானித்து விடக்கூடாது.

179. முன்னிலும் அதிக வருத்தம்.—மனம் நொந்து வாடி வதங்கி, தூரத்திலுள்ள சிநேகிதரையோ, உறவினரையோ நாடிச் சென்று, சில காலமிருந்து, ஒருவாறு தேறுதல் அடைந்து தன் வீடு புகுங்கால், அவனுடைய வரவைச் சந்தோஷத்துடன் எதிர்பாராமல், கூடு சேர்ந்தவரும் அவனைத் திட்டாமல் ஜாடையாக மற்றவரை சாக்கிட்டுப் பேசுவதும், சில நிமிஷங்கள் பேசாமலே இருப்பதுமான காட்சிகள் தென்படுமாயின், அவன் மனத்தின் புது ஆறுதல்கள் அனைத்தும் பறந்து முன்னையினும் அதிகம் வருத்தும்படியாய் விடும்.

180. ஸந்தோஷத்திலும் ஏக்கம்.—சந்தோஷமாய்ப் பண்டிகை நாட்களில் பத்துபேருடன் வெளியூர் உறவினரோடும் உட்கார்ந்து உண்ணுகையில் திடீரென்று ஒரு ஏக்கம், நினைவு உண்டாகிறது. அதென்னவெனில், மறு வருஷமும் இப்படியே சுகத்தோடும் ஜீவனோடும் இத்தனைபேர்களின் கூட்டமும் இருந்து இப்படி மகிழ முடியுமா? அதில் யாரார் குறைந்து போகிறார்களோ, எங்கெங்கு அவர்கள் ஸ்தலம் மாறிப்போகிறார்களோ வென்ற ஏக்கம்தான்.

181. தனிகர் வீடு.—தனிகர் வீட்டுக்குப் பிச்சைக்காரன் வந்தால் அவனைப் போவெனக் கூறுவது வெட்கமாம். ஒரு பிடியரிசி போட்டுவிட்டால் குறைந்து விடுமாம். எதுவும் பேசாமல் கௌரவமாக மவுனமாய் இருந்து விட்டால், வந்த பிச்சைக்காரனும் வாய் ஓய்ந்தவனாகப் போய்விடுகிறான் என்று பணக்காரர்கள் கருதுகிறார்கள்.

182. தன் கைப்பணமே தனக்கு உதவி.—தாயாரிடமிருந்தாலும், உடன்பிறந்தாரிடமிருந்தாலும், அன்னியரிடமிருந்தாலும் ஒவ்வொரு வேளைகளில் காலத்தின் கோலமானது கடன்கேட்கப் போனாலும் இல்லையென்று பதில் வரும். அவர்கள் உடனே கொடார். நம் பெட்டியில் நாலு காசு இருந்தால் எந்த சமயத்துக்கும் எப்போதும் நம் இஷ்டப்படி எடுத்துச் செலவிடலாம். தன் கைத் தவிடு உதவும்—தாய் கைததனம் உதவா.

183. நமது வீடு.—எத்தனை பேருக்குச் சொந்தமாயிருந்து நமக்குச் சொந்தமானதோ, இனி யாராருக்குச் சொந்தமாகப் போகிறதோ—யார் கண்டார்? உலகில் எது தான் சொந்தம்? நீள நினைக்கில் நம் தேக முதற்கொண்டு யாவும் இரவலே.

184. ஒரு அக்காவின் கடிதம்.—"தம்பி! ஏனோ கடவுள் உன் மனதை இவ்வண்ணம் சோதிக்கிறார். சில நாள் துயரம், சில நாள் சந்தோஷம் என்பது உலகத்திற் கடுத்தது. எப்போதும் உனக்கு ஸமாதானமே கிடையாது. என்னைப்போலவே சிறு வயதிலிருந்து பலவித கஷ்டங்களாகவே இருக்கிறது. கடவுள் கிருபையால் இனிமேலாவது மங்கள முண்டாகுக."

185. ஆசாரம்.—வீட்டில் மகா ஆசாரம், வீர வைஷ்ணவம், பூஜை தடபுடல், வெகு சுத்தம். காபி ஹோட்டலிலோ பல கோடிபேர் தொட்ட எச்சில் தட்டில் ஹலுவாவை நக்குதல்.

186. ஒரு பெரிய நடு நடுக்கம்.—எத்தகைய வீரனும் ஒரு நிமிஷத்தில் நடுங்கி விடும்படி ஆட்டிவைக்கிற வஸ்து எது? தந்தியே. சுபமோ அசுபமோ யாதாயினும், அத்தந்தியைத் திறந்து பார்க்கிறவரை என்னவோ ஏதோ வென்ற நடுக்கந்தான்.

187. தந்திரமான உபசாரம்.—பசியால் வாடித் தன் வீட்டுக்கு வந்த ஒருவரை—"ஏது உங்கள் வீட்டில் பலம்போல் இருக்கிறது! விபூதி குழையல்கள் வயிறு எல்லாம் தடபுடலாயிருக்கிறதே. அடி ராஜாமணி! வெற்றிலைப்பாக்கு கொண்டுவந்து வை"— என்று தந்திரமாய்ப் பேசி அனுப்பி விடுகிறார்கள். தமக்குப் பசி யென்று அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள முடிகிறதில்லை.

188. நரி முகத்தில் விழிப்பு.—மனிதர்கள் இன்று நரி முகம் பார்த்தேன்; எனக்கு நல்ல லாபம் கிடைத்தது என்கிறார்கள். நரிக்கு உணவு அதிகமாக அகப்பட்டால் அது யார் முகம் பார்த்தது?

189. மூன்று பேர் சகுனம்.—மனிதர்கள் மூன்று பேராக ஒரு காரியத்திற்குப் போனால், அது மூதேவியாய் விடுமென்பார்கள். ஒருவர் இருவர் போய் நிறைவேறாமற் போன காரியங்களுக்குக் கணக்கு வைத்துப் பார்த்தார்களா?

190. மாமி மெச்ச.—போகிற வேளைக்குப் போடுகிற இரண்டு கவளம் சாப்பாட்டில் பெருமை மயக்கங்கொண்டு, அந்த மாமி வீட்டுச் சுகத்தைப் புதிதாய்த் தெரிந்த சிலர் விசேஷ நாளில் அவர்களை அழைத்து, பணத்தை எல்லாம் வீண் செலவாக்கி, அவர்கள் எதிரே பணம் கீழே விழுந்து விட்டதாயும் அதை எடுத்து எண்ணுவதாயும் நடித்துத் தடபுடல்

புரிந்து, அதை ஒரு கௌரவம்போல நினைத்து மகிழ்ந்து கொள்வார்கள். அற்பர்கள் அற்பத்திலேயே பல்லை இளிப்பார்.

191. தீபாவளி மரியாதை.—பெண்ணைக்கொடுத்து நூறு வருஷமானாலும், தீபாவளி மரியாதை வருஷம் தப்பாமல் பெண்வீட்டாரிட மிருந்து வந்து சேரவேண்டியது கட்டாயம் என்கிறார் ஒருவர். அது அவரது அதிர்ஷ்டம். முதல் வருஷத்துத் தீபாவளிக்கே எவ்வித மரியாதையும் அழைப்புமின்றி தம் வீட்டிலேயே குந்திக்கொண்டிருப்போர் எத்தனையோ! இது இவர்களின் அதிர்ஷ்டம்!

192. தாய்வீட்டு மரியாதை.—தன் தாய்வீட்டார் சீர் வரிசைகள் எவ்வளவு குறைவாகச் செய்யினும்,—அது தான் சொந்தத் தாய் இருந்து செய்ததாக இருந்தால்,—பெண்ணுக்கு அது எவ்வளவு குறைவாகவும் தோன்றாது. கணவன் வீட்டினர் சலித்துக் கொள்ளினும் அதற்குச்கூடத் தாய் வீட்டுச் சார்பாகப் பதில் சொல்ல வருவாள்.

193. தம்மைப்போலவே நம் மக்களும்.—அவர்கள் ஒன்றும் தெரியாத பிள்ளைகள் என்று பெற்றோர்கள் தங்களின் மக்களைச் சொல்வதுண்டு. இந்தப் பெற்றோர்கள் தங்களின் இளமையில் காதல் முதலிய ரகசியங்களையும் மனோபாவங்களையும் தம்முள் மறைத்துக்கொண்டு எப்படி ஒன்றும் தெரியாதவர்கள்போல் காட்டிக்கொண்டார்களோ—அப்படியே தான் தமது மக்களும் இப்போது தம் முன்பு கபட நடிப்பு நடிக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளட்டும்.

194. பண்டிகை, திருவிழா.—இந்த சந்தோஷ நாளில் நமது மகிழ்ச்சியின் இன்பம் ஸந்தோஷ பரிபூரணமாக இருப்பதில்லை. ஏதேனும் ஒரு குறைவு வந்து ஒண்டிக்கொள்கிறது. வீட்டில் சிறு சச்சரவு நேர்கிறது. அதே தினத்தில் போன வருஷங்களில் இருந்தவர்களை நினைக்கப்போக நமது மறைந்த துக்கம் பொங்கி எழும்பி விடுகின்றது. பண்டிகை திருவிழாவின் பூரிப்பு மாறி விடுகிறது. குறைந்து விடுகிறது. என் செய்ய?

195. ஒரு சிறுவன் சொல்.—தன் தாய் குமாரனிடத்தில்—"இன்று நோன்பு; கூட இருந்து கொஞ்சம் வேலை செய்; வெகு கஷ்டமாக இருக்கிறதென்றார். அதற்குப் பையன்— "நோவாமல் நோன்பு நோற்க முடியுமா?"—என்றான். பெண் குழந்தையாயிருப்பின் அப்படியே ஆகட்டும் அம்மா என்று சொல்லித் தாய் கூறுவதற்கு முன் தாயின் வேலைகளைத் தானே செய்யத்தொடங்கும். பிள்ளைக்கும் பெண்ணுக்கும் உள்ள பேதம் இது.

196. ஒரு பாவி ஏற்படுகிறன்.—இறந்தவர் முகத்தை நோக்கிப் பார்த்துப் பார்த்துப் பிரலாபிக்கும் சமயத்தில் சில பாவிகள் நடுவே நுழைந்து கொண்டு எல்லோரையும் அதட்டி, அழுதது போதுமென்று தடபுடல்கள் செய்கிறார்கள். இறந்தவரை சீக்கிரம் மசானம் கொண்டுபோய்ச் சேர்க்க அவசரப் படுகிறார்கள். இந்தப் பாவிகள் வீட்டிலேயே இப்படி நேர்ந்து கொண்டாலோ—அப்போது மட்டும் அவர்கள் வேறு விதம்.

197. துயரத்தில் மனஸ்தாபம்.—இறந்தது பெரிதாயில்லை. அதற்கு என்று வரப்பட்டவர்களைக் கவனிப்பதே பெரிய பாடாயிருக்கிறது. தங்களுக்கு மரியாதை சரியாய் இல்லையெனச் சலித்துக்கொள்வார் பலர். தந்திக்குத் தாங்கள் உடனே சிரத்தைப்பட்டு வரக்கூடியவர்களல்லவானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், தங்களுக்குத் தந்தி கொடுக்கவில்லையென மனஸ்தாபப் படுவோர் பலர். பொங்கிக்கொட்டவேண்டிய வேலை ஒரு பக்கம்! கருமகிரியைகள் ஆனபிறகும் ஒரு பத்து நாள் இருப்பார்கள்.

198. குற்றமுள்ள நெஞ்சு.—ஒருவர் ஒரு சங்கதியைப்பற்றிப் பேசும்போது, தன்னைத்தான் பேசுகிறார்களென்று சிலர் நினைத்துக்கொண்டு குறைப்பட்டுக்கொள்கிறார்கள்—சண்டைக்கும் வருகிறார்கள். ஜாடையாக அப்படி ஏன் பேசவேண்டு மென்கிறார்கள்.

199. வாங்கினதைக் கொடுப்பது.—சிலருக்கு வாங்கின பணத்தையோ, சாமான்களையோ திரும்பக் கொடுக்கிற வழக்கமேயில்லை. அவர்களைக் கேட்டுக் கேட்டு சலித்துப்போகவேண்டியதே லாபம்.

200. எதிர்ப்பட்டுக் கொள்ளுதல்.—மருமகன் முன்பு வரக்கூடாதென்று நினைக்கும் மாமிதான் அடிக்கடி அந்த மருமகன் முன்பு எதிர்ப்பட்டுக்கொண்டு ஓடி ஒளிக்கிறாள். இப்படியே ஒருவர் முன்பு வரக்கூடாதெனத் தயுந்துள்ள பெண்ணே அவர் முன்பு பல தடவைகளில் தென்பட்டுக் கொள்கிறாள்.

201. வீட்டுக்காரர்.—ரூபாய்களாக இருந்தால் செலவாய் விடுமென்றெண்ணி, நோட்டுகளாகச் சிலர் வீட்டில் கொடுக்கிறார்கள். அப்படியே இருக்கு மென்பது அவர்கள் எண்ணம். ஆனால் வீட்டுச் செலவு நிர்ப்பந்தமோ அவ்வளவு நோட்டுகளையும் ரூபாய்க்கு மாற்றச் செய்வதுடன், அந்த நோட்டின் பணத்தில் ஒரு காசுகூட மிஞ்சாமல் செய்துவிடுகிறது.

202. பெண்களை லாட்டரி போடுதல்.—எனக்கு வேண்டும், உனக்கு வேண்டும், அவர்கள் கேட்கிறார்கள், பெங்களூரில் கேட்கிறார்கள், திரிச்சியில் கேட்கிறார்கள், பல பேர் கேட்கிறார்கள். கடைசியில் ஒருவனுக்கு இந்தப் பெண்லாட்டரி விழுந்து அவனுக்கு மனைவியாகிவிடுகிறாள். இந்த லாட்டரியின் அதிர்ஷ்டமற்ற மீதிப் பேர் வெறுமனே பார்க்கிறார்கள். வாயில் விரலை வைத்துக்கொள்கிறார்கள்! தங்களுக்குக் கிடைக்காமற்போன பிறகு—"ஓ! அவள் என்னத்திற்கு? அப்பொழுதே நான் வேண்டாமென்று விட்டேனே என்று பசப்பி சமாளித்துக்கொள்கிறார்கள். பாவம்!

203. இனிமேல் வரும்.—புதிதாய் விவாகமாகிய மாமி வீட்டுக்குச் சென்ற மாப்பிள்ளைக்கும் அவர் தோழனுக்கும் பலகாரம் கொண்டு வந்து வைத்தனர். மாப்பிள்ளை வெளியிற் சென்றிருந்தார். அவரது தோழன் எல்லாம் தனக்கே என நினைத்து அவ்வளவையும் புசித்து விட்டான். பிறகு மாப்பிள்ளை வந்து பலகாரம் வந்ததாவென அவர் தோழன் 'இனி மேல் வரும்' என்றான். மாப்பிள்ளை பிறகு உண்மை கண்டுகொண்டு சாப்பிட்டாய் விட்டதெனச் சொல்லிக்கொண்டார்.

204. தூரத்தில் இருப்போர்.—வெளியூரில் இருப்பவர்கள் என்னென்னவோ புது யோசனைகளையும் புது வர்த்தக எண்ணங்களையும் கொண்டு உற்சாக புருஷர்களாகிறார்கள். தங்கள் ஊர் வந்து சேர்ந்தாலோ புதுசக்தி குன்றி பழைய கிணற்றுத்தவளைக ளாகிறார்கள். சிலர் நெடுந்தூரத்தே யுள்ள ஒருவனை எதிர்பார்த்து அவன் வந்தே சகல காரியங்களும் நடக்கவேண்டு மென்கிறார்கள். அவன் வந்து சேர்ந்த பிறகோ ஒரு காரியமும் நடக்கக் காணோம். தூர இருப்பின் ஒரு பிரமிப்பு, ஒரு ஆவல்—ஒரு எதிர்பார்ப்பு. பக்கத்தில் இருந்தாலோ ஒன்று மில்லை.

205. நல்லதுக்கும் கெட்டதுக்கும்.—நாம் ஒரு நற்காரியம் செய்யப் புகின் பல விதமான விக்கினங்கள் நேரும். சகாயத்திற்கு ஆட்களும் கிடைப்பது கஷ்டம். கெட்ட காரியத்திற்கோ அது உடனே நிறைவேறும். பலரும் கூட சகாயமாயிருந்து செய்து முடிப்பார்.

206. காணாமற் போதல்.—ஒருரூபாய் ஒருவருக்கு இனாமாகக்கொடுத்தால் மனதிற்கு மிக்க ஆநந்தம். இரண்டணா காணாமற் போனால் கண்டு

பிடிக்கிறவரையில் மண்டைக் குடைச்சல். அகப்பட்டுவிடினோ லக்ஷம் ரூபாய் கிடைத்ததுபோல் ஒரு பெருமூச்சு. கிடைப்பதுதான் இல்லை.

207. தெருவில் போக்கடித்தல். தெருவில் தவறி விழுந்த பொருளைப்பற்றித் தேட அவ்வளவு பிரிய மிருப்பதில்லை. காரணம் அது ஒரு போதும் கிடைக்காது என்ற நிச்சய எண்ணத்தாலேயே நம்முடையதல்ல வென்று அப்பொழுதே மனதும் தேறிவிடுகிறது.

208. தனக்கு வேண்டியவர்கள்.—மிக்கப் பணம் செலவழித்து விருந்திடும்போது ஆயிரம் பேர் வந்திருப்பினும், நமக்குப் பிரியமுள்ள ஒன்றிரண்டுபேர் வராவிடில் எவ்வித திருப்தியும் சந்தோஷமும் இருப்பதில்லை—வராது.

209. புருஷன் மனைவி.—உலகில் கணவன் தாராளமாயிருந்தால், மனைவி செட்டாயிருப்பதும், மனைவி தாராளமாயிருந்தால் கணவன் செட்டாக இருப்பதும் வழக்கம். இருவரும் ஒரேமாதிரியாக அமைவது எங்கேயோ ஒன்று. அது கடவுள் அருளிய வரம்.

210. பெரிய ஏமாற்றம்.—உள்ளன்புடையவர்கள் நம் வீட்டிற்கு வந்து இன்னும் ஒருமாதம்போல இருப்பதாய்ச் சொல்லி இருக்கும் சமயத்தில் திடீரென்று பிரயாணம் ஏற்படின் அது ஒரு பெரிய ஏமாற்றம்.

211. பிரியமுள்ளவர்கள்.—நம்மீது உள்ளன்பு மிகுந்தோர் எத்தனை மாதங்கள் நம்முடன் இருப்பினும் அது கொஞ்ச நாட்களாகவே காண்கிறது. இவ்வளவு நாள் இருந்தார்களே என்று திருப்திபடுகிறதில்லை. என் செய்ய?

212. மலோபாதையின் ஞாபகம்.—சிலருக்கு போஜனத்துக்கு அழைக்கும் சமயந்தான் மல வாதைக்குப் போகவேண்டு மென்கிற ஞாபகம் வந்து உடனே போகிறது. அதற்குமுன் அந்த ஞாபகம் இருப்பதில்லை.

213. தளுக்கு துலுக்கு உபசாரம்.—தம் வீட்டிற்கு வந்தவர்களுக்குக் காபி கொடுக்க மனம் வராமல், மேலுக்கு காப்பி வைக்கட்டுமா வெனக் கேட்கிறார்கள். அவர்கள் வேண்டுமென்று சொல்வார்கள். அப்படிச் சொன்னதே பெரும்பாக்கியமென்று நினைத்துக்கொண்டு—"காபிதான் வேண்டாமென்றீர்கள்; வெற்றிலைப்பாக்காவது போடுங்கள்"— என்று வெகு மரியாதையாய்ச் சொல்கிறார்கள்.

214. சொல்லிச் சொல்லிச் செய்யாதுபோதல்.—நீ நெடுநாள் கழித்து வந்தவன், உனக்குப் புலால் சமைக்கவேணும், அது இது விருந்து செய்யவேணும்--என்று ஆயிர விசைகூறி கடைசியில் ஏதுமே செய்யாமல் அனுப்பிவிடுகிறார்கள். சொல்லித் தவறுவதிலும் சொல்லாமற் செய்வது இன்னும் மேல்.

215. வெளிக்குவராத ரகசியம்.—ஒருவரை யொருவர் பார்த்த அளவிலேயே விருப்பமேலிட்டு பூர்வஜென்ம பிராப்தத்தால் அந்த மீறிய விருப்பம் அவர்களுக்குள் சரீர சம்பந்தத்திற்கும் இடம் தந்து கொள்ள ரகசியத்தில் புருஷன் மனைவியாகி விடுகிறார்கள். பிறகு அவர்களுக்கு வெவ்வேறிடங்களில் விவாகம் நடை பெறுகிறது. அவர்களின் ரகசியம் வெளிக்கு வராத ரகசியமாகவே போய்விடுகிறது. இப்படியும் உண்டா? இல்லையா? ஒருபெண் தன் கணவனிடம் இவ்விதமான தன் ரகசியத்தை வெளியிட முடியுமா?

216. ஆணுப் பிறந்தல்.— ஆணுயாவது பிறந்தோமாவெனச் சில பெண்மணிகள் குறைப்பட்டுக் கொள்கின்றனர். எல்லோரும் ஆணுய்ப் பிறந்து விட்டால் ஆணைப் பிறக்கிறது யார்?

217. ஒரு குழந்தையின் மொழி.—என் அப்பாவுக்குப் பக்கத்தில் என் அம்மா தூங்கும். என் அம்மா பக்கத்திலே நான். என் பக்கத்திலே என் செல்வப் பூனைக்குட்டி தூங்கும். அப்பாவுக்கு வேண்டியது அம்மா. அம்மாவுக்கு வேண்டியது நான். எனக்கு வேண்டியது பூனைக்குட்டி. அதற்கு வேண்டியது பால். அல்லது எலிக்குஞ்சு.

218. தாய் வீட்டுக்குச் செல்லல்.—தன் மனைவி தாய் வீடு செல்லுகையில் அவள் பிரிவுக்குக் கணவன் வருந்துகிறான். மனைவிக்கோ தன் தாய்வீட்டுக்குச் செல்லும் மகிழ்வில் கணவன் பிரிவு அவ்வளவாக மனதில் தைப்பதில்லை.

219. கடிதங்களின் போக்கு.—சிலருடைய கடிதங்களைப் பார்த்தால், ஏதோ மகா அவசரமாய்ப் புறப்பட்டு அவர்களிடம் போய்ச் சேரவேண்டிய தான அவ்வளவு நெருக்கடியுள்ளதுபோல் காட்டும். அப்படியே அவர்களின் ஊருக்குப் போனாலோ, அங்கே அப்படி அவசரமேதும் காணாமல்—ஏன் இவ்வளவு அவசரப்பட்டுப் புறப்பட்டு வந்தோமென்று நினைத்துக் கொள்ளும்படியாகி விடும்.

220. துணை.—தனக்கு வேண்டியவர்களுக்குத் தெரிந்தவர்களைத் தான் போய்ப் பார்க்கும்போது, கூட அந்த "வேண்டியவர்க"ளும் துணை வந்தால் தான் சிலாக்கியம். தான் மட்டும் தனியே செல்வது அவ்வளவு பரிமளம் தராது.

221. மதிப்பு.—ஒருவர் தனக்குத் தருகிற சம்பளத்தைப் பொறுத்து, அவர் தன் மீது இவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்று தீர்மானிக்கலாம். 50-க்கு எதிர்பார்த்த இடத்தில் 25-ரூபா பெற்றால், அவர் தன்னை அவ்வளவு அற்பமாக நினைத்துள்ளார் என்று ஏற்படும்.

222. கோப குணம்.—எவரையும் அதிக நாள் உன்னிடம் வைத்துக் கொள்ளாதே. அப்படிக் கொண்டாயோ, உன் கோபகுணம், கோபத்தில் கொதிக்கிற உன் முகம், உன் கோபக் கையின் அசைவு, வேகம், கோப—டில்விதர்பார், இவைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்துபோம். ஸாந்தமான பிள்ளை யென்ற நல்ல பெயர் மறைந்துபோம். ஆதலின் வந்தவர்களைச் சீக்கிரம் அனுப்பி விடு. இது நல்ல தந்திரம்!

223. சிலர்.—இருந்து பிறகு போகிறது தானே என்று, ஊருக்கு அவசரமாய்ப் போகவேண்டு மென்பவர்களைச் சிலர் கட்டாயப் படுத்துவர். அவர்களுக்குச் சொந்த வேலைகள் பல இருக்குமென்று இவர்கள் சற்றும் நினைத்துப் பார்க்கிறதில்லை. இக்குறிப்பு அன்புடன் வற்புறுத்துவோருக்கல்ல.

224. சாந்தம், சத்தியம்.—'சாந்தம்' சமுத்திரத்தைப் பார்க்கிலும் பெரிதென்றும், 'சத்தியம்' ஸகல தர்மங்களிலும் சிறந்ததென்றும் ஆன்றோர் கூறுகின்றனர். இக்காலத்தில் இதன்படி நடக்கும் மஹான்கள் யாரோ?

225. பெற்றோரிடத்து அன்பு.—சில 'கனவான்'கள் தெருவாசலுக்குக் காவலாகத் தம் பிதாவையும், சமயலறைக்குக் காவலாகத் தம் தாயாரையும் வைத்துவிட்டு, தம் மனைவி மக்களுடன் சம்பிரமமாய் சாப்பிட்டுத் தாம்பூலத்துடன் வந்து விடுகிறார்கள். மிகுந்த எச்சிற்பருக்கையே பெற்றோர்களுக்கு. அப்பெற்றோர் மரித்தபின்போ ஆயிரம் பிராமணர்கட்கு அன்னதான தடபுடல் தர்பார்!

226. சக்களத்தி வகை.—சக்களத்திப் பிள்ளைகளுக்கு மாற்றாந் தாய்மார் எவ்வளவு பாடுபட்டாலும், அவர்களுக்கு உள்ளன்பும் விஸ்வாசமும்

இருக்கிறதில்லை. மாற்றார் தாய்மாருக்கு சக்களத்திப் பிள்ளைகள் எவ்வளவு உண்மையாய் நடந்துகொண்டாலும் திருப்தி அடைகிறதில்லை. இவர்கள் பூர்வ ஜென்மத்தில் ஒருவருக்கொருவர் பகைபோலும்!

227. பனியன்—பூர்வ காலத்தில் ஸ்திரீகள் ரவிக்கை அணியும் கை அளவிற்கு, இக்காலத்தில் புருஷர்கள் பனியன் போடுவதால், ஸ்திரீகளின் ரவிக்கை முழங்கைக்கு மேற் பட்டுவிட்டது.

228. ஒரே கடவுள்—உலகில் பல மதஸ்தர்களும் என் தெய்வம் சிறந்தது, உன் தெய்வம் சிறந்தது எனத் தர்க்கம் செய்கின்றனர். பொது வாய் உத்தமமான பக்தியுடன் எதை நினைத்துச் செய்யினும் அது பரந் தாமனையே சேருகின்றது. சிறிய போஸ்டாபீஸில் போடும் கடிதமும், (Head) தலைமைப் போஸ்டாபீஸில் போடும் கடிதமும் உத்தேசித்த இடத் திற்கே போய்ச் சேருகிறது. பகவான் ஸர்வந்தர்யாமியா யிருக்கிறார்.

229. கோள் கூறல்.— ஒரு குடும்பத்தில் கோள் சொல்பவர்கள் இல்லாவிட்டால், கலகத்திற்கும் பிரிவினைக்கும் ஏது உண்டாகாது.

230. அருள்.—உலகில் பொருளை அநேகம்பேர் சம்பாதிக்கிறார்கள். அருளைச் சம்பாதிப்பவர் யாரையா?

231. திருப்தி.—வீட்டு மருமகனுக்கும், வீட்டுப் புரோகிதனுக்கும், காலமுழுதுக்கும் உட்கார்ந்து தின்பவர்கட்கும் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி இருக்கிறதில்லை. எவ்வளவு தந்தும் உபசரித்தும், கொட்டியும் நல்ல பேரில்லை.

232. நல்ல குடும்பம்.—ஒரு குடும்பத்தில் பெரியோர்களுக்கு சாந்த மும் அன்பும், சிறிய காரியங்களுக்கெல்லாம் பிரவேசிக்காத பெருந்தன்மை யும், சிறியோருக்கு அடக்கமும் மரியாதையும் பயமு மிருக்குமாயின் அக் குடும்பம் சிறந்து விளங்கும்.

233. ஒரு மருமகளின் விடை.—ஒரு மாமி தன் மருகியைப் பார்த்து உன் தாயார் வீட்டார் புது நகையொன்றும் போடவில்லையே, எல்லாம் பழய நகைதானே என்றனளாம். அதற்கு மருகி எங்கள் வீட்டில் சிறு வயதிலேயே நகைகள் செய்து போட்டு, பெற்றோர் அழகு பார்ப்பது வழக்கமே தவிர, பெண் குழந்தைகளை வேலைக்காரிபோல் வைத்திருந்து, மாப்பிள்ளை வீட்டார் மெச்சும்படி 100 ரூபாயில் நாலு நகைகள்போட்டு 'கலாயி' பூசி அனுப்புவது வழக்கமில்லை யென்றாளாம்.

234. பாட்டிமார்.—சாதாரணமாய்ப் பாட்டிமாருக்கு மகன்வயிற்றுப் பிள்ளையைப் பார்க்கிலும், மகள்வயிற்றுப் பிள்ளைகள்மேல்தான் பிரியம் அதிகமாம். அருகில் இருப்பவரைவிட எப்போதோ வருபவர்கள் மேல் அதிகபிரியம் இருப்பது இயற்கையே.

235. நிர்வாகம்.—100 ரூபாய சம்பாதிப்பவனுக்கும் செலவுகள் சரி யாக ஏற்படுகிறது. 10 ரூபாய் சம்பாதிப்பவனுக்கும் சரிகட்டிப் போகிறது. அதிக சம்பளமுள்ளவனுக்குதான் அதிக கடன் ஏற்படுகிறது.

236. லக்ஷ்சீமான்.— அதி தனவந்தனை பிரபு தனக்காக ஒரு ரூபாய் செலவிடவும் மனம் வருகிறதில்லை. தர்மம் செய்யவும் அவனுக்குப் பாக்கியமில்லை. அப்பொருளை அவனுக்குப் பிறகு தாராளமாய்ச் செல விட்டு உண்டு உடுத்திக் களிப்பெய்துதற்கு எவராகிலும் ஏற்படுகிறார்கள்.

237. மகா ஆசாரம்.—பத்துபேர் பந்தியிலிருந்து உண்ணுகையில் மற்றவர் இலையிலிருந்து தன் இலையில் ஏதேனும் தெரித்துவிட்டால், உடனே சாப்பாட்டை விட்டு எழுந்து விடுகிறார்கள். அத்தருணத்தில் சற்று காபி ஹோட்டலின் எச்சிலைக் கவனத்தில் கொண்டுவாக்கூடாதா?

அங்கு மட்டும் பலாது எச்சில் தட்டை, சரண்டிகை, கோப்பையை மிக்க மிக்க நக்கலாமா?

238. நூங்கம் வாராது.—கையில் அதிக பணம் வைத்திருப்போருக்கும், பத்திரிகை, நாவல் எழுதுகிறவர்களுக்கும், விருத்தாப்பியர்களுக்கும், பிணியாளர்கட்கும், கடன், திருட்டு இதில் சம்பந்தப்பட்டவருக்கும், மனம் நொந்து வாடுவோருக்கும், பிறரிடம் திட்டுகள் கேட்டோருக்கும், அவமானப்பட்டோருக்கும், ஊருக்குப் பயணம் கொள்வோருக்கும், பகைவர் கையில் அகப்பட்டவருக்கும், பிரிந்த காதலர்க்கும், ரகசிய சோரத்துவம் நாடுபவர்க்கும் இரவில் தூக்கம் பிடிக்காது. இவ்விதமே நெடுக—பலரை—இதில் சேர்க்கலாம்.

239. ஏழைகளின் பாடு.—ஏழைகளின் கஷ்டம் ஏழைகளுக்குத்தான் தெரியும். பணக்காரனுக்குத் தெரியாது. இரண்டு நாள் பட்டினி என்று அவனிடம் சொன்னால், அதை சாதாரண வார்த்தையாய் நினைக்கிறான். பசியின் வாதை அவனுக்கென்ன தெரியும்?

240. தாயற்ற பிள்ளை.—ஒரு தாயானவள் தன் மக்களுக்கு வியாதி வந்தாலும், அவர்கள் கடினவேலை செய்தாலும், அவர்கள் மனக்கவலையாயிருந்தாலும், மிக்க வாதனைப்படுகிறாள். தாயில்லாப் பிள்ளைகளுக்குக் கடவுள்தான் வருந்தவேண்டும்.

241. திடீரென்று புத்தி மாறல்.—தம்பதிகள் இருவரும் மிகு காதலாய் அதி உல்லாஸமாக வார்த்தையாடிக்கொண்டு சந்தோஷமாய் இருக்கும் சமயம் அவர்களை எந்தத் தேள் கொட்டிவிடுமோ, திடீரென்று நாயும் பூனையும்போல் சீறிக்கொண்டு அடியும் அழுகையுமாக ஆகிவிடுகிறது.

242. ஒரு பெண்ணின் பதில்.—ஒரு கல்யாணப்பெண் தன் கணவனுக்கு அன்னம் பரிமாறி தான் மறைவாய் நின்றாளாம். அதற்கு அவன் மாட்டுக்குப் பருத்திக்கொட்டை, தவிடு வைத்தாலும், அருகிலிருந்து கிளறிக்கொடுத்துத் தின்னும்படி செய்வார்கள்; நீ ஏன் அன்னம் பரிமாறிவிட்டுத் தூரம் போய்விட்டாய் என்றானும். அதற்கு அவள் இலையில் பரிமாறிவிட்டு எதிரில் நின்றுகொண்டிருந்தால் சாப்பிடுவோருக்கு சங்கோஜமாய் இருக்கக்கூடும்; வார்த்தை யாடிக்கொண்டிருந்தாலும் சாதம் ஆறிவிடும்; ஏதாகிலும் வேண்டுமென்றால் உடனே வந்து பரிமாறுகிறேன்; அதற்குள் தாங்கள் ஏன் மாடாகிவிட்டீர்களென்றாளாம்.

243. அல்பத்தனம்.— நூற்றுக் கணக்காய் சம்பாதிப்பவன் ஆபீசிலிருந்து வீட்டிற்கு வந்ததும், குழந்தைகளைத் தூக்க, கொஞ்ச, யாவருடனும் பேச இப்படி சாதுவாயிருக்கிறான். 20 ரூபா சம்பளமுள்ள சிலர் ஆபீசிலிருந்து வந்ததும் வீடு நடுங்கும்படி தடபுடல் செய்கிறார்கள். குழந்தை அழுகிற சத்தம் கேட்கக்கூடாது. தும்மக்கூடாது. காப்பி, போஜனம் யாவும் மேஜைக்கு வந்துவிடவேண்டும். உடுப்பும் பூட்சும் கழற்றாமலே சாப்பிடுவர். பெருமாளைப்போல் அசையாதிருக்கப் பிறர் தேய்த்துக் குளிர்ப்பாட்டவேண்டும். சாப்பிடுகிறவரை விசிறவேண்டும். தாம்பூலம் மடித்துத் தரவேண்டும். இவர்களுக்கு "தப்புறவிழுவோர்" என்று பெயர்.

V. K. M. நாதமுனி நாயுடு.

நயன தாரா

அத்தியாயம்—15

காதல் யுத்தம்

"சிந்தித்த வெல்லாமென் சிந்தை யறிந்தே யுதவ
வந்த கருணை மழையே"

நயனதாரா மகாராணி யவர்களின் பட்டாபிஷேக நேரமும் நெருங்கியது. மாட்சிமை தங்கிய இராஜப்பிரதிநிதி யவர்களின் காரியதரிசியார் மகா ஜனங்களுக்காகவென்று ஒரு பிரஸித்த பத்திரிகையை வாசித்தார். அதில் பின்வரும் விஷயங்கள் இருந்தன:—

"இந்த ஸந்தோஷபுர ஸமஸ்தானத்தின் அரசராக இருந்து கடவுள் பதமடைந்த ஹிஸ் ஹைனஸ் ஸத்தியாஸரண கஹாலி ஜி. ஸி. ஐ. அவர்கள் தமக்குப் பிறகு தமது சிம்ஹாஸனத்திற்குப் பாத்தியஸ்தராக எவரையும் தெரிந்தெடுக்கவில்லை. அவருக்கு ஸந்ததியில்லாத காரணத்தாலும், அவரது வமிசத்தவர்கள் எவரும் ஜீவித்திருப்பதாகத் தெரிய வராததாலும் ஸிம்ஹாஸனம் காலியாயிற்று. இந்தியா இராஜப் பிரதிநிதியான "லார்ட் ஸ்டராட்போர்ட்" (Lord Strat ford) பிரபு அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் போலீஸ் கமிஷனர் அவ்விடம் வந்து சேர்ந்தார். துப்பறிவதில் நிபுணரான ஸஞ்சீவசந்திர பாபுவினால் தமக்குச் சில விவரங்கள் தெரிந்திருப்பதாயும், அது சம்பந்தமாக இன்னும் அவரை நன்கு ஆராயுமாறு ஏற்பாடு செய்ததில் எதிர்பார்த்ததற்கு அதிகமான விவரங்கள் கிடைத்திருப்பதாயும் கூறினார்.

ஸஞ்சீவபாபு ஸந்தோஷபுர ஸமஸ்தானத்திற்குச் சென்று அங்குள்ள அரண்மனையில் பழய தஸ்தாவேஜிகளை யெல்லாம் சோதித்தபோது ஒரு விசித்திரமான செய்தி வெளியாயிற்று. அதாவது காதல் யுத்தமே. ஸந்தோஷபுரத்து மஹாராஜாவான ராமேஸ்வர கஹாலி என்பவர் 1830 ஆண்டில் அவர் தமது இளைய ஸகோதரரான சுரேந்திரநாத கஹாலியைத் தமது தேசத்திலிருந்து வெளித்துரத்தி விட்டார். தமயன் தம்பிகள் இருவரும் ஒருபெண்ணையே காதலித்தார்கள். அப்பெண்ணோ தன் காதலையே பிடிவாத

மாகச் சாதித்து இளைய ஸகோதரனையே விரும்பி மணந்தாள். அக்காரணம்பற்றித் தமயனான அரசன் இத்தம்பதிகள் இருவரையும் சந்தோஷபுரத்தி லிருந்தும் துரத்திவிட்டார். அதற்குப் பிறகு வேறு விவரங்கள் ஒன்றும் ஸந்தோஷபுர ஸமஸ்தான தஸ்தாவேஜிகளிலிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை.

அதன் பிறகு ஸஞ்சீவபாபு கல்கத்தா கவர்ன்மெண்ட் கார்யாலயத்தில் ஸந்தோஷபுர ராஜகுடும்பத்திற்கு சம்மந்தப்பட்ட பழய தஸ்தாவேஜிகளை நெடுகப் பரிசோதித்துக்கொண்டு வருகையில், ஸந்தோஷபுரத்திலிருந்தும் வெளித்துரத்தப்பட்ட சுரேந்திரநாதரைப் பற்றிய சில புது விவரங்கள் வெளியாயின. அவையாவன:- சுரேந்திரநாதர் தாம் சந்தோஷபுரததிலிருந்து வெளிப்பட்டது முதற்கொண்டு ஆங்கில இந்தியாவில் தலைமறைவாய் வசித்துவந்தார். தம்பதிகள் இருவரும் ஏழைகளாயினும்,—உண்மைக்காதல் ஏழ்மையையும் செல்வத்தையும் பார்க்குமோ,—அவர்கள் வெகு அந்நியோன்னியமாய் இல்லறத்தை நடத்திக்கொண்டு சுகமாய்க் காலம் கழித்து வந்தனர். சுரேந்திரநாதர் அப்போது முதற் கொண்டு ஸந்தோஷபுரத்துடன் எவ்வித ஸம்பந்தமும் வைத்துக் கொள்ளவில்லை. அவரது வம்ஸத்தாரைக்குறித்து ஸந்தோஷபுரத்தில் கேட்பவரே யில்லாமல் போயினர். சுரேந்திரநாதர் தமது ஜீவனார்த்த நிமித்தமாக கல்கத்தா கவர்ன்மெண்ட் கார்யாலயத்தில் தம்மைப் பற்றிய ரகசியத்தைத் தெரிவித்து அதைவெளிவிடாதபடி வேண்டிக்கொண்டு, தமக்கு ஒரு உத்தியோகம் தருமாறு பிரார்த்தித்து இருந்தார். அக்கடிதம் வெகு பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு, இப்போது ஸஞ்சீவ பாபுவின் ஆராய்ச்சியில் அது பழய தஸ்தாவேஜிகளிலிருந்து அகப்பட்டது. இதனால் இவ்விஷயம் நிச்சயமான உறுதியை யடைந்தது. இதன்மேல் செய்யப்பட்ட விசாரணையினால் சுரேந்திரநாதரின் வமிஸத்தார்களது இருக்கை தெரியவந்தது. அதையும் ஸஞ்சீவபாபு ஏற்கெனவே தம்முடைய இன்னொரு கேஸுக்காக ஆராய்ந்து வைத்திருந்ததாகத் தெரிந்தது. சுரேந்திரநாதரின் வமிஸத்தாரில் அநேகர் ஆங்கிலகவர்ன்மெண்டாரின் கீழ் உயர் பதவி உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர். ஆனால் அவர்களில் எவராயினும் ஜீவித்திருக்கவில்லை. இந்தியசேனையில் அவ்வமிஸத்தைச் சேர்ந்த ஒருவர் சுபேதாராக இருந்தார். சிப்பாய்க் கலகத்தின்போது இராஜபக்தியுடன் ஆங்கிலேயருக்குத் துணைநின்று போர்செய்து டில்லியை ஆங்கிலேயர்களுக்குப் பிடித்துக்கொடுத்துவிட்டு, அப்போது தாம் பட்ட பலமான காயத்தால் மூளை சிதறி மரணமடைந்தார்.

சுரேந்திரநாதரின் பௌத்திரரது பெயர் கைலாஸ சந்திரர். இவர் டெபுடி கலெக்டர் பதவிவரைக்கும் உயர்ந்தவர். மிகவும் அற்பாயுஸாகக் காலாந்தர மடைந்தார். அவரது இரு குமாரத்திகளில்

ஒருவர் விவாகமானதும் இறந்துபோக, மற்றொரு குமாரத்திக்கு ஸந்ததியுண்டாகி ஒரு ஆணும் பெண்ணும் பிறந்தனர். இந்த அண்ணனும் தங்கையும் பெரியவர்களாகி முறையே இவ்விருவருக்கும் விவாகங்கள் நடந்தேறின. அண்ணனும் அவனது மனைவியும் தமக்குப்பிறந்த பெண்குழந்தையைத் தனியே தவிக்கவிட்டுஎங்கேயோ மறைந்துபோனார்கள். அதன் காரணங்களை இப்போது ஸஞ்சீவபாபு வெளியிடமுடியவில்லை. சீக்கிரம் அதைத் துப்பறிந்து விளக்குவதாக வாக்களித்திருக்கிறார். தனியே விடப்பட்ட பெண் மகவு மாத்திரம் இப்போது ஜீவித்திருக்கின்றது. இங்ஙனம் பெற்றோர்களை உயிருடன் பறிகொடுத்து அநாதையான அப்பெண் மகவின் பெயர் நயனதாரா என்று ஸஞ்சீவபாபு கண்டுபிடித்து அற்புதமாய்த் துப்பு விளக்கியிருக்கிறார். அப்பெண்ணை அவருடைய சொந்த அத்தை—அதாவது அப்பெண்ணினுடைய பிதாவின் உடற்பிறப்பான தங்கை—எடுத்து வளர்த்துவருவதானார்.

அத்தையம்மாள் நயனதாராவுக்கு செவ்வனே கல்வி பயிற்றுவித்தார். கல்கத்தா ஸர்வகலா சாலையினின்றும் பி. ஏ பரீக்ஷையில் தேர்ந்து, அத்தையவர்களின் அநுமதிபெற்று வைத்திய வித்தையைக் கற்றுக்கொள்ள இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே இங்கிலாந்தில் ஸ்ரீமதி நயனதாரா புத்தி சாதுர்ய வித்தியார்த்தினியெனப் பிரஸித்தி பெற்றார். கஹாலி வம்ஸத்தவர்களில் இம்மாது சிரோன்மணி யொருவர் மட்டுமே பூர்வ சொத்துக்குப் பாத்தியதையுள்ளவராக இருந்ததால் ஸந்தோஷபுர ஸமஸ்தானத்திற்கு இப்பெண்மணியே உரிமையுள்ளவராகின்றார். இவ்விஷயம் வெளிவருகிறபரியந்தமும், தாம் இராஜகுடும்பத்தைச் சேர்ந்தவரென்றாகிலும், அல்லது ஸந்தோஷபுரத்திற்குத் தாம் மகாராணியாக ஆகப்போகிறதாகவாகிலும் ஸ்ரீமதி நயனதாராவுக்குத் தெரியவே தெரியாது. இவ்வளவு விஷயங்களும் ஸஞ்சீவ பாபுவின் ஆராய்ச்சியினால் வெளியாயின. போலீஸ் கமிஷனர் துரையவர்களும் இவ்விஷயங்களை இராஜப்பிரதிநிதியவர்களுக்கு விவரிக்கவே, அவரும் இவற்றைப் பிரீதியுடன் அங்கீகரித்துக்கொண்டு, இந்தியா மந்திரியவர்களுக்கு இதைப்பற்றி எழுதினார். அதன்மேல் லண்டனில் வைத்திய அப்பியாஸியாகக் கல்விபயின்றுகொண்டிருந்த ஸ்ரீமதி நயனதாரா அவர்கட்கு இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டு, அவரை ஸந்தோஷபுரஸமஸ்தானத்துக்கு மகாராணியாக்கினார்கள். இப்போது ஸ்ரீமதி மகாராணி நயனதாரா அவர்கட்குப் பட்டாபிஷேக மகோற்சவம் நடைபெறப் போகின்றது. அந்த சந்தோஷகரமான வைபவத்தைக் கொண்டாடவே நாம் அனைவரும் இங்கு இந்த சமயம் கூடியிருக்கின்றோம்."

இராஜப் பிரதிநிதியவர்களின் காரியதரிசியார் இப்பிரஸித்த பத்திரிகையை வாசித்ததும் ஜனங்கள் அனைவரும் ஆநந்தபரிதர்க

ளானார்கள். குறித்த காலத்தில் மகாராணியாருக்குப் பட்டாபிஷேகம் மிக்க விமரிசையாய் நிறைவேறிற்று. மாக்ஷிமைதங்கிய விக்டோரியா மகாராணியவர்கள் ஸ்ரீமதி நயனதாரா மகாராணியை ஸந்தோஷபுர ஸமஸ்தானத்தின் அம்சியாக அங்கீகரிப்பதாய் எழுதியுள்ள இராஜாதிகாரப் பத்திரத்தை இராஜப்பிரதிநிதியவர்கள் வாசித்தார்கள். எங்கும் மங்களவாத்தியங்கள் முழங்கின.

இனி பூர்ணேந்திரரைக் கவனிப்போம். ஸஞ்சீவபாபு தக்க தருணத்தில் வந்துதவினார். பூர்ணேந்திரர் தன் எதிரிகளில் ஒருவனை ஓங்கி அடித்த சமயம், அவன் கையில் பிடித்த பையுடன் அடிக்குப் பயந்து குனிய, மற்றொரு எதிரி பூர்ணேந்திரரைச் சுட முயல, அதே ஸமயம் ஸஞ்சீவபாபு அங்கு தோன்றி, சுட முயன்றவனின் கழுத்தைப்பிடித்துக் கீழே தள்ளப்பார்க்க, துப்பாக்கியின் குண்டு தவறிப் பூர்ணேந்திரரின் தலைப்பாகையினுட் புகுந்தது. சுட முயன்றவனைக் குறி தப்பிப்போகுமாறு ஸஞ்சீவபாபு செய்யாவிடில், பூர்ணேந்திரருக்குப் பிராணஹானி நிச்சயமே. போலீஸ் கமிஷனரின் ஆபீஸுக்கும் ஸஞ்சீவபாபு சென்று பூர்ணேந்திரரைக் குறித்து அந்தரங்கம் தெரிவித்து, அவரை விடுவித்துக்கொண்டு பட்டாபிஷேக மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். நயனதாரா மகாராணியார் தமக்கு முடிசூட்டப்படும் தருணத்தில் திடீரென்று பூர்ணேந்திரரை ஸஞ்சீவபாபுவுடன் காணவே, அத்தருணம் அவர் கொண்ட ஆநந்தப் பெருக்குக் கீடுமுண்டோ? அதனினும் மிக்க உயர்பாடுமுண்டோ? சத்தியமே நித்தியம், கடமையே பெருமை, தர்மமே தலைகாக்கும், தெய்வத்தை நம்பினோர் கைவிடப்படார்—என்னும் இவ்வுண்மைகள் பொய்க்குமோ? மனமொத்த காதலர் மீண்டுங் கூடியதும் வியப்போ! பக்தியானது முக்திக்கு இடந் தந்ததும் ஓர் திகைப்போ? ஸஞ்சீவபாபுவின் ஸகாயம் ஸஞ்சீவி போன்றதன்றோ? துணைபெற்றவன் வீண் போகான் என்பதும் பொய்யோ? "காதல் யுத்தம்" வெற்றி பெற்றதும் உற்றதன்றோ? யாவும் பொருத்தந்தானே. நன்றாய் முடியின் எல்லாம் நன்றே.

காதலே ஞாலம், காதலே என்னாம், காதலே எதிர் நோக்குகை, காதலே வாழ்க்கை, காதலுக்கே விவாகம், காதலே ரம்யம், காதலே சம்பந்தம், காதலுக்கே ஏகாந்த மாளிகை, காதலர் கநத்தோக்க ஆதரவுபட்டதே இன்பம், காதலே புத்திர லாபம், காதலே குடும்ப விர்த்தி, காதலே இனஜன பந்து சேர்க்கை, காதலே இகபர ரகஸியம், காதலே சிருஷ்டி ரக்ஷகம், காதலே கற்பு, காதலே காவல், காதலே கடவுளாம். காதல் இல்லையேல்—காசினியும் இல்லையே!

அத்தியாயம்—16

பூர்ணேந்திரரது வெற்றி

1. " அல்லன போல் ஆவனவுமுண்டு சில"
2. "ஆவது விதி யெனில் அனைத்து மாயிடும்"

பூர்ணிமாசந்திரன் அதி தேஜோமயனாய்ப் பிரகாஸித்துக் கொண்டிருந்தான். ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த பட்டாபிஷேக மகோத்ஸவ ஆரவாரங்கள் நிம்மதி யடைந்தன. ஸந்தோஷபுரத்து ஜனங்களின் வாழ்க்கை எப்பொழுதும்போல் நடந்து வந்தது. பட்டாபிஷேக காலத்தில் பல வரிகள் குறைக்கப்பட்டும், கல்வி, கைத்தொழில் முதலியவைகட்கு ஏராளமாகப் பணம் செலவிடவும் மகாராணியார் ஆக்ஞை செய்தாராதலின் புரவாசிகள் அனைவரும் மிகு ஸந்தோஷத்துடன் காலம் கழித்தனர். மகாராணியின் மனோரதாங்கள் ஸம்பூரணமாய் சித்திக்கும் வண்ணம் பகவான் திருவருள் தந்தருளுமாறு பூரணபயபக்தி விச்வாசத்துடன் பிரார்த்தித்தனர். பிரகாசித்துக்கொண்டிருந்த நிலா வெளிச்சத்தில் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள், மசீதுகள், இன்னும் இதர பெரிய கட்டிடங்களும் பார்ப்பவர்களுக்கு ஆநந்தத்தை யளித்தன. தில்குஷா என்னும் ராஜஅரண்மனையின் சாயலானது,நிலாவினால் தளதளவென்று பிரகாஸித்துக் கொண்டிருந்த மடுவுநீரில் வீழ்ந்து ரமணீயமாய் சோபித்திருந்தது. சந்திரனது கிரகணங்கள் அத்தண்ணீரில் மனோகரமாய் அசைந்து, நயனங்கட்கு அளவற்ற ஆநந்தத்தை யளித்தன. கனவிற்கண்ட பேரழகு வாய்ந்த சித்திரப்படத்தை யொத்து அவ்வரண்மனையானது அச்சமயம் பார்ப்பவர்களுக்குத் தோன்றியது. அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகரான கடவுளின் பரிசுத்தமான திருச்சன்னிதானத்தினது தேஜோமயமான 'அருள்' கிரணங்கள், அலைவீசும் மகா சமுத்திரங்களின் பேரிலும், ஆகாய மளாவி அகன்று உயர்ந்துள்ள பர்வதங்களின் மீதிலும், நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பெற்ற வானத்தின்மேலும் எப்படி வியாபித்துப் பூரணமாய் நிறைந்திருக்கின்றனவோ, அப்படியே தில்குஷா அரண்மனையின்மீதும் அவைகள் ஆவிர்ப்பவித்துப் பரிபூரணமாய் நிறைந்திருந்தன. தில்குஷா அரண்மனையில் அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு அறையில் இராஜப் பிரதிநிதியின் தேவியாரான ஸ்ரீமதி "ஸ்டராட்போர்ட்" சீமாட்டியாரும் 'நயனதாரா மகாராணியாரும்' பூர்ணேந்திரருமாய் உட்கார்ந்திருந்தனர்.

"இவ்விரவு உங்களின் அநுமதிபெற்று நான் புறப்பட்டுப் போகிறேன். ஸலாம்"—என்று புன்னகை பூத்த வதனத்

தோடும் கூறி ஸ்டராட் சீமாட்டியார் நாற்காலியிலிருந்தும் எழுந்தார். "நயனதாரா! நீயே நானுயின் இனி ஒரு க்ஷணமாகிலும் பூர்ணேந்திரனை என்னிடமிருந்து விடமாட்டேன். உன்னைவிட்டு இன்னொருதரம் பிரிவதில்லை யென்று பூர்ணேந்திரர் பிரமாணப் பத்திரம் எழுதிக்கொடுக்காவிடின் அவரைத் திரும்பவும் இவ்வரண்மனையின் அறையொன்றில் கைதியாக்கி வைப்பேன்"—என்று நயனதாராவை நோக்கி சீமாட்டியார் சிரித்துக்கொண்டு சொன்னார்.

"தங்களின் உத்தரவும் அநுக்கிரகமும் அவ்வாறிருந்தால் எனக்கும் அது இஷ்டமே. என் மனது சரியாயில்லையெனப் பாவித்த காலமும் ஒன்றிருந்தது. ஆனால் இப்பொழுதோ நயனதாராவுக்குப் பிற்பட்டே என் சுதந்தரமும் தன்மதிப்பும்" என்று பூர்ணேந்திரர் நகைமுகத்தோடும் நவின்றார்.

"ஹே பாரதா! என் அன்பார்ந்த பூர்ணேந்திரா! உனது பக்தி விநயசமத்கார நீதி நுட்பம் கலந்த வசனங்கள் என்னைப் பெரிதும் மகிழ்விக்கின்றன. ஞானம், ஐச்வரியம். வீர்யம், ஸக்தி, தேஜஸ் எனும் தெய்வீக ஆறுவகைக் குணங்களோடுகூட சிறந்த மஹா பக்திமான்களான க்ஷத்திரியர்களின் ஸந்ததியில் தோன்றியவன் நீ! இந்தப் பாரத மஹா நாட்டில் நீயும் ஒருவன். ஆகையால் ஜனங்களுடன் கூடிக்கலந்து ஸகோதரப்பான்மை பாராட்டி நயனதாராவுடன் வாழ்ந்துவருவாயாக. உங்களுக்கும் எனக்கும் உண்டானது போல் கிழக்கு தேசத்தாருக்கும், மேற்கு தேசத்தாருக்கும் இப்படியே ஸமரஸ உணர்ச்சி ஏற்படவேண்டும். உலகத்திலுள்ள பற்பல தேச ஜாதியாருக்குள் ஸமரஸ நிதானபாவமில்லாததாலேயே மானிடவர்க்கம் கஷ்டப்படுகிறது. இதை எப்படியாவது உண்டுபண்ணிவிட வேண்டும். கீழ்த்திசையாரிடம் ஏற்பட்டிருக்கும் வெறுப்பு காரணமாகவே, மேனுட்டார் கீழ்த்திசையின் நிஜஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளமுடியாமலிருந்து வருகிறார்கள். மடமையைவிட 'வெறுப்பு' மிக்க கெடுதலான குணமாகும். மேனுட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளத் தகுந்தவைகளைத் தெரிந்துகொள்ள கீழ்த்திசை காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் இரு தேசத்தாரும் பரஸ்பரம் மரியாதையாக நடந்துகொள்ளும் நிலைமையில் தான் இது ஸாத்தியமாகும்"

என்று "ஸ்டராட் போர்ட்" சீமாட்டியார் கூறினார். பின்பு அப்பெருமாட்டியார் பூர்ணேந்திரரது தாயையொத்து, அவரிடம் சென்று அவரது இருசெவிகளிலும் தமது இரு கரங்களை வைத்து தலை குனியச் செய்து முகத்தில் முத்தமிட்டார்.

"எனதருமைக் குழந்தாய்! பூர்ணேந்திரா! உன்னிடத்தும், என் கண்மணியான நயனதாரா விடத்தும் எனக்கு மரியாதை கிடை.

யாது. இருவரும் என் வயிற்றிற் பிறந்த குழந்தைகள் போலா வீர்கள். உங்கள் இருவரிடத்தும் எங்கள் பிராணனுள்ளளவும் எங்கள் ஞாபகம் மறவாது; அடிக்கடி நாங்கள் இங்குவந்து போவோம். இது தான் என் சொந்தமான தாய் வீடு. நீங்கள் தான் என் உண்மைக் குழந்தைகள். பகவான் உங்களை ரக்ஷிப்பாராக. உங்களின் பிரிவு என்னை மிகவும் வியாகூலப்படுத்தும். அது நிச்சயம். ஆயினும் உங்கள் இருவரது விவாகத்திற்கும்—நீங்கள் எங்களை அழைக்காவிட்டாலும்கூட—நாங்கள் அவசியம் வருவோமானதால்—திரும்பவும் உங்களை சீக்கிரத்தில் பார்ப்பேனென்ற நம்பிக்கையினால், அந்தத் தைரியத்தைக் கொண்டு இப்போது புறப்பட்டுப் போகத் துணிகின்றேன். களங்கமில்லாத குழந்தைகளே ! எனக்கு விடை கொடுங்கள்''-என அவ்வம்மையார் துடிதுடித்துக் கொண்டிருந்த உதடுகளில்சொல்லி, கண்களில் ஜலம் ததும்ப அதைத் துடைத்துக் கொண்டு அத்தியந்த பிரேமையோடும் அவ்வறையை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

* * * * *

"அவ்வம்மை நமக்காக வைத்துவிட்டுச் சென்ற பார்சலை (கட்டு) அவிழ்த்துப் பார்ப்போம். யாது காரணத்தால் அவ்வம்மையார் அதைப் பகிரங்கமாய் அவிழ்க்க விடவில்லையோ?'' என்று நயனதாரா மஹாராணி தமது ஹிருதயேஸ்வரரான பூர்ணேந்திரரிடம் சொல்லி, ஒரு சிறு கத்தியின் உதவியினால் அக்கட்டை யவிழ்த்தார். அதில் ஒரு பட்டுத் தலைப்பாகையின்மேல் எழுதப்பட்ட கடிதமொன்று காணப்பட்டது. காகிதத்தின் தலைப்பில் இந்தியா கவர்ன்மெண்டாரது ராஜசின்னங்களான ஆயுதங்களின் சித்திரப்படம் வரைந்திருந்தது. கடிதம் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

* * * * *

"1899-ம் வருஷம் செப்டம்பர்மீ 20-ம்தேதியில் ஸந்தோஷபுர மகாராணியாரும், இந்திய இராஜப்பிரதிநிதி யவர்களும், இராஜப்பிரதிநிதியின் பெருமாட்டியாருமாக பட்டாபிஷேக பவனிவருங்காலத்தில் மகாராணியாரைச் சுட்டுக் கொல்ல எண்ணிய இராஜத்துரோகிகளின் செயலானது மிகு பயங்கரமானது. மகாராணியாரின் பக்கத்திலேயே இராஜப்பிரதிநிதியின் பெருமாட்டியாரும் இருந்தாராதலின் அபாயம் ஒருவருக்குத்தான் எற்படுமென்பதில்லை. இராஜப்பிரதிநிதி யவர்களுக்குக்கூட ஆபத்து உண்டாயினும் உண்டாகலாம். அச்சமயத்தில் பிராணனுக்குத் துணிந்து தமது நிகரற்ற தைரியத்தினாலே அத்துஷ்டர்கள் இருவரையும் அடக்கி, அவர்களின் ஸதிச்செயல்கள் நிறைவேறாதபடி தடுத்துவிட்ட பூர்ணேந்திரசிங் அவர்களின் மீது ஸ்ரீ விக்டோரியா மகாராணியாரவர்கள் தமது நன்றியைப் பாராட்டும் உத்தேசத்தோடு, என்றென்றும் பரம்பரையாக வழங்

கும்படியாய் அவருக்கு "மஹாராஜா" என்ற பிருதை அளித்திருக்கின்றார். ஸந்தோஷபுர சமஸ்தானத்தின் வெளியே மூன்று திசைகளில் கங்காநதியால் சூழப்பெற்ற ஐம்பதினாயிரம் எக்ரா பூமியை ஒரு சமஸ்தானமாக ஏற்படுத்தி, அதற்கு விக்டோரியா மகாராணியவர்கள் பூர்ணேந்திரசிங் அவர்களை அதிபதியாக —அரசராக— நியமித்திருக்கிறார். மகாராஜா அவர்களும், அவருக்குப் பின் அவரது ஸந்ததியாரும் ஆங்கில கவர்ன்மெண்டுக்கு வருஷம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வரையில் கப்பம் கட்டவேண்டும், இந்திய ராஜப்பிரதிநிதியவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு பிரஜைகளுக்கு ஹிதமாகப் பரிபாலிக்கவேண்டும். இச்சமஸ்தானம் "சிங்பூர்ணேந்திரபூர் என்று அழைக்கப்படும். இச்சமஸ்தானாதிபதி யவர்களின் கௌரவார்த்தமாய் ஒன்பது மரியாதைக் குண்டுகள் போடப்படும். ஆதிபத்தியம் பூர்ணேந்திரசிங் அவர்களுக்குப் பின் அவரது மூத்தகுமாரனுக்காவது புத்திரிக்காவது லபிக்கும். இதுசம்பந்தமாய் நடக்கவேண்டிய அமுல்களும் பட்டாபிஷேகமும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் நடைபெறும்."

*** *** *** ***

"ஹா! ஹா! இவ்விரவு எனக் கெவ்விதமான ஆநந்தத்தைத் தந்தது? நீ உயர்ந்த ஸ்திதியில் இருப்பவள் என்று என்னை இனித் தள்ளிவிட ஒருநாளும் முடியாது. மெய்த் துணைக் காதலென் மெய்யினை யுருக்கி எத்துணையோ பட்டனன் பாடு நான். பரமனே யறிவான்! இனியேனும் வாதனை செய்து வருத்தர் தகற்றிடுக. உண்டி செய்வதுவும் உண்டிடற் கன்றோ? வண்டி வாகனமும் ஊர்வதற்கன்றோ? மலர்வகை மலர்வது மணம்பெறவன்றோ! பலவகைப் பொருளும் பயன்படவன்றோ? பயன் பிறர்க்கில்லவை நிலச்சுமையன்றோ? இதுபோல் தங்கட்குப் பயன்படாத இத்தேகம் எனக்கு எதற்கு?

"இத்துணை இளமையில் அத்துணை வன்மை
வைத்துள நெஞ்சம் வையகத்தில்லை;
சாக்தும் போக்தும் சதுரா யுரைத்தேனை
நீக்குமாறு நீ நினைத்த லடாது."

பிரிவினை என்னும் கவலை எவ்வளவு காலமோ நம்மைப் படுகுழியில் வீழ்த்தியிருந்தது. ஸ்ரீமதி விக்டோரியா மகாராணியார் என்னை எனது நாதர் மனப்பூர்வகமாய் அங்கீகரித்துக்கொள்ளும்படியான வழியைத் தேடிவிட்டார். இவ்வளவுக்கும் எனக்குத் தாய் தந்தையர் போன்று விளங்கும் இராஜப்பிரதிநிதி யவர்களும் அவரது பெருமாட்டியாருமே காரணம்" என்று கடிதத்தை வாசித்த நயனதாரா மகாராணியார் ஆநந்தக் கண்ணீர் சொறிந்து சொல்லலானார்.

[☞ இனி 12-பக்கங்களில் முடிவுறும்.]

6. 'அத்தை' யளித்த அருமை யந்திரத்தின் அதிசய விநோதம்.

முன்னொரு காலத்தில் பாரிவர்த்தகனொருவன் வெளிநாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்து திரும்பி வர நிச்சயித்து, அதற்கு வேண்டிய மனுஷர்களைச் சேகரித்துக்கொண்டு ஒரு பெரிய கப்பலையும் சித்தம் செய்தான். பிறகு தன்னுடன் கூட வருபவர்களை நோக்கி, "என்னிடம் அன்பானவர்களே! நாம் கப்பலேறி அபாயத்திற்குத் துணிந்து வெகுதூரம் போகப் புறப்படுகிறோம். நீங்கள் எனக்காக வேலை செய்வதற்கு வருகிறீர்கள்; ஆயினும் இத்தருணத்தை நீங்களும் கைவிடாமல் உபயோகப்படுத்திக் கொள்வது நியாயமே. நாம் போகிறது மிகவும் ஐசுவரியமுள்ள தேசம். எந்த வேலையாகட்டும் யுக்தியாக யார் செய்கிறானோ, அவன் சீக்கிரத்தில் பணம் சம்பாதித்துப் போடலாம். அப்படிப்பட்ட தேசத்துக்குப் போய் சும்மா வருவானேன்? புது ஊரில் ஒருவனுக்குப் புது புது யோசனைகள் தோன்றும். ஆகையால் நீங்கள் உங்களின் ஸக்திக்குத் தகுந்தபடி இங்கிருந்து சாமான்கள் ஏற்றிக்கொண்டுபோய் அவ்விடத்தில் சொந்தமாய் வர்த்தகம் செய்து, அதனால் கிடைக்கும் லாபத்தை நீங்களே அடையலாம். நீங்கள் அப்படிச் செய்வதனால், எனக்கு ஒரு நஷ்டமும் இல்லாதபடியால், அதற்கு நான் யாதொரு ஆக்ஷேபனையும் செய்யேன். உங்களுக்கே வர்த்தகயுக்தி கற்பித்து இப்போது புத்தியும் சொல்லுகிறேன். அது மாத்திரமா? உங்களில் யார் அதிக உழைப்போடும் ஊக்கத்தோடும் வேலை செய்து சாமர்த்திய நிர்வாகி யென்று பேர் பெறுகின்றானோ, அத்தகையோனுக்கு நான் திரும்பிவரும்போது வெகுமானமும் பண்ணப்போகிறேன். ஏனெனில் முயற்சியைத் தூண்டுவதுநலம். இன்னும் மூன்று நாட்கள் தவணை கொடுக்கிறேன். அதற்குள் உங்களின் சொந்த வியாபாரத்துக் கானவைகளைச் சேகரித்து ஜாக்கிரதை பண்ணிக் கொள்ளுங்கள். நான்காம் நாள் விடிய நேரத்தில் புறப்பட அட்டி பண்ணாமல் தயாராயிருக்கவேண்டும்" என்றான்.

அதுகேட்டு அனைவரும் மகிழ்வுற்றனர். தங்கள் தங்களுக்குள்ள பணத்தைக் கொண்டு தேவையான வியாபாரச் சரக்குகள் வாங்கிக்கொண்டார்கள். அவர்களில் புதிதாய் வேலையில் புகுந்த ஒரு சிறுவன் காசுக்குக்கூட வழியில்லாதவனாய்த் தன் தோழர்கள் பற்பல சரக்குகளை வாங்கிக் கொண்டு வந்து, பின்னை அகப்படப் போகிற லாபத்தை நோக்கிப் பெருமை பொங்கி நிற்க, அவர்களைக் கண்டு தன்னிலை நோக்கித் துக்கித்து நான் என்ன செய்யப் போகிறேன் என்று கவலையுற்றான். எப்படியானாலும் ஒருகை

பார்ப்போ மேன்ற துணிவு வருவது உண்டல்லவா? அப்படியே, அச்சிறுவனும் சரேலென்று புறப்பட்டு தன் கிழ அத்தையண்டை போய், அம்மா, என் நேசர்கள் அனைவரும் வேண்டும் பொருள்களை ஏற்றிக் கொண்டு வர்த்தகம் பண்ணி லாபமடையக் கப்பலேறித் தேசாந்தரம் போகிறார்கள். வெறுங்கையனாய் அவர்களோடு கூடப் போக வெட்கமாயிருக்கிறது. இந்தவேளையில் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினான். அதற்கு அத்தை, "குழந்தாய் ஆம், மெய்தான், உனக்கு அதிர்ஷ்டமில்லாவிடின் யார் என்ன செய்யலாம்? இப்படியே உன் தகப்பன் உள்ளகாலமெல்லாம் சிரமப்பட்டுக் கடைசியில் கண் மூடினார். நீயும் அவஸ்தைப்படப் பிள்ளை பிறந்திருக்கிறாய். உன் சுறுசுறுப்பைப் பார்த்தால் நீயே, தாவிலை, என்னலாம். நானோ உன்னைவிடக் கேவலம். இத்தருணத்தில் நீ என்னிடம் வந்தாய் என்ன செய்யலாம்—" என்றாள்.

அத்தை தன்னிடம் ஏதுமில்லையென்று கூறவே, அச்சிறுவன் அம்மா, என் தோழர்கள் இப்போதே என்னைப் பரிகாசம் செய்கிறது சொல்லத்திறமில்லை. மேலும் நான் சும்மா போனால், அவர்கள் என்னை எவ்வளவு அலக்ஷியமாய் நினைப்பார்கள்? நான் தான் அவர்களின் முகத்தை என்னமாய்ப் பார்ப்பேன்? என்று புலம்பினான். அவள் அதைக் கேட்டு அவன் புத்தியைப் பார்த்து அதிசயித்து, மருமகனே! நான் உனக்குப் பொன்னையும் பொருளையும் கொடுத்துக் குதூகலமுண்டாக்கப் போகிறதில்லை. ஆகிலும் ஒன்று தருகிறேன். அது ஒரு மகாத்மாவிடமிருந்து எனக்குக் கிடைத்தது. என் ஜீவனம் அதனால்தான் நடக்கிறது. ஆயினும் அதை உனக்குக் கொடுக்கிறேன். நான் எப்படியாவது போகிறேன். அதைப்பற்றிக் கவலை வேண்டாம். நான் கொடுப்பதை மாத்திரம் நீ செம்மையாக உபயோகப்படுத்தினால், விசேஷ பலன்பெறலாம் என்று சொல்லி, எழுந்திருந்து உள்ளே போனாள். அதுகண்டு அச்சிறுவன், அத்தையார் என்னவோ கொடுக்கிறதாகச் சொல்லி எழுந்து போனாரே, என்ன கொண்டு வந்துகொடுப்பாரோ, அதனால் என்ன லாபம் கிடைக்குமோ வென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். உள்ளே போனவள் உடனே ஒரு யந்திரத்தைக் கொண்டுவந்து, அப்பா குழந்தாய்! பார்வைக்குநன்றாயிருக்கவில்லையென நீ இதை அலக்ஷியம் பண்ணாமல், யுக்தியாய்க் கையாடினால், பொன்—வெள்ளி—முதலியதைத்தவிர, மற்றுவேண்டுவனவற்றையெல்லாம் கொடுக்குமென்றுசொன்னாள்.

பையன், அவள் ஏதோ ஒன்று தனக்குக்கொடுக்கவே அதிக சந்தோஷமடைந்து, அம்மா இதை எப்படி உபயோகிக்கவேண்டும் என்று வினவ, அவள் அப்பா அதுவெகு விசித்திரமானது; இதோ காண்பிக்கிறேன்பார். இப்போது உனக்கு என்னவேண்டும் சொல்

என்ன, அவன், அத்தை ஏதோ வேடிக்கை காட்டப்போகிறுளென்று, அன்பான அத்தையே, நான் இன்றைக்குக் காலைமுதல் சுத்தமாய் அன்னுகாரமில்லாமல் மனக்கவலை யுற்றிருக்கிறேன். இப்போது தக்கதாய் ஏதாவது ஆகாரம் கொடுப்பாயாகில் என்பசியாறும் என்றுன். உடனே அவள் அந்தயந்திரத்தை ஒரு பலகையின் மேல் வைத்து, நிதானமாய் மெல்லிய சத்தத்தோடு,—"யந்திரமே, யந்திரமே, சுடச்சுடக் கொஞ்சம் தோசை உண்டாக்கிக்கொடுக்க வேண்டு" மென்று பிரார்த்தித்தாள். தக்ஷணமே அந்த யந்திரம் சுழன்று, அப்போது தான் பண்ணினதுபோல் புசிக்கப் பக்குவமாய்த் தோசை உண்டாக்க ஆரம்பித்தது. வேண்டிய அளவு சேர்ந்தபிறகு, அவள் "வீரயந்திரமே; போதும் போதும் நிற்கலாம்" —,என்ன அதுவும் சட்டென்று நின்றுவிட்டது. பையன் அந்த அதிசயத்தை உன்னிப்பாய்க் கவனித்து, அத்தோசையைப் பசியாறப் புசித்துத் திருப்தியடைந்தான். பிறகு யந்திரம் அசையும்படி சொல்லவேண்டிய சொற்களையும், அது நிற்கும்படி சொல்ல வேண்டிய சொற்களையும் அத்தையின் முன்பாக உருப்போட்டு, ஒருக்காலும் மறவாதபடிக்கு மனதில் பதித்துக் கொண்டு, யந்திரத்தை அக்குளில் அடக்கி, அத்தையிடம் செலவு பெற்றுக் கொண்டு புறப்பட்டு உல்லாஸத்தோடு தோழர்களைச் சேரப்போனுன். அவன் கொண்டுவந்த யந்திரத்தைப் பார்த்து அவர்கள் பெருநகை நகைத்து வெகுநேரம் பரிகாசம் பண்ணினுர்கள். அவன், அவர்கள் இதன் மர்மம் தெரியாமல் நகைக்கிறுர்கள், சுகமாய் நகைக்கட்டும், என்று தன்பாட்டுக்குத் தான் யந்திரத்தை ஒரு மூலையில் ஒளித்து வைத்துவிட்டு, எப்படி வேலை செய்தால் அதிக பலன் பெறலாமென்று வழியெல்லாம் ஆலோசனை பண்ணிக் கொண்டே போனுன்.

யாத்திரை முடிந்து, கருதிய தேசம் சேர்ந்தவுடன் யாவரும் போல அச்சிறுவனும் எஜமானனண்டை வந்து தெண்டனிட்டு, தான் தன் வேலையை நடத்துவதற்காக உத்தரவு கேட்க, அவன், அப்படியே ஆகட்டும்; நல்லது, நீ என்ன வேலை செய்யப்போகிறுய்? எனக்கு நம்பிக்கையா யிருக்கவில்லை யென்றுன். அதற்கு அந்தப் புதுவேலைக்காரன், ஐயனே! அது நாளாவர்த்தியில் நன்ருய்த் தெரியவரும்; ஆயினும் அதற்குத் திருஷ்டாந்தமாக ஒன்று பாருங்கள்; தங்களுக்கு இப்போது வேண்டிய பொருளைக் கூறினுல் நாளை இந்நேரத்திற்குள் உண்டு பண்ணிக் கொடுக்கிறேன் என்ன, அத்தலைவன் பையன் பேச்சைப் பரிசோதிப்போமென்று, நான் கொண்டுவந்த எலுமிச்சம்பழம் ஆய்விட்டது, நீ நாளைக்கு நூறு எலுமிச்சம்பழம் கொண்டுவா, ஆகையால் அதற்குள்ள கிரயத்தைத் கொடுத்து விடுகிறேன் என்றுன். அதன் பேரில் அப்பையன் தன் யந்திரத்தை எடுத்துக்கொண்டு ஏகாந்தமான

இவ்விதம் நேர்ந்தது; யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொள்வதுபோல் நாமே நம்மைக்கெடுத்துக் கொண்டோம்; இனி அவனை நம் அதிகாரத்துக்கு உட்படுத்தமுடியாதே; ஆகையால் வஞ்சகமாய் அவனைக் கெடுக்க ஏதாவது வழி தேடவேண்டுமென்று நிச்சயித்து சமயம் பார்த்திருந்த, அச்சிறுவன் ஒருநாள் கதவை மூடாமல் அண்டைவீட்டுக்குப் போகிற தருணம் நோக்கி, அவன் கடைக்குள்ளே நுழைந்து, சுற்றிப்பார்த்து ஒன்றையும் காணாமல் திரும்பிவரும்போது ஒரு மூலையில் என்னவோ இருக்கிறதாகத் தட்டுப்பட அங்கே போய்ப் பார்த்தான். அவ்விடத்தில் தான் முன்னாலே பார்த்திருந்த யந்திரம் இருக்கக் கண்டு, இதனால் தான் பையன் இவ்வளவு கொழுத்துப்போகிறான்; நாம் இதை எடுத்துக்கொண்டுபோய் விட்டால் லட்சாதிகாரியாகலாம்—என்றெண்ணி அதை எடுக்கப் போகும்போது, பையன் திரும்பி உள்ளே வந்து பார்த்து விட்டான். உடனே அவன் வந்த காரியத்தைத் தெரிந்துகொண்டு யந்திர மந்திரத்தைத் தன் வாய்க்குள் சொல்லிக்கொண்டு, யந்திரமே இவனுக்கு இரண்டு கட்டைத்தடிகள் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்திக்க, அப்படியே தடிகள் ஒன்றின் பின்னால் ஒன்றாக எஜமானன் மேல் விழுந்து முதுகை இரத்தப் பிரவாகமாகும்படிசெய்தன. எஜமானன் அடிகள் ஓயாது விழுவதைச் சகிக்கமாட்டாமல், ஒருவேளை "அப்பா! விட்டுவிடு, உன் காலில் விழுகிறேன்"—என்று நல்ல விதமாயும், ஒருவேளை, "துஷ்டப்பயலே பார்! உன்னை என்ன செய்து போகிறேன்" என்று பொல்லாத விதமாயும் இம்சையினின்றும் தப்புவிக்கும்படி கூச்சலிட்டான். கடைசியில் ஐயோ பாவம்! போதும் என்று பையனுக்கே தோன்றி, பிறர் சோத்தின் மேல் கை வையாதே, இப்போது கதவைத்திறந்து விட்டுவிடுகிறேன். இனி ஜாக்கிரதையாகப் பிழை, இன்னொருதரம் இப்படிச்செய்வாயானால் பிராணன் உன்னதென்று நினையாதே என்று புத்தி சொல்லி யந்திரத்தை நிற்கச் சொல்லி வேண்டிக்கொண்டு, எஜமானனை அந்த மட்டில் உயிரோடு விட்டான்.

அவன் முன்னிலும் அதிக கோபங்கொண்டு, தன் எண்ணத்தை எப்படியாவது நிறைவேற்றக் கருதி அதற்கு வேறொரு உபாயம் ஆலோசித்தான். அதென்னவெனில், முன் நடந்த சங்கதி மறந்துபோகட்டுமென்று சிலநாள் சும்மா இருந்து, அது மறந்துபோனவுடன், ஒரு நாள் அச்சிறுவனிடம் சென்று, போனதெல்லாம் போகட்டும், நாம் இனிமேலே, பொருந்திய நீரும் பாலும் போலே பகையின்றி ஒருவருக் கொருவர் உதவியாயிருப்பது நலம் என்று சொல்லித் தந்திரத்தினாலே அவனைச் சிநேகமாக்கிக்கொண்டு அவனுடைய சிநேகிதர்களுக்கு ஒரு நாள் ஒரு பெரிய விருந்து செய்தான். சிறுவனிடம் நேரில் சென்று என் விருந்துக்கு உன்னை

ஆசையோடும் அழைக்கிறேன். அடிநாள் தோழனை நீயும் வரப் பிரார்த்திக்கிறேன் என்று வேண்ட, கபடமற்ற அச்சிறுவனும் நல்லது ஆகட்டுமென்று ஒத்துக்கொண்டு விருந்துக்குச் சென்றான். எஜமானனே நல்ல திண்டிகளை அவனுக்குக் கொடுத்து சாராயமும் வற்புறுத்திப் பூர்ணமாய்க் குடிக்கவைத்துவிடவே, சிறுவன் தன் நிலை தனக்குத் தெரியாமல் மயக்கத்தில் மயங்கிக் கிடந்தான். அத்தருணம் பார்த்திருந்த அந்த எஜமானன் அவன் கடைச் சாவியைப் பிடுங்கிக்கொண்டு அவ்வீட்டுக்குப்போய் யந்திரத்தைத் தேடி எடுத்துக்கொண்டு, யாருக்குந் தெரிவியாமல் ஏற்கெனவே தன் வேலைக்காரர்களோடு சித்தம் செய்திருந்த கப்பலண்டை ஓடி அந்நிமிஷமே கப்பலேறிச் சொந்த ஊருக்குப்புறப்பட்டு விட்டான். கப்பலும் வெகு தூரம் போய் விட்டது.

எஜமானனான அவ்வர்த்தகனின் சந்தோஷமோ சொல்லி முடியாது. 'தசை' தன் பக்கம் திரும்பிற்றென்று மிகு குசாலடைந்து, "இனி நமக்கு மேல் யார் தனத்தில் நிகர்? ஒருவரும் இல்லை யென்னும்படி பணம் சேர்த்துக்கொண்ட பிறகு இதை ஒருவருக்கும் உபயோக மாகாமலிருக்கும் பொருட்டு சுக்கல் சுக்கலாய் உடைத்து விடுவேன்; முன்னே அந்தத் துஷ்டப்பயல் என்னை அடித்தானே; அப்போது இந்த யந்திரம் அசையும்படி தன் வாய்க்குள் மொண மொணத்துக் கொண்ட சொற்களும் எனக்கு ஞாபக மிருக்கின்றன"—என்றிவ்வாறாக எண்ணமிட்டுக்கொண்டே போனான். சுயநலம் முற்றிய இவ்வஞ்சக உலகத்தில் பிறருக்கு ஹிதம் செய்வதையே தனது பெருங் கடமையாகவும், ஜன்மலக்ஷ்யமாகவும் நினைக்கிறவர்கள் எத்தனைபேர்?

கப்பற் பிரயாணத்தின் ஒரு நாட்போது வர்த்தகன் குழம்பில் உப்பில்லாதுபோக, தன் வேலைக்காரனை இன்னும் கொஞ்சம் உப்பு போடு என்றான். அவன், வெளியே புறப்படும்போது உப்பு கொண்டு போகப்படாது என்று சொல்வார்களே, அப்படியே ஆச்சுது; அவசரத்தில் அதிக உப்பு எடுத்துக்கொண்டு வரச் சரிப்படவில்லை. ஒரு உப்புக்கல் கூட இப்போது கிடையாது என்றான். அது கேட்ட எஜமானன் "அதுவிஷயத்தைப்பற்றி நீ சிந்திக்கவேண்டுவதில்லை; எது வேண்டுமானாலும். அதை உனக்கு உண்டுபண்ணிக் கொடுக்க எனக்கு சாமர்த்திய முண்டு.

இப்போது ஒரு திருஷ்டாந்தம் பார்" என்று சொல்லிவிட்டு யந்திரத்தைத் தூக்கிவைத்து "யந்திரமே! யந்திரமே! கொஞ்சம் உப்பு உண்டாக்கிக் கொடுக்கவேண்டும்" என்று அதைப் பிரார்த்தித்தான். அதுவும் வழக்கப்படி சுழல ஆரம்பித்து, உப்பைச் சுரக்கத் தலைப்பட்டது. வேலைக்காரன் உப்பு எப்படி வந்ததென்று ஆச்சரியப்பட்டு, ஒரு பெரிய குவியலான பிறகு, உப்புபோதும், இன்னும் ஏதாவது கொடுக்கச்சொன்னால் நல்லது என்று எஜமா

னேடு சொன்னன். அவனும் சேர்ந்த உப்பு போதுமென்று நினைத்து யந்திரத்தை நிறுத்தப் பார்த்தான். ஆனால் நிற்கும் போது சொல்லவேண்டிய சொற்களை நம் சிறுவன் முன்பு மொண மொணத்தபோது இவன் சரியாய்க் கேட்க முடியவில்லை. செவியில் விழுந்த சில சொற்களும் மறந்துபோயின. இதற்குள்ளே உப்பு கப்பல் முழுமையும் நிரம்பி யிருக்க இடமில்லாமற் போய் விட்டது. அதை எப்படியாகிலும் நிறுத்தவேண்டுமென்று தன்னால் ஆனமட்டும் நானுவிதமாய் வேண்டிக்கொண்டான். வயிற்றுப் போக்கை நிறுத்த விளக்கெண்ணெய் கொடுத்ததுபோல அவனுடைய எல்லாப் பிரயத்தினமும் வீணாய்ப்போனது கண்டு கடைசியாகக் கோபம்வந்து, அந்த யந்திரத்தை உடைத்துத் தள்ளிவிடுகிறதே சரியென்று தீர்மானித்து அதைத் தூக்கினன். யந்திரம் வேலை செய்யாதபோதுதான் தூக்கமுடியுமே யன்றி, அது தன் வேலையைச்செய்து கொண்டிருக்கையில் எவ்வளவுபேர் வந்தாலும் தூக்கமுடியாது. இதை வர்த்தகன் கண்டுகொண்டு கோபத்துடன் கோடாலியினல் அந்த யந்திரத்தை இரண்டாக உடைத்து விட்டான். மூடர் கையிற் சிக்கிய பொருளின்கதி இப்படித்தான். அந்த யந்திரமோ மந்திரமகிமை யுள்ளதானதால், உடைந்தபிறகும், ஒன்றுக்கு இரண்டாய் உடையப்பட்ட இரண்டு துணுக்கைகளும் ஓயாமல் சுழன்று, முன்னிலும் இரண்டு பங்காக உப்பை உண்டாக்கத் தொடங்கின. கப்பலோ உப்பு பளுவைத் தாங்க மாட்டாமல் ஸமுத்திரத்தில் முழுகிப்போயிற்று. எஜமானனை அந்த வர்த்தகனும் அவன் வேலைக்காரர்களும் அக்கப்பலோடு மூழ்கி மடிந்து போனார்கள். ஒரு நூலிழையிலே நிற்கிறது மனிதனுடைய ஆவி! இதில் எத்தனை கவலைகள், எத்தனை பயங்கள், எத்தனை வஞ்சகங்கள், எத்தனை மோச எமாற்றங்கள், எவ்வளவு பேராசைகள், எத்தனைப் போராட்டங்கள்! கஷ்டங்களை மனிதர்கள் தமக்குத்தாமே மூடத்தன்மையால் விளைத்துக்கொள்கின்றனர்! கப்பலோடும் முழுகிய அந்த யந்திரத் துண்டுகள் மாத்திரம் உப்பை உண்டாக்கியபடியே இருந்தன. முழுகி ஜலத்திற்குள் சென்ற பிறகு கூட அது ஓயவேயில்லை!

அக்காலம் தொடங்கிக் கடல் உப்பா யிருக்கிறதென்று சொல்கிறார்கள்.

அந்த உப்பு ஒருநாளும் மாறவேமாறாது என்றும் சொல்லுகிறார்கள். ஏனெனில் அந்த உடைபட்ட யந்திரத்துணுக்குகள் இரண்டும் இன்னும் உப்பை உண்டாக்கியபடியே வேலைசெய்து கொண்டிருக்கிறதன்றி, சிருஷ்டியுள்ளளவும் அப்படியேசெய்து கொண்டிருக்குமாம். இதனால்தான் சமுத்திரஜலம் உப்பாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்!

(சிறுவன் செய்தியுடன் அடுத்த பத்திரிகையில் முடிவுபெறும்.)

பிரஜாநுகூலன்.

Vol. 17. ‖ திரிச்சி : ஜனவரி—மீ 1921. ‖ No. 2.

பிரபஞ்ச விலாஸம்

244. உலகப்போக்கு.—அந்நியர் ஏதாவது தீங்கு செய்தால் அவன் சகவாசமே கூடாது, மஹா பாபி, அவன் முகத்தில் விழிக்கவேகூடாது என்று திரஸ்கரித்து விடுகிறார்கள். சொந்த பந்துக்கள், ரத்தக்கலப்புள்ளவர்கள்—ஒருக்காலும் நமக்கு நன்மையைக் கோராதவர்களாயினும், பரம சண்டாளராயினும், காலமெல்லாம் அவர்களுக்கு உழைக்கவேண்டியதாயிருக்கிறது. அதைப் பற்றி சலிப்பும் ஏற்படுவதில்லை.

245. நல்லதைக் கெடுத்தல்.—ஒரு நல்ல விஷயம் நடக்கவேண்டிய காலத்தில் பந்துக்கள் பொறாமையினால் அதைக் கெடுக்க முயல்கின்றனர். தம்முயற்சி பயன்படாவிடில், பிறகு மெள்ளத் தாமும் அவ்விஷயத்தில் கூடிக்கொண்டு சந்தோஷப்படுபவர்போல் நடிக்கின்றனர்.

246. தூரத்தில் மறதி, நெருங்கின் உறவு.—சில நண்பர்கள் எதிரில் இருக்கும்போது மிக்க அன்புடன் குலாவுவதும், அவர்களின் காரியத்தைத் தன் காரியம்போல் நினைத்துச் செய்வதுமாயிருக்கின்றனர். தமது நண்பர் தூரதேசத்தில் இருக்கும்போது அவருக்காக ஒரு சிறு உபகாரம் செய்யும்படி மற்றவர்கள் கேட்டுக்கொண்டாலும்—"பார்க்கலாம்"—என்று இழுப்பில் விட்டுவிடுகிறார்கள்.

247. நெஞ்சில் அடக்கல்.—யாதாமொரு கஷ்டத்தை வெளிக்குக் காட்டிப் பிரலாபித்துக் கண்ணீர் விடுவதிலும், பிறர் அறியாமல் மனதில் அடக்கிவைத்து வாதனைப்படுவது பிராணசங்கடம்.

248. ஒரு உலக அநுபவம்.—எத்தனைதான் கற்றாலும், பிறர் சொல்லக் கேட்டாலும், ஒரு தடவை அகப்பட்டுக்கொண்டு கலங்கினால்தான் சிலருக்குப் புத்தி வருகிறது. பல தடவைகளில் தீச்செயல்களில் புகுந்து ஆபத்து நேர்ந்தாலும் சிலர் அதை விடுவதேயில்லை.

249. என்ன செய்ய?—தம்மக்கள் வயிற்றில் ஒரு மகவு பிறக்கவேண்டும், அதன் மழலைச் சொற்களைக் கேட்கவும், அதற்குச் சின்னஞ் சிறு நகைமணிகள் போட்டுப் பார்க்கவும், பாலூட்டித் தாலாட்டி வளர்க்கவும் பேராவல் கொண்ட உருக்கமுள்ள பாட்டியார், பாட்டன் காலஞ்சென்றபின்—தரித்திரம் பிடித்த குழந்தைகள் பிறக்கின்றனர். இப்போது பிறந்து என்ன செய்ய?

250. மனோ விரக்தி.—பரமஞானி தேகாபிமானத்தைப் படிப்படியாய் ஒழிக்கக்கூடும். மனோவிரக்தி கொண்டவனோ ஒருக்ஷணத்தில் உலக வாழ்க்கையைத் துறந்து விடுகிறான். மிக்க விரக்தியடைந்து விடுகிறான். தற்கொலைக்கும் நெஞ்சு துணியவைத்து விடுகிறது.

251. அதிகாலை வேலை.— அதிகாலையானது ஒவ்வொருவருக்கும், புது ஊக்கமும் தெளிந்த அறிவும் உண்டாகக்கூடிய நேரம். மற்ற நேரங்களில் செய்வதைவிட அதிகாலையில் செய்யும் எந்த வேலையும் சுறுசுறுப்பாகவும் ஒழுங்காகவும் இருக்கும்.

252. மார்கழிமாதம்.—பன்னிரு மாதங்களிலும் இது சிலாக்யமானது. ஸ்நானம், பஜனை, பகவத்தரிசனம், எல்லா பாக்கியமும் யாருக்கும் இம்மாதத்தில் உண்டு.

253. அது என்ன பிரமாதம்?—சிலருக்குத் தான் செய்யும் வேலை தான் மிக்க சிரமம் உள்ளதென்றும், மற்றவர்கள் செய்யும் எந்த வேலையும் சுலபமென்றும், யார்தான் செய்யமாட்டார்களென்றும், அலக்ஷியமாய்ப் பேசுவது வழக்கம். அவரவர்கள் கஷ்டம் அவரவர்களுக்குத் தெரியும். நிதானித்து யோசிக்கில் யாவருக்கும் நன்கு விளங்கும்.

254. கர்மம்:—பொய் சொல்வது, பிறனில் விழைவது, பிறர்மேல் குற்றம் காணுமல் த்வேஷம் பிறப்பது இவையெல்லாம் கர்மத்தால்—உண்டாகும் கெடுதிகள்.

255. கோழியைப்போல் பொறுக்கிக் கொள்ளுதல்.—சில அழகிய குறிப்புகளை வரைந்து, அவற்றில் வேண்டியதைக் கோழியைப்போல் பொறுக்கிக் கொள்ளும்படி ஒரு தமக்கை தன் தம்பிக்கு எழுத, கோழி மாணிக்கத்தை விட்டு சொத்தையான தானியத்தை யல்லவா பொறுக்கும்? எனவே, கோழி உவமானம் சரியல்லவென்று எழுதினன் தம்பி.

256. அதற்குத் தமக்கையின் பதில்.—"கோழிக்கு மாணிக்கத்தினல் காரியமென்ன? அவ்வற்ற குப்பையைக் கிளறி தனக்கு வேண்டிய பூச்சி புழுக்களை எடுத்துக்கொள்ளும். அதுவே அதற்கு வேண்டியது. வயிறும் நிரம்புகிறது. மாணிக்கத்தை விழுங்கிஞல் கோழிக்குக் கஷ்டமே தவிர பசி தணியாது. ஜீரணமும் பெறுது. திருப்தியுமாகாது. அதுபோல் உனக்கு வேண்டியதைக் கொண்டு, தேவையற்றதை நீக்கிக்கொள் என்றேன். இதுவே அதன் கருத்து."

257. கடிதம் வரைதல்.—எழுதும்போது அந்த முக்கிய சங்கதி ஞாபகத்திற்கு வராது. தபாலில் போட்டபிறகு அதை எழுதாமற் போனேமே எனத் தோன்றும்.

258. நம்பிக்கையின் நாசம்.—நமக்கு மிக்க அன்புடையவர்களென்றும், இவர்கள் தான் நமக்குக் கடைசிவரையில் உற்ற துணையாய்—உண்மையா யிருப்பவர்களென்றும்,எவர்களைப்பற்றி நம்பியிருக்கிறேமோ அவர்கள்தான் திடீரென்று விண்ணுலகு செல்கிறார்கள். சிலர் மண்ணுலகில் இருந்துகொண்டே நேர் விரோதிகளாகிறார்கள்.

259. சில வாயாடிகளின் பேச்சு.—நாலுபேர்கூடி ஒருவேலை ஆரம்பித்தால் அது நன்மையாக முடியுமாயின்—என் ஏற்பாடு, உன் ஏற்பாடு என்று கூத்தாடுவார்கள். நஷ்டமாய் முடிந்தால் "எனக்கு இஷ்டமே கிடையாது, இவர் செய்தவேலை—அவர் செய்தவேலை"—என்று ஒருவர் மேல் ஒருவர் பழிபோடப் பார்ப்பார்கள்.

260. பிதுரார்ஜிதம்.—ஸகோதர ஒற்றுமை இல்லாததிஞல் பல குடும்பங்களில் தங்கள் பிதுரார்ஜிதங்களை அன்னியர் அநுபவிக்கும்படி விட்டிருக்கிறார்கள்.

261. சுமங்கலியின் அநுமை.—ஒரு பெண்ணுக்கு சகல சம்பத்தும் தன் புருஷனோடு போய்விடுகிறது. கணவன் கண் மூடியதும் அவள் சாதாரணமாய் முன்பு திறந்த பெட்டிகளை இப்போது திறக்க முடியாமற்போய் விடுகிறது. மற்றவர்கள் அதற்குப் பெரிய பூட்டுபோட்டு விடுகிறார்கள்.

262. நிஜமான கல்வி.—ஒரு குழந்தையினிடத்தில் இருக்கும் முக்கியமான அம்ஸத்தை விர்த்திசெய்வதும், படிப்பு முடிந்தபிறகு ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் உலக வாழ்வில் இறங்கும்பொழுது தாங்களே ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்து, நல்லது எது, கெட்டது எது, என்று அறியும்வண்ணம் திடமான பகுத்தறிவைக் கொடுக்கக்கூடியதுமான கல்வி தான் நிஜமான கல்வி.

263. ஸத்காலக்ஷேபம்.—சில வீடுகளில் ஸ்திரீ புருஷர்கள் இரு வகையாருக்கும் வேலை ஒழிந்த நேரமெல்லாம் பிறருடைய குற்றங்களை எடுத்துச் சொல்வதே ஸத்காலக்ஷேபமாம்.

264. கௌரவ சேவகம்.—ஒரு வீட்டில் நடக்கும் சங்கதிகளை நாலு தெருவோ, நாலு வீடோ தாண்டிப்போய் சொல்லிவிட்டு வருபவர்கட்கு சம்பளமில்லாத சேவகமாம்.

265. ஒருவரைக் கேட்பது.—"எற்பதிகழ்ச்சி" என்பதை மறந்து, வெட்கம்விட்டு, ஒருவரை ஒன்று கேட்பதே கஷ்டம். கேட்ட பின்பு அவர் இல்லையென்பாராகில் அதிலும் பிராணசங்கடம்.

266. பிச்சைக்கு அரிசி.—நாம் சாப்பிடும் அரிசியைப் பிச்சைக்காரருக்குப் போடக்கூடாது. ரூபாய்க்கு இரண்டு படி வாங்கியா - பிச்சை போடுவது? மட்ட அரிசியாக ஒரு ரூபாய்க்கு வாங்கிக்கொண்டு அதில் போடவேண்டுமென்பார் சிலர். நாம் உண்ணும் அரிசியில் தினம் நாலு பிடி அரிசி குறைந்தால் அதற்காக அதிகம் வாங்கவேண்டியதில்லை. பிச்சைக்காரருக்கென்று வேறு வாங்குவது தான் நஷ்டம்.

267. நமது பேதமை.—பெற்றோர் பெண்குழந்தைகளுக்கு சீக்கிரம் விவாகம் செய்துவிடவேண்டுமென்று பாடுபட்டு, பணமும் செலவிட்டு விவாகம் செய்கிறார்கள். மாமியார் வீட்டுக்கு அனுப்பும்போது மிக்க துக்க ஸாகரத்தில் மூழ்கிவிடுகிறார்கள். இது நாமாகத் தேடிக்கொள்ளும் கஷ்டம்.

268. மாப்பிள்ளை வீட்டார்.—பெண் கேட்போர் பெண்ணைக் கொள்கிற வரையில் பெண்வீட்டுக்காரர் வார்த்தையை சிரசாக வகித்து—'இன்று வாருங்கள், நாளைக்கு வாருங்கள்,' என்று சொல்லும் கெடுவுகளுக்கெல்லாம் பொறுமையுடன் திரிகிறார்கள். தாலி கட்டினவுடனே மாப்பிள்ளை வீட்டாருக்கு டிகிரி ஜாஸ்தியாய் விடுகிறது. கொடுக்கிறவரையில் கொண்டாட்டமும், கொடுத்த பிறகு திண்டாட்டமுமாய் பெண்வீட்டாரின் பாடு ஆகிறது.

269. மாமிக்கு ஒரு புத்தி.—மாமியார் தன் மருமகள் வேலைசெய்வதில்லையென்று பிறரிடம் புறங்கூறுவதிலும், அதிகாரத்துடன் அழைத்து, கண்டிப்பாய் இதைச் செய்துதானாகவேண்டுமென்று சொல்வது மேல்.

270. அயோக்கியத்தனம்.—ஒரு வீட்டில் பெண்ணையழைக்கப் பெற்றோர் வந்தால், யாராவது ஒருவர் தலைமை வகித்துப் பதில் சொல்ல வேண்டும். பெரியோர்களைக் கேட்டால் புருஷனைக் கேளுங்கள் என்ப

தும், புருஷனைக் கேட்டால் பெரியோர்களைக் கேளுங்கள் என்பதும் அயோக்கியத்தனம். இன்னவர்களுக்கு மரியாதை நீடிக்காது.

271. எஜமானன் கடமை.—வீட்டில் வேலை செய்பவர்களுக்கு ஒரே சம்பளமானாலும், அவரவர் திடத்திற்கும், பலத்திற்கும் தக்கவாறு பணியிடுவதே எஜமானன் கடமை.

272. மிகக் குரூரம்.—நேரில் ஒருவரைத் திட்டுவதைப் பார்க்கிலும், சாக்குப்போக்குகளில் மற்றவரைச் சொல்வது போல் சொல்வது மிகக் குரூரமானது.

273. ஒரு அநுபவம்.—எஜமானனும் உண்மையாய் உழைக்கிறவனிடமே அதிக வேலைகள் வாங்குகிறான். பெற்றோரும் தமக்கு அடங்கி நடக்கிற பிள்ளைகளையே மிக்க அதிகாரம் செய்கின்றனர்.

274. பணக்காரர் சாவு.—பணக்காரன் சாகும்போது ஏதேனும் தங்களுக்குக் கொடுப்பான் என்று பந்துக்கள் 10-நாட்களுக்கு முன்பே அவன் தலைமாட்டில் காத்திருப்பார். அவனோ சுயகாரியமாய் மனைவி மக்களுக்கே சகலமும் ஏற்பாடு செய்துவிட்டுக் கண்ணை மூடிக்கொள்வான். அவன் செய்த மோசத்தை நினைத்து அவனுக்கு அழுதுவிட்டுப் போவார்கள்.

275. ஏழையின் சாவு.—பணமில்லா ஏழை சாகும்போது பேய்க் கூட்டங்கள் இராது. குதகபாத்திய முள்ளவருங்கூட உயிர்போன பின்பு வயிறு நிரம்ப காப்பிப் பலகாரங்கள் சாப்பிட்டுவிட்டு வருவார்கள்.

276. சம்பளமில்லாத சேவகம்.—20 ஆயிரம் ரூபாயுடனும், வீடு, நகை, சீதனங்களோடும் கன்னிகாதானமாகக் கொடுக்கப்பட்ட தன் ஸகோதரி, தன் மாமி வீட்டில் ஸகல வேலைகளையும் தானே செய்துகொண்டிருப்பதைப் பார்த்த ஸகோதரனொருவன், அக்கா! உனக்கு மாதம் என்ன சம்பளம் என்றனன். அதற்கு அத்தமக்கை, என்னருமைத் தம்பீ! சாப்பாடு போட்டு வருஷத்திற்கு இரண்டு சேலைவாங்கித் தருகின்றனர், சம்பளமில்லை என்று கூறினள்.

277. கடன்காரரின் ஜாலம்.—கடன் தந்தவர்கள் வருகிற சமயம் பார்த்து தாட்பூட் என்று கூச்சலிட்டு, பிள்ளைகளைத் திட்டவும், பெண் ஜாதியை அடிக்கவும், சோற்றுப் பானையை உடைக்கவுமாக இருக்கிறார்கள். கடன் தந்தவன் மானியாக இருந்தால் ஏதோ வீட்டில் சச்சரவென்றெண்ணி, 10-நாள் கழித்து வரலாமென்று போய்விடுகிறான்.

278. நகை இரவல் சமர்த்து.—தன் மகளுக்கு, கல்யாணத்திற்காக 10-நாளைக்குக் கொடுக்கவேண்டுமென்று தன் உறவினரிடமிருந்து ஒரு நகை வாங்கிக்கொண்டு போய், அதை அடகுவைத்து சம்பிரமமாய் செலவு செய்துவிடுகிறார்கள். நகைக்கு உடையவன் கேட்கப்போனால் இன்று, நாளை, மாதம், வருஷம், என்று நாளைக் கழித்துவிட்டு நான் என்ன செய்வேன், என் கையில் கொடுப்பதற்கு ஐவேஜு இடையாது, என்னசெய்யவேண்டுமோ செய்துகொள் என்கிறான். இந்தப் படுமோசக்காரனை என்ன செய்யலாம்?

279. துரோக நட்பு.—தூரத்திலிருக்கும் ஒரு சிநேகனுக்கு, தனக்கு மிக்க ஆபத்தான கஷ்டம், உடனே 50 ரூபாய் அனுப்பவேண்டுமென

எழுதினால், அதைப் படித்துக் கிழித்துப்போட்டுவிட்டு பதில் எழுதாமலே இருந்துவிடுகிறான். பிறகு அவன் கஷ்டம் தீர்ந்து, நமது சினேகிதன் கொடுக்காவிடினும் ஒரு கடிதமாவது எழுதவில்லையே என்று மனம்வாடியிருக்கும்போது—கடிதம் வருகிறது. "நான் ஒருமாதம் வெளியூருக்குப் போயிருந்தேன்; வந்து இரண்டு நாளாகிறது; உன் க்ஷேமம் ஒன்றும் தெரியவில்லை; உடனே உன் க்ஷேமம் தெரிவிக்கவும்" என்று எழுதும் விசுவாசத் துரோகிகள் பலர்.

280. விவாகம்.—கல்யாணம் ஆவதற்கு முன், சிலர் பெண் அழகாய் இருக்கவேண்டும் என்கிறார்கள். அவன் தலைவிதியோ தடிப்பாயும் கருப்பாயும் உள்ளவளை மனைவியாக்கி விடுகிறது. பிறகு அவளிடத்தில் இஷ்டமில்லாமலா இருக்கிறார்கள்?

281. முதல்தாரம்.—முதல்தாரம் காலமாகிவிட்டால், இரண்டாம் தாரத்து மனைவியிடம் அவ்வளவாய் அன்பு இருக்கிறதில்லை. ஒருக்கால் அவளும் காலமாகிவிட்டாலும், முன்னவள் போனபோது இருந்த விசனம் இருப்பதில்லை. ஒருத்தி போனாள்—மற்றொருத்தி வந்தாள்—இவள் போனால் இன்னொருத்தி வருவாள்—என்று தைரியப்பட்டு மனம் தேறிவிடுகிறது.

282. குடும்பக் கலகம்.—குடும்பத்தில் ஏதேனும் கலகம் உண்டானால், பெரியோர்களா யிருப்போர் சமாதானம் செய்து வைப்பதற்குப் பதிலாக, நாரதரைப் போல் இருபக்கத்திலும் கோள்சொல்லி பிரிவினை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

283. கற்பு.—கற்பு என்பது பெண்களுக்கு மட்டுந்தானும்! ஆடவர்க்கும் உண்டென்பதை சிலர் நினைத்துப் பார்க்கிறதில்லை. லௌகீக தர்மமும் அப்படியே இருக்கிறது.

284. நானாகச் செய்யவில்லை.—சிலர் ஏதாவது கெட்டகாரியம் செய்துவிட்டு, பிறர் தூண்டுதலினால்தான் செய்தேன், நானாகச் செய்யவில்லை என்கிறார்கள். தனக்குப் பிரியமில்லாவிடில் பிறர் என்ன தூண்டுதல் செய்தாலும் முடியாது.

285. மறக்க முடியாது.—கடித மூலமாவது, நேரில் பேசும்போதாவது பிறர் மனம் நோகும்படி சுடு சொற்களைப் பிரயோகிப்பது சிலருடைய சுபாவம். ஆனால் அவர்கள் அதை சீக்கிரம் மறந்து விட்டாலும் பிறர் மட்டும் மறக்கமுடியாது.

286. யாரிடம் சொல்வது?—பிறர் நமக்குச் செய்த வஞ்சகத்தை நமது பெற்றோரிடத்தும், ஸகோதரரிடத்தும், உள்ளன்புடையாரிடத்தும் சொல்லி ஆற்றிக்கொள்ளலாம். மேற்சொன்ன மூவகையாரும் செய்கிற வஞ்சனைகளை யாரிடம் சொல்லிக்கொள்வது?

287. கால்படி அரிசி.—கடைக்காரன் கால்படி யரிசியை அதிகம் போடுவதாகச் சொன்னால், 100 ரூபாய்க்குச் சரக்கு பிடித்துவிடுகிறார்கள். கல்லும், நெல்லும், உமியும், தவிடும் நிறைந்த அரிசி கால்படி அதிகம் வாங்குவதை விட, நல்ல அரிசி கால்படி குறைய வாங்குவது நலமென்பது தெரிகிறதில்லை.

288. என்ன இது?—சிலர் தன் மனைவியிடம் மகா கொடூரமாக இருந்து கொண்டு, மற்றவர் மனைவிகளிடம் மிகு பிரியமாக நடந்து கொள்

கிறார்கள். அவர்களுக்கு சிபாரிசு பேசவும் வருகிறார்கள். இப்படித் தன் மனைவியிடமும் நடக்கிறது தானே! இவர்கள் தான் மூடத்தனத்தில் முதல் மெம்பர்!

289. மற்றதற்குக் கணக்கு இல்லை.—10-ரூபாய் அரிசி வாங்கும் ஒரு வீட்டில் 40-ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆனால் அரிசி வாங்கும் ரூபாய்க்குத்தான் கணக்கு பார்க்கிறார்களே தவிர, மற்ற செலவுகளை அவ்வளவாய் எண்ணிக் கவனிப்பதில்லை.

290. ஏமாறாமல் பார்.—சுத்தமான அரிசியும், நல்ல துவரம்பருப்பும், நல்ல நெய்யும் முக்கியமாய் ஏமாந்துவிடாமல் பார்த்து வாங்கவேண்டிய போஜன சாமான்கள்.

291. கடவுளின் கருணை.—பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் தக்கபடி நடத்திக் கொண்டு போகிறவர் கடவுளே. ஒரே மாதிரியான வியாதி ஏழைகளுக்கு வந்தால் காலணா கை மருந்தோடு போகிறது. பணக்காரருக்கு வந்தால் நூற்றுக்கணக்காய் செலவாகிறது. பணக்காரர் வீட்டுப் பெண் பிரசவித்து சற்று அஜாக்கிரதையா யிருந்தால் உடனே ஜன்னி உண்டாகிறது. காலையில் பிரசவித்த பஞ்சமஸ்திரீ மாலை நேரத்தில் புல் அறுத்து சுமந்து கொண்டு போகிறாள். இதுவும் கருணாகரனுடைய பேரருளன்றோ?

292. பொருள் கொடுப்பது.—ஒருவருக்கு ஒரு பொருள் உண்ணவோ உடுக்கவோ கொடுத்து, நிஷ்டூரப்படுவதைப் பார்க்கிலும், கொடுக்காமல் நிஷ்டூரப்படுவதே நலம் என்பார். ஆனால் அப்படிக்கொடுக்காமல் இருக்க முடியாது.

293. நம்புதல்.—உத்யோகம், வியாபாரம், குடும்பம் இவற்றில் ஒருவரை யொருவர் நம்பாவிடில் காரியம் நிறைவேறுவது கஷ்டம். சில சமயம் நம்பி மோசம் போவதும் உண்டு. அதுவே அதிகம்.

294. எழுப்புதல்.—மெய்மறந்து நித்திரை செய்வோரை ஒரே குரலால் எழுப்பலாம். ஆனால் விழித்துக்கொண்டு கண் மூடித் தூங்குபவர்களை எழுப்ப வெகு நேரம் செல்லும்.

295. வஸ்ணுந்திக் குழம்பு.— வாழைக்கட்டை, கீரைக்கட்டை, கத்திரிக்காய் முதலிய பலவித காய் கறிகளுடன் பருப்போ, எதுவோ சேர்த்து சமைக்கும் குழம்பாம்.

296. தனிகர்கள்.—ஏழைகள் வீட்டுக்குத் தனிகர்கள் விருந்தாளிகளாய்ச் சென்றால், வாராதவர்கள் வந்து விட்டார்களேயென்று கடனாகிலும் வாங்கி, பத்துவித பதார்த்தங்களுடன் படையல் போடுகிறார்கள். இந்த ஏழைகள் ஒரு காலத்தில் அத்தனிகர்களின் வீட்டுக்குச் சென்றால், அவர்களின் முன் உபசாரத்தை மறந்து, அவர்களுக்காக ஒரு வஸ்ணுந்திக் குழம்பும் சோறும் போடுகிறார்கள். முகம் கொடுத்து நல்ல மாதிரியில் பேசுவது கூடக் கஷ்டம்.

297. குணம் அறிதல்.—ஒரு பெண்ணைக் கொள்ளும்போது, அழகில்லையாயினும் குணம் இருந்தால் போதுமென்கிறார்கள். அழகு தான் பார்க்க முடியும். குணம் எப்படிப் பார்க்க முடியும்? கொண்ட பிறகுதான் போகப்போகப் பார்க்கவேண்டும்.

298. பிள்ளை விராரம்.—பிள்ளை இல்லாதார்க்கு அதுவே ஏக்கம். பிள்ளைகளைப் பெற்றவர்களோ அவர்களுக்கு வரும் வியாதி, அவர்கள் செய்யும் துடுக்கு, அவர்களின் மரணம், தன் எதிரிலேயே அவர்களின் சவம் இவைகளைப் பார்த்து, மலடியாக இருந்திருந்தால் மிக்க நலம் என்று வாட்ட மடைகின்றனர்.

299. சிநேகர், உறவினர்.— உபசரிப்பினும், உபசரிக்காவிடினும் நேசர்கள் க்ஷேமமே கோருவார். பந்துக்களோ உபசரித்தால் மட்டுமே நல்லவரென்பர், க்ஷேமம் கோருவர். இல்லாவிடில் ஈயாத லோபி இருந்தென்ன போயென்ன நாசமாய்ப் போகட்டு மென்பர்.

300. உடனே கோபம்.— என்றும் கொடுக்காதவர்களைக் கேட்டபோது இல்லையென்றாலும் பொறுத்துக் கொள்வார்கள். ஸதா கொடுத்துக் கொண்டே யிருப்பவர் ஒரு சமயம் இல்லை யென்றால் வெகுகோபம் வந்து விடுகிறதாம் சிலருக்கு.

301. நல்ல காலம்—ஒருவனுக்கு நல்லகாலம் இருக்கிறவரையில் அவன் நினைவுகளும் நல்லதாயிருக்கும். அவன் வாயில் உதிக்கிறவார்த்தையும் நல்லதாக இருக்கும். அவன் மனைவியும் நல்லவளாயிருப்பாள். அவன் செய்கைகளும் நன்மையாயிருக்கும். யாவராலும் அவனுக்குத் தீங்கு நேரிடமாட்டாது. கெட்டகாலம் நெருங்கினால் முன் சொன்ன யாவும் எதிரிடையே. காலத்தின் ஸக்தி பெரிது.

302. உள்ளன்புடையார்.—உள்ளன்புடையவர்களிடமிருந்து வருங் கடிதத்தை ஒரு தடவை வாசித்தால் திருப்தியாகிறதில்லை. பல தடவைகளில் வாசித்தபோதிலும் கிழித்துப்போட மனம் வருவதில்லை, எந்தப் பெட்டியிலும் அவர்களின் கடிதக் குப்பைகள் தான்.

303. பின்வாங்குதல்.—ஒரு விவகாரத்துக்கு ஜனசகாயம் இல்லாமல் தவிப்பவர்களுக்கு—அதற்கென்ன நான் இருக்கிறேன், பயப்படவேண்டாம், நடத்துங்கள்——எனத் தூண்டிவிட்டு, நல்ல சமயத்தில் பின் வாங்குவது சிலர் சுபாவம்.

304. ஏன் கொடுத்தோம்?—தன்னால் முடியாத ஒரு காரியத்தை, நீயே ஒப்புக்கொள் என்று பலாத்காரமாய்ப் பிறருக்குக் கொடுத்துவிட்டு, அவர்கள் கஷ்டப்பட்டுச் செய்து முடித்து லாபம் அடையும்போது, என் கொடுத்தோமென்று பொறாமைப்படுபவர்கள் அநேகர்.

305. உலகப் போக்கு.— சாப்பிட மாட்டார்களென்று தெரிந்து கொண்டபின் கட்டாயம் சாப்பிடவேண்டு மென்று பலவந்தப் படுத்துகிறார்கள், ஆனால் பசியுடன் சாப்பாட்டுக்காகவே தன் வீட்டுக்கு வந்திருப்பவர்களை அவ்வளவாய்க் கவனிப்பதில்லை.

306. சிலர் செய்கை.—வெகு தூரத்திலிருந்து வரும் கடிதத்தைச் சில கனவான்கள் 4, 5, தினங்களுக்குப் பிறகு பிரித்து வாசிக்கிறார்கள். அன்னவாது மனோதிடத்தைப்பற்றியும், அன்பைப் பற்றியும் சோம்பலைப் பற்றியும் புகழத்தக்கதே.

307. முக்கிய விஷயத்திற்குப் பதில் இல்லை.—சிலருக்கு நாம் முக்கியமாய் எந்த விஷயத்தைப் பற்றிப் பதில் எழுதச்சொல்லுகிறோமோ அதை மறந்து—விட்டுவிட்டு—வேறு விஷயங்களை வெகு விமரிசையாகத்

தெரிவிக்கின்றனர். இது கோமுட்டி கடையில் கடலை இருக்கிறதா என்றால், அவரை இருக்கிறதென்று சொல்வது போன்ற சாமர்த்தியமான பதிலாம்.

308. ஊர் வழக்கம்.—அருமையாய்த் தம்மிடம் வந்தவர்களை ஆதரிக்க மனம் வராமல் சாக்குபோக்குகள் சொல்லி, மெள்ள, விலக்கி விடுகிறார்கள். அவர்கள் மனம் நொந்து கண்மறைவாகவோ உயிர் இழந்தோ போய்விட்டால் அவர்களைப்பற்றி உருக்கமாக மிக்க வருந்துகின்றனர்.

309. நல்லமை பேறு இல்லை.—சிலருக்கு வீடுகள் மிகப் பெரிதாய் இருக்கும். பணமும் பெட்டி பெட்டியாய் இருக்கும். ஆனால் அங்கு எழுத நல்ல காகிதம், நல்ல பேனா, நல்ல இங்கி புட்டி இராது.

310. எனக்கேன் கொடுக்கவில்லை?—மனம் ஒன்றாகி விட்டிருப்பவரிடத்தில் இருக்கும் வஸ்துவின்மேல் நமக்கு விருப்பம் இருப்பின் கொஞ்சம் கொடுங்கள் என்று வணக்கமாய்க் கேட்கவேண்டியதில்லை. எனக்கேன் கொடுக்கவில்லை என்று அதிகாரமாய்க் கேட்கலாம். "மறந்தேன்" என்று உடனே கொடுப்பார்கள்.

311. இஷ்டமான பொருள்.—ஒருவருக்கு இஷ்டமான பொருளைக் கொண்டு வரச்சொன்னால், வருகிறேன் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். பிறகு அப்படிக் கொண்டு வரும்போதோ இஷ்டப்பட்டவர் அங்கு இல்லாமற்போய் விடுகிறார்கள்.

312. அதிக சொத்து—மரணம்.—ஸர்வசொத்தும் எல்லா பாக்கியமும் அடைந்த ஒரு தனவான் சீக்கிரம் இறந்து விடுகிறான். குடிப்பதற்குக் கூழ்கூடக் கதியில்லாதவன் வெகு வயதுடன் இருக்கிறான். என்னசெய்ய?

313. படிப்பு விஷயம்.—யார் தன் மக்களுக்குப் படிப்பு நன்றாய்ச் சொல்லித் தரவேண்டுமென்று ஆசை கொள்கிறார்களோ—அவர்கள் நன்றாகவே படிக்கிறதில்லை. படிக்கட்டும், படிக்காது போகட்டும், எப்படிப்போனால்தான் என்ன என்று எவர் நினைக்கிறார்களோ—அவர்களின் பிள்ளைகள்தான் நன்றாய்ப் படிக்கிறார்கள்.

314. அசல் பணங்காட்டுநரிகள்:—சிலர் பேசும்பொழுது ஆயிரக்கணக்கான ரூபாய், ஜமீன்தார், மிட்டாதார், சீமான், பங்களா, மோட்டார் இவைகளைப் போன்ற பேச்சுகளே புறப்படுகின்றன. இவர்களின் வீட்டிலோ பழைய சோற்றுக்கும் வழியில்லை. ஏமாந்தவர் பணம் பறிப்பவராவார் இவர்.

315. மேல்தருக்கு:—நமது உள்ள நிலைமையைக் கூறினால் மதிப்பு குறைந்து விடுகிறது. 50 ரூபா சம்பளத்திற்கு 10 ரூபாய் கூடக்கிடைப்பது கஷ்டம். வெளி டம்பம் காட்டினால் ரூபாய் 100 சம்பளம் தந்து அவன் மகாநிர்வாகியென மெச்சுகிறார்கள்.

316. உபசரிப்பு:—தனக்குப் பிரியமானவர்கள் வட்டித்தால் சாப்பிடுவது தோன்றாமலே திருப்தியாக உண்ணலாம். இன்னும் கையில் பிசைந்து போட்டால் அதைவிட அதிகம் உள்ளே இறங்கும். பரிசாரகனோ பிறரோ பரிமாற வந்துவிடின் நமது சந்தோஷமெல்லாம் பாழ்.

317. மறதி:—தபாலுக்கு அவசரமாகப்போகவேண்டிய கடிதங்களை சட்டைப் பையில் போட்டுக்கொண்டால், அன்றைய கட்டுக்கு அதுபோய்ச்சேர்வது கஷ்டம். மறதியே காரணம்.

V. K. M. நாதமுனி நாயுடு.

நயனதாரா

"நாதா! நிச்சயமாய் ஈச்வரன் நமக்கு ஸம்பூர்ண கடாக்ஷத்தை அருளினர்."

"என் பிரிய நயனு! வாஸ்தவமே. என் நேசமே! எனது உண்மையான ராஜ்யம் உன்னிலேயே இருக்கிறது. உன் பிரேமையாகிய ராஜ்யமின்றி எத்தனை ராஜ்யங்கள் எனக்குக்கிடைத்தாலும் அதனுற் பயனென்? உண்மையான இவ்விஷயத்தை அறிந்துகொள்ளாமல் கண்மூடித்தனத்தால் புத்தியீன ஞயினேன். நீயும் அதனுல் மிகவும் கஷ்டப்பட்டாய். எனக்குக் கிடைத்த கௌரவங்களும் வெகுமதிகளும் உன் மீது எனக்குள்ள பிரேமையின் முன்னிற்காது. பிராணநாயகி! இத்தனை மாதங்களாய் நான் உனக்கு உண்டாக்கிய வேதனையை மறந்து விட்டேனென்று சொல்லி என்னை மன்னிப்பாயா?"

"என் மனேகரமே! என்னுவித்துணைவா! நாதா! தங்களை மன்னிப்பதற்கு விஷயம் ஒன்றுமில்லை. காதலிலே கௌரவம் வேண்டுமென்பவர் ஹீன கிருத்தியம் கூடாதென்பார். கௌரவத்தோடுகூட தன்மானம்—தன்மதிப்பு—என்பதையும் தாங்கள் சேர்த்து விட்டீர்கள். அது பொற்குடத்திற்குப் பொட்டு இட்டது போல் ஆயது. ஆம்; இந்த சுபதினமே எனது பட்டாபிஷேக மகோற்சவத்தை உண்மையில் பூர்த்தி செய்வித்தது. எவ்வாறெனில்—" தனது பிராணநாதருடைய பிரேமையே உண்மையில் ஒரு ஸ்திரீ தன் சிரசின்மீது தரிக்கும்படியான உத்தம ராஜக்கிரீடமாகும்"—என நயனதாரா மகாராணியார் பின்னையும் ஆநந்தபாஷ்பம் சொரிந்து கூறினர்.

பூர்ணேந்திரர்:—என் பிரிய நயனு! நான் உன்னை வேண்டாமென்று திரஸ்கரிக்கவில்லை. காதலைத் தவிர்க்கவுமில்லை. எல்லாவற்றையும் அப்படியப்படியே வைத்துக்கொண்டு, அக்காதலைப் பெற்று அநுபவிக்கக்கூடிய அந்தஸ்தில் நான் இல்லையே என்று என்னில் தானே மனக்குறைகொண்டு சர்வலோக சக்ரவர்த்தியான பகவானிடம் ஸதாமுறையிட்டு அபயம் வேண்டினேன். அதில் ஒரே உறுதிப்பாட்டுடனும் நின்றேன். என் குறைகள் பரமாத்மாவின் ஸந்நிதிக்கு எட்டிற்று. நானும் பாக்கியவந்தனுனேன். உன்னை நான் அடைவதிலே கேவலம் ஒரு பாரிஸ்டரை—புழுவை ஒரு பெரிய மகாராணியார் மணந்துகொண்டாரென்ற தாழ்ச்சி உன்னைச் சாராதிருப்பதற்காகவும், என்னை—இந்த அற்பனுக்கு வந்த அதிர்ஷ்டம் தானென்ன—என்று பிறர் தூற்றி இழிவு செய்யாதிருக்கவுமே வேண்டி, இந்த ராஜ்ய லக்ஷ்மியை அப்போது ஏற்க சம்மதித்திலேன். எனது எல்லா முயற்சியும் உன்னை அடைவதன் பொருட்டாகவே தான். அதற்குக்கடவுள் எவ்விதமாக வழி செய்வாரோ என்று எதிர்நோக்கி நின்றேன். எவர் என்ன சொன்னுலும் சொல்லட்டு

மென்று, மானத்திலே கண்ணும், என் மனோன்மணியிடத்தே சிந்தையுமாக இதுநாள் தனையும் இருந்தேன்.

மகாராணி.—நாதா! "சொன்னால் சொல்லட்டும்" என்ற பதமானது நமது கதாசந்தர்ப்பத்தில் அநேக இடங்களில் பிரயோகமாகக் கூடியதாயிருக்கிறது. மேலும் தன் வாளுளெல்லாம் நல்லதையே செய்த ஒருவன், தன் நன்றியை மறந்து, மற்றவர்—அவன் என்னசெய்துவிட்டான்—என்று தூற்றும்போது, பிரபஞ்ச வாழ்க்கையில் அவன் மிக்க மனச் சலிப்போடு, தான் யதார்த்தமாக நடந்திருப்பதைக் கடவுள் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதான மனத்திருப்தி மிகுந்தவனாய், பொறுமையும் சாந்தமும் கொண்டு, தன் மட்டில் மனோநிம்மதி யடைந்து, மற்றவர்கள் தன்னைப்பற்றி எப்படி வேண்டுமானாலும்—சொன்னால் சொல்லட்டும் என்று கூறி தன் மட்டில் அடக்கத்துடன் நின்று விடுவோனாகி இருக்கின்றான். ஆகா! அவனது பொறுமையின் ஸகிப்புதா னென்னே! உண்மையிலேயே தனது மாற்றாந்தாயின் விஷயத்திலும் அவளது குமாரத்தி விஷயத்திலும் மனப்பூர்வமாகப் பாடுபட்டுழைத்த ஒருவன் பின்னொரு காலம்—அவன் எனக்கு என்னசெய்துவிட்டான்-என்று அந்த மாற்றாந்தாய் அவனைத் தூற்றும்போது—அவன் வயிறெரிந்து—அந்த அம்மை "சொன்னால் சொல்லட்டும்"—என்று தன்பாட்டில் கூறிக்கொண்டு பதில் பேசாதிருந்துவிடுகிறான். ஒரு பெண்ணைப்பெற்ற தோஷத்திற்காக அப்பெண்ணைக் கொடுத்த இடத்தில் காலமெல்லாம் உழைத்து, பணத்தையும் நகைகளையும் அப்பெண்ணின் புருஷனுக்கே செலவிட்டு, இன்னும் அவர்களை யெல்லாம் ஆதரித்து அரும்பாடு பட்டவர்களை—அவர்கள் எனக்கு என்ன செய்துவிட்டார்கள்—என்று அப்பெண்ணின்கணவன் கூறும் ஒரு காலத்தில், அப்பெண்ணைப் பெற்றோர்—மனது நொந்துபோய் வேறெதுவும் சொல்ல வகையற்று—"சொன்னால் சொல்லட்டும்" என்று தன்னுள் சாந்தமாகிறார்கள். இப்படியே தனது தம்பிக்கு எவ்வளவோ உதவிகள் செய்த தமயனும், தன் நண்பனுக்கு எவ்வளவோ சகாயங்கள் புரிந்த உத்தமனும், தன்கணவனின் இரண்டாவது மனைவிக்கு எவ்வளவோ உட்பட்டு நடந்து அவளின் க்ஷேமத்திற் கெல்லாம் காரணமாயிருந்த பெண்ணும், தமக்கைக் குழந்தைகளைத் தன் குழந்தைகளென எண்ணி அன்பு பாராட்டி அவர்களைத் தன் தமக்கையின் சாயலாகப் பாவித்து நம்பியிருந்த தம்பியும்,—தங்கள் எண்ணமெல்லாம் பின்னமாகி, விஸ்வாசம் மறந்து தங்களை அவர்கள் தூற்றும்போது, ஆ! என்று பெருமூச்சு விட்டுப் பெரிய ஏமாற்றத்தோடும் அவர்கள்—சொன்னால் சொல்லட்டும்—என்று ஆத்திரத்தோடும் கூறிக்கொண்டு தணிவதாகிறார்கள்."

மஹாராணியார் தமது பேச்சை முடித்ததும் இருவருக்குள்ளும் காதற்பெருக்கு அளவு கடந்து பொங்கிடத் தலைப்பட்டது.

தக்ஷணமே ஒருவரை யொருவர் ஆலிங்கனஞ்செய்துகொண்டனர். இந்நகைய ஆநந்த பரவசமயமான சந்தர்ப்பத்தில் அக்காதலர்களின் முகத்தின்மீது "சுபம்—சுபம்"—என ஆசிர்வதித்தது போல் நிலவு அத்யந்த சோபிதத்துடனும் பிரகாசித்தது. "பூர்ணேந்திரது வெற்றி" அவருக்குப் பெருமகிழ்வை யூட்டிற்று. இன்னும் அதைப் பெருகச் செய்யக் கடவுள் சித்த முவந்ததுபோன்று திடீரெனப் பலர் அவர்கள் இருந்த அறைக்குள் பிரவேசிப்பதாயினர். உலகமே ஒரு நாடகசாலை. இதில் சாமி தந்தார் சகலருக்கும் வேலை.

அத்தியாயம்—17.

இராஜநாயகத்தின் திகைப்பு.

"கடன் கொண்டவர் நெஞ்சம்போற் கலங்கினன்."

"இராஜநாயகமே! நமது நட்பு முறிந்துவிட்டது. நம்மைப் பிணைத்திருந்த கயிறு நெகிழ்ச்சி பெற்றுவிட்டது. நான் உனக்கு சத்துரு, என்னில் நீ மயங்கிவிட்டாய். உன் உஷார் தவறி ஒரு பெரிய ரகசியத்தையும் வெளியிட்டு விட்டாய். இனி நீ தப்புவதற்கு முடியாது. உன்னைப் போல் அக்கிரமமாய் ஸம்பாதிப்பதைவிட ஒழுங்கான பக்கிரிகளாய் வாழ்தல் உத்தமமென்றே நினைக்கிறேன்."

"தாங்கள் சொல்வது ஒன்றும் பொருள்படவில்லை. தங்களிடம் நம்பிக்கை வைத்தே என் கூட்டத்தாரின் தலைவனுக்கினேன். நேற்றுதான் என் கூட்டத்தார் போலீஸின் கையில் சிக்கிக்கொண்டார்கள். தங்களையும் கைதுசெய்து விட்டார்கள். இன்று தப்பித்துக்கொண்டு வந்ததற்காகத் தங்கட்கு என் சந்தோஷம் தெரிவித்து நான் பேசுவதற்குமுன் என் மனம் திடுக்கிடும்படியான வார்த்தைகளைச் சொல்கிறீர்கள்."

"ராம்சந்துவை ஆதியில் பிருபாந்தவ்யத்துடன் நேச நடிப்புச்செய்து ஏமாற்றியதற்குப் பதிலாக இப்பொழுது என்னால் நீ ஏமாற்றப்பட்டாய். பதிலுக்குப்பதில் கிடைத்து விட்டது. உன்னுடைய நட்பைக் கோருதல் பொன்னால் செய்யப்பட்ட விலங்குக்கு ஆசைப்படுவது போலாம்."

"துர்க்காபிரஸாத்! இவ்விதம் மூடுமந்திரமாகப் பேசவேண்டாம். கருத்தை விளக்கிக்கூறுங்கள்."

"நான் துர்க்காவுமல்ல, பிரஸாத்துமல்ல. நானே உன்னால் ஜாதாகாலமும் சபிக்கப்பட்ட ஸஞ்சீவபாபு. அந்தப் பாம சண்டாள னே நான். உம்முடைய எண்ணங்கள் சொற்பனக்காரர்களுடைய கோட்டையாய் விட்டன."

"அட பாவி! கிராதகா! ஐயோ! நான் மோசம் போனேனே."

"அம்மட்டோடா? இப்போது நீ என் கைதியுமாகிறாய். உன் னைப் பிடிக்க வாரண்டு என் கையில் இருக்கிறது. வெளியில் சாயுதவ வீரர்கள் காத்து நிற்கிறார்கள். நீ நிராயுதனாய் இருக்கிறாய் என்ப தும் எனக்குத் தெரியும். வார்த்தைகளில் மரியாதை வைத்துப்பேசு. மகாராணியின் பெயரால் இந்த நிமிஷமே உன்னைக் கைதுசெய்கி றேன். உன் ஆசைகள் காற்றில் பறந்துபோய்விட்டன."

"எனக்கென்று எங்கிருந்தடா சனியனாகத் தோன்றினாய்! நேற்று போலீஸார் உன்னைக் கைதுசெய்தது வெறும் பாவனைக்கு மட்டிலுமா?"

"ஆம். உனக்கு இப்போது கடைசியாக விளக்கிக் கூறிவிடு கிறேன். முதன் முதல் என்னை ராம்சந்துவின் புத்திரான பூர் ணேந்திரர் தம் தந்தையைக் கண்டுபிடிக்க வேண்டினார். அதிலிரு ந்து ராம்சந்து திடீரென்று காணாமற்போனதும் ஒரு கொள்ளைச் கூட்டத்துடன் தன் வீட்டையே கொள்ளையிட வந்ததும் தெரிந் தது. கொள்ளைத் தலைவனான வீரசிங்கின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்தேன். அவன் இருந்த மலைக்குகையில் உனக்கு மகாராஜா எழுதிய கடிதம் எனக்கு அகப்பட்டது. பிறகு வீரசிங்கை நட்புச் செய்துகொண்டு உன் இருப்பிடத்தை யறிந்தேன். எந்த விதமாக உன் இடுப்பை ஒடிக்கலாமென்று பார்த்தேன். எது உனக்குப் பெருத்த பக்கபலமா யிருந்ததென்பதை அறிய முயன்றேன். நீ ஏற்படுத்தியுள்ள கொள்ளைக்காரர்களின் கூட்டமே, ஒரு மேஜைக்கு நான்கு கால்களைப்போல் உன்னைத் தாங்கிக்கொண்டு நிற்கின்றன வென்பதைக் கிரகித்துக்கொண்டேன். அந்த மேஜைக்கால்களை அப்புறப்படுத்தி விட்டால், அதாவது உன் கூட்டத்தாரை சிறை செய்துவிட்டால், நீ ஒரு கொடியில் தானாகக் கவிழ்ந்து, உன் மோச சூழ்ச்சி யந்திரங்கள் பளாரென்று முறிந்து தூளாகிப் போய்விடு மென்பதையும் கண்டுகொண்டேன். அப்படி உன்னை முறித்துப் போட்டுவிட ஏற்பாடு செய்துகொண்டு, மிக்க பிணியாளியான பாவ னையில் ஒரு தூக்கு சிக்ஷைக்குத் தப்பி ஓடிவந்துவிட்ட கைதிபோல் உன் முன்பு தோன்றினேன். சிறைச்சாலை உடுப்பையும் உன்னை நம்பச் செய்வதற்காகத் தரித்திருந்தேன். போக்கிரிக்குப் போக்கிரி உதவி செய்வது சாதாரணம். நீயும் எனக்கு உபசரித்தாய். நீ தூங் கும் தருணமெல்லாம் உன் வீட்டைச் சோதித்தபடியே இருந்

தேன். நீ ராம்சந்துவின் தொடையில் கயிறு திரித்தாய். அதற்குப் பதிலாக நான் உன் தொடையில் இப்போது கயிறு திரித்தேன்.''

"அடா துரோகி! வீரசிங்குக்குக் கூட ராம்சந்துவை நான் வைத்திருக்கிற இடம் சொல்லவில்லையே! உன்னை நம்பியல்லவா அதை வெளியிட்டேன். நன்றிகெட்ட சண்டாளன் நீ. என் ஸ்வதந்தரத்தையே அழித்துவிடச் சூழ்ச்சி தேடி விட்டாய்.''

"நீதி தப்பி நடக்கும் ஒரு பாதகன் மற்றொருவனை நோக்கி 'நீதிதப்பி நடக்கிறாய்' எனக் கூறுவது அவலக்ஷணமான வாசகம். முள்ளை முள்ளாலேயே பிடுங்கவேண்டும். வஞ்சிப்பவனை வஞ்சனை செய்தே அவனுக்குப் படுகுழி வெட்டவேண்டும். மோசம் செய்த பாவியை மோசம் செய்துதான் பிடிக்கவேண்டும்.''

"உன்னுடைய நீதி இருக்கட்டும். மற்றதும் சொல்லி முடி.''

"ஆகா! உன்னையே முடிக்கிறேன். உன் பேச்சுகள் புயல் காற்றை எதிர்த்தொரு பூனை கத்துவது போலாம். பாபிகளைத்தான் நரகத்தில் தேவர்கள் போடுவார்களென்று படித்திருக்கிறேன். ராம் சந்துவை இதுநாள்தனையும் சிறைவாச நரகத்தில் போட்டு வாட்டினாய். அநேக வருஷகாலம் இந்த நரகாவஸ்தையை அவர் அனுபவித்து விட்டு, தமது மரணகாலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, உன்னை யொத்த கிராதகர்களும், சிறைவாச நரகமுமில்லாத பரமாத்மாவின் லோகத்திற்குப் போய்ச் சேர டிக்கட் பெற்றுக்கொண்டு, அவருக்குமுன் அங்கு சென்றிருக்கிற ஸாது ஜனங்களுடன் கூடிக் கொள்ள சித்தமாயிருந்தார். நல்ல சந்தர்ப்பத்தில் அவர் பிராணனைக் காத்து மீட்பித்தேன்.''

"மஹா மீட்பித்துவிட்டதுபோல் உளறுதே. நீ என்ன உலகை ரட்சிக்க வந்தவனோ? தேசோத்தாரண மஹா புருஷனோ? ஜன நிர்மாணியோ? உன்னையே துதி செய்துகொள்கின்றனையே? வீண் பெருமைப்—பூண் புகழாற்—காண் புதுமை—என்னே?''

"பாபி! உன் இலக்கண மொழிகள் அப்படியிருக்கட்டும். இவ்வுலகில் வலியவன் எளியவனைத் துன்பப்படுத்த சக்தியுள்ளவனாக இருக்கிறான். ஆனால், வலியவன் எளியவன் முதலிய எல்லோரும் ஒருநாள் பரம தயாநிதியின் சந்நிதானத்தில் நின்று பதில் சொல்ல வேண்டியிருக்கும். அங்கு நீ என்ன சமாதானம் கூறப்போகிறாயோ? உன்னை நம்பி மெய்வாசகங்கள் புகன்ற ஸத்தியாஸரண மகாராஜாவை முற்றிலும் வஞ்சித்து, அவரது வமிஸத்தினருக்கு அரசு கிடைக்காதவாறு செய்ய முயன்றாய். நீயே வேந்தனாய்விட நாடினாய். ஸத்தியாசரணர் தம் ஸிம்ஹாஸனத்திற்குரிய பூர்வ வம்ஸத்தினரை நேரில் காணவிரும்பிய ஆசைகளை நிறைவேற வொட்டாதபடி சிதைத்தாய். அவரும் வேறு ஏற்பாடுகள் செய்ய மனமின்றி பா

மாவஸ்தைப்பட்டு வாடிப் பிராணனை விட்டார். கிராதகனே! உன்னுடைய உள்ளெலும்பிலேயே துரோகபுத்தி ஊறிக்கிடக்கின்றது.''

"நீசனே! எனக்கென்று எங்கிருந்தடா எமனாக வந்து முளைத்தாய்?''

"நீ ராம்சந்துவை விடுவிக்கக் கூடாதென்று உத்தேசம் பண்ணினாய். அவரை விடுவிக்க வேண்டுமென்று கடவுள் தீர்ப்பு பண்ணினார். ராம்சந்துவின் விடுதலைக்கொடி நிமிர்ந்து நிற்கத்தலைப்பட்டு, வெற்றியும் கொண்டுவிட்டது.''

"நினை விதைத்தோமென்று கருதித் தினையறுக்கச் சென்ற இடத்திலே பனை முளைத்திருக்கிறது. ஆடு பிடிக்கச் சென்று கோனாயிடம் அகப்பட்டதுபோன்ற கதையானது. ஹாலகால விஷத்தின் வாடைப்பட்ட மாத்திரத்தில் ஜீவராசிகள் பட்டுப்போகுமென்பார். அவ்விதத் தன்மை வாய்ந்த விஷமப் புழுவாகிய உன்னை என் வீட்டில் சேர்க்கலாமா கூடாதா என்று நான் ஆதியில் யோசித்ததானது பித்தர் செய்கைக்கே இணை. அன்றியும் விஷம் வேண்டுமா—வேண்டாமா என்று சந்தேகமிருக்க தர்க்கித்துக்கொண்ட பான்மைதான். என் செயல்கள்—யாவுமே பட்டுப்போகுமாறு நீ எனது புருஷத்தன்மையை உறிஞ்சிவிட்டாய். என் உயிர் தொண்டைக்குழியில் துடித்துக்கொண்டு கிடக்கிறது. எதிர்பாராத விளைவுகள் இவை. என்னுடைய ஊஹாஸக்திக் குறைவால் உன்னை என்னவன்போல் கருதி இக்கதிக்காளானேன். "முட்டி விட்டுக் குனியும் புத்தி முட்டாள் புத்தி'' என்பதோர்ந்து கொள்ளாது போனேன்.''

"நேச வேஷதாரணத்தில் நீ அசல் பனங்காட்டு நரி. சமயத்திற்கேற்றபடி மாற்றிச்சொல்லி வஞ்சிக்கும் வித்தையில் நீ மஹா மஹோபாத்யாயர். உன் நினைப்புக்கள் இனி நெடுங்கனவே. பொறாமையும் வயிற்றெரிச்சலும் உன் வார்த்தைகளில் கொழுந்துவிட்டெரிகின்றன. இன்னோரன்ன மனோபாவ விலாஸங்களை இனி நீ கட்டிவைக்க வேண்டியதே.''

"நான் உன்னால் சிறைச்சாலைக்குழியில் வீழ்ந்து மாய—சாக—அந்தத் துரோகி ராம்சந்துவுக்குப் பரிபூரண விடுதலையா? எனக்கு மட்டும் திறன்—ஸக்தி யிருக்குமாயின், உன்னைப் பீரங்கி வாயில் நிறுத்திச் சுட்டுவிட்டிருப்பேன். உலைச்சட்டியில் புயல் காற்றா? தான் சொல்வதை அப்படியே அங்கீகரிக்காத எவரையும் ஸகிக்காத மனோபாவம் உன்னிடம் வெகு வியாபகமாக இருந்துவருகிறது. அதை உன்னுடன் பழகியதில் நன்கு கண்டேன். உன் சொற்படி நடந்திருந்தால் என்னை க்ஷேமத்தில் வைத்திருப்பாய் போலும்! ஐயோ! ஒரு ஆயுதம்கூட என் கையில் தற்போது இல்லையே!''

"பீரங்கிகளிலும் இருவகையுண்டு. ஒன்று ஸூக்ஷ்ம பீரங்கி; மற்றொன்று ஸ்தூல பீரங்கி. இவற்றுள் ஸ்தூல பீரங்கியானது

போர்க்களங்களில் வழங்குவது. அதைத்தான் இப்போது நீ நவில்கின்றனை. என்னைச் சுட்டுவிட அந்தப் பீரங்கியைத்தான் இப்போது நீ தேடுகின்றாய். இனி ஸூக்ஷ்ம பீரங்கியோ அத்யாத்மீகமானது. மனதைப் பற்றியது. புத்தி விசாலத்தைப்பற்றியது. ஒழுக்க நேர்மையைப் பற்றியது. என் துப்பறிதலின் மூலமாக, அவ்வாறான ஸூக்ஷ்ம பீரங்கியின் முன்னிலையில் உன்னை நிற்க வைத்துவிட்டேன். உனது 'ஆயிரந் தோள்களும்' சிதைந்தொழிந்தன. உன் விஷமச்செயல்கள் செத்து வீழ்ந்துவிட்டன. ராம்சந்து உன்னிடம் இத்தனை அடிமை நிலையில் பாதாளச் சிறையினில் இருந்தபோதிலும், என்றைக்கும் அவர் மேம்பட்டே நிற்பாரென அவர் முகத்தில் தோன்றுவதை அவரைப் பார்த்த அன்றே கண்டுபிடித்து விட்டேன். ஒரு ஈயினிடத்தில் கூட அவருக்கு ஜீவகாருண்யமுண்டு. ஒரு பானைச் சோற்றினுக்கு ஓர் அரிசி பதமன்றோ? ஐயோ பாவம்! அவர் மனம் விம்மி விம்மித் தானழுவார், வீண் பெரு மூச்சே யுறுவார். உருகாத நெஞ்சமதும் உருகிடுமே மெழுகதுபோல்—அவர் நிலையை நோக்கினல்! அவரைச் சிறையுள் வைத்து நீ எவ்வளவு கேவலப்படுத்திய போதிலும், அவரது புகழொளி என்ஞான்றும் குன்றாது. அவரது மானஞ் சிதைந்திடாது. மரியாதை குலைந்திடாது. அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது. புகைக்கினும் கார்அகில் பொல்லாங்கு கமழாது. கலக்கினும் தண்கடல் சேறாகாது. தெரிந்துகொள். கைமேல் வரும் பணத்தை வேண்டாமென்று தள்ளிவிட பெரிய தியாக புத்தி வேண்டியிருக்கும். என்றாலும் இராஜ்யாபேக்ஷையால் மட்டுக்கு மீறிப் பெருந் துரோகியாகிவிட்டாய்.

1.—கண்ணிலான் காலிற் கவின்மணியை பெற்றிவிட்டால்,
மண்ணி லதுநான் மதிப்பகன்ற தாய்விடுமோ?

2.—பொய்ந்நெறிலோன் *மைதிலியாம் பூவைதனைப் புன்காவல்
வைத்ததனு லன்னை மதிப்பிழந்து போயினளோ?

3.—ஐவர்முன்னே பாஞ்சாலி யாடையுரிந் தார்கயவர்;
மைவளர்ந்த கண்ணுளின் மாண்பகன்று போயினதோ?

ஒருபோது மில்லை. நீதமிலா ரெந்த நெறி செய்யினும் மனத்தின் கண்ணே யுள்ள ஆண்மையைப் போக்கிவிட முடிகிறதா? அநேக வருடகாலம் ராம்சந்துவின் சரிதையைத் துன்பமாக்கி விட்டாய். அவரது எண்ணங்களைத் தேய்த்து அழித்துவிட முடிந்ததா? வாளற்ற கையினராய் அவரை வெறுங் கசமாக்கினை, ஆனல் அவரைத் தேடி மீட்பிக்க ஆள் அற்றுப் போகும்படி செய்ய சாத்தியப்பட்டதா? அவர் வீட்டுப் பொன்னையெல்லாம் பறித்தகன்றாய். அவர் வீரம் பறிக்கும் விதம் அறிந்தாயா? நின் ஈனச் செயலாலே ஞாலமெல்லாம் நகைத்திடவே யானுயன்றி வேறென்ன பயன்

* மைதிலி=சீதாதேவி.

கண்டாய்? ஞாலமுள்ள காலமெல்லாம் நீ செய்த அநீதி மறக்கற் பாலதுவோ? நினது மா—தீச் செயல்களை என்ன விதமா யியம்ப? கொாதகனே! பாவி! உன்னை நான் நன்கு மயக்கிவிட்டேன். ஆனால் எத்தனையோ பாடுபட்டுத்தான் உன்னை மயக்கவல்லவனானேன். ராம்சந்துவின் இருப்பிடமும் தெரிந்தேன்.''

“அபூர்வ மநோாத்மாவே! எதெதனில் நான் மயங்கியிருந்தேன்? துடிக்கிற என் நெஞ்சுக்கு ஒரு சமாதானம் வேண்டும். ஒவ்வொன்றையும் தெளிவுபெற நவின்றிடு.''

“தெளிவா—? உனது அழிவின் தெளிவா வேண்டுகின்றனை? கேள்; உன்னிடம் வந்து சேர்ந்த பின்பு என்னைப் பற்றி நீ புகழ்ந்து கொள்ளுமாறு பலபல மொழிந்தேன். நான் அநேக கொலைகள் செய்திருப்பதாயும், எதற்குமே அகப்பட்டதில்லை யென்றும், வீரசிங்கின் பொக்கிஷத்தைக் கூடக் கொள்ளை கொண்டிருப்பதாயும், பெருங்கள்வனான வீரசிங்கையே ஏமாற்றி யிருப்பதாயும் உன்னிடம் கூறினேன்.''

“அத்தனையும் பொய்யா? வீரசிங்கு அடிக்கடி எவ்விதமோ தன் பொக்கிஷம் வெகு சூக்ஷ்மமாய்க் கொள்ளைபோவதாக இரண்டு கடிதங்களும் எனக்கு எழுதியிருக்கிறானே. அதனாலல்லவா உன் வார்த்தையை நம்பினேன்.''

“நீயா நம்புவாய்? நான் வீரசிங்கின் பொக்கிஷ அமைப்பும், அதன் ரகசிய வழிகளையும் உனக்குக் கூறிய பிறகல்லவா நீயும் என் வாசகங்களை மெய்யெனக் கொண்டாய். நானே வீரசிங்கிடம் ஏற்பாடுசெய்து அவ்விதமாக இரண்டு கடிதங்கள் உனக்கு அனுப்ப வழி தேடினேன். பிறகு அதற்குப் பொருத்தமாக நான் பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டதாய் உனக்குக் கூறினேன். நீயும் நம்புவதற்கு இடம் கொடுத்துவிட்டது.''

“நன்றிகெட்ட நாயே! சிறை யுடுப்பல்லவா நீ தரித்துக்கொண்டிருந்தாய். ஜெயில் உடை உனக்கு எங்கிருந்தடா கிடைத்தது?''

“ஏன்? எத்தனை உடுப்புகள் வேண்டும்? உனக்குக்கூட ஒன்று சீக்கிரம் கொடுக்கத்தான் போகிறேன்.''

“போதும் உன் பிரஸங்கம். மற்றதைச் சொல்லித் தொலை.''

“தொலைக்கிறேன். உன்னையும் தொலைக்கிறேன். உன் வீட்டை ஆராய்ந்ததில் பழய டைரிகள் அகப்பட்டன. ராம்சந்து காணாமற்போன வருஷத்தின் டைரியைத் தேடினேன். அதுவும் கிடைத்தது.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

அத்தையின் அருமை யந்திரம்

(முன்தொடர்ச்சி)

"கெடுவான் கேடு நினைப்பான்" என்றபடி வர்த்தகனின் சங்கதி அவ்விதமாக முடிய, இனி நமது சிறுவனைக் கவனிப்போம். அவன் மதுவின் மயக்கம் தெளிந்து சாயங்காலம் எழுந்துபார்த்து ஒருவரையும் வீட்டினுள் காணுமல், ஓ, ஓ, என்னவோ மோசம் நடந்திருக்கிறதென்று எண்ணிக்கொண்டு, தன் வீட்டுக்குப்போய்ப் பார்த்து யந்திரத்தைக் காணுமல் சோர்ந்துபோய் பெரிய திகில் கொண்டான். வயிறெரிந்தான். வர்த்தகன்தான் இதைத் திருடிக் கொண்டுபோய் விட்டானென்று நிச்சயித்து, ஊரிலுள்ளோரை சகாயமாய் அழைத்துக்கொண்டு கப்பல் இருந்த இடத்தில் வந்து விசாரித்ததின்பேரில் கப்பல் மத்தியானமே புறப்பட்டுப் போய் விட்டதென்று தெரிந்தது. ஆகா! நமது வர்த்தக ரகசியத்தை வெளியிட்டதிலைல்லவா இந்த ஆபத்து நமக்குநேர்ந்தது! நம்மிடம் ஒரு யந்திரம் இருக்கிறதென்றும், அதைக்கொண்டே நாம் தொழில் நடத்துகிறேமென்றும் அவன் அறிந்ததினைல்லவா நமது உயிரில் கைவைத்ததுபோல் யந்திரத்தைக் கொண்டு போய்விட்டான். நமது வர்த்தக ரகசியத்தை ஆதியிலேயே எவருக்கும் தெரிவியாது மறைத்திருந்தால் நமக்கு இந்த விபத்து நேர்ந்திராதே என்று துக்கித்துக் கண்ணீர் விட்டான். நாளாக ஆகத் துயரமும் அவனுக்குத் தணிந்தது. இனி என்ன செய்கிறது, நாம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான். தெய்வ சகாயத்தாலும், யந்திர மகிமையாலும் ஏராளமான திரவியம் சேர்ந்திருக்கிறது. இதைக்கொண்டு காலத்தைக் கடத்தலாம் என்று தைரியம் பண்ணிக்கொண்டு உள்ளமட்டும் திருப்தியடைந்தான். அவ்வூர் அரசனுக்கு இந்த செய்தி தெரிந்து நமது சிறுவனுக்குத் தேறுதல்கூறி அவனை இராஜாங்கப் பொக்கிஷத்துக்கு அதிபதியாக்கி ஆதரித்தான். சில மாதங்களுக்குப் பிறகு வர்த்தகனின் கப்பல் முழுகிய விவரமும், அது ஊர் போய்சேராததும் வெளியாயிற்று. மோசம் நாசம் தானே என்று அனைவரும் சொல்லிக்கொண்டார்கள். தன் பிரியமான அத்தையையும் ஊரிலிருந்து தன்னிடத்துக்கு அழைத்துக்கொண்டு, கௌரவமுள்ள இடத்தில் படித்த பெண்ணை விவாகம் செய்துகொண்டு, அத்தை செய்த பேருபகாரத்திற்காக அந்த அம்மையிடம் என்றும் நன்றியுள்ளவனாய் வணங்கி நடந்து வெகு காலம் வாழ்ந்திருந்தான். மங்களம்.

உங்களின் வர்த்தக ரகசியத்தை, பிழைப்பின் உள்மர்மத்தை எவருக்கும் வெளியிடாதீர்கள். மூடியிருக்கிற கைக்கு எப்போதுமே அதிக மதிப்பு உண்டு.

7. ஒரு ஆபீஸராது மூட மனைவியின் விநோதம்.

இராமய்யர்.—என்னடி! இன்று ஒன்பது மணிக்கெல்லாம் சமையலாக வேண்டுமென்று சொன்னால் இன்னும் 'மடி' கூடக் கட்டிக்கொள்ளாம லிருக்கிறாய்? தாசில்தார் சரியாகப் பத்து மணிக்கே கச்சேரிக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறாரே.

இராஜம்மா.—அவர் பத்து மணிக்கு வருவதாயிருந்தால் நீங்கள் கச்சேரிக்குப் போய்விட்டு சாயங்காலம் வந்து சாப்பிடு கிறது தானே. நீங்கள் வெறும் பறத்தீட்டெல்லாம் ஆத்திலே (வீட்டில்) கலக்குகிறீர்கள். உங்களுக்கு ஆசாரமில்லே, விவகாரமில் லே, மடி யில்லே, 'விழுப்பு' இல்லே. பொழுது விடிஞ்சுதோ இல்லை யோ, இலையிலே சாதத்தைக் கொட்டச்சொல்கிறீர்கள். என்ன வோ பட்டண வாசத்திலே பிறந்தவள் போல் 'மடி' யில்லாமல் பட்டுத்துணியை இடுப்பில் சுற்றிக்கொண்டு சமைக்கச் சொன்னால் என்னால் முடியாது. எங்கள் அப்பா, எங்கள் ஊரிலே மத்தியானம் 16, 17 நாழிகை யானாலும் சாப்பிடுவதற்கு வரமாட்டார். பழயது புசிப்பதுபோல சூரியோதயத்திற்கே சமைக்க எப்படி ஆகும்?

இராமய்யர்.—நான் எத்தனை அடித்துக்கொண்டாலும் ஒரு நாளைக்கு 15-நாழிகைக்கும், ஒரு நாளைக்கு 18-நாழிகைக்கும், ஒரு நாள் சாதத்தைக் கூழாக்கியும், ஒருநாள் வேகாத அரிசியாயும் போடுகிறாயே தவிர, வேளைக்கு சரியாகவும் ருசியாகவும் செய்து போடுவதில்லை. காலாகாலத்தில் சாப்பாடில்லாததால், போன மாத மெல்லாம் ஜ்வரம் வந்து ஏதோ தெய்வகதியால் பிழைத்தேன். கச் சேரிக்குச் சரியாய்ப் போகாமல் உன் சமையலுக்காகக் காத்துக் கொண்டிருப்பதால் தாசில்தார் எல்லோர் முன்பும் என்னைத் திட்டு கிறார். எனக்கு மிகவும் வெட்கமாயிருக்கிறது. வைத்தியன் கூட காலத்தில் புசிக்காவிட்டால் மறுபடியும் சிக்கு வருமென்று சொல் லிக்கொண்டே யிருக்கிறான்.

இராஜம்மா.—உங்களுக்கு எப்படி யானாலென்ன? அந்தக் கம்மனாட்டி வைத்தியன் அகப்பட்டு இருக்கிறான். நானு இங்கிலீ ஷோ என்ன இழவோ, அதைக் கற்றுக்கொண்டு குலத்தைக் கெடு க்க பறத்தீட்டு ஜலத்தை சீசாவிலே போட்டுக்கொடுக்கிறான். உங் களுக்கு விவேகமில்லை. அவன் கொடுப்பதைக் குடித்துவிட்டுக் குலப்பிரஷ்டாளா யிருக்கிறீர்கள். பிராணன் போனாலும் சரி. எங் கள் ஊரில் இருக்கிறவர்கள் இந்த ஆஸ்பத்திரி மருந்தை வாங்கிக் கொள்வார்களா வென்று பாருங்கள். அவன் இழ வெடுக்க; கா லாகாலத்திலே பிண்டம் தின்னுதுபோனால் ரோகம் வருகிறதாம்!

எந்தக் கழிச்சலில் போகிற வைத்தியன் சொன்னானோ? ரோகம் வருகிறவர்களுக்கெல்லாம் சாப்பாடு இல்லாததனால்தான் வருகிறதோ? அது வரவேண்டுமென்றிருந்தால் எப்படியும் வருகிறது. மருந்து, கிருந்து, இல்லாமல் இரண்டு லங்கணம் இருந்தால் பத்து நாளைக்கெல்லாம் உடம்பு நிம்மதி (!) யாய் விடுகிறது. குளத்திலே கொட்டுகிறது போல 25-ரூபாய் அவனுக்குக் கொட்டினீர்களே! அத்தனை பணத்தையும் வாங்கிக்கொண்டு, அந்தப் பட்டிமகன் ஒரு லங்கணம்கூட வைக்காமல் அந்த ஜலத்தை இந்த ஜலத்தைக் கொடுத்து ரவா கஞ்சி பத்தியம் வைத்தான். அவன் நிஜமான வைத்தியனாயிருந்தால் உடம்புக்கு நோய் வந்தபோது ரவா கஞ்சி கொடுக்கச் சொல்வானா? ரவா எத்தனை குளிர்ச்சி? என்னவோ, எனக்கு நல்லகாலம் இருந்து நீங்கள் பிழைத்தீர்களே தவிர, அந்த வைத்தியனாலா பிழைத்தீர்கள்? இனிமேலாயினும் அந்த வைத்தியனை விட்டொழியுங்கள்.

இராமய்யர்.—வைத்தியப்பேச்சு இப்போது எதற்கு? முந்தி நீ சமயல் செய்.

இராஜம்மா.—நீங்கள் வெறுமனே சாதம் கொதிக்கவில்லையென்றும், 'கொழஞ்சி' போய்விட்டதென்றும் 'வக்கணை' சொல்கிறீர்களே. கச்சேரி கச்சேரி யென்று அவசரப்படுத்தினால் சாதம் எப்படிக் கொதிக்கும்? சாதம் கொதித்துக் கொண்டிருக்கிறபோது, ஏதோ பழந்துணி மேலே பட்டாற்போல, பால் உரி மேலே பட்டாற்போல அநுமானம் உண்டானாலும், உடனே கிணற்றுக்குச் சென்று முழுகிவிட்டு வருகிறதற்குள் சாதம் கொஞ்சம் 'கொழஞ்சு' போகிறது. பட்டண வாசத்துக்காரர் மாதிரி அநாசாரமா யிருக்க என்னால் முடியாது.

இராமய்யர்.—போகட்டும், இப்போது எதற்கு அந்த வார்த்தை? கச்சேரிக்குப் போக நாழிகையாகிறது. சீக்கிரம் 'மடி' கட்டிக்கொள், நேற்றே நான் வரும்போது நாளை தவறாமல் பத்து மணிக்கே வரவேண்டுமெனச் சொன்னதோடு, நாளை சரியாக வாமற் போனால், அபராதம் போடுவதாய்க்கூடத் தாசில்தார் சொல்லியிருக்கிறார்.

இராஜம்மா.—அவருக் கென்ன? எத்தனையானாலும் சொல்லுவார். ஆத்துலே (வீட்டில்) ஸ்நானம், சந்தியாவந்தனம் எல்லாம் பற்றி எரிந்துபோகிறதா என்ன? அமாவாசை யன்றைக்குக்கூட ஸ்நானம் 'சந்தி' யொன்று மில்லே. விடிகிறபோதே வயிற்றில் கொட்டிக்கொண்டு உட்கார்ந்து கொள்கிறார். அவருக்குத் தக்கபடி அவருடைய மனைவியும் அமைந்து விட்டாள். மடி கட்டிக்கொண்டு சற்றே கேசவா நாராயணா என்று கூடச்சொல்லமாட்டாள். அவள் பெண்பாடசாலையிலே படித்தவளாம். இந்த ஆசாரம் என்

னத்திற்கு, 'மடி' என்னத்திற்கு, எல்லாம் தாமஸகுணம் என்கிறாள். அந்த மட்டுக்கும் அந்த வேதாந்தம் எனக்குத் தெரியாது. நான் இப்படிச் சண்டை போடாது போனால் நீங்கள்கூட சந்தி, கிந்தி, எல்லாம் மறந்து விடுவீர்கள். நான் சுப்பம்மாஆத்துக்குப் போய் புதுச் சாணம் கொண்டு வந்து சமையல் அடுப்பு மெழுகி, அறை மெழுகி, காவேரிக்குப் போய் ஸ்நானம்பண்ணிவிட்டு வந்து அடுப்பிலே நெருப்பு போட்டு சமைக்கிறேன். நீங்கள் வீட்டில் தானே ஸ்நானம் செய்து ஈரவேஷ்டியோடே சந்தி பண்ணி பிரம்மயக்ஞம், தர்ப்பணம், ஸ்வாமிபூஜை பண்ணிக்கொண்டு இருங்கள். வேலைக்காரி நேற்றைச் சாணியுடன் இன்றைய சாணியையும் கலந்து போட்டு விட்டாள். அது சுத்திபண்ண உதவாது. எனக்கு ஈரப்புடவை யென்றால் லக்ஷியமில்லை. நீங்கள் ஒருநாள் ஈரவேஷ்டியோடு இருந்துவிட்டால் எத்தனையோ தடபுடல் செய்துவிடுவீர்கள். உடனே படுக்கையில் படுத்துக்கொள்வீர்கள்.

இராமய்யர்.—ஈரவேஷ்டி மிகவும் கெடுதல். அதன் மூலமாய் ரோகம் வருகிறது.

இராஜம்மா.-போதும் அத்தோடு. இப்பொழுது ஈரப்புடவை கட்டிக்கொண்டு ரோகம் வருகிறதென்கிறீர்களே; உங்களுக்குதான் வரும். எனக்கு எந்த ரோகமும் வராது. எப்போதும் பறத்திட்டு கலந்து சாப்பிட்டால் ஏன் ரோகம் வராது? ஆசார விவகாரம் இல்லாது போனால், பிராமணாள் என்று இருப்பானேன்? பூணூல் என்னத்திற்கு? கழற்றி நாயின் கழுத்திலே போடுகிறது தானே. என் அம்மாவுக்கு எத்தனை நியமம். பத்து தரமென்றாலும் ஸ்நானம் செய்வாள். எப்பொழுதும் ஈரப்புடவையுடனேயே இருப்பாள். அவளுக்கு ஐம்பது வயதாயிற்று. எந்த ரோகமும் இல்லை. நீங்கள் இரண்டு நாழிகை ஈரவேஷ்டி கட்டிக்கொண்டால் எல்லா ரோகமும் வருகிறது.

இராமய்யர்.—இந்த வார்த்தையுடனேயே பொழுது போக்காமல், இனியாகிலும் காவேரிக்குச் சென்று வந்து சிக்கிரம் மடி கட்டிக்கொண்டு சமையல் செய். இன்று எங்கள் ஆபீஸைப் பரிசோதனை செய்யத் துரை வருகிறார். சீக்கிரம் போகவேண்டும்.

இராஜம்மா.—சமையல் என்றால் வெறும்மனே வாய்ப்பேச்சு என்று நினைத்துக்கொண்டீர்களா? வேலைக்காரி இன்னும் ஒரு நாழிகைக்குள் பாத்திரங்களெல்லாம் தேய்த்துக்கொண்டு வரமாட்டாள். அவள் தேய்த்த பாத்திரங்களை ஜலம்விட்டுக் கழுவி எடுத்துக்கொண்டு, அதற்காக மற்றொரு ஸ்நானம் செய்யவேண்டும். காவேரியில் ஸ்நானம் பண்ணிவிட்டு வருகிறபோது புடவை தோய்க்கிறவர்களின் ஜலம் மேலே விழுகிறது. சற்று பொறுத்துக் கொள்ளுங்களென்றால் கேட்க மாட்டார்கள்.

நாயாட்டமா சண்டைக்கு வருகிறார்கள். நீங்கள் கொஞ்சம் அதட்டினால் அவர்கள் என் கேலி பண்ணுகிறார்கள்? நீங்கள் என்னைக் குறைவாக நடத்துகிறதினாலே அவர்களுக்கும் இளக்காரமாய்ப் போய்விட்டது. புடவை வேஷ்டி தோய்க்கிறவர்களாலே நித்தியம் பத்து ஸ்நானம் செய்யவேண்டி இருக்கிறது. அத்தனையும் தப்பித்துக்கொண்டு, குடத்தை எடுத்துக்கொண்டு தெருவுக்கு வருகிறபோது—அவர்கள் வீடு சுடுகாடாக—தெருக் கூட்டுகிறவர்கள் சந்திலே இருந்து எதிரே வருகிறார்கள். அவர்களை இரண்டு சாபம் வைதுவிட்டு குடத்து ஜலத்தைக் கீழே கொட்டிவிட்டு, மறுபடியும் ஆற்றில் இரண்டு முழுக்கு போட்டுவிட்டு ஜலம் மொண்டுகொண்டு திருப்பதி மலை ஏறுவதுபோல ஏறி வரவேண்டும். நீங்கள் தாலுக்கா கச்சேரியிலே ஹெட் (Head) குமாஸ்தா வேலை செய்கிறீர்களென்று பேரே தவிர, அந்தப் பறக் கம்மனாட்டிப் பிள்ளைகளை இரண்டு திட்டி, பிராமணாள் தீர்த்தம் கொண்டுவருகிற தெருவிலே காலையில் வரவேண்டாமென்றும், தெருக் கூட்டவேண்டாமென்றும் சொல்லமாட்டீர்கள். என்ன ஹெட் (Head) குமஸ்தா வேலை பார்க்கிறீர்களோ? உங்களைக் கண்டு மூலையிலே கிடக்கிற கம்மனாட்டிகூட எழுந்திருக்கமாட்டாள். லஞ்சம் வாங்கினால் தப்பு என்கிறீர்கள். நீங்களும் உங்கள் தாசில்தாரும் தவிர, அதற்கு முன்பு வேலைக்கு வந்தவர்களெல்லாம் எத்தனையோ சம்பாதித்து நகை நாணயம் நனுக் புடவை வாங்கிக்கொண்டு லக்ஷணமாக இருக்கிறார்கள். நீங்க இரண்டு பேரும் உத்தியோகத்துக்கு வரப் போய்தான் இப்ட விடியாமற் கிடக்கிறது.

இராமய்யர்.—உனக்கு இன்னும் நகைகள் எதற்கு? இருக்கிற நகைகளை 'மெருகு' போய்விடுமென்று பெட்டியில் பத்திரப் படுத்தி யிருக்கிறாய். இரவல் கொடுத்தும் போக்கடித்துத் தொலைத்தாய். எப்போதும் ஸ்நானத்திலும் ஆசாரத்திலுமே முழுகி பூச்சிக்கூடு மாதிரி தலையை வைத்துக்கொண் டிருக்கத்தான் சரி போகிறது. நன்றாய்த் தலைவாரி முடிந்து இருக்கிற நகைகளை யணிந்துகொண்டு நல்ல புடவை உடுத்தியிருக்கப் பார்க்கவேண்டு மென்று எவ்வளவோ இஷ்டமாயிருக்கிறது.

இராஜம்மா.—உங்களுக்கு எல்லாம் இஷ்டமாய்த்தான் இருக்கும். ஆசாரம் வேண்டாமென்றால் அது நான் செய்த பாவம். ஏதோ உங்களைக் கட்டிக்கொண்டு இந்தப் பட்டணவாசத்தில் விழுந்தேன். ராம ராம! எல்லாம் அனுசாரமாயிருக்கிறது. உங்களுக்கு ஸ்வாமி இல்லே, கோவில் இல்லே, பூதமில்லே, பிசாசு இல்லே, சாணத்தின் பேர் எடுத்தாலே அசங்கதப்படுகிறீர்கள். பொழுது விடிந்ததும் தின்றுவிட்டு உட்காரவேண்டு மென்கிறீர்

கள். நீங்கள் படுத்துகிற பாடெல்லாம் பட்டு, எந்தப் பறத்தீட்டு ஆத்திலே கலந்தாலும் சகித்துக்கொண்டு வெறுமனே இருக்கிறேனே தவிர, உங்கள் அனாசாரத்துக்கு வேறொருத்தியாயிருந்தால் குளத்திலோ கிணற்றிலோ விழுந்து பிராணனை விட்டுவிடுவாள். கச்சேரிக்குப் போய்விட்டு வந்த துணியோடே வீடெல்லாம் திரிந்து, குடத்து ஜலத்தைத் தொட்டு எல்லாம் பறத்தீட்டும் பள்ளத்தீட்டுமாக்கி விடுகிறீர்கள். ஆசாரம் உடம்போடே பிறக்கவேண்டுமே தவிர, நான் எத்தனைக்கென்று மாரடித்துக் கொள்கிறது?

இராமய்யர்.—நீ இன்று சமையல் செய்கிறாயா இல்லையா? அப்போதே பத்துமணி ஆகிவிட்டது. இன்று இராத்திரிக்கு எட்டு மணிக்குக் குறைந்துவர சாத்தியப்படாது. நீ சமையல் செய்யாது போனால், நான் பட்டினியுடனே கச்சேரிக்குப் போகிறேன். தெரியாத்தனமாய் உன்னைக்கட்டிக் கொண்டு இந்தப் பாடுபடுகிறேன்.

இராஜம்மா.—எதற்கெடுத்தாலும் என்னை ஏன் இப்படி அழப்பண்ணுகிறீர்கள்? இன்றைக்கு வெள்ளிக்கிழமை இல்லையா? நான் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு, வெள்ளிக்கிழமை விரதம் செய்து, தலையிலே அக்ஷதைபோட்டுக் கொள்ளாமல் எப்படி உங்களுக்குச் சமையல் செய்கிறது? வெள்ளிக்கிழமை இந்தக்கதை சொல்லிக் கேட்கவேண்டும். எனக்கு அந்தக்கதை சொல்ல வராது. வெங்கம்மாள் அகத்துக்குப்போய் அவளுக்கு அந்தநேரம் பார்த்திருந்து கதைகேட்டு வரவேண்டும். சற்று நேரம் கழித்துச்சென்றால் அவள் சாப்பிட்டுவிடுவாள். அப்பால் அந்தக் கதை சொல்லக்கூடாதாம். பிறகு வீடுவீடாய் அலைந்து எவளையாவது சொல்லும்படிபோய் கேட்கவேண்டும். உங்களை எப்போது கல்யாணம் செய்து கொண்டேனோ அப்போதே என் நோன்பு விரதம் எல்லாம் எரிந்து போய்விட்டது. உங்களுக்குப் புண்ணியம் புருஷார்த்தம் ஒன்றும் வேண்டாம். பன்றி தின்கிறது போல வயிற்றுக்குத் தின்றால்போதும்.

இராமய்யர்.—அடியே! கோபம் செய்யாதே. நான் சாப்பிடாமலே கச்சேரிக்குப் போகிறேன். நாழிகை ஆகிவிட்டது. நெற்றிக்குப் பொட்டுவைத்துக் கொண்டாவது போகிறேன்.

இராஜம்மா.—போங்கோ, சாப்பிடாமலே போய் அத்தனை அவசரமாய் அங்கே என்ன சாதிக்கப் போகிறீர்களோ? உங்களுக்கு எப்போது வயிற்றிலே எரிச்சல் கிளம்புகிறதோ அப்போது வந்து புசிக்கிறீர்கள். ஐயோ! பாழுந்தெய்வமே! உன் வீடு நாசமாய்ப்போக! எனக்கு சீக்கிரம் சாவு வரப்படாதா? எனக்குச் 'சுடுகாட்டுச் சம்சாரம்' வந்திருக்கு. ஒரு தரம் (?) செத்தால் இந்தக்

கஷ்டமெல்லாம் தொலையும். நாலு பேர் வாயிலே என்னை விழப் பண்ணி அலங்கோலமாக்கவா இப்படி யெல்லாம்செய்கிறீர்கள்?

இராமய்யர்.—அடியே! அப்படித் துயரப்படாதேயடி. நான் தொலைந்து போகிறேன். நீ உன் இஷ்டம் போல் செய்துகொள். உன் புருஷனுக்கு நீ சரிபாய் நடக்காமற் போனாலும், என் புருஷனை தாசில்தாருக்கு நான் சரியாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் பிழைப்பில் மண் விழுந்துவிடும். நீ சுகமாய் இரு; நான் போகிறேன்.

> இராஜம்மாளைப் போன்ற மனைவி உங்களுக்கு வாய்க்க வேண்டாம். "அதிகப் பேச்சுக்காரி வம்பி, ஆயிரம் வந்தாலும் அவள் வேண்டாம் தம்பி."

இராமய்யர் மிக்க துயரத்துடனும் கல்யாணசுகம் போதும் போதும் என்றுசொல்லிக்கொண்டு பட்டினியுடன் கச்சேரிக்குச் செல்வதானார். இதற்குமேல் விஸ்தரிக்க வேண்டியதில்லை. எதிர் பேசு மனையாளிற் பேய் நன்று! கூற்றமே இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்.

8. மணஞ்செய்வதற்கு முன், தனக்கும் தன் நாயகனுக்கும் இருந்த நிலைமை நினைத்து வருந்திய பெண்ணொருத்தியின் பிரலாப விநோதம்.

பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்து மூன்றில், பூலோக வாழ்விற்கு இருந்த வைபவம் ஆ! ஆ!! அன்றுள்ளபடி இன்றளவும் என் நினைவினின்று நீங்காதிருக்கின்றது!

இவ்வுலகு இப்பொழுதிலும் அப்பொழுது என் கண்ணுக்கு மிக இனிதா யிருந்தது. நாம் செய்துகொண்ட பிரமாணத்தைச் செவிகூர்ந்து கேட்ட வெய்ய மேல்காற்று எத்தனை மிருதுவாக வீசியது! கண்டு பேசக் குறித்திருந்த மரத்தின் கீழ் கன இருளில் காதோதி வாக்குத்தத்தஞ் செய்தோம். அம்மம்ம! அப்பொழுது பருவம் எனக்கு ஆகப் பதினேழு, உமக்கு இருபத்து மூன்று!

ஆற்றின் அலை மெல்லெனத் தத்திப்புரண்டு சலசலென்று ஒலித்த ஒலி மனதிற்கினிதென்று உவக்கும் கீர்த்தனை பாடியது

போலிருந்தது ; பழைய கல்வாரதியில் நின்று நாம் பார்த்த கண்ணுக்கு இவ்வையகமெல்லாம் யௌவனமா யிருந்தது. அங்கே நின்று ஒரு முத்தம் தந்து என் உள்ளம் கவர்ந்தீரே! ஆ ஆ! அப்பொழுது பருவம் எனக்கு மெத்தவல்ல—பதினேழு ; உமக்கு இருபத்து மூன்று !

தொன்று தொட்டுள்ள பெருங்குன்றுகள் வெகு தொலையில் தெரிந்தன ; வானத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன ; இசாமுப்பது நாழிகையும் சிறந்து இனிதாகி, ஆகாயம் அன்பு கூர்ந்திருந்தது. பதினேழு வயதில் நானும் நீரும் இருந்த இருப்பை என் இந்த இருபத்து மூன்று வயதில் நீர்பரிவுகூர்ந்து நினைப்பதுண்டா? இதைக் குறித்து என் மனதிற் பலகால் வெறுப்புடன் வியப்பு முண்டாகின்றது.

நாம் இவ்வண்ணம் கொண்டாடிச் சுகித்து வெகுநாட் செல்லவில்லை. செல்லாதிருந்தும், நான் மனம் நொந்து வருந்தி அழுத கண்ணருவி பெருகி, நீர் உள்ளன்பு உருகி முத்தி செய்த முகம் நனைந்தது. முன்வாழ்வை முழுதும் மறந்திடுவேனாகில், ஆ! எத்தனை பாக்கியம்! எனது ஆசைக்கண்ணாளரே, நீர் ஏகபத்தினிவிரதம் தப்பியதேன் ? உம்மையே தன்னுருயிரெனக் கொண்டு...நம்பி—மணந்த மடநல்லாள் யான் இன்னும் உலகில் உயிருடன் இருக்க, என்னையே மறந்து, மற்றொரு பாவையின் காம் பற்றிய தென்னவோ? அது தகுதியேயோ? யான் தரையிற் கிடந்து புரள, அப்புதியவளோடும் சப்ரமஞ்சத்தில் கண்வளர உமது இளகிய நெஞ்சம் எவ்விதம் தான் இசைந்ததோ? நீதியோ—உமக்கு? பருவம் எனக்குப் பதினேழும், உமக்கு இருபத்து மூன்றுமான அந்த காலம் கழிந்தபின் என் கண்ணுக்கு இவ்வுலகம் கோலம் மாறியது!

ஆற்றங்கரை நெடுக இராக்காற்று வீசும் பொழுது என் இருதயம் அம்மதுரக் காதல் வாக்கு பிறந்த சுபமுகூர்த்தத்தை விரும்பி வருந்தி நினைக்கின்றது. வருந்தினுங்கூட—அந்த நினைவு எனக்கு இனிதாயிருக்கின்றது. ஆ! கெட்டேன்! அவ்வாழ்வு இனி ஏது? பின்னும் ஒரு முறை பருவம் எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்து மூன்று—வருமோ!

> தனக்குக் கிடைக்காதவரை — அப்பெண்மணி தனது மனோகரமான காதலிபோல எண்ணம். கிடைத்த பிறகோ தன் வீட்டின் கடைகெட்ட அடிமையாக அவளை ஆடவன் நினைக்கிறான்.

பிரஜாநுகூலன்.

Vol. 17. | திரிச்சி : பிப்ரவரி—மீ 1921. | No. 3.

ஸம்பூர்ண நயனதாரா

"அடடா! அந்த வருஷத்திய டைரியா உன் கையில் சிக்கியது? ஆகா! நான் பலமாக ஏமாற்றப்பட்டுப் போனேன்."

"அந்தந்த வருடத்திய டைரிகளை மட்டுமே பிறர் பார்க்காதபடி பத்திரமாக வைப்பதும், அடுத்த வருஷத்து டைரி வந்ததும், முன்பு போன்போல் போற்றிய டைரியை ஒரு மூலையில் போடுவதும் சாதாரண வழக்கம். அதிலும் நீண்ட வருஷங்கள் கடந்த டைரிகளைக் கவனிப்பதே யில்லை. செல்லேரிக்கவும் விடுவர். அப்படிச் செய்கிறவர்களில் நீ தான் முதல் அண்ணன்."

"அட துரோகி! இவ்விதமாகவா என்னை ஏமாற்றினாய்?"

"உன் வாழ்வே ஏமாறிப்போனதை நீ இன்னும் அறிய வில்லையா? இன்னும் கேள். ராம்சந்து காணாமற்போன வருஷத்து டைரியிலே ஒரு பக்கத்தில் ஒரு கடிதத்தை ஒட்டி அதில் நீதிப் பிரசங்கம் எழுதியிருந்தாய். ஏதோ கபடம் இருக்கிறதென ஐயுற்று அக்கடிதத்தை மெதுவாகக் கிழித்து விட்டேன். உள்ளே ரகசியம் இருந்தது. ராம்சந்துவைக் கைதுசெய்து வைத்துள்ள இடமும், ராம்சந்துவையே வீரசிங்கிடம் ஒப்புவித்து அவர் வீட்டைக் கொள்ளையிடச் செய்ததும் பரிபாஷையில் எழுதி வைத்திருந்தாய். எனக்குத் தெரியாத பரிபாஷையா? ஒரு நிமிஷத்தில் கண்டு கொண்டேன். ஒரு கிராமத்தில் மூன்று கட்டிடங்களுக்கும் நடுவே சுவர் போலுள்ள ஒரு அறையின் உள்ளே இருக்கும் சுரங்கத்தில் வைத்திருப்பதையும் உணர்ந்தேன்."

"உடனே அங்கே சென்றாயா?"

"நான் இரவைப் பகலாக்கிக் கொண்டவன். அந்த நிமிஷமே புறப்பட்டு அவ்விடத்தை யடைந்தேன். உன் கொள்ளைக் கூட்டத்தாரின் காவல் பலமாக இருந்தது. நான் அங்கு வேலை செய்தால் அவர்கள் எச்சரிக்கையாகி வேறிடத்துக்கு ராம்சந்துவை மாற்றி விடுவார்களெனத் திரும்பி விட்டேன். இதற்குள் நீயும் என்னை வீட்டில் காணாமல் தேடப் புறப்பட்டு விட்டாய். ஏற்கெனவே என்னை அபின் விழுங்கும் ஆசாமியென்று உனக்குக்கூறியிருக்கிறேன்.

அதை நம்பி என்னை அபின் கடைகளில் தேடி நீ வருவாயென்று எனக்குத் தெரியும். ஆதலின் ஒரு கடையில் கால்ரூபாய்க்கு அபின் வாங்கி அதை எறிந்துவிட்டு, ஒரு பஸ்பத்தால் கண்களை சிவப்பேற்றிக்கொண்டு ஒரு அபின் கடை யருகே உயிரற்ற பிணம்போலக் கிடந்தேன். நீயும் என்னைக் கண்டு பரிதபித்து, வண்டியில் தூக்கி வைத்து உன் வீட்டிற்குக் கொண்டுபோனாய். மறுநாள் மயக்கம் நீங்கி நான் விழித்ததுபோல் பாவனை படிக்க, நீயும் நம்பினாய்,"

"என்னைக் கேட்டால் அபின் வாங்கித் தரோனு? ஐயோ பாவம்! நிமசென நினைத்துக் கொண்டு வியாநிப்படுக்கையுடன் எழுந்து அபின்கடைக்கு நடந்துவிட்டாயே-என்று உன்னைப் பச்சாத்தாபத்துடன் கேட்டேனே ? இப்படியா என்னை வஞ்சித்தாய் பாவி!"

"ஆம் பாவி! அப்படித்தான் வஞ்சித்தேன். ராம்சந்துவை நீ வஞ்சித்த மாதிரி உன்னை நான் வஞ்சித்தேன். மற்ற கதையும் கேள். மறுநாள்முதல் சுகப்பட்டவன்போல் ஆனேன். நடித்தேன். மயக்கினேன். உனக்குப் பதிலாக நான் கொள்ளைக்கூட்டத்து அதிபனாய் இருப்பதாகக் கூறினேன். நீயும் சரி என்றாய். வேறிடத்தில் நமது கூட்டத்தை வைக்கவேண்டு மென்றேன். நீ மூன்று கட்டிடமுள்ள இடத்தில் பரம ரகசிய மிருக்கிறதென்றும்,அங்கேயே கூட்டம் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினாய். என்ன ரகசியம்என்றேன். நீ சொல்லப் பின்வாங்கினாய். நான் அப்படிப்பட்ட ரகசியம் உன்னிடமே இருக்கட்டும்.இன்னும் போகப்போக நம்பிப்பிறகு சொல்லு, அவசரமில்லை யென்றேன். நீயும் சரி என்றாய். ஆயினும் உன் சாமர்த்தியத்தை எனக்குத் தெரிவித்து என்னிடம் சபாஷ் பட்டம் பெறவேண்டுமென்ற ஆவல் உனக்கு அதிகரித்துவிட்டது. சில நிமிஷத்திற்கெல்லாம் ராம்சந்துவை அங்கு வைத்திருப்பதாக உஷார் தவறிக் கூறிவிட்டாய். உன் கீழ் இருந்து வேலை செய்வேனென்று நினைத்தாய். அப்படி யொருவன் விரும்புவானாயின் அவன் உழவிற்கட்டியமாடாக இருக்கவேண்டுமேயல்லாமல் மனிதனல்ல."

"வஞ்சகனே! அப்போதே ராம்சந்துவைக் கொன்றுவிடுவதாகக் கூறினாயே. கொலைசெய்து நெடுநாளாய் விட்டதால் கை நமைச்சல் எடுக்கிறதாயும், அந்த நமைச்சலுக்கு ராம்சந்துவைப் பலி கொடுத்துவிடு என்றும் என்னை வேண்டிவேண்டி ஆனமட்டுக்கும் பேசினாயே, அத்தனையும் பொய்மூட்டையா ? ஆ ! என்ன கபடம்!"

"அவரை விட்டுவிடும்படி நான் உன்னிடம் கூற அத்தனை மூடனில்லை. அப்படி நான் பேசினால் நீ என்னை சந்தேகித்துவிடுவாய். நீயோ உன்னை ராவணன் என்று சொல்லிக்கொண்டாய். தமிழ்நாட்டுப் புலவரான கம்பர் என்பவர் பாடிய செய்யுளையும் எடுத்துக் காண்பித்தாய்."

"என்ன காண்பித்தேன் ? எனக்குப் புத்தி தடுமாறுகிறது. அதை நீயே சொல்."

"அக்காலத்தில் ராவணன் சொன்னானும்:—ஜலத்தின்மீது எழுகின்ற குமிழிகளையொத்த இந்த நிலையற்ற வாழ்க்கைகொண்ட என் சரீரத்தை விடுவேனே யல்லாமல், நான் சீதையை விடுவதும் உண்டா? அப்படி விடுவேனாயின் எனக்கு இருபது தோள்கள் இருந்து என்ன பிரயோஜனம்?

"மீதேழும் மோக்கு யென்ன வாழ்க்கையை விடுவதல்லால்,
சீதையை விடுவதுண்டோ?—இருபது திண்தோள் உண்டா?

என்று கூறி, அப்படிப்போல ராம்சந்துவை நான் விடுவதும் உண்டா? விடுவேனாயின் என் பராக்கிரமம் வீணாக்கா என்றாய். நானும் உடனே கொன்று விடலாமென்று, உன் போக்கிற்கிசைய நவின்று நாட்டிய மாடினேன்."

"சரிதான், பிறகு என்ன செய்தாய்?"

" பிறகு நான் உன் இஷ்டப்படியே உன் கொள்ளைக் கூட்டத்தில் தலைவனானேன். உன் சூட்சிகளைக் கிரகித்தேன். ஒரு பெரிய மனிதரின் வீட்டைக் கொள்ளையிடுவதெனத் தீர்மானித்தேன். அதற்காக உன் கூட்டத்தாருடன் நடு இராத்திரியில் புறப்பட்டுச் சென்றேன். ராம்சந்து சிறையுண்டிருக்கும் கட்டிடத்தில் ஒருவன்கூட இல்லாமற்செய்து அக்கட்டிடத்தைப் பூட்டிக் கொண்டு அனைவரையும் அழைத்துச் சென்றேன். ஏற்கெனவே என் முன் கடிதப்படி போலீஸார் பெரியமனிதரது வீட்டின் அருகே காத்து நின்றனர். எல்லோரும் வீட்டுக்குள் நுழைந்த பிறகு, அனைவரையும் கைது செய்தனர். என்னையும் கைது செய்தனர். இது சங்கதியை உனக்கு மறுநாட்காலையில் எட்டச்செய்தேன். நான் போலீஸ் ஸ்டேஷன் சென்றதும் என்னைவிட்டு விட்டனர். அப்பொழுதே புறப்பட்டு மூன்று கட்டிடமுள்ள இடம் வந்து கதவைத் திறந்து உட்சென்று சோதித்தேன். இதற்கு முன்பு சோதிக்கமுடியவில்லை. சிறை வைத்துள்ள இடம் தெரியவில்லை. பிறகு தற்செயலாய் ஒரு அலமாரியைத் திறந்தேன். அதனுள் ஒரு கதவு இருந்தது. அதை உடைத்தெறிந்து நோக்கினதில் ஒருவழி தென்பட, இரண்டு சுவருக்கும் நடுவே ஒரு அறை இருந்தது. அங்கிருந்து ஒரு சுரங்க வழி சென்றது. விளக்குடனும் கெடுகச்சென்று பார்க்க, தாடிமீசைகளுடனும் மிக்க நலிவோடு ஒருவர் கன்னத்தில் கையைவைத்துக் குந்திக்கொண்டிருந்தார். கண்களிலிருந்ததும் நீர் வடிந்தபடி யிருந்தது. உடனே அவர் எதிர்சென்று நமஸ்கரித்தேன். பூர்ணேந்திரரின் பெயரால் உம்மை விடுவிக்க வந்தேன் என்றேன். "பூர்ணேந்திரனா! என் குமாரனுக்கு நான் வைத்த பெயரல்லவா அது" என்றார். "ஆம் மனைவி முதற்கொண்டு அனைவரும் மங்களமே" என்றேன். என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு ஆ! கடவுளே என்றார். மூர்ச்சை

போய்விட்டார், இனி தாமதித்தல் மோசம் என்றெண்ணி, மூர்ச்சையுடனிருப்பவரை அப்படியே தூக்கிக்கொண்டு வெளியில் வந்தேன். அவரும் மூர்ச்சைதெளிந்தார். உன் பாழும் கட்டிடத்திற்கு மறுபடியும் பூட்டிட்டுவிட்டு அவருடன் புறப்பட்டு, ஏற்கெனவே திட்டம் செய்திருந்த ஒரு பங்களாவுக்குச் சென்றேன். இதற்கு முன்பே நயனதாரா ராணியின் அனுமதிபெற்று அவரது அத்தையான குமுதா தேவியை என்னுடன் அழைத்து வந்து, அந்தப் பங்களாவில் வைத்திருந்தேன். ராம் சந்துவை அந்தப் பங்களாவில் கொண்டுபோய் குமுதா தேவியின் முன்பு நிறுத்தினேன். ஐயோ பாவம்! அவர்கள் இருவரும் கடவுள் சேர்த்து வைத்த தம்பதிகள். ஒருவரையொருவர் கண்டதும் தழுவிக்கொண்டு கதறினார்கள். பிறகு போலீஸ் பந்தோபஸ்துடன் நாதரவீந்திரர் இருக்கும் கிராமத்துக்கு அனுப்பிவிட்டேன். அவர்கள் அனைவரும் நாளையதினம் நயனதாரா மகாராணியிடத்திற்குத் திரும்புவார்கள். படுபாவி! ராஜ்ய ஆசையால் நீ இவ்வளவும் செய்தாய். ஸத்தியபாசாண மகாராஜா உன்னைத் தனது மனைவியின் தம்பியாயிற்றே என்று நம்பினார். மகாராஜாவிடம் வம்ஸாவழியினை ராம்சந்து விவரித்து நயனதாரா தான் பட்டத்திற்குரியவளென்று கூற, மகாராஜாவும் பரம சந்தோஷத்தில் ஆழ்ந்து உனக்குக் கடிதம் எழுதினார். இம்மாதிரி சமயத்தில் வலுவுள்ள புத்தியும், பெரிய மனதும், அன்பும், ஸமஸ்தானத்தை அந்நிய அரசாங்கத்தாரிடம் விட்டுவிடலாகாதென்ற நிச்சயமனோநிலையும், அதற்காக வேலை செய்யப் பரபரப்புமுள்ள ஆண்மக்களே தேவை. அதற்கு ராம்சந்துவே சரி. நீயோ அரசை வஞ்சனையாகக் கைப்பற்றிக் கொள்ளப் பார்த்தாய். முடியவில்லை. மஹாராஜாவிடத்துப் பகை கொண்டாய். அவர் கோரிக்கை நிறைவேறாமற் போகுமாறு ராம்சந்துவை வேடிக்கையார்த்தமாக இட்டுச் செல்வதுபோல் நடித்துத் திடீரென்று மூன்று கட்டிட மாளிகையில், சிறையாக்கினாய். பிறகு வீரசிங்கனிடம் ஒப்புவித்து ராம்சந்துவைக் கொண்டே அவர் வீட்டைக் கொள்ளையிடவைத்து, மறுபடியும் உன்னிடம் அவரைக் கொணரச்செய்து பழயபடி சிறையில் வைத்துவிட்டாய். இதனால் நீ வாரிக்கொண்டது என்ன? ஆதியில் உன்னை நெருங்கியபோதே உன்னைத் திருத்தி என் வழிக்கு வரச் செய்ய முடியாதென்றால், உன்னைத் தொலைத்துவிடுவதாகவே என் உத்தேசம். அப்படியே தான் முடிந்தது. வம்ஸ பரம்பரையைக் குறித்த ஒரு மகா முக்கியமான விஷயத்தில் ராம் சந்துவை நீ புறக்கணித்து அவமதிக்கும்படி செய்த அந்த உன் கிராதகச்சிந்தையையும், நானே பெரியவன் என்கிற அந்த இறுமாப்புணர்ச்சியையும் இனி நான் சகித்திருக்க முடியாது. அவை உன் யோக்யதையை குஜா செய்து விட்டன. மோசநேசனே!

இதோ போட்டுக்கொள் போலீஸ் காப்பை! இதுதான் உனக்கு மோக்ஷ ஸாம்பிராஜ்யம்."

என்று கூறி இராஜநாயகத்தின் கைகைகளுக்கு விலங்கிட்டார். அவன் செயல் குன்றி நின்றான். "இராஜ நாயகத்தின் திகைப்பு" அவனது பலத்தை அடியோடு போக்கிற்று. மறுநிமிஷத்தில் மறைந்திருந்த போலீஸார் வீட்டுக்குள் நுழைய, அவர்கள் வசம் அவனை ஒப்புவித்து, ஸஞ்சீவபாபு வெற்றிவீராய்ப் பிரகாசித்தார். இராஜநாயகம் கண்டபடி அவரை வைதான். அதற்கு "சொன்னால் சொல்லட்டும்" என்றார் ஸஞ்சீவபாபு.

அத்தியாயம்—18.

சஞ்சீவபாபுவின் நிபுணத்வம்

1. "வீரன் கேண்மை கூரம்பாகும்"
2. "முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்"
3. "காலத்தாற் செய்நன்றி"

மகாராணியார் வீற்றிருந்த அறைக்குள் ஒரு கூட்டம் திடீரென உட்புகுந்ததென்றோம். அதில் ஒரு பெண் மணி நயனதாராவை—"ஆ! என் அருமைக் குழந்தாய்"—என்று கட்டியணைத்துக்கொண்டார். மற்றொருவர் ஓடிவந்து இந்த மகாராணி தானா எனது கைக்குழந்தை என்று நயனதாராவை ஆலிங்கனம் செய்து கொண்டார். வேறொரு பக்கத்திலிருந்து இன்னொருவர் பிரலாபிப்புடனும் பூர்ணேந்திரரைத் தம் மடிமீது தூக்கிவைத்துக்கொண்டு என் புத்திரா ரத்தினமே! இளமையில் உன்னைவிட்டுப் பிரிந்தேனடா என்று அழுதார். குமுதாதேவி என்ற பெயருடன் விளங்கிய அம்மை பூர்ணேந்திரரை அணைத்துக்கொண்டு—ஆ! என் மகனே இதுவரையிலும் என் தமயனிடமா நீ வளர்ந்தாய் என்று ஆநந்தக் கண்ணீர் சொரிவதானார். அங்கிருந்தோர் அனைவரும் இதென்ன அதிசயமென்று பிரமித்தனர். ஸஞ்சீவபாபு இவர்கள் அனைவரையும் பார்த்துக்கொண்டு வெற்றி நிறைந்த திருஷ்டியோடும் ஆநந்தமாக நின்றார்.

நயனதாராவைக் கட்டியணைத்துக்கொண்ட பெண்மணி தான் கமலாபாபா. நயனதாராவை ஆலிங்கனம் செய்துகொண்டவர் தான் நாத ரவீந்திரராவார். இவரே தமது பெயரை"ரவி"என்று ஸஞ்சீவ பாபுவுக்குத் தெரிவித்தவர். இவர்களிடம் தான் பூர்ணேந்திரர் வளர்ந்தார். கமலாபாபாவைப் பூர்ணேந்திரர் தமக்கை முறைகொண்டு சிறுபோதில் அழைத்தமையால் வயதான

காலத்திலும் அதே முறை கூறி அழைப்பதானார். நாதரவிந்திரனையே தமது சொந்த தந்தையெனப் பூர்ணேந்திரர் ஸமீபகாலம் வரையில் நம்பியிருந்தார்.

பூர்ணேந்திரரைப் பிரலாபிப்புடனும் படியில் தூக்கிவைத்துக் கொண்டவர் ஸத்தியகுணதேவியின் பர்த்தாவும், பூர்ணேந்திரரின் பிதாவுமான ராம்சந்து அவார். ஸத்தியகுணதேவி தமது பெயரைக் குமுதாதேவியென மாற்றிக்கொள்வதானார். தம்மால் வளர்க்கப்பட்ட நயனதாரா காதலித்தது தமது புத்திரனை பூர்ணேந்திரரைத் தான் என்பதை ஸத்தியகுணதேவி இதுவரை அறிந்தாரில்லை. பூர்ணேந்திரர் ஸந்தோஷபுரம் வந்தபோது ஸத்தியகுணதேவி அந்த ஊரில் இல்லை. அவரை ஸஞ்சீவபாபு வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள ஓர் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் விட்டார். ஆதலால் பட்டாபிஷேகத்தின்போது வந்த பூர்ணேந்திரரை ஸத்யகுணதேவி காணமுடியாமற்போயிற்று. இதில் தங்கையின் புத்திரனைத் தமயனும், தமயனின் பெண்ணைத் தங்கையும் எடுத்து வளர்த்ததும், இங்ஙனம் எடுத்துவளர்க்கப்பட்ட அவ்விருவருக்குள்ளும் இயற்கையின் அதிசய சக்தியால் ஒற்றுமை யுண்டாகிக் காதலாக முடிந்ததும் ஆச்சரிய விஷயங்களாகும். கள்வர் தலைவனான வீரசிங்கும் ஸஞ்சீவபாபுவுடன் வந்திருந்தான்.

ஸஞ்சீவபாபு தம் கலமிக்க சித்தாந்தங்களையும் தாம் துப்பறிந்த விஷயங்களையும் கோர்வையாக விவரித்தார். என் உத்தேசத்தை நான் எப்படியாவது நிறைவேற்றியே தீருவேன். அதுதான் வழக்கம். டெபுடி கலெக்டர் கைலாஸ சந்திரராயைப் பற்றிய விவரங்கள் தெரிந்தபோது. அவரது இரு குமாரத்திகளில் கடைசியான புத்திரியின் குழந்தைகளே நாதரவிந்திரரும் ஸத்தியகுணதேவியும் ஆவார்களென்றும், தாம் உணர்ந்ததாகக் கூறினார். பிறகு நயனதாராவின் அத்தையைப் பார்க்க முதலில் சந்தர்ப்பம் கிடைத்தபோது நாதரவிந்திரரின் முகஜாடை அத்தைக்கும் இருக்கக் கண்டதாயும், குமுதா தேவி எனப் பெயரை மாற்றிக் கூறுகிறதாகத் தாம் ஊகித்ததாயும் புகன்றார். வீரசிங்கு ஒரு கள்வர் தலைவனே யாயினும், ராம்சந்துவை இராஜநாயகம் அவனிடம் ஒப்புவித்தபோது, வீரசிங்கு ராம்சந்துவால் சகலமும் தெரிந்துகொண்டு அவரிடத்திற் பெரிதும் இரக்கங்கொண்டான். அவரை மறுபடியும் இராஜ நாயகத்திடம் ஒப்புவியாவிட்டால் தன் கூட்டத்தாரோடு தன்னை அடியுடன் இராஜநாயகம் அழித்துவிடக்கூடியவன் என்ற பயம் வீரசிங்குக்கு அதிகமாயிருந்தது. ஆதலால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. வீரசிங்குடன் இராஜ நாயகத்தின் கூட்டத்தாரும் வந்திருந்ததால் வீரசிங்கு செயலற்றவனானான். ஆயினும் ராம்சந்துவினிடம் கொடுத்த வாக்கின்படி ஸத்

தியகுணதேவியைக் கடைசி பரியந்தமும் அன்னவஸ்திரம் தந்து காத்ததுடன், நயனதாரா உயர்தரக் கல்வியில் தேரும்வரையும் படிக்கவைத்து உன்னதப் படுத்திவிட்டான். அவன் உபகாரம் மிகவும் பெரிது. காணாமற்போன தமது தமயனாரான நாதசவீந்திரரையும், அவரது பத்தினியையும், தமது குழந்தையான பூர்ணேந்திரரையும் தேடித் தரவேண்டுமென ஸத்தியகுணதேவி வீரசிங்கை வேண்டிக்கொள்ள, அதற்காகவே வீரசிங்கும் அவர்களைத் தேடித் திரிந்தான். இராமதாஸ் ஸாவ்காரி அவர்களைக் கண்டுபிடித்துச்சொல்ல, வீரசிங்கு அவர்களின் வீட்டைக் கிட்டினன். அதற்கு முன்பே சம்சயித்து நாதசவீந்திரர் தமது பத்தினியுடன் பூர்ணேந்திரனோடு வேறு கிராமம் சென்றுவிட்டனர். வீரசிங்கு வந்துபார்த்து ஏமாற்றமெய்தி, தான் வந்ததைப் பிறர் சந்தேகியா வண்ணம், திருடர்கள் வந்ததுபோல் பாவனை காட்ட, அவர்கள் தங்கிய வீட்டைத் தீக்கிரையாக்கிச் சென்றான்.

மலைக்குகையில் வீரசிங்கைக் கண்ட பிறகு, அவனே பிரபு வேடம் தரித்து ஸத்தியகுணதேவியிடம் வந்திருப்பதைப் பார்க்கவே நினைத்தேன். ஸத்தியகுணதேவியின் மூலமாக அவனது நட்பை யடைந்தேன். பிறகு பரம மித்திரர்களானோம். ராம்சந்துவை விடுவிக்க நான் வேலை செய்வதாய் அறிந்து மிக்க பூரிப்பெய்தினன். அதற்கான உதவிகள் எல்லாம் செய்தான். அவன் சகாயத்தால் இராஜநாயகத்தின் இருப்பிடம் அறிந்து அவனை வஞ்சித்து உறவாடிக் கடைசியில் கைதியாக்கினேன்.

நயனதாரா மகாராணியார் தமக்கு விவாகம்வேண்டாமென மறுத்ததில், எனக்கு அந்தரங்கமாக அவருடன் சம்பாஷிக்க வேண்டுமென நினைவு உண்டாயிற்று. ஒருநாள் இரவு அவரிடம் என் கோரிக்கையைக் கூறினேன். அவரும் உம்மிடத்தில் நான் எதையும் மறைக்கமாட்டேன் எனப் புகன்று, பூர்ணேந்திரருக்கும் தமக்கும் உண்டான பிரிவினையைப்பற்றிய சகலமும் நவின்றார். எந்தப் பூர்ணேந்திரர் என்று தெரிய வேண்டி அவரது படம் கேட்டுப் பெற்றுப் பார்த்ததில் என் முகம் மலர்ந்தது. எனக்குப் பரிச்சயமாயுள்ள பூர்ணேந்திரராகவே இருந்தார். பூர்ணேந்திரர் ஸத்யகுணவதியின் குமாரர் என்பதை அந்தரங்கமாய் நான் அறிந்தவன். தன் தாய்மாமனின் குமார்த்தியே நயனதாராவெனப் பூர்ணேந்திரர் அறிந்தால், அவர் உடனே நயனதாராவுடன் ஒன்றுபட்டு விடுவார். நயனதாரா அன்னியப் பெண் என்றும், அதனால் ஸ்வயேச்சைக்குப் பங்கம் நேருமென்றும் பூர்ணேந்திரர் கருதினவர். இப்போது தாய்மாமனின் பெண்ணென்று தெரிந்தால் தமது சுயேச்சைக்குப் பங்கமில்லையெனக் கண்டுகொள்வார்.

"மான மழிந்த பின்னர் வாழ்வதும் வாழ்க்கையதோ?
ஈனமதி என்றுலகோர் எண்ணிட நாம் நடப்பதுவோ?"

என்ற அவரது பிடிவாதங்களும் பறந்துவிடும். உலகமும் அவரை ஏசாது. இது என் மனதிற்பட்டதும் நயனதாராவிடத்தில் ஒரு மாதத்துள் பூர்ணேந்திரரைக் கொண்டுவந்து சேர்த்து சமரஸப்படுத்துவதாகச் சத்தியம் கூறினேன். மகாராணியின் வதனமும் மலர்ந்தது.

பூர்ணேந்திரர் பட்டாபிஷேக மகோத்ஸவம் காணவேண்டி சந்தோஷபுரம் வந்தபோது ரயில்வேஸ்டேஷனில் அவரைத் தூர இருந்து பார்த்துவிட்டேன். அவர் எவரையோ பின்தொடர்வதை யறிந்து, அவரை நானும் தொடர்ந்து திரிந்து, அவரைச் சுட முயன்றவனைத் தள்ளி அவரைக் காப்பாற்றினேன். பிறகு அவரை அரண்மனைக்கு இட்டுப் போகவேண்டியிருந்தது. இப்படி நேருமென்று முன்னதாக ஊகித்தவனாய் ஸத்தியகுணாதேவியை அரண்மனையிலிருந்து அழைத்துவந்து ஒரு கிராமத்தில் ஒரு பங்களாவில் இருக்கச்செய்தேன். ஏனெனில் ஸத்தியகுணாவதியைப் பூர்ணேந்திரர் அரண்மனையிற் கண்டால், சீக்கிரம் தாயும் பிள்ளையும் எனத் தெரிந்துகொள்வார்கள். நயனதாராவும் தாய்மாமன் மகள் என விளங்கிவிடும் அதனால் அவர் கடைசி வரையில் சுயேச்சையை ஸாதிக்கிறாரா வென்பதை அறியமுடியாமற்போய்விடும். அதற்காகவே நயனதாராவின் அனுமதிபெற்று, ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறதென்று ஸத்தியகுணாவதியைப் பங்களாவுக்குக் கொண்டுபோய் வைத்துவிட்டுப் பூர்ணேந்திரரைப் பட்டாபிஷேக மண்டபத்தில் நயனதாராவுக்கு சந்திப்பு செய்வித்து பிறகு அரண்மனையில் இருக்கச்செய்தேன். பூர்ணேந்திரரோ கடைசி வரையில் தம் சுயேச்சையையே பெரிதும் பாராட்டினார். இராஜப்பிரதிநிதியின் தேவியாரது வார்த்தையைத் தள்ள முடியாமல் தம் சுயேச்சைக்கு விடுமுறை கொடுத்தனுப்பிவிட்டு நயனதாராவை மணமாட ஒப்புக்கொண்டார். இன்றுதான் தாய்மாமனின் குமாரத்தியென அறிகிறார். அவரது சுயேச்சா திடசித்தத்தையும் நான் பரிசோதித்தாய்விட்டது. நரபுருஷ சிங்கமேயாவார். ஆயினும் தன்னை நம்பிவிட்ட பெண்மணியிடத்து இத்துணைக்கொடுமையாக நடந்ததை நான் மெச்ச முடியாது. அது அவருக்கே தெரியட்டும். நன்றியுள்ள மனைவிகளின் தர்மத்தாலேயே இந்தியா இன்னும் அழியாமலிருக்கிறது. அதுபோக, நான் பங்களாவில் ஸத்யகுணாதேவியை வைத்தது, அவர் ராம்சந்துவை நடுவழியில் சந்திக்க வசதியாயிருக்க வேண்டுமென்பதுமாகும். அவர் இருந்த பங்களாவுக்கு ராம்சந்துவை சீக்கிரத்தில் கொண்டுபோய்ச்சேர்க்க எனக்கு அது மிக்க சமீபமாக இருந்ததால், எனக்கு சௌகரியமாய் முடிந்தது.

ஸந்தோஷபுர ஸிம்ஹாஸனம் காலியாயிருப்பதால், அதற்கான அரசுரிமையுள்ளவர்களைத் துப்பறியுமாறு கல்கத்தா போ

லீஸ் கமிஷனர் என்னிடம் தெரிவித்தபோது, மலைக்குகையில் நான் கண்டெடுத்த இராஜநாயகத்திற்கு எழுதப்பட்ட கடிதத்தைக் காண்பித்து, அது சமீபத்தில் காலமான ஸத்தியாஸன மகா ராஜாவினுடைய கையெழுத்தே என நிரூபித்தேன். அவர் வியப்புடன் என்னையே முற்றிலும் ஆராயும்படி உத்தரவிட்டார். இவ்வகையில் கவர்ண்மெண்டின் உதவிகொண்டு சகலமும் சோதித்து உண்மையை வெளியாக்கினேன்—என்று அனைத்தையும் விஸ்தாரமாகக் கூறி, பூர்ணேந்திரர் ஆதியில் என்னிடம் ஒப்புவித்த வேலையைப் பகவத்ஸங்கல்பத்தால் மங்களமாக முடிவுக்குக் கொண்டு வருவதானேன் என்றார்.

ராம்ஸந்து:—நான் ஸந்தோஷபுரத்தில் பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் அவர்களிடம் வேலையாக இருந்தேன். ஸத்தியாஸன கஹாஸி மகாராஜா அவர்களுக்கு ஜி. ஸி. ஐ. பட்டம் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்வதற்கு, அவரது பூர்வீகர்களின் அந்தஸ்தைத் தெரிந்து கொள்வதற்கான ரிகார்டுகளைச் சோதிக்கும்படி எனக்குப் பிரிட்டிஷ் ரெஸிடெண்டு துரையவர்கள் ஆக்ஞாபித்தார். அதன் மூலமாக சுரேந்தரநாதர் ஸந்தோஷபுரத்தை விட்டுத் துரத்தப்பட்ட விஷயம் ரிக்கார்டுகளிலிருந்து விளங்கிற்று. இதை நெடுக ஆராய்ந்து கொண்டே சென்று பல வருஷ கால ஆராய்ச்சியின் மூலமாக் சுரேந்தரநாதரின் சந்ததியார் தான் டெபுடி மாஜிஸ்திரேட் கைலாஸசந்திரர் என்று கண்டுபிடித்தேன். அதன் பிறகு என்னைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு மாற்றிவிட்டார்கள். மகாராஜாவுக்குப் பின் ஸந்ததியில்லாததால் நாத ரவிந்தரின் கைக்குழந்தையான நயனதாராவே அந்த ஸிம்ஹாஸனத்துக்கு உரியவளாகிறு ளென்பதைத் தெரிந்துகொண்டு ஒரு புஜம் இரு புஜமாகப் பூரித்தேன். சீக்கிரம் சந்தோஷ செய்திகொண்டு வருவதாக வீட்டில் எல்லோருக்கும் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்படியே ஸந்தோஷ புரத்திற்குச் சென்று மகாராஜாவை ஏகாந்தத்தில் கண்டு யாவும் கூற அவரும் விஷயங்களை வெகு பிரீதியுடனும் கேட்டார். உடனே தம்மைச் சந்திக்குமாறு தமது மைத்துனரான இராஜநாயகத்துக்கு என் முன்னிலையிலேயே ஒரு கடிதம் எழுதியனுப்பினர். அவரும் வந்து சேர மகாராஜா சகலமும் அவரிடத்தில் கூறினர். இராஜநாயகம் வெளிக்கு அதிகமான திருப்தியும் மகிழ்வும் உள்ளவராகத் தம்மைக் காண்பித்துக் கொண்டார். அடுத்த வாரத்தில் விஷயத்தை பஹிரங்கப் படுத்தலாமென்று மகாராஜா அவர்கள் கூறினர். இதனிடையே இராஜநாயகமும் நானும் அத்தியந்த நட்பினராஞேம். ஒரு நாள் எனக்கு அரண்மனையின் விசேஷங்களைக் காண்பிப்பதாக நவின்று ஒரு அலமாரியின் வழியாக ஒரு சுரங்கத்தில் என்னை யிட்டுச்சென்று பூமியின்கீழ் உள்ள கட்டிடத்தைக் காண்பித்தார். நான் அவ்விடத்திய விநோதங்க

லைப் பார்த்து நிற்கையில் திடீரென என்னைக் கீழே தள்ளி கைகால்களுக்கு விலங்கிட்டு, இதுவே உமக்குப் பட்டாபிஷேகமென்று கூறினர். நான் திடுக்கிட்டுப் போனேன். நான் பலஹீனமான தேகியாதலின் அவரை எதிர்க்க முடியவில்லை. அன்றுமுதல் இதுகாறும் அச்சிறையின் துன்பங்களை யநுபவித்தேன். கடைசியாக இராஜநாயகம் வந்தபொழுது மூன்றுநாட்கள் என்னுடனேயே இருந்தார். பின்பு ஸஞ்சீவபாபுவினால் விடுவிக்கப்பட்டேன். பங்களாவில் ஸத்தியருஜு தேவியைக் கண்டு கதறினேன். பின்னர் நானும் "குஞ்ஜு"வுமாக நாகசவீந்திரர் இருந்த கிராமத்துக்கு ஸஞ்சீவபாபுவால் பாதுகாப்புடன் அனுப்பப்பட்டோம். "குஞ்ஜுவும்" "நாநா"வும் ஒருவரை யொருவர் பார்த்தனர். ஆகா! ஒரு உடற்பிறப்பான இவ்விருவரும் சந்தித்துக் கொண்டபோது அவர்களுக்குள் எழுந்த பிரலாபிப்பும், பரவசமும் மிக்க கண்ணராவியா யிருந்தன. எதோ கடவுள் கிருபையாலும், ஸஞ்சீவபாபுவாலும் யாவும் மங்களமாக நிறைவேறிற்று என்றார்.

மகாராணி யொரு புறமும், பூர்ணேந்திரர் ஒரு புறமுமாக ஸஞ்சீவபாபுவின் கைகளைப் பிடித்துக்கொண்டு 'உங்களுடைய உபகாரத்திற்கு நாங்கள் எவ்விதமாகக் கைம்மாறு செய்யப்போகிறோம்? சிதறுண்டு கிடந்த ஒரு வம்சம் உங்களால் ஒன்று சேர்க்கப்பட்டு உருவாயிற்று'—என்று ஆநந்தக்கண்ணீர் சொரிந்தனர். "ஸஞ்சீவபாபுவின் நிபுணத்வம்" இருந்தவாறென்னே யென்று அனைவரும் புகழ்வதாயினர்.

அத்தியாயம்—19

மங்களம்

" பொருந்துவன—போமின்—என்றுந் போகா.

சென்ற அத்தியாயத்திற் குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து ஒரு மாதமாயின. பகவான்லிங் தமக்குப் பலவகையிலும் உதவி செய்தவராயினும், அவர் இழைக்க இருந்த குற்றம் மிகப் பெரிதாதலின், அவரது விடுதலையைக் குறித்து மனப்பூர்வமாக விரும்பி நயனதாரா மகாராணியார் இந்திய ராஜப்பிரதிநிதி யவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். அவ்விதமே விரசிங்கையும் மன்னிக்க வேண்டுமென்றும், கூட எழுதியனுப்பினர். இந்த சிபார்சுகளை இராஜப்பிரதிநிதியவர்கள்

கருணையோடும் ஏற்று—"தம்முடைய பிரியமுள்ள குழந்தையாகிய ஸ்ரீமதி நயனதாரா மகாராணியார் அவர்கள் செய்யும் பிரதி பொருந்திர்ப்புகளும் நடவடிக்கைகளும் இராஜப்பிரதிநிதியாகிய தம்மாலேயே செய்யப்பட்டதாகக் கருதப்படுமென்று"—அதற்குப் பதில் அனுப்பினர்.

பகவான்லிங்கும் அவருடன் ஸதிச்செயலில் கூடநின்றவரும் விடுதலைபெற்றனர். ஏராளமான பரிசுகளை அவர்களுக்கு மகாராணியார் உதவினர். விரசிங்குக்கும் அவரது துணைவர்களுக்கும் மன்னிப்பு கிடைத்து, அன்னோர் அனைவரும் ஸந்தோஷபுரத்தையே தமது வாசஸ்தலமாகக்கொண்டனர். அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளை மகாராணியார் கிரமப்படி நடத்தினர். பகவான்லிங்கும் தமது வாசஸ்தலத்தை சந்தோஷபுரத்திற்கு மாற்றிக்கொண்டார். தமக்கு ஒரு குமாரன் இருப்பதால், இனி இரண்டாவது விவாகம் செய்து கொண்டு மாற்றாந்தாயின் கொடுமைக்குத் தமது குமாரனை உட்படுத்த மனமில்லாமல் விவாகமற்றவராகவே தமது காலைப் போக்கத் தீர்மானங் கொண்டார். இராஜநாயகமும் அவன் கூட்டத்தாரும் ஜென்மதீபாந்தர சிக்ஷையடைந்தனர். இராஜநாயகத்தை இரண்டொரு வருஷங்கட்குப் பிறகு மன்னித்து விடுவிக்குமாறு மஹாராணியார் கருணையுடன் ஒரு குறிப்பு எழுதி உதவினர்கள்.

இரண்டாவது மாதமும் பிறந்தது. பூர்ணேந்திரருக்கு சிங்பூர்ணேந்திரபுர ராஜ்ய பட்டாபிஷேகமாயிற்று. இராஜப்பிரதிநிதியவர்களும், இராஜப்பிரதிநிதியின் பெருமாட்டியாரும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். அதற்கு அடுத்த தினத்தில் பூர்ணேந்திர ஸிங் மகாராஜாவுக்கும், ஸ்ரீமதி நயனதாரா கஹாலி மகாராணியாரவர்களுக்கும், அவர்கள் ஆவலுடனும் எதிர்பார்த்து நின்ற விவாக வைபவம் மிக்க உன்னதத்தோடும் நிறைவேறியது. இராஜப்பிரதிநிதிப்பெருமாட்டியார் தமது கைப்பட அநேக சீர்வரிசைகளை நயனதாரா மகாராணியாருக்கு உதவினர். மகாராணியைத் தமது சொந்த புத்திரி என்று எல்லோரின் முன்னிலையிலும் பலமுறை கூறிக்கொண்டு மகிழ்ந்தார். பூர்ணேந்திரரிடத்தும் அதேவித அபிமானம் செலுத்தினர்.

காதலர்கள் இருவரும் இதுகாறும் தங்களின் கையிலேயே வைத்துக்கொண்டு, அவ்வளவில்தானே அழகு மட்டும் பார்த்துக் கொண்டிருந்த காதற்கனி யாகிய மாம்பழத்தின் ரஸத்தை—ருசிகரத்தை—ஆநந்தத்தோடும் சுவைத்து அநுபவம் செய்வதாயினர். அக்காதலின் பயனாக அவர்கள் வெகு துரிதத்தில் இரு புத்திரர்களுக்கும் பெற்றோராகப் பரிமளிப்பதாயினர். நாத ரவிந்திரரும் கமலாபாபாவும் நயனதாராவைத் தாங்கள் ஆசையுடனும்

எடுத்து வளர்க்கப் பாக்கியம் செய்திராத குறையை நயனதாராவின் குழந்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்வதாயினர். அத்தை ஸத்திய குணமேதையும் அதில் பங்குபெற்றார். ராம்சந்து தாம் வெகு நாளைக்கு முன் அவளுடனும் விரும்பி எதிர்பார்த்த இம்மகா வைபவங்களை, இப்பொழுது நேருக்கு நேராய்ப் பிரத்தியக்ஷமாகக் கண்டு அந்த ஆநந்தவாரிதியில் மூழ்கிப் பரவஸராக இருந்தார்.

இவ்வளவுக்கும் காரணபுருஷராக நின்ற ஸஞ்சீவபாபுவுக்கு மகாராணியார் லக்ஷம் ரூபாய்கள் பெறக்கூடிய ஒரு மானியத்தை இனாமாக அளித்து பலவித பரிசுகளோடும் தமது நன்றியறிதலைக் காண்பித்துக்கொண்டார். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் அவருக்கு விசேஷித்த சன்மானங்கள் செய்து கௌரவப்பட்டமும் வழங்கினர். ஸஞ்சீவ பாபுவினிடத்து ராம்சந்துவே எல்லோரையும் விட அதிக அபிமானமுள்ளவரானார். வீரசிங்கு தனது காலத்தைத் தர்மமார்க்கத்தில் செலவழிப்பதானான். அவன் துணைவர்களும் அவனைப் பின்பற்றி நடந்தனர். இராம்தாஸ் ஸாவ்காரி காலஞ்சென்று விட்டான்.

வங்கதோஷபுரமும், ஸிங்பூர்ணேந்திரபுரமும் நன்கு பரிபாலிக்கப்பட்டு, பாரதநாட்டிற்கு அவ்விரு நகரங்களும் இருநேத்திரங்கள் போன்று ஜ்வலித்தன. இலவசக்கல்வி, கட்டாயப்படிப்பு, கைத்தொழில் சாதன விருத்திகள், பிரஜாஸௌக்கியம், சமூக ஊழியம், ஜனநிர்மாணம் ஆகிய பல சுப லக்ஷணங்களும் நாளுக்குநாள் வளர்ந்தோங்கின. ஸ்ரீமதி நயனதாரா மகாராணியார் பதிபக்தி பராயணையாய்த் தமது பர்த்தாவுடனும் வாழ்க்கை ரதத்தினை நன்கு நடத்தி, புத்திரவதியாய், பாக்கியசாலினியாய், கற்பரசிகளின் நாயகமாய் விளங்கினார். பூர்ணேந்திரர் தமது அருமைக்காதலியுடனும் தமது பெரியோர்களுடனும் இருந்து பிரபஞ்ச தர்மங்களைச் செய்வதானார். பூர்ணேந்திரரின் வெற்றியாகிய இந்த இனித்திடும் காதற்கதை எல்லா நாடுகளிலும் பரவின. சொன்னால் சொல்லட்டும் என்று மனோசாந்திபெறும் ஸத்தியவந்தர்கட்கு பரமதயாநிதியாகிய கடவுள் தரும் பரிசு இவ்விதமாகவே இருக்கும். நம் காதலர்கள் என்றும் வாழ்க. பிரபஞ்சமே காதல் மயமாக விளங்குக. தம்பதிகளின் அந்நியோன்னியம் எங்குமே பெருகி ஓங்குக. அன்னார்தம் காதல் மாளிகையும் ஸந்தானதரிசன அருள் பெற்றிடுக. பரிசுத்தமான காதல் எவ்விதத்தும் வெற்றிபெறுமென்பது திண்ணம். அந்த வெற்றியின் அதிர்ஷ்டம் அனைவருக்கும் சித்திப்பதாக. நமது வாசகர்கட்கும் அது கிடைப்பதாக. மங்களம்.

முற்றிற்று.

☞ ஸ்ரீமான் U. N. இராமசாமி நாயுடவர்களின் சிறு கதையை ஆதாரமாகக்கொண்டு துப்பறியும் நாவலாக இது இயற்றப்பட்டது.

திலகவதி என்ற பெண்மணி தன்னை இச்சித்தவனுக்கும் தன் பர்த்தாவுக்கும் திருப்தி தந்து தன் மானத்தையும் காத்துக்கொண்ட விநோதம்.

அரசனுக்கு நீதியும், குருவுக்கு விவேகமும், மந்திரிக்கு ஆலோசனையும், மீன் குஞ்சுக்கு நீச்சும், பதிவிரதைகட்குக் கற்பின் மேன்மையும் சொல்பவருண்டா? இராஜநீதி நிபுணத்துவம் வாய்ந்த விரராகவரது அரசாக்ஷியின் மேன்மையைக் கேட்கவும் வேண்டுமா? அவரது ஆளுகையில் திரிசிரபுரம் மிக்க சோபிதமான நிலையில் விளங்கிற்று. இத்துணைக் கீர்த்திப் பிரதாப கெம்பீர நிராயிருந்த போதிலும், உலக வழக்கத்தின்படி ஒன்றிருந்தால் இன்னொன்றில்லை என்றவாறு ஸந்தானபாக்கியமின்றி அவரது காலம் மனோவேதனையுடனும் சென்றுகொண்டிருந்தது. இராஜ்யத்து அமைச்சர்பிரானுக்கும் மக்கட்பேரில்லை. கடவுள் மனுஷ்யனுக்கு ஸர்வ சுதந்தரங்களையும் தந்துவிட்டிருப்பினும், மரணத்தையும், ஸந்தான பாக்கிய மளித்தலையும், திருமணம் கைகூடச் செய்வித்தலையும் தம் வசத்தில் வைத்துக்கொண்டு நிற்கின்றார். அதற்கென்று அவர் குறித்துள்ள ஆகுநாள் வந்தாலன்றி எதுவும் முடியா. நெடுங்காலம் போனபின்னர், அதற்கென்றுள்ள வேளையும் வந்து, நல்ல சுப முகூர்த்தத்தில் அரச பத்தினியும், மந்திரியின் மனைவியும் முறையே ஒவ்வொரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். இராஜ குமாரனுக்கு ஜெயராமனென்றும், மந்திரி குமாரனுக்கு சுகுமார சந்திரன் என்றும் பெயரிட்டு வளர்த்து, ஒரே குருவின்கீழ் சகல வித்தைகளையும் பயிற்றுவித்து, வயது பதினாறு கழிந்தவுடன் சுப முகூர்த்தம் ஒன்று நிச்சயம் செய்து, இளவரசு பட்டம் புத்திரர்களுக்குக் கட்டுவித்து மகிழ்ச்சி குலாவ எண்ணங்கொண்டு புத்திரர்களைத் தருவித்துத் தமது கருத்தை வெளியிட்டனர். அரச—மந்திரி குமாரர்கள் இருவரும் ஏகமனத்தினராய், உலக விஷயங்கள் யாவும் நன்குணராமல் எவ்விதம் ராஜ்யபரிபாலனம் செய்வது? சிறிதுகாலம் தேச சஞ்சாரத்திற்கு உத்தரவு கொடுத்தால் அவ்விதமே சென்று, ஆங்காங்குள்ள ஆச்சரிய விசேஷங்களை யெல்லாம் கவனித்துப் பிறகு தங்களின் எண்ணத்திற்கு உடன்படுவோமென்றனர். பெற்றோர்கள் அதை அங்கீகரிக்காமற் போகவே இராஜ குமாரன் பின்வருமாறு கூறினான்.

என் பிரிய தந்தையே! தேச ஸஞ்சாரத்தால் அநேக ஆச்சரிய காமான விஷயங்கள் மனிதர்களுக்குத் தெரியவரும். பல தேச நடத்தைகளும், அங்காங்குள்ள மனிதர்களின் குணங்களும், நீர், நிலம் முதலிய பூமி சமுத்திரங்களின் தன்மையும் நன்றாய் அறியலாம். அநேகத் தேசங்களைப் பார்த்து வருவதனால் ஆயுள் விருத்திப்படும். பிரயாணத்தினால் உண்டாகும் சந்தோஷமும் அந்தந்தப் பிரதேசங்களிலிருக்கும் விசித்திரங்களைப் பார்ப்பதனால் ஆநந்தமும் மனதில் நிறைந்து அறிவைப்பெருக்கும். சவுக்கியமும் அதிகரிக்கும். புத்திசாலியாயும், ஆரோக்கியவானாயும், சுகுணமுள்ளவனாயும், ஸாந்த ரூபியாயுமுள்ள ஒரு மனிதன் தேச ஸஞ்சாரியாவானாகில், அவனுக்குத் தோன்றாத எண்ணங்களெல்லாம் தோன்றும். "தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்றபடி ஒவ்வொரு தேசத்திலும் வெவ்வேறு பாஷைகள் வழங்கும். அவ்வத்தேசத்தார்களின் ஆசார ஸ்நான பானாதிகளைக் கண்டால் நமக்கு ஆச்சரியமுண்டாகின்றது. பகவானுடைய செயல்களையும், லோகசிருஷ்டியின் அற்புதங்களையும், அதன் சவுந்தரியங்களையும், இன்னும் நாம் கண்டறியக் கூடாததாயிருக்கின்ற பற்பல விஷயங்களையும் காணுலாம். ஆதலின் உலக அறிவு பெற்றுத் திரும்பி வரும்படி எங்களை எவ்விதத்திலும் அனுப்பவேண்டுமென்று இராஜகுமாரன் கூறி ஒரே பிடிவாதமாய் நின்றான்.

மந்திரி குமாரனோ தங்களை எவ்விதமும் அனுப்பவேண்டுமென்றும், பிரதியொரு மனிதனும் தேச ஸஞ்சாரம் செய்யச் சென்று, அங்காங்குள்ள ஆச்சரிய வஸ்துக்களையும், விசேஷங்களையும், சாசனக்கற்களையும், இந்த ஊருக்கு இந்தப் பெயர் என் உண்டாயிற்றென்பதையும், அதன் பூர்விக நிலைமையையும், தற்கால ஸ்திதியினையும், எவர்கள் அரசு புரிந்த இடம்—என்னென்ன அதிசயங்கள் உண்டென்பதையும், இவைகள் முதலான விஷயங்களையும் கேள்விகள் கேட்டும், பார்த்தும், ஸ்வதேசத்திற்குத் திரும்பியதும் அவற்றைத் தமது ஜனங்களுக்குப் புஸ்தக ரூபமாய் வெளியிட்டும், பத்திரிகைகளில் பிரசுரம் செய்தும், சுய நலத்தைப் பாராமல் பரோபகாரத்தில் திருஷ்டி வைப்பதும் உத்தமர்களின் லக்ஷணமாதலின், தங்களுடைய மனோரதத்தைக் கெடுக்கவொண்ணாதெனமிகவும் வேண்டினான்.

கடைசியில் பெற்றோர்களும் மக்களின் விருப்பத்திற்கு இசைந்தனர். ஆயினும் அவர்களின் பிரயாணகாலத்தில் அவர்களுக்கு ஒரு புத்திமதியைக் கூறினர். இவ்வுலகத்தில் பரஸ்பரம் ஒருவரையொருவர் நம்பித்தான் காரியங்கள் நடக்கவேண்டியிருக்கிறது. நம்பாமலும் தீராது தான். நம்பவுங் கூடாதுதான். மோசம் போனேன்—என்று புலம்புவோரேல்லாம் பிறரை நம்பிக்

கெட்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். தன்னை யொருவன் பூரணமாக எல்லாக் காரியத்துக்கும் நம்பிவிட் டிருக்கிறானென்று தெரிந்துகொண்டவன், வெளிக்கு மட்டில் அன்புநட்புகாண்பித்து அவனிடம் இருப்பனவற்றையெல்லாம் கவர்ந்துகொள்ள அது தான் சமயமென்று நினைக்கிறான். அதற்கேற்பத் தித்திப்பான வார்த்தைகளைக் கொட்டி யளந்து, தான் இச்சித்த பொருள்களைக் கவர்ந்துகொள்கிறான். தன் காரியம் முடிந்ததும் மெதுவாக விலகப் பார்க்கிறான். அதற்கேதாவது ஒரு காரணத்தை யுண்டாக்கிக் கொள்கிறான். சுயநலம் முற்றிய இக்காலத்தில் பிறரை நம்பியிருப்பவனுக்கு ஒரு காரியமும் கைகூடாது. பிறரை வேண்டியவர்களாய் நினைத்து நீ தைரியத்துடனிருந்தால், தக்க சமயத்தில் —நீ எண்ணி யிருந்தது வீண்—என அவர்கள் விளக்கி விடுவார்கள். நீ அவர்களை நம்பியிருந்து ஏமாற்றமடைந்து மனந் தவித்துப் பிறகு கடவுளருளால் துன்பம் நீங்கப்பெற்று நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டால், அப்பழய போலி நண்பர்களும் பந்துக்களும் சிறிதும் கூச்சமின்றி ஏதேதோ பல காரணங்களைக் கூறிக்கொண்டு உன்னுடன் வலிய உறவாடப் பிரியப்படுவார்கள். ஏன் தெரியுமா? இன்னும் கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு ஓடத்தான். மோசக் களஞ்சியமான இவ்வுலகில் கடவுளைத் தவிர உனக்கு வேறு ஒருவரும் துணையில்லை யென்று எண்ணியிருந்தாலல்லது, மற்றவர்களை நம்பியிருந்தால், உன்னைப்போல் பரதேசியாவோர் ஒருவருமிரார். இவ்வுலகில் எல்லோரும் அவரவர் காரியங்களிற் கண்ணாயிருப்பவராம். உனக்கு உதவி புரிவதில் அவர்களுக்கு ஏதாவது ஊதியம் லாபம் இருந்தாலன்றிச் சும்மா உனக்கு ஒத்தாசை புரிய—முன்வரமாட்டார்கள். தன் காரியங்கட்காகப் பிறரை வீணே நம்பி வியர்த்தமாக எதிர்பார்த்திருப்பவனைப் போன்ற பேதை கிடையவே கிடையாது.

உங்களின் பிரயாணத்தில் நீங்கள் பிறரை நம்பும்படியாகலாம். அது பொருட்டே உங்களுக்கு இந்தப் புத்திமதியை நவின்றோம். சுகமாய்ப் போய் சீக்கிரம் திரும்புங்களென்று விடைகொடுத்தனுப்பினர். இவர்களும் அவர்களை வணங்கி அநுமதி பெற்றுக்கொண்டு தேசாடனம் செய்யப் புறப்பட்டார்கள். பிரயாணம் என்று வீட்டைவிட்டு வெளியில் புறப்பட்டுவிட்டால் எவ்வளவு பணம் இருந்தாலும் போதுமானதாயிருப்பதில்லை. வீட்டைவிட்டதும் பசியும் தாகமும் அதிகமாய்விடுகிறது. விலைக்குப் பெற்று எவ்வளவு உண்டாலும் தன் வீட்டில் நாணமற்றுக் கேட்டுப் புசித்த திருப்தி இருப்பதில்லை. மேலும் போனஇடத்திலோ எனக்கென்ன வாங்கி வந்தீர்களென்றும் கேட்பார்கள். அதற்கும் கையில் பக்ஷணங்கள் பழம் முதலிய மூட்டையோடும் போகவேண்டும். வெறுமனே வீட்டிலிருந்தால் செலவுக ளொன்றுமில்லை. செலவுக்

குப் பார்த்துப் பிரயாணத்தை நிறுத்த முடிகிறதா? செலவு செய்யவேண்டிய சமயங்களில் செய்தேதான் ஆகவேண்டியிருக்கிறது. இதுநிற்க, ஜெயராமன் என்ற அரசகுமாரனும், சுகுமார சந்திரன் என்னும் மந்திரிகுமாரனும், உயிரொன்று உடலிரண்டாய் அநேக தேசங்களைச் சுற்றிக்கொண்டு காம்யதேசம் என்னும் நகரத்தில் வந்து ஒரு வீட்டில் தாமதித்தார்கள்.

மறுநாள் இராஜகுமாரனை வீட்டில் இருக்கச் செய்து மந்திரிகுமாரன் கடைவீதிக்குச் சென்றிருக்கும் சமயத்தில், அங்கு வெகுநாளாய்ப் புத்திரப் பேறில்லாமல் அநேக வருடகாலம் கடவுளைக் குறித்து வேண்டி நின்று, இறுதியில் சகலவித லக்ஷணங்களுடன் கூடிய ஓர் புதல்வியைப் பெற்றெடுத்து, வயது பன்னிரண்டாகியும் தகுந்த மணவாளன் கிடையாதது பற்றி எங்கும் தேடித் திரிந்துவரும் ஓர் கனவான், இம்மந்திரிகுமாரனைப் பார்த்து, நீவிர் யார்? இருப்பிடம் எது? என்று கேட்க, மந்திரிகுமாரனும் தாங்கள் தேசஸஞ்சாரமாக நகர்விட்டுப் புறப்பட்ட விவரங்களைத் தெரிவிக்க, அக்கனவான் தமது புதல்வியை மணக்கும்படி மந்திரிகுமாரனை வேண்டித் தமது எண்ணத்தை வெளியிட, அதற்கு மந்திரிகுமாரன், தன் நண்பனாகிய இராஜகுமாரனிடம் கூறி அவன் சம்மதத்தின் பேரில் பதில் அறிவிப்பதாய்ச் சொல்லி, அக்கனவானுடன் தாங்கள் இறங்கியுள்ள இல்லத்திற்குச்சென்று, ஜெயராமனுக்கு விஷயங்களை அறிவித்து அவனது சம்மதத்தின் பேரில், அக்கனவானின் குமாரத்தியாகிய திலகவதி என்பவளை மந்திரிகுமாரனாகிய சுகுமாரசந்திரனுக்குப் பாணிக்கிரகணம் செய்வதாய் நிச்சயம் செய்து சுபமுகூர்த்தத்தில் விவாகமும் நடந்தது. பிறகு அக்கனவானிடம் விடைபெற்று, புஷ்பவதியானதின் பேரில் பெண்ணை யழைத்துப் போவதாய்ச் சொல்லி அங்கேயே விட்டுவிட்டு இருவரும் புறப்பட்டுச் சென்றனர். சுமார் ஐந்தாறு வருடங்கள் வரையில் அநேக தேசங்களைச் சுற்றிக்கொண்டு மறுபடியும் இந்தக் காம்யதேசம் வந்து சேர்ந்தார்கள். ஆனால் தாங்கள் முன்பு வந்த தேசமென்றும், மந்திரி குமாரனுக்கு விவாகம் நடந்த இடம் இதுவென்றும் ஞாபகமே யில்லை.

இதற்குள் திலகவதியென்பவள் புஷ்பவதியாகி, தன் பிராணநாதரை எப்போது பார்ப்போம் என்ற மனோவியாகூலத்தினால் தினசரி நதிக்குச் சென்று நீராடி அங்குள்ள ஓர், வரலக்ஷ்மி கோயிலுக்குச் சென்று பூஜையை முடித்துக்கொண்டு வருகிற வழக்கம் போல், அன்றையதினமும் ஆற்றங்கரைக்குச் செல்லுங்கால், மந்திரி குமாரனை விட்டுப்பிரிந்து தனியே மாடியின்மீது உலாத்திக் கொண்டிருந்த அரசகுமாரன் இவ்வடிவழகியை வெகுதூரம் தன் கண்ணுக்கு மறைகிற வரையில் இமைகொட்டாமல் பார்த்துக்

கொண்டிருந்த பிறகு சும்மாயிருந்து விட்டான். வெளியே சென்றிருந்த மந்திரிகுமாரன் வந்து, இராஜகுமாரன் மனம் வேறு பட்டிருப்பதை யறிந்து, அவனருகில் சென்று தினம்போலில்லாமல் இன்று ஒரு மாதிரியா யிருக்கக் காரணம் யாதுயென்றும், அவ்வித வேறுபாட்டிற்குள்ள குறைகள் எவ்விதமாயினும் தீர்த்துக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேனென்றும் வற்புறுத்திக் கேட்கலாயினன். அச்சமயத்தில் மந்திரி குமாரனைப் பார்த்து இராஜ குமாரன், 'உன்னுடன் சொல்லாதவார்த்தைகளும் உண்டா கேள். பூர்ணசந்திரனை நிகர்த்த முகவிலாசமும், மூன்றாம் பிறையினைப் பழித்த புருவ விலாசமும், எள்ளிளம்பூவையும் சண்பகப் பூவையும் பழித்த நாசியினையும், கண்ணாடியை இகழ்ந்த கன்னத்தையும், வள்ளக்கொடியோன் காதினையும், வலம்புரிச் சங்கத்தை நிகர்த்த கண்டத்தினையும், நீலோத்பலத்தைப் பின்னிடச் செய்யும் கண்களையும், கரிய மணலோ, கொடிய பாசியோ, கரியமேகமோ, மைக்கொத்தோ, யுகாந்த காலயிருளோ வென்று சந்தேகிக்கும்படியான அழகிய கூந்தலையும், அகன்ற மார்பினையும், புஷ்பச் செண்டோவென்று ஐயுறும்படியான கனக ஸ்தனங்களையும், ஆலிலைபோன்ற வயிற்றினையும், நீர்சுழிபோன்ற நாபியினையும், மல்லிகைப்புஷ்பம் போன்ற கைகளையும், மருள் பிஞ்சுபோன்ற விரல்களையும், வாழைமரமோ யானைத்துதிக்கையோவென்று ஊகிக்கும்படியான அழகிய தொடையினையும், ஆமையையொத்த புறங்காலினையுமுடைய கன்னிகை மாதுென்று என் கண்ணெதிர்ப்பட்டு மனதைக் கவர்ந்துகொண்டு போயினள். அவள் யாரோ, எங்குறைபுவளோ; அவள் மணவாளனெவனோ? அவளைக் கண்டது முதல் என்னுயிர் என்னிடத்திலில்லை. இதற்கு என்ன செய்வது என்று ஐயாம் சொன்னதைக்கேட்டு, மந்திரி குமாரன் அவளை என் கண்ணெதிரில் ஒருதடவை காண்பித்தால் போதும், அவள் எப்பேர்ப்பட்டவளானாலும் சரி,அவ்வணங்கைத் தம்மிடம் சேர்ப்பிக்க நானாயிற்று என்றுகூறி, ஸ்நானபானாதிகள் செய்யச்சொல்லி உண்டு சுகித்திருந்தார்கள். மறுநாட்காலையில் இருவரும் மாடியின்மீது நின்றிருக்கையிலேயே அச்சுந்தரியானவள் வழக்கம்போல் குடத்துடன் ஆற்றங்கரைக்குச் சென்றாள். அதைப் பார்த்து அரசகுமாரன் இவள்தான் நான் சோன்ன ரமணி! அவள் நினைவே யானேன். என்ன நடை! என்ன உடை! என்ன ஒய்யாரம்! என்ன அழகு! என்ன சொகுசு! யாதொரு ஆபரணமுமில்லாமலே இவ்வளவு வடிவழகேற்பட வேண்டுமானால் நல்லபூஷணங்களமைந்திருந்தால் எப்படி யிருக்கவேண்டும், என்று சொன்னான். மந்திரி குமாரன் தாங்கள் இங்கேயே இருங்கள். நான் போய்ப் பார்த்து வருகிறேன் என்றும் சொல்லி மாடியினின்றும் கிழிறங்கி அவளைப் பின்தொடர்ந்து சென்றான். இராஜகுமாரன் இங்கே ஏக்கம் கொண்டிருந்தான்.



" இவள்தான் நான் சொன்ன ரமணி! அவள் நினைவே யானேன் "

(பக்கம்—65)

2.—மனைவி—உயிர் நண்பன்—இதில் எது பெரிது?

மந்திரி குமாரன் கடைசியாக ஆற்றங்கரைபோய்ச் சேர்ந்தான். அவன் தொடர்ந்து சென்ற பெண்ணும் ஆற்றிலிறங்கி தனது ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு வழக்கம்போல் லக்ஷ்மீ கோயிலுக்குச் சென்று பூஜைமுதலியன நடத்தித் தனது ஆர்வலன் சௌக்கியமாகத் தன்னை வந்தடைய வேண்டுமென்று பிரார்த்தித்த வண்ணம் இல்லம் நோக்கி நடப்பாளாயினள். மந்திரி குமாரன் அதுவே தமக்குத் தக்க தருணமெனக் கொண்டு அப்பெண்மணியைப் பார்த்து அம்மா! நான் இவ்வூருக்குப் புதியவன். வசதியான இடம் ஒன்று தேவையிருக்கிறது. அதற்குத் தங்களின் சகாயத்தை ஆசிக்கிறேன். தங்களைப் பார்த்ததில் தனவானுடைய புத்திரிபோல் காணப்பட்டதால் என் கண்ணெதிர்ப்பட்ட மற்ற எல்லோரையும் கவனியாமல் தங்களையே மனதில் குறிப்பிட்டுக்கொண்டு உதவி கேட்கலானேன். தாங்கள் யார், எங்கிருப்பது, எத்தனை குழந்தைகள் இவ்விவரங்களை நான் அறிந்து கொள்வதற்குக் கொஞ்சம் தயவு செய்யவேண்டுமென்றான். அவனுடைய வாக்சாதுர்ய விசேஷத்திற்கு அகமகிழ்ந்தவளாய்த் தன் மனத்தையும் அவன்பாற் செல்ல விடுத்து பிரேம பூர்வகமாய்த் தனது வரலாறுகளைத் தெரிவிக்கவும், அதைக் கேட்ட அமைச்ச குமாரன் திடுக்கிட்டு, இதேது நமது மனைவிபோல் காணப்படுகிறதே என்று ஆலோசித்தவனாய் அப்பெண்ணின் தந்தையைப் பார்க்க விருப்பங்கொண்டு அவளுடன் வீட்டிற்குச்சென்றான். போய்க்கொண்டிருக்கும்போதே எதிர்ப்பட்ட செட்டியானவன் இந்த மந்திரி குமாரனைப் பார்த்துத் திகைத்து இவன் யார் நமது மருமகன்போல் காண்கிறதே என்று சிந்தித்துக் கொண்டு இவனைச் சந்திக்க, இளமையில் முகம் மாறுதல்போல் வார்த்திபகாலத்தில் வேறுபடுதல் இல்லையாதலின், மந்திரி குமாரன் செட்டியாரைக் கண்ட தக்ஷணம் அடையாளம் கண்டுபிடித்து விட்டான். பிறகு பரஸ்பரம் ஸம்பாஷணைகள் நடந்ததில், இதுகாறும் தன்னுடன் பேசிக்கொண்டு தொடர்ந்து வந்தவர் தனது பிராணநாயகரென்று அறிந்து செட்டிப்பெண் அதிக நாணத்துடன் உட்சென்று விட்டாள். மந்திரி குமாரன் தன் கவலையை உள்ளடக்கிக்கொண்டு செட்டியைப்பார்த்து மாமா! பூர்வ புண்ணியம் பலிக்கப் பூரித்த யான் அதனிற் குறைவு ஒன்று கண்டு வருந்துகிறேன். தங்களை இப்படி ஆச்சரியப்படும் படியாக சந்திக்க வாய்க்குமென்று நான் எண்ணவில்லை. தங்கள் பெண் முன்னிலும் அதிக ரூபலாவண்யங்கொண்டு சோபிக்கின்றாள். இவ்வாறாக ஒரு சந்திப்பு அமையுமேல் சதிபதிகள் இருவருமாக வரலக்ஷ்மி ஆலயத்திற்கு வந்து

போகிறோமென்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்தேன். அந்தப்படியே இன்று மாலை போய்வரத் தங்கள் குமார்த்தியைத் தயாராயிருக்கும்படி தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த முதலாவது பிரார்த்தனையை முடித்துக்கொண்டு காலையில் வந்து சேருகிறோம். அப்பால் சாந்தி முதலிய விசேஷங்களை யோசித்துக் கொள்ளலாம். இது செய்தியை என்னுடன் வந்திருக்கிற அரச குமாரனுக்குத் தெரிவித்துவிட்டு,மத்தியானத்திற்குமேல் இவ்விடம் வந்து சேருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

அங்கே அரசகுமாரன் இவன் வருகையை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தவனாயிருந்தான். மந்திரி குமாரனைக் கண்டதும் தனது ஆத்திரம் பொறுக்கமுடியாமல் காயா பழமா என்று கேட்டான். மந்திரி குமாரன் பழம் என்று தெரிவித்து விட்டு இரவுக்கு இதே இடத்திற்கு அப்பெண்மணியை அழைத்து வருகிறேன். அதற்கான காரியங்களைச் செய்யவேண்டியிருப்பதால் எனக்கு விடை கொடு. காலையதினம் ஆற்றங்கரையோரம் உள்ள ஆலவிருக்ஷத்திற்கடியில் நீ என்னைச் சந்திக்க வா என்று தெரிவித்துவிட்டுத் திரும்பி விட்டான்.

உண்மையாகவே இராஜகுமாரனுக் கருகில் இருப்பதற்கு மந்திரி குமாரனின் கால்கள் நிலைகொள்ளவில்லை. என்னவோ ஒருவித ஆத்திரமும், சோகமும் மந்திரி குமாரனுக்கு உண்டாயிருந்தது. ஆகவே, உடனே திரும்பி ஆற்றங்கரை, வந்துசேர்ந்து யோசிக்கலானான். இதை எப்படி சமாதானமாய் முடிக்கிறது? எனக்கோ இராஜகுமாரனைப்போல அவளைப் பார்த்ததும் காதல் தோன்றிவிட்டது. அப்படியிருந்தும் அரசனுக்குத் துரோகம்செய்யக்கூடாதென்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன். அப்பால் எனது மனைவி என்பதாகவே ஏற்பட்டுப் போயிற்று. பிள்ளையைப் பெறுகின்றவளும், பிறந்த பிள்ளையைக் காப்பாற்றுபவளும், அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருபவளும், வீட்டை அலங்கரிப்பவளுமான மனைவிக்கும் லக்ஷ்மிதேவிக்கும் யாதொரு பேதமுமில்லை. அத்தகைய மேன்மையில், மனைவி—என்ற பதவியில் விளங்குகிற இவளை எப்படி அரசனிடம் ஒப்புவிப்பேன்? அவள்தான் அதற்கு எப்படி இணங்குவாள்? நான்தான் அதை அவளிடம் எப்படிச் சொல்லுகிறது? அப்படி அவளை வற்புறுத்தி உடன்படச் செய்து அரசனுக்குக் கொடுத்தபோதிலும்,ஒருவிதத்தில் அவளைக் கெடுத்த துரோகியாகவும்,இன்னொரு விதத்தில் அரசனே பின்னொரு காலத்தில் தனக்குத் தெரிந்துபோய் ஐயோ! நண்பனின் மனைவியை அபகரித்த சிநேகத் துரோகியானேமே என்று வருந்தும்வாறாக அவனுக்கு சண்டாளத்வத்தை யுண்டாக்கிய பாதகனாகவும், பின்னும் இப்பெண்ணின் பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டிற்கும்

அழியாத அபகீர்த்தி தேடிவைக்கிற நாசகாலனாகவும் ஆகிறேன். இப்படிச் செய்யாவிடிலோ அரசனுக்கு நான் செய்த சத்தியம் தவறுகிறது. மறுபடியும் இரண்டாம் முறை அவனைச் சந்தித்து அவனது ஆசைத்தீயைப் பின்னும் அதிகப் படுத்திவிட்டு வந்திருக்கிறேன். ஒருக்கால் என் மனைவி என்று தெரிவித்து சமாதானப் படுத்தலாமென்றாலோ அதுவும் நல்ல உபாயமாகக் காணப்படவில்லை. அரசன் நம்முடன் கபடமின்றி உள்ளன்புடன் இதுகாறும் நேசித்து வந்தது எப்படியும் நீங்கிவிடும். அடிக்கடி வெளிச் செல்ல வேண்டியிருக்கிற நான் எனது மனைவியை அரசனிடம் விட்டுச் செல்வதில், எனது பொல்லாத மனம் அவன்மீதும், ஒருக்கால் மனைவியின் கற்பு மீதும் சம்சயப்படும்படியாக பின்னொரு நாளில் நேரிட்டுவிடும். அதனாலும் நட்பு முறிந்து விடுகிறது. என் மனைவி என்று சொன்ன மாத்திரத்திலேயே அவன் ஆவல் என்னவோ நீங்கிவிடப் போகிறதில்லை. நானில்லாத வேளைகளில் தனது அடக்க வொண்ணாக் காதலைத் தீர்த்துக்கொள்ளப் பல யுக்திகள் முயன்றாலும் முயலுவான். காமத்திற்குக் கண் இல்லை. தாம் இச்சித்த காரிகையை எவ்விதமும் வசப்படுத்த முயலுவதில் ஆடவர்கள் பொல்லாதவர்கள். அவர்களுக்கு அதுவே பிரவர்த்தி. இதற்கு என்ன செய்கிறதென்று ஆலோசிக்கிறான், ஆலோசிக்கிறான். ஒன்றும் புலப்படவில்லை. இவர்கள் போகும் கதியென்ன? இதற்கு ஆலோசனை யாது?

3. திலகவதியின் யோசனை.

வெகு நேரத்திற்கப்பால் மந்திரி குமாரன் கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டுத் தனது மாமனார் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான். வீட்டில் யாவும் சித்தமாய் இருந்தன. சாப்பிடும்படி வேண்டினார்கள். இவனுக்கு எதிலும் மனஞ் செல்லவில்லை. ஒப்புக்கு சாப்பிட்டுவிட்டுத் தயாரானான். அவனது மனைவியும் அதிக நாணத்துடன் பின் சென்றாள். இருவரும் ஆற்றிற்குச் சமீபம் வந்தனர். அங்கோர் ஆலவிருக்ஷம், அதிலோர் கயிற்றைக் கட்டித் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்ளப் பிரயத்தனித்தான் மந்திரி குமாரன். இந்தக் காக்ஷியைக் காணவும் அவனது மனைவி திகைத்து அலறி அழுது அப்படிச் செய்யாதிருக்க வேண்டினாள். இவன் தனது கஷ்டங்களையெல்லாம் விவரமாகத் தெரிவித்து அதற்குமுடிவு தனக்குச் தற்கொலையைத்தவிர வேறுதோன்றவில்லையென்று பிரலாபித்தான்.

யோசனை என்பது எப்போதுமே கஷ்டப்பட்டு உண்டாகும் பொருளல்ல. தன்னையும் அறியாமலே திடீரென்று தோன்றுகிற ஒரு அற்புதமான சக்தி. தற்காலத்தில் நாம் காணுகிற ஒவ்வோர் அற்புதங்களும் அந்தந்த சமயத்தில் அதைக் கண்டு

பிடித்தவர்களுக்குத் தற்செயலாக உண்டான யோசனைகளினால் ஆனதேயன்றி வேறல்ல. சிற்சில காலங்களில் மூடர்களுக்குக் கூட இந்த யோசனைகள் உண்டாகி அதனால் அவர்கள் பின்னொரு காலத்தில் பிரபலகீர்த்தி சிறந்தவர்களாகிறார்கள். இப்படிப் போலத் தான் ஞானம் என்கிற ஒளியும் திடீரென்றே வீசப்படுகின்றது. அதை யடைவதற்காகக் கானகத்திற்குச் செல்லுகிறவர்கள் சுத்த பைத்தியக்காரர்கள். அப்படி வனாந்தரங்களிலே வசித்தவர்களெல்லாம் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவ்விடத்தை நாடாமல், தாங்கள் பெற்றுக்கொண்டுவிட்ட ஞானத்தை அப்பியஸிக்கத் தருந்த சமாதான மனோரம்மிய பூமி ஆரண்யந்தானென்று அவ்விடத்துக்குச் சென்றார்களென்பதாக நாம் பாவிக்கவேண்டும். இராஜலோகத்திலேயே மகிழ்ந்திருந்த விஸ்வாமித்திரன் திடீரென்று இராஜரிஷியான தெவ்வாறு? அது அந்த சந்தர்ப்பத்திலே சட்டென்று தோன்றிய யோசனைபால் தான். சில தருணங்களில் நாம் நினைத்தபோது அந்த யோசனை தோன்றாமல், சில தினங்கள் கழித்தோ, மாதங்களுக்கு அப்பாலோ, நாம் எதிர்பாராத வேளையில் நமது நினைவுக்கு வருவதுமுண்டு. சில காலங்களில் உடனுக்குடன் வெளிப்படுவதுங் கண்டிருக்கிறோம். விசேஷமாக மனப்பயிற்சி யுள்ளவர்களுக்கு இந்த சம்பத்து அரிதாகக் கைகூடி வருகின்றது. இதுபோலவே மந்திரி குமாரனின் மனைவிக்கும் இப்போது ஒரு யோசனை சட்டென்று பிறந்தது. உடனே அதை ஆதாரமாகத் தன் மனத்திற்குள் வைத்துக் கொண்டு, எந்தெந்த வழிகளிலெல்லாம் அதைச் செல்லவிட்டு ஒழுங்குபடுத்தித் திருத்த வேண்டுமோ அவ்வாறாக வெல்லாம் முயன்று; வீடு கட்டத் தொடங்குகிறவன் முதல்முதலாகக் கட்டவேண்டியதற்கு ஒரு குறிப்புத் தயார் செய்துகொள்வதுபோல, இவளும் தன் மனத்தில் ஒரு விதமான யோசனைக் கோட்டையைக் கட்டிமுடித்துக்கொண்டு, அதன் பிரகாரம் செய்யவேண்டுமென்கிற மனோநிச்சயங்கொண்டவளாய்த் தன் கணவனை நோக்கிக் கூறுகிறாள்.

உலகத்திலே கூடைகூடையாகப் படித்தவர்களுடைய கதி எல்லாம் கடைசியில் இப்படித் தான். எவ்வளவோ அபாரமான காரியங்களை யெல்லாம் ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுவார்கள். இதுபோன்ற அற்ப விஷயங்களுக்கு ஆலோசனை தோன்றாமல் தத்தளிப்பார்கள்; அங்கலாய்ப்பார்கள். இதன் காரணம் என்னவென்றால், அவ்விதமான சந்தர்ப்பத்தில் அவர்கள் இது எப்படியப்பா முடியப்போகிறது என்று பின்வாங்கிக்கொண்டு தமது அரிய மனோதைரிய உற்சாகத்தைக் கைவிட்டுவிடுவதினால், சோம்பலானது அவர்களைச் சூழ்ந்துகொண்டு மனோசக்தியின் ஒளியைக் குன்றச் செய்து விடுவதில் அவர்கள் அவ்விதமாகி விடுகிறார்கள். ஆபத்து காலத்தில் பின்வாங்காமல் துணிவுடன் முன்னின்று

அந்நேரத்தில்,எந்தெந்த வித உபாயங்களால் தான் தப்புவித்தல் சாத்தியமோ அதை உற்சாக முள்ள மனத்தோடு ஆராய்ச்சி செய்து அவ்விபத்தினின்றும் தன்னை மீட்பித்துக் கொள்ள மார்க்கந் தேடுகிறவனைத் தான் சரியான தைரிய குணமுள்ளவனென்று சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட தைரியத்தைக் காண்பித்துப் போர் செய்ய வேண்டிய இந்த சந்தர்ப்பத்திலே, நீங்கள் பின்வாங்கினதானது அது உங்களை இப்படி அங்கலாய்க்கச் செய்து கடைசியாக கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு இறந்துவிடும்படியான முடிவுக்குக் கொண்டுவந்து விட்டது.

இவ்விதமாகவே எந்தண்டை பார்த்தாலும் வழி கிடைக்காமல் தத்தளிக்கும்படியான காரியங்கள் பல உலகத்திலே நடக்கின்றன. தன் தாயாரால் தன் மனைவி படுகிற கஷ்டங்களையும் சிறுமைகளையும் புருஷன் உள்ளபடியே அறிந்து கொண்டுதானிருக்கிறான். ஆனால் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரம் இன்னதென்று தோன்றாமல் பரிதபிக்கிறான். ஏன் அப்படிச் செய்கிறாயென்று தாயாரையும் கேட்கப்படாது. அழுது புலம்பும் தன் மனைவியின் பரிதாபமும் சகிக்கொணாததாகிறது. இன்னும் தாய் கெட்டவளாயிருந்தால் அவள் மனத்திருப்திக்காக மனைவியை அடிக்கும்படியாகவும்,அவள்வார்த்தைக்கு உட்பட்டுத் தன் மனைவி இருக்கையிலேயே மற்றொரு விவாகம் செய்து கொள்ளும்படியும் நேர்ந்து போகின்றது. இதற்கு எந்தப் பக்கம் போனாலும் கலகம் பிறவாமல் முடிவு தோன்றுவதாகக் காணோம். இப்படிப்பட்ட அவஸ்தையே இரண்டாவது விவாகம் செய்து கொண்டவனுக்கும் உண்டாகின்றது. தன் முதல்மனைவியின் மக்கள் தன் இளைய மனைவியால் படாதபாடு படுகிறார்கள் என்பதை அவன் உள்ளூர உணர்ந்தவனேதான். ஆனால் அதைப்பற்றித் தன் இளைய மனைவியிடம் கேட்டாலோ அவளுடைய கோபத்திற்கு நடுங்க வேண்டியதாகிறது. அன்றியும் தான் நம்பிக்கொண்டிருக்கிற சுகங்களும் அவளிடமிருந்து அடைதற்கின்றிப் போய்விடுகிறது. அப்படிக் கண்டித்தாலும் அதன் பயனாக மூத்த தாரத்தின் குழந்தைகள் முன்னிலும் அதிகமாக ரகசியத்தில் துன்பமடைகிறார்கள் என்பதைக் கேள்வியுற்று இதற்கு வழி வகையில்லையா வென்று புலம்புகிறான்.

இதுபோன்ற நிவர்த்திக்க மாளாத தொல்லை தான் உங்கட்கும் நேர்ந்துபோயிருக்கிறது. உலகத்திலே நட்பு சம்பாதித்துக் கொள்வது லேசான காரியமல்ல. அந்த நட்பைத் துண்டிக்க ஆயிரம் விபத்துகள் குறுக்கிடும். அதையெல்லாம் வென்று மீண்டோருக்குத்தான் நட்பினுயர்வு புலனாகும். உங்களுக்கு நேரிட்டிருக்கிற சங்கடமெல்லாம் நட்பினால் உண்டானதுதான். அந்த நட்பு கெடுவதிலும், உயிர் பிரிவதையே மேலானதாகக்கொண்ட

தங்களின் உத்தமமான தன்மை பாராட்டத்தக்கதாகும். இந்தச் செய்நிலை உள்ளபடி அரசகுமாரர் அறிவாராகில், நீங்கள் அவரை நேசிக்கும் அருமை இன்னவிதமாக இருக்கிறதென்று அவருக்குத் தெளிவுபட்டு, எவ்வளவோ ஆனந்த சந்தோஷத்தைக் கொடுப்பதற் கிடமாக அமைந்துவிடும்.

நான் தீர்க்கமாக யோசித்துப் பார்த்ததில் இராஜகுமாரர் மீது குற்றமிருப்பதாகத் தெரியவில்லை. தங்களுக்கு நான் சொந்தமுள்ளவள் என்பதை அவர் அறியார். அவரது குணசீலங்களை நான் எனக்கு விவாகம் நடந்த ஆரம்பத்திலேயே கண்டுகொண்டேன். இத்தனை பொல்லாப்பிற்கும் காரணகர்த்தா தாங்களேயாகிறீர்கள் என்று நான் சொல்லத் துணிவதற்கு நீங்கள் வருத்தமடையக்கூடாது.

நான் பிரவேசிக்கவேண்டிய அவசியமுண்டா வென்று யோசியாமல், ஒவ்வொரு காரியத்திலும் தலையிட்டுக்கொள்வது சிலருடைய வழக்கம். இதனால் அநந்தமான கெடுதிகள் விளைகின்றன. இராமன் என்பவன் குற்றம் செய்த தன் மனைவியை அடிப்பதற்காகப் பிரம்பைத் தேடும்போது சுந்தரம் என்பவன் இதோ இருக்கிறதென்று எடுத்துக் கொடுப்பது எத்தனை மதியீனம்? இதை மேற்கண்ட விஷயத்துக்கு உதாரணமாகக் கொள்ளலாம். இராமன் இந்த நிமிஷத்தில் மனைவியின்மீது கோபம் கொள்கிறான்; அடுத்த நிமிஷத்தில் அவனிடம் பிரியம் பாராட்டுவான் என்றறிந்து சுந்தரம் மௌனமாயிருந்தால் புத்திசாலியாவான். இராமனுக்கும், இராமன் மனைவிக்கும் அவனிடம் அப்பிரீதி ஜனிக்காது. அப்படியிராமல் சுந்தரம் பிரம்பையெடுத்துக் கொடுத்தால் இராமன் மனைவிக்கு என்றுமழியாத வெறுப்பு உண்டாகும். இராமனும் சாந்தவேளையில் சுந்தரத்தின் காரியத்தை யாலோசித்து அவனைத் துஷ்டனென்று மதிப்பான். ஆகவே, புத்திசாலிகள் தங்களுக்கு ஸம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடுகிறதில்லை. மற்றும் சிலர் எல்லோருக்கும் நல்லவராய்க் காணப்படவேண்டுமென்ற கருத்துடன் அவரவர்கட்குத் தக்கபடி இச்சகம் பேசுவார்கள். இதனால் அவர்களிடமுள்ள மதிப்பு குறைந்துபோம். பிறர் நம்முடைய யோசனையைக் கோரினாலன்றி நாமாக அவர்கட்கு ஆலோசனை சொல்வது அயுக்தம். அவ்விதம் ஆலோசனை சொல்வதிலும் எச்சரிக்கைவேண்டும். தன் மனைவியின் நிஷ்டூரங்கள் சகியாமல், கோபத்தில் தன் நண்பனுக்குக் கடிதம் எழுதி வேறு விவாகம் செய்து கொள்ளத் தனக்கு எண்ணமென்று தெரிவிக்கிறான். அப்படியே செய்து கொள்ளென்று அவனுக்குப் பதில் எழுதிவிட்டால், பிறகு அவனும் மனைவியும் சமாஸமாகி விடுகிறபோது, அவனுக்கு இந்த நண்பன் விரோதியாகிவிடுகிறான்.

[அடுத்த ஸஞ்சிகையில் முடிவுபெறும்.]

பிரஜாநுகூலன்.

Vol. 17. | திரிச்சி : மார்ச்சு—மீ 1921. | No. 4.

நட்பு காத்த நாரீமணி

(முன்தொடர்ச்சி)

தன்னை வேறுவிவாகம் செய்துகொள்ளுமாறு நண்பன் தனக்கு எழுதியதை அவன் அவளுக்குக் கூற, அவள் அந்த நண்பனைத் திட்ட, இவனும் ஆம் ஆம் என்று அவளுடன் கலந்துகொள்ள, கடைசியில் அந்த நண்பன் வீணே கெட்ட பேரைச் சுமந்து கொண்டு இவர்களால் கேவலமடைகின்றான். இது அநேகமாய் உண்மையாகிறதென்பது அநுபவ ஸித்தாந்தம். தன் மனதுக்குள்தானே விரக வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அரசகுமாரனைப் பல விதத்தும் உற்சாகப்படுத்தி, உங்களால் ஆகமுடியாத காரியமொன்றுமில்லை யென்ற அகங்காரத் தன்மையுடனே நடந்து கொண்டீர்கள். பிறருடைய வெறுப்புக்கிலக்காகும் விதம் இப்படித்தான் உண்டாய்விடுகிறது. உலகமே வெறுக்கத்தக்க விதமாக உங்களின் செய்கைகள் கணப்பொழுதிலே மாறுபட்டு விட்டன. நியது சூழ்வதென்றால் அது சூழும் வேகத்திற்கு மனோ வேகமும் ஈடாகாதபடி காரியங்கள் நடந்து விடுகின்றன.

> "என் கண்ணெதிரில் ஒரு தடவை காண்பித்தால்
> போதும். அவள் எப்பேர்ப்பட்டவளானாலும்
> சரி; அவ்வணங்கைத் தம்மிடம் சேர்ப்பிக்க
> நானாயிற்று"

என்று நீங்கள் இராஜகுமாரருக்குச் சத்தியம் செய்து கொடுத்ததினால் உண்டான ஆபத்துதானே யிது? இப்படியே அவசரப்பட்டுச் செய்து விடுவதில் அநேகம் பொல்லாங்குகள் சம்பவிக்கின்றன. எத்தனை பெண்கள் தாம் விபசரித்ததைக் கண்டுகொண்ட தம் குழந்தைகளை ஈவு இரக்க மில்லாமல் அவசரப்பட்டுக்கொன்றிருக்கிறார்கள். எத்தனை விதவைகள் ரகசிய சோரத்துவத்தினால் கருதரித்துப் பிறந்த குழவிகளைக் கழுத்தை முறித்துக் கொன்று எறிகிறார்கள். எத்தனை பேர் அவசரப்பட்டு எழுதக் கூடாத விடத்துக்குத் துடிதுடிப்பாகக் கடிதங்கள் எழுதிவிட்டுப்

பிறகு சொல்லப்படுகிறார்கள். தன் மனைவி செய்த அற்ப பிசகுக்காக அவளைக் கண்டபடி அடித்துவிட்டுப் பிறகு, என் அடித்தோமென்று மனத்தாங்கலடைகிறவர்கள் எத்தனைபேர்? அற அமர ஆலோசியாமல் கண்டவர்களின் பேச்சைக் கேட்டு நம்பிக்கொண்டு, பொல்லாத இடங்களில் தமது பெண்ணைப் பூனை வாய்க் கிளி போலக் கொடுத்துவிட்டுப் பிறகு அங்கலாய்ப்போர் எத்தனை பேர்? நீர விசாரித்து நிதானிக்காமல் பெண்விட்டாரின் பசப்பு மொழிகளிலே மயங்கிவிட்டு, அவர்களின் பெண்ணைத் தன் மகனுக்குக்கொண்டு அப்பட்டி மருமகளினால் தன் மகனும் தானும் தீராத சஞ்சலத்திற் காளாகி, வீடும் கலக சமுத்திரமென மாறி, என் இந்தப் பட்டிக்கழுதையைக் கொண்டோமென்று கண்ணீர்விடுபவர் எத்தனை பேர்? பெண்ணைக் கொள்ளுமுன்பே பலரை விசாரித்து உளவு தெரிந்திருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்? இது பற்றியே அத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்று உலகத்தில் வழக்கமாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவசரம் அநுவலைக் கெடுப்பதுடன் ஆளையும் கெடுக்கிறது. அப்படிக் கெட்டுப்போன மனிதர்களிலே தாங்களும் ஒருவராக இங்கு தவிக்க வேண்டியதாய் நேரிட்டதற்கு, அவசரப்பட்டு நீங்கள் செய்த வாக்குத்தத்தந்தான்.

சில பேர்கள் எடுத்த வாக்கியத்துக்கெல்லாம் சத்தியம் சத்தியம் என்று சொல்வார்கள். சிலபேர் முன்பின் வருவதை யோசியாமல் வாக்குக்கொடுத்துவிட்டுப் பிறகு பரிதபிப்பார்கள். வாக்கு கொடுப்பதைப்போல்தான் கையெழுத்து செய்வதுங்கூட என்று நாம் அறியவேண்டும். எத்தனை பேர்கள் அற்ப சந்தோஷத்தை விரும்பியும், ஒரு புட்டி கள்ளுக்கும், சாராயத்துக்கும், போஜனத்துக்கும் ஒரு முத்தத்திற்கும இச்சித்து உடன்கையெழுத்துப் போட்டுக் கெட்டுப்போனார்கள்?

இந்த விஷயங்களெல்லாம் இவ்வாறிருக்க, இனி நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றி என் மனதில் சில குறிப்புகள் தென்படுகின்றன. ஆனால் அவைகளை இப்பொழுது தெரிவிப்பதில் பயனில்லை. என் கற்பின்மீது முழுநம்பிக்கை உங்களுக்கு உண்டாயிருக்குமேயானால் தாங்கள் செய்துகொடுத்து வந்திருக்கிற சத்தியத்துக்குப் பழுதில்லாமல் என்னை இராஜகுமாரரிடம் இரவுக்கு அனுப்பிவிடுங்கள். அதைப் பற்றிய கவலையே தங்கட்கு வேண்டாம். அப்படி என் கற்பழிவதாய் நேரிட்டுப்போகிற சமயத்தில், நான் தங்கள் மனைவி என்று தெரிவிக்கிற ஒரு வாக்கியமானது அப்படியே அரசகுமாரரை மரணத்திற்குச் சமானமான மூர்ச்சையடைந்துவிடும்படியாகச் செய்துவிடும். ஏனென்றால் உங்கள் இருவருடைய நட்பின் விசாலத்தை நான் இயன்றளவு மனப்பூர்வமாய்க் கிரகித்துக்கொண்டிருக்கிறேன். நான் வெகு பக்குவமா

யப் பேசி, என் நியாயத்தைத் திரும்பத்திரும்ப ஆயிரமுறை எடுத்துக் கூறி அவர் மனதைத்திருப்ப முயல்கிறேன். என் நியாயத்தை ஓயாமல்கூறுகிறேன். அடிக்கடி எந்த வார்த்தை சொல்கிறார்களோ அந்த வார்த்தை மெய்யாய்ப் போகும். லௌகிக காரியங்களிலே இது நல்ல உபாயம். நம்முடைய நியாயத்தைச்சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். எதிர்க்கக்ஷியார் என்ன சொல்லியபோதிலும், அதற்குப்பதிலாகக்கடைசி வார்த்தை நாம் கட்டாயமாய்ச்சொல்ல வேண்டும். திரும்பத் திரும்பச் சொல்வதனால் பொய்கூட மெய்யாகத் தோன்றும்படி செய்து விடலாம். என்னால் இயன்றவரைக்கும் கடவுளை நம்பி முயல்கிறேன். என்னை அவரிடம் அனுப்பிய பிறகு உங்கள் கலக்கம் தீர்ந்துவிடுகிறது. பிறகு அந்தக் கலக்கத்தை இராஜகுமாரர் பெற்றுக்கொள்கிறார். அப்போது அவரைத் தேற்றுவிப்பதற்குக் காலகாரணமின்றிதது ரிதப்பட்டு நீங்கள் வசத் தவற வேண்டாம். கட்டிலின்கீழ் பெட்டிகளைப்போட்டு மறைத்து அதற்கு அப்பால் நீங்கள் ஒளித்துக்கொள்ளுங்கள். இராஜகுமாரருக்கு மட்டும் கோயிலுக்குப் போய் வருவதாக ஒரு பொய் சொல்லி விடுங்கள் என்றாள்.

4. ஜெயராமனும் திலகவதியும்.

தன் மனைவியினுடைய அபீஷ்டத்தின்படியே மந்திரிகுமாரன் நடக்கலானான். இரவும் வந்தது. இருளும் சூழ்ந்தது. மந்திரி குமாரன் தான் ஆலயத்துக்குப்போவதாகப் போக்குக் காட்டிவிட்டுக் கட்டிலின்கீழ் மறைந்தான். இராஜகுமாரன் அதிக ஆவலுடன் ஆசைத்தாகம் மேலிடப் பள்ளியறையினுட் பிரவேசித்தான். தான் இச்சித்த சுந்தரியே தன்னெதிரில் நிற்கக்கண்டு ஆநந்தபரிதனாயினான். மந்திரிகுமாரனின் சாகஸத்திற்கு மெச்சினான். அடுத்த நிமிஷத்தில் அப்பெண்மணி தரித்திருந்த காவியுடையும் அவளது சந்நியாசிக்கோலமும் அரச மைந்தனுக்குப் புலப்படுவதாயின. திடுக்கிட்டான்; கவலை மிகுந்தான். அதற்குள்ளாக திலகவதி இராஜகுமாரனைப் பார்த்துத் துறவறத்துக்குரிய கம்பீரதுடன் சொல்லுகிறாள்:—

அரசே! உலகத்திலே காமத்துக்குக் கண்ணில்லையென்று பொதுவாகச் சொல்லிக்கொள்கிறார்கள். அதை விவரிப்பதற்காகப் பலவித கதைகளையும் புலவர்கள் கற்பித்திருக்கின்றனர். அநுபவத்திலும் காணப் பெறுகின்றோம். ஆனால் இதெல்லாம் என்ன; ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்பதை வெளிப்படுத்துகிற விஷயங்களாயிருக்கின்றனவே யொழிய வேறில்லை. உலகத்திலே ஒரு பெண்ணின் மீது ஒருவன் அவளைக் கண்டதும் ஆவல் கொள்கிறானென்று வைத்துக்கொள்வோம். அந்த நிமிஷத்திலே அவனுடைய ஆத்திரமானது அந்தப் பெண் ஒருவனுடைய மனைவியோ,

தன் அந்தஸ்துக்கு மேற்பட்டவளோ, தாழ்ந்த ஜாதியோ, நோய் கொடியுள்ளவளோ, தன் விருப்பத்திற்கு இசைந்தவளோ, இசையாதவளோ, பின்னும் எது ஒன்றையும் கவனிக்காதபடி செய்து விடுகிறது எந்த விதத்திலேனும் தனது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்ள எண்ணுகிறான். ஆனால் இத்தனை கடூரமான இந்த விருப்பத்தின் வேகமானது துறவிகளைப் பார்த்த மாத்திரத்தில் சற்று குறைந்துகாண்பது போன்ற தோற்ற மேற்படுவதாகிறது. அவர்களது சந்நியாசிக் கோலத்தைக் கண்டமாத்திரத்தில் உலகஇன்பம் நிச்சய மற்றதென்ற வேதாந்த விசாரம் இவன் மனத்திற்குத் தட்டுப்படுகிறது. நீரின்மேற் குமிழிபோலும், ஆகாசத்தில் தோன்றும் மின்னலையொத்தும் நிமிஷநேரத்திற்குள்ளே இந்த வேதாந்த ஞாபகம் அக்காமியின் நினைவினின்றும் அகன்று போவதாயிருப்பினும், அது மோதிரக்கையாற் குட்டுப்பட்ட அடியாக இருப்பதால் முன்னைப்போல அவ்வளவு வேகமுடையதாக அவனது சிற்றின்ப இச்சையை இருக்கவொட்டாமற் றடுத்துச் சற்றுச் சுருங்கப்பண்ணுகிறது. இது நோக்கியே, பிராமணர்களுக்குள் விதவைகள் நிராபரணிகளாய்த் துறவற ஞானம்புனைந்து ஆடவர் திருஷ்டிக்கு எதிர்ப்படுவோராகின்றனர். எனக்கு அவ்வித அமங்கலம் இல்லையானாலும் ஒரு நிலைப்படாது கொந்தளிக்கின்ற தங்களின் காதற்கடலுக்கு ஸாந்தத்துவக் கரையொன்று கட்டி அமரிக்கையை யுண்டு பண்ணுதற்கே இத்துறவற வேடம் புனைந்தேன். இலங்கைவேந்தனும் என்னைப்போன்று இவ்வேடத்துடன் சீதை முன் தோன்றினானாயினும் அவனது தோற்றம் வேறு; இங்கு எனது உத்தேசம் வேறு. அரசே! வெகுநேரம் நின்றுகொண்டிருக்கின்றீர்; கட்டிலின் மேல் வீற்றிருங்கள்; கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது. யானை வாயிற் சென்ற கரும்புக்கு மீட்சி கிடையாது. என்னுடைய விண்ணப்பமெல்லாம் ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுத்துக்கொள்ள வேண்டு மென்பது தான்; வேறொன்றுமில்லை. மேல் தொடங்கிச் சொல்வதற்கும், அதை இரண்டொரு நிமிஷத்தில் முடித்துவிடுவதற்கும் தங்களுடைய ஸம்மதம் பெற்றுக்கொள்ள வேண்டியது இங்கு முக்கியமும் முதன்மையுமாக இருக்கிறது என்றாள்.

* * *

அரசகுமாரன் அவளது பேச்சுகளைக் கேட்டுப் பிரமித்துப் போனான். அவன் வித்தியாவிநோதனானதால் அவளது வாக்சாதுர்யத்தில் மயங்கிவிட்டானென்று தெரிகிறது. ஆகிலும் அவனது எண்ணம் விட்டுப்போகவில்லை. இத்தகைய சாதுர்யவதியைக் கூடிக் கலந்து சுகித்தலே புருஷ சரீரத்தைப் பெற்ற மனிதர்கள் அடையக்கூடிய சிரேஷ்டதரமான பதவிகளுக்கெல்லாம் சிரேஷ்

டமானதென்று கருத்து கொண்டான். இக்கருத்துடனே அவளது கரங்களைப்பற்ற இவன் பலமுறை எண்ணினானாயினும் அவளது துறவற வுடையின் உயர்வும், அவள் மகா பண்டிதையென்று அரசகுமாரன் பிரதமத்தில் கருதிக்கொண்ட மதிப்பின் மேன்மையும், அரசகுமாரனது துணிகரத்தைத் தாழ்த்தி அவன் மனத்தையும் பின்வாங்கிக் கொண்டுவிடுமாறு தூண்டிற்று. திலகவதியின் துறவறவேஷக் கலக்கம் ஒரு சார், வித்தியாவிசாரம் ஒரு சார், சிற்றின்ப இச்சை ஒரு சார்; இப்படிப்பட்ட பலவித விசாரங்களுக்கிடையில் திலகவதிக்குத் தன்னை யறியாமலே இராஜகுமாரன் அவள் பேசுவதற்கு அனுமதி கொடுக்கலானான். சன்மார்க்கஸ்தர்களுடைய இயற்கையின் போக்கே அப்படித்தான். அவளும் பேசத் துவக்கினாள்.

அரசே! இந்த விநோதப் பிரபஞ்சத்திலே ஒருவனுக்கு ஆயிரம் மனைவிகள் இருந்தபோதிலும் புதிதாக ஒரு பெண் கிடைப்பாளாயின் அப்புதுமையின்மீதும் ஆவலுறுகின்றான். பெரும்பாலும் புதுமையிலேயே ஒருவித மோகம ஜனிப்பது உலக இயல்பாயிருக்கின்றது. நாகரீகம் என்பது நகரத்தின் ஸம்பந்தமாகச் சொல்லப்படும் வார்த்தையாக இருந்தபோதிலும், வழக்கத்தில் அதற்குப் பல விதமாகப் பொருள் கற்பிக்கப்படுவதில், புதுமையாகத் தோன்றுவனவற்றிற்கே பெரும்பாலும் அந்த நாகரிகம் என்ற பெயர் இடப்பெறுவது வழக்கமாக இருந்துவருகிறது. இப்படி நாகரீகம் அதாவது புதுமை என்பனவெல்லாம் என்னவிதமாக முடிவுறுகிறதென்றால், உலகத்தில் நுணுக்கயூகிகளான மனிதர் நவநவமாய்க் குறைகளைத்தேடி, நவநவ வழிகளில் அக்குறைகளை நிவர்த்திசெய்ய முயன்று, சதாகாலமும் தங்கள் மூளையைக் கிண்டிக்கிளறிக் கொண்டிருப்பதிலேயே கலப்பதாகின்றது. இப்படித் திலகவதி நாகரிகத்தைப்பற்றி பேசத் துவக்கினதும் அரசகுமாரனுக்கு வெகு உற்சாகமாய் விட்டது. அவள் பேசி முடிப்பதற்குள்ளாகத் தன் மனத்திடை தோன்றிய எண்ணங்களை அடக்கமுடியாமற் கொட்டிவிட ஆரம்பித்துக்கொண்டான்.

பெண்ணே! நீ சொன்னதெல்லாம் சரியே; நாகரிகம் அதிகரிக்குந்தோறும் புதுபுது விருப்பங்களும் சிந்தனைகளும் தோன்ற, அப்பால் அவைகளைப் பூர்த்திசெய்வதற்கான முயற்சிகள் சிருஷ்டிக்கப்பட, அது விரிவுபெற்று பல மார்க்கங்களாகச் செல்ல, இவ்வாறாக ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்காத விதமாக விசாலித்துப் போய் மனிதனுடைய மனோநிம்மதியைக் கெடுத்து, இம்மை, மறுமை என்னும் இருவகைச் செல்வத்தையும் பாழ்படுத்தித் தீங்கிழைப்பதாக முடிகின்றது. இவற்றையெல்லாங் கருதுங்கால், பறவைகளும் மிருகங்களும் மனிதஜாதியைவிடப் பல்லா

யிரக் தடவை பாக்கியமும் சுயாதீனமும் பெற்று வாழ்கின்றன வென்று சொல்லலாம். ஏனென்றால் அவற்றிற்கு வேண்டியன சில; அவற்றையும் கடவுளருளால் தாமே தேடுகின்றன. இந்த அமைதியான வாழ்க்கை மனித நாகரிகத்தில் காணப்படவேண்டியது முக்கியமாயிருக்கும் காண்பிக்கப்படுவதில்லை. ஸமூகத்திலே ஒவ்வொரு ஸ்தாபனமும் நல்லது அல்லது தீயது என்று நிர்ணயிப்பதெப்படி? அது குணத்தை உயர்த்துகிறதா அல்லது தாழ்த்துகிறதா என்று சோதிப்பதிலிருந்துதான் தெரியவேண்டும். மானிட ஜாரவம் நிம்மதியான வாழ்க்கையுடன் மேம்பாடு அடைகிறதா என்பதே நாகரிகத்தைப்பற்றிய முடிவான கேள்வியாகும் என்றான்.

இராசகுமாரன் தன் வழிக்குத் திரும்பியதைக் குறிப்பாய் உணர்ந்துகொண்ட திலகவதி மனப்பூரிப்புடன் சொல்லுகிறாள். அரசே! நாகரிகம் எவ்வளவுக்கெவ்வளவு சுலபமான மாதிரியிலிருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கையின் நலங்களும் மிருதுத் தன்மை பொருந்தியதாய் அமையப்பெற்றிருக்கும். நாகரிகம் வரவர அதிகமான கனதியை யடைந்தால் அதற்குகந்தவாறாகவே மற்றவைகளும் இளைப்புறவனவாக ஏற்படும். விசேஷ சுகத்தில் விசேஷ கஷ்டம் எப்போதும் குடிகொண்டிருக்கவே செய்யும். இவ்வாறாகக் கூறப்படுகிற நாகரிகமானது அபிமானத்தினாலேயே விருத்திகொண்டு தழைப்பதாகிறது. இது நாகரிகமாயிருக்கு, அது நாகரிகமாயிருக்கு என்று கண்டவிடத்தெல்லாம் நாகரீகப் பட்டம் தந்து அதனிடத்துக்கொண்டுள்ள அபிமானத்தை வெளிக்குக் காட்டிகொள்வதாலல்லவோ நாகரிகவிருக்ஷம் வளர்ச்சி பெறுவதாகிறது. ஆகவே, நாகரிகத்தின் பிறப்பிடமும், அதன் வளர்ச்சியும்அபிமானம் என்பதிலிருந்து தோன்றியதாக ஏன் கொள்ளக்கூடாது? இவ்வாறாக நாகரிகத்தை வளரச் செய்வதற்கு ரகசிய காரணமாக மறைந்து நிற்கின்ற இந்த அபிமானம் என்பது எப்படிப்பட்டது? பொதுவாக உலகத்தார் அபிமானம் என்பதற்கு என்ன விதமான பொருள் கற்பித்திருக்கின்றார்கள்? இவைகளைப்பற்றி யறிந்து கொள்ளவேண்டுமென்பது எனது தனி விருப்பமாயிருப்பதால் தயை செய்து தாங்கள் எனக்குத் தெரிவிப்பீர்களா என்றாள். இராஜகுமாரனும் நன்றாகப் படித்தவனாகையினாலே, தன்முன் நிற்கும் பெண்ணின் கேள்வியினால் பிரமித்துப்போய் இவள் மிகவும் ஆராய்ச்சி செய்த பண்டிதையாக இருப்பாள் போலுங் காண்கிறது. இல்லாவிட்டால் இந்த சந்தோஷ சந்தர்ப்பத்திலே இவ்விதமான வித்தியா இன்பத்தையும் சேர்த்துப்புகட்டும்படியான சக்தி அவளுக்கு எங்கிருந்து உண்டானது என்று ஆலோசித்தவனாய் அதற்குத் தகுந்தபடி விடையளிக்கவேண்டுமென்று கருதிக் கொண்டு சொல்லுகிறான்.

பெண்கலையகமே! நீ கேட்ட வினா அதிக ரஸமானதாகும். அபிமானம் என்பது பழக்கத்தினால் வருவதும் உண்டு. உடற் பிறப்பினாலும், பாசபந்தத்தினாலும், சிநேகமூலமாயும், பூர்வஜென் மாந்தர வாசனையாலும் ஏற்படுவதாயுமிருக்கிறது. இந்த அபிமானம் என்பது விலைகொடுத்து வாங்கத்தகுந்த பொருளல்ல அப்படியிருந்த போதிலும் அதைச் சிலர் நன்றாக அறிந்து கொள்ளுகிறதில்லை. சில மூடத்தந்தைகள் தமது இளைய மனைவியின் மோகத்திலடிபட்டு அதனால் தப்பிதமாக, தமது மூத்த தாரத்தின் மக்களிடம் தமது புது மனைவி அபிமானம் பாராட்டி வருவதாகவே நம்பிக்கொண்டு ஏமாந்துபோகிறார்கள். தாசிகளின் போலி அபிமானத்தை யதார்த்தமான அன்பாக எண்ணிப் பொருள்கள் வீடு யாவும் அவளுக்கே அர்ப்பணம் செய்துவிட்டுக் கெட்டவர்கள் அநேகர். சில பெரியவிடத்துப் பெண்கள் சில அற்பர்கள் மீது அபிமானம் வைத்து, தாம் பாராட்டிவரும் அபிமானத்தைப் போலவே அந்த அற்பர்களும் யதார்த்தமான அபிமானத்தைத் தம்மேற்கொண்டிருப்பதாக நம்பி, தங்களின் அரிய கற்பைக் கெடுத்துக்கொண்டு மதிமோசம் போகிறதுமுண்டு. கண்டவர்களையெல்லாம் உயிருக்குயிரான நண்பர்களென்று அபிமானம் வைத்துக் கடைசியில் அந்த நண்பர்களாலேயே கெட்டு அநேகர் அநாதையாகிறார்கள். உலகத்திலே இப்படியெல்லாம் நடக்கின்றது. யதார்த்தமான அபிமானம் ஒவ்வொருவனுக்கும் முதலாவதாக அவன் தாயிடத்துப் பதிந்திருக்கும். பிறகு உடன் பிறந்தோர் மீதும், மனைவி மகள் மீதும் ஏற்படும். இது எத்தனை விரோதங்கள் நேர்ந்தாலும் வெளிப்பார்வைக்குப் பிரிவினைத்தோற்றமேயன்றி உண்மையில் அந்த அபிமான மென்னவோ நீங்கப்போகிறதில்லை. அருமையாக சில இடங்களில் நண்பர்கள் மீது செலுத்தப்பட்டு சிநேக விஷயத்திற்காகத் தமது உயிரையே கொடுக்கத் துணிந்தவர்களும் அநேகர் இருக்கின்றார்கள் என்றான்.

காமாந்தகாரனாக இருந்த அரகுமாரன் இப்படி வித்தியாஸல்லாபத்தில் மனது திரும்பியவனானதற்காக அதிக சந்தோஷமடைந்தவளாய், நீங்கள் சொல்லியதெல்லாம் சரியே, உலகத்திலே அபிமானம் என்பது உறவின் முறையில் ஏற்படுவது ஒரு புறமிருக்க, அழகு முதலிய ரூபாலாவண்யங்களாலும் அபிமானம் உதிப்பதாயிருக்கிறது. மானிட வர்க்கத்திலே ஸ்திரீ ஜாதியை புருஷ இனத்தைவிட அழகாகப் படைத்த கடவுள்; மிருக பக்ஷி வர்க்கத்திலே ஆண் வர்க்கங்களைப் பெண்ணினத்தைவிட அதிக சுந்தரமாக சிருஷ்டித்திருப்பதின் காரணம் யாதாயிருக்கலாம்? உலகத்திலே விபசார தோஷம் அதிகரிக்க ஏதுகாமின்றி ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த மனைவியின் ரூபலாவண்யாதிகளிலேயே ஐக்கியமாகி அதனின்றும் தான் பிரிந்துவிடக்கூடாத விதமாகக் கட்டுபட்டு

இவ்வாறாக உலகம் க்ஷேமப்படுவதற்காக—புருஷர்களினும் மாதர்கள் அதிக சுந்தர ரூபசாலிகளாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். புருஷர்கள் ஸ்திரீகளை விட்டுப்பிரிதல் போல மாதர்கள் பிரிவது கிடையாது. இப்படிப் பிரிதல் நேராதிருக்கச்செய்வது ஸ்திரீகளின் அழகு தான். இப்படியே, மிருகபக்ஷி வர்க்கங்களில் பெண்ணினத்திலும் புருட இனம் அதிக லாவண்யமும் திடகாத்திரமும் உள்ளனவாகக் காணப்படுகின்றன. பெண்ணினம் புருட இனத்தைவிட்டுப் பிரிந்துவிடுதல் அந்த வகுப்பிலே சகஜமாக நேருமானதால் அவ்வாறாகாதிருக்க, பெண் வகுப்பைக்காட்டிலும் சிறந்த லாவண்யத்துடன் புருட வகுப்பு படைப்புண்டிருப்பதோடு, பெண்ணினத்திலும் அதிகரித்த ஆண்மையும் திடகாத்திரமும் அமையப்பெற்றிருக்கின்றன.

இது இவ்வாறிருக்க, உலகத்திலே ஒருவரை யொருவர் கண்டு காமுறுவதும், காதல் கொள்வதும், அழகினாலும் ரூப சௌந்தர்யாதிகளினாலுமே நிகழப்பெறுகின்றது. ஆனால் அவ்விதமான ரூபலாவண்யங்களைத் தனது தாயார், சகோதரிகள் முதலானோர் கொண்டிருந்தாலும் அதிலே அவன் மனது செலுத்தப் படுவதில்லையே! ஏன் அப்படி? இதற்குத் தங்கள் சமாதானத்தை எதிர்பார்க்கிறேனென்றாள்.

இங்கே அரசகுமாரனுக்கு அவன் கொண்டிருந்த காமாந்தகாரமெல்லாம் எங்கேயோ பறந்து போய்விட்டது. தன்னுடன் இவ்வளவு நேரம் மெச்சத்தக்க அத்தனை சாதுர்ய மாதுர்யங் காட்டிப் பேசிய பெண்மணியின் வித்தியாவல்லபத்துக்கு அதிக பரவசமடைந்தவனாகிச் சொல்லுகிறான்.

உன்னுடைய கேள்விகள் ஒன்றுக்கொன்று அதிக ரஸமுடையனவாயிருக்கின்றன. உலகத்திலே ஒரு பெண் மீது காதல் கொள்வதும், காமுற்று சோகிப்பதும் என்ன காரணத்தால் நேரிடுகிறதென்று நாம் நன்றாக ஆலோசிப்போமானால், முதன் முதலாக அழகு ரூபம் முதலியவைகளால் நேர்கின்றது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இரண்டாவது, தான் பார்த்த பெண் தனக்குக் கிடைப்பதரிது என்று தான் நம்பி விடுகிறபடியால் "இழந்த சொத்து பெரிய சொத்து" என்பதுபோல் அந்தக் கிடைக்காத பொருளின் மீது இயற்கைக்கு மீறி உண்டாகிற ஆவலானது பல விதமான சேஷ்டைகளுக்கு உட்படுத்தவும், சோகித்து விழவும், அதே சிந்தனையாக இருக்கவும் செய்துவிடுகிறதில், அதை உலகத்திலே காதலின் சேஷ்டைகள் என்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவன் ஒரு பெண்ணை அவளது ரூபலாவண்யாதிகளுக்கு மயங்கி அவள் மீது காதல் கொள்கிறான். ஆனால் அந்தப் பெண்ணின் உடன்பிறந்த சகோதரர்கள் அவளது ரூபலாவண்யாதிகளைக் கண்டு சந்தோஷமடைகிறார்களேயன்றி காமுறுதல் இல்லை. இந்த

நிகழ்ச்சி யாது காரணத்தால் சம்பவிக்கின்றது? தனது சகோதரி தன்னிடமே இருப்பாள் என்கிற எண்ணத்தாலும், அவளது சந்திப்பு தனக்கு சர்வ சாதாரணம் என்று நப்புவதாலும் அவள் அழகிலே அவன் அதிக கவனம் வைப்பதில்லை. ஆனால் அந்நியனே தனக்கு அது கிடைப்பது கஷ்டசாத்தியமென்று ஆரம்பத்தில் தானே திடமாக வேரூன்றி விடுகிற அபிப்பிராய பலத்தினாலே, கிட்டாத பொருளின் மீது இயற்கையாக ஏற்படும் அதிக ஆவலை அங்கு செலுத்தி அவஸ்தைப்படுகிறான். இவ்விதமான அவஸ்தை சகோதர பக்ஷத்தில் நிற்பவனுக்கு, அவள் எப்போதும் தன் சகோதரி, தன் ஞாபகத்தினின்றும் அகலாள் என்ற மனோ நிச்சயத்தினாலே உண்டாகிறதில்லை. இவ்விடத்திலே நாம் ஒன்று கவனிக்கவேண்டும். உலகத்திலே ஒரு யௌவன மங்கையைச் சந்திக்கும்போது, முதல் முதலாக அவளிடத்து மனம் செல்லுவது அவளது அழகின் மேன்மை முதலியவற்றால்தான். அதற்கு அப்பால் காம இச்சை ஜெனிக்கிறது. அப்படி இச்சை ஜெனிப்பதுங்கூட, அவள் தனக்குக் கிடைக்க மாட்டாள் என்கிற எண்ணத்தினாலேயே யொழிய வேறல்ல. புத்திசாலியாயுள்ள ஒருவன் ஒரு ஸ்திரீயின் அழகில் மனது சம்பந்தபட்டுப்போய் அவளை எப்படியேனும் தான் அடையவேண்டுமென்று விரும்புகிறான். இப்படி விரும்புவதில் அவன் முதலாவது காம இச்சையில் மனதைச் செலுத்தாமல், தான் இச்சித்த பெண்மணி தனக்கு ஸமீபத்திலேயே வாஸமாய், தன் மீது அபிமானம் பாராட்டி வரவேண்டுமென்று விரும்புகிறவனாய் இருக்கிறான். இந்தக் குறிப்பு புத்திசாலிகளுக்கேயன்றி மற்றவர்களுக்காக நான் தெரிவிக்க வரவில்லை. அவளும் அகஸ்மாத்தாய் அதற்கிசைந்து கொண்டால் அதுவே போதுமானதென்று இவன் குதூகலமடைகிறான். ஒருவன் சிறு பிராயத்திலேயே ஊரை விட்டோடிப் போய் வெகு தினங்கட்கப்பால் தன் ஊரை யடைகிறான். அங்கே மகா ரூபவதியாகத் தோன்றுகிற ஒரு சுந்தரியைச் சந்திக்கிறான். அவள் மீது காதலுறுகிறான். பிறகு அந்தப் பெண் தன் உடன்பிறந்த சகோதரி என்று அறிகிறபோது, அவள் தனக்கு மனைவியாக இருக்க நேர்வதில் தான் அடைகிற மகிழ்ச்சியைவிட, அதிகமான ஆநந்தத்தை யநுபவித்து தனது சகோதரியோடும் சந்தோஷிக்கிறான். அவள் தன்னுடையவள் என்று நிச்சயப்பட்டுப் போவதால் அவனது ஆசையும் ஒரு அளவிற்குட்பட்டுப் போகிறது என்றான் அரசகுமாரன்.

5. "அநுபவித்தல்"—என்றால் என்ன?

அதற்கு மந்திரி மனைவி சொல்லுகிறாள். அரசே! எனக்கு இன்னொரு சந்தேகமும் உதிக்கின்றது. பெண்களுக்கு இயற்கையிலேயே அமைந்து விட்ட கீழ்த்தரமான, தாழ்ந்ததாகிய ஒரு

தன்மையால், அவர்களை ஆடவர்கள் அத்தனை அற்பமாய் மதிக்கத்தலைப்பட்டு விட்டனர் போலுங் காண்கிறது. எவ்வாறெனில்:- பெண்ணே அநுபவிக்கத் தகுந்தவள்; ஆண்மகனே அநுபவிப்பவன். பெண்கட்கென்று பொருந்தியுள்ள சரீரத்தோற்றமும் அங்கங்களும், பிறர் அவர்களை அநுபவிப்பதற்கேற்ற ரீதியில் இயற்கையிற்றானே அமைப்புகொண்டு நிற்கின்றன. மாதரார்க்கு ஆபரணங்கள் இவைது எதன் பொருட்டு? அங்ஙனம் அணிவித்து அழகு பார்த்து ஆடவர்கள் தாங்கள் அந்த சிங்காரத்தினை நோக்கி இன்பமெய்துதற்காகவேயாம். இங்ஙனமாகப் பெண்கள் ஆண்மகனால் அநுபவிப்பதற்கேற்ற வஸ்துவாக நிர்மாணம் செய்யப்பட்டிருத்தலால், ஆண்மகன் தான் விரும்பியவாறெல்லாம் பெண்ணாகிய புஷ்பத்தை அவன் பிரியப்படி செய்து கொள்ளும் வண்ணம் அவனது இஷ்டத்திற்கு ஒப்புக்கொடுத்து விடப்படுகின்றது. அவன் தன் மனம் போல் அநுபவிக்கும்படியாக அவனுக்குக் கொடுத்துவிடப்பட்ட "பெண்" என்கிற வஸ்துவானது, அங்ஙனம் அநுபவிப்பவனுடைய குலம் கோத்திரத்தையே சேர்ந்த பொருளாகி, அவனுக்குச் சொந்த பதார்த்தமாகவும் மாறிப் போகின்றது. அநுபவிக்கப்படுகிற ஒரு வஸ்துவுக்கு "சுயேச்சை" என்பது இல்லாமல், அநுபவிப்பவனின் பிரியப்படியெல்லாம் அதை உபயோகிக்கக் கூடிய நிலைமையில், அது அவனுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து உட்பட்டுப் போய்விடுகிறது. ஒரு புஷ்பத்தை எடுத்துக்கொள்வோம். புஷ்பம் அநுபவிக்கத் தகுந்த பொருள். அந்தப் புஷ்பத்தை ஒருவன் தன் கையில் வைத்துக் கொள்வதற்கான ஒரு புஷ்பச்செண்டாகவும் செய்விக்கலாம். கூந்தலிலும் சூட்டிக்கொள்ளலாம். அவன் பிரியம் எப்படியோ அப்படியெல்லாம் அந்தப் புஷ்பத்தை அவன் அநுபவிக்கலாம். அவனது விருப்பத்தின்படி அப்புஷ்பம் அவன் கைக்குள் அடங்கி உட்பட்டுப்போகிறது. பெண்களும் இவ்விதமே, தங்களை அநுபவிக்கப் பிறந்த ஆண்மகனுக்கு, அவன் பிரியப்படி எல்லாம் செய்து கொள்ளத் தங்களை அவனுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்கள். உள்ளடங்கிப் போய் நிற்கிறார்கள்—நின்று விடுகிறார்கள்.

***

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஸமத்வ சுதந்தரம் உண்டென்று வாதிக்கப்பட்டாலும்—அங்ஙனம் உண்டுதானானாலும்—இயற்கைக்கிரமத்தில்—உலக அநுபவத்தில்—பிரபஞ்சப்போக்கில்—அநுபவிக்கப்படும் வஸ்துவாகிய ஸ்திரீ கீழ்தரமாகவும், அநுபவிப்பவனாகிய ஆண்மகன் மேல்தரமாகவும் மாறி, உயர்வு தாழ்வு பேதம் கற்பிக்கப்பட்டே போகின்றார்கள். அதற்கேற்றபடி ஆண்மை, வலிமை, அடக்கி நடத்தல், பிறர்க்கு உட்படாமை, தன்

கை மேலாகவே நிற்றல் ஆதிய குணங்களுடன் ஆண்மகன் அதாவது "அநுபவிப்பவன்" விளங்குகிறான். "அநுபவிக்கப்படும்" பொருளாகிய பெண்ணோ பிறர் மனம் கவர்தற்கான வசீகரமும், அதற்கான அங்கங்களின் பொருத்தமும் கொண்டு, அநுபவிப்பவனது கைக்குள் அடங்கி உட்படியக் கூடிய வஸ்துவாக மாறுகிறாள். "அநுபவிக்கப்படும்" வஸ்துவை, அந்த வஸ்துவினுடைய சம்மதத்தை எதிர்பாராமலே—"அநுபவிப்பவன்" அந்த வஸ்துவைத் தன் சுயேச்சையாக அநுபவித்துக்கொண்டுவிட முடியும். ஆனால் இப்படியாக "அநுபவிக்கப்படும்" வஸ்துவானது, தன்னை "அநுபவிப்பவ" னுக்குப் பிரியம்—இஷ்டம் இருந்தாலொழிய, அவனைப் பலாத்காரக் கட்டாயத்தில் அநுபவித்து விடமுடியாது. அங்ஙனம் அநுபவித்துவிட்டதாகப் புராண கதைகள் உண்டானாலும், அதற்கு ஆண்மகன் மயங்கி, ஒப்பி, இசைந்திருந்தாலன்றி மற்றபடி முடியவே முடியாது. பரஸ்பரம் இருசார்பினரது சரீர நிர்மாணமும் இதற்கு—மேற்கூறியதற்குப்—பொருந்தியே யுள்ளது. இந்த வகையிலும் உயர்வு தாழ்வு பேதம் ஏற்படாமலில்லை.

***

பின்னும், "அநுபவிக்கப்படும்" பொருள்கள் அநுபவிப்பவர்களின்றி மதிப்புடையனவாகின்றதில்லை. அணிவோர் இல்லையாகில் ஆடையாபரணங்கள் பயனற்றனவாம். புஷ்பமொன்றினை யொருவன் சூட்டிக்கொள்ளாவிடில், அந்தப் புஷ்பத்தின் அழகும் வாசனையும் வியர்த்தமாகவே போகின்றன. பிறர் சூட்டிக்கொண்டால் தான் அந்தப் புஷ்பத்திற்கு அழகு அதிகப்படுகின்றது. பெண்களும் அப்படியே தான். விவாகமாகாத பெண்ணைவிட விவாகமான பெண் மிகுந்த அழகும், சுந்தரமும், உயர்வும் கொண்டவளாய், மகிழ்ச்சியிற் பூரித்து நிற்பவளாய்ப் பிரகாசிக்கின்றாள். இந்த அழகும், சுந்தரமும், உயர்வும், ஹிருதயானந்தமும் யாரால் உண்டானவை? கணவனால். அதாவது "அநுபவிப்ப"வனால், "அநுபவிக்கப்படும் பொருளுக்கு" உண்டாயிற்றென்க. "அநுபவிப்ப"வனாகிய ஆண்மகன் புவி வாழ்க்கையினின்றும் பிரிந்து விடின், அவன் அநுபவித்த வஸ்து எக்கதியை யடைகிறது? முன்னிருந்த அழகு ஒழிந்து, லாவண்ய சோபிதமும் பாழ்பட்டு, சுமங்கலித்துவ ஜோதி மறைந்து, விதவா ரூபம் கொண்டு, காய்ந்து, உலர்ந்து, வற்றிப்போகின்றது. பெண்களின் இயற்கை யழகு ஓங்கி நன்கு பிரகாசிப்பதெல்லாம் புருஷர்களால் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. கணவனர் உயிர் வாழ்ந்தகாலை ஒரு பெண்மணிக்கு இருந்த அழகும், அந்த நாயகன் கண்மூடிய பின்னர் அப்பெண்ணுக்குள்ள அவலக்ஷண ரூபமும் இங்கு ஆழ்ந்து சிந்தித்திடத்தக்கன. இந்த வகையிலும் உயர்வு தாழ்வு பேதம் ஸ்திரீ புருஷ வகையினுள் புகாமலில்லை.

மேலும் "அநுபவிப்பது" என்பதற்கு உண்மையான அருத்தம்—தாத்பரியம் என்ன? "அநுபவித்தல்" என்றால்—"அநுபவிக்கப்படும்" பொருளை—அதன் அழகைப் பலவிதங்களிலும் இமிசைப்படுத்தி—சிறுகச் சிறுக அதன் லாவண்யத்தையும், வெளித்தோற்றமான சுந்தரத்தையும்—பாழ்படுத்துதல்—என்பதே யதார்த்தமான பொருளாகும். ஒரு புஷ்பத்தை யொருவன் அநுபவிப்பதென்றால், அது பிறந்த இடமாகிய செடியினின்றும் அதைப் பறித்துத் தனதாக்கிக்கொண்டு, பிறகு அதை மாலையாகக் கட்டிக் கூந்தலில் சூடி, பின்னர் அது வாடி வதங்கிப் போகும்படி செய்தலாம். ஒரு மாங்கனியை—மாம்பழத்தை—ஒருவன் சுவைத்து அநுபவிப்பதெனில்—இயற்கை யழகு ததும்பும் ரமணியமான அதன் மேல் தோலை நீக்கி, அதன் வெளியழகைப் பாழ்செய்து, பின் அதன் ரஸத்தையெல்லாம் தான் ருசித்துப் புசித்து, அதை வெறுங் கொட்டையாக்கிக் கீழே எறிந்து விடுதலாம். அங்ஙனம் அநுபவிக்கப்பட்டுக் கீழே எறியக்கூடிய நிலைக்கு வந்துவிட்ட பின்பு தான், அக்கொட்டையானது தன்னையொத்த அநேக மாங்கனிகளை உண்டாக்கக் கூடிய ஒரு மாமரத்தை உற்பத்திசெய்தற்கான சக்தி தத்துவத்தைத் தன்னுள் கொண்டதாகி விளங்குகின்றது. அநுபவிக்கப்படும் காரணத்தால் தான், ஒரு மாம்பழமானது தன் மேலழகு நீங்கி, மற்றொரு மாமரத்தை உற்பத்தி செய்யக்கூடிய தத்துவம் அடங்கிய தான மாங்கொட்டையாகிறது. ஒரு மாமரத்தைத் தோன்றச் செய்தற்கான ஸக்தி வெளியழகு நீக்கப்பெற்ற ஒரு மாங்கொட்டைக்கு உண்டேயன்றி, அநுபவிக்கப்படாததான ஒரு மாம்பழத்திற்கு இல்லை. இங்ஙனம் மேலழகு போக்கிச் சுவைத்தலால்—அநுபவிப்பதனால்—அநுபவிக்கப்படும் வஸ்துவுக்கு மற்றொன்றை உற்பத்தி செய்யக் கூடிய ஸக்தித் தத்துவம் வந்தெய்துகின்றது. இது பிரபஞ்ச நியதி—லோக இயல்பு—உலகக்கிரமம்—உற்பத்தி மார்க்கம். இப்படியாக மாங்கனியைப் பாழ் செய்வதற்குத்தான் மாங்கனியை—அநுபவிப்பதென்று பொருள். இவ்விதமே ஒரு ஸ்திரீ ரத்தினத்தை "அநுபவிப்ப"தினால், அதன் அழகு ரூபங்கள் மாறி, லாவண்ய சோபித மனைத்தும் பாழ்பட்டு, துரிதத்தில் தளர்ந்த உருவங்களும், வற்றிய அங்கங்களும் கொண்டு வாடிப்போன நிலையாகிய மாங்கொட்டையின் ஸ்தானத்திற்கு அது வந்துவிட நேர்கின்றது. அங்ஙனம் வந்துவிட்ட—வருவதற்கான நிலையைக் கிட்டும்போது மாங்கொட்டைக்குள்ள "உற்பத்தி சக்தி"யை அந்த ஸ்திரீரத்தினமும் அடையப்பெறுகின்றது. இது தெய்வ அமைப்பு—ஈசனார் தங் கட்டளை. எனவே, "அநுபவித்தல்" என்பதற்கு—"அநுபவிக்கப்படும்" வஸ்துவின் சுகுமாரத்தை—எழிலினை—லாவண்ய ராசியைப்—பாழ்படுத்திச் சின்னாபின்னம் செய்தல் என்பதே சரியான பொருளெனத் தோற்றுகின்றது. அதுவே பொருத்த முடையதான பொருந்திய

அர்த்தம். இங்ஙனமாகச் சின்னாபின்னம் செய்ய, "அநுபவிப்ப"வனுக்கு உரிமை—பாத்தியதை—ஸர்வ சுதந்தரத்துவம் வேண்டிய வரையில் இருப்பதை நோக்கினால், இங்கும் "அநுபவிப்பவனை" மேலாகவும், "அநுபவிக்கப்படும்" வஸ்துவைக் கீழாகவுமே கூறவேண்டியதாகி, உயர்வு-தாழ்வு பேதம் இதிலும்—இந்த வகையிலும் ஏற்பட்டுப் போகின்றது. "ஸ்திரி புருஷ ஸமத்வம்" என்ற தொனி ஒருபுறத்திருந்தாலும், அதனூடே இந்த உயர்வு தாழ்வு பேதமும், இலைமறைந்த காய்போன்று தோன்றியும் தோன்றாமலும் மறைந்து நிற்கின்றதென்பது—மறுக்க முடியாத உண்மை. உலக அநுபவத்தின் யதார்த்தமும் இதுவே. இதனால்தான் பெண்களைத் தாழ்வாக—தங்களின் கை ஆயுதமாக—ஆடவர்கள் நினைக்கின்றார்களோ வென்ற சந்தேகம் எனக்கு உண்டாகின்றது.

***

இவ்வண்ணமாகப் பெண்பாலார் "அநுபவிக்கப்படும்" ஒரு பொருளாக—பிறரால் சுவை பார்த்தற் கேற்ற ருசிகரம் வாய்ந்த ஒரு தின்பண்டமாக—ஒரு பக்ஷணமாக—நிற்றலால், பெண்ணுருவத்தைக் காணும் ஆடவர், அப்பெண்ணுருவின் எழிலில்—அழகில் மயங்கி, தம்மனத்தையும் அவர்பாற் செல்லவிடுத்து, தாம் அநுபவித்து இன்புற அவ்வுருவம் தமக்குக் கிடைக்குமா வென்று ஆவலாதி கொள்கின்றனர். "அநுபவிக்கப்படும்" வஸ்துவைவிட, "அநுபவிக்க" நினைக்கும் வஸ்துவுக்கே ஆவலும், பதட்டமும், அவசரமும் அதிகம். இவ்வித அவசர ஆக்கிரத்திலே காமத்துக்குக் கண்ணில்லை யென்றபடி, தாங்கள் இச்சித்த பெண்மணியை எவ்விதத்தும் அடைந்து சுகித்துவிட ஆசைப்படுகிறார்கள். காமத்துக்குக் கண்ணில்லையானாலும், கண்ணுக்குக் காமம் இருப்பதால், அக்காமம் மட்டுக்கு மீறி, தங்களின் இச்சையைத் திருப்தி செய்துகொள்ள எதற்கும் துணிந்து விடுகிறார்கள். இவ்விதமான அவஸ்தையின்—ஆத்திரத்தின்—காட்சியொன்றை இன்று என் கண்முன்பு கண்டேன். பிராண நண்பர்களாயுள்ள இருவர்களிலே ஒருவனுக்கு விவாகமில்லை. இன்னொருவனுக்கு விவாகமாகி யிருக்கிறது. அவனது மனைவி மகா ரூபலாவண்ய சோபிதை. அவளது அழகைக் காணும்போதெல்லாம் தன் நண்பன் மனைவி என்கிற எண்ணங்கூட இல்லாமல் இவனுக்கு அதிக ஆவல் உண்டாகின்றது. அவன் ஆவலைத் தணித்தால் தான் அவன் ஆசை யடங்கும். இது நடப்பது எப்படி? இதற்கு விடை பகரவேண்டும்—என்றாள்.

***

அதைக் கேட்ட இராஜகுமாரன், "அநுபவித்தல்" என்பதை மிக்க மிக்க அநுபவ ஞானமாக விவரித்தனன். "அநுபவித்தல்' என்பதை, உத்தமமான—உயர் நலஞ் சார்ந்த நினைவுடன் இயற்கையின்

தூண்டுதலாற் செய்வதாதலின்,—அது ஒரு வஸ்துவின் உருவத்தினை—அதன் சொரூபத்தை—பாழ்படுத்திடினும்,—அது குற்றமுடையதாகிறதில்லை. அத்துடன் இப்பொழுது நீ கேட்டதும் மிக்க நேர்த்தியான கேள்விதான். உண்மையாகவே தனது நண்பனுடைய பத்தினியின் அழகைக் கண்டு சந்தோஷமடைந்திருக்கிறானே தவிர, சிற்றின்ப இச்சையை விரும்புகிறவனாக மாட்டான். முன்பு நான் தெரிவித்தபடி அந்தப் பெண் தன்னை வித்தியாசமாக எண்ணாமல், தன்னை ஒரு உடன்பிறந்த சகோதரனைப்போல் பாவித்து நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவனாகவே யிருப்பான். அதற்கு அந்தப் பெண்மணியும் இணங்கி, அவனைத் தனது சொந்த தமயனைப் போல் பாவித்து நடந்து கொண்டால், இவன் மனமும் திருப்திபட்டுப் போய், அது தனக்குக் கிடைக்க மாட்டாத இந்திர பதவி என்றும் கருதி மகிழ்ச்சி கொண்டாடுவான்.

* * *

இப்படியே ஒருவன் தனக்குப் பேசியதும், தான் இச்சித்துக் காதல் கொண்டிருந்ததுமான பெண்ணொருத்தியை ஜாதகப் பொருத்தங்கள் சரியில்லையென்று கூறி, பொருத்தங்கள் சரியாயிருக்கிற அவனுடைய தமயனுக்கு, அவளை மணமுடித்து விடுகிறார்கள். இப்போது முன் அவளை இச்சித்தவனிடத்திலிருந்து என்ன மாறுதல் காண்கின்றோம்? தனக்கு அவள் கிடைக்காமற் போனாளே யென்ற ஆத்திரம் ஒருபக்கம் இருந்தபோதிலும், மற்றொரு புறத்தில், அவனுடைய சித்தம் தர்ம மார்க்கத்தில் சென்று, "இப்போது தான் அவள் எங்கே போய்விட்டாள்; எனது அண்ணனுக்குத்தானே மனைவியாகிறாள்; நமது வீட்டிற்குத்தானே வருகிறவளா யிருக்கிறாள்; அந்த மட்டுக்குக் கிடைத்ததே; அதுவே போதும்; அவளைத் தாயாகவோ சகோதரமாகவோ பாவித்துச் சந்தோஷப்படலாமல்லவா; இப்போது என்ன மோசம் முழுகிப் போயிற்று" என்று தனது மனதைத் திருப்தி செய்து கொள்ளுகிறான். அந்தப்படியே நடக்கவும் முயலுகிறான். இது மனதின் போக்காகுமென்று இராஜகுமாரன் சொல்லி முடித்தான்.

* * *

அரசகுமாரன் பேசிக்கொண்டு வரும்போதே திலகவதி அவன் மனப்போக்கினைக் கூர்ந்து கவனித்தபடி யிருந்தாள். அவன் தான் வந்த காமாவேசமான காரியத்தை மறந்து, வித்தியா ஸல்லாபத்திலாடே தீவிர உணர்ச்சி பெற்று நிற்றலை நோக்கினாள். தன்னைச் சகோதரியாகக் கொள்ளுமாறு—அந்த சகோதர பாந்தவ்யத்தைப் பற்றி, பிறகு அவனை வேண்டிக்கொள்வதற்கு எவ்வளவு ஆதார வாசகங்கள் வேண்டுமோ—அவ்வளவும் அவன்

வாய்மொழியின் மூலமாகவே கேட்டாயிற்று. இனி மனைவி என்ற ஒருத்தி கொண்டிருக்க வேண்டிய நற்குணங்களையும் அரச குமாரனையே சொல்லும்படி வைத்து, இறுதியில் தன்னையும் ஒரு உத்தம பத்தினியாக்குமாறு வேண்டிக் கொள்வதுடன் இந்த சம்பாஷணையை முடிக்கவேண்டுமென்றுதனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். இராஜகுமாரன் சகோதரத்வத்தைப் பற்றிக் கூறி முடித்ததும்—, "கவமலரியினும் அருமணியெனக் கொள்ளத்தகும் என் அரசே! உலகில் பெண் ஜென்மமெடுப்பது சகோதரியாகப் பொருந்துவதுடன்கூட, முக்கியமாக ஒருவருக்கு மனைவியாக அமர்வதற்கேதான். பெண்ணொன்று பிறந்தால், அதற்கு முன்னமே அப்பெண்ணுக்கான கணவனொருவனும் பிறந்திருப்பான் என்பது உலகவாக்கு. அவ்வாறான மனைவி என்ற உயரிய நிலைக்கு என்னென்ன உத்தம குணங்கள் வற்றிருக்க வேண்டுமோ அதனைப் பெண்பாலாகிய எனக்கு ஒரு நற்போதகமாக உணர்த்திடவேண்டும்" — என்று பிரார்த்தித்தாள். தான் வந்த காரியத்தை மறந்து அரசகுமாரனும், அவளது அன்பான பேச்சுகளில் ஈடுபட்டு மிக்க உற்சாகத்துடனும் கூறுவதானான்..

***

6. உத்தம மனைவியின் வர்ணனை.

திராக்ஷையானது தன் பசுமை இலைகளோடும் ஆலமரத்தைச் சுற்றிச் சுற்றிப்படர்ந்து, ஆகாயத்தை அளாவிய அதன் உச்சியைப் பிடித்து, சூரிய கிரகணங்களின் முன்புமிக்க சோபிதமாய்த் துலங்குவது போலவும்; பிறகு அந்த மரத்தின் மீது இடி விழுந்த காலத்து, அது நிலையிலிருந்தும் பிறழ்ந்து தரையிற் கிடக்கும்போதும் அன்புப் பக்ஷமும் நிரம்பி, அதை விட்டுப் பிரியாமல் பின்னும் பின்னும் இறுகப் பற்றி நிற்பதையே பரம பூஷணமாய்க் கொண்டிருப்பதைப் போலவும் ;—ஒரு மனிதன் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருக்குங்கால், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் நால்வகைக் குணங்களோடு சகிப்பும் சாந்தமும் கொண்டு வணக்க மிருந்து திலகம் போல் விளங்குபவளும் ; அவனது ஆபத்து காலத்தில் அவனுக்கு அடைக்கல ஸ்தானமாகவும், ஆதரணை மிகுந்தவளாய், அவனது அந்தக்கரணத்தில் தன் சாயா ரூபத்தை—தன் உருவின் தோற்றத்தை—காட்டினவளாய் விளங்குபவளும் ; உருகிக் கரையக் கூடியவாறு மனம் நொந்தகாலத்து ஹிருதயத்திற்குப் புது உற்சாக முண்டுபண்ணிக் குனியும் தலையை நிமிர்ந்து ஸந்தோஷித்த சித்தத்துடன் பார்க்குமாறு செய்பவளும்;—ஆன உத்தமோத்தமமான ஜகத்சிருஷ்டியை அடைந்திருப்பவளாவாள் மனைவி. இத்தகைய குணபூஷணிக்கே உத்தம மனைவியென்ற நாமம் தகும்.

உண்மையாய்ப் பார்க்குமிடத்து உத்தம மனைவியே ஒரு மனிதனுக்குள்ள பெரும் ஆஸ்தியாம். அவளுடைய பிரியத்திற்குக் குறைவும் இல்லை; மாறுதலும் இல்லை; அதற்குச் சமானமும் கிடையாது. நம்மைக் கடவுளாக, தனக்குத் திக்கும் துணையுமாக நம்பிய பிராணி இந்தவுலகத்தில் அந்த மனைவி யொருத்தியேதான். நாம் கண் மூடிக் கொள்கிறகாலத்தில், நமக்குப் பிறகு கண்கலங்காதிருத்தற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்து விட்டுச்செல்லவேண்டியதும் அந்த ஒரு மனைவிக்கே தான். அவளுக்குப் பிறகுதான் மற்றவர்களின் சங்கதி. அவள் சுய நன்மை பாராட்டுகிற தோஷத்தினால் அவள் நம்மீது வைத்துள்ள பிரியத்திற்கு எவ்விதமான தாழ்வும் வருவதில்லை. அவளது சுயநலம் என்பனவெல்லாம் நம்மையும் நமது குழந்தைகளையும் சௌக்கியத்தில் வைப்பதான சுயநலமேயன்றி வேறல்ல. நாம்தான் அவளுடைய சொந்த சொத்து என்று அவளது எண்ணம். அந்த சொத்து சம்பந்தமாய் அவள் சுயநலம் பாராட்டினால், அதற்கு "சுயநலம்" என்ற உலகத்தின் அருவருப்பான சொல்லை உபயோகிப்பது ஒழுங்காகாது. தனக்கு அருமையாகவும் ருசிகரமாகவும் தோன்றுவதனைத்தையும் தனது அருமைக் கணவனுக்கென்றே தனியே எடுத்து வைக்கிறாள். முதன் முதல் அவன் சுகத்தைப் பரிபூரணம் செய்து, அதன் பிறகே தன் சுகத்தைப் பார்க்கின்றாள். அவன் சந்தோஷத்தைப் பதின்மடங்காய்ப் பெருக்கித் துக்கத்தைச் சரிபாதியாய்ப் பங்கிட்டுக் கொள்கிறாள். அவனது மனமுவந்த நம்பிக்கைக்கு ஆச்ரய ஸ்தானமாயிருப்பதோடு, அவனுக்கு உண்டாகக் கூடிய பீதியைத் தடுக்க வல்ல தைரிய ஸ்தானமாயு மிருக்கிறாள். யுவதிகளின் சரீர அவயவாதிகளிலே புருட உலகத்திற்குள்ள பிரமையை—கண்ணோட்டத்தை—எல்லை கடந்த இச்சையினை—ஓளவாய், வெகு பக்குவமாய்த் தணிவித்து, இல்லறத்திலிருந்து கொண்டே துறவிகள் போன்றொழுகும் உத்தமமான லக்ஷ்யத்தை உண்டாக்குவித்துத் தேவ சரீரத்தைக் கொடுக்கின்றாள். என்னைப் போன்றதே நீர் இச்சித்துள்ள யுவகுமாரியின் அங்கமும் என்கிறாள். என்னிடத்து நீர் எய்திடும் இன்பத்தினும் மேலதாக அவளது சமீபத்தில் பெறப்போவதொன்றுமில்லை யென்கிறாள். இங்ஙனம் நல்லுரை கூறி, அவனது அடாத இச்சையைத் தணிவித்து, அவன் செய்யக் கருதிய பரஸ்திரீகமனத்தைத் தடுத்துவிடுகிறாள். தன்னையே அந்த இச்சித்த யுவகுமாரியாகக் கொண்டு, கலந்து, இன்பந்துய்க்குமாறு புரிந்து, அவன் மனதைக் குற்றத்தின் பாதையிலிருந்தும்—களங்கத்தினின்றும்—விலக்கிக் குணப்படுத்திவிடுகிறாள். தான் பெற்ற பெண்குழந்தைகளினிடத்தே அவன் இச்சையுடன் பார்க்காத ஒரு அற்புதமான தெய்விகத்தன்மையை அவனுக்கு உண்டாக்குவித்து, ஒரு பெண் மற்றொரு பெண்ணைப் பார்ப்பது போன்ற பாவனையில்

தன் பெண் குழந்தைகளைத் தன் கணவன் பார்க்குமாறு அவள் பக்குவம் செய்து விடுகிற மாதிரியானது அற்புதத்திலும் அற்புதமேயாம்.

தர்மபத்நினியில்லாத பக்ஷத்தில் வாழ்நாட்களின் சுகத்தை, இச்சை தணிந்த ஸாத்விகத் தன்மையை யறிவது சிரமமேயாகும். அன்றியும் ஜகத் சிருஷ்டிக்கும் மகத்துவ மிராது. சிருஷ்டியும் வியர்த்தமாய் விடும். அவ்வாறாகாது செய்வித்து, நமக்கு அத்தியந்த உற்சாகத்தை உண்டாக்குபவளும் அவளே. இன்சுவையுடன் பதார்த்தங்கள் செய்து பரிமாறி, இன்சொற்களால் பக்ஷம் காட்டுபவளே மனைவி. வீட்டில் புசிப்புக்கு வகையற்றுக் கிடந்தாலும், அந்த ஒரு மனைவி மட்டும் வீட்டில் இருந்து விட்டால் எல்லாம் நிறைந்த வீடுபோலத்தான் அது. அந்த மனைவியின் நிமித்தமாக பரம காருணிகரான ஸர்வேச்வரன் அந்தப் புருஷனுக்கும் உணவு கிடைப்பதற்கான வழிவகைகளைக் காண்பித்துக் கொடுப்பார். "இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை." மனிதனுக்கு இயல்பிலேயே வரக்கூடிய துக்கத்தையும், கஷ்டத்தையும் சமனம் பண்ணி, சந்தோஷத்தை விருத்தி செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவளாய் விளங்குவதனால் அவளை "ஜீவித ஔஷதம்" என்று சொல்வதும் தகும்.

கணவனுக்குள்ள நட்பினர்களுக்குள் முதன்மையாயும், அவனது சுகானுபவங்களுக்கு நிலையாயும், மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய ஸாதகமாயும், விபத்துகள் நேர்ந்த காலத்துக் கைவிட்டோடாமல் ஆப்த மித்திரனை யொப்பப் பக்கத்திலிருப்பவளாயும், யோசனை சொல்வதில் தந்தைபோலும், ஜாக்கிரதாமிஸத்தில் சகோதரியைப் போலும், வாஞ்சையில் சகோதரனைப்போலும், பக்தி சிரத்தையில் புதல்வியைப்போலும், விளையாட்டில் சிநேகிதனைப்போலும், வீட்டு வேலையில் — தனக்கும் ஓர் அதிகாரமுண்டென்று கருதிய எஜமானியைப் போலும், கூப்பிட்ட குரலுக்கு — "ஏன்" — என்றோடி வந்து ஏவலிட்ட தொழிலை இன்பமுடன் செய்யும் வேலைக்காரனைப் போலும்,—இன்னும் ஜீவ யாத்திரையில் உற்பவிக்கக் கூடிய பலவித நிர்ணயக் கொள்கைகளில்—அபிப்பிராய பேதங்களில்—அந்தந்த சந்தர்ப்பத்திற்கும் அநுகூலத்திற்கும் ஏற்ற பிரகாரம் நடந்து கொள்பவளே நாரீமணிகளிற் சிறந்தவளாவள். நங்கையர்க்குரிய குணமணியாவள். புருஷனானவன் ஏதோ விவகாரத் தொல்லையினால் வெந்து நொந்து விடாய்த்து மனமுருகிக் கிடக்கின்றான் என்று வைத்துக்கொள்வோம். அப்பேர்ப்பட்ட புருஷனிடம் இயற்கையிலேயே அமைதியும் ஸாந்தமும் பெற்ற இனிய குரலோடு இன்சுவை மிகுந்த வசனங்களை மனைவி பொழியுமிடத்து—அவை வாடுன்ற புஷ்பங்கள் மீது பெய்யும்

குளிர்ந்த பனி போலும், வெயிலில் தவித்து வெதும்பும் பிரயாணியின் மீது மாநிழலில் அடிக்கும் குளிர்ந்த தென்றல்போலும் இருக்கும். சரீரத்தில் காயமுண்டாகிப் புண் அதிகரித்து எரியுஞ் சமயத்தில், நல்ல தைலம் எவ்விதம் குளிர்ந்து எரிச்சலை யடக்குமோ அவ்விதமே மனைவியின் வார்த்தைகளும் இருக்கும். இம்மாயப் பிரபஞ்சத்தின்கண் மனுஷ்யனாய்ப் பிறந்தவன் துக்கத்தாலும் பல வகைக் கஷ்ட நிஷ்டூரங்களாலும் அவதிப்படும் அச்சமயத்தில் அவனது மனைவியே அவனுக்கு உற்ற துணைவியாய் நின்று உபகரிப்பாள்—உபகரிப்பாள். ஒவ்வொரு மனைவியையும்—ஒவ்வொரு தர்மபத்தினியையும்,—துன்பமானது இன்பமாய்த் தோன்றிடுமாறு கஷ்டத்தை யொரு கஷ்டமாகப் பாராமல் சகித்து, காரிருளைப் போக்கக் கூடிய தேஜோமயமான ஜோதிக் கிரணங்கள் வீசும் இருதயத்தைத் தாங்கி நிற்கிற தர்மதேவதைக் கொப்பாகவே—தர்ம தேவதையாகவே சொல்லவேண்டும். ஒரு ஆண்மகனுடைய பிரபஞ்ச ஸ்ரீயமும், அவனது ஸகல இன்ப நலங்களும், ஒவ்வொரு மனைவியின் கைக்குள்ளேயே அடங்கி நிற்கின்றன—என்று அரசகுமாரன் கூறி முடித்தான்.

7. கற்புப் பிச்சை

அரசகுமாரன் தனது பேச்சை முடித்ததும், நமது கதாநாயகி இராஜகுமாரனைப் பார்த்துச் சொல்லுகிறாள். அரசே! இன்றைய தினத்தில் ஒரு ரஸமான வர்த்தமானம் நடந்து விட்டிருக்கிறது. நான் ஒரு எளியவனின் மனைவி. நேற்று ஆற்றிற்கு நான் செல்லும்போது தாங்கள் என்னைக் கண்டு விரும்பினீர்களாம். அந்த அபீஷ்டத்தை மந்திரிகுமாரர் நிறைவேற்றுவதாக வாக்களித்தாராம். அதன்படியே என்னை எப்படியோ ஏமாற்றிக் கொண்டுவந்து இங்கு தங்களிடம் விட்டுவிட்டார். ஐயோ! நான் அநியாயமாகத் தங்களால் கற்பழிந்து, பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்துக்கும் துரோகியாவதோடு, உங்களுக்கும் ஒரு சண்டாளத்துவம் ஏற்படுத்தி விட்டுக் கடைசியில் எல்லா பாவங்களுக்கும் நானே காரணமாக அவமானத்துக்கு ஆளாகவேண்டியவளா யிருக்கின்றேன். நான் கற்பு கெடுவதற்குப் பிரதியுபகாரமாக திரவிய சகாயம் நீங்கள் செய்வதா யிருக்கலாம். ஆனால் பணத்துக்கு நன்னடக்கையை விலைக்கு வாங்க முடியுமா?

உண்மையாக நான் என்னவோ நன்றாக வாசித்தவள் தான் என்பதை நீங்கள் செவ்வையாகக் கண்டுகொண்டீர்கள். இப்போதும் நான் உங்களிடம் பாராட்டிய அன்பு கபடமானதாக இல்லாமல் யதார்த்தமான உள்ளன்பாகவே இருக்கின்றது. அந்த அன்பை என் ஜீவிதகாலமெல்லாம் தங்கள்மீது வைத்து, தங்களை என் உடன்பிறந்த தமயனாராகவே மனதார எண்ணி, ஒரு ஸகோதரி

தனது ஸகோதரரிடத்துச் செலுத்தும் பிரியத்தைவிட அதிகமான பிரியத்தோடு உங்களிடம் நடந்துகொள்கிறேன். என் பிரியமுள்ள அண்ணு! நீங்கள் நிரம்பவும் வாசித்த புத்திசாலி. சன்மார்க்கப்பிரியர். நிஷ்களங்கமான ஹிருதயமுடையவர். மேலும் மநுநீதி ஞாயங்கள் உணர்ந்த ஒரு இராஜகுமாரர். பிற்காலத்தில் ஒரு தேசத்திற்கு அரசராகி அதை ஆண்டு தர்மபரிபாலனம் செய்யப்போகிற சிரேஷ்ட குணநிதி. உங்களுடைய உயர்ந்த குணத்தைக் குறித்து உங்களுக்கு வேண்டியவர்கள் வியந்து சொல்லியிருப்பதைப் பற்றிப் பல தடவைகளிலும் நான் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நீங்களே சித்தம் சலித்து விபரீத மார்க்கத்தில் மனுேபாவம் செய்துகொண்டிருப்பீர்களானுல், மற்ற சாமான்யர்களைப் பற்றிச் சொல்வதென்ன இருக்கிறது? யாருடைய எண்ணமானது எந்தச் சமயத்தில் எந்த விதமாயிருக்குமோ என்றல்லவோ சிந்திக்கவேண்டியதாகிறது? ஒரு முறை அக்கிரமம் செய்யத் துணிவுண்டானுல், மறுபடியும் அவ்வித அக்கிரமம் செய்யத் தாமதம் நேரிடாது. இது மனிதனுடைய மனதின் தன்மை. எப்போதேனும் வெளிக்கு வராத மறைபொருளும், இரகசியமும் உலகத்தில் இல்லை. தங்களின் துஷ்கிருத்தியம் பகிரங்கப்படும்போது உங்களின் மனுே நிலைமை எவ்வாறிருக்கும்? மொத்தத்தில் இசைகேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டு, அதையுணர்ந்தும் எப்படியோ சமாளிக்கவேண்டுமென்று பிரயாசைப் படுபவராகவே நீங்கள் காணப்படுவீர்கள்.

எனக்கும் என் பிரியமான கணவருக்கும் உள்ள நீடித்த நட்பை நினைக்குங்கால், மனுேகரமான ஞாபகங்கள் நூற்றுக் கணக்காய்க் கிளம்புகின்றன. என் கற்பை இனி இவ்வுலகில் காண முடியாதென்றுகிறபோது, நான் ஆழ்ந்த துயரமும் அநுதாபமும் கொள்வது இயற்கைதானே. எனக்கு நேர்ந்துள்ள விபத்தையும், சஞ்சலத்தையும், ஏக்கத்தையும், விசாரத்தையும் சிந்திக்கும்போது எனது மனம் நெகிழ்கின்றது. எதிரிகள் இழைக்கும் எத்தீங்கிற்கும் அஞ்சுதலின்றி, எத்துணை இடர் வரினும் ஏக்கமின்றி, எதிர் நோக்கிச் செல்லும் தங்களின் மனுேவலியும் மேம்பாடும் இந்தக் கொடிய காமத்தை யடக்குவதில் பயன்பட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அப்போதன்றோ தங்களைச் சரித்திர புண்ணிய புருஷரெனப் புகழல் தரும். காமம் என்பது மறுகணத்தில் மறைவது. அதற்கு 90-நாள் என்று கூட ஒரு கெடுவிட்டிருக்கிறுர்கள். உலக வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றி மசானத்திலிருக்கும் பறையனைக் கேட்டால் நன்றுகச் சொல்லுவான். ஏழையையும் பணக்காரனையும் ஒரே மண்ணில் கிடத்தி எரித்ததும் புதைத்ததுமான அநுபவக் கதைகளை அவனிடத்தில் கோடிக்கணக்கான

விருத்தாந்தங்களுடனும் அறியலாம். சரீரமே நிலைப்பொருளல்லாதிருக்கும் பொழுது, அதில் உற்பத்தி பெற்ற காமம் என்ன சாஸ்வதப் பொருளா? கானுறு போன்று நிலையெனப் பிரவகித்துச் சிற்றின்பம் சின்னீரதாய்க் கணத்தில் ஒழிவதுதானே! சந்தான விருத்தியின் நிமித்தமாய் ஏற்பட்ட இதனைத் தீயவழி செல்லவிடாது தடுப்பதன்றோ இராஜநீதி? மணிமேகலை என்ற காவியத்துள்,

"மாதவர் நோன்பும், மடவார் கற்பும்
காவலன் காவல்—இன்றேனில்—இன்றால்"

என்று பேசப்பட்டிருக்கிறதே. ரக்ஷிக்கவேண்டிய தாங்களே பக்ஷிக்கப் பார்ப்பீர்களாயின் எனக்கு அடைக்கலம் ஏது? தைரியசாலிகள் உலகத்துக்கு மிகவும் உபகாரம் செய்கிறவர்கள். தைரியமென்றால் தேக சம்பந்தமான தைரியமல்ல. மானஸிகமான தைரியந்தான் சிலாக்கியபாத்திரமாயிருக்கிறது. ஸத்தியத்தைக் காப்பாற்றுகிறதற்காக ஸமஸ்தவிதமான சங்கடங்களையும் ஸஹித்திருப்பதுதான் தைரியத்தின் லக்ஷணம். நிஜத்தைக் கண்டு பிடிக்கவும் நிஜத்தைச் சொல்லவும் தைரியம் வேண்டும். சோதனைகளை நிக்ரஹிக்கவும் தைரியம் வேண்டும். தனக்கு நியமிக்கப்பட்ட வேலையைச் செம்மையாய்ச் செய்யவும் தைரியம் வேண்டும். அந்தத் தைரியத்தை இப்போது நீங்கள் வகித்து, தாராள மனதாலும், தர்மசிந்தையாலும், பெருந்தன்மையாலும், நீதியாலும் என் மனத்தின் கொந்தளிப்பை ஆற்றி மானஸம்ரக்ஷணம் செய்து கற்புப் பிக்ஷை தர வேண்டுகின்றேன். உங்களுக்கு சொந்த உடன்பிறந்த தங்கை கிடையாது. அந்தப் பாக்கியத்திற்கு இத்தனை நாள் கொடுத்துவைக்காமல் இருந்தீர்கள். இப்போது அந்த சகோதர பாக்கியம் வலுவில்தானே கிடைத்திருக்கிறது. இந்தப் பிரியமுள்ள தங்கைக்குத் தமயனாகிய நீங்கள் செய்யவேண்டிய உபகாரம் யாதென்றால், அவளுடைய கற்பைக் காப்பாற்றி, தன்னுடன் பிறந்த சகோதரியாகப் பாவித்து அபிமானிக்க வேண்டுமென்பது தான். இரக்கமான நெஞ்சுடனும் இந்த என் விக்ஞாபனத்தை ஏற்றருளல் வேண்டும்.

"இரக்கம்" என்பது மேகத்தினின்றும் வருஷித்துக் கடுநிலத்தைக் கனிவிக்கும் வானமிர்தமாகிய இளமழை போலத் துளி துளியாய் வீழ்வது. அது இரங்குவோன், இரங்கப்பெறுவோன் இருதிறத்தாருக்கும் உயிர்த்துணையாக உதவும் அதிசய வரம். அது தேவ லட்சணங்களில் ஒன்று. ஆனதுபற்றி, அரசருக்கு நவரத்தகசிதமான கிரீடத்தினும் சிறந்த அணியாக விளங்குவது. மண்ணுலகாளும் மன்னருக்குள்ள இரக்கம் எவ்வளவோ, அவ்வளவிற்கு அவர்கள் நீதி உக்கிரகம் தணிந்து பலப்படும். இவ்வாறு அவர்கள்

அதிகாரத்திற்கு மாற்று ஏற ஏற, அது சர்வ லோகாதிபதியாகிய கடவுளின் அதிகார மயமாகும். அவ்விதமான இரக்கத்தை அரசகுமாரராகிய தாங்கள் என்னிடத்திற் காட்டி, எனக்கு விடுதலையருள வேண்டுகின்றேன். ஒரு மனைவி பெற்றிட வேண்டிய உத்தம குணங்களைத் தாங்களே விவரித்துள்ளீர்கள். என்னையும் ஒரு உத்தம மனைவியாக்கி உன்னத ஸ்தானத்தில் இருத்தவேண்டும். கற்பினைக் காக்க மன்றாடுகின்றேன். கருணை கூர்ந்து, அருள் சுரந்து, காரிகை மனம்போல கோரிய வரம் தரில் கனபுண்ணியமுண்டாகும் என்று பிரார்த்தித்து நின்றாள்.

இப்போதுதான் அரசகுமாரனுக்கு யாரோ கன்னத்தில் பளிரென்று அறைந்ததுபோலத் தெளிவு ஏற்பட்டு அவனது சொந்த புத்தி அவனுக்கு வந்தது. காம இச்சையெல்லாம் எங்கேயோ பறந்துபோயிற்று. தான் எவ்வளவு பிசகான காரியத்துக்கு உடன்பட்டு விட்டோமென்கிற ஞானம் அவனுக்கு உதயமாகவும் அவன் திடுக்கிட்டுப் போயினான். அவனுடைய நேத்திரங்களிலிருந்தும் ஜலம் பிரவகித்துக் கொண்டிருந்தது. கீழே விழுந்து கிடக்கும் பெண்ணையும் பாராமல் தான் செய்ய இருந்த அக்கிரமத்திற்காகத் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு அழுது புலம்பலானான். அவனுக்கு மனது சகிக்கக்கூடவில்லை. கத்தியை உருவித் தன்னை வெட்டிக் கொள்ள வேண்டுமென்கிற வீராவேசங் கூட அவனுக்கு அந்த சமயத்தில் உண்டானது. பிறகு மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அதுவரைத் தன் காலடியிலேயே வீழ்ந்துகிடக்கும் பெண்மணியைத் தன் இருகரங்களாலும் தூக்கி நிறுத்தித் தான் அவள் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து மன்னிப்பு கேட்டுக்கொள்ள முயன்றான். அதைப் பெண்மணி தடுத்து, அவனைச் சமாதானப் படுத்திக் கட்டிலின் மேல் வீற்றிருக்கச் செய்து, தானும் அவனுடன் உட்கார்ந்து கொண்டு, சொந்த தங்கைபோல அவனைத் தேற்றுவாளாயினள். அரசகுமாரனும் ஒருவிதமாக மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, நான் இதுகாறும் செய்ததை யெல்லாம் மன்னித்துக் கொள்; நீ சொல்லியபடி எனக்குத் தங்கை யில்லைதான். நீயே என் உண்மைத் தங்கையாக இரு. இன்று முதல் உன்னை என் உடன்பிறந்தவளாகப் பாவித்து நடக்கக்கடவேன். இது வாஸ்தவம் என்று மந்திரிகுமாரன் மேலாணையாகச் சொல்லுகிறேன். உன் கற்பைக் காப்பாற்றியதோடு என்னையும் பரிசுத்தவானாக்கிய கடவுளுக்கு நமது பிரார்த்தனையைச் செலுத்தக்கடவோம் என்று கூறிவிட்டு, இதுவிஷயங்களை யெல்லாம் மந்திரிகுமாரனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தனக்கு விருப்பமா யிருக்கிறதென்றும், தங்களிருவருக்குள் எதும் ஒன்றையும் மறைத்து வைக்கும் வழக்கமில்லையென்றும், அதற்கு அநுமதி வேண்டுமென்றும் திலகவதியைப்

பிரார்த்திக்கலானான். "அவள் அதிக ஆநந்தத்துடன் கட்டிலின் கீழ் பதுங்கி நிற்கும் தன் பிராணநாதனை மந்திரிகுமாரனை எழுப்பப் போக, அதற்குள் அவனும் கட்டிலின் கீழிருந்து வெளிப்பட இராஜகுமாரன் இதென்ன அதிசயம் என்று பிரமித்தான். மந்திரிகுமாரன் அரசகுமாரனைத் தழுவிக்கொண்டு மூர்ச்சையாய்ப் போனவன் போற் கீழே விழுந்து, மீண்டும் எழுந்து, அவள் என் மனைவி என்று நடந்த விஷயங்களையெல்லாம் தெரிவித்தான். திலகவதியும் அரசகுமாரனை நோக்கிப் பின்வருமாறு தன் கதையைக் கூறிப் பிரலாபிப்பதானாள்:—

மாநிலந் தன்னில்யான் மிக்கதன வைசியன்
    மகனான தற்கழுவனோ
மங்கையென் விதவப்ர பாவத்தி னுக்கேற்ற
    மணவாள னைத்தேடவே
நானிலம் புகழுமென் றந்தைபல நாட்பட்ட
    கனிபா டுணர்ந்தழுவனோ
நன்மந்த்ரி மைந்தன்மோ கனசந்த்ரன் யாத்ரையாய்
    நகர்விட்டு வந்தபோது
மேனியெழில் கண்டென்னை மனைவியாக் கித்தந்த
    விந்தையை நினைத்தழுவனோ
வேட்டனு முடிந்தமறு வாரத்தி லோரயன
    வேலைக்கு ளாகமீண்டு
தானினிது வருவதாய் ராஜபுத் திரருடன்
    சார்ந்தகன் றிட்டநாதர்
தருவருட மும்பல கழிந்துய்வ ராதக்கு
    தங்கியதை யோர்ந்தழுவனோ?

2

செயலான வெனதுபர்த் தாவுமே சுகமாய்த்
    திரும்பிவர வேண்டுமென்று
தேவிவர லக்ஷ்மியின் கோவிலுக் கனுதினஞ்
    சென்றமன் றாடிவந்த
இயலாக வேபிரார்த் தனைசெயப் போம்பொழுதி
    லென்னையுந் தாங்கள் தனது
இஷ்டனது மனைவியென் றறியாம லாசைகூர்ந்
    திட்டதை நினைத்தழுவனோ
கயமேவு நதிவிட்டு விடுசெல் லும்போது
    கண்டென்னி டத்தில்வார்த்தை
கழறிய வமைச்சன்மக னைக்கணவ னென்றே
    கருத்தினி லறிந்திடாமல்

துயலா னெனப்பேசி யவர்மீது சென்றவென்
னகமதை யடக்கவேநான்
அருமுயற் சிகள்செய்த போதுள மிகத்தவித்
ததைநினைத் தேயழுவனோ?

3

பின்னெனது தந்தைதா யாலவரு மெந்தன்
பிராணநா யகரென்னவே
பேசிடக் கண்டுநான் கொண்டமகி ழின்பப்
பெருக்கினை நினைந்தழுவனோ
என்னுயிர்க் குயிரான நாதரிஷ் டப்படிக்
கிருள்சூழு மாலைநேரம்
எழில்நதிக் கரையிலுள வரலக்ஷ்மி கோயிலுக்
கேகிடும் போதங்கவர்
முன்னிலையி லேதனைத் தூக்கிலிட் டுக்கொள
முயன்றதை நினைந்தழுவனோ
முதல்வனே பின்னர்தா மென்மீது மயல்கொண்ட
முறையறிந் தேதுணிந்து
மன்னியுள போகமாற் றிச்சகோ தரிவரிசை
வைத்திடச் செய்வேனென
மனதில்நான் சபதமிட் டுக்கொண்டி ருந்தசெயல்
வகைதனை நினைந்தழுவனோ?

4

காவலா முடிவினிற் றனியறையி லுங்களைக்
காமாந்த காரமாகக்
கண்டபோ தெங்கெனது கற்புக்கு மோசமது
கவருமோ வென்பதாகப்
பாவைநான் பாதவித்துக்கொண்டி ருந்ததோர்
பான்மைதனை யோர்ந்தழுவனோ
பக்குவம தாய்க்கழுத் தறுபட்ட கோழியின்
பரிதாப நிலைமைபோல
ஆவியுந் தத்தளித் தென்சாது ரியமதா
லாங்குபிர சங்கமொன்றை
யற்புதம தாகவே செய்துகா லங்கழித்
ததைநினைத் தேயழுவனோ
தேவனும் பிரமனுந் தங்கள்சோ தரியாய்
ஜெனித்திடும் படிசெயாமற்
சிரழிய விட்டுவே டிக்கைபார்க் கின்றதோர்
செயலினை நினைத்தழுவனோ

என்று ஆற்றுமையுடனும் புலம்பியவாறு துடிதுடித்தாள்

ஐயோ! சிநேகிதத் துரோகியானேனே என்று இராஜகுமாரன் மூர்ச்சையாகினன். திலகவதியும் சுகுமாரமோகனசந்திரனும் உபசாரம் செய்து மூர்ச்சை தெளியவைத்தனர். இராஜகுமாரனது சோகம் தெளியவும், அவன் மனதைச் சமாதானப்படுத்தவும், அதிக நேரம் வேண்டியதாயிற்று. இருவரும் சேர்ந்து பெண்மணியின் புத்திவைபவத்துக்கும், கற்பு லக்ஷணத்திற்கும் புகழ்ந்து, தங்களைத் தப்புவித்துக் காத்த கருணாநிதியாகிய கடவுளுக்கு ஸ்துதி செலுத்தினார்கள்.

* * * * *

மறுநாட்காலையில் செட்டியார் வீட்டிற்கு மூவரும் சென்று சில நாள் அங்கு தாமதித்தார்கள். மந்திரிகுமாரனுக்கு சாந்திமுகூர்த்தம் வெகு வைபவமாய் நடந்தேறியது. பிறகு எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு திரிசிரபுரிக்குப் பிரயாணப்படலாயினர். சொந்த ஊரை விட்டு வந்து அநேக வருடங்களானதால் வெகு ஆவலுடன் தங்களின் தேசத்தெல்லையைச் சமீபித்தார்கள். சோந்த ஊர் வந்து சேர்ந்தோம் என்ற சந்தோஷமானது அவர்களின் மனதைப் பூரிக்கப் பண்ணிற்று. எல்லோரையும்விட இராஜ குமாரனுடையவும், மந்திரி குமாரனுடையவும் வரவைக் கண்டு அவர்களுடைய தாய் தந்தையர்கள் அதிகமாகச் சந்தோஷித்தார்கள். வெகு சீக்கிரத்தில் அரசமைந்தனுக்கு நல்ல லக்ஷண யுவதியான பெண்மணியைத் தேடி மணமுடிப்பித்தனர். இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் இவ்விருவரின் நாயகிகளும் அதிக அந்நியோன்னியமாகச் சந்தோஷத்துடன் நாட்களைக் கழித்து, பிரஜாபரிபாலனம் செய்து கொண்டு வெகுகாலம் சுகமாக வாழ்ந்திருந்தார்கள். சுபம்.

முற்றிற்று.

'நட்பு' காத்திடும் நாரீரத்நங்களும், அன்பு பேணும் அங்கனாமணிகளுமே உங்களுக்கு வாழ்க்கைத் துணைவியராக வந்து வாய்க்கட்டும். உங்கட்கு அமைந்துள்ள அரிவையரும் அங்ஙனமே ஒளிர்வாராக. அவர்களுக்கு 'நூறாயிரம் பல்லாண்டு.'

விகடமாமா

Registered.

மாமாவின் விகட ஞானம் எப்போது வெளிவருமென்று காத்துக்கொண்டிருக்கும் என் விநோத விகட உலகத்தின் குடிபடைகளே! என் நஞ்சான் குஞ்சான்களே! நீங்கள் வாழ்க. தலை—வருகிற இடத்திற்கு உங்களின் வயிறு தொந்தி உப்பி உயர்ந்து என்றும் வாழ்க. அநேக ஜென்மங்களாய் உலகிலுள்ள ஜனங்களின் சுபாவங்களையும், நடைநொடி பாவனைகளையும் கவனித்து, சீர்தூக்கி, இன்னும் தூக்கி, ஆராய்ந்தறிந்து, விட்ட குறை தொட்டகுறையின் பயனாக வாமன மூர்த்தியைப் போல் சிறிய உருவமைந் திருப்பினும், அவ்வனுபவங்களையெல்லாம் இச்சென்மத்தில் அறிந்து உலகத்தோர்க்கு உதவும் மாமாவாகிய நானும் நீண்டு நெடுங் காலம் வாழ்க.

நிர்ப்பயமாய், நிரஞ்சனமாய், நிதானமாய், நினைவாய், நிச்சயமாய், நிகழ்வதாய், நிசிதமாய், நிதரிசனமாய், நியாயமாய், நிறைவாய், நிர்மலமாய், நிருமிதமாய், நிலையாய், நிழலாய், நிபுணனாய், நிரந்தர இன்பமாய் விளங்கும் நேசனாகிய மாமா ஆசையுடன் பாசத்தோடு இனி மாதந்தோறும் வந்து புகுந்து சிறந்து தோன்றுவேன். வாராந்தரமாகவும் வருவேன். எனக்கோ மருகிகள் எத்தனையோ பேர். மருமகன்களும் எத்தனையே பேர். அவர்களெல்லாம் இல்லறம் நன்கு நடாத்திச் செல்வ மக்கட் பேறு திவ்ய ஸத்கீர்த்தியைத் தாங்கி, ஒருமித்து மேன்மேலும் வாழ வேண்டு மென்பதற்கே இந்த மாமாவின் இரவு பகல் உழைப்பெல்லாம். எந்த விதமாயினும் எழுநிலை மாடத்தில் பேரனுக்குப் பேரனை, அந்த பேரன் தனது பேரனுக்கப்பேரனைக் கண்டு, பார்த்துக்கொண்டு வீடு நிறைய குழந்தைகளும் குட்டிகளுமாய், அவர்களின் மலமும் ஜலமுமாய், ஓங்கவேண்டு மென்பதே மாமா கையெடுத்துக் கும்பிடுகிற பிரார்த்தனை.

மாமா வந்ததற்கு வாழ்த்துதல்கள் வழங்கிவிட்டேன். முகவுரை—முன்னுரை—முக்கிவிட்டேன். நான்முகம் நுழைந்தானது. இனி சிறப்புரை சிரிக்கசிமானைத்தேடவேண்டும் அந்தசி(ச்சி)மானுக்கு பி. எ.பி.எல்,-எம். எ. எல். டி. எப். எம். யூ—வி. ஐ. இ—எல். எம். எஸ்—போன்ற பட்டங்கள் இருக்க வேண்டும். அப்போது தான் சிரிப்புரைக்கு மதிப்பு, கெலிப்பு, குறிப்பு, உண்டு.

மாமா நாடறிந்த பார்ப்பான். அவனுக்கு இந்த—இலவசத்தில் வந்ததற்காகப் பேசுகிற சிறப்புரைப் பூணூல் ஏதுக்கு? வேண்டா. என்னைக் காசு, பணம் கொடுத்து உணவூட்டும் உத்தமர்களே உளறினால் போதும். அவர்களே எனக்குத் தித்திப்பானவர்கள். தின்னத்தின்னக் கொஞ்சிக்கொஞ்சி ஊட்டுகிறவர்கள். அவர்களுக்கு ஊட்டட்டும் ஆண்டவன் வேண்டிய வரையிலே—மூக்குக்குமேல் ஏப்பம் தெவிட்டுதல் வருகிற வரைக்கும்.

இனி என் பொறியலை, விகடச் சந்தையை விரிக்கின்றேன். எல்லாம் வாசிக்க வாசிக்க சிரிப்பாக இருக்கும், எல்லாம் வேடிக்கைத் துண்டுகள். எல்லாம் விநோதத் துண்டுகள். எல்லாம் அகசியத்துண்டுகள். எல்லாம் இன்பமானத் துண்டுகள். எல்லாம் அகடவிகடத் துண்டுகள். எல்லாம் புத்திபோதனைத் துண்டுகள். எல்லாம் ரசக்கியமானத் துண்டுகள். நல்ல நல்ல துண்டுதல்கள்.

ஆனால் ஞான உணர்த்துதலாகவும், ரஸாநுபவங்களாகவு மிருக்கும்.

பலே பேஷ்! வெகு சோர்த்தி! ரொம்ப ரொகுசு! வெரிகுட்! போத் அச்சா! கிண்டா மஞ்ஜிது! கேட்கக் கேட்க மாமாவுக்குச் சிரிப்பு மேல் சிரிப்பும், யோசனைமேல் யோசனையுமாய் நாடகத்துக்கு வேண்டிய சிங்கார ரஸம், சோக ரஸம் ஆச்சரிய ரஸம், அதிரஸம், மனோகு ரஸம், வாலை ரஸம், அன்ன ரஸம், பருப்பு ரஸம், காய் ரஸம், கனி ரஸம்,—முதலிய எல்லா ரஸங்களும் ஒருங்கு திரண்டு "பலே கிச்சடி பருப்பு சோறு, சோம்பு சக்கரை வள்ளிக்கிழங்கு"-என்பதாய் வெகு இனிப்பும் புளிப்புமாகவே இருக்கின்றன. இது எந்த சங்கதி, என்ன சங்கதி, எதைப்பற்றி என்கிறீர்களோ, நம் நாட்டிலே பெண்களும் ஆண்களும் படிக்கும் தற்காலப் படிப்புச் சங்கதி தான். இக்காலத்திய படிப் பென்னமோ, "அதிலே குறைச்சலில்லை ஆட்டடா பூசாரி"—என்பதாக, அது சொல்லுந் தரமல்ல. கூடினவரையில் பதினாறு வயதுக்குள்ளாக பரலோக பூலோக மெல்லாம் பார்க்கும்படி வைத்து விடுகிறது. ஆனால் படிப்போடு கூடவே ஏறி வருகிற இங்கிலீஷ் நாகரிகத்தைப் பற்றித் தான் என் சந்தோஷமானது ஜலதோஷமா யிருக்கிறது. முற்காலத்தில் உபாத்திகளுக்கும் பிள்ளைகளுக்கும் இருந்த ஒரு தாரதம்மியம் இக்காலத்தில் ஒரு எள்ளத்தனையுங்கூடப் பொறுக்கி யெடுத்தாலும் கிடைக்காது. அவரவர்கள் தம் பாட்டைப் பார்க்கிற சங்கதியாய் விட்டது. உபாத்திகளுக்கும் பிள்ளைகளுக்கும் இப்படி யிருக்க, இவர்கள் படித்து வருகிற படிப்பு என்னென்ன வென்றாலோ, அது ஒரு கன்றாவி! உடுபாவனைகள் தான் சொல்லத் தேவையில்லையே! 'ஹாக்ஸ் போர்ட் காலேஜ்" கேம்பிரிட்ஜ் காலேஜ்முதலான காலேஜிகளின் மாணவர்களைப் போன்ற 'லண்டன் குஞ்சு' வேஷந்தான் மிஞ்சிப்போய் விட்டிருக்கிறதே!

அதுநிற்க, கல்வி-பட்டப் பரீக்ஷையில் தேறுவதற்குள்ளாக, மற்ற 'பிரைவேட்' படிப்புகளி லெல்லாம் பாஸ் பண்ணிக்கொண்டே வருகிறார்கள். இந்தப் பிரைவேட் படிப்புகளில் முதலாவது மூக்குக்கண்ணாடி பாஸ்! இந்தக் கண்ணாடிகளோ மெட்ரிகுலேசன் மூக்குக்கண்ணாடி யென்றும், எப். ஏ—மூக்குக்கண்ணாடி யென்றும், அதற்குமேல் டிகிரி டிகிரியாய் ஏறுகிறது. இந்தக் கண்ணாடிகளைப் பாஸ் செய்து கொண்டு வரும்போதே அதற்கேற்ற ஜோர் சிருங்காரங்களும் ஏற்றிக்கொண்டே வரப்படுகிறது. இந்த ஜோர்கள் ஏறினால், அதற்கேற்ற கைத்தடியும் உபயோகப் படுகிறது. தடியைப் பிடித்தவுடனே, தன்னையும் அறியாத ஓர் கம்பீர அழகு நடையொன்று உதித்து, அந்த நடைக்கேற்ற பார்வை யொன்று கிளம்பி, கண்களை உருட்ட வைத்து விடுகிறது. காபிஹோட்டலில் விருந்து நடக்கிறது. இதன் நடுவிலே ஸிகரெட், ஹாவானு, டின்டிகல் (Dindigal) முதலான சுருட்டுகளாவது, மக்வா, பட்டணம்—முதலான மூக்குப்பொடியாவது உபயோகத்திற்கு வந்து விடுகிறது. இவைகளுக்கு வெள்ளி ஸிகாரோல்டராவது, வெள்ளி மூக்குப்பொடி டப்பியாவது வேண்டி வந்து விடுகிறது. இவைகளி லெல்லாம் தேறும்போதே இவைகளின் பெருமையைக் காட்ட, "அம்மா மார்கள்" வசிக்கும் அழகிய வீதிகளில் ஒருநாளைக்கு நான்கு முறையாவது நடந்து போகச்செய்து, தகப்பன்மார் வண்டி குதிரை யிருந்தால், அதையாவது அவ்வீதியில் ஓட்டிப் போகும்படி செய்கிறது. அப்படியே வெள்ளை, வெட்டை, நீரிழிவு முதலான பாஸ்களில் சித்தியடைகிறார்கள். அத்துடன் நாடகம், பயா

ஸ்கோப் காட்சிகள் பிரதர்கள் ஸஹித மாக வேறே! இங்ஙனமான படிப்புக ளில் கூடிய சீக்கிரம் அவர்கள் மார் புடைந்து, இடுப்புடைந்து, நாவற ண்டு, மண்டை காய்ந்து, பள்ளிக்கூ டத்துப் பாஸ் பண்ணுவதற் குள் ளாக, பரலோக ஞானத்தைக்காண ஆளாய் விடுகிறார்கள்.

ஆண்பிள்ளைகளுடைய படிப்பு இ ம்மட்டிருக்க, இனி இவ்வூர் பெண் மணிகளோ! ஆ! ஆ! பாலமணி, இரைமணிதான்! பெண்களின் பள் ளிக்கூடத்தைக் கொஞ்சம் எட்டிப் பார்த்து விட்டால், எல்லாம் சல்லா பிசிகளும், கவுன்லேடிகளும், வாசிக் கொண்டை ரோணுக்களு மாகவே காணப்படுகிறதால், அமெரிக்கன் (Females' Higher Education) காலேஜி இதுதானோ என்னமோ வென்று சந்தேகிக்க இடமாகி விடு கிறது. இவர்கள் படிக்கிற படிப்பு களோ! எல்லாவற்றிலும் விநோதம்! குடித்தன சம்சாரத்துக்கு உதவாத படிப்பு! முதலில் அவர்களுக்கு நாற் காலி இல்லாமல் பாடம் வரமாட் டே னென்கிறது! வீட்டில் அடுப் பண்டை குந்தப்போனால், இரண்டு காலும் தோப்புகரணம் போட்டாப் போல் இருக்கிறதாம்! கைக்குக் கு டையில்லாமல் நடை கொடுக்கமா ட்டே னென்கிறதாம்! சலவை மல் கூடத் தேகம் தாங்கமாட்டேனென் கிறதாம்! நாகரீகப் பாவாடை யில் லாமல் நடை கோணிக் கொள்ளு கிறதாம்! நாகாசு பொன்வளையல் இல்லாமல், கைகள் புஸ்தகத்தைத் தூக்கமாட்டே னென்கிறதாம்! ஜாக் கெட்டில்லாமல் உடம்பு திமிரேறிப் போகிறதாம்! வான்கோழி வாலைப் போலவும், வாத்து வாலைப்போல வும் பின்னல் கொண்டை போடா விட்டால் கேசங்கள் காற்றுக்குப் பற க்கிறதாம்! இருபது புஸ்தகத்தையும் சிலேட்டையும் தூக்கி இடுப்பின் பேரில் வைக்காவிட்டால் இடுப்பு நோகிறதாம்! இதிலும் மிஞ்சினவர் களுக்கு காலுக்குப் பூட்ஸூம், போ கவர வண்டியும் இல்லாமல் கால் வெல வெலத்துப்போய் உடம்பு உ ருகி உட்கார்ந்து விடுகிறதாம்! யாரு க்கோ—எவனுக்கோ — அவன் பிற் கால ஸ்திதி இல்லை என்னவோ! அவ னோடு பிறர் வீட்டில் வாழ்வதற் கெ ன்று பிறந்து விட்டிருக்கிற பெண்க ளுக்கு இதெல்லாம் கட்டி வருமா? விளையும் பயிர் முளையிலே!

இந்தப் படிப்போடுகூட, உடம்பு வளையாத விதத்திலும் தேர்ந்து, இரண்டொரு மேல்படிப்பில் பா ஸாகி விட்டார்களோ, தகப்பனும் தாயும் இந்தத் துரைசானிகளுக்கு வேலைக்காரராய்ப் போக வருகிறது. அப்பால் அம்மான் ஆண்பிள்ளை களைக் கொஞ்சம்கூட மதிக்கிற தில்லை. பெற்றவர்களையும் மதிக்கிற தில்லை. கட்டிக்கொண்ட புருஷனை யும் மதிக்கிறதில்லை. அவனை வீட்டு வேலை பார்க்கச் சொல்லுகிறார்கள்! இவ்வாறாக இந்தக் கோணல் படிப் பானது சடைசியாகக் குடித்தனத் தைத் தாறுமாறாக்கி விடுகிறது. ஐயோ! இந்நாளில் இம்மாதிரியான படிப்புத்தானா கிடைத்தது! ஆண் களைப்பார்த்தாலும் அப்படி! பெண் களைப் பார்த்தாலும் இப்படியா? இதற்காகத் தானா பழய கிழத்தலையர் களும், கீர்த்தித்தலையர்களும் என் னைப் போன்ற விகடமாமாத்தலையர் களும் இப்பக்கத்துக்கு இன்னும் படிப்பு வேண்டுமென் றடித்துக் கொள்கிறது? ஆண்களும் பெண் களும் படிப்பு படிக்கக்கூடாதென்று யார்தான் சொல்லுவார்கள்? படித் தாலும், அடக்கம், ஒழுக்கம், சாந்தம், சற்சிந்தனை, நன்னடக்கை வேண் டாமா? இவைகளெல்லா மிருந்தா லல்லவோ படிப்பின் பெருமையும், பெற்றோரின் பேரும் மலைமீது ஏற்றிய தீபம் போலப் பிரகாசிக்கும், நாடு செழித்து நல்லமழைபெய்யும். இந்த ஒழுக்கவழக்கங்க ளில்லாமல், வெறும் டம்பங்களுக்காகவும், வீண்

கௌரவங்களுக்காகவும், படித்து, பாஸ்செய்துவிட்டு, பன்னாடைகளாகும் பையன்களும் பெண்களும்—இதைப்பற்றி இப்போதில்லாவிட்டாலும், பிற்காலத்தில், பெப்பே என்று விழிக்க வருமென்பதை எனக்கு முன்னிருந்த ஒட்டைவாய்க்கிழவர்களாகிய மகா பெரிய தாத்தாக்களெல்லாம் சொல்லிவைத்திருக்கிற பழங்கதைகளைப் படித்தாவது தெரிந்து கொள்ளுங்கள். அதற்கும் உடம்பு வளையாமல் சோம்பெடுத்துக் கொள்வதானால், அப்பால் விகடமாமா என்ன சொல்லப்போகிறேன். அவரவர் விதி வழி—புத்தி என்பதே முடிவு. கேட்டால் கேளுங்கள். பிற்பாடு ஆண்டவன் ஏற்பாடு, உங்கள் பாடு. மாமா! ராமா! சபம்! கு!! கவாஹா!!!

விகட விலாஸம்

வரிப்பணம் வாங்குகிற சுறசுறப்பு ரோடுகளின்மீது இல்லையென்று பைஸிக்கல் வண்டிகள் சொல்லுகிறதாம்.

ஸத்தியம் நிலைப்பதற்கு இன்னும் பலவகையான சாராயதினுசுகள் வந்தால் போதுமானதென்று மதுரைவீரன் கூறுகிறார்.

தேசாபிமானம் என்பதெல்லாம் எப்படித் திலகராகலாம், மகாத்மா காந்தியாகலாம் என்பதில் இருக்கிறதே தவிர, ஏழை எளியதுகளிடத்தில் இரக்கப்படுவதில் இல்லையென்று உளவறிந்த பெருச்சாளி கூறுகிறதாம்!

மலமும் ஜலமும் பிள்ளைபெறுமலடிக்குத் தான் அசிங்கமாயிருக்குமென்று பதினறு பெற்று வாழ்வு கண்ட புத்திரவதி கூறுகிறளாம்.

18-வயதுக்குமேல் ஆண்களுக்கும் 12-வயதிலே பெண்களுக்கும் அவர்களின் நெஞ்சுக்குள்ளே வெளிக்கு வராத ரகசியங்கள் அர்த்தம் வந்து தலைதூக்கி கொள்கிறதென்று மாமாவின் சோதிடம் சொல்லுகிறதாம்.

பிறர் வீட்டுத் துக்கத்துக்கு வேதாந்தம் பேசுகிறவர்களுக்கு, தங்கள் வீட்டிலேயே அது சேர்ந்து விட்டால்,அந்த வேதாந்த படனம் அப்போதைக்கு வருவதில்லையே என்று அநுபவம் கேட்கிறதாம்.

ஆசைக்குக் கிழத்தன முண்டோ? தரித்திரனுக்கு சவுக்கிய முண்டோ? பணமோ என்றலைபவனுக்கு ஈவு இரக்க முண்டோ? கடின சித்தனுக்குக் காருண்ய முண்டோ? பைத்தியக்காரனுக்கு விவேகமுண்டோ? அல்ப வித்தைக்கு அகங்காரம் குறைவோ? வியபிசாரிக்கு மானம் உண்டோ? பாபிக்கு ஆயுள் குறைவோ? கையிலாகாதவனுக்குப் பேச்சுக்குக் குறைவோ? அநுபவப் பத்திரிகைக்கு வேடிக்கைப் பேச்சு குறைவோ!

தகப்பனே சம்சாரத்தைக் காப்பாற்றாதவன்—பசுமுன்ன தாயோ ஊமை—பெண்ஜாதியோ இராக்ஷஸி—மருமகனே அனாதை—தன் பெண்ணே பெரும் விபசாரி-பிள்ளையோ பெரிய துடுக்கன் — மருமகளோ முழுத்திருடி-மாமியோவாய்ப்பட்டி-மைத்துனனே தலைப்பாமாற்றி-தம்பியோ தரிதலை—சிற்றப்பனுக்கோ பொறாமைக்கண்கள் — தங்கையோ தன் வீட்டுக் கோணலை வீடுவீடாய்ச் சென்று தமுக்கடிப்பவள்-இப்படிப் பட்ட வீடு என்ன வீடென்று ஒருவர் மாமாவைக் கேட்க, குட்டிச்சுவர் என்றாராம்.

ஆபத்தை விலக்கப்போனல்
ஆபத்து நமக்கே யெய்தும்,
சாபத்தை விலக்கப்போனல் சபி
ப்பார்கள் நம்மையே தான்,
கோபத்தை யடக்கினலோ குழந்
தையும் வய்க்கு நம்மை,
பாபத்தை விடுக்கப்பார்த்தால் பைத்
த்தியம் பிடிக்குந் தானே.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-17. | திரிச்சி-1௳ ஜூலை 1921. | இதழ்-5.

ஒருவரது கடிதத்தை மற்றொருவருக்கு அனுப்பிவிட்ட தவறுதலில் உண்டான விபரீதங்களின் விநோதம்.

1. வெங்கடரத்தினத்தின் தவறு.

1

கன்னிய மிக்க ஐய,

தாங்கள் இயற்றிய மூன்று நூல்களையும் வாசித்து இன்புறப் பெரிதும் அவா. எனினும் யான் மிக்க எளியவள். தங்கள் பந்துக்களுக்கும், ஸகோதரிகளுக்கும் இனமாக எத்தனையோ புஸ்தகங்கள் கொடுத்திருப்பீர்கள். அதுபோல் என்னையும் கருதி பாதிவிலைக்கு மூன்று புஸ்தகங்களையும் தரப் பிரார்த்தனை. ரூபாய் இரண்டுக்கு மூன்று புஸ்தகங்களையும் வி. பி. யில் தரவேண்டுகின்றேன். இந்த உபகாரம் என்றும் மறவேன். யான் இவ்வளவு எழுதியும் என் ஆசையை வீணாக்கி விடக்கூடாது; எதிர் பார்க்கிறேன். தங்களுக்கு நானும் ஒரு ஸகோதரிபோலத் தான்.

கனகாம்புஜம் அம்மாள்.

2

என் பிராண நாத,

நானும் குழந்தையும் சுகமே இங்கு வந்து சேர்ந்தோம். தகப்பனருக்கு இன்னும் குணமில்லை. மலைவாழைப்பழம் வேண்டுமென்று கேட்கிறார். ரூபாய் இரண்டு என்னிடம் தந்து தங்கட்கு அனுப்பிப் பழம் தருவிக்கச் சொன்னார். என்ன அப்பா, இதற்கெல்லாமா ரூபாய் என்று கூறி அவரிடமே கொடுத்து விட்டேன். தாங்கள் உடனே 2-ரூபாய்க்குப் பழம் வாங்கி யனுப்புங்கள். சற்று குணமானதும் புறப்பட்டுவருகிறேன். குழந்தை சௌக்கியமாகவே இருக்கிறான்.

தங்கள் சேவகி

பாக்கியரதி.

☞ இவ்விரு கடிதங்களும் வெங்கடரத்தினத்திற்குக் கிடைத்தன. அவைகளுக்கு உடனே பதில் எழுதினன்.

3

பெண்மணியே,

தங்கள் இஷ்டப்படியே செய்யத் தடையில்லை. விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. ஆயினும் அன்பை உணருகிறேன். ரூபாய் இரண்டையும் முன் பணமாக அனுப்பிவைத்தால், தங்கள் பிரியம்போல் செய்து திருப்தி தருகிறேன். முன்னதாக ரூபாய் வராவிடில் முடியாது. தாங்கள் கேட்டுக்கொண்டபடிக்கும் நான் அனுப்பத் தயார். அதற்கு முதலில் எனக்கு இரண்டு ரூபாயும் வந்துவிடவேண்டும். எதிர்பார்க்கிறேன்.

தங்கள் அன்புக்கு வணங்கிய

வேங்கடரத்தினம்.

☞ கனகாம்புஜத்திற்கு எழுதிய இந்தக் கடிதத்தைத் தன் மனைவி பாக்கியாதியின் விலாசமிட்ட கவருக்குள் வைத்து அனுப்பிவிடுகிறான்.

4

என் மனங் கவர்ந்த மபெண்மணி!

பிரேமரஸம் ததும்பிய நின் நிருபம் களித்தேன். உன் இஷ்டப்படி நடக்க எப்போதும் தடையில்லை. நான் உனக்கே சொந்தம். என் ஆவியும் பொருளும் உடலும் நின்னதே. நீ வைத்ததே சட்டம். உன் அடிமை நான். நீயே என் வழித்துணை. ரூபாய் இரண்டுக்கே அனுப்புகிறேன். இன்னும் வேண்டியதெல்லாம் கேள், தருகிறேன். உனக்கு என் அன்பான முத்தங்கள். க்ஷேமங்கட்கு உடனே எழுதவும். ரூபாய் இரண்டுக்கே அனுப்ப மறவேன்.

உன்னை விரும்பிய

வேங்கடரத்தினம்.

☞ தன் மனைவி பாக்கியாதிக்கு எழுதிய இக்கடிதத்தை கனகாம்புஜத்தின் விலாஸமிட்ட கவருக்குள் வைத்து அனுப்பிவிடுகிறான்.

5

ஐயா,

தங்கள் கடிதம் கண்டு திடுக்கிட்டேன். ஏதோ நான் எளியவளாதலால் விலை குறைத்துத் தருமாறு வரைந்தமைக்கு, என்னைத் தங்களின் ஆசை நாயகியாக்கிக் கொள்ள விரும்பிவிட்டதுபோல் காண்கிறது. எளியவள் என்றளவிலேயே நமக்கு வசப்பட்டுவிடுவாள் என்று எண்ணிவிட்டீரா? நீர் உலகுக்குக் கற்பிக்கும் போதனை இதுதானோ? நான் எளியவள் தான். எனினும், என் கற்பில் நான் சக்கரவர்த்தினி. இதை நீர் உணர்க. உமது யோக்கியதை விளங்கிவிட்டது. எனக்கு அன்பான முத்தங்கள் எழுதியிருக்கிறீர். உமக்கு அழிந்துபோகக் காலம் வந்துவிட்டதா? உமது புஸ்தகங்களும் எனக்குத் தேவையில்லை.

கனகாம்புஜம்.

6

என் அன்பான மருமகனே !

நீ உன் மனைவிக்கு எழுதிய உலக வழக்கிலில்லாத மரியாதையுள்ள பதங்கள் நிறைந்த நிருபம் கிடைத்தது. அதை நானே முதலில் பார்க்கும்படியான துரதிர்ஷ்டம் நேர்ந்து விட்டது. தபாற்காரன் அக்கடிதத்தை என்னிடமே தந்தான். அதனால் நான் வாசிக்கும்படியானது. என் குமாரன் சுந்தரத்தைப்போலவே உன்னையும் ஒரு புத்திரனாக நினைத்து, என் சொத்துக்களில் சரிபாதி உனக்குக் கொடுத்துவிட்டு, இந்தக் கடைசி காலத்தில், ஏதோ மலைவாழைப்பழத்திற்கு ஆசைப் படப்போக, அதற்கு நீ "முன்னதாக ரூபாய் வராவிடில் முடியாது" என்றும், "முதலில் எனக்கு இரண்டு ரூபாயும் வந்துவிடவேண்டும்" என்றும், அவ்வளவு கண்டிதமாய் எழுதியிருக்கிறாய். எனக்குப் பழத்தின் ஆசை தீர்ந்துவிட்டது. பழங்கள் ஒன்றும் அனுப்பவேண்டாம்.

சீதாராம முதலியார்.

☞ இவ்விரு கடிதங்களையும் வெங்கட ரத்தினம் கண்டதும், தான் கடிதங்களை மற்றொரு விலாசமுள்ள கவருக்குள் வைத்தனுப்பிவிட்ட தவறுதலை உணர்ந்து நொந்து கொண்டான். உடனே பதில்கடிதங்கள் எழுதலானான்.

7

க்ஷேமம் பொருந்திய ஸகோதரி,

என்னை மன்னிக்கவேண்டும். என் மனைவிக்கு எழுதிய கடிதத்தைத் தங்களின் விலாசமிட்ட கவருக்குள் வைத்து அனுப்பி விட்டேன். என் மனைவி எனக்கு எழுதிய கடிதத்தையும், தங்களின் கடிதத்தைப் பிசகாக அவளுக்கு அனுப்பி, அதற்கு என் மாமனார் வருந்தி எழுதிய கடிதத்தையும் இத்துடன் தங்கள் பார்வைக்கு அனுப்பி யுள்ளேன். என் குற்றம் க்ஷமித்தருள்க. புஸ்தகங்களை விலையின்றி யனுப்பியுள்ளேன். ஏற்றுக் கொள்க. தங்கள் ஸகோதரன்,

வெங்கட ரத்தினம்.

8

என் அன்பான மாமா,

இளமை முதற்கொண்டு என்னை வளர்த்து வாலிபமாக்கி, தங்கள் பெண்ணையும் தந்து, பொன்னையும் கொட்டி, என்னை ஒரு மனிதனாக்கி விட்ட தங்கட்கு, தாங்கள் ஆசைப்பட்ட பழத்திற்கு ரூபாய் பெற்றா நான் அனுப்பவேண்டும். தங்கள் கடிதம் வருமுன்பே பழம் அனுப்பி விட்டேன். பாதி விலைக்கு எனது நூல்களை ஒரு பெண்மணி கேட்டு எழுதிய கடிதத்திற்கு "முதலில் எனக்கு இரண்டு ரூபாயும் வந்துவிட வேண்டும்" என்று எழுதினேன். அக்கடிதத்தைத் தங்கள் குமாரத்தியின் விலாஸமிட்ட கவரில் வைத்துவிட்டுப் பெரும்பாதகனானேன். ஒருவன் தன் மனைவிக்கு தாங்கள் என்றும் தங்கள் என்றும், வணங்கிய என்றும் வரைகுவானா? பாக்கியரதிக்கு எழுதிய கடிதத்தை அப்பெண்ணுக்கு அனுப்பி, அங்கிருந்து என்னைத் தூஷித்துவந்த நிருபத்தையும் இத்துடன் பாருங்கள். அல்ப அஜாக்கிரதை பெரிய மனஸ்தாபத்தை உண்டுபண்ணி

விட்டது. அப்பெண்ணுக்கு வரைந்த சமாதான பதிலையும் இத்துடன் தந்துள்ளேன். என்னை மன்னித்துப் பழம் வந்து சேர்ந்ததற்கும், பாக்கியாதி, குழந்தை, மாமி முதலியவர்களின் க்ஷேமங்கட்கும் எழுதவேண்டுகிறேன்.

என்றும் தங்களை நம்பிய சிற்றெறும்பு

வேங்கட ரத்தினம்.

2. ஜானகிராமனின் தவறு.

9

நட்பின் நலனே! அன்பு வாய்ந்தோய்!

நோய் மிகுதி. வறுமை மிகுதி. கவலை மிகுதி. முதலிய எண்ணிறந்த மிகுதிகளானது உனக்கு அடிக்கடி கடிதமெழுத இயலாத நாமத மிகுதியை உண்டுபண்ணி விட்டது. என்னை யறியாமலே என் காலம் எப்படியோ பறந்தது. என்பால் உள்ள தாம்தத்திற்குரிய காரணத்தை மாறுபடக் கொள்ளாதிருக்க வேண்டுவல்.

உனது உன்னத பதவி கேட்டு மிக்க மகிழ்வெய்துகின்றேன். யான் இன்னும் ஏழையே. உன் உத்தியோகசாலையில் எனக்கு யாதேனும் ஓர் அலுவல் தேடித்தரின் இத்தருணத்துக்கு அது ஆபத்ஸஞ்சிவி. இசைந்த மருந்து. புது பதவியில் என்னை அறிவாயோ என்னவோ தெரிய விருப்பம்.

பழய நண்பன்,

ராமநாதன்.

10

நலம் பொருந்திய ஐயா,

நான் தங்களிடம் முன்பு மோட்டார் ஓட்டிக்கொண்டிருந்தவன். தாங்கள் மோட்டாரை விற்றுக் குதிரை வண்டி வாங்கவே, நானும் விலக வேண்டியதாயிற்று. இப்பொழுது மறுபடியும் மோட்டார் வாங்கி யிருப்பதாகத் தெரிகிறது. என்னையே மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன். அல்லது வேறிடத்திற்காவது சிபாரிசு செய்ய வேண்டுகிறேன்.

மாரிமுத்து.

☞ இக்கடிதங்களுக்கு ஜானகிராமன் பதில் எழுதினன்.

11

அன்பருக்கு நன்று.

அநேக ஆசி. மங்களம். நின் அழகிய கடிதம் பெற்றேன். உற்றன கண்டு திகைப்பு மேலிட்டேன். பாவம் இன்னும் நீ ஏழையா? நான் இருக்கும் உத்தியோக சாலையில் ஒரு வேலை காலியாக இருக்கிறது. அதற்கு 200 ரூபாய் ஜாமின் கட்டினல் உடனே வேலை கிடைக்கும். உனக்கு அவ்வளவு சக்தியில்லை யென்பது எனக்குத் தெரியும். ஆதலின் 100 ரூபாய் நோட்டுகள் இரண்டு இக்கடிதத்துடன் அடக்கம் செய்துள்ளேன். அவற்றை நேரில் நீயே வந்து செலுத்தி வேலையை ஒப்புக்கொள்.

வெளிக்கு என்னை யறியாதவன்போலவே காட்டு. அந்தரங்கத்தில் ஸகல உதவிகளும் செய்கிறேன். என்னுடைய புதுபதவி உறுதிப்படும் வரையில் நீ அப்படியே நடந்துகொள். பிரிந்திடுகையில் நின் முகங்கண்டு, அன்புமொழி தாங்கித் தவித்த என்னுள்ளம் உன்னை இவ்வளவு விரைவினில் மறந்து கடினசித்தம் கொள்ளும் நிலையை எய்துமோ? கண்டு நெடுநாட்களாயின நின்னை; நேர்கொண்டு குலாவவே வா.

உனது அன்புள்ள

ஞானகிராமன்.

☞ ராமநாதனுக்கு எழுதிய இக்கடிதத்தை நோட்டுகள் சகிதம் மாரிமுத்துவின் விலாஸம் இடப்பட்டுள்ள கவருக்குள் வைத்துவிடுகிறான்.

12

அநேக. ஆசீர்வாதம்.

உன் கடிதம் கிடைத்தது. உன்னை என்னிடம் வைத்துக்கொள்ளத் தற்சமயம் சாத்தியமில்லை. வேறிடத்திற்கு சிபாரிசு செய்யவும் எனக்கு ஓய்வு கிடையாது. நீயே முயன்று வேறொரு இடத்தைத் தெரிந்துகொள். என் புது ஸ்தானத்தில் நான் எவருடைய தாக்ஷிண்யத்துக்கும் உட்படாத படி கண்டிப்பாகவே போக எண்ணம். மற்றொரு சமயம் யோசிக்கலாம்.

ஞானகிராமன்.

☞ இக்கடிதத்தை நண்பன் ராமநாதனுக்கு எழுதிய கவருக்குள் வைத்து விடுகிறான்.

13

என் பழைய நண்பருக்கு,

உலகத்தில் புது பதவி வந்ததும் மற்ற நண்பர்கள் மாறிக் கோணிக் கொள்வதுபோலத் தாங்களும் நடந்து காட்டிவிட்டீர்கள். புதுபதவி என்ன நிச்சயமா? அதில் மயங்கி, என்றைக்கும் சாஸ்வதமான நட்பைக் கொலைசெய்து விடலாமா? போகட்டும் எவ்விதமேனும் நீர் மனத்திருப்தி பெறுக. தங்களிடம் என்னை வைத்துக்கொள்ள முடியாதென்றும், வேறிடத்திற்கு சிபாரிசு செய்யவும் சாவகாசமில்லை யென்றும் எழுதி விட்டீர்கள். நட்பின் கருணை இதுவேயோ? நான் மற்றோரிடத்தில் உத்தியோகத்திற்கு நேற்றே அமர்ந்து விட்டேன். தங்களின் வாழ்வுக்கெல்லாம் காரணமான என் பழய உதவிகள் அனைத்தையும் மறந்துவிட்ட நன்றி கெட்ட நரஸிம்மமான தங்களைக் கடவுள் மன்னிப்பாராக.

பழய நண்பன்,

ராமநாதன்.

14

என் பிரிய எஜமானருக்கு,

தாங்கள் என்னை மறவாது எழுதிய இன்பமான நிருபமும், அத்துடன் கடாக்ஷித்த 200 ரூபாய் நோட்டும் ஆநந்தமாய்ப் பெற்றுப் பரவச பூர்த்தியானேன். அடியேன் பெற்ற பெரும்பேறு வேறு எவருக்கும் கிடைக்

கிருபாலயரே! தாங்கள் நீடூழி வாழ்க. தாங்கள் அனுப்பிய 200 ரூபாயையும் ஜாமீனாகக் கட்டி தங்கள் ஆபீஸில் வேலை பார்க்க இஷ்டமில்லை. அந்த ரூபாயுடன் இன்று சிங்கப்பூருக்குக் கப்பல் ஏறுகிறேன். அங்கு போய் வர்த்தகம் செய்து ஐச்வரிய ஸம்பன்னனாகத் திரும்புவேன். தங்கள் உபகாரம் மகா பெரிது.

மாரிமுத்து.

☞ இக்கடிதங்களைக் கண்டதும் ஜானகிராமன் தான் கடிதங்களை, ஒருவருடையதை மற்றொருவருடைய கவரில் வைத்தனுப்பிய பிசகை யுணர்ந்து ஏங்கினான். 200 ரூபாயையும் அனாவசியமாக ஒருவனுக்குத் தாரை வார்க்க நேர்ந்துபோயிற்று. நண்பனுக்குத் தான் நடத்திவிட்ட தவறுதலைத் தெரிவிப்பதானான்.

15

என் நேயனே, துரைவ.

தங்களை நான் மறக்கவில்லை. தங்கள் நட்பை மறந்திடுதல் எளிய காரியமாய்த் தாங்கள் எண்ணுதல் சரியோ? தங்களுக்கு என் உத்தியோக ஸ்தலத்தில் ஒரு வேலையும் தேடிக்கொடுத்து, அதற்கு ஜாமீன் கட்ட 200 ரூபாயும் நோட்டுகளாகக் கடிதத்துடன் தங்கட்கு அனுப்பினேன். ஆனால் அதைத் தனக்கு ஒரு வேலைக்கு சிபாரிசு வேண்டிய மாரிமுத்து என்பவனுக்கு எழுதிவைத்திருந்த கவருக்குள் இட்டுப் பிசகாய் அவனுக்கு அனுப்பிவிட்டேன். அவனிடம் சேரவேண்டிய கடிதம் தங்களின் விலாஸமிட்ட கவருக்குள் வைக்கப்பட்டுப் போயிற்று. அவனோ தான் சிங்கப்பூருக்கு ரூபாயுடன் புறப்பட்டு விட்டதாக வரைந்து, என் மூடத்தனத்துக்கு ஒரு வாழ்த்துதலும் அனுப்பியிருக்கிறான். அக்கடிதத்தை இத்துடன் அனுப்பியுள்ளேன். வீணில் 200-ரூபா கைவிட்டுப்போய்விட்டது. தங்கட்கும் அது பிரயோஜனப் படவில்லை. மனதுக்கு மிக்க வாதனை. மன்னித்தருள்க. சீக்கிரம் நேரில் வருகிறேன். உள்ளே 200 ரூபாய்க்கு நோட்டுகள் இருக்கிற தென்றெண்ணி ரிஜிஸ்தரில் அல்லவோ தங்களுக்குக் கடிதம் அனுப்பினேன். இப்படியாகவா முடிந்தது! நாமொன்று எண்ண, அருட்தெய்வம் மற்றொன்று விதிப்பதை என்னென்பது?

ஜானகிராமன்.

3. விஜயரங்கத்தின் தவறு.

16

என் நண்ப,

என் பிதா சற்று நலி. அது கால்வலி. என் கலி என்றுதீருமோ? அடுத்த வாரம் தங்கையின் விவாகம். அதற்குள் தந்தை சுகம் பெறவேண்டும்.

நின் தோழன்,

கோபாலன்.

17

மித்திரா!

தந்தை கண்மூடினார். இல்லம் இருளடைந்தது. அவர் அருமை யாவும் நீ உணர்வை. மரமேறிக் கைவிட்டதுபோலவும், நடப்பவர் வழி மறந்ததுபோலவும் ஆயது எங்கள் வாழ்வு. என் செய்ய?

பாலகிருஷ்ணன்.

☞ இக்கடிதத்திற்கு விஜயரங்கம் பின்வருமாறு விடை எழுதினான்.

18

என் நேசமே!

கவலற்க. யாவும் மங்களமே நினக்கு. தந்தையின் கவலை யகற்றுக. உன் மனோபீஷ்டத்தின்படியே யாவும் நடக்கும். உன்னுடன் சந்தோஷம் கொண்டாட அடுத்தவாரம் வருகின்றேன். க்ஷேமத்திற்கு உடனே எழுது.

விஜயரங்கம்.

☞ கோபாலனுக்கு அனுப்பவேண்டிய இக்கடிதத்தை பாலகிருஷ்ணனின் விலாஸமிட்ட கவருக்குள் வைத்தனுப்பிவிடுகிறான்.

19

அன்பரே!

நின் தந்தையும் போயினரா? உமது அன்னை உமக்குப் பொக்கிஷமாக வைத்தது உமது பிதாவைத்தான். தன் அரிய கணவனையே தன் மைந்தனுக்கு அருநிதியமாக அம்மாதுநல்லாள் வைத்தேகினார். இதுவரை அந்தப் பாக்கியம் பெற்றிருந்தீர். தந்தையும் தனயனுமாய் ஓங்கிய புகழ் மிகுந்தீர். யாரிட்ட சாபமோ, அடிநாளின் தீவினையோ? நேரிட்டதின்றேடே!

தந்தையில்லாப் பிள்ளையானீர். பெரியவர் இருக்கிறார் என்று வழங்கிய சொல் யாவும் இன்று மாயம்! என்ன காலம்! விதிவசம்! இனி உலகிலேயே காணமுடியாது. எப்பிறப்பிலும் பெற இயலாது. கிடைத்தது நழுவிவிட்டது. பெற்றிருந்தது வற்றிவிட்டது. மனம் ஆறுங்கள் என்று நான் சொல்லேன். அது புண்ணில் வேல் உருவியது போன்றதாம். தந்தையின் கீழ் பிள்ளை யென்றகாலம் போயது. எல்லா பாரமும் இனி தங்களதே. தங்கள் மனம் எவ்விதம் தவிக்கின்றதோ? என்னென்ன கருதி ஏங்குகின்றீர்களோ? ஈன்ற அன்னையையும் அதுகாலை நினைத்தீர்களோ? அன்னையும் பிதாவுமாய் ஓர் உருக்கொண்டு ஒளி வீசிய எழிலுறு வதனம் இனி காண்பதென்றேயோ? கஷ்டத்தோடு காலத்தைக் கடத்தவேண்டியதே முடிவு—நியதி.

விஜயரங்கம்.

☞ பாலகிருஷ்ணனுக்கு அனுப்பவேண்டிய இக்கடிதத்தைத் தவறுதலாய் கோபாலனின் விலாசமிட்ட கவருக்குள் வைத்துக் கோபாலனுக்கு அனுப்பிவிடுகிறான்.

20

விஜயாங்கத்திற்கு,

என் தந்தை சற்று நலியென்று யான் உனக்கு எழுதப்போக, இனி அவர் இறந்து, அதன் பின்பு நீ எழுதவேண்டிய கடிதத்தை முந்தியே அனுப்பிவிட்டாய். நீ இப்படி மாறனை சங்கு ஊதுவாயென்று தெரிந்திருப்பின், உனக்கு அவரது பிணியைப்பற்றி எதுமே தெரிவித்திரேனே! பாபி! உன் மனப்படி உன் கடிதம் வந்த மறுநாள் தந்தை சென்றுவிட்டார். திருப்திகொள்க.

கோபாலன்.

21

விஜயாங்கத் துரோகி,

என் தந்தை இறந்ததற்கு என்னைக் கவலைப் படாமலா இருக்கச் சொல்கின்றனை? அவர் போனது எனக்கு மங்களமா? என்னுடன் சந்தோஷம் கொண்டாடவா அடுத்த வாரம் வருகிறாய்? உன்னுடைய நட்பு இனி எனக்கு வேண்டாம். அநுதாப மில்லாத நண்பர்களைப் பெற்றிருப்பதை விட, இல்லாதிருப்பது மேல்.

பாலகிருஷ்ணன்.

விஜயாங்கம் இக்கடிதங்களைப் பார்த்துத் திடுக்கிட்டுத் தான் தவறுதலாய் ஒருவர் கடிதத்தை மற்றவருக்கு அனுப்பியதை உணர்ந்து கையைக் கடிக்கிறான். அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?

4. ராமபாபுவின் தவறு.

22

அன்பார்ந்த ராமபாபுவுக்கு,

நான் தங்களுக்கு ஒரு காலத்தில் நண்பன். அந்தப் பழமையைத் தயவு கூர்ந்து நினைத்திடுக. என் மனைவி கண்மூடினாள். ஒரே ஒரு பெண் குழந்தையைத் தன் ஞாபகமாகத் தந்து சென்றாள். அது மிக்க ஆபத்தான நிலையில் இருக்கிறது. தங்களின் பாவிய கீர்த்தி கேட்க எவ்விதத்தும் தங்களால் குணமாகும் என்பது எனது எண்ணம். தங்களுக்குப் பணம் தர எனக்கு சக்தியில்லை. அதற்குப் பதிலாக யான் இயற்றிய பல நாவல்களையும் சேர்த்துத் தருகிறேன். இன்று மெயிலிலேயே வரவேண்டுகிறேன்.

தங்கள் நண்பன்,

வீரஜேஸ்வரன்.

23

வைத்ய ரத்ந ராமபாபு!

விவாக விஷயமாக வரைந்த தங்கள் மாதாவின் கடிதம் கண்டோம். குழந்தை ஸரோஜினி தன் அபிப்பிராயத்தை இன்னும் சொல்லவில்லை. விவாக விஷயத்தில் தன்னை இவ்வளவுக்கு அவசரப்படுத்தக் கூடாதென்கிறாள். எங்களுக்கு இருப்பது ஒரே குழந்தை. ஆதலின் இரண்டு மூன்று

தினங்கள் பொறுத்து அவள் கருத்தை யுணர்ந்து விவாக சம்மதம் தெரிவிக்கிறேன். உயர்தரக் கல்வி பயின்று விட்ட அளவிலேயே நற்குணங்களுக்கு நாயகமாய் விளங்கி விடுவார்களென்று நம்பப்போகாது என்கிருன். ஏழையாயினும் உத்தமனையே பதியாக வரிக்கவேண்டு மென்கிருள். எங்களுக்கும் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. ஒரு புருஷாயுஷில் இவ்வளவு சொத்துக்களையும் எங்கள் குழந்தை அநுபவித்து விடவா போகிறது? அது இல்லை. இந்த நிலைமையில், இருக்கிற சொத்தே பல தலைமுறைகளுக்குக் காணக்கூடியதா யிருக்கிறபோது—வேறு புதிதாக சொத்துள்ள பணக்கார மாப்பிள்ளையைத் தேடுவானேன் என்று தர்க்கம் பேசுகிருள். ஆனல் தங்களிடம் அவளுக்குப் பூரண அன்பு இருக்கிறது. அந்த அன்பு நன்மையே செய்யுமென்று நம்புகிறேன்.

பிரியமிக்க,

ஜிதேந்திரநாத்.

☞ ராமபாபு தமக்குக் கிடைத்த இரு கடிதங்களுக்கும் பின்வருமாறு விடை எழுதினுர்.

24

ஸ்ரீயுத விராஜேஸ்வரநந்து.

தாங்கள் எழுதிய நாவல்களைப் பெற்றுக் கொண்டு, பணமில்லாமல் வைத்தியம் செய்யவேண்டுமென்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட எனக்குப் போதிய சாவ்காசமில்லை. தங்களின் ஒரே குமார்த்திக்குச் சிகிச்சை செய்ய என்னைவிடச் சிறந்த டாக்டரைத் தேடிக்கொண்டால் துரிதத்தில் குணப்படுத்துவார். தங்களின் பழய நட்பும் என் நினைவி லிருக்கிறது. ஆனல் என்னை இந்த சமயம் மன்னிக்கவும். அவசியமான கடிதங்களுக்கு மட்டும் பதில் கொடுக்கப்படும். அடிக்கடி கடிதம் எழுத நேரமில்லை.

ராமபாபு.

☞ இக்கடிதத்தை ஜிதேந்திர பாபுவின் விலாஸமிட்ட கவருக்குள் பிசகாக வைத்து விடுகிருர்.

25

மாண்பு மிக்க ஜிதேந்திரபாபு!

தங்களின் கடிதம் பெறும் கௌரவம் அடியேனுக்கு லபித்ததற்கு சாலவும் மகிழ்கின்றேன். ஸ்ரீமதி ஸரோஜினி தேவியின் அற்புதமான அபிப்பிராய வசனங்கள் என்னைப் பரவசமுறச் செய்கின்றன. ஜீவகாருண்யமும் தர்ம சிந்தனையுமே பிரதானம். அது இன்றி உயர்தரக் கல்வியில் காரியமில்லை. என்னைக்குறித்த மட்டில் தங்களின் செல்வபுத்திரி பரிபூரண அன்பு கொண்டிருப்பது கேட்க, அஃதொன்றே ஸர்வ மங்களத்தையும் எனக்குச் செய்விக்குமென்று எனது திர்க்கமான நம்பிக்கை.

வணக்கமுள்ள

ராமபாபு.

☞ இக்கடிதத்தை விராஜேஸ்வரனின் விலாசமிட்ட கவருக்குள் பிசகாக வைத்து விடுகிருர்.

26

ஏழையான விரஜேஸ்வரருக்கு,

தாங்கள் பரம ஏழையாயினும் தங்களின் நெஞ்சம் ஏழ்மையுடையதன்று. தாங்கள் இயற்றிய நாவல்களும் ஏழ்மை படைத்ததில்லை. அவை எங்கணும் பிரசித்தியாய் எவரிடமும் காணத்தக்கதாய் வியாபகமடைந்துள்ளன. ஆனால் தங்களுக்கு அதிர்ஷ்டம் போதாது. அது தங்கள் பிழையன்று. விதியின் பிழை. காலத்தின் பிழை. நாவல்களின் கர்த்தாவான விரஜேஸ்வரர் என்றளவில் தாங்களே யென்று சந்தேகமறத் தெரிந்து கொண்டு விட்டோம். தங்களின் புகழொளி இத்துணை மேன்மையதாய் விளங்காநிற்ப, தங்களின் நிலையோ ஈனநிலையாய் பெருஞ் சோதனையாய் வாதனை மிகுந்து வாட்டங்கொண்டுள்ளது. இதனை வெளியுலகத்தார் யாங்ஙனம் அறிவார்? அறிந்திருந்தும் சில நண்பர்களோ கேவலப்படுத்தவே நாடுகின்றாரன்றி, சமயம் தெரிந்து, இதயம் சுரந்து, உதவி புரிய முந்துகின்றாரில்லை. அவர்கள் கேவலப்படுத்தா திருந்தால் அதுவே பெரிய உபகாரம். இந்த வகையில் தங்கள் நண்பர், டாக்டர் ராமபாபுவும் ஒருவர். அவர் மதி ஈன மதி. தங்களின் பரிதாபக் கடிதத்திற்கு அந்த டாக்டர் ராமபாபு எழுதிய பதில் கடிதம் தவறுதலாய் என் தந்தைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அக்கடிதத்தை இத்துடன் தங்களுக்குத் அனுப்பியிருக்கிறேன். தாங்கள் ஏழையென்று மனம்நொந்து போகவேண்டாம். எனது ஐச்வரியத்தில் பாதி உமக்குத் தருகிறேன். மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். இன்னும் சிலாக்கியமான நாவல்களை எழுதுங்கள். உங்களின் செல்வக் குமாரத்தியைக் குணப்படுத்த உங்கள் ஊரில் இருக்கும் எங்களுக்குப் பரிச்சயமான டாக்டருக்கு என் பிதா இன்று தந்தி யனுப்பியிருக்கிறார். இக்கடிதம் பெறு முன்னதாகவே தங்களின் குமாரத்திக்கு ஆரோக்ய சிகிச்சைகள் நடந்து கொண்டிருக்குமென நம்புகிறேன். உங்களைப் போன்ற ஏழைகளுக்கு ஐசுவரிய மிக்க நேயர்களின் நட்பு கிடைக்காவிடினும் பகவானுடைய அன்புக்கு ஒருநாளும் குறைவில்லை.

தங்கள் அன்புள்ள,

ஸரோஜினி.

27

ஸ்ரீமதி ஸரோஜினி தேவியாருக்கு,

அடக்கமும் பொறையும் கருணையும் வாய்ந்த வனிதா ரத்னமே! தாங்கள் எளியேனுக்கு இயற்றிய காலசகாயத்தை என்னென்பேன்? தங்கள் கடிதத்திற்கு முன்னரே இவ்வூர் டாக்டர் தங்கள் பிதாவின் தந்தியின்படி வந்து என் அருமைக் கண்மணிக்கு உயிர்கொடுத்து வருகிறார். இன்னும் நான்கு தினங்களில் பூரண சுகத்தை என் புத்திரி பெறுவாள். எனது வறுமையில் ராமபாபுவுக்கு அவ்வளவு வேண்டி எழுதியும், பிராணன் போகும் விஷயத்தில் கூட அவர் சித்தம் உருகவில்லை. பழைய நட்பை அவரது புது வாழ்வின் வைபவம் மறக்கடித்து விட்டது. நல்ல சமயத்தில் கைகொடுத்து உதவினீர்கள். இவ்வூர் டாக்டர் என் செலவுக்கென்று நூறு ரூபாயும் கொடுத்திருக்கிறார். இதென்ன விந்தை! தாங்கள் அவ்விதம் தருமாறு தந்தியில் தெரிவித்தீர்களா? பகவானிடம் தான் இவ்வளவு கருணையை ஒருவர் எதிர்பார்க்கலாம். தாங்கள் பகவத் சொரூபமாகவே விளங்குகின்றீர்கள். ராமபாபு தங்களின் பிதாவுக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை

எனக்குத் தவறுதலாய் அனுப்பிவிட்டார். அதை இத்துடன் தங்கள் ஸமுகம் சேர்ப்பிக்கின்றேன்.

தங்களின் பணிவுள்ள,

விரஜேஸ்வரன்.

28

வைத்திய ரத்ந ராமபாபுவுக்கு,

தாங்கள் விரஜேஸ்வாருக்கு வரைந்த கடிதத்தை எனக்குத் தவறுதலாக அனுப்பிவிட்டீர்கள். அக்கடிதத்தை அவருக்கு அனுப்பியாயது. பிராணபத்தான காலங்களிலும் டாக்டர்கள் தங்களுக்கு வரவேண்டிய பணத்தைத் தான் முக்கியமாகக் கவனிப்பார்கள் என்று என் புத்திரி கூறுகிருள். ஒருவரிடம் அன்பு வைப்பது சகஜமென்றும், ஆனல் அந்தவிதமாக வைத்த அன்புக்காக—அவருக்கு மனைவியாய் விடவேண்டுமென்றும் தன் கற்பை அவருக்கு ஒப்புவித்து விடவேண்டுமென்றும், பிறர் எதிர்பார்ப்பது மிக்க மௌடீகமான சிந்தனை—பேராசை—யென்பதாக என் குமார்த்தி கூறுகிருள். அன்புக்கு எப்போதும் குறைவில்லை யென்றும், அன்பு வைப்பதற்கும், கற்பைக் கொடுத்து தர்ம பத்தினியாவதற்கும்—ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை யென்றும், அது வேறு விஷயம், இது வேறு விஷயம் என்றும் என் புத்திரி நவில்கிருள். தாங்கள் எனக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை விரஜேஸ்வாருக்குத் தவறுதலாக அனுப்பிவிட்டீர்கள். அதை அவர் எனக்கு இன்று திருப்பி யனுப்பி யிருக்கிருர். தங்களின் கடிதத்திற்காக மிக்க வந்தனம்.

தங்கள் அன்புள்ள,

ஜிதேந்திரநாத்.

29

ஸ்ரீ ஜிதேந்திர பாபுக்கு,

தங்கள் கடிதம் ஒரு மனிதனைக் கை நழுவவிடும் பாவனையில்—மெதுவாக விலகிக்கொண்டுவிடப் பார்க்கும் தோரணையில் அமைந்துள்ளது. நான் விரஜேஸ்வாருக்கு வரைந்த கடிதத்தைத் தவறுதலாகத் தங்கட்கு அனுப்பிவிட்டதின் விளைவு இவை. சிறு பிழை பெருந் துயராகியது. விரஜேஸ்வரன் விஷயத்தை எடுத்துக்கொண்டு என்னைக் கன்னெஞ்சன் என்று தீர்மானித்துவிட்டீர்கள். எனினும் இன்னும் தங்களின் தயவுக்கு நான் தப்பிப் போகவில்லை யென்று நினைக்கிறேன். தங்கள் குமாரத்தியை எனக்குக் கொடுக்கும் விஷயத்தைப் பற்றி ஏதாகிலும் அநுகூல உத்தரம் தர மிகுதியும் பிரார்த்தனை புரிகின்றேன்.

அன்புள்ள, ராமபாபு.

30

அன்புள்ள விரஜேஸ்வாருக்கு,

தங்கள் கடிதம் எனக்கு மிக்க மகிழ் வூட்டியது. தங்கள் குமார்த்தியின் க்ஷேமம் கேட்க அத்தியந்த அவா. இங்கு சில தினங்கட்கு இருக்கும்படி அனுப்பி வைத்தால் எனக்கு விளையாட்டுக்கு ஒரு நல்ல துணையாக இருக்கும். தங்களின் கிருபைக்குக் காத்திருக்கும்

அன்புள்ள, ஸரோஜினி.

31

ஸ்ரீமதி ஸரோஜினி தேவியாருக்கு,

அன்பு ததும்பும் தங்களின் இனிய உத்தரம் கண்டேன். புளகித மெய்யினேன். என் குமார்த்தியை அனுப்பக் கேட்கிறீர்கள். அதற்குப் புதிதாகப் பிராணனை உண்டாக்கிய தங்கட்கு—அதிகாரத்துடன் அனுப்பும் படி கட்டளை யிடக்கூடிய சுதந்தரம் இருக்க, இங்ஙனம் கெஞ்சுதல் எதற் காகவோ? ஒரு சமயம் மரியாதைக்காக போலும்! அம்மணி! அந்த மரி யாதை எனக்கு வேண்டா. என் கண்மணியை, என் பழய ஞாபகத்தை— காப்பாற்றி யருளினீர்கள். என் ஜீவித காலமெல்லாம் தங்கட்கு நான் அடிமை. குழந்தை நன்றாக ஓடி விளையாடுகிறாள். இவ்வூர் டாக்டர் நாளை யைதினம் தங்கள் ஊருக்கு வரப் புறப்படுகிறார். அவருடைய பிராணனை ரக்ஷித்த அவர் வசமே ஒப்புவித்துத் தங்களிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த உத்தமரும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண் டார். குழந்தைக்குத் தக்க ஆதரவான இடம் கிடைத்தமைக்குப் பகவா னைத் துதிக்கின்றேன். தங்களின் குழந்தை அது. நான் அக்குழந்தைக்கு ஒரு உறவினன் போலத்தான். தங்களின் அன்பு வாழ்க.

தங்களின் நன்றியுள்ள

விரஜேஸ்வரன்.

32

வைத்தியரத்ன ராமபாபுவுக்கு,

கடவுளின் அருளால் குழந்தை ஆரோக்கிய ஸம்பன்னையாய் விளங்கு கிறாள். தாங்கள் உதவி செய்யாவிடினும், ஜிதேந்திரநாத பாபுவின் கடி தத்தை எனக்குத் தவறுதலாய் அனுப்பிவிட்ட வகையில் அவர்களின் நட்பு கிடைத்து, அவர்களின் கால சகாயத்தால் குழந்தையும் பேராபத்திலி ருந்தும் தப்பினாள். தங்களிடத்து நான் என்றைக்கும் விஸ்வாச முள்ள வனே. ஒரு காலத்தில் ஒருவரை நேசித்தால், மற்றவர்கள் என்னை மறந்து விடினும், நான் மட்டும் அவர்களை என்றும் மறப்பதில்லை. அது என் ஜென்மப் பிரகிருதி—இயற்கைக் குணம்.

விரஜேஸ்வரன்.

33

பாந்தவ்யம் நிறைந்த விரஜேஸ்வரருக்கு,

கலை தெளிவாற்றல் மிக்க அன்பரே! பெண்கல்வி பேணும் பெரும! இன்பமூட்டும் பண்பின்மிக்க அன்பர் விதிதங் கண்டு பேருவகை பூத்தனன். உள்ளன்பு அகத்தே மலிர்தரும், புறத்து நகைமுக மொன்றால் சிறிதே வெளித் தோன்றுவதுபோல், தங்கள் அன்பின் வேகமும், நட்பின் தோற்ற மும், பளிங்கனைய உள்ளமும், அம்மாண்புசான்ற அகத்தினில் பதிவுற்ற அபிமானமும் உரைத்தற்கரிதாய் என் உள்ளத்தே ஊன்றின. தங்களின் பேரன்பும், மெய்யபிமானமும், விநயமும், ஒழுக்கமும், புத்திரிகா வாத்ஸல் யமும் ஒருங்கே தோன்றி உவகை தரா நின்றன. வியப்புக்குரிய, நினைத்தற் கரிய விஷயங்களை எளியநடையில், இனிய வங்க பாஷையில், புதிய உருவில், பெண்டிரும் உணரும் பான்மைத்தாய் சுந்தரமாக உதவி அதற்காய பொறைப் பேற்ற மகிப! நும் பேரன்பு என்றும் வாழி. தம் உள்ளம் என்பால் தங்கிய தும், தம்மேனுக்குப் பெருமை பயப்பதோர் செய்தியேயாம்.

நலமே விளைத்துச் சுவை மிக்க மாதுரிய சாதுரிய குணங்களோடும் அழகே மயமாய் அன்புருக்கொண்டு விளங்கும் தங்களின் புத்திரியுடன் என் காலம் வெகு இன்பமாய்க் கழிகின்றது. சுகமே இருக்கின்றான். கட்டினி விளிக்கும் தங்களைக் காணவும், தங்களின் அருள்மொழி செவி மடுக்கவும் பெரிதும் விழைகின்றேன். விரைவினில் சந்திக்க விருப்பம். திருவுள்ள மறியாத சேதியல்லவே யீதுதான். திவ்ய விதரண குண சிலாக்ய பூசுர குல சிரேஷ்ட தேசாபிமானு! சலதியிடை நிலவுமோர் ஜப்பான் சரித்திரம் தந்த மதியூகபாகா! இன்ப விற்பன விநய தைரிய சபாபூஜிதா! ஸத்புருஷ கண்ய—விரஜேஸ்வரப் பிரணவ ஸமூக ஸத்யமேருவே.

தங்கள் 'பிரியை'

ஸரோஜினி.

34

அன்புள்ள விரஜேஸ்வரருக்கு,

தங்களின் குழந்தையுடன் எங்கள் பொழுது மிக்க ஆநந்தமாய் நிலவுகின்றது. அக்குழந்தையைத் தங்களிடம் மீண்டும் அனுப்ப எங்களுக்கு இஷ்டமில்லை. அதற்குப் பதிலாக ஏதாவது வேண்டுமென்று விரும்பின், எனது ஸரோஜினியைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஒப்பந்த மாற்றுதலுக்குத் தாங்கள் இதயங்கனிந்து இசைவீர்களாக. வருவதெப்போது? வரைக உடனே. தங்களை நம்பியிருக்கும்

ஜிதேந்திரநாத்.

35

ஜிதேந்திரப் பெருமானே! அன்பே சான்று யமைந்த அண்ணலே!

ஐயனே! யானோர் ஏழை. உய்யவே வழிகாணாது, உழன்றேன்—அல்லலிற் கிடந்து நெடுநாள். மணிகொண்ட கடலாடை—யணியிந்த நிலமீது—மனிதப்பிறப்பி லுற்று—வாழ்ந்த வொருமேன்மையும், தாழ்ந்த சிறுபான்மையும்—வாயினுற் சொல்ல வசமோ? அறுசுவை யுண்டி யமர்ந்து இல்லாள் ஊட்ட மறுசிகை நீக்கியுண்டதும் ஓர் காலம்!

மிடி தீர நாடிடு புலவோரை யாளு மகிபா! அன்பு ததும்பி நதியெனப் பொங்கும் தங்களின் ஆநந்த ஸாகரமான திருபமும், என்னைப் பிரமிக்கச் செய்யும் நவீன பதஜோடிகளின் சாயலும், உள்ள நற்செய்திகள் பலவும் பார்த்து உவந்தேன். தங்களது அன்பிற் கிணங்கி நடப்பேன். அன்பின் வழியது என் வாழுள். எனது புத்திரிகாரத்னம் தங்கட்கு அருமைப் பேத்தியாகுக. சிறகுடைய புள்ளெனின் இன்றே பறந்து வந்து தங்களை யடைந்திருப்பேன். எனது பணிவும் வணக்கமும் தம்பால் செலுத்துவதுடன், இக்கடிதத்தை முடிக்கவும் அனுமதி தர வேண்டுவல்.

தங்கள் மருமகன்

விரஜேஸ்வரன்.

36

பிரேம திலகமே! ஸரோஜினி! காதல்வல்லி! என் கண்ணேயாய்!

தம் திருபம் மிக்க மிக்க இன்பம். உவகையை உள்ளமெல்லாம் ஊட்டிக்கள்ளமே கண்டறியா வெள்ளைச்சொல் தாங்கிப் புதைப்பொருள் தந்து,

பிரேமரஸம் மிக்குற்று ஒளிர்கின்றது. கற்றவர் விரும்பும் கற்பகக்கனியாய், நற்றன்மைக்கோர் நலந்திகழ் நாயகமாய் தாம் விளங்கல் எனது தவமே! பெருந்குப் பலர் பெண் தருவார். பணம் பெறச் சிலர் நவார். பேதையேனுக்கு எவரே நல்கிடுவார்? அறிந்தார் அறிவார் அதனதன் அருமை. தம் கருத்து நோக்கி என் கண்கள் குளிர்ந்தன. முக மலர்ந்தது. அகமிக களித்துப் பொங்கியது. தமது அளவிறந்த துதிக்கு யான் அருகனல்லேனாயினும் துதிக்கப்பட்டேன். சிங்கத்திற்கு விடுத்த பூமாலை நரியின் மீது விழுந்தமைக்கே ஒப்பாயது. தங்களெல்லோரையும் கண்டு உவகை பொங்கிட நாளை புறப்படுகின்றேன். வாழிய என்றுமே.

தமது அன்புக்கு என் மனத்தை
அர்ப்பணம் செய்யும்
விரஜேஸ்வரன்.

37

அன்புள்ள ராமபாபுவுக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. இத்துடன் என் புத்திரியின் விவாகப் பத்திரிகை வருகின்றது. விரஜேஸ்வரருக்கு ஸரோஜினியைத் தரப் பெரியோர்கள் நிர்மாணித்துள்ளார். "கூடுமாயின்" விவாகத்திற்கு வரவேண்டுகின்றேன்.

ஜிதேந்திரநாத்.

38

புதுச் செல்வம் படைத்த விரஜேஸ்வரனுக்கு,

உமக்கென்று வரைந்த கடிதத்தை மற்றொரு விலாஸமிட்ட கவரில் வைத்திட்ட ஒரு சிறு பிழை என் ஜீவித காலமெல்லாம் என்னை நோகச் செய்திடுமென்று சொற்பனத்தும் எண்ணிலேன். ஆ! எத்தனை சிறு பிழை! அதன் விளைவு எத்தனை பெரியவை? உலகீர் எச்சரிக்கை பெறுக. இந்த ஒரு விஷயத்துக்கு மட்டுமன்று. பிரபஞ்ச ஜீவியத்துள் எந்த நிகழ்ச்சியிலும், அற்பத் தவறுதலே, அற்ப மனஸ்தாபமே, அல்பமான ஒருசிறு பிழையே பின்னுக்கு இமயகிரி பர்வதமாகிப் பெருந்தீங்காய் முடிகின்றது. விரஜேஸ்வரா! நான் மணமுடிக்க இருந்த மடநல்லாள் நின் இல்லாள் ஆயினள் இந்நாள். நின்னிடத்துக் கடியநெஞ்சம் காட்டாதிருந் திருப்பேனாகில் ஸரோஜினி என் வெளிமேற்பூச்சில் அவசியம் மயங்கியிருப்பாள். இப்போதைய மணமாலை நானே பூரிப்புடன் பெற்றிடுவேன். தவறிவிட்டேன். நீ எனக்கென்று பங்காளியாய் எங்கிருந்து வந்தனையோ? காட்டி வைத்த தெய்வம் கூட்டி வைக்காமற் போய்விட்டது. இதுதான் என் கடைசி கடிதம். இதற்கு உன் விடை எனக்குத் தேவையில்லை.

ராமபாபு.

39

என்னை மறவாத ராமபாபுவுக்கு,

கீர்த்திபுனை சேர்த்திமிகு பார்த்திப! யதார்த்தமன வார்த்தை கூறி நேசருளம் பூர்த்திசெய—வல்லோனே! வந்தனம். தங்களின் திருமுகம் கண்டு, தங்கள் திருமுகமே கண்டாங்கு மகிழ்ந்தேன். அவரவர்

விதி வழி யடையா நிற்பர். சென்றன செல்க. சிந்தை நோகற்க. பழய பாந்தவ்யம் பாராட்டுக. என் உள்ளன்பு என்றுமே மாறாது. தங்களை மறப்பவனுமல்லன். மறந்தவனு மல்லன். உள்ளத்தி னுள்ள அழிவில்லாத பிரேமை அப்போதுமுண்டு. இப்போதுமுண்டு. எப்போதுமுண்டு. ஸாரமற்ற வாழ்க்கையிலே ஸஞ்சலமே ஸகஜம். எனவே உடனுக்குடன் சென்றதை மறப்பது என் சுபாவம். மறுகணமே ஸமாஸந்தில் மகிழ்தல் என் இயற்கை. உலகமே ஒரு கனவு. நேற்றைய நிகழ்ச்சியை இன்று நினைத்திடின் அது ஒரு சொற்பனம். எல்லாம் பிரபஞ்ச மாயாவிலாஸம். நிலையற்ற ஞாலமீது மனஸ்தாபத்தை நிலைப்படுத்துஞ் சிந்தனை கொள்ளற்க. எல்லா தானத்திலும் சிறந்தது சமாதானம். இளகிய என் நெஞ்சில் உருக்கமும் பிரீதி வாத்ஸல்யமுமே எப்போதும் நிறைவுற்றிருக்கும். பற்பல யோசனை—வாதனை—விசாரம்—விகற்பம் வேண்டாம். இந்நானிலமே ஒரு நாடக கூடம். அதில் நடிக்கிறவர்களாவோம்—நாம். யாவும் ஈசனருள்.

எனது மனது குளிர, வதுவை இனிது நிறைய, மருவினர் இணையிலாத குணவிநோத மிசையு நேசர் பலருமே. உம்மை மட்டுமே காண்கிலேன். வருக விரைந்து. வாழிய நீவிர் என்றுமே.

தங்கள் அன்புக்குரிய,

விரஜேஸ்வரன்.

* * * * * *

ஸ்ரீமதி ஸரோஜினி தேவிக்கும், பிரஸித்த கதாசிரியரான விரஜேஸ்வர பாபுவுக்கும் அத்யந்த மகோன்னதத்துடனும் விவாகம் நடந்தேறியது. தமது அருமைக் குமார்த்தியுடனும், தமது தர்ம பத்தினி ஸரோஜினியோடும், தமது எழுதுகோலை மிக்க உற்சாகமாய்ப் பிடித்துக்கொண்டு ஆநந்த ஸாகரமான வாழ்வில் விரஜேஸ்வரபாபு விளங்குகின்றார். ஸரோஜினியும் தன் காதலருக்கு நூல் திருத்தி யுதவும் துணைவியாய், நாயக ரஞ்சனியாய்க் கண்மணியாய்க் கற்பின் கனியாய்ப் பரிமளிக்கின்றாள். மங்களம்.

முற்றிற்று.

உலகீர்! சிறு பிழை பெருந் துயராதல் கண்டீர். கடிதங்களை அனுப்பு முன்னர் எச்சரிக்கையுடனும் கவனித்திடுக. பிறவற்றிலும் அங்ஙனமே எண்ணித் துணிக. துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு.

எப்போது வந்தீர்கள்?—ஒருவர் வீட்டுக்குப் போனதும் 'எப்பொழுது வந்தீர்கள்' என்று சிலர் கேட்கிறார்கள். இப்பொழுதுதான் வந்தோமென்பதைத் தெரிந்துகொண்டும், அந்தக் கேள்வி கேட்பானேன்? அதைவிட "வாருங்கள்" என்பது நல்லது.

விருந்தினர்.— எந்த இடத்தில் சில நாள் இருந்து போகவேண்டுமென்று எண்ணுகிறார்களோ, அவ்விடத்துக்கு ஒரு பெரிய மிட்டாய் பொட்டணம் எடுத்துக்கொண்டுவந்து, குழந்தைகளிடம் கொடுத்து, தன் கோட்டு சட்டைகளை அவிழ்த்து மாட்டிவிடுகிறார்கள். பெண்கள் உடனே ஒன்றும் இரண்டு புகசாய்சுறிகளுடன் சமயல் செய்யப் போய்விடுகிறார்கள். இது விருந்தினர் இருப்பாரென்பதற்கு அர்த்தம். நாம் கேட்காததற்கு முன்னரே இது ஒரு தந்திரம்.

ஒவ்வொருத்தருக் தக்கபடி.—பாகவதர்கள வந்தால் கடவுளைப் பற்றிய பிரஸங்கம். கல்விமான் வந்தால் கல்வியைப்பற்றிய விஷயம். வேறு சிலர் வந்தாலோ அவன் செய்த தப்பு, இவன் செய்த நடவடிக்கை முதலியவைகளைக் கூறிக்கொண்டே இருப்பார்கள்.

விருந்தினரின் டம்பம்.—சில விருந்தினர்கள் சாப்பிடும்போது எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் இலையில் மீதி வைத்துவிட்டு எழுந்திருக்கிறார்கள். அது மாத்திரம் தொண்டையில் இறங்கவில்லையா? தெருவில் திரியும் நாய்கள் புசிக்கவா இவர்களுக்கு வைத்தது? இப்படி மீதி வைப்பதும் ஒரு கௌரவமாம்! கடையில் சாமான்களின் விலையென்ன?

குமாரத்திகளின் நடுவே.—புதல்வர்களின் கூட்டத்தில் ஒரு தந்தை நிற்கும் காட்சியைவிட, தன் கண்மணிகளான புத்திரிகள் ஸர்வாலங்கிருத பூஷிதர்களாய்த் தன்னைச் சூழ்ந்து நிற்க, அவர்களின் நடுவே ஒரு தந்தை நிற்கும் காட்சி மிக்க மிக்க அழகியது. எத்துணையோ ரமணீயம்.

பணக்காரர்கள்.—சில பணக்காரர்கள் நம்மைப் பார்க்க வெகுதூரத்திலிருந்து வந்தாலும், நம் வீட்டில் சாப்பிடுகிறதில்லை. வெகு நேரமும் இருக்கிறதில்லை. இரண்டொரு நிமிஷங்களில் போய்விடுகிறது. அதுவும் ஒரு கௌரவமாம்.

புருஷர்கள்.—புருஷர்களுக்கு அவர்களின் மனம்—இஷ்ட பூர்த்தி—திருப்தியானால் போதும். தங்களை நம்பிய பெண்களின் மனோபாவத்தை-திருப்தியை-ஸஞ்சலத்தை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

கூடநின்று பழகுவோர்.—கூடநின்று பழகினோர்க்கு எந்த இடத்தில் குஷ்மம்—ஸக்தி யிருக்கிறதென்று தெரியும். அந்த உள் இடம் அறிந்து வேலைசெய்து நம்மைப் படுகுழியில் வீழ்த்தப் பார்ப்பர்.

மௌனஸ்தர்.—மௌனஸ்தர்களின் மனோவேதனை அவர்தம் எதிரிகளிடத்துச் சென்று, வெகு சீக்கிரம் சுட்டு வாட்டும். மௌனத்திற்கு வேகம் அதிகம்.

காதலர்.—காதல் என்பது பூர்வபாசத்தின் நிழலாய் நிகழ்வது. பண்டை நாளின் தொடர்பாய்ப் பொருந்துவது. தெய்வம் அமைப்பது. இபத்தைத் தேவியார் இதயங் கனிந்து விதிப்பது.

ஒரு யுக்தி.—நம்முடன்கூடக் கடைவீதி சுற்றிவர எவரேனும் வேண்டுமானால், எதிர்ப்படுகிற ஒருவருக்குக் கொஞ்சம் காபிஹோட்டலில் பரிமாறிவிட்டால், நாம் வீடு போய்ச் சேருமளவும் நம்முடன் கூடவே வருவார்கள்.

விகடமாமா

REGISTERED.

"மாமா"வினுடைய தேச ஸஞ்சார அநுபவங்களின் விநோதம்.

அட அப்பனே! பிட்டுக்கு மண் சுமந்த பரமனே! பெண் பித்து பிடித்துப் பார்வதியை அர்த்த சரீரமாக இணை பிரியாமல் வைத்துக்கொண்டிருக்கும் பரமேஸ்வரனே! சொந்த பத்தினியை நம்பாமல், கீழேயும் அவ்வணங்கை விடாமல், மார்பிலே (ஸ்ரீமகாலக்ஷ்மியை) வைத்துக்கொண்டிருக்கும் மாயவனே! சபரி எச்சிலைத் தின்ற இராகவனே! துரியோதனன் பூண்டை வேரோடு கிள்ளிய கோபாலனே! ஜாதி பேதம் பாராது விதுரன் வீட்டில் உண்ட கோவிந்தனே! ஆடுமாடுகளை மேய்த்தும், வெண்ணெய் தயிர் பால் திருடியும், பதினாயிரம் கோபிகைகளையும் ரமித்து, கேட்கப்போனால், நான் நித்திய பிரம்மச்சாரி யென்று ரூபித்த மணிவண்ணனே! நீ படைத்த இந்த நெடு உலகிலே என்னென்ன விநோதங்களெல்லாம் நடக்கின்றன! சில காலமாக மாமா செய்து கொண்டுவருகிற இந்த தேசஸஞ்சாரத்தில் ஆங்காங்கு கண்டதைக் காணும் அதிசய விஷயங்களை ஒருங்குசேர்த்து அவ்வப்போது எழுதிவர நினைக்கிறேன். அவை என் விகடக்குஞ்சுகளுக்கு மிகவும் பிரயோஜனகரமான "அநுபவங்களாய்" இருக்கும். எனது பெயரோ மாமா. தாயுடன் பிறந்த சகோதரனும் ஒரு மாமா. ஸகோதரியின் புத்திரியை மணம் புரிபவனும் மாமா. மருமகளுக்கும் ஒரு மாமா உண்டு. பெண் தந்தவரும் ஒரு மாமா. அத்தையின் கணவனும் ஒரு மாமா. தாசி வீட்டில் என்றைக்கும் உட்கார்ந்து சாப்பிடுகிறவனுக்குப் பெயர் இண்ட்டி மாமா. அதாவது வீட்டு மாமா. வருகிறவனுக்கெல்லாம் விலைமாதர்கள் வைக்கும் வரிசையும் மாமா. சேர்த்து வைப்பவருக்குப் பெயர் கும்பகோணத்து மாமா. மா என்றால் பெரிய என்றும் அர்த்தம். மாமா என்றால் பெரிய பெரிய—அதாவது'மஹா பெரிய' என்றும் பொருள்படும். மா என்றால் குதிரைக்குப் பெயர். மாமா என்றால் பெரிய குதிரையென்றும் கூறலாம். மாமா வீட்டுக்குத் தலைவர். மாமனார் என்றால் ஒரு குடும்பத்தின் அதிகாரி. மாமா ஒரு மருமகளுக்கு ஒரு அன்பான தந்தைபோல. ஒரு மாமனார் போய்விட்டால் ஒரு குடும்பம் சீர்குலைந்து விடுகிறது. மாமா இடத்தில் கேளிக்கை பரிகாசங்களெல்லாம் செய்யலாம். மாமா இடத்தில்

தான் நமது ரகசியங்களை யெல்லாம் நாணமின்றிச் சொல்லலாம். மாமா நம் இஷ்டப்படி யெல்லாம் நடப்பார். மாமா தான் நமக்கு சரி. மாமா ஊரிலிருந்து மிட்டாய்ப் பொட்டணத்துடன் வந்து விட்டால் எவ்வளவோ சந்தோஷம்—குதூகலிப்பு—கொண்டாட்டம்—கோலாகலம்—ஜாகாவிநோதம்—ஆநந்த ஸாகரம். அத்தகைய மாமா யார்? நான் தான். என் பெயர் என்ன? மாமா. நல்லிழுகப் படித்தாலும்கூட நான் மாமா தான். சரியான "விகட மாமா.'

முதல் மூட்டை.

மாமா இன்று விசுவூரில் இருக்கின்றேன். இன்று காலை ஸ்நானஞ் செய்யும் பொருட்டு வெளியே போகும்பொழுது ஒரு கிணற்றங்கரையில் ஒரு பையன் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். "அப்பா ஏன் அழுகிறாய்" என்றேன். அவன் "ஐயா, என் தமக்கை பொருத்தியை இந்த ஊரில் ஒரு பாவிக்குக் கொடுத்திருந்தது. அவனுடைய வீட்டிலிருக்கும் அவன் தாயும், அறுத்து வந்திருக்கிற அவன் அக்காளும், என் தமக்கையை வெகு நாளாய் இம்சித்து வந்தார்கள். அவனும் பெண்சாதி யென்ற இரக்கமில்லாது என் தமக்கையைக் கண்டபடி அடிப்பதும் வைவதுமாகவிருந்தான். இதை யெல்லாம் கேட்டு நான் அவளை, என்னுடைய ஊருக்குக்கூட்டிக்கொண்டு போகலாமென்று வந்தேன். ஆனால் நான் வந்த சமயம் எனது தமக்கை விலக்கமா யிருந்தபடியால் இரண்டு தினம் கழித்துக்கூட்டிக்கொண்டு போவோமென்று அடுத்தவீட்டில் காத்துக்கொண்டிருந்தேன். விலக்கமா யிருக்கிற என் தமக்கைக்கு வீட்டிலுள்ளவர்கள் சாதம் போடாமலும், தண்ணீர் கொடாமலும் பட்டினி போட்டிருப்பதாய்க் கேள்விப்பட்டு, நான் அடுத்த வீட்டில் கொஞ்சம் சாதம் வாங்கிக்கொண்டு போய் என் தமக்கைக்குக் கொடுத்தேன். இதைக் கண்ட அவன் தாயும் அவன் தமக்கையும் அவனிடம் சொன்னார்கள். இதற்காகக் கோபங்கொண்டு அவன் என் தமக்கையைத் தடியினாலும், உலக்கையினாலும் பலமாய் அடித்தான். அப்படி அடித்த அடி எப்படியோ படாத இடத்திற் பட்டு என் தமக்கை இறந்துபோனாள். இப்படி நடந்தது இரவு சுமார் 12-மணி நேரத்துக்காதலால் இதுவொன்றும் எனக்குத் தெரியாது. பின்பு அவளை அந்தப் பாவியும் அவன் தமக்கையுமாய்த் தூக்கி ஒரு வண்டியிற்போட்டு ஆற்றங்கரைக்குக் கொண்டு போய் புதைத்துவிட்டு வந்துவிட்டார்கள். இந்த விஷயத்தை நான் என் ஊருக்குப் போய்ப் பெற்றோருக் கறிவித்தும், அவர்கள் பல முயற்சி செய்தும் அவனுக்கு யாதொரு தண்டனையும் கிடைக்கவில்லை. பின்பு இவனுக்கு அநேகர் பெண் தருகிறதாய்ச் சொல்லுகிறார்களாம். இதுதான் அழுதுகொண் டிருப்பதற்குக் காரணம்" என்று சொன்னான். ஐயோ! இந்த உலகத்தில் பெண்களுடைய ஸ்திதி எந்தமட்டில் இருக்கிறதென்று பார்த்தீர்களா? இனி

மேலாவது தங்கள் பெண்களை விவாகஞ்செய்து கொடுக்கும் பிதாக்களும் தாய்மாரும் புருஷனுடைய யோக்கியதையைக் கவனிக்கட்டும்.

அடுத்த மூட்டை.

மாமா நேற்று மாலை 7-மணிக்குத் திங்களூர் வந்து சேர்ந்தேன். இன்று காலை பலபலவென்று விடியப் படுக்கையை விட்டெழுந்த பொழுது அடுத்த வீட்டில் ஏதோ ஒரு அழுகைச் சத்தம் கேட்டது. உடனே வெளியே வந்து தெருவில் நின்றவர்களிடம் 'அது என்ன அழுகை' என்று கேட்க, ஒரு வயோதிகர், ஐயா, இந்த வீட்டில் ஒரு பிராமணருடைய பெண் ஒன்று மஞ்சள் குங்குமம் இழந்து விட்டது; வயது எட்டோ ஏழோவிருக்கும்' என்று சொன்னார். இதைக் கேட்டவுடன், ஐயோ! இந்தியாவிற் பிறக்கும் பெண்களின் நிலை இப்படியும் ஆயிற்றே என்று மனவருத்தப்பட்டுச் சாசாவென்று துஷ்டிவீடு போய்ச் சேர்ந்தேன். அங்கே வீட்டுக்குள் பத்து முப்பது பெண்கள் கூடிக்கொண்டு கூவேகூவென்று சப்தமிட்டுக்கொண்டும் முகத்திலும் தலையிலும் மோதி மோதி அடித்துக்கொண்டும் அழுதார்கள். வாசலில் நாலைந்து பெண் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. அங்கே நின்ற மனிதனொருவன் 'ஐயா இந்தக் குழந்தைதான் வாழ்வு இழந்தது' என்றான். உடனே நான் அந்தச் சிறு பெண்ணைப் பார்த்து 'அம்மா, ஏ குழந்தாய், இங்கே வாவென்று கூப்பிட்டேன். அதுவும் என்னருகே கிட்ட ஓடிவந்து'என்னை'என்று கேட்டது. நான் அம்மா,உன் அப்பா எங்கே? எல்லோரும் அழுகிறார்களே எதற்கு? என்று கேட்டேன். அதற்கு குழந்தை 'என்னவோ, எனக்குத் தெரியாது, யாரோ செத்துப்போனார்களாம்' என்றது. 'உனக்கு கல்யாணம் ஆய்விட்டதா' என்றேன். அது 'எனக்குத் தெரியாது' என்று சொல்லிவிட்டு ஓடிப்போய்விட்டது.

ஐயா, கேட்டீர்களா! இந்தப் பெண் தனக்கு விவாகமானதும் ஆகாததும் தெரியாமலிருக்கிறது. அது சுமார் 5,6 வயதாயிருக்கும்பொழுது அதற்கு விவாகமாயிற்றாம். ஆனால், அப்படி நடந்தது விவாகம்தான் என்று அக்குழந்தைக்குச் சிறிதும் தெரியாது. இப்படிப்பட்ட பால்மணமறாத சிறு பெண்களுக்கு விவாகஞ் செய்துவிடுவதால் அப்பெண்களுக்குத் தங்கள் நாயகர் இன்னாரென்றுகூடத் தெரியாமற் போகிறது. பிறகு புருஷனிறந்துவிட்டால் ஒரு பாவமுமறியாத அச்சிறு மதலைப் பெண்களுக்கு அமங்கலி என்று பெயரிட்டு வேஷம்போட்டு விடுகிறார்கள். உண்மையில், அப்பெண்களுடைய குற்றம் யாதேனும் உண்டா? இல்லையே. இப்படிச் சிறு வயதில் விவாகஞ் செய்வதினும், அவைகளைக் கொன்றுவிடுவது பெரிய உதவியாயிருக்குமே. கொன்றுவிட்டால், அன்றோடு அவர்களுடைய எல்லா கஷ்டமும் போயிருக்குமே! விவாகம் என்பது இன்னது, காதல் என்பது இன்னது, ஸ்திரீ புருஷர் என்பது இன்னது, வாழ்க்கை என்பது இன்னது என்று பகுத்தறியக்கூடாத பருவத்தில், பால்குடி மறவாத பெண்களை விவாகஞ் செய்வதற்கும் சிசுஹத்திக்கும் என்ன பேதமிருக்கிறது? இந்தியாவில்

அதிக நாகரிக மடைந்தவர்களும், அதிக கல்வி கற்றவர்களுமாகிய பிராமண ஜாதியில் இக்கொடிய வழக்கம் இன்னும் நடந்துவருகின்றது. ஜனங்களுக்குமுன் மாதிரியாய் நின்று சீர்திருத்தம் செய்யவேண்டிய பிராமணர்களே இவ்வாறு நடந்தால், மற்ற ஜனங்களின் அநாகரீகத்திற்கு நாம் வருத்தமடைய நியாயமில்லை. விதவாவிவாகம் செய்வது சரியென்று ஒப்புக்கொள்ளாவிடினும், பால்ய விவாகத்தையாவது நிறுத்தி, இச்சிறிய பெண்களைக் காப்பாற்றுவார்களென்று எண்ணுகிறேன். பால்ய விவாகம் குறையக் குறைய, பால்ய விதவைகளின் தொகையும்தானே குறையுமென்பது எனது அபிப்பிராயம்.

கிடைத்த முட்டை.

மாமா சிலகாலமாக கடப்பாறை என்னும் ஊரில் வசிக்கின்றேன். இன்று காலை இவ்வூரிலுள்ள ஒரு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தைப் பார்க்கவேண்டுமென்று போயிருந்தேன். பள்ளிக்கூடத்துக்குப் போகிற வழியில் ஒருவர் சட்டை தொப்பியோடு நின்றுகொண்டிருந்தார். நடையும் உடையும் பார்த்தால் அவர் ஒரு கிறிஸ்தவன் போல் தோன்றிற்று. கிட்டப்போய் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். அவர் பேச்சினால் அவர் ஒரு பிராமணரென்று தெரிந்து அவருடைய பூர்வீகத்தை விசாரிக்கவேண்டுமென்று விரும்பினேன். "ஐயா, தாங்கள் எந்த ஊர்? தங்களுடைய மதம் என்ன? ஜாதியென்ன?" வென்று கேட்டேன். இப்படிக் கேட்கவே அவர் தலையைக் கவிழ்த்துகொண்டு ஒன்றும் பேசாமல் மனவருத்தத்தோடு தன்னுடைய அறைக்குட் போய் விட்டார். உடனே மாமா மிகவும் ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் அடைந்து வெளியே நின்றுகொண்டிருந்த பிள்ளைகளிடம் விசாரித்தேன். பிறகு சங்கதி வெளியாயிற்று. ஐயோ! பரிதாபம்! பரிதாபம்!! அவர் ஒரு சோழதேசத்து ஸ்மார்த்தப் பிராமணராம். சிறுபிள்ளை முதல், இந்த ஊரிலுள்ள அவருடைய தாய்மாமன் வீட்டிற் சாப்பிட்டுக்கொண்டு இந்தக் கிறிஸ்தவப் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டு வந்தாராம். ஆள் நல்ல அழகான புருஷராகையினால் இவருக்கு ஒரு கஷ்டம்! மானேஜரா யிருப்பவர் ஒரு ஐரோப்பிய பாதிரியாராம். அவருக்கு சுமார் 17 வயதுள்ள ஒரு பெண்ணுண்டாம். அவளும் தன்னுடைய பிதாவோடு பள்ளிக்கூடத்தைச் சுற்றிப்பார்க்க வந்த காலங்களில் இந்த ஐயரைப் பார்த்து ஒருவித நோக்கத்தை உட்கொண்டாளாம். ஒரு தினம் அந்தப் பெண் ஐயர் பள்ளிக்கூடத்தினின்று வீட்டுக்குப் புறப்படும் சமயத்தில் அவரோடு மிகவும் அன்பாய் பேசிக்கொண்டு நின்று, முடிவில் தன்னை விவாகம் செய்துகொள்ளும்படி வேண்டினாளாம். ஐயரும் மிக எளியவரா யிருந்தபடியாலும் ஒரு ஐரோப்பிய யௌவனமாது வலிய வந்து கேட்டதை மறக்கத் தாக்ஷிண்யப் பட்டமையாலும் மறுதினம் பதில் சொல்வதாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஐயரும் வீட்டுக்குப் போய்த் தனக்குள் தானே யோசனை செய்ததில், அந்தப் பெண்ணை விவாகஞ்செய்தால் தனக்கு அளவற்ற வித்யாலாபமும் தனலாபமும் உண்டாகுமென்று நம்பி அவ்வாறே செய்துவிடுவதெனத் தீர்மானித்து, மறுதினம் தன்னுடைய சம்மதத்தை அவளுக்குத் தெரிவித்தார். இதற்குள் இருவர்க்கு மிடையிலுள்ள அன்பும் அதிகரித்துவிட்டது. ஆனால் அவளை ஐயர் விவாகஞ்செய்யுமுன் தான் கிறிஸ்தவனாகவேண்டியது அவசியமாகையினால் அவ்விருப்பத்தை மானேஜர் துரையிடம் தெரிவித்தார். இவர் கிறிஸ்தவனாவதற்குத் தன் மகளே காரணமென்று மானேஜர் நன்றாய்த் தெரிந்துகொண்டார். ஆனால் இந்த ஏழைப் பிராமணன் கிறிஸ்தவனாவதுமட்டும் இந்த மானேஜருக்குச் சம்மதமேயன்றி

அவனுக்கும் தன் மகளுக்கும் நடக்கும் விவாகம் அவருக்குக் கொஞ்சமும் திருப்தியாயில்லை. ஆனாலும், இந்த மானேஜர் அவனைக் கிறிஸ்தவனாக்கும் வரை தன் மகளை அவனுக்கு விவாகஞ் செய்துகொடுக்கச் சம்மதமுள்ளவர்போல் ஜாலம் செய்துகொண்டிருந்து ஒரு ஞாயிற்றுகிழமையன்று இந்த ஏழைப் பிராமணனுக்கு ஞானஸ்நானம் செய்துவிட்டார். பிராமணனுடைய பந்துஜனங்கள் இதைக் கேள்விப்பட்டுப் பெரிய கலகம் செய்தார்கள். என்றாலும் ஐயங்கார் மேஜராயிருந்தபடியால் அவர்களுடைய முயற்சி வீணாயிற்று. ஐயரும் ஞானஸ்நானம் பெற்ற மறுதினம் முதல் அந்தப் பெண்ணை விவாகஞ் செய்யவேண்டிய முயற்சிசெய்து அவளையே பின்பற்றி யலைந்தார். இதற்குள் பாபியாகிய மானேஜர் தன்னுடைய மகளைப் பயமுறுத்தி அவளுடைய இஷ்டத்துக்கு விரோதமாக அவளைச் சீமைக்கு அனுப்பிவிட்டாராம். பின்பு இந்தப் பிராமணன் என்ன வருத்த மடைந்திருப்பான் என்பதை,என்விகடக்குட்டிகளே யோசித்துக் கொள்ளுங்கள். பின்பு இவர் நெடுநாள் மனம் வருந்திப் பின்பு யாரோ ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டிருக்கிறாராம். விகட அன்பர்களே! நான் மதசம்பந்தமாய் யாதொன்றும் பேச வரவில்லை. உண்மையில் ஒரு மதத்தினுடைய அருமை பெருமைகளை அறிந்து தான் அதைப் பின்பற்றலாமேயன்றி இவ்வித அற்ப நோக்கத்தைக்கொண்டு மனச்சாக்ஷிக்கு விரோதமாய் இறங்கப்படாது.

என் மருமகன்களே! நீங்கள் எந்தமதத்தில் இருந்தாலும் சரியே. ஆனால் உங்களுடைய மனசாக்ஷியும் அத்தோடொத்திருக்கவேண்டும். நீங்கள் பிறந்து வளர்ந்த சொந்த மதமே குறையுள்ளதெனத் தோன்றினாலும், அதனினும் மேலான மதம் வேறொன்றுண்டானால் அதைச் சேருங்கள். அவ்வாறின்றிக் கேவலம் சொந்தமான அற்ப ஆசையினால் ஒன்றிலிருந்து ஒன்றிற் குதிக்க வேண்டாம். ஒரு ஹிந்து புருஷன் ஒரு கிறிஸ்தவப்பெண்ணை விவாகஞ் செய்யவிருப்பமிருந்தால், அந்தப்பெண்ணை, வேண்டுமானால், ஹிந்துவாக்கி பின்பு அவளை விவாகஞ் செய்யலாமேயன்றிப் புருஷன் தான் கிறிஸ்தவனாக வேண்டுமென்ற கட்டாயம் கூடாது.

ஹிந்துக்களாகிய நீங்கள் கிறிஸ்தவப் பெண்களை விவாகம் செய்துகொள்ள விரும்பினால், அவர்களை உங்கள் பக்கம் இழுக்க வேண்டுமேயன்றி, பெண்கள் பக்கம் நீங்கள் போகவேண்டாம். போனால் கௌரவமிராது. கிறிஸ்துவமாப்பிள்ளைமாரை விவாகம் செய்து கொள்ள விரும்பும் பெண்களும் கிறிஸ்து மதத்திற்குப் போகட்டும். புருஷன் மதத்தைப் பெண் அனுசரிப்பது சரியே யன்றிப் பெண்ணின் மதத்தைப் புருஷன் அனுசரிப்பது பைத்தியக் காரத்தனம். இதைக் கவனியாமல் தலைக்குப்புற இறங்குவீர்களானால், ஏழைப் பிராமணன் கதி உங்களுக்கும் வருமென்பது நிச்சயம். என்னவோ மாமா சொன்னேன். கேட்டால் கேளுங்கள். விட்டால் விடுங்கள்; எனக்கு எம்மதமும் சம்மதமே. நான் இங்கு சொல்ல வந்ததெல்லாம், நமது புருஷத்வத்தைப் பூரணமாய் நிர்வகிக்க வேண்டுமென்பதுதான். அதை விட்டுவிட்டுப் பெண்ணுக்காக அவள் மதம் போகக் கூடாதென்பது தான்.

எடுத்த மூட்டை.

மாமா இன்றுதான் மேற்குப்புரம் வந்துசேர்ந்தேன். இவ்விடத்திலே "பெரிய மடம்" என்ற ஒரு மடாலயம் இருக்கிறது. அதில் குண்டலத் தம்பிரான் என்றொரு பெரிய சந்நியாசியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப்போனேன். அவருக்கு வயது சுமார் 19 அல்லது 20 இருக்கலாம். இவர்தான் இந்த மடத்துப்பட்டத்துப் பட்டத்துக்குச் சாமியாராம்.

ஆள் மகா சுந்தரமான புருஷன். மீசை நன்றாய் முளைத்தும் முளையாமலு மிருக்கிறது. சரீரம் பொன் தகடுபோல் பளபள வென்றிருக்கிறது. இரண்டு செவிகளிலும் இரண்டு வளையம் போட்டிருக்கிறார். பெரிய ஜடை வளர்த்திருக்கிறார். அதன் நீளம் சுமார் மூன்று கெஜத்துக்குமேலிருக்கும். கோயமுத்தூர ஜரிகைவேஷ்டியிலே காவி நனைத்தோ (அல்லது சாப்பிராவிரைச் சாயமேற்றியோ) அரையில் உடுத்திருக்கிறார். மேலே வீரவநல்லூர் முண்டிலோ அல்லது மலையாளத்து சேரியலிலோ கொஞ்சம் ரோஸ்கலர் பவுடர்ச் சாயம் நனைத்து மேலே போட்டிருக்கிறார். மாமா போகிற சமயம் சாமியார் போஜனம் செய்துவிட்டு கட்டிலில்வந்து சாய்ந்துகொண்டிருந்தார். அநேக ஜனங்கள் வந்து கீழே விழுந்து கும்பிட்டு விபூதி வாங்கிப் பூசிக்கொண்டார்கள். மாமா கீழே விழுந்து கும்பிடாமல் நின்றபடியே கும்பிட்டுக் கிட்டப் போனேன். எனக்குமட்டும் அவர் விபூதி கொடுக்கவில்லை. என்னை ஒருவகையாய்க் கண்ணை உருட்டியுருட்டிப் பார்த்தார். இதற்கெல்லாம் பயந்த ஆசாமியா மாமா? மற்றவர்களெல்லாம் எதிரே நின்று வாய் பொத்தி வணங்கியொடுங்கி நின்றார்கள். நானோ அவருக்கெதிரே ஓரிடத்திற் போய் உட்கார்ந்து கொண்டேன். இந்த சமயத்தில் வெளியே யிருந்த 20, 30, ஸ்திரிகளும் சில புருஷர்களும் மடமடவென்று உள்ளே வந்து சேர்ந்தார்கள். வந்த ஸ்திரிகளுள் சிலர் சுமங்கலிகள்; சிலர் அமங்கலிகள். சில பெண்களுக்கு வயது, 15, 18, 20, 25, இப்படியிருக்கும். யாவர்களும் தங்களுடைய ஆபரணங்களை யெல்லாம் அணிந்துகொண்டு உயர்ந்த குறநாட்டுப் புடவை பட்டுப்புடவைகள் உடுத்திக்கொண்டு வந்திருந்தார்கள். மாமா இதைக் கண்டவுடனே காரியம் இன்னதென்று விளங்காமல் திகைத்துக்கொண்டிருந்தேன்; இருந்தாலும் அங்கே நின்ற ஒரு மடத்துச் சேவகனிடம் விசாரித்ததில் அவன் "ஐயா இவர்கள் எல்லாரும் தெற்கே திருநெல்வேலி மதுரை ஜில்லாவிலிருந்து சந்நிதானத்தை (சாமியாரை)த் தரிசிப்பதற்காக வந்திருக்கிறார்கள்" என்றான். மாமாவும் என்ன நடக்கிறதென்று பார்த்துக்கொண்டே யிருந்தேன். எல்லாப்பெண்களும் போய் நமஸ்காரம் செய்து சாமியினுடைய திருமுக வசீகரத்தைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். சாமியாரும் தன்னுடைய பட்டுப்பையிலிருந்து விபூதியை எடுத்தார். விபூதியெல்லாம் புனுகு ஜவ்வாது வாசனையாய் கமகமவென்று இருந்தது. விபூதியை எடுத்துத் தம்பிரான் கொடுக்க ஆரம்பிக்கவே, சிறு பெண்களெல்லாரும் சாமியார் கிட்டப் போக நாணிச் சிறிது தூரத்தினின்று கையை நீட்டினார்கள். ஆனால் சாமியாருக்கு அது பிரியமில்லை. உடனே அவர் அப்பெண்களை சமீபத்தில் வரும்படி சொல்லி, இடது கையினால் அவர்களுடைய சிரத்தைப் பிடித்துக் கொண்டு, வலது கையினால் விபூதியையெடுத்து அவர்களுடைய நெற்றியிற் பூசினார். தம்பிரான் இப்படி விபூதி பூசி முடியுமுன் அந்தப் பெண்களெல்லாரும் மிகவும் நாணிக் கஷ்டப்பட்டு விட்டார்கள். ஆனால் தம்பிரான் அங்கே வந்திருந்த புருஷர்களுக்கெல்லாம் கையில் தான் விபூதி கொடுத்தாரேயன்றி நெற்றியில் பூசவில்லை. பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்றது பொய்யா? பேயே இரங்குமானால், 20-வயது சாமியார் இரங்குவதற்குக் கேட்பானேன்? பின்பு அவர்களுள் ஒரு கிழவி சுமார் 19, 20, வயதுள்ள தன் மகளை முன்னாலே நிறுத்தி "சாமி, இவள் தான் என் மகள். இவளுக்கு விவாகமாகி 5 வருஷ காலமாகியும் இதுவரை குழந்தையில்லை. இதற்குச் சாமிதான் ஒரு பரிகாரம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். உடனே தம்பிரான் அந்தப்பெண்ணை வெகு கருணையோடு சுமார் 15-நிமிஷ

நேரம் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். பின்பு சொல்லுகிறார்; "அம்மா, இவளுக்கு ஒரு கிரக—தோஷமிருக்கிறது. அதற்கு ஒரு தகடு கட்டினால் சுலமாயிருக்கும். இன்றைக்கு வேண்டுமானால் தகடு கட்டலாம்" என்றார். இதைக்கேட்ட கிழவி அப்படியே ஆகட்டுமென்று சம்மதிக்க, தம்பிரான் உடனே குபீரென்று எழுந்து பாதரக்ஷையை மாட்டிக்கொண்டு ஒரு அறைக்குட் புகுந்தார். அங்கேயிருந்துகொண்டே தவசிப்பிள்ளையை யழைத்து கொஞ்சம் புஷ்பம், சந்தனம், குடம், சாம்பிராணி ஒரு பாத்திரத்தில் ஜலம் இவ்வளவும் கொண்டுவரும்படி சொன்னார். சாமான்களும் தயாராய் வந்துவிட்டன. உடனே தம்பிரான் ஷை கிழவியையும் அவள் மகளையும் அறைக்குள் வரும்படி அழைத்தார். இருவரும் உள்ளே சென்றார்கள். உடனே தவசிப்பிள்ளை வெளியே வந்துவிட்டான். இன்னும் சிறிதுநேரத்துக்குள் அந்தக் கிழவியும் வெளியே வந்துவிட்டாள். தம்பிரானும் அந்தச் சிறுபெண்ணும்தான் உள்ளே இருந்தார்கள். இதற்குள் தவசிப்பிள்ளை வெளியே நின்றுகொண்டே கதவை யிழுத்து அடைத்துவிட்டான். இதைக் காணவே மாமா மனம் திடுக்கிட்டுவிட்டது. ஆனாலும் என்ன நடக்கிறது பார்ப்போமென்று இருந்தேன். சுமார் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் சாமியார் கதவைத் திறந்து, கிழவியையும் உள்ளே யழைத்து, விபூதி முதலிய பிரசாதங்களைக் கொடுத்தனுப்பினதுமன்றி, தவசிப்பிள்ளையிடம் சொல்லி தயிர்சாதம் புளிச்சாதம் முதலியவைகள் கொண்டுவந்து தரும்படி உத்தரவுசெய்தார். ஆனால் நான் அந்தப்பெண்ணினுடைய முகத்தை உற்றுப்பார்த்ததில் அவள் முகம் கண்களில் நீரொழுகத் துக்கமயமாய் வாடியிருந்தது. எல்லாரும் வெளியேறிவிட்டார்கள். நானும் இந்த வயிற்றெரிச்சலைப் பார்த்துவிட்டு வெளியே வந்து அந்த ஊரிலுள்ளவர்களிடம் ஷை சாமியாரின் மகிமையைப்பற்றி விசாரித்தேன். காரியம் டபீலென்று வெடித்துவிட்டது! பேஷ்! இவர் மேற்கே ஒரு கிராமத்திலுள்ள ஒரு வேளாளப் பையனாம். சிறுபிள்ளையா யிருக்கும்பொழுது, இவன் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் தாசி வீட்டைச் சுற்றிக்கொண்டு திரிந்ததற்காக அவனுடைய பெற்றோர் கண்டித்ததின்பேரில் இவன் பெற்றோரிடம் சொல்லிக் கொள்ளாமல் இந்த மடத்தில்வந்து நின்றுகொண்டிருந்தானாம். பின்பு இவனுக்கு முன்னிருந்த பெரிய சாமியார் இவனுடைய பந்துவாகையினால் இவனுக்குப் பட்டங்கட்டிவிட்டுப் போய்விட்டாராம். இதுதான் நடந்த வர்த்தமானம். இப்பொழுது பிள்ளையாண்டான் தம்பிரான் வேடம்பூண்டு காரியத்தை ஒப்பேற்றுகிறான். மாமா இப்படி எழுதுவதைக் குறித்து என்னை வம்பன் என்று சொல்லப்படாது. காரியம் உண்மை. சிறுபிள்ளையா யிருக்கும்பொழுது தாசிவீட்டைச் சுற்றிக்கொண்டலைந்த பையனை இப்படித் தம்பிரான் என்று வைத்துக்கொண்டு இந்தப் பாழான ஜனங்கள் மோசம்போகிறார்கள். ஆனால் பையன் பேரில் யாதொரு குற்றமுமில்லை. அவன் என்ன செய்வான்? தினம் 3,4, வேளை பாலோடு நெய்யோடு சாப்பிடுகிறான். வயது இருபது. வேறே வெளியேற வழியுமில்லை. ஆகையால் தம்பிரான்பையன்மேலே குற்றமில்லை. இவனை நம்பி அவனிடம் பிள்ளைவரம் கேட்கப் போனாளே ஒரு மூளி; அவளுடைய மடமைதான் இதெல்லாம். இவர்களை இலகுவில் நம்பிவிட வேண்டாம். அவர்களுக்குள் நல்லவர்கள் சிலரிருந்தாலும்கூட அவர்களின்னாரென்று உங்களுக்குத் தெரியாதபடியால் ஜாக்கிரதையாகவே யிருங்கள். உண்மையான துறவிகள் பட்டணங்களிலும், திருவிழா காலங்களிலும் வெளியேறார்கள். அவர்கள் இருக்கும் இடம் வேறே; எச்சரிக்கை.

வேறொரு மூட்டை.

இப்பொழுது மாமா அப்பர்புரத்தில் இருக்கிறேன். எனக்கு ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. அதையும் இங்கு வெளியிடுகிறேன்.

ஏ! விகட மாமாவே!

தாங்கள் இப்பொழுது எழுதிக்கொண்டு வருகிற விஷயங்கள் பெரிய மனுஷர்களாகிய எங்களை அவமானம் செய்வதாயிருக்கிறது. இது சரியல்ல. நாங்கள் எங்கள் சவுகரியம்போல் எப்படியும் நடப்போம். கையிலிருக்கும் பொருளைப் பல விதமாய்ச் செலவு செய்வோம்: நாங்கள் நினைப்பதொன்றும், பேசுவதொன்றும், நடப்பதொன்றுமாயிருக்கும். ஆனால் நினைக்கிறபடி நடப்போம். நடக்கிறபடி நினைப்போம். இதுமட்டும் உண்மை. ஆனால் நினைக்கிறபடி பேசமாட்டோம். பேசுகிறபடி நடக்கமாட்டோம். இதனால் உங்களுக்கு என்ன கெட்டுப்போய்விட்டது? நீங்களெல்லாம் இப்படி ஆரம்பித்தால் எங்களுக்குப் பிழைப்பில்லை. "மாமா" வைக் கண்டால் கண்டால் என்ன செய்வோம் தெரியுமா? கிடக்கட்டும். இனிமேல் இப்படி எல்லாம் எங்களைச் சுட்டாமல் சுட்டி எழுதப்படாது. எங்கள் குட்டுகளை யெல்லாம் இப்படி உடைத்துவிடப்படாது. எங்களிடம் தக்க பொருளுண்டு. நல்ல சாப்பாடு. எங்களுக்கு வேறே வேலை கிடையாது. உங்களைப் போன்ற கல்வியுமில்லை. இரவு முழுவதும் பேனவும் கடிதமுமாகக் கிறுக்கிக்கொண்டு கிடப்பது எங்கள் வழக்கமல்ல. நாங்கள் என்ன செய்வோம்! சாப்பிடுவோம், தூங்குவோம், எழுந்திருப்போம். சாயங்காலமானவுடன் அப்படிக் கூடி ஜோடி தெருவழியே ஒரு சவாரி விடுவோம். இரவாய் விட்டால் கேட்பானேன்? சுவாமி கோயிலுக்குப் போய்விட்டு வருகிற வழியிலேயே அப்படி ஒரு ஜாடையாய் எங்கள் அம்மன் (!) கோயிலுக்கும் போய்த் தரிசனம் செய்துவிட்டு வருவோம். எங்கள் துட்டை செலவு செய்தால் உங்களுக்கென்ன? ரூபாய் கையிலுள்ளவரை செலவு செய்வோம். இல்லாவிட்டால் பிச்சை யெடுப்போம். எங்களுக்கு நல்ல பெயரும் யோக்கியதையும் வேண்டாம். இருந்தவரை போடு போடென்று அடித்துக் கொளுத்தியது தான் மிச்சம் என்பது எங்களுடைய சித்தாந்தம். இதை யறியாமல் எங்களுடைய அந்தரங்கமான குட்டுகளை யெல்லாம் உடைத்துவிடுவது சரியல்ல. தயவு செய்து எங்களை ஜாடையாக விட்டு விடுங்கள்.

இப்படிக்கு, வெட்கம்.

அப்படா! இது என்ன விடாத தொடர் கதையோ, எத்தனை மூட்டைகளப்பா என்பீர்கள். இவ்வளவு தானா?—இன்னும் எவ்வளவோ சரக்கு, கைசரக்கு, கால் சரக்கு, சறுக்கி விழுந்து மல்லாந்து கொண்டவர்களின் சரக்கு—ஏராளமாய் மாமாவிடம் இருக்கிறது. சரக்கு என்னவோ அதிகமே. ஆனால் கடையில் இடம் போதவில்லை. ஆனதால் மாதா மாதம் வந்தபடி யளக்கிறேன். வாரம் வாரம் வந்து வர் சங்கதிகளோடு படியளந்தால் சந்தனத்திலே செண்ட் கலந்ததுபோல இன்னும் சிலாக்கியமாகத்தான் இருக்கும். எதற்கும் காலம், கர்த்தன் வைத்த நாள், வந்து நட்டுகொண்டால் தானே ஆகும். ஆக்கப்பொறுத்தது ஆறப்பொறுங்கள். மாமாவும் என் தொந்தி வயிற்றுக்குள் இருப்பதை யெல்லாம் சீக்கிரம் கொட்ட வருகிறேன். மாப்பிள்ளையும் பெண்ணும் கலியாணத்திற்கு நாளை எண்ணிக்கொண்டிருப்பது போல எண்ணியபடியே எதிர்பாருங்கள். மாமா! ராமா! சுபம்!! சு!! சுவாஹா!!!

விநோதருசிலஸ்:

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-17. | திரிச்சி- ஆகஸ்டு: 1௳ 1921 | இதழ்-6.

9. கனகம்மாள்

[ரஸம் செறிந்த இச்சிறு கதை எனது பிதாவும், "மாதநவல்லி" என்ற பிரஸித்த நாவலின் ஆசிரியருமான ஸ்ரீமான். ப. சி. கோவிந்தசாமி ராஜா அவர்களால் எழுதப்பட்டது. மஹேந்திரனி தேவி.]

கனகம்மாளுக்குக் கல்யாணமாகி நான்கு வருஷங்களாகின்றன. ஆனால் அவள் தன் புருஷனை ஒருதரமேனும் பார்த்தவளல்ல.

கனகம்மாளினுடைய தந்தை ஸ்ரீநிவாச நாயகரென்பவர் திருச்சினாப்பள்ளியில் பெயர்போன ஒரு வக்கீல். அவர் மற்ற வக்கீல்களுக்கெல்லாம் கெட்டிக்காரர் என்பதொன்றேயல்ல. அவரிடத்தில் சத்தியமும் தருமமுமிருந்தபடியால் அவர் யாவராலும் கொண்டாடப்பட்டு வந்தார். ஏழைகளுக்கு இலவசமாகவே வழக்குகளைப் பேசுபவரெனினும், நாளடைவில் அவருக்குப் பொருள் மலைபோலுங் குவிந்தது.

அவருடைய இரண்டு சகோதரர்களும் வக்கீல்களே. இவர்கள் சூதும், வாதும், மற்றத் துர்ச்செய்கைகளுஞ் செய்து வந்தும் கட்சிக்காரர்கள் தங்களிடம் வாராமல் அண்ணனிடமே சேர்ந்ததால் அவரைப் பகைக்கலானார்கள். இதனோடு கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னே, தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு ஜமீன்தாருடைய மகனுக்குக் கனகம்மாளைக் கடிமணஞ் செய்து கொடுத்தபோது நாயகருடைய சகோதரர்களுக்குப் பொறாமை யுண்டாகியது. அம்மணமகன் பி. ஏ. பட்டமும் பெற்றவனென்பது கேட்க அவர்களுடைய வயிற்றெரிச்சல் அதிகமாகியது.

ஆகவே பொறாமையும், பகையுந்தான் கனகம்மாளும் அவளுடைய கணவனும் இதுகாறும் ஒருவரை யொருவர் பார்க்காதிருப்பதற்குக் காரணம்.

அம்மாப்பிள்ளையாகிய சந்திரசேகரனை ஸ்ரீனிவாச நாயகருடைய தம்பிமார்கள் கட்டுசெய்து, அவனுடைய மாமனாரைப்பற்றியும், மனைவியைப்பற்றியும அவனுக்குக் கோள் சொல்லவே, உலகமின்னதென் றறியாத சிறுவனானபடியால் சந்திரசேகரன் அதை யுண்மையெனா நம்பலானான். அதன் முடிவு, கல்யாணம் நிறைவேறிய பிறகு தன் மனைவியையொருதரமாயினும் போய்ப் பார்த்தவனல்ல! தன் மாமனார் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்ததற்கு வரச் சம்மதித்தவனுமல்ல. ஸ்ரீநிவாச நாயகரும் அவருடைய மனைவியும் பிரயோசனமின்றித் தங்கள் மருமகனை வேண்டலானார்கள். சந்திரசேகரனுடைய தந்தை வாசுதேவராயரும் பெண்சாதியைப் போய்ப் பார்க்குமாறு வீணே அவனுக்குப் புத்தி யுரைக்கலானார். கல்யாணப் பெண்ணும் தன்மேல் பட்சம்வைக்கும்படிப் பல கடிதங்கள் அனுப்பினாள். ஆனால் அவனோ தன் மனைவிக்காவது அல்லது அவள் குடும்பத்திலுள்ள மற்றவருக்காவது கடிதம் எழுதியது கிடையாது. அச்சிறுவயதில் அழகாயும் சௌக்கியமாயும் புருஷனோடு கூடியிருப்பதுபோக, கனகம் கஷ்டமாக நாள் கழித்துவந்தாள்.

இன்னணமியல, ஒரு நாள் சந்திரசேகரனின் தந்தையாருக்கு உண்மையாகவே கோபமுண்டாகியது. தமதிஷ்டப்படி நடக்கவேண்டும்; இல்லாவிடில் வீட்டைவிட்டு வெளியே போய்விடவேண்டுமென்று அவர் தம் மகனுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னார். இங்கிலீஷ் கல்வியினால் அறிவு மயங்கி வெள்ளைக்காரர் நடையை மெச்சுவாராயினும், இந்துக்களானால் தம் பெற்றோர் வயிறெரிந்து சொல்லும் வார்த்தை வீண்போகாதென நினைப்பார்கள். சந்திரசேகரன் ஹிந்துவேயாதலால் அவன் தன் தகப்பனாருடைய கட்டளையை இனிமேல் சிறிதேனும் அலட்சியஞ் செய்ய வியலாது. இவ்வாறு இவன் பிதா பேசியதற்கு ஏதோ ஒரு முக்கிய காரணமிருக்கவேண்டும். அக்காரணமென்ன? பாவம்! கனகம்மாள் தன் புருஷன் வரவுக்காக வெகுகாலம் காத்துக்கொண்டிருந்து பயனின்றித் தன்னுடைய துக்கத்தை யெல்லாம் சவிஸ்தாரமாகத் தன் மாமியாருக்குத் தெரிவிக்கும் தைரியம் வந்தது. அந்தச் சிறு பெண் வரைந்த விசனகரமான கடித மொன்று வாசுதேவ ராயருடைய கையிலகப்பட்டது. அவர் கல்வியும் ஞானமு முடையவராதலால் தம் மருமகள் வருத்தப்படுவதைப் பார்த்து வாளாவிருப்பதெங்ஙனம்? அதனாற்றான் தம்மகனை மேற்சொன்ன விதம் பயமுறுத்தினார்.

சந்திரசேகரன் தன் மாமனார் வீடு போவதற்கு நல்ல நாள் ஒன்று ஏற்படுத்தினார்கள். இந்துக்களுக்குள் இது ஒரு முக்கியமான நாளென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். திருச்சினாப்

பள்ளியிலிருந்து வாசுதேவராயர் வீட்டிற்கு மாப்பிள்ளையைக் கூட்டிச்செல்ல ஒருவன் வந்தான். சந்திரசேகரன் உயர்ந்த ஆடை யணிந்து, தன் தகப்பனுரிடத்தில் விடைபெற்று, வந்தவனோடு தன் மாமனார் வீட்டிற்குப் புறப்பட்டான். அவர்கள் ஏறிச்சென்ற பெட்டிவண்டி மாலை நான்குமணிக்குத் திருச்சினாப்பள்ளியை யடைந்தது. அங்கே சந்திரசேகரன் ஒரு சத்திரத்தி லிறங்கினான். வருகிற காலத்தை அறிவிக்காமல் தன் மாமனாரை அவமானஞ் செய்யவேண்டுமென்பது அவனுடைய எண்ணம். அவன் மாமனார் வீடு செல்வது இதுதான் முதற்றடவை. மாமனார் வீட்டிலிருந்து ஒரு பல்லக்கும், மேளவாத்தியமும், உறவினருங்கூடிய ஒரு கூட்டம் வந்து சேர்ந்தது.

சந்திரசேகரன் வீடு சேர்ந்ததும் அவனுக்கு நடந்த மரியாதைகளை நாம் இங்கு விவரிக்காமல் விடுகிறோம். பொழுது போயிற்றென்றும், சந்திரசேகரன் கைக்கெடியாரப்படி ஒன்பது மணி ஆயிற்றென்றும் வைத்துக்கொள்வோம். அவன் அறுசுவையோடு கூடிய அன்னம் உண்டபிறகு தனக்கென்று தன் மாமனார் அலங்கரித்துவைத்திருந்த பள்ளியறைக்குள் ஒரு சோபாவின் மீது சாய்ந்துகொண்டிருந்தான். அவன் மருங்கில் போடப்பட்டிருந்த மேஜையின்மேல் பளிங்கினாலாகிய ஒரு கிண்ணமிருந்தது. அதிலிருந்த புஷ்பங்களின் வாசனையால் அவ்வறை முழுதும் பரிமளித்தது. அவ்வறையின் மற்றொரு பக்கத்தில் கருங்காலி மரத்தினாற் செய்த பெரிய கட்டிலிருந்தது. அதன்மேல் பால்போலும் வெண்மையான பஞ்சுமெத்தை போடப்பட்டிருந்தது. உச்சியில் நான்கு வர்த்திக ளேற்றப்பட்ட ஒரு சித்திர விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. இதிகாசங்களாகிய இராமாயண பாரதத்திலிருந்து பல சித்திரங்கள் சுவற்றில் நேர்த்தியாகத் தீட்டப்பட்டிருந்தன. அறையின் மூன்று பக்கங்களிலு மிருந்த ஜன்னல்கள் திறந்திருந்தமையால் அவற்றின் வழியாக இனிமையான காற்று வீசிக்கொண்டிருந்தது. நான்காம்பக்கத்தில் ஒரு வாயிற்படி வைத்திருந்தது. எவரேனும் பெண்கள் இப்புது தம்பதிகளுடைய படுக்கை யறையை எட்டிப் பார்க்கப் போகிறார்களென்றுதான் அதோ அந்தச் சுவற்றிலிருக்கும் இரண்டு சன்னல்களும் மூடப்பட்டிருப்பதற்குக் காரணமாயிருக்கலாம்.

சந்திரசேகரனுக்கு மைத்துனி முறையாக வேண்டிய இரண்டு கன்னிகைகள் அவனிடம் விளையாடுவதும் வேடிக்கை செய்வதுமாயிருந்து பிறகு அவனைத் தனியே விட்டுச் சென்றார்கள். சந்திரசேகரன் இப்பொழுது இடதுகையைத் தலைமேல் வைத்துக் குனிந்த வண்ணம் என்னவோ யோசித்துக்கொண்டிருக்கிறான். மனதில் ஏதோ வருத்தங் குடிகொண்டிருப்பதை இவன் முகமானது விளக்குகிறது. தன் காதலியைக் காணவேண்டுமென்கிற ஆசை யிருப்

பினும், தான் செய்த பிழையை யெண்ணி இவன் அவளை நேரே பார்க்க அச்சப்படுகிறான்.

ஐந்தாயிற்று, பத்தாயிற்று, பதினைந்து நிமிஷமுமாயிற்று. இன்னும் கனகம் வரக்காணோம். கடைசியில் கதவருகில் காலிலணிந்த சிலம்பொலியால் எவரோ ஒருவர் வருவதைக் காட்டியது. உடனே சந்திரசேகரன் உள்ளம் பரவசமுற்றது. நடையினால் சிறு வயதாகத் தோன்றிய ஒரு பெண் முகத்தை மறைத்துக்கொண்டு, தாம்பூலம் நிறைந்த வெள்ளித்தட்டைத் தன் காந்தண்மலர்க் கரத்தில் தாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்து அறைக்கதவைச் சாற்றி, சந்திரசேகரன் சாய்ந்துகொண்டிருந்த சோபாவருகில் வரவே, அவன் எழுந்து நன்றாயுட்கார்ந்தான். அம்மாதின் முகத்தை மூடிய போர்வையை யெடுக்க அவன் கைத்துணியவில்லை. அத்தனை யௌவனமும், அழகும் நிறைந்தவள் தன்னுடைய காதலியா என்பது அவனுக்குச் சந்தேகத்தை யுண்டாக்கியது. அல்லது ஒருகால் அவனைப் பரிகாசஞ் செய்யவேண்டி அவனுடைய மைத்துனிகளிலொருத்தி அவ்வேஷம் பூண்டிருக்கலாமா? அப்படி யிருக்காது. இருந்தால் உள்ளே நுழைந்து அவள் கதவை மூடிச் சாற்றியிருக்க மாட்டாள்.

ஒரு நிமிஷநேரம் சும்மாவிருந்து பின்பு மெதுவாய்த் தன் முகத்தைமூடிய துணியை விலக்கினாள். சந்திரசேகரன் தன் வாணாளில் என்றும் பார்த்திராத வனப்பு வாய்ந்த ஒரு மடமங்கை எதிரில் நின்றாள். தாமரை மலரைப்போன்ற சிவந்த உதடுகளிலும் கருந்தடங்களிலும் நகைபொலிய ஒரு முகந் தோன்றியது.

கையில் தட்டேந்தித் தன் எதிரில் உட்கார்ந்தவள் கனகமா வென்பது சந்திரசேகரனுக்கு இன்னும் உறுதியாகவில்லை. அவன் பார்த்ததெல்லாம் நான்கு வருஷங்களுக்கு முன்னே கனகம் மிகவும் சிறுபெண்ணா யிருந்தபோது ஒரு தடவை தான். கொஞ்ச நேரம் அவர்கள் பேசாதிருந்தார்கள். பிறகு, "தங்களிடம் தாம்பூலமிருக்கிறதா?" என்று கனகம்மாள் பிரியமாகவும் தாழ்மையாகவும் கேட்டாள். சந்திரசேகரன் விடை கூறவில்லை. இன்னது சொல்லுகிறதென்பதுந் தெரியவில்லை. கனகம் சற்று அருகில் நகர்ந்து அடியாள் கையில் வாங்கிக்கொள்ளச் சம்மதமோ?" என்று தட்டிலிருந்த ஒரு வெற்றிலைப் பட்டியை யெடுத்துச் சந்திரசேகரனுக்குக் கொடுத்தாள். சந்திரசேகரன் தாம்பூலத்தைத் தரித்துக் கொண்டானென்றாலும், பேசுவதற்கு நாவெழவில்லை. கனகம் தட்டை மேசையில் வைத்துவிட்டு ஒரு விசிறி யெடுத்து மெதுவாக வீச ஆரம்பித்தாள். ஏனெனில் பலகணிவழியே காற்று வந்துகொண்டிருப்பினும், அவனுடைய அகன்ற நெற்றியில் வியர்வைத் துளிகள் எழுந்தன.

மணி பதினொன்றாயிற்று. சந்திரசேகரன் கனகம் கையி லிருந்த விசிறியைப் பிடுங்கிக்கொண்டு அவளைத் தன்னருகி லிழுத் தான். இந்துமாதர் எப்போதும் நாணமும் அச்சமும் உடையவர்க ளாதலால் வெள்ளைக்காரருடைய வழக்கம்போல் தம் புருஷர் உடனே தங்களைப் பற்றிக்கொள்ள இடந்தரமாட்டார்கள்.

அவள் அந்தச் சோபாவைவிட்டுக் கீழே பரப்பியிருந்த இரத்தினக் கம்பிளியின்மேல் உட்கார்ந்துகொண்டு, தன் துடை யின்மீது காதலனுடைய கால்களை எடுத்துவைத்து அவைகளை மெதுவாக வருடலானாள். ஆயினும் சந்திரசேகரன் இங்கிலிஷ் கல்வியுடையவனாதலால் தன் மனைவி தன் பாதத்தைப் பற்றிக் கொண்டு அவ்விதத் தாழ்ந்த வேலை செய்ய ஒப்பவில்லை.

பின்னர், "ஓகோ! தங்களுக்குத் தயவு வர இத்தனை நாள்?" என்னும் வார்த்தைகள் அவளுடைய வாயிலிருந்து வந்தன. அவ் வாக்கியத்தை முடிப்பதற்குள் அவள் தன் முகத்தை அவனுடைய துடையின்மேல் வைத்து மறைத்துக் கொண்டு கண்ணீர் மாலை மாலையாக உதிர்த்துத் தேம்பினாள். அக்காட்சியைக் கண்டு எவர் தான் சும்மாவிருப்பார்? அத்தகைய அழகும், அன்பும், உண்மை யும், உறுதியும் கொண்ட அணிகலத்தைத் தான் நெடுநாள் கைவி ட்டிருந்தது சந்திரசேகரனின் மனதை மிக்க வாதித்தது.

அவளைச் சோபாவின்மேல் தூக்கிவைத்து, "பெண்ணே! மன் னிக்க வேண்டும்" என்றான்.

"பிராணநாயகரே! எதற்காக மன்னிக்கவேண்டும்?" என்று கனகம் வினவினாள்.

"கனகம்! உனக்கு இவ்வளவுகொடுமை செய்தவன்நானே."

"நாதா! பொறும்; பொறும். அவ்வித வார்த்தைகளாடுவது நல்லதல்ல; புருஷர்—இந்து மாதர்களுடைய தெய்வம். ஒரு பெண்ணுக்குத் தன் பிரிய கணவனே ஸர்வமும். அவர்கள் என்ன செய்யினும் மனைவிகள் வருத்தப்படலாகாது. இவ்வித துக் கம் தந்ததற்காக என்னைத்தான் தாங்கள் நிந்திக்கவேண்டும். அதற்காகக் கடவுள் என்னை மன்னிப்பாராக."

சந்திரசேகரன் பதிலளிக்கவில்லை. தன் மனதிலெழுந்த எண் ணங்களை எவ்வாறு வெளியிடுவதென்பதும் அவனுக்குத் தெரியவி ல்லை. கனகம் கண்களிலிருந்து வந்த முத்துப்போன்ற நீர்த்துளி களைக் கைக்குட்டையால் துடைத்து அவளுடைய முகத்தை வெகுநேரம் உற்றுப் பார்க்கலானான். * * * *

இவ்விதமாகக் கனகம் தன் கணவனால் நேசிக்கப்பட்டு அன்றுமுதல் திருச்சினப்பள்ளியில் சுகமாக வாழ்ந்துகொண்டி ருக்கிறாள்.

10. எவரிடத்து அதிக அன்பு என்பதைப்பற்றிய சந்தேக விநோதம்.

உத்தம குணவானான ஒரு புருஷன் தனது பிராணனென மதித்த தனது தர்மபத்தினியாம் பதிவிரதா சிரோமணியோடும், தன்னை மிக்க அன்பாய் ஒரே குமாரனென்று வெகு அருமையாய்ப் பாராட்டி வளர்த்த தன் அன்னையோடும்—ஆக மூவருமாய் ஒரு ஊருக்குப் பிரயாணம் போயினர். இவர்கள் குறித்துப் போகிற ஊருக்கு இடையில் பெரிய நதியொன்று குறுக்கிட்டது. அந்த ஆற்றைத் தாண்டிப் போகவேண்டியவர்களாகையால் மூவரும் ஆற்றில் இறங்கினர். நடு ஆற்றிற்கு வந்தபின்பு ஜலத்தின் பெருக்கு அதிகரித்து விட்டது. மேலுக்குப் பிரவாகம் பெருகிக் கரை புரண்டமையால் மூவருக்கும் அபாயம் நேரிடும்போலாயிற்று.

அப்போது அந்த ஆடவன் தனக்கு நேர்ந்த அபாயத்திலிருந்து, தானும் தப்பித்துக் கொள்வதோடு, இன்னும் ஒருவரைக் கூடக் காப்பாற்றும் திறமையையும் கொண்டவனாயிருந்தான். அபாயத்தால் தத்தளிப்பவர்களோ தன் பிராணேஸ்வரியான பத்தினியாயும், தன்னைப் பெற்ற அருமைத் தாயாருமாக இருக்கின்றனர். அப்போது அவன் அந்த சமயத்தில் எவரைக் காப்பாற்றத் துணியவேண்டும்? இதற்கு விடை யாது? ஆலோசனை என்ன?

விடை

ஒரு மனைவி போனால் ஒன்பது கட்டலாம்; தாயைத்தான் காப்பாற்றவேண்டுமென்பார் பலர். இதில் ஒன்பது பெண்டாட்டி கட்டலாமென்பது அநுபவம் போதாத சொல். ஒரு மனைவி தனக்கு என ஏற்பட்டு, அவளிடத்தே அன்பு வைத்துப் பழகி, அவளே தன் ஜீவதுணையென உணர்ந்து—அந்த விதமான அநுபவம் பெற்றிராதவர்களின் மொழியாகும் அது. முதன்முதல் தான் நம்பிவிட்ட அந்த முதல் மனைவி சென்றவுடன் அவனது வாழ்க்கையே தவிடு பொடியாகி, முற்றிலும் மாறி, மண்ணாகி அவனது பிரபஞ்சஜீவியமே வேறுபட்டதாய் திருப்தியற்ற நிலையில் சின்னாபின்னப்பட்டுப் போகிறான். இதை அநுபவித்தவர் அறிவார். அவ்வித நிலையில் தன் பிராணனை இழக்க மனம் ஒப்புவனேயல்லாது, தன் பிராண காந்தையை,—இன்னொரு விவாகம் செய்துகொள்ளலாமென்றெண்ணி,—ஆறு அடித்துக்கொண்டுபோக மனதொருப்படான்—சம்மதியான்.

இனி தாயோ, தன் ஆத்மாவுக்கே ஒரு பெரிய பலத்தைத் தந்துகொண்டிருக்கிறவள். அவள் கண்முன்பாகத் தான் போய் விடவேண்டுமென்றும் தன்னை விட்டுத் தன் தாய் என்றும் சீக்கிரமாக இருக்க வேண்டுமென்றும்—ஒவ்வொரு உத்தம புதல்வனும் கோருவான். சகலகுண சம்பன்னனான இவன் தன் தாயை நதியில் விட்டுவிட ஒப்புவானா? ஒருபோதுமில்லை. எனவே ஒருவரை மட்டும் காப்பாற்றலாம் என்பதில் மனது செல்லாது. இருவரையும் கரை சேர்க்கவே பிரயாசைப்படுவான். அவ்விதம் தன் ஸக்திக்கு மீறித் துணிந்து, ஏதுமே முடியாமல் திகைத்து சலித்து—கடைசியில் மூவருமாக ஆற்றோடு போகவேண்டிய நிலைமைக்கே தான் வந்து முடியும். அதுவே முடிவு. கடவுள் கிருபை யிருந்தால் அங்கிருந்து கரை வரைக்கும், ஒரு மண்மேடு தோன்றலாம். அதில் ஏறி இவர்கள் தப்பித்துக்கொள்ளலாம். அது அவருடைய காரியம். அங்ஙனமே தோன்றுமாக.

11. எண்பத்தாறு விடுகதைகளின் விநோதம்.

1. கருவாடு உழக்கு பால் கறக்கிறது.

2. வெள்ளை நிலத்தில் கறுப்பு விரையை கையால் விரைத்து, வாயால் பொறுக்கவேண்டும்.

3. ஆகாயத்திலிருந்து அம்புகள் வந்து, அழகான முட்டைகளாய்த் திரண்டு அப்பொழுதே யழிந்தது.

4. அன்புடனொரு பறவை தென்புடன் வந்து, இன்புடன் பாடியதை, அன்பு பாராட்டாமல் அடித்துத் துறத்தினேன்.

5. பச்சைக்குமரி பழுத்துடைந்து, இச்சை கொண்ட வில்வில் வந்து, கச்சைகட்டி லச்சையை யொழிக்கிறாள்.

6. கூன் முதுகன், குறுமார்பன், பூணூல்காரன், குறித்துச் சொன்னவனுக்கு காலில்லை, கையில்லை, தலையுமில்லை, கட்டழகனொருவர் மேலேறிப் போவான், காலனய்யா கள்ளருக்கு கண்டுகொள்வீர்.

7. இரண்டு குதிரை, நாலு கால், இரண்டு கொம்பு, ஒன்றை விட்டு ஒன்றுபோகாது, ஒருவருக்கு மேல் ஏறமுடியாது.

விடுவிப்பு:—1. கர்ப்பங்கொண்ட ஆடு-கரு-ஆடு. 2. எழுதுவதும் படிப்பதும். 3. மழையினாலுண்டாகும் குமிழி. 4. கொசு. 5. தொடப்பம். 6. சுண்டுவில். 7. பாதக்குறடுகள்.

8. என்னிடத்திலிருக்கிறானொரு சின்னப் பையன், அவனுக்கு அவயவங்களெல்லா முண்டு, நாம் பார்க்கமுடிய வில்லை, மற்றவர்கள் பார்க்கிறார்கள்.

9. ஐம்புலனுக்கும் இன்பத்தைத் தரும் வஸ்து பூலோகத்தில் என்ன?

10. காலையில் கோட்டை கட்டி, கடும்பகல் யுத்தம் செய்து, மாலையில் பிரிந்துபோகும் மல்லரியர் யார்?

11. பல பேருக்கு ஒரு குடுமி.

12. அடி சிவப்பு, நடு பச்சை, உச்சி வெள்ளை.

13. பச்சை, மஞ்சள், சிவப்பு, கருப்பு, இந்த நாலு வர்ணமும் திரும்பிப் பழுக்கிற பழம் என்ன பழம்?

14. கார் பொருந்திய கொட்டையுடைய பழம், மூன்று பழம் உண்டு, அது எவை?

15. சித்திர பின்னல் கோட்டைக்குள் போக வழியுண்டு, திரும்ப வழியில்லை.

16. நெருப்பிலே பிறந்து, நீரிலே மூழ்கி, வாயில் வந்து வானத்தில் போகிறவர் யார்?

17. என்னைப்போல இருக்கிறான் ஒருவன், அவனை நான் நன்றாய்ப் பார்க்கிறேன், மற்றவர்கள் பார்க்க முடியவில்லை.

18. செத்தபின் பூமியில் இறங்குகிற பக்ஷி எது?

19. அறைக்கிற ஆலையிலே படுத்துக்கிடக்கிறது ஒரு பாம்பு. அது அசைந்து புறண்டு உழன்றாலும் அகப்படுவது மாத்திரமில்லை.

20. ஆறு பார்ப்பாருக்கு இரண்டு கண்.

21. காலையில் நான்குகால், கடும்பகல் இரண்டுகால், மாலையில் மூன்றுகாலோடு ஊறும் ஜந்து எது?

22. எத்தனை தேசஞ் சுற்றினாலும் சித்திக்காத பழமொன்றுண்டு. அது மலை பூமி காடுகளிலும் விளைவதில்லை. அந்தப் பழம் நான் ருசி பார்த்திருக்கிறேன். நீரும் ருசி பார்த்திருப்பீர். அந்தப் பழத்தின் பெயரென்ன?

விடுவிப்பு:—8. கண்ணிலிருக்கும் பாபா. 9. பெண். 10. வண்ணான். 11. வெள்ளைப்பூண்டு. 12. வெங்காயப்பூ. 13. சிற்றீச்சம்பழம். 14. மாம்பழம், பனம்பழம். தாழம்பழம். 15. இரும்பு எலி போன். 16. குடாக்குப் புகை. 17. முகக் கண்ணாடி. 18. வௌவால். 19. நாக்கு. 20. ஆற்றைப் பார்ப்பவர்க்குக் கண் இரண்டு. 21. மனிதன். (குழந்தை-வாலிபன்-கிழவன்.) 22. மழையில் விழும் ஆலாங்கட்டி.

கவிதா விலாஸம்

தமிழணங்கு தம் மக்களுக்கு அறிவுறுத்தல்.

எல்லாம் வல்ல இறைவனூர் வாயில்
ஆரியமென்னும் அருஞ்சகோதரன் [பின்
தங்கையாய்ப் பிறந்த சகோதரி யா [னே;
சகத்தினில்வந்த அகத்திய முனிவ [ரால்
வளர்க்கவளர்ந்த மங்கையும்யானே;
வேங்கடங் குமரி வேலைகு ழெல்லை [யில்
பாங்குடன்பயிலும்பாவையும்யானே
அகர இகர உகர மாகிய
மந்திரஎழுத்தால்வாய்ந்ததும்யானே
வல்லினமெல்லின இடையினமாகிய்
மூவகைமெய்யால் மூனேர்ந்ததும் யா [னே;
தமிழெனுஞ் சொற்குச் சான்றோர் [யாரும்
அமிழ்தினும் இனிதென அறைந்த [னர் பொருளே;
முதலிடை கடையெனும் மூன்று [சங்கத்தும்
இயலிசை நாடகமெனும் முத்தமி [ழாய்ப்
பதினுயிரத்துத் தொண்ணூ றூண்டு
நூற்ஐத் தொண்ணூற்றெழுவர் பா [ண்டியரால்
எண்ணுயிரத் தறுநூறு பாவலரால்
வளர்க்கப்பெற்றமடந்தையும்யானே
சீதையைத் தேடிச்சென்றவானரர்க் [கு
வழிமுழுதுணர்த்திய வானரத்தலை [வன்
நான் செழித்திருந்த நான்மாடக் கூ [டலைச்
சொற்றதாலென்றன்தொன்மையை [யறிக;
திரிபுரமெரித்த விரிசடைக் கடவு [ளும்
குன்றமெறிந்த குமாரதேவரும்
சங்கத்திருந்துதமிழாய்ந்தனரெனில்
இங்கென் பெருமையை யியம்புவார் [யாரே?
கணிகண்ணற்காய்க் காஞ்சியைநீங்கி
மணிவணப் பெருமான் வழிநடை [கொண்டதும்
என்பொருட் டென்பதை யினிதி [னுணர்க;
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் [பியமாய்ச்
சிவபெருமானே திருவாய்மலர்ந்து
தம்பெயர் நாட்டிய தமிழிலக்கண [மாய்
சிந்தாமணிமுதல் ஐந்து காவியமாய்
உள்ளமினிக்கும் வள்ளுவர் நூலாய்
உம்பரும் வியக்குங் கம்பர் காவிய [மாய்த்
திருத்தேவாரமாய்த் திரு வாய்மொ [ழியாய்
அரிய புராணமாம் பெரிய புராண [மாய்
மற்றுள நூலாய்வாய்ந்ததும்யானே;
ஆரியம் செந்தமிழாறு னென்று
பரசிவன் உருவமாய்ப் பகரவும் பெற் [றேன்;

திருமா லுருவெனச்
செப்பவும் பெற்றேன்;
சபதங் கூறுவோர்
தமிழ்மே லாணை
கூறவும் பெற்ற
குலக் கொடியானே;
இன்னும் என் பெருமை
யியம்பவும் போமோ?
பெருநில வேந்தரும்
குறுநில மன்னரும்
சைவ வைணவ
சமய குரவரும்
புத்தரும் சமணரும்
போற்றப் பெற்றயான்
ஆங்கில பாஷை
யணுகிய பின்னர்ப்
பெற்ற தாயைப்
பேருர் போல
உற்று நோக்குவா
ரொருவரு மின்றித்
தளர்வுறுகின்ற என்
தளர்வை நீக்குமின்;
கம்பரென்பர் கலந்த
தென்றற் போல்
என் மொழி கலந்தே
யியம்புவ தோர்மின்;
ஐரோப் பாவி
லமர்ந்த பசுவும்
அம்மா வென்றே
யழைவதை யறிமின்;
பாஷாபி மானம்
பாரிலின் றெனில்
தேசாபி மானம்
சிறிது மின்றாம்;
ஆகையா லென்னை
ஓகையாய்த் தழுவி
முன்போ லென்னை
முதிர் வுறச்செய்து
வாழுமின் வாழுமின்
வாழுமின் னிரே.

ஜீ. சதாசிவம்பிள்ளை.

விவாகத்தில் மாப்பிள்ளை வீட்டினரின் ஆரவாரம்.

பல்லுத்தேய்க்கப் பக்ஷணங்கள்
பத்துவகைகள் வேணுமே;
செல்லத்தம்மான் கண்டுவிட்டால்
சிரித்துவிடுவன் காணுமே.

பாத்திரங்கள் பாஷையில்லை ;
பாந்தமாயும் இல்லையே.
சாத்திரமில்லை கனிசமில்லை ;
கனமாயும் இல்லையே.

'சீர் சீர்' என்றே ஒருகோடியும்
செப்பினரோ சம்மந்தி:
ஊர்சிரித் திடச் செய்யத்தானோ?
ஒப்புவோமோ இம்மியும்?

இதுதானோ பெண்நகைகளும்?
இரவலும் உண்டோ கொஞ்சமே?
அதிசயமே! வங்கி இதுவும்,
அரைப்பவுனுக்கு மிஞ்சுமோ?

தட்டிதுவும் தங்கக்காப்போ,
கில்ட்டுத்தானோ,தெருமே!
மெட்டிரண்டும் கட்டி வெள்ளியே,
மேட்டிமை இதைப் பாருமே!

எச்சில்திரட்டி இலையெடுக்க,
இன்னுமிருவர் இல்லையே;
மச்சில் படுக்கை, மடக்கிவைக்க,
மற்றுமிருவர் வல்லையே.

ஆளில்லைஎன்றால் நாட்டுப்பெண் [ணையே,
அனுப்பும் இங்கே சீக்கிரம்:
காணும்நல்லதே,செய்யட்டும் அவள்,
நாங்களுமே பார்க்கிறோம்.

எனக்கிருமல், என் பெண்ணுக்கு [வாதம்
எங்கள் குடும்பம் பத்துப்பேர்
வினைக்குரியவன் உங்கள் பெண்ணே [இனி
வீட்டுவேலைகள் முற்றுமே.

பாட்டுப்,படிப்புத்,தையல்வேலைகள்
பையனுக்குப் பிரியமே.
பூட்டி மனசு பூரித்திடவே
திரட்சி சீக்கிரம் புரிவமே.

இந்துதாஸன்.

சூரிய தேவனுக்கு.

அகவல்

அறிவாய் விளங்கும்
ஆதி பகவனே!
ஒளியாய் விளங்கும்
உவப்பே வியப்பே!
தெளிவாய், நிறைவாய்,
தேசாய் விளங்கி,
உலகம் அனைத்தும்
உயிர்பெற என்றும்
இலகும் எம் இறையே,
எந்தாய்! எம்மவர்
இருளெலாம் போக்குதி!
இருளெலாம் போக்குதி!
அறிவொடு தெளிவும்
அழிவிலாத் திறனும்
பிறநற் குணங்களும்
பெரியோய் நல்குதி!

* * * * *

ஆதியாய் நின்ற எம்
ஆரிய நாடு
பேதையர் நிறைந்த
பெருங்கா டாயது?
அறிதி—யெம் இறைவ!
அருள் புரி விரைவில்
நிறைவொடென் னிருதய
கமல நிற் கீந்தேன்
குறையெலாம் நீக்கிக்
குணமெலாம் அருளே.

கலைமகளுக்கு.

சீர்கொண்ட வெள்ளைச்
செழுங்கமலத் தே திகழும்
கார்கொண்ட கூந்தலாய்!
கதிர்கொண்ட வேலின்
குணங்கொண்ட விழியினாய்!
பார்கொண்ட புகழினாய்!
பணிகின்றேன் அருள்கவே.

ப. சு. நே.

வாணி வணக்கம்.

தமிழினை அறிய, தமிழினை மொழிய, தமிழினைச் சந்ததம் பாட,
தமிழினில் மகிழ, தமிழினில் வாழ, தமிழனேன் விரும்பினன் என்றும்;
தமிழியற் கவிகோன் டுலகினர் பாவும் தண்டமிழ் வாணியே! தாயே;
அமிழ் தேனும் மொழியாய், அறிவுரு வானாய், அடியனேற் கருள் புரிவாயே.

இந்திய மாதா

கண்ணிகள்.

உலகமுக திலகமென இலகும் இந்தியாவே!
ஒளியவிந்தும் மணமவிந்தும் உலைவதுகாண் போமோ?
கன்னிநெடுங் கடலாடை காதலிக்கும் தாயே!
கலனிழந்தும் நலனிழந்தும் கழிவது காண் போமோ?
சாகரத்தைத் தோண்டி நின்ற சகரரைப்போ லுன்சீர்
நாகரிகம் தோண்டிவெளி நாட்டுவதார்? அம்மா!
ஆதிமனு வந்தஇடம் ஈதெனவே அறிவார்
ஓதுவதால் உன்முதுமை உரைப்பதெவர்? அம்மா!
சூரியனை நவகோளம் சுற்றி ஒளி பெறல்போல்
ஆரியரும் நின்னருமை அருந்துகின்றார் அம்மா!
கண்கவரு வனவனப்பு கமழ்ந்துதவழ் தென்றல்

பண்கவரும் புள்ளினிடை பரிந்தளித்தாய் பலவே.
காயோடு கனிமலர்த்தேன் கல்லோடுக் தெண்ணீர்
சேயோடு செஞ்சாலி தெளிந்தளித்தாய் பலவே.
அக்காலம் பிறர்நின்றால் அறிவடைந்தா ரானார்
இக்காலம் நின்மக்கள் இருள்வலைதல் என்னே!
அந்நாளில் நீசெல்வத் தமர்ந்திருந்த தறிவோம்
இந்நாளில் நின்மக்கள் எளிமையுறல் என்னே!
அந்நாளில் ஒழுக்கம் ஒன்றே உயர்குலத்தி லாக்கும்
இந்நாளில் நின்மக்கள் இழிந்தமைதா னென்னே!
சத்தியமும் நூலறிவும் தைரியவீ ரியமும்
தழைத்தோங்க நின்மக்கள் பிழைத்தோங்க அருள்வாய்.
சாதியொடும் சமூகமுத்து நீதிநெறி பிடித்து
தழைத்தோங்க நின்மக்கள் பிழைத்தோங்க அருள்வாய்.

K. S. சிவராஜபிள்ளை. பி. ஏ.

வினா விடைகள்.

கருநாவற்பழம்:—
காரெனக் கருத்து, நிலம் கலந் தொளிர் கனியே; உன்றன்
சீரிய கருமை எங்கே பெற்றனை? செப்பாய் என்றேன்
வீரியம், அழகோ டாண்மை மேன்மைசேர் தமிழ்நன் னாட்டு
நாரியர் விழியினின்றிந் நலத்தினைப் பெற்றே னன்றே.

தவளம்:—
கடலிடைப் பிறந்த முத்தே, கடுகி நான் ஒன்று கேட்பேன்
திடமொடுன் எழிலும் சீரும் எங்கு நீ பெற்றாய்? என்றேன்
வடிவுறு தமிழ் மாதர் முறுவலை மனத்தில் உன்னிப்
படியினில் தவங்கள் செய்திப் பான்மையைப் பெற்றேன் அன்றே.

மீன்:—
அகத்திய முனிவன் வாழும் அற்புதப் பாவநாசத்
தசத்துறை மீன்காள், உங்கள் அழகினை எங்கே கண்டீர்?
ஜகத்தினை மாந்த ரெல்லாம் போற்றிடுந் தமிழ் நன் னாட்டு
வகுத்தபே ரழகு வாய்ந்த மாதரார் விழியினில் அன்றே.

கமலம்:—
அழகிய கமலப் பூவே, அன்புடன் கூறாய் உன்றன்
பழகுறு நலங்கள் எங்கே பெற்றனை? பகராய், என்றேன்:
மழைவளப் பொதிகை சேரும் வண்டமிழ் நாட்டு நல்லார்
எழிலுடை முகத்தினின்றின் னலங்களைப் பெற்றேன் அன்றே.

பொன்:—
பொன்னென உலக மெல்லாம் போற்றிடும் பொருளே! உன்றன்
மின்னிகர் வண்ணம் எங்கே பெற்றனை? விளம்பாய் என்றேன்:
அன்னையர் தமிழ்ப் பாவாற் றம் மதலையர் அழுகை போக்கும்
கன்னியர் தமிழ்நன் னாட்டுக் கன்னிய ரிடத்தி னன்றே.

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.
'தேசபக்தன்' உப-பத்திராதிபர்

விகடமாமா

REGISTERED.

குடித்தனங்களிலுள்ள கொள்ளையும் கூச்சலும்.



அப்பா! என் விகடத் தோழர்களே! விநோதச் சகோதரர்களே! வெளிக்கு மட்டும் வெகு உத்தமர்களாகக் காணப்படும் நல்லோர்களே! உள்ளேயிருக்கிற பிசினாறித் தனமும் சுய நலக்கருத்தும் வெளிக்கு வராமல், கடந்த மூணே முக்கால் நாழிகைக்கு முன்னே அதிர்ஷ்ட வசமாய்ப் பெரிய பேர் பெற்றுவிட்ட பெரியோர்களே!

விகடமாமா வாகிய நான் இந்த தடவை பட்டணத்துச் சண்முகம் மூக்குப்பொடியை என்ஐந்து விரல்களாலும் எடுத்துநன்ருகஉறிஞ்சுவிட்டுஓட்டமும் நடையுமாய் நாலாபக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு பறந்துவருகையில் "குடித்தனங்களிலுள்ளகொள்ளையும் கூச்சலும்'' என்னை வரவேற்று உபசரிக்கவே, அதைத் தெரிந்துகொள்வதற்காக வீடு வீடாய் நுழைந்து விசாரணை யிட்டுக்கொண்டு வந்தபோது, மாமிக்கும் மருமகளுக்கும் முட்டிக் கொண்டிருக்கும் முடிவில்லாச் சங்கதி யகப்பட, கிடைத்தமட்டும் சுருட்டிக்கொண்டு அவசரம் அவசரமாய் ஓடிவருகிறபோது, அந்தந்தவீட்டிலும் நடக்கிற சங்கதி அம்மட்டுந்தான் இருந்திருக்கு மாக்குமென்று நினைத்தேன். அப்பால் உள்நுழைந்து பார்க்கையில் அதெல்லாம் பகலில் நடக்கிற சங்கதியும் சமாசாரமுமாய்ப் போய், ராத்திரியில் நடக்கிற கொள்ளையும் கூச்சலும் பார்த்தால், விகடமாமா வுக்கு அதைவிட வேடிக்கையும் விநோதமுமாகவே காணப்படுகிறது. அதையுஞ் சொல்லட்டுமா? கேட்கிறீர்களா? கேளுங்கள்! கேளுங்கள்!!

நாலு பெண்கள் கூடி ஒருமித்திரார்களென்றபடி, மாமிகளாகிய சாமிகளும், மருமகள்களாகிய வெறுமகள்களும், நாத்திகளாகியவாத்திகளும், அண்ணிகளாகிய கொடுங்கண்ணிகளும், மூத்தாள்களாகிய பூத்தாள்களும், ஏகமாய்க் கூடிக்கொண்டு, நீ போடி, நான் வாடி, அவள் இரடி, இவள் பெறடி என்று ரெடி (Ready) ரெடியாய்க் குதிக்கிற சங்கதிகளெல்லாம், பகல்வேளையாய் இருப்பதினால், அந்த நேரத்திலே ஒருமீசைக்காரனும் அங்கில்லாதிருக்க, அப்பாலே ஐயா நடக்குதையா—இராத்திரி காலங்களிலே ஒவ்வொரு ஆண்பிள்ளைகளாலும் விநோதங்கள்!

ஒரு வீட்டிலே புகுந்தாலோ! அவ்வீட்டின் குடித்தனத்தைத் தாங்க ஒரு தலை மகனிருந்தால் அவன் உலைக்குடுவையில் விழுந்த பச்சரிசி தான்! அவன்குடித்தனத்தைப்பராமரிப்பதில் குண்டி கிழிந்து போகிறது. உப்பு இல்லை, மிளகா இல்லை. புளியில்லை, உரிக்குடுவையில் நெய் யுமில்லை, அரிசியில்லை, நாளைய பொழுதுக்கு ஒன்றுமே யில்லை யென்று—வெளியிலே பல தொல்லையிலே சுற்றி நொந்த புருஷன் வீடு வந்ததும் வராததற்குமுன்னே வீட்டுச் சமுசாரி பாடம் படிக்கிறுள்·

இதைக் கேட்டவுடனே அந்த மைந்தனுக்கு ஆயாசத்தின்மேலே மாயா சம்பந்த மேறிக் கூழ்ப் பாயாசங் கூடப் பருகாமல், படுக்கைக்குப் பாய்போட்டுக்கொண்டு ராத்திரிக் கெல்லாம் பெருமூச்சு விடுகிறான். ஆண்பிள்ளை நாளெல்லாம் சுற்றி ஓய்ந்து அலைந்து வந்தானே, வரட்டும், வரட்டும் வந்துகுந்தட்டும், களைதீரட்டும், உண்ணட்டும், உறங்க நேரம்வரட்டும், ஆர அமர வீட்டிலுள்ள கஷ்டத்தை மெதுவாய் வெளியிடலாமென்றில்லாதபடி, ஆண் மகன் வீட்டுள் வந்தவுடனே இந்த நெருப்பை வாரி மேலே கொட்டுகிற அம்மாமாரும் அநேகருண்டு.

இவன் கதை இப்படியானால், இன்னொரு வீட்டில் புகுந்தாலோ பகலெல்லாம் மல்லாட்டமும், சில்லாட்டமும், வாயாட்டமும், பேயாட்டமும் கொடுத்திருந்த மாமியும் மருமகளும் நாத்தியும் மூத்தியுமான புண்ணியவதிகளனைவரும் தங்கள் பிணக்கையெல்லாம் திரட்டிக்கணைக் காய்வைத்துக்கொண்டு, ஆண்மகன் வீட்டுக்கு வந்த நேரம் பார்த்து, ஒருத்தி தன் மூக்குக்கு 'ஸ்க்ரு' ஆணி போட்டு முறுக்கிக் கொண்டது போல, மூக்கை நிமிர்த்திக் கொண்டும்; ——— ஒருத்தி குதிரைக்கு (லகான்) கடிவாளம் போட்டது போல முஞ்சை முறுக்கிக் கொண்டும்;—ஒருத்தி கழுத்துவலி வந்தது போல திருப்பிக்கொண்டும்;—ஒருத்தி ஊமைக்குப் பேய் பிடித்தது போல மவுனங் கொண்டும்;—வந்த ஆண்மகனுக்குக் காலலம்பக் கூட ஜலங்கொடுக்காமல் கொஞ்ச நேரம் காக்கப்போட்டு,அப்பால் எடுக்கிறார்களையா கதையை! முதலடியிலேயே பெண்ஜாதி வந்து மேல் விழுந்து, ஜாடி, தலைமயிரைப் பிய்த்து அடபாவி! கண்டுங்காணாதவன் போலிருக்கிறாயே, உன்னால் நான் படுகிற ஹிம்ஸை போதும்! இனி அரை நாழி இந்த வீட்டிலிரேன்; உன் ஆத்தாள் அரை உயிரை வாங்கி விட்டுவிட்டாள், உன் அக்காள் அடி அடியென்று அடித்து விட்டாள், உன் தங்கை தலைமயிரைப் பிய்த்து விட்டாள், என்னை இதற்காகத் தானா கொண்டு வந்தது? ஊர் அறிய நாடறியத் தாலிகட்டியது! உன்னைக் கட்டிக்கொண்டு இந்த சுகந்தானா காண்பது? புருஷன் அதிகாரத்தை விட மாமி அதிகாரம் மகா கொடுமையா யிருக்கிறதே! இதை என்னைப் பெற்ற ஆத்தாள் அப்பன் பார்த்தால் உயிரைவிட்டு விடுவார்களே! இது உன்னால் வந்த வழியல்லவா! இளைத்தவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மச்சினிச்சியானேனே! இனி இந்த சமுசாரத்தைத் தொடவே மாட்டேன். சட்டிபானையில் கை போடவே மாட்டேன். நான் வேணுமானால் என்னை வேறாக்கி சம்ரக்ஷணைசெய். இல்லாவிடில் என் தாய் வீடு நான் போய்ச் சேருகிறேன்—என்று துக்கம் தூத்துக் கொண்டு அழுகை ஆறாய்ப் பெருக, எட்டுவீடு எட்டிக் கேட்கக் கூச்சல் போடுகிறாள்.

இதைக் கனிவோடு கேட்ட புருஷன், என்னடா மோசம் வந்ததென்று தன் மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு தாயாரண்டை நெருங்கி—'என்ன அம்மா வீட்டில் நடந்த சங்கதி?' என வாயெடுத்துக் கேட்பதற்கு முன்னே, எழும்பினாளையா ஆத்தாள்! அடங்காப் பிடாரியைப் போல!! "அடா! இதெல்லாம் நீ கொடுத்த இளக்காரமல்லவா? நேற்றுப் பிறந்த ஒற்றை ஜான் சிறுக்கி, அவளுக்கு நெஞ்சில் துணிவு முளைத்துப் போய் என்னென்ன வீம்புத் தனமெல்லாம் கொடுக்கிறாள்! ஏதேதோ கிழக் கதையெல்லாம் பேசுகிறாள்! இப்படியெல்லாம் பேசவா நீ சொல்லிக் கொடுத்தாய்? இதற்காகத் தானா நாங்கள் உன்னைப் பெற்று வளர்த்தது? இன்றைக்கு என்னை எதிர்த்

தப் பேசினவன் நாளைக்கு உன்னை ஊதிவிட மாட்டாளா? உனக்கென்ன பெண்டாட்டி வந்ததே மோக்ஷமென்று நினைத்து விட்டாய்! முலை கொடுத்து ஊட்டி வளர்த்தவள் மூதேவி, முன்றானை போட்டவள் ஸ்ரீதேவியா? அவளுடைய அடாவடித்தனத்தை நீ எங்கே கண்டாய்? முழுகி முப்பது நாளாச்சு, இறங்கி உப்பு அள்ளக் கூடவில்லை யென்றானாம் ஒருத்தி, அவளையும் இவள் விழுங்கி ஏப்பமிட்டு விடுவாள். பார்த்தால் சின்னஞ் சிறுக்கியும், சிற்றடைக்காரியும், அழகு ஒழுகிப்போகிறதுமா யிருக்கிறாளென்று நினைக்கிறாயோ? அத்தனையும் உள்ளுக்கிருக்கிறாள் சிறுக்கி! முள்ளுக்கு முனை சீவி விடுவார்களா? முறத்தடி பட்டாலும் முகத்தடி படலாகாது. எவ்வளவு பேச்சு என்னைப் பேசுகிறாள்? முன்கை நீண்டால் முழங்கை நீளும். உன்னால்தான் இப்படியானாள். முற்றக் கல்வி பேசாதே. பெண்டாட்டியைக் கொண்டு தாய் தங்கையை அடக்கிவைக்கிற பிள்ளையை யானெங்கும் பார்த்ததில்லை யடியம்மா! நாங்கள் செய்த பாக்கியந்தான் இப்படியிருக்கிறது! உனக்கவள் வேண்டுமானால் அவளை இழுத்துக்கொண்டு எங்காகிலும் போய் இழவெடு, இனி உன் பாடு, அவள் பாடு, நாங்கள் யாரோ! பெண்ஜாதியைக் குதிரைமேலே ஏற்றிப் பெற்ற தாயின் தலையிலே புல்லுக் கட்டை வைத்தடிக்கிறகாலம்! பெண்டாட்டியாத்தே பெரியாத்தே பிழைக்கிற வழியைச் சொல்லாத்தே யென்று அவளிடமே போ, பெண்டாட்டியே குரு, பெண்டாட்டியே தெய்வம், பெண்டாட்டியே பெற்றவ ளல்லவா? காலத்தைப் பார்த்தாயா! என் புருஷன் கூட கைநீண்டி அடித்தறியார், கழுதை நாயே என்று கேட்டறியார், இந்தப் பஞ்சைச் சிறுக்கி, பாவாடை ராணி வந்து என் பவுஷை ஆற்றிவிட்டு என்னென்ன கேள்வியெல்லாம் கேட்டுவிட்டாள் பார்த்தாயா? இப்படிப் பட்டவளுக்காக நீ சிபாரிசுக்கு வந்தால், இனி நீ எனக்கும் பிள்ளையல்ல, நான் உனக்குத் தாயல்ல. எப்போது அன்னிய இடத்திலிருந்து ஒருத்தி இங்கு வந்தாளோ அப்போது நீயும் அன்னியனாய் விட்டாய். நான் அவளுக்கு மாமியுமல்ல, அவள் எனக்கு மருகியுமல்ல, அவ்வளவுக்கு மதித்திருந்தால் இப்படி ஏன் இருக்கிறது? ஏதோ ஒரு சத்திரத்திலே அவள் ஒருபக்கம், நான் ஒரு பக்கம்போல! என்ன ஒற்றுமை, என்ன மரியாதை, என்ன மதிப்பு வைத்திருக்கிறாள்?— என்று இன்னும் பலவிதமாக விஸ்தாரமாய் விரித்துரைத்து, கேட்க வந்தவன் திணறு கண்டுபோக மூச்சு விடாமல் பேச்சா லடிக்கிறாள்!

இதென்னடா வென்று, அவன் தங்கச்சியண்டை போனாலோ, அவள் தாரை தாரையாய்க் கண்ணீர் உதிர்த்து, நல்ல அண்ணியைக் கொண்டு வந்து நலங்குலைந்து போகிறாயே அண்ணாவே, இப்படிப் பட்டவள் நாங்கள் வாழ் விழுந்து போனாலும், வாசற்படிக் குள்ளும் சேர்க்கமாட்டாள். அண்ணனிடம் ஆறுமாசம் வாழ்ந்தாலும், அண்ணியிடத்திலே அரை நாழிகை வாழ முடியாது. அண்ணாவுக்கு மனது வரவேணும், மதனி பிள்ளை பெறவேணும் என்று எவ்வளவோ பாழும் ஆசை வைத்துப் பாழானேனே! அண்ணன் உண்ணாதெல்லாம் மதனிக்கு லாபம். அரைத் துட்டிலே கல்யாணம் — அதிலே கொஞ்சம் பாணவேடிக்கை யென்று என்னென்ன மூளியாட்ட மெல்லாம் ஆடுகிறாள்! அண்ணன் தான் கூடப்பிறந்தவன் அண்ணியும்கூடப் பிறந்தவளா? ஒரு நாயிடத்தில் வார்த்தை கேட்க எனக்கென்ன தலை யெழுத்து? இவளிருக்கிற வரையில் அண்ணன் என்கிற ஆசையோடு வரவே மாட்டேன், சேத்த

அன்னையாகிலி லோன்றுற உன்னை நினைத்துக் கொண்டேன்—என்று அவனும் பாடம் படிக்கிறான்!

இப்பொல்லாத சங்கடத்திலே மாட்டிக் கொண்ட புருஷன் என்ன பண்ணுவான்? பெண்ணரம்பைக் கூத்துப் போய்ப் பேய்க்கூத்து ஆச்சுதே, வீட்டின் கவுரவம் போய் வீதி சிக்கலாச்சுதே என்று தலையில் கையை வைக்கிறான். இப்படிப் பார்த்தால் பெண்ஜாதி, அப்படிப் பார்த்தால் தாயார், அந்தண்டை பார்த்தால் அக்காள் தங்கை; ஆருக்கென்று பேசி அவதி யெடுப்பான்? ஒரு காலெல்லாம் உழைப்பி லிருந்து விட்டு வீட்டுக்குள் வந்த உடனே இந்தக் களேப்பு! ஊருக்கு ஒரு பக்கம் இடியென்றால், இவனுக்கு மத்தளத்தைப் போல இரண்டு பக்கமும் இடி வந்து விட்டது. தாய் தங்கைக்காகப் பேசினால் பெண்ஜாதி மொறு மொறுக்கிறாள்! பெண்ஜாதிக்காகப் பேசினால் தாயார் சபிக்கிறாள்! என்ன செய்வான்? முக்காடிட்டு மூலையில் படுத்துக் கொண்டு புலம்புகிறானையா! "ஐயையோ! நான் இருதலைக் கொள்ளி எறும்புபோலானேனே! நான் ஏன் தான் அறியாமற் கலியாணம் செய்தேனோ? என் தாயாரே நல்ல இடம், நல்ல இடமென்று பதபதவென்று பதைத்து எனக்குக் கலியாணத்தைக் கட்டிவிட்டு இப்போது அம்மாவே நிந்திக்கிறதே! என்னிடம் என் தாய்க்கு இருந்த ஆசை அன்பெல்லாம் போச்சே! நான் கல்யாணமென்பதை இன்பமாய்நினைத்தது துன்பமாய்மாறி விட்டதே! என் காதுகள் சஞ்சல வார்த்தையைக் கேட்கிறதே யன்றி சந்தோஷப் பேச்சைக் கேட்கவில்லையே. இந்த சந்தோஷத்திலே நான் சோறு தின்பதெங்கே? அது நாவுக்கு நசிப்பதெங்கே? சோர்ந்து படுப்பதெங்கே? நாளைக்குத் தலைமேல் துணியைப் போட்டுக் கொண்டு எங்காவது புறப்பட்டு விடுகிறேன் என்று பெரும் துக்கத்தோடு பிரலாபிக்கிறான்!

இஃது இப்படியிருக்க, இரண்டாவது விவாகம் செய்து கொண்டவனோ, அவன் செய்கிற தாறுமாறு தவிப்பு தக்கடாக்களால், முந்தின கண்மூடிய மனைவியை நினைத்துக் கொண்டு புலம்புகிறான். வேறொரு கல்யாணத்தையாவது செய்து தொலைக்கவேண்டுமென்று அழுகிறான்.

இன்னொரு வீட்டில்புகுந்தாலோ அந்த வீட்டான் கொள்ளை அதிலும் பெரிதாயிருக்கிறது! என்னவென்றாலோ, தன் மனைவி முதல் முறையிலேயே பெட்டைப் பிள்ளையைப் பெற்று விட்டாளென்று விசாரப் பட்டுக்கொண்டிருக்க, இரண்டாம் முறையும் பெண்குட்டியைப்பெற்று விடுகிறாள்! என்ன செய்வான்? கையை உதறிக் கொள்ளுகிறான்! காலை உதறிக்கொள்கிறான்! பெருமூச்சு விடுகிறான். பெருந் துன்பப் படுகிறான். தினநிதமும் இதே பேச்சும் மனஸ்தாபமுமா யிருக்கிறான். அதற்குமேல் மூன்றாம்பேறும் பெட்டைப் பிள்ளையே பெற்று விட்டாளோ, ஐயையோ அவன் எரிச்சலை யாரிடத்திலே போய் முட்டிக் கொள்வானோ தெரியாது! அப்படி நாலைந்து பெட்டைக் குட்டியே ஆய் விட்டாலோ, அட ஆண்டவனே! எட்டுக் குஞ்சும், பட்டையும் ஆனேனே என்று புலம்புகிறான்!

இவன் கெதி இப்படி யென்று அடுத்த வீட்டில் புகுந்தாலோ பொறாமையுள்ள புருஷனுக்குப்பேயைப் போலப் பெண்ஜாதி யிருக்கிறாள். அவளைப் பார்த்தவுடனே இவனுக்குடல் நடுங்கிக் குண்டி நடுங்கிச் சாகிறான். அவன் வீட்டைப் பார்த்தால் காட்டுக்குச் சமானமாயிருக்கிறது.

மற்றதை மறு தடவை வந்து கொட்டி முடிக்கிறேன். மாமா! ராமா! சுபம்! கு!! சுவாஹா!!!

(132-வது பக்கத் தொடர்ச்சி.)

23. மாமா மனம் விண்டால், அத்தை நீ என்ன செய்வாய்? நான் கட்டிப்பிடித்துக் கையால் தடவி தென்புப் படுத்தித் தேற்றிக் காலே மேலே போடுவேன்.

24. முன்னே வெளுத்து, முனையில் கனைந்து, நடுவே சிவந்து நடக்குமிவன், கண்டது கண்டாப்போல் காணுமல் போகின்றுன் பார்.

25. உலகமெல்லாம் நிறைந்திருக்கு மொருவனுண்டு, உண் டென்று தெரிந்ததுமுண்டு, கண்டதில்லே, உண்மை யிவன் இல்லாத உலகமில்லே. உம்பானும் கடவுளல்ல, உணர்ந்து சொல்லே.

26. காலில்லே, கையில்லே, கண்கள் உண்டு. வாயுண்டு சிற குண்டு. வலுவான ஒட்டமுண்டு. வானத்திலும் பறவாது. பூமியினில் நடமாடாது. வகையாக உரைத்திடுவீர் வண்மைகண்டே.

27. வாலுண்டு, தோலுண்டு, மிருகமல்ல, வயிற்றிலே நீருண்டு-குடலோயில்லே, தலேயுண்டு, கண்ணில்லே. காலுமில்லே, தரிக்காது சீவணிக்குஞ் சக்தியுண்டு, தலேவாலும் கட்டுண்டு, தொங்குமிவர் ஆரென்று சாற்றுவீரே.

28. காலாறு, கையிரண்டு, கண்ணோ நாலு. தலேயிரண்டு, உடலிரண்டு, வாலோ ஒன்று. ஓடுவது நாலு கால்! உதைப்பது இரண்டு கால். உண்மையிது கண்டுரைப்பீர் உலகத்தோரே?

29. கணுவுள்ளான், வளைந்தவனு நீண்டு நின்று, கலேயுடுத்து பூமுடித்து குச்சு கட்டி, கயறதினுல் கட்டுண்டுக் ககனந்தன்னில், காணங்கள் போடுகின்றுன் கண்டுசொல்லே.

30. முத்துக்கள் பதிந்திருக்கும், முன் குடுமி சிவந்திருக்கும், சுத்த பச்சையாடை சூழ்ந்திருக்கு நாற்புறமும், மெத்த அழகா யிருக்கும், மின்னலது போலொளிக்கும், வித்து இது; வாழைமலர் வடிவான வண்மை தானே.

31. வயிறுபெருத்த சிறுமடந்தை, வாய் சிறிது, உதடில்லே, பல்லில்லே, யுட்கொள்வாள், வெளிவராது உட்சென்ற தெல்லாம். ஓகோ இவள் வேண்டும் யாருக்குமே, சிக்கனத்தின் தலேமைதானே.

32. நாலுகால் முதுகுயர்ந்தோன், நடமாடிடுவான் தனியாக. எவரேனும் வரக்கண்டால் ஒன்றுமில்லா கல்லேயாகும், நன்மை யிதைக் கண்டுரைப்பீர்.

விடுவிப்பு:—23. பெரிய குதிரை மிரண்டால் சாதுபடுத்தி ஏறுவது. (மா-பெரிய, மா-குதிரை.) 24. சுருட்டுப்புகை. 25. காற்று. 26. மீன். 27. தபலேசால். 28. குதிரைமேலேறி சவாரி செய்பவன். 29. காற்றாடி அல் லது பட்டம். 30. மக்காச்சோளம். 31. உண்டிப்பெட்டி. 32. ஆமை.

33. பிள்ளை பிறந்தவுடன் எழுந்து நின்று, நாலுபேரைக் கடித்தது. இந்தப் பிள்ளை பெயரென்ன ?

34. அடிமலர்ந்து நுனி மலராத பூ—என்ன பூ?

35. மானுமிக்கு வழிக்கருவி, மாதர்க்குத் தொழிற் கருவி.

36. பச்சை நிறமாயிருக்கும், பாரினில் உயர்வாய் வளரும், இது வளர்ந்த பின்னால் உச்சியிலே பூ பூர்க்கும், உமியரிசி யுண்டாயிருக்கும், இது என்ன?

37. அஞ்சு பெயருக் கனேகம் பெயர் வேலைக்காரர், அதில் ஒருவன் மாத்திரம் உட்கார்ந்தபடி தின்கிறானவன் யார்?

38. காட்டிலிருந்து இரண்டு கொண்டுவந்தேன். ஒன்று பிடிக்கிறது, ஒன்று கடிக்கிறது.

39. தலையில்லை கண்ணுண்டு, மாரில்லை முதுகுண்டு, வயிறில்லை இடுப்புண்டு, விரலில்லை கையுண்டு, பாதமில்லை காலுண்டு, உயிரில்லை யுடலுண்டு, உருவிதனைக் கண்டுரைப்பீ ருண்மை கண்டே.

40. மூன்றுகால் தானிருக்கும் பிரிங்கிமா ரிஷியுமல்ல. மூன் தலையும் விரித்திருக்கும் விருக்ஷமல்ல. தாமரைபோல் தோற்றமது பூவுமல்ல. கருத்த அன்னம் நின்றிருக்கும் தடாகமல்ல, தக்கவரே இக்கதையை இன்னதென்று சாற்றுவீரே,

41. வீட்டிலிருக்கவேண்டியது ஒன்று, அது இருந்தால் எது இல்லாவிட்டாலும் எல்லாம் உண்டு, அது இல்லாவிட்டால் எது இருந்தும் ஒன்றுமில்லை.

42. எல்லா மிருந்தும் ஒன்றில்லா திருந்தால், எவருக்கும் இன்பம், அது இருந்து எல்லாமிருந்தாலுந் துன்பம், அது என்ன?

43. எனக்குத் தலைபோனால் நான் எஜமான், கால் போனால் தேன், இடைபோனால் தாமரை—நான் யார்?

44. கால்பத்து, கண்ணிரண்டு, தலையோ இல்லை, கடினமாய்ப் பிடித்துக்கொள்வான், கையோ இல்லை, கண்டுரைப்பீர் இவாரோ?

45. அடித்தலை பெருத்தவள், முடித்தலை விரித்தவள், நடுவுடல் சிறுத்தவள், உடலெல்லாம் புரையாள், ஒருதரம் பூர்த்துத் தலை வணங்குங் குணத்தாள், ஒரு பிள்ளையாலே யுயிர்விடும் பேதையே.

46. அரும்பெடுத்து முளையுடைய தலை பெருத்த குள்ளன், அங்கமெலாங் கட்டுண்டு ஆடுந்திறன், அழகாக இவன்போல சொக்கிடுவார் ஆட்டத்தில் யாருமில்லை.

விடுவிப்பு:—33. பசுக்கன். 34. வாழைப்பூ. 35. ஊசி. 36. மூங்கில். 37. வயிறு. 38. களி கிளறுங்கோல் ஒன்று. கவ்வுங்கோல் ஒன்று. 39. நாற்காலி. 40. முக்காலி. 41. நற்பெண்டீர். 42. வியாதி. 43. மதுரை. 44. நண்டு. 45. வாழைமரம். 46. பம்பரம்.

47. ஒருமரம் போல உயர்ந்து உருத் தோன்றும், அருமை யாம் பிடிக்க—அறிந்திடுவீர்.

48. தாமரை பேருடையாள், சக்கரத்தைப் போலிருக்கும் வடிவையுடையாள், ஆமைபோல் வயிறுடைய இம்மடந்தை யாவரையும் உபசரிக்கும் அடியாள் தானே.

49. தலை பெருத்தோன், உடல் சிறுத்தோன், சரீரத்தில் விரல் முளைத்தோன், தகுந்தவர் கை நின்றிருந்தால் சளையாது வசனிக்கும் திரளையா, சந்தோஷ மிவனின்றி வேறில்லை சபையிற்றானே.

50. ஆயிரங் கண் தானிருக்கும் அமாருக்கு அரசனல்ல, அநேக முடிகள் கொண்டிருப்பார் அரக்கனல்ல, பாயதுபோல் விரிந்திருக்கும், ஆபரணம் பூண்டிருப்பார் சொர்ணமல்ல, மாய்த்திடுவா ரநேகமுயிர்—எமனுமல்ல, மனிதர்மேல் ஏறிச்செல்வார் குழந்தையல்ல, மதியினால் இக்கதையை மதிக்கலாமே.

51. காலில்லை கையுண்டு, தலையில்லை சரீரமுண்டு, குடலில்லை வயிறுண்டு, கொண்டிடுவாரை யெல்லாங் குறித்திடுவீர், இவாரோ குணமாய்த்தானே.

52. காலிரண்டு கோணக்கால், கண்ணிரண்டு கன்னியர்க்கு மோதிரமாம், விரலிரண்டில் எதிரண்டு முதலைபோல் வாய்திறந்து மூடுங்கண்டீர், இதமின்றி கண்டித்து துண்டிக்கு முதடுமுண்டு, இதையறிந்து உரைத்திடுவீர்—இனிதாய்த்தானே.

53. வட்ட முகங் கொண்டிருப்பாள் கண்களுண்டு, வரிசையாய்ப் பல்லிருந்தும் கடிக்கமாட்டாள். திட்டமுடன் கொம்பு இரண்டு. முட்டாள் மங்கை. திரைகடல் மேல்வந்தவள் தான் தினமே பார்ப்பாள், கட்டழகி வெளுத்த முகம் களைத்தேபோவாள், கணக்கறிந்து உணவளித்தால் கடப்பாள் மெத்த, மட்டில்லாமல் வயிற்றைப் பெருக்கிக்கொள்வாள், மானிடரே இதையறிந்து வழுத்துவீரே.

54. தடிப்பயலா யிருப்பானோர் வம்புக்காரன், சமர்த்தெல்லாம் பெண்களிடம் போகச்செய்வான், தொடும்பெண்ணைப் பிடித்திடுவான் துடுக்கனவான், சோறில்லையென்று சொன்னால் குத்தப் போவான், முடித்திருப்பான் கரும்பொன்னை இருதலையான், மூலையிலே உறங்கிடுவான், வாயும் பேசான், நெடுவுலகுள்ளோரே விரித்துச் சொன்னேன், நின்னிலத்தி லிதையறிந்து பொருள் சொல்வீரே.

விடுவிப்பு:—47. புகை. 48. தாம்பாளம் அல்லது தட்டு. 49. வீணை. 50. மீன் பிடிக்கிற வலை. 51. சட்டை. 52. கத்தரிக்கோல். 53. கடிகாரம். 54. உலக்கை.

55. வண்டிவடிவ மாயிருக்கும் சக்கரமல்ல, மானிடர்கள் தரித்திடுவார் பணியுமல்ல, பெண்டுகள் தம் கழுத்தணிவார் திருவுமல்ல, பெரிய கானகத்திருக்கும் செந்துவல்ல, மண்டியிட்டு அரைத்திடுவார் பஞ்சுமல்ல, மாரி படில் அழிந்துவிடும் நெருப்புமல்ல, பண்டிதரா மிக்கதைக்குப் பொருளே சொல்வோர் பாருலகி லவர் பெருமை பகரொணாதே.

56. உடம்பெல்லாம் வரியுண்டு புலியல்ல, ஓங்கி மிக நீண்டிருக்கும் தூணுமல்ல, அதன் குட்டிக்குக் குடுமியுண்டு தலைதன்னிலே. மனிதனல்ல, சடை தலையில் அவாசமுண்டு தாஸையல்ல, தலையாலே வணங்கித்தரும், என்ன இது?

57. ஓடிவரும், கூடிவரும், உட்கார்ந்தால் முத்தமிடும்—பிள்ளையல்ல; தக்கதொரு சமயத்தில் உதவியாயிருக்கும்—தம்பியல்ல; உற்ற இடர் தீர்த்திடும்—உறவோரல்ல; உண்பதிலும் தின்பதிலும் பங்கெடுக்கும்—பெண்டிரல்ல; எத்தனையாய் சொன்னாலும் இவர் போலே பணி புரிவோரில்லை கண்டீர்; இவராரோ உரை செய்வீர்.

58. மாம்பழத்தின் ரசமல்ல, வாழைபதின் ருசியல்ல, வண்டு மொய்க்கும் தேன்பலவின் சுவையல்ல, சீனி கற்கண்டல்ல...தெவிட்டுதற்கு. என்ன இது?

59. காலொன்று, முகமுண்டு, கையில்லை, காதுண்டு, கேட்கமாட்டார்; கண்ணுண்டு பார்க்கமாட்டார்; கண்ணியவான் துணையின்றி போகமாட்டார்; கண்டுசொல்லு மிவர் பெயரை.

60. நானொரு மரம், எனக்குக் கால்போனால் பாம்பாவேன், இடைபோனால் இருட்டாவேன். நான் யார்?

61. சின்னஞ் சிறுக்கி, சித்திரக் கெம்புமேனி, யென்னேரமுந் தின்னபடியே இருப்பாள், உண்பது தவிர உறங்குவதில்லை, யென்ன தின்றாலும் உள்ளே குடலுமில்லை, கொழுப்பு மில்லை, மேலே சதையுமில்லை, எலும்புமில்லை, சோதித்துப் பார்த்தால் தோலே தவிர வேறில்லை—தோகை மயிலே.

62. வலிமையுள்ளவள், மலையிலிருப்பவள், மல்லருடன் வந்து மருவி விளையாடுவாள், வருத்தமுள்ளபோது பெருத்த உதவியாவாள், மாதர் கையில் பலவகையாய் மாறிச் சஞ்சரிப்பாள், வலுத்த இவள் வாலிபர்க்கும் கிழவருக்கும் வாழ்க்கைப் பட்டாள்.

63. நான் சுத்தமில்லாதவன், என் தலைபோனால் நானே சுத்தம், என் இடை போனால் நானே வாள், நான் யார்?

விடுவிப்பு:—55. சந்தனம் அரைக்கும்கல். 56. தென்னை. 57. நாய். 58. கல்யாண ஆசை, மகளிர் இன்பம். 59.தலைவைத்த கைத்தடி. 60.அகில் (அகி=பாம்பு; அல்=இருட்டு.) 61. மூட்டைப்பூச்சி 62. மூங்கைத்தடி.

64. பச்சை பச்சை நிறத்தாள், பாவக்கா நிறத்தாள், அம்பலம் வாயில் எண்மடங்காய் வளர்வாள், மாடு மேய்ப்பாள், எண்ணெய் விற்பாள், வழியிலிருந்து பொருள் பறிப்பாள், பறிப்போரையுந் தடுப்பாள்—இவளார்?

65. வெள்ளைக்காரன், ஒரு கள்ளப் பையன், நான் காணும் பொழுது செய்யாத கோமணிகளெல்லாஞ் செய்கிறான், நான் சிரித்தால் சிரிக்கிறான், கோபித்தால் கோபிக்கிறான், அடிக்கப்போனால் அடிக்க வருகிறான், அடாவென்றால் சும்மா விருக்கிறான்.

66. சடைகள் பெருத்திருக்குஞ் சந்நியாசியல்ல, தையலை மேல் வைத்திருப்பார் சிவனுமல்ல, கொம்பு பெருத்திருக்கும் எருமையல்ல, கொத்துகொத்தாய் சிவந்திருக்கும் பவழமல்ல, குணமாக வெகு பேர்கள் மேல்கீழாக சூழ்ந்திருப்பார்—குறித்துப்பாரே.

67. ஒரு பட்சி யொருவருக்கு உரைக்கலாகும், ஒரு மிருகம் உன்னிடத்தி லிருக்கவேண்டும், ஒரு மரத்தை யொத்து நீ வாழவேண்டும், ஓ ரெண்ணை யுலகத்தி லொழிக்கவேண்டும்.

68. கார்த்திகை மார்கழி பூர்க்கும் பூ, கானகர் ஜோனகர் விற்கும் பூ, மணமுள்ள இராஜாத்தி மதிக்கும் பூ, குணமுள்ள மந்திரி கொள்ளும் பூ; என்ன பூ?

69. வானத்தில் பறக்கும் பட்சியுமல்ல. வாலுண்டு வானரமுமல்ல, கொம்பிரண்டு மாடுமல்ல.

70. நட்டாற்றில் முட்டை மிதக்கிறது.

71. ஆயிரம்பேர் கூடி கட்டிய அரங்கமணி மண்டபம், கண் பட்டால் அழியும் பொன்பெற்ற மண்டபம்.

72. மேலே கல்கட்டு, கீழே கல்கட்டு, கல்கட்டின் கீழே கனகச் சிறு பாம்பு, தக்கவருக்கு வார்த்தை சொல்லி, தன் கூட்டில் தானிருக்கும்.

73. அடி அடி தென்னஞ்சோலை, அதிலொரு பையன் காவல், முத்தியா செட்டி காவல், முத்தியாமுதலி காவல், இத்தனை காவலுக்குள் எப்படிவந்தாய் பெண்ணே? இரவு இருட்டும் நெருங்கி, குறவனும் கண் சாய்ந்திட, குருவியும் கூண்டிறங்கி வாசலிலே நான் சந்தோஷமாய் வந்தேன்.

74. ஐவருடன் பிறந்தவர்தான் தர்மரல்ல, அதிலொருவன் சாக்ஷி சொல்வான் மனிதனல்ல, யாவர்க்கும் பெரியவான் ஞானியல்ல, ஊரெங்கும புல்சுமப்பான் பறயனல்ல, கன்னிகையை மணம் புரிவான் கடைசித்தம்பி.

விடுவிப்பு:—64. வாரை—மூங்கில். 65. கண்ணாடி. 66. ஆலமரம். 67. ஈ கோடு; ஆளி=ஒழுங்கு; அரசு=நாடு; எட்டு=ஆசை. 68. முத்துச்சிப்பி. 69. காற்றாடி. 70. கப்பல். 71. தேன்கூடு. 72. நாக்கு. 73. பெருச்சாளி. 74. ஐந்துவிரல்கள்.

75. தெய்வத்தின் கொடை, "புதுமலர்" எது?

76. உள்ளநாளெல்லாம் உழைப்பு வாங்குவான், நின்றநிலை ஆடிவிட்டால் தொட்டு தொட்டு வெளியே தொலைத்திடுவான்.

77. (1) எதனால் நோயுண்டாயிற்றோ, அதனாலேயே அந் நோய் தீரும்படியான பொருள் எது? (2) அற்பநேரம் இன்பமீந்து ஆயுள்வரை அவஸ்தை படச்செய்கிற ஆபத்துக்கிடமான சுகமெது?

78. நீண்ட உடலாயிருக்கும் தூணுமல்ல, கையினால் பிடித்தால் மெலிவுண்டிருக்கும் புஷ்பமுமல்ல, படுக்கையிலே இவளன்றி வேறே சுகமில்லை மாநிலத்தில் மங்கையுமல்ல.

79. (1) இஷ்டமாய்த் தட்டுகொடுத்து கஷ்டத்துக்கு வலுவாய் வாங்கிக் கொள்ளும் கெட்ட ஆஸ்தி எது? (2) மொட்டையானாலும் விட்டுவிட மனம் வராத துஷ்டப் பழக்கம் எது?

80. பச்சு பச்சென்றிருக்கும் பாவக்காயல்ல, நடுவிலே விதையிருக்கும் வெள்ளரிக்காயுமல்ல, நீண்டவுடல்—கொம்புமல்ல.

81. முத்துகிருஷ்ணனைக் கூப்பிடுங்கள், முதுகுநாம்பை யெடுத்திடுங்கள், பச்சை வெண்ணெயைத் தடவுங்கள், பாங்கானவீட்டிலடையுங்கள்.

82. நானே ஒருபறவை, என் தலை புதைய லெடுக்கும், திருட்டைக் கண்டுபிடிக்கும், பெண்களுடைய பார்வையைத் துலக்கி அழகாகக் காட்டும், நான் இல்லாவிட்டால் சமாசாரப் பத்திரிகை நடவாது. என் காலோ நாகத்துக்குத் தலை. நான் யார்?

83. செங்கிரைத் தண்டைப்போல் வளர்ந்தாயே மகளே; செக்காட்டுத்தியில் வெந்தாயே மகளே; மஹாராஜன் வீட்டில் புகுந்தாயே மகளே; மன்னுக்கு நீ இரையானாயே மகளே.

84. எவ்வளவு செய்தாலும் திருப்தியற்ற நன்றி கெட்ட ஜென்மங்கள் எதெது?

85. வேலூர்கிளி வெள்ளைக்கிளி; ஆரணிகிளி அன்னக்கிளி; பட்டணத்துக்கிளி பச்சைக்கிளி; எல்லாகிளியுங்கூடி இரத்தினக்கிளி.

86. செக்கச் சிவந்தவர் நான்குபேர்; செவ்வெண்ணெய் இட்டுக் கொண்டவர் நான்குபேர்; மஞ்சள் குளித்தவர்கள் நான்கு பேர்; மையிட்டுக் கொண்டவர் நான்குபேர்; பதினாறுபேருக்கு இரண்டே அம்படையான்.

விடுவிப்பு:—75. குழந்தைகள். 76. நாக்கும், ஆடும் பல்லும். 77. (1) பெண், (2) அடாத. போகம். 78. தலையணை, 79. (1) ஸ்திரீவியாதி, (2) வேசி மனைபுகல். 80. முருக்கக்காய். 81 வெற்றிலைப்பாக்கு. 82. மைனா. 83. சட்டிபானை, 84. வீட்டு மருமகன், மைத்துனத் தடியன், பொறுமைபிடித்த மாற்றுந்தாய், அவன் வகையார். 85. வெற்றிலைப்பாக்கு. 86. சொக்கட்டான்.

12. கணித விசித்திர விநோதம்.

ஒரு வணிகன் பன்னிரண்டு படிகொண்ட ஓர் பானையில் நெய் வைத்திருந்தான். அதிலிருந்தும் ஆறுபடி நெய்யை ஒரு வியாபாரிக்குக் கொடுக்கவேண்டியிருந்தது. அவனிடமோ ஐந்துபடிகள் கொள்ளத்தக்க ஒரு பானையும், ஏழுபடிகள் கொள்ளத்தக்க ஒரு பானையும் தவிர, வேறொன்றுமில்லை. இந்தப் பானைகளைக் கொண்டு ஆறுபடி நெய்யைப் பங்கிட்டுக் கொடுப்பதெப்படி?

* * * * *

அதற்கு விடை—(1) பன்னிரண்டுபடி குடத்திலிருக்கிற நெய்யை ஐந்துபடி குடத்தால் 2-தடவை எடுத்து எழுபடி குடத்தில் ஊற்ற, அக்குடம் நிறைந்து, ஐந்துபடி குடத்தில் பாக்கி 3-படி நெய் நிற்கும். இப்போது பன்னிரண்டுபடி குடத்தில் 2-படி நெய் மிச்சம் இருக்கிறது.

(2) முந்திய பன்னிரண்டுபடி குடத்திலிருக்கிற 2-படி நெய்யோடு, எழுபடி குடத்தில் நிறைந்திருக்கிற நெய்யையும் ஊற்ற, ஆக 9-படி நெய் பன்னிரண்டுபடி குடத்தில் இப்போது இருக்கிறது.

(3) ஐந்துபடி குடத்தில் முன்பு இருக்கிற 3-படி நெய்யை காலியாயிருக்கிற எழுபடி குடத்தில் மறுபடியும் ஊற்றி விடுக. பிறகு பன்னிரண்டுபடி குடத்திலிருக்கிற 9-படி நெய்யை ஐந்துபடி குடத்தால் அளந்து 7-படி குடத்தில் பின்னும் ஊற்ற அக்குடம் நிறைந்துபோய், ஐந்துபடி குடத்தில் ஒருபடி நெய் மிச்சம் இருக்கும். இப்போது பன்னிரண்டுபடி குடத்தில் 4-படி நெய் மிச்சம் இருக்கிறது.

(4) பின்பு எழுபடி குடத்தில் நிறைந்திருக்கும் நெய்யை பன்னிரண்டுபடி குடத்திலிருக்கும் 4-படி நெய்யோடு ஊற்ற, ஆக 11-படி நெய் இப்போது பன்னிரண்டுபடி குடத்திலிருக்கிறது. எழுபடி குடம் இப்போது காலி.

(5) ஐந்துபடி குடத்தில் இருக்கிற 1-படி நெய்யை இப்போது எழுபடி குடத்தில் ஊற்றி விடுக. பிறகு பன்னிரண்டுபடி குடத்திலுள்ள 11-படி நெய்யிலிருந்து ஐந்துபடி குடததால் 5-படி நெய்யை எடுத்து விட்டால் பன்னிரண்டுபடி குடத்தில் இப்போது 6-படி நெய் இருக்கும். கேட்ட வியாபாரிக்கு இந்த ஆறு படி நெய்யைக் கொடுக்கலாம். ஐந்துபடி குடத்திலிருக்கிற 5-படி நெய்யை எழுபடி குடத்திலிருக்கிற 1-படி நெய்யுடன் ஊற்றினால் அதுவும் சரியாக 6-படி ஆகிவிடும்.

13. வாக் சாதுர்யங்களின் விநோதம்.

I. மோதிர சாதுர்யம்:—[சபையோர் பக்கம் பார்த்து] "கனவான்களே! எனக்கு மோதிரம் அணிந்துகொள்ள நெடுநாட்களாக ஆவல். உங்களில் யாவரேனும் எனக்கு ஒருமோதிரத்தைப்பரிசாகத் தருவீரோ? அப்படித் தருபவர்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பேன்"—என்று சொல்லி. "ஆகட்டும் பலவந்தமில்லை. உங்களில் யாரிடத்திலாவது ஒருமோதிரம் இருந்தால் என் கையில் கொடுங்கள். நீங்கள் மனப்பூர்வமாய்க் கொடாததை எடுத்துக் கொள்வே னென்று பயப்படவேண்டியதில்லை"—என்று யாருடைய மோதிரத்தையாவது கேட்டு வாங்கிக்கொண்டு உன் விரலில் தரித்துக் கொள்வாய். "பலே! மிக அழகா யிருக்கின்றது" என்று அந்த மோதிரம் கொடுத்தவர் பக்கமாய்ப் பார்த்து "ஐயா! உங்களுடன் ஒரு சிறிய பந்தயம் போடுவேன். அந்தப் பந்தயம் நான் ஜெயித்தால், எனக்கு இந்த மோதிரத்தைக் கொடுத்து விட வேண்டும்"—என்று சொல்வாய். அந்தப் பந்தயம் என்னவென்றால், "நான் உங்களை மூன்று கேள்விகள் கேட்பேன். அவை எப்படிப்பட்ட கேள்விகளானாலும் சரி, நீங்கள் கவனியாமல் "என் மோதிரம், என் மோதிரம், என் மோதிரம்,, என்று மூன்று தடவை பதில் சொல்லும் பக்ஷத்தில், உங்களது மோதிரத்தை உங்களுக்குக் கொடுத்துவிடுவேன், ஒரு கேள்விக்காவது வேறே பதில் சொன்னால், உங்களது மோதிரத்தை நான் எடுத்துக் கொள்வேன்"—என்று சொல்லிப் பந்தயத்திற்கு உடன்படுத்திவிட்டு, பின் வருகிறபடி கேள்.

1-வது கேள்வி:—"ஐயா! இப்பொழுது எத்தனை மணி?"—என்று கேள். அவர் அதற்கு "என் மோதிரம்" என்று பதில் சொல்வார். "அடடா! எனக்கு இந்த மோதிரம் பிராப்தமில்லை போல் இருக்கிறது" என்று விசாரத்தோடு கூறிவிட்டு,

2-வது கேள்வி:—"ஐயா! எனக்கு இன்றைக்கு அதிர்ஷ்டமிருக்கிறதா இல்லையா?"—என்று இரண்டாவது கேள்வியைக் கேள். அதற்கு அவர் "என் மோதிரம்" என்று பதில் சொல்வார். வேறு பதில் அவர் சொல்லும் பக்ஷத்தில் நீயே ஜெயிப்பாய். "என் மோதிரம்" என்று அவர் பதில் சொல்லிவிட்டால், பிறகு நீ செய்ய வேண்டியது என்னவென்றால்,

3-வது கேள்வி:—"ஆகா! இரண்டு கேள்விகள் ஆய்ப்போய் விட்டனவே; இன்னும் ஒன்றுமட்டு மிருக்கிறது.

(அடுத்த சஞ்சிகையில் பூர்த்தி.)

விநோதரஸமஞ்சரி?

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை

கமலம்-17. | அக்டோபர்மீ 1௳ 1921. | இதழ்-8.

19. வேதவதியின் சிசு போஷண விநோதம்.

ராமய்ய பந்துலு.—அடியே! பாபி! உனக்கென்ன கேடுகாலம் வந்ததடி? குழந்தையை அவ்விதம் ஏன் அடித்து அழ வைக்கிறாய்?

வேதவதி.—உங்களுக்குப் பொழுது விடிந்து அஸ்தமனம் வரைக்கும் என்னை இப்படி ஆட்டி அலைக்கழிப்பதிலேயே சரியாகிறது. துஷ்டத்தனம் செய்தால் பையனைக் கொஞ்சம் "ஓ" என்று அதட்டக் கூடாதா? ஏதாவது சொன்னால் பெரும் புலிபோல் மேல்வந்து விழுகிறீர்கள். உங்களுக்குப் பயந்து எவ்வளவோ நடக்கிறேன். அப்படி யிருந்தும் ஹிம்ஸை; நான் உலகத்திலுள்ள மனைவிகளைப் போலிருந்தால் நீங்கள் ஒரு நிமிஷம் கூட உயிருடன் வைக்கமாட்டீர்கள்.

ராமய்ய.—பையன் உண்மையாய்த் துஷ்டத்தனம் செய்த அப்போது அவனைக் கண்டித்தால் நானேன் கேட்கிறேன். அவன் இப்போது என்ன குற்றம் செய்தானென்று ஐந்து விரல்களும் முதுகில் பதிய அவ்விதம் அடித்தாய்? அவன் செய்ததெல்லாம்—அம்மா என் தலையில் ஜலத்தைக் கொட்டினாளென்று—சொன்னது ஒன்றுதானே? அதைத் தவிர வேறேதேனும் உண்டா?

வேதவதி.—அது போதாதா? இன்னும் என்ன வேண்டும்? பெண் பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகளிடம் சொல்லக்கூடாத ரகசியங்கள் எத்தனையோ இருக்கும். விரலத்தனை யில்லை. இப்போது முதல் அதிகப் பிரஸங்கித்தனம் கற்றுக்கொண்டு ரகசிய மெல்லாம் இவ்விதம் சொல்லிக் கொண்டிருந்தால் இனி எவ்வளவு துஷ்டனாய் விடான்? எதிர் வீட்டுப் பெண்ணுக்கு சாந்தி முகூர்த்தம் நடந்த மறுநாளின்போது; அந்தப் பெண் பலகாரத்தை எடுத்துத் தன் கணவன் வாயில் ஊட்டினாளென்றும், அவன் மேலே சாய்ந்து கொண்டிருந்தாளென்றும் எல்லோரிடமும் போய்ச் சொன்னான். இந்த ரகசியங்களை யெல்லாம் இவன் சொல்லலாமா?

ராமய்ய.—அது ரகசிய மென்று அந்தப் பச்சைக் குழந்தைக்குத் தெரியுமா? அது இருக்கட்டும். இப்போது எதற்காகத் தலையில் ஜலம் கொட்டினாய்? நீ தான் சொல்லேன். நான் கேட்டு சந்தோஷிக்கிறேன்!

வேதவதி.—என் வார்த்தை யென்றால் உங்களுக்குக் கேலிதான், சிரிப்பு தான். அவன் செய்யும் துஷ்டத்தனம் தெரியாது. நான் ஏதாவது சொன்னால் என் வாய் மாத்திரம் எல்லோருக்கும் தெரிகிறது. அவன் மடி கட்டிக்கொண்டு கொல்லையில்போய் வேலைக்காரி பிள்ளையைத் தொட்டுக்கொண்டான். தலைமுழுதும் நனைய ஜலம் விடாமல், பிராமண ஜென்மம் எடுத்து எவ்விதம் சூத்திரத்திட்டு(!)டன் சாப்பிடச் செய்யட்டும்? அவன் அத்திட்டு(!)டன் வந்து படுக்கை, தலையணையெல்லாம் தொட்டுக் கலந்தான். அதை யெல்லாம் நனைத்துக் காயப்போட முடியாமல் சாகிறேன். கிணற்றில் ஜலமோ ஆதிசேஷன் வாயிலிருக்கிறது. ஒரு சொம்பு ஜலம் தூக்குவதற்குள் முன்னூறு முழம் கயிறுடன் குடலும் அறுந்துபோகிறது. பெண்களுக்கு ஏற்படும் பாடுகளும் கஷ்டங்களும் ஆண்பிள்ளைகளுக்கு என்ன தெரியும்?

ராமய்யா.—உனக்கு எத்தனை சொன்னாலும் தாமஸகுணம் கடுகளவும் போகவில்லை. சின்ன பையன் சூத்திரக் குழந்தையைத் தொட்டுக்கொண்டால், அதற்கு வீட்டிலுள்ளவற்றையெல்லாம் நனைத்துப்போடவேண்டுமா? தினத்திற்கு மூன்று தரம் இவ்விதம் நனைப்பதால் தான் துணிகள் அதி சீக்கிரம் கிழிந்து போகிறது. நீ வீட்டுக்கு ஜேஷ்டா தேவி (மூதேவி) யாய் ஆவிர்ப்பவித்திருக்கிறாய்.

வேதவதி.—நீங்கள் ஆயிரம் சொல்லுங்கள், லக்ஷம் சொல்லுங்கள். உங்களுக்கு வேண்டியிருக்கும் பறத்திட்டு கலந்த சாப்பாடு என் வாய்க்குள் போகாது. நீங்கள் சிறுபோதிலிருந்து கிறிஸ்தவ ஸ்கூலில் வாசித்து, கிருஷ்ணன், ராமன், இவர்களைத் தெரியாவிட்டாலும், ஏசுகிறிஸ்து, யோவான், மத்தேயு, லூக்கா, ஞானஸ்நானம் இந்தப் பெயர்களை யெல்லாம் தெரிந்துகொண்டு, கிறிஸ்தவர்களுடன் சகவாசம் செய்து வந்ததனால் மடி விழுப்பில்லாமல், ஆசார வியவஹாரமும் விட்டு, மத்தியில் எல்லோரையும் தொட்டுக்கொண்டு, ஸ்நானமும் செய்யாமல் பட்டுத்துணியைச் சுற்றியபடி உட்கார்ந்து சாப்பிடும் வழக்கமாய் விட்டது. அவ்வித எச்சில் சோற்றுக்கு என் மனம் ஒப்பாது. அதனாலேயே நீங்கள் உட்கார்ந்த இலையில்கூட நான் உட்காருவதில்லை. உங்கள் இலையை எடுத்தெறிந்து ஸ்நானமும் செய்கிறேன்.

ராமய்யா.—அவ்வளவு ஆசாரமாயிருக்கிற நீ ஒரு குழந்தையை எப்படிப் பெற்றுக்கொண்டாய்? நீ மகா பெரியவள். மகா சுத்தம். நீ எத்தனை தடவை ஸ்நானம் செய்தாலும் பாதகமில்லை. மூன்று வயது பையனை இவ்விதம் குளிர்ந்த ஜலத்தில் தினமும் ஸ்நானம் செய்வித்தால் சளுப்பு பிடித்துக்கொண்டு அவஸ்தைப்படுகிறான். குளிர் அவன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. சொக்காய் போடென்றால் போடாமல் முண்டமாய் நிறுத்துகிறாய்.

வேதவதி.—அவனுக்கென்ன பத்து வயதா—சொக்காய்போட? பால் குடிக்கும் குழந்தை. என்னை அடிக்கடி தொட்டுக் கொள்வதால் அவனுக்கு எப்படிப் போடுவது? என்னை நீங்கள் ஹிம்ஸை செய்வதேயன்றி உங்களுக்கு நல்லது கெட்டது தெரிகிறதில்லை. அவன் நிமிஷத்துக்கு நிமிஷம் என்னைத் தொடுவதால், மடி கட்டிக்கொண்டு சமயல் செய்யும் நான் எத்தனை தடவை ஸ்நானம் செய்வது? அடிக்கடி ஸ்நானம் செயய நான் ஒருபோ

தும் பின்வாங்கமாட்டேன். ஆனால் அந்தப் பாதாளக் கிணற்றுடன் மாரடிக்க முடியவில்லை. ஜலம் எடுப்பதற்குள் பாதிபிராணன் போய்விடுகிறது. ஈரப்புடவையால் ஒருபோதும் ரோகம் வராது. அது வரவேண்டிய விதி இருந்தால் எப்படியும் வருகிறது. தினஸ்நானம் செய்யாதவர்களுக்கு மட்டும் ரோகம் வருவதில்லையா?

ராமய்யா.—போதும் அந்தமட்டும் பேசாமலிரு. குழந்தைக்கு அதிக சூடான வெந்நீர் ஊற்றவேண்டாமென்றால் கேட்கமாட்டாய். அதனால் அவனுக்குத் தேகமெங்கும் சொரி சிரங்காய்விட்டது. அதுவுமன்றி எங்கிருந்தோ அழுக்கு படிந்த பழய துணிகளைக் கொண்டுவந்து படுக்கையில் போட்டு, கயிற்றுக்கட்டிலில் படுக்கவைக்கிறாய். அக்கட்டிலின் கீழ் சட்டியில் நெருப்புப் புகை போடுவதால், கீழே தொங்கிக்கொண்டிருக்கும் கந்தைத் துணியில் நெருப்புப்பிடித்து பையனின் கால்வெந்து புண் இன்னும் ஆறவில்லை.

வேதவதீ.—பையனின் கால் வெந்தது என் தப்பிதமா? தெய்வம் செய்ததற்கு நான் என்ன செய்யட்டும்? பையனுக்கு வெந்நீர் ஊற்றியா சிரங்கு வருகிறது? உலகத்திலுள்ளவர்களைப்போல் நானும் வெந்நீர் ஊற்றினால் நீங்கள் என்னை விழுங்கிவிட மாட்டீர்களா? மூன்றாநாள் சுப்பம்மா வீட்டில் ஒருவருஷக் குழந்தைக்கு வெந்நீர் விடச்சொன்னபோது, நானே சூட்டால் சொம்பைக்கூடத் தொடமுடியாமற் போனேன், அதன்பின் குழந்தை ஒரு ஜாமநேரம் சௌக்கியமாய்த் தூங்கி, பிறகு எழுந்திருக்கவேயில்லை. டாக்டர் வந்து சுகப்படுத்தினானும். உடம்புக்கு எத்தனை சூடான வெந்நீர் விடுகிறோமோ அத்தனையும் நல்லது. பெண்கள் செய்யவேண்டியதற்கும் ஆண்கள் செய்யவேண்டியதற்கும்—எல்லாவற்றுக்கும் மத்தியில் நீங்கள் வந்து பையனைக் கெடுக்கிறீர்கள். குழந்தைக்கு அன்னம் ஜலம் இவைகளே பலம். எத்தனை தடவை அன்னம் ஊட்டுகிறோமோ அத்தனையும் நல்லது. குழந்தைகளைப் பத்து மாதம் சுமந்து பெற்று வளர்ப்பதில் பெண்களைவிட ஆண்களுக்கு அதிகம் தெரியுமா — என்ன? பெண்ணின் கைப்பணமும் ஆணின் கைப்பிள்ளையும் நில்லாது—என்று சொன்னவன் பைத்தியக்காரனா? படுக்கையில் சிறுநீர் பெய்யும் குழந்தைகளுக்கு அழுக்குத்துணி கந்தையில்லாமல் நன்றாய்த் துவைத்த சலவைவேஷ்டியையா போடுவது? பெண்குடித்தனத்தில் ஆண்களுக்குக் குறை சொல்வதைத் தவிர வேறென்ன தெரியும்?

ராமய்யா.—நீ அன்னம் ஊட்டி ஊட்டித்தான் அவனுக்கு குனுவயிறு வளர்ந்தது. எதிலும் மிதமே ஹிதம்.

வேதவதீ.—நான் சாதம் அதிகம் ஊட்டி அந்த வயிறு வரவில்லை, இங்கிலீஷ் வைத்தியத்தை நம்பி டப்பிப்பாலைக் கொடுக்கச் சொன்னதில் இப்படி ஆயிற்று. ஆறாவது மாதத்திலேயே குழந்தைக்கு யாரும் அன்னம் ஊட்டும் வழக்கம்செய்ய, நமது வீட்டில்தான் மெல்லின்ஸ் பூட்டும், பால் டப்பியுமான கிரகசாரம் வந்தது. பால்டப்பியால் தான் சொறிசிரங்கு வந்தது.

ராமய்யா.—நீ குழந்தையை வளர்ப்பது ரொம்ப அழகாயிருக்கிறது. உள்ளதை இல்லையென்றும், இல்லாததை உண்டென்றும் பொய் சொல்லக் கற்றுக் கொடுக்கிறாய். பூச்சாண்டி வருகிறான் எடுத்துக்கொண்டு போய்

விடுவான் என்று பயமுறுத்துவதால் அவன் நித்திரை செய்யும்போதும் அடிக்கடி நடுக்கிடுகிருன். அம்மாளை — அக்காளை—என்று எல்லோரையும் விளையாட்டாகத் திட்டச்சொல்லிக் கொடுக்கிருய். அவன் வைதால் நீ கேட்டு சந்தோஷிக்கிருய். விளக்கை ஜே ஜே என்று சொல்லி அவனை நமஸ்காரம் செய்யச் சொல்வதால், அவன் மூர்த்தாநாள் நிஷ்காரணமாய்க் கைகளைச் சுட்டுக் கொண்டான். அடம் செய்யும்போதும் செய்யாதபோதும்கூட அவனை அடிக்கிருய். நாராயணராவின் பாரியை குழந்தைகளை எவ்விதம் வளர்க்கிருள் பார்.

வேதவதி.—அவன் பெயரைக் கேட்டாலே தலைவலி எடுக்கிறது. என்னவோ படித்துக் கெட்ட கழுதை. அவன் வளர்க்கிறதற்கு நீங்கள்தான் சந்தோஷப்படவேண்டும். என் போன்ற தெரிந்தவர்கள்(!) சொன்னாலும் கேட்கமாட்டான். குழந்தையைக் காற்றில் விடாதே, திருஷ்டி படும், பக்ஷிகள் பறக்கும், பக்ஷிதோஷம் ஏற்படும் என்று சொன்னால் என் வார்த்தையை லக்ஷியம் செய்யாமல் சிரிக்கிருன். என் வார்த்தைகளைக் கேட்காதது அனுபவிக்கும்போது தெரியும். நான் அவ்வளவு தெரியாமலா நீங்கள் எவ்வளவு சொன்னாலும் கேளாமல் குழந்தையின் விஷயத்தில் இவ்வளவு ஜாக்கிரதைப் படுகிறேன். இரவும், விடியற்காலையும் குழந்தைகளை வருத்திப் பாடம் சொல்லிக் கொடுக்கிருள். அப்படி அவைகள் கஷ்டப்பட்டால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளுமா? பாழும் கிறிஸ்துவப் பள்ளிக்கூடத்தில் படித்து, குழந்தைகளை வீணில் கெடுக்கக் கற்றுக்கொண்டாள், என்னுடன் பேச என்றால், புதிய நாவல் வந்திருக்கிறது, அதன் பேர் பரிமளா, அதைப் படிக்கவேண்டும், நாளைக்கு வா பேசலாம் என்கிருள். இவளை அவன் புருஷன் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டாடுகிருன். அவனொரு மூடம்! இவளொரு மூடம்!

ராமய்யா.—நான் இவ்வளவு படித்தும், போதிய அறிவிருந்தும், ஊருக்கெல்லாம் புத்திசொல்லியும், கடைசியில் மதிமோசம்போய் விதிவசமாகி படிக்காத ராமாட்டியாகிய உன்னை—நீ படித்தவள்—என்று உன் அத்தை சொன்ன படுமோசப் படுகுழியை நம்பி வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டேன். இந்தத் துக்கம் என்னை மசானத்தில் வைக்குமளவும் தீராது. நீ படிக்காத முண்டையாதலால் நாராயணராவின் பாரியை குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்துக் கெடுக்கிருள் என்கிருய். உனக்குத் தலைப் பேன் பார்க்கத் தெரியுமேயன்றி வேறென்ன தெரியும்?

வேதவதி.—சரி, சரி, நான் முண்டைதான் — உங்களுக்குப் பிறகல்லவா எனக்கு அந்த பதவி? நீங்கள் என்னை முண்டையாகப் பார்க்கப்போகிறதில்லை. பையன் அப்போதிருந்து ஒரே விதமாய் ஓயாமல் அழுதுகொண்டிருக்கிருன். நீங்கள் அவனை எடுத்துச் சமாதானம் செய்யுங்கள், நான் விட்டு வேலைகளைப் பார்க்கப் போகிறேன். (போகிறள்.)

எழுத்து வாசகம் அறியாதவள் மட்டி; எதும் அறியாள், அவன் சுரண்டுவாள் சட்டி; கழுத்தில் அவளுக்குத் தாலியைக் கட்டி, காரியமில்லை; அது காசுக்கு நஷ்டி.

20. தாதாவினது கல்யாண ஆசையின் விநோதம்.

கருணாகர சாஸ்திரி.—சோமயாஜிகளே! நமது கிழத் தாத்தாவுக்கு ஆஸ்தி எவ்வளவு இருக்கிறதையா?

சோமயாஜி.—எல்லாம் சேர்ந்து ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேலிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். மான்யத்தில் மாத்திரம் ஒரு சாகுபடிக்கு ஆயிரம் ரூபாய் வருகிறதாம்.

கருணாகர சாஸ்திரி.—இத்தனை திரவியம் எப்படி சம்பாதித்தார்?

சோமயாஜி.—அவர் முப்பது வருஷகாலம் 'அமுல்தார்' உத்தியோகம் செய்தார். பழைய நாளில் கை நிறைய லஞ்சமல்லவா? கேட்பார் யார்? நன்றாக சம்பாதித்து விட்டுப் பிறகு பென்ஷன் பெற்று முப்பது வருஷங்களுக்கு மேலாகிறது. அவர் விவாகங்கள் மட்டும் செய்யாதிருந்தால், இதுவரை லக்ஷம் ரூபாய்க்கு சொத்து இருக்கும். அவரது நான்கு குமாரர்களும் தக்க யௌவனத்தில் மரித்தனர். அதில் வேறே பாழும் செலவு.

கருணாகர சாஸ்திரி.-இவருக்கு எத்தனை விவாகங்கள் ஆயிருக்கின்றன?

சோமயாஜி.—இதுவரை ஐந்தானது. நால்வரும் ஸ்வர்க்கம் புகுந்தனர். இந்த ஐந்தாவதும் இப்பொழுது பிழைக்கமாட்டாத ஸ்திதியில் இருக்கிறது, தாதாவுக்கு 99-வயதாகிறது. இன்னொரு விவாகமும் செய்துகொள்ள ஆசைதான். அவருக்கு யார் கொடுப்பார்கள்?

கருணாகர சாஸ்திரி.—எந்த மகானுபாவனாவது கொடுக்கிறான். ஆயிரம் மாதங்களுக்கு மேல் பிழைத்திருக்கிறார். வந்தவளுக்கு சுமங்கலி ஜாதகமானால் அவரும் நெடுநாள் ஜீவிக்கிறார். பணம் யாருக்குதான் கசப்பு? பணத்தைப் பார்த்தால் மலைமீதுள்ள தெய்வமும் கீழே இறங்கும். அப்படி யாரும் கொடாவிடில் என் குழந்தையைக் கொடுத்து அக்கன்னிகாதான பலத்தை (அதாவது பணத்தை) நானே யடைகிறேன்.

சோமயாஜி.—நீங்கள் பரிஹாஸத்திற்குச் சொல்லுகிறீர்கள். அபூர்வமாய்ப் பிறந்த தங்களின் ஒரே பெண்ணை இவருக்குக் கொடுக்கலாமா?

கருணாகர சாஸ்திரி.—கொடுத்தா லென்ன தவறு? நானே என் பெண்ணைக் கொடாவிடில் என் காதிலிருப்பது குண்டலங்களல்ல, நான் வாசித்ததுசாஸ்திர மல்ல.

சோமயாஜி.—நீங்கள் பெண்ணை யாருக்கோ கொடுக்கத் தீர்மானம் செய்திருக்கிறீர்களென்று கேள்விப்பட்டேன்.

கருணாகர சாஸ்திரி.-இன்னும் தீர்மானமாகவில்லை. நல்ல வரன் கிடைப்பதாயிருந்தால் கொடுத்ததைக்கூட மறுபடி வாங்கிக்கொள்ளலாமென யாக்ஞவல்கர் தர்மசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறார். தசமியன்றே விவாகம் நடக்கவேண்டியது. இதற்குள் கிழவரின் பார்யைக்கு சீக்காக இருக்கும் சங்கதி கேட்டு, அது எவ்வித மாகிறதோ பார்த்துக்கொண்டு செய்யலாமென எங்களுக்குத் தீட்டு வந்ததெனப் பொய் கூறி நிறுத்திவிட்டேன். விவாகத்தில் எவ்வளவு பொய்யும் சொல்லலாமென்று சாஸ்திரம்! சுக்ராசாரியார் விவாக காரியத்தில் அபத்தம் சொன்னால் தோஷமில்லை யென்று விரிவாய்ச்சொல்லியிருக்கிறார். என் பெரிய தகப்பனார் குமாரன் தான்

இப்போதைய சங்கராசாரியார். கையில் வேண்டிய பலம் இருக்கிறது. சாஸ்திர ஆதாரங்களும் இருக்கிறது.

சோமயாஜி.—உங்களது எண்ணத்திற்குத் தக்கபடி கிழவரின் மனைவி பிழைக்கமாட்டாள். கிழவருக்கோ பற்கள் உதிர்ந்து போயின. இந்திரிய பலம் போயிற்று. தலை நடுங்கிக் கொண்டிருக்கிறது. பத்நூலரி சொல்லி யதுபோல், எல்லாம் கிழமாய் விடினும் ஆசை மாத்திரம் கிழமாகாமல் நாளுக்கு நாள் பால்யமாகிக்கொண்டிருக்கிறது. ஐந்தாவது மனைவி இறந்து, அந்தத் தீட்டு ஒழிந்தபிறகு தானே விவாகம் வேண்டும். தீட்டு பத்துநாள் இல்லாதிருந்தால் நலமாயிருக்கும். ஒரு நாளுடன் தீட்டு போயிற்றென்று ஆதாரங் கொண்டு வரமுடியாதா? இதெல்லாம் போக, விவேகியான உமது பெண் இதை ஒப்புக் கொள்வாளா?

கருணாகர சாஸ்திரி.—ஒப்புக் கொள்ளாமல் என்ன செய்வாள்? ஏதாவது ஆக்ஷேபிப்பாள் என்ற எண்ணத்தைக் கொண்டே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாது நிறுத்திவிட்டேன். அவ்விதம் ஆக்ஷேபனை செய்ய அவளுக்கு சுதந்தரமேது? தகப்பன் பார்த்து பிரேதத்துக்கு மணம் செய்தாலும் ஒப்புக் கொள்ள வேண்டியதே. அவளுக்கு மாத்திரம் பணம் கசப்பா என்ன? விவாகமானபின் கிழவனிறந்தால், இருக்கும் ஆஸ்தியை வைத்துக்கொண்டு சமஸ்த சுகங்களையு மநுபவிக்கிறாள். யார் வந்தாலும் பார்த்தும் பாராமலு மிருந்து, ஏதாவது கஷ்டம் வந்தால், பாப பரிகார நிமித்தம் சிசு யெக்ஞம் செய்து குலம் கெடாமற் பார்க்கிறோம்.

சோமயாஜி.—உங்களின் வாக்குப்பிரபாவத்தால் சமஸ்த மங்களங்க(?)ளும் உண்டாகட்டும். விவாகத்தில் அதிக செலவில்லாமல் பாருங்கள். ஏனெனில் நமக்கு வரவேண்டிய பணத்தில்தானே அந்த செலவு ஏற்படுகிறது. கோயிலில் ஒரு நாளில் நடத்தினால் ஒரு இருபது ரூபாயில் முடிந்துபோகும்.

கருணாகர சாஸ்திரி.—நல்லது, அதைப் பிறகு யோசிப்போம். நான் அவர் வீட்டுக்குச் சென்றுவருகிறேன். நீங்கள் இப்போது போய் வாருங்கள். விஷயம் ரகசியமாக இருக்கட்டும். (இருவரும் போகிறார்கள்.)

II

கிழவரின் வீடு:—

கிழவர் அழுதுகொண்டிருக்க, கருணாகர சாஸ்திரி வருகிறார்.

கருணாகர சாஸ்திரி.—போனவளுக்காக நீங்கள் அழுவதால் என்ன பிரயோஜனம்? நீங்கள் பெரியவர்கள். வெகுநேரம் அழுதால் பின் உங்களுக்குக் களைப் புண்டாகும். கேவலம் ஒரு பெண்கட்டைக்காகவா அழுவது? அநுபவிக்க யோகமின்றி அவள் மண்ணடித்துக் கொண்டு போனால், பாக்கியவந்தரான உங்களுக்கு இதைவிட நல்ல அழகும் குணமுமுடைய பத்தினி கிடைக்கமாட்டாளா?

கிழவர்.—உலகத்துக்காக மேலுக்கு அழுததே யன்றி வேறொன்று மில்லை. இவள் போனதைக் குறித்து சந்தோஷமே தவிர, கொஞ்சங்கூட விசாரமேயில்லை. வெளிக்குச் சொன்னால் மானக்கேடு! நிஷேக முகூர்த்த தினத்தன்று கூட என்னருகில் வந்தவளன்று. எவ்வளவோ சகித்து நின்று

சமீபம் சென்றால் கிழவனுக்கு என்ன கேடு என்று வேட்டை நாய் போன்றும் கடிக்க வருவான். வீட்டு விஷயங்கள் வெளியில் சொல்லக் கூடியதல்ல.

கருணாகர சாஸ்திரி.—என்னிடம் தெரிவிக்கலாம். சும்மாசொல்லுங்கள்.

கிழவர்.—நான் சீக்கிரம் இறந்துபோனால் நல்லதென்பது அவள் கருத்து. விதவா விவாகம் செய்வது அதி சிலாக்கியமென்று அடிக்கடி என்னிடம் கூறுவான். அதனால் அவள் எண்ணத்தைத் தெரிந்து கொண்டேன். பெண்பிள்ளைகள் மிகவும் கெட்டவர்கள்: அவர்களுக்குள்ள விஷயவாஞ்சை உலகில் யாருக்கும் கிடையாது. இவளால் பட்டபாடு போதும்.

கருணாகர சாஸ்திரி.—ஸ்திரீகளைத் துண்டு துண்டாய் வெட்டினாலும் தோஷமில்லை. இப்போது ஸ்திரீ புனர்விவாகம் என்று ஒரு ஸமாஜ முண்டானது நமக்கெல்லாம் ஒரு எமனாய்விட்டது. கலி பிரவேசமாய்விட்டது. இனி வர்ணாசிரம தர்மம் நில்லாது. தாங்கள் இனி நடக்கவேண்டியதை யோசியுங்கள்.

கிழவர்:—என்ன விவாக விஷயமா? யாராவது எனக்குக் கொடுப்பதாகச் சொன்னார்களா? தந்தால் நலம்தான். எவ்விடத்திலும் நிேஷேத முகூர்த்தம், விவாகம் இதைக் கண்டாலும் நமக்கும் அப்படியொன்று புதிதாக நடத்திக் கொண்டு பார்க்கவேண்டுமென்ற ஆவல் அதிகமாய் விடுகிறது. நீங்கள் மனம் வைத்தால் எதுவும் நடக்கும்.

கருணாகர சாஸ்திரி:—அந்த விஷயம் என்னைப் பொறுத்தது விவாகத்தை முடித்து வைப்பது என் பாரம். புது மனைவியின் பதிவிரதா தன்மையால் அவசியம் சந்தானம் உண்டாகலாம்.

கிழவர்.—உண்டானால் உண்டாகலாம். யௌவனத்தை உண்டாக்குகிற மருந்துகளில் சிரேஷ்டமான தொன்றைத் தயாரிக்க வேண்டும்.

கருணாகர சாஸ்திரி.—அவ்வித மருந்துகள் கோசாயிகளிடம் மிகுதியுமுண்டு. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? பலனுண்டாகாமல் போகாது. பூர்வம் யயாதிக்கு உண்டானது போல், உங்களுக்குக் கிழத்தன்மைபோய் யௌவனம் வரவும்கூடும்.

கிழவர்.—முதலில் மணம் செய்து கொண்டால் எதற்கும் நல்லதே. நான்கு அடித்தாலும் வைதாலும் விவாகம் செய்துகொண்ட பத்தினிக்கு சமமாகாது. மனைவியென்றிருந்தால் கிழவனுக்குக் கை கால் பிடிக்கிறாள். தவிர கர்மங்கள் நிலைப்பது பிரதானம். ஒரு யாகம் செய்யவும் எண்ணம். யாகத்தினால் ரம்பையின் ஸல்லாபமும் கிடைக்குமாம்.

கருணாகர சாஸ்திரி.—யாகத்தினால் ரம்பா, மேனகா, திலோத்தமா, ஊர்வசி முதலிய யாவரும் கிடைப்பார்கள்.

கிழவர்.—ஊர்வசி, மேனகை கூடவா கிடைப்பார்கள்?

கருணாகர சாஸ்திரி.—நீங்கள் இன்னும் நூறு வருஷங்கள் பிழைத்திருந்து சொர்க்கம் சேர்ந்ததும், உங்களை அவர்கள் எதிர்கொண்டழைப்பார்கள். சாஸ்திரங்கள் அவ்விதம் சொல்கின்றன. அது என்றும் தவறாது.

கிழவர்.—நமது சாஸ்திரங்கள் மிகவும் உத்தமமானவைகள். இன்று மத்தியானமே விவாகத்துக்கு ஏற்பாடுசெய்து விடுங்கள். உடனே யாகம் செய்கிறேன். இவ்வுலகில் பாரியையுடன் சுகம் அனுபவிக்காவிடினும் சொர்க்கத்திலாவது ரம்பா மேனகா சுகம் அனுபவிக்கிறேன்.

கருணாகர சாஸ்திரி.--சவம் வீட்டை விட்டு வெளியேறவில்லை. தீட்டு பத்து தினங்களும் கழியாமல் எப்படி விவாகம் செய்வது? பதின்மூன்றாம் நாள் வரைக்கும் பொறுத்திருங்கள்.

கிழவர்.—ஐயோ! சாகும் முன்னை தீட்டில்லாமற் செய்து சாகக் கூடாதா? நான் உத்திரக்கிரியைகளைச் செய்யாமல் விட்டுவிட்டால் தீட்டில்லாமலிருக்குமா?

கருணாகர சாஸ்திரி.—அவ்விதம் விடுவது சாஸ்திர விரோதம். நீங்கள் உத்தரக்கிரியைகள் செய்தே தீரவேண்டும். அதுவரை தீட்டு போகாது.

கிழவர்.—எவ்விதமேனும் நாளைக்கே விவாகம் நடந்தால் நல்லது.

கருணாகர சாஸ்திரி.—சவம் வீட்டை விட்டு வெளியேறும் மார்க்கம் செய்த பின் அந்தப் பிரயத்தனம் செய்வோம். பந்துக்கள் எல்லோருக்கும் தங்களின் அறுவது விவாக சங்கதி தெரிந்து அருவெருப்பாய் இருக்கிறார்கள். பத்து ரூபாய் செலவுசெய்து சவத்தை எடுத்துச்சென்று தகனம் செய்து வந்தாலன்றி போறவழியுமில்லை.

கிழவர்.—யாருடைய பெண்ணைத் தீர்மானிக்கிறீர்கள்? முதலில் எனக்குக் கொடுக்கச் சம்மதிக்கவேண்டுமே?

கருணாகர சாஸ்திரி.—தங்களுக்குப்பிறகு தங்கள் மனைவிக்கே சகல சொத்துக்களும் என்று எழுதிவைத்து, இப்பொழுதே அவளுக்கும் பாத்தியதையும் உண்டென்று பத்திரம் தயார்செய்துவிட்டால், நானே என் பெண்ணைக் கொடுக்கிறேன். உங்களுக்குக் கொடுப்பதற்குஎனக்குப்பூரணசம்மதம்.

கிழவர்.—தாங்களே மாமனாராக வருகிறீர்களா? மகா பாக்கியம். தங்கள் இஷ்டப்படியே பத்திரம் எழுதி வாருங்கள். நான் கையொப்பம் செய்துவிடுகிறேன். ஆனால் விவாகமாகாவிட்டால் இந்தப் பத்திரம் செல்லாது என்ற நிபந்தனை காணவேண்டும்.

கருணாகர சாஸ்திரி.—ஹரி! ஹரி! அப்படியும் பாதகம் உண்டா? ஈச்வர சாக்ஷியாகச் சொல்கிறேன். திருமாங்கல்யத்தைக் கையில் வைத்துக்கொண்டு விவாக முகூர்த்தத்தில் கையொப்பம் செய்யுங்கள். சம்மதம் தானா?

கிழவர்.—அப்படியொன்றுமில்லை. தங்கள் மனம்போல் நடக்கிறேன். நமக்கும் இதே நிச்சயம். நீர் பிணம் தூக்குபவர்களை சீக்கிரம் அழைத்து வந்து சகல ஏற்பாடுகளும் செய்யும். சீக்கிரம் தொலையட்டும்.

கருணாகர சாஸ்திரி.—நமக்குள் இது ரகசியத்தில் இருக்கட்டும். இதோ இப்பொழுதே வெளியிற் சென்று சகல ஏற்பாடுகளையும் செய்கிறேன்.

(போகிறார்.)

இந்தியாவில் ஸ்திர்களுக்கு ஸர்வ சுதந்தரமும் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். எங்கோ புத்திமான்களில் இரண்டொருவரே அப்படிச் செய்கிறார்கள். மற்றவர்களெல்லோரும் கணவனாகட்டும், பிதாவாகட்டும் நமது கருணாகரசாஸ்திரிகளைப் போல்தான் காணப்படுகிறார்கள். இதற்கு விமோசனம் இல்லையா! "பெண் மார்க்கட்" எப்படியிருக்கிறது பாருங்கள்.

21. குரு சிசுருஷையின் விநோதம்.

சிவய்யா.—இவரிடம் வந்து இத்தனை காலமாயிற்று. 'மேக சந்தேச'த்தில் பத்து சுலோகங்கள் கூட முடியவில்லை. அதற்கு அர்த்தமும் தெரியாது. தெரியாததைக் கேட்டால் வாயில் வந்தபடி நீட்டுகிறார்.

சங்கரய்யா.—அதன் அர்த்தம் நமது உபாத்தியாயருக்கே தெரியாது. ஒரு மாசத்திற்கு முன்பு நானும் இவ்விதமே கேட்டதற்கு குரு திக்காரம் செய்தேனென்றும், ஸர்வ மூடனென்றும் எல்லோரிடம் சொல்ல ஆரம்பித்தார். அதுமுதல் தலையை யாட்டி எந்த விஷயத்துக்கும் நன்றாகத் தெரிந்து கொண்டதுபோல் நடிக்கிறேன்.

சிவய்யா.—பாடம் கற்பியா விட்டாலும், சதா கத்திரிக்காய்ச் செடிகளுக்குத் தண்ணீர் இறைக்கச் சொல்கிறார். பெரிய கஷ்டம்; உன்பாடு மேல்.

சங்கரய்யா.—என்னைப்போல் செய்தால் உனக்கும் வேலையிடார். என்னை ஜலம் இறைக்கச் சொன்னதற்கு யாரும் இல்லாத சமயத்தில் செடிகளிற் பலவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டேன். பிறகு நானே அதைச்செய்தேனென்று தெரிந்து கொண்டு அதுமுதல் எனக்கு இவ்வித வேலைகள் சொல்வதில்லை.

சிவய்யா.—இனி நானும் அவ்விதமே செய்யவேண்டும். வேஷ்டிகளைத் துவைக்கச் சொன்னால் தினம் இரண்டு வேஷ்டிகளைக் கிழித்து வைக்கிறேன். ஜலம் இழுக்கச் சொன்னால் சொம்பைக் கிணற்றில் போடுகிறேன். அதோ குரு வருகிறார்; படிப்பது போல் நடிக்க வேண்டும். கெட்டியாய் வாசி.

(உபாத்தியாயர் வெங்கன்ன சாஸ்திரி வருகிறார்.)

வெங்கன்ன.—ஏண்டா! சிஷ்யர்களே! கத்திரிச் செடிகளுக்குக் களை யெடுக்கச் சொன்னேனே. செய்தீர்களா?

சங்கரய்யா.—சிவய்யா எடுப்பாரென நினைத்தேன்.

சிவய்யா.—சங்கரய்ய எடுப்பானென நினைத்தேன்.

வெங்கன்ன.—மூடாத்மாக்கள். இப்போது குரு சிசுருஷை போய் விட்டது. ஸ்கூலில் வாசிக்கும் பசங்களைப் பார்த்து உங்களுக்கும் கேடு காலம் வந்து விட்டது. குரு சிசுருஷையில் எத்தனை பலம் இருக்கிறது? பதினைந்து நாளைக்கு ஒரு சுலோகம் கூட வாசிக்க நேரமில்லாமல் என் குருவுக்கு நான் உழைத்திருக்கிறேன்.

சங்கரய்யா.—நீங்கள் பலசாலியாகையால் அவ்விதம் உழைத்தீர்கள். எங்களுக்கோ சக்தியில்லை. இயன்றவரை செய்கிறோம். அதோ ராமாராவ் வருகிறான். ஆறுமாத காலத்திற்குள் ஸ்கூலில் அவனுக்கு சமஸ்கிருதம் வந்துவிட்டது. இத்தனை காலமாக உங்களிடம் வாசித்தும் அர்த்தமும் தெரியாது, ஒன்றும் தெரியாது.

வெங்கன்ன.—உங்களுக்குப் படிப்பு மெதுவாக இருந்தாலும் குரு சிசுருஷையின் பலம் எங்கே போகிறது? தாதாத்ரேய ருக்கு சிசுருஷை செய்து கார்த்த வீரியார்ச்சுனன் ஸர்வ சம்பத்தையும் பெற்று சக்கரவர்த்தியாய் விளங்கினான்.

(ராமாராவ் வருகிறான்.)

சங்கரய்யா.—புராணக்கதை யிருக்கட்டும், உங்களிடம் படித்தவர்களெல்லாம் புரோகிதர்களாகி எந்த வீட்டில் என்ன என்று வீதி சுற்றுகிறார்

களே தவிர உத்தியோகம் ஏதாகிலும் செய்ததுண்டா? ஸ்கூலில் வாசித்தவர்களெல்லாம் வித்வான்களாகிறார்கள். பெரிய உத்தியோகங்களிலும் அமர்ந்து கௌரவமாயிருக்கிறார்கள்.

வெங்கன்னா.—இது பெரிய விபரீத புத்தி. கள் சமுத்திரம் இல்லையென்கிறீர்கள்: நெய் சமுத்திரம் இல்லையென்கிறீர்கள். இங்கிலீஷ் வாசிப்பவர்களெல்லாம் ரௌரவாதி நரகத்தில் விழுகிறார்கள்.

ராமராவ்.—புண்யம் கிடைக்குமென்று யாவருக்கும் சொல்லி, அந்த வகையில் துட்டு சம்பாதிக்கும் வழியை நன்றாகக் கண்டு பிடித்தீர்கள். அதைத்தான் உங்கள் சிஷ்யர்களுக்குப் போதிக்கிறீர்களோ? அந்த வித்தைக்காக உங்கள் சிஷ்யர்களிடம் வெகு நன்றாக வேலை வாங்குகிறீர்களய்யா?

வெங்கன்னா—இங்கிலீஷ் வித்தை உன் புத்தியைக் கெடுத்துவிட்டது. பெரியவர், சின்னவர் என்ற மரியாதையே யில்லை. மகான்கள் தெரிவித்திருப்பதைக் கேலி செய்கிறீர்கள். சம்பளம் வாங்கிக்கொண்டு கற்பிப்பதால் உபாத்தியாயர்களெல்லாம் வேலைக்காரர்களாகிறார்கள். சம்பளம் கொடுப்பதால் வித்யார்த்திகள் எஜமான்களாகிறார்கள்.

ராமராவ்.—அப்படியானால் வித்யார்த்திகள் உபாத்தியாயரைச் சிக்ஷிப்பதற்குப் பதிலாக, உபாத்தியாயரே வித்யார்த்திகளைச் சிக்ஷிக்கிறார்களே! அது ஏன்?

வெங்கன்னா.—கழுதை மகனே! உனக்குப் போங்காலம் வந்துவிட்டது. இவ்வித கேள்விகள் என்னைக் கேட்கலாமா?

ராமராவ்.—உமக்கு இந்த மாதுர்யமான பாஷிதங்களும், இந்த விநயாதி ஸத்குணங்களும் குரு சிசுருஷையாலேயே வந்தனபோலும்! கழுதை மகனே என்பது எத்தனை திவ்யமான ஸ்லோகம்; ஆஹா!!

வெங்கன்னா.—அப்பா! நீ எழுந்துபோ. உன்னைப் பார்க்க என் உடம்பு எரிகிறது. உன் தகப்பனுருக்காக நான் பேசாமல் இருக்கிறேனே யல்லாமல், இல்லாவிட்டால்—

ராமராவ்.—கொஞ்சம் சாந்தமடையுங்கள். உங்களுக்குச் செய்யும் சிசுருஷையால் உங்கள் சிஷ்யர்களும் உத்தம குணவான்களானார்கள். எங்கேயோ சுவர் ஏறி அடிபட்டார்களாமே?

சக்கரய்யா.—நமது சுப்பு வீட்டுக்காரரின் தோட்டத்தில் ஸ்வாமியின் உத்தரவுப்படி அவரைக்காய் பறிக்க ரகசியமாய் சிவய்யா சென்றார். உடனே ஆசீர்வாதங்கள் புறப்பட்டது. சிவய்யா சுவர் ஏறிக்குதித்து ஸ்வாமியோடு சந்தின் வழியாய் ஓட, மற்றவர்கள் பிடித்துக்கொண்டு அலங்கார பூஜை செய்வித்து, மெதுவாக ஒத்தடம் கொடுத்து அனுப்பினார்கள்.

வெங்கன்னா.—அடே! கழுதையே! என்னடா குருநிந்தை செய்கிறாய்?

ராமராவ்.—(எழுந்து நடந்துகொண்டே) ஸ்வாமி! உங்கள் சிஷ்யர்கள் உலகம் கொண்டாடத் தக்கவர்களானார்கள். அவரைக்காய் பறிக்கிற வித்தை பேஷ்! நல்ல நல்ல வித்தைகளெல்லாம் கற்பிக்கிறீர்கள்! (போகிறான்.)

வெங்கன்னா.—உன் தந்தையிடம் கூறி உனக்கு நல்ல அப்பளங்கள் வாங்கித் தருகிறேன். குரு சிசுருஷையில்லாத படிப்புதான் உன்னை இவ்விதம் பாழாக்கிற்று.

(திரும்பித் தம் வீட்டுக்குள் போகிறார்.)

22. காக்காவின் கடித விநோதம்.

நான் ஒரு காக்கா. எங்கும் சுலபமாய் சுற்றித்திரிய எனக்கு முடியும். சைக்கில், ரயில் முதலிய ஆரோகணிப்புகளெல்லாம் எனக்குத்தேவையில்லை. எனக்கு மட்டுமல்ல—என் கூட்டத்தாருக்கே தேவையில்லை. மனிதர்கள் தங்களை சுதந்தரஸ்தர்களென்று வீண் பிரமை கொள்கின்றனர். சென்னை, பம்பாய் போன்ற நகரங்களில் அவர்கள் ரஸ்தாவில் எவ்வளவு கவலையுடன் நடந்து செல்கிறார்கள். சற்றே தவறினால் அந்தப்பக்கம் கனவேக மோட்டார் அவர்கள்மீது ஏறிவிடும். ஏறிவிட்டால் என்ன? சர்வலோக சரண்யனான கடவுளின் திருவடிக் கமலங்களைச் சேரவேண்டியதுதான். அதற்குள் இந்தப் பக்கம் மின்ஸார டிராம் வண்டி படக்கென மோதி சடக்கென்று உயிர் அகலச் செய்யும். எங்களுக்கோ எவ்வித கஷ்டமுமில்லை. எங்கும் தாராளமாகப் பறந்து செல்லக்கூடும். தங்குதடையில்லை. தெருக்களின் பெயர் தெரிந்துகொண்டும், பிறரை விசாரித்துக்கொண்டும் போகவேண்டியதில்லை பலவான்கள், செல்வச் சீமான்கள் ஏழடுக்கு மெத்தைகளில், அறுசுவையுண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட வாழ்வதும், ஒரு சோற்றுப்பருக்கையுமே கிடையாமல், இருக்க இல்லமும் இல்லாமல் கோவணாண்டிகளாய் ஏழை ஜனங்கள் நடந்து ஏங்கிச் செல்வதும் ஆன பாரபக்ஷங்கள், பேதங்கள், இரக்கமின்மை, கொடிய சுய நலம் இவைகள் எங்களுக்குக் கிடையா.

காக்கை யுகக்கும் பிணம்.—என்று ஒரு கிழவித்தாய், ஒரு பொக்கை வாய்ப் பாட்டி, மூதாட்டி யொருத்தி எங்களைக் கேவலமாய்ப் பேசினார். பேசட்டும்; அதனால் எங்களுக்குக் குறைந்து போனது ஒன்றுமில்லை. ஆனால் அந்த அம்மை தன் வர்க்கத்தாரின் தவறுதலை மட்டும் எடுத்துக் காட்ட மறந்து போனார். அந்தப் பாட்டியின் வர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்கள் உயிர் இருக்கிற பரியந்தம் ஒரு மனிதனைக் கொத்திக் கொத்தி அவன் சதையை எடுக்காமலே எடுத்துத் தின்று விடுகிறார்கள். மாமியார் மருமகளின் சதையைக் கொத்திக் கொத்தி—சதையை மட்டுமல்ல—அவளுடைய உள்ளத்தைக் கூடக் கொத்திக் கொத்தித் தின்று விடுகிறாள். அந்த மருமகளின் தேக மெங்கும் அந்த கொத்துதலால் புண்ணாகி ரணமாகி விடுகிறது. இந்த வேதனையைச் சகியாமல் அவள் குளம் கிணறுகளில் வீழ்ந்து தன்னுயிரையே போக்கிக்கொள்கிறாள். இப்படியே ஸம்பாதிக்கும் ஆண்மகனொருவன் வீட்டில் இருந்தால், அவனைச் சுற்றிப் பலரும் சூழ்ந்து கொண்டு அவனுக்குப் பலவகையிலும் செலவுகள் வைத்து அவனைக் கொத்திக் கொத்தி உருப்படாமல், மேலோங்க முடியாமல் செய்து விடுகிறார்கள். இன்னும் இப்படியே நெடுக சொல்லிச் செல்லலாம்.

இவர்களைப்போல நாங்கள் உயிருடன் மனிதர்களை வதைத்துக் கொத்தி சதையைக் கவ்வுவதில்லையே. அவர்கள் இறந்து சவமான பிறகே அவர்களைக் கொத்தி யுண்ண வருகிறோம். நாங்கள் கொத்துவதில் அவர்களுக்குத் துன்பமுமில்லை. நஷ்டமுமில்லை. மேலும் பரமபிதாவின் கட்டளைப்படியே, அவரது தூதர்களாக நாங்கள் இருந்து அவரது ஏவலின்படி எங்கள் வேலையைச் செய்ய நாங்கள் வருகிறோம். அதாவது அந்த சவம் நாறி துர்நாற்றம் வீசாமுன்னரே அதன் சதையைக் கொத்தியுண்டு துர்க்கந்தத்தை யகற்றி உலக சுகாதாரத்தைக் காக்க வைக்கிறோம். இப்படி நாங்கள் காக்கிற

படியால் தான் எங்கள் இனத்துக்கு காக்கா என்று பெயராயிற்று. மனிதனை உயிரோடு வதைத்துக் கொத்தியுண்ணும் துரோகிகள் கெட்டவர்களா? அவன் உயிரகன்று சவமான பின்னர் கொத்தியுண்ணும் நாங்கள் கெட்டவர்களா?

நாங்கள் எவருக்குமே சோற்றுக்குப் பாரமாயிருந்துகொண்டு கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. மீந்த எச்சிலுக்கே வருகிறோம். தெருக்களில் எறியப்படும் எச்சிலைச்சட்டிகே காத்து நிற்கிறோம். எச்சிலாயிருப்பினும் ஒரு முறை உண்டால் அந்த விஸ்வாசத்தை என்றைக்கும் நினைக்கிறோம். அந்த வீட்டின் மீதே நன்றியுடனும் சுற்றிச்சுற்றி நிற்கின்றோம். எங்களின் இந்த விஸ்வாசமும் நன்றியும் மானிடர்களுக்கு உண்டா? உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்வோர் எத்தனை பேர்! நன்றாக வாழ்ந்த நாளிலெல்லாம் வந்து வந்து புசித்துவிட்டு, பிறகு அவர்கள் கெட்டுப் போனகாலத்தில் எட்டியே பார்க்காத—ஏனென்றும் கேட்காத துரோகிகள் எத்தனை பேர்? நாங்கள் அப்படி நடக்கின்றோமா?

குழந்தைகளின் கையில் அப்பம், பக்ஷணம் போன்றவை எதாகினும் இருப்பின் அவற்றை நாங்கள் திருடுவதுண்மையே. ஆனால் மானிடவர்க்கத்துள் பந்துக்கள் முதலானோர் திருடுவதற்கு மேலேயா? கல்யாணவீட்டில் எத்தனை திருட்டுகள்—நகைக் களவுகள்? தாயாதித் திருட்டு, ரயில்வேயில் திருட்டு, உத்தியோகஸ்தர்களின் திருட்டு, தனக்கு உணவளிக்கும் எஜமானனிடத்திலேயே திருட்டு—இன்னும் எத்தனை எத்தனையோ!

வற்றல் முதலியவைகளை வெயிலில் காயவைத்திருந்தால் எங்களைக் கண்டதும் துரத்துகிறார்கள். ஏதோ இரண்டொன்றை நாங்கள் பொறுக்கிக் கொண்டுபோவதில் என்ன நஷ்டம் ஏற்பட்டு விடுமோ? துரோகிகளான பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் மட்டும் வாரிவாரிக் கொட்டுகிறார்களே; எங்களுக்கு சற்று இட்டால் குறைந்துபோய்விடுமா?

“தூங்கும் காக்கையும் கூட்டமாகவே இருக்கும்” என்பது ஒரு பழமொழி. காக்கைக்கு ஐந்து குணம் என்று ஹிந்துக்களில் ஒரு முதுமொழியும் நெடுநாளாக வழங்கி வருகிறது. அந்த ஐந்து குணங்களாவன:—

1. சுற்றந் தழுவுதல்:—அதாவது எங்கள் இனத்தில் எதாவது வருந்திக் கூவினால், அதைக் கேட்டவுடனே நூற்றுக்கணக்காகப் பறந்தோடி வந்து அதற்கு உதவி செய்கிறோம். எங்கள் வர்க்கத்துள் ஒன்று இறந்தால் எல்லோருமே அங்கு வந்து கூடிக்கொள்கிறோம். உண்மையாகவே துக்கித்து அலறுகிறோம். மானிடவர்க்கத்தினரோ பிறர் வீட்டில் நேர்ந்த மரணத்துக்கு ஒப்புக்குத் துக்கம் கொண்டாட வருகிறார்கள். ஏழை வீடாயிருப்பின், ஏதேனும் மனஸ்தாபமிருப்பின்—அதுகூட வருவதில்லை. மானுடச்சாதி அவ்வளவுக்குக் கெட்டுப்போய் விட்டது.

2. இனத்தோடு உண்ணுதல்:—எங்களுக்கு எதாவது இரை கிடைத்தால், அதைத் தன்னந்தனியே புசியாமல் எங்கள் இனத்தை யெல்லாம் கூவி யழைத்துக்கொண்டு விருந்தோடு உண்ணுகிறோம். காகம் உறவு கலந்துண்ணும். மருந்தேயாயினும் விருந்தோடுண்போம். அது எங்கள் இயற்கை. மானிடர்க்குள் ஒருவர் வீட்டுக்கொருவர் வந்துவிட்டால், ஐயோ! வந்து விட்டார்களே வட்டித்துக் கொட்டவேண்டுமே என்று வயிறெரிவோருக்குக் கணக்கு உண்டா? மேலுக்கு இனிக்கப் பேசி, அவ்வளவோடு அனுப்பிவிடும் உபசாரப் பிசாசுகளுக்கு எண்ணிக்கை யேது? நாங்கள் ஈனப் பிறவிகளன்று.

3. மக்களுக்கு உணவு ஊட்டுதல்:—தாய்ப்பறவை தான் வெளியே போய் உணவு தேடி வந்து தன் மக்களை வாயைத் திறக்கச்செய்து அதற்குள் உணவையிட்டுப் போஷிக்கிறது. காக்கைக்குந் தன்குஞ்சு பொன்குஞ்சு என்ற பழமொழி யொன்றே எங்களின் பிள்ளைவளர்ப்பு விஷயத்துக்குப் போதும். மானிடச்சாதி இதிலும் அபாசம்! பெற்ற தாய் போனால், பெற்ற அப்பன் சிற்றப்பன் என்ற பழமொழி ஏன் வழங்குகிறது? மாற்றாந்தாயின் கொடுமையால் மானிடக் குழவிகள் படும்பாடு கொஞ்சமா?

4. அயல் பறவைகளுக்குக் கூட்டில் இடங்கொடுத்துக் காத்தல்:—அதாவது கூடுகட்டத் தெரியாத குயில் முதலான பறவைகளுக்கு எங்கள் கூட்டில் முட்டையிட இடங்கொடுத்து நாங்களே அவயங்காத்துப் பேணுகிறோம். மானிடச்சாதிக்கு இந்தக் குணம் உண்டா? ஒரு பெண்ணின் கணவன் கண்மூடிக் கொண்டால் அப்பெண்ணை அநாதையாய் சந்தி சிரிக்க விடுகிற சண்டாளர்கள் எத்தனை பேர்?

5. காமப்பைத்திய மின்மை:—நாங்கள் ஒரே தரம் முட்டையிட்டு, அவ்வளவோடு ஆசையொழிந்து, ஆயுள் குறையாமல் நெடுக்காலம் வாழ்ந்து சிரஞ்சீவி என்கிற பெயரையும் பெறுகிறோம். ஒரு காகம் ஒரே முட்டையிடுவதினாலேயே; ஒரே பிள்ளை பெற்றவளுக்குக் காக்கை மலடு என்று பெயர் வழங்கலாயிற்று. மானுடச் சாதியில் இப்படி உண்டா? புருடர்களுக்கு எப்போதும் காமம் நிறைந்த கண்கள் தான். மேலும் இங்கிலாந்திலே ஒருவன் பிறந்து விவாகம் செய்து கொள்ளுமுன், இந்தியாவிலே ஒரு மனிதக்குஞ்சு பிறந்து வளர்ந்து, குட்டி போட்டுச் செத்துப்போகின்றது பின்னும் ஒரு விஷயம்:—

கேளிவிலாஸ ரம்யம்—பிரபஞ்ச விருத்தி—எங்களில் எத்தனையோ அந்தரங்கமாக அமைந்துளது. மானுடச் சாதியிலோ, ஒரு நங்கை யுவதித்தன்மையுற்றதற்கும், பிறகு விவாகத்திற்கும், பிறகு சாந்தி விசேஷத்திற்கும் ஒவ்வொன்றுக்குமே நாடெங்கணும் பறைகொட்டி முழக்கிடுவார். அச்சோ! என்ன பேதமை! இந்தச் சாதிக்கு மானம் நாணம் இல்லையா?

பிரதிதினமும் 'வைகறைத் துயிலெழு' என்றபடி அதிகாலையில் எழுந்து கூவி யாவரையும் எழுப்புகிறோம். மற்றவர்கள் எழுப்பினும் எழாமல் கிடக்கும் தூங்குமூஞ்சிகள் எத்தனை பேர்? பிரதி நித்யமும் நாங்கள் ஸ்நானம் தவறோம். மானிடச்சாதிக்குள் வாரத்தொருமுறை குளிக்கும் சோம்பேரிகளுக்குக் கணக்கேது? இரவு முழுதும் காமவிகாரங் கொண்டு கழுதை போற் புரண்டு காலையில் ஸ்நானம் செய்யாமல் வெளியேறுவோர், கோயிலுக்குச் செல்லுவோர் எத்தனை பேர்?

நாங்கள் குடியிருக்கும் வீடு எத்தனையோ சுகாதாரங்கொண்டது. ஐயோ! மானிடர்கள் எத்தனை அசங்கிதங்களுக்கு நடுவிலே குடியிருக்கிறார்கள்? அதிலும் நகரவாசங்களின் குடியிருப்பு அலங்கோலங்களை அளவிட்டுரைக்க முடியாது.

காக்கை கருநிறம் என்று பழிக்கிறார்கள். அதனால் எங்களுக்கு இகழ்ச்சியொன்றுமில்லை. ஆனால் அழகிய முகத்தை வைத்துக்கொண்டு எத்தனை மனிதர்கள் வஞ்சகர்களா யிருக்கிறார்கள்? அவர்களின் அழகில் மயங்கி எத்தனை பேர் மோசம் போனார்கள். விசேஷித்த அழகினிடத்தே துன்மார்க்கமும், வஞ்சனையும், குடிகெடுத்தலும் தானாகவே வந்து புகுந்து கொள்கின்றன. இந்த நிலையில் எங்களின் கருமையே மேல்.

"ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்" என்று எங்களின் ஒற்றுமையைப் பழிக்கிறார்கள். மானிடர்களுக்குத் தங்களது ஒற்றுமையின் பவிசு—அலங்கோலம் தெரியவில்லைபோலும்! அத்தனை மானிட ஐக்கியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் ஐரோப்பிய மகா யுத்தம் ஏன் நடக்கிறது? மானிடர்கள் வசிக்கும் எந்த இடங்களிலாயினும் சமாதானமுண்டா? இப்பொழுது உலகமெங்குமே பெருங்குழப்பமாய்ப் புகைந்துகொண்டிருக்கிறது. ஒற்றுமையிருந்து நின்றால் சமாதான பங்கமேன்? குழப்பமேன்? வீட்டிற்குள்ளேயாயினும் ஒற்றுமை நிலவுகின்றதா?

பின் எந்த இனத்தில்தான் மானிடவர்க்கம் சிலாக்கியமோ தெரியவில்லை. எங்கள் வர்க்கத்தின் ஸ்திரீபுருஷ ஸமத்வமும், பெண்கட்கு விடுதலையும் சுதந்தரமும் உண்டு. மானிடர்களோ தங்களின் பெண்களை அடிமைகளாக நடத்துகிறார்கள். தங்களுக்குள் இவ்வளவு ஆபாசமூட்டைகளை வைத்துக்கொண்டு எங்களைப் பழிக்க வருகிறார்களே இந்த மானிடர்கள்! அதுதான் எனக்குப் பெருநகை விளைக்கின்றது. இச்சொற்களால் ஏதேனும் பயன் உண்டாமா?

காக்கா.

23. ராதா காந்தருடைய நட்பின் விநோதம்.

ராதா காந்த பாபு ஒரு வாராந்தப் பத்திரிகையின் பத்திராதிபர். ஸ்வாமி விவேகாநந்தரின் உபந்யாசங்களையெல்லாம் வங்கபாஷையில் அழகு பெற மொழிபெயர்த்து பல இனிய குறிப்புகளாகத் தமது பத்திரிகையில் வெளியிட்டு வந்ததில் அவருக்கு நல்ல பேர் உண்டாயிற்று. பல நண்பர்களும் நேசமாயினர். ஒருநாள் ஒரு நண்பர் அவரிடம் தமக்கு நல்லதாக ஒரு டைம்பீஸ் வேண்டுமென்றார். அதன் கிரயம் யாதென்று வினவி ரூபாய் மூன்றரையும் ராதா காந்தரிடம் தந்தார். ராதா காந்தர் தமது பத்திரிகையில் விளம்பரம் செய்கிற ஒரு கடியார வியாபாரியிடம் தமது வேலைக்காரனை யனுப்பினார். அவன் இரண்டு ரூபாயில் ஒரு டைம்பீஸ் வாங்கி வந்து தந்தான். ராதா காந்தர் தமது நண்பரை எதிர் பார்த்து நின்றார்.

வேலைக்காரன் ஆபீஸின் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். ராதா காந்தரின் நண்பரை யவன் கண்டதும், எஜமானரிடம் டைம்பீஸ் வாங்கச் சொன்னீர்களா என்றான். ஆம் என, இவன், நான் வாங்கிவந்துவிட்டேன், விலை ரூபா இரண்டு என்றும் கூறினான். பிறகு நண்பர் பத்திராதிபரிடம் சென்றார். உடனே ராதா காந்தர் அவருக்கு வந்தனமளித்து டைம்பீஸை முகமலர்ச்சியுடன் அவர் கையில் தந்தார். விலை என்னவென நண்பர் கேட்க, சரியாக மூன்றரை ரூபாய்தான், அப்படி நான் பிசகாக ஒருபோதும் சொல்லமாட்டேன் என்றார் ராதாகாந்தர். நண்பர் உள்ளுக்கு வருத்தத்துடன் இந்த 1½ ரூபாய்க்காகவா நேசத்தன்மையை மறந்து

பொய் கூறவேண்டும் என்று தம் மனத்திற்குள் எண்ணியவராய் வெளியே சென்று விட்டார்.

பிறகு வேலைக்காரன் எஜமானரிடம் சென்றான். ராதா காந்தர் அவனைப் பார்த்து நீ அவரிடம் டைம்பீஸின் விலையைக் கூறினாயா என்று கேட்க, ஆமாங்க ஸ்வாமி, அவர் கேட்டார் நான் சொன்னேன் என்றான்! எவ்வளவு விலை சொன்னாய் என, விலை என்ன, சரியாக வாங்கின விலையைச் சொன்னேன். ரூபாய் இரண்டு என்று சொன்னேன், "அவர் கேட்டார் நான் சொன்னேன்"—என்றான். தனது நண்பர் முகத்தை சுளித்துக் கொண்டு ஒரு மாதிரியாக எழுந்து போனதின் அருத்தம் இப்போது ராதா காந்தருக்கு விளங்கி விட்டது. டைம்பீஸின் யதார்த்த விலையை அவர் கேட்டறிந்து விட்டதால், நாம் 3½ ரூபாய் கூறினதை அவர் நம்பவில்லை. மேலும் நம்மிடம் அருசையும் கொண்டு விட்டார். இந்த அற்ப விஷயம் பெரிய நம்பிக்கையை அடியோடு ஸர்வநாசம் செய்து விட்டது என்று சஞ்சலமடைந்தார்.

ராதாகாந்தர்.—ஏன் அவரிடம் அப்படிச் சொன்னாய்?

வேலைக்காரன்.—"அவர் கேட்டார் நான் சொன்னேன்."

ராதா காந்தர்.—மூன்றரை ரூபாய் என்று ஏன் சொல்லித் தொலைக்கக்கூடாது?

வேலைக்காரன்—வாங்கின விலையை அப்படியே சொன்னேன். "அவர் கேட்டார் நான் சொன்னேன்."

சரிதான் போ மடையா!—என்று தமது வேலைக்காரனைச் சினந்து அவனை வெளியே போகும்படி கூறி தமது ஆபீஸ் ரூமின் (Office Room) கதவை மூடிக்கொண்டார். வேலைக்காரன் வெகு வருத்தத்தோடும் பழைய படி திண்ணையில் உட்கார்ந்தான். வெளியே போயிருந்த நண்பர் திரும்ப அங்கு வந்து சேர்ந்தார். வேலைக்காரன் அழுதுகொண்டிருந்தான். காரணம் விசாரித்தார்.

வேலைக்காரன்.—"அவர் கேட்டார் நான் சொன்னேன்." டைம்பீஸின் விலை ரூபா இரண்டு என்று உம்மிடம் கூறினதாகச் சொன்னேன். ஏன் அப்படிச் சொன்னாய், 3½ ரூபாய் என்று சொல்லி யிருக்கக்கூடாதா என்று என்னைச் சினந்தார். நான் என்செய்வேன், "அவர் கேட்டார். நான் சொன்னேன்" என்றேன். என்னை வைது வெளியில் தள்ளினார்.

அழுதுகொண்டிருந்த வேலைக்காரனைச் சமாதானப்படுத்தி அவன் கையில் ஒரு ரூபாயைத் தந்துவிட்டு, மறுபடியும் தமது நண்பரிடம் சென்றார். ராதா காந்தர் தமது முகத்தைச் சரியாக ஒழுங்கு படுத்திக்கொண்டு புன்முறுவலோடும் மிகு சரஸமாய்ப் பேசத் தொடங்கினார். அன்பரே! தாங்களோ கிராமவாசி, எதையும் நம்பி விடுகிறீர்கள். ஒரு டைம்பீஸின் உண்மையான விலையை நீங்கள் தெரிந்துகொள்ள முடியவில்லையே. இதற்கே இப்படி யென்றால் உங்களின் மற்ற வியாபாரங்கள் கூட இப்படித்தான் நீங்கள் ஏமாறுவதாக இருக்கும் என்று கலகலவென வார்த்தைகளைக் கொட்டினார்.

நண்பர்.—நான் வியாபாரத்தில் அன்னியர்களிடம் பழகும்போது பல கடை சுற்றி, ஒரு கடையில் நல்ல சரக்காக வாங்குவதே என் வழக்கம். ஒரு கடையில் விலை கேட்டதும் உடனே வாங்கி விடுவது கிடையாது. பத்து

கடைகளில் கேட்டு, 15, கடைகளில் சரக்கின் தாரதம்மியம் பார்த்து 16-வது கடையில் வாங்குவதே என் வழக்கம். ஆனால் உயிருக்குயிராக நான் நேசித்துள்ள நண்பர்களிடம் வியாபாரம் கொள்ளும்போது மட்டும், அவர்கள் யதார்த்தவாதிகளென நான் நம்பிவிட்டிருப்பதால் இரண்டாம் பேச்சு கேட்பதில்லை. அவர்கள் சொல்லிய விலையைப் பதில் பேசாமல் கொடுத்துவிடுவேன். இதில் இதுவரை நான் மோசம்போனதில்லை.

இதற்குமேல் ஏகுத வார்த்தைகள் எல்லை கடந்து வெளிப்பட்டு விடுமோவென நண்பர் எச்சரிக்கை கொண்டவராய்த் தமது ஆத்திரப்படுகிற மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ள எண்ணி அற்ப சங்கைக்குச் செல்கிறவர் போல் பாவனை காட்டி—'இதோ வந்து விட்டேன்'—என்று கீழே இறங்கிச்சென்றார். அவர் அப்படிச் சென்றதும் வேலைக்காரன் ராதா காந்தரிடம் வந்தான்.

ராதா காந்தர்.—என்னடா மடையா? எங்கே வந்தாய்?

வேலைக்காரன்.—"அவர் கேட்டார் நான் சொன்னேன்."

ராதா காந்தர்.—என்னடா சனியன்! அவர் என்ன கேட்டார்? நீ என்ன சொன்னாய்?

வேலைக்காரன்.—ஏன் அழுகிறாய் என்று கேட்டார். எஜமானுங்கோ 3½ ரூபா என்று என் சொல்லித் தொலைக்கக் கூடாதென்றும், 2—ரூபாய் விலை என்று ஏன் சொன்னாய் என்றும் என்னை வைதார் என்று அவரிடம் கூறினேன். அவர் ஒரு ரூபா எனக்குத் தந்து சமாதானம் செய்தார். "அவர் கேட்டார் நான் சொன்னேன்."

ராதா காந்தர்.—எனக்கென்று எங்கிருந்தடா எமனாக முளைத்தாய்? சீச்சீ! வெளியே செல் என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். இரண்டு அடியும் முதுகில் விழுந்தது.

வேலைக்காரன் கீழே இறங்கிச் சென்றான். உடனே நண்பர் எதிர்ப் பட்டார். வேலைக்காரன் மீது பரிதாபம் கொண்டார். மறுபடியும் தமது நண்பரிடம் வந்து உட்கார்ந்தார்.

ராதா காந்தர்.—என் பிரிய நேசரே! டைம்பீஸின் விலை வெளியூர்களில் 3½ ரூபாய் ஆனால் தலைமைப் பட்டணமாகிய இங்கு 2½ ரூபாய். நமக்கு மிகவும் வேண்டிய வியாபாரியானதால் ரூபாய் இரண்டுக்கே தந்தான். இதோ அந்த வியாபாரியின் ரசீதைப் பாருங்கள் என்று கூறி, பாக்கி ரூபாய் ஒன்றரையும் அவர் கையில் கொடுக்கப் போனார்.

நண்பர்.—நான் ஒருவரிடம் கொடுத்த பிறகு மறுபடியும் அதைப் பெறுகிற வழக்கமில்லை. ஒருவருக்குக் கடன் தந்தாலும், கடன் தந்தது போலக் காண்பித்துக் கொள்வதே தவிர, அப்பணம் கைக்கு வந்ததும் திரும்பவும் அவர்களிடமே தந்து அவர்களின் நாணயத்தைப் பரீக்ஷிக்கவே கடன் தந்ததுபோல் அபிநயித்தேனென்று கூறி அனுப்பி விடுவதே என் வழக்கம். மறுபடியும் அதை நான் வாங்கிக்கொள்கிற வழக்கமில்லை. தங்களுக்குப் பிரியமானால் அந்தப் பாக்கி ரூபாயை உங்கள் வேலைக்காரனுக்குக் கொடுத்து விடுங்கள்.

ராதா காந்தர் பதில் பேச வழியில்லை. நண்பரும் புறப்பட்டு ஊர் சென்றார். ராதா காந்தர் தமது பத்திரிகைக்கு ஒரு உயர்தரமான அச்சுக் கூடம் ஏற்படுத்த எண்ணி ஒரு அச்சாபீஸை விலைக்குப் பேசி 500-ரூபாய்

முன்பணமும் தந்திருந்தார். பாக்கி மூவாயிரம் ரூபாய் தரவேண்டும். அதை இந்த நண்பர் கடனாகத் தருவதாகக் கூறி அதற்காகவே பட்டணத்திற்கும் பணத்தோடு வந்திருந்தார். ரிஜிஸ்தரர் ஆபீஸில் பணத்தைச் செலுத்திவிட ஏற்பாடாயிருந்தது. அந்தத் தவணை தான் நாளைய தினமாகும். ஊர் போன நண்பரிடமிருந்து ஒரு சமாச்சாரமும் வரவில்லை. எழுதின கடிதங்களுக்கும் பதில் காணோம். தந்தி கொடுத்தார். அதற்கும் விடை இல்லை. என்ன செய்கிறதென்று கலக்கத்தோடும் நின்றார். அவரது வேலைக்காரனும் இப்போது அங்கு இல்லை. அவன் சென்ற இடமும் தெரியவில்லை.

பொழுது புலர்ந்தது. இன்று அவசியம் பணம் கட்டித்தீரவேண்டும். தபாற்காரனையும் வண்டியையும் எதிர் பார்த்து நின்றார். குறித்த நேரத்தில் தபால்கள் கைக்குக் கிடைத்தன. அவசரமாய் ஒரு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். பின் வருமாறு இருந்தது.

அன்புள்ள நண்பருக்கு,

உங்களை நண்பரெனக் கூறவும் மனம் கூசுகின்றது. ஒரு டைம்பீசுக்காக இத்தனைப் பொய் மொழிகளையும், வஞ்சக அபிநயனங்களையும் ஏன் செய்யவேண்டுமோ? ஒன்றரை ரூபாய் லாபத்தைப் பெரிதாகப் பாராட்டினீர்கள். நட்பைக் கவனித்தீர்களில்லை. அந்த எளிய வேலைக்காரனையும் அடித்துத் துரத்தினீர்கள். இதிலேயே தங்களின் நாணயம் தெரிகின்றது. பட்டணத்துக்குத் தூரமான கிராமத்தில் நான் வசிப்பதால், உங்களைக் கடிதமூலமாக மட்டும் அறிந்து அவ்வளவில் மகா சத்தியவந்தரென்றும் நம்பினேன்.

தங்களின் குடும்ப விஷயங்களும் தெரிந்துகொண்டேன். தங்களின் மூத்த மனைவியினது குமாரனைப் பத்து வயதிலேயே உமது இளைய மனைவியின் சொற்கேட்டு வீட்டைவிட்டுத் துரத்திவிட்டீர்கள். அவன் இன்னும் ஜீவித்திருக்கிறான் என்பதைக்கேட்க நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உமது வேலைக்காரன் தனது சொற்ப சம்பளத்தில் உமது குமாரனைக் கண்ணுக்குக் காணாத இடத்தில் கொண்டுபோய்விட்டு தர்மப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து அவனுக்கு வேண்டிய செலவுகளையும் இதுவரை ரகசியத்தில் செய்து வந்திருக்கிறான்.

உமது மூத்தமனைவி உமது வேலைக்காரனிடம் தான் குழந்தையை ஒப்பித்துவிட்டுப் போயிற்றும். படிப்பில்லாத அந்த வேலைக்காரன் தனது கடமையை இவ்வளவு தூரம் சரியாக நடத்தியிருக்கிறான். ஸ்வாமி விவேகாநந்தரின் உபன்யாசங்களை மொழிபெயர்க்கும் உமக்கு அந்த வேலைக்காரனுக்கு இருந்த கடமையின் பொறுப்புகூட ஏற்படாமற் போய்விட்டது. நீர் படித்த படிப்புக்கு இதுதானா பயன்?

இன்று நானும் உமது வேலைக்காரனுமாக புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகப் பிரயாணப்பட்டு விட்டோம். ஆகவே என்னைக் காண முடியாது. உமது முகத்தில் என்றும் விழிக்கப்படாதென்பது என் சபதம். தனது புத்தி வன்மையால் பி. ஏ. பரீக்ஷை வரையும் தேறிய உமது குமாரனிடம் உமக்குத் தர இருந்த 3000 ரூபாயையும் கொடுத்து மேல்

படிப்பு படிக்கும்படியாக இங்கிலாந்துக்கு நேற்றைய கப்பலில் அனுப்பி விட்டேன். உமது மனமே உம்மை வாள்போல் அறுக்கட்டும். உமது குமாரனுக்கு நான் செய்த உதவி உமது எதிரிக்குச் செய்ததுபோல் உமக்குத் தோற்றும்.

நர்மலா குமாரராய்.

ராதா காந்தர் இக்கடிதத்தைப் பார்த்து வயிறு எரிந்தார். அவரது இளைய மனைவியோ அந்தத் தடிப்பயல் இன்னுமா பிழைத்திருக்கிறான். நாளை சொத்துக்கும் கோர்ட்டு ஏறுவான். ஊரில் வருகிற வாந்திபேதி அவனுக்கு வரவில்லையே. கல்லுப் பிள்ளையார்போல் இன்னும் இருக்கிறானே என்று ஆத்திரப்படலானாள். புது அச்சாபீஸ் யோசனையும் அவ்வளவில் நின்றது. இவ்வளவுக்கும் ஒரு டைம்பீஸ் கடியாரமா காரணம்—என்று நினைத்தார் ராதா காந்த பாபு. ஒரு அற்ப விஷயத்தில் பெரிய நட்பு—உறவு—பிரிந்து விடுகிறது.

> நட்பில் நயவஞ்சகம், ஏமாற்றுவித்தை, இனிக்கப்பேசி மோசம் செய்தல் இவை கூடாது. ஒரு அற்பமோச வஞ்சகமும் பெரிய நஷ்டத்தை யுண்டுபண்ணிவிடும். ஒரு காசுக்குப் போய் சொன்னவனும் சரி, நூறு ரூபாய்க்குப் போய் சொன்னவனும் சரி, இருவரும் ஒன்றே.

பிரபஞ்ச விலாஸம்.

விருந்தாளி.—வீட்டுக்கு வருகிற விருந்தாளிக்கு வீட்டுக்காரன் படுகிற கஷ்டம் தெரிகிறதில்லை. அவன் ஸந்தோஷத்துடனும் டம்பத்துடனும் பேசுகிறான். வீட்டுக்காரனோ தன் சங்கடத்தை யெல்லாம் மறைத்து வெளிக்கு சிரிப்பு முகமாக நிற்கிறான். விருந்தாளியை உபசரிக்கக்கூட அந்த சமயத்தில் அவனிடம் பணம் இல்லாமலிருக்கக்கூடும்.

எதைச் செய்வது?—வீட்டில் யாராவது அதிகமான வியாதிப் படுக்கையிலிருந்தால் அந்த சமயத்தில்தான் விருந்துக்காரர்கள் வந்து விடுகிறார்கள். விருந்து தான் செய்து தொலைப்பதா? வியாதிக்காரனுக்கு மருந்து தான் கொடுப்பதா? எதைச் செய்வது?

பந்துக்கள்.—பந்துக்களுக்குத் தன் இனத்தான் படுங் கஷ்டம் தெரிகிறதேயில்லை. தாராளமாகப் பல நாள்வரை அவன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு சட்ட வட்டமாய் சாப்பிடுகிறார்கள். அவன் படுங் கஷ்டத்திற்குப் பரிதாபமாவது அநுதாபமாவது காட்டுகிறார்களா? சண்டைசச்சரவு இன்றி அவர்கள் புறப்பட்டுப் போனால் அதுவே பெரிய லாபம்.

மனோராஜ்யம்.—கல்யாணப் பெண்ணே இன்னும் உறுதிப்படவில்லை அதற்குள் திருமணப் பத்திரிகை என்னென்ன கண்டு அச்சிடுகிறதென்றும், சோபன அறை எப்படிச் சிங்காரிக்கிற தென்றும், விவாககாலத்திற்கு மல்லிகைப்பூ அகப்படாதே யென்றும் யோசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடமாமா

(Registered.)

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

"மாமா"வுக்கு மதுரைவீரசாமி பிரஸன்னம்.



சரஸத்திலும் விரசத்திலும் எல்லாவற்றிலும் சாமர்த்தியமுள்ள என் அகடவிகட அசகாயக்குட்டிகளே! கேட்டீர்களா சங்கதி! இனி என்னவாகுமோ, எப்படியாகுமோ, எவ்விதம் முடியுமோ, எவ்வாறு டங்காகிழியுமோ—அது ஆண்டவனுக்கே வெளிச்சம். சங்கதி என்னவென்கிறீர்களோ? அட ஈஸ்வரா! 'தான் தின்னத் தவிடு இல்லையாம், பங்குக்கொரு பன்றி வளர்த்தானும்' என்ற மாதிரியாக, 'அடியென்பதற்குப் பெண்ஜாதி யில்லையாம், பெண் எத்தனை, பிள்ளை யெத்தனை யென்றானும்' என்பதுபோல,. 'அயல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி யிருப்பேன்' என்ற நிலையிலே, அந்த மதுபானக்குடி என்ன போடு போடுகிறதப்பா என்று நினைத்துக்கொண்டே விகடமாமா வெளியே புறப்பட்டேன். போன மாசத்துச் சம்பளம் பெட்டியிலிருக்குது, இந்த மாசத்துச் சம்பளம் ஜேபியிலிருக்குது, நத்துபண்ணி போட்டுக்கோ புலாக்குப்பண்ணி போட்டுக்கோ, மீந்த பணத்துக்குத் தங்கமே மிஞ்சிபண்ணி போட்டுக்கோடி" என்று தங்கப்பாட்டைப் பாடிக்கொண்டு 'மாமா' தெருவு வீதி வழியே ரோட்டில் வருகிறபோது, மதுரை வீரசாமி எதிர்ப்பட்டு அப்படியே மாமாவைக் கட்டிக்கொண்டு கதறினார். மாமாவும் திகைத்துப்போய் அட ஆண்டவனே! சாராய தெய்வமான உம்மை அல்லாட்டத்தில் விட்டுவிட்டது யார்? நீர் கொண்டாணடித்துக்கொண்டு கிடந்தவராயிற்றே; 'எருது நோயறியாத காக்கை' யாயிற்றே; 'தன்புத்தி சுகம், பிறர் புத்தி விநாசம், ஸ்திரீபுத்தி பிராளயம்' என்பதாய் எதிலேனும் புத்தியை விட்டுக் கொடுத்து அறிவு மயங்கினீரா என்று மாமா கேட்கவே, எடுத்துக்கொண்டாரையா தன் அதனப் பிரசங்கத்தை! அதை யப்படியே இங்கு கொட்டி முழக்கி விடுகிறேன். குந்திக்கொண்டு பொடி மூக்கு சிந்திக்கொண்டு கேளுங்கள்.

அதெல்லாமல்லடா என் விகடமாமா! அதற்கெல்லாம் நான் கனைக்கிற பேர்வழியா? 'வேடிக்கை காட்டுகிறேன் பாராக்கில்லாமல் பார்' என்று காட்டிக்கொண்டு ஒருவர் தோன்றியிருக்கிறார். 'மழை சந்தில் நனையாது வந்தேன்' என்கிற அசாத்திய சாமர்த்தியக்காரர்! ஈரைப்பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்கிவிடும் பெரிய சூரர்! ஒரு ஊரென்றில்லாமல், ஒரு பதியென்றில்லாமல், ஒரு ஜாதியென்றில்லாமல், ஒரு ஜமாத் என்றில்லாமல், ஒரு குலமென்றில்லாமல், ஒரு கோத்திரமென்றில்லாமல், ஒரு மதமென்றில்லாமல், ஒரு மார்க்கமென்றில்லாமல்,

ஒரு பெரியோரென்றில்லாமல், ஒரு சிறியோரென்றில்லாமல், ஒரு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றில்லாமல், ஒரு படிப்பாளி யென்றில்லாமல், ஒரு பாமரக்கார னென்றில்லாமல், ஒரு பணக்காரன்—ஏழை என்றில்லாமல் எல்லா மனிதருமே அவரைத் தூக்கி வைத்துக்கொண்டு கும்மாளம் போடுகிறார்கள். அவர்தான் யாரென்றாலோ, அவர் பேர்தான் என்ன வென்றாலோ அவர்தானடா மகாத்மா காந்தி! தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை' யென்பதாய், மதுபானமகத்துவ மறியாமல் 'உன்னையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்' என்று கள், சாராயக்குடி கூடாதென்று அவரும் கட்டத் தொடங்கிவிட்டார். இவருக்கு வேறு எந்த சரக்கும் அகப்படவில்லையா? ஐயோ! மதுபான அமிர்தத்தை நிந்திக்கிறாரே! ஐயோ! அது பெரிய பாவமாச்சுதே! 'பிச்சை யிட்டதாம் பெருமாள், அதைப் பிடுங்கித் தின்னுதாம் அநுமார்' என்பதாக சர்க்கார் சாமியே சகல சௌகரியங்களும் செய்வித்துக் குடிப்பதற்கு ஒதுக்கிடமும் தேடிக் கொடுத்திருக்க, நடுவே இவர் வந்து கோணங்கி யாட்டமாடிக் கெடுக்கிறாரே! மதுபான மகத்துவத்தை யவர் கண்டாரா?

கால்குடி, அரைக்குடி, முக்கால் குடி, முழுக்குடி, காலைக்குடி, மாலைக் குடி, சந்திக்குடி, மணக்குடி, பிணக் குடி, தேர்குடி, திருவிழாக்குடி, அய்யாகுடி. அம்மாகுடி, ஆசைக்குடி, நேசக்குடி, மோசக்குடி, பிரதர்குடி, மருந்துக்குடு, விருந்துகுடி, யோகக் குடி, சும்மாகுடி, நாணயக்குடி, நாகரீகக்குடி—இன்னும் எண்ணி முடியாத குடிகளாயிற்றே! சாராயத்தை வார்த்தநுப் பூராயத்தைக் கேளென்பார்களே! இந்தக் கள் சாராயத்தின் பூராயமோ வெகு புராதனம்! இது நேற்று இன்று முளைத்ததல்ல. என் தாதாவுக்குத் தாதா, 'அவங்க தாதாவுக்குத் தாதா, ராமாயண பாரத யுகங்களுக்கு முன் யுகத்திலிருந்து வழங்கிவருகிறதாயிற்றே! இன்னும் மனுஷரே யல்லாமல் தேவர்களும் கூட இதை உண்டு களித்துக்கேட்ட வரமெல்லாம் கொடுத்தார்களே! 'குடியாதவீடு விடியாது' என்ற பெரியோர்களுடைய அமிர்தவாக்குக்கு அசார்த்தகாலம் வந்து சேர்ந்து கொள்ளும்போல் தோனுகிறதே! என்ன செய்கிறதடா மாமா! இந்த ஏக்கமே மிஞ்சி எனக்குத் தூக்கம் பிடிக்க மாட்டேனென்கிறதே! இந்திராதி தேவர்கள் முதல் பிரம்மாதி முனிவர்கள் வரையில் தங்கள் வல்லமைகளை யெல்லாம் கொண்டு ஆராய்ந்து பிராய்ந்து அருமருந்து போலக் கண்டு பிடித்த (அராக்கு) சாராயம் என்கிற தேவகஷாயத்தையும் பழிக்கலாமோ?

ஆதிகாலத்துத் தெய்வங்களாகிய இந்திரன், அக்கினி, யமன், வாயு, சோமன் முதலானவர்களுக் கெல்லாம் எதிரில் வைத்து, இந்திரனே! இந்த சோமபானத்தை நீ உட்கொள்வாயாக! (5-ம் சூக்தம்.) இந்திரனே! நீ தாகம் கொண்ட மான்போல் இந்த பானத்தை யுட்கொள்! (16ம் சூக்தம்.) பிரம்மாண்ட உருவமுடைய அக்கினி பகவானே! பானம் பண்ணி உன்னுடைய உதரத்தை விர்த்தியாக்கு! (104-ம் சூக்தம்.) இந்திரன் களியாட்டுக் கொள்வதற்காகச் சோமபானம் பண்ணுகிறான்! (18-ம் சூக்தம்) அலர்ந்த முகமுடைய வாயுபகவானே! நம்மிடம் வருவாயாக, ஆசமனம் பண்ணத்தகும் இப்பானம் உனக்காகவே எத்தனப்பட் டிருக்கிறது. இதனை யுட்கொள்; (2-ம் சூக்தம்.) என்று இவ்விதமாக வைத்துப் படைத்து வாசனையைக்காட்டி வயிற்றிலூட்டிக் கொள்ளும் மகத்துவம் பொருந்திய வஸ்துவாச்சுதே! சத்தி தேவதையை சம்பந்தப் படுத்திக்

கொண்டு சித்தப் பிரமையோடு சேவித்துக்கொள்ளும் மருந்தாச்சுதே! கிறிஸ்தவர்களுக்குள்ளே ஏகோவா தினந்தினமும் ருசிபார்த்து அடியார்களுக்கெல்லாம் ஆசீர்வதித்த பொருளாச்சுதே. சிவ சொத்தாச்சுதே இது! விஷ்ணுமய மாச்சுதே இது! பிரம்மகஷாய மாச்சுதே இது! அகஸ்தியர், தேரையர், கொங்கணர் முதலான பெரிய சித்தர்களெல்லாம் பூராயமாய் ஏற்றிக்கொண்டு பாராயணம் பண்ணும்படியான சத்து சித்தானந்த மாச்சுதே! தேவி பூஜையில் சிரேஷ்டமாச்சுதே! வாம பூஜையில் வழங்கும் பொருளாச்சுதே! பாகவத திருவாராதனையில் திவ்விய வஸ்துவாச்சுதே! போலி வைஷ்ணவ ததியாராதன கோஷ்டிகளுக்குக் கோலாகலப்பொருளாச்சுதே! வருஷாப்தீகத்தில் பாகவதர்கள் பாவிக்கும் 'பரம எண்ணெய்' ஆச்சுதே! 'ரவிகலு உற்சவத்தில் ரம்மியம் கொடுப்பதாச்சுதே; வடதேசத்துத் தெலுங்கு பிராமணர்கள் சிலரின் திருவஸ்துவாச்சுதே! கிறிஸ்தவ தேவாலயங்களிலே பூஜையிலே வைத்துப் பூச்சியமாய்ச் சாப்பிடும் பொன்போன்ற பொருளாச்சுதே இது! அன்னமயகோசம். பிராணமயகோசம் என்ற வருக்கத்தில், ஆநந்தமய கோசத்திற்குக் கியானத்தைக் கிளப்பும் வானுமிர்தம் ஆச்சுதே! அடைதற்கரிய ஆகாசப் பாலாச்சுதே! எத்தனையோ பிரதர்மிஸ்டர்களைச் சேர்த்து வைக்கும் அரிய ஐக்கிய மருந்தாச்சுதே! வெகு காலம் தவமிருந்து கண்டுபிடித்த இப்படிப்பட்ட அருமையான பொருளை எதிர்க்கலாமோ? பரம ஔஷதம், பேரின்ப திராவகம்—என்று அதைக் கெட்டியாய்ப்பிடித்து "ஆவியில்லாதவன் பாவி" என்று அநுதினமும் உட்கொண்டு ருசி பார்த்திடுவதன்றோ உய்யும்வழி! சாமியாரோடுகூட சர்க்காருக்கும் சகாயமாய் விளங்கும் பொருளாயிற்றே!

இவ்வளவு மகா மேன்மை பொருந்திய மதுபானக் குடியை நீக்கி, என் கருப்பண்ண சாமிகளுக்குப் பூர்வம் கடாக்ஷித்தருளியதை நிர்த்தூளியாக்கி, இவ்வூரின் ஒவ்வொரு வீட்டையும் விடியாமூஞ்சி வீடாக்கிவிட, ஐயா! புறப்பட்டார்களய்யா மகாத்மா காந்தியும் அவரது அடியார் திருக்கூட்டத்தாரும்! இது சொத்தை அது புளியங்காயென்று மகா நியாயம்பேச வந்துவிட்டார்களே! என் பிதிர் கலங்குகிறதே! இந்த காண்டற்கரிய திருவஸ்துவை நீக்கிவிட்டாலோ இனி என்ன கதி இருக்கிறது? இனி வாழ்வு சாவுக்கு வருவார் போவாரில்லை. வழிப் பயணத்திற்குத் துணை தைரியமில்லை. பெருநாள் திருநாளில்லை. நாளெல்லாம் உழைத்ததற்குக் களைப்புத்தீர்த்துக் கொள்ள வழியுமில்லை. கள் சாராயத்தைச் சற்றே வாயில் ஊற்றிக்கொண்டு குறித்த ஒருவனை நையப் புடைத்துவிட்டுப் பிறகு குடிமயக்கத்தில் அடித்தேனென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவும் மார்க்கமில்லை. பாகவத ததியாராதன கோஷ்டியில் இனி அதிகக் கூட்டமுமில்லை. குடித்திருக்கிறான், அவனுடன் அதிகப் பேச்சு கொடாதே யென்கிற அச்சமும் இனி யில்லை. பாட்டுகளுக்கும் ஞானங்களுக்கும் இனி பவிஷு இல்லை. வீட்டில் மனைவி மக்கள் இனி நடுங்கப்போகிறது மில்லை. மூச்சைப் பிடித்து ஒன்றைத் தூக்கும் சக்தி இனி வரப்போகிறதுமில்லை. ஐயோ! பிரசவத்திற்குப் பிராந்திபுட்டி வேணுமே! அந்தப் பிள்ளைப் பேறுக்கும் மருந்தில்லை. பைகாட் பிரதர்களுக்குக் கூட்டில்லை. ஆண்மையில்லை. சண்டைக்குத் தீரமில்லை. வல்லடி வழக்கில் உற்சாகமில்லை. மயங்கி ஜாமீன் கையெழுத்துப்போட வகையுமில்லை. நாடகத்தில் நன்றாகப்பாடவும் குரலில்லை. சாவு வீட்டில் உற்சாகமாய்த் திரியவும் சௌகரியமில்

லை. சஞ்சலத்திற்கும் மருந்தில்லை. உடம்பு நோய்த்தீர்க்கவும் தண்ணீயில்லை. ஆஸ்பத்திரியில் மருந்திலே கலந்து கொடுக்கவும் வழியில்லை. ஓடவும் நாடவும் தென்பில்லை. சண்டைக்காரரைச் சமாதானமாக்கவும் முடியாது. ரயில்வண்டி ஜட்காவண்டிகளில் தூங்கியிருப்பவர்கள் குலுங்கி ஒடுங்கி உட்கார இடம் கொடுக்கிற உன்னதமும் இனி காண இயலாது. சாப்பாட்டை இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாய் ஆக்கவும் முடியாது. அஜீரணபேதிக்கு ஔஷதமில்லை. அயர்ந்த நித்திரைக்கும் மயக்க வஸ்து இல்லை. தேள்கொட்டினாலும் அந்த வலி வேதனை தெரியாது தூங்கவும் கதியில்லை. தலைநோய்க்கும் (பற்று) பத்தில்லை. ஜன்னி காம் குளிருக்கும் குடில்லை. மழைகாலத்துக்கும் வெது வெதுப்பில்லை. பம்மத பூஜைக்கும் சேஷ்டைக்கும் உற்சாக கோலாகலமில்லை. விருந்துக் கூட்டத்தில் பரிமளமில்லை; கொண்டாட்டமில்லை. வாயில் கமகம சுகந்த பூரிதமில்லை. பிரக்ஞை தெரியாது கிடக்கும் பிரபுத்வமில்லை.

அராக்கில்லாவிட்டாலோ வணிகத்திற்கே க்ஷேமமில்லை. அதை பொட்டி உறவாடும் சட்டிக்கறி தோசைக்கும் பிழைப்பில்லை, வாத்து முட்டைகளுக்கும் விலையில்லை. வறுத்த கறிக்கும் விலையில்லை. ஆட்டுகளுக்கும் விலையில்லை. ஆமவடைகளுக்கும் விலையில்லை மீன்கண்டங்களுக்கும் விலையில்லை. பொரித்த உருளைக்கிழங்குக்கும் விலையில்லை. திருவொற்றியூருக்குப் போவாரில்லை. திருநடனம் செய்யும் சரசங்களுமில்லை. தில்லைக் கூட்டிச்செய்வங்களுக்கும் சிறப்பு இல்லை. அரசின் க்ஷேமத்தை விரும்பி அரை முழு டம்ளர் போடுவதுமில்லை. சிங்கவர்களுக்கு சின்ன மலையிலே திருவிழா ஏது? பெரிய மலையிலே பெருநாள் ஏது? சத்தியவாக்கத்திலே கால் வைக்கிறதேது? உற்சவமேது? கோவிலுக்குக் கோவில் பிரார்த்தனை செய்து கொள்கிறதேது? கோவிற்பூசாரிகளுக்கு மகிமையேது? எழுதிலை மாடம் சால்சாய்த்துக் கடலூருக்குப் பறிமுதலாவதேது? உற்சாக மீட்டிங்குகளேது? லண்டன்மிஷன்கோவிலிலே கொண்டாட்டமேது? வெஸ்லியமிஷன்கோவிலிலே வேதசம்பாஷணை ஏது? ஸ்பென்ஷர், ஒக்ஸ் கம்பெனிகளேது? ரயில்வே ஸ்டேஷன்களில் இங்கிலீஷ் ஹோட்டல்கள் ஏது? அல்லாசாமிப்பண்டிகையிலே ஆர்பாட்டமேது? புலிவேஷமேது? சில்லரைக் கூத்துகளேது? அலிஜூலா வென்கிற முறைப்புத் திருப்பேது? சந்தனக்குடம் எடுப்பதேது? ஆயுதபூஜையிலே பலியேது? இதாப்பு ஏது? பவிஷு ஏது? வெள்ளிக்கிழமை தோறும் மதுரைவீரசாமியாரிய எனக்குப் படையல் சுண்டல் போடுவதேது? தசரா பண்டிகையிலே தாலீம் குஸ்தி ஏது? தீபாவளி பண்டிகையிலே மாமியார் வீட்டிலே மருமக்கள் சந்தோஷமேது? மாட்டுப் பொங்கலிலே வாத்தியப் போக்கு மகிழ்வேது? மாட்டுப் பந்தயந்தானேது? பெரும் பொங்கலேது? புது புது ஸ்நானங்கள் புரிந்து வைபோகம் காட்டும் போகி பண்டிகை ஏது? ஜனவரி பண்டிகை ஏது? கிறிஸ்மஸ் பண்டிகை ஏது? இயேசுநாதர் பிறந்தார்—கேசு புட்டி திறந்தார் என்ற குதூகலமேது? சங்கீத ஸல்லாப ஸரஸங்கள் ஏது? வருஷப் பிறப்பை மதிக்கிறதேது? மாதப் பிறப்புகளை மனதில் எண்ணுகிறதேது? ஞாயிற்றுக்கிழமைகளேது? நல்ல வெள்ளி சனிகளேது? பிக்னிக் பார்ட்டிகளேது? சகென் என்று கைகுலுக்குவதேது? இரவு நேரத்தில் ஒளிந்து நின்று கக்கத்திலே மறைத்து வாங்கிவருவதேது? பெரும் விருந்துகள், சிறு விருந்துகள் ஏது?

அம்மட்டிலா? ஆப்காரிலாக்காவுக்கு இனி என்ன வேலையிருக்கிறது? அதன் உத்தியோகஸ்தர்களுக்கு ஆட்டபாட்டமென்ன விருக்கிறது? போலீஸாருக்குக் கேசுகள் எங்கிருந்துவரும்? பொய் சாக்ஷிக்காரருக்குப் பிழைப்பெங்கே கிடைக்கும்? அப்பன் தேடிய பொருளை நாலுபேருக்குச் சிந்திக்கொடுக்க எப்படி முடியும்? தெருச் சண்டைகளெல்லாம் எங்கிருந்து உண்டாகும்? சேவகர்களுக்கு வரும்படி எப்படி கிடைக்கும்? மனைவி மக்களுடைய மண்டை எப்படி உடையும்? பெட்டிப்பேழை சட்டிப் பானைகள் எப்படி தும்ஸமாகும்? சம்சாரத்தின் தாலி எப்படி விலையாகும்? பிள்ளைகள் எப்படிப் பசியால் வதையும்? தாய் தகப்பன்மார் கஞ்சிக்கலைக்கிற பெருமை எப்படிக்கிடைக்கும்? இருந்தவீட்டை விற்றுத் தொலைக்க எப்படி வழியுண்டாகும்? ஊர்சண்டைகளை எப்படி விலைக்குவாங்கமுடியும்? தலைமயிரை எட்டிப்பிடிக்க டாணுக்காரரால் எப்படி முடியும்? மான ஈனமெல்லாம் கெட்டு மகிமைப்படுவ தெப்படி? மச்சானுக்கும் மச்சானுக்கும் மயிர்பிடிசண்டை எப்படி யுண்டாகும்? பெண்டாட்டியின் சிரித்த அழகு முகத்தைப் போக்குவதெப்படி? பிள்ளைகள் எப்படித் திருட்டுக்கு வழி தேட முடியும்? தான் குடித்ததில் மிஞ்சியதைத் தன் சிறு மகனுக்கு எப்படிக் கொடுக்கமுடியும்? வயிற்றுக் கடுப்போடு ரத்தக் கழிச்சல்தான் எப்படி யுண்டாகும்? ஒரு நல்லவனை நல்ல குடும்பத்தைக் கெடுப்பதற்கு எப்படித்தான் வழிகிடைக்கும்? ஒரு விரோதியைச் சுலபத்தில் வேலை தீர்த்துவிட வகையேது? வைத்தியருக்கு எப்படித்தான் பிழைப்புண்டாகும்? கோவில் குளங்களுக்கெல்லாம் எப்படிப் போகிறது—ஜோர் காட்டுகிறது? கொடுமை வீரத்வங்களுக் கெல்லாம் துணிவு எங்கிருந்து வரும்?

மதுரை வீரசாமி முழு பூசையேது? மாரியாத்தாள் வீரியாத்தாளுக்குப் பெரும்படையலேது? ஒண்டிமுனி ஜண்டிமுனிக்கு உருமபூசையேது? இடும்பன் கடம்பனுக்கு எடுத்து முடிப்பு கட்டுகிறதேது? இரிச்சி, சாமுண்டி, குழுமாயி, காட்டேரிக்கு இரத்தபலி யேது? ஜாலக்கான் குறளிகளுக்கு ஜாமப் பூசையேது? பில்லி சூனியக் காரருக்குப் பெரும் அறுப்பு எது? பேயாட்டிகளுக்குக் கோழியும், புட்டி. சரக்கும் எது? வைப்பு எது? கழிப்பு எது? சாந்தி. எது? சத்துரு சம்ஹாரம் எது? ரவுண்ட் டேபிள்கள் எது? பெரிய மனிதர்களின் நட்பு எது? நேசக்கூட்டங்கள் எது? நாலுதிசையும் பேர் பரவுவ தேது? விலைமகளிர் இல்லம் விளங்குவதேது? அங்கு ஆநந்த நடனக்களிப்புச் சந்தோஷமேது? காமன் பண்டிகை யேது? ஒருவர்மே லொருவர் சாயத்தை யூற்றிக்கொள்வ தேது? மங்கையர் இங்கித சங்கதி தங்கிய சமர்த்துகள் பொங்குவதேது?

இவை போல்வன எண்ணிறந்த காரியங்களெல்லாம் இந்த கள்—சாராயமென்னும் பிரம்ம கஷாயந்தாலல்லவோ நடைபெற்றுத் திகழ்கின்றன. ஐயோ! இவ்வளவு வேலைகளுக்கும் காரணமாகிய இந்த அருமையான அபூர்வ ஆநந்த அற்புத ஆச்சரிய வஸ்துவை அடியோடுதொலைக்க இந்த மகாத்மா காந்தி கூட்டத்தார் இப்போது எழும்பிக்கொண்டார்களே! பாபம்! பாபம்! மஹா பாதகம்! இதுதானு ஸ்வராஜ்யத்துக்கு வழி? 'பிச்சை யிட்டதுபோதும், நாயைப்பிடித்துக் கட்டென்பதாய் இவர்கள் ஸ்வராஜ்யம் கொடுத்தது போதும். அம்மட்டோடு விலகி அரிய பிரம்ம கஷாயத்தை எதிர்க்காமல் செலவு பெற்றுக்கொண்டால் அதுவே பெரிய ஸ்வராஜ்யம்! அணிந்திருக்கும் ஆடையே அரவமாய்ப்

பிடுங்கியதுபோல, நம்வர்க்கத்தைச் சேர்ந்த இந்த காந்திக்கூட்டமே இப்படி நமது பிராம்மண சமுதாயத்தை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்களே! எத்தனை பேருக்கு வயிறு எரியும்? எத்தனை பெண்டுகள் சபிப்பார்கள்? எத்தனை கர்ப்பிணிகள் கதறுவார்கள்? எத்தனை குளிர்தேசப் பிரார்த்தியந்தர்கள் ஆங்காரப் படுவார்கள்? எத்தனை பாட்டன் பாட்டிகள் மண்ணை வாரித் தூற்றுவார்கள்? எத்தனை சாமிகள் கோபங்கொள்ளும்? எல்லா பாபங்களும், கோபங்களும், சாபங்களும் இந்தக் காந்திக் கூட்டத்தின் மீது தானே ஏறும். ஓ! என் விகட மாமா! உலகு தோன்றிய நாள்முதலாக கூடவே இருந்து வயிருட்டுகிற உன்னத வம்சத்துக்கு அழிவு வரலாமோ வென்று வெகு சளுக்காய் முடுக்காய் துடுக்காய் மீசையை முறுக்கிக்கொண்டு மதுரைவீரசாமி சண்டப்பிரசண்டமாய் வாரிவிட்டுத் தலைவிரித்துக்கொண்டு ஆடி வயிற்றிலடித்துக்கொண்டார். விகடமாமாவும் மதுரைவீரசாமியைத் தட்டிக்கொடுத்துத் தடபுடல் படுத்திவிட்டு, கேட்ட சங்கதிகளையெல்லாம் உங்கள் முன்பு கொட்டி விட்டேன். இனி உங்கள் பாடு, அவர் பாடு. இந்த நவரஸ நாடகம் எப்படி முடியுமோ? அதுதான் விகடமாமாவுக்குச் சிரிப்பாக இருக்கிறது. இருக்கட்டும்; நேரமாகிறது; நானும் போய்வருகிறேன் நீங்களும் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் எட்டித் தாவிக்கூவி அண்ணாந்து பாருங்கள். மாமா! ராமா! சுபம்! கு!! சுவாஹா!!!

விகட] விகட விலாஸம் [மாமா.

வெயில் தோலை உரிக்கிறதாம். காற்றெழும்பி வானம் கம்பளி போர்த்துக்கொண்டும் இன்னும் கலகலவென்று ஜலத்தூற்றலைக் காணோமாம்!

(1) கிண்டிவிட்டுக் கேளிக்கை பார்க்கிறவன், (2) குச்சுக் கொளுத்துகிற ராஜாவுக்கு நெருப்பு எடுத்துக்கொடுக்கிற மந்திரி, (3) தோல் இருக்கச் சுளைவிழுங்கி இம்மூவரும் ஒன்று சேர்ந்தால் என்ன ஆகும்?

எத்தனை காலம் உண்டு உடுத்து அநுபவித்த பழம்பெருச்சாளிகளாயினும், வீட்டு மருமகப் பிள்ளைகள் புது விருந்தினராகவே காணப்படுகிறார்களாம்!

ஒருவருடன் களிப்பும் கோலாகலமுமாகக் குலாவிவிட்டுப் பிறகு அவரையும் அவரது காரியங்களையும் இழிவும் தாழ்ச்சியும் பழிப்புமாகக் கேவலப்படுத்திப் பேசுகிற பசப்புக்காரர்கட்கு 'மாமா' பலே பறநார் பட்டம் அளிக்கப் போகிறானாம்!

விருந்தினர்களுக்கு மாதக்கணக்கில் உபசரிப்பதற்கு தேக கஷ்டமும் பணச்செலவும் ஒருசாரிருக்க, நிஷ்டூரமும் மனஸ்தாபமுமில்லாமல் கவனிப்பதே பெரிய கஷ்டமாயிருக்கிறதென்று ஒரு ஸம்சாரி விகட மாமா இடம் கூறினாராம்!

“க்ஷேமமா?” என்று கேட்டதற்குத் தன் வீட்டுச் சங்கதிகளையும், சச்சரவு குழப்பங்களையும் சொல்ல வாயெடுத்தால், அது பிறருக்குத் தமாஷாவும் கேலியும் பரிஹாஸமுமாய் இருக்கிறதென்று ஒருவர் வயிற்றெரிச்சலுடன் கூற, அதற்கு விகட மாமா அப்படிப்பட்டவர்களிடமெல்லாம் சங்கதியை மூடிவிடுவதே மேல் என்றானாம்.

☞ ஒச்சந்திசை சுயில் பக்கப் பிழைகள் திருந்தியுள்ளன.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை

கமலம்-17. ‖ திரிச்சி : நவம்பர் மீ ‖ இதழ்-9

பிரபஞ்ச விலாஸம்

410. கோள் கேட்பவர்.—எப்போதும் காதை விரித்துக்கொண்டு யார் எவர் மீது புகார்—குற்றம்—கோள்—சொல்வார்களென்று கேட்க ஆவல்கொண்டிருப்பவர்கள் அடங்குவார்களாயின்,—நாவை யடக்கமாட்டாமல் வாய்ப் பதட்டத்துடன் பிறர்மேல் பழிகூறக் காத்திருப்பவர்களும் அடங்குவார்கள்.

411. புருஷத் தடியர்கள்.—பேதைப் பெண்களுக்குத் தங்கள் கணவன் இறந்து போகிறேனென்று சொன்னால்—அதற்குப் பயந்து எதற்கும்—கழுத்திலுள்ள தாலி முதற்கொண்டு தருவதற்கும் சம்மதிப்பார்கள். இந்தப் பயத்தைக் காண்பித்து நகைகளைக் கைப்பற்றியோ, குடிப்பதற்குப் பணங் கேட்டோ, உட்கார்ந்து தின்று கொண்டோ அட்டகாஸ டில்லி தர்பார் செய்வது சில புருஷத் தடிக்கழுதைகளின்—சோம்பேரி மூடர்களின் இழிந்த போக்கு.

412. பணத்தின் மகிமை.—பணக்காரர் வீட்டுப் பெண் ருதுவாகி விவாகமின்றி 12-வருஷங்கள்போல் வீட்டிலிருந்தாலும், அதற்குக் கிராக்கியுண்டு. ஏழை வீட்டுப் பெண் அப்படி யிருந்தாலோ ஏதாவது ஒரு கதை கட்டிவிட்டுவார்கள். வியபிசாரப் பட்டமும் நேரும். பணத்தின் ஸக்தியே ஸக்தி.

413. தாயாதிகள்.—தாயாதிகளுக்கு எழுதும் கடிதங்களில் அதிக எழுத்து வேண்டாம். யோசனை செய்து எழுத்துக்களை எண்ணி எழுது. பிறகு ஒரு காலத்தில் அந்த உன் சாதாரண கடிதமே பெரும் ரிக்கார்டாகிக் கோர்ட்டுக்குப் போகக்கூடும். நீ இறந்த பிறகு அக்கடிதத்தை உன் தாயாதி ஒரு ஆதாரமாகக் காட்டி, உன் மனைவியையும் பெண்ணையும் வெளியில் துரத்திவிட்டு உனது சொத்துக்களை அபகரிக்கவும் கூடியதாகிவிடும். ஜாக்கிரதை !

414. நிர்வாகக் கவலை.—குடும்ப நிர்வகிப்புக்கு எவ்வளவு பணமும் கவலையும் உழைப்பும் வேண்டியிருக்கிற தென்பதை—அதில் உழன்று பாடுபட்டு வரும் பழய கல்யாண மாப்பிள்ளைகளைப் பார்த்து,—இனி விவாகம் செய்துகொண்டு சுகமாக இருக்கலாமென்று எண்ணுகிற வாலிபர்கள் அறிந்து கொள்ளக்கடவர்.

415. உன் மிச்சம் எத்தனை?—நீ எவ்வளவு சம்பாதிக்கிறாய் என்று நான் கேட்கவில்லை. மாதத்திற்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெறுவது பெரி

தல்ல. அதில் செலவுபோக எவ்வளவு மிகுத்து வைத்திருக்கிறாயென்பதே கேள்வி.

416. நாலிந்து நாளைக்குப் பின் செய்.—கோபமும் ஆத்திரமும் காண்பித்துப் பரபரப்புடன் நீ செய்யப்போகிற ஒரு வேலையை அப்போது நீ நிறுத்திவிடு. நான்கு தினங்கட்குப் பிறகு அதைச் செய்ய நீ எண்ணுவாயானால்—உன் மனம் அதைச் செய்யவேண்டாம் என்று—சொல்லும், தடுக்கும்.

417. இறங்குகையில் கவனி. — வண்டியைவிட்டு இறங்குகையில், நிதானத்தோடு வண்டியில் என்னென்ன வைத்தோமென்று நன்றாக யோசித்துப் பார். சிறிது அவசரப்பட்டாயோ உன் பொருள் போனதுதான். அந்த வண்டிக்காரன் பிறகு உன் கண்கட்கே அகப்படமாட்டான்.

418. சீயக்காய்.— சீயக்காய் என்பதைவிட சிகைக்காய் என்பது வெகு பொருத்தமுடையது. (சிகை-குடுமி, மயிர்முடி.)

419. தேசாபிமானம்.— தேசாபிமானம் என்பது அடக்கமுடியாத ஒருவித மன எழுச்சி. தேசாபிமானிகள் என்று பார்க்கப்போனால் அவர்களோ காசாபிமானிகளாகக் காணப்படுகிறார்கள்.

420. தர்மம்.—தர்மம் என்பது பரம ஏழைகளுக்கும் எட்டும்படியானதாய் இருக்கவேண்டும்.

421. ஸயன்ஸ்.—ஸயன்ஸ் என்பது தற்காலத்து ஐரோப்பிய இயற்கை சாஸ்திரம்.

422. விலை மலிவு.—விலை மலிவு, அல்லது சரசமென்று சொல்வது மோசம் செய்கிற ஒரு வழி. எவ்வளவுக்கு மலிவோ அவ்வளவுக்கு அழுகியோ, துரிதத்தில் கெட்டுவிடக் கூடியதாகவோ இருக்கும்.

423. அநுசிலநுபே.—பழைய அநுபோகங்களிலிருந்து விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொண்டு, அவற்றினின்றும் பல உண்மைகளை அறிந்து சொல்லும் சக்தி—அதை ஒரு விஷயத்தில் பிரயோகிக்கும் திறமை சிலருக்கே இயற்கையில் அமைந்துள்ளது.

424. மிந்த எச்சிலே நின் பங்கு.—ஒரு பெரிய குடும்பஸ்தன் நல்ல சாப்பாட்டை விரும்பினால், ஒரு பக்ஷணம் செய்து உண்ணப் பிரியப்பட்டால், அவ்வளவு பெரிய குடும்பத்திற்கும் 'சப்ளை' செய்தபிறகு தான் மிந்த எச்சில் இவனுக்குக் கிடைக்கும்.

425. காபி.— வீட்டில் ஒருவனுக்கென்று காபி வைக்க முடியாது. எல்லோருக்கும் என்று வைக்கும்படி சொன்னால்தான் உனக்கும் ஒரு டம்ளர் காபி கிடைக்கும்.

426. நாடகம்.—நாடகம் பார்க்கச் செல்வதில், டிக்கட் இனமாகவே கிடைத்தாலும், பெண்களையெல்லாம் உடன் அழைத்துக்கொண்டு செல்வதில் வண்டிச்செலவு, மேல் செலவு எவ்வளவு ஆகிறதென்று யோசி.

427—முதல் 467—வரையில் நமது நண்பர்
ஸ்ரீமான் எஸ். ஆறுமுகம்பிள்ளை யவர்கள் எழுதியது.

427. அவசரமும் தாமதமும்.—அவசரமாய்ச் செய்யும் காரியம் எதுவும் சீக்கிரமாய் முடிவுற்றாலும், தாமதமாய்ச் செய்யும் அதே

காரியத்தைப் போல் அவ்வளவு பலமும் நேர்த்தியுமானதா யிருப்பதில்லை.

428. பின்யோசனை.—ஓர் காரியத்தில் தவறி விட்டபிறகே அப்படிச் செய்திருக்க வேண்டும்; இப்படிச் செய்திருக்க வேண்டும் என்கிற ஜாக்கிரதை உண்டாகிறது. காரியத்தைத் துவக்கு முன் கெடுதலேற்படப் போவது அவ்வளவாய்த் தெரிகிறதில்லை.

429. ஓர் யோசனை.—ஆண் சந்ததியில்லாத குடும்பஸ்தன் தன் சொத்தைப்பற்றி பங்காளிகளையும், மகளையும், மனைவியையும், மருமகப் பிள்ளையையும் யோசனை கேட்பதைவிட, மற்ற சாமான்யமானவர்களை யோசனை கேட்பது நலம். மனைவி தன் மகள் சார்பாகவும், பங்காளி தன் சார்பாகவுமே யோசனையை ஸ்திரப் படுத்துவார்கள். தர்மத்திற்கும் சுவாமிக்கும் எழுதி வைக்கும்படி இவர்களில் யாரும் சொல்லார்கள்.

430. மனம்.—மனதிற்கு வேலையில்லாத வேளை தூக்கவேளை ஒன்றுதான். நாம் தனித்திருப்பினும் மனம் ஒரு விஷயத்தை நினைத்தே இருக்கும். வீணாக அலைந்து திரியும் மனதை நல்வழியில் திருப்பி யோசனையைச் செய்யவிட்டால் எத்தனையோ நற்பலன் உண்டு.

431. வேலை வாங்கும் தந்திரம்.—தனக்காக உற்சாகம் பிறந்து செய்யும் காரியம் திருப்திகரமாய் இருக்கும். கடமைக்கும் பயத்துக்கும், வற்புறுத்துதலுக்கும் காரியம் செய்வதானது அவ்வளவு சிலாக்கியமாயிராது. இதை யறிந்தே சிலர் ஆசாமியிடம் முதலில் இன்பமாக சம்பாஷித்து உற்சாகத்தைக் கிளப்பிவிட்டு தங்கள் காரியத்தைத் திருப்திகரமாய் முடித்துக்கொள்ளுகிறார்கள்.

432. ஆவல்.—புதிதாக மேலும் மேலும் விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேணுமென்று நீ ஆவல் கொள்வதைவிட, இதுவரையிலும் கற்ற விஷயங்களை மறக்காமல் காப்பாற்ற முயல்வது சிலாக்கியம்.

433. தொழில் பிணக்கு.—தன்னால் பழகியுள்ள தொழில்களில் எத்தொழில் நீண்டகாலத்திற்கு தன் சுவாதீனத்திலில்லையோ அத்தொழில் தன்னுடன் பிணங்கிக் கொள்ளுகிறது. ஆனதால்தான் நமக்கு வேண்டும்போது அத்தொழில் சிரமத்தை விளைவிக்கிறது.

434. முதல் மனைவி.—கல்யாணத்தில் சதிபதிகளின் வயது ஏறத்தாள சமத்துவமா யிருப்பதால், இருவர் மனதும் விஷயாதிகளில் ஒன்றைப்போல் பின்பற்றி, இருவரும் அன்புடன் காலம் கழிப்பதால் முதல்மனைவி நல்லவளாகிறாள்.

435. மறுமனைவி.—இரண்டாம் தாரம் செய்வதென்றால், ஆணுக்குக் கொஞ்சம் வயது அதிகமாக யிருக்கும். பெண் சிறுவயதுடையவளே. அநுபவம் தெரியாத சிறுவயதின் எண்ணத்திற்கும் கொஞ்சம் விஷயம் தெரிந்த அதிக வயதின் எண்ணத்திற்கும் கருத்தில் வித்தியாச மேற்படுகிறதால், மறுமனைவி கணவனுக்கு அதிருப்தியை விளைவிப்பவளாகிறாள். முதல் மனைவிபோல் பொருந்துகிறதில்லை.

436. சிநேகம்.—நேசம் என்பது ஆதியில் ஏற்படுகிற பழக்கம். விரோதத்திற்கு மூலகாரணம் சிநேகமேயாம். சிநேகமின்றேல் விரோதமில்லை. பிரிந்து பின்சேரும் சிநேகத்தைவிட, ஆதியில் பெற்ற சிநேகத்துட னிருப்பதே அதிக ருசியைத் தரும்.

437. ஒழுங்கீனர்கள்:—மதுபானக் கடைக்குச் செல்வதற்கென்றே எண்ணிப்போகும் ஒருவன், நேர்த்தியான மிட்டாய்க் கடைகள் முன்னுவிருப்பதையும் கவனிக்கிறதில்லை. இவ்விதமே கெட்ட காரியத்தைச் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கட்கு நற்காரியத்தில் சிந்தை பாய்வதில்லை.

438. யானை வருமுன்னே மணியோசை வரும்:—நீ ஒருவனை ஏமாற்ற வேணுமென்று நினைக்கிற சந்தர்ப்பமானது—நீனைப் பானது, நீ ஒருவனால் ஏமாற்ற மடைவதற்குச் சமீப காலமென்று காட்டுகிற அறிகுறியாம்: நல்ல காலத்திற்கு இந்த எண்ணம் வாரது.

439. அவரவர்கள் காரியத்தில் அவரவர்கட்கு நினைவு.—நோய் வந்து விட்டதே யென்று வியாதியஸ்தன் பரிதபித்தாலும், யாருக்காவது நோய் வாராதா வென்று வைத்தியர்கள் திரிகிறார்கள். ஒருவரை இன்னொருவருக்குப் பரிச்சயம் செய்துவைத்து, அவர்களிருவரும் சந்தித்துக்கொள்ளப் போவதை நோக்கி ஒருவன் பூரிக்க, பரிச்சயம் பெற்றவனோ, அதற்குத் துணையாயிருந்தவனை தன்னைக் காண வருபவர் முன்பு கேவலமாய் இகழ்ந்துரையாடி மதிப்பில் தாழ்த்த அதுவே தக்க சந்தர்ப்பமென நினைத்துக் கொள்கிறான். ஆற்றில் பிரவாக மென்று பிரயாணி பயப்பட்டாலும், இன்னும் பிரவாக மில்லையேஎன்று ஓடக்காரன் எண்ணுகிறான். களவு போய் விட்டதே யென்று வீட்டுக்காரன் வருந்தினாலும், அதிகம் திருட்டு சிக்கவில்லையே யென்று திருடன் நினைக்கிறான். கேசில் அதிக விரயமென்று கட்சிக்காரன் நினைத்தாலும், பீஸ் கம்மி யென்று வக்கீல் போராடுகிறார். சாப்பாட்டுக்கே வறுமை யென்று புருஷன் நினைத்தாலும், நகை நட்டு இல்லையென்று மனைவி கையை முறிக்கிறாள். இப்படியே தான் உலகம் முழுமையும்.

440. கண்போன பிறகு சூரிய நமஸ்காரம்.—உலக அநுபவம் அறியாத வாலிபர்கள் குடும்ப எஜமானர்களானால், தங்கள் சொத்

தாக்களை அழியாத செல்வமெனக் கருதி, மமதையால், சூது தாசி குடி முதலிய டாம்பீக தர்பாரில் முழுகிவிடுவார். கடன் விஷம் தலைக்கேறி அதனால் வாரண்டு வரும் வரையோ, செல்வம் அடியோடு போகும் வரையோ அம்மமதை தீருவதில்லை. பிறகு புத்தி வந்தென்ன பிரயோஜனம்?

441. பேராசை பெருந்தரித்திரம்.—பேராசை யென்னும் தாசிக்கு ஒருவன் அடிமைப்பட்டு விட்டால், எவனையும் அந்தத் தாசி மேலோங்கிவர விடமாட்டாள். வேசி தாசிகளிடம் சிக்குண்டவர்கள் அடையும் க்ஷீணதிசையே இவர்களுக்கும். (ஆசை உத்தமம்; விருத்திக்கு வழி. பேராசை அதமம்; நஷ்டத்திற்குப் பாதை.)

442. நடந்து கொள்ளல்.—நீ பிறரிடத்தில் நடந்து கொள்ளும் ஒழுக்கத்திலிருந்து உனக்குப் பிறரால் மரியாதை கொடுக்கப்படுகிறது. பிறர் உனக்குச் செய்யும் மரியாதை உன் ஒழுக்கத்தைப் பொறுத்தது.

443. ஜாக்கிரதை.—மிகு ஜாக்கிரதையாயிருக்கிற உன்னைக்கூட, நீ சிநேகிதர்களென்று நினைத்துக் கொண்டிருக்கிற வஞ்சகர்கள் எவ்விதமேனும் தங்கள் லாபத்துக்காக உன்னை தாசி, மது, சூதாட்ட வகைகளில் வழக்கப்படுத்தி விடுவார்கள். எச்சரிக்கை!

444. சிறு விதையிலிருந்தே விருக்ஷம்.—புதிதாய் லாகிரியை உபயோகிக்கும் ஒருவன், தான் உபயோகிப்பது எவருக்கும் தெரியாமலிருக்கவேண்டு மென்கிற பயத்துடன் உபயோகிப்பதால், ஓர் அளவாய் அருந்தி கெட்ட பெயர் எடுக்காமலிருக்கிறான். நாளாக ஆக விஷயம் ஊர் தெரிந்து உலகம் தெரிந்த பிறகு, உலகமே தெரிந்தது தானே, ரகசிய மென்னவென்று அச்சம் நீங்கி பஹிரங்கமாய் உபயோகிப்பதால் குடியின் அளவும் அதிகப்பட்டு பிறர் பழிப்புக்கும் ஆளாகிறான்.

445. நினைப்பதில்லை.—தன் பெண்ஜாதி பேச்சைத் தன் மகன் கேட்டுக்கொள்ளுகிறான் என்று தாயார் நினைக்கும்போது, தாயார் பேச்சைத் தன் புருஷன் கேட்டுக்கொள்கிறார் என்று மனைவி நினைக்கிறாள். தாயார் அம்மாதிரி நினைக்காவிடில், தன் மருமகள் அம்மாதிரி நினைப்பதில்லை.

446. நேசனே தூதன்.—உன்னிடத்தில் நேசமாக இருப்பவனே உன் எதிரிக்கு அந்தரங்க ரகசியம் சொல்லும் நேச தூதனயிருப்பான். ஆகையால் யாவரிடத்திலும் மிதமான வார்த்தையாய்ப் பேசுக. உன் அந்தரங்கத்தை விளக்கி எதுவும் சொல்லாதே.

447. உலகம் பலவிதம்:—விதவைகள் தங்கள் கணவன் இறந்து போனதற்கு விசனப் பட்டுக்கொண்டிருக்க, அநேகம் பெண்கள் தங்கள் புருஷன் எப்போது சாவானே! இவனால் சொத்தெல்

லாம் பாழாகிறதே யென்று புருஷனின் சாவை எதிர் பார்த்துக் கொண்டிருப்பது மன்றி, அதற்கு முயற்சியும் செய்கிறார்கள். சிலர் புருஷனை உயிரோடு வைத்துக் கொத்தித் தின்கிறார்கள்.

448. ஆலோசனை:—ஒன்றைப்பற்றி பசி, கோபம் முதலான சந்தர்ப்பங்களில், யோசிக்கப் பட்ட முடிவுக்கும், சாந்தமாய் மனோ நிம்மதியாய் இருக்கும்போது ஆலோசிக்கப் பட்ட முடிவுக்கும் மிக்க வித்தியாசமுண்டு. மனோ நிம்மதியாய் இருக்கும் வேளையில் யோசித்த முடிவே குணம் பொருந்தியதாயிருக்கும். எனவே அவ்வேளையில் யோசிக்கப் பழகிவர வேண்டும்.

449. உற்சாகம்.—இளம்பெண்கள் காலையில் தாங்கள் இருக்கும் சிங்காரிப்பைவிட. மாலைப் பொழுது போகப்போக அதிக அலங்காரமாயிருப்பது அவர்களுடைய "சிந்தனை" யின் உற்சாகத்தைப் பொறுத்த விஷயம்.

450. கண்டு கவனி.—உன்னைப் போல் இரண்டாம் தாரம் கொண்ட குடும்பத்தில், மூத்த தாரத்தின் குழந்தைகளை இளைய தாரம் தன் புருஷனில்லாத சந்தர்ப்பத்தில் நடத்தும் விதத்தை நீ கண்டு கவனிக்கவேண்டியது அவசியம். உன் எதிரில் குழந்தைகளிடம் பட்சமாய்ப் பேசுவது போல், நீ இல்லாத சந்தர்ப்பத்தில் பேசாள். இதை உற்றுணர்க. என் மனைவி அப்படிப்பட்டவளல்ல வென்று மெச்சிக்கொண்டு மயங்காதே.

451. வேளைக்கு ஆஜராகும் கிரமம்.—வீட்டில் சாதாரணமாயிருக்கும் உத்தியோகஸ்தர் டியூட்டிக்கு (வேலைக்கு)ப் போகும் போது "டிரஸ்" செய்து கொள்ளுகிறார். நாமும் வீட்டைவிட்டு வெளிச் சென்றால் உடை திருத்தியே செல்கிறோம். அதே போல, பெண்மணிகளும் தாங்கள் ரமிக்கப்போகும் இரவுக்கு முன்னுள்ள மாலைப்போழ்தில் தங்களை மிகு சுந்தரமாக சிங்காரித்துக் கொள்கிறார்கள்.

452. தைரியம் கூறல்.—சிலர் எந்த விஷயத்திலும் தங்களால் அதுமுடிவு பெற்றுவிடக்கூடியதுபோல் காட்டிக்கொண்டு, "அதற்கென்ன நானிருக்கிறேன், காரியத்தை ஆரம்பியும்" என்று கூறிவிட்டுப் பிறகு காளாவர்த்தியில் நடு காரியத்தில் ஏதாவது ஒரு பழியை நம்மீது சுமத்திவிட்டு விலகிக் கொள்கிறார்கள். இவர்களை நம்பி ஏமாறலாகாது.

453. பலன் தருவது.—பிறஜாதி நட்பிலும் தன் ஜாதியைச் சேர்ந்த ஒரு ஏழை நட்பு மேல். பலமுறை படிப்பதிலும் ஒருமுறை எழுதிப் படிப்பது மேல். மனதில் நன்கு பதியும்.

454. நீயே யோசி.—பலரால் சொல்லப்படும் யோசனைகள்

பலிதமாய்த் தான் இருக்கும். யார் என்ன சொன்னாலும் நீ உன்னுடைய சொந்த புத்தியுடன் யோசித்து மேலானதைச் செய்.

455. சாக்குப் போக்குச் சொல்வது.—தனக்கு அந்தக் காரியத்தில் பிரியமும் சம்மதமும் இல்லையென்று சொல்வதற்குப் பதிலாக சாக்குபோக்கு மூலமாய்த் தெரிவித்துக் கொள்கிறார்கள். பெண் பார் என்று சொன்னால், ஏதாவது இடம் கிடைத்தால் தெரிவிக்கிறேன் என்கிறார்கள். உன் பெண்ணைக் கொடு என்றால் கணவனார் இணங்கிவரமாட்டார் என்கிறார்கள். இதுவெல்லாம் சாக்குப் போக்கே.

456. மோய்க்கு மோய் வைத்தல்.—பெண்ஜாதியைப் புருஷன் அடித்து மிரட்டி பயப்படுத்தினால், பெண்ஜாதி புருஷனைத் தூக்கிலிட்டுச் சாவேனென்றும், கிணற்றில் விழுவேனென்றும், மருந்துண்டு இறப்பேனென்றும் கூறி சுலபத்தில் பயப்படுத்துகிறாள். இந்த சுகம், அதுபட்ட புண்யவான்களுக்கே தெரியும்.

457. ஜாக்கிரதை! உஷார்!!.—உன்னை ஏமாற்றும் மனைவியின் விஷயம் பலர் தெரிந்த பிறகுதான் நீ கண்டுகொள்ள முடியும்.

458. ஆராய்ந்து செய்.—சிறு கிணறு வெட்டிப் பாராமல், பெரிய கிணற்றை வெட்டினால், ஜலமே கண்ணுக்குத் தெரியாமற் போய் அதிருப்தியுடன் பெரிய நஷ்டமும் நேரிடும்.

459. அதுவே நியாயம்.—எதிரி சொல்லும் வாதத்தை நீயே இப்பொழுது உன் மனதில் யோசித்துக் கொண்டு, உன்னுடைய வாதத்தை அத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பாயானால் நியாயம் இருக்கிற இடம் தெரியும்.

460. நிலா வேளிச்சம்.—நிலாவெளிச்சம், பாவாயில்லை, இது பட்டப்பகலைப்போல என்று இராக்காலத்தை நம்பிவிடாதே. நம்பி உஷார் தவறினால் உன்னுடைய சொத்து திருடர்களுக்காகும்.

461. உடனுக்குடன் செய்.—சுபாசுப காரியங்களுக்கு உடனுக்குடன் போகாமல் நீ நாளைப்போக்கிவந்தால், பிறகு நீ காணவேண்டியவர்களே உன் ஊருக்கு வந்து உன்னைச் சந்திக்க நேரிட்டால் உனக்கு அதிக கவலையும் தலையிறக்கமுமா யிருக்கும். அவ்வப்போது போகத் தடைப்பட்டால், அது அப்படியே இழுத்துப் போய் நாளாகிவிடும். நாள் சென்று போவதால் இருவருக்கும் அதிருப்தியே. உள்ளுக்குள் மனஸ்தாபமும் கூட.

462. ஊருக்குப் புறப்படுதல்.—புருஷன் வீட்டிலிருந்து தாயின் ஊருக்குச் செல்லும்போது ஜல்தியில் புறப்பட்டுக்கொள்வதும்,

தாசி வீட்டிலிருந்து புருஷன் வீட்டுக்குப் புறப்படுவதென்றால் தாமசப்படுத்துதலுமான குணங்கள் பெண்களிடம் இயற்கையில் குடிகொண்டுளது. இந்த அவஸ்தையை ஆண்மக்கள் அறியார்.

463. இருவரும் கலந்தே யோசிக்கவும்.—தம் குழந்தையின் பிணியின் போது மனைவி ஒரு தேவதைக்கும், கணவன் ஒரு தேவதைக்கும் குழந்தையின் முடியைத்தருவதாய்ப்பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள். இதில் முதலில் எந்த தேவதைக்கு யார் வாக்கை நிறைவேற்றுவது?

464. நற்பெண்டீர் அழகு.—தாசி வீடு சென்று வரும் ஒருவனை மனைவி தனக்குள்ள கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு புருஷனைப் பேச்சுகளில் தட்டிக்கொடுத்துக் குசாலாய் நடத்தி, அவன் முன்பு தன்னை மிகு ரூபவதியாகச் சிங்காரித்துக்கொண்டு ஸரசங்களாடி நின்று, அவன் செய்கைக்குக் கண்ணீர் விட்டும், பிறகு சிரித்தும், இவ்விதமாக அவன் பழக்கத்தை மறக்கடித்தல் சிலாக்கியம். இப்படியின்றி புருஷன் தாசிவீட்டுக்குப் போகிறானேயென ஓர் ஆத்திரத்தையே மனதில் வைத்துக் கொண்டு புருஷனைக் கண்ட போதெல்லாம் தாருமாறாய் நடந்து கொள்வதால், புருஷன் இன்னும் உறுதியாக தாசி வீடே சிலாக்யமென நினைத்துவிடுகிறான். பிறகு குடும்பம் குட்டிச்சுவர் தான்! ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்.

465. அப்படித்தான் நினைவோ?.—சகலமும் தெரிந்த புத்திசாலியென்று உன்னை நீ நினைத்துக் கொண்டிருந்தாலும், உன்னை ஒன்றும் தெரியாத மடையன், என்று அநேகர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஊர்வாயை மூட முடியாது.

466. இரவல் கொடுப்பது.—நண்பர்கட்கு சாமான்கள் இரவல் கொடுப்பதென்றால் அதற்கு மனம் வருவதில்லை. கஷ்டத்தோடு அழுது கொடுக்க நேரிடுகிறது. ஆனால் வெளிக்குமட்டும் வெகு உபசாரம். இரவல் போய்வரும் போது ஷை சாமான்கள் கெட்டோ குறைந்தோ வந்து சேருவது தான் வழக்கம். சில வருவதேயில்லை. கொடுத்தவர் மறந்தாலோ வாங்கினவர் கொடார். கொடுத்தவர் இறந்து விடினோ வாங்கினவர்கள் தங்களின் சொத்தாக அமுக்கிக் கொள்வார்கள்.

467. பொய்யும் மெய்யும்.—எவரிடத்தில் உண்மையைப் பயந்து வலவலத்துப் பேசுகிறோமோ, அவர்கள் நம்மை அவமதித்து—அலக்ஷியித்து—அதட்டி மிரட்டுகிறார்கள். எவரிடத்தில் பொய்யானாலும், திடமாய்ப் பயப்படாமல் துணிவோடு பொருத்தமாய்ச் சொல்லுகிறோமோ அவர்கள் அதை வாஸ்தவ மாயிருக்குமென நம்புகிறார்கள். உலக இயல்பு அப்படியிருக்கிறது!

ரதிகாந்தா.

பிறனொருவனுக்குக் கேடு சூழக்கருதித் தானே அக்கேட்டிற்கு ஆளான விநோதம்.

"குற்றவாளி யல்லவென்று நீ எவ்வளவு தெரிவித்துக் கொண்டாலும், எதிரிகளின் சாக்ஷியங்கள் உனது குற்றத்தை ஸ்திரப் படுத்துவதற்கு அளவுக்கு மிஞ்சி இருக்கின்றன. உனக்காக ஒரு வக்கீலை ஏற்படுத்திக் கொள்ள ஸக்தி போதாதென்கிறாய். இக்கோர்ட்டிலுள்ள வக்கில்களில் எவரை யேனும் உனது கேஸில் வாதிப்பதற்குத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் பக்ஷத்தில் அது எனக்கு மிகவும் திருப்திகாமா யிருக்கும்" என்று திரிச்சிராப்பள்ளியிலுள்ள ஸப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதி அதிபர் தம் முன் நிற்கும் கைதியைப் பார்த்துச் சொன்னார்.

நீதியதிபர் இவ்விதம் கூறியதும் கைதியோ தனது பரிதாபக் கண்களால் கோர்ட்டிலுள்ள வக்கீல்களைப் பார்த்தான். வெகு உருக்கத்தோடும் அவர்களைக் கெஞ்சும் பாவனையாகக் கைதியின் முகம் இருந்தது. அங்கு வந்திருந்தவர்களில் நாகபூஷணம் என்னும் பெயர் கொண்ட ஒரு பிரபலமான வக்கீல் இருந்தார். அவரையே கைதி முக்கியமாய் உற்று நோக்கினன். அவருக்கும் ஐயோ! பாவம் என்று மனதில் பட்டது. தனக்கும் கைதிக்கும் முக ஒற்றுமை அதிகமாய் இருந்ததை நாகபூஷணம் விசேஷமாகக் கவனித்தார்' இந்த ரகசியத்தை மற்றவர்கள் அறிய வில்லை. வக்கீலுக்கும் கைதியின் மீது இரக்கம் உண்டாயிற்று. ஆகவே அவர் நீதியதிபரைப் பார்த்துக்கைதியின் கேஸைத்தான் எடுத்துக்கொண்டு வாதிப்பதாகவும், ஆனல் குற்றவாளியைப்பற்றிய தஸ்தாவேஜிகளைத் தான் இன்னமும் பார்வையிடாததால், அதற்காகத் தமக்கு மூன்று நாள் ஒய்வு தாவேண்டுமென்றும், கேட்டுக்கொண்டார். மாஜிஸ்தி

ரேட் அவருடைய பரோபகாரமான குணத்தைப் புகழ்ந்து கொண்டு, அவர் விரும்பிய வண்ணமே சாவகாசமும் கொடுத்துவிட்டு வேறு கேஸை விசாரிக்கத் தொடங்கினர்.

*** ***

நாகபூஷணம் கைதியைச் சிறைச் சாலையிற் போய்க் காண அவனும் தனது முழுப்பிரியத்தையும் அவரிடம் காட்டினான்.

வக்கீல்:—அப்பா ராமநாதா! உன்னைப்பற்றிய தஸ்தாவேஜிகளை யெல்லாம் பார்வையிட்டேன். எவ்விதத்திலும் தப்ப வழியில்லை. உனது குற்றத்தை உறுதிப்படுத்த அளவுக்கு மிஞ்சின ஆதாரங்கள் வெகு பலமாய் இருக்கின்றன.

ராமநாதன்:—தர்மாத்மாவாகிய தாங்களே இப்படி என்னைக் குற்றவாளியென்று நினைப்பின், தெய்வத்தை யல்லாது வேறு யாரிடத்தில் யான் ஆறுதல் பெறக்கூடும்?

வக்கீல்.—இக்கேஸில் உன் சங்கதிகளை ஒன்றும் மறைக்காமல் கறந்தபால் கறந்தமேனியாக உள்ளது உள்ளபடியே வெளியிடவேண்டும். அப்போது உன்னைத் தப்புவிக்க ஏதாவது மார்க்கமிருக்கிறதா வென்று கவனிக்கிறேன்.

ராமநாதன்.—என்னை விடுவிக்க வந்த மஹாபுருஷராகிய தங்களிடத்தில் நான் எதற்காக மறைக்கவேண்டும்? எனது இருப்பிடம் சென்னை; எங்களுடைய பூர்வநிலை உன்னதமாய் இருந்தது. சர்வ சொத்துக்களும் அர்பத்னட் கம்பெனியில் தொலைந்துபோயின. வீட்டிலிருந்த அற்ப சொற்ப நகைகள் தான் மிஞ்சின. எனது ஸ்திதி தக்க ஸ்தானத்தில் செவ்வனே இருந்தபோது தான், திருச்சினப்பள்ளியில் எங்கள் குலத்தைச் சேர்ந்த ரதிகாந்தா என்ற பெண்மணியின் மீது அன்பு கொண்டேன். சித்திரை மாதத்தில் கேர்த்தியான பூர்ண சந்திரிகையில் காவிரியாற்றில் கஜேந்திர மோக்ஷத்தின் போது பரஸ்பரம் ஒருவரை யொருவர் கண்டு காதல் மிஞ்சினோம். நாங்கள் சந்தித்த மறுதினமே ரதிகாந்தா மங்கைப் பருவமெய்தினாள். அவள் புஷ்பவதியான காலம் மிகவும் கெட்டதா யிருந்தமையால், காந்தாவின் பெற்றோர்கள் ஒருவர் பின்னொருவராகக் காலமடைந்தனர். காந்தா இப்பொழுது நிராதரவானாள். உறவினரெல்லாம் தருவித்து விவாகம் நடத்த வழியின்மையால், முக்கியமான இரண்டொருவரைத் தருவித்து அவர்களைக் கொண்டே விவாகத்தை முடித்துக்கொள்வதற்காகச் சென்னையினின்றும் இங்கு வந்தேன். விவாகச் செலவுக்கு உதவும் பொருட்டாகக்கையிலிருந்த வைரமோதிரத்தை விற்கும்பொருட்டு நகை வியாபாரியான கங்காபிரசாத்தின் கடைக்குச் சென்றேன். அவர் சில புதிய வைரங்களை விலைமதிப்பிட்டுக் கொண்டு, அதிலேயே

கண்ணும்கருத்துமாயிருந்தார். நான் வந்ததை அவர் கவனிக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய பழய நண்பரைப் போன்ற முக முடைய ஒருவர் மோட்டாரில் செல்வதாய் என் மனதிற் படவே, திடீரென்று வெளியே ஓடினேன். அதற்குள் மோட்டார் மறைந்து போனதால், மாலையில் மறுபடியும் திரும்பிவாரலா மென்றெண்ணி வீட்டுக்குப் போக முயலுகையில், முன்சொன்ன கங்கா பிரஸாத் தின் ஷாப்பில் அவர் வெகு கண்ணோட்டமாய்க் கவனித்துக் கொண்டிருந்த அந்தப் புதிய வைரங்கள் திடீரெனக் திருட்டுப் போனதாகவும் அதற்காகக் கள்வனைப் பிடிக்க நாலாதிசைகளிலும் ஓடுகின்றன ரெனவும் தெரிந்தேன். கங்கா பிரஸாத் தமது வர்த்தக ஸ்தலத்தின் வெளிக்கதவை மூடிவிட்டுத் தம்மிடம் வேலைபார்க் கும் ஒவ்வொருவரையும் பரிசோதித்தார். அகப்படவேயில்லை. களவு போய்விட்ட வயிரங்களை நான் நேரிலேயே கண்டவனாத லின், அவைகள் எவ்விதத்தும் நான்கு லட்சரூபாய்க்கு குறையாமல் விலை பெறக்கூடுமென்று எனக்கு நன்றாகத் தெரியும். இங்ஙன மாகப் பல பல நினைத்துக் கொண்டு எனது வீட்டிற்குச் செல்லும் வழியில் நான் காலை வைத்தபோது எனது இடது கையின் சட் டைப்பையில் ஏதோ கொஞ்சம் கனமாய் இருக்கக்கண்டு கல வரத்துடன் கையை விட்டேன். காணமல் போன வைரங்கள் என் சட்டைப் பையில்இருக்கக்கண்டேன். கங்காபிரஸாத்திற்கு உள்ள உண்மையைத் தெரிவித்து, அவருக்கே கொடுத்துவிட வேண்டு மென்ற எண்ணத்துடன் அவர் கடைக்குச் செல்லுகையில், ரஸ்தா வின் மீதிருந்த இன்னொரு நகை வியாபாரியான முத்துகிருஷ்ணன் செட்டியார் என்னை அழைத்து கங்காபிரஸாத்தின் கடைக்கு ஏன் போனீர் என்றுகேட்டார். நான் கபட மில்லாமல் யதார்த்தத்தைத் தெரிவிக்க நினைத்து என் மோதிரத்தை விற்கும் பொருட்டுச் சென்றேனென்றும்,காணமற்போன வைரங்கள் எனது சட்டைப் பைக்குள் எவ்வாறுவோ வந்து விட்டிருக்கின்றன வென்றும் தெரிவித்து, அந்த வைரங்களை வெளியில் எடுத்துக்காண்பித் தேன். வெகு பேராசைக்காரனான அவர், அந்த வைரங்களைத் தனக்கு விற்றுவிடும்படி கேட்டான். நான் அதற்கு இணங்கவில்லை. ஆயிரம் ரூபாயிலிருந்து ஐம்பதினாயிரம் ரூபாய் வரைக்கும் விலையை உயர்த்தினான். அந்த ஐம்பதினாயிரம் ரூபாய்களையும் பெற்றுக் கொண்டு தனக்கு அந்த வைரங்களைக் கொடுத்து விடும் படியாக வெகுவாய்க் கெஞ்சி வற்புறுத்தினான். அதற்கு நான் என் மோதி ரத்தை விற்பதே யன்றி, அன்னியர் உடமையான இந்த வைரங் களை அவர்களிடம் தான் கொண்டு போய்ச் சேர்ப்பிப்பேன்— என்று கூறிவிட்டு வெளியில் வந்து கங்கா பிரசாத்தின் கடைக்குச் செல்லாமல்,நேராக எனது காதலியின் வீட்டைநோக்கி ஓடினேன். அங்கே ரதிகாந்தா இருந்தாள். அவளிடம் வைரங்களைக் கொடு

த்து, எங்கேனும் மறைத்து வைத்து விட்டு வரும்படி அவளை யனுப்பினேன். அவள் வைரங்களோடும் வெளியிற் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், போலீஸார் எனது வீட்டைச் சூழ்ந்து கொண்டு, என்னையும் கைது செய்து, வீட்டையும் சோதனை போட்டார்கள், சோதனையில் ஒன்றும் அகப்படவில்லை. இதுதான் உண்மையில் நடந்த விஷயம்.

** ** **

வக்கீல்.—நீ கூறிய அனைத்தும் உண்மை பொதிந்த உரைகள் என்பதாகவே மதிக்கின்றேன். ஆனால் கோர்ட்டார் இதை ஒரு கட்டுக்கதை யென்றே நினைப்பார்கள். கங்காப்பிரஸாத் கடைக்கு நீ வந்ததையும், திடீரென்று வெளியில் ஓடியதையும் எல்லா சாட்சிகளும் ஒரே முகமாய்ச் சொல்லுகிறார்கள். இதில் முத்துகிருஷ்ண செட்டியே அதிகமாகப் புளுகுகிறான். வைரங்களை விற்க நீ அவனிடம் வந்ததாகவும் உன்னைப்போலீஸில் ஒப்புவிப்பதாகச் சொன்னதும் ஒரே ஓட்டமாக வைரங்களுடன் ஓடி விட்டதாகவும் சொல்லுகிறான். அவன் கடையிலிருந்த மற்றவர்களும் உன்னை அந்த ஸமயத்தில் கண்டதாக உறுதிபடுத்துகின்றனர். உன்னைக் குற்றவாளி யென்று ஸ்தாபிப்பதற்குக் கேஸின் அமைப்பு நன்றாகப் பொருந்தி யிருக்கின்றது.

ராமநாதன்:—அவ்வாறாயின், இக்கேஸிலிருந்து எப்படித் தப்புவிப்பது ?

வக்கீல்:—என் அன்பனே ! பிழைத்துப் போக ஒரே வழியிருக்கிறது. அது தான் தப்பும் மார்க்கம். தந்திரமாக நாம் வேலை செய்யவேண்டும். நம்மைக் கெடுத்தவனை நாம் கெடுத்து அதனால் நன்மை பெறவேண்டும். அதற்கு நீயும் உனது காந்தாவும் என்னை முற்றிலும் நம்பி அந்த வைரங்களை என்னிடத்தில் ஒப்புவித்து விடவேண்டும். எனது இஷ்டப்படி காந்தாவை நடந்து கொள்ளுமாறு உன் கைப்பட அவளுக்கு ஒரு கடிதமும் எழுதி என்னிடம் கொடுக்கவேண்டும்.

* * * * *

வக்கீலின் கருத்துக்கு ராமநாதனும் இசைந்து கடிதமும் தந்தான். பதிகாந்தாவை அவளுடைய வீட்டில் வக்கீல் கண்டார், காந்தாவும் அவர் இஷ்டப்படிக்கெல்லாம் தாளம் போடச் சம்மதித்தாள். தான் வைரங்களை ஒளித்து வைத்த இடத்திற்குச் சென்று அவைகளை எடுத்து வந்து வக்கீல் விரும்பியபடி அவரிடம் கொடுத்தாள். ராமநாதன் உடுத்திக் கொள்ளும் உடைகளிலும் சிலவற்றை அவர் கேட்டபடியே காந்தா தந்தாள். வக்கீல் காந்தாவினிடத்திற்கு வரும் வழியில் ஒரு நாடக ஷாப்பில் மங்கலாயுள்ள ஒரு மீசையையும் தாடியையும் வாங்கிக்கொண்டு வந்திருந்தாரான

தால், அவற்றை முகத்தில் கட்டிக்கொண்டு ராமநாதனின் உடுப்பு களையும் அணிந்து கொண்டார்.

காந்தா அவரைப் பார்த்து ஆ! என் நாதரைப் போலவே தோன்றுகிறீர்கள். சற்றும் பேதமில்லை என்றாள். வக்கீல் அவள் அந்த விதமாகப் பேசவேண்டுமென்பதையே எதிர் பார்த்திருந் தார். காந்தா கூறிய சொற்கள் அவருக்கு மிக்க திருப்தி யளித் தது. காந்தாவே தன்னை ராமநாதன் தான் என்று கூறும்போது மற்றவர்களும் அப்படியே தன் வேடத்தை உண்மையென நம்பிக் கொள்வார்கள் என்று திருப்தி யடைந்தார். காந்தா தன்னிடத் தில் யதார்த்தமாக நடந்து கொண்டதற்காக அவளைப் புகழ்ந்து விடை பெற்றுக் கொண்டு வைரங்களோடும் திரும்பினார்.

இரவு எட்டுமணி அடித்தது. முத்து கிருஷ்ண செட்டியார் தமது கடையில் வெகு உற்சாகத்துடன் உட்கார்ந்து கொண்டிரு ந்தார். அவரை ஒரு மனிதன் வெகு அவசரமாகக்காண விரும்பிய தால் அப்படியே வரும்படியாக டெலிபோன் மூலமாகத் தெரிவி த்தார். அவ்விதமே அந்த மனிதனும் அவரை நெருங்கினான்.

* * * * *

முத்துகிருஷ்ண செட்டி அவனைப் பார்த்து, அடடா! இது என்ன ஆச்சரியம்! ராமநாதா உன் தாடி மீசைகள் எல்லாம் சிறை க்கப்பட்டு உன் தலைக்குக் குல்லா போடப்படுமென்றல்லவா இரு ந்தேன். நீ எப்படி ஜெயிலிலிருந்து தப்பித்து வந்தாய்? நான் எத் தனையோ தரம் உன்னை வேண்டிவேண்டிக் கேட்டும் அந்த வயிரக் கற்களை எனக்கு விற்காமல் என்னென்னவோ தர்ம நியாயங்களை யெல்லாம் பேசினாய். அந்தத் தர்மம் உனக்கு இப்போது என்ன உதவியைச் செய்தது? ஜயிலுக்குப் போக வைத்ததுதான் லாபம். தர்மத்தின் பலன் எவ்வாறு முடிந்தது பார்த்தாயா? உன்னைப் பற்றிப் போலீஸாரிடத்தில் தெரிவித்து அப்போது உன்னைக் கைதிபடுத்தியது போதாது. மறுபடியும் இப்போது உன்னைச் சிறைபடுத்துகிறேன் — எனது சாமர்த்தியத்தைப் பார் என்று சொல்லிவிட்டுப் போலீஸாரை அழைக்கப் பிரயத்தனப் பட் டான். அதற்கு வந்திருந்த மனிதன் செட்டியை நோக்கி, நான் இப்போது கன்காணாத தேசத்திற்கு ஓடிவிடத் தீர்மானித்து உன்னிடம் வந்திருக்கிறேன். இதோ அந்த வைரங்கள்; இவ ற்றை எடுத்துக் கொண்டு முன்பு நீ விலை பேசிய பிரகாரம் ஐம்பதி னாயிரம் ரூபாயையும் எனக்குக் கொடுத்து விடு. நீ இவற்றை சாணை பிடித்து லக்ஷக்கணக்கான தொகைக்கு விற்று லாபம் பெற்றுக் கொள் என்றான். அதற்கு செட்டி அளவு தொகைக்கு இப்போது முடியாது. இருபதினாயிரம் ரூபாய் வேண்டுமானால் வாங்கிக்கொள் என, வந்திருந்தவனும் அதற்குச் சம்மதித்துப் பவுன்களாகத் தரு

ம்படி பெற்றுக்கொண்டு வைரங்களைச் செட்டியிடம் கொடுத்து விட்டு அக்கடையை விட்டு நீங்கினான்.

மறுதினம் காலையில் 11-மணிக்குக் கோர்ட்டு கூடிற்று. நீதிபதி ராமநாதனின் கேஸை விசாரிக்கத் தொடங்கினார்.

அச்சமயம் கவர்ன்மெண்ட் வக்கீல் எழுந்து ராமநாதன் குற்றவாளி யல்ல வென்றும், வக்கீல் நாகபூஷணத்தின் சாமர்த்தியத்தால் முத்துகிருஷ்ண செட்டி என்பவன் காணாமல்போன வைரங்களோடும் பிடிக்கப்பட்டு போலீஸ் பாதுகாப்பில் இருக்கிறானென்றும் கூறினார். அந்தக் கேஸைப் பிறகு தனியாக விசாரித்துக்கொள்ளலாமென்றும், நிரபராதியாகிய ராமநாதனை விடுதலை செய்து விடவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மாஜிஸ்திரேட் அப்படியே ஒப்புக்கொண்டு நாகபூஷணத்தின் திறமைக்கு மெச்சி ராமநாதனை சந்தோஷத்தோடும் விடுதலை செய்தார்.

* * *

காந்தாவும் ராமநாதனும் சந்தித்தனர். பிரிந்த காதலரை ஒன்று படுத்தியதற்காக நாகபூஷணம் புகழப்பட்டார். தனக்கும் ராமநாதனுக்கு முள்ள முக ஒற்றுமையினால், தான் பூண்ட ராமநாதனின் வேடத்தை முத்துகிருஷ்ண செட்டி உண்மையாகவே நம்பி ஏமாந்து, தனக்கு இருபதினாயிரம் ரூபாய் கொடுத்ததோடு, சிறைச்சாலைக்குச் செல்வதற்கும் அவனே வழிதேடிக் கொண்டானென்றும் கூறி, அவனிடமிருந்து பெற்ற இருபதினாயிரம் ரூபாயையும் ராமநாதனுக்குக் கொடுத்து சுகமாக இருங்களென்று வாழ்த்தினார்.

முத்து கிருஷ்ண செட்டி எவ்வாறு கைதி செய்யப்பட்டானென்று காந்தா வினவினாள். அதற்கு நாகபூஷணம், 'நான் அவனிடம் ரூபாய்களைப் பெற்றுக்கொண்ட பிறகு, அந்த வைரங்களை எங்கு வைக்கிறானென்று கவனமாய்ப் பார்த்தேன். அவன் வைத்த இரும்புப் பெட்டியைத் தெரிந்துகொண்டு வெளியில் வந்து, என் வேஷத்தைக் கலைத்துவிட்டுப் பழயபடி நாகபூஷணமானேன். உடனே போலீஸ் ஸ்டேஷன் சென்று முத்து கிருஷ்ண செட்டி மீது எனக்கு ஸம்சயம் இருக்கிறதென்றும், அவன் கடையைச் சோதித்தால் ஒரு சமயம் இழந்த வைரங்களைத் திரும்பவும் கிடைக்கப்பெறலாமென்றும் கூறிவிட்டு, வைரங்களுக்கு சொந்தக்காரராகிய கங்காப் பிரசாத்துக்கும் ஒரு ஆள் மூலமாக இது செய்தியைத் தெரிவித்தேன். கங்காப்ரஸாத்தும் போலீஸாருமாக முத்து கிருஷ்ண செட்டியின் கடையைச் சூழ்ந்து கொண்டனர். முற்றும் சோதித்து இரும்புப் பெட்டியில் வைரங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தனர். உடனே செட்டி அரஸ்ட்

செய்யப்பட்டான். ராமநாதனும் நிரபராதியாக வெளிவருவதா ஞன் என்ருர். காந்தாவும் ராமநாதனும் நாகபூஷணத்தை வண ங்கி நின்றனர். அவரைக் கொண்டாடினர். அந்த இருபதினுயிரம் ரூபாயையும் அவரே ஏற்றுக்கொண்டு, தங்களுக்கு விவாகச் செல வுக்கு மட்டும் ஏதாவது தரின் போதுமான தென்றனர். நாக பூஷ ணம் சிரித்துக்கொண்டார். நீங்கள் எளிய நிலையிலிருந்து கொண்டு மனப்பூர்வமாகக் கூறிய இன்பமொழிகளே எனக்கு இருபதினுயி ரம் ரூபாய் போலாம். பகவான் எனக்கு ஏதோ சொத்து வைத் திருக்கிறர். அவர் கிருபையால் எனக்கு ஒரு குறைவுமில்லை. என் குழந்தைகளாகிய நீங்கள் அன்னியோன்னிய தம்பதிகளாய் நெடுங் காலம் வாழவேண்டுமென்பதே என் பிரார்த்தனை. நீங்கள் எனக் குச் செய்யவேண்டிய உதவியெல்லாம் இவ்விதமான தர்ம சிந்த னையில் என் சித்தம் ஸதா பிரவர்த்தித்தபடி இருக்கவேண்டு மென்று பகவானைக் கோரிக் கொள்வதுதான் என்ருர்.

முத்துகிருஷ்ண செட்டியின் கேஸ் விசாரணைக்கு வந்தது. அவன், தான் குற்றவாளியல்லவென்றும், ராமநாதனே சிறையி லிருந்தும் தப்பித்து ஓடிவந்து வைரங்களைத் தனக்கு விற்று இரு பதினுயிரம் ரூபாய் பெற்றுச் சென்ருனென்றும், மறு நிமிஷத்தில் போலீஸார் தன்னை நெருங்கிச் சோதித்து அரஸ்ட் செய்தார்க ளென்றும் உள்ளபடியே கூறினன். இந்த யதார்த்த வர்த்தமானம் எந்தக் கோர்டிலேனும் அங்கீகாரம் பெறுமா? வக்கீல்கள் ஜோடிப்பதற்குத்தக்கபடியன்ருே கேஸின் முடிவு. முத்துகிருஷ்ண செட்டி கூறியதைக்கோர்ட்டார் கேட்டு கொல்லென்று சிரித்தார் கள். "நீ குறித்தகாலத்தில் ராமநாதன் சிறையிலிருக்கும்போது அவன் உன்னிடம் வந்து வைரங்களைத் தந்தானென்ருல்—இதை விடப் பெரும் பொய் வேறு வேண்டாமென்று நீதியதிபர் கூறி மூன்றுவருஷ கடினசிக்ஷை விதித்தார். பேராசையால் பிறர் பொருளை யபகரிக்கவும், சத்தியவந்த ஞெருவனைக் கெடுக்கவும் முயன்று, இறுதியில் தானே ஸர்வநாசத்தையும் தேடிக்கொண் டான். முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

பிறரைக் கெடுத்து வாழநினைத்தவர்கள் எந்த நாளிலும் உருப் பட்டதில்லை. வீட்டில் தனக்கு ஸர்வ சுதந்தரத்துவமும் இருக்கிற தென்று கர்வித்து வீட்டிலிருக்கிறவர்களை வெளியேற்றப் பார்ப்ப வன், தன்னையும் அவ்விதமே வெளியேற்ற வேருெருவன் முளைப் பானென்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும் ஒரு நற்காலமா னது அருகில் ஒரு துன்பமும் சோதனையுமான காலத்தை வைத் துக்கொண்டே ஒரு மனிதனிடம் நெருங்கி வருகிறது. நற்கால விசேஷத்தால் அந்த விபத்தினின்றும் நீங்கி முன்னிலும் உன்னத மான வாழ்வில் பிரவேசித்திருக்கிருர்கள். இதற்கு ராமநாதன்,

காந்தா இவர்களே போதிய சான்ருவர். கெட்டகாலம் ஒருவனுக்குக் கூடிவிட்டதானல் கைப்பொருள்களும் போவதன்றி பலவித துன்பங்கட்கும் ஆளாக்கிவைத்து அலைக்கழிப்பதைமுத்துகிருஷ்ண செட்டியின் விஷயங்கள் நன்கு உணர்த்தும். கடைசியில் கங்காப்பிரஸாத்துக்கு வைரங்கள் போய்ச் சேர்ந்தன. நமது நகை நல்ல நகையாக இருந்தால் அது காணமற் போயினும் "அரங்கன் சொத்து அக்கரை ஏருது" என்பது போல மறுபடியும் நமக்கு எவ்விதத்தும் கிடைத்துவிடும்.

ராமநாதனுக்கும் சதிகாந்தாவுக்கும் விவாகமாகி, நாகபூஷணத்தின் ஆதரவில் இருவரும் சுகமாக வாழ்ந்து வருகிறார்கள். தற்காலத்துக்குத் தக்கபடி நண்பர்களும், சகாயஸ்தர்களும் கிடைக்கிறார்கள். நல்லவர்கட்கு நல்லதே முடிவு. காலம் நல்லதானல் யாவும் நன்மையாகவே முடியும்.

> காலம் கெட்டதானல் வெகு எச்சரிக்கையுடனும் இருங்கள். நற்காலத்தில் தர்மபுத்தியை மறக்கவேண்டாம். மனமொத்த காதலுக்குக் கடவுளின் ஆசி எப்போதுமுண்டு. நற்குணமுடைய பெண்மணியால் அவளுடைய கணவனின் எத்தகைய ஆபத்தும் நிவர்த்தியாகும். நாகபூஷணம்போல் ஒரு ஸத்தியவந்தரான வக்கீல் கிடைத்தால் கேஸை ஜெயிக்கத் தடையென்ன?

பிரபஞ்ச விலாஸம்.

ஒரு விசேஷத்திற்குப் பெண்களுடன் போக நினைக்கிறபோது அவர்கள் கிட்டாகி விடுகிருர்கள். எல்லாவற்றிலும் இது ஒரு பெரிய சங்கடம்! பெண்களின்றி ஒரு விசேஷத்திற்குத் தனித்துச் செல்வதென்ருல் புருஷர்களுக்கு மனமுடைந்து போகின்றது.

கடன் வாங்கின பணத்தை இனமாக வந்ததுபோலச் செலவிட்டு விடுகிருர்கள். பிறகு கடனைத் தீர்க்கையில் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்து எடுத்துக் கொடுக்கவேண்டி யிருப்பதால் சங்கடமாய்த்தோற்றுகிறது. மனமும் வருகிறதில்லை.

பிறருடைய அங்கஹீனத்தை ஒரு பழிப்பாக எடுத்துக் காட்டாதே உனக்கு இன்னும் அநேக நாளிருக்கிறது. நீயும் ஒரு சமயம் அங்கஹீனனய் விடக்கூடும். நாளைக்கு உன் கால் வண்டிச் சக்கரத்தில் சிக்கி முறியப் போவதைப் பற்றி இன்றைக்கு உனக்கு ஒன்றமே தெரியாதல்லவா?

வெளியிற் செல்லுகையில் நாலு காசோடு போ. உனக்கு அது ஒரு சமயம் வேண்டியிருக்கும். வெறுங்கையாக எப்போதும் செல்லாதே. ரயிலுக்குச் செல்லுகையில் உன் ரூபாயை நம்பாதே. அது செல்லாத ரூபாயாகிவிடக் கூடும். கூட இரண்டு ரூபாயும், சில்லரையும் உடன் கொண்டுபோ.

ராதா சந்திரா

ராதா சந்திராவினது ஏழ்மைக் காதலின் விநோதம்.

இராதாசந்திரா என்னும் பெண் மகேசபுரத்தில் உத்ஸவத்தைப் பார்க்கச் சென்றிருந்தாள். அத்தருணிக்கு வயது பதினொன்று. அவள் ஸ்திதி பூர்வத்தில் உத்கிருஷ்டமான நிலைமையிலிருந்தாலும், இப்பொழுது தரித்திர அவஸ்தையிலிருந்தாள். தகப்பனில்லை. தாயார் மட்டும் இருந்தாள். தாயாதியொருவன் அவள் தாயார்பேரில் கோர்ட்டில் தாவாசெய்து ஸர்வ சொத்துக்களையும் அபகரித்துக் கொண்டான். ஹைக்கோர்ட்டில் தாவா செய்தாள். அவ்விடமும் தீர்ப்பு விரோதமாயிற்று. இவர்களின் ஆஸ்திகளையும் வீட்டையும் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். சுமார் ஆஸ்தி பத்துலக்ஷ ரூபாயுள்ளது. இவ்விருவர்களையும் துரத்திவிட்டதால் இவர்கள் திக்கற்று ஒருகுடீரத்தில் வாஸம் செய்ய நேர்ந்தது. அல்ப ஸ்வல்பம் இருந்ததை பிரிவிகௌன்ஸிலில் அப்பீல் செய்தாள். எல்லாம் போய் அன்னத்திற்கே மார்க்கமில்லாமற் போய்விட்டது. சரீர கஷ்டத்தினால் காலஹரணம் செய்துவந்தாள். ராதா சந்திராவுக்கு கல்யாணமாகவில்லை. ஏழையின் பெண் யாருக்குவேண்டும்? இந்த துர்ப்பாக்கியத்திலிருந்து வருகையில் தாயாருக்கு உடம்பு அஸவுக்கியமாயிற்று. கூலியால் வரும் காசும் போயிற்று. அன்று சாப்பிடுவதற்கு ஒரு பைஸாவாவது அரிசியாவது இல்லை. உபவாஸம் தான் உதவி செய்ய வந்தது. தாயாருக்கு பத்தியத்துக்கு என்ன செய்யலாமென்று யோசித்து ஒன்றும்தோன்றாமல் அழுது, கடைசியில் ஒரு புஷ்பமாலையைக்கட்டி அதைத் திருநாளாகிய இன்றைய தினம் விற்போமானால் ஏதாவது காசு அகப்படுமென்று ஒரு மாலையைக் கட்டினாள். திருநாள் நடந்து கொண்டிருக்கையில் மழை வந்துவிட்டது. ஜனங்களெல்லாம் மனம் வந்தபடி ஓடவாரம்பித்தார்கள். பூமாலையை வாங்குபவர் யாருமில்லை. ஒரு வேளை மழை நின்றால் யாராவது வாங்குவார்களென்று பார்த்தாள். மழை நிற்கும் வழியில்லை. அந்தகாரம் வந்துவிட்டது. அழுதுகொண்டு வீட்டை நோக்கித் திரும்பினாள். வழியெல்லாம் சேறு, மழை சடசடவென்று பெய்கின்றது. தாயாரின் பசியை நினைத்து நினைத்து மனம் வருந்தி பூமாலையை விட்டெறியாமல் வீட்டிற்கு

வருகையில், அந்தகாரத்தில் யாரோ ஒரு மனிதருடைய அங்கம் ராதாவின் மேலில் பட்டது. உடனே இந்தப் பெண் கெட்டியாய் அழவாரம்பித்தாள். இதைக் கேட்டதும் அம்மனிதன் ஏன் அழுகிறாய் என்றான். இராதா அழுகையை நிறுத்தி பேசும் மனிதன யாரோ புருஷன் என்றும், அவன் மிகவும் தயாளுவென்றும் அறிந்து, ஐயா! நான் ஏழைப்பெண்; எனக்கு யாருமில்லை. ஏதோ என கஷ்டத்தை நினைத்து அழுதேன் என்றாள்.

அதற்கு அந்த மனிதன் நீ எங்கே போயிருந்தாய்? என்று கேட்க, அதற்கு ராதா; நான் ரதோத்ஸவத்தில் என்னால் கட்டிய புஷ்பமாலையை விற்று காசுகொண்டு வரலாமென் றிருந்தேன். ஆனால் என் துரதிருஷ்டம் மழை வந்துவிட்டது. பூமாலை விலையாக வில்லை. ஆனதால் வீட்டிற்குப் போகிறேன். இருட்டில் வழியே தெரியவில்லையென்றாள்.

அம்மனிதன் இதைக் கேட்டதும், சிறியவள் ஒன்றியாய் ஏன் வந்தாய்? உன் வீட்டில் இன்னும் யாருண்டு? அதைச் சொல்? என் கையைப் பிடித்துக்கொள், உன் வீட்டிற் கழைத்துப் போகிறேன் என்றான்.

ராதா: எனக்குத் தாயாரிருக்கிறாள். அவள் உடம்பு அஸவுக்யம். ஆனதால் புஷ்பமாலையை விற்று காசு கொண்டு போகலாமென்று வந்தேன் என; இப்படிப் பேசியதைக்கேட்ட அந்த மனிதன் பரிதாபத்தோடு பெண்ணே! எனக்கு ஒரு மாலை வேண்டும். ஸ்வாமிக்குப் போடவேண்டி இருப்பதால் உன்னிடத்தி லிருக்கும் மாலையை எனக்குக் கொடு; நான் அதன் விலையைத் தருகிறேன் என்றான். அவ்வார்த்தையை கேட்டதும் ராதா ஸந்தோஷமடைந்து தன் மடியிலிருந்த மாலையை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் தன்னிட மிருந்த இரண்டு ரூபாய்களைக் கொடுத்தான். ராதா இதேது? அரையணா புஷ்பமாலைக்கு இரண்டு ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். எனக்கு வேண்டியதில்லை. அவ்வளவு துராசை மனிதர்கள் கொள்ளப்படாது. உங்கள் ரூபாயை எடுத்துக்கொள்ளுங்கள் என்றாள். வந்த மனிதன் அது ரூபா யல்ல, ஒன்றும் சொல்லாமல் எடுத்துக்கொள் என்றான். இப்படி இருவரும் பேசிக்கொண்டு வீட்டின் பக்கத்தில் வந்தார்கள். வந்தவன பெண்ணே!உள்ளே போய்வேறு துணி தரித்துக்கொள். இந்த வஸ்திரம் ஈரமானதால் இதை அவிழ்த்துவிடு என:. அந்தப் பெண் ஐயா! நான் ஏழை, இந்த வஸ்திரத்தை தவிர வேறு வஸ்திரம் இல்லை. உங்கள் ரூபாய் எனக்கு வேண்டாம். நான் தரித்திரையா யிருந்தாலும் துராசையில்லை என்றாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் அவன் ஒன்றும் சொல்லாமல் நீ உள்ளேசென்று விளக்கேற்றென,

அவள் விளக்கேற்ற உள்ளே சென்றாள். சிலநேரத்திற்கெல்லாம் ஒரு செட்டி வந்து அம்மா, உங்களுக்கு இரண்டு புடவை தரும்படி ஒரு ஐயர் பணம் தந்தார். இந்தாருங்கள் சேலை என்று கொடுத்து ஓடிப்போனான். இதைக் கண்டதும் இராதா தாயாரிடம் ஸங்கதியைச் சொல்ல, அவள் அம்மா நமது தரித்திரத்தையறிந்து ஈசுவரனே அவ்விதஉதவி செய்திருக்கிறார்; பெற்றுக்கொள் என்றாள். செட்டி போய்விட்டான். பிறகு தாயாருக்கு படுக்கை உதறிப் போடுவதற்காக வீட்டைப் பெருக்குகையில் ஒரு கடிதம் அகப்பட்டது. அதைத் தாயாரிடம் கொடுத்து அம்மா இதில் ஏதோ எழுதி இருக்கிறது பாரென்றாள். அவள் அம்மா இது நோட்டு. இதில் அந்த மனிதனுடைய பெயர் பின்புறத்தில் இருக்கிறது. யாராவது களவு நோட்டென்று சொல்லாதபடி அவ்விதம் செய்திருக்கிறான். அவன் பெயர் ருக்மணி குமாரராயன் போலிருக்கிறது என்றாள். மறுநாள் எங்கே தேடியும் அப்பெயருள்ள மனிதன் அகப்படவே இல்லை. தரித்திரர்களாயினும் அதிக ஆசையுள்ளவர்களல்ல. சில நாட்கள் சென்றன. ராதாவின் தாயாருக்கு குணமுகம் காணவில்லை. இந்த ஸமயத்தில் பிரிவு கௌன்ஸிலில் இவள் பக்ஷமாய்த் தீர்ப்பாயிற்றென்று வர்த்தமானம் வந்தது. அவளுடைய செலவு ஜாமீன் பணம் எல்லாம் கொடுக்கும்படிக்கு ஆயிற்றென்று இவள் வக்கீலாகிய காமாக்யநாதன் சொல்லக்கேட்டு தாயார் ஆனந்தமடைந்தாலும், அவள் கண்ணீர்ததும்பச் சொல்வதாவது: ஆறிப்போன தீபத்துக்கு எண்ணெய் போட்டும் பிரயோசனமென்ன? நீ சொல்லிய வர்த்தமானத்தால் என் பிராணன் ரக்ஷணையடையாது. ஆனால் ராதா பசியால் வருந்தி சாகமாட்டாள். அதைப் பற்றி ஸந்தோஷந்தான். என் அந்தியகாலத்தில் உன்னிடத்தில் ஒரு பிக்ஷை கேட்கிறேன். எனக்கு நிறைவேற்றித் தருவாயா என்றாள். காமாக்யன் பெரிய மனிதன். குணமுள்ளவன். அவளுக்குப் பந்து. அநேகந் தடவை தன் வீட்டிலிருக்கும்படி வேண்டியும் இராதாவினுடைய தாயார் தன் தரித்திரத்தைக்கொண்டு ஒருவர் வீட்டுக்குப் போகிறதில்லையென்று சபதம் செய்துகொண்டிருந்தாள். இந்தத் தடவை அவள் வார்த்தையைக்கேட்டு அம்மா உன்னுடைய இஷ்டத்தைத் தாராளமாய்ச் சொல்லென, அந்த அம்மாள் ஸந்தோஷமடைந்து, நான் போகிறேன்; இராதாவை நீ காப்பாற்றித் தகுந்த இடத்தில் அவளைக் கல்யாணம்செய்து உன் பெண்ணைப்போல் பாவித்துக்கொள்; அது தான் நான் கேட்கும் பிக்ஷை என, காமாக்யன் அம்மா ஈசுவர ஸாக்ஷியாய் நான் இராதாவை என் பெண்ணைவிட அதிகமாய்ப் பார்த்து கொள்ளுகிறேன். நீ என் வீட்டில் இப்பொழுதாவது தயவு செய்து வருவாயானால் எனக்கு ஸந்தோஷம் என்றான். இந்தத் தடவை அவள் வீட்டில் வாஸம் செய்ய ஒப்புக்கொண்டு பெண்ணோடு போனாள்

ஆனால் அவள் சில தினத்திற்குள் மரணமடைந்தாள். ஸகல ஆஸ்தி களையும் தானே மேல்விசாரணை செய்துகொண்டிருந்தான். இனி ஆகவேண்டியது வேறுவேலை யொன்றுமில்லை. இராதாக்குக் கல்யாணம் தான். ஆனால் வக்கீல் புது ஸம்பிரதாயஸ்தனானதால் அப்பெண் பெரியவளாய் அவளிஷ்டமுள்ள புருஷனை விவாகம் செய்து கொள்ளட்டுமென்பதே. அதுவரையில் அவளை வித்தை கற்கும்படி ஆர்ஞாபித்தான்.

ஐந்து வருஷங்களாயின. ராதாவுக்கு 16-வயதாயிற்று. பரம ஸௌந்தரியா யிருந்தாள். ஆனால் இவள் அந்தப்புரத்திலேயே இருந்த படியால் அவள் ரூபலாவண்யத்தை யாரும் பார்த்ததில்லை. காமாக்யன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி தன் அபிப்பிராயத்தை வசந்தகுமாரியாகிய தன் பெண்ணோடு சொல்லியனுப்பினான். வஸந்தகுமாரியும், ராதாவும் பரம ஸ்நேகிதிகள். வஸந்தகுமாரி தன் தந்தையின் அபிப்பிராயத்தை இராதாவிடம் சொல்ல, அவள் ருக்மணி குமாரன் என்பவர் உண்டோ? அதை விசாரித்தறியச் சொல்லென்றாள். காமாக்யனிடத்தில் அதேமாதிரி தெரிவித்தாள். அவன் ஆச்சரியமடைந்து அந்ய புருஷனாகிய அவனுக்கும் ராதாவுக்கும் எப்படிப் பரிச்சயம் உண்டாயிற்று என, வஸந்த குமாரி ராதாவினால் கேள்விப்பட்ட ரதோத்ஸவத்தின் ஸமாசாரங்களைச் சொல்ல, காமாக்யன் சிரித்து, அவன் உபகாரம் செய்ததால் பிரதியுபகாரம் செய்ய வேணுமே யொழிய விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்பது நியாயமில்லை. மேலும் அவன் எந்த ஜாதியோ? அவனுக்குப் பெண்பிள்ளைகள் மனைவி முதலியவர்கள் இருந்தாலும் இருக்கலாம். இதை யோசியாமல் அவள் அவஸரப் படக்கூடாது. ராதாவுக்கு இதைச் சொல் என, வஸந்தகுமாரி, ராதா அவனையே (நாம் பிரதிநித்யம் ஸ்வாமியை வணங்கிப் பூஜை செய்வதுபோல்) மனதால் பூஜித்து வருவதால், அவள் வேறு புருஷனிடத்தில் மனதைத் திருப்பமுடியாது; எப்பாடு பட்டாவது தாங்கள் அவரைக் கண்டு பிடிக்கவேண்டும். அவரால் தான் என் ஸ்நேகிதி சுகமடைய வேண்டும் என்றாள்.

காமாக்யன் நல்லதென்று சொல்லி ஊரூராய் கூலிக்காரர் களைக்கொண்டு தேடியும், தானே ஸ்வந்தமாய் கல்கத்தா முதலிய இடங்களில் அலைந்தும், தன் ஸ்நேகிதர்கட்குத் தேடும்படி சொல்லியும் பலவித பிரயத்னங்கள் செய்தும் பயன்படவில்லை. கடைசியாக ஒரு பத்திரிகையில் இதைப் பிரகடனப் படுத்தினான்.

"ருக்மணி குமாரராய வென்பவர் இதன் கீழ் கையெழுத்து வைத்திருப்பவனோடு அவசியம் வந்து பேசவேண்டும். அதனால் நன்மையே யொழிய வேறுவித தீங்கொன்று மில்லை."

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடமாமா

(Registered.)

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

ஆ! காகிதமே! கடிதாசியே!!



நீ என்ன பிறப்பு! உன் மகிமை என்ன! அந்தஸ்தென்ன! ஆரவாரமென்ன! நீ தோன்றுவது கூழ்க்குப்பையிலானாலும், ஏறுவது கோபுரத்திலல்லவோ? ஏடு எழுத்தாணியை மறைய வைத்துவிட்டாய்! தோட்டி முதல் தொண்டமான் வரையில் உன் தேவை வேண்டாதவர்கள் யார்? இருந்திருந்து நீ தோன்றி, இப்பிரபஞ்சத்தையே புது உலகமாக, புது அமைப்பாக, புது ஏற்பாடாக, புது விருத்தியாக, புது வழியாக மாற்றிவிட்டாயே! சீன நாட்டினர் உன்னை முதலில் கண்டறிந்தார்களாம். ஆ! காகிதமே! நீ தோன்றிய பிறகேதான் அச்சியந்திரங்கள் ஏற்பாடானது. அதனால் கோடிக்கணக்குக்குப் பிழைப்பும் ஏற்படலானது. பத்திரிகைகள் தோன்றவுமானது. அப்பத்திரிகைகளுக்கு ஊர்சேதிகள் தெரிவிக்கத் தந்தி கம்பெனிகளும் ஸ்தாபனமானது. மங்கலான நிறத்திலிருந்த நீ வெகு பளபளப்பும் பார்வையுமான நிறத்துக்கு ஓடிவிட்டாய்!

ஆ! காகிதமே! உன்னில் ஒரு பக்கம் எழுத, மற்றொரு காகிதம் அதிலுள்ள மையை ஒட்டிக்கொள்ள— இப்படியாக எழுதும் காகிதமென்றும், மையொத்துங் காகிதமென்றும் இரு பிரிவானாய். அதிலும் அநேக கிளைகளாக உற்பவித்தாய். செடி கொடிகளில் எத்தனை வர்ணபேதங்களுண்டோ, அவ்வளவு விதங்களிலும் உன்னைக் காட்டிக்கொண்டு புறப்பட்டாய்! ஹாப்டோன் படங்கள் போடுவதற்கென்றும், பொட்டகிராப்கள் எடுப்பதற்கென்றும், டிராயிங் எழுதுவதற்கென்றும், மோசக்கார கேட்லாக் கம்பெனிக்காரர்கட்கு உதவியாக இருப்பதற்கென்றும், பத்திராதிபர்களுக் கென்றும், உயர்ந்த புஸ்தகங்களுக்கென்றும் விதம் விதமான அமைப்புகளுடன் வெளிவருவதானாய். நீ எந்த தேசத்தில் அதிகமாய்ச் செலவழிந்தாயோ; அந்த தேசம் மற்றதேசங்களை விட விருத்தி கொள்வதாயிற்று. எங்கு பார்த்தாலும் உன் ஆரவாரங்களையே அதிகமாக்கி விட்டாய். வீட்டுக்காரன் வெளியூருக்குச் சென்றால் தன் வீட்டுக்குச் சேதி தெரிவிப்பதும் உன் மூலமாகத்தானே! காதற் கடிதங்கள், சோரக்கடிதங்கள், மனஸ்தாபக் கடிதங்கள், ஒப்பாரித்தம்பிக்கும் உறவு அண்ணனுக்கும் உண்டாகிற பிரிவினைக் கடிதங்கள், உளவுக்கடிதங்கள், ரகசிய ஸல்லாபங்கள் எல்லாம் எழுதிக்கொள்வதும் உன்னைக்கொண்டு தானே! கொலைசெய்ய, கொள்ளையடிக்க, முன்னேற்பா

ட்டுக் கடிதங்கள் அனுப்புவதும் உன் உதவியால் தான்.

அநாமதேயக் கடிதங்கள் எழுதுவதும், புருஷன் மனைவிக்கு ஆகாதபடி மொட்டைக் கடிதங்கள் போடுவதும் உன் துணையைக் கொண்டுதான். வெறுங்கடிதத்திலே அறியாத பெண்களிடம் அடியிலே கையெழுத்து வாங்கி, அப்பாலே தன்னிஷ்டப்படி எழுதிக்கொண்டு அவள் தலையில் கை வைப்பதும் உன் உதவியால் தான். தன் விஷயத்தை வெளியிட்டு விட்டானே என்ற ஆத்திரத்தில்—"இந்த ஜென்மத்தில் இனி அவனுக்குக் கடிதமே எழுதப்போவதில்லை" யென்று முறைத்துக்கொள்வதும் உன் மூலமாய்த்தான். "பாவி மனுஷன் மனதார ஒரு நன்மையையும் எனக்கு இதுகாறும் செய்ததில்லை" யென்று அபாண்டமாய்த் தூற்றுவதும் உன்னைக்கொண்டுதான். தன் அநாவசியச் சுடு சொற்களாலும், அளவு கடந்த கோள்களும் பழிப்புகளும் கூறி மதிப்பில் தாழ்த்தியதாலும். மதியீனமாக, தான் ஒரு மனிதனை இழந்ததை நினைத்துப் பார்க்க நேரமில்லாமல்,—"பாவி மனிதன் ஒரு அருமையான துணைவனை இழந்தான்; இன்னும் கொஞ்சகாலத்தில், அல்லது அவன் இறக்கும் தருவாயிலாவது என்னைப் பற்றி நினைத்துருகாமல் அவன் உயிர் நீங்காது",—என்று தன்னைக் குறித்து வெகு புகழ்ச்சியோடும் மகா மகா உயர்வாக மனோபாவனை செய்துகொண்டு, இன்னொருவருக்குக் கடிதம் எழுதித் தன் காலுக்குத் தானே கும்பிட்டுக் கொள்வதும் உன் மூலமாய்த்தான். அன்பு வைத்த இடத்தில் விபசாரம் செய்ததற்குக் கண்டிக்கப்பட, அதற்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு,—"இனி அவனுடைய பொருள் ஒன்றாவது இங்கிருக்க நான் கண்டு ஸகியேன், எனக்கென்று அவன் கொடுத்த சாமான்களை அவனுக்கு அனுப்பிவிடவா, அல்லது தீக்கிரையாக்கவா, அவன் கடிதம் ஏதாவது வந்தால் வாங்காமல் திருப்பி யனுப்பிவிடவா"-என்று இன்னொருவரை, அவரை மிகவும் கௌரவித்திருப்பவன் போலக்காட்டி ஆலோசனைகள் கேட்பதும் ஆ! காகிதமே உன்னைக்கொண்டு தான். ஆ! காகிதமே! ஒருகாசும் செலவில்லாமல் நேசம் கிடைப்பதும் உன்னாலேயே. பிரிவினை நிகழ்வதும் நேர்வதும் உன்னாலேயே. "என் எதிர்கால வாழ்க்கை என்னைக் கண்டு நகையாடுகிறது; என் மனதிற்கு சமாதானம் செய்ய வழியில்லாது துன்புறுகிறேன்; என்றாலும் ஈசனை முழுதும் நம்பி உயிர் வாழ்கிறேன். அவன் ஆணைப்படி நடக்கட்டும்"—என்று பரமார்த்திகமான வழியில் தன்னை சாந்தகுண பூஷணனாக உயர்த்திக் காட்டிக்கொண்டு பெரிய இடங்களுக்கு மிக்க மிக்க சாதுர்யமாய் ஞானக் கடிதங்கள் எழுதி லெட்டர் பரீக்ஷையிலே-பாஸ் பண்ணுவதும் ஆ! காகிதமே! உன் தயவால் தான்.

ஊருக்கொரு ராமாயணம் பாரதம் இருந்துகொண்டு மணி யடித்ததெல்லாம் மாறி வீட்டுக்கு வீடாகி, இன்னும் விலைபாகாமல் அடுக்கடுக்கி வைக்கும்படியான மகத்துவத்தை உண்டாக்கியதும் நீயே! ஒருவரின் அபிப்பிராயத்தை மறுநாள் உலக முழுதும் அறியும்படியாகப் பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுவதும் நீயே! கோர்ட்டுக் கச்சேரிகளிலும். வக்கீல்களிடத்திலும், கோர்ட்டுச் சனியன் பிடித்தவர்களிடமும் கட்டுக்கட்டாக நிற்பதும் நீயே! வீட்டைத் தூக்கிக் கொடுக்கவேண்டாம், எடுத்துக் கொடுக்கவேண்டாம், வீட்டுக்கும் எனக்கும் பாத்தியதையில்லை யென்று ஒரு கையெழுத்து உன்னில் போட்டுவிட்டால், அவ்வளவோடு வீடு வாசல் போனதே! அவசரத்துக்காகவும், ஆத்திரப்பட்டு அத்துமீறின தாசி வீட்டுத்

தர்பார் செலவுகளுக்காகவும் வேண்டி வருகிற பணக்கார வீட்டுப்பசங்களைப் பத்து அஞ்சு ரூபாய் பெற்றுக் கொள்ளவைத்து, நூறு ரூபாய்க்குப் பத்திர மெழுதி சாவ்கார்கள் வாங்குவதும் உன் அருளாலேதான்! கிரந்தகர்த்தர்கள், பத்திராதிபர்கள், பெரியோர்கள் இவர்களின் எண்ணமெல்லாம், அவர்களின் மனதிலேயே தோன்றி மறையாதபடி வெளியிலே கக்கச்செய்து, அதை வாரி எடுத்து வைத்துக்கொண்டு அச்சிட்டு வெளிக்கிட்டு அழியாதபடி செய்வதும் உன் மகிமையே!

ஆ! காகிதமே! இன்னும் கடன் வாரண்டும் உன் மூலமாகத்தான்! ஜட்ஜ்மெண்ட் தீர்ப்பும், மரணதண்டனைத் தீர்ப்பும் உன் மூலமாகத்தான்! போலீஸார் குற்றங்களை நிர்மாணம் செய்வதும், வக்கீல்கள் கொலைக்கேஸைப் பொய்யாக்கப் பார்ப்பதும், நல்ல கேஸைக் கெடுப்பதும், தான் வைத்திருந்தவள் தன்னை விலக்கி யொதுக்கி விட்டால் அவளைப் பயமுறுத்தியும் கேவலப்படுத்தியும் மொட்டைக் கடிதங்களெழுதுவதும், அவதூறுகட்கு அடுக்கடுக்காக யுக்திகள் கிளப்புவதும், ஒரு பக்கம் அண்ணாவென்று அழைத்துக் கொண்டு மறுபக்கம் அவன்மேல் கோள்கள் எழுதுவதும், இன்னும் அநேகமெல்லாம் உன் மகத்துவத்தாலேதான். ரயில் டிக்கட்டும் நீயே! டிராம் வண்டி டிக்கட்டும் நீயே! மரண பண்டு பத்திரமும் நீயே! வீட்டுப்பத்திரமும் நீயே! பத்திராதிபர்களைக் கோர்ட்டுக்கு இழுக்கும் அந்த இராஜ நிந்தனைப் பத்திரிகைகளும் நீயே! சண்டைக்கு முன்பு அனுப்பிக் கொள்ளும் இறுதிக் கடிதங்களும் நீயே! யுத்தம் தீர்ந்து எழுதப்படும் சமாதானப் பத்திரங்களும் நீயே! உடன்படிக்கைப் பத்திரங்களும் நீயே! நானே பாத்தியஸ்தன் என்றொரு அநாமத்துப் பேர்வழி புறப்படுவதும் உன் ஆதாரத்தைக்கொண்டே! இன்னும் தபால் கார்டு, கவர், ஸ்டாம்புகள் என்ன வெல்லாமோ யாவும் நீ தான்! உன்னைக்கொண்டு பூச்செண்டுகளும்! பூச்செடிகளும், பூமாலைகளும் இன்னும் ஆயிரம் வித அருமை வேலைகளைச் செய்வதும் என்னென்று சொல்வது?

கடைசியாகப் பார்க்கப் போனால், நீயே காரன்ஸி நோட்டாகவும், பணமாகவும் இருக்கிறாய்! அப்போது உன்னை இருகூறாகப் பிளந்தாலும் செலாமணியாகி விடுகிறாய்! பாங்கு செக்குகளும் உண்டியல்களும் நீயே! வேதமும் நீயே! சாஸ்திரமும் நீயே! கடவுளிருப்பிடத்துக்கு வழிகாட்டும் போதகங்களை அடக்கிக்கொண்டுருப்பதும் நீயே! உலகவியாபாரமும், ஒருவனுடைய அந்தரங்க பஹிரங்க திருட்டுத்தனமான — மோசமான — கணக்குக் குறிப்புகளும் நீயே! வித்வான்கள் கவிபாடிச் செல்வதும் உன்மூலியமாகவே! இருக்கிற வரையில் உதைத்துச் சோறு போடாமல் சாகவைத்து, அப்பாலே இறந்த துக்கம் காட்டி சரமகவிகள் அச்சுப்போடுவதும் உன் உதவியாலேதான்! புருஷன் வீட்டிலிருந்து கொண்டு தாய் வீட்டுக்குக்குத்தான் படுங்கஷ்டங்களை எழுதுவதும் உன்னாலேதான்! "இடமில்லாத இடத்திற்கு, புருஷனைப் பெற்றவளும் வந்தாளாம்" என்பதாக தகாத இடத்திற்குக் கடிதங்கள் எழுதிவிட்டு சச்சரவுப் பட்டுக் கொள்வதும் உன்னாலே தான்!

மனதில் பிரிய மில்லாவிட்டாலும், காரியத்துக்காக வெகு பிரியம் காட்டி எழுதுவதும் உன்னிலேயே! "அவளுக்கு உங்கள் மேலேயே அதிக ஞாபகமாக இருக்கு; பையன் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறான்; கோமனத்துக்குச் சீக்கிரம் காசுமாலை வேணுமாம்" என்று தாய்க்கிழவிகள் தங்களின் மருமகன்களுக்குக் கடிதம் தீட்டுவதும் நீட்டுவதும் உன் மூலமாகத்தான்! ஆ! காகி

தமே! உன்னிலே பத்தெட்டு பக்கம் வெகு பசந்தாக ஆயிரம் அன்பு வார்த்தைகள் கொட்டி எழுதுவதற்கு வருகின்றதே! அப்படி எழுதியவர்கள் பரஸ்பரம் நேரில் சந்தித்துக் கொள்கிறபோது, அந்த ஆயிரத்தில் ஒரு வார்த்தைதானும் பேசமுடிகிறதா? கண்ணே! பெண்ணே! மணியே! மானே! தேனே! மயிலே! குயிலே! ரதியே! இன்பமே! புவன வல்லபா! சுகுமாரா! என்னைக் கைவிடாத காருண்யமுள்ள கம்பீரமான காதலா! — என்ற இந்த வார்த்தைகளில் ஒன்றேனும் நேரில் கூறவருகிறதா? வராவிட்டாலும் உன்னிலே எழுதுகிறபோது சரமாரியாகக் கொட்டுகிறாயே! இன்னும் நாவல்கள் நீயே! ஆவல்கள் நீயே! கதைகள் நீயே! காமப்பிரபந்தங்கள் நீயே! கேட்லாக்குகள் நீயே! நாடக நோட்டீசுகள் நீயே! பசந்தான பாட்டுகள் நீயே! இன்னாருக்கு 'ஓட்டு' கொடுங்களென்று பெரிய எழுத்தில் தீட்டுவதும் நீயே! சரஸ்வதி பூஜையில் கும்பிடப்படுவதும் நீயே!

ஆ! காகிதமே! நீயே அட்டையாகிறாய்! அதற்குமேல் ஒட்டும் பயிண்டு காகிதமும் ஆகிறாய்! வீட்டுச் சுவர்களில் ஒட்டவும் அலங்காரமாக உதவுகிறாய்! உன்னைக் கொண்டு கூடைகளும் பெட்டிகளும் செய்கிறார்கள்! இன்னும் உன்னால் என்னென்ன செய்யமுடியுமோ அவ்வளவும் தயார்ப்படுத்துகிறார்கள்! இவ்வளவுக்கெல்லாம் காரணமாகிக் கர்த்தாவாகி, ஆதிமூலமாகி நிற்கும் உன் குடிபிறப்பை ஆழஆராயப் போனாலோ ரிஷி மூலம் நதி மூலம் விசாரிக்கப் போன கதையாகி முடிகிறது! இப்படிப்பட்ட நீ என்றைக்கும் வற்றாத செல்வமாய் விளங்குவா யென்று விகடமாமா வாகிய நானும் களித்துக் காத்து உன்னை நம்பிநாடி யிருக்க, ஐயோ! நீ இப்போது ஏழடுக்கு அரண்மனைமேல் உயர்ந்த விலையில் ஏறி விட்டாயே! உன்னைத் தொடர்ந்து பற்றி ஏற எனது தொந்தி வயிற்றால் முடியவில்லையே! ஆ! காகிதமே! நீ ஏழை பணக்காரனென்ற வித்தியாச மில்லாமல் எல்லோருக்குமே இலகுவானவனா யிருந்தாயே! சுலபமான விலையில் கிடைத்துவந்தாயே! ஐயோ! காகிதமே! அகவிலைக்குத்தான் — அன்புசிந்து நாள் — அவதி வந்ததென்றால், உனக்குங்கூட அவதி வந்து விட்டதே! இந்தியா பெருத்த தேசமென்றும், உன்னைச் செய்வதற்கு இயற்கையிலேயே இங்கு என்னென்னவோ புல் பூண்டு மண்ணாங்கட்டிகளெல்லாம் உண்டென்றும், ஆயிரத்தெட்டு பேர்கள் பேசுகிறார்களே தவிர, காரியத்தில் விசாலமாகப் பழுத்துக் கனியக் காணோமே!

ஆ! காகிதமே! நீ இல்லாமற்போனால், ஊர் எது? பதி எது? தபால் எது? வியாபாரமேது? படிப்பேது? நேச உறவுக் கடிதங்களேது? பத்திரிகை எது? பல பல புஸ்தகங்களேது? பாஸ் பண்ணுவதேது? உலகமே எது? செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வென்ற கதை இப்போது தானே தெரிகிறது! ஐயோ! நீ விலையில் உயரவே, அறிவுக்கான உணவும் உயர்ந்த விலையி லேறி விட்டதே! ஆ! காகிதமே! நீ கைவிட்டால் கடவுளே கைவிட்ட மாதிரி தானே! நீ தான் விகடமாமா வுக்கு உயிர்! இந்த விகடப் பயிரும் "பிரஜாநுகூல"னும் "ஆநந்த கதா கல்பக"மும் மற்றப் பத்திரிகைகளும் உன்னாலே தானே! போதும் போதும் உன் பொல்லாப்பு! இனியாவது கண்ணைத் திறந்து பார்! பழயவிலைக்கு வரப் பார்! உன்னை அன்போடும் கூப்பிடுகின்றேன். உன்னை மோட்டாரில் வைத்து ஏற்றிக் கொண்டு போகிறேன். பழய விலைக்கு மறுபடியும் வா வா வா வா வா வா! பிறகு உன்சித்தம், என் பாக்கியம்! ஸர்வம் காகிதமயம் — ஜகத்மாமா! ராமா! சுபம்! சூ!! சுவாஹா!!!

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை

கமலம். - 17 | திரிச்சி : டிசம்பர்மீ 1921. | இதழ் - 10

ராதா சந்திரா.

(முன்தொடர்ச்சி.)

காமாக்யநாதன் என்ன செய்தும் ருக்மணிகுமாரனுடைய ஸமாசாரமே கிடைக்கவில்லை. மாதமாயிற்று, வருஷமுமாயிற்று. காமாக்யன் ஏதோ நோயுற்று லோகாந்தரமடைந்தான். இராதாவுக்கு மறுபடி தகப்பன் வியோகமானது போல் துக்கமுண்டாயிற்று. பிறகு சொந்த வீட்டிலேயே வாஸம் செய்யப்போனாள். ஆஸ்தியெல்லாம் அபிவிருத்தி யடைந்திருந்த படியால், இரண்டு லக்ஷ ரூபாய்களைக் கவர்ண்மெண்டாரிடம் அனுப்பித் தன் வீட்டுக்கு எதிரில் ஒரு அன்னசத்திரம் போடும்படியும், அதற்குப் பெயர் "ருக்மணிகுமார பிரஸாத மந்திர"மென்றும் சொல்லியனுப்பினாள். இப்பெயரைக் கேட்டதும் அவர்கள் வியப்படைந்து, அதைப் பற்றி நமக்கென்னவென்று அநாதை நிவாஸத்தை அதிசீக்கிரத்தில் ஸ்தாபித்தார்கள். மறுதினம் முதற்கொண்டு அநேக தீனர்கள் வந்து வயிறார உண்டு ஸந்தோஷமடைந்து போனார்கள். இரண்டு வருஷங்களுக்குப்பிறகு ஒரு பெரிய மனிதன் அந்த அநாதை நிவாஸத்தைப் பார்க்க வந்தான். அவன் வயது முப்பத்து நான்கு அல்லது முப்பத்தைந்து இருக்கலாம். அவன் கம்பீரமான புருஷன், மேலும் நல்ல ஐச்வர்யவந்தனாயும் காணப்பட்டான். அவன் அந்த ஸத்திரத்தின் வாசலண்டை நின்று, இது யாருடைய வீடென்றான். அங்கிருக்கப்பட்டவர்கள் அது ருக்மணி குமாரனுடைய அநாதை நிவாஸம்; இதில் அநாதர்கள் ஆதரவடைந்து வருகின்றனர் என்றனர்.

காவலாளிகள் சொன்னதும் ருக்மணிகுமாரப் பிரஸாத மந்திரத்துள் பெரிய மனிதன் சென்று அங்கிருக்கும் அழகிய கட்டடங்களையும், அநாதைகளுக்குப் போஜனமளிக்கும் விதத்தையும் பார்த்து மகிழ்ந்து "இது யாரால் நடத்தப்படுகிறது?" என, அங்குள்ளவர்கள் இராதாவின் பெயரைச் சொல்லி அவள் மாளிகையையும் காண்பித்தார்கள். அப்பெரிய மனிதன் இராதாவின் வீட்டிற்குள் சென்று திவானிடத்தில் ஒரு கடிதத்தைக் காட்டி

இதை உங்கள் எஜமானியிடம் கொடுத்து விடைபெற்று வாருங்களென்றான். திவான், ஐயா! எங்கள் எஜமானியிடம் கொடுக்கு முன் இந்தக்கடிதத்தை நானே படிக்கவேண்டும் என, அம்மனிதன் அவசியம் தாங்கள் படிக்கலாமென்றான். திவான் கடிதத்தைப்படித்தார்.

"பிரியபகினி! இவர் புருஷனுயிருந்தாலும் நீ ஏகாந்தமாய் இவரோடு பேசலாம் பயமில்லை. நடக்கும் ஸங்கதிகளை எனக்குச் சொல்லு.

ஸ்ரீமதி வசந்தகுமாரி" என்று எழுதப்பட்டிருந்தது.

இது காமாக்கியன் பெண் கையெழுத்தானதால் யாரும் ஆக்ஷேபம் செய்யவில்லை. கடிதம் இராதாயிடம் சென்றது. ஒரு பரிசாரகை இப்பெரிய மனிதனை அழைத்து ஓர் அழகிய அறைக்குள் உட்கார வைத்தாள். அவன் அதிக குதூகலமடைந்து மனதில் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கையில், ஒரு அபினவ சூரியன் உதயமானதுபோல் பிரகாசமுண்டாக, யார் என்று பார்த்தான்.

ஸ்ரீமதி இராதா தன் எதிரில் நிற்கக் கண்டு பரமாச்சரியமடையவே, "ராதா, நீங்கள் இவ்விதம் பார்க்க வந்ததில் எனக்கு இஷ்டமில்லை. வசந்த குமாரியின் கடிதத்தால் நான் ஒப்பும்படி நேர்ந்தது. எதற்காக என்னைக் காணவந்தீர்கள்" என, அப்பெரிய மனிதன் பதில் பேசாமல் பழைய பத்திரிகை யொன்றை இராதாவிடம் கொடுத்தான். அவள் அதைப் படித்ததும் காமாக்கியன் தனக்காக ருக்மணிகுமாரனுக்குக் கொடுத்ததாகக்கண்டு ஒருவேளை இவர்தான் ருக்மணி குமாரனு யிருக்கலாமென்று நினைத்துச் சந்தோஷத்தோடு உங்கள் பெயர் ருக்மணி குமாரராவென்றாள். உத்தரவில்லை. இராதாவுக்கு மனவருத்த முண்டாயிற்று. ஐயா! உங்களுக்கு இங்கென்ன வேலை. எழுந்திருந்து போகலாம் என்றாள். இவள் வார்த்தையைக் கேட்டதும் அவன் நகைத்து ருக்மணிகுமாரன் என்பது என் சொந்தப் பெயரல்ல. ஒரு காரிய விசேஷத்தால் நான் இப்பெயரை வைத்துக்கொண்டேன். அது யாருக்கும் தெரியாது. ஒரு பெண்ணிடம் மாத்திரம் சொன்னதுண்டு. அது எவ்வாறு வெளியாயிற்றோ அறிந்து போகலாமென்று என் பந்துவாகிய காமாக்கியனைப் பார்க்க வந்தேன். அவர் தெய்வத்தினிடம் சென்றதால் அவருடைய மக்களைக் கேட்டேன். அவர்களும் பதில் சொல்லாமல் வஸந்த குமாரி உன்னிடம் அனுப்பினாள். ருக்மணி குமாரனால் ஆகும் பிரயோஜனமென்ன? அதைச் சொல்லவேண்டுமென்றான். இராதா சந்தோஷமடைந்து நீங்கள், ஒரு பெண்ணிடம் உங்கள் பெயரை தெரிவித்ததாய்ச் சொன்னீர்களே, அவள் யார் சொல்லுங்கள் என, அம்மனிதன் ஏதோ உத்ஸவத்தின் ஸங்கதி கூறி, தான் தர்மம் கொடுத்ததைச் சொல்லாமல், ஐயோ! அப்படிப்பட்ட பெண்ணைத் தேடித்தான் இங்கு வந்தேன். அந்த அநாதைப் பெண் என்ன கதியானாளோவென் றழுதான். இராதா மனங்களித்து, ஐயா! தீனஸ்திதியி லிருந்த அப்பெண்ணுக்குத் தாங்

கள் உபகாரம் செய்யாமற் போனீர்களே! அவளை நினைத்து இப்பொழுது அழுவதில் என்ன பயன்? என, அவன் "அம்மணி! என்னிடம் அன்று அதிக மில்லை. ஏதோ இருந்ததைக் கொடுத்தேன். இப்போது அவளிருப்பாளானல் என்னையே அவளுக்குத் தத்தம் செய்வேனென்முன். இராதா பதில் சொல்லாமல் உள்ளே யெழுந்துபோய் இரண்டு நிமிஷத்துக்குள் திரும்பி வந்து ஒரு நோட்டை அவனிடம் கொடுத்து நமஸ்கரித்து, ஸ்வாமி! தாங்கள் அன்றைய தினம் இந்த அபாக்கியவதிக்குக் கொடுத்ததை அப்படியே வைத்திருந்தேன். அது இன்று உபயோகமாயிருக்கிறது. தங்கள் உண்மையான பெயர் இன்னதென்றறியேன். உங்களுக்காக இதுவரையில் காத்திருந்தேன். அன்றிராத்திரி இருவரும் சந்தித்தோம். இன்று பகல் பரஸ்பரம் முக தரிசனம் செய்யலானோம். நான் தங்களுக்குப் பாதபூஜை செய்கிறேன், சித்திரா! சுபவாத்தியம் வாசி யென்றுள். ருக்மணி குமாரன் இராதாவின் வாக்சாதுர்யத்தைக் கண்டு மனமகிழ்ந்து, பிராணகாந்தையே! உன் புருஷன் பெயர் தேவேந்திர நாராயணன். உன் பாதபூஜையை அன்போடும் ஏற்றுக் கொண்டேன், உன்னைப்போல் பாக்கியசாலிகள் யாருமிரார் என்றார். இராதா ராஜா தேவேந்திர நாராயணன் என்று கேள்விப்பட் டிருந்தேன் என, அவன் எனக்கு ராஜா பட்டம் வேண்டாம். குமார தேவேந்திர நாராயணன் என்றால் போதுமானது, என்று தன் கழுத்திலிருந்த ஹாரத்தை இராதாவின் கண்டத்தில் போட்டான். இராதாவும் அதே பிரகாரம் புருஷனுக்கு அமௌல்யமான வஜ்ரமணி ஹாரத்தை மாலையாகப்போட்டாள். சித்திரா மங்களம் பாடினுள். பிறகு இருவருக்கும் கல்யாணமாயிற்று. வசந்தகுமாரியும் அவள் சகோதரர்களும் வந்தனர். ராஜா தேவேந்திர நாராயணன் இராதாசந்திராவோடு பிரிய சல்லாபங்கள் செய்து இல்லறத்தை நடத்திக்கொண்டு வெகுகாலம் சுகமாக வாழ்வதானுன். ராதா சந்திராவும் தன் காதலில் வெற்றி கொண்டு பதிதர்ம பாராயணையாய் விளங்கினுள். சுபம்,

பரஸ்பரம் காதல் ஏற்படுங்காலம் — அது நேரும் வேளை, இன்னபொழுதில் தான்என்று வரையறுத்துச்சொல்வதற்கில்லை. உணர்வதற்கும் கூடவில்லை. இதற்குமுன் எத்தனையோ தடவை பரஸ்பரம் சந்தித்திருந்தும் — அப்போதெல்லாம் தோன்றப் பெறாத காதல், எப்போதோ ஏதோ ஒரு சந்திப்பில் திடீரென்று ஏற்பட்டுவிடுகின்றது. நெடுநாள் வரை அக்காதல் அவரவர்களின் மனதிற்குள்ளேயே மறைந்த ரகசியமாயிருந்து, பின் அதற்கான காலம் சந்தித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வைத்து ஒன்றுபடுத்தி விடுகின்றது.

யுக்திப் பந்தயம்.

(ஒரு பெரிய ஆங்கில நாவலின் சுருக்கம்.)

சாமர்த்திய தம்பதிகளின் ஸாகச விநோதம்.

இங்கிலாந்தின் ஒரு பகுதியில் அழகிய இளம் வாலிபன் ஒருவன. அவனுக்கு எந்த விதத்திலும் சமானமுள்ள மனைவியொருத்தி. அவர்களுடைய யவ்வனத்திற்கும் அழகிற்கும் ஏற்ற செல்வமில்லை. தங்கள் யவ்வனத்தையும் லக்ஷணத்தையும் தரித்திரத்திற்கே அடிமையாக்கி வாழ்ந்தனர். ஆனல் அழகுள்ள ஸ்திரீ புருஷர்களுக்கு இங்கிலாந்து பிரதேசத்தில் யாவராலும் நன்கு மதிப்புண்டு. ஒரு நாள் இவ்விளம் வாலிபன் வெளிச்சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்புகையில், ஒரு மேல்மாளிகை மீது பெருஞ்செல்வமுள்ள ஸ்திரீ புருஷர்கள் சாஸோல்லாஸமாய் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு பெருஞ்சிந்தனையுடன் இல்லத்திற்குட் பிரவேசித்தான். அவன் முகவாட்டங் கண்ட அவனது மனைவி காரணங் கேட்க, அதற்கு அவன் தான் கண்ட காக்ஷி கூறி ஒரு ஐம்பதினயிரம் ரூபாய் நமக்கிருந்தால் அவ்விதமான சௌக்கியத்தை அனுபவிக்கலாம்; அதற்குப் பாக்கியமில்லையே என்றனன். அவளோ தனது கணவன்மீது மிகுந்த காதலும் போன்பு முடையவள். உடனே ஒரு ஆலோசனையைச் சிந்தித்துக்கொண்டு அமெரிக்காவுக்கு எப்போது கப்பல் புறப்படுகிறதென்ன, அவன் மாலை 5-மணிக்கென்றன்.

தான் வெகு தினங்களாகச் சேர்த்துவைத்த ஒரு பவுனை அவன் கையிற் கொடுத்து இராஜ ஸ்திரீகள் உடுக்கும் உயர்ந்த உடையொரு ஜோடியும், நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியொன்றும் வாடகைக்கு வாங்கிவரும்படி செய்து கணவனைக் கப்பலடியில் காத்திருக்கும்படி சொல்லிவிட்டுவண்டியேறிப்புறப் பட்டாள்.

வண்டி அவ்வூர் ஜெனரல் டாக்டர் வீட்டுவாசலில் நின்றது. அந்த ஸ்திரீ வண்டியினின்றி றங்கினள். நடையுடை பாவனையைப்

பார்த்து இராஜஸ்திரீ யென்று மதித்து டாக்டர் அவளை உபசரித்தார். வந்தது யாது கருதியென்று வினவினர். தன் கணவன் ஒரு பெருத்த இரத்தினவியாபாரியென்றும், யாரோ ஒரு ஸ்திரீ அவனை ஏமாற்றி அவன் வைத்திருந்த பொருளைப் பறித்துக் கொண்டு போய் விட்டாளென்றும், அது முதல் அவனுக்கு அதுவே பைத்தியமாகி யாரைக்காணினும் "அவளெங்கே பணமெங்கே" என்று கேட்டுப் புலம்பிக் கொண்டிருப்பதாயும், அந்தப் பைத்தியத்தை மாற்றினல் வேண்டிய திரவியம்தான் கொடுப்பதாயும் டாக்டருக்குச் சொன்னுள். டாக்டரும் சம்மதித்து அவனைத் தருவிக்கும்படி சொன்னுர். அழைத்து வருகிறேனென்று வண்டியேறிப் புறப்பட்டாள். திருடப்போயினும் தெசை வேண்டும்.

வண்டி காசுக்கடைத்தெரு வழியே சென்றது. ஒருபெருத்த காசுக்கடை முகப்பில் வந்து நின்றது. நமது சாமர்த்தியவதி அக்கடைக்குட் புகுந்தனள். அக்கடையிலுள்ள நகைகளின் குறிப்பு (கேட்லாக்) வேண்டுமென்றனள். வியாபாரி அதைக்கொண்டுவந்து காட்டினன். அக்குறிப்பிற் கண்ட நகைகளுள் விலையுயர்ந்தவையான சில நகைகளைக் குறித்து எடுத்து வரச்சொன்னுள். நகைகளைப் பார்வையிட்டாள். விலைப்பட்டி (பில்) தயார் செய்யச்சொன்னுள். ஐம்பதினுயிரம் பவுன் விலை குறிப்பிடப்பட்டது. பில்லை வாங்கிக் கொண்டாள். நகைகளை ஒரு பெட்டியில் வைத்துப் பிறகு அனுப்பும்படி சொல்லிப் புறப்படத் தொடங்கினுள். ஒரே காலத்தில் இவ்வளவு பெருத்த தொகைக்கு மொத்த வியாபாரம் செய்தவள் தகுந்த பிரபுஸ்திரீயாயிருக்கவேண்டுமே; இவளை இப்பொழுது சும்மா விட்டுவிட்டால் அடுத்த கடைகளுக்கு ஒருக்காலிவள் போனுல் அவ்விடத்து நகைகள் இவற்றிலும் சிறந்ததாகக் காணின் அவள் மனம் அதை நாடி விடுமே யென்றுகருதி, "குற்றமில்லை நீங்களே எடுத்துப் போய்ப்பிறகு பணம் அனுப்பலாம்" என்று வியாபாரி கேட்டுக்கொண்டான். அப்படியானல் உன் கணக்கனை என்கூட அனுப்பலாம். அவனிடம் பணம் அனுப்புவோம் என்றனள். அப்படியே கணக்கனொருவனை அவள்கூட அனுப்பினன். நகைப்பெட்டியைத்தான் தூக்கிக்கொண்டு கணக்கனையும் வண்டியிலுட்கார வைத்துப் புறப்பட்டாள்.

வண்டி டாக்டர் வீட்டின் முகப்பில் வந்து நின்றது. நகைப்பெட்டியைக் கையில் தூக்கிக்கொண்டு கணக்கனை வாசலில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள். அவனெங்கே யென்று டாக்டர் கேட்டார். வாசலில் நிற்கும் கணக்கனைச் சுட்டிக்காட்டி இவர்தான் என்றனள். உள்ளே கூப்பிடு என்று டாக்டர் சொன்னுர். இப்பொழுது கூப்பிட்டுச் சிகிச்சை செய்யத்தொடங்கினுல் அவர் மிரண்டு "அவளெங்கே பணமெங்கே" என்று கூச்சலிடுவார். அத்தருணம்

அவருடைய பையில் புத்தகத்தைக் காட்டினால் சற்றே அடங்கியிருப்பார். அதைக் கொண்டுவர மறந்துவிட்டேன். இதோ போய் எடுத்துவருகிறேன். அதுவரையும் தாமதியுங்கள் என்று சொல்லிக்கொண்டு மற்றொரு வாசலிற் புகுந்து புறப்பட்டாள்.

வண்டி சென்று ஒருமணி நேரமாயிற்று. வாசலில் நின்ற கணக்கன் கூவத்தொடங்கினான். டாக்டரை வந்து பார்த்தான். டாக்டர் தான் அவள் கணவனென்று எண்ணியிருக்கிறான். "அவளெங்கே பணமெங்கே" என்று கேட்டான். அவள் சொன்னது டாக்டருக்கு உண்மையாயிற்று. சற்றே பொறு தருகிறோம் என்றார். சற்று நேரங்கழித்து, "அவளெங்கே பணமெங்கே"? "வருவாள் சற்றே பொறு". சற்று நேரங்கழித்து "அவளெங்கே பணமெங்கே" என்று இவ்விதமாக அடிக்கடி தொந்தரை கொடுக்கவே அகப்பட்டவனுக்கு அஷ்டமத்திற் சனி என்பதற்கிணங்க, நமது டாக்டரும் வைத்தியம் முற்றுகிறதென்று கருதி, அவளையும் காணாமையால் உடனே எழுந்து தன் ஆளைக்கொண்டு அவனைப் பிடிக்கவே, கணக்கன் ஐயோ! "அவளெங்கே பணமெங்கே" ஐயாவென்று அலறினான். இனித் தாமதிக்கலாகாதென்று டாக்டர் கணக்கனைப் பிடித்துக்கட்டிச் சிகிச்சையிலிருத்தினர். கணக்கன் வெகுநேரம்வரையும் வராமையால் கடை முதலாளி ஆள் விட்டுத் தேடப் புறப்பட்டான். இராத்திரி 10-மணிவரையுந் தேடினர். அவனிருக்குமிடந் தெரியவில்லை. புலம் விசாரித்து மறுநாட் பகலில் டாக்டர் வீட்டிற் கண்டனர். அவன் கிடக்கும் அலங்கோலத்தைக்கண்டு உண்மையுணர்ந்து துக்கித்தனர். டாக்டருக்கும் பிறகு உண்மை தெரிந்து ஆச்சரியமும் அனுதாபமுங்கொண்டு கணக்கனைப் பக்குவப்படுத்தி யனுப்பினர். இது கிடக்க, இனி அந்தப் பெண்ணைப்பார்ப்போம். ஓடிப்போனவனுக்கு ஒன்பதாமிடத்திலே ராஜா என்பது போல வண்டி கப்பலடியில் வந்து நின்றது. கணவனும் முன்னமே அங்கு வந்திருந்தான். ஒரு சிறு நகையை அவன் கையிலெடுத்துக் கொடுத்து விற்பனையாக்கி வண்டி வாடகையைக் கொடுத்து வண்டிக்காரனை யனுப்பிவிட்டு, அரை மணி நேரத்திற்குள் கப்பல் போய் நிற்கும் துறைமுகம் ஒன்றிற்குப் பாஸ் வாங்கிக்கொண்டு கணவனோடு அந்தப்பெண் கப்பலேறினள். பிரஞ்சு தேசத்திற் போய்க் குடியேறினர். திருட்டுத்தொழிலிலே தனது மனைவி இத்தனை சாமர்த்தியசாலியாக இருப்பது தெரிந்து அந்த இளம் வாலிபன் மனங்களித்தான். தானும் அவளைப்போல் இன்னொரு ஸாகஸம் செய்ய விரும்பினான். அவள் என்னைப்போல் நடக்க முடியாதென்றாள். இவனோ சிச்சி இது ஒரு சாகஸமா? சொந்த ஊரைவிட்டு அந்நிய தேசத்தில் குடியேறும்படியான திருட்டு ஒரு சிறந்ததாகாது. சொந்த ஊரை விட்டுப்போகாமல் அவ்விடத்திலேயே நிலைத்து இந்த சாகஸம் செய்வதல்லவோ சிலாக்கியம்; இதோ காண்பிக்கிறேன்.

என்று வெளிப்புறப்பட்டான். வழியில் ஒரு குடையைத் திருடிவிட்டு நன்றாக உதைப்பழங்கள் பெற்றுக்கொண்டு திரும்பி வருகிற ஒருவனைச் சந்தித்தான். உடனே அவன் முகத்தில் காரித்துப்பினான். அவனுக்கு பல ஜனங்களின் முன்பு தான் உதைப்பட்டது பெரிதாயில்லாமல் அவன் துப்பியதே பெரிய அவமானமாகத் தோன்றியது. உடனே தன் கையிலிருந்த பேனாக்கத்தியை எடுத்துக்கொண்டு குத்தப்போக, இவன் ஏன் குத்த வருகிறாயென, அவன் நீ என் துப்பினாயென்ன, உன்னுடைய இளிச்சவாய்த்தனத்தைக் கண்டு தான் துப்பினேன்; என்னிடமிருந்து பழகினால் பிறகு நீயே இன்னொருமுறை என் மூஞ்சியில் காரித்துப்பென்று கேட்டுக்கொள்வாயென்றான். அவனும் இவனுடனிருக்கச் சம்மதிக்க, சரியென்று இருவரும் பிரயாணப்பட்டு அடுத்த பட்டணத்திற்குப் போனார்கள். விளக்கு வைக்கும் தருணம். ஒரு தக்க பிரபுவின் மாளிகை முகப்பில் போய்த் தங்கினர். எஜமானுடைய படுக்கையையும் இரும்புப்பெட்டியையும் சிஷியன் அம்முகப்பில் இறக்கி வைத்தான். அம்மாளிகையின் பிரபு அன்னியனாகிய எஜமானனைக் கண்டான். அன்னியனாகிய எஜமான் வகித்திருக்கும் நடையுடை பாவனைகளைக்கண்டு இவரும் தக்க பிரபுவாயிருக்கலாமென்று கருதி, க்ஷேமம் விசாரித்து, இன்றிரவில் இங்கேயே தங்கி மறுநாட் காலையில் போகலாமேயென்று பிரபு கேட்டார். எஜமானனும் அதற்கிசைந்தான். இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். சாப்பாட்டுமணி யடித்தது. எல்லோரும் போய் உட்கார்ந்தார்கள். அன்னியனாகிய எஜமான் மேஜையின்மேல் வைத்திருக்கும் குடி வகைகளின் பாத்திரங்களை இங்கிருப்பதை யங்கும், அங்கிருப்பதை யிங்குமாக விளையாட்டைப்போல மாறி மாறி எடுத்து வைத்துக்கொண்டிருந்தான். தனக்காக எடுத்து வைத்துக்கொண்ட பாத்திரந்தவிர மற்றப் பாத்திரங்களில் ஒருவர்க்குந் தெரியாமல் தன் சிஷ்யன் பார்க்கும்படியாக மட்டும் தன் கை நகத்திலிருந்து ஏதோ ஒரு வெள்ளைப்பொடியைத் தூவிவிட்டான். சாப்பாடு முடிந்ததும் எல்லோரும் அயர்ந்து நித்திரை போயினர். அந்தப் பொடியின் மகிமை அவர்களை விடியுமளவும் எழுந்திருக்க விடாது. தானும் சிஷ்யனுந் தவிர மற்றெல்லோரும் நித்திரைபோனபின், எஜமானாகிய அன்னியனெழுந்து சிஷ்யன் பார்க்கும்படியாக அவ்வீட்டுப்பிரபுவின் சட்டைப்பையிலிருந்து கொத்துச்சாவியை எடுத்து, இரும்புப்பெட்டி இருக்குமிடம் கண்டுபிடித்து, அதற்குச் சரியான சாவியைத் தெரிந்துகொண்டு பெட்டியைத் திறந்தான். நகை வகைகள் ஒன்றையும் தொடாமல் நோட்டுகளை மட்டும் எடுத்து நூறு ரூபாய் நோட்டுகள், மற்றும் சில்லரை நோட்டுகள் இவைகளை இனம் வாரியாகப் பிரித்து, அதின் இலக்கங்களையெல்லாம் தன் கைப்புத்தகத்தில் குறித்துக் கொண்டதோடு, ஒவ்வொரு நோட்டின் பின்பக்கத்தி

லும் தனது கையெழுத்தையும் செய்துவிட்டு, எல்லாம் முன்பு இருந்ததுபோலவே வைத்துப் பெட்டியைப் பூட்டிவிட்டான். தன் பெட்டியை மட்டும் உடைத்து ஒரு வாய்க்காலுக்கு சமீபத்தில் எறிந்துவிட்டான். பிறகு அவர்களுடன் இவனும் ஒருவனாகப் படுத்து தூங்கினான்.

விடிந்தது. எல்லோரும் நித்திரை விட்டெழுந்தனர்; நமது விருந்தாளியும் எழுந்திருந்தார். தன் பெட்டியைத் தேடினார். காணாததால் போலீஸாருக்கு விஷயத்தைத் தெரிவித்தார். அவர்கள் வாய்க்காலோரத்தில் பெட்டியைக் கண்டெடுத்தனர். விருந்தாளி அந்தப் பெட்டியில் இரண்டுலக்ஷம் பெறுமான நோட்டுகள் வைத்திருந்ததாகச் சொல்லி அதன் இலக்கங்களையும் காட்டினான். அந்த வீட்டைப் பரிசோதித்ததில்வீட்டு எஜமானனின்பெட்டியில் குறிப்பிட்ட இலக்கங்களுள்ள நோட்டுகள் இரண்டு லக்ஷத்துக்கிருந்தன. உடனே வீட்டுக்காரரைக் கைதியாக்க முயன்றனர். அவர் என்ன செய்வார் பாவம்! பெரிய மனிதர். மானத்துக்குப் பயந்து இரண்டு லக்ஷ ரூபாய் நோட்டுகளோடு கூட ஒரு 50 ஆயிரம் ரூபாயும் சேர்த்துக் கொடுத்து விருந்தாளியை சமாதானப்படுத்தி யனுப்பினார். போலீஸாருக்கும் தக்க வெகுமதி கொடுத்து விஷயம் வெளிக்கு வாராதபடி செய்து அவர்களையும் அனுப்பி விட்டார். விருந்தாளி ரூபாய்களையும் நோட்டுகளையும் கைப்பற்றிக்கொண்டு வீட்டிற்குத திரும்புகிறபோது அவரது சிஷ்யன், ஐயா! ஜெகஜால நாராயணத்திருடரே! இன்னொரு முறை என் மூஞ்சியில் கரிதுப்பும் என்று கேட்டுக்கொண்டான். இருவரும் வீட்டிற்கு வந்தனர். மனைவிக்கு இது சங்கதி தெரிந்தது. அவள் அதிக ஆர்வத்துடன் தன் காதலனைத் தழுவிக்கொண்டு, என் முகத்திலும் காரித்துப்பு என்று கேட்டுக்கொண்டாள். பிறகு மூவரும் சுகமே வாழ்ந்தனர்.

இது மேனாட்டின் மேலான கௌரவத் திருட்டு. நம் நாட்டில் விவாக காலங்களிலும், விசேஷதினங்களிலும் இவ்விதமான கௌரவ கைங்கரியங்கள் பந்துக்களால் நடப்பதுண்டு.

எப்பொழுதுமே—பிறரது டாம்பீக ஆடம்பரங்களில், ஐச்வரிய ராசிகளில், அவர்களுடைய பகட்டான 'தடபுடல்' மொழிகளில்—நம்பிக்கைகொண்டு மயங்கிடாதீர்கள். அவர்களுக்கு சிரம் குனிந்து வணங்காதீர்கள். உங்கள் வாழ்க்கை எளிய நிலையேயாயினும், நீங்களும்—'உங்கள் வீட்டிற்கு எஜமானர்கள்'—என்ற பெருமையை உணர்ந்துகொண்டு, அவர்களை அலக்ஷியமாய் உதறித் தள்ளி, அவர்களின் முன்பாக தன் மதிப்போடும் தலை நிமிர்ந்து நில்லுங்கள்.

இரண்டாம் பாகம்

கதா விலாஸம்

☞ இதில் இடமின்மையால் "ஆநந்தகதா கல்பகம்" "நான்காம் வால்யத்தில் 28 - கதைகள் வரை பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவை போக, மற்ற கதைகளை இங்கு காண்க.

24. 'சொல்ல வல்லீரா?'

ஞானகிபுரத்து அரசனான சத்தியசீலன் ஒரு நாட்காலையில் சில சேவகர்களோடு தன் நகரத்திற்கு சில மைல்களுக்கப்பாலுள்ள வனத்திற்கு வேட்டையார்த்தமாகப் புறப்பட்டுச் சென்றான். வேட்டை நாய்கள் சில அவனுடன் பின் தொடர்ந்து சென்றன. அரசன் தனது சேவகர்களுடன் அதிகாலை முதற்கொண்டு வெகு சிரமப்பட்டு வனமெங்கும் திரிந்தும் வேட்டை பலிதப்படவில்லை. சூரியன் அஸ்தமிக்க ஐந்து நாழிகைப் பொழுதிருக்கும்போது அரசன் தனது சேவகர்களை மூன்று வகுப்பினராகப் பிரித்து வனத்தின் மூன்று திசைகளில் அனுப்பிவிட்டு, தான் மாத்திரம் அஸ்வாரூடனாய் நான்காம் திசையை நோக்கிச் சென்றான். மரங்களடர்ந்த அவ்வனத்தில் அன்று எதிர்பாராதபடி காற்று மிகப் பயங்கரமாய் சண்ட மாருதம் போன்று வீச ஆரம்பித்தது. செடி கொடிகள் காற்றினால் அலைப்புண்டு தத்தளித்தன. இதனோடே மழையும் தாரை தாரையாய்ப் பொழிந்தவண்ணமாயிருந்தது. அடிக்கடி பலத்த இடி முழக்கமும், கண்ணைப் பறிக்கும்படியான மின்னலொளியும் அவ்வனத்திடையே சேவகர்களைத் திகிலடையுமாறு செய்தன. வனமெல்லாம் அந்தகாரமாக இருண்டுவிட்டது. அரசனுடன் கூடவந்த சேவகர்களின் கதி என்னவாயிற்றோ! நாய்கள் எங்கு சென்றனவோ! ஒரு வேளை காட்டுமிருகங்களால் கடியுண்டு இறந்தனவோ! யாதும் அறிய முடியவில்லை. சத்தியசீல மன்னன் மாத்திரம் ஏகாங்கியாய்த் தனது குதிரையின்மேல் ஆரோகணித்த வண்ணமாய் வனத்திடையே சென்றுகொண்டிருந்தான். அவன் ஏறிச்சென்ற குதிரையானது களைப்

பின் மிகுதியால் மிக மெலிந்து சற்று தூரம் சென்று விழுந்துபோகும்படியான நிலைமையிலிருந்தது. அரசனும் மிக்க களைப்புற்றவனாதலால் சோர்வடைந்த முகத்துடன் சலனமின்றி குதிரையின் மேல் வீற்றிருந்தான். மழையாலும் குளிர்காற்றினாலும் மோதுண்டு அரசன் பிராணன் நீங்கியவன்போல் தோன்றினான். ஆயின் வாஸ்தவத்தில் பிராணன் போகவில்லை. குதிரையிலிருந்து கீழிறங்க அரசனுக்கு அவ்வமயம் சக்தி போதாமலிருந்தது. ஒருவேளை இறங்கித்தான் என் செய்வது! குதிரையோ வனத்தின் ஒரு கோடியிலுள்ள துஷ்ட ஜந்துக்கள் நிறைந்த—ஒரு பர்வதத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. தனக்கு முன்னால் பர்வதமிருக்கிறதென அஸ்வமறிந்ததோ! இல்லையோ! ஐயோ பாவம்! மிகக் களைப்புற்றிருந்த அது மேல் நடக்கமாட்டாமல் கீழேவிழுந்துவிட்டது. திக்கில்லார்க்குத் தெய்வமே துணையன்றோ! சத்தியசீலன் குதிரையின் நான்கு கால்களுக்கிடையில் வீழ்ந்து நசுங்கிப் போகாவண்ணம் பரமதயாளுவே காப்பாற்றினார் போலும்! குதிரை யொருபுறமும் சாரதியொரு புறமுமாக வீழ்ந்தனர். குதிரை வீழ்ந்த தக்ஷணமே மரித்துவிட்டது. அரசன் ஸ்மரணை தப்பிப் போய் உயிரற்ற பிணம்போல் கிடந்தான். சத்தியசீலன் இந்நிலைமையிலிருக்க, மழையும் சற்றுப் பொருத்துநின்றுவிட்டது. ஆகாயமும் மேகவிருள் நீங்கி நக்ஷத்திரங்களுடன் பிரகாசித்தது.

II

அரசன் வீழ்ந்த இடத்திற்கு சில கஜங்களுக் கப்பாலுள்ள பர்வதத்தில் ஒரு குகையுண்டு. அது நான்கு பேர் திருடர்களுக்கு வாசஸ்தானமாகும். குகையின் ஒருபுறத்தில் விளக்கெண்ணெயால் எரிக்கப்பட்ட தீப மொன்று மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. அன்று இரவானவுடன் கள்வர்களி லொருவன் யாதோ காரியார்த்தமாக குகையை விட்டு வெளிச் சென்றபோது பிணமாய்க் கிடந்த குதிரையையும் அதனருகில் மூர்ச்சையற்றுக் கிடந்த மனிதனையும் கண்டு, அவனருகில் சென்று அவனுக்கு உயிர் போகவில்லை யென அறிந்தவுடனே குகைக்குத் திரும்பி வந்து தனது தோழர்களுக்குத் தெரிவித்தான். திருடர் நால்வரும் அரசன் வீழ்ந்திருந்த இடத்திற்கு வந்து அவனை ஜாக்கிரதையாகக் குகைக்குத் தூக்கிச் சென்றனர். குகையை அடைந்தவுடன், ஈச்சம்பாயொன்றை விரித்து அரசனை மூர்ச்சையடைந்த நிலைமையில் அதில் கிடத்தினார்கள். குகையின் ஒருபுறத்தில் குளிர் காய்வதற்காக தீக்கனற்பு போடப்பட்டிருந்தது. கள்வர்களுக்கு சத்தியசீலனை இன்னாரென்று தெரியாது. நால்வரும் அவனைச் சுற்றிலும் உட்கார்ந்து அவனுக்கு மூர்ச்சை தெளிவிக்க சகல பிரயத்தனங்

களும் செய்தனர். கடைசியாய் நால்வரில் ஒருவன் சத்தியசீலன் வாயில் ஏதோ திரவ பதார்த்தம் கொஞ்சம் ஊற்றினன். சிறிது நேரத்தில் படுத்திருந்தவன் தூங்கி விழித்தவன் போல் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து தன்னைச் சுற்றிலும் உற்று நோக்கினன். கடைசியாய் வனத்திடையில் குதிரையின் பேரில் ஏறிச் சென்ற ஞாபகம் மாத்திரம் அரசனுக்கு உண்டு. அவன் தனது தற்போதைய நிலைமைக்கு ஆச்சரியமுற்று தனது உயிரைக் காப்பாற்றினவர் இந்நால்வரென ஊகித்து, தான் அவ்விடம் வந்த விருத்தாந்த மறிய ஆவல் கொண்டு, கள்வர்கள் யாதும் பேசாமுன்னம் அவர்களை நோக்கி "நீங்கள் யார்? உங்கள் விருத்தாந்த மென்ன? தயவுகூர்ந்து சொல்லுவீர்களா?" எனக் கேட்டான். அதற்குக் கள்வர்களிலொருவன், "நாங்கள் ஆராய்த்தா னிருந்தாலென்ன? எங்கள் சமாசாரம் உனக்கென்னத்துக்கு? நீ யாரு?" எனத் தோரணையுடன் சொன்னன். அரசன் தனது உயிர் மீட்சிக்கு அந்நால்வருக்கும் கடமைப் பட்டவனுதலால் அவர்களை நோக்கி வினயத்துடன், "நான் ஜானகிபுரத்து அரசன்; சில சேவகர்களோடு வேட்டை மார்க்கமாக வந்தேன்; என்னைப் பிரிந்து சென்ற சேவகர்கள் மழைக்காற்றினல் திரும்பவும் என்னை வந்தடையவில்லை. எங்கு சென்றனரோ! இறந்துதான்போனர்களோ! அறியேன் என மொழிந்தான். "நெசமா நீ ராசா தானு?" எனக் கள்வர்களிலொருவன் அரசனைக் கேட்டான். "நான் பொய் பேசுபவனன்று. மெய் பேசுவதையே நியாயமாய்க்கொண்டு சில காலமாக தெய்வ கடாக்ஷத்தால் அந்நியமத்தை நடத்திவருகிறேன்" என்று அரசன் கூறவும், "ராசாவாம்! நெசமே பேசுறவனும்! ஹேற! ஹேற!" எனக்கூறி அந்நால்வரும் சிரித்தனர். "ராசாக்கள்ளே கொஞ்சம்பேர் நம்மை விட பக்காத் திருடன்களிருக்கிறுங்கோ" என்று நால்வரில், மதமயக்கமுள்ள ஒருவன் புகன்றான். இவ்வாறு சொன்னவனை 'சீ, சீ, என மற்றொருவன் குறுக்கிட்டுச் சொன்னன். இவைகளைக் கேட்ட பின்புதான் அரசன் தான் மதுமயக்கம் கொண்ட திருடர் கையில் அகப்பட்டிருப்பதாகத் தெரிந்து கொண்டான். என் செய்வான் பாபம்! எனினும் தைரியம் விட்டவனல்ல. அரசர்களுக்கு தம் சேவகர்கள் பலத்தைக் காட்டிலும் சொந்த பலமென்ன அதிகமாகவிருக்கிறது? ஒருவேளை அரசன் பலவானுயினும் களைப்படைந்திருந்த அந்நிலைமையில் நால்வருடன் என்ன செய்ய முடியும்? அதுவுமன்றி அவனது பிராணனைக் காப்பாற்றியவர்களுக்கு, அன்னேர் கள்வர்களாயினும் காதகர்களாயினும் தீங்கிழைக்கலாமா? காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தினும் மாணப் பெரிதன்றோ? அதற்குள் கள்வர்களில் மூத்தோன் அரசனைப் பார்த்து "நீ சாதாரண மனுஷனுயிருந்தால் உன்னை இப்பவே விட்டிருப்போம். ஆனல் நீ எங்களுக்குச் சத்துருவான ராஜாவானதினலே உன்னைக்

கொல்லப் போகிறோம். எங்க குலதெய்வத்துக்கு பலி கொடுக்கப் போறோம். பார்" என்று அதட்டினான். அவன் பேசி முடிப்பதற்குள் இன்னொருவன் எழுந்து அரசனது தலையை உடைக்குமாறு கோடரி கொண்டுவந்து அரசன் முன்னிலையில் வைத்தான். அரசன் நிலைகுலைந்து மெல்லிய ஸ்வரத்துடன் "என்னை ஏன் கொல்லுகிறீர்கள்?" எனத் திருடர்களைக் கேட்டான். "உன் ராஜ்ஜியத்திற்காகத் தான் உன்னைக் கொல்லப் போகிறோம்" எனக் கள்வரில் மூத்தோன் சொன்னான். "என்னைக் கொல்லும்பட்சத்தில் என்னுடைய இராஜ்ஜியம் உங்களுக்குக் கிடைக்குமா?" என அவர்களை அரசன் வினவ, "ஏன் கிடைக்காதோ பார்ப்போம்; போடுங்களடா, தலையிலே அடிங்கடா" எனக் கள்வர் தலைவன் புகன்றதும், ஒருவன் "இதோ, அடிக்கிறேன் பாரு" என்று கையில் கோடாரி பிடித்துக்கொண்டு நின்றான். "சற்றுப் பொறு, சற்றுப் பொறு, நான் சாகவேண்டியது தானா? வேறு ஏதாவது மார்க்கமில்லையா?" என அரசன் கேட்க, தலைவன், மார்க்கமென்ன, கயித்திலே கட்டுங்கடா" எனச்சொல்லி அரசனை நோக்கி, "உன் ராஜ்ஜியத்தை எங்களுக்குக் கொடுத்தால், இப்பவே உன்னை விட்டிடுகிறோம்" என்று சொன்னான். "இவ்வளவு தானே! அவ்வாறே கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் ஒரு விஷயத்திற்கு சம்மதம் கொடுக்கவேண்டும். அதாவது உங்களது தற்கால நடத்தையை விட்டு, நல்ல மார்க்கத்தை அனுசரித்துக் குடிகளுக்குத் தீங்கு வாாமல் அரசாட்சி செய்யவேண்டும். அதற்கு உடன்பட்டால் இராஜ்யம் கொடுக்கிறேன்" என்று அரசன் வேறு வழியில்லாமல் சம்மதித்தான். அதற்குத் திருடர்கள் "அப்படியே செய்யறோம், இப்பவே ராஜ்ஜியத்தைக் கொடு!" என்று அரசனைக்கேட்க, இராஜ்ஜியத்தை உங்கள் கையில் கொடுப்பதற்கு அதைச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு வந்திருக்கிறேனென எண்ணுகிறீர்களா? நான் எனது நகர் சென்று உங்களை அழைப்பித்து என் இராஜ்ஜியத்தை உங்கள் ஆதீனத்தில் சேர்ப்பிக்கிறேன்" என அரசன் உறுதிமொழி புகன்றான். அரசனது வார்த்தையில் திருடர்கள் சந்தேகங் கொண்டனராயினும் மதுமயக்கத்தால் சரி என்று ஒத்துக்கொண்டனர். அச்சமயம் குகைக்கு வெளியில் காலடி சப்தம் கேட்டது. எதிர்பாராத வண்ணமாய் அரசனது சேவகர்கள் குகைக்குள் பிரவேசித்தனர். மூன்று திசைகளிலும் சென்ற அச்சேவகர்கள் மழை காற்று இருட்டு ஆகிய இவைகளினால் ஒருவரையொருவர் சீக்கிரத்தில் சந்திக்க முடியாமற் போய்விட்டது. அவர்கள் தமது அரசனைத் தேடிக் காணாது யாவரும் தற்செயலாக அன்றிரவு குன்றை அடைந்தனர். குன்றின் ஒரு புறத்தில் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு குகைக்குள் சென்றனர். அரசன் தனது சேவகர்களைக் கண்டு ஆச்சரிய மெய்தி ஆனந்த பரவசனாகி அவர்களால்

திருடர்கள் நால்வரையும் கைது செய்து யாவருடனும் தனது நகருக்குச் சென்றான்.

III

சத்தியவந்தரான அரசர் தம் வாக்குக்குச் சிதைவு வாராமல் நடப்பவரன்றோ? வாக்குப் பரிபாலனத்தில் நீதிமன்னர் என்றும் பிறழாரென்பது நம் நாட்டுக்கு உரித்தான தன்றோ? அரிச்சந்திரனும் தன் வாக்குப் பரிபாலனத்திற்காகவே இராஜ்ஜியம் நீங்கி மனைவி மக்களை விற்று புலையனிடம் அடிமை கொண்டு அல்லோல கல்லோலப்பட்டான். நமது சத்தியசீலனும் அச்சாரியினனாதலால் தான் கொடுத்த வாக்கைப் பாலிக்காமலிருப்பானோ? அரசன் தன் நகரை அடைந்ததும் "ஜானகிபுரத்தைக் கள்வர் நால்வருக்குக்கொடுக்க அரசர் நிச்சயித்தார்" என்று இராஜ்ஜியமெங்கும் பறை அறைவிக்கும்படி செய்தான். திருடர்களுக்கு இராஜ்ஜிய பட்டாபிஷேகம் செய்விக்க சகல பிரயத்தனங்களும் நடந்து வந்தன. இராஜ்ஜியத்தை ஆளுவதற்கான பயிர்ச்சியும் கள்வர்களுக்கு கொடுக்கப்பட்டது. பந்துமித்திரர் மந்திரி பிரதானிகள் முதலியோர் அரசனது இவ்வெண்ணத்திற்கு இணங்காது அதற்கு மாறாக அரசனுக்கு பலவாறாகப் போதித்தனர். யாதும் பயன்படவில்லை. அரசன் அவர்களது போதனைக்கு இணங்கியவனன்று. "சத்தியம் காப்பதைக் காட்டிலும் இராஜ்ஜிய பரிபாலனம் எனக்கு மேலான தன்று. ஆதலால் எனது இராஜ்ஜியத்தை கள்வருக்குக் கொடுக்க நிச்சயித்து விட்டேன்" எனப் புகன்று அவர்களது மொழிகளை நிராகரித்தான். பிரஜைகள் அனைவரும் அரசனது மனத்திரிபைக் கண்டு மயங்கி தங்கள் இராஜ்ஜியம் திருடர் வசமாவதைக் குறித்து விசாரமுற்றனர். அரசர் நினைத்த காரியம் எது தான் நிறைவேறாமற் போகிறது? திருடர் பட்டாபிஷேகமும் நடந்தே தீருவதாயிருந்தது. குறித்த நாளில் திருடர் நால்வரும் பூஷணாலங்கிருதராய் கைகளில் வாட்கள் பிடித்துக்கொண்டு இராஜ்ஜியத்தை கைக்கொள்ள ஆவலுடன் கோட்டைக்குள் பிரவேசித்தனர். அரசனும் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வல்லவனாயினோனென்ற ஆநந்தத்தோடு அவர்களை வரவேற்று நின்றான். நமது அரசனுக்கு சுமந்திரனை யொத்த பிரதான மந்திரிபுங்கவனொருவனுண்டு. யாவரும் பட்டாபிஷேகத்திற்குத் தயாராயிருக்கையில் அமைச்சர் பெருமான் திருடர்களை நோக்கி, இவ்வாறு புகல்வதாயினான்.

"மகாராஜா அவர்கள் இந்நகரத்திற்கு உங்கள் நால்வரையும் அதிபராய் ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார். நீங்கள் இனி எங்களை ஆளுகிற அரசர்களாகிறீர்கள். இனிமேல் நீங்கள் இவ்விராஜ்

ஜியத்தின் கிராமங்களையும் பூமிகளையும் நால்வருக்கும் சமபாகமா
கச் செய்து வேறு வேறாய் அரசாட்சி நடத்தலாம். அதற்கு முன்
இங்கே உங்களுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டியிருக்
கிறது. எங்கள் ஆசாரப்படி நடைபெறாவிடின் உங்களுக்கு ஆளு
கைச் சுதந்திரம் கிடையாது. (சிம்மாசனத்தைக் காட்டி) அதோ சிம்
மாசனம் தெரிகிறது. அதன் மேலிருக்கிற ஸ்வர்ண நாற்காலியின்
மீது நீங்கள் ஒவ்வொருவராய் வீற்றிருந்து, அதோ நிற்கும் புரோ
கிதர் கையிலிருந்து மங்களாட்சதையை சிரசில் வகித்து வாருங்
கள். முதலில் அட்சதையைப் பெறுவோர் தான் பெரிய ராஜனா
வார்" என்று மந்திரி கூறினார். மந்திரி சொன்ன சொற்களை நால்வ
ரும் சிறிது நேரம் யோசிக்கத் தொடங்கினர். நால்வரில் எவன்
முதலில் செல்வதென்பதுதான் அவர்களுக்கு யோசனைக்கிடமாயி
ருந்தது. "முகூர்த்த நேரம் சமீபிக்கிறது. சடுதியில் செல்லுங்கள்"
என மந்திரி எச்சரித்தவுடனே, திருடர்களில் மூத்தவன் 'நானு
முதல்லே உட்காரவேணும்,' எனப் புகன்று சிம்மாசனத்தை
நோக்கிச்செல்லும்போது, இரண்டாவதவன் குறுக்கிட்டு "நீ மாத்
திரம் என்ன முதல்லே" எனத் தடுத்தான். மூத்தோன் "அடே
புத்தி கெட்ட மடையா! உனக்குத்தானென்ன முதல்லே" எனச்
சொன்னவுடன், இரண்டாவதவனுக்குக் கோபமூண்டு மூத்தோன்
தலையை வாளால் வெட்டுவதற்குள் அவனும் இவனை மார்பில் குத்
தினான். இருவரும் வெட்டுண்டும் குத்துண்டும் நிமிஷ நேரத்தில்
பூமியில் வீழ்ந்திறந்தனர். இதைக் கண்ட எஞ்சியிருந்த இருவருள்
ஒருவன் சிம்மாசனத்தை நோக்கிச் செல்ல, மற்றவன் தடுக்க அவ்
விருவரும் முன்னவர் போலவே வாட்களால் புடையுண்டு ஒருவன்
குடல் பிதுங்கியும், மற்றவன் தலை வெட்டுண்டும் மாண்டனர். நான்கு
திருடர்களும் தங்களது பிரவர்த்திக்குத் தகுந்த கைம்மாறு தங்க
ளாலேயே அடைந்தனர். தீய நெறியைச் சார்ந்தோர் எந்த இழி
வான இறுதியை அடைவார்களோ அவ்விறுதியையே கள்வர் நால்
வரு மடைந்தனர். சிம்மாசன அறையில் பட்டாபிஷேகத்திற்குப்
பதிலாய் இரத்தாபிஷேகமே நடைபெற்றது. அரசனது அவைக்
களம் பிணக்களமாயிற்று. பந்துமித்திரர், மந்திரி பிரதானிகள்,
பிரஜைகள் ஆகிய அனைவரும் அரசனது எண்ணம் நிறைவேறாமற்
போனதற்கு மிகவும் ஆனந்தித்தனர். வாசகர்களே! இச்சிறு கதை
யில் சத்தியவந்தனும் நமது அரசனது மேன்மைக் குணத்தை அதி
கமாய்ப் போற்றிப் புகழ்வதோ? அல்லது பிரஜா க்ஷேமத்தைக்
கோரி அமைச்சர் பெருமான் காட்டிய சமயோசித புத்தி நுட்
பத்தை அதிகமாய்ப் போற்றுவதோ? சொல்ல வல்லீரா?

U. N. இராமசாமி நாயுடு
'வித்தியா விநோதி' 'காவிய விசாரத'

25. ஒரு ஜமீன்தாருடைய செலவுகளின் விநோதம்.

திவான் பிரசண்ட ராவ்:—என்ன ஐயா, கணக்குகளெல்லாம் தயாராக இருக்கிறதா?

வேங்கடசாமி நாயுடு:—நாம் வைத்தது தான் கணக்கு. அது எவ்வாறிருப்பினும் ஜமீன்தாரவர்கள் கையெழுத்து செய்துவிடுவார்கள். இம்மாதம் தர்மச் செலவு மட்டும் ரூபாய் 76,700-9-7 ஆயிருக்கிறது. இதில் பைசா கணக்கு கூட காண்பித்திருக்கிறது. அப்படிக் காட்டாவிட்டால் நம்பிக்கை பிறவாது.

(ஜமீன்தார் வருகிறார்.)

ஜமீன்தார்:—திவான்ஜி! கணக்குகள் தயாராய்விட்டதா?

திவான்ஜி:—மகாப் பிரபு! யாவும் சித்தம். பிரபுக்கள் பார்த்துக் கையொப்பம் செய்ய வேண்டும்.

ஜமீன்தார்:—நமது கோழி இன்று நன்றாய்ச் சண்டை செய்தது.

திவான்ஜி:—திவ்யமாய் சண்டையிடுகிறது. எத்தனையோ சமஸ்தானங்கள் இருக்கின்றனவே. எந்த சமஸ்தானத்திலும் இதைப் போன்ற கோழிகள் கிடையாது. கோழிப் பந்தய ஸர்தார் என்றால் தங்களுக்கே தகும்.

ஜமீன்தார்:—நமது இன்ஜினீயருக்கு எத்தனை மனைவிகள்?

திவான்ஜி:—அவர் ஆங்கிலேய ரல்லவா? ஜீவகால பரியந்தமும் ஒரே மனைவி தான்.

ஜமீன்தார்:—நமது மாகாண கவர்னருக்கோ?

திவான்ஜி:—அவருக்கும் ஒரே மனைவி தான். கிறிஸ்துமத சட்டப்பிரகாரம் பல மனைவியர் விவாகம் கூடாது. ஒருவருக்கு ஒரு மனைவியே.

ஜமீன்தார்:—ஐரோப்பிய சாஸ்திரம் பயனற்றது. ஒரு மனைவியுடன் வாழவேண்டுமென்பது ஒரு கொடிய தண்டனை போன்றதாகும். அதனால் தனி மனிதரின் ஸ்வாதீனம் அடக்கப்பட்டு விடுகிறது. நமது சாஸ்திரங்கள் தான் மிகவும் மேலானவை. நமது சாஸ்திரங்கள் எத்தனை பெயரை விவாகம் செய்ய வேண்டுமென்றாலும் ஒப்புக் கொள்கின்றன.

திவான்ஜி:—நமது சாஸ்திரமே சர்வசிலாக்யம். இப்பொழுது தங்களுக்கு எட்டு மனைவியர், வேறு இருவர் இருக்கிறார்கள். இதல்லவோ கொடுத்து வைத்த பாக்கியம்.

ஜமீன்தார்:-தாங்கள் சொல்வது தான் சரி. கணக்கைக் கூறுங்கள். சொக்கட்டான் ஆடச் செல்லவேண்டும்.

வெங்கடசாமி நாயுடு:—கோபாலய்யர் மீது நாம் கொண்டு வந்த இரண்டு மூன்று கிரிமினல் கேஸ்களிலும், முத்தாயிக்கு சிக்ஷை விதிக்கும் நிமித்தம் லஞ்சம் முதலிய வழிகளில் செலவிட்டதும் பத்தாயிரம் சில்லரை ரூபாயாகும்.

ஜமீன்தார்:—முத்தாயியைத் தண்டிக்கவேண்டியது தான். அவள் மிகு ரூபவதி. என்னிடம் இருக்க மறுத்துவிட்டாள். அவளைத் தண்டிக்கும் வகையில் எவ்வளவு செலவாயினும் பாதகமில்லை. உள்ளுக்குள் இப்பெண்கள் எவ்வளவோ கேளிக்கையும் சரஸக்குட்டிகளுமா யிருந்து கொண்டு, வெளிக்கு ஏதுமே அறியாத பூனைகளைப் போல நடக்கிற சமர்த்துத்தனத்தை என்னென்று சொல்லட்டும்? இந்தப் பூனையும் பால் குடிக்குமா?—என்று நினைக்கும் வண்ணம் அவ்வளவு பேதமைத்தன்மையோடும் வெளியில் நடந்து காட்டிக்கொள்கிற இவர்களுடைய ஜாலமே ஜாலம்!

திவான்ஜி:—மகாப்பிரபு! இதற்குத் தான் ஸ்திரீஸாஹஸம் என்பார்கள். இவ்வளவு அழகை அவர்களுக்குக் கொடுதத பிரம்மதேவன் அவர்கள் மனதை மட்டும் பிற ஆடவர்கள் விஷயத்தில் ஏன் கல்லாக்கினுனே தெரியவில்லை!

வெங்கடசாமி நாயுடு:—நாராயணத் தேவரின் கேஸில் ஏழாயிரம் ரூபா செலவு.

ஜமீன்தார்:—:—எவ்வளவாயினும் சரி. எவ்விதமாயினும் தண்டித்து விட்டால் போதும். அவன் நமது ஊரில் குடித்தனம் செய்துகொண்டு, நமக்கு சரியாய் வீடு கட்டிக் கொண்டும் இருக்கிருன். வீட்டை இடிக்கச் சொன்னுல் கேட்கமாட்டான், கோர்ட்டில் ஒரு பொய் வியாஜ்யம் செய்தே அவன் கொழுப்பை யடக்க வேண்டும். சாக்ஷிகள்! குமாஸ்தா, வக்கீல் இவர்களுக்கு உங்கள் இஷ்டம் போல் கொடுங்கள்.

திவான்ஜி:—சித்தம். அவன்வீட்டை விற்கச்செய்து, ஜெயிலுக்கனுப்பி பிரபுக்களிடம் இனும் பெறுகிறேன்.

வெங்கடசாமி நாயுடு:—பதின் மூன்றும் தேதியில் தர்மச் செலவு:மூவாயிரம் ரூபாய்.

திவான்ஜி:—இந்தச் செலவு அரண்மனைத் தாசிகள் குடித்து விட்டு அடிததுக் கொண்டபோது உண்டான கலகத்தின் கேஸ்களை யடக்கி விடுவதற்காக.

ஜமீன்தார்:—சரி, இது அவசியமான செலவே. நமது தாசிகளுக்கு எவ்வளவு செலவானுலும் அது ஒரு செலவாகுமா? அவர்களுக்கு நேர்கிற அவமானம் நமக்கு நேர்ந்தது போலல்லவா? பிறகு வாசியுங்கள்.

வெங்கடசாமி நாயுடு:—பதினுன்காம் தேதியில் தர்மச்செலவு 2000 ரூபாய்.

திவான்ஜி.—இது வாய்க்காலில் ஜலம் விடுவதற்காகக் குறிப்பிட்டவருக்கு ஸமர்ப்பித்தது.

ஜமீன்தார்.—அப்புறம்?

வெங்கடசாமி நாயுடு.—23-ம் தேதியில் பத்தாயிரம் ரூபா. இது நீலாத்ரிராவின் மீது கொணர்ந்த 16-ம் நெம்பர் அசல் பிராதின் கோர்ட்டுச் செலவு. கணக்கு இன்னும் நெடுக இருக்கிறது.

ஜமீன்தார்.—சரி, நேரமாகிறது. கணக்குகள் எல்லாம் கிரமமே. இவ்வருஷ வருமானம் போக ஏதாவது கடனுண்டா?

திவான்ஜி.—லக்ஷத்து மூவாயிரம் ரூபாய் மாத்திரம் புதிய கடன். இந்தச் செலவைக் குறைக்க, ஆஸ்தானத்திலிருந்த தமிழ் வித்துவான்கள் யாவரையும் நீக்கிவிட்டேன். பெரிய கோட்டிலிருந்த தர்மசத்திரத்தை எடுத்துவிட்டு, பாத்திரங்களை அரண்மனையில் சேர்த்துவிட்டேன். அநுமதியானால் பெண் பாடசாலையையும் எடுத்துவிட உத்தரவு செய்கிறேன்.

ஜமீன்தார்.—பெண்களுக்குப் படிப்பு எதற்கு? அதைத் தவறாமல் நிறுத்திவிட வேண்டியதே. ஆனால் கலெக்டர் துரை மிக்க அபிமானத்துடன் சிபாரிசு செய்து வைத்திருப்பதால், இது விஷயத்தில் கொஞ்சம் யோசித்துச் செய்யவேண்டும். இதில் உபாத்யாயனிகளுக்கு எத்தனை மாத சம்பளம் பாக்கி?

திவான்ஜி.—இந்தப் பாலிகா பாடசாலையிலும், சமஸ்தான பாடசாலையிலும்கூட உபாத்தியாயர்களுக்கு ஆறுமாதத்திய சம்பளம் பாக்கி யிருக்கிறது. நம்மவர்களுக்கு இங்கிலீஷ் படிப்பு எதற்கு? இரண்டு ஸ்கூலையும் உத்தரவானால் எடுத்துவிடுகிறேன்.

ஜமீன்தார்.—மேல் மாதத்தில் யோசிப்போம். நீ போய் நமது ஸரஸ விலாஸ பங்கஜத்தை யழைத்து வா. அடே வெங்கா! பாச்சிகையைக் கொண்டு வா; ஒரு ஆட்டம் போடலாம்.

(உத்தரவுப்படி போகிறார்கள்.)

26. கங்காதீக்ஷிதரின் யக்ஞப் பிரயத்தன விநோதம்.

கங்கா தீக்ஷிதர்.—ஆமாண்டி! அடியே! நாளைய அமாவாசை கழித்த துதியை யன்று புறப்பட்டு யாக பிக்ஷைக்காகத் தேச ஸஞ்சாரம் செய்து வரட்டுமா?

மீனாக்ஷி.—தேச ஸஞ்சாரம் அல்ல, நீங்கள் கிராம ஸஞ்சாரம் கூட செய்யமாட்டீர்கள். இரவு பகல் முழுதும் நீங்கள் பெண்டாட்டியை யாரும் எடுத்துக்கொண்டு போகாமல் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பீர்கள். உங்களுக்கு இந்த நாளிலும் அறுபது

வயதுக்கு மேல் பால்ய பாரியை கிடைத்தாள். என்னை யாரும் எடுத்துப் போகமாட்டார்கள். தினமும் நான்கு நாழி தெருவில் சென்று நான்கு பெரிய மனுஷாளைப் பார்த்துவிட்டு வாருங்கள். நான் குடித்தனத்துக்கு வருமுன் ஆங்காங்கு அலைந்து நாலு துட்டு சம்பாதித்து வருகிறவர்—இப்போது அதுவும் போயிற்று.

கங்காதீக்ஷிதர்.—நீ வீட்டில் ஒருத்தியே இருக்கிறாயென்ற கவலையால் நான் வெளியில் போவதை நிறுத்திவிட்டேன். உன் விவாகநிமித்தம் செலவுசெய்த ஆயிரம் ரூபாயை நினைத்துக்கொண்டால் என் ஹிருதயம் வெடித்துப்போகிறது. உன் தகப்பனுருக்கு எண்ணூறு ரூபாய் ரொக்கமாகக் கொடுத்த சங்கதி உனக்கும் தெரிந்ததே. மூன்று சாமம் வரையில் பட்டினி கிடந்து காய்ந்து அடிகள் பட்டு துட்டு துட்டாய்ச் சேர்த்த எழுநூறு ரூபாய் போக முன்னூறு ரூபாய் கடன்கூட ஆயிற்று. அந்த உபாதியைத் தீர்த்துக்கொள்ளவே இப்போது யாக பிக்ஷையை ஆரம்பித்தேன். எக்ஞம் பெயர் சொன்னால் எத்தனை கல்நெஞ்சனுயினும், ஒரு ரூபாய் அரை ரூபாய் கொடாமலிரான்.

மீனுக்ஷி.—வருஷமாயினும் சரி, இரண்டு வருஷமாயினும் சரி, அலைந்து ரூபாய் நாலாயிரம் கண்ணில் கண்டாலல்லது மறுபடி வீட்டிற்கு வராதீர்கள். எனக்காக அவசரப்பட்டு வரவேண்டாம். நான் செட்டாய்க் குடித்தனம் செய்துகொள்கிறேன்.

கங்காதீக்ஷிதர்.—நான் அவ்வளவு காலம் உன்னை விட்டிருக்க மாட்டேன். ஊரை விட்டுப் புறப்பட்ட பின் என் பிராணனெல்லாம் உன் மீதே இருக்கும். நமக்கு இரண்டாயிரம் ரூபாய் கிடைத்தால் போதுமானது. ஆயிர ரூபா யாகத்திற்குச் செலவானாலும், ஆயிரம் நமக்கு மிச்சமாகிறது.

மீனுக்ஷி.—நீங்கள் உண்மையாகவே யாகம் கூடச் செய்யப் போகிறீர்களா? யாகமென்று சொல்லிப் பணம் சம்பாதித்து எனக்கு நகைகள் செய்து போடுவீர்களென்றல்லவோ நினைத்தேன். அவ்விதமான தரித்திர—ஆயிரரூபாய் எதற்குப் போதும்? எனக்கு நகை தான் செய்வீர்களா? கடன்தான் தீர்ப்பீர்களா? வீடுதான் கட்டுவீர்களா? மல்லிகார்ஜுன தீக்ஷிதர் யாகம் செய்கிறேனென்று பணம் சம்பாதித்துப் பெரியதாக வீடு கட்டிக்கொண்டாரே. அவரை யாரென்ன செய்தார்கள்?

கங்காதீக்ஷிதர்.—அவ்விதமல்ல. யாகம் செய்தால் மிகவும் லாபமிருக்கிறது. அனைவரும் ஸோமயாஜி என்றும் மரியாதை செய்வார்கள். ஸம்பாவனைக்குப் போனால் ஒரு துட்டு கொடுக்குமிடத்தில் இரண்டு துட்டு கொடுப்பார்கள். சோமிதேவி யம்மாள் என்றால் உனக்கும் எவ்வளவோ கௌரவம்.

மீனுக்ஷி—எனக்கு அந்தக் கௌரவம் வேண்டாம். பணம் தான் எனக்கு வேண்டும்.

கங்கா தீக்ஷிதர்.—யாகம் செய்தால் பரலோகத்திலும் அநேக லாபம் உண்டு. நீ அங்கு எவ்வளவோ சுகம் அநுபவிப்பாய்.

மீனாக்ஷி.—யாகம் செய்தால் சொர்க்கத்தில் என்ன சுகம் கிடைக்கிறதோ—அதை முதலில் சொல்லுங்கள்.

கங்கா தீக்ஷிதர்.—ஆனந்தமான ரம்பா சுகமும் கிடைக்கிறது.

மீனாக்ஷி.—ரம்பா பெண்ணா ஆணா?

கங்கா தீக்ஷிதர்.—ரம்பா பெண்தான். அவள் அழகை வர்ணிக்க பிரம்மாவுக்கும் சாத்தியமில்லை. ஆயிரம் வருஷம் தபம் செய்தாலும் கிடைக்காத அவளின் சுகம், மூன்று நாளில் யாகம் செய்தால் சுலபமாய்க் கிடைக்கும்.

மீனாக்ஷி.—இந்தப் பிரசங்கத்தை நிறுத்துங்கள். இந்த சௌக்கியம் யாவும் புருடர்களாகிய உங்களுக்கே இருக்கிறது. எனக்கென்ன இருக்கிறது? எனக்கு வருகிற லாபம் ஏதாவது இருக்கிறதென்றால் சொல்லுங்கள். அவ்விடம் ரம்பையைப் போல் அழகாயிருக்கும் யுவாபுருஷன் எவனாவது இருக்கிறானோ சொல்லுங்கள். தவறுமலிருப்பான். பிரம்மதேவன் ஸோமயாஜிகளுக்கு மாத்திரமே நியாயம் செய்கிறானா—என்ன? எனக்கில்லையா?

கங்கா தீக்ஷிதர்.—அடி! உன் கோரிக்கை நாசமாக! உனக்கு எத்தனைத் துர்ப்புத்தி உண்டாச்சுதடி? எத்தனை துராசையடி? உனக்கு மாத்திரம் சொர்க்கத்தில் இல்லாமல் போனதென்ன? மகாராஜி போல மணந்துகொண்ட கணவனுடன் ஆயிரம் காலம் சுகம் அநுபவிக்கிறாய். உன் புண்ணியத்தால் எந்த ஜென்மத்திலும் இந்தக் கணவனே கிடைக்கிறான்.

மீனாக்ஷி.—ஆகா! நல்ல சுகம்! எனக்கு இந்த ஜென்மத்தில் எழுதிய தலை யெழுத்து போதும். பணத்துக்கு ஆசைப்பட்டு என் தகப்பனார் உமக்கு அழுது தொலைத்தார். உங்களிடத்தில் என்ன இன்பம் பெற்றது? சுகம் கண்டது? ஒரு பாடு மில்லை. ஒரு மனைவியைத் திருப்தி படுத்தவே, செலவிடவே ஒரு கணவனால் ஆகாமல் அசக்தனாயிருக்கிறான். இந்த நிலையில் இரண்டு மூன்று பெண்களை அவனுக்கு விவாகம் செய்விக்கிறார்கள். அவர்கள் என்ன சுகம், வாழ்வு காணப்போகிறார்கள்? இந்த லக்ஷணத்தில் 60-வயதுக்கு மேலேயும் விவாகம் செய்துகொண்டு பாவம் பெண்களை உயிரோடு வதைக்கிறார்கள். பூலோகத்தில் தான் இப்படி யென்றால், சொர்க்கத்தில் கூடவா இந்த இந்த அநியாயம்? இவ்விதம் பக்ஷபாதம் செய்த பின்னும் பிரம்மாவுக்கு தேவத்துவம் என்ன வேண்டியிருக்கிறது? நான் எந்த ஜென்மத்தில் செய்த பாவமோ இக்கிழநாற்றம் எனக்கு லபித்தது. அடுத்த ஜன்மத்தில் இக்கிழவனும் வேண்டாம். விவாக சுகம் தெரியாமலே என் காலமும் கழியவேண்டாம். உங்கள் யாகத்திற்கும் உங்களுக்கும் ஆயிர நமஸ்காரங்கள்! என்னை அடுத்த ஜென்மத்திலாவது கொஞ்சம் சுகம் அநுபவிக்கச் செய்யும்.

கங்கா தீக்ஷிதர் — அடி. காதகி! உன் எண்ணம் தெரிந்தும் கூட நான் இனி வீட்டு விட்டுப் போவேனு? என் வயிறு எரிகிறது!

(என்று கூறிக்கொண்டே தீக்ஷிதர் தமது மனைவியை ஓங்கி அறைய, அவள் அழுதுகொண்டே உட்செல்கிருள். விருத்த விவாகத்தின் விமரிசையைப் பாருங்கள். இதில் யாருக்கு என்ன சுகமோ?)

27. மங்கையர் திலகம்.

ஒரு அதி விசேஷமான சிலாசாஸனத்தைத் தில்லியில் கண்டெடுத்திருக்கிறார்கள். போலீஸ் கவாத் மைதானத்தில் ஒரு மண்மேட்டை வெட்டும்போது அதனடியில் வெகு நேர்த்தியாய்க் கட்டப்பட்டுள்ள ஒரு கோரி காணப்பட்டது. அக்கோரியை சிலாசாசன உத்தியோகஸ்தர்களாலும் தில்லியிலுள்ள கீழ்த்திசை ஆராய்ச்சிக்காரர்களாலும் பரிசீலனை செய்தபோது, முன் இந்தியாவை ஆண்ட சக்ரவர்த்தி அவுரங்கஜீப்பின் கீர்த்தியும் கல்விப்பெருமையும் வாய்ந்த குமாரத்தி ஜேபுலநிஸாவின் கோரியென்று தெரிய வந்தது. இச்சீமாட்டி தன் வாழ்நாளில் தன் தந்தையினிடத்து மிக்க விஸ்வாஸமும் பக்தியும் உடையவளாயிருந்தாள். யோசனைகள் கேட்பதில் இராஜரீக விஷயத்தில் தந்தை இப்பெண்மணியிடத்தில் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்.

இப்பெண்மணி தன் தந்தையின் விருப்பத்துக்கிணங்கி விவாகம் செய்து கொள்ளவில்லை. ஆனால் இப்பெண்மணி பேரில் கல்வியும் செல்வமும் பெற்ற ஒரு வாலிபப் பிரபு உண்மையான காதல் செலுத்திவந்தார். பெண்ணும் அவரை நேசித்துவந்தாள். அரசனுக்குத் தெரிந்தது இவ்விஷயம். ஒருநாள் அவ்வாலிபப் பிரபுவின் வருகையை அறிந்த சக்ரவர்த்தி தன் மகளிருந்த மஹாலுக்கு வந்தார். அப்போது அங்கே நீர் காய்ச்சும் அண்டா ஒன்று அடுப்பின் மேலிருந்ததைக் கண்டு அவ்வாலிபர் அதில் ஒளித்துக்கொண்டார். இதை அறிந்த மன்னவன் அவ்வண்டாவில் என்ன இருக்கிறதென்று மகளை வினவினுன். மகள் அதில் குளிக்கத் தண்ணீரிருக்கிறதென்று பதில்கூறினுள். தகப்பன் அந்தத் தண்ணீரைக்காய்ச்ச அடுப்பெற்றும்படி உத்தரவிட்டான். வாலிபரோ எவ்வித சப்தமும் செய்யாமலே தனது காதற் கன்னிகைக்கு அவமானம் விளைவிப்பதைவிடத் தானே உயிர் விடலாமென்று அவ்வண்டாவில் வதங்கிச் செத்தாராம். ஆ! என்னே காதலும் அதன் முடிவும்!

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகட மாமா

(Registered.)

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

எந்த புத்தியைக் கொண்டுதான் ஈடேறுகிறதோ?



ஆ! ஆ! உலகமே! ஆ! கடவுளே! உங்கள் கூத்தே கூத்து! உங்கள் வேடிக்கையே வேடிக்கை! உங்களுடைய சட்டங்களும், உங்களுடைய திட்டங்களும், உங்கள் ரூல் ரெகுலேஷன்களும் அட அநியாயமே, ஒரு வழியா? ஒரு மார்க்கமா? ஒரு நேரா? ஒரு நிதானமா? ஒரு நிலையா? நிச்சயமா? உப்பு மிஞ்சினால் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினால் உப்பு— என்றபடி முன்னே போனாலும் கடி, பின்னே வந்தாலும் உதை, பக்கத்தில் நின்றாலும் இடி, அந்தண்டை என்றாலும் அடியாயிருக்கிறதே! அப்பால் உங்கள் நடுவில் ஒரு மனுஷன் எப்படியப்பா மூச்சைப் பிடித்துக் கொண்டு முழு ஆயுசையும் தள்ளிக் கொண்டு வாழ்ந்து வகைப்படுகிறது? வேதமும் அதன் பிரிவினைகளும், பலவேறு சமயங்களும் அவ்வவற்றின் விபரீதங்களும் தான் வெட்ட வெளிச்சமாக இருக்கவே இருக்கிறதே! அதில்தான் எண்ணற்ற மதங்களும் கோணல்களும் என்றால், மனிதர்கள் தங்கள் ஜீவிய காலம் வரையில் சாதாரண சுகமாய் வாழவேண்டியதற்கான ஏற்பாடுகளேனும் புத்திகளாவது, ஒன்றுக்கொன்று பொருந்தி ஒரே கண்ட சீராய் இருக்கிறதா? அல்லது கோணல் மாணல் குறுக்கல் நெடுக்கல் இன்றி நேரேயாவது நீட்டிக்கொண்டிருக்கிறதா? அடா பாபமே! கட்டுக்கதைகள்போலிருப்பனவெல்லாம் கடவுள் வாக்காம். புராணங்களெல்லாம் புத்திமதியாம். பாட்டிக்கதைகளெல்லாம் பழமொழிகளாம். பாட்டுகளெல்லாம் பகவத் நீதிகளாய் விடுகிறது! எதைத் தள்ளுவது? எதைக் கொள்ளுவது? எல்லாமே பெரியோர் வாக்கு. என்ன செய்யட்டும். எந்தப் புத்தியைக் கொண்டுதான் ஈடேறுகிறது?

கொஞ்சத்தில் யோசிக்கப்போனாலும், இவ்வுலகத்திலே ஒருமனிதன் எந்தப் பாடுபட்டாவது தேகத்தை நன்றாய்ப் போஷிக்க வேணும்; "நாழி யரிசிக்கே நாம்" என்று சொல்லி யிருக்கிறபடியினாலே, எவ்வளவுதான் உலகத்தைக் கட்டியாண்டபோதிலும், எவ்வளவு சம்பாதித்த போதிலும், எவ்வளவு பேரும் பெருமையும் பெற்றிருந்த போதிலும் "யோசிக்கின்ற வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்றதுபோல், தன் தேக சுகத்திற் கேற்றபடி நன்றாய்ச் செலவிட்டுச் சாப்பிடவேண்டிய தென்று சில சாஸ்திரங்கள் சொல்லுகிறது. இதன்படியே நடக்கப்போனாலும்,- சம்பாதிப்பதும் தின்பதுமாய் இருந்து காலம் கழிப்பது கூடாது; நமக்

சென்று நாலுதட்டு நாளைக்கு உதவும்படி சேர்க்கவேணும்; இன்னுமவைதை யார் பார்க்கிறார்கள்; கட்டுவதையும், கழிப்பதையும் கையில் பொருளிருப்பதையும் தானே மனிதர் கண்டு மதிக்கிறார்கள். "பணமில்லாதவன் பிணம்"—"ஆடையில்லாதவன் அரைப் பிணம்" என்கிறார்கள். உள்ள காலம் வரையில் தொந்திக்குத் துரோகம் பண்ணாமல் நன்றாய்ச் சாப்பிட்டு நாலுபேருக் கிட்டு நலமாய்ச் சுகஜீவியாக இறந்து போனாலும்,—அதன்பிறகும் இவனென்ன ஊதாரி மனுஷன்! பிள்ளை குட்டிக்கென்று ஒரு காசு கூட சேர்த்துவைக்காமல் போனானே! என்றும் பேசப்படுகிறது. இது கொண்டு சிலர் எல்லா விஷயங்களிலும் பிசுநாரித்தனம் பண்ணுவதோடுகூட, வயிற்றுக்கும் வஞ்சனை பண்ணி சாப்பாட்டுச் செலவில் சிக்கனம் காட்டுகிறார்கள். அந்தச் சிக்கனச் செலவிலேயே அவர்கள் பெண்டுகள் சிக்கனம் பண்ணி மிளகாயிலும் வெங்காயத்திலும் உப்பிலும் புளியிலும் திருடிக்கொண்டு உண்ணாமல் தின்னாமல் ஊருக்கழுது சாகிறார்கள். ஒருவன் பத்தாயிரம்ரூபாயானாலும்பகிரங்கப் பெருமைக்குச்செலவிட்டுவிடுகிறான் பத்து ரூபா சாப்பாட்டுக்குச் செலவிட வீட்டுள் சண்டைபோடுகிறார்கள்! எந்த வீட்டில் பார்த்தாலும் இந்தப் போராட்டமாய்த்தான் இருக்கலாம். இதில் எந்தப் புத்தியை ஏற்றுக் கொள்ளுகிறது?

சில சாஸ்திரங்களில் பெண்களுடைய சங்கடம் மகா பெரிது! அவர்களே உலகத்திற்கு மாயை; அவர்களாலேயே உலகம் கீழ்மேலாய்ப் புரண்டு போகிறது! சகல துக்கத்திற்கும்; சகல முட்டுப்பாட்டுக்கும், சகல காமகுரோத லோப, மோக, மத, மாச்சரியங்களுக்கும்—கடைசியாக சகல பாவங்களுக்கும் அவர்களே காரணம். அவர்கள் சங்காத்தம்—சம்பந்தமின்றி தன்னந்தனியாக வாழ்வதே உத்தம வாழ்வு என்று போதிக்கிறது. இதன்படியே நடக்கப்போனால், அடபயித்தியமே! பெண்ணில்லாத வீடு பேய் வீடு, அவர்கள் தானே வீட்டுக்கழகு, வெளிக்கு மகிமை! சகல இன்பத்துன்பங்களுக்கும் காரணம். அவர்கள் இல்லாவிட்டால் ஊரேது, பதியேது, குடியேது, குடித்தனமேது வாழ்வேது, நாலு பேர் வர போகவேது, வழக்க பழக்கமேது, பிள்ளைகுட்டியேது, பெற்றோர் பிறந்தாரேது, ஜாதியேது, குலமேது, சந்ததிவிர்த்தியேது, உடம்பிற்கு சுகமேது ஊட்டங் கொடுக்க உதவியேது? என்றும் சொல்லப்படுகிறது. பெண்ஜாதியை நீக்கித் தனிவாழ்வு வாழ்கிறவனைக் கண்டால்,—சீச்சீ! இவனென்ன பித்தம் பிடித்த பேயன், ஒண்டித்தனமாயிருந்து உலகத்தைக் கெடுக்கிறவன், இவன் முகத்தில் 'களை' இருக்கிறதா? இவன் வாய்க்குத் தாம்பூலம் உண்டா? வயிற்றுக்கு நல்ல சாப்பாடுஉண்டா? மார்புக்கு சந்தனம் உண்டா? வதன (முகம்)த்திற்குப் பொட்டுண்டா? இவன் செத்தால் அழுகிறது யார்? சிறைப்பட்டால் மீட்கப் பிள்ளையுண்டா? வாழ்வில்—சாவில் அழைப்பாருண்டா? பெரியோர் சிறியோர் மதிப்பார்களா? இவனுக்குப் பேரேது? பெருமையேது? சீ! இவன் கெட்டான் என்றும் சொல்லிவிடுகிறார்கள். இதிலும் எந்தப் புத்திப்படி நடந்துகொள்ளுகிறது?

பெண்களுடைய பேச்சைக்கேட்கவே கூடாதென்று சில சாஸ்திரங்களில் சொல்லுகிறது. அவர்கள் பேச்சைக் கேட்டு அநேகர் உயிர்ச்சேத முதலிய கஷ்டநிஷ்டூரங்களுக்கும் உள்ளானார்கள். அப்பப்பா! அவர்களுடைய கதை, தலையணை மந்திரோபதேசங்களுக்கே காது கொடுக்கக்கூடாதென்றும் சொல்லுகிறது. அதன்படி நடக்கப்போனால், சில

போதனைகளிலே —சங்கதிகளிலே, பெண்களுடைய பேச்சைக் கேட்கா விட்டால், ஒருவன் எவ்வளவு நீதி நூல்களை மென்று மென்று விழுங்கி விட்டிருந்தாலும், லௌகிக ஞாயத்தில் ஒழுங்காய் ஒட்டி நடக்கமாட்டானென்றும், உலகமெல்லாம் நடுங்கத் தக்க புஜபல பராக்கிரமம் பொருந்தியவனா யிருந்தாலும், பெண்ஜாதி பேச்சினால் சாந்தமாய் நடப்பானென்றும், புருஷருக்கு மந்திரி பெண்ஜாதிகளே யென்றும், புருஷரை நாலாவழியிற் சிதறவிடாமல் அவர்களின் சித்த விகாரத்தை அவ்வப்போது சமனப்படுத்தி நன்மார்க்கத்தில் திருப்புகிறவர்கள் தர்ம பத்தினிகளே தானென்றும், அவர்கள் பேச்சைக் கோடு தாண்டாமல் தள்ளாமல் ஒரு சொல்லாய் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும்சொல்லுகிறது. இதிலும் எந்தப் புத்தியை ஏற்றுக் கொள்கிறது?

சில சாஸ்திரங்களில் தாய் தகப்பன்மாரைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டுமென்றும் சொல்லுகிறது. சிலர் மனைவி யொருத்தி வந்தவுடனே பிரிந்து சம்சாரம் செய்வதே நல்லது என்கிறார்கள். இன்னும் சிலர் பிராமணர்களுக்குத் தானம் செய்வது மிகு சிலாக்கியம் என்கிறார்கள். சிலர் பிராமணர் பஞ்சமர் என்ற பேதம் கூடாதென்றும், இல்லாதவர்களுக்கும், பசித்தவர்களுக்கும், அங்க ஹீனர்கட்கும் செய்வதே நியாயம் என்கிறார்கள். சிலர் கூன்குருடு முதலிய அங்கஹீனர்களெல்லாம் மஹா பாவத்தைச்செய்து இந்தக் கதியாய் இருப்பவர்களானதால், அவர்களுக்குத் தர்மம் செய்தால் அந்தப்பாபம் நம்மைப் பீடிக்கும் என்கிறார்கள், சிலர் கொலை செய்யாததே பெரும் புண்ணிய மென்கிறார்கள். சிலர் இராஜ விஸ்வாசத்தில் போர்முனையிலே எதிரிகளைக் கொலைசெய்யலா மென்கிறார்கள். சிலர் களவு செய்ய வேண்டா மென்கிறார்கள். சிலர் "களவும் கற்று மற" என்கிறார்கள். சிலர் பொய் சொல்ல வேண்டா மென்கிறார்கள். சிலர் சாவுக்கேதுவான சங்கடத்தில் ஒரு பொய் சொல்லலா மென்கிறார்கள். வேறு சிலர் பொய் சொல்லாவிட்டால் எந்தவியாபாரமும் நடவாது, ஜீவனமும் முடியாது,உலகத்தில் வாழவே வகையில்லை யென்கிறார்கள். சிலர் மாமிஸ பக்ஷணம் கூடாதென்கிறார்கள். சிலர் ஆட்டை மாட்டை குதிரையை யாகம் வளர்த்தி அதிலிட்டுப் பொசுக்கிச் சாப்பிடலா மென்கிறார்கள். சிலர் கண்டதைப்படித்துக் காலங்கழிக்காமல் ஒரு விஷயத்தை ஊன்றிப்படித்து தீரத் தெளிய வேண்டு மென்கிறார்கள். சிலர் கண்டதைப் படிக்கப் பண்டிதனாவான்' என்று எல்லாவற்றையும் வாசித்துப்பார்க்கவே வேண்டு மென்கிறார்கள். சிலர் சாஸ்திரப் படியே நடக்கவேணும், "நாள செய்வது நல்லோர் செய்யார்"என்கிறார்கள். சிலர் "சாஸ்திரம் பாராத வீடு சமுத்திரம்" என்கிறார்கள். சிலர் மனிதர்கள் சாகவேண்டியது நிச்சயம்; சாவைத்தள்ளமுடியாது; மரித்த பின் மறுமைப்பயனை அநுபவிக்கலாகும் என்கிறார்கள். சிலர் சாவாதிருக்க வழிதேடிக் கொள்வதே மேலான ஞாயம்; சாகிறவன் யார்? நல்லவன் சாகக்கூடாது. பாவத்தின் சம்பளம் மாணமல்லவா? ஆகவே சாகிறவன் பாவி என்கிறார்கள். இதில் எந்த நீதியை ஏற்றுக் கொள்கிறது? எதைத் தள்ளுகிறது?

கடன் கூடாது; "கடனுண்டு வாழாமை காண்டலினிதே"-என்று ஒரு நீதி. கடன் பட்டாவது அவசிய காரியத்தை நடத்தவேண்டும். "கடன்கொண்டும் செய்வன செய்தலினிதே"—என்று மற்றொரு நீதி! சிலர் வர்த்தகமே மேன்மை, வியாபாரந்தான் ஸ்வதந்திர ஜீவியம் என்கிறார்கள்.சிலர் ஒரு உத்தியோக கௌரவம்

வருமா? "உத்தியோகம் புருஷலக்ஷணம்" என்கிறார்கள். மனைவி போய்விட்டால் வேறொன்று செய்துகொள்வதே பிற்காலத்திற்கு உதவி என்கிறார்கள். சிலர் ஏகபத்னி விரதமே உயர்ந்தது என்கிறார்கள். சண்பஞயிருந்து கொள்ளிக்கட்டையானவனை தலைமுழுகித் தொலை என்கிறார்கள். சிலர் வைத்த நேசம் வைத்ததே, அதை மாற்றுவது கூடாதென்கிறார்கள். சிலர் கூடப்பிறந்தால் தானா தம்பி? தாரப்பிறந்தால் இல்லையா? எல்லாம் பொருந்திக் கொள்வதிலும் பரஸ்பரம் அன்புடனே நடந்துகொள்வதிலும் இருக்கிறது என்கிறார்கள். சிலர் எத்தனைதான் சகோதரவாஞ்சை கொண்டாடினும் உடன்பிறப்பைப் போல உலகம் ஒப்புக்கொள்ளும்படி இருக்க முடியாது, அது அதுதான், இது இதுதான் என்கிறார்கள். சிலர் எதற்கும் ஒரு உயில் எழுதிவைத்து விடுவது நிச்சயமற்ற மனிதர் வாழ்வுக்கு அது ஒரு நல்லது என்கிறார்கள். வேறு சிலர், யார் யார் குணம் எப்படி எப்படி மாறுகிறதோ—நிர்ணயித்துத் தானே கடைசியில் செய்யவேண்டுமென்கிறார்கள். சிலர், சுபா சுப காரியங்களில் சமதை மரியாதை என ஒன்று செய்ய வேண்டுமென்கிறார்கள் சிலர் செய்து பயனென்ன? நான் முப்பது ரூபாய்க்கு ஒரு சேலை வாங்கி வைத்தால், நாளைக்கு எட்டணா ரவிக்கையை நமக்கு மரியாதை வைத்து விட்டு மறைவார்கள்; செய்வானேன் — எதிர் பார்ப்பானேன்?— என்கிறார்கள். இதில் எந்தப் புத்தியைக்கொண்டு தான் நடப்பது?

இங்ஙனமாக, இவை போல்வன— இன்னும் பலவாறுன கதைகளும், காவியங்களும், பழமொழிகளும், பாட்டுகளும், புராணங்களும், போதனைகளும் எல்லாம் எழும்பிக் கூத்தாடிக் கொண்டு, மனிதர்களை ஒன்று தலையிலடிப்பதும், ஒன்று தவடையில் போடுவதும், ஒன்று காதை முறுக்குவதும், ஒன்று வாயைமூடுவதும், ஒன்று குடலை முறுக்குவதும், ஒன்று குண்டியைக் கலக்குவதுமாக ஆட்டிக் கோலம் கொண்டால், ஐயோ! இவர்கள் எந்தப் புத்தியைத்தான் ஏற்று நடக்கிறதப்பா! கலக விரோதமுள்ள மனைவி வார்த்தையைக் கேட்பதா? துவேச புத்தி மிகுந்த தாயின் வார்த்தையைக் கேட்பதா?

இந்த மாதிரி எறுக்குமாறான நியாயங்களை வெகு விசேஷமாக வைத்துக்கொண்டு கூடுகிற பார்லிமெண்டு சபைகளென்ன, ஞானசார சங்கமென்ன, சாஸ்திர விசாரங்களென்ன? மதவிசாரணைகளென்ன, மானுஷிக தர்மங்களென்ன, கல்வியபிவிருத்தி ஸ்தாபனங்களென்ன, இன்னும் பற்பல விதமான கூட்டங்களிலெல்லாம், ஒருவருக்கொருவர் மாறான நியாயங்களைச் சொல்லி வாதமிட்டு மண்டையுடைத்துக் கொண்டு, கடைசி வரையிலும் எது ஒன்றையுமே ஸ்திரமாகச் சாதிக்கக் கூடாமல், அவரவர்கள் பிடித்ததே பிடியாய்ப்போராடி, எடுத்த காரியத்தைச் சரிவர முடிப்பதற்கில்லாமல் அல்லல் அவதிகள் படுகிறதும் அநுபவ சித்தமாய் இருக்கிறபடியால், இதைப் பார்க்கப் பார்க்க விகடமாமாவுக்கு, மேலும் சிரிப்பு, கீழும் சிரிப்பு, உள்ளுஞ் சிரிப்பு, வெளியுஞ் சிரிப்புமாய், இது தன் விகடத்திற்கும் மேலான விகடமாயிருக்கிறதேயென்று நக்கு—கேலி—பரிஹாஸங்கள் பண்ண வேண்டியதாயிருக்கிறதே! அப்பால் எந்த புத்தியிலும் இதுதானென்று காணக் கூடாமல் அந்தந்த மனிதர்களுக்கும்,—கடவுளுக்கும் தர்மத்துக்கும் பயந்து நீதியோடும் நடக்கிற-அவரர்களின் நிதான புத்தியே புத்தியென்று முடிவு காட்டிவிட்டேன். உலகம் பலவிதம். யார் யார் எப்படி எப்படியிருக்கவேண்டுமோ, அப்படியப்படியிருந்தால் தான் அழகு. மாமா! ராமா! சுபம்! கு!! சுவாஹா!!!.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை

கமலம்-17. ‖ திரிச்சி : ஜனவரிமீ 1922 ‖ இதழ்-11.

மனமோத்த காதலை நாடிய பாரத ரத்நா என்ற நாரீமணியினது 'காதற் பிரதிக்ஞை' யின் விநோதம்.

"அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசை காதலை கைகோட்டி வாழ்த்துவோம்."

அத்தியாயம் 1.

விவாக ஸ்வதந்திரம்

இன்பச் சுதந்திரம் எங்கட்கில்லையா? இந்தப் பெண் ஜன்மத்திற்கு விடுதலை எப்போது? ஈசா! இதுவோ நின் கருணை! என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும் மேகங்களைக் கலைக்க என்னால் முடியுமோ முடியாதோ தெரிகிலேன். ஆ[illegible]ம் நான் இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் கைப்பிடியை என்னவோ நெகிழவிடப் போவதில்லை. கடவுளிடத்திலும் தன்னிடத்திலும் நம்பிக்கையில்லாதவன்தான் பிற மனிதரைக்கண்டு பயப்படுவான். நான் பூரண நம்பிக்கையுள்ளவள். எனக்கு அச்சமேயில்லை. இவ்வுலகத்தில் கஷ்டப்படுவதெல்லாம் நாம் செய்த பாவங்களால் தான். எனது பூர்வ வினையே இப்படி என்னை வாதைப்படவைக்கிறது. இதில் எனக்கு ஆத்திரமில்லை. எதையும் ஸகித்து ஜீரணித்துக்கொள்ளும் ஸக்தி எனக்கு உண்டு. பெண் ஜென்மத்திற்கே

இந்த ஸக்தி இயற்கையில் அமைந்தது. அதை இடனறிந்து உபயோகிக்க மட்டும் பலருக்குத் தெரிவதில்லை. ஆத்திரத்தைத் தாராளமாக வெளியிடுவதானது ஒருவனை ஆத்ம திருப்தியாகும். அது சாந்தத்துடனும் உறுதியுடனும் வேலை செய்யத் தெரியாதவர்களின் காரியம். ஆத்திரத்தைக் கொள்வதாக இருக்கையில், நமது வேகம் அதிலேயே அதிகரித்துக்கொண்டே போய், லட்சியம் மறைந்து, நாம் ஸக்தியற்றுப் போகவேண்டியது தான். குயவன் கையில் அகப்பட்ட களிமண் போல் ஒருநாளும் நான் இரேன். கருதிய வினை கைகூடும்வரை அமரேன், அயரேன், துயிலேன், துஞ்சேன். இது சத்தியம். என்னுடைய லக்ஷ்யத்தின் உன்னதத்தையும் என் பிடிவாதத்தையும் என் பாட்டனார் உணர்ந்து, கடைசி நிமிஷத்தில் என்னுடன் ஸமரஸமாகி விடுவாரென்றே என் நம்பிக்கை.

* * * *

மனிதனால் செய்யப்பட்ட ஒவ்வொன்றும் எல்லா விதத்திலும் ஸம்பூர்ண ஒழுங்குடையதாய் இருப்பது கஷ்டம். இந்த நிலையில் என் பாட்டனாரின் ஏற்பாடுகளை என்னென்று கூறுவதோ? விவாக காரியத்தில் ஒரு பெண் தன் இஷ்டப்படி சமைத்து நடத்துவதென்ற அம்ஸம் சேர்ந்த எந்த ஏற்பாட்டையும், எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ள முடியாதென்கிறார். இந்த விஷயத்தை ஐயந்திரிபற மிகத் தெளிவாக என்னை உணரும்படி அழுத்திச் சொல்ல விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கிறார். இது எந்தக் காலத்துக்குமா? அதாவது யுகாந்தரம் வரைக்குமா? இது தரித்திர புத்தி. உலகமுடிவு வரை எப்போதுமே ஒரு பெண் தன் விவாக விஷயத்தில், தன் இஷ்டப்படி நடந்து கொள்ளும் உரிமை கிடைக்கக் கூடாதென்று என் பாட்டனார் சொல்லுவது எனக்கு ஒரு பக்கத்தில் வருத்தத்தையும், மற்றொரு பக்கத்தில் பெரு நகைப்பையும் விளைவிக்கிறது.

* * * *

இரும்புருளையா? நம் இஷ்டமானவரை நம் காலடியிலேயே போட்டிருப்பதற்கு? மனிதர் கூட்டமன்றோ? உலகமெங்கும் ஸமத்வ ஞானத்தை ஏற்புறுத்துவதாகிய கல்வித் தீ — சுதந்தரத் தீ — ஓங்கிக்கொண்டிருக்கையிலே, ஒரு கூட்டத்தார்—மற்றொரு பிரம்மாண்டமான, கோடிக் கணக்கான மாதர் வர்க்கத்தை எத்தனை காலம் வரை தாழ்ந்த நிலையிலேயே அழுத்தி வைத்துக் கொண்டிருத்தல் ஸாத்யமாகும்? இது அடிமை விலங்கு. இது நரக வாழ்க்கை யன்றாயின்,—வேறென்ன?

'கோடி தாங் துயரம் எதனிலுமே
அடிமைத் துயரம் கோடி தாமால்.'

* * * *

பெண்ணே! உன் பர்த்தாவைக் குறித்து உனக்கு இருக்கிற கவலை உன் வேலைக்காரருக்கு இருக்குமா? என்கிறார் ஒருவர். சற்குண மனை

வியே பதிக்குச் சிறந்த நிதியமாகிருள். குணசாலியான பெண் தன் புருஷனுக்குத் தலைநாயகமாய் விளங்குகிருள். அவனுக்கு வெட்கத்தை யுண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கும் நோயாக இருக்கிருள். நான் ஒரு உத்தம கன்னிகையாகவே நடந்து கொள்ள என் நெஞ்சிலே ஆசை கொள்கின்றேன். சில பெண்கள் சர்வகலா சங்கப் பரீக்ஷையில் தேறி யிருக்கலாம். சிறந்த நாகரீகம் கொண்டு மிருக்கலாம். உயர்ந்த சம்பளம் பெறும் யோக்கியதை பெற்றிருக்கலாம். குடும்பத்தை நடத்தும் திறமை யற்றவர்களா யிருப்பின், அந்த உயர்தர வித்தை யாதொரு பயனையும் நல்காது. நான் அப்படி யில்லை. கிருக கிருத்யங்கள் யாவையும் இனிதே நிறைவேற்ற நன்கு பயின்றுள்ளேன்.

* * * *

ஸமீபத்தில் இறந்துபோவோமென்று நிச்சயமாகத் தெரிந்த ஒருவன், அது தெரிந்த பின்னரும் இயன்றவரை உயிரை நீடிவித்தற் குரிய வழிகளைத் தேடுவது போல், நானும் இவ்வளவு நெருக்கிடையிலும், என் விவாக காரியத்தில் ஏதோ ஒரு துணிவு—உறுதி—பற்றித்தான் நிற்கின்றேன். பாரத வருஷத்திய ரமணிகளுடைய உன்னத கீர்த்திகளின் நினைவு என் ஹிருதயத்திற்கு ஒரு நவீன உத்ஸாகத்தை எழுப்புகின்றது. கடவுளின் ஸக்தியே காலஸக்தி ரூபமாக நின்று, என்னை விடுதலைக்குத் தூக்கிக் கொண்டு போவதனுல், அதைத் தடுக்கும்படி யார் எவ்வித முயற்சி செய்யினும் அது சித்திபெருதென்பதைத் தெளிவாக உணர்க.

* * * *

என் பாட்டனரின் அபீஷ்டப்படி நடக்கிறது தானே என்கிருர் என் மாதா. பெரியோர்கள் பார்த்த இடத்தில் கை கொடுத்து விடுகிறது தானே என்கிருர்கள் மற்ற பந்துக்கள். அவ்வளவு தூரம் தியாக ஸ்வரூபியாக நான் இல்லையே என் செய்வேன்! உண்மையில் கஷ்டப்படுவோர் தான், பிறருடைய கஷ்டத்தையோ ஸந்தோஷத்தையோ உணர்ந்து கொள்ளமுடியும். என் பாட்டனர் என் பிடிவாதம் நோக்கிச் சிரிக்கின்ருர். “உன் எண்ணம் வீண்”—எனக் குதூகல மொழியில் அதிகாரத்வனி செய்கின்ருர். ஒருவருடைய கஷ்டத்தைப் பார்த்து இன்னொருவர் (கஷ்டமென்பதே தெரியாதவர்) குதூகலிக்க உண்மையில் என்ன ஸ்வதந்திரம் இருக்கிறதோ தெரியவில்லை. விவாகம் ஒரு நொடி வேலையா? தீர்க்காலோசனை வேண்டாமா? இது அதிகக் கசப்பான மனோ நிலைமை. என் கால்களை வாரிவிட்டு என்னைக் கவிழ்த்துவிட அவர் முயல்வதற்கு நான் சம்மதிக்க முடியாது.

* * * *

என் தாதா காற்றை விதைத்துப் புயற்காற்று மாருதல் (அறுவடை) அறுக்கிருர். அதாவது பிறருக்குச் சிறிய ஆபத்தை விளைக்கப்போவதில் தான் பெரிய ஆபத்து சம்பவிக்க இருக்கிறது. என் பாட்டனரின் செயல்

கள் யாவும் ஒரு ஆச்சரியமான அக்ஞானத்தின் தூண்டுதலாகும். ஆக்கிரகமான ஒரு செய்கையால் வாழ்க்கையில் நல்ல பலன் விளைவது வழக்கமில்லை.

* * * * *

கேவலம் ஒரு காரியத்தில் உற்சாகமும், தலைமை வகிக்கும் ஸக்தியும் ஒருவருக்கு இருந்துவிட்டால் போதாது. உண்மையான லௌகீகதந்திரம் தெரிந்தவராக—பிறர் கஷ்டமீ உணர்ந்தவராக—இருக்கவேண்டும். என்னைப் பனைப்புஷ்டியுள்ள வேறிடத்தில் கொடுத்து லோக கௌரவம் தேட விரும்புகிறீர்கள். நீங்கள் கௌரவத்தில் புகுந்துகொள்ள என்னை ஏணியாக வைத்து, என் லக்ஷயங்களை மிதித்துக்கொண்டு மேலேறப் பார்க்கின்றீர்களா? என் மன அமைதி குலைந்து, ஸஞ்சல சண்டமாருதம் வீசி, துணிவெனும் அலைகள் எழும்பி, பிராணத்தியாகம் (தற்கொலை) என்ற பிரளயம்—முடிவு—எனக்குற்றிடும்போலுளது. நான் இத்துடன் கவிழ்ந்து விடப் போகிறேனென்றும் சில பந்துக்கள் உறுதியாகச் சொல்கின்றனர்.

* * * *

எனினும், என் பாட்டனாரை நான் இகழக்கூடாது. திட்டக்கூடாது. அவமானப் படுத்தக்கூடாது. எனது ஸக்தியினாலேயே தான் வெற்றியடைய வேண்டும். பிறரைப் பழிப்பதினால் ஜெயம் பிராப்தியாகிவிடாது. மரியாதையாக நடந்துகொண்டால் நமக்குச் சத்ருக்களே இருக்கமாட்டார்கள். இதுவரை உலகத்தில் இருந்ததில்லை. இனி இருக்கப்போவதில்லை. ஜெயித்தால் உத்தமந்தான். தவறினும் அதைரியப்படமாட்டேன். தவறுவதும் வெற்றிக்கே மார்க்கம். குழந்தை எழுந்து நடக்க எத்தனை முறை தவறிக் கீழே விழுகிறது?

எனது ஜென்மபூமி வங்கதேசம். சாந்திபூரில் நான் பிறந்தேன். என் தந்தை ஏராளமான தனராசிகளை யுடையவர். எங்கள் இல்லம் ஆறு உப்பரிக்கைகள் உள்ளது. அரண்மனை போன்றது. அதில் எனக்கென்று ஒரு தனியறை யுண்டு. அந்த அறை முற்றும் படங்கள் நிறைந்து சோபித்துக் கொண்டிருந்தது. பெண்ணரசியான ஸ்ரீமதி விக்டோரியா மகாராணியாரின் படம் என்னுடைய ஸ்வதந்திரப் போரை யுன்னி என்னைப் பார்த்துக் கொண்டாடுவதுபோ லிருந்தது. எல்லாப் படங்களிலும் அழகு வாய்ந்தது அதுவே. எனக்கு ஒரு தமக்கையும் தம்பியும் உண்டு. தமக்கை அதி பால்யத்திலேயே பம்பாயில் ஒரு கனவானுக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டார். இப்போது இரங்கூனில் உத்யோகமாகி தம் கணவனோடும் வாழ்ந்து வருகின்றார். ஹிந்தி பாஷையையும் ஆங்கிலத்தையுமே நான் பாடசாலையிற் பயின்றேன். தாய் மொழியான வங்கபாஷையில் நான் பயிற்சி பெறவில்லை. என் தந்தைக்குக் கொஞ்சம் தேசாபிமானம் உண்டு. இந்தியா முற்றிலும் ஹிந்திபாஷையே பொதுப்பாஷையாக நிலவவேண்டுமென்ற அவா அவருக்கு அதிகம். ஆதலின் தேசாசாரப்படி முதலில்

வங்க பாஷையைக் கற்பியாமல் ஹிந்தி பாஷையையே பயிலுமாறு என்னை விடுத்தார். இரு மொழிகளிலும் ஒரு பெண்ணுக்கு,—அவளுடைய உலக விவகாரத்துக்கு எவ்வளவு வேண்டுமோ,—அவ்வளவுக்குப் பெற்றுக்கொண்டேன். பின்னும் அதை விருத்தி செய்தபடியே இருந்தேன். இனி மேல் தான் என்னுடைய கதை ஆரம்பம் பெறுகின்றது. உன்னிப்பாய்க் கேட்க வேண்டும்.

அத்தியாயம் 2.

ஹரிகிருஷ்ணரின் குடும்ப நிலை

கல்கத்தாவுக்கு 100 மைலுக்கு அப்பாலுள்ள நகரமொன்றில் நீலரத்தின பானர்ஜி என்றொருவர் இருந்தார். அவர் பெருத்த ஸம்சாரி. குடும்பக் காப்பிலும், ஸ்வஜன ஆதரிப்பிலும் மிக்க ஈடுபட்டவர். யாரிடமும் முகமலர்ச்சியுடன் ஸம்பாஷிப்பார். சிலரைப் போல் பெருமை என்பதில் மயங்கினதில்லை. வெகு சாமர்த்தியமாகவும், ஜனங்கள் ரஞ்சிக்கும்படியாகவும் பேசவல்லவர். காங்கிரஸ் மகா சபையின் ஆதி நண்பர். பெருந் தேசாபிமானி. வயது சுமார் நாற்பத்தெட்டுதான்: அவருக்கு இரண்டு தங்கைகள் உண்டு. பெரிய தங்கையான வஸுமதி தேவியை ஒரு உத்தியோகஸ்தருக்குக் கொடுத்தார். ஆனால் நெடுநாள் கணவனோடு வாழ்ந்திருக்கும் பாக்கியம் பெறவில்லை. எல்லோருக்குமே அந்த அதிர்ஷ்டம் கிடைக்கின்றதா? தாய் இன்னும் சுமங்கலியாக இருக்க, குமார்த்தியும் பேர்த்தியும் அமங்கலிகளாகிறார்கள். ஒரே ஒரு நாள் மாங்கல்யமேற்று நின்றவர்களும் உண்டு. வைதவ்யமடைந்த தங்கை தன் ஸகோதரரிடமே வந்து சேர்ந்தாள். ஒரு பெண் குழந்தை அவருக்கு இருந்தது. அக்குழந்தையின் பெயர் குமுதா.

மற்றொரு தங்கையை மிக்க ஐச்வரியமுள்ள இடத்தில் விவாகம் செய்து கொடுத்தார். இத்தங்கையின் பெயர் வஸந்தமாலா. இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர். வசந்தமாலா தான் என் தாயார்.

என் பெரிய தாயாரின் குமார்த்தியான குமுதாவினிடத்து எனக்கு அத்யந்த பிரேமை. குமுதாவை விட்டு வருவதென்றால் எனக்கு அழுகை உண்டாய்விடும். ஆதலின் என் தந்தை என்னை நீலரத்ன பானர்ஜியின் வீட்டிலேயே விட்டுவிட்டார். நானும் குமுதாவும் இணைபிரியாத் தோழிகள். ஒன்றாயிருந்து கல்வி கற்றோம். குமுதா ஆங்கிலமும் வங்கபாஷை

யும் பயின்ருன். நான் என் பிதாவின் இஷ்டப்படி ஹிந்தியையும் ஆங்கிலத்தையும் அப்யஸித்தேன். நீலரத்னபானர்ஜிக்கு ஹரிகிருஷ்ணன் ஒரே குமாரன். அவனுடைய தாயார் அவன் பிறந்த நாள் முதலாக நலி, க்ஷய ரோகத்தால் மெலிந்து வந்தார். ஆதலின் ஹரிகிருஷ்ணனை எடுத்து வளர்க்கும் பாக்யம் வஸுமதி தேவிக்குக் கிடைத்தது. ஹரிகிருஷ்ணனும் தன் அத்தையான வஸுமதியிடத்தில் பூர்ண அன்புகொண்டிருந்தான். அந்த அத்தை தனது தமயனின் குமாரனை மிக்க செல்வமாய் வளர்த்தார்.

தாம் பூசிக்கொள்ள முடியாமற்போன மந்சனை யெல்லாம் ஹரிகிருஷ்ணனுக்குப் பூசி நீராட்டினர். ஹரிகிருஷ்ணன் தனது அத்தையினுல் எல்லா நன்மைகளையும் அடைந்தான். அவரைத் தெய்வம்போற் கருதி உயிருக்குயிராக நேசித்தான். அத்தை ஊட்டுகிற ஒவ்வொரு பிடி சாதத்திற்கும், அவர் தேகத்தில் ஒவ்வொரு பிடி சதை வளர்ந்து கொண்டிருந்தது. 'அத்தையையே விவாகம் செய்துகொள்' என்று ஹரிகிருஷ்ணனுக்கு அவனது தாயார் சொல்லிச் சிரிப்பார். அவ்விதம் சிரித்த ஒரு சிரிப்பு கூடத் தாங்கமுடியாமல் சோர்வுற்றுக் கண்ணயர்வார். ஹரிகிருஷ்ணனின் மாதா அத்தனை பலஹீனமில்லை.

ஹரிகிருஷ்ணன் எங்கள் விளையாட்டுக்குத் தக்க தோழன், அவன் இல்லாமற் போனுல் எங்களுக்குப் பொழுதுபோவது ஒரு யுகமாக இருக்கும். நாங்கள் மூவரும் எப்போது ஒன்ருகவே இருப்போம். ஒருவரைப் பார்த்தால் மற்ற இருவரையும் அவருக்குப் பின்னுல் பார்க்கலாம். குமுதா ஹரிகிருஷ்ணனிடத்து மிக்க பாந்தவ்ய முள்ளவளானுள். அவனைக் கடவுளாகப் பூஜித்தாள். அவ்விருவரது ஒப்பற்ற அன்பை நோக்கிய அத்தை இறுதிநாள்தனையும் அவர்கள் அப்படியே பிரியாமல் ஒன்றுபட்டிருக்குமாறு அவ்விருவருக்கும் விவாகத்தை நிறைவேற்றினுர். தம்பதிகள்—அதுவும் வித்யா ஸம்பன்னர்களான தம்பதிகள் — தங்கள் காதல் வாழ்க்கையை மிக்க இன்பமுடையதாகச் செய்துகொண்டு ஆநந்திதர்களாக விளங்கினர். அத்தகைய அந்நியோன்னிய தாம்பத்யம் பிரபஞ்ச சோதனையுள் மிக்க அபூர்வம்.

இப்பொழுது நாம் அநுபவிக்கிற சந்தோஷமான காலங்களெல்லாம், பிறகு ஒரு காலத்தில் ஒரு பெரிய ஞாபகச் சின்னங்களாக—மீண்டும் பெற முடியாதவைகளாக மாறிவிடும். மறுபடியும் கிட்டாத ஒன்றிற்கே ஞாபகச்சின்னம் என்பது. ஹரிகிருஷ்ண பாபுவின் வாழ்க்கை வெகு காலம் ஆநந்தமுடையதாக இருக்கவில்லை. அவரை யன்புடன் வளர்த்த அத்தை ஸ்ரீமதி வசுமதி திடீரென்று ஸ்வர்க்காரோகணம் செய்தார். வசுமதியே குடும்பத்தின் தலைவி. அவர் போய் விடவும், மாமனுர் நீலரத்ன பானர்ஜி மிகுதியும் தத்தளித்தார். அந்துடனில்லை. அடுத்தடுத்து அவருக்குப் பண விஷயத்தில் பெரிய கஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன. இரண்டு கடன்

காரர்கள் இன்ஸால்மெண்ட் வாங்கிவிட்டார்கள். தாம் இருந்த வீடு நிலம் யாவையும் விற்று விட்டுக் குடிசை வாழ்வில் அமர்ந்தார். வசுமதியுடன் தமது வாழ்வு போயிற்றென்று வயிற்றி லடித்துக்கொண்டார். வீட்டிற்கு லக்ஷ்மி விலாஸமாக ஒரு முக்கியஸ்தர் இருப்பதும், அவர் கண்மூடிக்கொண்டால் அந்த வீட்டின் உன்னதம்—கெட்டுச் சீரழிவதும் பற்பல இடங்களிலும் கண்ட அநுபவமே. அது இங்கும் உண்மையாயது. இது ஒரு பேரிடி!

இப்பொழுது ஹரிகிருஷ்ணருடைய வாழ்க்கையே மாறிவிட்டதென்னலாம். அளப்பரிய துயரம் ஆற்றவில்லாது தத்தளித்தார். குமுதாவும் தன் அன்னையின் பிரிவு தாளாது துடிதுடித்தாள். அவளால் ஸகிக்க முடியவில்லை. எதற்குத் தான் அழுவதோ? தனது பிராணனுன அத்தைக்கு ஹரிகிருஷ்ணர் அழுது புலம்ப, குமுதா தன் தாய்க்குப் பிரலாபம் கொள்ள, அந்த தெய்வ சோதனை மனித சித்தங்கொண்டு தாங்க முடியாததாக இருந்தது. ஹரிகிருஷ்ணரின் மாதாவோ தமது பிணிவேதனையோடு இதையும் ஏற்கவேண்டியதாயிற்று.

குடும்ப நிலை இங்ஙனம் தளதளத்துப்போகவே, இனி நான் அவர்களுடன் இருப்பது சரியல்லவென்று என் தந்தையார் என்னைத் தம்மிடத்திற்குத் தருவித்துக்கொண்டார். எந்தக் காலத்தில் எதெது நடக்கவேண்டுமோ அதது நடந்தே தீரும். குமுதாவும் நானும் ஜீவகால பரியந்தம் பிரியக்கூடாதென்று சபதமிட்டுக்கொண்ட காலமும் ஒன்றுண்டு. ஆயினும் இப்போது பிரிய நேர்ந்தது.

என் தாயார் ஹரிகிருஷ்ணரிடத்து மிக்க பிரியமாய் இருந்தார் அத்தை வசுமதியிடம் காட்டிய பிரியத்தையெல்லாம் என் தாயாரிடம் கொண்டு ஹரிகிருஷ்ணர் விளங்கினர். அடிக்கடி எங்கள் ஊருக்கு வந்து போவார். நீலரத்கரும் குமுதாவும் அவருடன் வருவார்கள். எங்கள் எல்லோருக்கும் வெகு சந்தோஷமாக இருக்கும். ஹரிகிருஷ்ணருக்கு என் மாதா ஒரு பெரிய ஆதரவாக விளங்கினர். என் தந்தை ஹரிகிருஷ்ணரிடத்தும், நீலரத்னரிடமும் மிக்க கௌரவம் வைத்து அவர்களை நடத்தி வந்தார். இப்படியாகக் காலம் சென்றுகொண்டிருந்தது.

இந்த சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய மகா யுத்தம் மூண்டுகொண்டது. என் தந்தை ராணுவத்தில் உன்னத பதவியை வகித்து வந்தார். அவருக்கும் உத்தரவு வரவே, யுத்தத்திற்குப் புறப்பட்டுப் போகவேண்டியதாயிற்று. இது திடீரென்று நேர்ந்த நிலை. குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் தமது தந்தையாரிடம் ஒப்புவித்து என் பிதா பிரயாணப்பட்டுச் சென்றார். என் தந்தையிடமிருந்து தவறாமல் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. நீலரத்ந பாபுவின் குடும்பம் இப்பொழுது மிக்க ஏழ்மையுடையது. ஹரிகிருஷ்ணர் ஒரு உபாத்யாயராக அமர்ந்து அதில் ஜீவனம் இயற்றி வந்தார். பிராணகாந்தையான குமுதாவும், தம் தந்தையும் அவர் அருகில் இருந்த

தால், அந்த செட்டான வாழ்க்கையும் அவருக்கு இன்பம் ததும்பியதாகவே தோன்றிற்று.

மனுஷ்யர்களின் ஜீவித சரித்திரம்—பிரபஞ்ச நாட்டியம்—என்றும் ஒரே படித்தரமாக இருப்பதில்லை. ஒவ்வொரு கணமும் பெரும் மாறுதல் பெற்று விடுகின்றது. உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி மாறுவதுபோல கால ஸம்பவங்களும் மாறிமாறி மனிதனைச் சூழ்ந்துகொள்கின்றன. ஸங்கட தசை சேரிடுவது சகஜ தர்மம். ஹரிகிருஷ்ண பாபுவுக்குத் தான் என்ன கஷ்ட காலம்! அடுத்தடுத்துத் துன்பமா? அத்தை இறந்து பல வருடங்கள் ஆகிவிடவில்லை. குமுதாவும் இப்போது காலஞ்சென்றாள். அவருடைய நெஞ்சு எவ்விதம் வெந்ததோ! எவ்வாறு துடித்தனரோ! கதறினரோ! பட்டவர்கள்—பட்டிருப்பவர்கள் தான் அறிவார்கள். பகலுண்டானால் இருளும், உயிருண்டானால் உடலும் தொடர்ந்து பற்றுதல்போல, சுகவாழ்வினிடையே சோதனையும் ஸஞ்சலமும் மறைந்து தொடர்கின்றது. என் கண்ணனைய பிரியமான தோழி—என் குமுதா—போய் விட்டாள்! அவள் பிரிவை எவ்விதம் ஸகிப்பதோ! ஆற்றுவதோ!

ஹரிகிருஷ்ணருக்கு இப்போது ஆதரவு யார்? நீலரத்நரின் சோகம்—பரிதவிப்பு சொல்லொணாது. குமுதா ஒரு அற்புதமான காதல் நாரி. நல்ல காதல் செய்து சலம்பட வாழ்ந்தாள். அவள் காதல் நினைவை ஹரிகிருஷ்ணரது ஹிருதயம் எஞ்ஞான்றும் மறவாது. என் தாயாரும் ஹரிகிருஷ்ணருக்கு ஆறுதலான கடிதங்கள் அனுப்பினார். ஸஞ்சலப்படுங் காலங்களில் தனக்கு அன்பானவர்களிட மிருந்து ஆறுதல் பெற, அவர்களின் தேறுதல் கடிதத்தை, அந்த நொந்துபோன நெஞ்சு வெகு ஆவலுடன் எதிர்பார்த்து நிற்குமாம். இது அநுபவத்தின் உண்மை.

ஹரிகிருஷ்ணரும் அதற்குப் பதில் கடிதம் என் அன்னைக்கு எழுதினார். இது அவர் தமது மனோசாந்திக்காகச் செய்துகொண்ட வேலை. வாய்விட்டு ஒருவரிடம் சொன்னால்தான் துயரம் சற்றே ஆறும். அதிலும் கடிதங்களில் தன் உட்புண்ணை—ஸஞ்சலத்தை வரைவதாகில், இன்னும் அதிகமான சாந்திக்கும் நிம்மதிக்கும் இடனுண்டு. எத்துணை எழையாயினும் தன் மனத்துயர்களை வெளியிட்டுச் சொல்லிக்கொள்ளவும், அதற்கு மனஸ்பூர்வமான ஆறுதல் வசனங்களைப் பெறவும், ஒருவரைத் தேடிக்கொள்ள விரும்புவான். அது அவனுக்கு ஒரு அருநிதி போல.

சிலருக்குக் கடிதம் எழுதும் சாமர்த்தியம் வெகு திவ்யமாகப் பொருந்தி விடுகிறது. அது படிப்பின் திறன்கொண்டு உண்டானதல்ல. இயற்கையாகவே அவ்விதம் அமைப்பு ஏற்பட்டு விடுகின்றது. ஹரிகிருஷ்ணர் அதிகம் வாசித்தவரில்லை. தமது ஜீவனத்துக்குப் போதுமான கல்வியை ஓரளவாய்ப் பெற்றிருந்தார். ஆயினும் அவரது—வாக்வல்லபம்—மனோவேகம்—கற்பனு சாதுர்யம் அத்யத்புதமானது. தம் நெஞ்சில் உள்ளதை அவ்விதமே படம் பிடித்தாற் போன்று வெளிக்குக் காட்டக் கூடியவர். பிறர்

மனத்துள்ளும் அப்படியே ஆழப் பதிய வைக்கும் திறன் அவருக்குப் பிறப் பிலேயே பொருந்தி நின்றது. அவரது பரிதாபக் கோலமான கடிதங்களை என் மாதா வாசித்து மனமுருகினார். நானோ கண்ணீர் ததும்ப நின்றேன்.

அத்தியாயம் 3.

ஏழ்மையின் இழிவு

யுத்தத்திற்குச் சென்ற என் தந்தையின் செய்தி ஏதும் தெரிய வில்லை. பிரான்சு தேசத்தில் இந்திய சைந்நியங்கள் வெகு புகழ்ச்சிக்கான வேலைகள் செய்து வருகின்றனவாம். பிரான்சிலிருந்து வந்த ஒரு கடிதத்திற்குப் பிறகு மறுபடி கடிதமேயில்லை. என்றைய தினத்தில் நாம் அவருக்குக் கடிதம் எழுதுகி றோமோ, அதே தினத்தில் அவர் எங்களுக்குக் கடிதம் எழுதிக்கொண் டிருப்பதாய், அவரிடமிருந்து பிறகு பெறும் கடிதங்களால் விளங்கும். இது அடிக்கடி நேரிடுகிற சம்பவம். ஆப்த மித்திரர்கள் கூட ஒருவருக்கொருவர் கடிதம் எழுதுகையில், ஒருவர் யாருக்கென்று கடிதம் எழுதிக்கொண்டிருக் கிறாரோ, அதே காலத்தில் அந்த நண்பரும் இவருக்காகக் கடிதம் எழுதிய படி இருப்பதான காட்சிகள் ஸர்வ ஸாதாரணம். இது பரஸ்பர ஆகர்ஷண ஸக்தியையும், மனோ ஒற்றுமையையும் பொருத்து அரிதாய் நிகழ்கின்ற இயற்கை அற்புதங்களாகும்.

எனது தந்தை தமது குடும்ப பாரத்தைத் தமது பிதாவிடம், அதா வது என் பாட்டனாரிடம் ஒப்புவித்துச் சென்றார் என்றேன். என் பாட்ட னார் ஒருவிதமான மாதிரி யுள்ளவர். அவருக்குத் தேசாபிமானம் என்பதே பிடிக்காது. பத்திரிகைகளைப் பிறர் படித்தாலும் சகிக்கமாட்டார். நாவல் கள் என்றால் அவருக்குப் பூரண துவேசம். எவரிடத்தும் அதிக சகவாசம் வைத்துக்கொள்வதில்லை. அன்பான பேச்சையும் எண்ணியே பேசுவார். ஆனால் யாவருக்கும் பிரியமாக நடந்துகொள்வார். எவரிடத்தும் துவே சம் கிடையாது. மிக்க அன்பாகவும் உபசாரம் செய்வார். ரூபாயை அவர் ரூபாயாக நினைத்த நாள் அரிது. கஷ்டப்படுவோரைக் கண்டால் பத்து ஐந்து தாராளமாகத் தருவார். தாம் தந்ததை அப்பொழுதே மறந்துவிடு வார். ஒவ்வொருவர் வீட்டு க்ஷேமத்தையும் வெகு கருத்தாக விசாரித்துக் குறை யேதேனும் இருப்பின் தம்மாலியன்றவரை அதைத் தீர்க்க முயலு

வார். இரவில் மட்டும் மத்யபானம் செய்வார். இரவுதோறும் அந்த மது வெறியில் யாதாயினும் ஒரு சண்டை, எந்த வேலைக்காரனுக்காவது அடி—நடந்தே தீரும். இது நித்திய உத்ஸவம். என் பாட்டனார் சிடுசிடுப்பில் திவான்பகதூர் பட்டம் பெற்றவர். கோப குணத்தில் 'நைட்' பட்டம் வாங்கியவர். குமுதாவின் மரணம் கேட்டு என் பாட்டனார் மிக்க நொந்து கொண்டார். ஆனால் என் அன்னையைப் போல் அவ்வளவு வேதனையை யடையவில்லை. அதையும் விளக்கமாக இங்கு கூறிவிடவேண்டு மல்லவா? நான் வேறு, குமுதா வேறு, என்பது அவரது தீர்மானம். அன்றியும் அது வேறு விஷயந்தானே. அவருக்கு அதில் உருக்கம் எப்படித் தோன்றும்? தன்னைச் சேர்ந்தவர்கள் மட்டுமே சுகமா யிருக்கவேண்டுமென்பது அவரது கவலை. அதுவே அவரது கருத்து.

நீலரத்நர் தமது குமாரன் ஹரிகிருஷ்ணனுக்கு எப்படியாவது ஒரு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்று எழுதினார். என் பாட்டனாருக்கும் அபூர்வமாய் அதில் ஒரு சிரத்தை தோன்றியது. இரண்டொரு இடங்களில் பெண் விசாரித்தார். ஆனால் விசாரித்த இடங்களி லுள்ளவர்கள் அநேகமான நகைகளையும் வீடு நிலங்களையும் கோரினார்கள். நீலரத்நர் இதற்கு எங்கே போவார். அவரோ இப்போது ஏழையிலும் ஏழை. பாங்கியில் வைத்த குமுதாவின் நகைகளைத் திருப்ப அவர் பட்ட பாடு கடவுளுக்கே தெரியும். அதுவும் மிக்க சொற்பம். கடைசியாக ஓரிடத்தில் பெண் பிடித்திருந்தது. அதை என் தாயார் எழுதினார். இதனிடையில் பெண்வீட்டாருக்கு வேறொரு தக்க இடம் கிடைக்கவே, அந்த இடமும் தவறியது. என் பாட்டனார். "அவனுக்கு அதிர்ஷ்டம் போதாது"—என்று கூறிவிட்டு அந்த சங்கதியிலிருந்தும் மெதுவாக விலகிக்கொண்டார். என் தாயார் தமது தமயனாருக்கு ஒரு கடிதம் வரைந்தார்.

அன்பு மிக்க அண்ணா அவர்களுக்கு,

நமஸ்காரங்கள். நான் சுதந்தரமுள்ளவளா யிருந்தால் பாரதரத்நாவை ஹரிகிருஷ்ணனுக்குக் கொடுத்து விடலாம். அது என் கணவர் வீட்டுச் சொத்து. என் பர்த்தாவும் அருகிலில்லை. மாமனார் இப்பொழுது அரசான் கின்றார். குடும்ப நிர்வாகம் தற்போது அவருடையது. அவரது அபிப் பிராயம்போல் அது. என்ன செய்யலாம்? பிராப்தமில்லை.

தங்கை, வஸந்தமாலா.

இது ஒரு நொண்டி முகாந்திரம். என் தாயாருக்கே முதலில் என்னைக் கொடுக்க அவ்வளவு இஷ்டமில்லை. அதை வெளியிடாமல் பாட்டனார் மீது பாரத்தைச் சுமத்தி எழுதினார். உள்ள உண்மையை மறைக்க என் இத்தனை சிரமமோ? வீணாக வேறொருவர் சொத்தென்று பதஜோடினை செய்திருந்தார்.

ஹரிகிருஷ்ணர் இந்த மாதிரி ஒரு கடிதம் வரக்கூடாதா வென்று கொடுகாள் எதிர்பார்த்தவர். இக்கடிதம் தபால்மார்க்கம் ஹரிகிருஷ்ண பாபுவின் மடியில் போய் விழுந்தது. வழக்கமாகக் கையில் தரும் தபாற் காரன் அன்று புதுவிதமாக ஹரிகிருஷ்ணரின் மடியிற் போட்டானும். ஏதோ ஒரு பெரும் புதையல் தம் மடியில் வீழ்ந்தது என்றெண்ணியவ ராய்க் கடிதத்தைப் பிரித்தார். பின்னுக்கு வருகிற இன்ப துன்பங்கட் கேற்ப முன் குறிப்பாக நம் மனத்துள் பரவசமோ—சலிப்போ—விகா ரமோ உதயமாகின்றன. இக்கடிதம் கிடைத்ததும் மகத்தான பாக்கியங் கள் லபிக்கப் பெற்றவர்போல் அத்யந்த சந்துஷ்டரானுர். அப்பொழுதே நான் அவருக்குக் கிடைத்து விட்டதுபோல் நினைத்து சந்தோஷப்பட்டுக் கொண்டார். தக்ஷணமே தன் தந்தையிடம் அக்கடிதத்தைக் கொண்டு போய்க் கொடுத்தார். இவ்வளவும் கடிதத்தைப் பிரித்துப் பார்க்காமலே கொண்ட ஆநந்தம்! நீலரத்நர் அக்கிருபத்தைப் படித்துவிட்டு மிக்க மனச்சோர்வெய்தினர். தமது தங்கைக்குப் பின்வருகிறபடி ஒரு கடிதம் வரைந்தார்.

அன்புள்ள தங்கை வஸந்தமாலாவுக்கு,

உனது கடிதம் என் காலக்கொடுமைக் கேற்ப இருந்தது. நான் ஹரிகிருஷ்ணனுக்கு எவ்விதமேனும் விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று எழுதியதின் கருத்து—வேறிடங்களில் அவனுக் குப் பெண் பார்க்கும்படியாக வன்று. பாரத ரத்நாவையே குறிப் பிட்டு வரைந்ததாகும். அது உன் சொத்து அல்லவென்று சாதுர் யமாய்த் தெரிவித்திருக்கிறுய். பாரத ரத்நா கிடைத்தால் கிடைக் கட்டும். இல்லையாகில் இந்த ஜன்மத்தில் ஹரிகிருஷ்ணனுக்கு வேறு விவாகம் கிடையாது. அவனோடு வம்ஸ முடிவு. நான் எளிய நிலைமைக்கு வந்துவிட்டதனுலன்றோ இத்தனை திரஸ்காரம்? பூர்வநிலையில் இப்போதுநான் இருந்து கேட்டிருக்கும் பக்ஷத்தில் ஆக்ஷேபமிருக்குமா? வசுமதிக்கு இன்னொரு பெண் இருந்தால், உன்னைப் போல் மறுக்குமா? ஏதோ என் மனதிலுண்டாகிற ஒரு வித நிச்சயத்தின்பேரில், பாரதரத்நா ஹரிகிருஷ்ணனுக்கென்றே ஏற்பட்ட சொத்தென்று தீர்மானித்துக்கொண் டிருக்கிறேன். அவனுக்கென்று ஏற்பட்டது வேறெங்கும் போகமாட்டாது. ஹரி கிருஷ்ணனுக்கும் பாரதரத்நாவுக்கும் விவாகம் நடக்கிற காலம் ஒன்று பின்னுக்கு இருக்கவே இருக்கிறது.

உன் அன்புள்ள தமயன்

நீலரத்ந பானர்ஜி.

என் தாயார் தமது தமயனாரின் கடிதத்தை என் பாட்டனாரிடம் கொடுத்தார். அதை வாசித்துவிட்டு என் பாட்டனார்—"ஓ! இதெல்லாம் என்ன? வீண் சங்கதிகள்! அந்தப் 'பேச்சே எடுக்கவேண்டாம். நீலரத்நபானர்ஜி ஒரு குடிசை வீட்டுக்காரர். பழைய அந்தஸ்திலிருந்தால் ஏதோ யோசிக்கலாம். குடிசை வீட்டுக்கா நமது பெண்ணை யனுப்புவது? நீலரத்நர் இப்போது நமக்கு ஸமமான கௌரவமுள்ளவரா? ஒரு பரம ஏழை. அவர் எண்ணம் வீண் சொற்பனம், அந்த சங்கதியையே இனி எடுக்காதே"—என்று கூறினார்.

வழக்கம்போல் என் தாயார் என் பாட்டனாரின் அபிப்பிராயத்தைத் தமது தமயனுக்கு எழுதியனுப்பினார். தமது தந்தைக்கு வரும் கடிதங்களை ஹரிகிருஷ்ணரே முதலில் பிரித்துப் பார்ப்பார். இக்கடிதம் கிடைத்ததும் மிக்க ஆவலுடன் நான்காம் பக்கத்தை—கடிதத்தின் கடைசி பாகத்தைப்—பார்த்தார். ஒரு கடிதத்தின் கடைசி பக்கத்தில் தான் அக்காகிதத்தின் சாரமான—முக்கியமான விஷயம் இருப்பது வழக்கம். அக்கடிதத்தின் நோக்கம் அந்தப் பக்கத்தில் ஸம்பூரண மடைந்திருக்கும். நான்காவது பக்கத்தைப் பார்த்ததும் அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. பிறகு 1,2,3, பக்கங்களையும் படித்துவிட்டுப் பெருமூச்சுடன் உட்கார்ந்தார். இப்போது மனைவியோடு சண்டை போடுகிற புருஷர்களும், முன்னொரு நாளில் அந்த மனைவி தனக்கு மணப்பெண்ணாகக் கிடைக்க மாட்டாள் என்று ஒருபேச்சு உண்டானபோது ஹரிகிருஷ்ணனைப் போலத் தான் பெருமூச்சு விட்டிருப்பார்கள். எதுவும் கிட்டாத வரையில் சம்பை! கிட்டிவிட்டாலோ அடியும் குத்தும் உதையும் சண்டையும் அதிகாரமுமாம். அத்துடனில்லை. "பெண்ணாக வந்தொரு மாயப்பிசாசம் என்னைப் பிடித்து" என்ற ஞானப்பாட்டுகளும் வேறே!

ஹரிகிருஷ்ணர் தனக்குப் பாரத ரத்நாவைக் கொடுப்பார்களென்று நினைக்கவுமில்லை. அதை நம்பவுமில்லை. அதற்கு எதிர்பார்க்கவுமில்லை. ஆயினும் ஆசை மட்டும் ஓயாது அடித்துக்கொண்டதனால் இரண்டில் ஒன்று தெரிந்து கொள்வோமென்று எழுதியது. எனினும் முடியாதென்ற பதில் தான் வரும் என்று அவர் எதிர்பார்த்தார். அப்படியே முடிந்தது. தனக்குப் பிராப்தமில்லையென்று தீர்மானித்துக்கொண்டு, தமது தந்தையிடம் கடிதத்தைக் கொடுத்தார். யார் என்ன சொன்னபோதிலும், பாரதரத்நா உனக்கு எப்படியும் கிடைக்கும்—என்று தமது குமாரனுக்கு ஆசீர்வாதம் கூறினார். அது முதல் நீலரத்நர் எங்கள் வீட்டிற்கு வருவதேயில்லை. ஹரிகிருஷ்ணர் மட்டும் அடிக்கடி—எங்கள் வீட்டிற்கு—வருவார். பலநாள் தங்கியிருந்து செல்வார். உபசாரங்கள் தாழ்வின்றி மிகு சம்பிரமமாகவே நடக்கும். அதில் ஒன்றும் குறைவில்லை.

என் பாட்டனர் எந்த விஷயத்தில் எப்படி யிருந்தாலும் பந்துஜன பரிபாலனையில் கௌரவசித்தம் கொண்டவர். சில பேருக்கு சிடு சிடுத்தாலும் சில பேருக்கு உள்ளன்புடன் நடப்பார். ஹரிகிருஷ்ணர் வரும்போதெல்லாம் எங்களுக்கு அதிக சந்தோஷமாய் இருக்கும். வீடு நிறைந்தது போல் எண்ணுவோம். அவரும் எங்களையே சுற்றிக் கொண்டு நிற்பார். நான் ஸதா அவர் பக்கத்திலேயே இருப் பேன். என் கையைப் பிடித்து இழுத்துத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்வார். நாங்கள் இருந்த ஊரில் அவருக்குக் கொஞ்சம் நிலமும், ஒரு சிறு தோட்டமும் இருந்தது. அத்தோட் டத்து மாங்கனிகள் மிக்க மாதுரிய முடையவை. நிலத்தையும் தோட்டத்தையும் கவனித்துச் செல்லவே அவர் அடிக்கடி சாந்தி பூருக்கு வருவதா யிருந்தார். அவர் ஊருக்குச் செல்லுகையில் எங்களுக்குப் பரம துக்கமா யிருக்கும். என் பாட்டனருக்கு அப்படியல்ல. உட்கார்ந்து கொண்டே உபசார வசனங்கள் கூறி யனுப்பி விடுவார். "ஊருக்கா, சுகமாய்ப் போய் வா, இன்னும் சில நாள் இருந்து போகிறதுதானே"—என்று கூறி, அவ்வளவில் அவ்விஷயத்தி லிருந்தும் விலகிக் கொள்வார். ஹரிகிருஷ்ணரைக் கொண்டு என் பாட்டனர் சிலருக்குக் குடும்பக் கடிதங்கள் எழுது வதுண்டு. பாட்டனர் ஒன்று சொல்ல, அதை ஹரிகிருஷ்ணர் சற்று இலக்கண நடையில் எழுதுவார். உடனே பாட்டனருக்குக் கோபம் வந்துவிடும். "நான் சொன்னதுபோல எழுதுகிறது தானே" என்று கடிந்து கொள்வார். எரிந்து விழுவார். காகித மெல்லாம் முடிந்த பின்பு, ஒவ்வொரு கடிதத்தின் கீழும் "என்னவோ எழுதினேனென்று இருக்கவேண்டாம்" என்று எழுதச் சொல் வார். அதற்கு ஹரிகிருஷ்ணர் அது வேண்டாம் என்பார். "என்ன அப்பா! நான் சொன்னதுபோல் எழுதுகிறது தானே! இதென்ன பெரிய சங்கடம்" என்று சிங்க கர்ஜனை செய்வார். உடனே ஹரி கிருஷ்ணர் சிரித்துக்கொண்டு அந்தப்படியே எழுதிவிடுவார். இந்தச் சண்டைகள் மிக்க விநோதமாய் இருக்கும். நாங்கள் உருண்டுருண்டு சிரிப்போம். பாரத ரத்நாவைத் தரவேண்டுமென்று ஹரிகிருஷ்ணர் பிறகு பேசவே யில்லை. என் வீட்டிலும் அந்தப் பிரஸ்தாபமில்லை. "முடியாது" என்று முன்பு வரைந்த அந்த ஒரு கடிதமே 'பிரிவி கௌன்ஸில் தீர்ப்பு' போல என்று பாவிக்கவேண்டும் போலும்!

இவ்வளவு திரஸ்காரத்துக்கும் காரணமென்ன? ஹரிகிருஷ் ணர் ஒரு ஏழை ஜெந்துவாக இருந்ததுதான். படிப்பும் அவருக்கு அதிகமில்லை. "அதிகமில்லை" என்பதற்குப் பொருள் என்ன? அதாவது ஒரு மெட்ரிகுலேஷன், எப். ஏ. பி. ஏ. யில் அவர் தேரு ததுதான். அந்தக் கௌரவமுடையவர்களின் கல்வியை விட மேன் பட்ட வித்யாப் பிரபாவமுடையவரா யிருந்தார். தாய்மொழியைப்

பயிலுதல் தேச நலத்திற்கும் பாஷை வளர்ச்சிக்கும் ஏற்றதென்றும், அதுவே உரிமையும் கடமையும் நியாயமு மாகுமென்றும் அவர் சித்தாந்தப் படுத்தி இயற்றிய நூலொன்றை பி. ஏ. பரீக்ஷைக்குப் பாட புஸ்தகமாகவும் வைக்கப்பட்டிருந்தது. ஹரிகிருஷ்ணர் ஜாதீய கவிதைகளை மிக்க ஸ்வாரஸ்யமாய்ப் புனைவார். ஆனாலும் என்ன? அவர் புஸ்தகம் பீ-ஏ. வுக்கு வைத்திருந்தாலும் அவர் ஒரு பீ. ஏ. அல்லவே. ஒரு சாமான்ய மெட்ரிகுலேசனாவது படித்திருந்தால் கொஞ்சம் மதிக்கலாம். அதுவுமில்லை. ஏதோ எங்கோ ஒரு பள்ளிக்கூடத்தில் வங்கபாஷா பண்டிதாாய் நிற்கிறார். சிறந்த கவித்வ சக்தி உண்டுதான். ஆனால் இங்கிலீஷ் ஞானம் இல்லையே! அது இல்லாமல், ஒரு "பாபு இங்கிலீஷ்" ஒரு "போட்லர் இங்கிலீஷ்" ஆவது இல்லாமல்,—இந்தப் பயனற்ற பாண்டித்தியங்களெல்லாம் பெற்றென்ன பிரயோஜனம்?—என்று இப்படி யெல்லாம் என் பாட்டனார் சொல்லிக்கொண்டார்.

பாஸ் பண்ணின இந்தப் படிப்பாளிகள் தங்களினத்தவரினும் தாங்கள் வெகு பெரியவர் எனக் கருதித் தங்கள் பரம்பரைத் தொழிலையும், பிற கைத்தொழில்களையும் குறைவாக நினைத்து, ஒன்றுக்கும் உபயோக மற்றவர்களாயொழிகின்றனர். எங்கேயாவது இறகைப் பிடித்து நாலு ரூபாயேனும் சம்பாதிப்பது அதி கௌரவமென்பதிவர் மதம். தங்கள் வருவாய்க்கு மிஞ்சின செலவு செய்யவும் கற்றுக்கொண்டு பெரிய மனுஷர்களாக இன்னார் நடித்து நாசமாகின்றனர். இதுவன்றிப் பலர் மெட்ரிகுலேஷன் (பிரவேச) பரீக்ஷை கொடுப்பதற்குள்ளாக சமுசாரிகளாகியும் விடுகின்றனர். பெண்சாதி பிள்ளைகள் இவர்களை ஒரு புறம் ஈர்க்கின்றனர். உத்தியோகஸ்தன் பெண்சாதி ஒருநாளும் நாட்டுப்புறத்தாளை யொக்க வுடுப்பாளோ? பாஸ் பண்ணினவரின் பிள்ளைகள் துரைகளது குழந்தைகள்போலன்றோ உடுத்து வெளியே செல்தல் வேண்டும். பணமோ பூஜ்யம். ஒரு தொழிலைச் செய்யவோ சக்தியில்லை. உத்தியோகமோ கிடைப்ப தருமை. இந்தத் தரும சங்கடத்தில் இன்னார் மனநிலைமை எப்படி யிருக்கக்கூடுமென்று பகவானே யுணர்வார்.

உலகம் பலவிதம். உலகிலுள்ள எல்லோரும் ஒரே வித சுபாவ முடையவர்க ளல்லர். எல்லோருக்கும் ஒரே வித சுபாவ மிருப்பின் பெட்டிக்குப் பூட்டும், வீட்டுக்குக் கதவும் வேண்டியதில்லை. ஒரே நாளில் திருந்துபவனும் உண்டு. ஒரு வருஷத்தில் கூடத் திருந்தாதவனும் உண்டு. ஆனால் என் பாட்டனார் எந்த நாளிலும் திருந்த மாட்டார். பிடித்தது பிடி தான்.

என் பாட்டனாருக்கு (என் தாயாருக்குங் கூட) ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் குமாரனைப் பார்த்து என்னைக் கொடுக்க

வேண்டுமென்று எண்ணம். அந்த உத்தியோகஸ்தரின் குமாரன் டாம் டூம் என்று மோட்டாரில் வருவான்—வந்திறங்குவான். அது பெரிய கௌரவ மல்லவா? ஆங்கிலத்தில் தாஸ் பூஸ் என்பான். அது பெருமையன்றோ? ஏழை ஹரிகிருஷ்ணர் இந்த மோட்டாருக்கு எங்கே போவார். அவருக்குத் தன் கால்களேதான் கடவுள் பிரஸாதித்த மோட்டார்! எஸ், ஐ, நோ, வாட், பட், மை டியர் லேடி" என்று சொல்லவும் அவர் அறியார்.

அந்த உத்தியோகஸ்தரின் குமாரன் சுருட்டு, சிகரெட், குடிப் பவனுனல் அது நாகரீகமாகக் கருதப்படும். ஐரோப்பிய ஹோட்டல்களில் அந்நிய மதுமாம்ஸாதிகளை வயிறு நிரம்பப் புசித்துவருவானுனல், "ஆசாரச் சீர்திருத்தக்காரர்—ஸோசையல் ரிபார்ம்—என்று புகழ்மொழி வழங்குவர். ஸ்திரீ லோலனுய் உழன்ருல்,—"அவனுக் கென்ன மகாராஜன் ஆயிரம் பெண்களை வைத்துக்கொள்ளலாம்" என்று தாங்கிப் பேசுவார். தனக்கெனக் குறித்த ஒரு பெண்ணுடன் ரமிப்பதற்கு ஏற்றளவில் தான் புருஷத்துவம் ஒவ்வொருவனுக்கும் அளவறிந்து கடவுள் பங்கிட்டுக் கொடுத்துள்ளாரென்பதையும், அதற்கு மேற்பட்ட மற்ற தத்துவ மெல்லாம் பிரயத்தன மார்க்கத்தில் தங்களுக்குத் தாங்களாகவே ஆடவர்கள் பலாத்காரப் பிரவர்த்தியில் உண்டாக்கிக் கொள்வ தென்பதையும் யார் தான் சிந்தித்துப் பார்க்கிறுர்கள்? ஒருவருமில்லை. உத்தியோக குமாரனின் செயல்கள் எவ்வகைத்தேனும் அவற்றுள் குற்றமாக எதையும் கருதார். காலில் போட்ட பூட்சுடன் அதைக் கழற்ருமல் அன்னமருந்த உட்கார்ந்தால் அதையும் ஒரு பிரபுத்வமாக எண்ணிப் போற்றுவார் பேதை மாக்கள்! தான் ஒரு கௌரவஸ்தரின் குமாரன் என்ற கர்வ சிந்தனையும் உள்ளுக்குள் இருக்கும். அந்தக் கர்வம் அடிக்கடி தன் கைத்துண்டால் முகத்தைத் துடைத்துக்கொண்டு ஒரு கனைப்பு கனைத்துப் பெருமை காட்டும்படியும் செய்யும். இந்த வீண் ஆடம்பரங்களைத் தவிர வேறெந்த சுவையேனும் மதிப்பேனும் இரா. இத்தகைய ஒருவருக்கு நான் வாழ்க்கைப்பட எனக்கு விருப்பமில்லை. நிர்நிமித்தமாக, அனுவசியமாக, வீணுக, அக்கிரமமாக எனக்கென்றுள்ள சுதந்தரத்தில் என் தலையிட வேண்டுமோ? ஜீரணம் செய்ய முடியாத வஸ்துக்களை எவரும் உண்ணக் கூடாதென்று வைத்திய சாஸ்திரம் கூறும். உண்பதற்கே இவ்வாருனல், தன் ஜீவிய வாழ்க்கைக்குப் பொருத்தமல்லாத வஸ்துவை எவ்விதம் ஜீர்ணம் செய்து கொள்வது—ஒப்புவது? கழுத்தைக் கொடுப்பது? இந்த விஷயம் சுலபமாகத் தீப்பிடிக்கக் கூடிய உலர்ந்த விறகுக்குச் சமம்.

இனியொரு பிரபல வியாபாரியின்—மிராஸ்தாரின் குடும்பத்தில் கொடுக்கவும் என் பாட்டனுர் எண்ணம். ஒரு பெண்ணை எத்தனை இடங்களில் தான் கொடுப்பார்களோ தெரியவில்லை. மாப்பிள்ளை

யின் குணத்தை யார் கண்டார்? பி. ஏ. பட்டம் பெற்றுவிட்டதினுலேயே, ஒரு மெட்ரிகுலேஷன்—இண்டர் மிடியேட்—தேறிவிட்டதினுலேயே நற்குணங்கள் உதித்துவிட்டதென்று அருத்தமா? தர்ம நியாயம் யோசிப்பாரில்லையா? குணம் வேறு, கல்வி வேறு. ஒன்றுக்கொன்று அநேகமாக சம்பந்தப் படுவதில்லை. இன்னும் ஒரு பெரிய மனிதருக்கு,—அவாது வயது ஐம்பது இருக்கும்,—அவருக்குக் கொடுக்க நினைத்து அவரைத் தம் வலையில் போட்டுக் கொள்ள என் பாட்டனுர் முயன்றுர். அந்த மீனுக்கு உடம்பு சொஸ்தமில்லை. என்னை ஐம்பது வயதுக்காரனுக்கா? என்ன? அவனுக்கு அதிக சொத்துண்டாம். அதனுல் இந்த முயற்சியாம். சொத்திருந்தால் மட்டும் யௌவனம் உண்டாய்விடுமா? வயோதிகத்தின் ரேகைகள் மாறிப் போகுமா? விவாக காரியத்தில் என்னைக் கலந்து யோசியாமல், தாமாகவே ஒரு தீர்மானத்தைச் செய்துவிட்டு, அதை ஏற்றுக்கொள்ளும்படி என்னை என் பாட்டனுர் வற்புறுத்துவது விவேகிகள் செய்யும் காரிய மன்று.

பெண்ணின் க்ஷேமத்தையே பெரிதாகக் கருதுவோர் புரியும் கடமை இது தானு? ஆனுல் பிறர் கையில் அகப்பட்ட—பந்தத்தில் சிக்குண்ட—எவரும் சுலபமாக விடுதலை பெற்றுவிட முடியாது. சுயேச்சை பெற்றவர்களின் போராட்டத்தை நாம் படிப்போமானுல் இந்த உண்மை நன்ருகப் புலப்படும். ஐம்பது வயதுக்காரன் சொத்து யாருக்கு உதவும்? என் பாட்டனுக்கு உதவும். எனக்கு வேண்டியதாயுள்ள அந்த மங்களத் திரவியமான மஞ்சள் குங்குமம் கிடைக்குமா? இச்செய்கையிலிருந்து—என் மனுேசக்தியும் அறிவும் எவ்வளவு தூரம் பிறருடைய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிற தென்பதைக் கண்டு கொண்டேன். இது மிகவும் அபாயகரமானது. என் புத்தியும் இஷ்டமும் பிறருடைய நிர்ப்பந்தங்களுக்கு உட்பட வேண்டுமென்றும், குருட்டுத்தனமாகச் சொன்னபடி நடக்கவேண்டு மென்றும், என் பந்துக்கள் சொல்லக் கேட்டேன். யார் சொல்வதைக் கேட்பது? எதற்கு விட்டுக் கொடுப்பது? இதிலா குருட்டுத்தனமாக பக்தி வைப்பது? என் பாட்டனுர் என் வருங்கால க்ஷேமத்தையே நாடுகிற தீர்க்கதரிசியாம். இத் தீர்க்கதரிசியின் திருஷ்டியும் குறுகலாகவன்ருே இருக்கிறது? எதிலும் சுயநலந்தானு? பிறர் நலத்தை நாடாமல், தங்களுடைய சொந்த லாபத்தையே உத்தேசித்த சிலர் எத்தேசத்திலும் எக்காலத்திலும் இருந்துதான் இருக்கிறுர்கள். ஆயினும் தர்மமே தலை காக்கும் என்பது முடிவில் பொய்த்துப் போய்விடாது. என் பாட்டனுர் ஹரிகிருஷ்ணனைத் தாழ்த்திக் கூறும் சொற்களின் போக்கு என் மனத்தைப் பிளந்து கண்களில் இரத்தத்தைப் பெருக்குவிக்கின்றது.

கடைசியாக என் பாட்டனருக்கு ஒன்றும் கைகூடி வரவில்லை. எந்த இடத்தில் தருவதென்று இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை. நான் புஷ்பவதியான பின்பு பள்ளிக்கூடத்திற்குப் போகவில்லை. ஆயினும் வீட்டில் உபாத்தியாயனி வந்து பாடங்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். நான் பக்குவமடைந்த பெண்ணாயினும் பாட்டனருடன் நாடகம்—ஸர்க்கஸ் இவைகட்கெல்லாம் போய் வந்தேன். நான் ஒரு ஐச்வரியவந்தனின் குமாரத்தியன்றோ? ஆதலின் அதை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. எல்லாம் பணத்தின் மகிமை தான். ஒரு ஏழை கடல் கடந்தால் அதற்கு ஆயிரம் பிராயச்சித்தங்கள் தோன்றிக் கொள்ளும். ஒரு தனவான்—உத்தியோகஸ்தர்—லண்டனுக்குச் சென்று திரும்பினால் அது நியாயம் என்றே கூறுவர். அதற்குப் பிராயச்சித்தம் வேண்டுமென்று யாராவது சொல்லுவார்களா?

அத்தியாயம் 4.

காதலும் ஆவலும்.

சாதாரண மனிதனைப் கடைசி தடவையாக ஹரிகிருஷ்ணர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அவரைப் பார்த்து ஒரு வருஷம் ஆயிற்று. "வாராய்! வாராய் என் தோழா! நேராய்க் காண இத்தனை நாளா?"—என்று அவரை வரவேற்று மங்களம் பாடினேன், வழக்கம்போல் ஸதா அவரைச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தேன். ஹரிகிருஷ்ணன் என் பால்யத் தோழனல்லவா? நான், குமுதா, ஹரிகிருஷ்ணன் இந்த மூவரும் மூன்றுடலும் ஒருயிருமல்லவா? சிறு பருவ விளையாடல்களின் ஞாபகம் மறக்கத்தக்கதா? எப்போதும் அவரிடத்து எனக்குப் பிரீதியே. நான் பருவமுற்ற நங்கையாயினும், அவரிடம் பேச என் மாதா, தமது தமயனாது குமாரனிடத்துத் தமக்குள்ள பிரேமையால் ஆக்ஷேபிக்கவில்லை. ஹரிகிருஷ்ணன் இன்று நேற்று மனிதனா? எங்களோடு சரிசமமாகப் பழகும் பளிங்கனைய உள்ளம் அவருடையது. அதுவும் அவர் தெய்வ சோதனைகட்கு ஆளான பின்பு, அவரிடத்தில் இளமை முதலாய் எனக்கு இருந்த பிரியமானது பரிதாபத்துடன் கலந்து மிகுதிப்பட்டு விட்டது. அத்துடன் என்னை விவாகம் செய்துகொள்ளக் கேட்டு அவர் ஏமாறியதில், அவரிடம் எனக்கு அத்தியந்த இரக்கமும்

உருக்கமும் உண்டாய் விட்டது. ஆயினும் அவர் ஊரிலிருந்து வந்த நாளன்று,—இப்போது நான் பருவமுற்ற யுவதி யாதலின்,— அவருடன் பேசவோ, அவர் முன்பு எதிர்ப்படவோ நாணமிகுதி யாற் பின்வாங்கி நின்றேன். இது அவருக்கு மிக்க ஏமாற்றத் தையும் வாதனையையும் தந்ததாம். அடுத்த நாளிலிருந்து அவ ருடன் பேசத் தொடங்கினேன். அவர் ஊருக்குப் போகிற நாள் எங்கு வந்துவிடுமோ என்ற அச்சமும் என் நெஞ்சை ஊடுரு விப் பாய்ந்தது. இவ்வளவும் ஒன்று சேர்ந்து நான் அவரிடத்துக் கொண்டிருந்த அன்பைப் பதின்மடங்கு பெருக்கிவிட்டது. அந்த அன்பு காதலாகப் பரிணமித்தது. நல்ல முகூர்த்தத்தில் அதற்கு யாத்திராரம்பம் செய்தாகிவிட்டது. அவரே நினைவாக நின்றேன்.

ஒரு நாள் பகல் மூன்று மணி யிருக்கும். அப்போது தான் ஹரிகிருஷ்ணபாபு எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தார். 'ஏன் இவ்வளவு நேரம்' என்று அவருடைய அத்தை அன்புடனும் கேட்டுவிட்டு, பிறகு அன்னம் பரிமாறி உபசரித்துக் கொண்டிருந்தார். வயிறு நிறைய வைப்பதிலும், வாய்க்கு ருசியா கச் செய்து பரிமாறுவதிலும் என் தாயார் வெகு புண்ணியவதி. அதில் மிகவும் தேர்ந்தவர். ஹரிகிருஷ்ணர் புசித்துக்கொண்டி ருந்த சமயம் அவரது பெட்டி திறந்திருந்ததைக் கண்டேன். அதில் அவரது டைரி யிருந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். திறந்ததும் பின்வரும் விஷயங்கள் உள்ள பக்கம் அதில் தென் பட்டது.

* * *

ஜூலை மீ 7உ

என் சொந்த அத்தைக்கு இன்னொரு பெண் இருந்தால் எனக் குத் தராதிருக்குமா? நான் ஏழை என்றும், கல்வி போதாதென் றும் கருதுமா? உயிருக்கு உயிரான அத்தை போன பின்பு அந்த அத்தையின் தங்கையையே அந்த அத்தை போல் பாவித்துக் கொண்டேன். அந்த சிறிய அத்தையும் மிக்க நல்லவர் தான். பூரண மான பிரேமை வாய்ந்தவர் தான். ஆனால் பாரத ரத்நாவை எனக் குத் தர அவருக்குப் பிரியமில்லாததேன்? "என் ஹரிகிருஷ்ணா! பாரத ரத்நாவைத் தராவிடினும் உனக்கென்ன அன்பில் குறைந் தது? யாவும் பிராப்தம் தானே" என்கிறார் சிறிய அத்தை. சொந்த அத்தையாக இருந்தால் இப்படி மெதுவாக நழுவிச் செல்லுமா? மாமனார் மறுத்தாலும் வாதிட்டு நிற்குமன்றோ? என் தந்தையின் கடிதத்தையும் அவர் பொருட் செய்யாது போய்விட்டார். தமது மாமனார் தெரிவித்ததை மட்டும் நமக்குக் கூறி, அவ்வளவில் தன்மேல் பழியில்லாமல் ஜாடையாக விலகிக் கொண்டார். என்னை வளர்த்த அத்தை இவ்விதம் விலகுமா? ஏன் அந்த அத்தையைப்போல் இந்த அத்தை இருக்கலாகாது? எவ்வளவோ என் மீது இந்த

அத்தை பிரியம் வைத்திருக்கிறது. எனக்கு ஏதேனும் ஆபத்து வரின் அவர் சதை ஆடுகின்றது. நான் இட்டது சட்டமாய் நடக்கிறார். ஆனால் பாரத ரத்நாவைத் தருவது நீங்கலாக மற்றெல்லா உபசாரமும் உண்டு. சிறிய அத்தை மிகு நல்லவர்தான். ஆனால் தன் குமாரத்தியை மட்டும் எனக்குக் கொடுக்காது. நான் பெரிய அத்தையைப் போலவே இந்த சிறிய அத்தையையும் மனஸ்பூர்வமாகப் பாவித்துவிட்டேன். அப்படிப் பாவித்த ஒரு பாவனையால் தான் —அவரது அன்பு போதாதென்று குற்றம் உரைக்கத் துணிந்து, —அன்பு அதிகம் வைக்குமாறு இப்போது நான் கேட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

எப்படியோ நான் அத்தை யென்று சொந்த அத்தையைப் போல் நம்பிவிட்டேனல்லவா! என்னை வளர்த்த என் அத்தையின் குமாரத்தியை நான் மணந்து கொண்டது போல, இந்த அத்தையின் குமாரத்தியையும் எவ்விதத்தும் விவாகம் செய்யத்தான் வேண்டும். அப்படிச் செய்து கொண்டுவிடவேண்டு மென்ற அவா எனக்கு மிகுதிப்பட்டுப் போயிற்று. பாரத ரத்நாவிடமே என் பாடுகளையும், பரிதாபமான என் ஆவல்களையும் வெளியிட்டு எனக்கு அபயம் தருமாறு பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும்.

என் பிரிய பாரத ரத்நா!

1. *முழுமனத்தோ டுந்தனை யான் முக்காலுந் தியானித்துப்
புழுங்கிமனங் காதலினாற் புலம்புவதும் பொய்யாமோ?
2. சகமதனில் யான்விரும்புஞ் சிறந்தபொரு ளுண்டாயின்
முகமதனை லெனைவளர்க்கு மதுமொழியே நீயன்றோ?
3. மெய்யன்போ டுந்தனையான் மறவாது துதித்து வர
மெய்யன் பிலாதவள்போல் மறந்திருப்ப தழகாமோ?
4. மாறுத மனத்துயர மாற்றவல்லா ருளராயின்
பாராத வனப்புடைய பெண்மணியே! நீ யன்றோ?
5. எக்காலு முனைமறவா விருதயமோன் றுளதாயின்
எக்காலுஞ் சிந்திக்கு மேன்மனமேன் றறியாயோ?
6. முற்றவத்தால் யான்பெற்ற முழுப்பொருளோன் றுண்டானால்
சொற்றவரு வன்புடைய சண்பகமே! நீ யன்றோ?
7. இறவாமல் யானிருக்க இச்சிப்ப துண்டானால்
குறையாத வனப்புடைய காதலியே! உனக்கன்றோ?
8. எப்போது நின்னுருவே யென்னெதிரி லுளதானால்
எப்போது முனைமறவே னென்றியம்பல் வியப்பாமோ?
9. வருந்தாது நானிருந்து வாழ்ந்திருக்க நீ எண்ணில்
மருந்தொக்கு நின்னன்பை மாதரசே தாராயோ!

---

*Kadarkali venba.

இதை நான் வாசித்து முடித்ததும் மிருதுவான ஹஸ்தங்களால் என் கண்கள் மூடப்பட்டதாகத் தெரிந்தது. யாராயிருக்கலாம்? ஹரிகிருஷ்ணபாபுவைத் தவிர வேறெவரும் வீட்டில் இல்லை. புன்னகை ததும்பி நாணி வணங்கி நின்றேன். பிறகு அவரும் தமது கைகளை எடுத்தார். 'ரத்நா! டைரியில் என்ன பார்த்தாய்? விசேஷங்கள் யாதாகிலும் உண்டா? என்றார். நான் ஏதாவது பேசக்கூடுமென்று அவர் எதிர்பார்த்தார். நான் என்ன பதில் சொல்லட்டும்? எனக்கென்றே அவர் எழுதிய பக்கத்தை, அவர் எதிர்பார்த்தபடியே நான் படித்து முடித்துவிட்ட சங்கதியை அவரே அருகிலிருந்து கவனித்து விட்டார். இப்போது நான் வாசித்த விஷயத்தைப் பற்றியதாக அல்லவா அவருக்கு நான் பதில் சொல்ல வேண்டும். என்ன விடை கூறட்டும்? "இந்தா அபயஸ்தம் பெற்றுக்கொள்." என்கிறதா? "இந்தா விபிஷணா லங்காபுரி ராஜ்யம்" என்று ராமர் கூறியதுபோல் கூறுகிறதா? எனக்கு மிக்க நாணமாயிருந்தது. ஏதும் கூறாமல் வாயை மூடிக்கொண்டேன். அதற்குள் என் மாதா வரவே பேச்சு அவ்வளவில் நின்றது. தாயார் அந்த டைரியை எடுத்துப் பார்த்தார். எனக்கு திக் திக்கென்று நெஞ்சு அடித்துக்கொண்டது. ஆனால் என் தாயார் ஏகாதசி எப்போது என்பதைப் பார்க்க மட்டுமே டைரியை எடுத்து அதைப் பார்த்த பின் டைரியை மூடிவிட்டுப் போய்விட்டார். ஒரு பெரிய கண்டம் நிவர்த்தியானதைப் போலிருந்தது.

அன்றிரவு நாங்கள் நாடகத்துக்குச் சென்றிருந்தோம். என் பாட்டனாரும் வந்திருந்தார். நான், ஹரிகிருஷ்ணர், என் தம்பி துர்க்காஸரணன் இம்மூவரும் சோபாவிலிருந்து கொண்டு நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். என் பாட்டனார் பெரிய மனிதரல்லவா? பெரிய மனிதர்களுக்கு ஒரு ஷோக்குத்தனம் உண்டு. பலர் பார்த்துத் தங்களை மெச்சிக் கொள்ளவேண்டுமென்றும், தாங்கள் என்னவோ நாடகக்காரர்களுக்கு ஆயிரங்காலத்துப் பங்காளிகள் போல மற்றவர்கள் நினைக்க வேண்டுமென்றும் கருத்து மேலிட்டு, ஆட்டத்தின் இடையிடையே குஷாலாய் நாடக மேடைக்குள் சென்று தமாஷ் படித்து, அங்கு பெரிய மனிதத்தன்மையாகக் கொஞ்சநேரம் உட்கார்ந்துவிட்டுப் பிறகு வெளியில் வந்து குந்துவது வழக்கம். அப்படிப் போலவே, என் பாட்டனாரும் நாடகமேடைக்குள் போய் உட்கார்ந்து கொண்டிருந்தார். அது ஒரு கௌரவமாம்! என்ன கௌரவமோ! என் பாட்டனார் நாடகம் காண வரவில்லை — கௌரவம் காண வந்திருந்தார்.

இந்தக் கௌரவத்துடனே பாட்டனார் நாடக மேடைக்குள் இருந்த சமயம், எங்களுக்குள் பற்பல சம்பாஷணைகள் நிகழ்ந்தன. "இந்த லோக நாடகத்தில் பெண்கள்தான் நாடகமேடையிலிருந்து

சகல விதமான ஆட்டங்களையும் ஆடி முடிக்கிறார்க ளென்றும், ஆடவர்கள் சோபாக்களில் விற்றிருந்த வண்ணம், அக்காட்சிகளைக் கண்டு பல்லிளிக்கிறார்க" ளென்றும் ஹரிகிருஷ்ணர் கூறினார். அதை இன்னும் தெளிவுற விளக்கும்படி வேண்டினேன். "நாடக மேடையின் யதார்த்த அந்தரங்கம் வெளிவரின், "இவ்வளவு தானா" வென்ற அலக்ஷியம் ஏற்பட்டு விடுமென்றும், ஒரு அழகிய காட்சியை வெளியிலிருந்து பார்த்து மகிழ்ந்து, பிறகு உட்சென்று அதனை நோக்கின், அங்குள்ளோர் தங்கள் முகத்தில் சாயம் பூசிக்கொள்வதும், பொய்த் தாடிகள், மீசைகள் அணிவதும், கடவுள் இயற்கையில் தங்கட்குத் தராத அவயவங்களையும், ரூபங்களையும் தாங்களே செயற்கையில் உண்டாக்கிக் கொள்வதும், இன்னோன்ன மர்மங்களெல்லாம் திருஷ்டிக்குப் புலனாகி, ஆதியிலிருந்த பிரமிப்பும் அதிசயமும் விலகிவிடுமென்றும், இவ்விதமே இப் பிரபஞ்ச நாடகத்தில் பெண்பாலாரின் நாட்டியமும் அத்தியந்த சூட்சுமமாய் அமைந்துள்ளனவென்றும், எப்போது நமக்கு ஒரு பெண் மனைவியாய்த் துணைவியாய் வருவளோ வென்று தங்களை ஆடவர்கள் விரும்பி ஏற்கும் வண்ணமாய் விவாக காலத்தை அத்தியந்த தாகத்தோடும் அவர்களை எதிர்பார்க்க வைப்பதும், பின்னர் அவர்கட்குப் பெண்டீராய் இன்பம் தந்து, அதன் ஞாபகமாய் ஒரு மகவை ஈன்று அவர்கள் கையில் கொடுப்பதும், தங்களின் ஆபாஸம் தெரியாதபடி மறைப்பதும், ஆடவர்கட்கு வீட்டின் நினைவையே பெரிதாக்கித் தங்களையே தாரகமாக-நாயகமாகக் கருதும் வண்ணம் அவர்களைத் தங்கள் மாய்கையில் கட்டுப்படச் செய்வதும், அதற்கேற்ப வித விதமாய்த் தங்களை அலங்கரித்துக் கொண்டு கந்தர்வ மோஹினிகளாக ஜ்வலிப்பதுமாகிய இன்னோன்ன எண்ணற்ற அற்புதங்களை யெல்லாம் என்னென்று சொல்லட்டும்? நினைக்க நினைக்கப் பெருவியப்பே" என்று ஹரிகிருஷ்ணர் இயம்பினார். எனக்கு இந்த அநுபவங்கள் பெரிதும் இன்ப மளித்தன. இவ்வாறான சம்பாஷணைகளின் இடையே ஹரிகிருஷ்ணர் என் தம்பியை நோக்கி "உன் தமக்கையை எனக்குக் கொடு" என்று கேட்டார். அவனும் அவரும் மிக்க அந்நியோன்னியம். ஆழ்ந்த பற்றுதல்—நட்பு. அவ்விதம் இருந்தும் என் தம்பி "எனக்குத் தெரியாது. அக்காவையே கேட்டுக் கொள்" என்றான். விளையாட்டுப் பேச்சிலே கூடவா விவகாரம்? "சரி, நான் கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டால் என்ன முழுகிப்போயிற்று? ஆஸ்திரேலியா முழுகிப் போயிற்று! ஐரோப்பா முழுகிப்போயிற்று? என்று தமக்குள் வியஸனித்துக்கொண்டார். தன்னிடத்து மிக்க அன்புடனுள்ள இந்தத் தார்க்காஸாணன் விளையாட்டிற்காவது ஒரு வார்த்தை தன் மனங்குளிர்ந்து களிக்கும்படியாகச் சொல்லாமற் போனானே! இதே ஆவலாய் அலையும் என் உள்ளத்திற்குக்

காரியத்தில் நடவாத மொழிகளாயினும் அது தேவாமிர்தம் போன்று தித்தித்திடுமே என மனமகிழ்ந்தார். எப்போதும் பிறரது தாபம், பாடு, கஷ்டம் அவர்களுக்குத் தோன்றுவதுபோல் மற்றவர்களுக்குப் படுவது சாத்திய மில்லை தான்.

பிறகு என்னை நெருங்கி "நீ யாரை விவாகம் செய்து கொள்கிறாய்?" என்று கேட்டார். அருகில் தம்பியை வைத்துக்கொண்டு இந்த வினாவுக்கு நான் என்ன விடை பகர்வது? தன்னை யொத்த பெண்ணாகவே தன் தங்கை யிருந்தாலும், அருகில் சயனித்துள்ள அவள் நன்கு உறங்கட்டுமென்று தங்களின் பர்த்தாவுக்குக் குறிப்பு உணர்த்தும் தமக்கைகள் எத்தனையோ பேர் இருக்கும்போது அத்தங்கைக்காக அவர்கள், அத்துணை எச்சரிக்கை கொண்டு நாணி யோசிக்கும்போது, என்ன தான் உடன்பிறப்பா யிருந்தாலும், புருஷ ரூபமான என் தம்பியை அருகில் வைத்துக் கொண்டு நான் இந்த வினாவிற்கு என்ன விடை பகர்வது? எனக்கு நாணமா யிருந்தது. மேலும் அவரை மணக்கப் பிரியம்தான் என்று கூறி விட்டால், என் தம்பியின் புத்தி எந்த சமயம் எப்படி யிருக்குமோ? எவ்விதம் மாறுமோ?' இப்படி ரத்நா கூறினாள்' என்று என் பாட்டனாருக்கு எட்ட வைத்துவிட்டால் அது ஒரு கலக நெருப்பாகி விடுமே. நான் என்ன உத்தரம் கூறுவது? மேலும் ஒரு விஷயம்: காதல் சம்பந்தமாகத் தான் காதலித்தவருடன் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். நாணம் விட்டும் மொழியலாம். பழகிய தம்பதிகளைப் போன்றும் அந்தரங்க பதங்களைப் பிரயோகித்துக் கொள்ளலாம். ஆசையுடனும் பேசலாம். முத்தன்ன முத்தம் தரலாம். நமது மனத்தை நன்கு திறந்துவிட்டுத் தாராளமான பேச்சுகட்கு இடம் வைத்துக் கொள்ளலாம். உள்ளே யிருந்து ஊற்றெடுத்துப் பெருகும் அவ்வளவு ஆசையையும் நம் கண்ணாளர் முன்பு எதிரே கொட்டி யளக்கலாம். ஆனால் இவை எல்லாம் பெற்றோர், ஸகோதரர், ஸகோதரிகள் முன்னிலையில் கூடுமோ? அவர்கள் எவ்வளவு தான் வேண்டியவர்களாயினும் பிராணாதாரமானவர்க ளாயினும் —காதல் விஷயத்தில் அவர்களை யெல்லாம் ஒருபுறம் ஒதுக்கவேண்டியதே. ஒரு குப்பைக் கூடையில் அவர்களைப் போட்டு ஒரு மூலையில் வைக்கவேண்டியதே. பகவான் ஸயன கிருகத்திற்கு இவர்களை யெல்லாமா அனுப்புகிறார்? இவர்களை வெளியில் நிற்க விட்டு விட்டு, காதலர்களை மட்டும் உள்ளே செல்லவிடுத்துக் கபாடபந்தனம் புரிவிக்கின்றார். அதிலிருந்தே காதலின் கௌரவம்—மாட்சி நன்கு புலனும். ஹரிகிருஷ்ணருக்கு இப்போது நான் யாது கூறுவது? என்னையோ ஹரிகிருஷ்ணருக்குத் தர மனதொருப்படார். நானோ மற்றவரை மணக்கச் சம்மதியேன். இந்த நிலையில் எனக்கு விவாகம் என்பது ஏது? ஆதலின் விவாகத்தை வெறுத்தே பேசிவிடுவது உத்தமம் என்று தீர்மானித்தேன். விவாகம் வேண்

டாமென்று யார் கூறுகிறார்களோ அவர்களுக்குத் தான் விவாகத்தில் அதிக சிந்தை—விருப்பம் இருக்குமென்பது அநுபவத்தில் அறிந்த உண்மை. அந்த உண்மையையும் ஒருவாறு புலப்படுத்திக்கொண்டு சாதுர்யமாக விடைகொடுத்துவிடத் துணிந்தேன். என் தம்பியும் என் வாய்மொழியை எதிர்பார்த்து நின்றான். நான் கூறியதெல்லாம் இதுவே:—

"தெய்வ ஸங்கல்பம் இருந்தால் இனிமேலும் கூட நான் பள்ளிக் கூடம் போனபடியே இருப்பேன். தெய்வஸங்கல்பம் இல்லாவிட்டால் கன்னிகாமடம் சேர்வேன். எவரையும் மணக்க எனக்கு இஷ்டமில்லை. எனக்கு விவாகமே வேண்டாம்."

என்னுடைய இந்த வார்த்தைகள் பாவம்! ஹரிகிருஷ்ணரின் செவிக்கு எவ்விதம் இருந்தனவோ! ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிய பான்மையில் இருந்ததோ யாதோ? அவர் திக்கு முக்காடிட்டுப் போனார். கலங்கினார். வியர்த்தார். பின்பு அவருக்கும் எனக்கும் ஒரு சிறு சம்பாஷணை நிகழ்ந்தது.

"என்னை விவாகம் செய்துகொள்கிறாயா?"

"மாட்டேன்."

"என்னைக் கூடவா?"

"ஆம்."

"எவ்வளவோ அன்பு உன் மீது வைத்திருக்கிறேனே. உன்னை என் கண் குளிரக் காணத்தானே இப்படி அடிக்கடி இந்த ஊருக்கு வந்துகொண்டிருக்கிறேன்."

"விவாகத்தைப் பற்றிப் பேசப் பெரியோர்கள் இருக்கும் போது நான் என்ன பதில் சொல்லட்டும்?"

"நீ சொன்னால் சரி. உனக்காக உயிர்விடவும் ஸம்மதிக்கிறேன்."

"நானோ பெண். என்னால் என்ன முடியும்?"

"குமுதாவைப்போல் உன்னையும் நினைத்துள்ளேன். சித்தம் இரங்கலாகாதா?".

"எதற்காக இத்தனை சச்சரவு—வாதம்? எனக்கு விவாகமே வேண்டாம். எவரையும் மணக்க எனக்கு இஷ்டமில்லை. இப்படி என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. இவ்விதம் நான் கூறினால் தப்பாயிராதென்று நினைக்கிறேன்."

"என்ன இப்படிப் பதில் தந்தாய்? இவ்விதம் பேசுவாயென்று நான் எதிர் பார்க்கவில்லையே."

"நாடகம் பார்க்க வந்த இடத்தில் இதுதானோ பேச்சு?

"நம்பியிருந்த இடத்தில் வாட்டமடையக் காலம் வந்ததே—விதியோ மாதே!"

இவ்வளவுடன் ஸம்பாஷணை நின்றது. ஸ்ரீகிருஷ்ணருக்குக் கடைசியில் நான் சொன்ன வாசகங்கள் மிக்க வேதனையை விளைவித்தன. அவர் உள்ளம் நெருப்பாய்ப் பற்றி எரிந்தது. அதைத் தாங்கக் கூடவில்லை. ஆசை முறிந்து போயிற்று. தக்ஷணமே மெதுவாக எழுந்து தமது ஹிருதய வேதனையை யாற்றாது வெகு தூரத்திலிருந்த சோபா வொன்றில் போய் உட்கார்ந்துகொண்டார். என் தம்பி ஜாடையாக இருந்துவிட்டான். எனக்கு மட்டும் மனதில் சொல்லொணாத வியாகூலமாயிருந்தது. வேடிக்கைக்கு நாடகம் பார்க்க வந்த இடத்தில்கூட இந்த வேதனையா வென்று நொந்து கொண்டேன். ஆ!—நாடகம் பார்க்க வந்தவர்களில் எல்லோருமே சந்தோஷமாக இருந்துவிடுகிறார்களா? நாடகத்துள் காணப்படும் காட்சிகள் அவரவர்களின் சொந்த அநுபவங்களின் சார்பு பெற்றதாயிருப்பின், அந்த சமயத்தில் எத்தனையோ மனோவிகற்பங்கள் அவர்களின் உள்ளத்தில் உதிப்பதில்லையா? ஸகோதர ஸகோதரிகளின் அநுதாபம், ஸதிபதிகளின் பிரிவு, குடும்ப கஷ்டங்கள், காதலின் துன்பங்கள் இவற்றையெல்லாம் நாடகத்தில் காணும் போது நம்மையே மறந்த நிலை நமக்கு உண்டாவதில்லையா? நம் மனதின்கண் சென்று தாக்குவதில்லையா? பழயநாள் நினைவு நம்மைப் பின் தொடர்வதில்லையா? குழந்தையை இழந்த ஒரு பெண்மணிக்குச் 'சந்திரமதியின் பிரலாபம்' எத்துணை சோகத்தைக் கொடுப்பதாயிருக்கும்! ஆதலின் நாடகசாலையினுட் புகுவாரனைவருமே புளகித மனத்தினராகின்றார்களென்பதில்லை. தங்களின் இன்ப துன்ப அநுபவங்கள் நாடகக் கதையுடன் ஸம்பந்தப்படுகையில் அவர்களின் சித்தமும் பல திறத்தினவாய்ச் சோக மோக கோப தாபங்களை ஏற்கக் கூடும். நாடகம் பார்க்க வந்த எனக்கும் இதில் பங்கு கிடைத்தது. என் ஹிருதயம் கொந்தளிப்பில் இருந்தது.

வெகு நேரத்திற்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ணர் மீண்டும் திரும்பி வந்து என்னருகில் உட்கார்ந்து கொண்டார். வேற்றுருவமாய் விளங்கினார். வதனம் கரித்து ஒளி குன்றி மாசு படிந்திருந்தது. அழுவார் அழுவார் அவரவர் துக்கம். அவ்வளவு தான் பிராப்தம் என்று தன்னுள் கருதிக்கொண்டார் போலும்! வெறும் வாய்ப் பேச்சுக்காவது "உன்னை மணக்கின்றேன்" என்று கூறியிருந்தால் அதுவே ஒரு பெரும் ஆறுதலைத் தந்திருக்குமேயென்று மனம் கசிந்தார். அவர் அன்றிரவு சரியாகப் பேசவில்லை. குமுதாவோடு அவர் சுகப் போனது போனதே. இதற்குள் பாட்டனாரும் நாடக மேடையை விட்டு எங்களருகில் குந்தினார். நாடகம் முடிந்ததும் யாவருமாக வீட்டுக்குச் சென்று விட்டோம்.

(இந்த நாவல் அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-17. | திரிச்சி : பிப்ரவரிமீ 1922 | இதழ்-12.

இது உங்களுக்கே

பாரதரத்நா.

காதற் பிரதிக்ஞை.

*"இப்பொழுது விடியற்காலமாய் விட்டது! கோழி கூவுகின்றது! ஆழியின் ஆரவாரம் அடங்கி வருகின்றது! காகம் கத்துகின்றது! மேகம் வெளுக்கின்றது! அர்த்த ராத்திரிப்போது மெத்த வேகமாய் வெளிச்சென்ற கள்வர் தத்தம் உறைவிடம் நோக்கிச் செல்லுகின்றார்கள்! அந்தந்தோ! இதனினுங் கொடிது கொடித்! பதின் மடங்கு கொடிதே! புதுமணம் புரிந்து புலவியி லாழ்ந்த மதுமலர்த் தாரினர் கலவி நீங்கி, ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மட்டிலாத் துயர் தாங்கி, ஏக்கம் வீக்கிய நோக்கம் காட்டிப் பள்ளி விட்டெழுந்தனர்! ரத்தின விளக்குகள் பூண்ட வானத்தைக் குத்திரமாய்த் திருடிச் செல்ல, நள்ளிருளாய் வந்த கள்வன் அருகில் வரும் ஒள்ளிய தினகரனைக் கண்டு மெள்ள நழுவிச் செல்கிறான்! கோயிலில் மேளமும், குருக்கள் ஸ்நானமும், வாயில்கள் திறப்பும், வழி நடையோசையும் எங்கெங்கும் வயங்குகின்றன!"

தம்பி இன்னும் நித்திரையிலேயே இருந்தான். ஹரிகிருஷ்ண பாபு மூன்றும் உப்பரிக்கையில் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ஒரு துள்ளு துள்ளி எழுந்து வந்து என் கரங்களைப் பற்றிக்கொண்டார். எளியேனிடத்துக் கருணைதான் இல்லையோ என்றார். தேம்பித் தேம்பியே கதறினர். நான் அவர் கண்களைத் துடைத்தபடியே, பெற்றோர்கள் இருக்கும்பொழுது சிறுமியான என்னால் யாது செய்ய முடியும்?என்றேன். "நீ செய்யவேண்டாம்—, என் ஆவல் தாகம் தணித்தற் பொருட்டேனும் ஒரு ஆசை வார்த்தை காண்பி. என் ஜீவன் கடைத் தேறட்டும்" என்றார். "உன் மேல்

---

*Sri Krishna Chithanya. (Tamil)

என் பிராணனை யெல்லாம் வைத்திருக்கிறேன்" என்றார். "என்னை வளர்த்த அத்தையின் குமாரத்தியைப் போலவே உன் சாயலும் பொருந்தி நிற்கின்றது" என்றார்.

நான்:—வெளிச்சத்தில் வர சில ஜந்துக்கள் பயப்படுகின்றன. அதுபோல் காதலர்களும் வெளிச்சத்தில் வர சில சமயங்களில் அச்சமடைகின்றனர். நெஞ்சில் மறை பொருள் இல்லாவிட்டால் எதையும் பகிரங்கமாகச் சொல்ல ஆக்ஷேப மிராது. தங்களின் காதலைப் பற்றி மனதிலேயே வாதனைப் பட்டுக்கொண்டு அவர்கள் இருட்டிலேயே மகிழ நேர்கின்றது. அதுபோல நானும் தங்களைப் பிரமாண புருஷராக மதித்து ஏற்றுக்கொள்ள முயன்ற போதிலும், என் அந்தரங்கப் பிரியுடன் அதனைத் தழுவிக்கொள்ள சந்தேகத்தால் நீண்ட காலம் திகைத்து நின்றேன். தாங்கள் என்னிடத்துக் காதலாக இருந்தால், நானும் அப்படியே தங்களிடத்து இருப்பேனென எண்ணி விட்டீர்களா? தம்மைப் போலவே பிறரையும் நினைத்து விதிதாந்தங்கள் ஏற்படுத்துவது தவறு.

ஹரிகிருஷ்ணர்:—என் இன்னல்களைத் தீர்க்கும் ஸஞ்சீவியே! உன் சூட்சும யோசனை கிரமமானதே. ஆதரித்தல், அநுதாபம் மாத்திரம் காட்டுதல், அவ்விபக்கத்தைக் கண்டித்தல் என மூன்று பிரிவு உண்டு. இம்மூன்றும் கலந்து தொனிக்கும் நின் சொற்களில் எதை நான் எனக்கென்று எடுத்துக் கொள்வதோ?

நான்.—எங்கு நீதி, தயை இருக்கிறதோ, எங்கு அன்பு மேலிட்டால் தன்னைத் தானே அர்ப்பணம் செய்துவிடுதல் இருக்கிறதோ அங்கு ஸர்தியும் இருக்கிறது. இந்த ஸந்தியை நமது சொந்த மனப்பாங்கின்படியே நாம் நிறைவேற்றிக் கொள்ளலாம். நம் சொந்த மனவாசலிலேயே நெடுநாளாக மிகச் சோர்வுற்று இந்த மகா புனிதமான காதற் கடவைகள் காத்துக் கிடந்திருக்கின்றன. கடவுளே நமக்கு அவற்றை நேராக அளித்திருக்கின்றார். அதற்குப் பாதை திறந்துதான் இருக்கும். ஆனால் நடக்க—துணிய சுதந்தரமான கால்கள் இரா.

ஹரிகிருஷ்ணர்.—உன்னை எவ்விதத்தும் அடைவதென்ற இந்தக் காரியம் சாதநியம் என்பதான நம்பிக்கை மட்டும் எனக்கில்லா திருக்கும் பட்சத்தில், வாழ்க்கையினிடத்து எனக்கு எவ்விதப் பற்றுதலும் கிடையாது. இப்படிக் கிடையாதென்பதை இன்று உனக்கு என் மனத்தைத் திறந்து வெளியிட்டுக் காட்டி, உன்னைப் பெறுவதின் அவசியத்தை நான் இப்போது சித்தாந்தம் செய்து விட்டேன் என்று நம்புகிறேன்.

நான்.—நீங்கள் ஒரு வருஷத்திற்குப் பின்பு வந்து உதயம் செய்திருக்கின்றீர்கள். நீங்கள் என்னை விட்டுப் பிரிந்தது முதல் மங்

நிரியை இழந்த அரசனைப் போலவும், கன்றை இழந்த பசுவைப் போலவும் சில தினங்கள் வரை ஸஞ்சலம் இருந்தது. பிறகு அதனை சிந்தித்துப் பார்த்ததில் நமது சொத்து நமக்குத்தானே என்று மனம் சாந்தமடைந்தது. நீங்கள் என்னருகில் இருப்பதாகவே எண்ணிக் காலம் கழித்து வருகிறேன். என் தேகம் இங்கே இருக்கிறது. எனது மனம் உம்மிடத்திலே தான். இது கூடிய சீக்கிரம் உமக்குச் சொந்தமாக வேண்டுமென்பதே என் மனோராஜ்யம். எப்படி முடியுமோ ஈசன் அருள்!

ஹரிகிருஷ்ணர்.—நியாயமான அவசியங்கள் எவை எவையென்று எண்ணிப் பார்க்கவேண்டும். காலத்தின் போக்குக்கு அநுசரணையாக, அந்தந்தக் காலத்துக்கு வேண்டியவற்றையே மனிதன் கிரகித்துக்கொள்ளும் இயல்புடையவனு யிருக்கிறான். அதல்லாமல் நியாயமான அவசியங்களும் மனிதனை அவ்வழியில் நடக்கும் படிக் கட்டாயப் படுத்துகின்றன. இதைத் தடுப்பதற்கு ஒருவராலு மாகாது. என் வாழ்க்கைக்கு அவசியப் பொருளாகிய நீ என்னைக் கைவிட்டு விட்டால் என் எதிர்கால வாழ்வு என்னுகும்? மனங் கலங்கி, நிலை குலைந்து, தலை சாய்ந்து நிற்கின்றேன். இன்புச்சொல்லாலும், அன்புச் செயலாலும் என்னை ஆதரி.

நான்.—என் பிரிய தந்தையோ அருகிலில்லை. என் தாயோ தமது சுயேச்சையைப் பறிகொடுத்து விட்டார். எவ்வகையிலும் சுதந்திரம் இழந்த மாதா. பந்துக்களிற் பலரோ என் பாட்டனுரின் தயவை எதிர்பார்த்து, அவருடைய காற்று எந்தப் பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கத்தில் போகத் தயாராய் இருக்கிருர்கள். எவ்வித நியாய நெறியையும் தழுவாமல் வெறும் வசை மாரியாக வழங்கி வரும் என் பாட்டனுரோ அசட்டுப் பிடிவாதம்கொண்டு அதில் வேரூன்றி விட்டார். கோபம் குடிகொண்ட உள்ளத்தே விவேகமும் ஒன்ருய் உறைவது இயற்கையில் வழக்கமில்லை. எங்குமே இருள். எனது எண்ணம் நிறைவேருமற் செய்யவேண்டுமென்னும் போவலால் பித்தேறி விளங்கும் என் பாட்டனுர் தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்துப் பார்ப்பாரானல், என்னைக் கட்டாயப்படுத்தும் முயற்சியில் கொஞ்சமும் நம்பிக்கை வைத்திருக்க மாட்டார். துரதிர்ஷ்டங்கள் தனிப்பட்டு வருவதில்லையென்று ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. அதற்கு எனது தற்கால நிலைமை பொருந்திய திருஷ்டாந்தமாக இருக்கிறது. இவர்களுடைய பந்தயத்திலிருந்தும் என்னை விடுவித்துக்கொள்ள அத்தனை நெஞ்சழுத்தம் இன்னும் எனக்கு ஏற்படவில்லை. ஆனல் என்னைத் தட்டிக்கொடுத்து மயக்கிவிடும் காலம் மலை ஏறிவிட்டது. ஒரு வேளை சாப்பிட்டு உயிர் வாழவே தங்களைக் கடவுள் படைத்ததாக ஏற்கனவே நினைத்துக் கொண்டிருந்த ஜனங்கள், கூடுமான போகங்களை யநுபவிக்கத்

தங்களுக்கும் பாத்திய முண்டென்று இப்பொழுது கருதத் தொடங்கி விட்டதுபோலவே, நானும் என் பிற்கால க்ஷேமத்துக்கான விவாகத்தில், ஒரு பெண்ணுக்கு ஸர்வ சுதந்தரத்துவமும் உண்டென்று நினைக்கத் தீர்மானித்து விட்டேன். மனித வாழ்வின் மாறுதல்களில் இதுவு மொன்று.

ஹரிகிருஷ்ணர்.—தலைவன்—தலைவி என்னும் இவ்விருவர் உடலால் வேறுபட்டுப் புலப்படினும், அவர்தம் உயிரை ஒன்றுபடுத்திப் பிணித்து நிறுத்தும் அன்புக் கயிறென்றுளது. அக்கயிறே காதல் என்பது. அது கண்ணுக்குப் புலனாகாத நுண்பொருள். அகத்தே நின்று அன்பு நீரை இடையறாது சொரிந்து கொண்டிருக்கும் இனிமையான அமுத ஊற்று. மக்கள் இவ்வுலகத்தில் நுகர வேண்டிய இன்பம் அஃதொன்றே. அதற்கு இணையாக உள்ள இன்பம் பிறிதொன்றில்லை. அதன் முதிர்ச்சியே கடவுளின்பமென்பது. அன்புக் கயிற்றால் கட்டப்பட்டு, ஒருயிரும் ஈருடலும் தாங்கி இன்பத்தை நுகர்வதே ஜீவன் முக்தி. இற்றைநாளில் காதல் மண மழிந்துபட்டு மிருக மணம் நிகழ்ந்து வருதலால்—கிரமமாய் நிற்கப் பார்க்கும் தலைவன் தலைவிகளின் இன்ப வாழ்க்கை கூடக் குலைந்து போகிறது. அங்ஙனம் ஆகாதிருக்கவே—காதற் கடலினுள் மூழ்கவே—நின்னுதவியை நாடுகின்றேன்.

நான்.—நமது எண்ணம், காரியம் ஒவ்வொன்றிலும் நாம் பரிசுத்தமாய் இருக்கவேண்டும். இஷ்டபூர்த்திக்கான முயற்சியும் இடையறாது நிலவவேண்டும். என்னுடைய தியாகத்தைக் கேவலம் இளமையின் உற்சாகம் எனக் கருதுவாரும் உளர். அநேக மாதங்களாய்ப் போராடி வந்தநின் அநுபவத்தை இப்போது நான் பெற்றிருக்கிறேன். திடமான மனத்திலும், உயர்ந்த லக்ஷ்யத்திலுமே நம்முடைய விடுதலைப் பத்திரம் இருக்கிறது. இந்த ஞானத்தை நாம் உணர்வது எவ்வளவு ஆவசியகமோ, அவ்வளவு ஆவசியகம் பொறுமையை ஏற்று சகித்து நிற்பதும்.

ஹரிகிருஷ்ணர்:—இன்னும் எத்தனை காலம் நான் பொறுமைப்பட? உன் பவள வாய்திறந்து ஏதாகினும் எனக்கு ஒரு உறுதி தா.

நான்.—என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? பூரணமாய்த் தீர்க்காலோசனை செய்துவிட்டே இந்தக் கேள்வியை இப்போது கேட்கிறேன்.

*ஹரிகிருஷ்ணர்:—உண்டா—இல்லையா? என்னை விவாகம் செய்து கொள்கிறாயா? இல்லையா? செய்தால் என் உயிர் நிற்கும். இல்லையாகில் நானும் இல்லை. உன் பதிலின்

*இந்த படத்தைக் கவனிக்கவும்.

மேல் தான் என் ஜீவியமும்—அதன் அழிவும். ஒரே பேச்சு! சொல் பதில் உடனே. உண்டா—இல்லையா?

ஹரிகிருஷ்ணர் மிக்க ஆத்திரத்துடனும் என்னை இப்படிக் கேட்கவே, நான் ஏதும் சொல்லத் தோன்றாதவளாய்ப் பிரமித்து நின்றேன். சில நிமிஷங்கள் வரையில் எனக்கு ஸ்மாரணையே இல்லை. என் பெரியோர்களெல்லாம் என் கோரிக்கைக்கு எதிரிடையாக இருக்கும்போது அவருக்கு நான் என்ன பதிலைச் சொல்லட்டும்? பெருந் திகைப்பாயிருந்தது. நான் மறுத்துவிட்டால் அவர் தம் ஆத்திரத்தில் பிராணத்தியாகம் செய்துகொள்வாரென்பது நிச்சயம். அவ்வளவு உறுதியுடன் அவர் இருந்தார். முடிவில், நான் திடீரென்று அவர் கால்களைப் பற்றிக்கொண்டு "உங்களையே பிராணபதியாக வரிக்கிறேன்" என்றேன். அதற்கு,

ஹரிகிருஷ்ணர்.—வாய்ச் சொல் மட்டும் போதாது. நீ உறுதியுடன் மனோதிடப்பட்டு நிற்பதற்கு, எனக்கு ஏதாவது சத்தியத்தின் மூலமாக உன் வாக்கை நிச்சயப்படுத்திக் கொடு—என்றார்.

நான்.—என் நாதா! தாங்கள் என்னை யோக்கியமுள்ளவளென்று நம்பாவிட்டால், நான் உங்களை நம்பச் செய்வதென்பது முடியாத காரியமாகும். ஈச்வர சாக்ஷியாகக் கூறுகிறேன். தாங்களே என் பிராணபதி. நானே தங்களின் தர்மபத்தினி. இது மேல்வரும் ஜன்மங்களிலுங் கூட. புவனவல்லபா! சத்தியங்கள் வேண்டுமா? இந்தா என் ஆணைகள்.

1. பேரருட் கடவுள் திருவடி ஆணை.

2. பிறப்பளித்து எம்மை யெல்லாம் புரக்கும், தாரணி விளக்காம் என்னரு நாட்டின் தவப் பெய ரதன்மிசை ஆணை.

3. ஈசன் இங்கு, எனக்கும், என்னுடன் பிறந்தோர் யாவர்க்கும் இயற்கையில் அளித்த, தேச மின்புறுவான் எனக்கவன் பணித்த, சீருயர் அறங்களின் மீது ஆணை.

4. மாசறும் என் நற்றுயினை நல்கி, என் வழிக்கு எல்லாம் வாழ்வாயுள்ள—இந்நாட்டினிடத்து ஆசை, இங்கு எவர்க்கும் இயற்கையா மன்றோ?—அத்தகைய அன்பின் மீது ஆணை.

5. அரும் பகை யதன்மிசை ஆணை.

6. வெட்கத்தின் மீது ஆணை.

7. மலிவுறு சிறப்பின் எம்முடைய முன்னோர் மாண்பதன் நினைவின் மீது ஆணை.

8. மெலிவுடன் இந்நாள் பாவையராம் யாங்கள் வீழ்ந்திருக்கும் வீழ்ச்சியி னுணர்ச்சி மீது ஆணை.

9. கண்ணீர் மீது ஆணை.

10. துயர்களின் மீது ஆணை.

11. என்னருங் காதலின் மீது ஆணை.

இன்னும் எந்நாளும் இவை செய்யத் தவறேன். என் ஆணை நான் கடவேன். இயன்றிடுந் துணை யுமக்கு அளிப்பேன். மெய் யிது. மெய்யிது. பேசி நின்ற பெரும் பிரதிக்கினை மாசிலாது நிறைவுறும் வண்ணம் ஆசி கூறி யருளுக.

ஹரிகிருஷ்ணர்:—என் பாரத ரத்நா! போதும் போதும் நின் வீரிய வசனங்கள்! சபதங்கள்!! உன் ஆணைகட்கு மெச்சினேன். என் கண்ணே! நீ கொண்டவன் மனநிறைந்த இசைந்த கோமணி! என் இதயம் கவர்ந்த கோகிலம்! நான் முத்த மிடும் முத்து! என் ஜீவகல்பகம்! என் வாழ்வின் ஒளி! வாழிய மாமணி முடிசூடி நீடுழி!

நான்.—நாதா! என் கண்ணாளா! நாம் அன்பு—உரிமை என்னும் இரு தூண்களைத் தாங்கி நிற்பவர்க ளன்றோ? நாம் தாழ்ச்சி பெறுவதும், நிமிர்ந்து நிற்பதும் நமக்குரிய அன்பு என்னும் ஆயுத பலத்தைப் பொறுத்திருப்பதால்,—அந்த அன்பில் பரிபூரண நம்பிக்கை கொண்ட நாம்,—எவ்விதத்தும் நிமிர்ந்து தாங்கிக் கொள்ள வல்லவராவோம் என்பதில் என்ன தடை? ஸமயத்துக்குத் தகுந்த ஸக்திகள் மனிதருக்கு உண்டாகின்றன. பிறருடைய எண்ணத்தில் மன்னிக்கத் தகாத பெரும் பிசகொன்றை நான் செய்துவிட்டதாகத் தோற்றினும், நல்லெண்ணத்துடனேயே அந்தப் பிசகைச் செய்திருக்கின்றேன். எதற்கும் பரமன் இருக்கின்றான். பாதுகாப்பான். பார்த்துக்கொள்வான். அவன் பாரம்.

“அன்பு” வாழ்கென் றமைதியி லாடுவோம்,
ஆசை “காதலை” கைகொட்டி வாழ்த்துவோம்.”

ஹரிகிருஷ்ணர்.—கடைசியாக, நமது காதல் விழித்துக்கொண்டுவிட்டது. அது தன் ஸக்தியை உணர்ந்துகொண்டு விட்டது. இருளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டு வருகிறோம். விசேஷ சம்பவங்கள் நடக்கப் போகும் தருவாயில் இருக்கிறோம். ஆனால், அதை நாம் இன்னமும் அறிந்து கொள்ளாம லிருப்பது தான் அதிலுள்ள விசேஷம்—என்றார்.

* * *   * * *   * * *

எப்படியோ ஹரிகிருஷ்ணருக்கு நான் என்னை யறியாமலே, பகவத் ஸங்கல்பத்தின் தூண்டுதலால், அவரது இதழ் ஈரத்திலே பிரேம முத்தங்கள் ஈந்திட்டேன். அவரும் தம் காதல் பொங்கிட என்னை இறுகத் தழுவி என் இரு கன்னங்களிலும் முத்தமிட்டார். இதழோடு இதழ் பொருந்தி, உணர்வு கலந்து, மயங்கி, தன்னிலை மறந்து மந்தகாஸ பூர்ண சந்திர வதனரானார். நான் “நாணிக் கண்

புதைந்து'' நின்றேன். ஹரிகிருஷ்ணரின் செந்தாமரை வதனம் மலர்ந்தது. புன்சிரிப்பு தவழ்ந்தது. காந்தி வீசிற்று. அவருக்குப் புதிய ஜீவன் உண்டானது. தமது மனோரதம் சித்தி பெற்றமைக்காகப் பகவானைப் பிரார்த்தனை செய்தார். எங்கும் நிறைந்த பரம்பொருள் இந்த ஏழை ஹரிகிருஷ்ணரின் பிரார்த்தனைக்குச் செவி சாய்க்காது போக மாட்டார். தன்னிலும் பரம ஏழை யென்றறிந்தும், அந்த ஏழையினிடத்துக் காதலுக்காகவே வைக்கும் காதல் தான்—உண்மையான—பரிசுத்தமான—ஒளி பொருந்திய காதல் ஆகும். என் நாதருக்கு மங்களம் வழங்குமாறு நானும் காளி மாதாவை ஸ்மரித்தேன்.

"இன்பமாகி விட்டாய், காளி, என்னுள்ளே புகுந்தாய்.
பின்பு நின்னை யல்லால், காளி, பிறிதி நானுமுண்டோ?
அன்பளித்து விட்டாய், காளி, ஆண்மை தந்துவிட்டாய்
துன்ப நீக்கி விட்டாய், காளி, தொல்லை போக்கி விட்டாய்"

அத்தியாயம்—6

காதலியின் *'உருவெளித் தோற்றம்.'

நான்.—நமது கிரந்தங்களிலும் சாஸ்திரங்களிலும் குறிப்பிடப்படும் பிரேமைக்கும், சத்தியத்துக்கும் தாங்கள் அவதார புருஷராக விளங்குகின்றீர்கள். நான் தங்களுக்கு ஸத்தியம்செய்து கொடுத்துவிட்டேன். என் ஜீவியத்திலே புதிய சகாப்தத்தின் கோட்டை வாயில் திறந்தானது. பழய கோட்டையின் அஸ்திவாரம் இனி ஆடிப் போய்விடும். தான் சொல்வதை அப்படியே அங்கீகரிக்காத எவரையும், ஸகிக்காத மனோபாவம் கொண்டவர்கள் உலகிற் சிலர் உண்டு. அவர்களால் நேரிடும் நிர்ப்பந்தங்கள் அநந்தம். சுயேச்சையை நாடாமல், அவர்கள் பார்த்த இடத்தில் கழுத்தைக் கொடுத்து, யந்திரத்தைப் போல் இட்ட வேலைகளைச் செய்து கொண்டிருந்தால் அவர்களுக்கு சந்தோஷமா யிருக்கும்.

*"உருவெளித் தோற்றம்" என்பதின் பரமார்த்திகமான பகுதியை இனிப் பிரசுரமுறும் "ஆநந்த கதா கல்பகம்" நான்காம் வால்யத்தில் "ஸ்ரீ மணிவல்லி" என்ற அரிய நாவலில் இனிது காண்க. அநுபவித்தவர் தான் அறிவார் அதன் அருமை.

ஹரிகிருஷ்ணர்:—உன்னுடைய கதி மோக்ஷம் உன்னிடத்திலேயே இருக்கிறது. உன் ஸத்திகளை நீ கிரமமாக உபயோகித்தால் உத்தேசம் கைகூடிவிடும். அன்பே தர்மம். அதுவே மதம். மௌனமும் லக்ஷ்யத்தில் சிந்தையுமே பிரதானம். ஆத்திரமோ குறுக்கு வழியில் பாய வைக்கும். விசாலதிருஷ்டி உண்டாகாது போய்விடும். கோப மூட்டப்படும் பொழுது நிதானமிழந்துபோவது பெரிய அபாயத்திற்கிடம். கஷ்டங்களை சகிக்க முடியாததைவிடப் பைத்தியம் பிடித்தவர்களாகி விடுவது இன்னும் பெரிய அபாயம். உன்னைப் பற்றி மிகவும் கவலை யுறுகின்றேன்.

நான்.—எனக்கு ஏதும் தோன்றவில்லை. பலாத்காரமாய் வேறொருவருக்கு என்னைக் கொடுத்துவிட்டால், அப்போது என் ஆணைகளின் கதி என்ன? தங்களின் மனோபீஷ்டம் தான் எவ்வாறு சித்திக்கும்?

ஹரிகிருஷ்ணர்.—நம்மாலானமட்டும் பார்ப்போம். கடவுளை நம்பி யிருப்போம். நீ வாக்கு தந்துவிட்டாய். அதுவே போதுமானது. காமக் கருதி உன்னை நாடவில்லை. காதல் கருதியே உன்னை நாடியது. என் ஆசையெல்லாம் என் வாழ்நாள் முற்றிலும் உன்னை என் பக்கத்திலேயேவைத்துக்கொண்டு, உன் குளிர்ந்த முகம் பார்த்துப் பார்த்துப் பேசிப்பேசி, எக்காலத்திலும் உன்னைப் பிரியாதிருந்து வாழவேண்டுமென்பது தான். அதற்கு வழிவகை எவ்வாறு? விவாகத்தின்மூலமாக எனக்கே நீ சொந்தமானவள் என்று ஆனாலன்றி, இந்த அவா சித்திபெறுமா? துரதிர்ஷ்டவசமாய் நீ வேறொருவருக்கு மனைவியாய் விட்டால், இப்போதைப்போல் அப்போது உன்னைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பேசிக் களிக்க முடியுமா? அதற்கு எத்தனை ஆக்ஷேபனைகள் தோன்றிக் கொள்ளும்? முதலில் அப்படிப் பேசுவதே சரியாகுமா? நீயோ அன்னியப் பெண் ஆகிவிடுவாய். நானும் அன்னியன்போல் நடக்கவேண்டியவனே. இது நாளைக்கே நேர யிருக்கும் ஆபத்து. இதை நினைத்தால் என் வயிறு பகீர் என்கிறது!

நான்.—இனி இவ்விதம் பேசாதீர்கள். நான் அழுது விடுவேன். என் மனத்தைக் கலக்கிவிட வேண்டாம். நமது சோதனைக் காலம் இதுதான். நம்முள் திடமான நம்பிக்கை யிருந்தால், பிறர் ஏற்படுத்தும் தடைகள் நம்மைப் பாதிக்கமாட்டா. கடவுளை நாம் பூரணமாய் நம்பிவிட்டால் அவர் நம்மை எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் மீட்பித்து விடுவார்.

ஹரிகிருஷ்ணர்.-என் மனத்தை உன்னிடம் வெளியிட்டதன்றி வேறில்லை. இந்தத் தடவை நான் உன் வீட்டிற்குவந்ததும், உன்னை எவ்வளவோ ஆவலோடும் காண விரும்பினேன். வீட்டுவாயிற்படி

ஏறியதும், வழக்கம்போல் நீ தான் என் கண் முன்பு முதலில் தென்படுவாயென்றும் நம்பினேன். என்னென்னவோ வெல்லாம் முன்போல் உன்னோடு பேசிப் பேசி இறும்பூதுறவும் வாயூறி நின்றேன். உன்னுடன் அவ்விதம் பேசவேண்டுமென்றும், இவ் விதம் பேசவேண்டுமென்றும், பலவாறு நினைந்து ஆசைகள் பொங்கினேன். இவ்வாறாய சிந்தனை ஊற்றுகளோடும் இங்கு நான் வர, நீயோ அன்று முற்றிலும் என் கண் முன்பு தென்படவே யில்லை. உன்னுடன் பழயநாள் போல் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசிப் பேசிப் புளகிதமுறப் பிராப்த மில்லாவிட்டா லும், உன் முகதரிசனமேனும் இந்தப் பாபிக்கு வாய்த்தால் அதுவே போது மென்றும், காலத்திற் கேற்ற கோலமாய்க் கருதி எதிர் நோக்கினேன். அதுகூடக் கிடைக்கவில்லை. என் மனம் பட்ட வாதனை கடவுளுக்கே தெரியும். ஆவலோடும், எத்தனையோ மனோ ரதங்களோடும் நாம் நம்பியிருந்த பாரத ரத்நா இப்பொழுது புதுவிதமாக மாறிவிட்டாள். இப்பொழுதே அந்நியனுக்கு மனை வியாய் விட்டதுபோன்றும், பழய நாள் போல் பக்கத்தில் உட் கார்ந்து பேச முடியாதென்பது போன்றும் காட்டிக் கொள்ளத் தலைப்பட்டு விட்டாள்! இனி செய்வது யாதென்று அப்படியே மனமொடிந்து விழுந்துவிட்டேன். நடுக்குறுதற்குரிய இப்பயங் கரமான சோதனை எனக்கு நேராதிருக்கவே, விவாகத்தால் உன்னை என் சொந்தப் பொருளாக்கிக் கொள்ள முயல்வதன்றி அந்தப் பாழுஞ் சிற்றின்ப துராசையாலன்று. எனக்கு அந்த இழிந்த சிந்தனையில்லை. அதற்குள்ள கௌரவங்களோடும் அதைப் பெறுவதே தகுதி.

நான்.—என் அன்புருவே! தங்களின் உயரிய சிந்தனையை—காதலின் கௌரவத்தைப் பெரிதும் போற்றுகிறேன். காதல் என்பது பரஸ்பர ஆகர்ஷணா ஸக்தியினால் அமைகின்ற ஒரு அற்புத நிர்மாணம். அது பூர்வ பாசத்தின் நிழலாய் நிகழ்வது—பொருந் துவது, தெய்வம் உபகரிப்பது, இயற்கைத் தேவியார் இதயங் கனிந்து விதிப்பது. காதலைக் காதலுக்காக நாடுதலே கௌரவம். காதல் கருப்பு சிவப்பு என்று பார்க்காது. நொண்டி, முடம் என்று அங்க ஹீனத்தை நோக்காது. ஏழை—செல்வன் என்று பேதம் எண்ணாது. மனங் கலந்த இடத்தில் காதல்! மனங் கலந்த இடத் தில் மங்களம்! மனங் கலந்த இடத்தில் வாழ்வு. மனங் கலந்த இடத்தில் வைபவம்—ஜோதி.

ஹரிகிருஷ்ணர்.—நமது அத்தை மகள் 'ரத்நா' நம்மை மாலை யிட ஒப்பினாள்—என்ற ஒரு திருப்தியே எனது ஜீவயாத்திரைக்

☞ நாம்தான் பிரியம் வைக்கிறோமே தவிர, நம்மீது அவர்கள் அப் படிப் பிரியம் வைப்பதில்லை.

குப் போதுமானது. காமம் கருதாத காதல் இல்லை யெனினும், 'கழிந்திலேன் காம வென்றோய்'—எனினும், நீ சத்வமாகிய காமத்தைக் காலடியில் போட்டு மிதித்துக்கொண்டு, காதலைக் கிரீடமாகச் சிரசில் அணிவதுதான் அதன் கௌரவத்திற்குத் தகுதி யுடையது. அதனைப் போற்றித் துதிக்கும் வழியும் அதுவே. நீ வேறொருவருக்கு மனைவியானாலும், இப்போது எனக்குச் செய்து கொடுத்த சத்தியத்தை அடுத்த ஜென்மத்தில் நிறைவேற்றிக் கொடுத்து விடுகிறதென்று தீர்மானித்துக் கொண்டாயானால்— எப்போதும் என்னை மறவாது மனத்திடை வைத்திருப்பாயானால், அதுவே என் ஆத்மாவுக்கு சாந்தியைக் கொடுக்கும். இறக்கும் பொழுதும் உன் நினைவுடன் உன்னை ஸ்மரித்தபடியே தான் இறப்பேன். இந்த ஜன்மத்தில் இவ்வளவு போதும். என் பிரிய பாரத ரத்நா! நீ செய்த உபகாரத்துக்கு நான் என்ன கைம்மாறு புரியப் போகின்றேன். அதோ வான மண்டலத்தைப் பார்! நம்மிருவருக்கும் சொந்தமான சொத்தாகிய—நிதியாகிய அந்தக் குமுதா அதோ புன்னகையுடனும் ஒளிர்கின்றாள்! நம் காதலுக்கு மங்களம் கூறுகின்றாள்! ஆசி தருகின்றாள்! எனக்கு அபயஸ்தம் ஈந்து ரக்ஷித்தமைக்காக, உன்னிடத்தே அளப்பரிய ஆர்வமேவி உனக்குத் தனது நன்றியைத் தெரிவிக்கின்றாள்! அதன் பொருட்டு உன்னை வாழ்த்துகின்றாள்! அதோ பார் வான மண்டலத்தில்! அதோ பார் குமுதா! ஆ! ஆ! குமுதாவும் பாரத ரத்நாவும் ஒரே உருவமா! ஒரே சித்திரமா! ஒரே ரூபமா! ஒரே ஒளியா! ஹா! என்ன சுடரொளி! ஜோதிப் பிரகாசம்! ஆ! குமுதா! எங்களை வாழ்த்துதலின் பொருட்டு நேரிலேயே வந்து விட்டனையா! ரத்நா, ரத்நா, இதோ பார் குமுதா! இதோ பார் குமுதா! ஆ! ! ஆ என்னே! உன் ஆநந்தமயமான தரிசனம்! பிரேமஸாகரமே! குமுதா, அந்தப் பழய—நீ வழக்கமாக அணிகிற—அந்தப் பூஷணங்களையே தரித்துத் திகழ்கின்றாய்! என்னே நின் அதிரூப சௌந்தரியம்! ஆ! குமுதா! என்னே நின் புன்னகை யொளிர்வதனம்! என்னே நின் காந்தி விலாஸம்! காந்தி! சோபா காந்தி! ரமணிய காந்தி! என் உயிருருவே! குமுதா! குமுதா! குமுதா! என் கண்ணே! கண்மணியே! என் பெண்மணியே! என் காதலியே! அன்பினுருவே! என் கண்ணாட்டி நீ! என் கண் காட்சி நீ! என் மணாட்டி நீ! என் மனசாக்ஷி நீ! விண்ணாளும் மாதரசியும் நீயே! ரத்நா, இதோ நமது குமுதாவின் தரிசனம்! அதோ, அதோ, பெற்றுக் கொள்! ஜெய ஜெய ஜெயா! அதோ நீல வானிடை குமுதா! ஆ! ஆ! ஆ! ஐயோ! காணேனே! ஓ! ஓ! இதோ ஒளி! இந்தப் பக்கத்திலே குமுதா! இல்லை, இல்லை. அந்தப் பக்கம் குமுதா! ஓ-இல்லை. ஆ! ஆ!

☞ பிரியமானது—எதைக் கேட்பினும் கொடுக்கத் தூண்டுகிறது. பெற்றதும் நம்மை மறக்கிறார்கள்.

அதோ மேலே மேலே மேலே குமுதா! ஐயோ அங்கும் அரிதாயதே! காண்கிலேனே! இதோ வடதிசையில் ஜோதி! ஆ! அங்கும் மாயம்! இதோ மேல் திசையில்! இங்கும் இல்லை. அதோ தென் திசையில் சுடரொளி! ஐயோ, ஏமாற்றந்தானு! இதோ கீழ் திசையில்! இங்கும் இல்லையே! இதோ எதிரில் குமுதா! எங்கே? எங்கே? எங்கே? செவ்வனே ஒவ்வொரு பக்கமும் என் கண்களை நன்கு பாயவிட்டு, முற்றிலும் அப்பக்கம் தேடி அலுத்து, அப்பால் தானே என் திருஷ்டியை மற்றொரு பக்கம் திடீரெனத் திருப்பி ஆராய்ந்திட முயல்கின்றேன்! என் குமுதா! எங்கு ஒளித்தாய்? என் செய்கின்றாய்? இப்பொழுது இங்கு தோன்றினையே! அங்கு நின்றனையே! இங்கும் இல்லையே! அங்கும் இல்லையே! எங்கும் காண்கிலேனே! என் செய்வேன் பாவி நான்! என்று பெறுவதோ நின் தரிசனம்! தோன்றித் தோன்றி மறைகிறாய்! இது என்ன மாயமோ! நீதியோ உனக்கு? ஆ! குமுதா! குமுதா! குமுதா! குமுதா!

"கரும்பே தேனே யமிர்தே காமர்மணி யாழே
யரும்பார் மலர்மே லணங்கே மழலை யன்னமே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர் வீசும்
* * * பாவாய் பூவாய் பிணைமானே!"

"காதலுள்ள காதலனைக் கலங்கவிட்டுச் சென்றிடுதல்
கோதையுனக் கழகன்றே, காதலி! நீ யறியாயோ?

* * * * *

ஹரிகிருஷ்ணர் திடீரென்று மேலெழுந்து வான மண்டலத்தை நோக்கிக் கை கூப்பி வணங்கி, மறு கணத்தில் என்னைத் தாவி பல முத்திகள் செய்து, நீயே—நீயே—என் குமுதா வெனக் கதறி, அருகே சுவற்றி லிருந்த குமுதாவின் படத்தையும் என்னையும் மாறி மாறிப் பார்த்து, அப்படியே என் மடியில் விழுந்து மூர்ச்சை போயினர். ஸதா காலமும் தம் மனத்திடை ஸஞ்சரிக்கும் அந்த இனிய உருவத்தின் சாயலை—அதே தத்ரூபமாகி வெளிப்புறத்தே புலனாகிய காட்சியை—உருவேளித் தோற்றத்தினை—அவர் நன்கு கண்டு உள்ளூர அநுபவித்து, அந்த ஜோதிப் பிரவாகத்தினுள் — மாணிக்கத் தோற்றத்தினுள் மயங்கி வீழ்ந்து அமிழ்ந்துத் தன்னிலை மறந்தவரானார்.

இந்த சப்தம் கேட்டு என் மாதாவும், பாட்டனாரும் மற்றுமுள்ளவர்களும் ஓடி வந்து என்ன என்ன வென்று வினவினர். நான் என்ன சொல்லட்டும். என் மடியில் ஹரிகிருஷ்ணர் பிரக்ஞை

☞ இப்போதுதான் அவனுக்கு உதவி செய்தோம். அதற்குள் அவன் நம்மைத் திட்டுகிறான்.

யற்றுக் கிடக்கிறார். அவரது காதலின் ஆழத்தையும், அக்காதலினிடத்தே அவருக்குள்ள பக்தியும், நீயே என் குமுதா என்ற அவரது தொனியும், என்னால் சகிக்கத் தாளாமல் அப்படியே வாய்விட்டுக் கதறி விட்டேன். நெடுநேரம் வரையில் ஹரிகிருஷ்ணருக்குப் பிரக்ஞை யுண்டாகவில்லை. என் மாதா அதிருட்சும புத்தியுடனும் எங்கள் இருவரின் குறிப்பையும் அறிந்து கொண்டார்.

'நானே முன்னின்று முடிக்கிறேன்'

—என்று தம் வாய்க்குள் உளறிக்கொண்டார். என் பாட்டனார் டாக்டரை யழைத்து வரும்படி கூறினார். என் மாதா டாக்டரும் வேண்டாம், எவரும் வேண்டாம். என் அக்கா உயிரோடிருந்தால் ஹரிகிருஷ்ணன் இந்தக் கதிக்கு வருவானா வென்று கூறிக் கண்ணீர் சிந்தினார். என் தம்பி ஏதுங் கூறாமல் மனத்திகிலோடும் ஹரிகிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தபடியே இருந்தான். அவனுக்குத் துக்கம் தாளக்கூடவில்லை. அவன் கண்களிலிருந்தும் ஜலம் அருவிபோல் வந்து கொண்டிருந்தது.

* * * * *

என் மாதா குளிர்ந்த ஜலத்தால் ஹரிகிருஷ்ணரின் முகத்தைத் துடைத்து விசிறினார். என் பாட்டனார் மிக்க அன்புடன் ஹரிகிருஷ்ணரின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். என் தம்பி எவருக்கும் தெரியாதபடி என் கையை எடுத்து ஹரிகிருஷ்ணரின் கைக்குள் வைத்து மூடினான். இதையும் என் மாதா கவனித்தார். கவனித்து விட்டுத் தேம்பித் தேம்பி யழுதார். என் பாட்டனார் ஏன் அழுகிறாய்; ஹரிகிருஷ்ணனுக்கு அப்படிப் பயம் ஒன்றுமில்லை; அதைரியப்பட வேண்டாம் என்றார். அவரவர்களுடைய எண்ணம் அவரவர்களுக்குள்ளாகவே மறைக்கப் பட்டிருந்தது. வெகு நேரத்திற்கு அப்பால் ஹரிகிருஷ்ணர் கண்களைத் திறந்து பார்த்தார். என் மாதாவின் கரத்தையும், என் கையையும், என் தம்பியின் ஹஸ்தத்தையும் ஒரு சேரப் பற்றிக் கொண்டார். என் பாட்டனார் ஹரிகிருஷ்ணரின் நெஞ்சைத் தடவிக் கொடுத்து, தைரியமாயிரு, திடசித்தத்துடன் நில் என்றார். ஹரிகிருஷ்ணர் பாட்டனாருக்குக் கையெடுத்து வணங்கினார். என் பாட்டனார் "கொஞ்சம் பிராந்தி சாப்பிடுகிறாயா? உற்சாகமாய் இருக்கும்" என்றார். "நான் மத்தியபானம் செய்ய மாட்டேன்" என்று ஹரிகிருஷ்ணர் கூறினார். பின்பு எழுந்து உட்கார்ந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு உலாவத் தொடங்கினார். பின்னர் யாவருமாகக் காலை ஆகாரம் அருந்தச் சென்றோம்.

அத்தியாயம்—7

காதற் பிடிவாதம்.

'மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்.' இன்பமே யாகக் கழித்தோம்—இதயம் புளகிடச்—சின்னாள். பொழுதொரு நிமிஷமாய்ப் போயது விரைவினில். வாழ்க்கையின் பெரும் பகுதி இவ்வண்ணமே மகிழ் பூத்து இலங்கிடுமேல், நெஞ்சு மெலிவேன் கொள்வார் ஞாலமீது? இன்பச் சொர்க்கம்—இதனினும் பிறிது உளதேயோ? இவ்விதமே என் நாட்கள் இன்பமே பொதிந்து நில விடுமாகில்,

"இச்சுவை தவிரயான் போய் இந்திர லோக மாளு
மச்சுவை பெறினும் வேண்டேன் * * * *"

* * * *

இப்போது என்னைப் பாராட்டி நேசிக்கும் அத்தனை யன்பில் குமுதாவை நேசிக்க அந்த நாளில் அவருக்குத் தெரியாமற் போய் விட்டதாம். உயிருக்குயிராகக் குமுதாவைக் கருதிப் பிரேமித்திருந்தாலும், இப்படிச் சுவை யுணர்ந்து, ருசி தெரிந்து, உணர்ச்சியோடும் அநுபவிக்க—கிரகிக்க அப்போது நெஞ்சம் அத்தனைப் பக்குவப்படவில்லையாம். குமுதா மறைந்த பின்பே அப்பக்குவ நிசையின் அநுபவத்தைத் தாம் உணர்வதற்கு வாய்த்ததாம். இழந்த பின்பே ஒரு வஸ்துவின் அருமை பெருமை—அதன் பூரண உருவம்—ஸ்வரூபம் ஆதிய இவைகள் மனதிற்குத் தோற்றமாகிறதாம். எத்துணை அருமையதா யிருப்பினும், பழகிவிட்ட தன்மையால் அதை சாதாரணப் பொருளாகப் பாவிக்கும்படியாகி விடுகிறதாம். அப்படித்தான் குமுதா விஷயத்தில் ஆகிவிட்டதாம். என்னை உருக்கத்துடன் உற்றுப் பார்ப்பது போலவும், என் பேச்சுகளிலும், செய்கைகளிலும், நடையுடை பாவனைகளிலும் ஒவ்வோர் அழகு நிறைந்து வெளிப்படுவதா யெண்ணி இன்புற்று இப்போது மகிழ்தல் போலவும், அப்போது குமுதாவிடத்தில் தான் ஏன் இருக்கவில்லை யென ஹரிகிருஷ்ணர் தம்மையே அடிக்

☞ உண்மையன்பு—தானே வலியவந்து பேசச் செய்யும். அழைக்கும் வரை காத்திராது.

கடி கேட்டுக் கொள்கின்றார். ஆனால் விடைதான் கிடைக்கவில்லை. வேதாந்த விஷயங்களை வாசிப்பினும், பூர்வ வாசப்பிரஸாதத்தால் அந்த வேதாந்த பக்குவம் தனக்கு இருப்பின்தான் அவ்விஷயங்களை ஆழமாய்க் கிரகிக்க முடியுமென்றும், அதுபோலவே காதலியை இழக்கக் கொடுத்துக் கண்கலங்கினாருக்குத்தான் காதலியின் மாட்சி புலனாகுமென்றும் ஹரிகிருஷ்ணர் விவரித்தார். எதுவும் பட்டவர்க்கே பாடு தெரியும்.

* * * * *

கடைசியாக, ஹரிகிருஷ்ணபாபு சில தினங்கள் இருந்து விட்டுத் தம் ஊருக்குப் பிரயாணமானார். எத்தத் தடவையிலு மில்லாமல், இம்முறை நானும் அவரும் பிரிவு ஸகிக்கத் திறனற்று வாய் விட்டுக் கதறிவிட்டோம். இந்தக் குறிப்பு என் மாதாவின் மனதில் பட்டதென்று தோன்றுகிறது.

'மானே! யகல்கின்றேன்
மா தரசே! போகின்றேன்'

என்று அவர் என்னை விட்டுப் பிரிந்து போனார். என் காட்சிக்கு மறைந்து விட்டார். அவரது—ஜீவ உருவினை இங்கு காண்கிலேன்! என் கண்ணுளர் வதனம் காணும் அந்தத் தினம்—அது எப்போது? அவரோடு ஸதா பேசி நின்ற என் வாயும் ஓய்ந்தது. ஒண்டிமாமானேன். உதவாப் பிறப்பு ஈதென்றுணர்ந்தேன். நீரில்லாக் கிணறானேன், நிலையில்லாப் படகானேன். அரசில்லா நாடானேன். எல்லா அவதிக்கும் நான் ஆளானேன். நாதா! நாதா! உன்னை நான் காணும் நாள் எந்நாளோ!

"* * * இப்பிறப்பிற் கண்டு மணந்திலனேல்,
இன்னமோரு பிறப்பிலாானலும் ஏழையேன்
தன்னந்தனியே இருந்து தவம் ஆற்றியும் நான்
உன்னையே வேண்டி மணம்புரியா தொழிவேனே!"

* * * * *

என் மாதாவுக்கு ஹரிகிருஷ்ணர் அன்னியரல்லவே. என் அன்னையை இந்த வீட்டில் தந்ததால் தானே ஹரிகிருஷ்ணர் இங்கு கால் வைப்பதானார். என் மாதா தமது அன்பைப் பூரணமாகவே வைத்தாரெனினும், தமது குமாரத்தியை, மனமோப்பிக் கொடுத்து விடுவதற்கு இசைந்த பான்மையில், அந்த அன்பின் வேகம் செல்லாமல்,

☞ இரண்டிடத்துக்கும் வேண்டியவனிடம் உன் ரகசியங்களைச் சொல்லாதே.

அந்த அன்பு பல இடங்களில் ஒடிக்கப்பட்டுப்போ யிருந்தது. இந்தக் குறை தீர்வ தெக்காலமோ?

ஹரிகிருஷ்ணரின் பிரயாண தினத்தன்று என் மாதா கடிதமொன்றை அவரிடம் ஈந்தார். அது மிக்க அன்பு மயமாக இருந்தது. குமுதா, குமுதா வென்று அன்றொரு நாள் அவர் அலறி மூர்ச்சித்ததைக் கண்ட பிறகு என் அன்னையும் சற்றே மனம் திரும்பி யிருக்கிறார் போலுங் காண்கிறது. அக்கடிதம் இதுவே.

என் ஹரிகிருஷ்ணு!

ஏது ஏது, இன்றே பிரயாணக்கோலங் கொண்டுவிட்டாய்? எத்தனை நாள் இருந்தாலும், போகும் நாள் வந்து விடுகிறது. எப்படியோ மூட்டைகள் கட்டி, பெட்டியைப் பூட்டித் தயார் செய்து விடுகிறாய். போய் வருகிறேன் என்று சொல்லித் திடீரென்று கண்ணுக்கு அகப்படாமல் மறைந்து விடுகிறாய். இத்தனை நாள் ஏதோ மனதிற்கு ஒருவித ஆறுதலாய் இருந்தது மன்னியில், வேடிக்கையாகவும் காலம் கழிந்தது. இனி குந்தியுயா— சந்தடி யடங்க என என் பாடாயிற்று. கிருஷ்ணு! நீ ஒருவன் அருகிலிருந்ததில் எனக்கு மிக்க தைரியமும் உற்சாகமுமா யிருந்தது. இனி என் மனத்துள்ள குறை என்னுள் அடக்கமே.

இன்றுதான் நேரிலே உன் கையில் கடிதம் கொடுக்கும் நாள். எவ்விதமோ தினங்கள் சென்று விட்டன. இனி எப்போதோ உன் தரிசனம்! நானும் என் பிறந்தகமாகிய உன் இல்லத்திற்கு வர இப்போது சந்தர்ப்பமில்லை. பணக்காரர்கட்குத் தான் பணக்கஷ்டம் அதிகம். செலவுக்கு மிகக் குறைவா யிருப்பதால் எங்கும் போகமுடியாது. செலவுகளும் சுருக்கமாய்த் தான்செய்து வருகிறேன். பலவகை பக்ஷணங்கள் இல்லை. முன்போல் செய்யவும் முடியவில்லை. ஏதோ பசியாத போஜனம். கஷ்டமோ! சுகமோ! என்னோடு போகட்டும். என்னால் பிறர் வருந்தக்கூடாது. என் மனத்துள்ளதெல்லாம் என் தேகத்துடன்தான் எரிந்துபோக வேண்டும். யாரிடமும் சொல்ல முடியாது. நீ ஊருக்குச் சென்றுவிட்டால் வீடு காலியாய்ப் போகுமே என்று என் மனம் மிக்க தவிக்கின்றது. எப்படியும் போகத் தான் வேண்டும். என் கிருஷ்ணு!இனி துர்க்காஸ்னாலும், பாரதரத்நாவும் உன்னைக் காணாது ஏமாந்து போவார்கள். அடிக்கடி கடிதம் எழுதவில்லையென்று கோபிக்காதே. சமயம் வந்தபோது எழுதுகிறேன். மிக்க பலஹீனம். கைகால் ஓய்ச்சல். இவ்வுலகத்தையே நான் தலையில் சுமப்பதுபோல் கஷ்டமாயிருக்கிறது. யாரிடமும் சொல்வதில்லை. உன்னிடமே இவ்வளவு தாராளமாகக் கொட்டினேன். உன் அநந்த கவலைகளுடன் அநேகருடைய கவலைகளையும் ;உன்னடக்கும் கருணைக்கடல் போல் விளங்குகிறாய். நீ வருவது போவதில் உன்னால் எனக்கொரு செலவுமில்லை. நீ விருந்துமல்ல.

உள்ளதை உன்னிடம் விட்டுக் குழந்தை. உன்னைப் போல் மனப் பொருத்தம் வேறெங்கும் எனக்கு இல்லை, உன்னால் எவ்வளவோ துன்பங்களில் சிக்கியும் உன்னை மறக்க முடியவில்லை. ஆனால் நீ என் விஷயமாய் ஒரு தீங்கும் நினைக்கவில்லை. என்ன சொன்னபோதிலும் உன்னைத் தவிர வேறு பதியில்லை, இது நிச்சயம், உன்னை மறக்கமாட்டேன். என் மீது கோபங்கொண்டு இங்குவராதிருக்கும் என் சொந்த தமயனாரையும் நான் என்றும் மறவேன், ஏதோ மனங் கலங்கிய சமயம் இதை இப்படிச் சுருக்கிவிட்டேன். தப்பித மிருக்கினும் கோபம் வேண்டாம். இரக்கமற்றவரின் மத்தியில் இருக்கிறேன். இரு கையும் விட்டேன். ஸர்வேச்வரனின் செயலை எதிபார்க்கிறேன். அவன் விட்ட வழி. எப்படியோ பிரயாணம் ஏற்பட்டுவிட்டு என் மனத்தை வாட்டுகிறது. துர்க்காஸரணனையும் பாரத ரத்நாவையும் என்றும் மறவாதே. இதுதான் என் ஆஸ்தி. அதாவது நின் அன்பு தான் அவர்களுக்கு ஆதாவு. ரத்நாவுக்கு உன்னை மணக்கப் பிரியமிருப்பின் எனக்குத் தெரிவி. நான் முன்னின்று முடிக்கிறேன். இனிய சங்கீதக்காரனுக்கு ஊமை ஒருமகள் வாய்ந்ததுபோல் ஏன் கலங்குகிறாய்? என் பிரிய ஹரிகிருஷ்ணா! வாழி. உனது அன்பு வாழி. உன் சொந்தமான அத்தை,

வஸந்தமாலா.

இக்கடிதம் ஒரு அன்பு மழை! பிரேம வாரிதி! திக்கும் திசையும் காண்கிலாது தத்தளிக்கும் ஒரு பெண்ணின் கண்ணுவி யான வாய் மொழி. சோகமான நிரூபம். துர்க்காஸரணனையும், பாரத ரத்நாவையும் மறக்க வேண்டாமென்கிறார். அவர் மறவார். அவர் அன்பு தான் எங்களுக்கு ஆதாவு என்கிறார். அப்படியே முடியட்டும். "ரத்நாவுக்கு உன்னை மணக்கப் பிரியமிருப்பின் தெரிவி"—என்கிறார். நானே சீக்கிரம் அதை வாய்விட்டுச் சொல்லும் காலமும் வரும். ஆனால் நான் கூறித்தான் என் மாதா அறிய வேண்டுமென்பதில்லை. "முன்னின்று முடிக்கிறேன்"—என்கிறார். இத்தனை வருஷங்களுக்குப் பிறகு என் மாதாவுக்குத் தைரியம் பிறந்து கூறிய இந்த அமிர்தவாசகம் மகாபாக்கியம். முன்னின்று முடிக்க என் மாதாவுக்கு ஸர்வேச்வரன் ஸகல ஸக்திகளையும் கொடுத்து ஸம்பூர்ணமான வெற்றியைக் கடாக்ஷித்தருளி, நான், என் தம்பி, ஹரிகிருஷ்ணர் இம்மூவரும் ஜீவகால பரியந்தம் ஒரே வீட்டிலிருந்து வாழுமாறு கருணை புரிவாராக. நானும் என் தம்பியுந்தானா என் மாதாவின் ஆஸ்தி? என் தமக்கையை இதில் ஏன் சேர்க்கவில்லையோ? கல்யாணமாய் விட்ட பெண்—கவலை தீர்ந்த சங்கதி—என்றோ—என்னவோ!

☞ காசு தரும்வரை உறவு—சிரிப்பு. கையிலுள்ள பண்டம் தின்று தீரும் வரை பிரியம்.

ஹரிகிருஷ்ணபாபு யாராயிருந்தால் தான் எனக்கென்ன? அவர் எப்படிப் போனால்தான் எனக்கென்ன? இப்படி நினைத்து நான் வெறுமனே இருந்து விடலாம். என் பெற்றோர் என் மங்களத்தையே கோருவார்கள். தக்க அந்தஸ்துள்ள இடத்திலேயே என்னை விவாகம் செய்து கொடுப்பார்கள். என் க்ஷேமத்தையும், நான் சுகப்பட வேண்டுமென்ற கவலையையும் கொண்டவர்கள் அவர்களை விட வேறு யார்? எனது நன்மைக்காகவே ஏழையொருவனைக் கட்டிக்கொண்டு கஷ்டப்படா திருப்பதற்காகவே—ஹரிகிருஷ்ண பாபுவுக்கு என்னைக் கொடுக்கவில்லை. அதுவும் எனக்குத் தெரிந்ததே.

ஆயினும் ஒரு விஷயம்: என் தாயாரிடம் ஹரிகிருஷ்ணர் அளவு கடந்த பிரேமையை வைத்து விட்டார். தன் பிராணனை பெரிய அத்தையே மீண்டும் உயிர் பெற்று, சிறிய அத்தையாக வந்தது போலும் பாவித்து விட்டார். தமது பூர்ண அன்பையும் தமது சிறிய அத்தையின் பாதகமலங்களில் ஸமர்ப்பித்து விட்டார். அந்த அன்பை முற்றிலும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டிய என் மாதா பாதி வரையில் தவறிப் போய்விட்டார். தம்மைச் சிறு குழந்தையினின்றும் வளர்த்துக் காத்த தமது தமயனின் விருப்பத்தையும் அவர் அலக்ஷியம் செய்து விட்டார். என் பாட்டனாரோ அதில் சம்பந்தப்படவே யில்லை. ஆதியில் அத்தை மகளை மணந்து கொண்டது போன்று, இப்போது இந்த அத்தையின் குமார்த்தியையும் வதுவை புரிய வாயூறலானார். அவர் வைத்திருந்த மிதமீறிய அன்புக்கு இப்படி அவர் வாயூறியது சரி; குற்றமில்லை. அவர் காட்டிய அன்பின் அளவு என் மாதா கொள்ளாமையாலே, என்னை அவருக்குத் தாவேண்டுமென்ற எண்ணம் தம் நெஞ்சில் உண்டாகப் பெறவில்லை. பாட்டனார் இதில் எதிலும் அடிபட்டவரல்ல. என் தாயைத் தன் குமாரனுக்குக் கொண்ட வகையில் ஒரு சம்பந்த உறவு மட்டுமே. ஆதலின் அவர் மறந்ததிலும் ஆச்சரியமில்லை.

ஆனல், ஒரு புண்ணியமான ஆத்மா—பரிசுத்தமான—களங்க ரகிதமான ஆத்மா திகைத்து நடுத்தெருவில் நின்று விடுகிறது. ஆத்மார்த்தமான அன்பைச் செலுத்திய ஓரிடத்தில் பெரியதோர் ஏமாற்றம் நேர்ந்துவிடுகிறது. அந்த மானுட ஜீவிய தசையில் அதன் இறுதிக்காலம் வரைக்கும் இந்தப் புண் ஆறாது. இது நம்பினவர்களைக் கைவிட்ட மாதிரியல்லவா? ஆதிநாள் தனிலேயே அவர் அன்பு காட்டாதவாறு சிடுசிடுத்து விலகிக்கொண்டிருந்தால்

☞ மித்திர பேதக்காரர்கள் தோல்வி யடையும்போதெல்லாம், முன்னையினும் அதிகமாக நேசிக்க வருகிறார்கள்.

அவரும் அன்பு செலுத்தி ஏமாற நேர்ந்திராது. அந்த அன்பின் வழியே புகுந்து பாய்ந்து என்னை மணமாடவும் கருதியிரார். ஆனால் இப்போதோ! * * *

நான் ஒரு பெண் கட்டைதானே! எப்படியும் என்னை எவருக்காவது கொடுத்துத்தானே ஆகவேண்டும் வீட்டில் வைத்துக்கொண்டு அழகு பார்க்க முடியாதல்லவா? அது எத்தனை நாட்களுக்கு சாத்தியம்? அப்படி என்னைக் கொடுக்கிற இடம் ஒரு தனவந்தரின் வீடாக—ஒரு உத்தியோகஸ்தரின் மாளிகையாக இருக்கலாம்—இருக்கும். அவ்வளவு தான். படிப்பு விஷயம் அத்துணையாகக் கவனிக்கப்படமாட்டா. வித்தியா நலத்தையும் என் பாட்டனர் கருதுபவராகவே வைத்துக்கொண்டாலும், அந்த எண்ணம் திடப்பட்டு நில்லாது. கையெழுத்துமட்டும் போடத்தெரிந்த ஒரு ஆடம்பர ஜெமீன்தார் என்னை மணக்க விரும்புகிறதாக வைத்துக்கொள்வோம். அப்போது என் பாட்டனர்—ஏன்—என் தாயாருங்கூட—அந்த ஜமீன்தார் சம்பந்தம் மிக்க கௌரவார்ஹமென்று உடனே என்னைத் தாரதத்தம் செய்து விடுவார்கள். அப்பொழுது இங்கு படிப்பு விஷயம் கவனிக்கப்படுகிறதா? பணம் தானே முக்கியம்! அந்தப் பணம் மட்டும் ஒருவனுக்கு இருந்து விட்டால், அவன் ஒரு கொலைகாரனக இருந்தாலும், கோபாந்தகனக இருந்தாலும், வெளிக்கு அவனை ஒரு கௌரவமுள்ள மனிதனுக்கிவிடும். அவன் ஸ்திரீலோலனும், அயோக்கிய சிகாமணியாகவு மிருப்பினும் பணம் அவனைப் புனித புருஷ புண்ணிய மூர்த்தியாக்கிவிடும். குணத்தைக் கொண்டு ஒருவரை நிதானிக்க வேண்டுமே தவிர, இடத்தைக் கொண்டு பிரமித்து அதைப் பெரிய இடமென்று நினைத்துவிடக்கூடாது. ஒரு மரத்தின் பலனை அது கொடுக்கும் பழங்களின் அளவினின்றும்—குணத்தினின்றும் நிதானிக்க வேண்டுமே யன்றி, அந்த மரமிருக்கும் பூமியின் வளப்பத்தைக் கொண்டு நிஷ்கர்ஷை செய்து விடக்கூடாது.

☞ விரோதப்பட்டவர்கள் ஒன்று சேரினும், அந்தக் காயத்தழும்புகள் மாற வெகுகாலம் வேண்டும்.

இந்த நிலையில் ஹரிகிருஷ்ண பாபுவுக்கும், என் பாட்டனூர்—தாயார் தர விரும்புகிற மற்ற இடங்களுக்கும் இடையேயுள்ள பேதம்—விகர்ப்பம்—என்ன? பணம் இருப்பதும்—அது இல்லாமையுமே. இந்த ஒரு விஷயத்துக்காக—பணம் இன்மைக்காக—ஹரிகிருஷ்ணரை நான் என் ஜீவியதசையில் மறந்துவிட வேண்டும். வேறொருவன் தோன்றி என் கற்பை யபகரிப்பதற்கு—ஒப்புக்கொள்ள வேண்டும்—வணங்கி உட்படவேண்டும். அப்படித்தான் தீர்மானமோ? அந்தப் பேய்ப்பணம் இருக்கிறதென்ற அந்த ஒரு சங்கதிக்காகவே, இதுவரை முகமறியாத ஒருவருக்கு நான் பெண்டாகி, அவரது குணபாவங்களை நாளடைவில் தெரிந்துகொண்டு, அவருக்கேற்றபடி நடந்து நற்பெயர் எய்திச் சீரோங்க வேண்டும். இது என் பெரியோர்கள் என் தலையில் எழுதியவிதி. இதற்குத்தான் என் பாட்டனூர்—தாயார்—பந்துக்கள் யாவருமாக ஒரு மனதாய் முனைந்து விவாகம் செய்விப்பது போலும்! இதனுல் எனக்குற்ற மனோரம்ய மென்னவோ!

* * * *

இது பிரம்ம லிபி யல்ல. என் பெரியோர்கள் ஏற்படுத்துகிற விதி. அந்த விதிக்கு உட்பட எனக்கு மனமில்லை. என் தாய் தன் உடன்பிறப்பான தன் சொந்த தமயனுருக்குச் செய்யத் தவறிய அந்த பரிசுத்தமான தனது கடமையை நானுவது நிறைவேற்றி வைத்துவிட வேண்டுமென்ற அவா—தாகம்—வாஞ்சை - தீர்மானம் என்னுள்ளத்தே குடிகொண்டு விட்டது. மாதா இயற்றத் தவறிய ஒரு கடமையை—அந்த அம்மைபட்ட ஒருகடனை-அவரது குமாரத்தி பூர்த்தி செய்வித்துவிடுவது நற் செய்கையுடன் சேர்ந்தது தானே. ஹரிகிருஷ்ண பாபுவை சின்னஞ்சிறு வயது முதலாக அறிவேன். இனிமேல் புதிதாகப் பழக வேண்டு மென்பதொன்றில்லை. அவரது குணங்கள் என் மனதுக்குப் பிடித்திருக்கின்றன. புதிதாக என்னை அவர் அதிகாரம் செய்யப் போவதில்லை. வாழ்க்கை இருவருக்கும்

☞ உன்னைக் குத்திக் காண்பிக்க அவர்களுக்கு வழி எப்படிக் கிடைத்தது? உன் வீட்டு விஷயங்களை நீ வெளியிட்டதால்.

பொருந்தியதாய் சமாதானமாக இருக்கும். மனஸ் சாந்தியும் திருப்தியும் தரும். ஹரிகிருஷ்ணரோ வணங்கிய உள்ளம், பயந்த பான்மை, பணிந்த நடை, உயர்ந்த நோக்கு, உத்தம சீலர், சாந்த குணபூஷணர், விவேகசாலி, தர்மமார்க்கதரிசி, பண்டை நாளினர், வெள்ளை மனத்தவர், கபட மற்றவர். வசன நிர்வாகர். ஒரு உண்மையான நாணயத்துக்கு அதன் பதிவுக்கிரயம் முழுமையும் உண்டு. பத்து லக்ஷம் பொய் நாணயங்களிருந்தாலும் அவை வீண் பாரமே. யாதொன்றுக்கும் பயன்பட மாட்டா. தங்கள் இஷ்டப்படியெல்லாம் தங்களுக்கும் தங்கள் பெண்ணுக்கும் பணிந்து நடந்து கொள்ளக்கூடிய வரன் அருகிலேயே—பக்கத்திலேயே இருந்தும், ஸமீபத்திலிருப்பதால் அதன் ஸௌவாஸனையை யுணராமல், தூரச்சென்று ஒருவனைநாடித்தேடி, அவனுக்குத் தங்கள் பெண்ணைத் தந்து, அவனுக்குக் கைகால் பிடித்து, அவன் கோட்டம்—குறைகள் சொல்வதை யெல்லாம் மனம்பொறுத்துக் கேட்டுக்கொண்டு, அவன் ஹிம்ஸைக்கும், அவன் வைக்கும் பலவித செலவுகட்கும் சித்தம் ஸகித்துப் பாத பூஜை செய்து, ஏராளமான சீதனத் திரவியங்களை அவன் முன்பு கொட்டி வணங்குகிறார்கள். இவ்வளவு செய்தும் தங்கள் பெண்ணுக்கும் சுகமில்லை. அந்த வரனுக்கும் இவர்களுடைய சீர் வரிசைகளும் வணக்கங்களும் திருப்தியில்லை. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குற்றம் பேசப்படும். மனஸ்தாபமே கடைசியில் முதிர்ச்சி பெறுகின்றது. எதற்காக இப்படிச் செய்யவேண்டுமோ? இதனால் அடையும் பயன் என்னவோ?

என் பெரியோர்கள் சொல்லும் ஆக்ஷேபனைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்தி பதில்சொல்ல எனக்குத் தெரியும். அப்போது அவர்கள் சொல்லும் ஆக்ஷேபங்களெல்லாம் பொய் யென்றாகிவிடும். அது அவர்களுக்கும் தெரிந்திருக்கும். கேவலம் ஒரு ஏழ்மைதான் அவர்களுடைய ஆக்ஷேபங்களுக்கெல்லாம் மூலகாரணம். எந்த காலத்திலுமே ஒருவன் ஏழையாக இருந்துவிட்டதில்லை. தன் ஜீவியத்தின் இறுதிவரைக்கும் கடன் படாத பணக்காரராகவே இருந்தவருமில்லை. முப்பதுவருஷம் வாழ்ந்தவர்களுமில்லை — முப்பதுவருஷம் கெட்டவர்களுமில்லை. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

ஐச்வரிய ஸம்பன்னனொருவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அதுவரை கண்டறியாத புது இடமொன்றுக்குப் போய் நின்று, ஸம்சார சுகத்திலும் ஸஞ்சலமே மிகுதியும் அனுபவிப்பதான வாழ்க்கையைவிட, ஹரிகிருஷ்ணரை மணந்து இன்ப வாழ்வில் பூரிப்பது

☞ இன்றைக்கு நீ யாரால் துன்பப்படுகிறாயோ, அவர்களை முதலில் அந்த வீட்டில் சேர்த்து வைத்தவன் நீ தான்.

எத்தனை மேன்மை? தவிக்கிற ஒரு ஆத்மாவுக்கும் அது ஒரு சாந்தி. பிடிவாதம் பிடிக்கும் அந்த அநாதைக்கும் அது ஒரு பரம திருப்தி. ரீலாரத்நருக்கும் அதில் எல்லையற்ற இன்பமுண்டு. எனவே காதல் பொங்கிய நெஞ்சுடனே என்னை ஹரிகிருஷ்ணருக்கு ஸமர்ப்பித்து விடுவதென்று உறுதி கொண்டுவிட்டேன். ஒரு பெண்ணுக்கு—பெண்கட்டைக்கு—இத்தனை துணிவா என்பர். ரஜபுத்திர ரமணீரத்நமான ஸம்யுக்தை பூர்வத்தில் தன் பிதாவின் அபிப்பிராயத்துக்கு எதிரிடையாகப் பிரிதிவிராஜனைத் துணிந்து மணக்கவில்லையா? ஹிந்துதேச சரித்திரம் ஓதியவர் இதனை நன்குணர்வார். ஸ்திரீகளென்ன பொம்மைகளா? அவர்களுக்கு ஜீவன், அறிவு, ஆவல் இல்லையா? உயிர்க்குணங்கள் குறைந்த ஒரு ஜாதியாரை உயிரற்ற ஜனங்கள் என்று ஏன் சொல்லலாகாது? ஸ்திரீ ஜனங்களுக்குத் தற்போது உண்மையில் உயிர் இருக்கிறதா? தங்களுக்கென்று இடப்பட்ட ஆபரணங்கள் கூட அவர்களுக்குச் சொந்தமில்லாமற் போய் விடுகின்றது!

எந்த விதத்திலும் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்தரமில்லாதபடி அவர்களை நடத்தினல், அடிமைப் புத்தியே அவர்கள் மனதில் வேரூன்றி விடுமென்பதில் சந்தேகமென்ன? ஸ்திரீகளை அடிமையாக்கிய பாபம்தான், இப்போழுது புமான்களையும் அடிமை மக்களாக்கி அலைக்கழிக்க வைத்திருக்கிறது. எக்காரியம் செய்தாலும் கேடே வருமென்று அபசகுனம் சொல்வோர் ஒவ்வொரு தேசத்திலுமுளர். என்னையும் எனது காதலையும் பழிக்கிறவர்கள் அவ்வர்க்கத்தைச் சேர்ந்தவரே யாவர். காற்றை முஷ்டியால் குத்துகிறவர்களுக்கு எவ்வளவு பயன் கிடைக்குமோ, அவ்வளவு தான் என்னைத் தூஷிப்பவர்களுக்கும் கிடைக்கும்.

நான் செய்வது பிசகு என்று தெரிந்துவிட்டால், பிசகென்று தாராளமாக ஒப்புக்கொள்ள என்றும் தயார். ஆனல், நான் அவசரப்பட்டுக்கொண்டும், தகுந்த காரணங்களின்றியும் ஒரு காரியமும் செய்வதில்லையாதலால்,—நான் பிசகு என்று ஒப்புக்கொள்ளாம லிருப்பதற்காக,—ஒருவரும் ஆச்சரியப்படக் கூடாது. என் அன்னைதான் தமது கடமையில் தவறினர். நான் கூடத் தவறவேண்டுமா? அது சரியா? பணம் இன்றைக்கு இராது. நாளைக்கு வரும். இன்றைக்குப் பணமில்லை யென்று ஹரிகிருஷ்ணரின் சம்பந்தத்தை விலக்கிவிட்டால்—நாளைக்கு ஹரிகிருஷ்ணர் எனக்குக் கிடைப்பாரா?

அத்தியாயம்—8

காதலில் அஞ்சாமை

அன்றுமுதல் என் குணபாவங்கள் முற்றும் மாறுதல் அடைந்தன. எதிலும் வெறுப்புண்டாய் விட்டது. கம்மலைத் தவிர மற்ற ஆபரணங்களை யெல்லாம் கழற்றிவிட்டேன். கையில் கழற்ற முடியாத காப்பையும் என் தம்பியின் உதவியால் எடுத்துவிட்டேன். எந்த நிமிஷம் என் கைகளை எடுத்து ஹரிகிருஷ்ணரின் கைக்குள் என் தம்பி வைத்தானோ, அந்த நிமிஷ முதற்கொண்டு ஹரிகிருஷ்ணரின் சிஷ்யனாகி விட்டான். அவனும் நானும் ஒரே உள்ளம். 'பயப்படாதே, நான் இருக்கிறேன் அக்கா' என்று தைரிய வசனங்கள் கூறுவான். பிற்காலம் அவன்தானே இந்த வீட்டின் தலைவன்—அதிகாரி.

சிறந்த ஆடைகள் அணிவதையும் நீக்கினேன். கேசங்களை வாரிப் பின்னிக் கொள்வதையும் ஒழித்தேன். தைல ஸ்நானத்தையும் தூர ஒதுக்கினேன். வெந்நீரில்தான் குளிப்பது வழக்கம். அதை வெறும் ஜலத்தில் வைத்துக்கொண்டேன். வீட்டுப் பணிகள் எவையும் செய்வதில்லை. யாருடனும் பேசுவதில்லை. நான் உண்டு, என் புஸ்தகமுண்டு. ஹரிகிருஷ்ணருக்குப் பயன்படாத ஹிந்தியைக் கற்பதிலும், அவர் அறிந்துள்ள வங்க பாஷையைப் பயில்வதே பரமோத்கிருஷ்டமென முடிவுசெய்தேன். கிரிஸ்துவ உபாத்யாயனி பிரதிநித்யமும் பாடங்கள் சொல்ல வருவாள். அவள் மூலமாக வங்கபாஷையை அப்பியஸித்தேன்.

ஹரிகிருஷ்ணர் இருந்தபோதே வங்கபாஷையைக் கற்றுக் கொண்டேன். அவரும் பிரியமாக சில தினங்கள் சொல்லித் தந்தார். ஒருநாள் வீட்டிலுள்ளோர் பெயர்கள் அனைத்தையும் தரையில் எழுதி விட்டுப் புசிக்கச் சென்றேன். ஹரிகிருஷ்ணர் கை கழுவப்போன சமயம் நான் வரைந்துள்ளனவற்றையெல்லாம் வாசித்து, அதில் தமது பெயர் உளதாவென்று ஆவலுடனும் நோக்கினாராம். தம்பியின் பெயருக்குப் பிறகு அவர் பெயர் வரக்கண்டு புளகித முற்றனராம். "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற தேசகீதத்தை வரைந்து அவரிடம் தர, அதற்கு அவர் அடைந்த பரவசம் எல்லையில்லை.

என் புது மாறுதல்களைப் பாட்டனார் கண்டித்தார். நான் லக்ஷியம் செய்யவில்லை. உன்னை யாராவது ஏதாவது செய்தார்களா

☞ பகைமைக்காரனுக்கு உன் கடிதங்களை அடியோடு நிறுத்து. உனது எந்த நற்கடிதமும் தீய பொருளையே நல்கிடும்.

என்று என் தாயார் கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் என் புத்தி மாறும் தன்மையிலானேன். இருந்தது போலிருந்து என் கண்களில் ஜலம் தோன்றிவிடும். வெகு நேரம் வரை அருவிபோற் பிரவகிக்கும். பிறகு ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டுவிடுவேன்.

என் பாட்டனூர் ஏன் இப்படி மூதேவி போல் கிடக்கிறாய் என்று அதட்டினார். "என் சரீரத்தை உமது இஷ்டப்படி செய்து கொள்ளலாம்; என் ஆத்மாவைக் கட்டுப்படுத்த உம்மால் முடியாது" என்றேன். ஓ! என்ன எதிர்த்துப் பேசுகிறாய் என்று என் மாதா கண்டித்தார். தாயாருக்கு மட்டும் நான் பிரதியுத்தரம் கூறுவதில்லை. என் பாட்டனூரிடமே என் எதிர்ப்பு. இந்த அனுபவத்திலிருந்து எந்த விவாகத்திற்கும் நான் ஒப்பாமல் தடுத்துவிட என் னுள் ஸக்தியுண்டென்று கண்டு கொண்டேன்.

சில தினங்கள் பொறுத்து என்னை கேட்கச் சிலர்வந்தார்கள். என் தாயார் என் கேஸங்களை வாரி ஜாடை போட வந்தார். நான் அதற்கு இடம் தரவில்லை. என் பாட்டனூர் திடுக்கிட்டார். இரண்டு அடிகளும் என்னை யடித்தார். "கழுத்தைப் பிசைந்து கொன்று விடுங்கள். அல்லது நானே என்னைச் சரி செய்து கொள்கிறேன்" என்றேன். பின்னும் அடிகள் விழுந்தன. மாதாவும் என்னை அடித்தார். அடிப்பதற்கெல்லாம் வணங்கி வணங்கி நமஸ்கரித்தேன். யாராவது என்னை அடித்தால் அவர்களுக்கு நமஸ்காரம் செய் வேன். கிறிஸ்துநாதர் சொன்னதுபோல ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டுவேன். இந்த நிலையில் என்னை யடித்து என்ன பயன்? பெண் கேட்க வந்தவர்கள் இன்னொரு சமயம் வருவதாகக்கூறிச் சென்றனர். என் பாட்டனூருக்கு என் மீது பரம ஆக்கிரகம் உண்டாய் விட்டது.

இரண்டு வாரங்கள் கழிந்தன. வேறு சிலர் வந்து என்னை விசாரித்தார்கள். ஒரே அருமை மகனும், அவர் பி. ஏ. பரீக்ஷை தவறிப் போனாராம். சொத்துக்கள் மிக மிக உண்டாம். சமைக்க வேண்டியதே யில்லையாம். அதற்கு வேண்டிய பரிசாரகைகள் உளராம். இப்படி யெல்லாம் தெரிவித்து என்னைக் கேட்டார்கள். நான் நெற்றி நிறையக் குங்குமம் அணிந்துகொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்தேன். என் எதிரில் என் தம்பி உட்கார்ந்தான். அவனைப் பார்த்து வைவது போன்ற பாவனையில் பின்வரும் விதமாகச் சொல்லிய படியே இருந்தேன்.

"வலிமையற்ற தோளினாய் — போ போ போ!
மார்பிலே ஒடுங்கினாய் — போ போ போ!

☞ சுயநல முள்ளவனென்று உன்னைத் தூற்றுவோர் யார்? பொறாமைக்காரர்கள்தான். பொறாமை—பிறரைப் பிரித்திடவும் ஏவும்.

ஒளியிலா முகத்தினாய் போ போ போ!
ஒளியிழந்த விழியினாய் போ போ போ!
ஒலியிழந்த குரலினாய் போ போ போ!
ஒளியிழந்த மேனியாய் போ போ போ!
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ!
இழிமையென்றும் வேண்டுவாய் போ போ போ!"

என்னைக் கேட்க வந்தவர்களுக்கு இந்தப் பாடல் மிக்க உற்சாகமாய்ப்பட்டது. எவர் என்னருகில்வந்தாலும் அவருக்கெல்லாம் இப்பாடலை உபயோகித்தேன். என் பாட்டனாரும் கடைசியில்வந்து இதென்ன அலங்கோலம் என்றார். அவரை நோக்கியும் அப்பாடலைக் கூறினேன். அவர் ரௌத்திராகாரமாய்ச் சீறினர். வந்திருந்தவர்கள் சாந்தப் படுத்தி, "அந்தக் குழந்தை விரும்புகிற இடத்தில் விவாகம் செய்து வையுங்கள்; நல்ல புத்திசாலியான பெண். அவளுக்கு எதிரிடையாக நடந்து வீணாக அவளைத் துன்பப்படுத்தாதீர்கள். அக்காவும் தம்பியும் ஒன்று போலிருக்கிறது" என்று கூறினர். பிறகு விடை பெற்றுச் சென்றனர்.

என் பாட்டனார்.—ஏன் இப்படி மூர்க்கத்தனம் செய்கிறாய்? இவை யெல்லாம் நற்காலத்துக்கு அறிகுறி யன்று.

நான்.—"காலம்', கடவுளின் ஸ்வரூபம். அது ஆண்பாலில் காலன், பெண்பாலில் காலி, (காளி) ஆணும் பெண்ணும் அல்லாத அலியிலே காலம். ஸத்வ, ரஜஸ், தமஸ் என்னும் முக்குணப் பிரகிருதியால் நடைபெறும் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும் காலவசமானதே. தெய்வஸக்தியும் காலசக்தியும் நான் இந்த உங்களின் நிர்ப்பந்தத்திலிருந்தும் விடுதலை பெறும் பொருட்டாக அந்த நண்பனுக்கும் எனக்கும் ஒற்றுமையை ஏற்படுத்திவிட்டன.

Subscriber's no.

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18. | திரிச்சி: மார்ச்சு—மீ 1922 | இதழ்-1.

பிரபஞ்ச விலாஸம்

1. வந்தனம் (Thanks):— தமக்காக ஒருவர் எவ்வளவோ சிரமப்பட்டு ஒரு வேலை செய்தால், அதற்குப் பதிலாக வந்தனம் (Thanks) என்று சொல்லிவிட்டு. வெகு சுளுவில் நழுவி விடுகிறார்கள். இது பெரிய மனிதர்களிடம் விசேஷமாகக் காணலாம்.

2. அன்பின் இரைவு:— தனக்கு மிகவும் வேண்டிய அன்பர்கள் தன்னிடம் இல்லாத ஒரு வஸ்துவைக் கேட்பினும்,—"இருக்கிறது, ஆகா! தருகிறேன்" — என்று கூறிவிட்டு அவர்களுக்குத் தெரியாமல் விலை கொடுத்தாவது வாங்கி வந்து தரும் சிலாக்கியமான அன்பொழுகும் குணம் சிலரிடத்துண்டு. அதிலும் காதல் சம்பந்தம் கலந்து விட்டாலோ?

3. சீக்கிரம் பேரன் பேர்த்தி:— பெண்களுக்கே சீக்கிரம் விவாகம் நடப்பதால், பெண் குழந்தைகளை ஈன்றால் துரிதத்தில் பேரன் பேத்திகளைப் பார்க்கலாமென்று உலக அனுபவம் சொல்லுகிறது.

4. சுகப்படுதல்:— இரண்டாம் தாரமாய் வருகிறவளுக்கு, ஆண் குழந்தைகளோ — குழந்தைகளோ இல்லாமற் போய்விட்டால் மட்டுந்தான் மூத்ததாரத்தின் குழந்தைகள் சுகப்படலாமாம்.

5. சிலரது கோபம்:— உங்களைப் போல் கோபித்துக் கொள்வாருமில்லை. சமாதானப்படுவாருமில்லை. சடிதப்போக்கு வரத்தில் ஏற்பட்ட மனஸ்தாபத்திற்கு நேரில் சந்திப்ப தேசாந்தி. சிலர் கோபத்தில் சிறந்தவர்களாயிருக்கிறார்கள். சிலர்கோபத்தை யுண்டுபண்ணி விட்டுத்தணிப்பதில் சிறந்தவர்களாயிருக்கிறார்கள்.

6 கருப்பான பெண்:— மனதில் அன்பும் பாசமும் ஓங்கிவிட்டால், அப்பெண் கருப்போ சிவப்போ எதையும் கவனியாமல் அவளையே மணக்க நாடுகிறார்கள்.

7. கருப்பு சிவப்பு:— சிவந்த மேனியுள்ளவர்களுக்குக் கருத்த கண்மணியே மனைவியாகவருகிறாள். கன்னங்கரேலென்று ஒரு கருத்த குழந்தையையும் பெற்றெடுக்கிறாள். சிவப்பும் வனப்பும் மிகுந்த நங்கையருக்கு கருத்த உருவமே கணவனாய்த் தோன்றி முத்தம் கொடுக்க முற்படுகிறது. பிறக்குங் குழந்தையும் கணவனையொத்த கரிய நிறமே!

8. கடன்:—பிறரிடம் தந்திரமாய் எத்தனை நாள் தான் கடன்வாங்கிச் சாப்பிடுகிறது? பின்னிட்டு அக்கடனைத் தீர்த்துவிட்ட போதிலும், தற்சமயம் ஒருவரைக் கடன் கேட்கும் போது உயிர் தத்தளிக்கிறது. எப்படியோ சாப்பாடு நடந்து விடுகிறது என்கிறார் ஒருவர்.

9. காதல் மூச்சு:-யௌவன மென்பது என்ன? 'காதல்மூச்சு' விடுவதற்கான மனோரம்மிய பருவம்.

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்	**விகடமாமா** *(Registered.)*	அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

அவன் கூத்து—அதற்கது சரி!



எல்லாம் அவன் கூத்து! அதற்கது சரி! ஆதிபகவனே! மஹாதேவா, உன் படைப்பாகிய இந்த விசாலமான பூமியிலே ஒவ்வொரு பதார்த்தத்தினுளும் ஒவ்வொரு அதிசயத்தையும், மகத்துவத்தையும், விநோதத்தையும் புகவிட்டிருக்கிறாய். ஒவ்வொன்றிலுள்ளும் ஒவ்வொரு விசாரமான குறைவை ஒட்டவைத்து, அந்த ஒரு குறைவையே பெரிய முறைப்பாடாக்கி, மற்ற நிறைவையெல்லாம் பொருட்படுத்தா திருக்கச் செய்து விடுகிறாய்! இதை விகடமாமா யோசிக்கப்போனால், உமது சிருஷ்டியின் அற்புத பாகங்கள் வெகு விசித்திரமாயும், எங்கே ஒரு இன்பத்தில் பூரண தத்துவத்தை உண்டுபடுத்தி விட்டால், அதிலேயே மனிதர்கள் லயித்துப்போய் உம்மை மறந்து விடுவார்களோ என்று செய்கிற காரியமாகவும் காண்கிறது.

அவரவர்களுடைய எண்ணங்கட்கு ஏற்ப விதைவிதைக்க, அதற்குத் தகுந்த அறுப்பையே நீ கொடுக்கிறாய். அன்றைய உணவுக்கே எக்கமானாலும், ஆடையலங்காரங்களில் பட்டும் பார்வையுமாகவே சிலர் தங்களைத் தோற்றுவித்துக் கொண்டு, அப்படியே காலத்தையும் ஓட்டிவிடுகிறார்கள். சிலர் எல்லா செல்வமும் இருந்தும், தரித்திரப்பட்டுக்கொண்டு அழுக்கும் இழிந்ததுமான உடைகளிலேயே நாட்களைத் தள்ளப்பார்க்க, அப்படியே அவர்களின் பொழுதும் போய் விடுகிறது. இருந்தும் நன்றாக உடுத்து உலாவ இவர்களுக்கு அதிர்ஷ்டமில்லை. கடைசிவரையும் பிறருக்குத்தான் வேலையாளாகவே உழைத்துச் சாவோரும் இருக்கிறார்கள். சிலர் என்ன இழிந்த நிலைமையுற்ற போதிலும், மறுபடியும் உயர்ந்து, பிறரை அதிகாரம் செய்யும் வாழ்வில், தம் கையின்கீழ் நாலைந்து வேலைக்காரர்களோடும் விளங்கி அப்படியே முடிவுவரைக்கும் ஆகிறார்கள். சிலர் எவ்வளவு உழைத்தும் விருத்திக்கு ஏதுவின்றி, பிறனுக்கே அனைத்தையும் செய்து தந்து, அதில் அவன் ஏராள லாபம் சம்பாதிக்க அவற்றில் தாங்கள் கூலிமட்டும் பெறவோராய்ப் பரிதபிக்கிறார்கள். சிலர் ஏதும் தெரியாதவராக இருந்தாலும், தெரிந்தவர்களை யெல்லாம் வைத்து வேலைவாங்கி, உலகம் தன்னை எல்லாம் அறிந்தவனாக நினைக்கும்படி செய்துகொண்டு லக்ஷாதிபதியாகிறார்கள். அவனுக்குத் தெரியாத வேலை ஒன்றுமில்லையென்று உலகத்தார் ஒருவனைக் குறித்துக்கூற, அவனோ அதிர்ஷ்டமற்று, எந்த வேலையும் நஷ்டத்திற் கிடமாய் அன்றாட உணவிற்கே தாளம்போடுகி

ருன். அதிகம் நெருங்கிப் பழகுவத ளுல் முன்னேயினும் சிறந்த நட்பாள ராகச் சிலர்மாற, வேற சிலரோ தூ ரத்திலிருந்தால் பிராண நட்பும் பரி மளமுமாய், கிட்ட நெருங்கிளுல் மன ஸ்தாபமும் அலக்ஷியமும் பகையுமா க முடிகிருர்கள். பந்துக்களோ நெரு ங்கிப் பல்லிளிப்பதிலும் இராந்துண் ணலா மென்று ஒருவன் நினைக்க, வேறெருவனே தன் காலத்தை உற வினர்களின் வீட்டிலேயே நடத்தி விடவும் பார்க்கிருன். அவ்விதமே அவனுக்கும் நடந்துபோய் விடுகிற து. ஆயிரம் விதங்களில் நஷ்டப்ப ட்டேனும் சிலர் ஆதிநேசத்தைக் கா ப்பாற்றிக் கொள்ளப் பார்க்க, சிலர் அற்பத்திற் கெல்லாம் நேசத்தை உ டைத்துக்கொண்டு போய்விடுகிருர் கள். சிலர் நட்புச்சார்பில் தாங்கள் கடனுகப்பெற்ற தொகையைத் தரா திருப்பதற் கென்றும் நேசத்தினின் றும் பிரிந்துபோய் விடுகிருர்பள். சி லர் நேசனுக்கே மித்திரபேதம் செ ய்யத் தொடங்கிச் சண்டாளர்களா கிருர்கள். தன் பூர்வ இழிந்த நிலைமை—கேவலச் செய்திகள் தெரிந்துங்கூடத் தன்னே விலக்கா மல் பிரீதித்து அளப்பரிய அன்போ டும் அந்த நண்பனிருந்தானே என் றுகூட எண்ணுமல். அவனுக்குக் கெ டுதிகள் செய்யயும் அவனைக் கேவல ப்படுத்தவும் தொடங்கிக் கொள்ளு கிருர்கள்.

இவ்விதமே ஒவ்வொன்றி னுள் ளும் ஒவ்வொரு அதிசயமும், மகத் துவமும், விநோதமும் தோற்றிக் கொண்டு நிற்பது ஒருபக்கமாக, இனி, ஒன்றைப்பற்றி ஒன்பது சிந்த னை செய்துகொண்டு குறைப்பட்டுக் கொள்ளும் கோரணிகள் இதைவிட இன்னும் விசித்திரம். அவனுக்கென் ன பணக்காரன்—என்று உலகம் வி யந்துபோற்ற, உள்ளுக்குள் அவனே ஆராய்ந்து பார்ப்பிரேு, அவன் வீட் டில் நோயும் நொடியும், வியாச்சியங் களும், எதிரிகளின் துன்பங்களும், கடைசியில் பிள்ளையில்லாக் குறையு மாக நிறைந்து கிடைக்கின்றன. ஏழை வீட்டிலோ பசியும், வறுமை யும், திண்டாட்டமும் மலிந்துகிடந் தாலும், திடமானதேகம், சந்தோ ஷமான முகம், பத்தெட்டு புத்திர பாக்கியம், செட்டான வாழ்க்கை முதலிய சிலாக்கியங்கள் தென்படு கின்றன. இப்படியே ஒருவனே நன் ருகப் படித்தவனென்று பார்க்கப் போனுலோ, அவன் அதிகப்படிப்பா ல் சந்தேகத்தில் உருண்டு கொண் டே போவதும், ஆயிரம் விசை அக ராதிகளைப் புரட்டுவதும், தன் மதத் தில் நம்பிக்கையற்றுத் திண்டாடுவ தும், பெரிய பெரிய ஆராய்ச்சிகளை யெல்லாம் மேலிழுத்துப் போட்டுக் கொண்டு மூளை உருகி உருக்குலைவ துமாக இருக்கிருன். நாஸ்திகனுக வும் முடிகிருன். இவ்விதமே உபா த்தியாயர் வீட்டில், அவர் பல்லாயி ரம் பேருக்கு ஞானக்கண்களைத் திற ந்து விட்டு உலகத்துக்கு வழிகாட்டி யிருந்தாலும், அவருக்குப் பிறக்கிற பிள்ளை முழுமூடனுய்ப் போகிருன். இந்தத் துயரை எவரிடம்போய்ச் சொல்ல?

உலக முற்றிலும் தமது நியா யாதிகாரத்தைச் செலுத்துகின்ற நீதிவான்களும், தங்கள் பராக்கிரமத் தைக் காட்டும் ரணவீர சூரர்களும், அதிகார மமதையால் அனைவரையும் மிறட்டிக் கலக்கி ஆரவாரிக்கிற உத் தியோகஸ்தர்களும், வீட்டுக்குள்ளே புகுந்ததும், தங்கள் மனைவிக்கு அடி மைகளாகிக் குற்றேவல் செய்து கொண்டு, அங்கே தங்களின் சாமர் த்தியம் சமர்த்து முதலியவைகளைக் காட்ட முடியாமல், பெட்டிப்பாம்பு போல் உடம்பு குன்றிப் போகிருர் கள். அப்படிச்செய், இப்படிச்செய், அதைஎடு, இதைஎடு, சீக்கிரம் என் று வாய்ப்பேச்சு விஸ்தாரம் பேசுகி றவர்களும், அந்தப்பேச்சு வேலையில் சாமர்த்திய வான்களாக நிற்கிருர்க ளே தவிர, தங்களுக்குக் கீழ்ப்பட்ட

வர்கள் செய்கிற அற்பவிஷயங்களைக்கூடத் தாங்கள் செய்ய சக்தியுடையவர்களாவதில்லை. இப்படியே 300, 400—என்று சம்பாதிக்கிறவர்கள் வெளிக்கு வெகு சுகமாக வாழ்பவனைப்போலத் தோன்றினாலும், உள்ளுக்கு அவர்களின் வாழ்க்கை வெகு பரிதாபமும், அபாயமும், வரவுக்கு மிஞ்சிய செலவை யடக்க முடியாமையும், அதற்காக லஞ்சங்கள் பெறுகிறதும், அந்தக் கடனைத்தீர்க்க வழியின்றி முதலுக்குச் சரியாக வட்டியை வளர்த்துக் குடியை முழுகப்பண்ணுகிறதும், செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வென்று கடைசியில் முடிவதுமாகிறார்கள்.

இப்படியே பிள்ளையில்லாதவன் பிள்ளைக்காக அழ, பிள்ளையைப்பெற்றவனோ அவர்களை வைத்து சமாளிக்கவோ, அவர்களின் ஆராதாரித்தனமான செயல்களைத் தாளாமலோ தவித்துச்சங்கட மடைகிறான். அழகு நிறைந்தவர்கள் தங்களுக்குள்ளே மறைந்திருக்கிற ரகசிய வியாதிகளைத் தீர்த்துக்கொள்ள வைத்தியர் வீடும், ஆஸ்பத்திரியுமாக அலைந்துகெட, அல்லது அந்த அழகினாலேயே கன்னடத்தையைமீறி கற்பு அழிய நேர, அழகற்ற கருப்பண்ணை தேவர்களும் தேவிகளுமோ தங்களின் தேகநிட காத்திரத்தை மதித்துத் திருப்திப் படாமல், அந்த சிவப்பான முகம், அழகான கண்கள், கிளியைப்போன்ற மூக்கு, லாவண்ய தேகம தங்கட்கு இல்லையே என்று நொந்து கொள்ளுகிறார்கள். சிலருக்கு எவ்வளவு பணம் வந்தாலும் செலவுக்குப் போதவில்லையே என்று இன்னும் அந்த வாவிலேயே ஏக்கம். ஐரோப்பியர்— அமெரிக்கர்களெல்லாம் இந்திய நாட்டில் வந்து செல்வர்களாக. இங்குள்ளவர்களோ பிழைக்க வழியில்லையென அந்நிய நாடுகட்கு ஓடப்பார்க்கிறார்கள். தாசியை வைத்துக்கொண்டு சந்திசிரிப்பவன், அவனுடைய மோசங்களுக்காக ஏங்கி, விவாகம் செய்துகொண்டு தன்னிஷ்டத்துக்கான விதமாய் மனோ நிர்மலியாக வாழவிரும்ப, இனி மனைவியோடு கூடியிருப்பவனோ அதன் அருமை பெருமைகளைச் சிந்தியாது வேறிடத்தை நாடுகிறான். தன் மனைவி எப்போதும் ஆபரணமும் அலங்கிதமுமாய், நல்ல வஸ்திர முடுத்து நாகரீகமா யில்லாததைநோக்கி, ஒரு தாசியை வைத்துக் கொண்டாலும் அழகுக்கு அழகாய்த் திருப்திக்குத் திருப்தியாய் இருக்குமே யென்று நினைக்கிறான்.

இவ்வாறாக ஒவ்வொன்றினுள்ளும் புகுந்து ஆராயத்தொடங்கினால், நல்ல மாம்பழத்தில் விஷமுள்ள வண்டு இருந்துகொண்டு கெடுப்பது போன்று, உலக செல்வங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு குறை யிருந்து கொண்டு மனிதனை ஆட்டி அலைக்கழித்துப் பெருமூச்சு விடும்படியாகச்செய்து விடுகின்றது. இப்படிப் போலவே, பத்திரிகைக்கு வால்யங்கள் (வருஷங்கள்) பெருகவேண்டுமென்ற பத்திரிகைக்காரர்களெல்லாம் யோசித்து நிற்க, 18-வருஷங்கள்—வால்யங்கள் பெருத்துப்போன "பிரஜாநுகூல" னுக்கோ தன் உழைப்புக்கேற்ற பலன் எப்போது கிடைப்பதோ வென்ற எதிர்பார்ப்பும் அவலுமா யிருக்கிறது. ஆகவே தான் விகடமாமா,—குறையில்லாதவர்களென்று வெளிக்குமட்டும் தோற்றுகிறவர்களைப் பற்றி உயர்த்தியாய்ச்சொல்லிக்கொள்ளப்படும்போதும், தாழ்வும் பரிதாபமுமாய்ப் பிறரைக் குறித்துப்பேசப் படும்போதும்,—அந்தப் பெருமை, வறுமை, வாழ்வு, குறைவுகளுக் கெல்லாம் ஒரே குத்தாக, பதிலாக, ஆமப்பா "அவன்கூத்து—அதற்குதுசரி' 'என்று குட்டாமல் குட்டிச் சிலேடையாகக்கூறிவிட்டேன். நீங்களும் குறிப்பைக் கவனித்துக் கொள்ளுங்கள். மாமா! ராமா! சுபம்! சு—சுவாஹா!!

பாரத ரத்நா

(பிப்ரவரிமாதத் தொடர்ச்சி)

பாட்டனார்.—உன் நண்பனே? யாரவன்?

நான்.—ஹரிகிருஷ்ணனையே மணப்பேன்.

பாட்டனார்.—அத்தனை துணிவா? தவிடுபொடியாய் விடும்! பத்திரம்! ஓ! என்ன மீறிப்போனுப்? உன் எண்ணங்கள் மனிதனுடைய சொப்பனவஸ்தை போல.

நான்.—காலமெல்லாம் ஒருத்தி இப்படியே அடிமையாயிருக்க முடியாது. பூனை வாயில் அகப்பட்ட சுண்டெலியானது தனது உயிரைக் கொடுப்பதினால் எவ்வித மகிமையும் பெறமுடியாது. இந்த உண்மையை யறிய அநுபவித்துப் பார்ப்பது மிகுந்த கஷ்டம். அதோடு ஒரே காலத்தில் கடவுளுக்கும் மனிதனுக்கும் அடிமையாயிருக்க முடியாது. என் அன்பான தாதா! சிறுமியாகிய என் ஸ்வதந்திர சுயேச்சைக்குத் துன்பம் விளைத்ததற்காக நீ கடவுள் முன்பு மன்னிப்பு கேட்டுக்கொள்.

பாட்டனார்.—மகா படித்தவள்! போதும் அடக்கு! என் சங்கதி தெரியுமா?

நான்.—உங்கள் ஸக்தி பெரிதா? தெய்வ ஸக்தி பெரிதா? கண்ணியமான மொழிகள் கொண்டே உங்கள் மீது தோஷம் சுமத்துகிறேன்.

பாட்டனார்.—உன் எண்ணம் வீண் கனவு. அந்தப் பயலுக்குத் தரமாட்டேன்.

நான்.—ஒரு நாயை அடிக்க வேண்டுமானல், 'அது போல்லாத நாய்' என்று அதற்கு ஒரு கெட்ட பெயரை உண்டாக்கிவிட்டு, பிறகு அதை அடித்து விடலா,மென்று இங்கிலீஷ் பாஷையில் ஒரு பழமொழியுண்டு. அதை அநுஸரித்து உத்தமமான ஹரிகிருஷ்ணருக்கு, "பயல்" பட்டம் தந்து திரஸ்கரிக்க முற்பட்டுக்கொண்டீர்கள் போலும்.

பாட்டனார்.—நீ மகா ஹைகோர்ட் வக்கீல்! போதும். உன் சட்டவாதத்தை நிறுத்து.

நான்.—வேண்டுமென்றே என் அபிப்பிராயத்தை மிதித்துப் போடுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிற தங்களிடத்தில் என

☞ உன் கீர்த்தியால் பிரமித்து உறவாட வருவோருடன் 'கோயில் விக்கிரகம் போன்று தூர நின்றே பழகு. அதிகம் நெருங்கின் மதிப்புகெடும்,

க்கு ஒரு பேச்சுமில்லை. தங்களுக்கு உட்படுவது என் ஹிருதய தீர்மானத்தின் அநுகூலத்துக்கு விரோதமா யிருக்குமானதால், உங்களுடன் இருக்கவோ—சொல்லுக்கு உட்படவோ எனக்கு இஷ்டமில்லை. வீணாக எனக்குப் பூச்சாண்டி காட்டுவது தங்களின் கௌரவத்திற்கு ஏற்றதல்ல. நியாயஸ்தலங்களிலும் உயர்ந்த நீதிஸ்தலமொன்றிருக்கிறது. அதுதான் மனசாக்ஷிக் கோர்ட்டு. அந்த என் மனசாக்ஷி எனக்கு இடும் ஆணையின் வழியேதான் நான் செல்வேன்.

பாட்டனார்:—இன்னும் என்னென்ன சொல்லுவாய்?

நான்:—என் விஷயமாய் நானே தீர்மானித்துக்கொள்ள எனக்கு சரீரத்தகுதியும், புத்திக்தகுதியும் எற்றளவு இருக்கின்றன. பெண்களின் ஸ்வதந்திரத்திலே காலை யூன்றி, அதை நசுக்கி, அவர்கள் பெறவேண்டிய நலன்களையெல்லாம் ஆண்மக்களாகிய நீங்களே சாண்டித் தின்றுகொண்டிருப்பது உங்களுக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. உங்களுடைய விசாலமான அறிவையும், அளவற்ற ஸக்தியையும் என் அபீஷ்டத்தை நிறைவேற்றும் வகையில் உபயோகப் படுத்தும்படி நான் ஏன் சொல்லலாகாது?

பாட்டனார்:—விசுவாசம்கெட்ட நாய். பெரியோர்கள் என்ற பயபக்தி இருக்கிறதா? நன்றி யிருக்கிறதா? துள்ளிய மாடு பொதி சுமக்கும்.

நான்:—தன்னுடைய மனசாட்சியைப் பறிகொடுத்து எந்த மனிதனும் நன்றி காட்ட இயலாது. தன்னுடைய கற்பைப் பறிகொடுத்து எந்த ஸ்திரியும் நன்றி காட்ட முடியாது. தம் சுதந்தரத்தைப் பறிகொடுத்து எத்தேசத்தினரும் நன்றி காட்ட சாத்தியப்படாது.

* * * *

பாட்டனாருக்கு என் மீது பூரண துவேசமுண்டாய் விட்டது. "நீ இருந்தாலும் சரி, தொலைந்தாலும் சரி, சீ நாயே! வெளியே போய்விடு" என்று கூறிவிட்டுத் தமது அறைக்குச் சென்றார். அவை பாபகாமான சொற்களாயிருந்தன. நாம் செய்ததை நாமேயன்றோ அநுபவிக்கவேண்டும். இதுவும் பகவத் கருணையின் கிளப்பமே என்று கருதிக் கொண்டேன்.

என் பாட்டனாரின் பேச்சுகள் எனக்குப் பற்றற்ற மாதிரியில் பட்டது. அவரது சொற்கள் ஈட்டிபோல் என் ஹிருதயத்திற் பாய்ந்தது. இந்த சமயம் எனக்கு ஏற்பட்ட துக்கம்போல எக்காலத்தும் உண்டானதில்லை. ஒரு வாரமும் சென்றது. பாட்டனார் தன்னுடைய பிகுவை அதிகப்படுத்திக் கொண்டே போனார். முதலில் எல்லோரும் என்னிடம் அலட்சியமா யிருந்தார்கள். நானு

☞ திடீரெனத் தஷிப்போனிடத்தும் பூசிப்போனிடத்தும் நீ ஜாக்கிரதைப்படு, நாளைக்கு உன்னையும் 'பாவி மனிதன்' என்று வைவான்.

வது ஹரிகிருஷ்ணனை மணக்கவாவது என்று அவர்களின் எண்ணம். பிறகு அதைப்பற்றி மௌனமும் செய்தார்கள். என் மனோ நிச்சயத்தை முற்றும் தெரிந்துகொண்ட பிறகு என்னைத் தூற்றினார்கள். இப்போது என்னை அடக்கக் கிளம்பி யிருக்கிறார்கள். ஆயினும் என் திடசித்தத்தின் பலத்தை உணர்ந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் என்பதும் உண்மை. நான் சாந்தமாக இருந்து என்ன கஷ்டம் நேர்ந்தபோதிலும் சகித்துக்கொண் டிருந்து விட்டால், அவர்களின் ஆரவாரங்கள் தானே நசுங்கிப்போய் விடும். கள்ளங்கபடு உணராத பேதையாகிய என்னை மயக்கிவிடப் பாட்டனார் வெகு ஜாலங்கள் செய்யத் தொடங்கினர். ஹரிகிருஷ்ணனைத் தங்களுடைய பேச்சுகளில் மரியாதையாக வைத்து நடத்தாததைக் கேட்க என் மனம் புண்படலானது. "நானே முன்னின்று முடிக்கிறேன்" என்று என் மாதா கூறிய வாசகம் அப்பொழுதே காற்றில் பறந்து விட்டது. என் தாயார் பிறகு அந்தப் பிரஸ்தாபமே எடுக்கவில்லை. எல்லோருடைய அபிப்பிராயங்களையும் கேட்டுக் கொள்ளவேண்டு மென்பதும், பிறரிடம் வெறுப்பே உதவாதென்பதும் என் கொள்கை. இன்னும் முயன்று பார்க்கிறேன். சாந்தமாக பாட்டனார், அன்னை இவர்களோடும் வாதாடி என்னுடைய இஷ்டத்துக்கு அவர்களை இணங்கவைத்து இழுக்கவேண்டுமே தவிர, பலாத்காரத்தினால் சாதிக்க இந்தப் பெண்ணுருவத்திற்கு அத்தனை ஸக்தி போதாது. பொறுமையில்லாதவரையில் இதுபோன்ற இஷ்ட பூர்த்திகரமான பொறுப்பு வாய்ந்த வேலைக்கு நான் லாயக்குள்ளவளாக மாட்டேன். எனக்கு ஆத்திரமுமில்லை. பதட்டங் கொள்வதுமில்லை. பாட்டனார் தாயார் இவர்களிடம்கூட எனக்கு வெறுப்பில்லை. அவர்கள் என் பிரியத்துக்கு எதிரிடையாகச் செய்ய முயலும் பிசகுகளைத்தான் நான் எடுத்துக் காட்டிச் சொல்லி வருகிறேன்.

இரண்டு மாதங்களும் சென்றன. ஒரு முடிவும் ஏற்படவில்லை. ஒரு கிறிஸ்துவ உபாத்யாயினி வீட்டிற்கு வந்து எனக்குப் பாடம் கற்பித்து வந்தாளென்று கூறி யிருக்கிறேன். ஹிந்துப்பெண்களை கிறிஸ்துவ மதத்தில் சேர்ப்பிப்பதே இவர்களின் லக்ஷ்யம். அதற்காகவே இவர்களுக்கு சம்பளம் கொடுத்துப் பாதிரிகள் ஏற்படுத்தியிருப்பது. அதற்கேற்றபடியே அவர்களின் காரியங்களும். ஆயினும் இவர்களில் சில உத்தமிகளும் இருக்கிறார்கள். இவர்கள் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதில் வீட்டின் நிலவரங்களையும், தங்களிடம் கற்கும் பெண்ணினுடைய ஸ்வபாவங்களையும் நாளடைவில் கிரகித்துக் கொள்கிறார்கள். பிறகு சமயசந்தர்ப்பங் கண்டு

☞ உன் நலங்களைக் கண்டு பொறாமைப்படுவோனுடைய நேசம், எப்போதும் சிரித்தறுக்குங் கழுத்துக் கத்தி.

வலை வீசுகிறார்கள். இந்த வலையில் அபூர்வமாய் சில மான்கள் சிக்கு வதுமுண்டு அகப்படாமலே போய்விடுவதுமுண்டு. இது உலக றிந்த உண்மை. எத்தனையோ இடங்களில் இப்படி நடந்திருக்கின் றன. எனது உபாத்யாயனி நான் ஸ்வாதந்திரிய மடைவதற்கு கிறிஸ்துமதமே தக்கதென்றும், தன்னோடு வந்துவிட்டால், ஹரி கிருஷ்ணனையும் கிறிஸ்து மதத்தில் சேர்த்து, இருவரும் விவாகம் செய்துகொண்டு ஸர்வ சுதந்தர பரிபூரணர்களாய் கிறிஸ்துவில் மகிழ லாமென்றும் எனக்குப் போதிக்கத் தலைப்பட்டாள். இது எப்பேர்ப் பட்ட சொக்குபொடி! வசியம்! மந்திரவித்தை! உபாத்திச்சியம் மாள் பஞ்சதந்திரத்தில் நன்கு பாஸானவள்—தேர்ந்தவள்.

நானும் என் தம்பியும் இதைக் குறித்து யோசித்தோம். இரு ந்த நிலைமையின் நெருக்கடி எங்களை எதற்கும் சம்மதிக்க வைத்து விட்டது. காதலில் வெற்றி நேர்ந்தால் நேரட்டும். இல்லையாகில் காதலுக்கே சாகிறேன். காதலுக்கே என் பிராணனை அர்ப்பணம் செய்கிறேன் என்றேன். என் தம்பி தானும் கிறிஸ்துமதத்தில் சேர்ந்துகொள்வதுபோல் நடிப்பதாகக் கூறினான். நான் பருவமுற்ற பெண்ணாதலின் வீட்டைவிட்டுத் தனியாக வெளிப்படின் லோகாப வாதம்—நிந்தை ஸம்பவிக்கும். என்னுடன் என் தம்பியும் இருந்து விட்டால் யாரும் ஒன்றும் சொல்ல முடியாது. இவ்விதத் தீர்மா னத்துடன் முன் உபாத்தியாயனியுடன் செய்துகொண்ட ஏற்பாட் டின்படியே ஒருநாளிரவு நடுநிசியில் நானும் தம்பியுமாக வீட்டைக் கடந்து வெளிப்பட்டோம். எங்கணுமே இருள் சூழ்ந்து நின்றது; மை யிருள். எதிரே நின்றோரின் முகம்கூடத் தெரியவில்லை. வீட் டைவிட்டுச் செல்வதாகிய பயங்கரமான முள்வழியில் இறங்கிவிட் டேன். என்னைப்போல் எவரும் இப்படித் துணியவேண்டாம். என்னைப்போல அத்தனை எச்சரிக்கைகொள்ள மற்றவர்களால் சாத் தியப்படாது. சற்று தூரத்தில் வண்டியுடன் உபாத்தியாயனி காத்திருந்தாள். மிக்க சந்தோஷத்துடன் வண்டியில் எங்களை ஏற்றி க்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றாள்.

இப்படி ரயிலேற்றி வெளியூருக்குக் கொண்டுபோய் விடுவது இந்த உபாத்தியாயனிகள் கற்றிருக்கிற பரமவித்தை! இவர்கள் படிப்பு சொல்லிக்கொடுக்க வந்தார்களா? இந்த அடித்துக்கொண்டு போய்விடுகிற,—அயலூருக்கு ரயிலில் ஏற்றிக்கொண்டுபோய் விடுகிற,— வித்தை காட்ட வந்தார்களா? என்பதை ஹிந்துப்பெண்களின் பெற் றோர்கள் நன்கு யோசிக்கட்டும். எச்சரிக்கை பெற்றுக்கொள்ளட் டும். அந்தப் பாழும் படிப்பும் வேண்டாம். இப்படி உயிரோடு பெண்களைப் பறிகொடுத்துப் பரதவிக்கவும் வேண்டாம். உங்களின்

☞ மித்திரபேதக்காரர்கள் ஒருவனுக்கு அன்புக் கடிதமும், அதே பொழுதில் அவனைக் குறித்து பிறருக்கு விரோதக் கடிதமும் வரைவார்கள்.

பெண்குழந்தைகளுடைய பழக்கவழக்கங்களை மிகு கூர்மையுடனும் கவனித்தபடி இருங்கள். நித்திரைபோய் ஏமாறிவிட வேண்டாம். இது என் அநுபவ ஒளித்திரள்.

நான் உபாத்தியாயனியைப் பார்த்து "தேவனுடைய ஒரே குமாரனாகிய கிறிஸ்துவின் மூலம் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்" என்றேன். "ஹா! என் கண்ணே! இப்போதுதான் உன் மீது பரிசுத்த ஆவி வீசியது. புதுஎழுப்புதல் உண்டாயிற்று. இதுகாறும் அஞ்ஞானிகளிடம் வாழ்ந்தாய். ஞானஸ்நானம் உன்னைப் பரிசுத்தமாக்கிக் கிறிஸ்துவில் சேர்த்துவிடும். தேவனுடைய ராஜ்யத்தில் நீ பங்கு பெற்றுக்கொண்டாய். அஞ்ஞானிகளின் துர்க்கந்தத்திலிருந்தும் கர்த்தர் உன்னைத் தம்மிடத்துக்கு மீட்டுக்கொண்டார். தேவநற்கருணைப் பிரசாதம்பெற்றுக் கொள்ளப் பாத்திரையாய் விட்டாய்"—என்று தனது கிறிஸ்துவ பரிபாஷையில் கூறி என்னைக் கொண்டாடினாள். அவள் வாயில் மது. ஹிருதயத்தில் விஷம். என் காரியத்தை இவளால் நிறைவேற்றிக்கொண்டு, வைரத்தை வைரத்தால் வெட்டுவதுபோல், இவள் கபடத்தைக் கபடத்தால் வெல்லவேண்டுமென்று தீர்மானித்து, அவளது சூழ்ச்சி வலையில் அகப்பட்டுக் கொண்டதுபோல் பாவனைசெய்தேன்—நாட்டிய மாடினேன்.

என்னுடன்கூட என் தம்பி வந்திருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. என் தம்பி கிறிஸ்து மதத்தில் சேருவதாகக் கூறிவந்தாலும் அவனுக்குப் பிராயம் 15-தான். அவன் மைனர். கார்டியனல்ல. அவனுக்குப் போதுமான வயது வரவில்லை. ஆதலின் அவனைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கக்கூடாது. சேர்க்க முயன்றால் நரசோரக் கேஸாகித் தண்டனையும் கிடைக்கும். இதை அவள் அறிந்து வைத்தவளானதால், என்னை மட்டுமே இப்பொழுது சேர்த்துக் கொள்வதாயும், பிறகு போதிய பருவம் வந்ததின்மேல் என் தம்பியைக் கிறிஸ்துவில் சேர்ப்பதாயும் நவின்றாள். நாங்கள் இருவரும் சரி சரியென்று தலையசைத்தோம். ஹரிகிருஷ்ணனை அடைவதற்காக இந்த வேலையை நான் செய்வதற்குக் கடவுளிடமிருந்து தான் சக்தி பெறவேண்டும். ஒரு சமயம் இந்தக் காரியத்தை நான் நிறைவேற்ற அருகதையல்லாதவளாக இருந்தால், பகவான் என்னை இந்த நிமிஷமே தமது பாதாரவிந்தங்களில் சேர்த்துக்கொண்டு, என்னுடைய ஆணையை நிறைவேற்றுவதற்கான சக்திக்கும் அவருடைய திருவுள்ளத்துக்கும் உகந்தவிதமாக என்னை மறுபடியும் சிருஷ்டித்தனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்கிறேன்.

☞ அவன் உன் கடிதங்களைப் பிறருக்கு அனுப்பிக் கலகமூட்டிவிட்டு, உன்னிடத்திலும் உறவாட வருகிறான். எச்சரிக்கை!

நிற்க, ஒருவரைக் கிறிஸ்துமதத்தில் சேர்த்தால் உபாத்திச்சிக்கு வேண்டிய பணம் கிடைக்கும். பதவியும் உயரும். இது அவளுக்கு ஒரு லாட்டரிச் சீட்டுபோல! நான் என்மட்டில் ஜாக்கிரதை கொண்டவளாயிருந்தேன். என் தம்பி என்னைப் பிடித்த கை விடவேயில்லை. நானும் அப்படியே. பின் வருகிறபடி அவளிடம் ஒரு கடிதத்தை அவள் கையொப்பத்துடன் பெற்றுக்கொண்டேன்.

கர்த்தரின் வழிப்பட்ட பாரதரத்நா!

உனக்குப் பிரியமானபோது கிறிஸ்துவில் ஐக்கியமாகலாம். பைபிளைப் படித்து அது உன் மதத்திலும் சிறந்ததாய் நியாயம் என்று பட்டால்,- உனக்கு அப்போது விருப்பமானால்,—நீ கிறிஸ்துவமதத்தில் சேரலாம். இல்லாவிட்டால் சுதந்தரமாக வீட்டிற்குச் செல்லலாம். உன நிமித்தம் எங்களுக்கு ஏற்படுகிற செலவுகள் உன்னைக் கட்டுப்படுத்த மாட்டா.

ஞானமணி.

இக்கடிதத்தை எழுதிக்கருவதற்கு வெகு திக்குமுக்காடிட்டுப்போய், நெடுநேர யோசனைக்குப் பிறகு எழுதிக் தந்தாள். இதுகாறும் தன்னை எவரும் இப்படிக் கேட்டதில்லையென்றாள். அவளுக்கு எண்ண மென்னவென்றால், "நம்முடைய கைக்குள் அகப்பட்ட பறவை தப்பிப்போகுமா" என்பதுதான். ரயில் பிரயாணம் தீர்ந்து ஒரு பெரிய ஜில்லாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். பாதிரிகளின் பங்களாவுக்கு 'என்னை அழைத்துச் செல்ல வண்டியும் தயார் செய்தாள். அங்கு நான் வரமுடியாதென்றும், ஒரு ஹிந்துஹோட்டலில் ஜாகை வைத்துக் கொள்வதாயும், அந்த இடம் ரகசியத்தில் இருக்கட்டுமென்றும், கிறிஸ்துவ வேதங்களைச் சோதித்துத் திருப்தியான பிறகு பங்களாவுக்கு வருவதாகவும் கூறி, எங்கள் இருவருக்காகச் செலவிட்ட ரயில் சார்ஜையும் அவளிடம் கொடுத்துவிட்டேன். அவள் என்னை இவ்வளவு சாமர்த்தியக்காரியா என்றாள். என்னை அதட்டிப் பயமுறுத்தினாள். இப்பொழுதே இவ்வளவு பயமுறுத்துகிற நீ, இனி என்னைப் பங்களாவுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டால் என்னென்ன செய்யமாட்டாய் என்றேன். 'போலீஸ் ஸ்டேஷனும், தந்திபாபீஸும் பக்கத்திலேயே இருக்கிறது ஜாக்கிரதை' என்று என் தம்பி கூறினான்.

என் குணத்தை அவள் தெரிந்து கொண்டாள். நயவஞ்சகமாகவே வேலை செய்யவேண்டுமென்று முடிவு கட்டினாள். நான் ஒரு ஹிந்து ஹோட்டலில் ஒரு அறை பேசிக்கொண்டு ஏகாந்தமாய் ஜாகை வைத்துக்கொண்டேன். தம்பியின் துணையோடு ஹோட்டல்காரரின் பெண்களும் எனக்குத் துணையாயினர். மறுநாள் துரை

☞ தன்னை அந்த இடத்தில் உறவாக்கி விட்டவனையே, அந்த இடத்துக்குஆகாதபடிசெய்துவிட முயற்சி சூழ்பவன் எத்தனைப்பயங்கரமானவன்?

சானியும் இரண்டு பாதிரிமார்களும் என்னை வந்து கண்டுகொண்டனர். கூட உபாத்யாயனியும் வந்திருந்தாள். கிறிஸ்துவில் பூரண அன்புகொண்டு இவ்வளவு சிரமத்தோடும் வந்து சேர்ந்ததற்காக சந்தோஷப்படுவதாகப் பாதிரி துரைசானி கூறினாள். மற்றொரு பாதிரியார் "ஹிந்துமதம் அஞ்ஞானமதம்; பல தேவ வணக்கங்களுடன் கூடியது. கல்லுகளைக் கடவுளென்று வணங்குவது பாவம்" என்றார்.

இதற்குத் தக்க உத்தரம் கூற எழுந்தேன். ஐயா, மத தூஷணை என்பது வேண்டாம். என் மதம் உயர்ந்தது, உன் மதம் தாழ்ந்தது என்ற பேதபுத்தி வேண்டாம். அவரவர்க்கு அவரவர் மதம் பெரிது. கிறிஸ்து நாதரையும் நான் போற்றுகிறேன். அவரது உபதேசங்கள் பரமோத்கிருஷ்டமானவை. ஆனால் அதன்படி கிறிஸ்தவர்களே நடப்பதில்லை. அவ்விதம் நடப்பதானால் கிறிஸ்துவராஜ்யங்களுக்குள் இந்த மகாயுத்தம் நேரிட்டிருக்கமாட்டா. ஹிந்து மதத்திலும் எத்தனையோ ஞானிகள் இருக்கிறார்கள். மதம் என்பதெல்லாம் ஞானிகளால் ஸ்தாபனம் பெற்ற ஒரு சங்கம் போன்றது. ஹிந்துமதத்தில் நீங்கள் சொல்லுகிற குறைகளெல்லாம் கிறிஸ்து மதத்திலும் உண்டு. நான் ஹிந்துமதத்தில் தோஷங்கள் கண்டு அதன்மேல் கிறிஸ்து மதத்தில் சேர வரவில்லை. எத்தனையோ பேர் எத்தனையோ காரணார்த்தங்களால் கிறிஸ்துமதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். நானும் ஒரு காரணார்த்தமாகச் சேர எண்ணங்கொண்டவளேயன்றி, ஹிந்து மதத்தில் குறைகள் கண்டு வந்தவளல்ல. ஒரு மதத்தை உயர்த்தவேண்டுமானால் அது தானாக உயரட்டும். அதற்காக இன்னொரு மதத்தைத் தாழ்த்த வேண்டுமென்பதில்லை. மதநிந்தனையே எனக்குப் பிடிக்காது. ஸமரஸ சிந்தனையும் ஸமரஸ புத்தியுமே சிலாக்கினைக்குரியவை. தன் பதிவிரதாதன்மையை நிரூபிப்பதற்காக மற்றொரு பெண்ணின் கற்பைக் கேவலப்படுத்திக் கூறவேண்டிய அவசியமில்லை என்றேன்.

பாதிரியார் எனது வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டார். ஓ! இது விழிப்புள்ள மான்; பலமான வலை வீசவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டு என்னுடன் தர்க்கம் செய்வதானார்.

1. பாதிரி:—மொழியுங் கடவுளொன்று யிருக்கவுங்களுக்கு
மும்மூர்த்திகள்யாரோ? இந்துக்களே.

2 நான்:—பழிக்கு முமக்கு மூன்று கடவுளிருப்பதைப்
பாராமற்பேசவந்தீர்! கிறிஸ்துவரே.

3. பாதிரி:—கடவுளே தந்தையுங்கடவுளே மைந்தனும்
கடவுளே பரிசுத்த ஆவி; இந்துக்களே.

☞ எவனும் தன் லாபத்தை விட்டுக்கொடுக்கமாட்டான். விட்டுக்கொடுப்பதும் தன் பெரிய லாப மொன்றுக்காக.

4. நான்:—திடமாகத் தந்தையே மைந்தனென்று நீங்கள்
தெரியாமல் சொல்லலாமோ? கிறிஸ்துவரே.

5. பாதிரி:—கடவுளின் மைந்தரே கடவுளாயிருக்கிறார்
கடவுளே யவரென்பீர்; இந்துக்களே.

6. நான்—கடவுள மைந்தனே சர்வேச்சுரனென்றால்
சரிவயதோ இவருக்கு; கிறிஸ்துவரே.

7. பாதிரி:—மூவர் வேறானாலும் இயல்பிலுங் குணத்திலும்
மூவரும் ஒன்றலவோ? இந்துக்களே.

8. நான்—மூவரும் சமமென்றால் மூவரிலிருவர் வீண்
மூவராய்த் தொழுவதேன்? கிறிஸ்துவரே.

9. பாதிரி:—உலகின் மனிதருக்கே—ஒன்று அருள், ஒன்று நீதி.
ஒன்று பாவமன்னிப்பு; இந்துக்களே.

10. நான்:—பலதேவருமக்குண்டு, பல தெய்வங்களைத்தொழும்
பலதேவாநுசாரியாவீர்; கிறிஸ்துவரே.

11. பாதிரி:—ஆமையுமீனையும் அவதாரமென்கிறீர்
அறிவேதுமில்லாத இந்துக்களே.

12. நான்:—தாமே கடவுளும் புறாவாக வந்ததாய்ச்
சாற்றுமே உங்கள் பைபில்; கிறிஸ்துவரே.

13 பாதிரி:—ஈனமனிதனைப்போல் ஈசனடந்ததாக
இசையுமே புராணத்தில்; இந்துக்களே.

14. நான்:—ஊன் கால்களாலீசன் ஈடன் தோட்டமதனில்
உலாவினதில்லையோ? கிறிஸ்துவரே.

15. பாதிரி:—கற்சிலைமீதே யெண்ணெய்க் காப்பிட்டபிஷேகம்
கயவர்போல் செய்கிறீர்; இந்துக்களே.

16. நான்:—கற்சிலைமீதே யகோப் எண்ணெய்க்காப்பிட்டதாய்
கழறும் பழபைபில்; கிறிஸ்துவரே. (Genesis XXVIII.18.)

17. பாதிரி:—திவ்வியதலங்களுக்குச் செருப்புடன் போவது
திரஸ்காரஞ் செய்கிறீர்; இந்துக்களே.

18. நான்:—திவ்வியதலமேகில் செருப்பைக்கழற்றென்று
செப்புமுங்கள் பைபிலில் தானே; கிறிஸ்துவரே. (Exodus III. 5.)

19. பாதிரி:—சாதிபேதமென விருந்தில் சாப்பிடமறுக்கிறீர்.
சரிதானோ உமக்கிது? இந்துக்களே.

20. நான்:—சாதியினாலே கிபத்தான் இபிரியுடன் சாப்பிட
தடுப்பதுண்டோ இலையோ? கிறிஸ்துவரே.(Genesis XLIII.32)

21. பாதிரி:—கோவிலிலே நீங்கள் கூத்தாடுகின்றீரே
குணமேதுமில்லாத இந்துக்களே.

☞ அன்புக்குச் செய்த உதவிகள் வீண்போகா. வீண்போவதும் பயனற்ற பாழ் விரோதத்தால்.

22. நான்:—தாவிது கூத்தாடின சங்கதியறியீரோ
சரியாயோசித்துச்சொல்லும் கிறிஸ்துவரே.(2.Samuel VI.14.)

23. பாதிரி:—பலியோமங்களுக்காக தாராக்கினி யென்று
பத்திரப்படுத்துகிறீர்; இந்துக்களே.

24. நான்:—பலிபீடத்திலக்கினி பத்திரப்படுத்தவே
பகருமே உங்கள் பைபில்; கிறிஸ்துவரே. (Leviticus VI. 13.)

25. பாதிரி:—திருப்பதிக்குப் பழனிக்குச் செலுத்தவே பிரார்த்தனை
சென்று சிரமுண்டனஞ்செய் இந்துக்களே.

26. நான்:—சிரமுண்டனஞ்செய்க நாஜரி தெனவே
செப்புகின்றதே பைபில் கிறிஸ்துவரே. (Numbers VI.18.)

27. பாதிரி:—மூடவன் போலே விக்கிரகத்தின் முன்னுட்கார்ந்தே
முணமுணவென்கிறீர்; இந்துக்களே.

28. நான்:—கடவுள் முன்னுட்கார்ந்தே கருத்தாய்ச் செபித்ததாய்
கழறும் பழயபைபில்; கிறிஸ்துவரே. (2.Samuel VII. 18.)

29. பாதிரி:—தோளில் விக்கிரகங்களைத் தூக்கிக் கொண்டு போறீர்
தோன்றாத புத்தியுள்ள இந்துக்களே.

30. நான்:—தோளின்மீதிசனைத் தூக்கித்திரிந்ததாய்
சொல்லுமே உங்கள் பைபில் கிறிஸ்துவரே. (Isaiah XLVI. 7.)

31. பாதிரி:—மூன்றுதரந்தண்ணீரை சூரியன் முன்னிரைக்கிறீர்
மூடத்தனமல்லவோ? இந்துக்களே.

32. நான்:—மூன்றுதரம் ஆகாயவாணிக்கு நீரிரைக்க
முன்பைபில் சொன்னதே: கிறிஸ்துவரே. (Jeremiah XLIV. 17.)

33. பாதிரி:—நெற்றியிலே நீங்கள் நாமமிடுகிறீர்
நிச்சயமறியாத இந்துக்களே.

34. நான்:—நெற்றியிலோரடையாளம் வைக்கவேண்டுமென
நிச்சயிக்கும் பைபிலில் கிறிஸ்துவரே. (Ezekiel IX.4.)

35. பாதிரி:—செத்தவன் வீட்டிற்குச்சென்றால் சூதகத்தீட்டெனவே
செப்புகிறீர்வீணே இந்துக்களே.

36. நான்:—செத்தவன்வீட்டிற்குச்சென்றால் சூதகத்தீட்டெனவே
செப்பு முங்கள் பைபில் கிறிஸ்துவரே. (Ezekiel XLIV. 25.)

37. பாதிரி:—கூடும்பருவத்துக்குமுன் கல்யாணஞ் செய்கிறீர்
குற்றமல்லவோ இது; இந்துக்களே.

38. நான்:—கூடுங்காலத்துக்குமுன் மேரியை ஜோசபு
குறிப்புமணஞ் செய்தார்: கிறிஸ்துவரே. (Matthew I. 18.

39. பாதிரி:—மலைமீது தெய்வங்க ளிருப்பதாய்த் தொழுகிறீர்
மடயத்தனமல்லவோ? இந்துக்களே.

☞ பகைமையால் வாரிக் கொண்டதென்ன? மன வேதனையே அதன் கூலி. பரஸ்பரம் அன்பு பெருக வாழ்வதில் எத்துணை இன்பம்?

40. நான்:—மலைமீதுமுன்னோர்கள் தொழுதுவந்ததாக
வழங்குதே பைபிலில்; கிறிஸ்துவரே. (John IV. 20.)

41. பாதிரி:--முன்செய்த தீவினையால் குருடனானென்று
மொழிவதிழிவல்லோ? இந்துக்களே.

42. நான்:—வன்செய்கைக்கே யீடாய்க் குருடனாய்ப்பிறந்ததாய்
வழங்குமே பைபிலில்; கிறிஸ்துவரே. (John IX. 2.)

43. பாதிரி:—கடவுளர் மனிதரைப்போல் தரையில் வந்ததாக
கடும்பொய்யுரைக்கிறீர்; இந்துக்களே.

44. நான்:—கடவுளார்தப்படி தரையில் வந்ததாக
கழறுமே பைபிலில்; கிறிஸ்துவரே. (Acts XIV. 11.)

45. பாதிரி:—ஆலயத்திலிடும்பலி ஆட்டின் தலையிற்புட்பம்
அணிந்ததை வதைக்கிறீர் இந்துக்களே.

46; நான்:—மாலையுடனெருது பிரகற்பதி குருகொண்டு
வந்ததாய்ச்சொல்லும் பைபில்; கிறிஸ்துவரே. (Acts XIV. 13.)

47. பாதிரி:—விக்கிரகத்துக்குக் கண் திறந்துயிர் கொடுப்பதாய்
வேதியர்கள் சொல்வது பொய் இந்துக்களே.

48. நான்:—விக்கிரகத்துக்குயிர் கொடுக்க அவருக்கு
மேன்மையுண்டெனும் பைபில்;கிறிஸ்துவரே.(Revelation XIII.15.)

49. பாதிரி:—திருப்பதிக்குக் காணிக்கை செலுத்துகிறீர் வீணே
தெளிந்த புத்தியில்லாத இந்துக்களே.

50. நான்:—பரிசுத்தமாகவென்றால் பகர்ந்திடு காணிக்கையென
பரிவாய் மோசேஸ் சொன்னார்; கிறிஸ்துவரே. (Luke V. 14.)

51. பாதிரி:--பேயொரு பெண்மகளைப் பிடித்துக் கொண்டாடுவதாய்ப்
பேதமையால் நம்புகிறீர்; இந்துக்களே.

52. நான்:—பேய்கள்பிடித்த சிலர் திரியக்கண்டதாகப்
பேசுமே பைபிலில். கிறிஸ்துவரே. (Luke VIII. 27.)

53. பாதிரி:—பரதேசிகள் சாம்பல் பூசி யிரட்டுவத்திரம்
பறித்துத்திரிவதேனோ? இந்துக்களே.

54. நான்:—பறிப்பர் தபசி என்று உங்கள் பைபிலில் தானே
பகர்ந்ததைப் பார்க்கிலையோ? கிறிஸ்துவரே. (Matthew XI.21.)

55. பாதிரி:—சாவில் பதினாறு நாள்கள் சூதகமெனத்
தாவித்து வருகிறீர் இந்துக்களே.

56. நான்.—சாவில் மூன்றுவாரம் சூதகஞ் சரியாகத்
தனியல் காக்கவிலையோ? கிறிஸ்துவரே. (Daniel X. 2. 3.)

57. பாதிரி:—பிணத்தைத் தொட்டால் தீட்டு, ஸ்நானம் செய்கவெனப்
பேதைகள் பேசுகிறார்; இந்துக்களே.

☞ பிறர் உதவி நாடி உன் விஷயங்களை வெளியிட்டால், அதில் அவர்களும் லாபம் பெறப் பார்ப்பார்கள்.

58. நான்:—பிணத்தருகே வரவேண்டாம் தீட்டாய்விடுவா யென்று
பேசுமுங்கள் பைபில்; கிறிஸ்துவரே. (Ezekiel XLIV. 25.)

59. பாதிரி:—பிணத்தைச் சுடும்போது வாசனைத் திரவியங்கள்
பேதைகள்போல் பெய்கின்றீர்; இந்துக்களே-

60. நான்:—பிணத்துக்கே வாசனை பெய்கவெனமிகப்
பேசியதுண்டு பைபில்; கிறிஸ்துவரே. (Jeremiah XXXIV. 5.)

61. பாதிரி:—வந்த திரவியத்தை மண்ணிற் புதைக்கின்றீர்
மதிகெட்டவர்களாகிய இந்துக்களே.

62. நான்:—வந்த திரவியத்தை அந்தகாரத்திலே
வைத்திருக்கச்சொல்லும் பைபில்; கிறிஸ்துவரே. (Isaiah XLV. 3-)

63. பாதிரி:—விட்டுணு தூங்கினர் விழித்தார் நடந்தாரென
விவேக மில்லாமற் சொல்வீர்; இந்துக்களே.

64. நான்:—கட்டளைகளிட்டார் நடந்தார் உறங்கினர்
கடவுளென்னும் பைபில்;கிறிஸ்துவரே.(1 Kings XVIII. 27.)

65. பாதிரி:—கங்கை யமுனை கிருஷ்ணா கோதாவரி துங்கை
கடவுள ரென்கிறீர்; இந்துக்களே.

66. நான்:—துங்க தாமாஸ்கஸ் ஆபானா பார்பார்
தூய்ய நதிகளென்றீர்; கிறிஸ்துவரே. (2 Kings. V. 12.)

67. பாதிரி:—குருதீட்சைபெற்று நீர் மோட்சமடைய வெண்ணல்
குருட்டுத்தனமல்லவோ? இந்துக்களே.

68, நான்:—கிரியா ஞானஸ்நானம் பெற்ற பின்பே மோட்சம்
கிடைக்கு மென்கிறீரே ; கிறிஸ்துவரே.

இன்னும் அநேக கேள்விகளைப் போட்டு என்னை மடக்கப் பார்த்தார். அவை ஒவ்வொன்றுக்கும் துவேசமில்லாமலும், சாந்த சித்தத்தோடும் அவர்களுடைய வேத நூலைக்கொண்டே விடையளித்தேன். பாதிரியார் பிரமித்துப் போனார். துரைசானியும் என்னைக் கொண்டாடினர். மற்றொரு பாதிரியார் என் ஸமத்காரத்தைக் கொண்டாடி என் கைகளைக் கண்களில் ஒத்திக்கொண்டார். ஸ்ரீமதி உபாத்யாயனி அம்மாளுக்கு மட்டும் வயிற்றெரிச்சலாயிருந்தது. கடைசியில் என் இஷ்டப்படியே என்னை விட்டுவிட்டு,எப்பொழுது உனக்குக்கிறிஸ்துமதத்தில் சேர விருப்பம்?என வினவினர்.என் மனம் சற்று சாந்தி யடைந்ததும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதாகக் கூறினேன். அன்று முதலாகப் பிரதிதினமும் என்னிடம் வந்துபோய்க் கொண்டிருந்தனர். உபாத்யாயனி எனக்கு எமன் என்று பெயரிட்டார்.

☞ எக்காரியமும் நிறைவேறிய பின் வெளியிடு. மௌனம் காரிய ஸாதகம். பகிரங்கம்—பங்கம்

தம்பியும் நானும் முன் நிர்மானித்துக் கொண்டபடி காரியங்களைச் செய்ய ஆரம்பித்தோம். ஒரு தந்தி பின் வருகிறபடி என் தம்பியின் பெயரால் என் பாட்டனருக்கு அனுப்பினேன்.

"அக்கா கிறிஸ்து மதத்தில் சேரக் கருதி பவானிபூருக்கு வந்து விட்டார். நான் அதைத் தடுப்பதற்காகக் கூடவே வந்தும் முடியவில்லை. இங்கு பாதிரிகளின் பங்களாவில் அக்கா இருக்கிறார். உடனே வரவும்."

துர்க்காஸரணன்.

அத்தியாயம்—9

காதலின் உறுதி.

சாந்திபூரில் என் வீட்டில் பெரியதோர் ஆரவாரம்! என்னையும் காணவில்லை. தம்பியும் அகப்படவில்லை. தம்பியின் துணைகொண்டு வெளியேறி விட்டதாய்த் தெரிந்தது! அதற்குமேல் விவரம் ஏதும் விளங்கவில்லை. என் பாட்டனர் கையைக் கடித்தார். முகத்தைத் தொங்கவிட்டார். குலத்துக்கே அபக்கியாதி நேர்ந்தது என்றார். அவன் திரும்பி வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறான். மகா யுத்தமும் முடிந்து சமாதானமாய் விட்டது. வீட்டு யுத்தம் தான் தீர்ந்தபாடில்லை. அவன் வீடு வந்தால் எங்கிருந்து அவன் குமார்த்தியை அவனுக்குக் கொடுப்பேன்? எங்கே என் ஆசை மகளென்று உரைக்கில் எதிர் ஏது சொல்வேன்?—என்று கலங்கினர்.

என் தாயார் தனது தமயனருக்கு ஒரு தந்தி யனுப்பி, அதில்—"பாரத ரத்னாவைக் காணோம். துர்க்காஸரணனையும் காணோம். ஹரிகிருஷ்ணனுக்காவது அவளைக் கொடுக்காமற் போனேனே! அவன் தங்கம்போல் வைத்துக்கொண்டிருப்பானே!" என்று பரிதபித்திருந்தார். ஹரிகிருஷ்ணரும் அவர் தந்தையும் அப்பொழுது சென்னையிலிருந்தார்கள். தந்தியைக் கண்டதும் நீலாத்ரர் தமது குமாரனைப் பிரயாணப்படுத்தி யனுப்பினர். ஹரிகிருஷ்ணரும் புறப்பட்டுவிட்டார். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்தும் பம்பாய்க்குப் பிரயாணமானர். பம்பாயிலிருந்து நேரே கல்கத்தா வர அவர் உத்தேசம். ஊருக்குப் போனவன் சேதி திரும்பி வந்தால் தான் தெரியும். திரும்பி வந்த பிறகுதான்—திரும்பிவந்தது நிச்சயமாகும். திரும்ப முடிகிறதோ என்னவோ! அது கடவுள் மறைத்து வைத்துள்ள ரகசியம்! அவருக்கே அது தெரியும்!!

☞ முகம் அழகுதான். சொற்களும் இன்பமே. உள்ளமோ படுவிஷம். செய்கையோ அநுகூல சத்ருத்வம்.

இந்த ஸ்திதியில் தம்பியின் தந்தி பாட்டனருக்கு எட்டிற்று. இடியேறுடர்த்த மரமாகினர். வீடே பெரும் அழுகையாய் விட்டது. என் தாயார் உலையின் மீது மெழுகொத் துருகினர். மகப் பிரிவினும் துயர் வலிது யாவதே? ஹரிகிருஷ்ணன் வந்தால் எவ்விதத்தும் அவளைக் கொண்டுவந்து விடுவான். அவளை அவன் சொத்தாக்கி விட்டால் என்றும் நமது பெண்ணுகவே இருப்பாள், இனியும் பிடிவாத புத்திவேண்டாம். "சிறுத்தவர்கள் அறியாமல் செய்தபிழை அந்தனையும், செவ்வியோய்! நீ பொறுத்தருளாயாமாகில், பொறை என்னும்? முறை என்னும்? புலமை என்னும்?" என்று பாட்டனருக்குக் கூற, அவர் என்ன செய்வார் பாவம்! "உன் பிரியப்படி செய்; ஹரிகிருஷ்ணனுக்கே தந்துவிடுவோம்"—என்றூர். இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் கொடுத்ததுபோல இப்போதுதான் ஹரிகிருஷ்ணருக்கு என்னைத் தரப் பாட்டனர் ஒப்பினர். அவர் மனமும் இசைந்தது. இந்தத் தீர்மானங்களெல்லாம் செத்துச் சாம்பலான பிறகு செய்கிற தீர்மானங்களாகும். உயிரோடிருக்கிற வரையில் சித்திரவதைதான். கண்ணுக்கு உருவம் மறைந்தபிறகு தயாளகுணமும், தர்மபுத்தியும், இனி அவளை மிக்க மேன்மையாக நடத்தவேண்டு மென்ற உருக்கமும், அதிகப் பாடுபடுத்தி விட்டோமென்ற அநுதாபமும்—இன்னும் என்னேன்னவோ கருணைச் சிந்தனைகளெல்லாம் தோன்றிக் கொள்ளும். உலகத்தில் இப்படியும் நடக்கிறதா—இல்லையா? உண்டா? இல்லையா?

பவானிபூருக்கு என் தாயாரும் பாட்டனரும் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள். பாதிரிகள் என் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை. அது அவர்களுடைய அனுஷ்டான தர்மமுறை. இவ்விதமாக அன்னிய மதஸ்தர்களின் பாடசாலைகட்குத் தங்களின் பெண்களை யனுப்பி எத்தனையோ பெற்றோர்கள் கடைசியில் அவர்களை இழந்தே போயிருக்கிறூர்கள். அதிலும் பருவமுற்ற பெண்களைப் பிற மதஸ்தர்களின் கல்விச்சாலைகட்கு அனுப்புவது மிக்க அபாயம். துரைத்தனத்தாரின் பாடசாலைகட்கு மட்டும் அனுப்பலாம். பெற்றோர்கள் இதைக் கவனிக்கட்டும். நிற்க, உடனே பாட்டனர் கோர்ட்டேறினர். கேஸ் ஆரம்பமாயிற்று. பாதிரிகள் பெரிய பாரிஸ்டரை எனக்காக ஏற்படுத்தினர்கள். டாக்டருடைய அபிப்பிராயமும் கோர்ட்டில் வாங்கப்பட்டது. எனக்கு வயதுப் பல் வந்துவிட்டதென்றும், நான் பெரிய பெண்ணாய் விட்டேனென்றும், நான் மைனர் கிரமத்தைத் தாண்டி விட்டேனென்றும், மேஜர் ஸ்தானத்துக்கு வந்து என்னில் நான் ஸ்வயேச்சை யடைந்து விட்டேனென்றும் வெகு திவ்யமாகப் பாரிஸ்டர் வாதித்தார். என் வய

☞ தன் தங்கை தன்னிலும் சிறியவளாயினும், தன் தாயின் விலகிய வஸ்திரத்தை அவள் மூடுவாள். தன்னாலாகாது.

தைக் குறித்தும் அங்க சின்னங்களைக் குறித்தும் லேடிடாக்டரின் ஸர்டிபிகேட்டையும் ஆஜர் செய்தார். என் பாட்டனாரின் வாதம் வலுவலுத்தது, பின்வாங்கிற்று. ஜட்ஜ் என்னை நோக்கி உனக்குக் கிறிஸ்து மதத்தில் சேரப் பிரியந்தானா என்றார். கிறிஸ்து மதத்தில் சேருவதும், சேராததும் இப்போதைய பிரசினையல்ல வென்றும், என் பிரியப்படி நடக்கிற என் ஸ்வயேச்சைக்குரிய பருவத்தை நான் அடைந்துவிட்டேனா என்பதே தங்களின் நியாயத்தீர்ப்பினால் விளக்க வேண்டிய பாகம் என்றும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொண்டேன். ஜட்ஜ் புன்னகைகொண்டார். "நீ கிறிஸ்து மதத்தில் சேருகிறவள் போலக் காணப்படவில்லை; உன்னுள் ஏதோ ஒரு உத்தேசம் குடிகொண்டிருக்கிறது" என்று கூறிவிட்டு, "எனக்கு சுயேச்சையான பருவம் வந்து விட்டதென்றும், இனி என் பெற்றோர்களின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு உட்பட்டிருக்கத் தேவையில்லை" யென்றும் தீர்ப்பு கூறினார்.

பாட்டனாரின் வதனம் வியர்த்தது. பாதிரிகளுக்குப் பரமஸந்தோஷம் உண்டாய் விட்டது. எப்பொழுதும் இவ்விதமான கேஸ்களில் அவர்கள் பக்கமே வெற்றி நிச்சயம். அதற்கான அம்ஸங்களை—ஆயுதங்களை யெல்லாம் சேகரித்துத் தங்கள் கட்சியை வெற்றி கொள்ள அவர்களுக்கு யாவும் தெரியும். அது அவர்களுடைய நெடுநாள் செர்விஸ்—பழக்கம்.

நான் கோர்ட்டிலேயே பாதிரிகளுக்கும், பாரிஸ்டருக்கும் வந்தனமளித்து—ஒரு பெண் ஜென்மத்திற்கு விடுதலைப் பத்திரம் தந்து, ஸ்வயேச்சை யருளியதற்காக மிக்க நன்றியுள்ளவளாகின்றேன்—என்றும் தெரிவித்துக்கொண்டேன். அத்துடன் தொடர்ந்து நான் கூறியதாவது:—ஹிந்து என்று சொல்லப்படும் ஒருவன் ஒருபொழுதும் சாமான்ய வஸ்துக்களைப்பற்றிய கேள்விகளைக் கேட்பதே யில்லை. பின்னர் அவன் கேள்வி யாதெனில்,—என் "ஆன்மாவின் எதிர்கால திசை எவ்வாறாகும்?"—என்பதுதான். ஹிந்துக்களாகிய எங்களுடைய பழக்க வழக்கங்களையும், முற்போக்கையும் அளவிட தெய்வீக ஸக்திவாய்ந்த ஒரே ஓர் அளவுகோலே யுள்ளது. அதாவது எங்களுக்கென்று ஏற்பட்ட கிரியைகளைச் செய்யுங்கால், அக்கிரியைகளின் ஒவ்வொரு அம்ஸத்தையும் ஸர்வ சாக்ஷாத்காரமாகிய கடவுள் கண்காணித்து வருகிறார் என்ற அதி உத்கிருஷ்ட நம்பிக்கையும் ஞானமுமேயாகும். இஃதொன்றே பிரதி யொரு ஹிந்துவையும் நேரான தர்ம மார்க்கத்தில் செலுத்தி அவனைக் காக்கின்றது. ஒருவன் நீண்ட பரந்த கடலில் வெகுநாள் யாத்திரை செய்த

☞ திமை விளைப்போன் தான் விளைக்கும் தீமையின் மிகுதிக்கேற்பத் தானும் அதிக மகிமைப்படுவதாகக் கருதிக்கொள்வான்.

போதிலும்,—நிரந்தர வஸ்துவின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையேல்,—அந்த யாத்திரை ஒன்றுக்கு முதவாத அலைச்சலேயாகும். அந்த நிரந்தர வஸ்துவின் இருப்பிடத்தை அறிய முயல்வதே ஹிந்து மார்க்கத்தின் பிரதான தத்வம்—லக்ஷ்யம். நல்லதோ கெட்டதோ நான் என் சொந்த மதத்தை விட்டு வரப் பிரியமில்லை. நான் என் வயிற்றில் பத்துமாதம் சுமந்துபெற்ற ஒரு குழந்தையை,-அதைப் பிறர் அவலக்ஷண ரூபி என்று கேவலப்படுத்தும் ஒரு காரணத்திற்காக,—அக்குழந்தையை நான் கடலில் வீசி எறிந்து விடுகிறதா? காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு. ஆயிரம் குற்றங்களே நிறைந்திருப்பதாகப் பிறர் கூறினும், என் பூர்வீகர்கள் அநுஷ்டித்த ஹிந்து மார்க்கத்தைத் தழுவிச்செல்லவே எனக்கு விருப்பம். மதம் என்பது தன் இஷ்டப்படி மாற்றிக்கொள்ளுகிற ஒரு பதார்த்தமல்ல—பண்ட மாற்றுதலல்ல. ஆதலின், என்னை எனது மதத்தின் சார்பிலேயே செல்ல விடுத்து, என் பொருட்டுப் பாதிரிகளுக்கான செலவுகளை என் பாட்டனாரிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படியும் கூறினேன். பாதிரிகள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டனர். தங்களுடைய இவ்வளவு பாடுகளும் வியர்த்தமாயிற்றே என்று துடித்தனர். ஒரு பெண் குட்டியால் இவ்வளவு ஏமாற்றமா வென்று ஆக்கிரகம் கொண்டனர். தன் காரியம் நிறைவேற்றிக்கொள்ள வேண்டி நம்மை யெல்லாம் இப்படி ஒரு ஆயுதமாக உபயோகித்துக்கொண்டாள் என்று பாரிஸ்டர் கூறினர். எல்லோருக்கும் மேலாக என் உபாத்யானி அம்மாளுக்கே, கையில் சிக்கிய பறவை தப்பிப்போயிற்றே என்று பரமதுக்கம்!

ஜட்ஜ் புன்னகை கொண்டவராய், "என் குழந்தாய்! நீ எதன் பொருட்டு இவ்விதம் ஸ்வயேச்சையைப் பெற விரும்பினாய்? எதற்காக இந்தப் பாடுகளை யெல்லாம் சுமந்து நின்றாய்?" என்று வினவினர்.

நான் உள்ள விஷயங்களைச் சுருக்கமாகக் கூறி,என் மாதா தன் தமயனாருக்கு செய்யத்தவறிய ஒரு கடமையை நான் பூர்த்தி படுத்துவதற்காகவே, எனக்கு சுயேச்சையை உண்டாக்கிக்கொள்ள எண்ணி இவ்வழியில் திரும்பினேன். பாதிரிகள் என் விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு எப்போதும் நன்றியுள்ளவளாய் இருப்பேன். நான் கிறிஸ்துநாதரின் உபதேசங்களைப் பொன் போல் போற்றுகிறவள். கிறிஸ்துமதத்தில் எனக்குக் கிஞ்சித்தும் துவேசமில்லை. அதனை நான் மனஸ்பூர்வமாகக் கொண்டாடுகிறேன். ஆதரிக்கிறேன். நான் ஸமரஸ மனத்தினள். எம்மதமும்

☞ எந்த உறவு நன்மைக்கு மூலமாயிற்றோ, அதே உறவு கடும்பகை காட்டுதற்கும் மூலமானது.

சம்மதம். ஆயினும், என் சொந்த மதத்தில் அத்தியந்த பற்றுதலுள்ளவள் என்றேன். ஜட்ஜ் ஆநந்தபரிதராய் எனக்கு மங்களம் கூறினர். நீயே வீராங்கனை—என்றார். என் பாட்டனரைப் பார்த்து, உமது பேர்த்தி அதிதீவிர பக்குவி, நல்ல புத்திசாலி, அன்பின் ஆழத்தை நன்கு கண்டுகொண்ட நாரீமணி, கம்பீராங்கனே, விவேகசாலினி. அக்குழந்தையின் சொந்த விருப்பத்தின்படியே நீங்கள் நடந்து கொள்ளுங்கள். அது உங்களுக்கும் க்ஷேமம், குழந்தைக்கும் க்ஷேமம், காதலுக்கு எளியவன், சீமான் என்றில்லை. மனம் பொருந்திய இடத்தில் காதல். மனம் பொருந்திய இடத்தில் வாழ்வு. மனம் பொருந்திய இடத்தில் உண்மையான சுகங்களுக்கு ஒருபோதும் விரோதமிராது. இம்மாதிரியான சம்பவம்—ஒரு கேஸ்—இதற்கு முன் நான் கண்டதில்லை என்றார். பாட்டனரும் உத்திரவுப்படி குழந்தையின் விருப்பத்திற்கிணங்கி நடக்கிறோம் என்று வணக்கமாக நவின்றார். என் பாட்டனர் கோர்ட்டிலேயே பாதிரிகளுக்கு என் பொருட்டான செலவைக் கொடுத்துவிட்டார். இன்னும் கோர்ட் கலேயவில்லை. அதற்குள் அத்யாதிசயமான ஸம்பவமொன்று நிகழ்ந்தது. அது எதிர்பாராதது. யாவும் பகவத்ஸங்கல்பம். நற்காலத்தின் அறிகுறி.

அத்தியாயம்—10.

காதலின் வேற்றி

வையம் துயர் உழப்ப, மாயம் பல சூழ்ந்து—தெய்வம் கெடுத்தால், செயலுண்டோ? மகத்தான விபத்து! சென்னே இருப்புப்பாதை வடமேற்கு லயனில் பயங்கரமான ஸம்பவம் நேர்ந்து விட்டது! மதராஸ் சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்ட மெயில் வண்டி மத்ய மார்க்கத்தில் ஒரு சிறு ஸ்டேஷனேத் தாண்டி, ஒரு இரும்பு வாராவதியின்மேல் சென்று கொண்டிருக்கையில், வாராவதி இடிந்துபோனதால் திடீரென்று ஒன்றின்மேலொன்றாய்க் கீழே பிரவாகமாயோடும் ஆற்றில் விழுந்துவிட்டன. நதியின் வெள்ளத்தில் சிக்கி ஜனங்களெல்லாம் முழுகிப்போனர்கள். அநேக பிரயாணிகள் சுழலில் அகப்பட்டு முழுகி, தலை முதலியன வுடைந்து ஆழத்திலுள்ள கற்களின் மத்தியில் புதைந்துபோனர்களாம்.

☞ உன்னை மதிப்புடன் போற்றுமிடத்தில், உன்னை இழித்துக் கேவலப்படுத்துபவன் எத்துணைக் கொடிய விஷ ஸர்ப்பம்?

கடப்பை ஜில்லாவில் பிரமாதமான மழை வருஷித்ததால், பெரிய ஆற்றிலும் மற்ற சிறு நதிகளிலும் பிரவாகம் வந்தது. முந்திய இரவு நல்ல மழைபடித்து பக்கங்களிலிருந்த குன்றுகளிலிருந்து கீழே வழிந்து அதிவேகமாய் ஆற்றில் கலந்ததில் பூர்ணமான வெள்ளமுண்டாயிற்று. பம்பாயிலிருந்து சென்னைப் பக்கம் வந்த மெயில் வண்டி எப்படியோ பத்திரமாய் அப்பாலத்தைக் கடந்து வந்துவிட்டது. ஆனால், அதற்கு அடுத்த வண்டியாகிய மதாரஸி லிருந்து புறப்பட்ட மெயில்வண்டி பாலம் உடைந்துபோனதை யறியாமல் தடாலென்று ஆற்றில் விழுந்து விட்டது. இந்த விபத்து நேர்ந்தது விடிய 3 மணிக்கு. அப்பொழுது யாவரும் நித்திரையிலிருந்தார்கள். சீப்கார்ட் வண்டியும், மற்றொரு மூன்றாவது வகுப்பு வண்டியும் தப்பித்துக்கொண்டன.

என் மாதாவின் தந்தியைப் பெற்றதும் ஹரிகிருஷ்ணர் இந்த வண்டியில் தான் பிரயாணப்பட்டு வந்துகொண்டிருந்தார். விபத்துக் காளான ரயில்வே பாலத்தின் நீளம் 90-அடி. இரண்டு கணவாய் களுள்ளது. இதில் வண்டி செல்லும்போது இடி விழுந்தது போல் பயங்கரமான சப்தம் கேட்டதாம்! ஹரிகிருஷ்ணரின் ஹிருதயத்திலும் இடிவிழுந்ததுபோலிருந்ததாம்! தக்ஷணமே நின்றுகொண்டிருந்தவர் விழுவது போல் கண்டு, உடனே எட்டிப் பார்க்க வண்டி தலைகீழாய் ஆற்றில் சாய்வதை நோக்கினர். பின்னர் இமைப்பொழுதில் வண்டி விழுந்து ஜலம் உள்ளே புகுந்து தெய்வசங்கல்பமாய் மிதக்க ஆரம்பிக்கவே, அந்தசமயத்தில் ஒரு மின்னல் தோன்ற, அதனுதவியால் தன் நிலைமையை அறிந்து ஆற்றில் குதித்தாராம். தண்ணீர்நிலைகொள்ளாமல் ஆழமாயிருந்ததை யறிந்து மேலே பார்த்தார். வெளிச்சமில்லை. அந்த சமயத்தில் இவர் மீது இன்னொருவர் வந்து விழுந்தார். அவரையும் சேர்த்து இழுத்துப் பிடித்துக் கொண்டார். இவ்விருவரையும் அலைகள் அடித்துக்கொண்டு போய் விட்டன. ஆகா! ஈசனுடைய கருணையைப் பாருங்கள்! அவர்களின் உயிர் தப்ப வேண்டியே அலைகள் வெகு தூரத்திற்கு அடித்துக் கொண்டு போக, அங்கோரிடம் தெய்வச்செயலால் கால்கள் நிலை கொள்ளக்கூடிய ஸ்திதியில் இருக்கவே அங்கு ஹரிகிருஷ்ணர் நின்று கொள்ளமுயன்று அப்படியே நின்றுகொண்டார். தன்மீது விழுந்தவரையும் தன் பலமெல்லாம் சேர்த்து இழுத்து, தாம் இருந்த இடத்தில் நிறுத்தி அந்த தேகத்தைத் தம்மீது தாங்கிக்கொண்டார். தலையிலும் முதுகிலும் தட்டி ஜலத்தை வெளியில் கக்கச்செய்யவே கொஞ்சம் ஸ்வாசம் அவருக்கு உண்டாயிற்று. இவ்விதமாக விடியுமட்டும் அவரைத் தாங்கிக் கொண்டு அவ்விடமே நின்றார். அதற்குள் அக்காறாற்றின் பிரவாகம் கால்பாகம் வற்றிப்போயிற்று. பொழுதும் விடிந்தது. அதுகாறும் தாங்கி நின்றவருக்கும் பிரக்ஞை பூரணமாகத் தெளிந்து வெளிச்சத்தில் ஒருவரை யொருவர் பார்த்

துக்கொள்ளவே, இருவரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். ஹரி
கிருஷ்ணர் அதுகாறும் எவரைத் தாங்கி நின்று அந்தப் பிரவாகத்தி
னின்றும் ரக்ஷித்துப் பிழைப்பு மூட்டினரோ அவர் என் தந்தையாக
இருந்தார்! இதுவோ விதி லீபனே!—என்று ஹரிகிருஷ்ணர் கதறி
னார். அவரை என் தந்தை யணைத்து முத்தமிட்டுக் கொண்டார்.
“குமுதாமட்டும் ஆக்ஷேபியா திருக்குமானால், பாரதரத்னாவை உனக்
குக் கொடுத்து என் ஜீவகாலமுழுமையும் நன்றியறிந்து நடப்பேன்.
இந்தநிமிஷமுதல் என்பிராணனும் தேகமும் உன்னுடையது. இந்த
ஆபத்தில் எனக்கு உதவிசெய்யப் பகவானே உன்னைத் துணையாக
எனக்கு அனுப்பினார்”—என்று என் தந்தை ஆநந்தத்தோடும் கூறி
னார். ஹரிகிருஷ்ணர் அத்யந்த திருப்தியும் பரவசமும் மேற்கொண்
டார். பிறகு இருவரும் ஜாக்கிரதையாக நடந்து கரையேறி ரயில்
வே லயனை யடைந்தனர். தாம் சுகமே இருப்பதாகத் தமது பிதா
வுக்கு ஹரிகிருஷ்ணர் ஒரு தந்தி யனுப்பினார். பிற்பகலில் பிரவாகம்
பாதி வற்றிப்போய்விட்டது. அதற்கடுத்த நாள் அந்த ஆற்றில்
முழங்காலளவு ஜலம்தான் ஓடிக்கொண்டிருந்ததாம்! என்ன அதி
சயம்!

ஹரிகிருஷ்ணரின் மூலமாக என் தந்தை ஸகல சங்கதிகளும்
அறிந்துகொண்டார். குமுதாவின் அந்திபத்துக்கு மிகவும் துக்கித்
தார். நான் கிறிஸ்துமதத்தைத் தழுவச்சென்றது கேட்டுத் திடுக்
கிட்டவரானார்.

“பாரதரத்னாவை நான் அறிந்ததுபோல் நீங்கள் அறிய
மாட்டீர்கள். உள்ளும் புறமும் நன்கறிந்தவன் நான். ரத்னா வெளி
யேறியதற்குக் காரணம் வேறாக இருக்கும். ஹிந்துமதத்தில் விசே
ஷித்த பக்தியுள்ள பெண்மணி. ஒருபோதும் தவறிநடவாள்”
என்று என் தந்தைக்கு ஹரிகிருஷ்ணர் கூறினார். தன் ஸ்திரீயின்
குணங்கள் கணவனுக்குத் தெரியாமற்போகுமா? மற்றவர்கள் அப்
படி அறிகிறதுமில்லை. அறிந்து அதற்கேற்ப நடக்கிறதுமில்லை.
ஆனால், தங்கட்குத் தெரியாததொன்றுமில்லையென்பதாகமட்டும்
மனோபாவனை செய்துகொள்ளுவார்கள். அவ்வளவே. யுத்தத்திற்குச்
சென்று திரும்பிய தந்தை தமது சாமான்கள் யாவற்றையும் பம்
பாயிலேயே வைத்துவிட்டு, சில நண்பர்களின் வற்புறுத்துதலால்
சென்னை வரைக்கும் வந்தாராம். பிறகு அவர்களிடம் விடை பெற்
றுக்கொண்டு ஹரிகிருஷ்ணர் புறப்பட்ட அதேவண்டியில் சென்னை
யினின்றும் பம்பாயக்குப் பிரயாணமாகி விபத்திற் காளானாராம்.
ஆபத்து—சூழ்வினை—ஒருசமயம் நாம் இருக்குமிடத்துக்கு வந்து
சேருகிறது. மற்றொரு சமயம் தான் இருக்குமிடத்துக்கு நம்மை
யழைத்துக்கொண்டு போய்விடுகிறது. வருவது வழியில் நிற்காது.

பவானிபூரில் நாங்கள் அனைவரும் கோர்ட்டை விட்டுப் புறப்
படும் சமயத்தில், ஹரிகிருஷ்ணரோடும் என் தந்தை என் முன்பு

தோன்றி என் காத்தைப் பற்றவே, அலறி அப்படியே அவரை யணைத்துக்கொண்டு பிரலாபம் நிறைந்தவளானேன்,

நான்:—வந்தனையோ இன்று. வருக! வருக! என்னுருயிரே! எந்தாய்! எந்தாய்! நொந்தேன் உம்மைப் பிரிந்து நான். அந்தோ! கலங்கிய மாற்றம் கழறவும் படுமோ? உற்ற தந்தை ஊரில்தானின் மையால், கற்ற வித்தைகள் காட்டினர் பலருமே. இழிவு மிக்க தாக நடத்தினு ரென்னை. பாட்டனர்தம் ஆட்டமும் பதட்டமும் என்னே! என்னே!! பாவி நான் மிகமிகத் துயருற்று நின்றேன். அநாதையே போன்றும் ஆயினேன். இல்லமே சிறையாயதெனக்கு. கண்ணனைய குமுதாவும் மறைந்தாள். அவள் தன் சாயல் என்னிற் கண்டார் ஹரிகிருஷ்ணர். அவளே நான் என மயங்கினர். என்னை யே மணமாட நாடினர். மறுத்தனர் அன்னையும் தாதையும். 'ஹரி கிருஷ்ணரோ தப்பிப் பிறந்த பேதை! செல்வமற்ற ஏழை! ஒழுங் கற்ற ஆடை. அரை மனிதராவார். வறுமையோ மிகமிக. கொடிது கொடிது இளமையில் வறுமை. யாஹும் கைவிடிலோ ஆவி நீப்ப ரவர்—அது உண்மை. என் பள்ளித்தோழன், அன்புக்கு ஆழி, இளமையின் நண்பன், என் பிரிய குமுதாவின் பிராணன், என் இனிய ஏவலாளன், என் மனத் தேர்த்கட்டின் சாரதி, என் இஷ் டப்படி நடப்பவன், என்னையே நம்பினேன், என் ஆவிக்கு அவ னோர் துணை, அவனே என் ஸக்தி. யானின்றி அவர் ஜீவிபமில்லை. என் சொல் காப்பாரென்தந்தை எவ்விதத்துமெனத் திடமன தானேன். அவ்வுறுதி துணிந்து ஆணைகளிட்டேன் —அவரையே மணப்பதாக. வாய்மையால் அகம் தூய்மையாம். தாதையோ எதிர்த்தாரிதனை. ஏசியே வீசினர். நயமிலாச் சொற்களின் நஞ்சு நவின்றிடவும் படுமோ! கொடியாரனர். இருப்பினும் தொலையினும் சரி யென்றார். அன்னையோ சுதந்தரங் துறந்த மாதா. பாவியேன் என் செய்வேன்? பதைபதைத் தயர்ந்தேன். தண்ணீர் விட்டோ வளர்த்தேன்?—கண்ணீர்விட்டே வளர்த்தேன் என்னருங் காதலை. சிறுவயதில் நெஞ்சம் துணிந்தேன். தம்பியோடும் கிறிஸ்துவத்தில் புகும் பாவனை யுணர்த்தி, நீதித்தலத்தில் என்னுரிமை நான் அடை ந்தே னின்று. இதே போதில் பெற்றேன் நும் பாததரிசனந்தானும். தந்தாய்! மயங்கேல். அறத்தை நினை. அறம் வழுவேல். எந்தாய்! எந்தாய்!என்னுயிரனையாய்!என் கண்ணனைய கிருஷ்ணருக்கே நான். எனக்கே அவர். இருவரும் மணமாலை நாளை நாடி இன்பெய்திட ஆசியே அருளுக. வரம்—இது நல்கிட வேண்டும்—எங்கள் இருவர் தம் ஆவியும் மேதினி மீதுநிலைத்தற்கே.

என் தந்தை:—என் கண்ணே! நைகின்ற நெஞ்சே!குழந்தாய்! ரத்நா! வழிவழி சிறக்க. எல்லோர்தமக்கும் இனிதே விளைப்பம்! சிந்தைத் துயரம் ஒழிக. தாதா அத்துணைக் கெட்டவரில்லை. அவர் பிடித்தது பிடி. அதனல் தவறெய்திடுந்தான். பிடிவாதத்திற்கு

மருந்தேது? அது அவர்தம் இயல்பு. உன்னிடத்து அவர் அன்பு மாறினரில்லை. என்னிலும் மிக்க வாத்ஸல்யம் வாய்ந்தவர். உன் மனப் பாடுகளை அவர் அறியத் தவறினர். அவ்வளவே. சென்றன செல்க. இந்தா ஹரிகிருஷ்ணன் உனக்கு.இந்தலங்காபுரிராஜ்யம்! இன்பமேவி நீவிர் இருவரும் வாழ்க.இந்தா என்னோர்ஆசி நலமுடன் என்றுமே.

எதிர் பாராத வரவு இது. அனைவரும் ஆநந்த ஸாகரத்தில் அழுந்தினோம். ஜட்ஜி என் தந்தையையும் ஹரிகிருஷ்ணரையும் பார்த்து மகிழ்வுற்றார். ஹரிகிருஷ்ணருக்கே உங்கள் குமார்த்தியைக் கொடுங்கள் என்று என் தந்தையாருக்கு ஜட்ஜி கூறினர். இந்தப் பிறப்பில் உனக்குக் கிடைக்காத ஒரு அபூர்வ மாணிக்கம் உனக்குக் கிடைத்திருக்கிறது. செம்மையாக அப்பெண்மணியுடன் இல்லறம் நடாத்திச் சுகித்திரு என்று ஹரிகிருஷ்ணருக்கு நீதியதிபர் ஆசி கூறினர். பிறகு யாவரும் எங்கள் ஊருக்குத் திரும்பினோம்.

* * * * *

என்னை எதிர்த்து நின்ற பாட்டனாரும் என்னை இப்பொழுது ஹரிகிருஷ்ணருக்குத் தர மனதுடையவரானர். ஜட்ஜியின் வார்த்தையையும் கௌரவிக்க வேண்டியிருந்தது. மேலும் என் இஷ்டப்படி நடக்கலாமெனக் கோர்ட்டுத் தீர்ப்பும் வேறே! என் செய்வார் பாவம்! அன்றியும் என் தந்தையை ஹரிகிருஷ்ணர் விபத்திலிருந்து தப்புவித்ததில் அவர் மீது அளவற்ற அபிமானம் உண்டாய்விட்டது. என் தந்தைக்கோ பூர்ண சம்மதம். என் மாதாவுக்கும் திருப்தியே. இவை நற்காலத்தின் அடையாளங்கள். காலம்தான் நம்மை மற்றவர்கட்குப் பகைவராகவோ விரோதியாகவோ ஆக்கிவிடுகிறது. என் தமக்கைக்கும் அவரது கணவருக்கும் கடிதம் எழுதி அவ்விருவரும் வந்து சேர்ந்தனர். இதுகாறும் அவர்கள் ரங்கூனில் வாசமாயிருந்தனர். என் கதைகளையெல்லாம் தமக்கை கேட்டு வியப்புற்றார்.

குமுதாவின் உருவெளித்தோற்றம் நிலவிய உப்பரிக்கையில்—பழய நாள் நினைவு பூரித்திட— ஹரிகிருஷ்ணரும் நானும் காதல் கூர்ந்த மொழிகளில் ஸல்லாபம் மிகுந்து அன்பளாவி நின்றோம்.

ஹரிகிருஷ்ணர்:—கனிமொழியாய்! அரைக்கையினோடும் முடிவுறும் நீலவர்ணமாய இச்சிறு உடை, மேகங்களாகிய திரையன்றோ? பொற்கலசங்களாகிய சந்திரனை இந்த மேகமன்றோ மறைத்திடுகின்றது?

நான்:—இயற்கையில் அமைந்த நாணமே இங்கு மேகமாகி மறைத்தலாகிய குற்றம் இழைக்கின்றது. அஃதும் பிரபஞ்ச தர்ம ரக்ஷணைக்காக. மற்றவர் மனம் மாசு படாதிருத்தற்காகவும்கூட.

ஹரிகிருஷ்ணர்:—நற்குணக்குன்றே! நன்று நன்று நின். மொழிகள். ஸப்பாக்கிரகத்தை நோக்கிச் செல்லும் ரமணியின் பாதச் சிலம்பொலி, ஆர்வமோடும் ஏற்றுக்கொள்ள எதிர்கொண்டு நிற்கும் அவளுடைய பர்த்தாவுக்கு எத்துணை இன்பத்தைச் செய்

யுமோ, அத்துணை மனோகரமாக நினது வசனாமிர்ததாரைகள் என் செவிக்குப் படுகின்றன.

நான்:—பிரதம காதலில் பிரதமமாக ஒன்றுபடுவாருள்ளம் எவ்வகைப் பரவச மெய்தி இவ்வுலகை மறந்திருக்கு மென்பதை அநுபவ முகத்தாற் சுவைத் துணரும் பாக்கியம்—புண்ணியோதயம்—இப்போதுதான் பெற்றேன். மிடியது தொடரப்போந்து மீண்டு, பின் அதினின்றும் கீர்த்தி பெற்றார் போலானேன். தன் நெஞ்சின் இணக்கமும், அதன் வணக்கமும் இடம் அறிந்து, இசைவு நோக்கி அமைவ தன்றோ?

ஹரிகிருஷ்ணர்:—மன்மதன் தன் கணையை வீசுமுடியாத விதமாக அத்தனைத் திடமான மனோவுறுதியி லிருந்துங்கூட, எவ்விதமோ காதலும் ஆவலும் பிரயத்தன பூர்வமாக ஊட்டப்பட்டுப் போய்விட்டதனால், அதிலிருந்தும் மோகாந்தகாரத்தில் அமிழ்த்தப்பட்ட பெண் அன்னமானது, தனக்கு ஆசையை ஊட்டிய,—தான் விதிவத்தாய் மணக்கத்தக்க,—நாயகன் மீது தாங்கொணா விரகங் கொண்டு, அதற்கான காலத்தை அத்தியந்த விருப்புடனும் எதிர் பார்த்து விழி பூத்து வாடுகின்றது.

நான்:—வண்டானது தாமரை மலரில் ஆவல் மிகுதியும் கொண்டிருந்தாலும், மல்லிகை மலரைக் கண்டு அதிலுள்ள புதுவிதமான தேனை ருசிப்பதில் ஆர்வமுற்ற பிறகு, அதனைச் சுவைத்துப் பார்த்து அதில் மனோகரப் படாமல் எங்ஙனம் வெறுமனே தன்னை யடக்கிக் கொண்டிருக்க முடியும்? இங்கு தாமரை மலர் குமுதா. மல்லிகை மலர் நான். விரும்புவது தாங்கள்.

ஹரிகிருஷ்ணர்:—லாவண்ய ரூபசோபிதையான நினது அங்க அவயவங்களின் வனப்பும், முகவசீகரத்திற்குப் பின்பு—சரீரத்தின் உயரத்திலுங்கூட அழகு செய்து நிற்கும் இன்பமார்ந்த சந்திர காந்தமும், அக்காந்தங்கள் அடிக்கடி உலகை ஏறெடுத்து நோக்க எழுங் காலையிலெல்லாம் திரை விலகி திருஷ்டிக்குப் புலனாகி விடுகிற அதன் ரமணீயமும் என்னென்றிசைப்பதோ!

நான்:—மதன தாபத்தில் ஆழ்ந்தி மயங்கிய மனோகரமே! வருந்தற்க. தாபமும் தணிந்து பெருகிடு நாள் இதோ அணுகியது. எனது சிரமம் பயனுற்றது. மங்கள முனக்கு. பாக்கியமற்ற என் போன்றவர்கள் தாங்கள் ஆசித்த பிரேம ரூபமான திரவியங்களை—வஸ்துக்களை—விக்கினமின்றி எய்தப் பெறுவதில்லை. என் பாட்டனார் தம் பிடிவாதத்தைக் கருதினரே யன்றி, உனது நிர்மலமான ஹிருதயத்தின் பிரகாஸத்தை நினைக்கவில்லை. உன்னை ஏழையெனத் தாழ்த்தினரே யன்றி, உன்னுடைய இனிப்பான வார்த்தைகளைக் கேட்டவரில்லை. உன்னைத் திரஸ்கரிக்கத் தெரிந்ததே யன்றி நின் அழகிய பிரமேரூபமான பார்வையைக் கண்டு கொள்ளத் தெரியவில்லை. உன்னை விரோதிக்க முயன்றாரன்றி, உன்னுடைய இனிய

குணங்களைக் காண அவாவின்றியில்லை. ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்துறும். எல்லாம் 'விதியார்' இழைத்த செயல்.

ஹரிகிருஷ்ணர்:—என் ஸ்வபாவம் குண மொன்றையே ஸ்வீகரிக்கும். எத்தகையோராது குணங்களும் எனக்கு மகிழ்வையே யூட்டும். நீய நினைவினருள்ளும் தூய சிலங்கள் சில நிலவப் பெறுகிரா. எதோ நம் பாவம் அவர்களின் அபிப்பிராயம் அவ்விதம்—எனத் திருப்திகூர்ந்து ஒதுங்கிக் கொள்வது என் சாதுத்வம்—பழக்கம். என்னுள் உறைவோன் உன்னையே பெறற்கிட என்னை ஏவினன். விருப்பங்களை நோக்குங்கால் துக்கமும் குறைகிறது; எவ்வளவு கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ள வைக்கிறது.

நான்:—குமுதா எங்கே? நான் எங்கே? முதல் வஸ்து இல்லாத போது இரண்டாவது முதன்மை கொள்கின்றது. தாய்க்குப்பதிலாக தமக்கை நிற்பதுபோல—தாரம் துணையாவதுபோல—அவசியமிருப்பின் கேட்பவர்கட்கு சாரமற்ற விஷயமும்—(அதற்குப் பின் நம் சங்கதி பிரஸ்தாபிக்கப்படக்கூடாதா என்ற நினைப்பின்மேல்)—செவிக்கு இனிமையாய்த் தோற்றுவதுபோல—தேவையின் விசேஷத்தால் நான் தங்கட்கு அபூர்வப் பொருள் ஆனேன் போலும்! பயனற்ற அல்ப வஸ்துவும் பெரியோர்களின் சாஸ்பரிசத்தால் பொன் துண்டுகளுக்குள்ள புனிதத்தை—கௌரவத்தைக் கவர்ந்து கொள்கின்றது. பூஜார்ஹமானதாகிறது. அவ்விதமே தங்கட்கும் நான்.

ஹரிகிருஷ்ணர்:—தெய்வம் குறுக்கிடுமாகில், கருதியவாறுமோ கருமம்? விரும்பியது வெகு தூரத்திற் சென்று விடுகிறது. எந்த வஸ்துவும் அழிவுறுபோழ்தில்—ஆக்கிரக முற்றநாளில்—வேலையில் அதன் பூரண சக்தி தத்துவத்தைக் காட்டி விடுகின்றது. சாவதோ—ஆவதோ—இரண்டில் ஒன்று—எனத் துணிவுற்ற நீயும் மிகு பயங்கர—முள்வழியில்—அசுரத்த மார்க்கத்தில்—உன் ஸக்திக்கு மேற்பட்ட போராட்டத்தை நிகழ்த்தி வெற்றி யுச்சி கண்டு விட்டாய். உனது ஆழ்ந்த கடுஞ்சினம், உன்னுடைய காயமுற்ற அடிகள்போல் பாட்டனுரைப் பெரிதும் நைந்திடவைத்தன. என் சார்பாக நீ கொண்ட சிரமத்தினது பெருமூக்கின் அதிகரிப்பை என்ன தான் நீ அடக்கி மறைப்பினும், உனது அமிர்தகலசங்களின் அசைவு அதை வெளியிட்டு விடுகின்றது.

நான்:—உள் பிரபஞ்ச மில்லாமற்போனால், வெளி பிரபஞ்சமில்லாமற் போம். காதற் காரியத்தின் கௌரவம்—அதன் பற்றுதல்—தன்னை எந்த இழிந்த பான்மைக்கும் வேலைக்கும்—பெருந் தன்மையோடும் உட்பட வைக்கிறது. இது நமது சார்பில் உண்மை போதிக்த உரை.

ஹரிகிருஷ்ணர்:—என் சிந்தைக்கு இனிதாகி, எப்போதும்

என் நெஞ்சில் வந்துநிற்கும் உருவாகி, எல்லாம் வல்ல இறைவனருள் வரும் வழியுமாகி ஒளிரும் கண்ணாளையாய்! எவனருளாலே புவனம்—இதுவெல்லாம் நம் கண் முன் கண்டோம்? எவனருளாலே மானிடமாம்—இச்சென்மம் கொண்டோம்? அவனருளாலே அவன்றாள் வணங்கி இல்லறம் இனிதாக வளர்த்திடுவோம். என்னையும் நின்னையும் பேணும் அவ்வொரு தனிமுதல்வனின் கருணையே நாம் உய்யுதற்குப் பெற்றிடு நற்கணையாளி. என் ரத்நா! ஞான பூஷணமே! குணபூஷணமே! இன்பமேவி என்றும் நீ வாழி. உனக்கு ஆயிரம் பல்லாண்டு.

மாமனூர் நீலரத்ந பானர்ஜியும், அவரது பத்தினியான ஹரிகிருஷ்ணரின் மாதாவும் எங்கள் இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்கள். நான் இருவருடையவும் பாதங்களில் வணங்கி ஆசி பெற்றேன். ஹரிகிருஷ்ணரின் மாதா—"குமுதாவைப்போல ஹரிகிருஷ்ணனோடு வாழ்ந்திரு"—என்று வாழ்த்தினார். என் தாயார் தமது தமயனாரை வணங்கி ஸர்வாபராதங்களும் க்ஷமித்தருளுக என்றார். அதற்கு மாமனார் நீலரத்நர், "எந்தெந்தக் காலத்தில் எதெது நடக்க வேண்டுமோ அதது நடந்தே தீரும்; ஹரிகிருஷ்ணனுக்கு ரத்நா கிடைக்குமென்று என் மனதில் திடமாக ஒரு நம்பிக்கையுண்டு. ஒரு நாள் ஹரிகிருஷ்ணனை நோக்கி "ரத்நாவை உனக்குக் கொடுக்கப் போகிறார்களாமே" என்று வினவினேன். அதற்கவன் பெருமூச்சு விட்டான். நான் "நீ பாரதரத்நாவையே விவாகம் செய்துகொள்ளு; உன் காரியங்களுக்கும் ரத்நா உதவியாக இருப்பாள். நீ ரத்நாவையே மணம் புரிக; உனக்கு எப்படியும் கொடுப்பார்கள். அது தேவ எற்பாடு" — என்றேன். அவ்விதமே இப்பொழுது நிறைவேறி விட்டது. விபத்துக்காளான ரயிலில் பம்பாய்க்கென்றுசென்னையிலிருந்து ஒரு கம்பேனியார் 14-லக்ஷம் ரூபாய் பெறுமான வைரங்களை யனுப்பியிருந்தனர், அதை ஹரிகிருஷ்ணர் கண்டெடுத்து அக்கம்பேனியாரிடம் சேர்ப்பித்தமைக்காக, அவர்கள் பதினாயிரம் ரூபாய் அவனுக்கு ஸன்மானித்தார்கள். அதைக்கொண்டு உயர்தரமான அச்சுக்கூடம் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளான். ஹரிகிருஷ்ணன் முன்னைப்போல் இப்பொழுது ஏழை மனிதனல்ல. ஆதலின் பாரத ரத்நாவைத் தாராளமாய்த் தரலாம்" என்றார். இது என் தாயாரைச் சுட்டிக் காட்டிய வார்த்தை. என் தம்பி துர்க்காஸரணனுக்கு இப்பொழுது சொல்லமுடியாத சந்தோஷம்.

குறித்த காலத்தில் எனக்கும் ஹரிகிருஷ்ண பாபுவுக்கும் விவாகம் நடந்தேறிற்று. என் ஆணைகளை நிறைவேற்றி விட்டேன். இந்த ஜென்மத்திலேயே என் சரீரத்தை அவருக்கு இப்பொழுது அர்ப்பணம் செய்தேன். என் ஆத்மாவை ஏற்கெனவே அவருக்கு ஸமர்ப்பித்து விட்டதை வாசகர்கள் அறிவார்கள். அத்தை என்று முழு அன்பையும் செலுத்தி அவர் நம்பியிருந்த இடத்தில் ஏமாற்

றம் பெறாமல், அமிர்தம் கிடைக்குமாறு செய்துவிட்டேன். என் அன்னையின் கட்டளையை நானே பகவத் கருணையால் நிறைவேற்றி முடித்தேன். என்னுடைய துணிவு நற்காரியங்களில் வெளிப்பட்டதேயன்றி வேறன்று. குற்றமான பாதையில் என் சித்தம் பிரவர்த்திக்கவில்லை யென்பதை யாவரும் நன்கறிவார். பரிதாபமான ஒருவனைத் திருப்திபடுத்துதற்கே இவ்வளவும் முயன்றேன். இதில் என் சுயநல சிந்தை ஏதுமில்லை. ஆனால், நான் வீட்டை விட்டு வெளியேறிய விஷயம் சரியல்ல வென்பதையும், அது மிக்க அபாயகரமான தென்பதையும், என் ஆத்திரத்தில் தவறித் துணிந்த ஒரு பிசகான கிரியையென்பதையும் அது அடாத தகாத ஒவ்வாத முறைகேடான காரியமேயா மென்பதையும், வணங்கி ஒப்புக்கொள்கின்றேன். அந்தப் பெரும்பிழையினின்றும் கடவுள் தான் என்னைக் காப்பாற்றினார்.

என் நாதர் சாந்திபூரில் தானே உயர்தரமான அச்சுக்கூடத்தை ஏற்படுத்தினார். உன்னதமான சித்திரவேலைப்பாடுகளுக்கு அது மிகவும் கீர்த்தி வாய்ந்ததாகி, மிக்க பிரபலமான நிலையில் இருந்து வருகிறது. சுமார் நூறு பேர்போல அதில் வேலைசெய்துவருகின்றனர். பூர்வ ஏழ்மை நிலை பறந்தது. ஏராளமாக வருமானம் வந்து கொண்டிருக்கிறது. என் மாமனார், மாமியார், என் நாதர் யாவரும் சாந்திபூரில் எங்கள் வீட்டில்தானே ஏக குடும்பமாக வசித்துவருகின்றோம். தம்பி துர்க்காசரணன், பாட்டனார், தந்தையார், மாதா அனைவரும் எங்களுடன் கூடவே சுகமாக இருக்கின்றார்கள். என் நாதர் பரமதிருப்தியுடனும் சோபிக்கின்றார். எங்கள் காலமும் இல்வாழ்க்கையும் வெகு இன்பமுடையதாகி விளங்குகின்றது. யாவும் பரமகருணாநிதியின் அருள்! என் கதையை அன்புடனும் வாசித்த என் பிரிய ஸகோதர ஸகோதரிகள் எப்போதேனும் ஒரு சமயம் கல்கத்தாவுக்கு வருவார்களானால், அப்படியே அவசியம் சாந்திபூருக்கும் வந்து, என்னுடைய பிரேமபூர்வமான உபசாராதிகளை பெற்று எங்களை ஆசீர்வதிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். அனைவருக்கும் மங்களம் உண்டாவதாக. சுபம். வந்தே மாதரம்.

முற்றிற்று.

மூன்றாம் வால்யத்து நாவல்களின் பகுதி இத்துடன் ஸம்பூரணம் பெறுகின்றது. இன்னும் அநேக அற்புதமான நாவல்களை ஆநந்தகதா கல்பகம் நான்காம் வால்யத்தில் காண்க. அந்த வால்யத்தையும் அன்புடன் பெற்று மகிழ்வீர்களாக.

மங்களம்.

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18. | கிரிச்சி: ஏப்பிரல்—மீ 1922 | இதழ்-2.

கற்பனா சக்தியின் உற்பவம்

அல்லது

மனோமய கோசத்தின் இயக்கங்கள்.

இந்த மனோமயகோசம் 'குண சரீரம்' என்று நம்முடைய ஆன்றோரால் வழங்கப்பட்டு வருகிறது. ஆன்மாவி னுடைய அறிவு நிகழ்ச்சிகளெல்லாம் இந்த மனத் தினுடைய உதவியையே பற்றுக்கோடாகக் கொண்டு நிகழும். ஆன்மா மனோமய கோசத்தில் இயங்கும்போது தான் அதற்கு 'நினைத்தல்' என்னும் தொழில் ஏற்படுகிறது. பிராணமயகோசத்தைவிட இந்த மனோமயகோசம் அதாவது குணசரீரம் மிகவும் நுட்பமுடையது. ஸ்தூலசரீரத்தைக் கற்சுவர் போலவும், சூக்குமசரீரத்தைப் பளிங்குச்சுவர் போலவும் கொண்டால், இந்தக் குணசரீரத்தை மெல்லிய வெண்மையான சல்லாத் துணியால் தைக்கப்பட்ட ஒரு திரைக்குச் சமானமாகச் சொல்லலாம். ஆன்ம அறிவு இந்த மனோமய கோசத்தில் இயங்கும் அவசரந்தான் 'சுழுத்தி' என்று சொல்லப்படும். இந்த மனோமயகோசத்தில் மூன்று தத்துவங்கள் ஒன்றோடொன்று இணைபிரியாமல் தொடர்ச்சியாய் இருக்கின்றன. இம்மூன்றும் சேர்ந்து செய்யும் வேலையையே நாம் 'மனோசக்தி' என்று சொல்லுகிறோம். இம் மூன்று தத்துவங்களாவன:—

* * * * *

(1) எண்ணம் அல்லது நினைவு (*Thought*), (2) ஆகாய ஆற்றல் (*Etheric Energy*), (3) திடச்சித்தம் (*Will*). நாம் நினைக்கிற ஒவ்வொரு எண்ணமும் சூக்கும ஆகாயத்தில் ஒருவிதமான அதிர்ச்சியை உண்டாக்குகின்றது. இந்த அதிர்ச்சி மற்ற மனிதர்களின் மூளையில் தாக்குகின்றது. இப்படியாக இருவருடைய எண்ணங்களால் உண்டாக்கப்படும் அதிர்ச்சி ஒன்றுபட்டிருக்குமாகில்

இருவருடைய எண்ணங்களும் ஒருங்கு சேர்ந்து ஒருவருக்குத் தோன்றியபடியே மற்றவர்க்கும் தோன்றி ஒரேவித உணர்ச்சியை உண்டாக்குகிறது. நான் வெகு தூரத்திலிருக்கும் என்னுடைய நண்பன் ஒருவனை நினைக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம். என்னுடைய நினைப்பானது மின்சாரம், உஷ்ணம், முதலிய சக்திகளைப் போலவே சூக்கும ஆகாயத்தில் அதிர்ச்சியை உண்டாக்குகின்றது. அப்படி உண்டாகும் அதிர்ச்சியால் சூக்கும ஆகாயத்தின் அணுக்கள் ஒன்றோடொன்று தாக்கப்பட்டு அந்த நினைவை தூரதேசத்தி லிருக்கும் என்னுடைய நண்பன் மூளையில் கொண்டு போய்ச் சேர்க்கிறது. உடனே அவன் என்னைப் பற்றி நினைக்கிறான். இப்படி நினைப்பதால் அவனுடைய மூளையில் ஜனிக்கிற சக்தியைத்தான் ஆகாயஆற்றல் (*Etheric Energy*) என்று சொல்லுவது. நிடச்சித்தம் என்பது நினைவுகளை உண்டாக்கிச் செலுத்திக் காத்துத் தத்தம் இடத்திற்கு வழிகாட்டி நிற்பது. ஆகவே நினைவு நிடச்சித்தத்தினால் ஆளப்பட்டும், காக்கப்பட்டும் வருகின்றதென்பது பெறப்படுகிறதன்றோ?

* * * * *

மனோசக்திக்கு இரண்டு விதமான நிலைகள் உண்டு. ஸ்தூல சூக்கும சரீரங்களின் உதவியைக்கொண்டு நடைபெறும் மனோசக்தி ஒருவித நிலை. அச்சரீரங்களின் உதவி யில்லாமலே நடைபெறுவது மற்றொரு நிலை. ஆன்மா அன்னமய, பிராணமய கோசங்களில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு மனோமய கோசத்தின் உதவி வேண்டுமென்பதும், ஆனால் மனோமய கோசத்தில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு அவ்விரண்டு கோசங்களின் உதவி யிருந்தாலு மிருக்கலாம் இல்லாவிட்டாலுமில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கன.

* * * * *

ஒருவன் இனிமையான சங்கீதத்தைக் கேட்டு ஆநந்தமடைகிறான் என்று வைத்துக்கொள்வோம். சங்கீதத்தைக் கேட்டல், ஆநந்த மடைதல் என்னும் இரண்டு செய்கைகளுக்கு மத்தியில் எவ்வளவோ அற்புதமான சம்பவங்கள் நேரிடுகின்றன. சங்கீதத்தைக் கேட்ட வுடனேயே அவன் ஆனந்தமடைய வில்லை. ஓசையென்பது ஒருவித சக்தி என்பது இங்கே ஞாபகத்தில் வைக்கப்படுதல் வேண்டும். பாடகன் வாயிலிருந்து சங்கீத ரூபமாக வெளிப்படும் ஓசையானது பாடகனுக்கும் கேட்போனுக்கும் இடையிலுள்ள சூக்கும ஆகாயத்தில் அதிர்ச்சியை உண்டாக்க, அந்த அதிர்ச்சியினால் சூக்கும ஆகாயத்திலுள்ள அணுக்கள் ஒன்றோடொன்று தாக்கிக் கேட்போனுடைய ஸ்தூல சரீரத்தில் அமைந்திருக்கும் காது என்னும் கருவியின் வழியாய் அவ்வோசையைச் செலு

ந்த, அந்த ஓசை சூக்கும சரீரத்தின் கருவி வழியாக மூளையைச் சென்று தாக்க, மூளைக்கும் மனதுக்கும் இடையிலுள்ள கருவியின் வழியாக மூளையை முதலில் சென்று தாக்கிய ஓசை மனதுக்குக் கொண்டுவரப்பட்டு அம்மனத்தின் நினைவை எழுப்பிவிட, அந்த மனோசக்தியின் எழுச்சியை ஆன்மா உணர்ந்து அநுபவிக்கிறது. அப்படி அநுபவிக்கும் உணர்வின் அவசரத்திற்றான் "பேஷ்! திவ்வியமான பாடல்" என்று கேட்போன் சொல்லி ஆனந்தப்படுகிறான். இங்கே மனோமய கோசத்திலிருந்து அநுபவிக்கப்படும் ஆன்ம அநுபவத்துக்கு மற்ற இரண்டு கோசங்களும் உபகாரமாயிருந்தன என்பது புலப்படுகிறதன்றோ? மனோசக்திக்கு இரண்டு விதமான நிலைகள் உண்டு என்று சற்றுமுன்பு சொன்னதில், முதல் நிலைமையை விளக்குதற்குச் சொல்லப்பட்டதாகும் மேலே சொன்ன உதாரணம். இதையும், இன்னும் இப்படியே பஞ்சேந்திரியங்களின் உதவிகொண்டு அறியப்படும் மனத்தின் அநுபவங்களையும் தியாஸபியார் "தாழ்மையான மனோநிலை," (*Lower Manas*) என்று கூறுகிறார்கள். ஸ்தூலசூட்சும சரீரங்களின் உதவியின்றியே ஆன்மா மனோமயகோசத்தில் இயங்கவும், அதன் அறிவு அங்கே பிரகாசிக்கவும் கூடும் என்று சொன்ன இரண்டாவது நிலைமைக்கு ஒரு சிறு உதாரணங் கூறுவோம். ஒரு போர்வீரன் யுத்தகளத்தில் நின்று தான் எவ்விதத்திலும் ஜெயம் பெறவேண்டுமென்னும் பேரவாவுடன் யுத்தம் புரிகிறான் என்று வைத்துக்கொள்வோம். எதிரிகளுடைய குண்டுகள்பட்டு, அவனுடைய காலில் பெருங்காயங்கள் உண்டாகி, இரத்தம் ஆறாய்ப்பெருகுகின்றது. அப்படியிருந்தும் அவன் ஒரே ஆவேசத்தோடு பலமாய் யுத்தம் புரிந்து வெற்றி கொள்ளுகிறான். குண்டுபட்டதால் உண்டான காயத்தையும். வலியையும் அவன் யுத்தம் செய்தபோது உணர்ந்திலன். வெற்றி பெற்று வீட்டுக்குத் திரும்பிய பின்னரே தன் காலிற்பட்ட காயத்தையும் வலியையும் உணருகிறான். இதற்குக் காரணமென்ன? யுத்தம் செய்து வெற்றி பெறவேண்டும் என்னும் ஒரே எண்ணத்தில் அவனுடைய ஆன்ம அறிவு பிரவர்த்தித்திருந்தபடியால் ஸ்தூல சூக்கும சரீரங்களில் ஆன்ம அறிவு நடைபெறவில்லை. ஆகவே அவன் வலியை உணர்ந்திலன். யுத்த சமயத்தில் அவனுடைய அவா வயப்பட்டு நின்ற ஆன்ம உணர்ச்சி வீட்டுக்குத் திரும்பியவுடன் அந்த நிலையை விட்டு ஸ்தூலசரீரத்தில் இயங்கிற்று. ஆகவே வலியை உணர்ந்தான். ஆன்மா இப்படியாக ஸ்தூலசரீரத்தின் உதவியை வேண்டாமல் மனோமயகோசத்தில் இயங்கும் அவசரம் பல உண்டு. இந்த அவசரந்தான் மனத்தின் இரண்டாவது நிலையாகும். இதுபோன்ற மனோநிலைமையைத் தியாஸபியார் "மனதின் உயர்நிலை" (*Higher Manas*) என்று கூறுகிறார்கள். ஆன்மா மற்ற இரண்டு கோசங்களையும்

ஆகவே ஒழித்து இந்த மனோமயகோசத்திலே இயங்கினால்தான் அதனுடைய சக்தியும் அறிவும் விரிந்து தோன்றும். ஸ்தூல சரீரத்தின் உதவியின்றியே ஆன்மா மனோமயகோசத்தில்இயங்கக்கூடுமென எற்கெனவே விளக்கியிருக்கின்றோம். மற்ற இரண்டு சரீரங்களின் உதவியில்லாமல் ஆன்மா மனோமய கோசத்திலிருந்தபடியே மற்றொருவருடைய எண்ணத்தையும் செய்கையையும் தெளிவாக அறியக்கூடுமென்றும், ஸ்தூல சரீரத்திலிருந்து செய்யும் வேலையைவிட அதிக வேலையை மனோமயகோசத்தி லிருந்து செய்யக்கூடுமென்றும் நம்முடைய சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுவது, மேல் நாட்டின் நாகரிக வயப்பட்ட பலருக்கு நம்பத்தக்க தன்றெனப் படினும், அம்மேல் நாட்டினர் சொல்வதையே எடுத்துச்சொன்னால் அவர்களுக்கு நம்பிக்கை உண்டாகுமன்றோ? பிரபல ஆன்ம தத்துவ சாஸ்திரியாகிய ஸர் ஆலிவர் லாட்ஜ் (*Sir Oliver Lodge*) பின் வருமாறு கூறுகிறார்:—

"We can operate on each other's minds through our physical envelope, by speech and by writing, and in other ways, but we can do more. It appears that we can operate at a distance by no apparent physical organ or medium; if by mechanism at all, then by mechanism at anyrate unknown to us i. e. by Telepathy."

என்று கூறி அப்படி நடைபெறுவதை டெலிபதி என்று கூறுகிறார். மேலே நாம் சொன்ன கருத்தையே இவருடைய இந்த வாக்கியங்கள் வெளியிடுகின்றன. இந்த மனோமயகோசம் சூக்கும சரீரத்தைவிட மிகவும் நுண்ணியதாய் வெண்மையான சல்லாத்துணியைப்போ லிருப்பதாலும், சூக்கும சரீரத்திலுள்ள அத்துணைக் கருவிகளில்லாமல் இரண்டு மூன்று கருவிகளே வாய்க்கப் பெற்றிருப்பதாலும், ஆன்மா இந்தக் குணசரீரத்தில் இயங்கும்போது இறைவனுடைய திருவருட்சக்தியானது மிகுந்து தோன்றும். ஆகவே, பூதாகாயத்திற்கு மேற்பட்ட பரமாகாயத்தில் தோன்றுபவைகளை ஒருங்கறியவும், ஒருங்கே காணவும் ஆன்மா வல்லதாகும். இறந்தோரைப் பிழைப்பித்தல்; நினைத்த மாத்திரத்தில் ஒரு இடத்தைவிட்டு மற்றொரு இடத்துக்குச் செல்லல், பரகாயப் பிரவேசம் செய்தல் போன்ற அநேக அற்புதங்களைக் குணசரீரத்திலிருக்கும் ஆன்மா செய்யும் ஆற்றலுடையதாகும். இந்த ஆன்ம ஆற்றல் வகையினுள், கற்பனாசக்தி கொண்டு எவரும் வியக்கும் வண்ணமாகப் பெரும் நூலொன்றினை இயற்றிடும் அற்புதத்திறனும் ஒருவாறடங்கும். இதைத்தான் நமக்குப் பின் மறைந்து நிற்கும் சக்தி என்று கூறுவது. இதுகாறும் கூறியவாற்றான் கற்பனா ஸக்தியின் உற்பவமூலம் ஒருவாறு புலனாகும்.

கற்பலங்காரம்

பொன்னேரழகிற் புகழ்நடையிற் பூரித்திருக்கும் உனதன்பன்
மின்னார்பணியும் மேகலையும் வேண்டுமமுது மளித்தொருவா
துன்னோடிருந்து முயிர்த்துணையா யுதவிபுரிந்தும் வருகின்றான்
அன்னை தந்தை, குரு, தெய்வம், அவனேயாகும் ஆரணங்கே. 1.

மின்+ஆர்,ஒளி பொருந்திய, பணியும்=ஆபரணமும்.
மேகலையும்=மேலே தரித்துக்கொண்டிருக்கிற வஸ்திரமும்,

பேசற்கரிய மேற்குலத்துப் பெண்ணாயகம்நீ யானாலும்,
நேசத்தழுந்தி யுனைமணந்த நிமலனுனக்குச் சிறந்தவனால்,
தாசத்துவத்தைப் புரிவாயுத் தமனாயெண்ணி யெந்நாளும்
பூசித்திடுவா யவன்கருத்தே பூவாயுனது கருத்தென்றே. 2.

உலகிலெதிரும் லாபநஷ்ட முனக்குமுனது கணவனுக்கும்
அலதுபிறருக் கமையாதால்; அவன்சொல்வேத மெனலாமால்;
அலகிற்போக போக்கியமும் அவனாலாவ ததுகருதி,
நிலவியவன்பா லடிமையென நீங்காதிருப்பாய் நேரிழையே. 3.

பொற்புதருபொற் பணியாவும் போக்குங்காலம் புகுந்தாலுங்
கற்புமடவார் தங்களத்தில் கணவன்பிணித்த திருநாணை
யற்பமிதுவா மெனவெண்ணி யகற்றுவார்கொல்? மனஸ்தாபஞ்
சொற்பநேர்ந்து திரிந்தாலுந் துணைவற்பிரியேல் சுடர்த்தொடியே

பொற்பு=அழகு. தம், களத்தில்=தம்முடைய கழுத்தில்.
திருநாண்=மாங்கல்யம்.

பரவுமச்சம், நாணம், மடம், பயிர்ப் பென்றுரைக்குந் தொகை நா
கரவின்மடவார்க் கணியான கற்புநிலைக்கோர் பூஷணமாம், [ன்கும்
விரவுபோலி நகைமீது விருப்பமொருவி யுன்கணவன்
தரமில்லவனே யானாலுந் தணிந்துநடப்பாய் தளிர்க்கொடியே. 5.

கரவு+இன்=வஞ்சகம் இல்லாத. விரவு=மாறுகிற.
போலி=போன்ற. ஒருவி=நீங்கி.

இகத்திலடையும் சுகத்தினுக்கும்,இருவான்கதிக்கும் துணைசெய்யும்
அகத்தனவனைப் பயந்தவரை, யவன்சோதரரை, யுறவினரைப்
பகைத்தல்புரி தலழகல்ல; பார்க்கிலுன்போல் பசுந்தோகை
ஜெகத்திலில்லை யெனும்படிக்குத் தினமும்போற்று திருந்திழையே

உனதுகணவன் வரவறிந்தும், உதனுக்கிசைந்த செலவறிந்தும்
கனதைமருவி யத்தனையுங் கைவிடாது சிக்கனமாய்
மனநிற்கிசைந்த படிபுரிந்து வளவின்பொருளைச் சிந்தாமல்
பினது தழையச்சுறு சுறுப்பாய்ப் பேணிநடத்தாய் பெண்மயிலே.7

பினது=பின் அது.

கடவுள்சங் கற்பத்தி னாலுமுன்
றாய்தந்தை கருதுகோ ரிக்கையாலும்
கனமான பெரியோர்கள் உறவாலு
நன்னெறிக் காதலன் வாய்ப்பதாலே,
விடமேவு ரோகஸ்த னாயினும ரோகியே;
வேறின்றி யன்பாகியே
விந்தைதரு மந்தமில்முகத்தனே யென்றாலும்
வெற்றிமத னென்னல் வேண்டும்;
திடமான கல்வியிற் றோராதிருப்பினும்
தெய்வகவி யென்னல் வேண்டும்;
தீராத் தரித்ரனென் றாலுமுத் தரதிசைச்
செல்வனுக் கருதல் வேண்டும்;
நடமாடு வழிசெலுங் கண்ணிலா னாயினும்,
ஞானவிழி யென்னல் வேண்டும்;
நாரியர் பாராவுகற் பரசியே! இல்லற
நடத்து சௌபாக்ய வதியே. 8.

எண்ணரிய மனைவினைமு டிந்துநீ சும்மா
விருக்கின்ற வேளைதனிலே,
இயல்கின்ற வூர்பழமை யாடவரு மயன்மாத
ரிடமோ ரிணக்க மின்றிப்
புண்ணியபு ராதனச ரித்ரநூ லாராய்ச்சி
புரிகுண முனக்கு வேண்டும்;
போதமிகு கல்வியிற் றேறுமங் கையர்
புகழ்ச் சங்க மருவல் வேண்டும்;
நுண்ணியக லாநிதிநம் மௌவைப்பி ராட்டியார்
நுவனீதி கற்றல் வேண்டும்;
நோய்படிய மத்தியா னத்தினித் திரைசெய்பு
நோன்பு கொள்ளாமை வேண்டும்;
கண்ணியமு லாவுமொரு கற்பலங் காரியாய்க்
கணவனுக் குயர் பாரியாய்க்
கண்டவர்வ ணங்கியுன் னடைபயில வேண்டுதுங்
கனமோங்க வேண்டு மயிலே. 9.

நுவல், நீதி=சொல்லுகிற நீதி.

தர்மத்தை நாளுநீ கைவிடாதே; பொய்ம்மை
சாற்றிடக் கற்றிடாதே;
தாங்காத் தரித்ரவந் தெய்தினுங் களவிலாச்
சன்மார்க்கி யாதல் வேண்டும்;
பரசொத்து சிறுதுரும் பென்றெடுத் தாலுன்
பருத்த தூலங் கொள்ளேபோம்;
பாலைநீ யுள்ளதைக் கொண்டுசந் தோஷமாய்ப்
பரிமளித் திடுதல் வேண்டும்;
கருமந்தி வீடுருக்கதிபெறச் செயுமக்கள்
கல்விதேறத் திருத்து;
கவலையுறு வாய்ச்சொல்மாத் திரமல நடக்கையிற்
காட்டிப் பயிற்றல் வேண்டும்;
பிரமத்தை யுணர்சகள வடிவுதொழு மாலயம்
பெண்களொடு செல்லல் வேண்டும்;
பேசரிய கற்பலங் காரியாய் இல்லறப்
பேறடைதல் வேண்டு மமுதே. 10.

சகளம்=விக்கிரஹம். வடிவு=ரூபம்.

க. வீ. சந்தான கிருஷ்ண நாயுடு.
புரோப்ரைட்டர் "ஆரிய கான ஸபா."

ஒப்பந்தக்கூலிகள் படும் பாடுகள்

(பாளைவாய்கமுல் வந்தூர் என்னும் காவடிச் சிந்து மெட்டு.)

நங்கபுரம் சந்தையிலே
நொங்குவாங்கப் போகையிலே
கங்காணி யொருவன் என்னைக் கண்டானே
அவன் இங்கிதமாய்ப் பேசி மோசம் செய்தானே.

வஞ்சகன் சொல் வார்த்தைகளை
நம்பிமோசம் போனே னண்ணே!
தஞ்சமென்று அவனை யண்டினேனண்ணே
தந்தைதாயெல்லாம் மறந்தே போனேனே.

கப்பலேறிப் போனே னண்ணே!
கடல் கடந்து போனே னண்ணே!
அக்கரைக்குக் கொண்டு போனானண்ணலே!
ஆடுமாடுபோல் அடைத்தான் அண்ணலே!

இன்ன இடம் போவே னென்றும்
இன்ன தொழில் செய்வே னென்றும்
இன்னாரோடு இருப்பேனென்றும் சொல்ல
எங்களுக்கு வாயுமில்லை அண்ணலே!

காலைமுதல் மாலைவரை
ஓடியோடி வேலை செய்தும்
கூலிமெத்தப் போதாதங்கே அண்ணலே!
குடியிருப்பு நேருமில்லை அண்ணலே!

ஊருமில்லை பேருமில்லை!
உற்றவர்கள் யாருமில்லை!
சீருகெட்டுப் போனேனங்கே அண்ணலே
ஜன்மம் வீணாய்ப்போச்சுதங்கே அண்ணலே!

அஞ்சு ஆண்டு வேலைசெய்து
நஞ்சுபோச்சு தேகமெல்லாம்
பஞ்சம் தீர்ந்த பாடுமில்லை அண்ணலே!
பாவி யிங்கே திரும்பிவந்தே னண்ணலே!

கையிலொரு காசுமில்லை!
கடன்கொடுப்பார் யாருமில்லை!
தையலென்ற இரக்கமில்லை யண்ணலே!
ஐயோ! என்னைக் காத்தருளும் அண்ணலே!

எனக்கு

அன்பெனும் பெருந்திரு
அருள்புரி எனக்கு
இன்பக் கடவுள்!
இஃதென் வேண்டுகோள்.
நின்னுளப் படியே
பேசத் தைரியம்
நின்னுளப் படியே
செய்யத் தைரியம்
நின்னுளப் படியே
வருந்தத் தைரியம்
எல்லாம் நின்சரண்
எனவிடத் தைரியம்
இவ்வரந் தன்னை
இன்புடன் அருள்க!

அன்பெனும் பெருந்திரு
எனக்கருள் புரிவாய்!
மரணந் தன்னில்
வாழும் நம்பிக்கை
தோல்வி தன்னில்
வெற்றி நம்பிக்கை
அழகின் மையிடை
சக்தியைக் காண்டல்
துன்பம் பொறுத்ததைப்
பிறர்க்குக் கொடாஅ
இன்ப நிலையும்
எனக்கருள் புரியே!

தமிழன்னை திருப்பள்ளியெழுச்சி.

இராகம்—பூபாளம்.

வாழிய வாழிய வண்டமி ழன்னாய்
வான்புக ழோங்கிய செந்தமி ழன்னாய்
சூழ்கதி ராதவர் சுடர்விடு கின்றார்
சுந்தரி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

குப்பைக் கோழிகள் குக்கூ பாடின
குவளை மலர்ந்தது குளிர்பனி ஓய்ந்தது
ஒப்புயர் வில்லாத தற்பிர காச
உத்தமியே பள்ளி யெழுந்தரு ளாயே.

கன்னடம் தெலுங்கு கவின்மலை யாளக்
காரிகை யார்பலர் கண்மலர்ந் தனரே!
இன்னமும் நீதுயில் போதால் என்னே?
ஈஸ்வரி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

மேற்றிசை நாரியின் மேன்மய லாகி
மேதகு தாயுனை யாதரியாதே (து, வ)
மாறிய பகருனை நினைந்திவ றுற்றார்
மாதரு வேபள்ளி யெழுந்தருளாயே.

சிந்தா மணிமே கலைகுறள் சிலம்பு
திருவா சகமிதி காசம் நேர்பெறு
நந்தா மாண்புறு நனிபல நூல்தர
நாயகி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

பாரதி யாரருட் கவியிசை யோங்கின
பாவலர் நாவலர் யாவரும் சூழ்ந்தனர்
பூரண ஞானநற் பூஷணி யேசிவன்
புத்திரி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

முகமில் லாதவ ளென்றுனை மூடர்கள்
முணுமுணுத் தாலத னாலேயு னக்கென்ன?
பகலவ னைக்கண்டு பாசி குலைத்திடும்
பான்மைய தேபள்ளி யெழுந்தரு ளாயே.

தென்னவவ் சேரன் திகழ்தரு சோழன்
தேசங்க டோறுஞ்செங் கோல்செய்த தேவி!
உன்னடி யேசரண் ஓம் நமோ நம
உத்தமி யேபள்ளி யெழுந்தரு ளாயே.

ப. ரே. வி. பாரதி.

பத்திரிகா பிரயோஜனம்

("வாசுதேவனே வந்தாள வேணுமே" என்ற மெட்டு)

படித்த பெண்மணி—கொம்பி அடித்த கண்மணி
பிடித்த கற்பு விரத நாளும் பேணு மம்மணி!

பெண்கள் கல்வியால்—வெகு பங்க முண்டென்று
சங்கங் கூடிப் பேசிப்—பேசி தடுத்தல் ஞாயமா?

அறிவு வேறுதான்—படிப் பறிவும் வேறுதான்
நெறி தெரிந்து பேசவேணும் நியாய வான்களே!

பாதி பாதியே—நாம் படைத்த கியாதியே
சேதிநீதி ஆண்கள் மட்டுந் தெய்வ பக்ஷமா?

இந்தியா விலே—நம்ம பந்தி மாதர்கள்
சிந்தியார்களோ எழுத்துச் சேதிப் பத்திரிகை?

ஓங்கி யுலாவும்—மே லாங்கிலப் பெண்கள்
பாங்கில் யாமுந் திங்கில்லாமல் படிப்போம் பத்திரிகை.

உத்தமக் குணம்—பெறும் பத்தினிப் பெண்கள்
ஒற்றுமைச் சிரத்தை காட்டிப் பத்திரிகை பெற்றால்;

தேச யோகமே—கன ராஜ ரீகமே
பேசுமிந்தி—யாசிலாக்யம் பெறும நேகமே.

சரபம் - உ. அ. முத்துசாமிக் கவிராயர்

விடுதலை

பொன்னையும் வேண்டேன்; புகழையும் வேண்டேன்;
பொற்புறு மதிமுகத் தினராம்
கன்னியர் வேண்டேன்; ககனமும் வேண்டேன்;
கடவுளே! இவையெலாம் வேண்டேன்;
என்னிலும் இனிதாம்; எதனிலும் இனிதாம்;
எவரும் புகழ்ந்திடு "சுயேச்சை"
தன்னையே வேண்டி யிருந்தனன் தமியேன்
தண்ணருள் புரிந்திடு வாயே.

‡கடவுள் அருள்

சாகும் தறுவாயில், சஞ்சல இவ்வாழ்வு ஓய்ந்து,
நோகும் வியாதிகளால் அங்கமெலாம் நொந்து பட,
போகும் உயிர் தளர்ந்து, பொறிகள் அடைபொழுது,
ஏகன், எனை ஆளும் ஈசனே என் துணையே. (1)

வாழ் நாளில் கொண்ட இலக்கை மதி மறந்து,
தாழ்வாம் வசைசேர உள்ளம் தடுமாறி,
கீழ்வாழ்ந்த தன் பெயரே தான் அறியாக் கேடுறும் நாள்,
ஆள்வான் அருட்சக்தி என்னை அளித்திடுமே. (2)

கடைமூச்சு எறிந்து, கடைக் கண்ணீர் சோரவிட்டு,
அடைவாகப் பாடையின் மீது ஆக்கி, முகவாசை இட்டு,
'சடமாம் சவம், இது' எனத் தாரம், மகன், நீங்கிய பின்,
திடமாய் எனை ஈசன் தன் அடியில் சேர்க்குவனே. (3)

இன்பத்துள் ஏதும் உவட்டாதது என்றில்லை;
மன் பெரிய செல்வாக்கும் மாட்சிமையும் மாய்வுறுமால்;
அன்பர் அகம்கனியும் அன்பும் அழிவுறுமால்;
என் பெருமான் இன் அருளே எல்லாம் எனக்காமே. (4)

அ. மாதவய்யர் B. A.

---

*From Har Bilas Sarda's "HINDU SUPERIORITY"
‡*Dominus Illuminatio Mea*—Anonymous.

பாட்டு

ஈசனார் தம் பெருமையைப் பாடவோ!
எந்தன் நாட்டின் பெருமையைப் பாடவோ!
நேசமாதர் அழகினை, பூவினை,
நீலவானத் தெழிலினைப் பாடவோ!
வீசுதென்றல் இனிமையை, மாலையை,
மின்னு வேண்டிரை வாரிதியைப் பாடவோ!
மாசகன்ற புலவருக் குள்ளதாம்
மாட்சி யொன்றிலன், மற்றெதைப் பாடுகேன்.

புது வருட வாழ்த்து

புதியதோ ராண்டு தோன்றிய தின்று!
போற்றுவம் புலவர்காள்! வம்மின்!
ததியுறு மத்திற் சுழலுமிவ் வையம்
சாந்தியில் நிலையுறப் பெறுக!
துதிபெறு நங்கள் பாரத நாடு
தொன்மைபோல் முன்னிலை யுறுக!
விதியருள் புரிக! விளங்குக அறங்கள்!
மெய்ம்மையும் விளங்குக! அன்றே!

செந்தமிழ் நாடு பல்வளம் சிறக்க!
நீ—விளை யந்தணர் வாழ்க!
அந்தமில் நீதி மன்னவர் வாழ்க!
அன்றநற் கலைகளும் மல்க!
பைந்தொடி மடவார் கற்பினில் ஓங்க!
பருவநல் மழைகளும் பொழிக!
இந்திர லோகம் யென்ன இவ்வுலகம்
எழிலுடன் திகழ்ந்திட மாதோ!

சூரிய ஸ்தோத்திரம்

சென்ற சில நாட்களாக ஸ்ரீரங்கத்தில் ஓயாது பெய்த மழையால் நேர்ந்த கஷ்டம் பெரிது. வானத்தில் சதா மேகம் சூழ்ந்து கொண்டிருந்தமையால், சூரிய தரிசனம் கிடைப்பதருமையாகி விட்டது. இன்று காலையில் நிர்மலமான நீலவானத்தில் தோன்றிய சூரிய பகவானுக்குப் பின்வரும் போற்றி கூறப்படுகிறது.

சூரியனே! நின்வரவோ டின்பமெலாம்
தொடர்ந்துவரக் காண்கின்றேமால்;
பேரிருளில் மூழ்கினேம் சின்னாளாய்ப்
பெருமான் நின் வரவால் இன்று
நீரினையே வேண்டினோர் தாகவிடாய்
தீர்ந் தெனவெம் மின்னல் தீர்ந்தேம்
பாரினிலே நின்வரவால் இன்பமுறார்
யாவருளார்? பரிதித் தேவே!

ஒரு குழந்தையின் பிரிவாற்றாது கூறியது.

கண்ணே! யென் கற்பகமே! கனிவாய் நறவொழுகும்
விண்ணாரமுதே! நின் பிரிவென் விளம்புவனே! (1)

தீங்குதலைச் செய்ய வாய்ச் சிறுமதலாய் உன்றன்
பூங்கமல நல்வதனப் பொற்பென்ன கூறுவனே! (2)

அப்பா எனச் சொலும் நின் அருமைச் சொற்கேளாது
கைப்பேறிய தென்றன் காதிரண்டுங் கண்மணியே! (3)

கமல மலர்க்கரங்கள் கன்ற எனை யடிக்கும்
கமல மலர்வதனக் கண்மணியே வாழியரோ! (4)

புன்முறுவல் பூத்தலர்நின் புதுவதனம் கண்டாலென்
கன்மமெலாம் தீரும் கண்மணியே வாழியரோ! (5)

மதுவிலக்கு

எத்தனையோ புழுக்கள் ஈ யெறும்பு கொசு வண்டுகள்
அத்தனையும் ஊறிச்செத்த அசுத்தமடா புழுத்ததடா. (1)

தலைமுறை தலைமுறையாய்ச் சம்பாதித்த பொருள்கள்
மலைபோலிருந்த தெல்லாம் மாயமாகப் போச்சுதடா. (2)

மிஞ்சு பலநாள் தொட்டு பஞ்சுபடாப் பாடுபட்டு
எஞ்சா வைத்ததெல்லாந் தோற்று இஞ்சிதின்ற குரங்கானாய் (3)

மடையனாய் மிகக்குடித்து வருவார்க்கெல்லாங் கொடுத்து,
விடியவே செலவை யெண்ணி விசனமுற்றால் வருவதுண்டோ? (4)

பஞ்ச பாதக மியற்ற அஞ்சார் குடியரப்பா
கொஞ்சி யவருடனே கூடுவோருந் தேடுவாரோ!

சு. அர்த்தநாரீச வர்மா.

எறும்புகள்

இளைத்துக் களைத்தே இரைதேடும் சிற்றெறும்பே!
வளைத்து வளைத்தலைந்து வாடுகிறாய் என்னுயிரே! (1)

அந்நாளில் என்னவர்கள் அன்னமுனக் கீந்து
பன்னாளும் புரிந்தார் பண்பே புரிந்தாரால்! (2)

இந்நாளில் என்னவர்கள் ஈடிலாய நின்னுடைய
பன்னாள் உணவும் பறித்தெடுப்பார் ஏழையர்கள் (3)

உன்னை நினைந்துருகென் உள்ள நிலைமையினை
என்னென்று கூறுவேன் என்னருமைச் சிற்றெறும்பே! (4)

தெய்வக் குழந்தைக்கு திருத்தாலாட்டு.

அன்பொன்றால் இவ்வுலகம் அனைத்தும் நிலைபெறும்
இன்புதரும் உண்மை எனக்கீந்தாய்! கண்வளராய்! (1)

கன்னலரும்பாகே! கட்டிக்கரும்பே! யென்
இன்னுயிரே! எந்தன் இறையே! நீ கண்வளராய்! (2)

ஜோதிக் குழந்தாய்! சொல்லரிய மாண்பினுப்
ஆதித் தலைவா! என் அருயிரே! கண்வளராய்! (3)

உலகனைத்தும் என்றும் உயிர்க்குயிராய் நின்றே
இலங்கு பெருங்கருணைக் கடலே! நீ கண்வளராய்! (4)

ஜீவகாருண்யம் சிறந்தொளிர, இங்கெமது
பாவமெலாம் நீங்கப் பரமனே! வாழ்நியரோ! (5)

உலகம் அனைத்தும் உய்ப்பிக்க வந்தவனே!
திலகம் ஒளிர்வதனா! தெய்வமே! கண்வளராய்! (6)

நிலவு

I

பாலை யெங்கணும் கொட்டிய தென்னப்
    பரிதியைவடி கட்டிய தென்னச்
சில மானதல் வெள்ளி யுருக்கித்
    திருவி லங்கப் பாய்ச்சிய தென்னக்
கோல மாதர்கள் மைந்தர்கள் உளமும்
    கோதி லாவுயிர் யாவுமின் பெய்த
நில வானிடைத் தோன்றிய தண்ணொன்
    னிலவின் தோற்றமிங் கென்னென்று சொல்வேன்!

II

ஒளிமி குந்தஇவ் விரவில் எழுந்தேன்;
உம்பர் வானத் தமிழ்தெனக் கண்டேன்;
களிமி குந்தஇந் நிலவினற் காட்சி
காண்டொறும் உளம் கசிந்திடும் அம்மா!
அளிமி குந்தஇம் முழுமதி தானும்
அமிழ்தையோ இவண் நிலவெனக் கொட்டும்;
துளிகொள் நீர்சடைக் கடவுளர் முடிசேர்
சோதி வெண்மதித் தன்மையென் சொல்வேன்!

III

துன்ப மார்ந்ததிவ் வையகம் என்பார்
சோதிவானவன் நீதிகள் காணார்;
இன்ப மார்ந்ததிவ் வையகம் அம்மா!
வதி லார்சொலும் புன்மையென் சொல்வேன்!
புன்பு லால்உடல் மெய்யெனக் கொள்ளார்;
பூவில் நீரெனப் பூவினில் வாழ்வார்
அன்பும் உண்மையும் தர்மமும் கொண்டார்
அடைவ தென்றுநல் இன்பமே யன்றோ!

வர்ணனை

[“ராபர்ட் ஹெரிக்” என்னும் ஆங்கிலப்புலவர் ஒரு பெண்ணின் அழகை வியந்து கூறும்பொழுது, அவளது அதரம், பல் முதலியவற்றை முறையே பவளம், முத்து முதலியவற்றுடன் உவமித்துச் சில பாடல்கள் புனைந்துள்ளார். அவரது பாடல்களின் கருத்தைத் தழுவிப் பின்வரும பாடல்கள் தாய்க் கிழவி கூற்றாக அமைக்கப்பட்டுள்ளன.]

அதரம்

ஒருசிலர் என்பால் வந்தே உத்தமப் பவளந்தானும்
வருவதெங்கிருந்தோ? அஃது வளருவதெங்கே? யென்றார்;
ஒரு விரல் கொண்டு சுட்டிக் காட்டியே ஒப்பில்லாத
திருவினும் நல்லாள் என்றன் சேயிழை இதழில் என்றேன்.

பல்

நன்று நீர் உரைத்தீர் அம்ம! நலமிகு முத்து வேண்டிச்
சென்று சென்றலைந்தோம் தேடி, எங்குள? தியம்பு மென்றார்,
அன்றலர் கமலப் போதின் அழகினும் வதனமிக்க
என்றன் மகளைப் பற்கள் இலங்கிடப் பேசுகென்றேன்.

முகம்

மகிழ்மிக வுற்றோரும்—நல்ல கமலமா மலர் எங்குண்டு?
புகலுவீர் எங்கட்கென்றார்: பூமியை நோக்கி நின்ற
நிகரி லெம்மகளை நோக்கி, நீநிலம் நோக்கேல் என்றேன்
முகமலர் பிறரும் நோக்க, நிமிர்ந்தனள் முறுவல் பூத்தாள்.

கண்

வீரர்கட் குரித்தாய் மிக்க, மேன்மையும் ஒளியுந் தங்கி
சீரியல் தண்மை வெம்மை, திகழுமோர் வாள் எங்கென்றார் ?
கார்நிகர் குழலாள் என்றன் கண்மணி யனைய நங்கை [றேன்.
போர்மதன் தெய்வம் போல்வாள் கண்களே யெனப் புகன்

கல்யாண கீதங்கள்.

I

கல்யாண மாப்பிள்ளையைப் பார்த்துப் பெண் சொல்லுங் கேலி.

(பலமகுஜலோட்டி)—மெட்டு.

பல்லவி.

சாரகுண மாப்பிள்ளைக்குச்
சமானமினி யேது?

சரணம்.

வரிசைப்பந்தி வந்து குந்தி
வாரி வாரித் தொந்தி தனிலடைத்துத்
திருவாரொரு சந்தி (சார)

பெண்டுகள் சொல்லுக்குத் தொண்டு வேலைசெய்ய
பிரதிகோடியுண்டு மடிக்குள்ளே
பெப்பர்மெண்ட் கற்கண்டு (சார)

பக்கக் கடிகாரத்தில் தானே மணியடிக்க
பார்த்தாச்சரியப்படுவார் எட்டிமேல்
போய்த்தாவிக் கைதொடுவார் (சார)

ஜேப்புக்குள்ளே சோப்புக்கட்டி
திலுசிரண்டு பெட்டி கண்டேனே
செர்ரி ப்ளாசம் ஒட்டி (சார)

நல்ல சரிகை வெள்ளை வேட்டி
நன்றாய் மடித்துக் கூட்டி மேலே போட்டுக்
கொண்டார் துரைகள் பெட்டி வாங்கின (சார)

ரெண்டு ரவிக்கைகர் சிட்டி சுற்றத்தார்
பெண்டுகளுக்குங் காட்டி விட்டாரே
சண்டை கொஞ்சம் மூட்டி. (சாச)

II

மணப்பெண் சொல்லுங் கேலி.

(தக்கதக்கதேக்கி சுந்தரியான்ஜா)—மெட்டு

பல்லவி.

அத்தானுக்கு வந்தவைவபோகம் எத்தனையடி
பொத்தானைக் குடித்துணிக்குப் பூட்டத் தெரியாது (அத்)

சரணம்.

கழுத்துப்பட்டி யெடுத்துக் கட்டிக்கொள்ளச் சொன்னேனே
முழுத்துப்பட்டி யெடுத்து மூடிக்கொண்டார்
இழுத்துவரச் சொன்னேன் இந்தமனைத் திண்ணைமேலே
அழுத்தி விழிக்கிறாரே ஆந்தையைப்போலே (அத்)

கேலிகட்டிப் பேசமாட்டார் வாலிங்கெல்லாம் வீசமாட்டார்
காவிகட்டி மேய்த்தார் காட்டுக்குள்
வேலிகட்டியுந் திரிந்தார் மேவுநம்ம பெண்ணுக்கு
தாலிகட்டி யாச்சுதென்ற சந்தோஷம் பார் (அத்)

குலுக்கும் வயிற்றைப்பாரே குண்டோதரனைப்போலே
கொண்டவிரலைப்பாரே நண்டுக் கொடுக்குப்போலே
அலைக்கும் குடுமியைப்பார் அறுகம்புல் வேருப்போலே
அலங்கார மீசையைப்பார் ஆட்டுக்கடா கொம்புபோலே
இலக்கணம்பேசி நேந்து வழுக்கி விழுந்துமுடு
மலைக்கவி ஒன்றிரண்டு முழக்கினாரே ஓ ஓ (அத்)

III

மாப்பிள்ளை சோல் கேலிப்பாட்டு.

(அம்பலநடம்புரியுஞ் செம்பொன்மலர்ப்பாதனே)—மெட்டு.

பல்லவி.

போதும் உங்கள் பெண்ணுக்கினி
ஓதுமிலை யேது.

சரணங்கள்.

கெட்டில்வாய் டிக்காஷன் காப்பி வைக்கத் தெரியாது
சட்டமாய் ரவிக்கைவகை தைக்கத் தெரியாது
பொட்டுவைத்துக் கோலமது போடத் தெரியாது
பூட்டகமாய்ப் பாட்டொன்றுமே பாடத் தெரியாது
வேகும்போது காய்கறியின் பாகந் தெரியாது
வேறுவேறு கூட்டுச்செயும் யூகந் தெரியாது

அரும்பாட்டுச் சொல்லிவைக்க ராகந் தெரியாது
அம்மம்மா இப்பெண்ணுக்கும் போகங் கிடையாது
கெடிகாரத்தில் மணி பார்க்கத் தெரியாது
ரசங் குழம்பில் உப்பு சேர்க்கத் தெரியாது
கொட்டிக்காப்பிடிக்கான் வடி கட்டத் தெரியாது
விட்டில்மாக்கொண்டு போடும் பூவுந் தெரியாது
பட்டுச்சேலைநிறைசு கட்டிக்கொள்ளத் தெரியாது
பட்டணத்தில் பிறந்தும் படிக்க எழுதத் தெரியாது
பச்சரிசி புழுங்கலின் பாகந் தெரிந்து வடிக்கத் தெரியாது
மெச்சும்படி பாக்கும் வைத்து வெற்றிலைச் சுருள் மடிக்கத் தெரியாது

IV

(லைசயாரே அமாகு.. பியாரலகாயி ஜான்)—மெட்டு.

பல்லவி.

சொல்லவும் தெரியாது கல்யாணப் பெண்ணுக்கு
தோணுது வெட்கமே காணோமடக்கமே (சொ)

சரணங்கள்.

ஜன்னல் வழியே சதிராட்ட மாடையில்
அன்னியர் பார்க்கிறார் ஐயையோ ஜாடையில் (சொ)
காதுதான் கேளாதோ கதையை விரிக்கிறாள்
கூறு கொஞ்சமுமில்லை சும்மா சிரிக்கிறாள் (சொ)
குனிந்து நடப்பதில்லை கூட்டத்தில் வேடிக்கை
அனந்தங் கவனிப்பாள் அன்னத் தந்தன் வாடிக்கை (சொ)

சாபம். அ. முத்துசாமி கவிராயர்.

இந்திய நாடு

அறிவான் மிகுந்து பலநூல்கள் தந்த
அறிவோர் நிறைந்த திரு நாடே
அருளால் கனிந்த பரிவே மிகுந்த
அடியோர் நிறைந்த புகழ் நாடே
சிறியோர் பணிந்து பெரியோர் சிறந்த
ஜெகமே புகழ்ந்த உயர் நாடே
திருவே மலிந்து பவமே யொழிந்து
நிகழ்வால் விளங்கு சுய நாடே.
நம் இனிய பாரதம் வாழ்க.



ஸ்ரீ ஜீ. சுப்பிரமணிய ஐயர். "சுதேசமித்திரன்" அதிபர்.



ஸ்ரீ B. A. A. இராஜேந்திரம் பிள்ளை
"மஹாவிகடதூதன்" பத்திராதிபர்.

"மஹாவிகடதூதன்" 37-வருடங்களாக நடைபெற்றுக் கீர்த்தி சிறந்த பத்திரிகை. இவர் மகா அநுபவஞானி. இப்பொழுது இவருக்குப் பிராயம் 67.



ஸ்ரீ வி. நடராஜ ஐயர்

"லோகோபகாரி" பத்திராதிபர்.

இவரது இனிய தமிழ் நடைக்கு நிகராகத் தமிழுலகில் வேறு காண்பதரிது. இவர் 18—நூல்கள்போல் வெளியிட்டுள்ளார். இவரது தேசோபகாரம் மிகு பெரிது. இவரது நாளில், ராஜ்யத்திற்கு "சுதேசமித்திர"னும், விகடத்திற்கு "விகடதூத"னும், வேதாந்த ஸன்மார்க்க நிதிகட்கு "லோகோபகாரி"யுமாகப் பிரகாசித்தன.

மூன்றும் வால்யத்தின் முகவுரை

ஒரு நூலினுடைய சாராம்ஸத்தை — அதன் முகவுரையைப்படித்த மாத்திரத்தில் தானே தெரிந்துகொள்ளலாமாதலின், மற்ற விஷயங்களைப்பார்ப்பதற்கு முன்னதாக, இம்முகவுரையைக் கவனிக்குமாறு நமது வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

"அவனருளாலே - அவன் தாள் வணங்கி," ஆநந்த கதா கல்பக"த்தின் மூன்றும் வால்யத்திற்கு இப்பொழுது முகவுரை எழுதத் தொடங்குகின்றோம். நாம் இப்பிரபந்தத்தை இயற்ற முற்பட்டதின் காரணத்தையும், நமது உத்தமமான லக்ஷ்யத்தையும் முதலாவது இரண்டாவது வால்யங்களின் முகவுரையில் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். அந்த வால்யங்களைப் பெறுதோர்க்கும் உபயோகமாக, அம்முகவுரைகளின் சாராம்ஸ பாகங்களை இத்துடன் சேர்த்திருக்கின்றோம். இக்கிரந்தத்தின் மொத்தார்த்தமான கருத்து பிரபஞ்ச அநுபவ தரிசனமே. உலக நடவடிக்கைகளையும், மனித இயற்கைகளையும், ஆழ்ந்த ரகசியங்களையும், பட்டுத் தெளிந்த அநுபவ ஞானங்களையும் ஒருசேரத் திரட்டி, அவற்றைக் கதாமுகத்தாற் காட்டி, உலகமும், உலகத்து மாந்தர்களும், அவர்கள்தம் இயல்பும், குணங்களும், எதிர்காலத்து முடிவுகளும் இன்னவாறிருக்கின்றனவெனவிளக்கித் தேற்றவும் தெளியவும் வைப்பதே நம் உத்தேசம். பழமொன்றைக் கண்டவுடன் அதன் சுவை நமக்குப் புலனுவதுபோல, நூலகத்தே நாம் காணும் அநுபவங்களானது நமது பழய நாள் நினைவுகளைத் தட்டி எழுப்பி,

நமது சொந்தமான புண்களையும், பாடுகளையும் நமது ஞாபகத்திற்குக் கொண்டுவந்து விடுகின்றது. மறந்து விட்ட—மறைந்துவிட்ட பூர்வ சம்பவங்களை, நம் கண்முன்பு நிறுத்தி இன்பத்தையோ, எச்சரிக்கையையோ, மகிழ்வையோ, சாந்தத்தையோ, துணிகரத்தையோ, இனி நடந்துகொள்ளவேண்டிய விதத்தையோ நமக்கு அது விளக்கி, நம்மை நேரான பாதைக்கு—நாம் உய்யும் மார்க்கத்திற்குத் திருப்பி, அழைத்துச் செல்லுகின்றது. இவ்வாருக ஒரு முன் துணையை-உதவியை—பிரபஞ்ச அநுபவம் நமக்கு ஊட்டுகின்றது. இவ்வித அநுபவங்களைச் சேகரித்துக் கொடுப்பதே ஆநந்த குநா கல்பகத்தின் நோக்கம். மற்றபடி நாம் கதையை மட்டும் சொல்ல வரவில்லை.

* * *

பாலைப் பார்ப்பதோ பாத்திரத்தைப் பார்ப்பதோ" என்ற பழமொழி யொன்றுண்டு. இரண்டையும் பார்க்க வேண்டுமென்பதே நமது அபிப்பிராயம். பாலும் நன்ருயிருக்க வேண்டும். பாத்திரமும் சுத்தமாயிருக்க வேண்டும். சிலர் சட்டிகளை நன்ருய் அலம்பாமல் அதில் பாலை யூற்றி வைப்பர். அதனுல் பாலில் ஒருவிதமான துர்க்கந்த முண்டாகும். பாலும் கெட்டுவிடும். இதைப்போலவே எடுத்தாலும் அநுபவங்களும் ருசிகர முள்ளனவாய் இருக்க வேண்டும். அந்த அநுபவங்களைத் தன்னுள் கொண்டிருக்கும் பாத்திரமாகிய கதைகளும் அத்தியந்த ஸ்வாரஸ்ய முடையதாய் நிலவ வேண்டும். இவ்விருவகையிலும் நமது ஸக்திக்கு இயன்றவரையில் சிரமமெடுத்துக் கொண்டு நமது கடமையைப் பூர்த்தி செய்திருக்கின்ருேம்.

* * *

நாவல்கள், கதைகள் இயற்றுதல் பிறப்போடும் சேர்ந்த ஓர் அபூர்வ அம்ஸம் என்று நினைக்கிருேம். அந்த அம்ஸம் பூர்ணமாய் வாய்க்கப் பெற்றவர்கள் எற்கெனவே மனப்பாடம் செய்து வைத்திருந்து எழுதுவதுபோன்று சரமாரியாக வரைந்து 'தயார்' செய்து விடுகின்ருர்கள். இந்தப் பக்குவ பரிபூரணம் எங்கோ அரிதாப் அமைகின்றது. பாதி அம்ஸம் வாய்க்கப் பெற்றவர்கள் வெகு சிரமத்துடன் தங்களின் காரியத்தைப் பூர்த்திபடுத்துகின்ருர்கள். ஒரு அம்ஸமும் வாய்க்கப்பெருத நம்போன்ருர் படும் பாடு பரமனே யறிவார். நமக்குத் தெரிந்ததும் மிகச் சொற்பம். இந்தச் சொற்பத்தைக்கொண்டு குழந்தைகள் விளையாடும் மண் வீடு கட்டலாமே யன்றி, பெரியோர்கள் வசிக்கத் தகுந்த மாளிகைகளைக் கட்ட—நிர்மாணிக்க—முடியாது. முடியாதெனினும், நாம் முடித்திருப்பது அவ்வொரு தனிமுதல்வனின் அருள் கொண்டுதாம்.

* * *

இனி, கற்பனைசக்தி என்பது தன்னில் தானே உதயமாகப் பெறும் ஒரு தெய்விக வரன். மின்னல் மின்னி மறைவதுபோன்று

ஒவ்வோர் காலத்தில் அந்த ஸக்தி திடீரெனத் தன்னில் தானே ஆவிர்ப்பவித்து—தோன்றி—மின்னி மறைந்திடும். அது மறைதற்கு முன்னர், அந்த மின்னலின் வெளிச்சத்தில் அக்கற்பனு நிர்மாண உருவினை அந்த க்ஷணைப்போதில்தானே பூர்த்தியாய்க் கண்டு கொண்டு, தன்னை அதற்கு ஏற்றவண்ணம் தயாரித்துக்கொண்டு விடும் ஸக்தித்துவப் பிரதாபம் இயற்கையின் வலிகொண்டே அமையப்பெறுதல் வேண்டும். இவ்வாறு அமைதலானது ஒரு உருவத்தினைப் பொட்டகிராப் படம் பிடித்துக்கொள்வதற்குச் சமமாகும். இங்ஙனம் அமைந்ததை ஆதாரமாகக்கொண்டு நூல் தயாரித்துப் பூர்த்தி படுத்துகையானது, பொட்டகிராப் படம் படுத்த பின்னர், அதனைப் பலவகைத் திராவகங்கள் கொண்டு சுத்திசெய்து அவ்வுருவினைக் காகிதத்திற் பதியவைத்துச் சீர்படுத்தி, அதற்கான அழகிய சித்திர அட்டையில் ஒட்டி, அதற்குக் கண்ணாடியிட்டுப் பார்வைப்படுத்துதல் போன்றதாம்.

***

ஒரு நாவல் எழுதுதற்கு எத்துணையோ அபாரமான யோசனைகள் வேண்டும். கற்பனு நயம் மிகுந்து பரிமளிக்கவேண்டும். இன்னுமொரு நாவல் எழுதி விடுக்காரோ வென விருப்புடன் எதிர்நோக்கி இயம்பும்வாறு இருக்கவேண்டும். பன்னுட்களின் யோசனையில் அது ஒரு உருவம் பெறவேண்டும். அது பூத்துக் காய்த்துக் கனியவேண்டும். ஒரு நாவல் எழுத ஒரு வருஷமும் ஆகலாம். பல வருஷங்களும் செல்லலாம். மனது பொருந்தி விஷயங்களும் ஒன்று கூடிவிட்டால், இரவு பகல் கண் விழித்து எழுதி வாரத்திலும் முடிக்கலாம். மாதத்திலும் பூர்த்தி படுத்தலாம். அந்த விஷயம் மனம் ஒன்றுகூடிப் பொருந்துவதைப் பொறுத்துளது. அது நமது செயலல்ல. தெய்வத்தின் செயல்; "ஆகு நாளின்" கூறுபாடு. மனதைக் கட்டாயப் படுத்திக் கொண்டு நாவல் எழுத முயன்றால், அந்த நாவல் சுவை ததும்பியதாக ஒளிர்வதில்லை. நமது மனமே நம்மை நாவல் ஒன்று இயற்றும்படி நமக்குக் கட்டளையிட்டு, அதற்கேற்ற விஷயங்களைச் சரமாரியாக வாரிவாரிக் கொடுத்துக்கொண்டே செல்லவேண்டும். தன்னை யறியாத ஒரு வித ஆவேசத்துடனும் இக்கிரியை நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் அந்த நாவல் அற்புதமான அமைப்பில் உருக்கொண்டு உயர்வுபெற்று உன்னதம் கொள்ளும். அதற்கான காலம் வந்தால்தான் அது திருத்தமாய், அழகாய்ப் பொருந்தி முடியும்.

***

அநேக வருடங்களுக்கு முன்பு—மாதங்கட்கு முன்பு—மனதில் தோற்றிய ஒரு நாவலின் நிர்மாண உருவினைச் சதாகாலமும் சிந்தித்து, அதன் ஆரம்பத்தலைப்புக்கு எந்த பதத்தைப் பிரயோ

கிருந்து எவ்வழியில் தொடங்குவதென்றும், பின்னைய தொடர்புக ளெல்லாம் முன்னையதற்குப் பொருந்தி ஒத்து வருகின்றனவா வென்றும் பன்னுள் ஆராய்ந்து அலசிப் பார்த்து, கனவும் நினைவும் அதுவேயாகி, ஒரு நாவலாசிரியர் அதற்காகப் படும்பாட்டை, அவ ரையொத்த மற்றொரு பக்குவியே—ஆசிரியரே—அறியவல்லார். நெடுநாளாக நெஞ்சிலுள்ள அக்கதா சிந்தனைகள் ஓர் உருவம் பெற் றுப் பொருத்தமாய்ப் பரிணமிக்கும் தருணமானது இன்ன பொழு தில் தான் நேருமென்று வரையறுத்தற் கில்லை. எப்போதோ நினையாத ஓர் சந்தர்ப்பத்தில்—அது வழி நடக்கையிலோ, வாகன மூர்கையிலோ, வீட்டிலோ, புஸ்தக மொன்றில் சிந்தை பாய்ந்தி ருக்கையிலோ, அல்லது விசேஷக் காட்சிச் சம்பவமொன்றிலோ— கூடுமானதாகிப் பூர்த்திகொள்கின்றது—நிறைவேறுகின்றது.

***

பின்னர் அதனை—அகத்தே ஆவியாக உள்ள அதனை—புறத்தே காகிதத்தில் வரைந்திட முற்பட்டு, அதனைப் பலவித அத்தியாயங் களால் வகுத்துச் சுலபமாக்கிக்கொண்டு தொடர்பாக எழுதிச் சென்று முடித்த பின்னர், அந்த அமைப்பு பொருத்த முடையது தானேவென்ற ஐயமெழாநிற்ப, அது கருதி மீண்டும் பன்முறை தன்னுல் ஆராய்ந்து, பலபல திருத்தி, புதியன புகுத்தி, பாங்கு படுத்தும் பான்மையில், கிரந்தகர்த்தா தம் அறிவு நுட்பங்களையும், அநுபவ ஆற்றலையும்,தமது ஆத்மஸக்தியையும் தீவிரகதியுடன் முழு வேகத்தோடும் பிரயோகித்துச்சென்று,தமது ஸக்தி தத்துவங்களை யெல்லாம் அப்படியப்படியே வாரிக்கொட்டி, பிரஸவ வேதனைக் குச் சமமான பாடுகளை யேற்றுப் பூரணப்படுத்தி, நூல் என்னும் குழந்தையை ஈன்றிடுங் காட்சி எவர் மனத்தையும் உருகவைத்திடுவ தாகும். எனவே, நாவல்கள் எழுதுதல் சிலர் நினைப்பதுபோல் அத் துணைச் சுலபமன்று. மகா கஷ்டசாத்தியமான காரியம். இந்தப் பாடுகளை யெல்லாம் அந்த நாவல்களைப் பெறும் வாசகர்கள் உணர்ந் துகொண்டு, அதன் பின்னர் படிக்கத் தொடங்குவார்களாயின், கிரந்த கர்த்தாவினிடத்து அன்பும் ஆதரவுமாகிப் பரிமளிப்பார்கள்.

***

நமது தமிழ் நாட்டில் தற்போது நாவல்கள் வாசிப்போர் பெருகி வருகின்றனர். நாவல்களின் வாசிப்பு அறிவைக் கூர்மைப் படுத்தி விடுகின்றது. அந்த நாவலை இயற்றிய ஆசிரியரது நெடு நாளைய அநுபவங்களை மிகு எளிதில் வாசகர்கள் கிரகித்துக்கொள் ளவும் வாய்க்கின்றது. சொற்பமே படித்தவர்களும் கூட, நாவல் கள் வாசிக்கும் பழக்க மேலீட்டினுல், மிகு புத்திமான்களாகித் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். நன்னூல், திருக்குறள் ஆதிய நூல் கள் பிறரிடத்துப் பாடங் கேட்டே தெளிய வேண்டியவைகள்.

அதுதான் முறையும் கிரமமுமாகும். நாவல்களோ பிறர் உதவியின்றித் தாமே படித்து அறிவில் தேர்தற்கேற்றவை. மனிதனுடைய உள்ளத்தினைச் சென்று தூண்டி விடுதற்குக் கவிதைகட்குப் பின்னர் நாவல்களே நல்ல வேலையைச் செய்கின்றன. படிப்பவர் இவ்விதமாக வெல்லாம் பயனெய்துமாறு அதற்கேற்ற ரீதியில் கற்பனை நயம் மிகுத்தோங்க அமைத்து நாவல்களை நிர்மாணித்தல் அதி உத்தமமான வித்தியா தானமாகும்.

***

இவ்விதமான முறையில் நாம் நாவல்களை எழுதிச் சென்றிருக்கின்றோமா வென்பதை வாசகர்கள் தான் நமக்குக் கூறவேண்டும். ஏனெனில் எழுதினர்க்கு அதிலுள்ள மாசுகள் புலப்படா. பிறர்க்கே அது தெரியவரும். பிரதானமாக மூன்று விஷயங்களை மட்டும் நாம் கவனித்து வந்திருக்கிறோம். ஒன்று நாவல்களின் கற்பனைநயம், இரண்டாவதாக காதலின் உயர்வு, மூன்றாவது அநுபவத்தின் மாட்சி.

***

கற்பனைநயம் நம் இதயத்தின்கண் தன்னில் தானே புலனுவதென்று மேலே விவரித்துள்ளோம். இக்கற்பனை சக்தியானது பஞ்சகோசங்களில் மிகு பிராதான்ய முடையதான மனோமய கோசத்துள் இயங்கப் பெறுவதாகும். அதனைக் குறித்து இங்கு விளக்கப்புகின், விஷயம் வெகுதூரத்திற்குச் சென்று விடுமாதலின், விரிவஞ்சி,. அதைப் பிரத்தியேகமாய் இந்நூடன் இம்முகவுரையின் முதலாவது அநுபந்தமாகச் சேர்த்திருக்கிறோம். இனி, காதலின் உயர்வைக்குறித்து ஒரு படிப்பினையை நாம் இங்கு உதாஹரிக்க வற்புறுத்தப்படுகின்றோம். காதல் தெய்வ அருள்கொண்டு விளங்குவது. காதல் ஒரு தெய்வீக வஸ்து. அக்காதலுக்குத் தெய்வங்களெல்லாம் துணை நின்று உதவும். காதல் எம்மதத்திற்கும் சம்மதமான விஷயம். காதல்—கடவுள் தாமே மனமுவந்து அளித்த கொடை. காதல் மஹா பரிசுத்தமான—வணக்கத்திற்குப் பாத்திரமான பொருள். காதல்—ஒரு ஜோதி. ஸ்ரீ கிருஷ்ணபிரானிடத்துக் கோபிகைகளின் காதல், கண்ணனிடத்து ருக்மணியின் காதல், வீதிமார்க்கம் வந்த ரகுநந்தனரிடத்துச் சீதை கொண்ட காதல், நளனிடத்துத் தமயந்தியின் காதல், அரிச்சந்திரனிடத்துச் சந்திரமதிக்கிருந்த காதல்—துஷ்யந்தனிடத்துச் சகுந்தலையின் காதல்—எத்துணைப் பிரபாவமுடையது?—தெய்வீக முள்ளது?—என்பதைஇங்கு உற்று நோக்குக. காதலின்றிப் பிரபஞ்சமே யில்லை. காதலின்றித் தூய இல்வாழ்க்கை யில்லை. காதலின்றி மனோரம்மிய மில்லை. காதலின்றி சந்தான தர்மன மில்லை. காதலின்றி எவ்வித மங்களமு மில்லை. காதலின் காட்சி யற்றுவிடின்—ஞாலமே சூன்யமாம். இத்துணைத் தெய்

மிக மேன்மையமைந்த காதல் இல்வாழ்க்கையில் எத்துணை அவசியக முடைத்தென்பதையும், அதன் பிரதானத்வத்தையும் இயன்ற வரையில் எடுத்துக்காட்டுதல் இந்நூலின் மற்றோர் அமிசமாகும்.

***

இதன்றி, வேறொரு ஆபத்தான விஷயமுமுண்டு. இல்வாழ்க்கைக்கு ஸதிபதிகள் இருவரும் பிரதான அங்கங்களாவார். அவர்கள் தம்மிடையே காதற்பெருக்கு மிகுந்து ததும்பினால்தான் அவர்களின் இல்வாழ்க்கையும் நெடுங்காலம் நின்று நிலவும். அங்ஙனமின்றி ஸதிபதிக ளிருவரில் எவருக்கேனும் காதல்பற்று குன்றத் தலைப்படின், வாழ்க்கையில் அன்னார் ஒருவித வெறுப்பு மேற்கொண்டு துறவறத்தைத் தொட்டுக் கொள்ளப் பார்க்கின்றார்கள். அதனால் இல்வாழ்க்கை உடைபட்டு, பரஸ்பரம் ஒருவரை யொருவர் தம் ஜீவதுணையென நம்பியிருந்தது விலகி, ஸதிபதிகளுக்குள் பிளவு உண்டாகி, பெண் தன் பிராணாதாரமான பதியை இழந்து விடவோ, அல்லது கணவன் தன் இன்பப் பேற்றாகவும், ஆருயிர்த் துணையாகவும் கருதிய தன் மனைவியை இழந்துவிடவோ, பிரிய நேர்ந்து போகின்றது. இதனினும் படு பாழ் பாலைவனம்—துர்க்கதி, ஒருவனுக்கு—ஒரு பெண்ணுக்கு வேறென்ன வேண்டும்? பட்டறிந்தார் தான் அதன் பாடுகளை யுணரவல்லார். காதலும் தெய்வபக்தியும் ஸமத்வமாகக் கலக்கப்பட்டு தம்பதிகளிடமே அது பரிமளிக்க வேண்டும். தெய்வபக்தி குறைந்து காதல் மிகுந்தோங்குவது காதலுக்குச் சிறப்புடையதாகாது. அது நீசத்துவமான காமத்திற்சென்று விநாச ஹேதுவாக முடியும். அதனால் இல்லறமும் தன் தூய—பரிசுத்தமான—நிலையை எய்துதற்குத் தவறிவிடும். அவ்வில்லறமும் நல்லறமாய்த் திகழ்ந்திடாது. இனி, காதல் குறைந்து தெய்வபக்தி முற்றிவிட்ட இடத்தும்—வாழ்க்கையில் அது வெறுப்பு தோன்றச் செய்துவிட, அதனாலும் இல்லறச் சகடம் (சகடம்=வண்டி) உடைந்து பாழ்பட்டு விடும். தன்னை நம்பிய பதியையோ—மனைவியையோ கைவிட்டு—ஏமாறவிடுத்து, விலகுமாறு செய்து, குடும்பத்தின் அழகைக் குலைத்து வெற்றுவீடாக்கிவிடும். கிளி பறந்துவிட்ட பின்பு கூடு இருந்து ஆவதென்ன? இது மிகு பயங்கரமானதோர் சம்பவம்! இங்ஙனமின்றி, காதலும் ஈச்வரபக்தியும் ஒரே எடை கொண்டதாய் ஸமத்வ நிறை யுள்ளதாய்க் கலந்து நின்றாற்றான் இல்வாழ்க்கையும் உயிர்கொண்டு நிலவ இயலும்.

***

தெய்வபக்தி முற்றிவிடக் கூடாதென்பது நமது நோக்கமன்று. தெய்வ வழிபாடும், அதிற் பக்குவப்பட்டுப் பரிணமித்துப் புனிதநிலை யுறுதலும் பரமோத்க்ருஷ்டமே. பிறவிப்பிணி தொலைக்கவே இம்மானிடச் சடலத்தை நாம் அருமையாய்ப் பெற்றது.

அம்முற்றிய தெய்வபக்தியினூடேகூடக் காதலும் கலந்து நின்று, ஒருவரை யொருவர் பிரிந்து தபித்துச் சோரும்படி கைவிட்டு விடாமல், தம்பதிகள் இருவரும் அன்னியோன்யமாகவே ஒருமித்து நின்று, தங்களின் முற்றிய தெய்வபக்தியால் தங்களை மாணிக்கத் தோற்றமாகவும் இல்லறத்தை ஒரு ஜோதிப் பிரவாகமாகவும் உயர்த்திப் புனிதப்படுத்த வேண்டுமென்பதே நாம் இங்கு கோருவதும் வற்புறுத்துவதுமாம். இந்த உத்தமமான லக்ஷ்யத்துடனும், ஸதிபதிகளின் ஹிருதயகமலத்திடை காதலின் உருவை அடிக்கடி தோற்ற வைத்து, அதில் அவர்களுக்குப் பற்றுதலும், ருசிகயமும் பிறக்கச்செய்து, இல்லறத்தினின்றும் அப்பால் தாண்டாத நிலையில், துறவறத்தை எட்டிப் பாராத விதமாக அவர்களைக் காதற்பாசத்தால் இழுத்துப் பிடித்து, அவர்கள் ஒருமித்திருந்து இல்லறம் வளர்த்துச் செல்வமக்கட்பேறு திவ்ய ஸத்கீர்த்தியைத் தாங்கி ஓங்கும்படி செய்தற் பொருட்டாகவே, இக்கதாபிரபந்தத்தினூடே நெடுக காதற் சார்பான ருசிகரத்தையும், கௌரவமான காதலின் அழகிய தோற்றத்தையும், அதன் சுவை நயத்தையும், உண்மைக் காதல் எப்போதும் அதன் நிறைவேற்றத்துக்கு நம்பிக்கை யற்றுத் தவித்துக் கிடந்து புலம்புவதையும், பின் ஈசுவர நியதியால் அக்காதல்—தன்னிலே வெற்றிகொள்ளும் மாண்பையும், அதன் தெய்விகத் தோற்றத்தையும், அதன் இன்பவாரிதியையும், இன்னும் பல்வகைத்தாய மனக்கவர்ச்சி மிகுந்த அமிஸங்களையும், பலவகைக் குறிப்புகளாகத் தொகுத்து, ஆங்காங்கு சந்தர்ப்பாநுசாரமாய் உதாஹரித்துக்கொண்டு சென்றிருக்கின்றோம். நமது எண்ணமெல்லாம்—பிரிவினையின்றி, துறவுநிலை நாடாது, காதலும் தெய்வபக்தியும் கலந்து நின்று இல்லறம் சிதைவுபடாமல் பரிமளிக்க வேண்டுமென்பதுதான். இதுவே காதலின் அம்ஸத்தை இந்நூலிற் கலந்ததில் நாம் கொண்ட லக்ஷ்யம்—நோக்கம்.

***


இனி, மூன்றாவதாகிய அநுபவத்தின் மாட்சியைக் குறித்து விவரிக்க எவர்தாம்? எவ்வளவு கூறினும் பொருந்தும். எத்தனைப் பக்கங்களாயினும் எழுதலாம். அநுபவம் ருசிப்பதுபோன்று மற்றெதுவும் ருசிக்காது. எந்த விஷயத்தையும் அநுபவத்தோடுங் கலந்துகூறினால் தான் மனதில் ஆழமாகச் சென்று பதியும்—விவரமாகவும் தெரியும். அதற்காகப் பிரத்தியேகமாய் இம்முகவுரையின் இரண்டாவது அநுபந்தத்தில்—“அநுபவத்தின் விலை” யென்று நாம் எழுதியிருக்கும் வியாக்கியானத்தை நமது அன்பர்கள் உன்னிப்பாய்க் கவனித்துப் பார்க்குமாறு கோருகிறோம்.

***

இம்மூன்றும் வால்யத்துள் மூன்று பிரிவுகள் அடங்கியுள்

ளை, மூன்று நாவல்களின் பகுதி. மற்றது கதைகளின் பகுதி. மூன்றுவது பல விஷயங்கள் சேர்ந்த தொகுதி. இம்மூன்றும் வால்யத்துடன் நான்காம் வால்யத்தையும் சேர்த்து ஏககாலத்தில் வெளியிடுவதென்று நமது அபேக்ஷித்தோம். அதற்கேற்ப, கதைகள் அடங்கியதாக 100—பக்கங்களும், அன்றன்றைய விஷயங்களிலும் சம்பவங்களிலும் எதிர்படும் அநுபவக் காட்சிகளை ஒன்று சேர்த்துத் துண்டு துணுக்குகளாக உருவாக்கப் பெற்ற அநுபவ ஒளித்திரள்களான "பிரபஞ்சவிலாஸம்" ஒரு 500—குறிப்புகள் போலவும், இன்னும் "விகடமாமா"வின் விநோதங்கள் ஆகியனவும் அச்சிட்டு முடிந்துவிட்டன. இனி நான்காம் வால்யத்திற்கு நாவல்களின் பகுதியும், நாடகங்களின் பகுதியுமே அச்சிடவேண்டியவை. அதற்கு ஒரு வருடம்போலக் குறைந்த பக்ஷம் செல்லும். அதுவரை பொறுத்திருப்பதைவிட இப்பொழுது மூன்றுவது வால்யத்தை வெளியிட்டு விடுவது உத்தமமெனத் தோன்றியதால், அவ்விதமே செய்திருக்கின்றோம். மூன்றும் வால்யத்துள் காணப்பெறாத பகுதிகள் நான்காம் வால்யத்தில் அடங்கியுள்ளன. அது வெளிவருவதற்குச் சரியாக ஒரு வருஷ உழைப்பேனும் வேண்டியிருக்கும்.

இம்முறை கதாமிசத்தை யொட்டிச் சித்திரப்படங்களும் சேர்த்திருக்கின்றோம். இனி வெளிவரும் வால்யங்களிலும் இந்த அம்சம் காணப்படும். ஆநந்தகநாகல்பகம் முதலாவது வால்யம் மிகப் பெரிய நாலாதலின் அதனை ஐந்து பகுதிகளாகச் சித்திரப் படங்களுடனும் அச்சிட்டு பகுதி ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலை வைத்து வெளியிட்டு விடுகிறதென்றும் தீர்மானித்திருக்கிறோம். விரைவில் அச்சிடப்படும். **18**- வால்யங்களில், மூன்று வால்யங்கள் பிரசுரமாகி விட்டன. இனி, பாக்கியுள்ள **15**-வால்யங்களையும் எழுதி முடிப்பதற்கான ஸக்தி தத்துவத்தையும், துணையையும் நமக்கு அருள் புரிந்து, அதற்கு ஆதாரமாக—பின்பலமாக—தூண்டுகோலாக—நம்மைச் சூழ்ந்து நிற்போரையும், நமது சிநேக ஸமூகங்களையும் சுகஜீவிகளாக இருக்கவைத்துக் காக்குமாறு கடவுளைப் பிரார்த்திப்பதுடன், அன்பர்களின் ஆசியையும், ஆதரவையும் நாடி நிற்கின்றோம். சர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம் எல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுபம்.



ஸ்ரீரங்க நிலயம்
ஸ்ரீரங்கம். 6-3-1922

"பிராஜாநுகூலன்"—பத்திராதிபர்.

பிரஜாநுகூலன்

விசேஷப் பதிப்பு

கமலம்-18] திரிச்சி, மே மீ 1922 [இதழ்-3

பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் ஒவ்வொரு பெண்ணும் கற்பு என்றால் இன்னதென்பதை முதலில் செவ்வனே தெரிந்துகொள்ள வேண்டும்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு—ஆகிய இவற்றின் விவரங்களையும், அதன் அர்த்தங்களையும் அறிந்துகொண்டு, அடக்கமான குணமும், கடவுளிடத்தில் பக்தியும், பெரியோர்களிடத்தில் விசுவாசமும் உள்ளவர்களா யிருக்கவேண்டும்.

பெண்மணியே! நீ பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலம் கொஞ்சம் தான். உன் உபாத்தியாயனியை நீ பெருமைப்படுத்தி, அந்த அம்மாள் உனக்குக் கற்பிக்கும் பாடங்களை நன்றாக மனதில் வாங்கிக் கொள். நீ எவ்வளவுக்கு நன்றாக வாசிக்கிறாயோ, அவ்வளவுக்கும் மேலான பதவியில் இருப்பாய். உனக்கு உன் படிப்பு தான் பெரிய ஆஸ்தி. அதுதான் உனக்கு மேன்மையான சிநேகிதியாக இருக்கும்.

இப்போது உனக்கு ஒரு கவலையுமில்லை. இந்த அருமையான உனது பால்ய காலம் எவ்வளவோ அதிகமான விலையுள்ளது.

இப்பொழுது எவ்வளவு கஷ்டப்பட்டு ஒவ்வொன்றையும்கற்றுக்கொள்ளுகிறாயோ அவ்வளவும் பின்னுக்கு உனக்கு நல்லது. பாடுபட்டால் பலனுண்டு.

கற்பு

ஒவ்வொரு சிறு பெண்ணும் தான் கற்பு உடையவளாக, பதிவிரதையாக, இருக்க ஆசை கொள்ளவேண்டும். சாவித்திரி, சீதை, நளாயினி, தமயந்தி, திரௌபதை, சகுந்தலை, சந்திரமதி இவர்களெல்லாம் மகா பதிவிரதைகள். அவர்களைப்போல நல்ல பேர் எடுக்கவேண்டும். கற்பு என்றால் அதற்கு அருத்தம்இன்னதென்றுதெரிந்துகொள்ள வேண்டும்.

கணவன் சொல்லைக் கடவாமல் நடந்து, தன்னையும், தனது மானத்தையும் காத்துக் கொள்ளுதலுக்குக் கற்பு என்று பெயர். கற்பின் அழகே அழகு! தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்வதில் உலகத்து சோதனைகளை யெல்லாம் சகிக்க வேண்டும். உயிர்

போனாலும் கற்பை இழக்கக்கூடாது. துவக்கமும் முடிவும் இல்லாத கடவுள் முதல் தெய்வமாவார். அவருக்குப் பிறகு ஒரு பெண்ணுக்கு சகலமும் அவளுடைய கணவன்தான். கற்பு என்ற பதத்திற்கு உள்ள மகிமையை உள்ளபடி உணர்ந்து கற்புக்கரசியாய் விளங்க வேண்டும். கற்புநிலையே சிங்காரம்.

அரைக்காசிற்கு அழிந்திட்ட கற்பு—ஆயிரம் [பு.
மரக்காற் பொன் கொடுத்தாலும் வருமோ செப்

அச்சம்

பெண்களுக்கு நான்கு குணங்கள் இருக்கவேண்டும். அதாவது அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு. இந்த நான்கு வார்த்தைகளையும் மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். மற்ற பொன் வெள்ளி நகைகளை விட, மேலே சொல்லிய நான்கும் சிறந்த பிரகாசமுள்ள நகைகளாகும். இந்த நகைகள்தான் ஒரு பெண்ணுக்கு உண்மையான அலங்காரத்தையும், உலக வாழ்வில் ஸதா சந்தோஷத்தையும் கொடுக்கும்.

அச்சம் என்பதற்கு என்ன அருத்தமென்றால், உலகத்தின் பழிப்புக்கு அஞ்சு

தல்; அன்னிய புருஷர்களைக் கண்டால் பயந்த தன்மை யுடையவளாய் விலகி நிற்றல் என்று அர்த்தமாகும். நமது வீட்டுக்குப் புதியமனிதர் ஒருவர் வருகிறார். அவரை பயந்த தன்மையுடன் தூர நின்று யார், எங்கு வந்த தென்று விசாரிக்கிறோம். இப்படிப் பயந்த தன்மையை உணர்த்திக் கொள்வது பெண் உருவுக்கே ஒருவித சுந்தரத்தைக் கொடுக்கிறது. இதுவானது பெண்களுக்கு ஒரு அழகை, ஒருவித மரியாதையை உண்டு பண்ணும். அவ்வளவே யன்றி, மனோ தைரியத்தை விட்டு விட்டுப் பயப்படுதல் என்று இங்கு அர்த்தமாகாது. ஆபத்தான காலங்களில் தைரியத்தை விடக்கூடாது. அச்சம் என்பதற்கு இங்கு நாம் கௌரவமான அர்த்தம் கொண்டு பெண்களின் நான்கு நகைகளில் அதை முதலாவதாகக் கருதவேண்டும்.

மடம்

முன் சொன்ன நான்கு குணங்களிலே இரண்டாவது மடம் என்பதாகும். மடம் என்றால் பேதமை என்றும் சொல்லலாம். "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்றார் ஔவையார். பேதமை என்றால் கடின

மான மனம் கொள்ளாமல், மெல்லியதான மனமும், பிறர் கஷ்டம் நோக்கி உருகுகிற நெஞ்சமும் கொண்டிருப்பது என்று அருத்தம். இந்த மெல்லிய சுபாவம் பெண்களுக்கு ஒருதெய்வீகத்தோற்றத்தை உண்டு பண்ணுகிறது. யாவரிடத்தும் அன்பும் உருக்கமும் உள்ளவர்களாக அவர்களை ஆக்குவிக்கிறது.

மடம் என்பதற்குச் சிறப்பான அருத்தமாவது:—கல்வி அறிவு பெற்றும், கணவன் முன் அறியாதவள்போல இருந்து, கர்வமில்லாதவளாக நடந்து கொள்வதாகும். சகலமும் தனக்குத் தெரிந்திருந்தாலும், தனது புருஷனுக்கு மேற்பட்டவளாகத் தன்னைக் காண்பித்துக் கொள்ளாமல், அடக்கமும் மரியாதையுமாய் இருந்து, தன்னுடைய ஆலோசனையைத் தனது பர்த்தா விரும்புகிறபோது அவருக்கு உதவி செய்கிற உத்தமகுண முள்ளவளாய் நடந்து கொள்வதாகும். இப்படியாக மடம்—அதாவது பேதமைத் தன்மையுடன் கூடியவளாய் நடந்துகொள்வது பெண்களுக்கே ஒருவிதமான அழகை உண்டு பண்ணும்.

அச்சம், மடம், இவைகளுக்குப் பிறகு மூன்றாவது குணம் நாணம் ஆகும். நாணம்

—என்ற குணம் பெண்களுக்கு ஒரு அருமையான ஆபரணமாகும். பெண்கள் பிறந்தபோதே அவர்களோடுகூட நாணமும் பிறந்ததாகும். நாணம் கண்களில் புலப்படும். செய்கையிலும் தோன்றும். தோற்றத்திலும் காணப்படும். வணங்கி நடந்து கொள்ளவும் செய்கிறது. பெரியோர்களுடன் பேசுகையில் நாணத்துடன் பேசுகிறோம். அப்பொழுது நாணமானது பெரியோர்களிடம் மதிப்பும் மரியாதையும்கொள்ளும்படி நம்மைத் தூண்டுகிறது. நாணம் பெரிதேயொழிய உயிர் பெரிதல்ல. இந்த நாணமே கற்புக்கு முதற்காவல். மற்ற மூன்று குணங்களும் துணைக் காவல்களாம்.

நாணம்

நாணம்—என்றால், வெட்கப்படுதல் என்று அருத்தம். இதுதான் பெண்களுக்கு சிறப்பை யுண்டுபண்ணுவதாகும். வெட்கப்படுகிற தன்மை யுடையவளாய், அப்படி வெட்கப்படுகிறதை தன்னுடைய செயல்கள் ஒவ்வொன்றிலும் புலப்படுத்திக் கொண்டு, பெண்தன்மைக்கே ஒருவித உயர்வை உண்டாக்குவிக்கிற குணத்துக்குத் தான் நாணம் என்று சொல்லப்படுகிறது.

இந்த நாணம் பெண்கள் அணிந்துகொள்ளவேண்டிய மூன்றாவது நகையாகும். முக்கியமான முதல் நகையு மாகும்.

பயிர்ப்பு

பெண்கள் உலகத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அதிலும் ஆண் பிள்ளைகளிடம் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அவர்களிடம் அதிகமாக நெருங்கக் கூடாது. நான்காவது குணம் பயிர்ப்பு ஆகும்.

பயிர்ப்பு—என்றால், அயலாரது சொல்லிலும், பழக்கத்திலும் அருவருத்தலாகும். அன்னியர்களோடும், பழக்கமற்ற புதியவர்களோடும் பேசவே பழகவோ அருவருத்து, அப்படிப் பேசவும் வார்த்தையாடவும் நேர்ந்த காலத்தில் மனங்கூசுதல்; அன்னிய புருஷர்களின் வஸ்திரமோ எதுவோ தன்மேல் பட்டால் அருவருத்து மயிர்க்கூச்செறிதல்; பிறருடன் பேசுவதற்குக் கூச்சப்படுதல். இப்படிக் கூச்சப்பட்டு நிற்பதானது அவர்களின் கற்புக்கு ஒரு காவலாயும், பெண் தன்மைக்கே ஒரு அலங்காரமாகவும் இருந்து சிறப்பு தரும். இவ்விதமாகக் கூச்

சப்பட்டு அருவருத்தற்கே பயிர்ப்பு என்று சொல்லப்படும். யாரோ ஒரு புதுமனிதர் நமது வீட்டுக்கு வருகிறார். என்னவோ பேசுகிறார், கேட்கிறார். நாம் அவர்களுடன் பேசப் பின்னடைந்து—'அம்மா! யாரோ வந்திருக்கிறார்கள், நீ போய் யாதெனக் கேள்'—என்று தாயாரிடம் கூறுகிறோம். இப்படி அருவெறுத்தலானது பயிர்ப்பின் குணமாகும்.

முதலில் கற்புடையவளா யிருக்கவேண்டும். அக்கற்பைக் காத்துக்கொள்வதற்கு, கற்புக்குக் காவலாக நின்று சிறப்பு செய்விக்கிற அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு—என்கிற நான்கு குணங்களையும் கொண்டவளா யிருக்கவேண்டும்.

இந்த நான்கு குணங்களும்
கற்பு நிலைக்கு நான்கு காவல்களாம்.

இந்நான்கு குணங்களையும் பொன்போல் போற்று. அடிக்கடி சிரிக்காதே. பெரியவர்கள் உன்னைக் கோபித்தாலும் திட்டினாலும் பதில் பேசாதே. எல்லோரும் நல்ல

பெண் என்று பிரியத்தோடு உன்னைச் சொல்லும்படி நீ நல்ல பெயர் எடுக்கவேண்டும். உன்னைக் கண்டவர்கள் வியந்து உன் குணங்களை அவர்களும் பின்பற்றும்படியாக நீ நடந்துகொள்.

ஏழு பருவங்கள்

1. ஐந்து வயதுமுதல் ஏழு வயது வரையுள்ள சிறு பெண்ணுக்கு பேதை என்று பெயர்.

2. எட்டு வயது முதல் பதினொரு வயது வரையுள்ள சிறு பெண்ணுக்கு பெதும்பை என்று பெயர்.

3. பன்னிரண்டு வயதுமுதல் பதின்மூன்று வயது வரையுள்ள பெண்ணுக்கு மங்கை என்று பெயர்.

4. பதினான்கு வயதுமுதல் பத்தொன்பது வயது வரையுள்ள பெண்ணுக்கு மடந்தை என்று பெயர்.

5. இருபது வயது முதல் 25 - வயது வரையுள்ள பெண்ணுக்கு அரிவை என்று பெயர்.

6. இருபத்தாறு வயது முதல் முப்பத்தொன்று வயது வரையுள்ள பெண்கட்குத் தெரிவை என்று பெயர்.

7. முப்பத்திரண்டு வயது முதல் நாற்பது வயது வரையுள்ள பெண்கட்கு பேரிளம்பெண் என்று பெயர்.

ஒரு தினத்தில் ஒரு சிறுமியின் வேலை

1. காலையில் ஒவ்வொரு தினமும் 4-மணிக்கே எழுந்து கடவுளை வணங்கி, உன் பாடங்களைப் படி.

2. பிறகு வீடு சுத்திசெய்து தெருவுக்குக் கோலம் போடு.

3. தலைவாரிப் பின்னிக்கொண்டு, பல் விளக்கி, குளித்து, சுத்தமான வஸ்திரம் உடுத்து, நெற்றியில் பொட்டு இட்டுக்கொண்டு சாப்பிட்டு பள்ளிக்கூடம் தவறாமல் போகவேண்டும்.

4. மாலையில் தெருவுக்குக் கோலம்போட்டு விளக்குகளை சுத்திசெய்து, இரவில் பாடங்களை நன்றாகப்படித்து 9 அல்லது 10-மணிக்குத் தூங்கப் போகவேண்டும்.

5. சமையல், குடித்தன சங்கதி, பலகாரம் செய்கிற விதங்கள்—இவைகளை எல்லாம் உன் தாயாரைக் கேட்டுத் தெரிந்துகொள்.

இரண்டாம் பாகம்

1. படிப்பு

ஒரு புஸ்தகத்தை எடுத்ததும், சாசாவென்று சுறுசுறுப்புடனும் வேகத்துடனும் படிக்கத் தெரியவேண்டும். அப்படிப் படித்துக்கொண்டு போகும்போதே, அந்த விஷயங்களெல்லாம் உன் மனதிற்கும் விவரமாய்த் தெரியும்படியாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் இன்ன அருத்தம் என்பதையும், , கால் புள்ளி, ; அரைப்புள்ளி, : முக்கால் புள்ளி, . முற்றுப்புள்ளி, ? கேள்விக்குறி, ! ஆச்சரியக்குறி,. இவைகள் எங்கெந்த இடத்திலெல்லாம் வரக்கூடு மென்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். எழுதுகையில் இந்தப் புள்ளிகள் முதலியவற்றை நீ இடம் அறிந்து உபயோகிக்கத் தெரிந்துகொள். அப்போதுதான் வசனநடை ஒழுங்குபடும். எழுத்துப் பிழைகள் விழாதபடியும், வேகமாய் எழுதிக்கொண்டு போகவும் நீ பழகவேண்டும். ஒவ்வொரு வார்த்தைகளையும் நாவினால் உச்சரித்து உறக்கப் படித்தால் உன் வாய் திருந்தி

உனக்கு இலக்கணமாக—தெளிவாகப்பேச வரும்.

ஒரு புஸ்தகத்தைக் கண்ணால் பார்த்த படியே மனதிற்குள் தானே, வேகமாய்ப் படித்துக்கொண்டு போகவும் நீ அப்பியாசம் செய். அது பெரிய புஸ்தகங்களை வாய் நோகாமல் சுலபமாய்ப் படிக்க நல்ல வழி. எப்போது பார்த்தாலும் புஸ்தகமும் கையுமாகவே இரு.

கதைகள், நாவல்கள், மதநூல்கள், பத்திரிகைகள் இவற்றைப் படிக்கப் பிரியப்படு. அவைகள் உன்னைப் புத்திசாலியாக்கும்.

2. சமையல்

சுறுசுறுப்புடன் சமையல் செய்ய உனக்குத் தெரியவேண்டும். சமைத்தானதும் அதனை அந்தந்த இடத்தில் வைத்து மூடிவிட்டு, அந்த இடத்தை நன்றாய்க் கூட்டி சுத்தமாய் வைக்கவேண்டும்.

உப்பு, புளி, காரம்—இவைகளை அளவு அறிந்து கை நிதானமாகப் போட நீ சீக்கிரம் பழகிக்கொள்ளவேண்டும். அடுப்பில் ஒரு பதார்த்தம் இருக்கும் போதே அதை அடிக்கடி திறந்து பார்க்கக்கூடாது. இவ்வளவு நேரத்துக்குள் இது வேகும் என்று அந்த அநுபவத்தையும் நீ பெறவேண்டும்.

பலகாரங்கள் பக்ஷணங்கள் செய்கிற விதங்களை யெல்லாம், உன் வீட்டில் அவைகள் செய்யப்படும்போது பார்த்து நீ கற்றுக் கொள். இன்னொருவர் வீட்டில் புதிதாகக் குழம்பு, பலகாரங்கள் செய்தால் அதை எப்படிச் செய்தார்களென்று தெரிந்து, உன் வீட்டில் அந்தப்படிசெய்து பார்த்துத் தேற வேண்டும். ஊறுகாய்கள், துவையல்கள் இவைகளை விதம் விதமாகப் போடவும் செய்யவும் நீ கற்றுக் கொள்ளவேண்டும்.

உன் சமையலுக்கே ஒரு புது ருசி—சிலாக்கியம் இருக்கிறதென்று எல்லோரும் உன்னைக் கொண்டாடும்படி நீ அவ்வளவு சாமர்த்தியசாலியாக ஆகவேண்டும். சமையல் அறைக்குள் நீ நுழைந்ததும், ஒருமணி நேரத்திற்குள்ளாக, எல்லாம் தயாராய் செய்து சமையல் ஆய் விட்டது என்று சொல்லும் படியான சுறுசுறுப்பு உனக்கு உண்டாக வேண்டும்.

3. தையல்

உனக்கு வேண்டிய ரவிக்கை, பாவாடை, சொக்காய் இவைகளை யெல்லாம் நீயே தைத்துக்கொள்ள உனக்குத் தெரிய வேண்டும். அதிலும் சுறுசுறுப்பாகத் தைக்க நீ பழகவேண்டும். மெத்தை, தலையணை இவைகளையும் தைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

உனக்குத் தைக்கத் தெரிந்திருந்தால், தையற்கடைக்காரனுக்கு நீ வீணாகப் பணத்தைக் கொடுக்கவேண்டியதில்லை. நீயே ரவிக்கை, பாவாடை இவைகளை மேலுக்கு ஒரு தையல் போட்டு, பிறகு தையல் மிஷினில் தைக்க, கடைக்கு அனுப்புவாயானால். சொற்பமான கூலியைக் கடைக்காரனுக்குக் கொடுத்து அழகாக மிஷினில் தைத்துக் கொண்டு விடலாம். ஒரு சிங்கர் சிறுதையல் யந்திரமும் உனக்கு வேண்டும்.

உன் உடைகளில் ஏதாவது கொஞ்சம் கிழிந்திருந்தால், அதை உடனே தைத்து விடு. ஒரு சிறிய தையல் ஒன்பது பெரிய தையலை மறைக்கும். தைப்பதிலும் அந்தத் தையல் தெரியாதிருக்க, அதை மடித்துத் தைக்கவும் தெரிந்துகொள்ளு.

ஊசி, நூல், கத்தரிக்கோல் இவைகளை ஒழுங்காக ஒரு பையில் வைத்துக்கொள்ள, அதற்கு வேண்டிய ஒரு பையை பல அறைகள் உள்ளதாகத் தைத்து. அதில் அவற்றை வைத்துப் பத்திரப்படுத்தவேண்டும்.

4. கோலம்.

விதம் விதமாகக் கோலம் போடத்தெரிந்துகொள். விசேஷ தினங்களில் சுவர்களுக்கு செம்மண் வைத்து மாக்கோலம்

போட்டால் அழகாயிருக்கும். கோலப் புஸ்தகம் ஒன்று வாங்கி அதைப் பார்த்துக் கற்றுக்கொள். கோலம் போடுவதிலும் நீ முதல் தரமானவள் என்று பெயரெடுக்க வேண்டும். தெருவில் போகும் பொழுது ஒரு புதிதான கோலத்தைப் பார்த்தால் அது எப்படிப் போட்டார்கள் என்று சிந்தனை செய். அவ்விதமாகப் போட உனக்கும் வருகிறதா என்று பார்.

5. கௌரவம்

எப்பொழுது பார்த்தாலும் சிரித்து விளையாடி அட்டகாஸம் பண்ணிக்கொண்டிருப்பதைவிட, உன் முகத்தில் கொஞ்சம் பெருமை வைப்பது நலம். ஆனால் சிரிப்பு முதலியவைகள் சிறிது மில்லாமல் எப்பொழுதும் கடுகடு என்று இருக்கக்கூடாது; முகத்தை எப்பொழுதும் கோணிக் கொண்டிருப்பதும் ஆகாது. கம்பீரமாய், பெருந்தன்மையோடு கூடியவளாய் உயர்ந்த ஸ்தானத்தில் நீ இருக்க முயலவேண்டும்.

6. சிரிப்பு

எப்போது பார்த்தாலும் சிரித்துக் கொண்டிருப்பதும், அற்ப விஷயத்துக்கெல்லாம் சிரிப்பதும் கெட்ட வழக்கம். சிரிக்கக் கூடாதென்றதால் முகத்தை உம்—என்று

வைத்துக்கொள்ள வேண்டு மென்பதல்ல. எதிலும் அளவு இருக்கவேண்டும். "சிரித்தையோ சீரைக் குலைத்தையோ?" என்பர்.

7. வைத்தியம்

கை வைத்தியமும் நீ தெரிந்துகொள். சுரம் வந்தால் அதற்கு என்ன மருந்து; தலைநோய்க்கு என்ன பற்றுப்போடுகிறது; அஜீரணமாயிருந்தால் என்ன செய்கிறது; இப்படியே வயிற்றுக்கடுப்பு, கைசிரங்கு முதலான சாதாரணமானவைகளுக் கெல்லாம் இன்னின்ன செய்யவேண்டுமென்று உன் தாயார் மூலமாக அறிந்துகொள். அவர்களின் வைத்தியக் கை முறைகளைக் கற்றுக் கொள். சரீர அமைப்பு, அதன் போக்கு இவ்விவரங்களை யெல்லாம் தெரிந்துகொள். பத்தியமான காய்கறிகள், பத்தியம் இருக்க வேண்டிய விதங்கள் இவைகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

8 செட்டு

எப்போதுமே நீ செட்டாக இருக்கப் பார். உன் கையில் ஆறு காசு கிடைத்தால் அதை உடனே ஏதாவது வாங்கித் தின்று விடாதே. அதில் பாதி செலவிட்டு பாதியைப் பத்திரம் செய். ஒரு வஸ்துவை வாங்குவதற்கு முன், அந்த வஸ்து இல்லாமல் நாம்

இருக்கமுடியாதா என்று யோசித்துப் பார். அதிகச் செலவுக்காரர்களின் கையில் காசு நிற்காது. செட்டாயிருக்க வேண்டுமென்று கருமித்தனம் செய்யாதே. செட்டாயிருப்பதற்கும் ஒரு அளவு உண்டு. செட்டு என்ருல், நிதானித்து யோசனையோடு ஒரு அளவுக்கு உட்பட்டுச் செலவு செய்வதென்று அருத்தம். செட்டாக இருக்கிறவளின் கையில் நாலுகாசு எப்போதுமே இருக்கும்.

9. காலப்போக்கு

சாவகாசமான நேரங்களில் உன் பழய பாடங்களைப் படி. கதைப் புஸ்தகங்களை வாசி. நல்ல சிநேகிதிகளோடு சேர்ந்து விளையாடு. ஊரைப்பற்றி வம்பு அளக்காதே. பொதுவாய் எவரையும் திட்டாதே. ஒருவர் வீட்டு விஷயத்தை இன்னொருவர் வீட்டில் சொல்லாதே. ரகசியமாய் உன்னிடம் ஒரு சங்கதியைச் சொன்னுல் அந்த ரகசியத்தைக் காப்பாற்று. மற்றவர்களின் தப்பிதங்களைக் கவனியாதே. குணங்களை மட்டும் புகழ்ந்துகொள். இடம் அறிந்து பேசு. ஆணை சத்தியம் என்று சொல்லாதே. அப்படிச் சொல்லுகிறவர்களை நம்பாதே. எவர் மீதும் கோள் சொல்லாதே.

10. அவசரம்

அவசரப்படுகிற காரியம் எப்பொழுதும் அரைக் காரியம் தான். அவசரப்படுவோர் எல்லா வேலைகளையும் ஒரே தடவையில் முடிக்க முயன்று, ஒன்றைக்கூடச் சரியாய் நிறைவேற்றாமல் போவார்கள். அவசரப்படுவோருக்கு மறதி அதிகமாயிருக்கும். புத்திசாலிகள் அவசரப்படாமல் அமரிக்கையாக இருந்து எது ஒன்றையும் செய்வார்கள்.

11. புசிப்பு

எப்போது பார்த்தாலும் எதாவது ஒன்றைத் தின்றுகொண்டே இருப்பது கெட்ட வழக்கம். எல்லோருடனும் சேர்ந்து சாப்பிடப் பிரியப்படு. உனக்கு ஒரு பக்ஷணம் கிடைத்தால் கூட இருக்கிறவர்களுக்கும் கொடு. ஒண்டியாய்த் தின்பதற்கு நினைக்காதே. நிலாச்சோறு சமைப்பது முதலிய விளையாட்டுகள் உனக்குக் குடித்தனத்தில் அதிக பிரியம் உண்டாகச் செய்யும்.

12. கடன்

யாரிடமும் நீ கடன் வாங்காதே. உன்னுடன் வாசிக்கிறவர்களிடம் ஒரு காசு, இரண்டு காசு என்று கடன் வாங்காதே. கடன் கொடுப்பதும் வாங்குவதும் நல்ல வழக்கங்களல்ல. உனக்குப் பிரியமான ஒன்றை எாம்

ங்க நினைத்தால் அதற்காகக் கடன் வாங்காமல், உன் கையில் பணம் சேருகிறவரையில் நீ பொறுமையாக இருந்து, உன் சொந்த பணத்தைக்கொண்டு வாங்கு. உனக்குப் பிரியமானவைகளை உன் பெரியோர்களுக்குத் தெரிவித்து அவர்கள் வாங்கித் தந்தால் அப்போது நீ பெற்றுக்கொள். செட்டாயிருந்தால் கடன் வாங்கவேண்டிய நிமித்தம் ஏற்படாது.

13. சுத்தம்

ஒவ்வொரு தினமும் காலையில் ஸ்நானம் செய். அல்லது உடம்பு குளித்துக்கொள். எவ்வளவு வேலை யிருப்பினும் ஸ்நானம் செய்துகொண்டுவிடுவதை ஒரு வழக்கமாகக் கொள். உனது உடைகள் எப்பொழுதும் சுத்தமாய் இருக்கவேண்டும். நீ இருக்கிற இடமும் சுத்தமாக இருக்கவேண்டும். புஸ்தகங்களில் அழுக்குப் படாதபடியும், முனை சுருங்காதபடியும், புதுப் புஸ்தகம்போல அதற்கு அட்டை போட்டு சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். வீட்டில் சமையல் பாத்திரங்களெல்லாம் பளபளவென்று சுத்தமாய் இருக்கவேண்டும். உன்மனமும் சுத்தமாயும், கபட மற்றும், இருக்கவேண்டும். அசங்கிதமான பழக்கங்களையும் சொற்களையும் நீ விட்டு விடவேண்டும்.

14. சிநேகம்.

எல்லோருமே சிநேகிதிகள் ஆகமாட்டார்கள். ஆனால் அவர்கள் அறிமுகமுள்ளவர்களாய் இருக்கலாம். அதற்குத் தக்கபடி அவர்களிடம் நீயும் அறிமுகமுள்ளவளாய்க் காண்பித்துக்கொள். சிநேக விஷயத்தில் உன்னைவிடப் படித்த பெண்களின் சிநேகத்தைத் தேடு. உன்னுடைய குணத்தை, நீ நேசிக்கும் சிநேகிதிகளைக்கொண்டு சொல்லிவிடலாம். எல்லோரிடத்திலும் அன்பாய் நல்ல பெண்ணென்று பிறர் சொல்லும்படி நடந்துகொள்.

15. சம்பாஷணை

இனிமையாகவும் அழகாகவும் பேச வேண்டும். வாக்கு சாதுர்யமும் இருக்க வேண்டும். நீ கற்ற வித்தையைக் காட்டாதே. அடக்கமாயிரு மரியாதையுடன் மறுத்துப் பேசு. பேச்சின் நடுவில் தடுக்காதே. சாந்தமாயும் நிதானமாயும் உன் கருத்துகளை வெளியிடு. ருக்கு, சுப்பு, சேஷி, காமு என்று இப்படி அரைப் பெயராகக் கூப்பிடாதே. உன்னைப் புகழ்ந்து கொள்ளாதே. முகத்தைப் பார்த்துப் பேசு. ஒருவரையும் இகழாதே. நம்மை விட அவர்கள் தாழ்வானவர்கள் என்று தாழ்த்தாதே.

16. குடித்தனம்.

குடித்தனமோ துரைத்தனமோ என்பார்கள். வீட்டுக் குடித்தனத்தை உனக்குக் கற்பிக்க உன் தாயார் தான் சரியான உபாத்தியாயர். ஒவ்வொன்றையும் உன் தாயாரை நீயாகவே கேட்டுத் தெரிந்துகொண்டு தாயாரை சந்தோஷப்படுத்து. தாய்க்கு அடங்கின பெண் ஊருக்கும் அடங்கின பெண்ணுவாள்.

17. கடிதம் எழுதுதல்

ஊருக்குக் கடிதம் வணக்கமாயும் சுருக்கமாயும் எழுதவும், ஊரிலிருந்து வந்த கடிதங்களைப் படிக்கவும், கையெழுத்துகளிலும் கூட்டெழுத்துகளைப் படிப்பதிலும் நீ பழகிக் கொள். உன் கையெழுத்து சுத்தமாய் அச்செழுத்துபோல அழகாயிருக்கவேண்டும். கடிதம் எழுத அதிக சாமர்த்தியம் வேண்டும். பல கடிதங்களையும் வாசித்து, எழுதி, அறிவு பெறவேண்டும். பிழைகள் இன்றிக் கடிதம் எழுதி அதை மடித்துமேல் விலாசம் எழுதுவதான எல்லா விஷயங்களையும் நீ கற்றுக் கொள்ளவேண்டும். அன்னிய ஆடவர்க்கு நீ ஒருபோதும் கடிதம் எழுதக் கூடாது. உடன் பிறப்பாக இல்லாதவர்கள் அருகில் படுத்து உறங்கக்கூடிய தம்பியண்

ணுவாக ஒருநாளும் ஆகார். உலகமும் ஒப்பாது. ஆகவே தாரதம்மியம் பாராமல் அன்னிய ஆடவர்கட்கு தம்பி, அண்ணு என்று கடிதம் எழுதாதே. அது உன்னைச் சந்தியில் இழுத்துவிடும். இப்படியும் சில அநுபவம் உண்டு. உசார்!

18. உலகியல்

உலகம் கபடமுள்ளது. எல்லோரையும் சாதாரணமாக நம்பிவிடாதே. வஞ்சனைக்காரர்கள்தான் அதிகம். நம்மீது பிரியமுள்ளவர்கள் கொஞ்சம். நமக்கு ஏதாவது காசு பணம் பிறர் கொடுத்தால், அவர்கள் நெஞ்சில் ஏதோ கெட்ட ஆசை கபடம் இருந்து தங்கள் காரியத்துக்காகக் கொடுக்கிறார்களா? உண்மையாகவே அன்போடும் கொடுக்கிறார்களா? என்று நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். நம்மை எவரும் கௌரவிக்கும்படி இருக்கவேண்டும். இரவல் நகைகளை அணியாதே. நன்னடக்கை உள்ளவளாய், சொல்வார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப்போகாமல் ஜாக்கிரதைப்படு. உலக ஞானம் என்பது உலகத்தில் பழகியே வரவேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் நல்லதைக் கிரகித்து அநுபவப்படு.

19. அன்பு

எல்லோரிடத்திலும் அன்பாய் இருக்கக் கற்றுக்கொள். நீ பிறரிடம் அன்பு பாராட்டினால் அவர்களும் உன்னிடம் அன்பாயிருப்பார்கள். தாய், தந்தை, ஸகோதரர் முதலியவர்களிடம் மாத்திரமல்ல. ஸகலரிடமும், வாயில்லா ஜெந்துக்களிடமும் அன்பாய் இருக்கவேண்டும். இது உனக்கு ஒரு பூஷணம் போல விளங்கும். அன்புடன் நீ ஒருவருக்கு அல்ப வஸ்துவைக் கொடுத்த போதிலும், மிகப் பெரிதாக அதை எண்ணிப் பூரிப்பார்கள். அன்பில்லாமல் எவ்வளவு கொடுப்பினும் அது ருசிக்காது. வீண் தான் ஆகும். அன்பு சதா உன்னிடம் குடிகொண்டிருந்தால் அதனால் உனக்கு மிகு கீர்த்தியுண்டு. அன்பே அன்பை வளர்க்கும்.

20. அடக்கம்

ஒரு பெண்ணுக்கு அடக்கமே ஒரு பெரிய ஆஸ்தி. அதுதான் திவ்யமான அலங்காரம். எவ்வளவு தான் படித்திருப்பினும், பாடக் கற்றிருப்பினும், அற்புதமான தையல்வேலைகள் தெரிந்திருப்பினும், அதிக ஆபரணங்கள் அணிந்திருப்பினும் பிறரிடம் நீ அட்டஹாஸம் செய்யாமல் அடக்கமாகவே

இருக்கவேண்டும். அதனால் உனக்கு மிக்க கௌரவம் உண்டாகும். கை வீசிப் பலர் முன்பு நடப்பதும், பெரியோரைக் கண்டு எழுந்திராமையும் இவையெல்லாம் அடக்க மில்லாத குணங்கள். அடக்க மில்லாத மாடு குடித்தனத்துக்கு உதவாது என்பது பழமொழி. தான் அடங்கத் தன் குலம் விளங்க—என்ற பெரியோர் வாக்கின்படி, உன் குலத்திற்கே ஒரு தீபம் போல் நீ அடக்கம் காட்டிப் பிரகாசிக்கவேண்டும். அப்போது உனக்கும் மிக்க கௌரவம் உண்டாகும். உன்னைப் பெற்றோருக்கும்—இன்னார் குழந்தை மிக்க அடக்கமுள்ளது — என்றால் அவர்களுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தரும். பலராலும் அறிவுடைய குழந்தை யென்று புகழப் படுவாய்.

21. வட்டித்தல்

நீ சமைக்கக் கற்றுக் கொள்வதோடும் பரிமாறவும் கற்றுக் கொள்ளல் அவசியம். சமைப்பதைவிட, அவரவர் மனம் அறிந்து வட்டிக்கிற வேலைதான் அதிகக் கஷ்டமுள்ளது. நீ பரிமாறுகிற ரீதியில்- புசிப்பவர்கள் இன்னும் ஒரு பிடிசாதம் அதிகமாக உண்ணும்படியாக அவ்வளவு அன்புடனும் உபசாரத்துடனும் நீ செய்ய வேண்டும். பரிமாறுவதில் வஞ்சனை கூடாது. முன் உள்ளவர்

க்ளுக்கும், பின் உள்ளவர்களுக்கும், இனி உள்ளவர்களுக்கும் குறையாமல் வரும்படியான ஒரு அளவை நீ முதலிலேயே ஊகத்தோடும் தெரிந்து கொள்ளவேண்டும். பரிமாறும்போது மிகக் குறைவாகவும் இருக்கக் கூடாது, அளவுகடு மீறியும் இருக்கக் கூடாது. நிதானமாக இருக்கவேண்டும். நல்ல மனதோடும், முகமலர்ச்சி யுடனும், திருப்தியாக அவர்கள் புசிக்கட்டும் என்ற எண்ணத்தோடும் நீ பரிமாற வேண்டும். எல்லோருக்கும் பரிமாறின பிறகுங்கூட கொஞ்சம் மீதியிருக்கப் பார்க்க வேண்டும். முழுவதும் காலிசெய்து விடக்கூடாது. அது அவலக்ஷணம். ஒருக்கால் திடீரென்று யாராவது வந்துவிடக்கூடும். ஆனால் எவர்கள் எதைப் பிரியத்தோடும் புசிக்கிறார்களோ, அதை மறுபடியும் அவர்களுக்கு வைக்க நீ பின்வாங்கக்கூடாது. அப்போது தான்—திருப்தியாக வைத்தாள் மகராசி-என்று உன்னைக் கொண்டாடுவார்கள், உண்ண முடியாதவர்களுக்கு அதிகம் வைத்துப் பிரயோஜனமில்லை. ஆதலால் அவரவர்களின் மனோபாவம் அறிந்து நீ பரிமாற வேண்டும்.

22. எதிர்பேசாமை

எதிர் பேசும் வழக்கம் மிக்க கெட்டது.

வார்த்தைக்கு வார்த்தை எதிர்த்துப் பதில் சொல்வது தப்பு. அதனால் தான் சண்டை உண்டாகிறது. எதிர்த்துப் பேசாமல் இருப்பது பெண்களுக்கு முக்கியமாய் வேண்டிய குணம். உன்னை மற்றவர்கள் எவ்வளவு பேசினாலும், நீ மவுனமாக இருந்து விட்டால் ஒரு சண்டையும் உண்டாகாது. நீ உன் சிறுவயதிலேயே இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீ ஏதேனும் பிசகு செய்திருந்து, அதற்காக, உன் தாய், தந்தையர், பெரியோர் முதலானவர்கள் உன்னைக் கண்டித்தாலும், ஏதேனும் புத்திமதிகள் சொன்னாலும், நீ எதிர் பேசாமல் அவற்றை மகாப் பிரசாதமாக நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். இது உன் வாழ் நாட்களுக்கு உற்ற துணையா யிருக்கும். இதில் இப்போதே பழகிக் கொண்டால்தான் கணவன் வீட்டிற்குச் செல்லும்போதும், மாமி, மாமனார், நாத்தி, கணவன், மற்றுமுள்ள பெரியோர்களிடம் எதிர் பேசாமல் நடந்து கொள்ளும் வழக்கம் உனக்கு ஏற்படும். எதிர்த்துப் பேசாமல் இருக்க நீ கற்றுக் கொண்டால் உன் மீதுள்ள சிறு குற்றங்களெல்லாம் மறைந்து போகும். நீ எதிர் பேசாமலிருந்தால், கோபம் கொண்டவர்களுக்குக்கூட உன்மீது கோபம் உண்டாக

மாட்டாது. பெண்டிற்கு அழகு எதிர் பேசாதிருத்தல் என்னும் வாக்கை நீ மந்திரமாகக் கொள்வாயாகில் சகல நன்மைகளையும் பெற்றிடுவாய்.

23. கோபம்

கோபமே பாவங்களுக்கு எல்லாம் தாய் தந்தை. கோபமே குடிகெடுக்கும். கோபமே அறிவைக் குறைக்கும். கோபமே ஒன்றாக இருந்த குடும்பத்தைப் பிரிவினைசெய்து விடும். கோபமே ஒரு பொல்லாத நோய். கோபத்தை நீ முழுதும் விட்டுவிடு. அல்ப விஷயங்களுக்கு எல்லாம் கோபம் கொள்ளாதே. பெரிய காரியங்களிலும் கோபம் கொள்ளாமல் பொறுமையோடு இரு. கோபத்தால் உன் மனதிற்கும் பிறர் மனதிற்கும் வீணாக வருத்தங்கள் நேரிடும். கோபம் விஷத்துக்குச் சமானம். ஒருக்கால் அதனால் அடிபிடி சண்டைகளும் உயிர்ச்சேதமும் கூட உண்டாகும்படியாய் விடும். ஆகவே நீ கோபத்தை யடக்க சக்தி பெறவேண்டும். நீ மிக்க முன்கோபியாயிருந்தால் உனக்குயாரும் சிநேகிதிகளாகமாட்டார். உன்னை மதிக்கவும் மாட்டார்கள். ஆதலால் சாந்தம் என்னும் ஜலத்தினால், கோபம் என்னும் அக்கினியைத் தணித்துக்கொள். பெரியோர்கள் உன்னைக் கோபிக்கும்போது,

நீயும் பதிலுக்குப் பதில் அவர்களைக் கோபித்தால், உடனே பெரிய சண்டை யுண்டாகிவிடும். அவர்களின் கோபத்திற்கெல்லாம் நீ மவுனமாக இருந்து விட்டால், அவர்களே வாய் நோவு எடுத்துப் பேசாமல் இருந்து விடுவார்கள். கோபம் இல்லாவிட்டால் சண்டையே யில்லை. கோபமே எல்லா சண்டைகளுக்கும் முதல் தூண்டுதலாகும். ஆறுவது சினம்.

24. முகத்தைக் கோணுதல்

முகத்தைக் கோணுதல் ஒரு பெரிய அவலக்ஷணம். உன் மனதிலுள்ள துற்குணம் உன் முகத்தைக்கோணுவதால் பிறர்க்கு வெளியாகிறது. எடுத்ததற்கெல்லாம் முகத்தைக் கோணிக்கொள்வது சிறுமியர் சிலருக்கு வழக்கம். இது ஒரு பெரிய விகாரம். அப்போது கண்ணாடியில் பார்த்துக்கொண்டால் உன் அழகிய முகம் எப்படி விகாரம் அடைந்திருக்கிறதென்று தெரியும். முகத்தைக் கோணிக்கொள்ளும் வழக்கம் உன்னிடம் இருந்தால் லக்ஷ்மி உன்னை விட்டு நீங்குவாள். நீ பெறக்கூடிய சம்பத்துக்கே குறைவு ஏற்படும். நீ ஒருவர் மேல் வருத்தமாய் உன் முகத்தைக் கோணிக்கொண்டால், உன் முன்பு இருக்கும் பலருக்கும் அது வருத்தத்தை யுண்டுபண்ணும்.

விபரீதார்த்தங்களுக்குக் காரணமாய் விடும். உனக்கு ஏதேனும் விருப்பமிருந்தால், தாய் தந்தையர், மற்றும் உனக்கு ஆதாரமாயுள்ள பெரியோர்களிடம் தாராளமாகக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். மனதில் மர்மமாய் வைத்துக்கொண்டு முகத்தைக் கோணுவதினால் கெட்ட பெண் என்ற பெயரே தவிர, அடையும் லாபம் ஒன்றுமில்லை. முகத்தைக் கோணுதலுக்கு முக்கிய காரணமாயுள்ள பொறாமையை நீ விட்டுவிடு. அப்போது நீயும் சுகப்படுவாய். உன் முகக் களையும் மாறாதிருக்கும். இதை நீ கவனித்து நடந்துகொள்.

25. மாமி, மாமனார், நாத்தி

இவர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய விதங்களை உன் தாய் வீட்டிலேயே கற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் மனம் உவக்கும்படி அதிக மரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும். நீ செய்யும் ஒவ்வொரு வேலையும், அவர்களின் அபிப்பிராயத்தை அநுசரித்ததாக இருக்கவேண்டும். அவர்களுக்கு விரோதமானதை நீ செய்யக் கூடாது. இனிமேல் உனக்கு வருகிற உன் கணவனின் பிரியத்தையும், குடும்ப சமாதானத்தையும் நீ பெறுவதற்கு, முதலில் இவர்களின் அன்பையும் தயவையும் பூரணமாக

த்தேடிக்கொள்ள வேண்டும். அதுதான் பெரிய சாமர்த்தியம்—பெரிய வேலை. அவர்கள் ஒருக்கால் உன் மீது கோபித்துக்கொண்டாலும், எதனால் கோபங்கொண்டார்களென்று தெரிந்து, உன்னை நீ திருத்திக்கொள்ளவேண்டும். மறுபடியும் அவர்கள் கோபம் கொள்ளாத விதமாக நீ நடக்கவேண்டும். அவர்களைப் பற்றி நீ தாய் வீட்டிலாவது, மற்றவர்களிடமாவது ஒன்றும் சொல்லக்கூடாது. உன்னால் எவருக்கும் மனஸ்தாபங்கள் ஏற்படாமல் நீ முன்ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நீ இவர்களின் பிரியத்தை சம்பாதித்துக் கொண்டால், உன் கணவன் ஏதாவது சொன்னாலும், உடனே இவர்கள் உனக்கு சிபாரிசு பேச வந்து விடுவார்கள். அவ்விதமாக இப்போதே நீ உன்னைத் தயாராக்கிக்கொள்.

26. விளையாட்டு நேரம்

படிக்கும் நேரம் போக, விளையாடவும் ஒரு காலத்தை வைத்துக்கொள். உன் பாடங்களைக் கிரமமாகப் படித்து முடித்த பிறகே, விளையாடவேண்டும். விளையாட்டினால், சந்தோஷமும், பூரிப்பும் உண்டாகும். ஆனால் முறட்டுத்தனமான விளையாட்டுகள் கூடாது. சிறுமிகளுக்கேற்ற கும்மி, கோ

லாட்டம், மூலைசுற்றல், கண்ணுமூச்சி*முதலிய விளையாட்டுகள் விளையாடலாம். நீ செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு நேரம் இருக்கவேண்டும். எந்நேரமும் விளையாட்டிலேயே புத்தி செலுத்தி விடக்கூடாது. விளையாட்டுப் பெண்ணாக நீ வளரக்கூடாது. படிக்கவேண்டிய நேரத்தில் விளையாடக்கூடாது. இரவில் தூங்கவேண்டிய நேரத்தில் நித்திரையைக் கெடுத்துக்கொண்டு விளையாடக் கூடாது. நீ விளையாடும் விளையாட்டிலும், ஒவ்வொரு புத்தி மதி, கற்பனைகள் அறிந்துகொள்ளக் கூடியதாய் இருக்கவேண்டும்.

27. ஊர் வம்பு

இது தானாகத் தேடிக்கொள்ளும் வீண் பிரயாசை. அனாவசியமாய் வீடு வீடாக நுழைந்து பேசும் வழக்கம் வைத்துக்கொள்ளக் கூடாது. பலர் வீட்டு விஷயங்களை எடுத்துக்கொண்டு வம்பு அளக்கக்கூடாது. ஊர் சங்கதிகளைப் பேசிக் காலத்தைப் போக்குவது கெட்ட வழக்கம். அவள் அப்படி, இவள் இப்படி, அந்த வீட்டில் அந்த சண்டை, இந்த வீட்டில் இந்த சண்டை என்று ஊர் வம்புகளை மெல்லுவது மிக்க அவலக்ஷணம். அது துற்குணத்தை விரு

---

* கண்ணுமூச்சி = கண்மூடி விளையாடல்.

த்தி செய்யும். ஊர்வம்பு பேசுபவர்களு டன் நீ ஒருபோதும் சேராதே.

28. சண்டை

உன் சகோதர சகோதரிகளிடம் எந் நேரமும் சண்டை செய்துகொண்டிருப்பா யாகில்—அந்த வழக்கம் பிறரிடத்தும் உன க்கு உண்டாகிவிடும். உன் பெரியோர்க ளின் உத்தரவின்றி ஒரு வஸ்துவும் நீ பிறரு க்குக் கொடுக்கக்கூடாது. பிறரிடமிருந்தும் நீ வாங்கிக்கொள்ளக் கூடாது. இவையெல் லாம் சண்டையை உண்டாக்கக் கூடியவை கள். மற்றக் குழந்தைகளைக் கிள்ளுதல், அடித்தல் இவற்றாலும் சண்டை நேரும். அவ்விதம் செய்யாதே. சண்டையே யில் லாதிருக்க எந்த விதமும் நீ பார். சிறு வய திலேயே சண்டையை நீ வெறுத்தால் பெரிய வயதிலும் புத்தியறிந்து நடப்பாய்.

29. கூட்டம் போடுதல்

பெண்களுக்கு கூட்டம் போடுவதும், கூட்ட மாய் உட்கார்ந்துகொண்டு, பிறர் குற் றங்களை நீள வளர்த்திச் சொல்வதும் வழக் கம். பெண்கள் இருப்பிடம் பெரிய சண்டை யாம்—என்பது ஆன்றோர் வாக்கு. வேலை யற்ற பெண்களுக்குத்தான் கூட்டம்போடு கிற வழக்கம் அதிகம். இக்கூட்டத்தை

அடியோடு வெறுத்துத் தள்ளு. இதில் நீ சேராதே. இது சோம்பேறிக் கூட்டம். விருதா கோஷ்டி. நாலுபேரும் ஒன்றாய்க் கூடி வீண்வார்த்தை பேசுவதால், உன் படிப்போ, வேலையோ கெட்டுப் போவதோடு கூட, உன் புத்தியும் நாளுக்கு நாள் கெட்டு சோம்பல் அதிகமாய் விடும். மேலும் அவள் அதைச் சொன்னாள், இவள் இதைச்சொன்னாள் என்று உன்மீது பழிவார்த்தைகள் ஏற்படும். நாலுபேர் வாயில் நீ விழும்படியும் நேரும். ஆதலின் ஜாக்கிரதை.

30. பேன் குத்துதல்

ஒருபெண்ணை இன்னொரு பெண் கண்டதும் தலையில் பேன் குத்தப் போகிறார்கள்! இது பெரிய அவலக்ஷணம். பேன் குத்திக் கொண்டே ஊர் வம்பு பேசுவது வழக்கம். உன் கேசங்களை நன்றாக சீப்பு கொண்டு சீவிக் கொள். மற்றவர்கள் உன்னிடம் பேன் குத்த வரும்படி செய்து கொள்ளாதே. நீயும் பிறருக்குப் பேன் குத்தப்போகாதே. படிக்காத பெண்ணுக்குப்பேன் குத்தத்தான் தெரியும். படித்த பெண்ணுக்கோ இவர்கள் கூட்டத்தில் சேராதிருக்கத் தெரியும். தங்களின் ஊர் வம்பைத் தொடங்கப் பேன் குத்துவதை ஒரு வேலையாக வைத்துக்கொள்ளுகிற பெண்களுடன் நீ சேராதே.

31. மிச்சம் பிடித்தல்

மிச்சம் பிடித்தல் என்பது ஒவ்வொரு குடும்பத்திலும் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்., வரவுக்கு மிஞ்சி செலவு செய்யக்கூடாது. நமது வருவாயில் நாம் சிறிது மீதி செய்யவேண்டியது அவசியம். வரவுக்கு மேற்பட்ட செலவுகள் ஏற்படுமாயின், நம்மால் கூடியவரையில் வீண் செலவுகளை நிறுத்தப் பார்க்கவேண்டும். இல்லாவிடில் நமக்குக் கடன் ஏற்படுவதோடு பிறருக்கும் நம்மிடத்தில் மதிப்பு குன்றும். கையில் எவ்வளவு வந்தாலும் அப்போதே செலவு செய்து விடுதல் என்பது வெகு தரித்திர வழக்கம். கெட்ட பழக்கம். உன் தாயார் கொடுக்கும் காசுகளில் சிறிது மீதி செய்து சேர்த்து வைத்து, பிறகு ஏதாவது உபயோகமான வஸ்துக்கள் வாங்கும்படியான பழக்கம் உனக்கு ஏற்படுமாயின்—கடைசி வரையில் அவ்வழக்கம் உனக்கு வரும். என்றைக்கும் மகாராசியாய், கையில் நாலு காசுடனும் க்ஷேமமாக இருப்பாய்.

32. ஒழுங்கு

எப்போதும் உன் வேலைகள் அனைத்திலும் ஒரு ஒழுங்கு—கிரமம் இருக்கவேண்டும். புஸ்தகங்களைக் குறித்த இடத்தில்

வைத்து, குறிப்பாக எடுக்கவும் ஒழுங்கு வேண்டும். உன் வஸ்திரங்களை மூலைக்கு மூலை போடாமல் ஒழுங்காக ஒரு பக்கம் வைக்கவேண்டும். ஒவ்வொரு வேலையையும் அந்தந்த நேரத்தில் ஒழுங்குடன் செய். தலை சீவிக்கொள்தல், திலகமிடுதல், பாடசாலைக்குச் செல்லுதல் இவை யெல்லாம் அந்தந்தக் குறித்த நேரத்தில் ஒழுங்கு தவறாமல் நடை பெறவேண்டும். நீ செய்யும் வேலைகளிலும், படிப்பு விஷயங்களிலும் ஒழுங்காக நடக்கக் கற்றுக்கொள். உன்னுடைய சாமான்களை எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அதையும் நீ தெரிந்துகொண்டு அதில் எல்லாம் ஒரு ஒழுங்கை அனுசரித்து நட. உன்னுடைய நடை உடை பாவனைகளையும் எவரும் உன்னைப் பழிக்காதிருக்கத் தக்க விதமாக ஒழுங்கு படுத்திக்கொள். வீட்டில் சமையலுக்கான புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களையும், பாத்திரவகைகளையும் ஒரே இடத்தில் ஒழுங்காக வைத்து எடு.

33. வீட்டு வேலை

நீ விசார மற்றுப் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே, உன் ஸக்திக்கு ஏற்றவாறு சின்னஞ் சிறு வேலைகளையும் செய்து பழகவேண்டும். வீட்டு வேலைகளைச் செய்வதில் வெட்கப்படக்கூடாது. கௌரவக்

குறைவு என்று எண்ணக்கூடாது. ஒருவர் புசித்த இலையை உன் தாயார் எடுக்க நேரமில்லா விட்டால் நீ எடுப்பது இழிவு என்று எண்ணக்கூடாது. பெண்களுக்கு வீட்டு வேலையில் விமரிசையும், சுறுசுறுப்பும் இன்றியமையாததது. நாளடைவில் நீ பத்து பேருக்கு சமைக்கும் சமர்த்துள்ளவளாக வேண்டும். எவ்வளவு ஐச்வரிய மிருப்பினும் எவ்வளவு படிப்பு இருப்பினும், வீட்டு வேலையும் தெரிந்திருக்கவேண்டும். உனக்கு வேலைதெரிந்திருந்தால் தான், உன் வேலைக்காரியிடம் வேலை வாங்கும் திறன் உனக்கு ஏற்படும். இல்லையேல், அவர்கள் உன்னை ஏமாற்றி விடுவார்கள். சிறு வயதில் தானே வீட்டு வேலைகளைக் கற்றுக் கொண்டால் தான், ஒருக்கால் பிறகு மாமியார் வீட்டில் வேலைகள் அதிகமாகச் செய்யவேண்டியிருந்தாலும், அப்போது அது சாதாரணமாக இருக்கும். சுலபமாகவும் தோற்றும். இல்லையேல் அற்ப வேலையும் உனக்குப் பெரிய மலைபோலத் தோன்றிக் கஷ்டத்தைக் கொடுக்கும். நீ செய்யும் வேலையைப் பிறர் குறை கூறுதவிதமாகத் திருத்தமாய்ச் செய்யக் கற்றுகொள்ளவேண்டும். வீட்டு வேலைகள் தெரியாதவள் ஒரு வேம்பு, நல்ல குடித்தனத்துக்கு அவள் ஒரு பாம்பு.

34. பிடிவாத புத்தி

பிடிவாத புத்தியை நீ விட்டு விடு. பெரியோர் சொற்படி நடப்பது உன் கடமையே தவிர, உன் மனம்போல் நடப்பது உசிதமன்று. நீ செய்யும் காரியம் உனக்கு நன்றென்று தோன்றினாலும், நாலுபேர் அதைக் கூடாதென்றால் நீ விட்டுவிட வேண்டியதே. ஒரு வஸ்துவை நீ கேட்டு உன் தாயார் இல்லையென்று சொன்னால், அதை அவசியம் தரவேண்டுமென்று நீ பிடிவாதம் பிடிக்காதே. தாய்க்கு அடங்கின பெண் ஊருக்கும் அடங்கி நிற்பாள். உன் சகோதர சகோதரிகளுக்கு ஏதேனும் கொடுத்தால், உனக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று அடம்பிடிக்காதே. இல்லாததைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்யாதே. எப்போதுமே பிடிவாத புத்தி மிகவும் கெட்டது. இவைகளை நீ பாடம் செய்து வைத்துக்கொண்டால், உன் வாழ்நாள் முழுதும் உனக்கு நன்மையே உண்டாகும்.

35. பொறுமை

பொறுமை என்பது ஒவ்வொருவருக்கும் தன்னையறியாமலே வந்தணுகும் மகத்தான தீயகுணமாம். உன்னாலான வரையில்

இதிலிருந்தும்விலகப்பார்க்கவேண்டும். உன் சகோதரர், சகோதரிகளுக்கு ஏதேனும் தின்பண்டமோ, வஸ்திரமோ, ஆபரணங்களோ அதிகமாய்க் கொடுத்தால், நீ பொறாமைப் படக்கூடாது. அதற்குப் பதிலாக சந்தோஷப்பட வேண்டும். பிறர் படிப்பைப்பற்றியோ, பிறர் தரித்துள்ள நகை சேலைகளைப் பற்றியோ, சம்பத்தைப்பற்றியோ நீ பொறாமைப்படக்கூடாது. இதில் "சகிப்பு" என்னும் பொறுமை உனக்கு வாய்ந்திருக்குமாயின், பிற்காலத்தில் கணவன் வீட்டிலும் மாமி, நாத்தி, பந்துக்களிடம் உனக்குப் பொறாமை ஏற்படாது.

36. தினசரிக் கிரமம்

வீட்டுக் கஷ்டங்கள், வீட்டுச் சங்கதிகள் அனைத்தையும் உன் மனதிற்குள் தானே வைத்துக்கொள். ஒரு வார்த்தையும் வெளியில் சொல்லாதே. சொன்னாலோ "அவள் கூறினாள்" என்று இன்னொருவருக்கு எட்ட விடுகிறவர்களே அதிகம். நீயார் வாயிலும் விழவேண்டாம். எவரெவருக்கு எப்படி எப்படி நடக்கவேண்டுமோ அந்தப்படி வணங்கி அன்புடன் நட. ஒருநாளும் முகம் கோணவேண்டாம். கடுகடுக்க வேண்டாம். உன் உள்வருத்தத்தை வெளியிட்டுக் கொள்ளவேண்டாம். இவளைப்போல ஒரு

பெண் உண்டா என்று சொல்லும்படி நடந்துகொள். எல்லா பாடுகளையும் ஸகித்து-ஸகித்து—விழுங்கி ஜீரணம் செய்துகொண்டு விடு. நமது கஷ்டங்களைக் கடவுள் பார்த்துத் தீர்க்கட்டும். எல்லாம் அவருடைய காரியம். அவர் பிரியப்படி விட்டு விடுவோம்.

37. ஆத்திரம்

எப்பொழுதும் உன் ஆத்திரத்தையும் பதட்டத்தையும் அடக்கு. ஆத்திரத்துடன் பேசவோ, செய்யவோ நீ நினைத்ததை அந்த சமயத்தில் செய்யாமல் சட்டென்று அடக்கி உன்னை ஆண்டு கொண்டால் அதில் அதிக நன்மையைக் காண்பாய். ஆத்திரத்தில் கண்டபடி பேசி, துடுக்காக ஒன்றைச் செய்து விட்டு, பிறகு, ஏன் பேசினேம் செய்தோம் என்று மனம் நோவோர் எத்தனையோ பேர். இதில் உன்னை அடக்கி ஆள முற்படு. உடனே சொல்ல வேண்டிய பதில் வார்த்தையை அந்த சமயம் சொல்லாமல் நிறுத்திவிடு. பொறுமையும் ஆத்திரத்திற்கு ஒரு காரணம். கோபத்திலும் ஆத்திரம் வரும். பல்லைக் கடித்துக்கொண்டு மவுனமாக இருந்துவிடப் பழகு. கிடைக்க முடியாத வஸ்துவுக்கும் செய்யமுடியாத வேலைக்கும் நீ விரும்பி ஆத்திரப் படாதே.

ஆத்திரத்துக்கு முட்டாள் பட்டம் நிச்சயம். உன் வார்த்தைகளும், செயல்களும் எப்போதும் நிதானமும் புத்திகூர்மையும் முன் யோசனையும் உள்ளதாக இருக்கட்டும்.

38. கோள் கூறல்

கெட்ட குணங்களில் இதுவும் ஒன்று. இதனால் அநேக சண்டைகளும், பிரிவினைகளும் ஏற்படும். யார் என்ன சொன்னாலும் அதைப் பிறரிடத்தில் நீ சொல்லவேண்டாம். தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் எவர் எது கூறினும் அதை வெளியிடாதே. பிறரிடத்துக் கோள் சொல்லிப் பகை மூட்டக்கூடாது. அதனால் நீ அடையும் பலன் ஒன்றுமில்லை. வீண் பொல்லாப்பு தான் அதன் முடிவு. நீ கூறியது வெளி வந்து விடுமோவென உனக்கும் பயம். கேட்பவருக்கும் மனவருத்தம். பிறகு இருதாத்தாரிடத்திலும் நீயே அகப்பட்டுத் தவிக்கவேண்டும். இதை உன் சிறு வயதிலேயே விட்டுவிடு.

39. பக்தி, ஞானம்

இதுவும் நீ தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய விஷயமே. சிறுவயதிலேயே கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். கடவுளை யறிவதற்குக்

கல்வி வேண்டும். நற்சகவாசம் வேண்டும். ஆலயம் செல்லுதல், விரதங்களை யநுஷ்டித்தல் முதலியவற்றால் நீ பரிசுத்தமடைய வேண்டும். இவ்விதமாக வெல்லாம் நீ நடந்து கொண்டால், பக்தி என்பதையும், ஞானம் என்பதையும் இன்னதென்று, உன்னில் தானே நீயாக உணர்ந்து கொள்ளலாம்.

40. உபசரிப்பு

உபசரிப்பு என்பது நமக்கு இருக்கும் அன்பை வெளிக்காட்டும் செய்கையாம். உன் வீட்டில் தாய், தந்தை, சகோதர சகோதரிகள் முதலானவர்களை நீ முதலில் உபசரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உன் வயிற்றை மட்டும் நிரப்பக்கூடாது. மற்றவர்கள் சாப்பிட்டார்களா என்ற விசாரிப்பும் உனக்கு இருக்கவேண்டும். உபசரிப்பதிலும் சிடு சிடுப்பில்லாமல் உபசரி. உன் உபசரிப்பில் இன்னும் கொஞ்சம் சாப்பிடும்படி இருக்கவேண்டும். பாதி சாதம் புசித்துக் கொண்டிருக்கையிலேயே மறுசாதம் வைக்க எதிர் வந்து நில்லாதே. அன்னியரிடத்தும் அன்புகூர்ந்து நில். சிடு சிடு கடு கடு என்னாதே. ஹிதவசனமாக இரு. அவர்கள்வந்ததை விசாரித்து, தாம்பூலமோ, அன்னமோ இட்டு உபசரித்து அனுப்பு.

சௌக்கியமாய் இருப்பவர்களை உபசரிப்பதைவிட, நோயாளிகளை இன்னும் அதிகமாய் உபசரிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டியதைக் காலம் அறிந்து கொடுக்க எப்போதும் தயாராக இரு. இன்னும் ஏழைகளை உபசரிக்க மறவாதே. ஏழைகளைக் கொண்டு நமது தர்ம குணத்தைக் கடவுள் சோதிக்கிறார். யாராருக்கு எவ்விதமான உபசரிப்பு செய்யவேண்டு மென்கிற அந்தஸ்தை நீ கூடிய வரையில் தெரிந்து கொள்ள வேண்டும்.

41. இரக்கம்

இரக்கம் என்பது உனக்கு சர்வ பிராணிகளிடத்தும் இருக்கவேண்டும். மானிட ஜென்மம் எடுத்த நீ உன் மனத்தை ஒரு போதும் கல்லாக்கிக் கொள்ளாதே. ஒருவரது கஷ்டத்தில் நீ சிரிக்காதே. பசி என்றவர்க்குப் பரிந்து இடு. ஏழைகளிடத்து எப்போதும் இரக்கம் மிகுந்து உருகு. அங்கஹீனர்களையும், நோயாளிகளையும் பரிகசிக்காதே. அவர்களிடம் இரக்கம் அதிகம் காட்டு. உன்னால் இயன்ற உதவிசெய். உன் வீட்டில் வேலை செய்பவர்கட்கு ஸக்திக்கு மிஞ்சின வேலை இடாதே. கடுஞ்சொல் ஒழி. பிறர் மனம் புண்பட எதையும் செய்யாதே.

உன் ஜீவிய காலமுழுதும் நீ இளகிய மனமுள்ளவளாக இரு.

42. கேட்டு உணர்தல்

இது ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியது. உனக்குத் தெரியாத ஒன்றை உன் தாயிடமோ, மற்றப் பெரியோர்களிடமோ கேட்டு அறிந்துகொள். கல்வி, கைத்தொழில், விவசாயம், இயற்கைப் பொருள்களின் காக்ஷி, பாகம் செய்யும் முறைகள், லௌகிக விஷயம், ஞான விஷயம், கடவுளை வழிபடுதல் இவற்றி லெல்லாம் உனக்கு உண்டாகும் சந்தேகங்களுக்குப் பெரியோர்களைக் கேட்டுத் தெளிதல் வேண்டும். கேட்டறியும்போது அவர்கள் சொல்வதை ஒரு காதில் வாங்கி, மற்றொரு காதில் விட்டுவிடாமல் உன் மனதில் நன்றாகப் பதியவைத்துக் கொள்ளவேண்டும். நாம் ஒருவரைக் கேட்பதா என்கிற கர்வபுத்தி கூடாது. எவ்வளவுதான் தெரிந்திருப்பினும் பெரியோர்களிடம் கேட்டே — யோசித்தே — அநுமதி பெற்றே எதுவொரு காரியமும் செய்யத் தொடங்க வேண்டும். வணங்கி நடந்தால் உயர்ந்து நிற்பாய்.

43. சொந்த மதத்தில் நம்பிக்கை

இது ஒரு முக்கிய விஷயம். உனது மதத்தைப் பற்றி மற்றவர்கள் எது கூறினும்

கவனியாதே. சொந்த மதத்தில் நம்பிக்கை விஸ்வாசம் வை. கடவுள் ஏது, புண்ணிய மேது என்பவர்களின் கூட்டத்தை யொழி. மற்ற மதங்களைப்பற்றி ஒருபோதும் குறை சொல்லாதே. மதத்துவேசம், நிந்தனை செய்யாதே. நமக்கு சகல நன்மைகளையும் கொடுத்த கடவுள் ஒருவர் உண்டென்பதை அறிந்துகொள். அவரை வழிபடவேண்டுமென்ற ஆசை உன் உள் ஹிருதயத்திலிருந்து உண்டாகட்டும். மதநூல்களில் பக்தி வைத்து சிரத்தையோடும் படித்துப் பக்குவப்படு. தூய தேவாலயம் நாடு. பிள்ளை தாயைத்தேடுவதுபோல் சுவாமியைத் தேடு.

44. தின்பண்டம்

தின்பண்டங்களின் மீது உனக்கு அதிகப் பிரியம் இருக்கும். சதா தின்று கொண்டிருப்பது துர்வாடிக்கை. அதை நாளடைவில் குறைத்துவிடு. ஒரு ஒழுங்கைக் கைக்கொள். மற்றவர்கட்கும் கொடுத்து நீ புசி. தின்பண்டங்களைச் செய்ய நீ கற்றுக்கொள். உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு என்பது பெரியோர் வாக்கு. சமையல் அறையில் இருக்கிற பெண்கள், எப்போதும் தின்று கொண்டிருப்பதாய் இருந்தால், மற்றவர்களுக்குத் தாப் பதார்த்தங்கள் இருக்குமா? இதை யோசி. ஒருவர் தின்பண்டம்

புசிக்கையில் நீ அங்கு அதை விரும்பிக் கொண்டு நில்லாதே. அன்னியர் தின்பண்டம் தரின் கண்டிப்பாக வாங்காதே.

45. அதிக வேலை

விசேஷ நாட்களிலும், பண்டிகை காலங்களிலும், வீட்டில் யாராவது விருந்தினர் வந்த காலத்தும் சற்று அதிக வேலைகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் நீ உன் தாயாருக்குக் கூட இருந்து சகாயம் செய்யவேண்டும். பெரியோர்கள் உனக்கு ஒரு வேலையிட்டால் முகத்தைத் திருப்புவதும், மொண மொணப்பதுவும் கூடாது. நீ இதில் கிரமப்பட்டுப் பழகி யிருந்தால் உன் மாமி வீட்டிலும் யாராவது வேலைகள் சொன்னால் சந்தோஷமாய்ச் செய்ய முடியும். உனக்கு இட்டது உன் சக்திக்கு மீறிய வேலையாயினும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு, மற்றவர்களிடம் சகாயம் செய்யும் படித் தயவாய்க் கேட்டுக்கொண்டு நிறைவேற்றிவிட வேண்டும். வீட்டு வேலைக்கு மூக்கால் அழுவது பெரிய மூதேவித்தனம். நீ உன்னால் கூடிய வரையில் வஞ்சனையில்லாமல் வேலைசெய்து பழகு.

46. காசு பணம் கேட்டல்

அன்னியர் உனக்குக் காசு கொடுத்தால் நீ வாங்கக்கூடாது. கௌரமாகவே இரு.

மதிப்புடன் நட. பந்துக்களிடம் நீ சென்றாலும், அவர்கள் உன் வீட்டிற்கு வந்தாலும் காசு, பணம் கேளாதே. அது கெட்ட பழக்கம். மேலும் கேவலம். உன் பெற்றோர்களுக்கு அது அவமானம். யாராவது பணம் வைத்திருக்கும்போதும், பணம் எண்ணும் போதும் நீ அங்கு நிற்கக்கூடாது. உனக்கு ஏதாவது வேலை சொன்னால் ஒரு அணா கொடுத்தால்தான் செய்வேன், அரையணா கொடுத்தால் தான் செய்வேன் என்று சொல்லக்கூடாது. அவசரமாக எங்காவது பெரியவர்கள் போகும்போது வழிமறித்து, அதைக் கொடு, இதைக் கொடு எனக் கேட்கும் வழக்கம் நீ வைத்துக்கொள்ளாதே.

47. புஸ்தக ஆசை

உனக்குப் பல புஸ்தகங்களையும் வாசித்து அதன் சாரங்களை அறியவேண்டுமென்கிற ஆசை அதிகப்பட வேண்டும். உன்னில்தானே அது உண்டாகவேண்டும். உன் புஸ்தகங்களைக் கண்ட இடங்களில் போட்டுவிடாமலும், அழுக்கு படியாமலும் பத்திரமாக வைத்திரு. எவருக்கும் இரவல் தராதே. தந்தால் திரும்பிவருவது கஷ்டம். நூதனமாய் ஒரு புஸ்தகம் கிடைத்தால் படிக்கும் வரையில் அதனிடத்துப் பிரியமும், பிறகு அலக்ஷியமும் கூடாது. அறிவு

விளங்கக்கூடிய நல்ல நீதிகள் அடங்கிய புஸ்தகங்களையும், ஞானத்தை விளக்கக் கூடிய புஸ்தகங்களையும் நீ மேன்மேலும் படித்து அபிவிர்த்தி யடையவேண்டும். உன் புஸ்தகங்களை உனக்குப் பிறகு உன் தம்பி, தங்கை முதலானவர்கள் படிக்கும் படி புஸ்தகங்களுக்கு எண்கள் இட்டுச் சேர்த்து வைக்கவேண்டும். நாநாவித பூர்வ கதைகளையும், பல தேச சரித்திரங்களையும், பல பதிவிரதா சிரோன்மணிகளுடைய சரித் திரங்களையும், உபரிய கருத்துகளுள்ள நாவல்களையும், மதநூல்களையும் நீ படிக்க ஆவல் கொள்ள வேண்டும். படிப்பதோடு கூட அதன்படி நடக்கவும் நீ முயலவேண் டும். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் படிப்புக் குக்கணக்கு உண்டு. நீயே படித்து விர்த்தி செய்து கொள்ளும்படிப்புக்கு எல்லையில்லை.

48. பத்திரிகைகள் படித்தல்

பத்திரிகா ஞானம் மகா பெரிது. பத்திரி கைகளைப் படிப்பதிலே உனக்கு ஆசைபெரு கிவிட்டால் நீ பெரிய பண்டிதையாகி விடு வாய். பத்திரிகைகள் உன் வீடு தேடிவந்து கற்பிக்கும் உபாத்தியாயருக்குச் சமமாகுந் உனக்கென்று ஒரு பத்திரிகையையாவண் சொந்தமாக உன் விலாசத்திற்குத் தருவி

தாப் படித்துவந்து அறிவில் தேர்ச்சி பெற்றுப் புகழ் ஓங்கி வாழ்க.

49. புஸ்தகத்தின் உற்பத்தி

ஒரு புஸ்தகம் எப்படித் தயாராகிறது? முதலில் ஒருவர் தாமே சொந்தமாக காகிதத்தில் விஷயங்களை எழுதிமுடிக்கிறார். அச்சுக்கூடத்தார் அக்காகிதத்தில் உள்ளபடி அச்செழுத்துகளை யெல்லாம் ஒன்று சேர்த்து, அதில் மை போட்டு ஒரு காகிதத்தை அதில் அழுத்தி எடுக்கிறார்கள். அந்தக் காகிதத்தில் அந்த விஷயங்கள் அச்சிட்டது போலிருக்கும். இதற்கு 'புரூப்' என்று பெயர். இந்த புரூபில் அநேக தப்பிதங்கள் இருக்கும். அதைத் திருத்திக் கொடுத்தால், எந்த அளவில் புஸ்தகம் அச்சாக வேண்டுமோ அதற்குத் தக்க காகிதம் போட்டு அச்சு யந்திரத்தில் அச்சிடுவார்கள். இதற்கு (F) பாரம் என்று பெயர். ஒவ்வொரு பாரமாக அச்சானதும் பயிண்டு செய்கிறவனிடம் கொடுப்பார்கள். அவன் அதை ஒன்று சேர்த்துத் தைத்து, மேல் அட்டை ஒட்டி, ஓரங்களை அறுத்து புஸ்தகங்களாக ஒழுங்கு செய்து தருவான். இவ்விதமாகப் புஸ்தகம் தயார்செய்து விற்பனைக்ாகக் கடைகளுக்கு அனுப்புகிறார்கள்.

50. அச்சாபீஸ் ஞானம்

. நீ நன்றாகக் கற்று, பெரிய பெண்ணாகி, பிறகு ஒரு காலத்தில் பண்டிதையாக விளங்குவாய். அநேக புஸ்தகங்களை நீயே சொந்தமாக எழுதப் போகிறாய். நீ விரும்பி முயன்றால் எதுதான் நடக்காது? அச்சுக்கூடம், அச்சு இயந்திரம், அச்சிடுதல்—இதுபோன்ற வார்த்தைகளை இப்போது உன் மனதில் பதிய வைத்துக்கொள். பிறகு ஒரு நாளில் இந்த வார்த்தைகள் உன் எண்ணங்களை வளர்த்து, அச்சாபீஸ் ஞானம் உனக்கு உண்டாகச் செய்து, உன்னையும் ஒரு கிரந்த கர்த்தாவாக ஆக்கிவிடும்.

51. பயிண்டு செய்தல்

இது அழகும் பயனும் உள்ள கைத்தொழில். சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம். நீ கொஞ்சம் கொஞ்சமாக இதில் பழகிக் கற்றுக்கொள். அநேக ஸகோதரிகளுடைய புஸ்தகங்களைப் புதியதுபோல் பயிண்டு செய்து தந்து உபகாரியாகலாம். லாபமும் உண்டு. இது போலவே சில சிறந்த கைத்தொழில்களையும் உனக்கென்று சொந்தமாக நீ கற்று வைப்பது எவ்வளவோ கண்ணியம்.

52. அநுபவம்

முக்கியமாய் ஒவ்வொன்றிலும் உலகாநுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அநுபவமாவது—இன்னது செய்தால் இன்னது விளையும் என்னும் தீர்க்காலோசனையாம். ஞானத்திலும், பக்தியிலும், கல்வியிலும், குடும்பவிஷயத்திலும், பாகமுறையிலும், வைத்திய வகையிலும் நம் பெரியோர்களிடமிருந்து சிறிது சிறிதாய்த் தெரிந்து கொண்டு முதிர்ந்த அநுபவ ஞானியாகவேண்டும்.

53. தூக்கம்

பகலில் ஒருபோதும் தூங்கலாகாது. காலையில் 4-மணிக்கு எவ்விதமும் எழுந்திரு. அசமந்தமாய்த் தூங்காதே. ஒரு சிறு சப்தம் உண்டானாலும் விழித்துக்கொள்ளக்கூடியபடி அவ்வளவு ஜாக்கிரதையாகத் தூங்கு. தூக்கத்தில் உன் உடைகள் ஒழுங்காக இருக்கும்படி கவனி. தூக்கத்தை உன் இஷ்டம்போல் வைத்துக்கொள்ளப் பழகி வெற்றி பெறு. இத்தனை மணிக்கு எழுந்திருக்கவேண்டுமென் றெண்ணிப் படுத்தால் குறித்த மணி பிசகாமல் எழுந்திருக்கலாம். இதை வழக்கத்தில் கொண்டு வா. தூக்கத்

திற்கு ஒருபோதும் நீ அடிமையாகாதே. மட்டி நித்திரையை விலக்கு.

54. நோன்பு விரதங்கள்

சிரத்தையோடும் நோன்பு விரதங்கள் இரு. உயர்ந்த எண்ணங்களில் சஞ்சரி. பரிசுத்தமான நெஞ்சமாக நில். பிரியத்தோடும் நோன்பு விரத நாட்களை எதிர்பார். விரத காலங்களில் இதுவரையு மில்லாத புதிய நற்குணங்களையும், புதிய சாந்தத்தையும் கொண்டுநின்று, பிறகு அதைத் தினசரிப் பழக்கத்திலும் கொண்டுவர வேண்டும்.

55. தனியே செல்லல்

பெரியோர் அநுமதி யின்றி எங்கும் போகக்கூடாது. துணையின்றி ஒண்டியாகச் செல்வது கௌரவக் குறைவு. அது எப்போதும் ஆபத்து. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம் என்பது பெரியோர் மொழி.

56. விரோத புத்தி

விரோத புத்தி மிகக் கொடுமையானது. உன்னைப் பற்றிப் பிறர் ஏதேனும் கூறினால்,

அதற்காக அவர்களோடு பேசாமல், அவர்கள்மேல் விரோதம்—பகை வைப்பது மகா கொடூரமானது. சிறுவயதிலேயே உன்மனம் இப்படி விரோத புத்தியில் பழகித் தேர்ந்து விட்டால், பிறகு இதைத் திருப்ப முடியாது. இது உன் மனதை இளகாத—உருகாத கல்லாக்கி ஒவ்வொருவர் மீதும் விரோதம் கொள்ளும்படி தூண்டிவிடும். இதிலும் கேடுகெட்ட விஷம் வேறுவேண்டாம். இத் துர்க்குணத்தை முளையிலேயே கிள்ளிவிடு. பகை—விரோதம் என்பதை யொழித்து, அந்த நிமிஷமே மறந்து, யாவரிடத்தும் சாந்தமும் அன்பும் கொண்டு இளகிய மனமாய் இருக்கப் பார். இதில் நீ பழகு.

57. சகிப்பு

சகிப்பு என்பது ஒரு அருமையான பதம். அதைக் கடைபிடித்தொழுகுவ தெனில் வெகு கஷ்டம். ஞானிகளுக்கும் அசாத்தியம். என்றாலும் கூடிய வரையில் நீ சிறு வயதிலேயே அதை அநுஷ்டிக்க வேண்டியதே கடமை. உன்னைப் பற்றிப் பிறர் யாது கூறினும் ஸகித்துக்கொள். என்ன கஷ்டங்கள் வந்தாலும் ஸகிப்புடன் நிற்கப் பழகு. சகிப்பு உள்ள பெண் யாவருக்கும் நல்ல பெண்ணாவாள்,

58. சாந்தம்

சாந்தம் சமுத்திரத்திலும் பெரிது. எவ்வளவு கோபமூட்டப் பட்டாலும் சாந்தமாக இருந்துவிடப் பயிற்சி செய்துகொள். சாந்தமும் அமரிக்கையும் இந்த உலகத்தையெல்லாம் விலை கொள்[illegible]ன்னை சாந்தமான பெண் என்று [illegible]லவது எளிதில் பெறமுடியாத மகாபெரிய கௌரவம்.

59. புன்னகை யொளிர் வதனம்

எப்பொழுதும் உன் முகம் புன்னகை ததும்பியதாய், கம்பீரமான சாயலாய், அன்பு நிறைந்த நேத்திரங்களோடும் பிரகாசிப்பதாய், லக்ஷ்மீகரமாய் விளங்கட்டும். உன் மனம் வாடி யிருந்தாலும், முகத்தில் அதைக் காட்டிக்கொள்ளாமல் கம்பீரமாகப் புன்னகையோடும் நில். உன் முகத்தின் லக்ஷ்மீகரமானது உன் வாழ் நாளையே லக்ஷ்மீகரப் படுத்தி உனக்கு மேன்மை செய்யும்.

60. ஸ்திரீ ரத்தினங்கள்

உலகத்தை அலங்கரிப்பவர்கள் ஸ்திரீ ரத்தினங்கள் தான். பெண்ணால் தான் ஒரு குலம் விளங்குகிறது. பெண்கள் ஒருபோதும் தாழ்ந்தவர்களல்ல. கடவுளின் அருள்

பெண்களின் மூலமாகத்தான் உலகத்துக்கு வருகிறது. நாம் என்ன பெண்தானே என்று நீ உன்னைக் குறைவாகச் சொல்லிக்கொள்ளாதே. எல்லா சக்திகளும் பெண்மணிகளிடம் தான் அடக்கம். உலகத்தின் அழகைப் பெண்களிடத்தும், புஷ்பங்களிடமும், நீல வானத்திலும் கடவுள் காட்டியிருக்கிறார். என் அடி அமச் சிறுமியே! பாலகியே! நீ தான் இந்த உலகத்தை இனி தாங்கப் போகிறாய். பெரிய பண்டிதையாகப் போகிறாய். ஸகல பாக்கியங்களும் உனக்கு உண்டாகும். உலகம் உன்னை நம்பி எதிர்பார்த்து நிற்கிறது. இப்போது நன்றாகக்கல்வி கற்று அறிவில் தேர்ச்சி பெறு. பிற்காலத்தில் ஸகல மங்களங்களும் உனக்கு உண்டாகும். பெண்கள் தமது அறிவை வளர்த்தால் வையகம் பேதமை தீர்ந்திடும். தொட்டில் ஆட்டும் கை தான், உலகத்தையும் ஆளுகிறது. ஸர்வலோக சரண்யராகிய ஜெகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக. சுடம்.

முற்றிற்று.

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18. | கிரிச்சி: ஜூன்—மீ 1922 | இதழ்-4.

பாரிஜாதம் என்ற கன்னிகை மனத்தால் ஒருவனிடத்தும் முகத்தால் ஒருவனிடத்தும் காதல்கொண்ட விநோதம்.

அத்தியாயம்—1

அங்கும் அவா, இங்கும் ஒரு பார்வை.

ஆநந்தமயமான சந்திரிகை! சாலையின் இருமருங்குள்ள செடிகொடிகளின் மீது மனோகாமான மந்தமாருதம்! அங்கோர் ரமணீரத்நம்! அப்பெண்மணியின் திருஷ்டி வேறோர் திக்கையும் நோக்கவில்லை. பாய்ந்து வரும் அலைகளையே ஸதா பார்த்தவண்ணமாய், ஸமுத்திரத்து மணற் பரப்புகளின்மீது உட்கார்ந்திருந்தாள். அடர்ந்து நெருங்கிக் கணுக்கா·லளவும் வளர்ந்து தொங்குகின்ற கருத்த மேகம் போன்ற கூந்தலும், மிகுவனப்புடனும் சோபிக்கின்ற மேனி யழகும், கருத்த விழியும், சிறுத்த இடையும், எடுத்த தனபாரத்தையும்கொண்டு தனக்கொப்பாருமிக்காரு மில்லாதவளாய்த் துலங்கினாள். சிறிது நேரத்திற்குப் பிறகு தூரத்தில் ஒரு படகு தென்பட்டது. தக்ஷணமே அத்யாநந்தபரவசையாய் எழுந்து நின்றாள். தோணியும் கரையின் ஸமீபம் சேர்ந்தது. மோஹனரூபனான ஒரு யுவகுமாரன் அதனின்றும் இறங்கி வந்து அத்தருணியின் எதிரில் நின்றான். ஒரு நிமிஷகால பரியந்தம் வார்த்தையே யில்லை. எப்படி யிருக்கும்? கடிதமா இது?—மனம்போல் சரமாரியாக என் பிராணநா! காதலா! நேசமே—என எழுதிக்கொள்ள? கண்ணோடு கண்ணோக்கு ஒக்கும் சந்தர்ப்பமன்றோ இது? சந்திக்குமுன்னால் தான் ஆயிரம சிந்தனைகள்! இப்போது அவை எங்கோ மாயம்! இருவருள் முன்னம் உரை

1. அமர்ந்துள்ள ஸ்தானத்தால் சிலருக்குக் கௌரவம். தங்களால் அந்தஸ்தானத்திற்குக் கௌரவம் கொடுப்போரும் உளர்.

யாடுவதெவர் என்பதும் ஒரு சிறு வாதம். சில நிமிஷங்கள் நிசப்தம்—பாவசபூர்த்தி இன்பம்! இறுதியில் பயனற்றதொரு பதத்தைத் தங்கள் பேச்சின் துவக்கத்திற்கு உதவியாகக் கொள்தல். பின்னர் அவர்தம் பொன்மொழிகள் தம்மில்தாமே பிரவகித்துக்கொள்ளும். இங்ஙனமே சில நிமிஷங்கள் கழிந்தபின் மேல் யுவகன் அருகே நெருங்கி, பெண்மணியின் தோள்மீது தன் கையை வைத்துப் பேச முயன்றான். ரமணிரத்நம் அதற்கு இணங்காது நாணம் காட்டித் தூரவிலகி நின்றாள்.

யுவகன்.—"பாரிஜாதம்! என் இத்தனை நடுக்கம்? இவ்விதம் விலகுவதின் பொருள் என்ன! என் அன்பில் ஐயமோ? எனது தீபாந்தர ஸஞ்சாரத்தில், உன்னினும் சிறந்த ஸௌந்தர்யவதிகள் கிடைத்து உன்னை மறந்துவிடுவேனென்ற கலக்கமோ? அத்யந்த அதிகமான இன்பம் ததும்பி நிலவுவது காதலொன்றில் தான். சிருஷ்டியின் தீர்க்க ஜீவியத்திற்கும்—அநாதியுழி நிலைத்திருப்பதற்கும் காதலே ஆதாரம். மந்தமாருதம், குளிர்ந்த தென்றல், வெண்ணிலவு, பூம்பந்தர்கள், உத்தியானவனங்கள், கேளிதடாகங்கள், கிளி குயில் வண்டொலிகள், மிருகபட்சி முதலியவற்றின் இரட்டைகளை நோக்குதல், சரசங்கள், சல்லாபங்கள், பிரிய வசனங்கள், இளமுறுவல் வலைகள், கதைகள், கேளிக்கைகள், பரிகாசங்கள் ஏக சயனம், ஏகாந்த ஸ்தலம், ஒன்றாயுண்ணல் — இவைபோல்வனவற்றாலும் உல்லாஸமதிகரித்துக் காதல் மேன்மேலும் பெருக்கமுறும். அடிக்கடி பிரிந்து சந்தித்தலாலும் காதல் பெருகி மிகுதிப்படும். நாம் பிரிவாலெய்திய துயர் போதும். இன்னும் தூர விலகல் ஏனோ?"

பரிஜாதம்:—"எனக்கு உமது அன்பைப்பற்றிய விஷயத்தில் கிஞ்சித்தேனும் ஸம்சயமில்லை. ஆனால்—"

யுவகன்:—"சரி சரி, விளங்கிற்று. அதோ அங்கு காண்கின்ற தீவுகளுக்குச் சென்ற பிறகு எனது மனது எவ்விதமாகிறதோ என்று சந்தேகம்?—இவ்வளவு தானே?"

பாரிஜாதம்:—"எப்பொழுதும் அத்தகைய ஸம்சயங்கட்கு நான் இடங்கொடுப்பதில்லை. ஆனால் நீங்கள் அடிக்கடி அந்த அகாதமன ஆபத்துகளுக்கு வாஸஸ்தலமாகிய ஸமுத்திரத்தின் மீது ஸஞ்சாரம் செய்வதால் நான் எப்படித்தான் ஸந்தோஷ சித்தமுடையளாயிருப்பேன்? பிரேமமான தங்களின் பிராணபதிகளைத் தூரதேசங்கட்கு அனுப்பிவிட்டு, அவர்கள் படும் துரவஸ்தையை—வாதனையை—அந்தப் பரமகருணாநிதி தான் அறியவல்லார்."

---

2. நீ செய்த கெடுதிகளுக்கு, உன்மனதை நீயே கேட்டுக்கொண்டால் என்னைவிடஸ்பஷ்டமாகப் பதில்சொல்லும்.

யுவகன்:—"நுண்ணறிவுடைய நங்காய்! என் எஜமானனிடத்து எனக்குள்ள ஒப்பந்தக்காலம் முடியுமும் வரை அவருக்குப் பணிந்தே யாகவேண்டும். ஆயினும் ஒரு விஷயம்; இக்கடலில் எத்தகைய கஷ்டங்கள் வந்துற்றாலும், நிவர்த்தி செய்துகொள்ள வல்லமையுடையேன்."

பாரிஜாதம்:— "உமக்கென்னவோ சமுத்திரத்தின் அலைகள், சண்டமாருதம், இடி, மின்னல், இவைகள் கேவல ஸாமான்யங்களாயுள்ளன. ஆயினும் அன்றொருநாள் தோணி யுடைந்து அனுதையாய்க் கரையேற என் ஆதரவிணயால் உயிர் பிழைத்தீர். அதை இப்போது நினைப்பின் எந்த நேரத்தில் என்ன சம்பவிக்குமோ வெனத் திகிலாகின்றது."

யுவகன்:— "ஆ! அதை இன்னும் நினைவில் வைத்திருக்கின்றாயா? அன்றுதான் நினது சந்திப்பும் முதன்முதல். என் நண்பன் விஜயரங்கம் ஸமுத்திரவசமான அந்நியச் செய்தியும் அன்று தான் நான் உனக்கு உரைத்தது. விஜயரங்கத்திலும் அதிகமாக உன்னை நான் காதலிக்கின்றேன். பதினொரு மாதங்கள் பொறு. என் ஒப்பந்தம் தீர்ந்துவிடும். பின்னர் இந்தக் கடற் ஸஞ்சாரம் இல்லை."

பாரிஜாதம்:—"சமுத்திரப் பித்தமே விஜயரங்கத்தை என்னிடத்திருந்தும் பிரித்தது. என் கண்ணிற்கினியானை—என் கற்பகத்தை இனி நான் காண்பதேது? நான் ஒரு சிற்றரசரின் தமயன் மகளாய் இருப்பதனால், ஒரு அரசனையே மணப்பாளென்று என் தோழிகளெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். விஜயரங்கமும் அதற்கு ஏற்றபடி நின்றார். அவரது கடல் யாத்திரையில், காற்றின் பிரதியொரு சலனமும், ஸமுத்திரத்தின் பிரதியொரு அலைகளும் என்ன விபத்தை யுண்டாக்குகின்றதோவெனக் கலங்கி நின்றேன். முடிவும் அவ்விதமே ஆயது. நீரும் அந்த அன்பனையொத்து ஸமுத்திர பக்ஷியாக நிற்பதில், பாவி நான் படும் வாதை பரமனே யறிவார்."

யுவகன்:— "எல்லாம் ஆயிற்று, இனி பதினொரு மாதங்கள் தாம், பிறகு விடுதலை. அதுவரை பொறு."

பாரிஜாதம்:— "அதன் பிறகாவது நீர் ஸமுத்திர யாத்திரையை விட்டு விடுவீரல்லவா? ஸாகரத்தின் கொடிய காற்று, பயங்கர அலை இவற்றின் பீதிகளல்லாமல், கிராமாந்தரங்களில் பிரவேசித்து, ஜனங்களை ஹிம்ஸித்தும், களவு செய்தும், அடிமைப்படுத்தியும் கொடூரம் புரிகின்ற கருணையற்ற பாபியான கடற்கள்வனுடைய உபத்திரவமும் வேறு இருக்கிறது. அவனுக்காவது நீர் பயப்படுவதில்லையா?"—எனப் பெருமூச்செறிந்தாள்.

---

3. ஆதியிலிருந்த பரஸ்பரநம்பிக்கை—மித்திரத்துவம் முறிந்துவிட்ட பின்பு மறுபடியும் அது ஒன்றுகூடிவராது. எதிலும் சம்சயமே.

யுவகன்:— "இதுகாறும் அவ்வுபத்திரவத்திற்குத் தப்பியே வந்திருக்கின்றேன். அது தெய்வ ஸங்கல்பம். இனியும் கடவுள் காப்பார். துயருண்டோ துணிவுள்ளோர்க்கே? உன் அச்சம் தவிர். உன் அழகிய கண்களினின்றும் பெருகும் நீரைத் துடை. பெருமூச்சை நிறுத்து. என் தந்தைக்கு நேர்ந்த வியாபார நஷ்டத்தில் யான் இவ்விதம் பிறருக்கு ஐந்து வருஷ ஒப்பந்தத்திற்குச் சிரம் வணங்க ஏதுவாயது. அதில் நான்கு வருடங்களும் ஒரு மாதமும் சென்றுவிட்டன. இனி யிருப்பன சின்னாட்கள் தாம். நான் சொல்வதைக் கவனி. மாலை நேரங்களில் ஸமுத்திரக்கரையில் பச்சை விளக்கின் வெளிச்சம் தோன்றின மாத்திரத்தில் உன் நண்பன் வருவானென்று தெரிந்துகொள். இனி எனக்கு நேரமாயிற்று. விடை கொடு."

என்று அச்சுந்தரிமணியை ஆலிங்கனம் செய்துகொள்ள நெருங்கினான். ரமணி சட்டென்று விலகிக்கொள்ளவே, யுவகனும் மரியாதையுடன் தூரநின்று விடைபெற்றுத் தோணிக்குள் குதித்து வேகமாய்ச் சென்றான். இங்ஙனம் தன் பிரியன் விரைவில் விடைபெற்றதற்கு ஆற்றாது, மீண்டும் பாரிஜாதம் கண்ணீர் பெருக்கி, "பிரியா! உன்னை மறுபடியும் காணுமளவும் என் காலம் சோகத்திலேயே கழியவேண்டும்"—எனக் கூறியவாறு மணற்குன்றின் மேல் நின்று தோணி மறையுந்தனையும் தன் அன்பனைக் கண்ணோக்கியவாறு காத்திருந்து, மறைந்ததும் அரண்மனை நோக்கிச் சென்றாள். செல்லும்போது;

"விஜயரங்கம் எங்கே! இந்தக் குலசேகரன் எங்கே? ஒன்றுக்கொன்று எத்தனை தாரதம்மியம்? சில பூனைகள் எலியைப் பிடிப்பதும், கொஞ்சம் பல்லாற் கடிப்பதும், பின்னர் அதை விட்டு, அது சிறிது தூரம் போனவுடன் மறுபடி பிடித்துக் கடிப்பதும் வழக்கம். இது ஒருவித சித்திரவதையேயாம். இதைவிட ஒரே தடவையில் எலியைக் கடித்துத் தின்பது நலமாகும். அல்லது விட்டு விடுவது தர்மமாகும். இதைப் போல் சிலர் தமக்கு ஸ்வாதீனப்பட்ட ஊழியக்காரர்களிடமும், தமது வீட்டிற்கு அன்புடனும் வந்து தம்மைச் சுற்றிக்கொண்டு பாசமாய் நிற்போரிடமும், தன்னைப் பிரீதித்தவர்களிடமும், ஒரு முறை பக்ஷம் பாராட்டுவதும், உடனே கோபம் கொண்டு ஹிம்ஸிப்பதும், மனது நோக நோகப் பேசிக் கடுஞ்சொற்களை வழங்குவதும், சிடு சிடுப்பதும், சில நிமிஷங்கட்கெல்லாம் மறுபடியும் பிரீதி பாராட்டி, தக்ஷணமே கண்டிப்பதுமாயிருக்கிறார்கள். நல்ல பாம்போடு பழகினாலும் பழகலாம்; இத்தகைய துர்க்குணிகளிடம் பழகலாகாது. புலியும் கரடியும் முகர்ந்து பார்ப்பதை முத்த

4. விபசாரம் எத்தனை ரகசியத்திலிருப்பினும், ரோகத்தால் ஆடவரும், கர்ப்பத்தால் பெண்டிரும் அதை வெளியிற் காட்டிக்கொண்டுவிடுவார்.

மென்று நினைக்கலாகாது. திடமென்று பாய்ந்து கொல்லுந்தன்மை அலைவகட்குண்டு. இவ்விதமே இந்தக் குலசேகரனும்—நான் பிரீதிப் பதை யுணர்ந்துங்கூட—என்னை அடிக்கடி விட்டுப் பிரிந்து சென்று விடுகின்றான். இவனுடைய முத்தமும் ஆலிங்கனங்களும் சுவை தருவது என்ன நிச்சயம்? மறுகணத்தில் பிரிவு. துன்பமே துணை. என் சொந்த விஜயரங்கமா யிருந்தாலோ?—இனி அது ஏது? "அங்கும் அவா—இங்கும் ஒரு பார்வை!" சிந்தையை யடக்க வசமோ? என்று பாரிஜாதம் தனளில் தானே கூறிக்கொண்டாள்.

அத்தியாயம்—2.

கவலைப் பேச்சும் காதல் மொழியும்.

ஒரு மாதம் கழிந்தது. ஸமுத்திரத் திருடன் செய்துவரும் கொடுமையான கொள்ளைகளின் விருத்தாந்தங்கள் ஆங்காங்கு பரவிக் கேட்பவரெல்லாம் நடுங்கினர். சிற்றரசனை இராஜநாராயணனுக்கு அவனை அடக்கிவிட சாத்யப்படவில்லை. அவன் கீழுள்ள சேனாதிபதிகள் பலவிதத்தும் அக்கள்வனால் ஏமாற்றமடைந்தனர். பிரதி தடவையும் கள்வனுக்கே வெற்றி.

இவ்விதமிருக்க, ஒருநாள் இராஜ நாராயணனுக்கு அதிர்ஷ்டம் வலுவில் வந்து உதவியதுபோல், எதிரியின் கூட்டத்தைச் சேர்ந்த மாலுமியொருவன் பராரியாக—அநாதையாக வந்து அடைக்கலம் புகுந்தான். இவ்விதம் அங்கிருந்து விலகி வந்ததற்குக் காரணமென்னவென்று அவனை விசாரித்தபொழுது, "இராஜேந்திரா! எங்கள் தலைவன் நடத்திவரும் அடிமைகளின் விக்கிரய வியாபார அநீதம்காணச் சகிக்கலாற்றாது விலகினேன்; அவன் கீழ் உள்ள மிலேச்சர்களின் கொடுமைகளும் மிக மிக. ஆதலின் நான் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன்"—என்று உத்தரம் கூறினான்.

இராஜநாராயணன்:—"ஹே! கள்வனே! உன் எஜமானனை என் கையில் அகப்பட வைத்தால், உன்னுடைய முந்திய துர்க்கிருத்தியங்களைக்கூடக் கடவுள் மன்னித்து விடுவார்."

மாலுமி:—"பிரபூ! தெய்வம் மன்னிக்கும். மனுஷ்யன் மன்னிக்கமாட்டான்."

இராஜநாரரயணன்.—"ஸமுத்திர வாசிகளின் ஹிருதயங்களையெல்லாம் அல்லோகல்லோலம் செய்யும் அம்மகா பாதகனை என் கைக்குள்ளாக்கும் மார்க்கத்தைக் காட்ட முடியுமா?"

---

5. பெண்ணே! உன் கற்பாகிய மாணிக்கத்தை இழந்துவிட்டு மேன் மேலும்படிப்பதனால் ஆம் பயன் என்ன?

மாலுமி:—"முடியும்."

இராஜநாராயணன்:—"அவ்வாருயின், உன்னுடைய முந்திய குற்றங்கள் யாவும் மன்னிக்கப்படும். அன்றியும் உன் ஸம்ரக்ஷணைக்கான ஸகலமும் உதவப்படும். அப்பெருங்கள்வன் எமது சூட்சிக்கு அகப்பட்டவுடனே உனக்கு ஸன்மானமாக 5000 ரூபாயும் கொடுக்கத் தடையில்லை."

மாலுமி:—"ஸ்வாமி! தங்கள் அபீஷ்டம் இப்பொழுதே நிறைவேறுவதாக. இன்றைக்கு ஆரும் நாள் சமுத்திரத்திருடன் இந்த ராமநாதநகரின் மேற்றிசையிலுள்ள தீவில் இறங்கி விவசாயிகளின் தான்யங்களையும், தனராசிகளையும் அவர்கட்கு ஆதாரமாயுள்ள கால்நடைகளையும் அபகரித்துச் செல்லப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிருன். தோணிகள் கரைக்குச் சிறிதுதூரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும். தோணியின் தலைவனும், சில மாலுமிகளும் சிறியதொரு தோணியில் தீவிற்கு வந்து தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். இன்னும் அதிகம் கூறவேண்டுமோ?"

இராஜநாராயணன்:—"சரி. அப்படியானல் அவனைச் சிறைப்படுத்துவதற்கான மார்க்கத்தையும் சூழ்ச்சியையும் ஆலோசிக்கத் தொடங்குகிறேன்."

எனக் கூறித் தன் சேவகர்களை அழைத்து இம்மாலுமிக் கள்வனை என் மறு உத்திரவு வரையிலும் சிறைச்சாலையில் சேர்த்துக் காவலிடுங்கள் என்று ஆக்ஞாபித்தான்.

ஸமுத்திரக் கள்வன் கொள்ளையிடப் போகும் தீவைத் தெரிந்துகொண்ட மறுநாளே இராஜநாராயணன் மதுரையிலிருந்தும் அதிகமான சைக்யங்களை வரவழைத்துக் கொண்டு, அவர்கள் அனைவரையும் மேற்றிசையிலுள்ள தீவில் வியவசாயிகளின் வீடுகளில் மறைவாக இருக்கும்படி கூறி ஏற்பாடுசெய்தான். அன்றியும் அப்பிரதேச வியவசாயிகட்கெல்லாம் இக்கொள்ளை விஷயத்தை விவரப்படுத்தி, அவர்கள் தங்களிடமுள்ள தனம், தான்யம், கால்நடைகள் இவைகளையெல்லாம் கோட்டைக்குள் சேர்த்து ஜாக்கிரதையாக இருக்கவும் உத்திரவிட்டான். விவசாயிகள் இதனுல் எச்சரிக்கை யுள்ளவர்களாகித் தங்களின் ஸர்வ சொத்துகளையும் கோட்டைக்குள் சேர்த்து பத்திரப்படுத்தித் தாங்கள் மட்டும் தீவில் இருந்தனர்.

அத்தினமே சுந்தரியான பாரிஜாதம் உப்பரிக்கையின்மீது விற்று, ஸமுத்திரத்தினிடத்துத் தன் திருஷ்டியைச் செலுத்திக் கொண்டிருந்தனள். திடீரென்று வெகு தூரத்தில் சிறிய

---

6. தானே வைத்துக்கொள்ளும் ஸகோதரத்வ உறவின் முறைகள், உடன் பிறப்பைப்போல் காமத்தை அத்தனைபலமாக எதிர்த்து நிற்பதில்லை.

தோணிபோன்று தென்பட்டது. அதனை இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள். மாலை நெருங்கியதும் பச்சை விளக்கின் வெளிச்சமும் தோற்றியது. பாரிஜாதத்தின் மனது தாளக் கூடவில்லை. சீக்கிரமாக சமுத்திரக்கரை சேர்ந்தாள். யுவகனான குலசேகரனும் அதேகாலத்தில் அவளைச் சந்தித்தான். பரஸ்பரம் ஸல்லாபமான ஸம்பாஷணைகள் நடந்தேறின. அதன் பிறகு,

பாரிஜாதம்:—"சற்று ஆறுதலுடன் கவலை நீங்கிப் பெருமூச்சு விடும் நாள் எனக்கு எப்போது? உங்கள் மனதிலும் சந்தோஷம் வருத்தம் ஆகிய இரண்டும் கலந்திருக்குமென்றே நினைக்கிறேன். நாம் கூடியிருந்தின மினிமே லுண்டாமோ?"

குலசேகரன்:—"பிரியே! ஆக்கப் பொறுத்தது ஆறவும் பொறுக்கவேண்டும். எங்கள் குடும்பத்தின் துரதிர்ஷ்டமே என்னை இவ்விதம் பிறருக்கு அடிமைப்பட வைத்தது."

பாரிஜாதம்:—"என் அன்பனே! நீ சம்பாஷிப்பதைப் பார்த்தால் நிராசையுள்ளவனாகவே காணப்படுகிறாய். ஆயினும் ஸர்வலக்ஷண ஸம்பூர்ணனான நின் வதனம் ஏன் இவ்விதம் ஒளி மழுங்கி மாறுகிறது? உன் மனதில் ஏதோ ஒரு களங்கம்—தீர்க்க சிந்தனை—விசாரம் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இப்பொழுது சந்திரன் மேகத்தினால் மூடப்படாதிருந்தால் உமது முகக்குறி இன்னும் நன்றாகத் தெரியவரும்."

குலசேகரன்.—(சிறிது நகைத்து) "பிரியே! வெகு நன்றாக ஊகித்தாய். சிலருக்குப் பிறர் மனத்தின் கண்ணுள்ளனவற்றையெல்லாம் சொல்லக் கூடிய ஸக்தி எவ்விதமோ அமைந்திருக்கின்றது. முகத்தைப் பார்த்தளவில் ஒருவருடைய குணத்தை உடனே கிரகித்து விடுகிறார்கள். பஞ்சபூதங்களினா லாக்கப்பட்ட இம்மானவ சரீரத்தினுள் ஏதோ ஒரு ஸக்தி குடிகொண்டிருந்து, மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளினால் வெளியுலகத்து ஞானத்தைக் கிரகித்துப் புத்திக்கும் சுகதுக்க முதலியவற்றிற்கும் இருப்பிடமாய், காரிய காரணத்திற்கு மூலமாயிருப்பதாகப் பிரதி நிமிஷமும் நமக்குப் புலப் படுகிறது. இவ்விசித்திர சக்தியை மனம் என்று சொல்லப்படுகிறது. தேகத்தில் பிராணனுள்ள வரைக்கும் மனதின் மகிமை யநேக விதங்களாய் நமக்குத் தெரியவருகிறது. சிருஷ்டிமர்மங்களெல்லாவற்றிலும் மிகவும் இரகசியமானவை மனோமர்மங்கள். அதனில் நீயும் மிகு நிபுணிகை. அதனால் தான் என் மனோநுட்பமும் உணர்ந்தனைபோலும்! எனக்கு மனோவிசாரம் வேறென்ன விருக்கிறது? உனக்கும் எனக்கும் நடுவி

7. தீங்கு செய்தவன் முன்பாக அவன் தீமையை எடுத்துக்கூறின், ரத்தமுள்ள எந்த மனிதனுக்கும் கொதிக்காமலிராது.

லுள்ள நிர்ப்பந்தத்தை நிவர்த்திசெய்துகொண்டு, உன் தோள்மேற் சாய்ந்து ஆநந்தமயமான அந்தப் பரிபூரண சுகத்திற்கு எப்பொழுது உரியவனாயிருப்பேனோவென்ற விசாரமே தவிர வேறேது மில்லை."

பாரிஜாதம்:—"எவருடைய பிரேமையினால் உமக்குப் "பூர்ண சுகம்" பிராப்தமாக இருக்கிறதோ, எவள் உமது பிரீதியே பரம பாக்கியமென்று தெரிந்திருக்கிறாளோ, அவருடன் சுகமாக இனி ஸமுத்திர ஸஞ்சாரத்தை விட்டுவிட்டு வாஸம் செய்வீரா?"

குலசேகரன்.-"தேனை வடித்துச் சொரிந்ததோ நல
பாலுட னொக்கக் கலந்ததோ இது
பினி யிலிட்டுப் பிசைந்ததோ பல கனிதானே"
"*தேடியெடுத்துப் பிழிந்ததோ அவை
பாகு பதத் திற் சமைந்ததோ இவை
சோறுருட்டத் திரண்டதோ இவள் மொழிதானே!"

ஆகா! நின் மதுரமான பாஷிதங்கள் என்னை முற்றிலும் மறக்கச்செய்து விடுகின்றது. இப்படியே உன்னுடன் ஸதா பேசிக்கொண்டிருக்கவே பிரியமாகிறது. ஆனால் ஸம்சார சுகங்களை யெல்லாம் இப்பொழுதே என்னெதிரில் நீ வர்ணிக்கத் தொடங்கினால், என் காரியங்கள் அனைத்தும் நிஷ்பிரயோஜனமாய்விடும். இனி பத்தே மாதங்கள் தான். இப்பொழுது அன்புடன் விடை தாராய்."

பாரிஜாதம்:—"அன்பரே! என் ஆணை. 'இனி 48-மணிநேரம் வரையும் இக்கடலினிடத்து எனக்கு நம்பிக்கையில்லை. அதுவரை நீங்கள் இங்கிருந்து புறப்படாதிருக்கவேண்டும்."

என்று வேண்டிக்கொண்டு, தன் சிறிய தந்தையிடம் ஒரு அநாதையான மாலுமி வந்ததும், கோட்டையில் ஸகலமும் பத்திரப்படுத்தியிருப்பதும், அன்றிரவு நடக்க விருக்கும் ஏற்பாடுகளும் விவரித்துக் கூறி, எவ்விதத்தும் இரவு தங்கிச்செல்லுமாறு வற்புறுத்தினாள்.

குலசேகரன்:—"நாளை இரவு உனது சிறிய பிதாவுக்கு ஒப்பற்ற வெற்றி தான். கடற்கள்வனுக்கு விரோதமாகப் பலத்த சாவி கொடுத்து முடுக்கியாகிவிட்டது. நானும் இங்கு தங்கிவிடுகிறேன். ஆனால் என்னுடன் நீ அதிக நேரமிருப்பது பிறருக்கு சம்சயத்தை யுண்டு பண்ணும்."

பாரிஜாதம்:—"அரண்மனையில் மற்றோர்புறம் தாங்கள் இருக்கலாம். நாளைக்கு மேற்றிசைத் தீவில் கொள்ளை நடப்பது உறுதி. அங்குள்ள வியவசாயிகளின் ஸர்வசொத்துக்களும் கோட்டைக்குள் பத்திரப்படுத்தியாயின. கள்வர்கள் கரை இறங்கியதும் அவர்களுக்கு நாசகாலம் தான்."

---

8. ஒரு நலனும் விளைக்காத—நலத்துக்குப் பதிலாக மனத்தாங்கலே தரிக்கிற சக்தியை நீ மறந்துவிடு.

குலசேகரன்:—"ஆஹா! உன் சிறிய தந்தை அநுஷ்டித்தது வெகு ஆச்சரியகாமான தந்திரம். பாரியாகி வந்தவன் எங்கிருக்கிறான்?"

பாரிஜாதம்:—"அவன் கோட்டையில் பலமான காவலில் வைக்கப்பட்டிருக்கிறான். இச்சூழ்ச்சி நிறைவேறினால் அவனுக்குக் கனத்த ஸன்மானம் கிடைக்கும்."

குலசேகரன்:—"அவனது ஸன்மானம் இருக்கட்டும். அாருக்கும் எவ்வளவோ கீர்த்தியுண்டாகும். சரி, நேரமாயது, நாம் பிரிவோம். நகர விநோதங்களைப் பார்த்துவிட்டு, இவ்வூர்க்குடிகளில் ஒருவன்போல் அபிநயித்து அரண்மனை வாசலில் உறங்கி நாளைமாலை சந்திக்கிறேன். உன் சிறியதந்தைக்கோ "கவலைப் பேச்சு." உனக்கோ "காதல்மொழி."

பாரிஜாதம்:—"ஆ! பிரியவேண்டுமா? இந்தப் "பிரிதல்" என்ற சப்தம் எந்தப் பாஷையில் இல்லையோ, அந்தப்பாஷையே ஸர்வோத்தமமானது. பிரிதல் என்ற பதத்தை நிர்மாணம் செய்தவனுக்குத் தருணீமணிகளுடைய சாபம் இல்லாமல் போகாது."

அன்பின் அறிகுறியாக அநேக பிரதிக்ஞைகள் செய்து கொண்ட பின் இருவரும் பிரிந்தனர். குலசேகரன் தோணியிலூர்ந்து செல்வதைவிட்டு நகர விநோதங்களைக் காணச்சென்றான்.

அத்தியாயம்—8

கடற் கள்வரின் ஸமத்காரம்

இராஜ நாராயணர் அனுப்பிய சிப்பாய்கள் அன்றிரவே மேற்குத் தீரத்தின் பிரதேசத்தில் ஒரு விசாலமான வீட்டில் கூடியிருந்தனர். அச்சிறிய சைந்யத்தின் சேனாபதி யாவரையும் சந்தடியின்றி உள்ளே இருக்கும்படியும், கொள்ளைக் கூட்டத்தார் கட்டடத்தினுட் பிரவேசித்த பிறகே அவர்களின்மேல் விழுந்து கைது செய்யவேண்டுமென்றும் ஆக்ஞாபித்திருந்தான். இதனால் கஷ்டமில்லாமல் சத்துருக்களைக் கைப்பிடியாகப் பிடித்துச் சிறைசெய்யலாமென நம்பியிருந்தான். சிப்பாய்களுக்கெல்லாம் சோரக்கப்பலின் திரவியங்களைக் கொள்ளையடித்து ஐச்வரிய ஸம்பன்னர்களாகலாமென்று ஆசை காட்டினான். அதனால் அவர்கள் அனைவரும் சேனாபதி

---

9. உன்பொறுமைக் குணமே உன்னைத் தூரத்தூரத்துகிறது. அருகிவிருந்து பார்க்க உனக்கு சகிக்கவில்லை.

யின் ஆக்ஞைக்கு விசேஷமாகக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளத் தயாராக இருந்தனர்.

சூர்யோதயமாயிற்று. பகலும் கழிந்தது. இரவும் நெருங்கியது. கொள்ளையடிக்கும் காலமும் சமீபித்தது. சமுத்திரக் கள்வனின் கப்பலைப் போன்றதொன்று தூரத்தில் தென்பட்டது. சரணாகதி யடைந்த எதிரியின் மாலுமி கூறிய வாக்கு சத்தியமானதென்ற நம்பிக்கை சிப்பாய்களுக்கு உண்டாயிற்று. அப்பொழுதே சேனாதிபதி வெற்றி கிடைப்பது நிச்சயமென்று தீர்மானித்தான். பிரதான சேனாதிபத்யம் துரிதமாகவே தனக்கு லபிக்குமென்று மகிழ்ச்சிகொண்டான். சிப்பாய்களோ கொள்ளையினால் கிடைக்கப் போகிற திரவியத்தின் மீது ஞாபகமா யிருந்தனர்.

இராஜநாராயணன் தன்னுடைய ஸமத்காரத்தினால் லோக பயங்கரனாயிருந்த சமுத்திரக் கள்வனின் பீதியை மாலுமிகள் அனைவருக்கும் நிவர்த்தித்தான் என்னும் கீர்த்திப் பிரதாபம் எப்பொழுது தனக்குப் பிராப்தமாகுமோ, எந்த நிமிஷம் கள்வன் அகப்பட்டான் என்ற வர்த்தமானம் வருமோ என்று தனது அரண்மனையில் எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

பரிஜாதம் தனது பிரியனின் வார்த்தைகளை யெல்லாம் ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்குக் கொண்டுவந்தும், ஒருதரம் புன்னகை காட்டியும், மற்றொருதரம் கோபித்தும், இன்னொருதரம் பெருமூச்செறிந்தும், வேறொருதரம் பலவாறு சந்தோஷ மடைந்தும் குதூகல சிந்தையுடன் அரண்மனையின் ஓர்பால் வீற்றிருந்தாள். அரசரின் விசேஷ ஏற்பாடுகளினால் அவள் ஸமுத்திரக் கரைக்குச்சென்று தன் அன்பனைக் காண அன்று கூடவில்லை. அரண்மனையிலிருந்தும் எவரும் வெளிச் செல்லலாகாதென அரசரால் ஆக்ஞையிடப்பட்டிருந்தது. ஆயினும் குலசேகரன் அந்நகரிலேயே இருந்தமையால் மாலைப்பொழுதில் வெகு கஷ்டத்துடன் பலகணிவாயிலில் தன் முகத்தைக் காட்டி ஸமிக்ஞை செய்துவிட்டு மறைந்தனன். பரிஜாதமும் பெருமகிழ்ச்சியிற் பூரித்தாள்.

அன்றிரவு தீபம் வைப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு "ராம்ராம் சீதாராம்" என்ற தொனியொன்று திடீரெனக்கிளம்பிற்று. யாவரும் காரணம் அறியாது திகைத்தனர். அந்நேரத்திற்குச் சரியாகத் திட்டிவாசல் வழியாய் எவனோ ஒருவன் தீனஸ்வரத்துடன் சத்தமிட்டுக்கொண்டு வருவதானான். உடனே மூன்று நான்கு சிப்பாய்கள் அவ்விடத்தை நோக்கி நடந்தனர். அதற்குள்ளாக அவன் விபரீதஸ்வரத்தில் தொண்டையில் உயிர்விடுபவன்போல் நிலத்தின் மீது விழுந்து விட்டான். சிப்பாய்கள் அவனைத் தூக்கிக்

---

10. ஒருகன்னத்தில் சிறு குழந்தையாக முத்தமிடுகிறாய். மற்றொரு கன்னத்தில் காமுகனாக முத்தமிடுகிறாய், எதை நம்புவது?

கொண்டு உள்ளேசென்றனர். " அரே அல்லா! இந்த காபிரி சாவ தற்கு இருக்கிறான்"—என்று முஸ்லிம் சிப்பாய்களி லொருவன்கூச்ச லிட்டான். அப்பிச்சைக்காரன் ஆடை கிழிந்தவனாயிருந்தாலும் முகம் மட்டும் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தவன்போல் காட்டிற்று. மற்றொரு சிப்பாய், "குறடாவினால் நூறு அடிகள் அடித்தால் அவ னுக்கு ஜீவன் வரலாம்" என்றான். கடைசியில் சேனாதிபதியின் ஸமு கத்தில் அவனை விட்டனர்.

சேனாதிபதியும் இந்த எளிய மனிதனுக்கு இந்தத் துரவஸ்தை வந்ததெவ்விதமென அறிய விரும்பி, அவன் களையாற்றுதற்கு சிறிது பால் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அவ்வெளியவனும் சிறிது நேரத்தில் களைதெளிந்து—இவன் வயிற்றுக்கும் பால் வேண்டியிருக் கிறதா?—என்று கூறிவிட்டு தன் வரலாற்றினை விவரிக்கத் தொடங் கினான்.

"காருண்யர்களே! என் பிராணனைக் காத்தருளினீர்கள். என் நன்றியறிதலை எவ்விதம் தெரிவிப்பேன்? நான் வாழ்ந்த ஒரு மேன் மையும்—தாழ்ந்த சிறுபான்மையும்—ஆஹா! என்னென்பேன்? என் பெயர் ஜெயராமன். இப்பொழுது சில தினங்களுக்கு முன் இத்தீவின் தென்தீரப் பிரதேசத்தில் சமுத்திரத் திருடர்கள் நுழைந்து, என்னுடைய ஸர்வ சொத்துக்களையும் அபகரித்துக் கொண்டு எனக்கு வீடு வாசல் ஒன்று மில்லாமல் செய்துவிட்டார் கள். நான் பிறந்து வளர்ந்த வீடு நெருப்புக்கு இரையாயிற்று. அதிலிருந்து இதுவரையிலும் உடுக்கத் துணியற்றும், உண்ணச் சோறின்றியும், நிற்க நிழலில்லாமலும் திரிகின்றேன். இப்பொழுது தங்களின் ஆதரவை கிடைக்காதிருந்தால் என் பிராணன் தீர்ந்தே இருக்கலாம். அதற்குள்ளாகத் தாங்கள் காப்பாற்றினீர்கள்"—என்று கூறினான். தக்ஷணமே சேனாதிபதி வெகு அவசரத்துடன், "அடே! சீக்கிரம் சொல். அந்தக் கள்வர்கள் முஸல்மான்கள் தானே?" என்ற னன். அதற்கு ஜெயராமன்—"அவர்களில் முஸல்மான்கள் எவ ரும் இருப்பதாகத் தோன்றவில்லை"—என்று விடை இயம்பினன். இதைக் கேட்டவுடன் சேனாதிபதிக்கு நிரம்பவும் கோபம் தோன்றி நெரநெர வென்று பற்களைக் கடித்து"—"ஆ ஆ! அப்படியானால் அவர் கள் காட்டுக் குறவர்களாகவே இருக்கலாம். இருக்கட்டும்; அவர் கள் நமது கைவசம் ஆவதற்கு இன்னும் சிறிது பொழுதே இருக்கி றது. அப்பொழுது நீ அக்கள்வர்களின் முகங்களின் மீது மனந் தணியும் வரையில் உன் கோபத்தைத் தீர்த்துக்கொள்"-என்றனன்.

---

11. நாம் செய்த காரியங்கள் அவருக்குத் தெரியாதென்று நினைத் திருப்பின் அதை இன்றுடன் விட்டுவிடு, வஞ்சனை எவ்விதமும் வெளி வரும்.

அதற்கு ஜெயராமன்,"எனக்குப் பழி தீர்க்கவேண்டிய அவசியமில்லை. சிறிது காலம் தங்களுடனேயே வசிப்பதற்கு எனக்கு அநுமதி யருளினால் மகா பாக்கியம். ஏனெனில் தங்களின் அன்பான மொழிகள் ஒடிந்துபோன என் நெஞ்சுக்குப் புது ஊக்கத்தைப் புகட்டுகின்றன. தாங்கள் இப்பொழுது இவ்வளவு செய்தால், சிறிது நாள் சென்ற பிறகு இத்தீவின் வடக்கு தீரத்தில் வாசமாயுள்ள என் பந்துவிடத்தில் சென்று விடுகிறேன். அவன் என்னைக் காப்பாற்றுவான்"—என்றனன்.

சேனாதிபதி:—"அவ்விதமே ஆகட்டும். இன்றிரவு நடக்கும் வேடிக்கையில், உன் ஸர்வசொத்துக்களையும் அபகரித்துக்கொண்டவர்களின் மேல் பகையை முடித்துக்கொள்வதற்கு உனக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கும். நாளை விடியு முன் நமது கைவசமாய் விடுவார்கள்" என்று வெகு உத்ஸாகத்துடன் கூறினான்.

அதற்கு ஜெயராமன்—"கடவுள் உமக்கு ஸம்பூர்ணமான வெற்றியைக் கடாக்ஷிப்பாராக" என்றனன். இந்த ஸம்பாஷணைகளுக்குப் பிறகு, சிலர் உக்கா குடித்துக்கொண்டும், வேறு சிலர் சிரம பரிகாரார்த்தம் அங்கும் இங்குமாக ஸபனித்துக்கொண்டும் இருந்தார்கள். சேனாதிபதி உக்கா குடித்த பின்னர், நிரக்கப் பால் விட்ட சுவாஸனையுள்ள ஒரு டம்ளர் காபியைப் பருகிவிட்டு அப்படியே ஒரு திண்டின்மீது சாய்ந்தான். தக்ஷணமே என்று மில்லாத பெருந்தூக்கம் வந்து குறட்டையிடவும் ஆரம்பித்தான். இரவு ஒன்பது மணியாயிற்று. போஜனத்திற்காக யாவரும் அழைக்கப்பட்டனர். சேனாதிபதியும் நித்திரை கலைந்து எழுந்தான். அத்தருணம் ஜெயராமன் சேனாதிபதி தனக்குச் செய்த உபகாரத்திற்குப் பிரதிபாகத் தனது நன்றியறிவைக் காட்டுவதற்காகத் தான் அவனுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்னும் உத்தேசத்தை விண்ணப்பித்துக் கொண்டான். சேனாதிபதி அவனது நடத்தைக்கு மகிழ்ந்து அவன் பிரியம்போல் சம்மதித்தான். போஜன ஸமயத்தில் ஜெயராமன் மிகுந்த வணக்கத்துடன் பணிந்துநின்று, பதார்த்தங்களைத் திருப்தியாக உண்டு கையலம்பினான். இவற்றையெல்லாம் பார்த்துச் சேனாதிபதிக்கு நிரம்ப சந்தோஷமாயிற்று. பிறகு ஜெயராமன் சேனாதிபதிக்காக தனது சொந்தக் கைகளால் தயார் செய்து கொண்டு வந்த குங்குமப்பூ முதலியன கலந்த திவ்யமான பாலைக் கொடுத்தான். அதைப் பருகியானதும்,புதுவிதமான உக்கா தயாரித்துச் சேனாதிபதியின் முன்பு வைத்தான்.சேனாதிபதி அதைப் பாதி குடித்துக்கொண்டிருக்கும் பொழுதே ஜெயராமன் தைரியத்துடன்

12. உன்ன ரகசியத்தை தவெளியிலிழுப்பதற்காக அப்படிப்பேசினையா? உண்மையில் உதவி செய்யப் பேசினையா?

வெளியில்வந்து ஒற்றைக்கால் வழிப்பாதையை யனுசரித்து வேகமாக நடக்கத்தொடங்கினன். சிறிதுதூரம் சென்றபின் திரும்பிப் பார்த்தபொழுது, தான் விட்டு வந்த இடத்தைச் சுற்றியும் விளக்கொளிகள் தோன்றின. அங்கிருந்தவர்களெல்லாம் தன்னையே தேடிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. "நீங்கள் எப்பொழுதும் என்னைத் தேடிக் கண்டுபிடிக்கமாட்டீர்கள்" என்று கூறிக்கொண்டே விரைந்து நடந்து சென்ருன். காபியையும் உக்காவையும் பருகிய சேனதிபதியோ தன்னையே மறந்து சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்மரணையற்றவனுப்க் குறட்டையிடத் தொடங்கினன்.

இதுநிற்க, அந்தப் பரதேசியாகிய ஜெயராமன் மற்ருேரிடத்தில் நின்றுகொண்டு எதையோ உற்றுக் கேட்டான். பிறகு யாரோ சிலர் வரும் காலடிசப்தம் உண்டாயிற்று. அவ்விடமே அசையாது நின்று கவனித்தான். சில நிமிஷங்களுக்கெல்லாம் ஐம்பதுபேருக்கு அதிகமான கூட்டமொன்று ஸமீபத்தில் வந்தது. அவர்களெல்லாம் மிகவும் பாரமான மூட்டைகளைச் சுமந்துகொண்டு வந்தார்கள்.

ஜெயராம வேஷதாரி அக்கூட்டத்தின் முகமாகத் திரும்பி—"என்ன இவ்வளவு சீக்கிரத்தில் வேலையெல்லாம் முடிந்ததா?"—என்று வினவினன். அதற்கு அக்கூட்டத்தின் தலைவன்—"கோட்டைக்குள் எங்களைத் தடுத்தவர் வெகுசிலரே. ஒரேயொரு மனிதன் எங்களைப் பலமாக எதிர்த்தான். அவன் தனது தீரத்தைப் புகழ்ந்துகொண்ட சொற்களால் குலசேகரன் என்பது அவனது பெயராகத் தெரிந்தது. நெடுநேரம் சண்டையிட்டு இனித் தன்னால் ஆகாதெனக் கண்டதும் ஒடி மறைந்தனன். இராஜ நாராயணனே நாம் முதன் முதலாக அவனிடம் அடைக்கலம் புகும்படி அனுப்பியவன் கூறிய மொழிகளை முற்றிலும் நம்பி தன் சேனைகளில் ஒருவரையும் பாக்கி விடாமல் யாவரையும் மேற்றிசைத் தீவுக்கு அனுப்பிவிட்டான். கோட்டையில் ராணுவமேயில்லை. சில சிப்பாய்களேபாராகொடுத்து நின்றனர். ஆதலின் கோட்டைக்குள் எங்களை எதிர்த்த சிலரை நொறுக்கிவிட்டு, ஏற்கெனவே அங்கு காவலில் இருக்கிற—நாம் அடைக்கலம் புகும்படி விட்ட நமது மனுஷ்யனை—விடுவித்துக் கொண்டுவந்தோம். அவன் மூலமாக எல்லா இருப்பிடங்களையும் தெரிந்து கொண்டோம். அவனையும் குலசேகரன் மாலையில் சந்தித்து "நீ உளவு மனிதனு?" என்று பல கேள்விகள் கேட்டுச் சென்றனனும். இவனுக்கு இங்கு என்ன உத்தியோகம் என்று தெரியவில்லை. பின் அங்கிருந்த தனராசிகள் அனைத்தையும் மூட்டை கட்டிக்கொண்டு திரும்பிவிட்டோம். நாங்கள் வந்ததும் போனதும் எவருக்குமே தெரியாது"—என்ருன்.

---

13. இருந்திருந்து எந்த இடம்பார்த்துக் கொள்ளிவைத்தாய்? இதைவிடக் கழுத்துக்குத் தூக்குக்கயிறு வேறென்னவேண்டும்?

இந்த சமயத்தில் முன்பு இராஜநாராயணனால் காவலில் வைக்கப்பட்ட மாலுமி நமது வேஷதாரியின் முன்பு வந்து வணங்கினான். குலசேகரன் தன்னைச் சம்சயித்துக் கேட்ட வினாக்கள் தன்னைக் கலங்கவைத்த தென்றும், மற்றொரு தடவை வந்து அவனை எவ்விதத்தும் ஒழித்துவிடவேண்டு மென்றும் கூறினான். வேஷதாரி அவனைச் சிலாகித்துக் கொண்டான்.

கூட்டத்தின் தலைவன், "பிரபூ! தங்களின் காரியம் யாதாயிற்று?"—என்றான்.

வேஷதாரி:—"சேனாபதி என்னிடம் மிக்க பாந்தவ்யமாய் நடந்து கொண்டதனால் அவனைக் கொல்லாமல், முதலில் காபியில் சிறிது மயக்கப்பொடி தூளியும், பிறகு பித்தனைப்போல் ஸ்வாதீனம் இழக்கக்கூடிய மருந்தொன்றைப் பாலிலும் உக்காவிலும் கலந்து கொடுத்தும் அவனைச் செயலற்றவனாகச் செய்தேன். அதனால் அவன் நினைவழிந்து மயக்கமாய் விழுந்து கிடக்கின்றான். அவனைச் சிறை செய்துகொண்டு செல்லுங்கள். கோட்டையில் கிடைத்த திரவியங்கள் அபாரமானது தானே?"

கூட்டத்துத் தலைவன்:-"அபாரமானதினாலேயே, தங்கள் உத்தரவுப்படி எவரையும் சிறை பிடிக்கவில்லை."

பிறகு நடக்கவேண்டிய காரியங்கள் நடந்தன. சேனாபதியைக் குண்டுகட்டாகக் கட்டித் தூக்கிச் சென்றுத் தோணியில் ஏற்றிக்கொண்டனர். நமது வேஷதாரி அவர்களை வெகு உத்ஸாகத்துடன் நடத்திச் செலுத்த யாவரும் கப்பல் போய்ச் சேர்ந்தனர். கப்பலும் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டது. "கடற் கள்வரின் ஸமத்காரம்" தானென்னே!

அத்தியாயம்—4.

மறுபடியும் ஏமாற்றமா?

மறுநாள் விடிந்ததும் இராஜநாராயணருக்கு இவ்விபரீதமான விருத்தாந்தங்கள் எட்டின. அவரது கோபத்திற்கு ஒரு முடிவு காண்பது அரிதாயிருந்தது. தன்னுடைய ரகசியம் வெளியானது எவ்விதம் என்று தெரிவதற் கில்லாமல் மிகுதியும் மனம் கலங்கினர். சிறையில் வைக்கப்பட்டிருந்த கள்வன் வஞ்சகனாயினும் அவன் எவரையும் சந்திப்ப

14. பேசியவார்த்தைகள் காற்றில் பறக்கும். எழுதிய வார்த்தைகள் நின்றுலாவும்.

தற்கின்றி பலமாகக் காவல் செய்யப்பட்டிருந்தான். இராஜ தந்திரங்களும் பரம ரகஸ்யமாய் நிறைவேற்றப் பட்டிருந்தன. இத்தனைக்கும் இடையில் கள்வர்கள் புகுந்து இடம் தெரிந்துகொண்டு கொள்ளையிட்ட மர்மம் எத்துணை ஆழ யோசித்தும் அறியக்கூடவில்லை. பாரிஜாதத்திற்கும் இச்செய்தி வெகு ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. தன் பிரியனுக்கு அச்சமுத்திரத் திருடனால் என்ன விபத்து உண்டாகிறதோ வென்று கவலையுற்று நடுங்கினாள்.

அன்று மாலையில் ஸமுத்திரக்கரைக்குப் பாரிஜாதம் செல்ல அதற்கு முன்னதாகவே குலசேகரன் தலையில் பலத்த காயங்களுடன் காத்திருந்தான். காயங்களுக்கு மருந்து வைத்துக் கட்டப்பட்டிருந்தன.

பாரிஜாதம்.—"அன்பரே! என்ன விபரீத மிது? தலையில் என்ன? காயங்களா?"

குலசேகரன்.—"சமுத்திரக்கள்வன் கேவலம் அல்பன், சாமான்ய மனுஷ்யன். அவன் வெற்றிக் கெல்லாம் காரணம் இராஜ சபையைச் சேர்ந்த எவரோ இரண்டொருவர் அவனுக்கு அந்தரங்க வர்த்தமானங்களை அறிவித்து விடுகிறார்கள்போல் காண்கிறது. அதனால்தான் சுலபத்தில் அவன் வெற்றிகொண்டு விடுகிறான். நேற்றிரவு நானே நேரிலிருந்து எதிர்த்தவன். ஒரு ஐம்பது அறுபது பேருக்கு மேற்பட்ட கூட்டமல்ல. இச்சிறுகூட்டம் ஒரு அரசாங்கத்தின் மீது வெற்றிகொண்டதெனில் அதற்கு சூக்ஷ்ம விஷயம் ஏதோ இருக்கும்."

பாரிஜாதம்.—"தாங்களும் அவர்களுடன் எதிர்த்தீர்களா? உயிர் தப்பி வந்தது என் பாக்கியம்."

குலசேகரன்.—"நான் ஒருவன் மாத்திரம் என்ன செய்ய முடியும்? என் ஸக்திக்கு இயன்றவரையில் எதிர்த்து, பின் நான் பட்ட அடிகளால் மூர்ச்சை வரும்போலிருந்த நேரத்தில் ஓடி மறைந்து விடும்படியாயிற்று."

பாரிஜாதம்:—(வெகு தீனஸ்வரத்துடன்) "மித்திரா! எப்படியோ நமக்கு அபஜயம் சித்தித்தது. கோட்டையின் அந்தரங்கங்களைக் கண்டுகொண்டு யாவும் சுற்றிப் பார்த்துவிட்டுப் பின் அடைக்கலம் புகுந்தவன்போல் ஒருவன் நடித்தான். மற்றொருவனோ மாலைப் போதில் வந்து சைனியங்கள் இருந்த விடத்தில் பிரவேசித்து, சேனாதிபதிக்கு ஊழியம் செய்யும் பாவனையுடன் பாலில் பலமான மருந்தைக் கலந்து கொடுத்து, பிறகு தனது ஜனங்களுடன் வந்து சைன்யங்களை யெல்லாம் சின்னாபின்னம் செய்து, கோட்டைக்குள் பத்திரப்படுத்தியிருந்த தானியங்களையெல்லாம் சூறையாடிக்கொண்டு

---

15. பத்திராதிபருடைய பூர்ண அன்புடன், குற்றங்களையே ஆராய்கிற அவரது எழுதுகோலையும் சம்பந்தப்படுத்திப்பேசாதே, அதுபேதமை, தவறு.

சென்றதுமன்றி, சேனாதிபதியையும் சிறை செய்து கொண்டே கினர். இன்றையதினம் காலையில் அரசரின் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அது எவருடையதோ விளங்கவில்லை. அதனுள் சேனாதிபதியை விட்டுவிட வேண்டுமென்றால், பதினாயிரம் வராகன்கள் பரிகாரமாகக் கொடுக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. மதுரையின் அரசர் தமது சிற்றரசனான இராஜ நாராயணரின் அபஜெயத்தைக்கேட்டு அவர்மீது மிகுதியும் கோபங்கொண்டிருக்கிறார். ஆதலின் மதுரை யரசரின் சேனாதிபதியை மீட்பித்துக் கொள்வதற்காகக் கள்வனுக்கு விடுதலைப்பணம் கொடுத்தே தீரவேண்டும்."

குலசேகரன்:—"உண்மையாகவே உனது சிறிய தந்தை மிக்க அவமானமான இக்காரியத்திற்கு ஒப்புக்கொள்வாரா? ஒருபோதும் இருக்கமாட்டாது. அத்துணை அலக்ஷியமாகச் சற்றேனும் பயமின்றி விடுதலைப் பணம் கேட்கிற அம்மூர்க்கனை எந்தவிதமாக வாகிலும் தண்டிப்பதற்கு மற்றொருதரம் பிரயத்தனம் செய்யாமல் விடமாட்டாரென்று தோன்றுகிறது."

பாரிஜாதம்:—"உமது யூகிப்பே சரியானது. இராஜநாராயணர் வேறொரு யுக்தான தந்திரத்தை ஏற்பாடுசெய்து வைத்திருக்கிறார். கள்வர்களின் தலைவன் நாளை காலையில் இத்தீவின் வடக்குத்திக்கில் கப்பலை நடத்திக்கொண்டு வருவானென்றும், அப்பொழுது இருவர் மட்டும் ஒரு தோணியை ஓட்டிக்கொண்டு அதில் விடுதலைப் பணத்தைக்கொண்டு வந்தால் சேனாதிபதியை விட்டு விடுவதாகவும் வெகு கர்வத்துடன் எழுதியிருக்கிறான். இக்காரியத்துக்காகச் சூதான தோணியொன்று தயார் செய்யப்பட்டு வருகிறது. அது வெளிக்கு சிறு தோணியாகத் தோற்றினாலும், உள்ளுக்குள் அதனில் இருபது ஆட்களுக்குக் குறையாமல் மறைந்திருப்பதற்கு இடவசதியுண்டு. கள்வனின் இஷ்டப்படி இத்தோணியில் பணத்தை வைத்துக்கொண்டு இருவர் மாத்திரம் செல்வர். அவர்களிலொருவன் கள்வனுக்குப் பணத்தைக் கொடுத்து சேனாதிபதியை மீட்பித்துக்கொண்டு திரும்பினவுடனே, தோணியின் அடிப்புறத்திலே மறைந்திருக்கும் இருபது வீரர்களும் திடீரெனக் கிளம்பி ஆயுதபாணிகளாய்க் கள்வர்கள்மீது பாய்ந்து நாசம் செய்வார்கள். இந்தத் தடவை அக்கள்வர் கூட்டத்தார் எவ்விதமும் தப்பித்துச் செல்ல முடியாது."

குலசேகரன்.—"இது வெகு சிலாக்கியமான தந்திரம். இது எவ்விதத்திலும் விபர்த்தமாக மாட்டாது. ஆனால் நான்கூட இருந்து பார்ப்பதற்கில்லை. இந்து நின்றுவிட்ட மூன்று தினங்களு

---

16. உனது ஆத்திரமுள்ள பதிலே உனதுமெய்யான குணத்தை வெளியில் காட்டிவிடுகிறது. நினைக்கும் கேடுதனக்கே என்பது உனக்கே பலித்ததா?

க்கு என் எஜமானன் வட்டிக்கு வட்டிபோட்டு என்னிடத்தில் வேலை வாங்கிவிடுவான். இந்த ஜெய வர்த்தமானம் நான் கேட்பதற்கும் உன்னைப் பார்ப்பதற்கும் இனி வாரம் ஒன்றுவது ஆகும். நான் ஒப்பந்த அடிமை. என் செய்வது?"

பாரிஜாதம்.—"என்ன காரணமோ தெரியவில்லை. நாம் இப்பூமியின்மீது ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்வது இதே கடைசி யென்று என்னுடைய மனதில் ஒருவிதமான பாவனை உதிக்கிறது. நமக்கு ஏன்னவோ ஒரு பெரிய விபத்து ஸம்பவிக்கப் போகிறதாக நிமிஷந்தோறும் அச்சமுண்டாகிறது. பூத பைசாசங்களில் நம்பிக்கை யில்லாதவர்கள்கூட மஸானங்களின் வழியே இரவு நேரங்களில் செல்வதற்கு எவ்விதம் அஞ்சுவார்களோ, அவ்விதமே, இந்தப் பீதிக்குக் காரணமொன்று மில்லையென்று நான் தெரிந்திருந்தாலும் என் குலை நடுக்கத்தை என்னால் அடக்க முடியவில்லை."

குலசேகரன்.—"அன்பே! இவையெல்லாம் காரியத்திற்கு உதவாத பீதிகள். இவற்றை உன் மனத்திலிருந்தும் அகற்றிவிடு. ஒரு வார மில்லை. அதற்குள்ளாகவே நாம் இருவரும் சந்திக்க முடியும். எவ்விதமேனும் என் எஜமானரிடத்து என் முகத்தைக் காட்டிவிட்டால் என் கவலை தீரும். வாரத்திற்குள்தானே சந்திக்கிறேன்."

பாரிஜாதம்.—வாரமா? அதுவரை எவ்விதம் பொறுப்பது? இத்தனை பாடுகளைவிட, எனது சிறிய தந்தையை ஏகாந்தத்தில் கண்டு,எனக்கு உமதுமீதுள்ள பிரேமையை விவரித்து,அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிப்பீர்களாகில், நம்மிருவரின் இஷ்டத்திற்கு அவர் விரோத மேதும் செய்யார். உமது பிரகாஸ வதனத்தில் அவர் மயங்கி விடுவார். நான் இஷ்டப்பட்டிருப்பதை யறிந்தளவில் அவர் தக்ஷணமே சம்மதித்து விடுவார். உமது தந்தையின் கடன்களும் உடனே நிவர்த்திசெய்யப்படுவதுடன், இந்தப் பாழும் பிரிவினைகளும் அடைபட்டுப் போய்விடும். எனது சிறியதந்தை பிரதி சனிக்கிழமைகளிலும் மாலை நேரங்களில் அதோ அங்கு தூரத்தில் தென்படுகின்ற குன்றின்மேல் சாமான்ய மனுஷரைப்போல் ஏகாந்தமாய்ச் சென்று அங்கு இருக்கும் என் தந்தையின் சமாதியை வெகு பயபக்தியுடனும் பூஜிப்பார். கண்ணீர் சொறிவார். அந்த சமயத்தில் அவரவ்வளவு தீனனான மனுஷ்யரே இருக்கமாட்டாரென்று சொல்லவேண்டும். ஆனதால் நீர் யாதோர் தடங்கலுமின்றி அவருடன் அப்பொழுது சம்பாஷிக்கலாம். நாளை மறுநாள்தானே சனிக்கிழமை? அதுவரை என்னுடனேயே இரும்."

குலசேகரன்:—"பெண் பேசச் செல்லும் ஆரம்பத்திலேயே பிச்சைக்காரக் கோலத்துடனும், தந்தை பட்ட கடன்களுடனுமா

17. ஒரு புதிய மானேஜருக்கு அவரது விசேஷ மவுனமே அதிக ஒத்தாசை செய்யும்.

செல்வது? எப்போதும் மூடின கை கோடிபெறும். என் ஈனஸ்திதியை நீயும் மறந்து தெரிவித்துவிடலாகாது. சொந்தத் தாய்மாமனாக, உடன்பிறப்பான ஸஹோதரியாக இருப்பின், அவ்விடங்களில் பெண் கொண்டால் எக்கிலையிலிருப்பினும் பாதகமில்லை. மூடின கை திறக்கப்படினும் இழிவில்லை. எனினும் இங்கு கூடச் சற்றே ஒளிமறைவு தேவைத்தான் படுகிறது. இந்நிலையில் நான் உன் சிறிய பிதாவைக் காண்பது தகுதியன்று. பத்து மாதங்கள் பொறுத்துக்கொள். மேலும் நானே சென்று கேட்பது ஒழுங்கன்று. என் பிதாவின் மூலம் இது நடைபெறவேண்டும். சிறிதுகாலம் பொறுத்துக்கொள். பிரியே! என்னுடைய பிரயாணத்திற்குத் தடங்கலுடையவளாயிருக்கவேண்டாம்.''

பாரிஜாதம்:—''நீர் எவ்வளவு தரித்திரனானாலும், எவ்வளவு தனிகனானாலும் இரண்டும் எனக்கு ஒன்றுபோலத்தான். பத்து மாதங்கட்குப் பின் நீர் அடைகிற செல்வத்தினால் என் அன்பு ஓர் அணுவளவாயினும் அதிகப்படுமென்று எண்ணுகிறீரா? ஒருபோதுமில்லை.''

குலசேகரன்:—''நம்முடைய ஒற்றுமையுள்ள சுகத்திற்கு மானஹீனமான பதங்களாலும், தரித்திரத்தினாலும் தடையுண்டாகாதிருப்பதற்காக நான் இக்கஷ்டங்களுக்கெல்லாம் தலை கொடுப்பதேயல்லாமல் வேறல்ல.''

பாரிஜாதம்:—''பிறகு நான் என்ன சொல்லட்டும்?''

குலசேகரன்:—''பாரிஜாதமே! நான் சென்று வருகிறேன். இங்கு தங்கிய மூன்று தினங்கட்கு எவ்விதமேனும் பொய் கூறியே ஆகவேண்டும். புருடர்கள் பிடிவாதக்காரர்கள் என்று எண்ணற்க. எந்தப் பெண்மணியை அவர்கள் ஆவலுடன் பிரீதிக்கின்றனரோ, கோருகின்றனரோ—அவர்கள் தங்கட்குக் கிடைத்து விட்டால், பிறகு அவர்களையே அற்பமாக நினைத்து விடுவது உண்டானாலும், இன்னும் நீ எனக்குக் கிடைக்கவில்லை. நானும் அப்படி நினைப்பவனல்ல. என் கடமையின் பொருட்டே நான் பிரிகிறேன். காரியமின்றி உறவே கிடையாது. காரணமின்றி அன்பில்லை. எவனும் தன்னைத் தான் மனிதனாக்கிக்கொள்ள முடியாது. பிறர் புகழ—கௌரவம் செய்ய—பெரிய மனிதனாகலாம். சீக்கிரத்தில் திரும்பிவந்து என்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றிக்கொள்கிறேன். யோசனை வேறு வேண்டாம்.

இந்த சம்பாஷணைகளுக்குப் பிறகு இருவரும் உலாவத்தொடங்கினர். உலாவிய வண்ணமாகக் கூறியதையே கூறிக்கொண்டும்,

18. ஹைமை ஹைமைக் கெடுக்கும். சிரிப்பு குடியைக்கெடுக்கும். பொறுமை சகோதரத்வத்தை பிரிக்கும்.

நடந்தபேச்சுகளையே திரும்பத்திரும்ப நடத்திக்கொண்டும் கரை கடந்த காதலின் வயப்பட்டு மெய் மறந்திருந்தனர். பின் பாரிஜாதம் மிகவும் வருந்தினவளாகி அவன் பிரயாணத்திற்கு அனுமதி தந்தாள். குலசேகரன் தோணியில் குதித்துச் சென்றான். பாரிஜாதம் தோணியின் தோற்றம் மறையும் வரையில் அசையாமல் பார்த்தபடியே நின்றிருந்து, பிறகு திரும்பித்திரும்பி நோக்கியவண்ணமாக அரண்மனை சேர்ந்தாள்.

* * * * *

இராஜநாராயணர் சமுத்திரக்கள்வனின் கடிதம் வந்தவுடனே, சாமர்த்தியமுள்ள சிற்பிகள் சிலரை வரவழைத்து, ஒரு தோணியுள் மறைவாக இருபத்தைந்து பேர் ஒளிந்திருக்கும்படியாகவும்; பார்ப்பவர்கட்கு விகற்பம் தோன்றாதிருக்கக்கூடியதுமான ஸமத் காரத்தில் தோணியொன்றை நிர்மாணம் செய்ய ஆக்ஞாபித்தார். அவ்விதமே அதிரகசியமான இடத்தில் அதனைத் தயார் செய்ய ஆரம்பித்தனர். ஓர் இரவும் பகலும் அதே காரியமாயிருந்து வேலையை முடித்து ஆஜர்ப்படுத்தினர்.

இவ்விதம் நிர்மாணிக்கப்பட்ட தோணி கிரமமாகச் செல்ல வேண்டிய ஏற்பாட்டுடன் பிரயாணப்பட்டு வடதிசை நோக்கிச் சென்றது. தன்னுடைய தந்திரம் நிறைவேறுவதைக் கண்ணாரக் காணவேண்டுமென்னும் ஆசையினால், இராஜநாரயணன் வடதிசையின் சமுத்திரக் கரைக்குச் சென்று ஓர் மணற்குன்றின்மீது ஏறி மறைந்திருந்தான். அவ்விடம் வெகு ரமணீயமாயிருந்தது. தூரத்தில் ஸமுத்திரக் கள்வனின் தோணி நின்றிருந்தது. கபடமயமான புதிய தோணி அதனைச் சமீபத்தில் சென்று சந்தித்தபோது இராஜநாராயணன் அதிக குதூகலமடைந்தான். தோணியை நடத்திச் சென்ற இருவரில் ஒருவன் சேனாதிபதியை விடுவிப்பதற்காகக் கொண்டு சென்ற பணப்பைகளையெல்லாம் கள்வரிடம் ஒப்புவித்து முடித்தான். பின்னர் சேனாதிபதியை விடுவித்து வர எதிரியின் கப்பலுக்குள் சென்றான்.

ஒரு நிமிஷத்திற்கெல்லாம் ஒருவித ஊதுகுழலின் சப்தம் கேட்டது. சமுத்திரக்கள்வனது தோணியின் ஒரு கம்பத்தினது நுனியில் பலமான கயிற்றினால் கட்டப்பட்டிருந்த பழுவான வஸ்துவானது யந்திர விசையினால் புதிய தோணியைச் சுற்றிக்கொண்டு மேற்புறத்துக்குச் சரியாக வந்து நின்றது.

---

19. "சுதந்தரமற்ற அக்கா"—என்றால், அது சுயநலமுள்ளவன் வார்த்தையா? தனது தமக்கையின் நிர்ப்பாக்கிய நிலையைக்கூறின், அது சுயநலமா ?

முதலில் பழுவான வஸ்துவையும், பிறகு அதில் பிணைக்கப்பட்டிருந்த வடக்கயிற்றையும், அதைப் பிடித்துக்கொண்டு தயாராயிருந்த மாலுமிகளையும் பார்த்தவுடனே புதிய கபடத்தோணியின் மாலுமிக்கு ஒரிருதயம் பிளந்துபோயிற்று. அவன் திக்பிரமையுடன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அப்பழுவான வஸ்து அதிக வேகத்துடன் புதிய கபடத்தோணியின் மீது திடீரென்று வீழ்ந்து தோணியை அலக்கழித்துச் சிதைத்துக் கவிழ்ந்து விட்டது. தோணியிலுள் இருந்த இருபது பெயர்களும் மற்றும் வஸ்துக்களோடும் சமுத்திர ராஜனுக்கு அடைக்கலப் பொருளாயினர். அவர்களில் ஒருவரேனும் உயிருடன் திரும்பவில்லை.

கள்வர்களுடைய தோணிக்குச் சென்றிருந்த—சேனாதிபதியை விடுவிக்கப்போன—மனுஷ்யனே இவ்விபரீதத்தைக் கண்டதும் திக்குதிசை தெரியாமல் நின்றுவிட்டான். உடனே இவனையும் நிறைவேற்றப்போகும் காரியம் சித்தியாவதைக் கண்டான். கொடியர்களாகிய கள்வர்களின் கையிலிருந்த ஒரு கயிற்றின் சுருணை அவன் கழுத்திலே வீழ்ந்தது. பலமாக அபயக்குரல் காட்டித் தன்னைக் காக்கவேண்டுமென்று இன்னொரு தரம் வாயெடுக்குமுன் அவன் பரலோகப் பிராப்தி யடைந்தான். ஹா! என்ன கொடூர கிருத்தியங்கள்!!

சிறைப்பட்டிருந்த சேனாதிபதிக்கும் இதே கதிதான். இவர்களிருவர் பிரேதங்களும் தோணியின் இருபக்கங்களிலும் அடிப்பாகத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தன. இக்கோரமான காரியாதிகளெல்லாம் முடிந்ததின் வெற்றிக்காக யாவரும் வெகு உத்ஸாகத்துடன் உரத்த சத்தமிட்டுக் கரகோசம் செய்தனர். இக்கொலை பாதகச் செயல்களை யெல்லாம் நேருக்கு நேராகக் கண்டுகொண்டிருந்த இராஜநாராயணன் பட்ட மனோவாதனையைச் சொல்லி முடியாது. அவன் வெகு வியசன ஸாகரத்தி லாழ்ந்தவனானான். "மறுபடியும் ஏமாற்றமா?"

பிறகு அக்கள்வர் தலைவன் தோணியில் சிவப்புக்கொடியைத் தூக்கினான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்தை விட்டகன்று எங்கோ தோணியுடன் மறைந்தான்.

* * * * *

இந்த அபஜெயத்தின் சமாசாரத்தை மூடிவைப்பது அசாத்தியமாயிற்று. இவ்விஷயம் வெளிப்பட்டவுடனே தீவுகளில் வசிக்கின்ற அனைவரும் மகத்தான வியாகூலத்தில் மூழ்கினவர்களானர்

20. "என் புது பதவிக்கேற்ப நேற்றுமுதல் முழுசட்டை யணிந்து புதுமாதிரியாகி விட்டேன். உலகம் நாடகமேடை, இடத்திற்கான உடை. வேஷத்திற்கான நடை."

கள். தங்களுக்கு ரக்ஷகரில்லாமையைக் குறித்து அரசனை வெகுவாக சபிக்கத் தொடங்கினார்கள். இராஜநாராயணனுக்கோவென்றால், தன்னுடைய தந்திரங்களெல்லாம் நிஷ்பிரயோஜன மானதற்கு மட்டற்ற துக்கமும் வெட்கமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. சமுத்திரக்கள்வனுக்கு ஏதோ மந்திர ஸக்தி யிருப்பதாக ஜனங்கள் நம்பத் தொடங்கி நடுங்குவதாயினர். அன்றுமுதல் கப்பல்களொன்றும் தனியாக அச்சமுத்திரத்தில் செல்வதே நின்றிருந்தது. வர்த்தகர்களின் கப்பல்கள் துணைக்காக வேறொரு யுத்தக்கப்பலைச் சேர்த்துக்கொண்டு சென்றன. நாளடைவில் அப்பிரதேசத்தின் வியாபாரமே ஈனஸ்திதிக்கு வந்துவிட்டது. ஓடம் வண்டியில்—வண்டி ஓடத்தில்!

அத்தியாயம்—5.

இந்தப் பிரபு யார்?

மரக்கலக்கள்வன் மாபாவி, சண்டாளன், என்ன கதியிற் போவானோ—ஏது மறியோம் என்று வெந்துருகி அவன்பாற் சீறிச் சினந்தனர் பல்லோர். தீது ஏதும் செய்திலாத எம்மை ஏதுக்கிவ்விதம் செய்தானோ ஏது மறியோம் என மனம் புழுங்கினர் மாக்கள். அவனோ மேன்மேலும் கண்ட வெற்றிகளால் கழிபேருவகையுற்று இன்னும் பெருநிதி திரட்டிடப் பேரவாவினனாய்த் தனது ஸாகச கிருத்தியங்களைப் பன்மடங்கு வளர்த்தும், அநந்தமாய ஊறுபாடுகள் உண்டாக்கினான். எனினும் அவனின் அகங்காரத்துவமே அவனது கெடுங்காலத்திற்கு முதன்மையாகப் பரிணமித்தது. உயர எறிந்த கல் எத்துணை நாழி வானத்திடை நிற்பதோ? அல்லன புரிந்து யாரே வாழ்ந்தார் அவனி மீது? அவர்தம் வாழ்க்கை கல்லின் மேலிட்ட மட்கலமல்லால் வேறு யாது ஆவதோ? போகின்ற காலம் வந்தால் கலங்காத வீரியாயினும் வெல்ல மாட்டுவரோ? ஜலங்காண்கோட்டை, மதில் ஏழ், தலை பத்து, தானிருந்தும் இலங்காபுரி நின்றதோ? உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம், செய்வதனைத்தும் தீது. எண்ணுவதும் ஒரு கோடி. இறுதியிற் சூழ்வினை காலத்திற் சங்கரா! சங்கரா! என்பார் கயவர்.

மதுரையின் அரசரைக் கண்யவந்தனான யுவகனொருவன காண வந்து அந்தரங்கமாய்ச் சந்தித்தான். எவ்விதத்தும் தான்

21. பிந்திய உலகானுபவங்களுக்காகப் பொறுமை என்பதைப் பழகிக்கொண்டுவா. இதைவிட அதிக சோதனைகள் உனக்கு வர இருக்கிறது.

அக்கடற் கள்வனைச் சிறைசெய்து கொணர்வதாக வீரசபதம் இயம்பினன். மன்னனும் அதற்கு இணங்கி ஒரு கப்பலையும் அதற்கான ஆட்களையும் அவன் வசமாக்கினன். அதற்கடுத்த தினத்திலிருந்து கடற்கள்வனுக்கு வெற்றிகள் மறைந்தன. எங்கணும் தோல்வியே பிராப்தமாயது. மேலும் தன்னைக் காத்துக்கொள்தலே கஷ்டமாயிற்று. இறுதியில் எவ்விதமோ தன் கூட்டத்தாருடன் சிக்கிக்கொள்ள விடுதலைக்காக வெகு தீரத்துடனும் போராடினன். காலம் குறுகிவிட்டபோது வெற்றி என்பது யாங்ஙனே? அநேகர் மடிய, எஞ்சிய சில்லோர் சிறையாக, இங்ஙனம் அலங்கோலத்தில் முடிந்தது. சிறைபட்டோர் தம்முள் லோகபயங்கரனை கடற்கள்வனும் ஒருவனாயிருந்தான். அவனது கப்பலிலிருந்த ஸர்வ சொத்துக்களும் அரசனின் பொக்கிஷத்தில் சேர்ந்து போயின. அனைவரும் பலமான காவலில் வைக்கப்பட்டனர். இன்னும் குகைகளில் ஏராளமான தனராசிகளைக் குவித்து வைத்திருப்பார்களென்ற ஊகத்தால், அவர்களுக்கு மரண சிக்ஷையை விதிப்பதற்குப் பதிலாக, அவர்கள் இரண்டு மாதங்களுக்குள் ஒரு லக்ஷம் வராகன்களை அரசருக்குச் செலுத்தினால் விடுதலை யுண்டென்றும், தவறுமிடத்து மரணதண்டனை உறுதியென்றும் அவர்கட்குத் தெரிவிக்கப்பட்டது. தன் திரவியங்களை யெல்லாம் கப்பலில்தான் அவன் சேர்த்து வைத்திருந்தான். அது அரசரின் ஆதீனமாய் விடவே இனி அவனுக்குப் பணம் கிடைக்கும் வகை எவ்விதம்?

ஆயிற்று; இரண்டு மாதத்தவணைக்கு ஒரே நாள் மட்டு மிருந்தது. நாளையதினம் பணம் செலுத்தவேண்டும். தவறினால் பிராணனைத் தரவேண்டும். பணமோ கிடைக்கும் வழியில்லை. இனி உயிரினிடத்து ஆசை வைத்து ஆவதென்ன? மத்தியான நேரத்தில் மந்திரியிடமிருந்து ஒரு உத்தியோகஸ்தன் சிறைகூடத்திற்கு வந்தான். பணம் சேகரமில்லையெனக் கண்டதும்—“அவ்வாறாயின் நாளை சாவதற்குத் தயாராயிருங்கள்”—எனக் கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதும், மற்றொரு பெரிய மனிதன் கள்வர் தலைவனது அருகில் நெருங்கினன். அவன் பூர்ண யுவகனாகவும், விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்தவனாகவும் காணப்பட்டான். சிறைச்சாலைத் தலைவன் இந்த மனிதனிடத்து மிகு மரியாதையாகப் பணிந்து நடந்துகொண்டதை நோக்கின், எவரோ ஒரு பிரபு போன்றும் தோற்றமாயது. யுவகன் கள்வனை நோக்கி, “நீ நாளைச் சாகவேண்டுமே”—என்றனன்.

---

22. மனிதன் செய்வது கடிதம் செய்யாது. சில இடத்தில் கடிதத்திற்கே கௌரவம். மனிதனுக்கில்லை.

கள்வன்:—“இதனைக் கூறுவதற்காக மட்டும் தாங்கள் வந்திருக்க மாட்டீர்களெனத் தோன்றுகிறது.”

பிரபு:—(கள்வனின் வார்த்தைக்குச் செவிகொடாமல்) “நாளை உன்னை இங்கிருந்து இழுத்துச் சென்று உன் இரு கைகளிலும் சூலத்தினால் குத்தி உனது தேகத்தைத் தொங்கவிடுவர். அங்கு சூழ்ந்துள்ள ஜனங்கள் தங்கள் ஆக்கிரகம் தீரக் கற்களால் உன்னைச் சாகவடிப்பார்கள். உன் பிராணன் பிரிந்த பின்பு உன் சிரசை வேறொரு சூலத்தின் நுனியில் கோர்த்துக்கொண்டு அரண்மனையின் வாசல் வழியே செல்வர். உனது சிக்ஷையின் விவரங்கள் இப்பொழுது தெரிந்ததா?”

கள்வனுக்குத் தேகம் நடுங்கிற்று. அவன் எத்துணைத் திடசித்த முள்ளவனாயினும், தனக்கு நாளைக்குச் சம்பவிக்க விருக்கும் துர்க்கதியை விவரம் விவரமாய் வர்ணித்துக் கூறுவதைக் கேட்க மனந்தாளாது ஹிருதயமுடைந்து, தைரியம் குறைந்து, வார்த்தைகளைச் சீக்கிரத்தில் முடிக்கும்படி சொல்வதற்குக்கூட வாயெழாமல் கைகளால் ஜாடை காட்டினான்.

பிரபு:—“உனக்கு இத்தகைய ஸந்தர்ப்பத்தில் ஆசையைக் காட்டுகிறவர்களுக்கு நீ இயற்றும் பிரதியுபகாரம் யாது?”

கள்வன்:—“அவ்வாசைக்கு யதார்த்தமான ஆஸ்பதமிருப்பின், அத்தகையவரை ஒரு உடற் பிறப்பெனப் போற்றிடுவேன்.”

பிரபு:—“உனக்கு விடுதலை கொடுப்பவர்க்கு, அவரது உத்தம ஊழியத்திற்காக உன் சரீரத்தை அர்ப்பண மாக்குவாயா?”

கள்வன்:—“ஆகா! சித்தமாயுள்ளேன்.”

பிரபு:—“கள்வனின் வார்தையில் என்ன நம்பிக்கை? உன்னுடைய வாக்தானத்தை நிறைவேற்றுவதற்காக என்ன உறுதி கூறுகிறாய்?”

கள்வன்:—“உறுதி தந்திட இரண்டு வழிகள் உண்டு. சரீரத்தை அந்த ஆபத்ஸகாயரிடத்து அர்ப்பணமாக்குவது ஒன்று. உபகார உற்சாகத்தால் மனத்தில் உற்பவிக்கிற நன்றியறிதல் என்னும் ஆகர்ஷண ஸக்தியோடு ஹிருதயத்தையும் பந்தித்துக் கொடுப்பது மற்றொன்று.”

பிரபு:—“எனக்கு இரண்டாவதே வேண்டி யிருக்கிறது. நான் கேவலம் பரமார்த்திக புத்தியுடன் வந்தவனென்று எண்ணற்க. உன் உதவி எனக்குப் பிரதானமா யுள்ளதனால் தான் உனது விடு

23. கொடுமைப் படுத்தி ஒருபோதும் வாழ்ந்திருக்க முடியாது. ஆறுதலின்றி வேற்று முகத்தோடு எத்தனை காலம்?

தலைக்குப் பணம் செலுத்த வந்துள்ளேன். என் அபீஷ்டம் சித்திப்பதாயின் அப்பணத்தை நீ திருப்பித் தர வேண்டியதில்லை."

கள்வன்:—"தங்களின் கோரிக்கைகள் யாது? பரிபூரண மனதுடன் தெரிவியுங்கள்."

பிரபு:—"இராஜ நாராயணர் எனது பகைவர். அவரது தமயனின் குமாரத்தியை எனக்குத் தர மறுத்ததே பகைமைக்குக் காரணம். அவரைச் சிறை பிடித்து என் வசமாக்க வேண்டும். இதற்கு நீ இணங்கில், உனது துணைவர்களில் நால்வரையும் உன்னையும் இக்க்ஷணமே விடுதலைக்கு வேண்டும் பணம் கொடுத்து மீட்பிக்கிறேன். இரண்டு வார காலத்திற்குள் என் கோரிக்கை வெற்றிபெற்று விடின், மற்றவர்களையும் விடுவித்திடத் திரவியம் அளிக்கப்படும். இரண்டு வாரதவணைக்கு அவர்களின் பிராணனைத் தாமதப்படுத்துமாறு அரசரை நான் வேண்டிக்கொள்ளவும் தயார். அந்தக் கவலை உனக்குத் தேவையில்லை."

இவற்றையெல்லாம் கேட்ட கள்வனுக்கு மனதில் சிறிது ஆசை, ஜீவித சிந்தனை—உதயமாயிற்று. "நான் இக்காரியத்தில் பிரவேசிக்கிறேன்"—என்று உற்சாகத்துடன் நவின்றான்.

பிரபு:—"காரியம் நிறைவேறுமளவும், அதன் பின்னரும் யாதொருவரிடத்திலும் நீ இந்த விஷயமாக என் பெயரைச் சம்பந்தப்படுத்திப் பேசமாட்டா யல்லவா?"

கள்வன்:—"இல்லவேயில்லை. நம்பலாம் உறுதியாக."

பிரபு:—"சூரியாஸ்தமனமாவதற்குள் உனக்கு விடுதலையுண்டாகும்."

என்று கூறி அப்பெரிய மனுஷ்யர் புறப்பட்டுச் சென்றார். கள்வனுக்கோ இவையெல்லாம் கனவோ நினைவோ வென்று ஸம்சய முண்டாயிற்று. உண்மையாகவே விடுதலையாக வேண்டிய தருணம் வந்துதான் இருக்கும். அதிர்ஷ்டத்தின் ஸக்தி இன்னதென்று தெரிவது எவ்விதம்? விடுதலைக்காலம் எவ்வளவு நேரத்திற்குள் வருகிறதோ பார்ப்போமென வெகு குதூகலசித்தனாய் எதிர்நோக்கி நின்றான். ஆசை யொழிந்தவனுக்கு மறுபடியும் ஆசை தோன்றிற்று. விடுவிக்க வந்த "இந்தப் பிரபு யார்?" அவர் பெயரும் தெரியவில்லை.

---

24. பெண்ணுருவம்—அது எந்த உறவில் இருப்பினும், பிரிவினைப் படுத்தவும், ஒற்றுமைப் படுத்தவும் முதல் மெம்பர்!

அநுபவத்தின் விலை.

அநுபவமே நமது வாழ்நாள். அநுபவமே நமதுபெருஞ் செல்வம். அநுபவமே நாம் தேடிக் கொண்ட லாபம். அநுபவமே நாம் பட்ட புண்கள். அநுபவமே நமது சஞ்சலங்களின் முடிவு. அநுபவமே நமது பிரலாபிப்பின் ஞானம். அநுபவமே நற்றோழன். அநுபவமே குரு. அநுபவமே ஆலோசனை கூறும் மந்திரி. அநுபவமே வழி காட்டி. அநுபவமே பிரபஞ்ச சாஸ்திரம். அநுபவமே சரித்திரம். அநுபவமே சட்ட திட்டங்களின் அமைபபு. அநுபவத்தின் முடிவே நமது . ஆயுளின் எல்லை.

தினத்திற்கு ஒரு வித அநுபவம் நமக்குப் படிகின்றது. உலக வாழ்க்கையிலே பிரதி நித்யமும் ஒருவித அநுபவத்தை நாம் கற்றுக் கொள்கிறோம். நமது ஜீவியத்தின் பாதையிலே எத்தனையோ ஆயிரம் முள் வழிகள், நீர்ச் சுழல்கள், சோதனைகள், பரந்த இருள், அந்தகாரம், பர்வத குகைகள் முதலியன வெல்லாம் கிடக்கின்றன. இவற்றை யெல்லாம் ஆரம்பத்திலேயே நாம் உன்னிப் பாய்ப் பார்க்கின்றோமா? எண்ணித் தான் சிந்தனை செய்கின்றோமா? கருதிடத் தான் பொழுது—அவகாசம்—அமைதி—சாந்தம்— நிதானம் அப்போது நமக்கு இருக்கிறதா? அவசரமே நமது நோக்கம். பரபரப்பே நமது பார்வை. நினைத்ததும் கடல் தாண்டிவிட அவா. வக்கீல் வீடு போய் வந்ததும் கேஸை ஜெயித்து விட்டதாகத் தீர்மானம். இவ்விதமாகச் சுறுசுறுப்பே எதிலும் நமக்கு.

இளங்கன்று பயமறிகிறதா? முன் பின் வருவதை அது யோசிக்குமா? எதிலும் துணிகிறோம். தைரியம் தாங்குகிறோம், தலையிட்டுக் கொள்கிறோம். அவசரத்திலே, அடுத்த நிமிஷத்திலேயே, ஆயிரம் லாபத்தை எதிர்பார்க்கிறோம். பொறுமைப்பட நமக்கு அநுபவம் அப்போதில்லை. எல்லாம் மனம் போன போக்கு. பால்ப யௌவனத்தின் துடிதுடிப்பு. கடிவாள மற்ற குதிரை நாம். கடைசியில் தப்பு வழியில் தலையை நுழைப்பித்துக் கொள்கிறோம். பலரை நம்பி விடுகிறோம். வெளுத்த தெல்லாம் பாலென்று வேண்டிய மட்டும் எண்ணுகிறோம். இறுதியில் வஞ்சகர்களின் கையில் சிக்குகிறோம். வகை மோசம் போகிறோம். உலகத்தின் வேஷத்தை நன்கு காண்கிறோம். ஆழமறியாமல் காலையிட்டுக் கொண்ட விஷயம் அப்பால் தான் நமக்குப் புலனுகிறது. துடி துடிக்கிறோம். சித்தம் கலங்குகிறோம் நஷ்டங்களின் படுகுழியில் நாம் தள்ளப் படுகிறோம். அதிலிருந்து நாம் உலகமும் இப்படியிருக்கிறதா? என்ற அநுபவம் கொள்ளப் பெறுகிறோம். இவ்வாறாக நாம் ஒவ்வொன்றிலும் பட்டுத் தேறிப் பூவாய் காயாய் கனியாய் படிப்படியாக உயர்ந்து பழுத்துப் பக்குவ ஞானம் பார்மிசை பெறுகின்றோம்.

* * *

மேற்போந்த பக்குவ ஞானமே அநுபவம். வீட்டைக் கட்டிப் பார்

கல்யாணம் பண்ணிப் பார் என்ற மொழியின் ஆழ்ந்த நுட்பமும் இதுவே. எதையும் தொட்டுக் கொண்டபின்பே அதிலிருந்து நாம் அநுபவம் பட்டுக் கொள்கிறோம். மாமி—மருமி என்ற இரு பதங்களின் விளக்கம் யாது? எஜமான் பணியாள் என்ற பேதம் எதனால்? முன்னவர் ஏற்கனவே பட்டுத் தேர்ந்து அநுபவம் வாய்ந்தவர். பின்னவர் அவர் ஏவலின்படி ஒழுகி, இனி அதில் அநுபவம் பெறவேண்டியவர். இதுவே தாரதம்மியம். வயோதிகர்களை உலகம் "பெரியவர்" என்று அழைப்பதேதனால்? அவர் அநேக வருடங்களைத் தாண்டி, எண்ணற்ற அநுபவங்கள் கண்டு அதில் பட்டுத் தேறியிருக்கும் பான்மையை நோக்கியே 'பெரியவர்' என அவரைக் கூறுவதும், அவரது ஆலோசனையை நாடி அதன்படி நடப்பதுமாம்.

* • *

படிப்பு பணமுள்ள வரையில் கிடைக்கும். அநுபவமோ நமது ஆயுள் உள்ள வரையில் கிடைக்கும். ஒருவருடைய அநுபவம் முடிவுபெற்றதெனில், அவர்களுடைய ஜீவியமும் பூர்த்திபெற்றதென்பதே அதன் பொருளமைதியாம். நம் வாழ்நாளில் நாம் கண்டுகொண்ட அநுபவங்களையெல்லாம் அப்படியே பிறருக்கு எடுத்துக்கூற முடிகின்றதா? அவற்றில் அநேகம் மறைந்தொழிகின்றன. ஏற்கனவே பட்டிருந்தும் மறுபடியும் தெரியாமல் அகப்பட்டுக்கொண்டு திரும்பவும் புதிய அநுபவம் பெறுகிறோம். இங்ஙனம் நம் காலம் நெடுகச் சோதனையே. உயிர் பிரியும் காலத்தில் கூட நமக்கு ஒரு அநுபவம் தெரிகிறது. நாம் சாதாரணமாக சுவாசித்துக் கொண்டிருந்த சுவாசம் நமக்கு மிக்க கஷ்டமாகி, நாம் சுவாசிக்க முடியாமல் அது தூர தூரப்போக, நாம் அதைத் தாவித் தாவி அலறி எட்டிப்பிடிக்க, இவ்வாறான அவஸ்தையில் பஞ்சேந்திரியங்களும் ஒடுங்கிப்போய் பிராணன் பிரிகின்றது. பிரிகிற மாதிரியும், சுவாசிக்க இயலாது போனவிதமும் அநுபவித்தவர்கள் அதை நமக்குச் சொல்ல வகையின்றிக் கண் மூடுண்டு போக, அவர்களோடு அந்த அநுபவமும் மறைகின்றது.

* * *

பழமொழிகள் என்பவை யாவை? அவ்வளவும் அநுபவங்களின் சாரமே. நாம் அதிக அநுபவத்தைப் பெற்றுவிட்டால் பின் வருவது தெரிந்து நடக்கலாமானாலும், சிற்சில சமயங்களில் லோக வெறுப்பும் உண்டாய் விடுகின்றது. மறதியும் நெருக்கடியும் நமக்கு ஏற்படாமற் போனால், நாம்பட்ட அநுபவங்களின் முடிவு நம் வாழ்க்கையை விரக்தி மார்க்கத்திற்குக்கொண்டுபோய் விட்டிருக்கும். தாயின் கர்ப்பத்தில் பிண்டம் இருக்குந்தனையும் பூர்வ ஞாபகத்தோடு இருப்பதாக சாஸ்திரம். கர்ப்பத்திலிருந்தும் வெளிப்பட்டு பூப்பிரவேசமானவுடன் பூர்வ அநுபவங்களும் ஞாபகங்களும் மறைந்தொழியுமாறு மாய்கை அக்குழந்தையைச் சூழ்ந்து கொள்கிறதாம். அவ்வாறில்லாவிடத்து அக்குழந்தை தனது பூர்வ அநுபவங்களால் குழந்தைப் பருவத்தேதானே ஜீவன் முக்தனாய் விளங்கிடலாம். அதற்கு இடனின்றி மாய்கை தடுத்து விடுகின்றது.

இங்ஙனமாக ஒரு ஜீவன் உலகத்தில் தோன்றும் காலையில்தானே அதன் முன் அநுபவங்கள் மறக்கடிக்கப்பட்டுப் போகின்றன. பின்னர் வாழும் யாத்திரையிலும் நெடுக அநுபவங்களின் மறதியே. வாழ்வின் இறுதியிலும் மரணத்திற்குப் பிறகு மனிதர் நிலை என்னவென்று தெரிவிக்கும் ஆற்றலைத்தாம் உணர்ந்தாலும், அதைத் தெரிவிக்க இயலாமல் மௌனத்திலேயே பரிபூரணப்

படுத்தப்பட்டுப்போய் உலகம் அதை அறிந்து கொள்ளாதபடி தடுக்கப் பட்டுப் போய்விடுகின்றது. "கண்ட வர் விண்டதில்லை. விண்டவர் கண்ட தில்லை" என்ற முன்னோர் மொழியும் இங்கு கருதற்பாற்று.

ஏன் இவ்விதமாக ஜீவிய அநுப வங்கள் மறக்கடிக்கப்படுகிற தெனி லோபிரபஞ்ச நியமம், உலகக் கிரமம் சரிவர நடந்தேறுதற் பொருட்டே. உலகத்தின் மோசங்களையும், அதன் சிக்கலான வலை வீச்சுக்களையும் அதன் படுகுழிகளையும் ஒருவன் தன் அநுபவ வாயிலாக நன்குணர்ந்து கொள்வானாயின், சீச்சீ! இது என்ன உலகமென்று வெறுத்து வேதாந்தி யாய் விடுவான். உலகைத் துறந்து ஞானியாய் விடுவான். அங்ஙனமாகப் பரிணமித்துப் பக்குவப்பட்டு விடா திருக்கும் பொருட்டு, இந்த ஞான த்தை உலகமானது அருவெறுத்துப் "பேய்" என ஒதுக்கும்படியும், எவ் வளவு தான் லோக ரகசியத்தைப் பற்றிப் போதிக்கினும், அது நெஞ்சி லே தட்டுப்படாதிருக்கும்படியும், கற் றதும் கேட்டதும் போக்கிலே போ, கவிட்டுப் பொய்யுலக ஞரும்படியும் பிரபஞ்ச மாய்கை செய்து விடுகின் றது. உலகத்துக்கு ஞானம் பேய்; ஞானத்துக்கு உலகம் பேய்' என்ற பழமொழியும் இங்கு கவனிக்கத்தக் கது.

அத்துடன் கூட, ஆணுக்குப் பெண்ணையும், பெண்ணுக்கு ஆணை யும் துணை சேர்த்து விடுவதில், அது ஒரு பலத்த விடுவித்துக் கொள்ள முடியாத ஒரு பெரும் மாய்கையாகி விடுகின்றது. இதிலிருந்து தான் ஆசைகளும், அவஸ்தைகளும், துய ரங்களும் பிரலாபிப்புகளும், இடிக ளும், குத்துகளும் இன்னும் நானு விதமான பிரபஞ்ச அநுபவங்களும் ஒரு ஜீவனுக்கு உண்டாகின்றன. இந்த அநுபவங்களினின்றும் என்ன தான் விரக்தி, தூய்மை, ஞானம் ஏற்படினும், மறு கணத்தில் மசான வைராக்கியம் போல் மறைவுற்று, மீண்டும் பிரபஞ்சத்திலேயே சிக்கித மயங்கி, லோகாசைகளிலே மறுபடி யும் நீந்தி விளையாட விருப்ப மேற் பட்டு விடுகின்றது. இது உலகு தோன்றிய நாள் முதலாக நடை பெற்று வரும் நியதி.

ஸ்திரீ புருஷ பந்தம் அற்றவிடின் பிரபஞ்சமும் இல்லை. உலகமும் இல்லை. மாய்கையும் இல்லை. எது வும் இல்லை. அனைத்தும் சூன்யமாகி விடும். ஸ்திரீகளின் உருவமே அறி யாத புருஷர்கள் ஒரு தீவில் இருப் பின் அங்கே எவ்வித மாய்கையும் இரா. அனுபவங்களும் இரா, புருஷ உருவமே உணரப் பெறாத—நினைவி லும் வரப்பெறாத பெண் வர்க்கம் ஒரு பிரதேசத்தில் இருப்பின் அவ் விடத்தும் மாய்கையின் சுழற்சி காண்ட லரிது. அநுபவங்களும் அரிது. அந்நிலையில் பெண் வர்க்கத் தினிடம் ஒரு புருடனையும், புருட வர்க்கத்தினிடையே ஒரு பெண்ணை யும் புகுத்து விடின், தக்ஷணமே மாய்கையும் அநுபவங்களும் தோன் றிக்கொள்ளும். புதுஉலகமும் அங்கு உண்டாகிவிடும். எனவே ஸ்திரீ புருஷ பாந்தவ்யவே பிரபஞ்ச அநு பவங்களுக்கெல்லாம் ஆதித் தாய் தந்தையும் வழிகாட்டியுமாம்.

"காமம் இல்லையெனில்
கடுக்கேடேனும்
நாமம் இல்லை;
நரகமும் இல்லையே."

ஸ்திரீ புருஷ பந்தத்துக்குப் பிறகு மற்றொரு பெரிய மாய்கை மனித னைத் தேடி வருகிறது. அதுதான் பசி. பசியே பெரிய உபாத்தியாயர். ஞானமும் கல்வியும் நாழியரிசியிலே. பசியே பிரபஞ்ச அநுபவங்களுக் கெல்லாம் பெரியதோர் ஊற்று. பசியில்லா விடில் உலகமேஇல்லை. அநுபவங்களுமில்லை. லோக கௌர வத்தாலும் அநுபவங்கள் வளர்கின்

றன. பெருக்கெடுக்கின்றன. அந்த கௌரவங்களுக்காக எத்தனை யநுபவங்களை அவர்கள் சுமந்துள்ளார்களென்பதை, அதில் பட்டுழன்றவர்கள் நன்கறிவர். இதுகாறும் கூறியவாற்றால், பிரபஞ்ச நியதியும், அந்த நியதிக்கும் அநுபவங்களுக்கும் இருக்கிற பரஸ்பர ஆகர்ஷண சக்தியும், ஐக்கியமும் தெற்றெனப் புலப்படும்.

இதில் இன்னொரு விசித்திரம்! அந்த விசித்திரமும் ஒருவித மாய்கையே. ஒருவன் தான் முன்பு கடத்திப்பட்ட அநுபவப் புண்களை பின்னொருவனுக்கு அவனது நலத்தின் பொருட்டாக எடுத்துரைக்கின்றான். என்னதான் இடித்துக் கூறினும் அது அவனது நெஞ்சில் ஆழமாய்ச் சென்று தைப்பதில்லை. அந்த அநுபவத்தைத் தானேபட்டுழன்று அநுபவித்து அறியவே ஆவலாகி கொள்கின்றான். அங்ஙனம் அவனும் அநுபவத்துறையில் வீழ்ந்து பட்டுத் தேறியபோது-ஆகா! முன்னர் அவர் எவ்வளவு தெளிவாகத் தன் அநுபவத்தை நமக்கு எடுத்துக் கூறினார்; அத்தனையும் நம் விஷயத்தில் சரியாகவே பொருந்தி விட்டது என்று அதிசயிக்கின்றான். இவ்விதமே அநுபவித்துத்துணர்ந்த ஒருவன் ஒரு நூலை வாசிக்கையில் அதனிடையே வரும் அநுபவங்களைக் கவனித்துச் செல்லும்போது, இரண்டொன்று தான் பட்ட சொந்த அநுபவங்களாக அதில் இருந்தால், "ஆகா! நூலாசிரியர் வெகு நன்றாக அந்த அநுபவத்தை விளக்கிச் சொல்லியிருக்கிறார்" என்று கிரந்தகர்த்தாவைச் சிலாகிக்கிறான். தான் பட்டிராத அநுபவங்களை அந்த நூலிடையே காணும்போது அவற்றை மட்டும் மேற்போக்காய் வாசித்து அம்மட்டில் வியந்து கொள்கிறான். ஆகவே அவரவர்கள் பட்டுள்ள அநுபவப் பக்குவ நெஞ்சுக்குத் தக்கபடி அவர்கள் வாசிக்கிற நூலின் கண்ணுள்ள அநுபவங்கள் குறிப்புகள் அவர்களுக்குப் புலனாகின்றனவென்றும் சொல்லலாம். இங்கும் தோன்றியும் தோன்றாமலுமாக ஒருவித மாய்கை சூழ்ந்து நிற்பதும் என்ன அதிசயம்!

* * *

உற்றுப்பார்க்குமளவில், இந்தப் பிரபஞ்சத்தின் அநுபவங்களெல்லாம், முற்றிலும் விநோதமாகவும், நாநாவிதமான அழகுள்ளவைகளாகவும் தோன்றுகின்றன. லோக சிருஷ்டியே அழகும் விநோதமும் ததும்பப் பெற்றவைகள்தாம். விருக்ஷங்கள், ஜீவவர்க்கங்கள் இன்னும் பலவும் எத்தனையழகும், விநோதமும் கொண்டு விசித்திரம் தருகின்றன. அநுபவங்களும் அவ்விதமே ஒரு தனியழகும் விநோதமும் சுவையும் கொண்டு ஒளிர்கின்றது. இவ்வித அநுபவங்களை ஒரு சேரத் திரட்டி நூலாசிரியர்கள் தாங்கள் இயற்றும் நூல்களின் இடையிடையே அங்கங்கு சேர்த்துப் பக்குவம் செய்வார்களாயின், அது படிப்பவர்கட்கும் உலகத்துக்கும் அத்தியர்த்த பிரயோசன முள்ளதாக ஏற்படும். இந்த நோக்கத்தைக் கொண்டே அநந்த கதா கல்பகம் முழுமையினும் அநுபவங்களை வெளியிட்டுக் கொண்டு சென்றிருக்கின்றோம். பிறருக்குச் சாமான்யமாகப்படுகிற அநுபவம் மற்றொருவருக்கு உயர்ந்ததாகவும் ஒரு அரிய ஸஞ்சீவியாகவும் உபயோகப் படக்கூடும். அநுபவம் ருசிப்பது போல் நீதி ருசிக்காது. நீதியோடு அநுபவம் கலந்து பரிமளித்தால் அது பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போலாம். அநுபவத்தின் விலை என்ன? அதன் விலையை யாரே கணிக்கவல்லார்? அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும் அதனினும் மேன்பாடான படிப்பினையும் உலகில் வேறென்ன இருக்கிறது?

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18. ‖ திரிச்சி: ஆகஸ்டு௴ 1922 ‖ இதழ்-5.

பாரிஜாதம்

அத்தியாயம்—6.

காதற் கணை

பிரதி நிமிஷமும் பாரிஜாதம் தன் பிரியனின் வரவை எதிர்பார்த்து மதி தடுமாறி நின்றாள். பயங்கரனான கள்வனின் பீதி யகன்றதில், தன் அன்பனுக்கிருந்த பெரும் விபத்துகளொன்றின் நிவர்த்தி நோக்கித் தைரியமுற்றாள். எனினும் அவள் மனம் ஸாந்தமான ஸ்திதியில் இருக்கவில்லை. இந்த மானுஷீகமான விபத்துகளை விட, பிரகிருதியின் கோபத்தினாலுண்டாகும் மகத்தான ஸாகர அநர்த்தங்களின் பீதியே அவளது ஹிருதயத்தை அதிகமாகக் கவர்ந்தது.

குலசேகரன் சங்கதியே தெரியவில்லை. பச்சை விளக்கின் வெளிச்சமும் காணப்படவில்லை. மாடியின்மீது சென்று பலகணி வாயிலில் சமுத்திரத்தினிடத்துக் கண் சிமிட்டாது நின்று நெடுக நோக்கினும் பச்சைவிளக்கு காணப்படாமையால், நிராசையாய்க் கீழே வந்துவிடுவாள். இவ்விதமே மாதங்களும் பல ஆயின. பாரிஜாதத்தின் கவலைக்கு ஓளவே யில்லை. பல பல நினைந்து கலங்கினாள்.

என் இன்ப வடிவே! அன்புக்குவியலே! மித்திரா! வளர் பிறை மதியம் போன்றும் வளர்ந்து சிறந்த நம் காதல் இங்ஙனம் அலைந்து பட்டதென்னவோ! நலம்பெறு கணவர்தம் தடம்புய மருவிய மடந்தையரில் யானும் ஒருவளாவதென்றோ? பொருந்திய வினையால் வருந்திடுமிந்தப் பிரிவினை இன்னும் எத்தனை காலம்?

---

25. உண்மையாகத் தனக்கென்று அத்தனை பாடு படுவோனிடத்தில் உள்ளன்பு இல்லை. ஒப்புக்குக் குலாவுவோரிடத்தே தான் அதிக பிரியம்.

வாலிப வயதாய் மதன்கலை தொடரக் காமம் கனிந்து கலவியை நினைந்திடு வேளை இது. புந்தியு மருண்டு தத்தளித் துழன்று தயங்குகின்றேன். வருந்து மென் தாய்மனந் தேற்றி, யூழ்வினை மாற்றித் தமியேன் கவலை தணித்திட நீ வாராயோ! மனோகர மங்களலோலா! எவ்விதத்தேனும் வருவீர் என்ற நம்பிக்கையினால்,—வாரா தொழியீர் என்ற துணிவினால்,—ஆயிரக் கணக்கான இடர்கள் அனைத்தும் தாங்கி நிற்கின்றேன்.

“வாரா தொழியா னெனும்வண் மையினால்
ஓரா யிரகோ டியிடர்க் குடையேன்.”

‘ஆவியென மேவி அகலேன் என அகன்றாய்! இன்னும் எத்தனை காலந்தான் பிரிவாற்றுவதோ!

பாரிஜாதத்தின் மனம் முற்றும் விகாரத்தை யடைந்தது. எப்பொழுதும் தன் அறையைவிட்டு வெளியில் வருவதே யில்லை. வேடிக்கை, விநோதம், ஆடல், பாடல்கள் யாவற்றையும் விலக்கினாள். முடிவாக ஆகார நித்திரைகளையும் திரஸ்கரித்தாள். இதனால் தேகம் இளைத்து உயிர் நிலைப்பதுஞ் சந்தேகமாய்த் தோன்றினாள். இராஜ நாராயணர் இவளது ஸ்திதியைக்கண்டு காரணம் தெரியக் கூடாதவரானார். காரணத்தைக் காதலன்றி வேறு யாவரே யறிவார்? வலியக் கேட்டும் பாரிஜாதம் தன் சிறிய தந்தைக்கு ஏற்ற விடை தரவில்லை. தரக்கூடியதோ இது? அவரவர் மனதில் அதது. குலசேகரன் தானாக வந்து தன் சிறிய பிதாவிடம் கேட்டுக்கொள்ளுமளவும், அவனிடத்தில் தனக்கு இருக்கும் அன்பை வெளிப்படுத்தக்கூடாதென்று ஸங்கல்பம் செய்துகொண்டிருந்தாள். அவளுக்குக் குலசேகரனின் பிரேமை ஸ்திரமானதென்பதில் சிறிதும் சந்தேகம் தோன்றவில்லை. அவனுக்கு என்ன விபத்து நேர்ந்ததோ என்ற யோசனையே அவள் மனத்தைப் பெரிதும் வாட்டியது.

குளிர் காலங் கழிந்தது. வசந்தருதுவும் பிராப்தமாயது. பாரிஜாதம் மலர்ச்சோலைகளிலும், பசுமை செறிந்த மைதானங்களிலும் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கினாள். அவ்வப்பொழுது ஸமுத்திர தீரத்தின் பூர்வ நினைவுள்ள சங்கேதஸ்தலத்திற்குச் சென்று ஏகாந்தமாக நெடுநேரம் மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருப்பாள்.

இவ்விதம் இருக்க ஓர் நாள் அதேவிடத்தில் ஸப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். பச்சைவிளக்கு காணப்படவில்லை. ஐயுற்று நின்றாள். அப்படியே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது தோணி கரையின் அருகே வருவது தெரிந்தது.

---

26. நீர் சிமோனு: உம்மட்டில் இரும். அதற்காக உமக்கு ‘சலாம்’ போடவேண்டுமென்று எனக்கு வந்த தலைவிதி என்ன?

சிந்தையில் நினைந்தவை சித்தித்து விட்டனவோ என மயங்கினாள். ஆசையும் அதிகப்பட்டது. தோணியும் கரை சேர்ந்தது. வெகு நாட்களாகப் பிரிவின் துக்கந்தை யனுபவித்திருந்த யுவக யுவதிக ளிருவரும் பரஸ்பரம் இகலோகத்தையே மறந்தவர்களானார்கள்

பாரிஜாதம்:—"பிரியா! எவ்விதமேனும் திரும்பி வந்தனையல்லவா? இவ்வளவு நாள் என்னை ஏகாங்கியாய்த் தவிக்கவிட்டிருந்ததற்குக் காரணமென்ன? உன் பிரியையினது மனோதைரியத்தைச் சோதனை செய்தற்கோ? அல்லது விபத்து யாதேனு முற்றதோ? நேசமுட னிசை பாடி, வஞ்சனைநயம் பேசி, வெகு சொந்தமப் பொழுது செய்யுமந்த வேசையர்தம் மயலிடை வீழ்ந்தனையா? மாறுத பேராசை வேரோடி கவலைப் பிரசண்டவெங் காற்றினால் அலையுமிப் பேதையைப் பாதக வுருவு படைத்துச் சோதித்திடல் பொருந்துமோ? வழைக்கு உருகாதது தகுதியோ? ஆதரவு உன்னை யல்லா தேது? வஞ்சகம் நீ நினைகுவது நியாய மன்று; என்னை யாளுதி சமயம் ஈதே."

குலசேகரன்:—"அந்தோ பேதாய்! என்றைதலைந்து வீண் புண்ணுவதன்றி வேறில்லை. நின் வளர் கருணை பொழி விழியும், இள நகையும், மறுவொழுகு குமுதவாய் மொழியும் என்னை எங்கிருப்பினும் உன்னிடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்திடும். ஹா! எனக்கு உற்ற இன்னல்களை என்னென்று சாற்றுவது? நினைப் பிரிந்த பின்பு மறுவாரத்தில் கடற்கள்வரின் வசமாகி, நான் வெகு நம்பிக்கையும் ஜாக்கிரதையுமாகச் சேகரித்திருந்த திரவியங்களை யெல்லாம் என் விடுதலைக்காக அவர்களுக்கு ஒப்படைத்து வெறுக் கையனாய்த் திரும்பிவிட விதிவசம் வாய்த்தது. என்னே காலத்தின் கொடுமை! இங்கிலையில் நின்பிதாவை யான் எவ்விதம் காண்பதோ?"

பாரிஜாதம்:—"நண்பா! அகண்ட இவ்வுலகில் நாம் எவ்வளவு தனித்திருக்கிறோம்? நமது நினைவுகள் கானநீர் போலாகுமோ? நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்ன வெனில், நாம் அநேக விஷயங்களில் முற்றிலும் தவறுதலான அபிப்பிராயங்களிலேயே எப்பொழுதும் ஊன்று வருகிறோம். நமது எண்ணங்கள் சரியல்ல வென்று தெரிந்தவுடன் அவைகளை மாற்றுமல் முன்பு போலவே அவைகளால் கட்டுப்பட்டுக் கிடக்கின்றோம். நான் எத்துணை வற்புறுத்தியும், உமது பிடிவாதத்திலேயே நிற்கின்றீர். என் சிறியதந்தையைத் தாங்களே சென்று வேண்டிக்கொள்வதாயின்,—என் பிரியமும் தங்களை மணத்தற்கே யென அவர் உணர்ந்துகொள்வராயின்,—ஒருபோதும் எதிரிடை

27. ஒரு சங்கதி ஏற்கெனவே தெரிந்திருந்தங்கூட, தெரியாதவர்கள் போல் வெகு உறவோடு விசாரிக்க வருகிறார்கள். என்னே கபடம்!

யாக அதற்கு நில்லார். சுகம் என்பது உழைக்காத எவனுக்கும் எட்டாதது. நீர் சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு என் பிதாவைச் சரணமடைந்திடில் காரிய வெற்றி பூரண நிச்சயம். அதுவும் இன்று சனிக்கிழமை. இந்த நேரத்தில் என் தந்தையின் சமாதியிடத்தில் என் சிறியபிதா ஏகாந்தமாக—"

பாரிஜாதம் தன் பேச்சை முடிக்குமுன் அகஸ்மாத்தாகக் குழல் ஊதும் சப்தமொன்று கேட்டது. உடனே சமுத்திர தீரத்தின் மற்றோர் பாலிருந்து ஒரு ஆகாய வாணம் மேலே சென்றது. குலசேகரன் பாரிஜாதத்தை சமாதானப்படுத்தி, "கனிமொழியாய்! என்னைச் சேர்ந்தவர்கள் விட்ட பாணம். என் எஜமானர் சீக்கிரத்தில் வரும்படி தெரிவிக்கும் சமிக்ஞை அது. இனி ஒரு க்ஷணமும் இங்கு நிற்கமாட்டேன். இப்பொழுதே புறப்பட்டுச் செல்லவேண்டும். ஆனால் திரும்பி உன்னைப் பார்ப்பேனோ இல்லையோ? இல்லை தான். இதுவே இப்பிறப்பிற் கடைசி சந்திப்பு"—எனப் பெருமூச் செறிந்தான்.

பாரிஜாதம்:—"என்ன? என்ன? திரும்பிப் பார்ப்பதில்லையா? இப்படிச் சொல்லவும் மனம் வந்ததா? அந்தோ! இத்துணை ஹிருதய வேதனையான மொழிகள் எதற்காகவோ? அறிவும் அன்பும் எந்தெந்த அளவில் சேர்ந்து மனிதனுடைய வாழ்வை ஆட்டி வைக்கின்றனவோ, அந்தந்த அளவுக்குத் தக்கபடி ஒரு நிலைமையை மனிதன் அடையப் பெறுகிறான். உம்முடனே நானும் வந்து ஸமுத்திரத்தின் விபத்துகளை யெல்லாம் அனுபவித்துக்கொண் டிருப்பதற்கு என் அறிவும் அன்பும் என்னை விருப்பங் கொள்ள வைக்கின்றது. நீர் சமீபத்தில் மட்டும் இருந்துவிட்டால், இந்த சண்டமாருதத்தின் ஆர்ப்பாட்டம், ஸமுத்திரத்தின் உன்னதமான அலைகளின் கர்ஜ்ஜனை—இவை யாவும் எனக்கு மதுரமான கானமாகத் தோன்றும்." (பாரிஜாதத்தின் கண்களினின்றும் படமடவென்று நீர் பெருகிற்று.)

குலசேகரன்:—"உன்னால் நிறைவேற்ற சாத்தியமில்லாத இச்சையைக் குறிப்பிட்டுப் பயனென்ன? உனது சிறிய தந்தை என்னவோ நமது விவாகத்திற்குச் சம்மதிக்கப் போவதில்லை. நீ என்னை விவாகம் செய்துகொள்ளப் பார்ப்பதும் இந்த ஜென்மத்திலில்லை. தேசபக்தர்களின் தியாகமும், அறிவாளிகளின் வாதமும் பேதை ஜனங்களுக்கு எப்படி அருத்தமாவதில்லையோ—விளங்குவதில்லையோ, அதுபோல நான் உன் சிறிய பிதா இணங்காரென்று கூறுவதும் இப்போது உனக்கு விவரப்படாது. அதற்கான காலம் வந்து தான் தெரியும்.

---

28. மருமகன் மேலுள்ள துவேஷம் அவன் பெற்ற குழந்தையிடத்துக் கூட உண்டாய் விடுகிறது. இது மாமியின் தர்பார்!

பாரிஜாதம்:—"உமது எண்ணம் தெரியாமலில்லை பிதாவின் அநுமதியின்றிப் பிரவர்த்திக்கும்படியாக உமது போதனை. விளக்கில் விட்டிற்பூச்சிகள் போய்த் தாக்குவதைத் நாம் காண்கின்றோம். தான் விழுவதாகப் பூச்சிக்கு எண்ணமில்லை. விளக்கைத் தாக்குவதாகத்தான் எண்ணம். முடிவு என்ன? பூச்சி மாய்கின்றது. மோகத்தின் முடிவு சாவாகும். நான் உம்மிடத்திற் கொண்டிருப்பதெல்லாம் மோகமே. இந்த நிமிஷத்தில் என் விஜயரங்கம் எதிர்ப்படின் தக்ஷணமே உம்மை நான் மறந்து அவர்பாற் சென்று விடுவேன். அது காதலின் வலிமை. நீர் என்னிடத்திற் கொண்டிருப்பது மோகமா? காதலா?"

குலசேகரன்:—"எனது உள்ளம் பிறிதொன்றையும் பற்றி நிற்கவில்லை. வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றில் பதிந்து கிடக்கின்றது. அதைக் காதலாற்றான் அடையவேண்டும். நின்பால் எனக்குக் காதலன்றி காமமில்லை. (தீனஸ்வரத்துடன்) பாரிஜாதமே! எந்தத் தருணியே ஆகட்டும், ஒரு புருஷனை ஸம்பூரணமாகப் பிரீதித்தால், அவனுக்காகத் தாய், தந்தை, தங்கை, தமக்கை முதலான அனைவரையும் விட்டு அவனையே அநுசரிப்பது லோகதர்மம். அவ்விதம் இராவிடில் அவளது பிரீதிப்பு யதார்த்தமானதென்று எண்ணுவதற்கில்லை. உனக்காக எவன் தனது பிராணனையாவது கொடுப்பதற்குச்சித்தமாக இருக்கின்றானோ—எவன் உன்னைத்தனது அரிய பிரேம வஸ்துவாகப் பாவித்து ஆவி சோர்கின்றானோ—அத்தகைய ஹிருதயேச்வரனை நீ ஏன் அநுசரிப்பதில்லை? பிரியே! நீ இப்பொழுது இங்கு ஏகாங்கியாகத்தான் தனித்து நிற்கின்றாய். உன்னைப் பலாத்காரத்துடன் எடுத்துச் செல்வது எனக்கு அசாத்தியமோ? ஆனால், உன்னிடத்தில் எனக்கு நிஷ்களங்கமான பிரேமை இருப்பதனால், உன் சமீபத்தில் நான் அமர்ந்துள்ளபொழுது, உன் அநுமதிப்படி நடக்கும் சிறு குழந்தையைப்போல இருப்பேனே யல்லாமல், யௌவன பிராயமுள்ள மனிதனைப் போலிரேன். உன்னைப் பலாத்காரப்படுத்த ஒருபோதும் இசையேன். "வலிய வந்தணைத்த சுகம்" என்பதன் சுவையை அதனிற் காண இயலா." (என்று உள்ளங் குழையுமாறு பேசினன்.)

பாரிஜாதம்:—"சிறுமை உரைகள் எற்றிற்கோ? கூட வருவதற்கு சம்மதமே. வழியில் முதலிற் காணும் நகரத்திலேயே நமது விவாகத்தை நமக்குள்ள ஏற்பாடுகளின்படி முடித்துக்கொண்டு பிறகு சிறிய தந்தைக்குத் தெரிவித்துவிடலாம்."

பாரிஜாதம் அதற்குப் பிறகு யாதொன்றும் கூறவில்லை. மௌன

---

29. முன்பு அவர் உன் நண்பனே. இப்போதோ அவர் பிரபு. உன்னுடன் பேசுவதே தன் அந்தஸ்துக்குக் குறைவென எண்ணுவார். பழைய நட்பை உணர்த்தி நீ அவருடன் குலாவச் செல்கை வீண்.

னமாக நின்றுகொண்டாள். குலசேகரனின் மதுரவசனங்களைக் கேட்டு மயங்கினவளாய் மனந்துள்ளவளானாள். வார்த்தைகள் முடிவு பெற்று வருவதனிடையே, நடந்த வண்ணமே இருவரும் தோணியின் சமீபம் வந்து நின்றனர்.

"பாரிஜாதமே! என்ன சொல்லுகிறாய்? உன் தாஸனிடத்தில் உனக்கு நம்பிக்கையுண்டா?"

"ஸ்திரீ தன் வசப்படாதவரையில் அவளுக்கு ஒரு புருஷன் தாஸன் தான். வசப்பட்டுக் கற்பழிந்த பின்னரோ அவளுக்கு அவன் தலைவனாய் விடுவான். தங்களின் காம காரிய ஸாதனார்த்தத்திற்காக எந்த இழி தொழிலுக்கும் ஆடவர்கள் இணங்கிவிடுவர். லோக ஸ்வபாவம் இவ்வாறாக, உமது குணஸ்வபாவங்கள் எவ்விதமோ? பெண்கள் வீட்டை விட்டுத் தாண்டுவது மஹத்தான பயங்கரமாகிய படுகுழி. எனக்கென்னவோ இங்கிருந்து புறப்படுவதற்கே தைரியம் போதாது. ஆனால் உம்மைப் பிரிந்து இங்கு நிற்பதற்கோ சிஞ்சித்தேனும் இஷ்டமில்லை."

பாரிஜாதத்தின் இங்கிதத்தையும் குறிப்பையும் குலசேகரன் தெரிந்துகொண்டான். அவளைத் தோணியில் மெதுவாக உட்கார வைத்தான். பிறகு தானும் தோணிக்குள் குதித்து ஜாக்கிரதையாகக் கரையை விட்டுத் தோணியை முன்னாக நடத்தினான். சிறிது தூரம் சென்றபின்மேல் பாரிஜாதத்தின் பக்கம் திரும்பி—"ப்ரியே! நீ என்னுடன் பிரயாணப்பட்டு வந்ததற்காக என் மீது கோபம், ஐயம் யாதாகிலும் உண்டா?"—என வினவினான். பாரிஜாதம் தன் பிரியனின் ஸன்மார்க்கமான நடத்தைக்கு மனமகிழ்ந்தவளாகி—"எப்பொழுதும் எனக்கு வருத்தமில்லை" என்று இயம்பினாள்.

பிறகு கப்பலைச் சேருகிறவரைக்கும் ஒரு வார்த்தையாவது அவர்களுக்குள் நடக்கவில்லை. தோணி கப்பலைக் கிட்டியவுடனே குலசேகரன் பாரிஜாதத்தைக் கப்பலில் ஏற்றி மேற்றட்டுக்கு அழைத்துச் சென்று அவளுக்காகச் சித்தமாக்கப்பட்டிருந்த ஒரு ரமணீயமான அறையில் விட்டுத் தான் கப்பலின் மற்றொரு பக்கத்திற்குக் காரியார்த்தமாகப் புறப்பட்டுச் சென்றான். பாரிஜாதம் அவ்வறையிலுள்ள இயற்கைக்கு விரோதமான சித்திரங்களை நோக்கிப் பெரிதும் வியப்புற்றாள். எந்தச் சித்திரத்திலும் '——— ருச்சே' வெற்றி காட்டப்பட்டிருந்தது. குலசேகரனின் "காதற்கணை"யானது ஒரு அரசகுமாரியையே அவனிடம் சேர்ப்பித்து விட்டது. காதற்கணையின் ஸக்தியே ஸக்தி.

30. பணக்காரர்கள் தமது பணத்திற்குச் செலவில்லாமலே, பிறருக்குப் பல செலவுகள் வைத்து உபசாரமும் பெற்றுக்கொண்டு பறந்து விடுவர்.

அத்தியாயம்—7.

நம்பிக்கையின் வீழ்ச்சி

கப்பல் போய்க்கொண்டிருந்தது. பாரிஜாதம் இருந்த அறையின் மேற்குப் பக்கத்தில் மற்றொரு அறையிருந்தது. இவ்வறையின் விஷயத்தில் குலசேகரன் மிகு ஜாக்கிரதையோடிருப்பதைப் பாரிஜாதம் கவனிக்காமலிருக்கவில்லை. சிறிது நாட்களுக்குள் பாரிஜாதம் அக்கப்பலின் நாநா பாகங்களினுடைய பெயர்களையும் தெரிந்து கொண்டாள். தான் சயனித்துக்கொள்ளும் அறையின் மேல்பக்கம் இருக்கும் அறைக்கு "மத்திய அறை" யெனப் பெயரென்றும் அறிந்தாள். இம்மத்திய அறைக்கு வெகு கவனத்துடன் இம்மியும் பிசகாமல் காவலிடப்பட்டிருப்பதும், குலசேகரன் அவ்வப்பொழுது சென்று அங்கு மேற்பார்வை பார்த்து வருவதும், எவரையும் உட்செல்ல விடாமல் அத்தியந்த சிரத்தையோடும் பாதுகாக்குமாறு தன் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டிருப்பதும் பாரிஜாதத்தின் கவனத்தைக் கவர்ந்தது. அல்லாமல் குலசேகரன் சில தடவைகளில் அர்த்த ராத்திரியிலும், படுக்கையிலிருந்து எழுந்து சென்று அவ்வறையைப் பார்வையிடுவான். அவ்விடத்தில் சிறிது சப்தம் உண்டானாலும் நடுக்கிடுவான். உடனே அவன் முகம் வெளுப்படையும். பாரிஜாதம் அதன் காரணமேதென்று கேட்டால் ஏதோ ஒரு சமாதானத்தை அலக்ஷியமாகச் சொல்வான். அவ்வறையினிடத்தே தான் அவன் முழுப்பிராணனும் இருந்ததென்றுங் கூறலாம். அது அவன் பத்திரமாகச் சேகரித்து வைத்திருக்கும் பொக்கிஷமோ யாதோ!

இச்சிறு விஷயங்களெல்லாம் காவல் காக்கும் மாலுமிகளின் கவனத்திற்கு வராதிருந்தாலும், பாரிஜாதத்தின் மனதிற்குச் ஸம்சயத்தை விளைவிக்காமலிருக்கவில்லை. அம்மத்திய அறையில் ஏதோ அபூர்வமான வஸ்து வொன்று இருக்கவேண்டுமென்றும், குலசேகரன் தன்னிடத்திலும் கூறாமல் ஒளித்துவைத்திருக்கும் மர்மம் என்னவாயிருக்கலாமென்றும் ஆலோசித்தாள். தன் ஊழியத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த பரிசாரகையைக் கூட இது விஷயத்தைப்பற்றி விசாரித்த பொழுது திருப்தியான சமாதான மொன்றும் கிடைக்கவில்லை.

---

31. அவனை—(அவளை)—முற்றிலும் நீ நம்பி விட்டாய். அதிலுள்ள நாசம் இப்பொழுது உன் மனதில் படாது. பட்டு அறி, கெட்டு அறி.

பாரிஜாதமோ தன் அன்புக்கு உறைவிடமாக விளங்குபவனை அதிபாதகமாயுள்ள விஷயத்தைத் தன்னிடத்தே கூறாமலிருந்ததால், தானும் அவ்விஷயத்தில் பிரவேசிக்க இஷ்டமில்லாதவளாயிருந்தாள். ஆனால், அவளது பேராவல் மட்டும் அதனை எவ்விதத்தேனும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதில் அத்திரப்பட்டுக் கொண்டிருந்தது. அத்துடன் கலவரமும் அதிகமாயிற்று. மறைத்துள்ள—மறைந்துள்ள பொருளுக்கு மகிமை—வசீகரம்—அதிகம்.

அநேக நாட்களாயின. பூமியின் தரிசனமேயில்லை. நாளுக்கு நாள் அதைரியம் அதிகமாகி மனத்தைப் பாதிக்கத் தொடங்கிற்று. இங்ஙனம் மனம் நாநா விதமான பாவனைகளுக்கு இடமாயிருந்ததினாலும், குலசேகரனின் ரகசியத்தைக் கண்டறிவதற்கு யாதொரு யுக்தியும் தோன்றாதிருந்ததினாலும், பாரிஜாதம் இறுதியில் துணிந்தவளாகி, குலசேகரனையே இவ்விஷயத்தின் ரகசியத்தை வெளியிடச் செய்யவேண்டுமென்று நிர்மாணித்தாள். ஓர் நாள் வேடிக்கையார்த்தச் சம்பாஷணையின் மூலம் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்தாள். அதற்கு.

குலசேகரன்:—"பாரிஜாதமே! நீயாகவே முன்னதாக இப்பிரஸ்தாபத்தை எடுத்தது மிக நல்லதாயிற்று. நான் இப்பொழுது கூறும் விஷயத்திற்கும், நம் எதிர் காலத்திற்கும் சிறிது சம்பந்தம் உண்டு. இவ்வறையிலுள்ள படங்களைப் பார்த்தனையா? இந்தச் சித்திரங்களை அந்த லோக பயங்கரனான கள்வனிடமிருந்தும் கொள்ளையிட்டு வந்தேன்."

பாரிஜாதம்:—"எந்தச் சித்திரத்திலும் "கள்வருக்கே வெற்றி" காட்டப்பட்டிருக்கிறது. முடிமன்னர்களைச் சிதைத்து வீழ்த்திக் கள்வர்கள் வெற்றிமாலை சூடுவது போன்றும் தீட்டப் பட்டுள்ளன. இவற்றை வரைந்தவன் கள்வனாயின்றி ஒரு இராஜ குமாரனாயிருப்பனேயாயின், இக்கள்வர்களைத் தூக்கிலிட்டு வதைப்பது போன்ற சித்திரங்களைத் தயாரித்திருப்பன். ஒரு சிம்ஹம் ஒரு வேடனுடைய வீட்டிற்கு விருந்து நிமித்தம் சென்றது. வேடனுடைய வீட்டில் எங்கு பார்த்தாலும் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. ஒரு சிம்ஹத்தை ஒரு வேடன் கொன்று விட்டதாகவும், ஒரு சிம்ஹத்தை வேடன் காலின் கீழ்த் தேய்ப்பதாகவும் இவ்வாறெல்லாம் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. எந்தச் சித்திரத்தைப் பார்த்தாலும், மனிதன் ஜெயித்ததாகவும் சிம்ஹம் தோற்றுப்போனதாகவுமே இருந்தது. விருந்துக்குப் போன சிம்ஹம் இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு— சித்திரம் எழுதினது சிம்ஹமாக இருந்திருப்பின்

---

32. ஒரு காதலன் சொல்:—என் கண்ணே! என்னை மனதாரக் காதலித்தாய். இணங்கினாய். ஒன்றினாய். என் ஏழ்மை கருதி வேறொருவருக்கு இப்போது மாலையிடுவதென்னே! இது கற்பாமோ?

எந்தச் சித்திரத்திலும் சிம்மம் ஜயித்திருக்கும், மனிதன் தோல்வியடைந்திருப்பான்"—என்று சொல்லிற்று. சிம்ஹத்தின் விடை போன்றதுதான் இங்கு என் விடையும்."

குலசேகரன்:—"இந்த விடை உன்னிடமிருந்து நான் எதிர்பார்த்தது தான். எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக ஒன்றை நோக்கி ஓடுகின்றேமோ, அந்த அளவுக்குத் தூரமும் அதிகரித்தே நிற்கும். எந்த லட்சியத்தை எடுத்தாலும் இதே உண்மை தான். ஸத்தியம் இருக்குமிடத்தை யொருவன் தேடிச் சென்றால், அது கைக்கு அகப்படாமல் நழுவிக்கொண்டு தான் போகும். ஏனெனில், அவன் ஸத்தியமென்று எதை உறுதியாக நினைத்திருந்தானே அது ஸத்திய மல்ல வென்று இடையிடையே கண்டு கொள்கின்றான். இவ்விதமே ஒருவனைப் பரிசுத்தனென்றும், நம்பிக்கையுள்ள மனுஷ்யனென்னும், பக்திமானென்றும், நண்பனென்றும், உண்மைக் காதலனென்றும் ஆதியில் நம்பி விட்டு, பின்னர் அவற்றில் சம்சயங்கள் இடையிடையே கொள்வதனுல், ஆதி நம்பிக்கையின் உறுதி தளர்ந்து, வழி தவறி—அதற்கேற்பச் சம்பவங்களும் பொருந்திக் கொள்கின்றன. உன்னுடைய சிறந்த அன்பானது உண்மையான தென்னும் காரணத்தால்,—"

பாரிஜாதம்:—(வார்த்தை முடிவதற்குள்) "என் அன்பின் விஷயத்தில் இன்னமும் உமக்குச் சந்தேகமா? அதனுலே தான் உம்முடைய ரகசியத்தை எனக்குத் தெரிவியாம லிருக்கிறீரா?"

குலசேகரன்:—"அதிஞலல்ல. என்னைப்போன்ற ஏழையின் விருத்தாந்தத்தைச் சம்பூர்ணமாகத் தெரிந்த பின்பு, என்னுடைய கொடிய வறுமையிலும் உன்னுடைய அன்பு நிலையாக நின்று என்னைத் தொடர்ந்திருக்கச் செய்யும் சக்தி கொண்டிருக்குமோ இல்லையோ என்னும் சந்தேகமே என்னைப் பாதிக்கின்றது. மேலும் என் பிழைகளை யெல்லாம் மன்னித்தல் கூடுமா?"

பாரிஜாதம்:—"முதல் தடவை யொருவன் தவறிழைத்துவிட்டால் அவனை மன்னித்து விடுவது ஸகஜம். கொஞ்சம் தாராள மனதுடையவர்கள் இரண்டாம் தடவையும் மன்னித்துவிடக்கூடும். ஆனுல் மூன்றுவது தடவையும் அதே பிசகைச் செய்தால், பொது ஜனங்கள் அவனைத் துச்சமென்று தள்ளி விடுவார்கள். ஒருதடவை, இரண்டு தடவை ஒருவன் ஏமாந்து போகலாம். ஏதோ தவறி நடந்துவிட்டான்— ஏதுந் தெரியாதவன்—என்று ஜனங்கள் விட்டுவிடுவார்கள். ஆனுல் மூன்றுவது தடவைக்குக்கூட மன்னித்து விட்டுத் தன்னை முற்றிலும் ஏமாற வைத்துக் கொள்ளும் ஒருவனுக்கு

---

33. அவ்வளவு வேகமாகத் தினமும் வந்து குவிந்த அத்தனைக் கடிதங்களும் அன்பும் இப்போதெங்கே? இனி உன்னிடம் காரியமில்லை; நீ ஏமாற மாட்டாய்—யென்று தெரியவே யாவும் நின்று விட்டன.

முட்டாள் பட்டத்தை நிச்சயமாய்க் கட்டுவார்கள். இதில் உம்மை எத்தனையாவது பிழைக்காக மன்னிப்பது? முதல் பிழைக்காகவா? இரண்டாவது பிழைக்காகவா?

பாரிஜாதம் நீதியின் போக்கில் மேற்கண்டபடி பொதுப்படவே கூறினளாயினும், குலசேகரனுக்கு அது அவன் மனத்தை முள்ளிட்டுக் கிழித்தபடி படவே திடுக்கிட்டு நின்றான். தக்ஷணமே "என்னைக் கைவிட்டுவிட உனக்கு எண்ணமா?" என்று பாரிஜாதத்தை ஊயுற்ற நெஞ்சினோடும் வினவினன்.

பாரிஜாதம்:—பிரியா! உம்மை மன்னிக்க நீர் யாது பிழை இயற்றினீர்? எதுமில்லை, நீர் மரணத்தின் வாய்க்குட் செல்வதாயிருந்தாலும், உம்மைத் தொடர்ந்து வருவனே யல்லாமல் ஒருக்காலும் பின்னடையேன்."

குலசேகரன்:—"பாரிஜாதா! நன்றாக ஆலோசனை செய். உன்னுடைய ஆசை என்னும் இளங்கொடியை நசுக்குவதாயிருப்பதனால், என்னுடைய விருத்தாந்தமென்னும் சண்டமாருதத்தை இதுவரை தடுத்துக்கொண்டிருந்தேன். நீ என்னை இதுகாறும் ஒரு வியாபாரியின் கை—மனுஷ்யன் என்று மட்டும் தெரிந்திருப்பாய். என் பெயர் என்ன? குலமென்ன? தேசமென்ன? இவைகள் எதுவும் உனக்குத் தெரியாது. என் குணதோஷ விஷயங்களில் மறுபடியும் உனக்கு நல்ல அபிப்பிராயம் உதிப்பது கஷ்டம். எனது உண்மை விருத்தாந்தத்தையும் நான் இன்னார் என்பதையும் தெரிந்துகொண்ட மறுநிமிஷமே, உன்னுடைய நல்ல அபிப்பிராயமெல்லாம் சூறைக்காற்றி லகப்பட்ட பஞ்சு போலாய் விடும். நீ தெரிந்துகொண்டிருப்பதிலிருந்து நான் ஒரு பங்கு அதிகம், அல்லது குறைவு ஆக இருந்தால் என்னை எப்போதும் போலவே அன்பு பாராட்டுவாயா?"

பாரிஜாதம்:—"என்னவோ என் மனத்திகில் அதிகமாகிறது. நீர் தெரிவிக்கவேண்டிய யாவற்றையும் கூறி முடிவு செய்யும். அநுபவம் என்பது காணே பார்ப்பதும் கேட்பதும் படுவதுமாம். படத் தயாராயிருக்கிறேன்."

குலசேகரன்:—"என் உண்மை வரலாறு இதுதான். இந்த ஸமுத்திரத்திலெல்லாம் அதாகதம் செய்துகொண்டிருந்த கள்வனின் விஷயம் கேள்விப்பட் டிருப்பாயல்லவா? அவனை வசப்படுத்த உன் சிறிய தந்தை முயன்றும் பயன்படா தொழிந்த விவரம் நீ அறிவாயன்றோ? அந்தப் பயங்கரனான ஸமுத்திரக் கள்வன் உன் ஸமீபத்திலேயே இருக்கிறான். அவனுக்கே நீயும் ஆட்பட்டு உன் கற்பை அவனுக்கு ஆதீனம் செய்ய வந்திருக்கிறாய். அவனே நான்."

---

34. புஸ்தகம் அச்சிட்ட உடன் இன்னும் தீரவில்லை. அதற்கென்று அடகு வைத்த நகைகளும் திருப்பவில்லை. அதற்குள் 'இனும் புஸ்தகம்' கேட்க நண்பர்கள் (!) புறப்பட்டு விடுகிறார்கள்!

பாரிஜாதத்திற்கு இடி விழுந்தது போலாயிற்று. திடுக்கிட்டுப் போனாள். ஆவி தடுமாறிட நின்றாள். தாங்கொணாத ஆக்கிரகம் கொண்டாள். அவளுடைய உதடுகள் துடிதுடித்தன. முகம் வியர்த்தது. தேகமெங்கனும் நடுங்கியது. ஆ! ஆ!! என்று ஒரு துள்ளு துள்ளிக் குதித்தாள். கோபாக்கினி அவளுடைய நேத்திரங்களில் பிரகாசித்தது. அங்க ஸம்ரக்ஷணார்த்தம் தன் இடுப்பில் எப்போதும் மறைத்து வைத்துள்ள கூரிய ஆயுதத்தின் பிடியின்மீது தன் ஹஸ்தத்தை வைத்துக்கொண்டாள். அவளுக்குப் பயம் என்பது பறந்துபோய் விட்டது. புதிதான தைரியமும் துணிவும் அவளுடைய உள்ளத்திற் பிரவேசமாயின. மரியாதை மாண்டொழிந்தது. வணக்கம் நடுங்கி ஓடிவிட்டது. இப்பிரபஞ்சத்தில் எனக்காகச் சித்தமாயிருக்கிற விபத்துகளெல்லாம் ஏககாலத்தில் ஒரே தடவையில் சேர்ந்துவந்தாலும் தடுத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறேன் என்று கர்ஜித்தாள். உடனே குலசேகரனென்ற அந்த ஸமுத்திரக் கள்வனின் மார்பைத் துளைக்கத் தன் கூரிய ஆயுதத்துடனும் அவன்மேற் பாய்ந்தாள்.

அதிசாந்தையான பாரிஜாதம் இவ்விதம் மாறுவாளென்று குலசேகரன் எதிர்பார்க்கவில்லை. தன் பெண்தன்மைக்குரிய அச்சத்தோடும் அவள் நடுநடுங்கிப் போய்விடுவாள் என்று நம்பினான். பாரிஜாதத்தின் கூர்மையான ஆயுதம் அவனது மார்பிற் பாயவே, அதிக காயத்தோடும் சட்டென்று அந்த விபத்திலிருந்தும் தன்னை விலக்கிக்கொண்டு, பாரிஜாதத்தின் கூந்தலைத் தன் கைகளாற் பற்ற முயன்றான். அதே தருணத்தில் கம்பீரமான உருவத்துடனும் ஒரு யுவா புருஷன் குலசேகரனின் முன்பு எதிர்ப்பட்டு அவன் கால்களை ஆக்கிரகத்துடன் பற்றிக்கொண்டு அவனை யப்படியே வீசி ஒரு மூலையில் எறிந்தான். பாரிஜாதம் அந்த யுவா புருஷனைப் பார்த்ததும் அத்தியந்த ஆச்சரியத்தினால் பிரமித்தவளாகிப் பின்னும் கோபம் மேன்மேலும் எழ, அந்த யுவா புருஷனின் கைகளைப் பற்றிக்கொண்டு, "என் கண்ணே! நீ இன்னும் ஜீவித்திருக்கிறாயா? தக்க சமயத்தில் என் முன்பு தோன்றினாய்; நீ க்ஷத்திரிய வம்சத்தில் உற்பவித்தவனாயின், நமது முன்னோர்களின் ரத்தம் இன்னும் உன் நரம்புகளில் ஓடிக்கொண்டிருப்பது உண்மையாயின், இந்தப் பாதகனை—கிராதகனை—நீசனை—சண்டாளனை — துரோகியை—வஞ்சகனை—படுபாவியைப் பழிக்குப்பழி வாங்கிடுக. சித்திரவதை செய்து கொல்லுக. என் கண் முன்பாக அவன் உடலத்தைச் சிறு சிறு துணுக்குகளாக வெட்டி எறிக"—என்று கர்ஜித்துப் பயங்கர

---

35. எவ்வளவோ செய்து செய்தும் கடைசியில் கெட்ட பெயரே தானா? எதுமே செய்திடாமல் பிடுங்கியும் தின்று, நல்லவர்களாகவும் ஆகிறார்களே! அது அவர்கள் பாக்கியம்.

மான காளியின் ஸ்வரூபத்தை மேற்கொண்டவளாய்ப் பின்னும் குலசேகரனின் மீது பாய எத்தனித்தாள்.

அதற்குள்ளாகக் கீழே விழுந்த குலசேகரன் கோபாக்கிராந்தனாய் எழுந்து, அந்த யுவா புருஷனை நெருங்கி—"இதென்ன நீங்கள் என்னிடம் இப்படி நடந்து கொண்டீர்கள்?"—என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க வினவினான். யுவா புருஷனும் கோபாவேசனாய்க் குலசேகரனின் கன்னங்கள் வீங்குமாறு ஓங்கி யறையவே அவனது முன்னம் பற்கள் இரண்டும் உதிர்ந்து கீழே விழுந்தன. வாயெங்கும் இரத்தப் பிரவாகமாயிற்று. குலசேகரன் உடனே தன் துணைவர்களை விரைந்து வருமாறு கூவினான்.

யுவா புருஷன்:—"அட சண்டாளனே! இது உன் கப்பல் அல்லவென்பதைத் தெரிந்துகொள். எப்பொழுது உன் யதார்த்த ஸ்வரூபத்தையும், நீ இன்றென்பதையும் பாரிஜாதத்திற்குக் கூறத் தொடங்கினையோ அதே நிமிஷமே நான் இவ்விதம் நேருமென்பதை எதிர்பார்த்தவனாய் உன் துணைவர்கள் ஐவரையும் ஜாக்கிரதையாக வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டேன். இப்போது நீ அநாதை. என் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் சிறு கொசு நீ.

குலசேகரன்:—"உம்முடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படியே நான் நடந்துகொண்டிருக்கையில், என் ஆதீனமான ஸ்திரீயோடு நான் தர்க்கித்துக் கொண்டால் அதில் உமக்குத் தலை நோவுவடுப்பதென்ன? உமது பிரவேசம் மித்திராபங்கமன்றோ?"

யுவாபுருஷன்:—"அடே அதிகப்பிரசங்கி! நான் யார் என்பது உனக்குத் தெரியுமா?"

குலசேகரன்:—"தாங்கள் யார்? அது கேட்கச் சிந்தனையின் வேகம் அதிகமாகிறது."

பாரிஜாதம்:—"அட தூர்த்தனே! கிராதகா! அந்தக் கேள்விக்கு என்னிடமிருந்து விடை பெறு. பாதகனே! படுவிஷமே! வஞ்சகா! துரோகி! எந்த மகா புருஷன்—என் காதலன்—என் கணவன்— என் கட்டழகன் மரித்தனனென்று என்னை மயக்கினையோ, அந்தப் புருஷமூர்த்தியே உன் எதிரில் நிற்கிறார். அந்த இறந்தொழிந்த விஜயரங்கமே இவர்."

குலசேகரன்:—"ஆ! இவர் அந்த விஜயரங்கமா? பாரிஜாதமே என்னைக் கைவிட்டனையா? நான் அன்றொரு நாள் மனதாரக் காதலித்த ஒரு பெண்ணின் விவாகத்திற்கு—சாந்திக்கு—அவள் வேறொருவனுடன் ஐக்கியமாகி விடப்போகும் சம்பவத்திற்கு—தானும் கூட அழைக்கப்பட்டு அங்கு செல்லும்படி நேர்ந்துவிட்ட யுவகனொருவனுக்கு—அவனது மனத்தின் வேதனையும், ஆற்றாமையும் கொதிப்

36. உறவினர் உபசரிப்பு:—(1) இப்போதுதான் வந்தீர்களா? வாருங்கள் மங்களம். (2) இப்பொழுதே போகிறீர்களா? போங்கள் வந்தனம்.

பும் அந்த சமயம் எத்தகையதா யிருக்குமோ—யார் தாம் கூறவல்லார்? அந்த யுவகனின் மனோ அவஸ்தையே எனக்கு மிப்போது நேர்ந்துவிட்டது. ஆ! இது பெரிய சித்திரவதை! சபையில் வாய் மறந்தவனும், படையில் கை மறந்தவனும் சமயத்துக்கு உதவான். அவசரப்பட்டுவிட்ட என் கதியும் இங்கு அவ்விதமே."

பாரிஜாதம்:—"மூர்க்கனே! என்னை முற்றிலும் வஞ்சித்தாய் பாவி! ஆணிலே பெண்ணிலே என்போல ஒரு பேதை அகிலத்தின் மிசை யுள்ளதோ? என்னுடைய புருஷமூர்த்தியை ஜீவனுடன் இல்லையென்று கூறி விட்டாய். அதையும் நம்பினேன். உனது வஞ்சன ஸமத்காரங்களால் என்னை ஸம்பூர்ணமாய் ஏமாறச் செய்துவிட்டனே. ஆதியிலிருந்தே உன்னிடத்து ஐயுற்ற கண்கள் தாம். ஆயினும் நின் ஸமத்கார பாஷிதங்கள் என்னை உன்னிடத்து அதிக அன்பு கொள்ளச்செய்து விட்டன. உனது அமிருத வசனங்கள், பிரேம மொழிகள் அத்தனையும் கபடமா? ஆ! எத்தனை வஞ்சகம்! எவ்வளவோ பிரீதி கூர்ந்தேன் நின்பால். முற்றும் நம்பினேன். என் நாட்டில் நீ எய்திய வெற்றிகளெல்லாம் என்னால்! எத்தனை சாதுர்யமாகக் கபடத்துடனும் இராஜ்ய அந்தரங்கங்களைக் கிரகித்தாய்! குட்டி உறவும் ஆடு பகையுமா? என் சிறிய தந்தை செய்யவிருந்த ஒவ்வொரு அந்தரங்க ஏற்பாடுகளையும் தந்திரமாய் என்னிட மிருந்து கிரகித்துக் கொண்டு என் நாட்டிற்கே படுகுழி பறித்தனையே பாவி! உன்னைப் பரிபூரணமாய் ஆச்ரயித்து உன் தோணியில் கால் வைத்தும் ஏறினேனே! எவ்வளவு நம்பிக்கை உன் மீது கொள்ள வைத்து விட்டாய்? இந்த தோஷ கிருத்யத்தில் எத்தனை ஸாதுர்யங்கள், வஞ்சனோக்திகள் எல்லாம் பிரயோகித்தாய்? உன் கப்பலில் வந்து உன்னிடம் சிக்கிக்கொண்டேனென்றும், இனி எனக்கு மீட்சியில்லை யென்றும், உன் யதார்த்த விருத்தாந்தத்தை இப்பொழுது தெரிவித்தால் வேறு கதியற்று உன்னையே நான் ஸரணாகதியாக அடைவேனென்றும் நம்பி விட்டனையா? அடே! நான் க்ஷத்திரிய கன்னிகை, வீராங்கனை, இராஜகுமாரி, துர்க்காஸ்வருபம் என்று இப்போது உணர்ந்துகொண்டனையா? கற்றாண் வளைவது கண்டதுண்டா? எத்தகையினரே யாயினும், தர்மம் தவறி, நெறி கடந்து பெண்களிடத்து நெருங்குவாரகில்,தெருவிற் செல்லும் அன்னியர்கள்கூட சிக்ஷிக்க முன்வந்து விடுவார். அப்பாவையின் மானங் காத்திட ஒருங்கு கூடிடுவார். பிரபஞ்சமே பாவைமார் தம் பவித்திரமான பதிவிரதாக்கினியினால் தான், பிரளயத்திற்கு வசமாகாமல் பிழைத்து நிற்கின்றது. கற்பலங்காரத்தில் தான் தெய்வீகத்தின் பூரணத்வம் சோபிக்கின்றது. பாஷாண்டகனே! என்னைப்போல எததனைப் பெண்கள் உன்னால் மோசம் போயினரோ?"

37. அத்தனை நட்பும் பிராணனும் பிரேமையும் அது ஒரு காலம். இப்பொழுதோ முற்றும் பராமுகம். அது நம் தலைவிதி.

குலசேகரன்:—"இந்த விஜயாங்கம் எதிர்ப்பட்டதினாலல்லவா உனக்கு இத்தனைத் துணிவு?"

பாரிஜாதம்:—"என்னுடன் ஸமத்வம் காட்டிப் பேசத் தகுதியுள்ளவனில்லை நீ! மூடடா மூடனே உன் வாயை. விஜயாங்கம் இல்லாவிட்டால் என்ன? இந்தக் கூரிய ஆயுதத்தினால் உன் ஆவியை மாய்த்து, என்னையும் இதற்கே பலியிட்டுக்கொண்டு விடுவேன். தெரிந்ததா? இப்புன்புலால் யாக்கையைச் சுமந்து நின்னுடன் இனியும் வாழ்வு கொண்டாட எங்குவேனென நினைத்தனையோ? நீசனே! நீச புத்தியே நினக்கு? மானம் அழிந்த பின்னும், மதிமோசம் போயின பின்னும்—பழிக்குப் பழி கருதுவதல்லால்—வாழ்வும் துணிவருண்டா? துரோகி! இன்னுமா உன் ஜீவன் உன்னை யொட்டி நிற்கின்றது? என் பிராணநாதன் என் அருகில் நிற்கையில் நான் உன்னை வதைப்பது சரியல்ல. அவரே உனக்குப் போதிய சிக்ஷை தருவார். உனது தோஷ கிருத்யங்களுக்கும் சண்டாளத்துவங்களுக்கும் மேலுலகில் நீ பெறவேண்டிய தண்டனையும் வேறேயிருக்கிறது. எனது நாட்டில் நீ விளைவித்த அலங்கோலங்களுக்கும், என்னை வஞ்சித்துக் கெடுக்க நினைத்த உனது படுமோசங்களுக்கும் எல்லாம் ஒன்று சேர்த்துக் கடவுள் உனக்குக் கொடுக்கப்போகிற ஸன்மானத்தை (?) விரைவில் பெற்றிடுவாய். இனி உனக்கு எவ்விதத்திலும் மீட்சியில்லை. நரகத்திலேயுங்கூட உனக்கு இடம் கிடையாது. கள்வருக்கே வெற்றி என்ற உன் சித்திரங்களைப் பார்த்ததும் பெரிதும் ஐயுற்றேன். அவ்விதமே முடிவும் ஆயிற்று. அடே! கடைசியாக இதனை நீ தெரிந்துகொள். பதிவிரதா ரமணிகளுக்கு எப்பொழுதுமே பகவான் பக்கத்தில் துணை நின்று உதவுவார். அவர்களுடைய கற்புக்குத் தெய்வமே காவல். பகவத் கடாக்ஷமே அதற்கு அரண்—எழுசுற்றுக் கோட்டை. நடு ஸாகரத்திலுங்கூட அந்த அநாதையான பாவைக்கு எவ்விடத்திலிருந்தேனும் உதவி கிடைத்துவிடும். கூப்பிடு தூரத்தில் பகவான் நின்றுகொண்டு அவர்களுக்கு நேர்வன வெல்லாம் கவனித்தபடியே நிற்பார். ஆயிற்று—ஆபத்து சூழ்ந்துவிட்டது—என்ற கடைசி நேரத்திலே தான் அவர் திடீரென வெளிப்படுவார். கிராதகர்களின் முன்பு தோன்றி ஹதம் செய்து மான ஸம்ரக்ஷணை புரிந்திடுவார். பெண்மணிகளின் சௌந்தர்யத்தால்—கற்பால்தான் உலகமும் நிலைத்து நிற்கின்றது. புருஷர்களுக்கும் தர்ம ஜீவனம் நடக்கின்றது. பெண்களின் கற்பால் தான் ஆடவர்கட்கு அன்னமும் அகப்படுவது. பகவானின் பிரியமான சொத்து முதலில் பெண்கள்தான்—பிறகே ஆடவர்."

* * * *

---

38. நண்ப (?) னே! இது என் வேலை நேரம். உன் பேச்சுகளால் என் வேலைகள் கெடுகின்றன. இதை நீ உணர்வது எப்போதோ?

பாரிஜாதத்தின் ஆக்கிரகம் தணியவில்லை. விஜயாங்கமோ பாரிஜாதத்தின் பூர்வ அடிமை—தாஸன். "நங்காய்! எனக்கு ஆக்ஞை எப்படி" என்றான் விஜயாங்கம். "இவ்வஞ்சகனையும் இவனுடன் சேர்ந்தவர்களையும் விலங்கிட்டுப் போதிய பாதுகாப்பில் இருத்துக"—என்றாள் பாரிஜாதம். அதற்கு விஜயாங்கம் "நமது ஜீவமாணிக்கமான—பிராணாதாரமான ஒருவரை இவ்வஞ்சகன் இக்கப்பலில் அந்த மத்திய அறையில் வீற்றிருக்கச் செய்துள்ளான். அவரை நம்மிடத்திற்கு அழைத்துக்கொண்டு, இவனையும் இவனது துணைவர்களையும் அந்த அறைக்கு அனுப்புவோம்" என்றான். பேச்சு முடிவதற்குள்ளாக,

குலசேகரன்:—"பாரிஜாதம்! இதைக் கவனி. இந்த விஜயாங்கம் மிகு வஞ்சகன். அவனை நம்பி மயங்கற்க. மத்திய அறையிலிருப்பவரை இக்கப்பலிற் கொண்டுவர முயன்றவன் இந்த விஜயாங்கமே யாவன்.—"

விஜயரங்கம்:—"கிராதகனே! நீ பாரிஜாதத்திடம் பாராட்டிய மெய்யன்பைச் சோதிக்கவே இச்செயலில் உன்னை ஏவ வைத்தேன். அதைச் செய்ய நீ மறுத்திருந்தால் உன்னைச் சற்றேனும் மதிக்க இடனேற்பட்டிருக்கும். நீயோ சண்டாளன். எதற்கும் துணிந்தவன். இந்த வகையிலும்கூட உன்னை அலசிப் பார்த்தாய் விட்டது."

குலசேகரன்:—"ஹா! வெகு சூக்ஷ்மமாய் வஞ்சிக்கப்பட்டுப் போனேன். பாவி! உன்னால் அப்போது என் கப்பலுடன் சிறையானதன்றி, நின் கபடோக்திக்கும் இப்போது இரையானேன்."

என்று குலசேகரன் புலம்பி நின்றான்.

*   *   *   *   *

பாரிஜாதம்:—"அந்த அறையில் இருப்பவர் யார்?

விஜயரங்கம்:—"நீ அவரைப் பார்க்கலாம். ஆனால் மனதைமட்டும் தைரியப்படுத்திக்கொள். உனக்கே நிரம்ப ஆச்சரியமும் ஆக்கிரகமும் எழக்கூடும். அதற்குச் சித்தமாயிரு. சந்தோஷமும் துக்கமும் சம்பந்திகள் போல."

பாரிஜாதம்:—"என் ஜீவனின் முடிவுக்கே சித்தமாயிருந்த நான் இனி எதற்குத்தான் தயாரா யில்லை? எதையும் தாங்கத் திறன் கொண்டுள்ளேன். தேள் தீண்டிவிட்ட பின்பு — நாகஸர்ப்பத்தின் முன்பு எதிர்ப்பட்டுக் கொண்டபின்பு — தலைக்குமேல் வெள்ளம் வந்துவிட்ட பின்பு — அவற்றின் உபாதைகட்கு யோசித்து ஆவதென்ன? ஸம்ஸாரக் கடலில் ஒருவனை ஆழ ஆழ்த்திப் பாசபந்தங்களாற் பிணித்துவிட்ட பின்பு—அவனை ஆயிரம் வதை செய்திடினும், தூஷித்து விரோதித்து வருத்தி நன்றி மறந்தவர்களாக நிற்

---

39. அதிகம் தரின் நல்லவர்கள் என்ற பெயர் வருவதில்லை. ஏமாந்தவர்கள், இளிச்ச வாயர்கள் என்று எண்ணுகிறார்கள்.

பினும், ஐயோ என்று அவனுக்கு இரங்கியுருகுவார் எவருமில்லாது போயினும், இத்துயர்களை யெல்லாம் நோக்கி அவன் ஸம்சாரக்கட்டினின்றும் விடுவித்துக்கொண்டு வெளி வந்து விடுதல் இயலுமோ? தன் தலைவிதி அதுவென அனைத்தும் ஸகித்துத் தெய்வமே துணையென அந்த ஸம்சாரக்காட்டில் வெந்து நொந்து படவே நேருமன்றி விடுதலை யென்பது எது? அவ்விதமே இங்கு இப்போது நான். தாங்கள் தைரியத்தோடும் கூறலாம். கேட்க சித்தமே. என் அன்பே! நீங்கள் இவண் போந்தது யாங்ஙனம்? தங்களின் ஜீவிய வர்த்தமானங்களென்னென்ன? எனது இந்தத் துர்த்தசையில்—மானபங்க காலத்தில் பகவான்தான் உங்களை இங்கு அனுப்பினரோ?"

விஜயரங்கம்:—"என் செய்திகள் பின்னர் ஆகட்டும். இனி நான் ஓடி மறைவது ஒருபோதுமில்லை. நீ முன்னர் சிறுமியாக நின்றனை. அதனால் வெளியிற் செல்ல எனக்கு சாத்தியமாயிற்று. இப்பொழுதோ நீ பரமயௌவன ஸுந்தரி. நின் யௌவனரஸத்தை யெல்லாம் வாரியுண்டு அநுபவித்தற்கே எனக்குப் பொழுது சரியா யிருக்குமன்றோ? இந்நிலையில் நின்னைப் பிரிவது யாங்ஙனே? என்றும் நின் அடிமையே நான் இனி. அழகிய நின் மணிமார்பில் நவீனமாய் சோபிக்கும் இரு ஆப்த மித்திரர்களுடன் ஸல்லாபமாய்ப் புளகித முறுவதிலேயே எனது ஜீவிதகாலம் யுகமொரு பொழுதாய்ச் சென்றுபோம். இனி எனக்கு ஓய்வு—எது? விடுமுறையும் கிடையாது. விடுதலையும் இல்லை. இனி உன் கைதியே நான். விசாரமின்றித் துயிலுணர்ந்த நாட்களும் நழுவிவிட்டன. பாவம்! உனக்கும் இனி நித்திராபங்கம் பிராப்தமாகு மல்லவா?"

பாரிஜாதம் புன்னகையுடன் நாணித் தலை குனிந்து நின்றாள். தனது யௌவன விலாஸத்தையும் ஒருபுறம் பார்த்துக்கொண்டாள்.

* * * * *

"சல்லாபம் போதும். அதற்கு இது நேரமல்ல. இன்னும் கதை பாக்கி யிருக்கிறது. கோதிப்பு முற்றிலும் தீரவில்லை. துக்கத்தை ஸகித்து ஜீரணம் செய்துகொள், என்னுடன் வா."

என்று பாரிஜாதத்தின் கையைப் பிடித்துக்கொண்டு கீழ்தளத்திற்கு இறங்கி மத்திய அறையின் ஸமீபமாய்ச் சென்றான். அங்கிருந்த காவற்காரன் தன் தலைவனுக்காக வழியை விட்டு விலகி நின்றான். பிறகு விஜயரங்கம் அவ்வறையின் பூட்டைத்திறந்து பாரிஜாதத்தை நோக்கி, "பிரியே! நீ முதலில் செல்; நான் பின்னால் வருகிறேன்"—என்று கூறி, அவளை உட்புக விட்டுத் தான் வெளியில் நின்று கொண்டான்.

---

40. நான்கு மணி நேரம் பாடுபட்டு எழுதியதைப் பிறகு படிக்கப்போனால் தனக்கே அது ருசிக்கவில்லை. என் செய்ய? என்ன பாடு இது!

பாரிஜாதம் உள்ளே கால் வைத்தாளோ இல்லையோ, உடனே அலறிக் கூக்குரலிட்டாள். அவளது சிறிய தந்தையான இராஜ நாராயணர் அவளைப் பிடித்திராவிட்டால் நிலத்தில் வீழ்ந்தே யிருப்பாள்.

"ஆ! இதென்ன! பாரிஜாதமா இங்கிருக்கிறாள்? ஐயோ! மகளே! அதிர்ஷ்டஹீனையே! மைந்த ரில்லாதவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்?—என்றல்லவோ உன்னை என் மகளாக வளர்த்தேன்! நீயும் என்னைப்போல் ஸமுத்திரக் கள்வனின் சிறைக்கு அகப்பட்டனையோ? ஹா! தெய்வமே!" என்று இராஜநாராயணர் புலம்பினர்.

பாரிஜாதம்:—"நான் காண்பதென்ன கனவா? என் செவிகள் கேட்பன யாவும் உண்மைதானா? என் அன்பான சிறிய தந்தை பேசுவதுபோ லிருக்கிறதே! இல்லையாகில் இதென்ன இந்திர ஜாலமா?" என்றுத் தியங்கி மயங்கிச் சித்தப்பிரமை பிடித்தவள் போலானாள்.

இராஜநாராயணர்:—"பாரிஜாதா! சாந்தப்படு. இங்கு சிறையாக இருக்கும் உன் சிறிய தந்தையையே நீ உண்மையாகப் பார்ப்பது."

பாரிஜாதம்:—"என்ன? என்ன? சிறையா? என்ன காரணம்? அந்தக் குலசேகரனா உம்மைச் சிறையாக வைத்திருப்பது? இந்த நிமிஷமே உமது கால் விலங்கைக் கழற்றி யெறிவேன்?"

இராஜ நாரயணர்:—"ஐயோ! அத்துராத்மாவின் ஹிருதயத்தை இளகச்செய்யும் சக்தி உனக்கு எங்கிருக்கிறது?"

பாரிஜாதம்:—"ஹிருதயத்தின் ஆசை யென்னும் ஸக்தியினால் விடுவிக்கமுடியும். அந்த என் ஸக்தியாகிய விஜயரங்கத்தினால் நான் ரக்ஷணையடைந்தேன். அத்துராத்மா கைதியானான்."

இராஜ நாராயணர்:—"ஆ! நமது விஜயரங்கமா! குழந்தை வந்து விட்டானா? என் கண்மணி எங்கே யிருக்கிறான்?"

இத்தருணத்தில் விஜயரங்கம் அங்கு வந்து இராஜநாராயணரின் பாதகமலங்களில் விழுந்து வணங்கினான். இராஜநாராயணர் அவனை வாரியெடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு, அமோகமான முத்தங்களிட்டு—"என் கண்ணே! எப்போதடா வந்தாய்?"—என்று வினவிப் பிரலாப மனத்தினரானர்.

விஜயரங்கம்:—"என் அன்பு மாமா! ஸமஸ்த விருத்தாந்தங்களும் அந்த ஸமுத்திரக்கள்வனை எதிரில் வைத்துக்கொண்டு கூறினால் தான் அவன் ஹிருதயத்தை அது நன்கு குத்திக்காட்டும். எனக்கும் திருப்தி தரும். அவன் தன் துணைவர்களோடும் இப்பொழுது சிறையானான். அந்தப் பரம சண்டாளனால் நமது வமிஸ

41. அத்தனை கபடத்தையும் கொடுமையையும் நெஞ்சில் மறைத்து, இப்படி அன்பு குலாவுகிறாயே! ஹா! என்ன ஜாலம்?

கௌரவமே பாழ்படுவதாயிருந்ததானது தெய்வஸங்கல்பத்தால் தப்பிற்று."

இராஜ நாராயணர்:—நிர்மலமான நமது வமிஸத்திற்கு எவ்வளவு பெரிய அபத்து ஸம்பவித்தது? அவற்றைக் கருதுமளவில் அநேக பயங்கர விஷயமான பாவனைகள் தென்படுகின்றன. சகிக்க முடியாத கடின ஹிம்ஸைகள் சித்தமாயிருக்கிறதென திக்பிரமையடைந்தவனாகி பிரேத ஸமானனாய் நின்ற என்னை நீ இப்பொழுது ரக்ஷணை செய்தாய். அத்யாச்சர்யமான ஒரு தேவதூதன் போன்றும் தோன்றினாய். அதற்கான பரிசை இந்த நிமிஷமே கொடுக்கின்றேன். பாரிஜாதம் இப்பொழுது உன் தர்மபத்தினி. உன் இகலோக சம்பத்திற்கெல்லாம் பாகமுடையவள். உன்னைத் தன் நாயகனென்று என்னுவதில் பாரிஜாதம் இனி வெட்கப்பட வேண்டியதில்லை. எனது ஸர்வ பிரயத்தனங்களாலும் உன்னை நாநா விடங்களிலும் தேடி யலுத்த நான், என் மானம் ஜீவன் இரண்டும் பிரிகிற சமயத்தில் உன்னைக் காணப் பெற்றேன். இனி எப்பொழுதும் நீ பாரிஜாதத்தை விட்டுப் பிரியாதே."

என்று கண்ணீர் பெருக்கினார். விஜயாங்கம் பாரிஜாதத்தையும் இராஜநாராயணரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு குலசேகரன் இருக்குமிடத்திற்குச் சென்றான். பாரிஜாதம் தன் சிறிய தந்தையை நோக்கித் தாங்கள் எவ்விதம் சிறையானீர்கள்? என்றாள். அதற்கு அவர் "நான் ஏகாந்தனாய் உனது பிதாவின் ஸமாதியண்டை நின்று வணங்கிக்கொண்டிருக்கும்போது என்னைக் கைது செய்தனர். அதே நிமிஷத்தில் ஒரு ஊதுகுழல் சப்தமிடப்பட்டு ஆகாசத்தில் ஒரு பாணமும் பறந்தது" என்றார். இதைக் கேட்கவும் பாரிஜாதத்தின் முகமெல்லாம் சிவந்தது. கால்கள் நடுங்கின. வியாகூல சமுத்திரத்தில் மூழ்கினவளாய், அந்த சப்தத்தையும் பாணத்தையும் குலசேகரன் தன்னிடம் வேறுவிதமாய்க் கூறி மறைத்ததை நினைத்துக்கொண்டு அதிகமான கோபத்தோடுங்கூடியவளாய், "அட! நீசனே! ஒரு பக்கம் என்னுடன் அன்பு குலாவி, அதே நிமிஷம் என் பிராணனான என் சிறிய தந்தையை வேறொரு பக்கத்தில் சிறைப்படுத்தி எத்தகைய கோரமான பாதகத்தைக் கைக்கொண்டாய்? ஹா! நான் எத்தனை விதங்களில் வஞ்சிக்கப்பட்டுப் போனேன். என்னுடைய "நம்பிக்கையின் வீழ்ச்சி" எத்துணைப் பயங்கரமானது?—நடுங்கத்தக்கது? என்று தனக்குள்ளாகவே புலம்பிக்கொண்டு துடிதுடிப்பதானாள்.

---

42. சண்டை, கலகத்திற்கு நேரம் பார்க்கிறவர்கள்—எந்தப் பேச்சில் எந்த வார்த்தை யகப்படும், எதைக்கொண்டு தொடங்கலாம் என்று ஆராய்கிறார்கள்.

அத்தியாயம் — 8.

விளக்கவுரை

இராஜநாராயணர் சிரேஷ்டாஸனத்தில் பாரிஜாதத்தோடும் வீற்றிருக்க, எதிர் புறமாகக் குலசேகரன் தன் துணைவர்களுடன் விலங்கிடப்பட்டவனாய்க் காணப்பட, மற்றும் கப்பலிலுள்ள பரிஜனங்கள் இக்காட்சியைக் கவனித்தவாறாய் அமர்ந்துள்ள நிலையில், விஜயரங்கம் தன் வாலாற்றினைக் கூறலுற்றான்.

"என் அன்பு மாமா! என் தேசஸஞ்சார மோஹத்தில் அனைவரையும் மறந்தே போயினேன். வீடு தாண்டி வண்டியேறிச் செல்லும் வரையில் தான் எவருக்குமே வீட்டின் நினைவு. இல்லம் திருஷ்டிக்கு மறைந்த பின்பு, இனித் தாங்கள் செல்லும் பிரயாணத்திலும், தங்களின் யாத்திரையிலே சித்தித்துக்கொள்ள வேண்டிய காரியங்களிலுமே சிந்தனை. ஏதோ இரண்டொரு நாள்,—பின் இடையிடையே சில நிமிஷங்கள்,—வீட்டின் ஞாபகம் தோன்றி வருந்திப் பிறகு மறைந்துவிடும். காரிய ஸாதகத்தின் உற்சாகத்திலேயே சிந்தை சென்று கொண்டிருக்கும். கடைசியில் தன் தேசத்திற்குத் திரும்புங்காலத்தில் மட்டும் பூர்வ நினைவுகளும், பழய ஆசைகளும் நெஞ்சில் பிரவகித்து அப்பொழுதே தன் ஊர் சேர்ந்துவிட முடியாதா என்ற ஆவல் மிகுந்துத் தவித்துத் தாவும். இவ்விதமே என் பிரயாண உற்சாகத்தில் பல வருஷகாலம் யாவரையும் மறந்தவனாகி. இறுதியிற் கனகபுரம் சேர்ந்து, அங்கு சில நாள் தாமதித்து, பிறகு பாரிஜாதத்தையும் தங்களையும் காண அவாவுற்றவனாய் ராமநாத நகரம் வந்தேன். நான் வந்தது அந்தரங்கம். அந்த சமயம் கடற்கரையோரம் பாரிஜாதத்தையும் குலசேகரனையும் தூரத்தில் கண்ணுற்றுத் திடுக்கிட்டேன். ஸம்பாஷணைகள் அனைத்தையும் மறைந்து நின்று கவனித்தேன். பாரிஜாதத்தின் நிஷ்களங்கமான ஹிருதயமும், குலசேகரனின் வஞ்சகமும் யாவும் நன்கு புலனாயின. கபடத்தோணியின் நிர்மாண விஷயத்தை நான் வருமுன்னரே பாரிஜாதம் குலசேகரனுக்குக் கூறிவிட்டனள் போலுங் காண்கிறது. அவற்றை நான் கேட்கவில்லை. அந்த ஸம்பாஷணைகள் நடந்து முடிந்துவிட்டதற்குப் பிறகே நான் அவ்விடத்தை யடைந்தேன்

---

43. அந்த வீட்டில் அப்போது நடந்த உபசாரங்கள் எத்தனை? இப்போதோ எட்டிப் பார்ப்போரையே காணோம். அது ஒரு காலம்.

போலும். பாரிஜாதம் நீங்கள் பிரதி சனிக்கிழமைகளிலும் பெரிய மாமாவின் ஸமாதியை ஏகாந்தமாய்த் தரிசிக்கச் செல்வதை அந்த சமயம் குலசேகரனுக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருந்தாள். பிறகு அவ்விருவரும் பிரிந்தனர்.

குலசேகரனைப்பார்த்தளவில் அவன் இன்னுனெனத் தெரிந்து விட்டது. அதுமுதல் அவனைப் பின் தொடர்ந்து அவன் காரியங்களைக் கவனித்து நின்றேன். பின்னர் மதுரை அரசரிடம் ஸகலமும் தெரிவித்து அவரது உதவியினால் ஒரு கப்பலையும் ஆட்களையும் பெற்றுக்கொண்டு, குலசேகரனைக் கண்ட இடத்திலெல்லாம் சிதற அடித்து, இறுதியில் அவனையும் அவனது தனராசிகளுடன் துணைவர்கள் சகிதமாகச் சிறை செய்தேன். மதுரையின் மன்னர் பாரிஜாதத்திடம் குலசேகரனுக்குள்ள யதார்த்த அன்பைச் சோதிப்பதற்காக ஒரு சூழ்ச்சி புரியுமாறு கூறினர். அதாவது தங்களை அவன் சிறைப்படுத்தித் தரச் சம்மதிக்கிறானு? என்பது தான். இதனுல் அவனது கிராதகத் தன்மை இன்னும் தெளிவாக வெளியாகும் என்றார். அவ்விதமே நானும் அவனைச் சிறையில் மாறுவேடத்துடனும் சந்தித்துக் கேட்க, ஏற்கெனவே பாரிஜாதத்தால் தாங்கள் ஏகாந்தமாய் சமாதி யருகே இருக்கக்கூடிய ஒரு பொழுதும் உண்டென்பதை யறிந்தவனுதலின்,— தான் காதலித்த இடத்தில் இக்கிராதகச் செயலைப் புரிவது அடுக்குமோ என்பதையும் கருதாதவனுகி,— உடனே சந்தோஷத்துடனும் ஒப்புக்கொண்டான். அவ்விதமே காரியங்களும் நடந்தன. அதிசயிக்கத்தக்க விதமாய்ப் பாரிஜாதத்தையும் மயக்கிக் கப்பலுக்குக் கொண்டு வந்துவிட்டான்"— என்று பிறகு நடந்த விஷயங்கள் யாவற்றையும் விஜயரங்கம் விவரித்தான். பாரிஜாதம் அனைத்தையும் கேட்டு நடுக்குற்று நின்றாள்.

பாரிஜாதம்:—(குலசேகரனை நோக்கி) "பாதகனே! உனது மாய்கையின் வசப்பட்டு என் கற்பு துறந்திருப்பின் என்ன ஆவதோ என் கதி? அப்போது எனக்கு மீட்சி ஏது? என் ஜீவிதகாலம் எத்துணைப் பயங்கர நரகமாய் விடும்? ஆ! எவ்வளவு பெரிய ஆபத்தை, மானபங்கத்தை, குலநாசத்தை, கொடூரத்தை விளைவிக்க இருந்தனை? நீசனே! நின்னை யொத்த விஷமிகளால் எத்துணை யுவதிகள் தங்களின் கற்பை வகைமோசமா யிழந்து ஜீவப்பிரேதமாயினர்? எத்துணை ராஜ்யங்கள், குடும்பங்கள் உன்னை யொத்த கிராதகர்களால் நசித்துப் போயின? உயிர்நிலையிலன்றோ கை வைத்து விடுகிறீர்கள். ஸ்திரீவர்க்கம் தனது திருமணிவயிற்றில் வைத்து வளர்த்த சிருஷ்டிதானே இவ்வுலகம்! இந்தப் பிரபஞ்சத்திற்கும், இதன் பல அணுக்களாகிய எண்ணற்று விளங்கும் குடும்

44. உன்னை அவன் அவ்வளவு உறவு பிடிப்பது எதற்காக? அன்பு முதிர்ச்சியாலா? அல்லது தன் காரியத்திற்காகவா?

பங்களுக்கும் உயிர்நிலை—பிராணஸ்தானம் பெண்மணிகளன்றோ? குலமேன்மைக்கும், வமிஸ கௌரவத்திற்கும், அதன் பரம்பரை விருத்திக்கும் அவர்களன்றோ ஆணிவேர்! அத்தகைய பூஜார்ஹமான புனித வஸ்துவை நீங்கள் எவ்வளவு சாமான்யமாய், உங்களின் கை ஆயுதமாய், அல்பமாகக் கருதி விடுகிறீர்கள்? எவ்வளவு சுலபத்தில் அவர்களை மயக்கி விடுகிறீர்கள்? எத்துணைச் சூழ்ச்சிகளுடனும் அவர்களை வஞ்சிக்கிறீர்கள்? உலகெங்களுமே உங்களின் திருக்கூட்டந்தானே? குலஸ்திரிகளையே மோப்பம் பிடித்துத் திரிந்து பாழ்படுத்துகிறீர்கள். எத்தனை விதவைகள், பருவ யுவதிகள், கன்னிகைகள் உங்களின் பாழ் வலையிற்பட்டுப் பாதாளத்தில் அமிழ்ந்தனர்? நல்ல குடும்பங்களில் ஒண்டிக்கொண்டு வீட்டுக்கு மருமகனென்றும், சகோதரிகளின் கணவர்களென்றும், மாமன்களென்றும், அத்தையின் குமாரர்களென்றும் உறவு பிடித்து, உட்கார்ந்தபடியே நெடுகத் தின்று ஏப்பமிட்டு, அவ்வீட்டிலுள்ள பெண்களின் மீதும் கண் செலுத்திக் கற்பு சிதைத்துக் குடும்பத்தைப் பிரிவினையி லிழுத்து வைத்து எவ்வளவு கோரணிகள் செய்துவிடுகிறீர்கள்? யோக்கியஸ்தர்களை யெல்லாம்—"அவர்களுக்குப் பெண்கள் இருக்கிற இடத்தில் என்ன வேலை?"—என்று குடும்பத்தலைவனிடம் கோள்குண்டுணிகள் கூறிக் கலகம் விளைத்து அவர்களை யொதுக்கிவிட்டு, உங்களை என்னவோ பரம சாதுக்களாய்க் காண்பித்து, யாவரிடமும் வலியப்பேசி வல்லமை காட்டி வஞ்சித்து நீங்கள் வசப்படுத்திக்கொண்டு சென்ற விதவைகளுக்குக் கணக்குண்டா? கன்னிகையர்கட்கு எண்ணிக்கை யுண்டா? மற்றும் உங்களின் விஷமச் செயல்களை அளவிடப்போமா? உங்களுடைய பாழும் சௌந்தரிய ரூபராசிகளிலே பிரமை கொண்டவர்களாகி எத்துணை மாதர்கள் நிலைதவறினர்? சீர்குலைந்த எத்துணைக் குடும்பங்கள் நிர்மூலமாகிப் பட்டன? கௌரவஸ்தர்களாய் மரித்த யோக்கியஸ்தர்களின் குடும்பங்கள், அவர்களின் காலத்திற்குப் பின் உங்களால் எவ்வளவு படுமோசமான—கேவலமான பெயரைப் பெற்றுவிட்டன? ஆடவர்களாகிய நீங்கள் அறியாத பாவையர் முன்பாக எத்துணைக் கிரமஸ்தர்கள்போல நடிக்கிறீர்கள்? எத்துணை நாணயங் காட்டி வட்ட மிடுகிறீர்கள்? எத்துணைப் பரமசாதுக்கள் போலிருக்கிறீர்கள்? ஆ! உங்களின் பாழ்த்த கண்கள் எத்துணைச் சாதுர்யமாய் அங்கனைகளை நோக்கி விஷமச் செயல்களைத் தூண்ட வைக்கின்றது? நீங்கள் அன்போடும் கொடுத்ததாகக் கருதப்படும் வஸ்துக்களில்,—உங்களின்அன்பு மயமான கற்கண்டையொத்த இனிப்பான பேச்சுகளில்,—கற்பே யழிக்குங் கிருமிகள், புழுக்கள்,—எத்தனை ஆயிரம் ஒட்டிக்கொண்டு மறைந்து நிற்கின்றன? மனதில் ஒன்று, வாக்கில்

---

45. அன்பை உணர்ந்து, அன்போடும் நடக்கப்பட்டவர்களுக்கு உண்மையான நண்பர்கள் அகப்படுவதில்லை. என்ன பாவம்!

ஒன்று, நடக்கையில் ஒன்று! ஆ! எத்துணைக் கபட ஜாலம்! என் கால முற்றிலும் இவ்விதம் சொல்லிச் சொல்லிக் காட்டுவதற்கு உன்னை ஜீவனோடு வைத்திருந்தால்தான் முடியும்." அவ்விதமே நரகத்தில் உன்னைத் தள்ளிப் பழிக்குப்பழி தீர்த்துக் கொள்ளுகிறேன்."

பாரிஜாதம்:—(தன் சிறிய பிதாவின் பாதங்களில் வீழ்ந்து) "எனது ஞானம் யாவும் நசித்துப்போய்ப் பழியினை தூண்ட விவேகமற்ற செயலில் வீழ்ந்து, அணுமாத்திரையில் பிழைத்துத் தப்பினேன். உமது அநுமதியின்றி நான் பரமசோதனையான இந்தப் பிரேமாஸ்பத காரியத்தில் பிரவர்த்தித்ததற்காக இப்பொழுது என் முகத்தின் மீது உமியலாம். காரித் துப்பலாம். அடித்துக்கொன்று விடும். எனக்குக் கோபமில்லை. என் நிஜஸ்திதியை—நான் வஞ்சிக்கப்பட்டதை—விஜயரங்கம் தெரிவித்தபின் என் மனதினுடைய பெரும்பாரம் நிவர்த்தியாய் விட்டது. என் சிறிய தந்தையே! நான் அயோக்கியமான பிரீதிக்குப் பாத்திரமாய்விட இருந்தேன். குலதெய்வம் என்னைக் காத்தது. விஜயரங்கத்தால் என் மானம் எனக்கு நிலைத்தது. என் கற்பு பிழைத்தது"—என்று கூறி மனத்தின் துயரமெல்லாம் தீரும் வரையில் கெட்டியாக அழுதாள். பின்,

பாரிஜாதம்:—(விஜயரங்கத்தின் பாதங்களில் நமஸ்கரித்து) "என் ஆர்யனே! தக்க தருணத்தில் தோன்றி என்னை மீட்பித்து மான ஸம்ரக்ஷணம் புரிந்தனை. இனி ஒரு கணமும் நின்னைப் பிரிந்திருக்க என்னால் இயலாது. உன் கஷ்ட சுகங்களில் நானும் பாத்தியப்பட்டு உன் ஊழியத்திற்கு என்றும் உரியவளாக இருப்பதே எனக்கு மங்களம்—பரமானந்தம். உன் இஷ்டத்திற்கு இசைந்த விதமாக வெல்லாம் நான் நடவா விட்டால், உண்மையான நட்பிலிருந்தும் அன்னியோன்னியத்தி லிருந்தும் உண்டாகும் ஆநந்தமே எனக்கு அநுபவிக்க வராது. நீ எக்காலத்திலேனும் மனம் மாறினால், என்னுடைய பிரேம மயமான பிரவாகத்தின் எதிரில் உனது கடினமுள்ள மனம் என்னும் கரையானது முன்னிற்காது முழ்கி விடும். பகவான் நமக்கு ஸர்வ மங்களங்களையும் பாலிப்பாராக"—என்று கூறி மீண்டும் நமஸ்கரித்தாள்.

விஜயரங்கம்:—(நிரம்பிய கருணை யுடைத்தான உள்ளத்தோடும் பாரிஜாதத்தின் கரங்களை ஒருசேரப் பற்றிக்கொண்டு) "பிரியமுடையவளே! தைரியமாயிரு. இனி உனக்கு எத்தகைய இடுக்கண்களும் நேரா. உன் சிறிய தந்தை சிறிய தந்தையல்ல. சொந்தத் தந்தையினும், ஈன்ற மாதாவினும் மேலானவர். அவர் மனதிற்கு ஸாந்தியும் ஸமாதானமும் திருப்தியும் விளைக்கும்படியான ரீதியில் நமது காரியங்கள் இருக்கட்டும். இப்பொழுது பூலோகத்தில்

---

46. தன் காரியம் அவன் கையில் இருக்கும் வரையில் அவனோடு வெகு பாசம், பல சந்திப்பு. பிறகோ—தூரத்திலே!

எங்குமே கிடைத்தற்கரிய அத்யந்த சோபிதமான விலை மதிப்பில்லாத மாலிக்கம் எனக்கு வலியக் கிடைத்திருப்பதனால், இனி எப்பொழுதும் ஆநந்தபரிதனாய் மனோ நிம்மதியுடனும் இன்ப வாரிதியில் ரமித்திருக்க என்னுள்ளம் துள்ளிக்கொண்டு எழுகின்றது. உனது சிறிய தந்தையார் எனக்கு அருளிய இந்தப் பரம வஸ்துவைப் பிரேமையுடனும் என் ஹிருதயத்தில் அணிந்து கொள்வேனாக."

இராஜ நாராயணர்:—"பாரிஜாதா! நீயே என் பிராணன், நீயே எனக்கு ஸகலமும். உன்னை யன்றி எனக்கு வேறு மக்களில்லை. எனது இனிய தமயனார் தமது அந்தியத்தில் உன்னைத்தான் எனக்கு ஆதாரவாக வைத்துச் சென்றார். என் புத்திரியும் நீயே. என் தமயனாரும் நீயே! யாவும் நீயே எனக்கு. என் கடைசி காலத்தில் என் பிராணன் உன் மடியின் மீதிருந்தபடியே தான் பிரியவேண்டும். இத்தகைய ஆர்வம்கொண்டு உன்னையே கதியாக நம்பியிருக்கும் என்னைக் கைசோரவிட்டு, என் அநுமதியின்றி அந்தக் கிராதகனுடன் நீ தோணியில் ஏறிச் செல்லுவதற்குத் துணிந்தாயல்லவா? நான் கேட்பதற்காகச் சிந்தாகூலம் வேண்டாம். என் மனதில் உண்டான அத்திரத்தை அடக்க வசமின்றி இவ்விதம் உன்னைக் கேட்டுவிட்டேன். எனினும் உன்னை மனஸ்பூர்வமாக மன்னிக்கின்றேன். உனது ஏமாற்றம் உலகத்துப் பெண்களுக்கெல்லாம் ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்."

பாரிஜாதம்:—"நான் துணிந்துவிட்ட காரியம் எனக்கே மிகு கேவலமும் அசம்மதமுமா யிருந்தாலும், செய்யாமல் தீராத நிலையில் நான் வகைமோசமாய் மயங்கி வஞ்சிக்கப்பட்டுப் போனேன்" —என்று பெருமூச்செறிந்தாள்.

விஜயரங்கம்:—"பொதுவாகக் கோதையரின் கோழை மதி சீர்திருத்த இயலாத கோணலில் சிக்கிக் கொள்கிறது. பால்யஸ்திரீ புருஷர்கள் ஒருவருக்கொருவர் விளையாடிக் கொள்வதிலுங்கூட —தூரநின்று அதனைக் காண்பார்க்கு விபசார சந்தேகமே. உத்தமர்களாயுள்ள ஒரு சிலர் மட்டும் தங்களின் உள்ளத்தில் கபடக் காமம் கருதாது நிர்மல சித்தமாய் அகக்களிப்போடிருந்து அன்பு நிலையமாய் விளையாடுவர். மற்றவரோ பொல்லாத சிந்தையை மனதிலிருத்தி, முகத்தை வேறு...யலாய்க் காட்டி, சம்பாஷணை சரசங்களை வளர்த்திப் பலவிதம் பேசி, இடித்துப் பிடித்துத் தள்ளித் தழுவி ஒன்றும் தெரியாதவர்கள்போலும் கபடில்லாதவர்கள் போலும் நடித்து விளையாடுவார். வேறு சில ஆடவர்கள் கபடற்ற பாவனை யுணர்த்தி, வெகு நல்லவர்கள் போல் தோன்றி பற்பல

47. உன் வீட்டில் தாவி உன் குடுமியை எட்டிப்பிடிக்க இடம் கிடைக்காததால், அத்தனை நல்லவர்கள் போல் அவர்கள் காட்டிக்கொள்கிறார்கள்.

உல்லாஸ வார்த்தைகளாடி, தான் அத்தையின் கணவனென்றும், அத்தையின் குமாரனென்றும், மற்றும் மணமாடுதற்கேற்ற முறையுள்ளவனென்றும், எவ்வளவு கேலிகள்—பரிகாசங்கள் வேண்டுமானாலும் செய்வதற்குப் பாத்தியமுள்ளவனென்றும் பாசாங்கு படித்து விளையாடிக் கற்பை நசுக்க முயலாது முயல்வார். இங்ஙனம் விளையாடும் ஆடவர் மகளிர் இருபாலாரும் நாளடைவில் விளையாட்டு முற்றி வினையில் முடிந்து அந்தரங்கத்தில் ஸதிபதிகளாகி விடுகிறார்கள். சில இடங்களில் ஆத்திரத்தில் யுவகன் மீறி எல்லை கடந்துவிட, அது பிறர் கண்ணிற்பட்டுப் பெருங் கலகத்திற்கு இடம் வைத்து விடுகிறது. பெண்கள் சுலபத்தில் ஏமாப்புற்று விடுதற்கேற்ப, அவர்களை வசப்படுத்தும் வழி வகைகளையும் புருடவுலகம் நன்கு கற்றுவைத்துக்கொண்டு, எந்த இடத்தில் தருணம் கிடைக்குமோவென நுழைந்து கொள்வதற்கும் இடம் ஆராய்ந்து கொண்டு, வெளிப்பார்வைக்கு மட்டில் வெகு யோக்கியமாய் நிற்கின்றது. லோகசுபாவம் எந்த வழியிற் சென்றாலும் குற்றமாகத்தான் படுகிறது. உத்தமர்களைப்பற்றி ஒரு மரியாதை வைத்து நிற்க வேண்டுமென்று யோசிக்கப் புகுமிடத்து, பொல்லாத தூர்த்தர்கள் அந்த உத்தமர்களிலும் தங்களை அதிக மேன்மையாகக் காட்டிக்கொள்ள முயல்வதில், உத்தமர்கள் இன்னாரெனப் பிரித்துத் தாரதம்மியம் கண்டுணர்வதும் கஷ்டமாகிறது. ஆனவே எதற்கும் இந்தச் சோதனையுலகில் கபடநாட்டியத்தில் சிக்கிக்கொள்ளாதிருக்தற்கு எப்பொழுதுமே ஆடவர்களிடத்துச் சந்தேக திருஷ்டியுடனேயே தூரவிலகி நின்று மாதரார் நடந்துகொள்ள முயல்வாராகில், அதுவே அவர்களின் கற்புக்குக்காவலாக நின்றுத் துணையுதவும். இந்த எச்சரிக்கை பெண்மணிகளுக்கு நிரம்பவும் அவசியகரமானது. இந்த "விளக்கவுரை"யை மாதரார் என்றும் மறக்கொணாது. பாரிஜாதம் அக்கிராதகனிட மிருந்தும் தப்பியது அதிர்ஷ்டவசம் தான்."

குலசேகரன் இவை யனைத்தையும் கேட்டுக்கொண்டு செயலற்றவனைப் குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்தான். கப்பல் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது.

☞ **பெண்மணிகாள்! 'பாரிஜாத'த்தின் கதையால் நீங்கள் தெரிந்துகொண்டது என்னேன்ன?**

---

48. உன் கூடப் பிறந்தவர்கள் உன் கை, கால், கண் மூக்கு, செவி இவர்களே சுயாலமற்ற மித்திரர்கள். மற்ற யாரும் தன்காரியக்குட்டிகள்.

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18. | திரிச்சி. செப்டம்பர்மீ 1922 | இதழ்-6.

அத்தியாயம்—9.

அமைப்புக்கேற்ப முடிவு

இக்கப்பல் கனகபுரம் வந்து சேர்ந்தது. இராஜ நாராயணருடைய தங்கையின் புத்திரனே விஜயரங்கம். விஜயரங்கத்தின் பிதா அந்திய மடைந்த பின்பு தந்தையின் ஸகோதரர் பிரதிநிதியாக இருந்து ராஜ்ய காரியங்களைப் பரிபாலித்துவந்தார். விஜயரங்கத்தின் மாதா கனகபுரத்தையே வாசஸ்தானமாகக் கொண்டார். தமது பர்த்தாவின் சமாதியை விட்டு ஒருதினமும் தாம் பிரிய முடியாதென்று தெரிவித்துவிட்டதனுல், தமது மனத்திருப்திக்காக விஜயரங்கத்தை மட்டும் இராஜநாராயணர் தமது சமஸ்தானமாகிய ராமநாத நகரத்திற்கு அழைத்துக் கொண்டார். விஜயரங்கமும் பாரிஜாதமும் சின்னஞ்சிறு குழந்தைகள். இருவரும் ஒன்ருகவே இருந்து வளர்ந்து வந்தனர். பால்யத்திலேயே அவர்களுக்குள் அன்னியோன்னியமான பிரேமை யதிகரித்தது. ஒருசமயம் தன் மாதாவைக் காணச் சென்ற விஜயரங்கம் அப்படியே சில பிரபு குல இளைஞர்களுடன் தேசாந்தர விநோதங்களைக் காணச் சென்ருன். ஐந்தாறு வருடங்களாகியும் அவன் செய்தி ஏதும் தெரியவில்லை. யாவரும் மனக் கலக்கமெய்தினர். எவ்விதத்தும் வருவானென்ற நம்பிக்கையினுல் தங்களின் மனத்தைத் திருப்திசெய்து கொள்ளும்படி நேர்ந்தது. வேறென்ன செய்ய? விஜயரங்கத்தின் மாதாவுக்கோ பரம துக்கம். இராஜநாராயணர் அநேக இடங்கட்கு ஆட்களை யனுப்பினுர். பயன்படவில்லை. சிறுமியாக நின்ற பாரிஜாதமும், விஜயரங்கம்

---

49. பெண்ணின் கூற்று:—"இவ்வுடலை என் காதலனின் உடலோடு சேரவிடுவேனே யல்லாது, இன்னெருவரது உடலோடு சேரவிடேன்.

அதற்குமுன்பு அவளிடத்தே கண்டிராத மாறுதல்களையெல்லாம் தன்னங்கத்தே ஏற்று நவீன அம்சங்களுடன் பரம ஸௌந்தரியாய் விளங்கினாள். விஜயரங்கத்தின் மீதிருந்த நம்பிக்கை வரவர க்ஷீணித்து, அவன் பிரபஞ்சத்தில் ஜீவிதனாய் இல்லையென்றே நிச்சயமனது கொண்டனர். இந்நிலைமையிலும் ஓராண்டு கழிந்திட, அதற்கு அடுத்த வருஷத்தில்தான் குலசேகரன் தோன்றி பாரிஜாதத்தை வஞ்சிப்பதான ஸம்பவங்கள் பிராப்தமாயின.

கப்பல் கனகபுரம் வந்து சேர்ந்ததும் விஜயரங்கத்தின் சிறிய தந்தையும் மாதாவும் எதிர்கொண்டழைத்தனர். மாமியார் தம் மருகியை அன்புடனும் தழுவிக்கொண்டார். "மாமியும் மருகியும் இங்கு ஒற்றுமையுடனேயே வாழ்வார்கள்—அவர்களுக்குள் கலகமேதும் நிகழா. இந்த மாமி தன் பர்த்தாவின் மாற்றாந்தாயல்ல. கோளும், வஞ்சனையும், பொறாமையும் இந்த மாமிக்கு இல்லை. எனது சொந்த மாமி" யென்று கூறிப் பாரிஜாதம் விஜயரங்கத்தின் மாதாவை வணங்கினாள்.

விஜயரங்கத்தின் மாதாவான மணிவல்லி பாரிஜாதத்தைத் தழுவிக்கொண்டு, மாமியிலும் சொந்த மாமி, அன்னிய மாமி என்று பிரிவுகள் உண்டாவென்று தமது மருகியை வினவினார். அதற்குப் பாரிஜாதம்,"அகா! அது ஒரு பெரிய கண்றாவியல்லவோ! சொந்த மாமிக்கும் மருகிக்குமே பல இடங்களில் சரிப்பட்டுவருவதில்லை. அபூர்வமான அன்யோன்ய பாந்தவ்யம் சிற்சில இடங்களிலேயே காணப்படுகிறது. இதற்கே இவ்வாறாகில், இனி தன் பர்த்தாவுக்கு அவரை ஈன்ற தாயார் இல்லாமல்,வேறொரு மாற்றாந்தாய் இருந்து, அந்த மாற்றாந்தாய்க்குக் குழந்தைகளும் இருந்துவிட்டால், குடும்பப் பிரிவினைக்குக் கேட்கவேண்டாம். எவ்வளவு செய்தாலும், பணிந்து நடந்தாலும் இந்த மாற்றாந்தாய் மாமிக்கு விஸ்வாசம் ஜென்ம ஜென்மத்திலும் ஏற்படமாட்டா. எல்லா செலவுகளையும் மருகிதானே செய்துவர, அவளை ஆட்டிப் படைத்து அதிகாரம் பண்ணி, வெளிக்குச் சகல செலவுகளையும் தானே செய்வது போலவும், கோபுரத்தை அதின் மேலுள்ள பொம்மை தாங்குகிறதென்ற கதையாகத் தானே குடும்பபாரத்தை யேற்றுத் தாங்குவதாகவும் கம்பீரம் பேசிக் கொள்வார்கள். மருகியை அடக்கித் தன் சொந்த செலவுகளை யெல்லாம் தன் மூத்தாள் மகனுக்குத் தெரியாமல் அவளைக்கொண்டே அந்தரங்கத்தில் செய்துகொண்டு, தன் பணம் துணி நகை யென்று தனிக்கணக்கு வேறேயாக வைத்துக் கொள்வார்கள். எவ்வளவு செலவானாலும்—ஆகட்டுமென்றே—

---

50. இன்னொருவன் மணந்த பெண்ணுக்கு,நீ ஆதியில் ஆசை வைத்த காதலி என்ற நினைவில் பல பல விருந்து பொருள் பரிசு செய்கிறாய். அதிற் பயனென்னவோ?

பொறுமையில் மூழ்கி நிற்பார்கள். தன் குழந்தைகள் மட்டும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று கோரிக்கொள்வார்கள். தன்னை மாற்றாந்தாயாக நினையாது சொந்தத் தாய்போற் கருதி நடக்கிற புண்யமூர்த்தியான தனது மூத்தாளின் மகனிடத்து அவளுக்கு அன்புமில்லை, மண்ணுமில்லை. இரக்கமுமில்லை. இளகிய நெஞ்சமும் கிடையாது. எல்லா செலவுகளையும் அவனையே செய்ய வைத்துக் கடன்காரனுக்கித் திகைக்க வைப்பதில் சமர்த்து காட்டிவிட்டு, வெளிக்கு மட்டும் வெகு அன்பும் பக்ஷமுமான வார்த்தைகளைக் கொட்டி அன்பின் கிரீடமாக நடிப்பார்கள். இவ்வளவு செலவாகிறதே, எப்படி அவன் தாங்குவான், அவனும் குழந்தை குட்டிக்காரனுயிற்றே யென்று பார்க்கிறதும் கிடையாது. அவன் படுகிற கஷ்டத்திற்குப் பரிதபிப்பதும் கிடையாது. அவன் கஷ்ட நஷ்டங்களில் பங்கு பெற்றுக் கொள்வதும் கிடையாது. இன்றைக்குச் செலவுக்கு வழியில்லையென்றால், சரிதான் என்று தன்மட்டிலிருந்து விடுவார்களே தவிர, தமது பெட்டியிலிருந்து—தமது பணத்திலிருந்து கால்துட்டும் எடுத்துக் கொடாார்கள். தன்னைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு செலவுகளானாலும் அது அவர்களுக்கு சந்தோஷமாக இருக்கும். இன்னும் அதிகமாகச் செலவு செய்யவில்லையே என்றுதான் அவர்களுக்கு வருத்தம். தன் மருகியைச் சேர்ந்தவர்களானால் ஒரு காசைக்கூட ஒரு பவுனாக நினைத்துக் கணக்கிடுவர். வீணான செலவுகளில் பணத்தைத் தன் மருகி வாரி வீசுகிறாள் என்று ஊரெங்கும் பறை சாற்றுவர். வந்தவர்கள் எப்போது போவார்களோ வென்று சிடுசிடுத்து நிற்பர். இந்த மாமிக்குச் சேர்ந்தவர்களோ எல்லாக் குடும்பப் பொறுப்பும் செலவுகளும் அந்த மாமியே செய்வதாக வெளியில் டம்பம் பேசிக்கொள்வர். தன்னைச் சேர்ந்த பந்து ஜனங்கள் பத்து வருஷங்கள் வந்து தங்கியிருந்து சென்றாலும் மனதுக்கு மட்டற்ற திருப்தி. அவர்கள் இவ்வளவு சீக்கிரம் போய்விடுகிறார்களே என்றுதான் ஏக்கம்! தன் மருகியின் தாய் வீட்டைச் சேர்ந்தவர்கள் எவரேனும் வந்து ஒருநாள் குந்திவிட்டாலோ வீட்டில் மாமியின் கலகங்கள், முணமுணப்புகள் பிரமாதமாக நடந்து கொண்டிருக்கும். மருகியில்லாத காலங்களில் அவளைச் சேர்ந்தவர்கள் வந்துவிட்டாலோ அன்றைய தினத்திலேயே அவர்கள் பிரயாணமூட்டை கட்டிக்கொண்டு செல்லும்படியான ரீதியில் அவர்களை உபசரித்து விடுவர். இவ்வளவும் மாற்றாந்தாய் மாமி கதையாக, இனி சொந்த மாமியாக இருந்தால், இன்றைக்குச் சண்டையானாலும் நாளைக்கு ஒன்றுபட்டு மனதொருமித்துப் போகும்படியாக இருக்கும். பால்சட்டி இருக்குமிடத்தில் சாணிச்சட்டியை வைக்க முடியுமா? வேறு வேறுதான். வெவ்வேறிடம் தான். சொந்த மாமிக்கும்

---

51. நாற்றம், கசப்பு, சோதனையின்றி உலகில் எந்தக் காரிய மிருக்கிறது? எல்லாம் அப்படியப்படித்தான்.

மாற்றுந்நாய் மாமிக்கும் மலிக்கும் மடுவுக்குமுள்ள பேதம்தான். கற்பூரம்போலக் கடலுப்பு இருந்தாலும் கற்பூரமாமோ கடலுப்பு! பித்தளை எவ்வளவு பிரகாசித்தாலும் அதன் நாற்றம் போகாது. அது பித்தளைக்கட்டித் தான்-பொன்னுகாது" என்றாள் பாரிஜாதம்.

மணிவல்லி தன் மருகியின் அநுபவ ஞானத்திற்குப் பெரிதும் வியந்தாள். அவளுக்குப் பாரிஜாதத்தினிடத்து அளவற்ற அபிமானமும் வாஞ்சையும் சுரந்து பெருகிப் பொங்கி யெழுந்தன. மேனியழகும், மாதுர்ய குணமும், சாதுர்ய வசனமும், இல்லறம் நடாத்தும் திறனும், யாவர் மனத்தையும் ஒரு நொடியில் கவரும் வசீகரமான முகமும், கல்வி நலனும், புத்தி கூர்மையும் ஒருங்கே அமையப்பெற்ற மருமகள் தனக்கு வாய்ப்பது தனது பூர்வ புண்ணியமே என மொழிந்து பாரிஜாதத்தைத் தழுவிக்கொண்டாள். அனைவருக்கும் இராஜோபசாரங்கள் நடந்தன.

பின் குலசேகரனின் விசாரணை இராஜ நாராயணரின் முன்னிலையில் ஆரம்பமாயிற்று. பாரிஜாதத்தைப்பற்றி அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—"அடியார்களுக்கு ஆண்டவன் ஜாடையாகவே விஷயங்களைக் காண்பிப்பார். அதைக் கவனியாதிருந்து விட்டால் ஏதேனும் ஓர் அநர்த்தத்தை யுண்டுபண்ணிக் கட்டாயம் புத்தி கற்பிப்பார். அதன் பிறகும் விழித்துக்கொள்ளாவிட்டால், தலையில் இடிவிழுந்தே தீரும். நல்ல வேளையாக ஆபத்தான சமயத்திலும் தன் கற்பு நிலை குன்றாது பாரிஜாதம் நடந்துகொண்டு விட்டாள். தன் பிழையை ஒப்புக்கொண்டு பின்வாங்கிக் கொண்டாள். வழி தவறிப் போனவர்கள் பின் வாங்கவேண்டியது தான். எந்த இடத்தில் முதன் முதலில் குறுக்குவழி பிடித்தனரோ அந்த இடத்துக்கே திரும்பியாக வேண்டும். பாரிஜாதமும் அவ்விதமே திரும்பித் தன் ஆதிஸ்தானத்தை யடைவதானாள். யார் ஒதுங்கினாலும் காலத்தின் வேலை நிற்காது."

குலசேகரன் விஷயமாக அவர் சுட்டிக்காட்டியதாவது:—"பிறருக்கு நடுக்க முண்டுபண்ணும்படியான காரியங்களையே எப்பொழுதும் அவன் செய்பவன். அவனால் பெரிய கவலைகளை ராமநாத நகரம் அநுபவித்துவிட்டது. அவன் விளைத்த தீங்குகள் அசைக்கத் திருப்பக்கூடாதவை. எதையும் தனக்கு அநுகூலமாகத் திரித்து உபயோகிக்கக் கூடியவன். பாரிஜாதம் என்ற நிலத்தைப் பண்படுத்தி, அவளை மயக்குவதாகிய விதை விதைத்து, அந்தச் செடி எவ்விதம் வளருகிறதென்று அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

---

52. எளியாரைப் பார்த்துப் பரிகாசச் சிரிப்பு சிரிப்போர், தாங்களும் சந்தி சிரிக்க நெடுநாள் வேண்டாம்.

குலசேகரன், தான் கொள்ளையடிக்கும் காரியத்திலேயே தன்னுடைய திருஷ்டியைத் திருப்பியதில், பிரதானமும் உண்மையுமான காதற் பிரசினை மறைந்துபோய் விட்டது. இங்ஙனம் மறையும் விஷயத்திலேயே உழைக்கும்படி சில சந்தர்ப்பங்கள் அவனைச் செய்துவிட்டன. அவனுக்கு இராஜ்ய அந்தரங்கங்களைத் தன் பேதமையால் மொழிந்து அச்சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொடுத்தவள் பாரிஜாதமாவாள். நாம் சத்துருக்களையும் நேசிக்கவேண்டும். நேசிக்கமுடியா விட்டால் மன்னிக்கவாவது செய்யவேண்டும். பழிக்குப்பழி வாங்குவது கூடவே கூடாது. காதற் பிரசினையோடு குலசேகரனின் காரியங்கள் இருக்கும் பக்ஷத்தில் அவனைப் பூர்ணமாய் மன்னித்து விடக்கூடும்.

வைத்தியர்கள் இருக்கிறார்களென்கிற தைரியத்தினால் கெட்ட வழக்கங்களே உலகில் அதிகமாவதுபோல, தான் எத்துணைக் கொடியவனேனும் பாரிஜாதம் தன்னையே நாடுவாள் என்ற துணிவினால், குலசேகரனின் காரியங்கள் அளவுக்கு மீறி எல்லை கடந்துவிட்டன. இத்துணிகர ஆசையால் மாயை வசப்பட்டுக் கிடக்கும் இவ்வுலகில் மனம்போனபடி திரிந்துகெட அவனுக்கு விதி ஏற்பட்டுவிட்டது. மொத்தத்துக்கு இவ்வித ஆசை என்பதே கூடாது. ஆசையிருக்க இருக்க ஆத்மாவின் பரிசுத்தம் குன்றிவிடுகிறது. அவாவறுப்பதே மனிதவர்க்கத்தினரின் லக்ஷியமாயிருக்கவேண்டும். ஸம்பந்தமில்லாத விஷயங்களைக் கூறி, தன் கபடத்தையும், தன் சுபநல சிந்தைகளையும் மறைத்துக் காலங்கடத்திவிடுவதில் அதிக சக்தியிருக்கிறது. நல்ல வேலைகளைக் கெடுக்க அதற்கு சமதையானதொன்றில்லை. நாம் ஒருவரிடம் ஒரு சங்கதிக்காகப் பேசப்போனால் நமது பேச்சையே அவர்கள் எடுப்பதில்லை. அதற்குச் சம்பந்தமில்லாத வேறு விஷயங்களை ஆரம்பித்து, அதில் நமது யாரையை இழுத்து பிறகு தங்களுடைய பிரதாபங்களை வர்ணித்து, தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களையும் அந்த சமயத்தில் நம்மைக்கொண்டே செய்துகொண்டுவிட்டு, கடைசியில் நம்மை வெறுமனே அனுப்பி விடுகிறார்கள். வந்துநேரமானதால், வந்த காரியத்தை மற்றொரு தினத்திற்குத் தள்ளிவைத்துக்கொண்டு நாமும் எழுந்திருக்க நேர்கிறது. பல இந்திரஜித்துக்களில் இதுவுமொன்று. இதிற் குலசேகரன் தீரன். காதல் வசனங்களினூடே தன் கொள்ளைக்கான இராஜ்ய சூக்ஷ்மங்களையும் பாரிஜாதத்திடம் கிரகித்தான். மத்திய அறையில் இருப்பதென்ன வென்று பாரிஜாதம் பலமுறை வினவியும், அதற்குச் சம்பந்தமில்லாத வேறுவிஷயங்களைப் பேசிக் காலத்தை ஓட்டிவந்தான். எந்தவிதமாகப் பார்ப்பினும் குலசேகரனின் விஷமச்செயல்கள் மிகு பயங்கரமானவை. மனிதவர்க்கத்தைச்

---

53. எதப்பா இதுவரையும் இல்லாத நேசம் இப்போது? வெகு அன்பு குலாவுகிறீர்களே! எத்தனை நாழிகை வரைக்கோ?

சேர்ந்தவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்கிய பாவம் இந்தசிக்ஷையினால் ஒழிந்துபோகட்டும். தர்மம் தலைகுனியும் சமயங்களில் பகவான் பக்தர்களைக் கைதூக்கிவிடுவார் என்பது நம்மனோர் மதம். குலநாசம் நேர இருந்த தருணம் ஒரு அணுமாத்திரையில் தப்பியது தெய்வசங்கல்பம். இவனுக்கு என்னவிதமான சிக்ஷை விதிப்பதென்ற சிக்கலான ஒரு பிரசினைக்கு சமாதானம் கண்டுபிடிப்பதே நாம் இங்கு செய்யவேண்டிய வேலை. இதற்கு அவன் சம்பந்தமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை நன்கு அறிந்துகொண்டால்தான், சரியான முடிவுக்கு வரக்கூடும். எனவே கெடுதலுக்கு சிக்ஷை அதியவசியம். கெடுதல் என்பது எந்த விதத்திலிருந்தாலும் அதை ஒழிப்பதே ஒவ்வொருவனுடையவும் கடமை. கெடுதலை நாம் எதிர்க்கவேண்டாம். அத்துடன் ஒத்துழைப்பதை மாத்திரம் நாம் இங்கு நிறுத்திக்கொள்வோம். தீர்க்கமான காதற்பிரசினையுடன் குலசேகரன் விஷயம் கலந்து நிற்றலால், அவனுக்கு மரண சிக்ஷை க்ரமமுள்ளதாகாது. வேறொன்றினையே யோசிக்கவேண்டும். இவ்விதம் விட்டுக்கொடுப்பதில் இரண்டு விதங்கள் உண்டு. (1) லௌகீக ஆசைக்காகப் பரமார்த்திக சாதனத்தை விட்டுக்கொடுப்பது பிசகு. (2) ஆனால் பரமார்த்திக சாதனத்தை நாடி லௌகிக நன்மையை விட்டுக்கொடுத்தால் அது க்ரமமுள்ளதேயாகும். அங்ஙனமாக, காதற்பிரசினையில் இவன் சம்பந்தப்பட்டிருப்பதை யுத்தேசித்து, அவனுக்கு விதிக்கவேண்டிய மரண சிக்ஷையிலிருந்தும் அவனை மீட்பித்து விடுவோம். மனிதர்களுக்கு சுயேச்சையான புத்தியைக் கொடுத்தால், அவர்கள் அதை துஷ்பிரயோகம் செய்துவிடுவார்களென்று தெரிந்தும், கடவுள் அதைக் கொடுத்திருக்கிறார். அவ்விதமே, குலசேகரனை மரண சிக்ஷையினின்றும் விடுவித்து ஜீவிக்க விடுதல் பின்னும் அநந்தமான அநர்த்தங்களுக்கு ஹேதுகரமேயாயினும், ஒருவாறு அவனை ஜீவனுடன் விட்டுவிடுவோம். அவனை அவமதிக்கவேண்டுமென்கிற எண்ணமே எனக்கு இல்லை. ஆனால் அவனுக்கும் உலகத்திற்கும் எவ்வித தொடர்புமின்றிச் செய்து விடவேண்டியது முக்கியம். அவ்வாறாக, அவனுக்கு ஜென்மதிபாந்தர சிக்ஷையே தக்கதெனக் கருணையுடனும் விதிக்கின்றேன்" என்று தீர்ப்பு கூறினார்.

குலசேகரன்:—"வாயினால் பேசும் காதற்சொற்களின் பொருளை வாழ்விலே—வெற்றியிலே—காண்பிக்க முடியவில்லை. சொற்களுக்குப் பொருள் காலத்தாலும் வழக்கத்தாலும் ஏற்படும், தெளிவுபடும். அதற்கு அநுபவந்தான் முக்கிய கருவி. அநுபவம் தானாகத் தோன்றாது. ஆயிரக் கணக்கான தவறுதல்களை மனிதன் செய்

---

54. ஒருவன் தனக்கென்று சேர்த்துவைத்துள்ள பழைய காகிதக் கட்டுகள், வேறொருவனுக்குப் பைத்தியக்காரத்தனமாகப் படுகின்றது.

தால், ஒரு முழு அநுபவம் அவனுக்குக் கிடைக்கும்; அவ்விதத் தவறுதல்களின் அநுபவம் இல்லாவிடில் அவன் அறிவு அரை குறையாகும். இவ்வித அரை குறையான அறிவால் தான் கடைசி வரையிலும் படி தவறியவனாய் விட்டேன். என் சிந்தனைகளும் மலட்டுத்தனமாக முடிந்தன. பாரிஜாதம் என்னை ஆதியிலேயே கள்வன் என்று அறிந்து நேசித்திருப்பின் இப்போது விரோதப் பட இடமிராது. மனத்தாங்கல்கள் ஒருவரை யொருவர் சரியாய் அறியாமல் இருப்பதன் பலன்களாகும். பின்னும் மற்றொரு விஷயத்தையும் இங்கு தெரிவிக்கின்றேன். ஒரு பெண்ணோ, புமானோ —எத்தனை தான் கல்வி பயின்றிருப்பினும், நன்னடக்கைகள் கற்றிருப்பினும். அவர்களிடத்து இயற்கையில் ஏற்பட்ட துற்குணங்களிற் சில அவர்களை விட்டு எக்காலத்திலும் விலகாமல் அத்துற்குணங்களைத் தங்கள் காலமுழுமைக்கும் அவர்கள் காட்டியே செல்வோரா யிருக்கிறார்கள். அவர்களின் வித்தியா வைபவமோ, அவர்கள் வகிக்கும் உயர்பதவிகளோ அதிசயிக்கத் தக்கனவாய் இருக்க, அவர்களின் அக்கிரமமும் இழிவுமான விஷமச் செயல்களோ அருவெறுக்கத் தக்கனவாய், கேவலத்திலும் கேவலமாய்க் கேடுபாடடைந்துள்ளன. இத்துரதிர்ஷ்ட வசத்தை எங்குபோய்ச் சொல்லி யழுவதோ? அவ்விதம் கெட்டு அழுது நைந்துருகிப் புலம்பும்வாறாகவே இங்கு என் கதியும் வாய்த்தது. ஒவ்வொரு மனிதனும் பெண்ணும் தமது வருங்காலத்தில் பிடிவாதமாக நம்பிக்கை கொண்டுள்ளார். இவ்வித நம்பிக்கையையே— எண்ணத்தையே— இந்தத் தீர்மானத்தையே நான் உறுதியாகப்பற்றி யிருக்கையில், அது அழிந்துபோகவிட்டு விடுவதாகில், என்னால் அவ்வேதனையைத் தாங்கத் திறனில்லை" என்று கதறிப் புலம்பினான்.

பிறருடைய அபிப்பிராயங்களைப் பொறுமையுடன் கேட்கும் சுபாவம் மிக்க விலையுயர்ந்தது. இராஜநாராயணர் குலசேகரன் கூறிய அனைத்திற்கும் செவி சாய்த்தபடி நின்று, அவனுக்காகப் பெரிதும் இரங்கினார்.

பாரிஜாதம் தன் முன்பு குலசேகரன் காயங்களோடும் தோன்றிய சம்பவத்தின் விவரங்களை யறிய விரும்பினாள். குலசேகரன் ஏதும் மறைக்கவில்லை. தானே மாறுவேடத்துடன் சிறையில் வைக்கப்பட்டிருந்த மாலுமியைச் சந்திக்க, தன் கூட்டாளியாகிய அவனது மனோதிடத்தைச் சோதித்தற் பொருட்டாக அவனைப் பல கேள்விகள் கேட்டதாகவும், கடற்கள்வனின் உளவு மனிதனோ நீ என அவனை வினவி அவனது நெஞ்சின் உறுதியை யறிய முயன்

---

55. எதிலும் பட்டுக்கொள்ளாமல்,—'அப்படியா ?'—எனத்தலையசைப்போரிடம் உன் பரிதாப சங்கதிகளை ஏன் சொல்லுகிறாய்? மூடிவிடு.

றதாயும், அவன் எதற்கும் பின்னடையாதது நோக்கி மகிழ்வெய்தியதாயும், அப்பால் இரவில் தன் கூட்டத்தாரின் பலத்தைப் பரீக்ஷிப்பதின் பொருட்டாக அவர்களுடன் வேற்றுருவில் நின்று எதிர்த்ததாகவும், இந்த இரு இடங்களிலும் தன் பெயரைக் குலசேகரன் என்றே கூறிக்கொண்டதாயும், பின்னர் மறுநாள் மாலையில் பாரிஜாதத்தை ஏமாற்றுதலின் பொருட்டு ஏதோ பல காயங்கள் இரவு கள்வரை எதிர்த்ததனால் பட்டதாகத் தெரிவிக்கப் பொய்க்காயங்களும் பொய் மருந்துக் கட்டுகளுமாய் அவள் முன்பு தோன்றி நடித்ததாகவும் இயம்பினான். இதைப் பாரிஜாதம் கேட்டுப் பிரமித்தாள். ஆ! அந்த மொழிகளும் பொய்யா? வஞ்சகமா! ஆடவர்கள் எத்துணைப் பொல்லாதவர்களப்பா வெனப் பெருமூச்செறிந்தாள். குலசேகரனையும் நல்லவனாக்கி விடக்கூடிய, அவனிலும் அதிகமான விஷத்தன்மை வாய்ந்த கொடூரஸ்தர்களாய் எத்தனையோ உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும், நண்பர்களும், பந்துக்களும் நமது கண்களுக்கு முன்பாகவே யுள்ளார். அவர்களுடைய செல்வாக்கின் மகிமையானது அவர்களுடைய தீய செயல்களை எவரும் வெளியிட முடியாதபடி—நிரூபித்துக் காட்ட இயலாதபடி—காட்டினால் பெருங்கலக முண்டாகும்படி செய்துவிடுகின்றது.

கடைசியாக, கடற்கள்வனைச் சேர்ந்தவர்களாய்க் கப்பலில் இருந்தவர்களுக்கும் ஜென்ம தீபாந்தர சிக்ஷை கிடைத்தது. குலசேகரன் கானகக்குறவர் இனத்தைச் சேர்ந்தவன். அவன் தாய் மிகு ரூபவதியாயிருந்திட, அவளை ஒரு தனவான் தனது அபிமான ஸ்திரீயாகக்கொள்ள, அவ்வழியில் குலசேகரனும் பிறந்தான். அவனது உண்மைப் பெயர் மாரிமுத்து. அவன் சுப்புக்குட்டி என்றுகூட அழைக்கப்பட்டான். தனவந்தனுக்குப் பிறந்தவனாதலின் இளமை முதற்கொண்டு கல்வியிற் றேர்ச்சியுற்று வாக்சாதுர்யத்தில் வல்லவனானான். ஆயினும் குறவர் குலத்தைச் சேர்ந்த தாயின் அம்ஸத்தில் நன்கு ஊறியிருந்தவனாதலின், அல்பமான சிந்தனைகளே மேலிட்டு களவு காமம் வஞ்சகமாகிய வற்றிலேயே அவன் புத்தி சென்றது. இறுதியில் தன் தாயினத்தாருடனேயே சேர்ந்து கடற்கள்வனானான். தாயைப்போல பிள்ளை நூலைப் போல சேலை. இக்குலசேகரனிடம் விஜயரங்கம் தன் துணைவர்களுடன் தனது தேசசஞ்சாரத்தின்போதொருநாள் சிக்கிக்கொண்டு, பின் தப்பித்துச் சென்ற சம்பவமொன்றும் ஏற்கனவே நிகழ்ந்திருந்தமையால், பாரிஜாதத்தினருகே கடற்கரையில் இக்குலசேகரனை விஜயரங்கம் மறைந்து நின்று கண்டளவில், அவன் கடற்கள்வனே என்று அறிவதும் சுலபமாயிற்று. இக்கூட்டத்தாரின் வாசஸ்தலங்களை விஜயரங்கம் இவர்களின் கையில் அகப்பட்டுக் கொண்ட காலத்தில் அறிந்து

---

56. அவனது முன் சங்கதிகளெல்லாம் தெரியாதா? அதை மறைத்துப் புது உறவு கொஞ்சுகிறான். நீயும் அதற்கேற்பத் தாளம் போட்டு நடி.

வைத்தவனாதலின், இவர்கள் அனைவரையும் சுலபத்தில் தானே சிறைபிடித்து மதுரை யரசரின் முன்பு கொண்டு செல்லவும் சாத்தியமானது. கடைசியில் பயங்கர அரண்ய மத்தியில் நிர்ஜனமான பிரதேசமொன்றில் குலசேகரனின் காலம் மிகுந்த நிர்ப்பந்தங்களோடும் கழியவேண்டியதாயிற்று. மதுரை யரசரிடம் சிறை வைக்கப்பட்டிருந்த குலசேகரனின் கூட்டத்தாருக்கும் இதே கதி வாய்த்தது. பெண்மணிகளை வஞ்சித்துக் கெடுக்கும் ஆடவர்கட்கெல்லாம் இத்தகைய சிக்ஷை கிடைப்பதாயின் அதி உத்தமமாயிருக்கும்.

அவனே உன் சத்துரு:—பெண்மணியே! அந்த மனிதன் வெகு டம்பமாய், தளுக்கு மினுக்காய், லக்ஷணமாய் இருக்கிறானென்று மயங்கிவிடாதே. மதிமருண்டுவிடாதே. ஐயோ! அவன் தான் உனக்குக் கொடிய சத்துரு. பின்னுக்கு உன் ஜென்மப் பகைவனும் அவனே. அவனை ஒருபோதும் நம்பிவிடாதே. உன் கற்பைக் கெடுத்து உன்னைச் சந்தியி லிழுத்துவிடவே அவன் அவ்வளவு அன்பாய்ப் பேசுகிறான். சிங்காரித்துக்கொண்டு உன் முன்பு வருகிறான். மயங்காதே. அவன் கண்முன்பு படாதே. ஜாக்கிரதை.

* * * * *

விஜயரங்கத்துக்கும் பாரிஜாதத்திற்கும் நல்ல சுபமுகூர்த்தத்தில் விவாகம் நடந்தேறின. திருமண வைபவத்திற்கு மதுரை யாசரும் வந்திருந்தது ஆசிவழங்கினர். "அமைப்புக் கேற்ப முடிவு."

இராமநாதநகரத்தில் இராஜநாராயணரிடமே விஜயரங்கமும் பாரிஜாதமும் இருந்து வருவதாயினர். மணிவல்லியும் தனது தமயனரிடமே தமது காலத்தைக் கழிப்பதாயினர். கனகபுரத்தின் இராஜ்யாதிபத்யம் விஜயரங்கத்தின் சிறிய பிதாவே பார்த்துவருகிறதென்றும், அவர் காலத்திற்குப் பிறகு விஜயரங்கத்திற்குச் சேருவதென்றும் ஏற்பாடாயிற்று. பாரிஜாதமும் விஜயரங்கமும் அன்னியோன்னிய தாம்பத்தியத்துடனும் புத்திரபாக்கியங்களோடும் விளங்குவதாயினர். பாரிஜாதம் தன் மணாளனுக்கேற்ற மடநல்லாள். மனமகிழ்ந்த சொல்லாள். மாதுர்ய வசனநடையாள். மகிமைபூண்ட பெண்ணாள். உலகினையாளுங் கண்ணாள். கற்பலங்கார சோபித நவரத்னமாலிகாபரண மாவாள். அம்மனோரஞ்சினி வாழ்க. அத்தேவியின் இல்லறமும் இனிது ஓங்குவதாக. மங்களம்.

---

57. நம்மிடம் நேசனாயிருப்பவனே நம் எதிரிக்கு நம் அந்தரங்க ரகசியம் சொல்லும் தூதனாகவும் இருப்பான். எச்சரிக்கை!

பெண்மணிகாள்!

பாரிஜாதத்தின் பாடுகளைக் கண்டீர்களா? ஆ! எத்தனைப் பயங்கரமான வீழ்ச்சி! ஆடவர்களின் மோசக்கருத்துகளையும், நயவஞ்சனைகளையும், உங்களிடத்துப் பெரிதும் உருகுவார்போன்றும்—உபகரிப்பார்போன்றும் அபிநயிப்பதான விஷமச் செயல்களையும், மிக்க மெல்லிய நெஞ்சம் வாய்ந்த பேதைகளாகிய நீங்கள் அறியாமற் போய்விடுகிறீர்கள். எவர்களையும் நம்பிவிடுகிறீர்கள். உத்தமர்களிற் சிலரை மனதிற் கருதி அவர்களைப் போலவே அனைவரும் என்று எண்ணிவிடுகிறீர்கள். அண்டை அயலில் உள்ளவர்களாகட்டும். உறவினர் வகையில் உள்ளவர்களாகட்டும், உங்கள் பர்த்தாவின் நண்பர்களாகட்டும்—எவர்களுடன் நீங்கள் அதிகமாய்ப் பழகும்படியாக நேர்கின்றனவோ, அவர்களிடமெல்லாம் சம்சயித்த கண்களுடனேயே அவர்களைத் தூரத்திலேயே ஒரு புறம் ஒதுக்கிவைத்து அவர்களை நம்பி விடாமல் எச்சரிக்கையோடும் இருங்கள். காரிய அளவில் நின்று அவ்வளவுடன் ஒதுங்கிக்கொள்ளுங்கள். எத்தகைய நன்மனத்தினரையும் குணவந்தர்களையும் அவர்களுடைய மனம் பேதித்து விஷமித்துப் போகுமாறு செய்யக்கூடிய ஸ்திரி ஸத்திதத்துவத்தில்—பெண்மாய்கையில் ஊறிய தேகத்துடன் கூடியவர்களாய் நீங்கள் இருத்தலால், உங்களிடமே மோகித்து நிற்கின்ற உலகத்தில்—ஆடவர் வர்க்கத்தின் இடையில், நீங்கள் எத்துணை எச்சரிக்கைகளுடன் இருந்தாலுங்கூட, அது போதாமற்போய் விடும்படியாகவும் நேரிட்டுவிடும். உங்களுடைய லாவண்யமான சுகுமாரதேகம் உங்களுடைய கற்பின் உறுதியை சதாகாலமும் சோதனைச் சுழலிலேயே அலைய வைத்துத் தவிக்கச்செய்து கொண்டிருக்கிறது. உங்களுடைய அழகிய ரூபமும், உங்களுடைய சரீர அமைப்புமே உங்களுடைய பூஷணமான கற்புக்குச் சத்துருவா யுளது. அநுகூல சத்துருவை உங்களிடமே வைத்துக்கொண்டுள்ள நீங்கள், மனிதப்பிரயத்தனத்திலும் மேற்பட்ட பிரயத்தனத்தோடும் எச்சரிக்கையோடும் இப்புருஷ வுலகத்திலே வெகு ஜாக்கிரதைப்பட்டபடியே உங்களை நீங்கள் தற்காத்துக்கொண்டு, எக்காரியங்களிலும் உங்களைவிட அதிக அநுபவம் பெற்றுள்ள பெரியோர்களின் ஆலோசனையை நாடி, அவர்களின் சொற்படி அடங்கி உலகத்திற்குப் பயந்து நடந்து, கற்பரசிகளாய், இகபர ஸாதன மெய்துவீர்களாக. சுபம்.

58. எல்லோரும் கூடிநின்று குடும்பத்தைக் கடனில் கவிழ்த்து விட்டு,பிறகு, என்னாலா அத்தனை செலவு—எனக்கா போட்டாய்?—என்பர்.

பாரிஜாதத்தின் அநுபந்தம்

பெண்மணிகளுக்கு

50—அநுப்பவக் குறிப்புகள்.

1. உனக்கு வாய்த்த கணவன் துஷ்டனோ, நல்லவனோ அதைப்பற்றி நீ சிந்திக்கக்கூடாது. அவனுடைய நடவடிக்கைகளில் உனக்கு வெறுப்பு உண்டாகக்கூடாது. அப்படி வெறுப்பு இருந்தாலும், அது அவனுக்குத் தெரிவிக்கப்படாமலிருக்கப் பார்த்துக்கொள்.

2. உன்னுடைய புருஷன் முன்னிலையில் பரபுருஷர்களைப் பற்றியும், அவர்களின் செயல்களைப் பற்றியும்—நீ கெட்ட எண்ணமின்றி யிருப்பினும்கூட—புகழ்ச்சிசெய்து கூறலாகாது. அவ்விதம் நவின்றிடில் உன் மேல் அவனுக்கு வெறுப்பும், அவர்கள்மேல் இவளுக்கு இஷ்டமோ வென்று ஐயமும் உண்டாக அது வழியாய் விடும்.

3. உன் கணவன் உன்னோடு இன்பமாய் வார்த்தையாட ஆரம்பித்தால் நீயும் உனக்குத் தெரிந்தவாறு வார்த்தையாடலாம், ஆனால் கோபத்துடன் வார்த்தையாடினால், பதில் உரைக்காம லிருத்தலே அவனது கோபத்தைத் தணிக்க வழியாம்.

4. உன்னுடைய கணவனது விருப்பம் தெரிந்திருந்தும், அவ்விஷயங்களில் நீ அலக்ஷியமாய் இருந்தால், அவனுடைய சித்தம் பேதித்துப் பல் வேறு துறைகளி லிறங்கிவிடுவான். முன்னால் உனக்கு அது விஷயம் சாதாரணமாகத் தோன்றினாலும், பிறகு வெகுவாய் அதற்காக நீ வருந்தநேரிடும்.

5. உன் கணவன் எந்த பாவத்தைச் செய்தாலும் அது உன்னைச் சேராது. அதைப்பற்றி நீ கவனிக்க வேண்டிய அவசியமில்லை, கணவன் பாபகர்ம முள்ளவனாயிருப்பினும், மனைவி நற்கரும முள்ளவளாயில்—தன் மட்டுக்குமல்ல—தன் நாயகனுடனும் நல்வழி அடைவாள்.

6. உன் கணவனுடைய வறுமையில் அவனை அலக்ஷியம் செய்யாமலும், அவன் நோயுற்றபொழுது உபசரித்தும், காப்பாற்றி

---

59. வேறெவரும் இல்லையென்று பேசும்போதுதான், அவசியம் அதைக் கேட்கவேண்டியவர்கள் மறைவிலிருந்து கேட்டுவிடுகிறார்கள்.

வந்தால், அவன் பெருமையுற்ற பொழுது நீ மிக மிக இன்பமனுபவிக்கலாம். இன்றேல், நீ அவனைப் புறக்கணித்தும், தெய்வீகமாய் அவன் உயர்பதவி யடைந்தால்—அப்போது உன்னை எவ்விதம் நடத்துவா னென்பது உனக்குத் தெரியும்.

7. ரூபியோ, குரூபியோ, ஒரு புருஷன் இருந்தால் அவனது பெண்டாட்டியைச் சுமங்கலி யெனவும் நற்சகுனமாயும் கூறுகின்றனர். மன்னவன் மகளாயினும், கணவனில்லாவிடில் கைம்பெண் எனப் பழிக்கப்படுகிறாள். இதை நீ மனதில் வாங்கிக்கொள்.

8. ஒரு முறை—என்—பன்முறை—நன்னெறி தவறிப் பின் திருந்திவிட்டாலும், ஆண்மகன் எங்கும் ஏற்றுக் கொள்ளப்படுவான். எப்பொழுதேனும் ஒரு முறை ஒழுக்கம் தவறிய பெண் ஒருக்காலும் யோக்கியதை யுள்ளவளாய் எண்ணப்படாள். இது உலக நியமம்.

9. பெண்களில்லாவிடில், ஆண்மகன் ஜீவித்துக்கொண் டிருக்கலாம்—இருக்கிறார்கள். ஆண்மக்க ளில்லாவிடில் பெண்கள் (மஞ்சள் குங்குமத்தோடும்) ஜீவிக்கமுடியாது. இதை யொருகாலும் மறுத்துக்கூற இயலாதல்லவா? இன்னார் மனைவி என்றபெயர் உனக்கு அவசியம். அந்த மனைவி என்ற பெயர் உனக்கு ஏற்பட்ட பிறகே மற்ற ஆடவர்கள் உன்னை விரும்புவதிலிருந்தும் தங்களை விலக்கிக்கொள்கிறார்கள்.

10. கற்பிற் சிறந்த பெண் முன்னிலையில், ஆபாச எண்ண முள்ள எந்த ஆண்பிள்ளையும் தைரியத்துடன் நிற்கவும் பேசவும் மாட்டான். ஆனால் கற்பிழந்தவளையோ, ஒவ்வொரு நாயினும் கீழ்மையானவனும் தீண்டப் பின்வாங்கான்.

11. அளவற்ற ஆடையணிகளைப் பூண்டு, அழகிய முகத் தோற்றத்தை யுடையவளாயிருந்தாலும்,—நடத்தையிற் குறைந்தவளாயின்—அவளை எல்லோரும் ஏளனமாயும் எளிதாயும் பேசுவார்கள். உருவில் குறைந்திருந்தாலும், உத்தமியானால் பழிக்காளாகாள். பூஜ்யதை பெற்றவளாவாள்.

12. பரபுருஷர்களை ஏறிட்டுப் பார்க்காததினால் மட்டும் கற்புள்ளவர்களாய்விட முடியாது. கணவனை மனப்பூர்வமாய் நேசித்து அவன் சொற்படி நடப்பவர்களே பதிவிரதைகளாவார். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை". கணவன் சொற்கடவாததே கற்பாம்.

13. உனது கணவனை நேசி. அவரிடம் மரியாதையுடன் இரு. (2) அவர் சுபாவங்களைக் கவனித்துத் தெரிந்துகொள். அதற்கேற்ப நட. (3) அவரிடம் உனக்கு மதிப்பு அதிகரிக்கட்டும்.

---

60. மனம்போன போக்குப்படி எல்லாம் திரிந்தால், பணம்போகிற போக்கு அதிகரிக்கும்.

(4) அவர் சோகமாயிருந்தால் சோகம் நீங்கத் தேறுதல் சொல். (5) அவர் பிணங்கியிருந்தால் விநோதம் செய்து களிக்கச் செய். (6) அவர் சோம்பித் திரிபவராயிருந்தால், தூண்டுகோல் போட்டு ஏவு. இதில் நீ அவரை அடக்கி ஆள்கிறாய் யென்பதைமட்டும் அவர் அறிய இடமே கொடுக்காதே. (7) அவர் வாயாடியாயிருந்தால், அவர் சொல்வதற்கெல்லாம் பொறுமையுடன் காதுகொடு. (8) அவர் சண்டையிடும் சுபாவமுடையவரா யிருந்தால், அதைக் கவனியாது பொறுத்துக்கொள். (10) அவர் இரகசியம் சொல்பவரா யிருந்தால், அதை வெளியிடாதே. (11) அவர் பொறாமையால் பீடிக்கப்பட்டவரானால் அதற்குத் தக்க சாந்தி செய்து பொறாமையை ஆனவரையில் போக்கடி. (12) அவர் இன்பமே நுகரும் இச்சை கொண்டவராயிருந்தால், நீயும் அதற்கு இணங்கிப் பேசித் திருப்தி செய். (13) உனக்காக அவர் ஏதாவது செய்தால், அதை நீ உணர்ந்து கொண்டதாகக் காட்டு. (14) அவசியமும் தகுதியுமானால், சந்தர்ப்பமறிந்து, அவரை ஆலிங்கனம்செய்து, வலியச்சென்று நீயாகவே முத்தம் கொடுத்தும் களிக்கச் செய். (15) எக்காலத்தும் எப்பெண்ணிடத்தும் உன் கணவனின் ஸக்திதத்துவம், ஸயன மாளிகையின் அந்தரங்கங்கள் எவற்றினையும் வெளியிடாதே. அது உன் கணவனுக்குக் கேவலத்தை யுண்டுபண்ணும். "நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம் விதியின் பயனே பயன்."

14. வரவுக்குத் தகுந்த செலவு—ஒரு முக்கியமான விஷயம். பாரி குடும்பத்திற்கும், அந்தஸ்துள்ள குடும்பத்திற்கும், தகுந்தபடி கண்டிப்பாயும் வரையறையாயும் இவ்வளவு தான் செலவு செய்கிறது என்று தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். விருந்தாளிகளுக்கும், எதிர்பாராத சம்பவங்களுக்குமெனக் கொஞ்சம் பணத்தை எடுத்து எப்போதும் பெட்டியினோர் மூலையில் போட்டுவை. அவசர காலத்தில் அதன் உபயோகம் தெரியும்.

15. காலையில் எழுந்தவுடன் இவ்வளவு வேலை, இத்தனைமணி நேரத்தில் செய்யவேண்டும்—என்று தீர்மானித்துக்கொள்ளவேண்டும். பகலிலும் அப்படியே தீர்மானம் செய்யவேண்டும். போஜனத்திற்குப் பிற்பாடு இளைப்பாறல், தையல், பாட்டு, படிப்பு முறையே இத்தனைமணி நேரமென்று கணக்கு வைத்துக்கொண்டு அப்படியே செய்ய வேண்டும். குறித்தநேரத்தில் குறித்த வேலைகளை முடித்துவிடவேண்டும். இந்தவிதமாக வேலைகள் செய்துவந்தால், அதிக வேலைகள் இருந்தாலும் வெகு சுலபமாகத் தோன்றும். வேலைகளும் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டதாய் இருக்கும்.

---

61. உன் சங்கதிகளை அவனுக்கு ஏன் சொல்லுகிறாய்? எவ்வளவுக்குப் பிறர் உன் விஷயங்களை அறியமுடியவில்லையோ அவ்வளவுக்கும் கௌரவம்.

16. வீட்டுச் சாமான்கள் இன்னின்ன இடத்தில் வைக்க வேண்டுமென்று முதலில் தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். பிற்பாடு சோம்பலில்லாமல் சாமான்களை அந்தந்த இடத்தில் வைக்க வேண்டும். எடுத்த சாமான்களை மறுபடியும் இடம் பிசகாமல் முன்னிருந்த இடத்தில் கவனமாய் வைத்துக் கிரமப்படுத்து.

17. நீ உன் கணவனுடன் ஒற்றுமையாயிருந்தால், இகலோகத்திலும் சுகப்பட்டு, முடிவில்லாத பரலோக சுகத்தையும் அடையலாம் என்பதற்கு ஆக்ஷேபனை என்ன? "ஒத்துவாழாக்குடி ஒருநாளும் விடியாது."

18. பெண்களிருப்பிடம் பெரிய சண்டை என்பார். சண்டைக்குப் பதிலாக சந்தோஷம்—என்று நீ மாற்றித் திருத்திவிடு.

19. ஒருவன் வைத்தியம் கற்றுக்கொண்டவுடனே கெட்டிக்காரனாகமாட்டான். அநுபோகத்தினால் தான் கெட்டிக்காரனாவான். அவ்விதமே நீ மாமியின் கீழ் இருந்து அடங்கி நடந்து குடும்ப அநுபவம் பெறவேண்டும். பிறகுதான் நீ குடும்ப நிர்வாகியெனப் பெயரடைய முடியும்.

20. உனக்குப் படிப்பு இல்லாவிடில் எவ்விதத்தும் பெற முயல். படிப்பில்லாததால் முதலில் ஆத்ம போஷணை குறையும். இரண்டாவது குடும்ப காரியம் கெட்டுப்போகும். 10-ரூபா நோட்டுக்கும், 100-ரூபா நோட்டுக்கும் கூட உனக்குப் பேதம் தெரியாது போய்விடும். சிறுகுழந்தையிடத்திலும் நீ ஏமாறநேரும்.

21. உன் இனிய கணவனார் வீட்டிலில்லாத நேரத்தில், பந்துக்களாவது, உன் கணவரின் சிநேகிதராவது வீட்டிற்கு வந்தால் துஷ்டமிருகங்களைக் கண்டு வெறுப்புற்று ஓடுவதுபோல ஓடிப் போய்விடாமல் எங்கே வந்தார்களென்று தெரிந்துகொண்டு, உபசாரனை செய். இதில் நீ ஒரு அளவுடன் நில்.

22. ஒரு பெண் கூறுகிறாள்:—நம்முடைய வீட்டுப் புருஷர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் பாதிக்குமேல் நாமே அநுபவிக்கிறோம். இது உண்மைதானே. அதற்கு எவ்வளவு விஸ்வாசத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதை நாம் நினைக்க வேண்டாமா?

23. உலகில் ஆடவர் எக்காலத்தும் ஸ்திரமான அன்புடையாரல்லர். ஒரே நிலையும் உறுதியும் அவர்க்கு இல்லை. காணும் மடவாரிடத்தெல்லாம் சிந்தை பாயும். பற்பல காலங்களில் முற்றிலுமே அவர் சித்தம் சலனப்படுவதாம். வெவ்வேறு சிந்தனைகள் மிகுந்திடுவதாம். வீட்டைத் தாண்டி வெளியேயுள்ள விஷயங்களிலேயே அவர்கள் பழகுவதனால், ஆயிரம் கவலைகள் அவர்களை வாட்டும்.

---

62. அவன் உன்னிடம் ஏன் கடன் கேட்கவந்தான்? உனக்குப் பணம் வந்திருப்பதை ஏன் அவனுக்குக் கூறினாய்? அதனால்தான்.

சில தருணங்களில் அன்பையே ஓட்டும். அக்காலங்களிலெல்லாம் இனியவை பேசி கணவ ரன்பைக் கவரும் உபாயங்களை யோர்ந்து அவற்றில் நன்கு பயின்றிருத்தல் வேண்டும். அவருக்குப் பிரிய மான வழிகளிலெல்லாம் தான் நடந்து நற்பெயர் விளங்கவேண்டும்.

24. அவரது கோபமான காலங்களில், கொதித்திடும் வேளை நாட்களில் மௌன நிலையாலும், ஹிதகரமான வசன பூஷணங்களாலும் ஸாந்திபடுத்தவேண்டும்.

25. கவலைப்படும் நேரங்களில், என்ன கவலை யெனக்கேட்டு, அக்கவலையில் தானும் கலந்து கொண்டு, அப்பெருங்கவலையிலேயே அவர் மூழ்கிவிடாதிருக்கத்தைரியம் புகன்று ஊக்கமூட்டவேண்டும். தேற்றவேண்டும். கவலை மாற்றவேண்டும்.

26. அவருக்குப் படிப்பில் பிரியமானால், அவர் எதிரில் அவர் கண்முன்பாக நூல்களை வாசித்து, தெரியாதவற்றிற் கெல்லாம் அவரைப் பொருள் கேட்டு, அவரைவிட அதிகமாகக் கற்ற கலாவதியாக உன்னை நீ தயாரித்துக்கொண்டிடுக.

27. அவர் அன்பு பொங்கி நிற்கும் தருணம், அவரினும் மேலான அன்புருவம்கொண்டு, இவ்வுலகே அவருக்குத்தேவருலகு போலத் தோற்றுமாறு, வாழ்க்கையிலே நல்ல நல்ல ருசிகரத்தை அவருக்கு உண்டாக்கி விடவேண்டும். எவ்விதம் உன்னைப் பிரிகிறதென்று அவர் கண் கலங்கி இதயம் வாடும் வண்ணமதாய், அதற்கேற்றபடி அத்தனை பிரியத்தையும் அவரிடத்து மனதாரவைத்து வணங்கிடல் வேண்டும்.

28. அவர் அடிக்கவந்தால், தங்கள் கரம் நோவெடுக்குமே, அடியாள் செய்தது பிழைதான், அறியாது இழைத்தேன், இனி தங்கள் நெஞ்சம் நைந்திட ஏதும் நான் புரியேன்—என்று காற்பெருவிரல் நோக்கிய வண்ணம் தாழ்ந்து பணிந்து வணங்கி நவின்று, அமிர்த மொழிகளால் அவரது மனத்தை உவப்பிக்கவேண்டும். இவ்விதம் செய்யின் பிறகு சண்டை, கலகம் மனஸ்தாபம் ஏதுமே நேர்ந்திடாது.

29. கணவரிடத்து உனக்குள்ள அத்தனை யன்பையும், அவரை நமக்கு ஈந்தருளிய அவரது மாதாவிடமும் கொள்ளவேண்டும். அவரை வழிபடுகடவுளாகக் கருதி, கணவரினும் மேலாகக் கொண்டு இல்லறம் பேணி, எதையும் மாமியின் அநுமதி பெற்றே புரிந்து திருப்தியூட்டவேண்டும்.

30. எல்லோர்தமக்கும் இனிதே விளைத்திடுக. யாவர்க்கும் நலமே நாடுக. எத்தனை கஷ்டங்கள் வந்தணுகுங்காலையும், பதியின் அன்புவதனம் குன்றிடினும், பின்னும் எததகைய ஸம்சாரச்

---

63. "அவனா?-எனக்குத் தெரியும்"—என்று உன்னைப்பற்றி வம்பு அளப்பதற்கு எந்த உன் சங்கதியும் பிறருக்குக் கிடைக்காதபடி மூடி நில்.

சிக்கல்களிலும் உனது முகத்தைப் புன்னகையொளிர் வதனமாக வே கொண்டு பூரித்திடவேண்டும். உனது மங்களகரமான சுந்தர வதனக் காட்சியிலே, உன் பிரேமபதி தனது ஸகல சிந்தாகுலங் களையும் மறந்துமாறி இன்புற்றிடல் வேண்டும். பர்த்தாவுக்கேற்ற பத்தினியாய், இப்பெண்போலுண்டேவெனப் பெயர் பெறவேண் டும். ஸ்திரீரத்நங்கட்குக் கணவனே உயிர், தெய்வம், நிதியம், எல்லா பாக்கியமுமாம். "பொற்றொலியோ டெவையும் போம்."

31. நமது பெண் ஜென்மத்தை அவருக்கு ஊழியஞ் செய்வ தில் உபயோகித்து உன்னதமுடையதாக்கிக் கொள்ளுவோம். நமது வாழுளில், நம்மால் அவர் என்றொன்றும் முகம் கோணுவா ருக, கடுத்திடாவாருக, நம்மைக் குறித்துக் குறைவு படாவாருக நமது பெண்சக்திக்கு இயன்றவரை நடந்து, அவரது பொன்னடி போற்றி, பொற்றொடியாய், குலக்கொடியாய் ரமணீரத்நங்களாய்ப் பிரகாசிக்கக் கடவோம்.

32. சிரிப்பிலும் எச்சரிக்கை:—*தங்காய்!* உன் சிரிப்பு உன் வாய்க்குள்ளேயே, நெஞ்சுக்குள்ளேயே இருக்கட்டும். உதட்டைத் தாண்டி உன் சிரிப்பு வரும்படி செய்துகொள்ளாதே. நீ வாய் விட் டுச் சிரித்தால்—சில ஆடவர்கள் ஓ! இவளை நம்வசம் செய்து கொண்டு விடலாமென்று உன்னை அவ்வளவு இழிவாக எண்ணிவிடுவார்கள். எச்சரிக்கை.

33. பதில் சொல்லாதே:—குடும்பத்தில் கணவன், மாமி, மற்றுமுள்ளோர் யாது கூறினும், வைதிடினும் உன் வாய் திற வாதே. ஒரு சொல்லும் சொல்லாதே. வாயை ஊசிகொண்டு தைத் துவிடு. சொன்னபடியெல்லாம் நட. சீக்கிரம் நற்பெயர் உண்டா கும் வழியைப் பார். இவ்விதம் நடப்பின் நீயே பிறகு அனைவருக் கும் தலைவியாவாய். உன்னையே சகலரும் யோசனைகேட்பர். இது வாழ்க்கை ரகசியம். நெஞ்சி லிட்டுக்கோள். செய்.

34. நகைகளைக் கவனி:—கோயில், விவாகம் போன்றவை கட்குச் செல்லுமுன் உன் ஆபரணங்களின் திருகாணி சரியாக உளதா என்று ஒரு முறை கவனமாகப் பார்த்துக்கொள். இதில் சோம்பல் வேண்டாம்.

35. எதிலும் சம்பந்தப்பட்டிரு:—சோறு ஆக்கிப் போடுவது ஒன்றுமட்டும்தான் உன் வேலையென்று எண்ணிவிடாதே. உன் கணவனின் வெளிவியாபாரங்களையும், கணக்கு வழக்குகளையும், கொடுக்கல் வாங்கல்களையும் நீயும் கூட இருந்து கவனி. ஒவ்வொன் றையும் அவரைக் கேட்டுத் தெரிந்தவை. உன் உதவியின்றி எந்த

---

64. *நீ வெளியிற் செல்லுகையில், பிறர் மனத்தை நோக—அழ வைத்துச் செல்வாயாகில், போனகாரியமும் நீ நோகும்படியே இருக்கும்.*

வேலையும் முடியாதென்று உன் கணவன் நினைக்கும்படி அவ்வளவு சகாயமாக அவருக்கு நீ இருந்து நட.

36. மிச்சப்படுத்து:—ஒருமாத வரவில் ஒரு காசாவது மிச்சப்படுத்தும்படி உன் கணவனை நீ கட்டாயப்படுத்து. ஆனால் உன் நாயகனுக்குத் தெரியாமல் நீ பணம்சேர்த்து வைக்காதே. அது வஞ்சகமாகும். தகாத செயல். அவருக்குத் தெரிந்து சேர்க்கலாம்.

37. நாயகனின் நண்பர்கள்:—உன் பர்த்தாவுக்குப் பிராண பதமான நண்பர்கள் சிலர் இருக்கக்கூடும். அவர்களை நீ தெரிந்து வைத்துக்கொள். நன்கு உபசரி. உன் உடற்பிறப்புபோல அவர்களை எண்ணு. உன் கணவனுக்கு ஏதேனும் சங்கடம் வந்தால் உனக்காகவே உன் கணவனுக்கு ஒத்தாசை செய்ய அவர்கள் ஓடி வரும்படி அவ்வளவு உயரிய குணங்களை நீ கைக்கொள்.

38. அவர் ஊரில் இல்லை:—உன் கணவன் ஊரில் இல்லாத சமயங்களில் வேற்றூரிலிருந்தும் மூட்டையும் முடிச்சுமாய் வண்டியிலிருந்தும் இறங்கி உன் கணவனைத் தேடுகிற உன் நாயகனின் நண்பர்களை—அவர் ஊரில் இல்லை—என்று சொல்லித் தூத்திக் கதவை மூடாதே. வந்த அவ்வேளைக்கு அன்னமிட்டு உபசரித்து அனுப்பு. இரவாயின் பெண்களின் துணையோடு இக்கடமையை நிறைவேற்று. தனியே யிருந்து செய்யாதே. உலகம் பலவிதம்.

39. மறைக்க வேண்டாம்:—நீ செய்கிற எதுவொன்றையும், உன் பர்த்தாவுக்குத் தெரியும்படி வைத்துக்கொண்டு செய். அப்போதுஉன்னை ஒருவரும் மோசம்செய்ய முடியாது. உன்னைப்பற்றி உன் கணவரிடம் கூறுகிறேனென்று பயமுறுத்தவும் முடியாது.

40. அடகு நகைகள்:—நகைகளின் மேல் வட்டிக்கு நீ பணம் தருவதானால் உன் கணவனைக் கேட்டுச்செய். நகை தந்தவர்களிடம் அவர்கள் தந்த நகை, வாங்கிய தொகை, வட்டிவிவரம், நாள், தேதி, மாதம், வருஷம் இவ்வளவும் ஒரு புத்தகத்தில் எழுதி நகை தந்தவர்களிடம் கையெழுத்து வாங்கு. பிறகே பணம் தா. இல்லாவிடில் அவர்கள் வீட்டு நகையை நீ திருடி உன் பெட்டியில் வைத்திருப்பதாகவும் சொல்லலாம். இது மோச உலகம். நம்பாதே.

41. தூக்கத்திலும் விழிப்பு நிலை.—எப்போதும் பாவையரின் தூக்கம் விழிப்புநிலையில் இருக்கவேண்டும். ஒரு எலி ஓடினாலும், பூனையின் காலடிசப்தம் கேட்பினும் உடனே விழித்துக்கொள்ளக் கூடியபடி எச்சரிக்கையுடனும் தூங்கு. சொரணை கெட்ட தூக்க மயக்கத்தால் தங்கள் கற்பையிழந்த காரிகையரும் உண்டு.

42. பெண்கள் கூட்டம்:—நீ அவனுக்கு ஏன் அவ்வளவு உட்பட்டு நடக்கிறாய்? நான் என் புருஷனை என் கைக்குக் கீழ் வைத்திருக்கிறேன்—என்று சிறு பெண்களுக்கு பெரிய பெண்கள்

---

65. இன்றைக்கு அவன் உன் கடனுக்கு ஜாமீன் கையெழுத்திட்டால் நாளைக்கு நீ அவனுக்கும் இடநேரும் என்பதை இப்போதே யோசி.

போதித்துப் பாழ்படுத்துகின்றனர். உத்தமப் பெண்கள் கெடுவது இப்பெண்களின் கூட்டத்தாலேயே, இதை ஒவ்வொரு பெண்ணும் கவனிக்கவேண்டும். அக்கூட்டத்தில் சேரலாகாது.

43. ஜடை சேருதல்:—எதிர் வீட்டு எச்சம்மா தலை சீவிக் கொள்ளும்போது, பக்கத்து வீட்டு பாப்பம்மா தான் ஜடை பின்னி விடுவதாக வருகிறாள். முச்சந்தி மூக்காயி அந்த சமயம் அங்குதானே வந்து கூடுகிறாள். வம்புகள் பேச சரியான ஜதை கூடிவிடுகிறது!

44. வட்டித்தல்:—சில பெண்களுக்குப் பிசினாறித்தனம் அதிகம். தாராளமாக இலையில் எடுத்துவைக்கக் கைவராது. கொஞ்சம் வைத்துப் போதுமா. போதுமா என்பர். அவர்கள் போதும், என்று எப்போது சொல்வரோ என எதிர்பார்ப்பர். வீட்டில் ஆயிரம் செலவுசெய்து சமைத்தாலும், தாராளமாக எடுத்துவைத்து வயிறாரப் புசிக்கும்படி வட்டித்து உபசரிப்போர் ஒருவர் கட்டாயம் இருக்கவேண்டும். இல்லையாகில் சமைத்த அவ்வளவும் அப்படியே மிச்சமாகி, செலவிட்ட வீட்டுக்காரனுக்குத் தீராத சஞ்சலத்தை விளைக்கும். சமைக்க ஆள் இருப்பதற்குமேல் வட்டிக்கத் தெரிந்த ஆள் அதைவிட முக்கியமாக இருக்கவேண்டும்.

45. தாராளத்தன்மை:—தாராளமாகப் பிறருக்கு இட்டுத் தாமும் உண்டு செலவிடுவோர்க்குப் பணமும் தாராளமாகவே வருகிறது. ஒரு காசு செலவிட ஒன்பதுமணிநேரம் யோசிப்போருக்கு அவ்வொரு காசு கைக்கு வருவதும் அருமையாகிறது.

46. காலை நேரத்தில் எந்தக் கலகமும் வேண்டாம். அது அந்த தினத்தையே விஷமிக்கச் செய்துவிடும். ஒருநாள் சந்தோஷம் காலைக் கலகத்தால் குட்டிச் சுவராகிறது. என்ன கலகம் நேர இருப்பினும், அதை அம்மட்டில் அடக்கி, உன் வாயைப் பதில் பேசாது நிறுத்தி, அன்றைய தினத்தில் சந்தோஷமாக சுவாசம் விடும்படி உன்னால் ஆனமட்டும் முயன்று நிறைவேற்று.

47. அப்போதுதான் தலைசீவி முடித்ததுபோல் எப்போதும் இருக்கவேண்டும். பிரதி நித்யமும் தலைவாரி முடித்தலைப் பிரதான வேலையாகக்கொண்டும் பரிசுத்தமான வஸ்திரங்களுடன் பிரகாசித்தால், வீட்டு ஆடவரின் மனம் வேறிடத்திற் பாய்ந்து குடும்பம் கெட இடனிராது.

48. உன் கணவரிடம் மிக்க அன்புடன் பேசு. அவரை நீ நேசிப்பதாகக் காண்பிக்கவேண்டிய அடையாளங்களை யெல்லாம் காண்பி. அவர் உண்ணும்போதும், உறங்கும்போதும் நீராடும்போதும் அவர் சுகமாய் ஸந்தோஷிப்பதற்கு என்னென்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் செய். இதுதான் பெரிய வசிய மருந்தாகும்.

---

66. உனக்கு உபகரிப்போரையும், உன்னிடத்து அன்பு மிகுந்தோரையும் பிறருக்கு அறிமுகம் செய்யாதே. அவர்கள் அதைக் கெடுக்க முற்படுதலும் கூடும்.

49. மனிதர்கள் பெரிதா, மனஸ்தாப வருத்தங்கள் பெரிதா என்று நீ சற்று யோசி. மனஸ்தாபத்தால் காலமுழுதும் பேசாதிருந்து கண்ணை மூடிக்கொண்டவர்கள் என்ன வாரிக்கொண்டு போனார்கள்? ஏதுமில்லை. பாக்கிய வசத்தால் உயிருடன் இருக்கக் கிடைத்த சில தினங்களை சந்தோஷ சமாதானத்தில் கழித்து மனோரம்யப்படப் பார்ப்பதிலேயே உன் நோக்கம் இருக்கட்டும்.

50. கோழி கூவிப் பொழுது விடியுமுன்பே துயிலெழுந்து வீட்டிலுள்ள பண்டங்களை யெல்லாம் சரியாய் அதனதன் இடத்தில் வைத்து, சமையல் பாத்திரங்கள் யாவற்றையும் சுத்தி செய்து, வீட்டை நன்றாகக் கூட்டியான பின்பு, குழந்தைகளை யுண்ணச் செய்து, அவர்களுக்கு ஆடையுடுத்தி, அவர்கள் சொல்லும் பாடத்தைக் கேட்டு, கைக்குழந்தையைக் குளிப்பாட்டி, கணவனுக்கு உணவு செய்து வைக்கவேண்டும். தேவதாராதனமாய் எல்லோரும் போசனஞ் செய்த பின்பு, குழந்தைகளை முத்தமிட்டு ஆசீர்வதித்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுச் சந்தோஷமாய் இருக்க வேண்டும். தான் வேலையாற் பிரிந்துள்ள சமயங்களி லெல்லாம் அழும் குழந்தையை அடிக்கடி வந்தெடுத்துப் பால் கொடுத்துச் சமாதானப்படுத்தித் தொட்டிலிலே விட்டுத் தாலாட்டுப்பாடி ஆட்டித்தூங்கவைக்க வேண்டும். பின்பு குழந்தைகளின் உடைகளைக் கத்தரித்துத் தைத்து அவர்களுடையவும், கணவனுடையவும் உடைகளைத் துவைத்துக் காயவைத்துவிட்டு, அப்பால் வர்த்தமானப் பத்திரிகைகளைப் படிப்பதிலும், அவற்றிற்கு விஷயம் எழுதுவதிலுமாகச் சுறுசுறுப்போடு தேசாபிமானம் பாராட்டி நின்று, பின் பாடசாலையிலிருந்து வரும்போதே அம்மாவென்று கூப்பிட்டுக் கொண்டு வீட்டிற்குள்ளே நுழையும் மக்களோடு பேசவேண்டும். பின்பு பாடசாலையிலே அன்று நடந்தவைகளை யெல்லாம் கேட்டு அவர்கள் வருத்தத்தைப் போக்கி, அவர்களுக்கு இலக்கண பாடம் சொல்லிக் கொடுத்து, இராப் போசனத்திற்கு வேண்டியவற்றைச் செய்து, விளக்கேற்றி, கணவனர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வீட்டை அழகுபெற வைத்திருக்கவேண்டும். இந்த வருத்தமான வேலைகளால் என்ன நோய்கண்டு துன்புற்றாலும், சிறிதும் மனம் தளராது சந்தோஷமாயிருந்து மற்றவர்களுக்கு உண்டி முதலியவற்றால் உபசரித்தல் வேண்டும். அதன்பின்பு குழந்தைகளை யெல்லாம் அரவணைத்து, அவர்களோடு கடவுளை வாழ்த்தி, அவர்களை முத்தமிட்டுப் படுக்கையிலே தூங்க வைத்துவிட்டுத் தான் தனியே யிருந்து கடவுளைத் தியானம் செய்துவிட்டுத் தன் இனிய பர்த்தாவுடன் சயனிக்கச் செல்லவேண்டும்.

பாரிஜாதம் முற்றிற்று.

---

67. நீ வெளியில் வேலைக்கு இருப்பினும், உன் சொந்தத்திலும் ஒரு தொழில் நடத்திவா. ஒன்று தவறினும் மற்றொன்று கை கொடுக்கும்.

பிரேமப் பிரபா

பிரேமப் பிரபா என்ற பெண்மணியின் அந்தகார ஜீவிய விநோதம்.

கதாசாரம்.

கண்ணிலா ளுள்ளக் கருத்தேவ ரறிவார்?
　　கானடைப் பிணமேனப் பகர்வார்.
உண்ணிலா வாசை யின்பமு மன்றுற்
　　குண்டெனு முண்மையார் தெரிவார்?
பண்ணிய வுணவுந் துக்கமு மன்றிப்
　　பாரிதிற் சுகமவற் கிலையோ?
தண்ணிய மொழியோர் மடவர லாலச்
　　சங்கைநீங் கியகதை யிதுவே.

அத்தியாயம்—1.

உங்களுடைய சுகதுக்கங்களுக்கு ஸரியாக என்னுடையசுக துக்கங்கள் ஈடுபடா. நீங்கள் வேறு, நான் வேறு. பரஸ்பரம் வித்யாஸ முள்ளவர்கள். என் சுகத்தில் நீங்கள் சுகமடைய ஹேது விராது. என் துக்கங்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். நான் ஒரு அற்பமான மல்லிகா புஷ்பத்தின் மணத்தால் சுகியாகுவேன். ஷோடசகளாயுக்தனை சந்திரன் ஸஹஸ்ர நக்ஷத்திர மண்டல மத்யனுய் என் கண்ணெதிரில் வந்து நின்று பிரகாசித்தாலுங்கூட நான் சுகியாகேன். நீங்கள் மனம் வைத்து என்னுடைய கதையை எப்படித்தான் கேட்பீர்கள்? எனக்குப் பிறந்தது முதல் கண் தெரியாது. எப்படித் தான் அறிவீர்கள்? உங்கள் ஜீவனம் திருஷ்டி மயமானது. என் ஜீவனம் அந்தகார மயம். ஆனால் துக்கவிஷயம் என்ன வென்றால் நான் இதை அந்தகாரமென்று நினைக்கவில்லை. தங்கட்கு ஈச்வரனால் விதிக்கப் பட்ட ஒரு குறையை மனுஷ்யர்கள் ஒரு குறையாக எண்ணமல்

68. உன்னை ஏமாற்றும் மனைவியின் விஷயம் பலர் தெரிந்த பிறகு தான் நீ கண்டு கொள்ள முடியும்.

தங்கட்குள்ள பிராப்தம் அவ்வளவுதா னெனக் கருதுவார்கள். நானும் அவ்விதமே. என் உள் நயனத்திற்கு ஏதோ வெளிச்சம் ஒன்றிருக்கின்றது. அது இயற்கையிலேயே அமைந்தது. அதுவே என் சொந்த வெளிச்சம். உங்கள் வெளிச்சம் எப்பேர்ப்பட்டதோ அதை நான் அறியேன்.

ஆனதால் எனக்கு சுகமே இல்லை யென்றும் சொல்வீர்களோ? அப்படிக்கில்லை. கால் இல்லாதவன் பிரபஞ்சத்தில் சமிப்பதில்லையா? ஸப்தஸ்பரிசம் குன்றியவர்கள் சுகிகளாவதில்லையா? ஒரு அவயவத்தின் ஸக்திதத்வம் ஹீனமானால், அந்த ஸக்தி மற்றொரு அங்கத்தில் பிரதிபலிக்கின்றது. எனவே சுகதுக்கங்க ளிரண்டும் உங்களுக்கும் எனக்கும் ஸகப்பிராய ஸமானமாயிருக்கின்றன, நீங்கள் ரூபத்தைப் பார்த்து சுகிகளாவீர்கள். நான் சப்தத்தைக் கேட்டு சுகியாகிறேன். பிரபஞ்ச விசாரம் உங்களுக்கு உள்ளது போலவே தான் எனக்கும். பரஸ்பரம் ஸமத்வமான பாகம். உங்களுக்குத் தெரிந்த தெல்லாம் எனக்குத் தெரியும். ஆயின் திருஷ்டி பூர்வமாக உணர்ந்ததில்லை. பிரபஞ்ச தர்மங்களையும் லௌகீக அநுபவங்களையும் உங்களைவிட மிகு விளக்கமாகச் சொல்ல எனக்குக் கூடும். இப்பொழுது பாருங்கள்: இந்தச் சிறிய மல்லிகா புஷ்பத்தின் காம்பு எத்தனை ஸூக்ஷ்மமா யிருக்கிறது? நான் பிடித்திருக்கும் ஊசியின் அக்ரபாகம் எத்தனை ஸூக்ஷ்மமாயிருக்கிறது? நான் இந்த ஊசியின் முனையில், சிறிதான அப்புஷ்பங்களின் காம்புகளில் துவாரம் செய்து புஷ்பமாலையைக் கட்டிவருகிறேன். நான் செய்த பூமாலையை அணிந்து கொண்டவர்களில் யாரும் எப்பொழுதும் கண் தெரியாத மனிதர்கள் செய்த தென்று சொன்னதில்லை. நான் ஸதாகாலமும் பூமாலைகளையே கட்டி வருவேன். பாலீகஞ்ச் என்னும் ஊரில் என் தந்தைக்கு ஒரு புஷ்போத்யான முண்டு. அதனால் அவருக்கு ஜீவனோபாயம் நடந்து கொண்டிருந்தது. காலந்தவறாமல் பூ விடுவதற்கு ஆரம்பமாகும். அது முதல் நித்யமும் தோட்டத்திலிருந்து புஷ்பம்கொண்டு வந்து கொடுப்பார். நான் அதைக் கோர்ப்பேன். தந்தை அதை எடுத்துக்கொண்டு கல்கத்தா நகரவீதிகளில் விற்கப்போவார். என் தாயார் வீட்டு வேலைகளைச் செய்வார். அவகாச மிருந்தால் தாய் தகப்பனிருவரும் எனக்கு மாலைகளைக் கட்டுவதில் ஸகாயம் புரிவர்.

புஷ்பங்களின் ஸ்பர்சம் மிகு ரமணீயமானது. தரிப்பதற்கும் வெகு சுந்தரமென்றே நினைக்கிறேன். வாசனைக்கும் அழகுக்கும் புஷ்பங்கள் பிரஸித்தி பெற்றது. இரவு நேரத்தில் ஒரு ரமணி தன் கூந்தலிற் சூட்டிக்கொண்டிருக்கும் மலர்களின் காந்தி வைரத்தின் ஒளிபோலும், விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் மின்மினியின் ஜ்வலிப்

---

69. நீ ஏமாந்து உன் பொருள்களைத் தரும் தருணத்தை எதிர்நோக்கி உன்னைச் சுற்றிக்கொண்டு சிலர் நிற்கிறார்கள். உஷார்!

யைப் போலும் தோன்றுமாம். புஷ்பாலங்காரத்தால் சோபிக்கும் பிரதம சயனகிருகத்தின் பரிமளம் எத்தகையது?'மலர்கள் வாடிவிட்ட பின்பும் அந்தப் பள்ளியறை பல நாளைக்கும் நறுமணம் கமழ்கின்ற தன்றோ? யுவகர்கள், யுவதிகள் இதை நினைத்துப் பார்த்துக்கொள் ளட்டும். அவர்களின் யௌவன ஜீவியம் அந்த இன்பமயமான காலத்தையே எதிர் நோக்கி நிற்கட்டும்.

ஆனால், பூ கட்டி விற்பதால் எங்கள் ஸம்சாரம் நடக்குமா? அன்ன விருக்ஷத்திற்குப் பூ இல்லை. ஆனதால் தந்தை தரித்திரனு யிருந்தார். மிராஜாபுரத்தில் ஒரு வீட்டில் குடியிருந்தோம். அந்த வீட்டின் ஒரு பக்கத்தில் புஷ்பங்களைக் கொட்டிக்கொண்டு மாலை மாலையாய்த் தொடுப்பேன். தகப்பனர் அந்த மாலைகளை எடுத்துக் கொண்டு வெளியிற் சென்று விட்டால், என் ஆசையின்படி அப் புஷ்பங்கள் மலர்ந்தனவென்று நினைத்துப் பாடுவேன்.

* * * * *

ராம ராம! நான் இதுவரையிலும் ஸ்திரியோ அல்லது புரு ஷனே உங்களுக்குச் சொல்லவில்லை. அப்படியானல் நான் யாரென் பதை அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்வது நன்மை. நான் இப்பொழுது சொல்லேன். நீங்களே கிரகியுங்கள். புருஷனே ஆக ட்டும், ஸ்திரீயே யாகட்டும், குருடருக்கு விவாகமாவது கஷ்டம். நான் குருடென்று எனக்குக் கல்யாணமாகவில்லை. அப்படி யாகாம லிருந்தால் ஸௌபாக்கியமோ அல்லது தௌர்பாக்கியமோ கண் ணில்லாதவர்களே அறிவார்கள். அங்கஹீனஸ்தர்களின் துக்கத்தை அவர்களைப்போன்ற அங்கஹீனமுள்ளவர்கள் தான் நன்குணர்வார் கள். ஏனையோருக்கு அது பரிஹாஸமும் கேலியுமாக இருக்கும். ஏனென்றல் அவர்களுக்கு ஸம்பூர்ண அங்கங்கள் கூடியுள்ள கர் வம்! இந்தக் கர்வத்தால் அவர்களுக்குத் தலைகால் தெரிவதில்லை. கலகலவென்று நகைத்துவிடமட்டும் அறிவர். இந்த நகைப்பு அங்க ஹீனர்கட்கு அவர்களின் உள் இந்திரியங்களில் எவ்வளவு ஆழத் தில் சென்று தைக்கக்கூடிய கொடிய அஸ்திர மென்பதை உணர்வ தில்லை. அநேக யுவதிகள் என் கதையைக் கேட்டு "ஐயோ! நாங்கள் குருடாகாமற் போனது எங்களின் பூர்வ புண்யம்தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். தம் ஜீவிய மத்தியிலே நேத்திரங்களை இழ ந்த ஜான் மில்ட்டன் என்ற ஆங்கில மகாகவி தமது நயன அந்த காரத்தைக் குறித்துப் பின்வருமாறு பிரலாபிக்கிறார்.

உயிரளிக்கும் உன்னொளியை உணர்ந்து நான் தேடிவந்தேன்
தேடி நான் அடைய வந்தேன், தேடாய் நீ எனது கண்ணே!

இமைத்திமைத்துச் சிமிழ்த்தாலும் எவ்வொளியும் காணுமல்,

---

70. உன் கடன் பாக்கியை அவ்வளவு சீக்கிரம் 'ஏன் திருப்பிக் கேட் கிறார்கள்? நீ பணக்காரன்போல் அதிக தடபுடல் செய்யாததால்.

பாழிலே உழலுகின்ற பாவிகண் அவிந்து ஐயோ!
விடியாத இருள்மூட விதியேயோ! விதியேயோ!!"

* * * * *

விவாக மாகவில்லை. அதனால் எனக்குத் துக்கம் உண்டென்று நினைப்பீர்களோ? இல்லை. முற்றும் நனைந்தவர்க்கு ஈரமேது? ஸதா ஸஞ்சலமே நித்திய பாராயணமென்றால், அது அவர்களுக்கு ஸர்வ சாதாரணமாய் விடுகிறது. மாமியிடம் ஸதா திரஸ்காரங்கள், தூஷிதங்கள் கேட்கும் யுவகுமாரிக்கு அது தினசங்கீதமாகி விடுகிறது. அதுபோலவே கிடைக்காத விஷயத்தில் அதிக சிந்தை கொள்ளவில்லை. ஒருநாள் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து கல்கத்தா பட்டணத்தின் வர்ணனையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு அழகிய மாளிகையைக் குறித்து விதவிதமாய் எடுத்துக் கூறினர். அது அற்புதமானதென்றும், அதியுன்னதமானதென்றும், சண்டமாருதத்திற்கும் அசையாததென்றும் இயம்பினர். அந்தகாரமயையபான நான் அந்த மாளிகையை ஒரு பெரிய பாபுவாயிருக்கலாமென்று நினைத்துக்கொண்டேன். குருடிக்கு மாளிகையென்றும் மனிதரென்றும் எப்படித் தெரியும்! மனதுக்குள் அந்த பாபுவை அந்த ஜயத்துவஜத்தை விவாகம் செய்துகொண்டேன். அந்த மாளிகையின் மனைவி—மகிஷி யானேன்.

கேவலம் ஒரு விவாகமல்ல. நான் அந்த மாளிகையைக் கல்யாணம் செய்துகொண்ட பொழுது எனக்குப் பதினைந்து வயது. பதினேழாவது வயதில்,—(சொல்வதற்கு வெட்கமாயிருக்கிறது),—ஸுமங்கலியா யிருக்கும்பொழுதே மற்றொரு விவாகமாயிற்று. என் வீட்டின் பக்கத்தில் காளிஸரணவஸு என்று ஒரு காயஸ்தனிருந்தான். அவனுக்கு சைனுபஜாரில் ஒரு வர்த்தகசாலை உண்டு. அவன் எங்கள் ஜாதி. காளிசரணவஸுவுக்கு நாலு வயதில் ஒரு புருஷக் குழந்தை யிருந்தது. அதன் பெயர் ஆனந்த மோஹனன். ஆநந்த மோஹனன் ஸதாகாலமும் எங்கள் வீட்டில் விளையாடுவான். எனக்கு அவனைத் தூக்கிக்கொண்டு குதுகல முறுவதில் அத்யந்த ஆவல். இந்த ஆவல் ஸ்திரீ ஜென்மத்தின் பிறப்போடும் கலந்து மருவியுள்ளது. சிறுமிகளா யிருக்கும்பொழுதே பிறது குழந்தைகளைத் தூக்கித் திரியவும், ஆசையோடு தூக்கவும், கொஞ்சி முத்த மிடவும்—,அப்பெண்களுடைய இயற்கைப் பொருத்தம்,—பின்னுக்குத் தாய்மார் ஆகப்போகிற அம்ஸத்தின் ஸக்தி தத்துவம்.—அவர்களை இயல்பிலேயே தூண்டி விடுகின்றது. ஆடவர்களிடத்தோ, அவர்கள் சிறுவர்களா யிருக்கும்போதுகூட இவ்வாறாக அன்னிய குழந்தைகளைத் தூக்க ஆவல் தோன்றுவதில்லை. தங்கள் தங்கை தம்பி

---

71. நான்தான் அவனைச் சிநேகனாக நினைத்தேனே தவிர, அவன் என்னைச் சிநேகனாக மனதார நினைத்தவனல்ல. வெறும் நடிப்பு.

களாயின்—எதோ தூக்கிக் கொள்வர். அவ்வளவே யன்றி சிறுமிகளுக்குள்ள—பெண்களுக்குள்ள பாரிய ஸ்திரீ ஸ்வபாவத் தூண்டுதல் போல் அச்சிறுபிராயத்துள்கூட ஆடவர்களிடை நிகழப் பெறுவதில்லை, புலனாவதில்லை. இது அநுபவ பூர்வமான யதார்த்தம்.

ஒரு நாள் எங்கள் வீட்டின் முன்பாக வாணவேடிக்கையோடு வதுவரர்களை ஊர்வலம் செய்து அழைத்துப் போகையில், அதைப் பார்த்த ஆநந்த மோஹனன் "அது யார்?" என்று கேட்டான். நான் வரன்—மணமகன்—என்றேன். ஆநந்த மோஹனன் நான் உனக்குரிய மணமகனாகிறேனென்று அழவாரம்பித்தான். அவனை ஸமாதானப்படுத்த முடியாமல், "நீ எனக்கு மணமகன் தான்"—என்று ஒரு மிட்டாயித் துண்டைக் கொடுத்து, "நீ எப்படி எனக்கு மணமகனவாயப்பா" என்று கேட்டதும், தன் அழுகையை நிறுத்தி "ஆகிறேன்" என்று அக்குழந்தை நவின்றது.

மிட்டாய் முடிந்ததும் மணமகன் என்ன செய்யவேண்டுமென்றான். குழந்தைக்கு மணமகன் எப்போதும் மிட்டாய் தின்பதே வேலையாக விருப்பானென்று எண்ணமுண்டாகி, ஒன்று முடிந்ததும் மற்றொன்று தின்னவேண்டுமென்ற நினைவுடனும் அந்தப் பிரசினையைக் கேட்டதுபோல் தோன்றுகிறது. அதன் சிந்தனையை யறிந்து மணமகன் புஷ்பங்களைப் பொறுக்கிக்கொடுப்பானென்றேன். ஆநந்த மோஹனன் அதன்படியே பூக்களைப் பொறுக்கிக்கொடுத்தான். அதுமுதல் அவனை நான் மணமகன் என்று அழைக்கின்றேன். அவன் எனக்குப் புஷ்பங்களை எடுத்துத் தருவான். அபிப்பிராயம்—பிராயம் போல. இப்படி எனக்கு இரண்டு விவாகங்களாயின. * ஜடிலை குடிலைகளைப்போல நானும் ஸத்தியான பதிவிருதை யென்று சொல்லிக் கொள்ளட்டுமா? என்று கேட்கிறேன். தயை செய்து கூறுங்கள்.

பெரிய மனிதர்களின் வீட்டுக்குப் பூவைக்கொடுப்பது அதிக கஷ்டம். ஏழைகள் எவ்வளவு பாடுபட்டு அதைத் தொடுத்தார்களென்பதை அவர்கள் அறியார். ஒன்றிரண்டு பைசாவுக்கும் யுத்தம் செய்வர். ஆக்ஷேப ஸமாதானங்கள் பேசுவர். வீட்டுத் தலைவரோ கௌரவப்பட்டங்களுக்கும், மோட்டார் ரதங்களுக்கும் பதினாயிரக் கணக்கில் தொகையை எண்ணி விடுவார். எப்பொழுதும் ஏழைகளின் வயிற்றில் அடிப்பதுதான் எங்குமுள்ள வழக்கம்.

---

* ஜடிலா:—ஒரு ரிஷி பத்தினி. இவளுக்கு 7-புருஷர்கள். மஹாபாரதத்தில் இவள் கதை வருகிறது. குடிலாராதிகா பர்த்ரு பகினி சப்த கல்பத்குமம்: 2-வது ஸம்புடம் பார்.

---

72. நீ எதுவரைக்கும் பக்தர்கள் வீட்டில் புசிப்பதில்லையென்று இருக்கிறாயோ, அதுவரைக்கும் உன்னைப் புசிக்கும்படி வெகு உபசாரங்கள் செய்வார்கள்.

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம் - 18 | திருச்சி அக்டோபர்மீ 1922 | இதழ் - 7

பிரேமப் பிரபா

"பூ வேண்டுமா பூ" என்று தகப்பனர் ரஸிகமகலுக்குக் கொண்டுபோவார். தாய் சில பெரிய மனிதர்களின் வீடுகளுக்குப் போவார். அவ்வீடுகளில் ராமதாஸன் வீடு முக்கியமானது. ராமதாஸன் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் ஸ்வபாவமுள்ளவன். அவனுக்கு இரண்டு பத்தினிகள். ஒரு கிருகிணி எப்பொழுதும் ரோகமுடையவள்; வயதானவள். அவள் பெயர் புவனேச்வரீ. அவள் உப்புஸத்தால் வருந்துவதைக் கேட்டால், பெயருக்குத் தக்கவளென்று தோன்றவில்லை. யார் தான் பேயருக்குத் தக்கவர்களாய் நடக்கிறார்கள்? அது எங்குமில்லை. வேண்டுமானல் ராமதாஸன் கழுத்துக்கு முடிச்சு விழுந்தவளென்று பெயர் வைக்கலாம்.

மற்றொருவளுடைய பெயர் "லவங்கலதா". அவளுடைய பிதா அவளுக்கு 'லலிதலவங்கலதா' என்றுபெயரிட்டிருந்தார். ராமதாஸன் அதிக பிரியத்தோடு அவள் பெயரைச் சொல்லியழைப்பான். அவன் கொஞ்சம் வயது சென்றவன். ஆயினும் யௌவனம் அஸ்தமித்து விடவில்லை. அதில் யுவகுமாரனுகவே இருந்தான். லலித லவங்கலதா யௌவன யுவதி. லீலாவிநோதினி. ஹாஸ்ய ஸஞ்சீவினி. கிரீடா ரஞ்சினி. மதன ஸாகரம். வயது பதினேழு. சிறிய மனைவி. அப்போதுதான் மலர்ந்த மல்லிகை. அநுபவிக்க யோக்கியை. மிரு மனோகரமான பதார்த்தம். அதனைச் சுவைத்து ருசி பார்க்க ராமதாஸன் கொடுத்துவைத்திருந்தான். அது அவனது பூர்வ பூஜாபலம். அந்த அதிர்ஷ்டம்—பாக்கிய விலாஸம் அவனுக்கே கிடைத்தது. அது அவனுடைய யோகம். தபோபலம்! ஆதரவுக்கு ஆதரையாயும், கௌரவத்திற்குக் கௌரிணியாயும், மானத்துக்கு மானினியாயும், நயனத்துக்கு மணிஸ்வரூபியாயும், நினைத்த பொழுதுக்கெல்லாம் இன்பநாயகியாயும், நல்ல காதல்

---

73. எவ்வளவோ உன்னை நம்பினேன்? நீயும் என்னை நம்பிய துண்மை· ஆனல் கைவிட்டது யார்?

செய்பவளாயும் இருந்ததல்லாமல், ராமதாஸன் பெட்டிக்குத் திறவு கோலைப்போலவும், படுக்கைக்கு மிருதுவான போர்வையைப் போலவும், இணங்கிக்கொண்ட கோத்திற் கேற்பக்கிடைத்த இடம்போலவும், வெற்றிலைக்கு சுண்ணாம்பைப் போலவும், கிளாஸுக்கு ஜல ஸ்வரூபமாயும் இருந்தாள்.

கண்ணில்லை; லவங்கலதாவை நான் எப்பொழுதும் பார்த்த தில்லை. ஆனால் அவள் ஸுரூபியென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ரூபம் போகட்டும். நல்ல குணவதி. கிருக காரியத்தில் வெகு சாமர்த்தியம் வகித்தவள். தானம் கொடுப்பதில் முன்பின் பாராள். ஹிருதயத்தில் அதிகமான கருணையுண்டு. ஆனால் வாக்கில் மட்டும் விஷம். கர்ணகடூரம். அது அவள் ஸ்வபாவம். அது பிறரைச் சோதிக்கிற பாவனை. அவளுடைய ஸர்வ குணங்களிலும் உயர்ந்த தென்னவென்றால், வயதுசென்ற பதியினிடத்துள்ள பிரேமமே. லவங்கலதாவைப்போல யாரும் பதி சுசுரூஷை செய்யார். அவருக்கு வேண்டிய ஸகல பணிவிடைகளையும் தானே செய்வாள். எப்பொழுதும் பதிபக்தி பாராயணையா யிருந்தாள்.

லவங்கலதாவின் வீட்டில் பந்து ஜனங்கள் எப்போதும் நிறைந்து நிற்பார்கள். உண்டானபோது கோடானுகோடி உறவின் முறையா ரன்றோ? ஒரு வாய் சம்பாத்தியத்தில் ஒன்பதுவாய் திறந்திருக்கும் நாடு நம் இந்தியாவே. லவங்கலதா மிக்க பொறுமை யுற்றவள். அவளால் தான் எங்கள் குடும்பமும் நடந்துகொண்டிருந்தது. எத்துணையோ ஏழைப்பெண்கள் சீமான்களின் வீட்டை யண்டி ஜீவிப்பதில்லையா? எந்த இடத்திலும் பெண்பாலார் காருண்ய உள்ளம்பூத்து நிற்பர். தம்மையொத்த பெண்களுடன் தக்ஷணமே அன்னியோன்யமாய் விடுவர். உள்ளம் கலந்து உருகுவர். அவர்கள் தம்மையொத்த பெண்மணிகளிடத்து நாணம் மறந்த தன்மையே இத்துணை நெருக்குதலுக்கும் கூட்டுறவுக்கும் துணைக்காரணம். பரஸ்பரம் நாணம் உணர்த்திக்கொள்ளாத நிலையே அவர்களை அத்துணை சுலபத்தில் ஒன்றுபட வைக்கிறது. நாணம் தீர்ந்த தம்பதிகளைப்போல் உறவாகி விடுகிறார்கள். பரஸ்பரம் ரகசியங்களைச் சாதாரணமாய் மனம் விட்டுச் சொல்லிக்கொள்ளவும் கேட்கவுமாய்க் கலந்துகொண்டு ஒன்றாய் விடுகிறார்கள். பெண்ணிடத்துப் பெண்ணுக்கு என்ன நாணம்? ஸதிக்குப் பதியிடத்து என்ன நாணம்? ஏதுமில்லை. வநிதாரத்னங்களின் ஜீவியமே பரம சூட்சுமங்களாலும் ரகசியங்களாலும் நிறைந்தது. ருது, ப்ரஸவம் போன்ற இயற்கைச் சம்பவங்களால் ஒரு பெண் மற்றொரு பெண்ணிடத்து நாணம் உணர்த்திக்கொள்ள முடிகிறதில்லை. தாயறியாத சூல் இல்லை என்ப

74. கடைசியில் என்னை ஏமாற விட்டாய். உனக்கும் ஏமாற்றமே. ஆதி இணக்கத்தின்படி இசைந்திருந்தால் எத்துணை மேன்மை?

தும் பழமொழி. தாய்க்கும் குமார்த்திக்கும் இடையில் எவ்வித நாணமுமில்லை. இங்ஙனம் ஸ்திரீஸமூகம் தம் ஸ்திரீவர்க்கத்துக்குள் பரஸ்பரம் நாணத்தைப் பாராட்டா தொழிந்த தன்மையால், அந்த ஸமூகம்—அவர்களுள் ஒரு நிமிஷகாலத்தில் ஐக்கியப்பட்டு விடுதற்குக் கூடுமானதா யுள்ளது. ஸதிபதிகளின் அந்நியோன்னியத்திற்கெல்லாம் அவர்கள் தமக்குள் நாணம் மறந்ததன்மையே ஆதிகாரணமாவதுபோல், பெண்பாலாரின் ஐக்கியத்துக்கும் அவர்கள் தம் போன்ற பெண்களிடம் தாங்கள் காட்டிக்கொள்ளா தொழிந்த நாணம் மறந்த தன்மையே காரணமாகின்றது.

இந்த ஸ்திரீ அந்நியோன்னிய இயற்கையால் பிரபுகுல நங்கைக்கும்—ஒரு எளிய பெண்ணுக்கும், ஒரு இராஜஸ்திரீக்கும்—ஒரு பரிசாரகைக்கும் கூட ஒற்றுமை ஏற்பட்டு விடுகிறது. உயர்வு தாழ்வாதிய அந்தஸ்து பேதங்கள் இவர்களிடை கலக்கப்படுவதில்லை. ஒரு பெண் எந்த வீட்டினுள்ளும் உட்புகலாம். எந்தப் பெண்மணியின் கரத்தையும் பற்றலாம். பேசலாம். அந்தரங்கம் விசாரிக்கலாம். அந்நியோன்னியமாகலாம். ஆநந்திக்கலாம். அவர்களுக்குள் நாணம் ஏதும் இல்லையன்றோ? சாதாரணமாகவே ஸ்திரீகளின் முகம் எப்பொழுதும் சிரிப்பும் குதூகலமுமா யிருப்பது, அவர்களுக்கு இயற்கையில் அமைந்த வனப்பாகும்—அது ஒரு தெய்வீக வரப்பிரஸாதமுமாகும்.

இவ்வித அந்நியோன்னியத்வம் புமான்களிடத்துக் காணுதல் அருமை. தந்தைக்கும் குமாரனுக்கும் இடையே நாணம் உண்டு. தம்பிக்கும் தமயனுக்கும் இடையே நாணம் உண்டு. இந்த நாணமே கடைசி வரையில் அவர்களைப் பிரித்து விடுகின்றது. ஒன்று சேர்க்க விடுவதில்லை. பரஸ்பர அந்தரங்கங்களை விசாரிக்கவும் முடிகிறதில்லை. அதைக் கேட்கவும் கூடாது. அவரவர்களின் ரகசியங்கள்,வாழ்க்கையின் மர்மங்கள் அவரவர்களோடுதான். ஸயன கிருகத்தின் ஸல்லாபங்களை ரமணிகள் ஒருவரையொருவர் கேட்கத் துணிவு கொள்வதுபோல், புமான்களிடத்தில் எந்த யுவாபுருஷனும் அதைக் குறித்துப் பிரஸ்தாபிபான்; வழக்கமுமில்லை. எஜமானி தன் சேவகிக்குத் தலை சீவிவிட்டு ஜடையும் போடலாம்—போடுவாள். அவ்வித பாந்தவ்யமும் ஸமத்துவமும் புமான்களுக்குள் நிகழ்வது அபூர்வ சம்பவம். குமார்த்தியினுடைய அந்தரங்க அவஸ்தைகளைக் குறித்தும், பிணிகளைக் குறித்தும் தாயார் விசாரிக்கலாம். இவ்விதம் ஒரு தந்தை தன் குமாரனிடத்து விசாரிக்க இயலுமா? அது அங்கு மானக் குறைவாகக் கருதப்படும்.

சாதாரணமாகவே பெண்கள் மற்றொரு பெண்மணியைக் கண்டால், அன்னோர் தோள்மீது கைபோடவும், அவர்கள்மீது சாய்ந்து

75. எவ்வளவு சாந்தமான கடிதம்! என்ன இன்பமொழிகள்! அதை எழுதியவரைப் பார்ப்பினோ முற்றும் வஞ்சகரா யிருக்கிறார்.

உட்கார்ந்துகொள்ளவும் விரைவர். புமான்களிடத்திலோ சற்று விலகி உட்காருவதே மரியாதையாகக் கருதப்படும். தோள்மீது கைபோடுவதாதிய இங்கு விரும்பப்படுவனவல்ல. ஒரு ஆடவன் மேல் மற்றொரு ஆடவன் கை வைப்பானுகில் அது ஈயக்குண்டு போல் கனமாகத்தோற்றும். மேலே உராய்ந்து பெண்களைப்போல் ஒட்டிக்கொண்டு வழிநடப்பின், இப்படி மேல்விழுகிறுயே–சற்று விலகிவருகிறதுதானே, என்றும் சொல்லாநிரான்.

பெண்களோ அவ்வித மல்லர். தோள்மேல் தோள்போட்டுச் செல்வதும், ஒருவரையொருவர் தழுவிச் சாய்ந்தபடி நடப்பதும், பரஸ்பரம் மேல் உராய்ந்தபடி ஒருவரோடொருவர் பாசமாய் ஒட்டிக்கொண்டு செல்வதும், நிற்பதும், அவர்களுக்குள் சர்வத்திரசாதாரணம்-இயற்கை. தன் சேவகியின் பிரஸவத்திற்கு எஜமானி பெற்ற தாய் போன்று நின்று சகலமும் தானே கூட இருந்து செய்வாள். அவள் ஈன்ற மகவை ஆர்வத்துடனும் தூக்கி முத்தமிடுவாள். ஆடவர் வர்க்கத்துள் இவ்வித அன்னியோன்னிய ஸமத்துவம் அரிது. சேவகனுக்கு எஜமான் சம்பளம் தருவதுடன் அவர்களின் காரியம் பூர்த்திபெறும். பிரபஞ்சத்தில் புமான்களுக்கும் ஸ்திரீ வர்க்கத்துக்கும் இத்துணை தாரதம்மியங்களும் பேதங்களும் இருக்கின்றன. எதற்காக இதனை இங்கு விவரித்ததெனில்,ராமதாஸனுக்கும் லவங்கலதாவுக்குமுள்ள தாரதம்யங்களைக் குறிப்பாக உணர்த்துதற்கே. இவ்வளவுதூரம் புமான்களின் இயல்பை விவரித்த பிறகு ராமதாஸரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

ராமதாஸர் தனிப்பட்ட மனிதர். பிரபு. அவர் எங்களுடன் கலப்பதில்லை. நாங்களும் அவருக்கு வெகு தூரத்தில் தான். ஸகல ஸல்லாபங்களும் லவங்கலாதாவிடமே.

அத்தியாயம் - 2.

ஒரு நாள் என் தாய்க்கு ஜ்வரம் வந்திருந்தது. அந்தப் புரத்துக்கு என் தந்தை போகக்கூடாது. லவங்கலதாவுக்கு நானே பூமாலையைக்கொண்டு போகவேண்டியதாயிற்று. நான் குருடிதான்; ஆகிலும் கல்கத்தாவிலுள்ள பாதைகளெல்லாம் எனது நகக்கண்ணிலிருந்தன. கையில் கோலைப் பிடித்துக்கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்லுவேன். வண்டி குதிரைகளின் காலில் சிக்கினதில்லை. அவர்கள் என்னை நிச்சயக் குருடி என்றெண்ணுமல்—"அடீ! பார்த்து வாக்

---

76. எப்படி எப்படியோ என்னை மயக்க முயற்சி செய்தாய். ஆனல் நான் காரியத்தில் கண்ணுகவே இருந்தேன். ஏமாற முடியாது.

கூடாதா? நீ என்ன குருடியா?" என்பர். நான் இரண்டு பேரும் குருடிகள் தான் என்று சொல்லிக்கொள்வேன்.

புஷ்பத்தை எடுத்துக்கொண்டு லவங்கலதாவிடம் போனேன். அவள் "அடி குருடி! பூவை எடுத்துக்கொண்டு செத்தும் பிழைத்தும் வந்தையா?" என்றாள். "குருடி" என்றால் எனக்கு உடம்பெல்லாம் எரியும். எதற்காக இவ்விதம் பழிக்கின்றார்களோ? அந்த அங்கஹீனத்தையே அவர்களுக்கு ஒரு பெயராக வைத்துவிடுகிறார்கள். இவர்கள் தம் ஜீவியத்தில் நேத்திரங்களை இழக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு வைசூரிநோய் கண்ணைக் கெடுத்துவிடுகிறது. மேகநீர் நேத்திரங்களின் பிரகாஸத்தை மறைத்து விடுகிறது. கண் பெற்றும் பின்னர் கபோதிகளானவர் எண்ணிலர். ஒருவரது அவயவ ஹீனத்தைக் கூறி அவர்கள் மறந்த துயரத்தை நினைப்பூட்டி, அவர்களை எதற்காக மனதுவேகச்செய்ய வேண்டும்? இதில் தானா, பிரபுத்வம் பிரகாசிக்கப்போகிறது? ஒரு அமங்கலி மற்றொரு அமங்கலியை விதவா என்கிறாள். தன் நிலையை அவர்கள் உணர்வதில்லை. இது ஒரு கேவலபுத்தி. அற்பத்தன்மை. இழிந்த ஸ்வபாவம். மூடத்வம். கர்வசிந்தை.

லவங்கலதா கேட்டதற்கு நான் தீக்ஷண்யத்தோடும் பதில் சொல்லவிருந்தேன். அதற்குள் யாரோ வந்ததுபோலிருந்தது. வந்தவர் 'இவள் யார் சின்னம்மா?' என்று கேட்டார். சின்னம்மாவென்று அழைக்கவேண்டுமானால் யாராயிருக்கக்கூடும்? ராமதாஸனின் பிள்ளையோ? எந்தப் பிள்ளை? பெரியவனுடைய குரலை ஒரு நாள் கேட்டிருந்தேன். அது இத்தனை அமிர்தமயமாயிருக்கவில்லை. இப்படிக் காது குளிர நிறைத்து ஸுகத்தைக் கொடுக்கவில்லை. இவர் சின்ன பாபுவாயிருக்கவேண்டுமென்று நினைத்தேன். சிறிய தாயார் இந்த தடவை மிருதுஸ்வரத்தோடு—"அவள் பூ விற்கும் குருடி" என்றாள்.

நான் "பூக்காரியல்லாமல் பெரிய மனிதன் வீட்டுப் பெண்ணாவேனோ" வென்றேன். இது நான் சினத்துடன் மொழிந்த சொல். அதற்கு லவங்கலதா :—"ஏனடி, பூக்காரியானால் பெரிய மனிதனுடைய பெண்டாட்டியாகப் படாதா என்ன?" என்றாள்.

சிறிய பாபு:—ஆகக்கூடாதா? என்ன? இவள் பார்வைக்குப் பெரிய மனிதன் வீட்டு ஸ்திரீயைப்போலவே தோன்றுகிறாள். எந்தக் காரணத்தினால் குருடியானாள்? பாவம்!

லவங்கலதா:—அவள் ஜன்மாந்தை. (பிறவிக்குருடி.)

சிறிய பாபு:—நான் சோதித்துப் பார்க்கட்டுமா?

---

77. ஒரு நாளைக்கு நமது பிரிய "சுதேசமித்திரன்" வரத் தவறிவிட்டால், ஆ! நமது மனம் என்ன பாடுபட்டுப் போகிறது!

சிறியபாபு வித்தியாவந்தன். பன்னூலும் படித்தினிய பயனு ணர்ந்து அந்நெறி யொழுகும் பண்பின் மிக்கான். என்னூலுமியற்ற வல்லான். தன்பால் இரப்போர்க்கு அன்பால் இயன்றைத் தந்து உபகரிக்குஞ் சிந்தைகொள் சுந்தரன். இலக்கண விலக்கியம் நலக்கக் கற்றுத் தேர்ந்த சொற்றிற முடையோன். அத்துடன் வைத்திய சாஸ்திரமும் அப்பியஸித்திருந்தார். சசீந்திரபாபு (சிறிய பாபுவின் பெயர்) எல்லோருக்கும் தர்மவைத்தியம் செய்து வருகிறாரென்று சொல்வார்கள். 'பார்க்கட்டுமா' வென்று சொல்லி என்னிடம் வந்து கொஞ்சம் எழுந்து நிற்பாயா அம்மா' என்றார்.

நான் எழுந்து நின்றேன். சிறிய பாபு 'தன்னைப் பார்' என்றார். பார்ப்ப தெங்கே? மறுபடியும் கண்ணைத் திருப்பென்றார். நான் என் குருட்டுக் கண்ணைத்திருப்பினேன். அவர் என் மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டார். அந்த ஸ்பர்சத்தால் என் பிராணன் போனதுபோலாயிற்று.

அந்த ஸ்பரிசம் புஷ்பமயமா யிருந்தது. அந்த ஸ்பரிசத்தில் ஸகல புஷ்பங்களின் வாஸனையையும் கிரகித்தேன். என் அக்கம் பக்கத்திலும் தலையின் மீதிலும் பூ! என் உடுப்பெல்லாம் புஷ்பம்! என் ஹிருதயத்தில் புஷ்பராசிகள் நிறைந்ததுபோலாயின! ஆஹா! என்ன சொல்லட்டும்? எந்தப் பிரம்மா இந்த சூக்ஷ்மமயமான—இன்பவாரிதியான-பரமானந்தமான-ஸ்பரிசத்தைக் கற்பித்தானோ? முன்னமே குருடியின் சுக துக்கங்களை நீங்கள் அறிய மாட்டீர்களென்று சொல்லி யிருக்கிறே னல்லவா? ஆஹா! இந்த நவநீதத்தைப்போலுள்ள—சுகுமார புஷ்பகந்தமான வீணாத்வனியைப் போலுள்ள ஸ்பர்சம்—இதை மற்றவர் எங்ஙனம் அறிவார்? அவரவர்கள் அநுபவித்த இன்பம் அவரவர்களோடு தான். மற்றவர்களுக்கு எவ்விதம் விவரிக்க முடியும்? என் சுகதுக்கங்கள் என்னிடம் இருக்கட்டும். அந்த ஸ்பர்சம் நினைவுக்கு வந்தபொழுது என்னைப்போல் யார் பாக்கியசாலிகள் உண்டென்று நினைத்துக் கொள்வேன். நின்னருள் வெள்ளமுது என்னையு மேவிவரின் தள்ளவும் கூடுமோ?

சிறிய பாபு இந்தக் குருடு போகாதென்றார். நான் அதைக் கேட்டு நித்திரை செய்தேன். அதற்குள் லவங்கலதா அது போகட்டும்; பணம் செலவழித்தால் குருடிக்குக் கல்யாணமாகாதா, வென்றாள். அந்த சமயம் அவள் தயாபரையாய் விளங்கினாள். சிறிய பாபு "இவளுக்கு இன்னும் கல்யாணமாக வில்லையா" வென, லவங்கலதா பணம் செலவழித்தால் ஆகு மென்றாள். அதற்கு பாபு, "சின்னம்மா! நீ இவள் கல்யாணத்தைப் பணம் கொடுத்து நடத்துவாயா வென்றார். அவள் கோபமுற்றவள்போல் அபிநயித்துக்கொண்டு,

---

78. சிலருக்குக் கடித வரத்துப் போக்கு இல்லாமல்,நேரில் காணும்போது மட்டும் உறவாட வைத்துக்கொள்வது உசிதம்.

"இந்தப் பிள்ளையைப்போல் நான் எங்கும் கண்டதில்லை. எனக்குப் பணம் வைத்துக்கொள்ள இடமில்லையா? நல்லது, கல்யாணம் செய்துகொள்பவன் யார்? அவனைச் சொல்லு, நான் பெண்பிள்ளை, எனக்குத் தெரியாது" என்றாள்.

சிறிய பாபு சிற்றன்னையின் குணத்தை நன்றாயறிந்தவர். அவர் சிரித்து, "அம்மா! நீ திட்டுகொடு. நான் கல்யாணம் செய்துகொள்கிறேன். ஸரோஜினியோடு இவளும் இருக்கட்டும்" என்றார். ஸரோஜினி தேவி சிறிய பாபுவின் பத்தினி.

சிறிய பாபுவின் மதுரமான குரலோசை என் காதில் எவ்விதமாய்த் துவனித்ததோ—அதை வெளியிடுவதெங்ஙனம்? பிரேமமென்னும் வார்த்தைக்குள்ள மகிமையை யாரெடுத்துரைப்பார்? மகா புத்திசாலிகள்கூட பிரேமவர்ணனை செய்ய முடியாது. என் பிராணநாத ரிவரென்று இனிமேல் சொல்லத் தடையென்ன? என் மனமுவந்த வான்பொருளே! இனி அநுதினமும் நின் தாள் தொழுதிடுவேன்.

நான் அதிக வணக்கத்தோடும் "என் ஸ்வாமி! அடியாளுக்குச் செய்த உதவியை ஒருபோதும் மறவேன். தங்களை ஸ்பர்சித்தது முதல் என்னுயிரை உங்கள்மேல் வைத்திருக்கிறேன். என்னைத் தாங்கள் கிருக்ஷிணிபாய் ஏற்றுக்கொள்வதாகப் பிரமாணம் செய்யுங்க" ளென்று என் மனதிற்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன். எங்காவது இதை வாய்விட்டுச் சொல்வார்களா? புருஷர்களின் காதல் வெளிக்குத் தோன்றிவிடும். ஸ்திரீகள் கொள்ளும் காதல், அவர்களது தாகவாஞ்சை எக்காலத்தும் வெளிவராது; கண்டுபிடிக்கவும் முடியாது. அவர்களின் நெஞ்சிலுள்ள ஆழமான பர்வத குகைகளில் அக்காதல் மிகு மர்மமாய் மறைந்து நிற்கும். இதற்கே ஸ்திரீ ஸாஹஸ மென்பது.

லவங்கலதா "குருடியையா விவாகம் செய்துகொள்வது?" என்றாள். அதற்கு சிறிய பாபு, "பாவம் அவளுக்கு நேத்திரமில்லை. அவளுக்கென்று ஏற்படுகிறவன் எத்தகையவனோ? குருடியை மணக்க வருகிறவன் திரவிய லாபத்தையே விரும்பினவனாயிருப்பான். அதிலென்ன சுகிர்தம்? பிறகு அவனிடம் இவள் கஷ்டமே படவேண்டும். அதற்காகவே நமது வீட்டோடு விழுந்து கிடக்கட்டும் என்பது என் சிந்தை. விதவா விவாகத்தைவிட இவளை மணப்பது புண்ணியகரமன்றோ?" என்று சிறிய பாபு கூறினார். லவங்கலதா புன்னகை நிரம்பினாள். நானும் புஷ்பம்கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டேன். வழக்கம்போல் இரண்டு ரூபாய்க்குப் பதிலாகப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து முத்தமிட்டனுப்பி

79. கேட்டதும் மறுக்காமல் உடனே எடுத்துக்கொடுக்கிற கடன்தான் திரும்பிக் கைக்குவர நெடுநாளாகிறது; உலகம் அப்படி.

ளை. அவளுக்கு நான் மருகியாய் விட்டேனென்றோ—என்ன வோ! ஆ! அவரது தேனூர்ந்த மொழிகளின் இன்பம் என்னே!

நான் லாவண்யமயி என்று என்னைப் பார்த்தவர்கள் அனைவரும் நவில்கின்றனர். அதிமூர்த்திமயைபான சுந்தரிதான். ஆனால் நீ பார்ப்பது எப்படி? நீ பூண்டிருக்கும் ஸக்திகளையெல்லாம் காண்பதெப்படி? ஜனங்கள் அழகென்று வர்ணிக்கும் வஸ்துக்களை எவ்விதம் காண்கிறாய்? உன் ஹிருதயத்தில் அநேக ஜீவஜந்துக்கள் நடமாடுகின்றன. அவைகளை எப்படிப் பார்க்கிறாய்? தாயே! காளிமாதா! எனக்கு இஷ்டமான காஸ்பரிசத்தை எப்படிப் பார்ப்பேன். சொல்லடி அம்மா சொல்லு. பார்ப்பதை எப்படிக் காட்டுகிறாய்? பார்க்கிற தென்றால் என்ன? பார்ப்பது எப்படி யிருக்கிறது? பார்த்தால் எவ்வித சுகமுண்டாகிறது? ஒரு முகூர்த்த காலமாவது இந்த ஸுகமயமான ஸ்பர்சத்தை நான் காணமாட்டேனா? கிட்டடியம்மா. வெளிக்கண் பிரயோஜன மில்லாமற் போயிற்று. அது எப்படி யிருந்தாலு மிருக்கட்டும். தாயே! என் ஹிருதயத்தின் மத்தியிலுள்ள கண்ணைப் பிரகாஸப்படுத்து. பிரேமப் பிரபா என்ற என் பெயரேனும் எனக்கு ஸ்திரமாகட்டும். நான் ஒரு தடவை ஏகாந்தத்துக்குள் ஏகாந்தமாய் ஒளிந்துகொண்டு என் ஆசையடங்கும்வரை ஞானலோசனத்தால் (லோசனம்—கண்) என் ரூபத்தைப் பார்த்து இந்த நாரீ ஜன்மத்தை ஸார்த்தகம் செய்து கொள்கிறேன். எல்லோரும் பார்க்கின்றனர். நான் ஏன் பார்க்கக்கூடாது? நான் பார்ப்பதால் யாருக்கும் கேடில்லை. எவருக்கும் நஷ்டமில்லை. ஒருவருக்கும் பாபமில்லை. எல்லோரும் தம் இச்சைப்படி பார்க்கிறார்கள். நான் என்ன தோஷம் செய்தேன்? எப்பொழுதும் பார்க்கக்கூடாதா?

இல்லை! இல்லை! அதிர்ஷ்டமில்லை. என் ஹிருதயத்தில் தேடிப் பார்த்தேன். கேவலம் ஸப்த—ஸ்பரிசம் மாத்திரம் தான்; வேறொன்றுமில்லை; காணேன்.

என்னுடைய துக்கங்களை யாரும் அறியமாட்டீர்களா? ரூபத்தைப் பார்க்கும் விதத்தை யாரும் கற்பிக்க மாட்டீர்களா? யாரும் குருடியின் துக்கத்தை அறியமாட்டார். இதற்கு இந்த ஜென்மத்தில் ஔஷதப்பிரயோக மேதும் இல்லையா? ஐயோ! கையில் கோல் இல்லாமல் மற்றவர்களைப்போல் வழியறிந்து நான் நடப்பது எப்போதோ? அது ஏது இனி?

---

80. உன்னுடன் நேசம் செய்வது அதிகக் கஷ்டமென்று பிறர் கூற நில். அப்போதுதான் யதார்த்த நண்பர்களை நீ பெறலாம்.

எவ்வளவோ ஆசையுடன் போனவள், திரும்பும்பொழுது, நிராசையாய்—“ஏன் போனேன்?—இனிமேல் வரக்கூடாது” என்று மனதில் கண்டிப்பு செய்து கொள்வேன். இது அந்த க்ஷணகாலத்திற்கு மட்டுமே. பிறகு அந்த ஸங்கல்பம் வியர்த்த மாய்விடும். மறுபடி நித்யமும் போவேன். யாரோ கைபிடித்துப் போகப்பட்டவளாகச் செல்வேன். மறுபடி நிராசையோடு திரும்புவேன். மறுபடி போகக்கூடாதென்று பிரதிக்ஞை. திரும்பவும் போவேன். இவ்விதம் காலஹரணம் செய்துவந்தேன். அங்கனாமணிகளின் ஹிருதயத்திற்குள் மறைந்துள்ள காதலை ஈச்வரன்கூட அறியமாட்டான். வேறெவரும் தெரிந்துகொள்ளவு மாட்டார்கள். எவ்வளவு கரை கடந்த காதல் அவர்களுக்கு இருந்தால் தங்கள் பிராணனுக்குச் சமமான தங்களின் நாணத்தை அவர்கள் நெகிழவிட முடியும்? எத்துணை விரைவினில் தங்கள் கற்பை அக்காதலுக்கு அர்ப்பணம் செய்து விடுகிறார்கள்?—ஸமர்ப்பித்து விடுகிறார்கள்? இந்த ஒரு சம்பவமே அவர்களது காதலின் ஆழத்தையும், அக்காதலின் முன்பு மற்ற யாவற்றையும் ஒரு சிறு துரும்பு எனக் கருதவைத் திடும்பான்மையையும் இனிது விளக்கவல்லதாம். காதலனிடம்—கணவனார்தம்மிடை மட்டுமே—தங்களின் காமோத்தீபமான சுபாவ தர்ம அவஸ்தைகளை—உணர்வினை உணர்த்துவிக்கிறார்கள். ஏனையரிடமோ ஏதுமே தெரிந்திடாத பாலகிகளெனப் பாவனை பாராட்டுகின்றார்கள். என்னே மாயா விநோதம்! அது லோகதர்மம்.

கண் குருடானாலும் நித்திரைக்குக் குறைவா? காதலில் தாழ்ந்து போவேனா? கோணைப் பெண்ணெனினும் பிள்ளை குட்டிக்குக் குறைச்சலில்லை! மனதில் ஏன் போகவேண்டுமென்று யோசித்துக் கொள்வேன். ஸ்திரீகள் புருஷர்களுடைய ரூபத்தைக் கண்டு மோஹிதர்களானால், அவர்களிடம் பிரேமை யுள்ளவர்க ளாகிறார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எதற்காகப் போகவேண்டும்? வார்த்தையைக் கேட்கவா? எந்த ரமணியே ஆகட்டும். வார்த்தையின் சப்தத்தைக் கேட்டு உன்மத்தளானாளென்று யாராவது எப்பொழுதாவது கேட்டதுண்டா? நான் ஒருத்தி மாத்திரம் அப்படியானேனா? அதுதானெப்படி? அப்படியானால் வாத்தியங்களைக் கேட்டு அதை வாசிப்பவனுடைய வீட்டுக்கு ஏன் போவதில்லை? ஸாரங்கம், வீணை முதலிய வாத்தியங்களை விட சசீந்திரனுடைய கண்டம் இனிமையானதோ? அது பொய்.

ஆனால், அந்த ஸ்பர்சமா? நான் பகலும் இரவும் அதே சிந்தனையில்தான் இருக்கிறேன். சசீந்திரனின் அருகே ஸயனிப்பது போலெண்ணிப் படுக்கையை விரித்துக்கொண்டுகூட நித்திரைசெய்

81. கூழே குடிப்பினும் குலாவி நிற்பவரிடை இருப்பின் குதூகலமே. பாயசவிருந்து பரிமாறினும், ஒதுங்கி நிற்பாரிடை மகிழ்ச்சியாங்ஙனே?

திருக்கிறேன். ஹிருதயத்தில் ஒளித்துக் கொண்டுகூட நடமாடி வருகிறேன். இந்த இனிய சிந்தனைகளைவிட அந்த ஸ்பர்சம் கோமலமானதா? அதுவுமிராது. ஆனால் எது? இந்தக் குருடிக்கு அது ஏதென்பதை யார் தெரியச் சொல்வார்?

உங்களுக்கே தெரியாது. பிறருக்கு எப்படிச் சொல்வீர்கள்? உங்களுக்குக் கண்ணுண்டு; ரூபத்தைப் பார்க்கிறீர்கள். தெரிந்து கொள்ளலாம். நான் நினைத்திருப்பது என்னவென்றால், ரூபமென்பது பார்ப்பவனுடைய மானஸிக விகாரமாயிருக்கிறது; சப்தமும் மானஸிக விகாரம். ரூபமானது படைத்தவனிட மில்லை. பார்ப்பவனுடைய மனதிலிருக்கிறது: அப்படிக்கில்லாவிட்டால், ஒரு மனிதனை எல்லோரும் ஏன் ஸமானமான ரூபவந்தனென்று பார்க்கிறதில்லை? ஒருவரிடமே எல்லோரும் ஏன் பிரியம் வைக்கிறதில்லை? அவளது காதலன் மட்டும் அவளிடத்து ஆநந்தமாய் இருப்பதேன்? கரிய வர்ணமுள்ள ஒரு யுவதியிடம் ஒரு யுவகனுக்குப் பிரேமை யுண்டாவதேதனால்? ரூபமும் சப்தமும் நமது மனதிலிருக்கப்பட்டது. ரூபமென்பது தர்சகனுடைய (பார்ப்பவனுடைய) மனதின் சுகமாகயிருக்கிறது. ஸ்பர்சம் ஸ்பர்சகனுடைய (தொடுபவனுடைய) மனதின் சுகம். எனக்கு ரூப—சுக மார்க்கம் பந்தமாயிருப்பதால், சப்த—ஸ்பர்ச—கந்தம், ரூப—சுகத்தைப்போல் மனதின் பாவனமா யிருக்கக்கூடாதா? என்ன?

வெறும் தரையில் மழை பெய்தால் அதில் புல்பூண்டுகள் முளைக்காதா என்ன? உலர்ந்த விறகின்மேல் நெருப்பு விழுந்தால் அது ஜ்வலிக்காதா? ரூபத்திலேயே ஆகட்டும், சப்தத்திலேயே ஆகட்டும், அல்லது ஸ்பர்சத்திலேயே ஆகட்டும், ரமணியின் ஹிருதயத்தில் ஸுபுருஷனுடைய உருவம் ஆரோகணிக்குமானால் பிரேமம்—காதல்—ஏன் ஜனிக்காமலிருக்கும்? நீங்கள் பார்த்து வருவது போல் அந்தகாரத்திலும் பூ மலருகிறது. மேகம் மூடிக்கொண்டிருந்தாலும் சந்திரன் ஆகாசத்தில் ஸஞ்சரிப்பான். ஜனசூன்யமான அரண்யத்திலும் கோகிலம் கூவுகிறது. மனிதன் பிரவேசிக்காத ஸாகரத்தின் கர்ப்பத்திலும்கூட ரத்நம் ஒளி வீசுகிறது. அந்தகருடைய ஹிருதயத்திலும் பிரேமம் ஜனிக்கும். எனக்குக் கண்கள் இல்லாமற்போனால் என் மனதில் பிரேமம் உதிக்காதா என்ன?

பிரேமம் உதிக்காமற் போகாது; எனக்கும் உதித்தது. ஆனால் அப்படி உதித்ததானது கஷ்டத்தை யுண்டாக்கியது. யார் பார்த்து விடுகிறார்களோ வென்ற அச்சம் எந்தக் காதலன் காதலிக்குத் தான் இல்லை? காதல் தேவியின் அடிபணிந்த யுவக யுவதிகள் தங்க

82. அவர்களுக்கு நம்மால் ஒரு பெரிய காரியம் இருக்கும்போது, அவர்களை நாம் என்ன கேட்பினும் உடனே தர—வர—இசைய—தயார்.

ளின் காதல் சாதிக்கச்செய்து கொள்ளும் பிரயத்தனங்கள், தெய்வப் பிரார்த்தனைகள் கொஞ்சமா? அதை அளவிடமுடியுமா? எவ்விதமோ ஏற்றதொரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு அநுகூலமாக்கி அந்தத்தருணம் எவரும் இல்லாத காலமாக—ஒவ்வொருவரும் ஒவ்வொரு கார்யார்த்தமாக வெளியிற் சென்றுவிடும் பொழுதாகப் பகவான் அமைத்து விடுகிறார். அவர்களும் ஆநந்தத்துடன் சந்திக்க நேரம் கிடைக்கின்றது. ஸர்வமும் அந்தப் பரந்தாமனின் லீலா விநோதம் தானே. அவர் கூத்து தானே. அவர் ஏற்படுத்திய ரஸ சிருஷ்டி தானே.

ஆ! காதலர் கடிதங்களை என்னென்பது?:—காதலர்களுக்குத் தினந்தோறும் கடிதம் எழுத எப்படி எங்கிருந்து சங்கதிகள் கிடைக்கின்றனவோ! வேறு என்ன தான் எழுதுவார்களோ! தினம் ஒரு கடிதம் வந்து கொண்டும், மற்றொன்று போய்க்கொண்டும் இருக்கும். ஆ! இத்தகைய உண்மைக் காதல் காலவசத்தால் நடு சமுத்திரத்தில் கப்பல் முழுகுவதுபோல இருந்தவிடமே தெரியாமல் போய்விடுகிறது. என்றாலும் அவர்கள் அநுபவித்த இன்ப நுகர்ச்சிகளையும் மற்றும் ஏனையவைகளையும் எப்போதாவது நினைக்காமலிருக்க மாட்டார்கள். ஆனால் செய்கையிலில்லா அன்பு எதற்காகவோ!

*   *   *   *   *

ஊமையின் கவித்வம் அவனுக்குக் கஷ்டமாயிருக்கும். ஸப்தஹீனனுக்கு ஸங்கீதத்தில் அபிமான முதித்தால் அது அவனுக்கு சிரமத்தைத் தரும். தானே தன் சொந்த கானத்தைக் கேளான். அந்தப் பாக்கியம் அவனுக்கு சூன்யம். அதுபோல், என் மனதிலும் பிரேமை யுதித்து அவ்விதமே கஷ்டத்தைக் கொடுத்தது. பிறருடைய ரூபத்தை எப்படிப் பார்ப்பது? நான் ரூபத்தையே எப்பொழுதும் பார்த்தவளல்ல. ரூபம்! ரூபம்! என் ரூபம் எப்பேர்ப்பட்டது? இந்தப் பூமண்டலத்தில் பிரேமப் பிரபா என்ற பெயருள்ள அல்பமான ஒரு பிந்து எப்படி உண்டாயிற்று? என்னைப் பார்த்தால் யாராவது மறுபடி பார்க்க வேண்டுமென்ற இஷ்டம் கொள்வார்களா? இந்தப் பிரபஞ்சத்தில் நீசனான ஒரு அல்ப மனிதனாகட்டும், என்னிடம் சௌந்தரியம் கண்டவன் யாருமில்லையா? நயனங்களில்லா விட்டால் நாரி சுந்தரியாகாள். எனக்கு நயனங்களில்லை. ஆனால் சிற்பியானவன் கண்ணில்லாத மூர்த்தியை ஏன் செய்கிறான்? அப்படியானால் பிரம்மா இந்தப் பாஷாண மத்யத்தில்—சுகதுக்கங் கட்குட்பட்ட இந்தப் பிரளயத்தில் ஆசாபாவசமான ஹிருதயத்தை

83. எதிலும் சம்பந்தப்படாதிருக்கை பெரிய சாமர்த்தியமே. அதனால் யாவருக்கும் நல்லவராதலும் கூடும். ஆனால், அது அநுதாபமற்ற நெஞ்சமுத்தக் காரராய்த் தன்னை ஆக்கிவிடுகிறது.

என் பதிய வைத்தான்? பாஷாணத்துக்கு உண்டாகக்கூடிய துக்கத்தை அநுபவித்தேன். ஆவியைத் தொலைத்து நிம்மதியைக் கொடுக்கிற பாஷாணத்திலுள்ள சுகம் ஏன் எனக்கு வரவில்லை? வந்தால் ஒரே பாடாய் முடிந்திருக்குமே!

இந்த ஜகத்தில் இத்தகைய தாரதம்மியம் எதற்கு? அமோகமான பாபம் செய்பவர்களுங்கூட கண்களால் பார்க்கின்றனர். நான் பாராமலிருப்பதற்கு ஜன்மாந்தரத்தில் என்ன பாபம் செய்தேன்? இக சம்சாரத்திலும் பிராப்தியில்லை. பின் என் உருவம் இவ்வுலகில் எதற்கு? நான் பிராணனை விடுகிறேன். என் ஜீவனத்தில் அநேக வருஷங்கள் கழிந்தன. இன்னும் அநேக வருஷங்களும் கழியும். எப்போதேனும் என் கண் திறந்து பார்ப்பேனாகில், ஸ்பர்சமயமான இந்த விசுவாசத்தின் ஸாரமென்ன, நானென்ன, சசீந்திரன் யார்? என்று பார்த்துக்கொள்வேன்: அந்தப் பாக்கியம் எனக்கு உண்டா?

நான் நித்யமும் பூவைக் கொண்டு போவேன். சிறிய பாபுவினது வார்த்தையின் சிரவணம் நித்யமும் உண்டாகவில்லை. ஒவ்வொரு நாள் கேட்கும். அதைக் கேட்டபோது என் மனம் இருந்த நிலையை நான் சொல்லமாட்டேன். ஏன் ரசிகர்களான உங்கட்குத் தெரியாதா? மேகம் ஜலத்தால் நிறைந்து மழையைக் கொட்டும் பொழுது ஆநந்திதமான கர்ஜனை செய்கின்றது. எனக்கும் அவ்விதமாய் வாய்விட்டுக் கூவிக் கர்ஜிக்க இஷ்டமானது. ஆனால் மேகத்தின் கர்ஜனை கர்ணகடூரம். ஆனாலும் அதற்கு அது இன்பம். மற்றவர்களுக்கு வெறுப்பு. இவ்விதமே என் கர்ஜனையும் வெளிவரின் அது பலருக்கு வெறுப்பை விளைக்கும். மேகத்துக்குத் தன்னிடம் நிறைந்து நின்ற ஜலத்தை வருஷிப்பதால் ஆநந்தம். எனக்கோ என் ஹிருதயத்தில் இடமில்லாது நிறைந்துவிட்ட பிரேம தாரைகளை சசீந்திரன்மேல் பொழிவதால் உண்டாகும் ஆநந்தம்!

நித்தியமும் சிறிய பாபுவுக்கு உத்கிருஷ்டமான மொட்டுகளால் ஒரு தோடா கட்டி எடுத்துக் கொண்டுபோய் அவர் கைக்குக் கட்டிவரவேண்டுமென்று யோசிப்பேன். ஆனால் ஒரு நாளாவது கட்டாமற் போனேன். பாழும் லஜ்ஜை யொரு பக்கம் குறுக்கே வந்து மறைக்கும். அவருக்குப் புஷ்பம் கொடுத்தால், அதற்கவர் கிரயம் கொடுத்தாரானால் என்ன செய்கிறதென்று மனதில் யோசனை யுண்டாகும். கிரயம் பெற்றுவிட்டால்—விலை மதிக்காததான ஒரு அபூர்வ வஸ்துவுக்கு, ஒரு அரிய பிரயத்தனத்திற்கு ஒரு விலை மதிக்கப்பட்டுப் போனதாகி, அதற்குள்ள பெருமையும் குறித்த ஒரு

---

84. தனது துவேசத்தன்மை தனது நற்காலத்தை வெகுதூரத்திலாக்குகிறது. இடம் கிடைப்பினும் சுகம் கிடைக்காதிருக்க வைத்துவிடுகிறது.

பணத்தொகையில் அடங்கி ஓரளவுக் குட்பட்டுக் குன்றிவிடும்—குறைந்துபோகும். நேசர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உபகாரத்துக்கு விலை மதித்துவிடக்கூடாது. விலைமதிக்காத மாணிக்கங்களாகக் கொண்டால்தான், அவர்களின் நேச காரியங்களும் என்றும் பூஜார்ஹமானதாய் ஸ்தோத்திர பாத்திரமாய்ப் பரிமளிக்கும். மித்திரத்துவமும், நேசதர்மமும், ஸகாயங்களும், நன்றியும் நலனும் வளர்ந்து பெருகும். வேருன்றும். விசாலிக்கும். கிரயம் பெற்று விடினே அந்த நேசம், பிரேமம் யாவுமே இறுதியில் போலியெனப்படுமால். நானும் 'எங்கு கிரயம் கொடுத்துவிடுகிறாரோ வென்று துக்கித்து, அந்த வியஸனாந்தகாரத்துடன் வீட்டுக்கு வந்து புஷ்பத்தைக் கட்டுவேன். எப்படிக் கட்டுவேனே அது தெரியாது. கட்டினதை ஒன்றும் நான் பார்த்ததில்லை.

நான் இப்படிப் போய்வருவதானது ஒருவித சிந்தைக்குப் பலோதய காரணமாயிற்று. அது எனக்குத் தெரிந்திருக்க வில்லை. என் தாய் தந்தையர் பேசிக் கொண் டிருக்கும்பொழுது கேட்டு எனக்குக் கொஞ்சம் தெரிந்தது. ஒரு நாளிரவு நித்திரை செய்து கொண்டிருந்தேன்; அப்பொழுது விளக்கு எரியவில்லை. அதனால் நான் விழித்துக்கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியவில்லை.

அவர்களின் வார்த்தையில் என் பெயர் வந்ததால் நான் கவனித்துக் கேட்டுக்கொண் டிருந்தேன். யுவகர்கள், யுவதிகள் இவ்வித ரகசியங்களை—அந்தரங்கங்களை—தாங்கள் இதுவரை ரமித்திராத நவீன சுகப்பிராப்தப் பிரஸ்தாபனைகளை—தாங்கள் பிரேமையோடு எதிர்பார்க்கிற,ஆவலுடன் விரும்பிநிற்கிற,இனிவரப்போகிற அந்தப் புயதி நிலைகளை எவ்வளவோ கவனத்தோடும் சிரத்தையோடும் உற்றுக் கேட்பார்களல்லவா? அதைவிட அவர்களுக்கு வேறு வேலை தானென்ன? அதுவே அவர்களின் நித்ய சிந்தனை—விசாரம்—தியானம். நமது பாட்டிகளுக்கு நித்ய கைங்கர்ய மெது? அவர்களின் பூர்வ லீலா ரஸங்கள், வாழ்விலுற்ற அநுபவங்கள், உணர்ச்சிகள்—இவற்றை யெல்லாம் ரமணிகளுக்குக் கற்பித்து வைப்பது தானே! அதில் சுந்தரிகளுக்குச் சுவை யுதிக்கச்செய்வதே இப்பாட்டிகளின் நித்தியப் பிரவர்த்தி. பெண்கள்கூட்டம் கூடினால் அங்கு எதைக் காணலாம்? பரஸ்பர ரஸாநுபவப் பிரஸ்தாபனைகளையே தான். அவள் இன்னும் யுவதியாக வில்லையா? என்ற வினா பிரதமத்தில்தோன்றும். ஆய்விட்டதென விடை வரின்,"சாந்தி எப்போது?" என்ற பிரசினை உதிக்கும். அதுவும் முடிந்ததெனில்—'எத்தனை மாதங்கள் இப்போது'—என்ற கேள்வி ஆரம்பமாகும். இன்னும்

85. ஒரு சிறு துரும்பிலிருந்து பெரிய பகைமை விளைத்துப் பிரிந்திடுவோர், தமது தீய செயல்களை, சம்பந்த ரகசியங்களை மறைக்கவே அங்ஙனம் முயல்கிறார்கள்.

புத்திரோற்பத்தி இல்லையெனில், அதற்கான அநுபவங்கள், ஔஷதங்கள் ஆகிய ஆலோசனைகள் ஓதப்படும். கையில் குழந்தையோடும் நின்றால், "யாருக்குக் கொடுக்க எண்ணம், எந்த இடத்தில் சம்பந்தம் செய்ய யோசனை" என்ற பேச்சுகள் பிறக்கும். அதன் பின் ஊர் விஷயங்களும், மற்ற ரமணிகளின் மீது அவதூறுகளும், ஆக்ஷேபணை சமாதானங்களும், அவரவர்கள் தரித்துள்ள ஆபரணங்களைக் குறித்த வார்த்தைகளும் வந்து கலந்து ரஸப்படும். இதுதான் பெண்களின் கூட்டத்தில் ஒவ்வொருவருக்கும் உத்தியோகம்—உபன்யாசம்! யாவும் வெகு கருத்தோடூன்றிக் கேட்கப்படும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. இவ்வாறான உலகப் போக்கில் நான் என் பெற்றோர்களின் பேச்சுகளை உற்றுக் கேட்டதில் பிழை என்ன? மேலும், அந்த நவீன சுகப் பிராப்தி மற்றொரு உருவத்தைக் கொண்டல்லவா அநுபவம் செய்யவேண்டியிருக்கிறது. தான் ஒருத்தியே தனித்தளவில் அநுபவம் பெற முடிகிறதா? ஓசை எவ்விதம் உதிக்கும்? இருகைகளும் சேர்ந்து தட்டினால்தானே! என்னே அந்த சுகவாரிதியின் ரமணீயம்! அந்த ரமணீயப் பிரஸ்தாபனை காலத்தில் யார் தான் உற்றுக் கேளாதார்?

* * * *

"தாயார்:—ஆனால் கண்டிப்பாய்த் தெரிந்ததா?

தந்தை:—தெரியாமலென்ன? அத்தகைய பெரிய மனிதர்கள் வார்த்தை சொன்ன பிறகு தப்புவார்களா? அதுவுமல்லாமல் நமது மகளுக்கு நேத்திரங்களில்லை. அவளுக்குக் கண்கள் மட்டும் இருந்துவிட்டால் இப்பேர்ப்பட்ட புத்திரி—இந்தப் பிரேமப்பிரபா லோகத்தில் தபஸு செய்தாலும் அகப்படாள்.

தாயார்:—அவர்கள் எதற்காக நமக்கு இத்தனை செய்ய வேண்டும்?

தந்தை:—உனக்குத் தெரியாது. அவர்கள் நம்மைப் போல் பிக்ஷுகர்களல்ல. ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் என்றாலும் மனம் பிடித்துப்போன இடத்தில்—அன்பு பெருகிய இடத்தில்—அது அவர்களுக்கு லக்ஷ்யமில்லை. என்றைய தினம் பிரேமப்பிரபா கேட்கும்படி லவங்கலதா விவாகப் பிரஸ்தாபம் செய்தாளோ, அது முதல் நமது கன்யை தினம் தவறாமல் அவளிடம் செல்லுகிறாள். முதல் நாள் அவள் தன் குமாரனோடு, பணம் கொடுத்தால் குருடியை யார் கல்யாணம் செய்து கொள்வார்களென்று கேட்டாள். பெண்ணுக்கும் இவள் தயாபரை; பணம் கொடுத்து நமக்கு விவாகம் செய்து வைப்பாளென்ற நம்பிக்கை பிறந்து அவளிடம் தினம்

---

89. எதிர்பார்க்கும்போது தான் ஏமாற்றம். எதிர்பார்த்த கடிதம் தான் அன்றைய தபாலில் வருவதில்லை. எதிர்பார்த்த பெண்ணே தவறிவிடுகிறது.

போகிறாள். இவள் வருவதைக் கண்டு அவளும் கல்யாணத்துக் காகவே பிரபா ஆசையோ டிருக்கிறாளென்று தன் பிள்ளையுடன் யோசித்து ஹரிநாதவஸுவிடம் சொல்லி யிருக்கிறாள்: கோபால னும் ஒப்புக்கொண்டிருக்கிறான்.

*　　*　　*　　*　　*

இவ்விதம் அவர்கள் பேசுவதைக் கேட்டேன். ஹரிநாதன் ராமதாஸனின் வீட்டில் சேவகம் செய்கிறான். கோபாலன் அவனு டைய மகன். கோபாலன் ஸமாசாரம் எனக்குத் தெரியும். அவ னுக்கு முப்பது வயது. ஒரு மனைவி யுண்டு. அவர்களுக்குக் குழந் தைகளில்லை. கிரக தர்மத்துக்காக கிருகிணி யிருக்கிறாள். ஸந்தா னார்த்தமாய் மற்றொரு பத்தினியாகப் பிரபாவை விவாகம் செய்து கொள்ளுவதால் ஒரு ஆக்ஷேபமு மிருக்காதென்றறிந்தேன். அதுவுமல்லாமல் காருண்யவதியான லவங்கலதா கோபாலனுக்கு விசேஷமாய்த் துட்டு கொடுப்பாள். தாய் தந்தையர் பேசிக்கொண் டிருந்த வார்த்தைகளால், என்னைக் கோபாலனுக்குக் கொடுப்ப தாய்த் தெரியவந்தது. அவன் பணத்தாசையால் பத்தென்பது வய துள்ள என்னை மணந்துகொள்ள உடன்பட்டான். துட்டு கொடுத் தால் ஜாதி வருமா? என் தாய்தந்தையர் இந்த ஜன்மத்தில் தங்கள் குமாரி சற்று குறைந்த ஜாதியானாலும மாங்கல்யவதியானால் போது மென்று ஆவலுற்றனர். அவர்களுக்கு அபரிமிதமான ஸந்தோஷ முண்டாயிற்று. எனக்கோ என் தலையில் ஆகாசமே கவிழ்ந்தது போலாயிற்று. தவளைக்கும் பாம்புக்கும் எப்போதாவது ஒற்றுமை யுண்டா? அன்று மறுநாள் லவங்கலதா வீட்டுக்குப் போகக்கூடா தென்று சங்கல்பம் செய்துகொண்டேன். மனதில் அவளை ஆயி ரம் திட்டுகள் திட்டினேன், லஜ்ஜையால் எங்காவது சென்று சாக லாமென்று இஷ்ட முண்டாயிற்று. கோபத்தோடு லவங்கலதாவை அடிக்கலாமென்று மனம் வந்தது. துக்கத்தால் கண்களில் ஜலம் பெருகிற்று. நான் லவங்கலதாவுக்கு என்ன அபராதம் செய்தேன்? அவள் என் விருப்பத்துக்கு மாறாக இதை எதற்காகச் செய்யத் துணிந்தாள்? அநேகமாய்ப் பெரிய மனிதர்கள் ஒரு காரி யத்தில் சிரத்தை வைத்தால் அதை முடித்தே தீருவார்கள். அதில் ஒருவருக்குத் துக்கமுண்டானால் மற்றொருவருக்கு ஸுகம் லபிக் கிறதென்று தெரிந்து கொண்டேன். கோபாலனுக்கு ஸுகம். பிரபாவுக்குத் தீராத தலை நோய். பிடித்ததே பிடியா? அந்தப் பிடி வாதம் பெரிய மனிதர்களின் ஸ்வபாவம் என்பது நிஜமானால், இந்த ஜன்மாந்தையாகிய துக்கியைத் தவிர வேறு யாரும் லவங்கலதாவின் இஷ்டத்துக்குத் தகுந்ததுபோல் கிடைக்கவில்லையா?

87. மாமியின் உறவு மணாளனின் கடும்பகையிலும் நன்று. கணவனைச் சரி செய்து விடலாம். மாமியையோ முடியாத காரியம். எளிதுமல்ல.

பொதுவாக உலகமே எதிரிடையாகத் தான் இருக்கிறது. எவரிடத்து நாம் அதிக அன்புவைத்து நிற்கிறோமோ அவர்கள் தான் நம்மைக் கைவிடுவோராயும், நமது ஆபத்திற்கெல்லாம் மூல கர்த்தாவாயும், நம்மைப்பற்றிப் பிறரிடத்தில் கோள் சொல்வோ ராகவும், நம்மைக் கேவலப்படுத்தியும் தாழ்த்தியும் கூறுவோராக வும் பரிணமிக்கிறார்கள்—ஆகின்றனர். நம்மைப்பற்றி நேரில் நம் மையே கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு விஷயத்தை, நம் மைக் கேளாமல் மனத்திற்குள் மறைத்துத் தன்னுள்ளேயே ஒரு தீர்மானத்தைப் புகவிட்டுக்கொண்டு, அதைப் பிறரிடத்துக் கூறி, அது அப்படித்தானே என வினவி தம் சந்தேகம் தெளிய முயல் கிறார்கள். ஏன் இத்தனை கபடமோ? ஒருவன் ஒருவனிடத்து அதிக அன்பு வைக்கிறான். அந்த அன்பின் மிகுதியால் தனக்கு வேண் டிய முக்கியமானவர்களையும் அவனுக்குப் பரிச்சயம் செய்வித்து அன்னியோன்ய முண்டாக்குகிறான். இந்தப் பரிச்சயமானவர்க ளும் அவனும் ஓரிடத்திற் சந்தித்து மகிழவேண்டுமென்றும், தான் அதை நோக்கிக் குதூகலப்படவேண்டு மென்றும் ஆவல் கொள் கின்றான். அவ்விதமே ஒரு காலம் வருகிறது. தான் பரிச்சயமாக் கியவர்களும் தான் அன்பு வைத்தவனும் ஒருவர்க்கொருவர் சந் தித்து மகிழ்கின்றார்கள். அந்த சந்திப்பிலேஇவன் எதிர்பார்த்ததற்கு மாறாக, இவன் மேல் கோள்களும் புகார்களும் அந்தப் பரிச்சய மானவர்களிடத்திலே இவனது அன்பன் வாரிக்கொட்டுகிறான். இவனுடைய வியாபாரத்தையோ, காரியங்களையோ மிக்க கேவல மாகவும், தாழ்த்தியும் பேசி, அதிக வருமானம் இராதென் றும், எல்லாம் வெளிமேற் பூச்சு என்றும் இழிவு படுத்துகிறான். இங்ஙனம் அந்த அன்பன் கேவலப்படுத்துவதற்குத்தானா அவனு க்கு—தனக்குவேண்டிய முக்கியஸ்தர்களை யெல்லாம் பரிச்சயம்— அறிமுகம் செய்துவைத்தது? பரிச்சயம் செய்துவைத்த நல்லெண் ணத்திற்குப் பலன் இதுதானா? இவ்வளவும் கேவலப்படுத்திவிட்டு; பிறகு இதையெல்லாம் அவனிடம் சொல்லவேண்டாமென்று வே றே கேட்டுக்கொள்கிறான்? இது எதற்காகவோ! இவன் கேவலப் படுத்தியதை ஒருவன் வெளிப்படுத்திவிட, உடனே அந்த அன்பனு க்கு வெளிப்படுத்தியவன் மேல் கோபம் மூண்டுகொள்கிறது. எவர் களிடத்து நமது அன்பைச் செலுத்தினேமோ அவர்களே நமது உள் உறவு சங்கதிகளைத் தெரிந்து கொண்டு நம்மைப் பிறரிடத்தில் கேவலப்படுத்துவோராக ஆகிவிடுகிறார்கள். இவ்விதம் ஆகிவிட்டு நம்மிடம் மட்டும் ஏதும் தெரியாத பூனைகளாகப் பல்லை யிளிக்க வருகிறார்கள். நமக்கு விருந்துபசாரங்களும், கன மரியாதைகளும்

88. உதித்த பழய அன்பை இடைச்சம்பவ வெள்ளம் கொண்டுசென் றது. முன்னைய அன்பு இப்போது முளதென எண்ணுகை வீண்மயக்கே. அது ஒரு காலம்!

செய்விக்கிறார்கள். இத்தகைய துஷ்டர்கள், எவராயினும் எனக்கிருந்து—அல்லது நவீனமாக ஏற்பட்டு லவங்கலதாவின் மனத்தைக் கெடுத்து என்னைக் கோபாலனுக்குத் தள்ளிவிடுவதென்று முடிவுபடுத்திவிட்டனரா? ஏதும் தெரியவில்லை.

அத்தியாயம் - 3

அன்று முதல் நித்யமும் நான் ராமதாஸன் வீட்டுக்குப் புஷ்பம் கொண்டு போவேன். அதற்காகவே, விண்ணூறும் சூரியன்றன் வேல்கதிர்கள் வீசுமுன்னர் துயிலெழுந்திடுவேன். விரைவதாக மாலைகளைக் கட்டி முடித்துச் சித்தமாவேன். எதற்காகப் போவேனோ அதனை யறியேன். எனது எண்ணாரும் பெருங்குறை எளிதில் தீரவல்லதா? மந்திரமொன்று நானறியேன். செய்யும் தந்திரம் யாதுமே தெளியேன்.

கண்ணில்லாதவளுக்கு இந்தப் பிரயத்தன மேன்? இக்கபோதி பார்க்கமாட்டாள். வெறும் வார்த்தையைக் கேட்கும் இன்பம் ஒன்றுதான். சசீந்திரன் தினம் எதற்காக என்னுடன் பேசுவார்? அவர் இருப்பது முன்கட்டாகிய ஸதாமகலில். நான் போவது அந்தப்புரத்துக்கு. அவரது மனைவி ஸரோஜினி என்னிலும் இளையவள். என்னை அக்கா என்று அழைப்பாள். "அக்கா! உனக்குக் கல்யாணமாமே; நானும் விவாகத்திற்கு வருவேன்" என்று வெகு பாந்தவ்யமாய் வசனிப்பாள். சசீந்திரனும் அவரது தமயனும் புவனேச்வரிக்குப் பிறந்தவர்கள். லவங்கலதாவுக்கு இன்னும் சந்தானம் உண்டாகவில்லை. கிழவனுக்கேது சந்தானம் என்பார்கள். ஆனால் ராமதாஸன் வயோதிகனல்லவென்று முன்னரே கூறியிருக்கிறேன். ஏதாவது காரியமிருந்தால் சுசீந்திரர் தாயிடம் வருவார். ஆனால் நான் ஒரு சப்தத்தைக் கேட்க ஆசை. அதுவுங்கூட எனக்கு லபலமாகு மென்பதில்லை. ஆசையை யடக்க முடியாமல் நித்தியமும் போவேன். தான் இச்சித்த ரமணியின் வதனத்தைத் தரிசிக்கவும், அத்தருணியிடம் பேசவும், மிகு மந்தகாசமாய்த் தங்களின் மதன தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவும் புமான்கள் பிரயத்தனம் செய்கிறதில்லையா? எத்துணை சாதுர்ய சாகஸங்களுடன் அவர்கள் அந்த லீலா ரஸத்தில் பிரவர்த்திக்கிறார்கள்! ஆசை எதைத் தான் செய்யாது? எதற்குத் தான் துணியாது? ஆனால் எல்லாம் நம்மனதிற்கிசைந்தவாறே நிகழ்வது அபூர்வம்.

89. ஆபீஸ் மானேஜருடைய சிரிப்பு அவர் எதிரில் நிற்பவனை அவர் பேச்சின்படி நடக்கச் செய்து விடுகிறது. அதற்கே அவர் சிரிப்பு.

நான் லவங்கலதாவிடம் ஜாக்கிரதையாக எண்ணிப் பேசுவதில்லை. அவ்வம்மையை எனது பரம சிநேகிதிபோற்கருதி வார்த்தையாடுவது வழக்கம். அங்ஙனம் உரையாடுவதில் யாதேனும் பிழைபட்டுவிட்டதோ யாதோ! அவ்விதம் ஒன்றும் இராது. ஜாக்கிரதை என்ற பதத்திற்குக் கபடம் என்பதாக இந்த இடத்தில் பொருள் கொள்ள விரும்புகிறேன். பண்டிதர்கள் இதற்கு என்னை க்ஷமிக்கட்டும். ஒரு பெண் ஒருவனை நம்புகிறாள். அவன் நிர்மல ஸ்வரூபி என்றெண்ணுகிறாள். ஆழ்ந்த காதல் செலுத்துகிறாள். அவனோ தனது ஒவ்வொரு வார்த்தையையும் விரலிட்டு எண்ணி, ஸர்வ ஜாக்கிரதை யுடனும் பேசுகிறான். அன்பளாவிக் காதல் கூர்ந்து—அது மிகுந்து ததும்பிய ஊற்றில்—இடத்தில்—ஜாக்கிரதையான பேச்சுகள் எதற்காக? பேசுவதில் ஜாக்கிரதைப்பட வேண்டிய காரணம் யாது? தம் மனத்தே மறைந்துள்ள கபடம் வெளியில் எங்கே பேச்சுச் சந்தர்ப்பத்தில் பஹிரங்கப் பிரவேசமாய்க் கொட்டப்பட்டுப் போகின்றதோ வென்ற கலவரமே யன்றி வேறென்ன? இவ்வித ஜாக்கிரதையில் உண்மையன்பின் சாரம்—சுவை—மதுரம் — ஒளி — தீர்க்கமாக — பூரணவாக—பொலிந்து விளங்குவது கூடுமோ? எனக்கு அந்தக் கபடமும் இல்லை; ஜாக்கிரதையும் வேண்டாம். இவ்விதம் ஜாக்கிரதையற்ற பேச்சு அன்பின் நிஜஸ்வரூபத்தை விளக்குவதாயிருக்க—தவறி ஏதேனும் மொழிந்த இடத்தும் மன்னிக்கற்பாலதாயிருக்க—அதற்காகவா இந்தக் கடின காவல் சிக்ஷை?—இவ்விவாகப் படுகுழி! இஃது அறமேயோ?

பெரிய மனிதர்களிடம் ஒரு வழக்கம் காணலாம். மிக்க நொந்தவர்களைப்பற்றிச் சில சமயங்களில் அநுதாபத்தோடும் பேசி அவர்கள் மனதிற்கு ஆதரவான வசனங்களும், வேறு சகாயத் தீர்மானங்களும், அவன் விவாக ரஹிதனாய் இருந்தால், அதற்கான ஏற்பாடுகள் செய்வதான காருண்ய வாக்தானங்களும் அமிர்த தாரைபோல் பொழிவார்கள். அந்தத் துயரஸ்தனின் ஹிருதயத்தை ஆறுதல் படுத்துவார்கள். அவனோ அதைச் சிலாசாஸனமாக நம்பிக்கொள்வான். எப்போதெப்போதென்று எதிர்பார்ப்பான். வீணில் அதைக் குறித்து மனோபாவனைகள் செய்துகொண்டு மகிழ்வான். பெரிய மனிதர்களோ பிறகு அந்தப் பிரஸ்தாபமே எடுப்பதில்லை. எடுப்பினும் அதற்கு நேர் எதிரிடை. அன்றைய பேச்சுகள் அன்றோடு அந்தக்ஷணமே போய்விட்ட மாதிரி தான். பிறகு அவர்கள் வேற்றுருவமாய்விடுவர். அதை நம்பி எதிர் நோக்கிய இந்தப் புண்ணாளி இறுதியில் ஏமாற வேண்டியதுதான் முடிவு. இந்த ஏமாற்றம்தான் எனக்கும் லபித்

---

90. பதிலுக்குப் பதில் காகிதத்தில் மூதாதே. சந்தித்தபோது கேள். காகித எழுத்து கண்ணைக் குத்தும். வாய்ச்சொல்சமரஸப்படுத்தும்.

தது. அன்று லவங்கலதா சிறிய பாபுவை யன்றே மணக்கிறுயா என்று கேட்டாள். சின்னபாபுவும் அதற்கு எவ்வளவோ பிரேமை யுடன் சம்மதித்தாரென்பதும் தெரியும். பிறகு எப்படியோ அந்தப் பேச்சு—வேறெந்தப் பேச்சினலோ தடைபட்டு மறைந்து விட்டது. ஒரு தக்க சந்தர்ப்பத்தில், ஒரு முக்கியமான பேச்சு அபூர்வமாய் நடந்து கொண்டிருக்கையில், உபயோகமற்ற வெறும் பாழும் பேச்சுகள் வார்த்தைகள் இடையே குறுக்கிட்டு—முந்திய முக்கியமான பிரஸ்தாபத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு—அதை மறந்து வேறொரு சம்பாஷணையில் சிந்தைசெலுத்த வைத்துவிடுகின்றது. பிறகு அந்த முக்கிய பேச்சு அத்துடன் போய்விடுகிறது. பின்பு பிரஸ்தாபத்துக்கு வருவதில்லை. இது ஒரு பெரிய சோதனை—கஷ்டம்—துரதிர்ஷ்டம்—ஸஞ்சலம்—தீராத ரோகம். விசாரம்.

சசீந்திரன் என்னை விவாகம் செய்துகொள்வதாகச் சொன்ன பிறகு, லவங்கலதா அதற்குப் பிரதி என்ன கூறுகிருள் என எதிர் பார்த்தேன். அந்த ஸமயம் ராமதாஸன் வந்தான். பேச்சும் அவ்வளவுடன் நின்றுவிட்டது. ஒரு நல்ல பேச்சு பேசிக்கொண்டிருக்கையில் எவராவது அங்குவந்து அனுவசியமான வேறு பேச்சுகளை எடுத்து அதைக் கெடுத்துக் கொலைசெய்து விடுகிறார்கள். யோசனை வேளையில் மூடங்கள் இடையே குறுக்கிட்டு உண்டுபண்ணிவிடுகிற அநர்த்தம்—அதன் நஷ்டம்— அநுபவித்தவர்களுக்கே தெரியும். சின்னபாபு ஒப்பிய பிறகு லவங்கலதா ஏன் புது ஏற்பாட்டில் தன் காலை ஊன்றிக் கொண்டாள்? கோபாலனுக்குத் தரும் பிரஸ்தாபம் வருவானேன்? சின்னபாபு சம்மதிக்காமல் போனரோ? என்ன? அல்லது சின்னபாபு சம்மதத்தில், நான் குருடி என்று லவங்கலதாவுக்கு இஷ்டமில்லாமற் போயிற்று? என்ன? இதை எப்படித் தீர்மானிப்பது? யாரைக் கேட்பது? கேட்பதும் வெட்கக் கேடு!

மறுபடியும் மனதில் இன்னொரு நாள் அவள் வீட்டுக்குச் சென்று நன்றாய்த் திட்டி வரவேண்டு மென்றும், அப்புறம் போகவே கூடாதென்றும், அவளுக்குப் புஷ்பம் கொடுக்கக் கூடாதென்றும், அவள் கொடுத்த பொருளைத் தொடக்கூடாதென்றும், தாயார் எனக்குப் பதிலாகச் சென்று புஷ்பத்தை அவளுக்கு விற்றுப் பணத்தைக் கொண்டுவந்தால், அதனுல் வரும் அன்னத்தைப் புசிக்கக் கூடாதென்றும், அதைவிட சாவதே மேலென்றும் யோசித்துக்கொண்டேன். பெரியவளாய் விட்டதால் எவனுக்காவது கட்டித் தொலைக்கிறதென்று முடிவுபடுத்தலாமா? குருடி என்று தயை காட்டாமல் என்னைக் கஷ்டப்படுத்தலாமா? லவங்கலதாவே! அதில் உனக்கு

91. அவர்கள் உன் வீடு வந்து தலைகாட்டி விட்டு உலாவப்போனதின் அருத்தமென்ன? அவர்கள் திரும்பி வரும்போது போஜனம் சித்தமாயிருக்க வேண்டு மென்பதாம்!

என்ன சுகம் என்று கேட்க நினைத்தேன். இதை யோசித்த பொழு தெல்லாம் கண்களில் ஜலம் அதிகரித்துக் கொட்ட ஆரம்பித்தது. லவங்கலதாவைப் பார்த்துச் சொல்லவேண்டியவை மறந்து போகக் கூடுமென்ற பயமும் உதித்தது. பொறியிடையுற்ற குரங்கே போல், ஒலி அலைகடல்பட்ட துரும்பே போல் நான் அயர்ந்தேன். தத்த ளிப்பில் நின்றேன். என் பிரியமான லவங்கலதா! கண்ணைக்கொண்டு நடப்பதுபோல உன்னைக்கொண்டு நடக்க நினைத்தேன். நின்னை யன்றி திக்கில்லையெனவே நித்தியமும் போற்றினேன். கிணற்றி லுள்ளதாம் நீரைப்போல நின் கிருபையது ஊறும்.

"கருணைபொழியு மேகமதனிலே, ஒரு துளியே போதும்—உன்றன்
கண்யம் பொருந்திய எண்ணிலாப் புகழ்தானும் காணுமிடம் தோறும்.

"இன்னமாகிலு மென்னை மேவி நீ இன்பமு மருளாயே—நான்
இத்தனை நாளாக மெத்தவாடினேனே; எல்லாம் நீ அறிவாயே."

அத்தியாயம்—4.

உலகத்தில் அபிமானத்தாலேயே ஸுக துக்கங்கள் பிராப் தமாகின்றன. இன்பமும் துன்பமும் நம்மனத்தின் செய்கைகளே. எத்தனை அற்ப வஸ்துவாயினும் நம்முடைய அபிமானத்துக்கு அது பாத்திரமானால் பெரிய வஸ்துவாகிறது. பெருமையும் சிறுமையும் மனிதர்கள் பா ராட்டும் தன்மையால் உண்டாகின்றன. லவங்கலதாவை நான் திரஸ்கரித்தாலும், தயாபரையான அவளிடத்து எனக்குள்ள ஆசை போகவில்லை. ஆகவே மறுபடியும் ராமதாஸன் வீட்டுக்குச் சென் றேன். பூவைக் கொண்டுபோகக் கூடாதென்று நினைத்திருந்தவள் வெறும் கையோடு போக வெட்கமாயிற்று. மேலும் போவதற்கு ஒரு காரணம் வேண்டுமே? ஒரு யுவதியைப் பார்க்க விரும்பினால் புமான்கள் வீட்டு எஜமானனைக் காணவந்தது போலவோ, வேறெ வ்விதமாகவோ ஒரு காரணத்தைக் கல்பித்துக் கொண்டுதானே அங்கு செல்கிறார்கள். இவர்கள் அங்குபோகும் தருணமும், இவர் கள் பிரேமித்துள்ள யுவதி ஏதோ காரியார்த்தமாய் ஒரு அறையி னின்றும் மற்றொரு அறைக்குப் போவதற்கு வெளிப்படுகிற சமய மும் பொருந்திச் சேர்ந்துவிட, சட்டென்று இவர்களின் முன்பு அந்த யுவதி தோன்றிக்கொள்ள, மறு நிமிஷத்தில் யுவதி மறைகி றாள். புமானுக்கும் ஆத்மதிருப்தி உண்டாகின்றது. கோரி வந்தது

92. சில நண்பர்களுக்கு மூக்கு பிடிக்கும்வரை வாங்கிக்கொடுத்தாலும் காபிகிளப்பின் வாசலைத் தாண்டும் வரைதான் விஸ்வாசம்!

பூர்த்தி பெற்றதும், அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், வீட்டிலிருப்பவர்களிடம் ஏதேனும் வீணுக்கு மேல் வார்த்தைகளாடி விட்டு, சாதாரணமாக வீட்டுக்குள் வந்ததுபோன்ற பாவனையுடனும் திரும்பி விடுகிறார்கள். இவ்வாறாக ஓரிடத்திற்குச் செல்வதற்கு ஏதேனும் ஒரு காரணத்தை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும். நான் வெறுங் கையுடன் போனால் என்ன சொல்லி உட்காருவது? எனவே, முன்போல் புஷ்பத்தைக் கொண்டுபோனேன். ஆனால் இன்று தாயாரிடம் சொல்லாமல் சென்றேன். போய் சசீந்திரனை எனக்கு ஏற்பாடு செய்து முடிக்கிறதென்ற தீர்மானத்தோடும் புறப்பட்டேன். எத்தனை பேர் தாங்கள் ஒரு காரியார்த்தம் தீர்மானித்துப்போன இடத்தில், அதற்கு எதிரிடையான பாகங்களைக் கண்டு ஏமாற்ற முற்றிருக்கிறார்கள். காரிய ஸாதனத்திற்கான இடத்துக்குப் போகும் வரையில் புதுபுது உற்சாகங்களும், தீர்மானங்களும் ஆநந்தமாய்த் தோன்றும், நவஸக்தியும் உதிக்கும். ஆனால் குறித்த ஸ்தலம் சேர்ந்த பிறகோ கவலையும், விசாரமும், ஏக்கமும், நினைத்தது கூடாமற்போன எரிச்சலும் நம்மைக் கவிந்து கொண்டு அந்தகாரத்திலிருத்தி விடுகின்றன. ஆவலோடு எதிர் பார்த்த இடத்தில்தான் எண்ணம் நிறைவேறாமல் போவதும், ஏமாறுவதும் அதிகமாயிருக்கும். இஷ்டபூர்த்தி பெற்றுவிட்டால்—அது அவர்களின் பாக்கியம்!

நான் லவங்கலதாவைத் திரஸ்காரம் செய்ய அவள் பக்கத்தில் உட்கார்ந்தேன். எதைச் சொல்லிப் பேச ஆரம்பிக்கட்டும்? ஹரி! ஹரி! எதைச் சொல்லிப் பிராரம்பம் செய்யலாம்? முகஸ்துதி செய்வதுதானெப்படி? நாலு திக்கிலும் நெருப்புப்பற்றி எரியும்பொழுது எந்தத் திக்கில் அணைக்கட்டும்? எதைச் சொல்லவும் முடியவில்லை. வார்த்தை சொல்ல முடியாமல் அழுகை வரும் போலிருக்கிறது. அந்த வேளையில் லவங்கலதையே பேச முன்வந்து, "அடி குருடீ! உனக்குக் கல்யாணம்" என்றாள். எனக்கு உடம்பெல்லாம் நெருப்பாய், "நான் செத்துச் சாம்பலானேன்" என்று சொன்னேன்.

லவங்கலதா:—ஏனடி! சிறியபாபு உனக்கு செய்து வைக்கிறான். அவனுக்கு மனைவி இருப்பதால், உன்னை இன்னொருவருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்கிறான். ஏன் கூடாது?

எனக்கு இன்னும் எரிச்சல் அதிகரித்தது. "நான் உங்களுக்கு என்ன குற்றம் செய்தேன்" என, அதற்கு லவங்கலதா கோபம் கொண்டு, "ஐயோ! எளிய பெண்ணே! உனக்குக் கல்யாணம் செய்துகொள்ள மனமில்லையோ?" என்றாள். நான் தலையாட்டிக் கொண்டு "இல்லை" என்றேன். "இல்லை" என்று நான் கூறிய

93. மனைவிக்கு அபாயம் என்று தந்தி வந்தால், அருகிலிருப்போர் மறு விவாகத்துக்குப் பெண் எங்கே யென்று அப்போதே ஆராய்கிறார்கள்!

தற்கு அர்த்தம் வேறு. அது வாசகர்களுக்குத் தெரியாதிராது. அவள் இதைக் கேட்டதும் கடுஞ்சினமுற்று, "எப்பேர்ப்பட்ட பாபிஷ்டையடி நீ! உன்னைக் கல்யாணம் செய்து கொள்பவன் எவன்"—என்றாள். நான் என்னுடைய இஷ்டமென்றேன். லவங்கலதா மனதில் நான் குலப்பிரஷ்டை யென்றும், இல்லாவிட்டால் விவாகத்துக்கு ஏன் ஸம்மதிக்கவில்லை யென்றும் நினைத்தாள் போலிருக்கிறது. அவள் கோபாக்கிராந்தையாய் "ஆகா! பெண்ணே! விவாகத்தில் இஷ்டமில்லாவிட்டால் விளக்குமாற்றால் அடித்து உன்னைத் துரத்தி விடுவேன்" என்றாள்.

நான் எழுந்தேன். என்னிரண்டு நயனங்களிலும் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. எவ்வளவோ ஆசையோடும் வந்த இடத்தில் அழுவதற்கா வந்தேன்? இந்தத் திரஸ்காரத்துக்கா வந்தேன்? என் கண்ணீரை லவங்கலதாவுக்குக் காட்டாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். வீட்டிற்குச் செல்ல மனம் கொண்டேன். புறப்பட்டு மாடிப்படியினருகே வந்தேன். லவங்கலதாவைத் திரஸ்கரிக்க யோசித்திருந்த தெல்லாம் என் வாயால் சொல்ல முடியவில்லை. இதுதான் பிரபுத்வ ஸக்திப் பிரபாவம். பிரபுத்வ ஸ்தலம் தூர இருக்கையில் எதுவானாலும் பேசச் செய்கிறது. நேரில் ஆயிரம் திட்டுதிட்ட வேண்டுமென்று மனம் தைரியப் படுகிறது. பிரபுத்வ ஸ்தலத்திற்கு வந்துவிட்டாலோ ஒன்றும் பேசவருகிறதில்லை—முடிகிறதில்லை. வாய் மௌனமாய் விடுகிறது. முன்னைய துணிவுகளெல்லாம் அஸ்தமித்து விடுகின்றன. நீதிஸ்தலத்திற்கு வெளியே ஆயிரம் அபத்த கல்பனைகளை முடிபோட்டுக்கொண்டு கூற உறுதிசெய்து கொண்டவர்கள், நீதிஸ்தலத்துக்கு வந்ததும், அங்குள்ள பிரபுத்வ ஸக்தியால், தமது கல்பனைகள் யாவையும் மறந்துபோய், துணிவின்றி யதார்த்தத்தை உள்ளது உள்ளபடிக் கொட்டிவிடுகிறார்கள். லவங்கலதாவின் பிரபுத்வ சக்தியே என்னை ஊமையாக்கியது போலும்!

நான் எழுந்து நடக்கத் தொடங்கியதும், அகஸ்மாத்தாய் எதிரே யாரோ வரும் ஸப்தம் காதிற் பட்டது. அந்தப் பாதசப்தத்தை இரண்டொருதரம் கேட்டிருந்தேன். அது இன்னாருடையது என்று என் மனதுக்குத் தெரிந்தது. அந்த சப்தம் சிறிய பாபுவினுடையதே. அவர் என் பக்கத்தில் வந்து என்னைப் பார்த்தார். பார்த்து என் கண்களிலிருந்து வரும் கண்ணீரைக் கண்டு "பிரபா! என்ன இது" என்றார். அவர் கபடமன்னியிலும் ஒளிவுமறைவின்றியும் பேசும் குணமுடையவராயினும், தாமாஷாகப் பேசுவதில் ருசியுள்ளவர்.

94. சிலர் நம்மிடமே பிரீதிப்பது; நமது பிராணனுக்குச் சமமானவர்களை, "அவர்கள் க்ஷேமமா?" என்று கூடக் கேட்பதில்லை!

எல்லாம் மறந்து போயிற்று! கோபம் போயிற்று! அவமானத்தை மறந்தேன். துக்கத்தைத் துறந்தேன்! செவியில் "பிரபா! என்ன" என்ற த்வனி சப்தம் செய்ய ஆரம்பித்தது. அந்த சொல் அமிர்த மயமாயிருந்தது. நான் உத்தரம் கூறவில்லை. மனதில் இன்னொரு தடவை அந்த வீணாகானத்வனியைக் கேட்கட்டும். நான் அதைக் கர்ணாநந்தம் செய்து கொள்ளலா மென்று சும்மா இருந்தேன்.

சிறிய பாபு "பிரபா! ஏன் அழுகிறாய்" என்றார்.

என் ஹிருதயம் ஆநந்தத்தால் நிறைந்தது. கண்ணீர் அதிகரித்தது. நான் பேசவில்லை. பேச முடியவில்லை. மறுபடியும் அவர் கேட்கட்டும். நான் எப்பேர்ப்பட்ட பாக்யவதி. சிருஷ்டி கர்த்தா என்னைக் கபோதி யாக்கினானே யன்றி செவிடாக்கவில்லை என்று சொல்லிக் கொண்டேன். அவர் என்னருகில் இருக்கும்போதுதான் என் பருவ பக்குவத்தையும், என் யௌவன விலாஸத்தையும் உணர்ந்தேன். ஒரு யுவதி தன் பக்குவத்தன்மையை—தனது ஏதிகால ஸாமீப்யத்தை—புணரப்பெறாத இளைஞரிடத்துத் தானும் தன் யுவதித் தன்மையை மறந்து, நாணமற்றுக் குலாவுகிறாள். தன் பருவ பக்குவத்தை யுணர்ந்தார் முன்னரோ, தானும் தனது யுவதித்தன்மையை யுணர்ந்தவளாய் நாணி மறைந்து கொள்கிறாள். தன்னைப் பிறர் அறிந்து கொண்ட இடத்தில் தான் தானும் தன்னை யறிந்து கொள்ள முடிகிறது. அதுபோலவே இங்கும் என் கதை. இது நிற்க, அவர் மறுபடியும் "ஏன் அழுகிறாய்? எவராயினும் ஏதாகிலும் பகர்ந்தனரா?" என வினவினார்.

நான் இந்தத் தடவை பதில் சொன்னேன். அவரோடு வார்த்தையாடும் ஸுகம் இந்த ஜன்மத்தில் கிடைத்திருக்கையில் ஏன் விடவேண்டும்? "சிறிய தாயார் திரஸ்கரித்தார்" என்றேன். சசீந்திரன் சிரித்து சின்னம்மாவின் வார்த்தையை மனதிற் கொள்ள வேண்டாம். அந்த அம்மையின் வாய் அத்தகையது. ஆனால் அந்த உத்தமியின் மனம் வெகு நல்லது. எதையும் அவர் மனதில் வைப்பதில்லை. நீ என்னோடு வா; உடனே பேசுவார்" என்றார்.

அவரோடு ஏன் போகக்கூடாது? அவரே வலிய அழைத்தால் எனக்குக் கோபம் நிலைக்குமா? நான் எழுந்தேன். அவரோடு சென்றேன். அவர் படியேற ஆரம்பித்தார். நானும் அவர் பின்பாக ஏறினேன். அவர் கருணையுடனும் "நீ பார்க்கமாட்டாய், படியேற மாட்டாய், நான் கை பிடித்தழைத்துப் போகிறே னென்றார்.

---

95. நீ நாக்கின் நுனியால் மூக்கைத் தொட முடியுமா? எங்கே பார்ப்போம்.

என் சரீரம் ஸ்தம்பிதமாயிற்று. ஸர்வாங்கங்களிலும் ரோமாஞ்சிதமாயிற்று. (மயிர்க்கூச்செறிந்தது) அவர் என் கைகளைப் பிடித்துக்கொண்டார். பிடிக்கக் கூடாதுதான். இன்னும் விவாக மில்லாத 19-வயதுள்ள ஒரு யுவதியை ஒரு யுவாபுருஷன் கைப்பற்றலாமா? ஜனங்கள் வம்பளப்பார்கள். நிந்திப்பார்கள். நிந்தித்தால் நிந்திக்கட்டும். என் நாரீஜன்மம் இவ்வகையிலேனும் ஸார்த்தகமாகட்டும். நான் அய்யரின் ஸகாயமில்லாமல் கல்கத்தாவில் சந்து சந்தாய் நடமாடுவேன். சிறிய பாபு இதை யறிபார் போலும். என் பிரேமமாணிக்கமாகிய சின்னபாபுவை என்னவென்று சொல்லட்டும்? எந்தப் பெயரிட்டழைக்கட்டும்? ஸரியான வார்த்தையே அகப்படவில்லை. அவர் என் கையைப் பிடித்துக் கொண்டார். மாங்கல்ய தாரணமான பின்பு பெண்ணின் கையைப் பிடிப்பதுபோல—அது இருந்தது. அவ்விதம் நினைத்துக் கொண்டு நான் சுகியானேன். புமான்கள் தாங்கள் பிரேமித்த அங்கனைகளின் ஹஸ்தமேனும், வஸ்திரமேனும் ஏதோ அவசரச் சார்பில் தங்கள் மீது அப்படிப் பட்டு விட்டால் எத்தனைப்பரவசங் கொண்டுவிடுகிறார்கள்! யோசிக்க.

அருணோதயத்தில் பத்மம் மலர்ந்து அதன் இதழ்கள் என் கையைச் சுற்றிக் கொண்டனவோ, அல்லது ரோஜா புஷ்பங்களை மாலைகட்டி யாராவது என் கைக்குச் சுற்றினார்களோ வென்று தோன்றியது. எனக்கு வேறொன்றும் நினைவுக்கு வரவில்லை. அவர் மாடிக்குச் சென்றதும் என்னை விட்டுப் பிரிந்து போவாரல்லவா வென்று நினைத்த பொழுது, மனதில் இந்தப் பிராணன் ஏன் இன்னமும் வெளிப்படவில்லை யென்று தோன்றியது. கரைந்து ஜலமாய் அவரோடு நான் சேர்ந்து போகக்கூடாதா வென்று இஷ்டமும் ஜனித்தது. சசிந்திரனும் நானும் இரண்டு பூக்களாய் ஒரு வருக்கொருவர் இவ்விதமாய் ஒட்டிக்கொண்டு, ஒரே விருக்ஷக்கிளையில் தொங்கக்கூடாதா? என்ற ஆசை யுதித்தது. இன்னும் அநேக ஆசைகள் ஜனித்தன. நினைவில்லை. கனவு கண்டவர்கள் எப்படி ஸ்வப்பன விஷயங்களைக் கோர்வையாய்ச் சொல்லமுடியாயல், அதற்குள் இடையே பல விஷயங்களை மறந்து போவதுபோல நானும் ஆனேன். படியேறினதும் சிறிய பாபு கைவிட்டார். அப்பொழுது பெருமூச் செறிந்தேன். பிராப்தம் இவ்வளவு தானா என்ற வியஸனத்தில் ஆழ்ந்தேன். மறுபடி பிரபஞ்ச ஞான முண்டாயிற்று.

(அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்—.—)

---

96. மனிதரைத் துரிதத்தில் கள்ள நினைவினராக்கும் ஆற்றல், பொன்னைவிட அழகிய மங்கையர்க்கே அதிக முண்டு. (ஷேக்ஸ்பியர்)

பிரஜாநுகூலன்.

அபூர்வ அநுபவங்கள் அடங்கிய மாதப் பத்திரிகை.

கமலம்-18	திருச்சி: நவம்பர்மீ 1922	இதழ் - 8

பிரேமப் பிரபா

பிராணேச்வரா! என் ஹஸ்தங்களைப் பற்றி நீ என்னைப் பாணிக்கிரகணம் செய்தாய். நீ என்னைக் கிரகித்தால் கிரகி. இல்லாவிட்டால் விடு. நீயே எனக்கு ஸ்வாமி. நானே உனக்குப் பத்தினி. இந்த ஜன்மத்தில் அந்தகையான பூவாணிச்சிக்கு வேறு யாரும் ஸ்வாமி யாகார்" என்று மனதில் சொல்லிக் கொண்டேன்.

சின்னபாபு சிற்றன்னையிடம் வந்து, "பிரபாவுக்கு நீ என்ன சொன்னாய்? எதைக் கேட்டு அவள் அழுகிறாள்?" என்றும் வினவினார். லவங்கலதா என்னைக் கண்டு விபந்து என்னுடன், நல்ல வார்த்தைகளாடிப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, நடந்த வார்த்தைகளையெல்லாம் பிறகு கூறுவதாய் சின்ன பாபுவுக்குப் புகன்றார். பாபு சிற்றன்னை பிரஸன்னமா யிருப்பதைக் கண்டு, என்னை விட்டு விட்டுத் தன் காரியார்த்தமாய் வெளியிற் சென்றார். பிறகு சிறிது நேரத்திற்குப் பின் நானும் விடைபெற்று வீட்டிற்கு வந்தேன். வீட்டைவிட்டுப் போகும் பொழுது எத்தனையோ தீர்மானங்களோடும் யோசனைகளோடும் சென்றேன். ஆனால், திரும்புகையிலோ எந்தத் தீர்மானமும் ஸாதக மாகாமல் வாடியவளாய் இல்லம் சேர்ந்தேன். இதுவே பிரபஞ்ச நியதி—பலரது அநுபவம்.

இப்பால் கோபாலனுக்குக் கொடுத்து என் விவாகத்தை நடத்தும் பிரயத்தனம் ஆரம்பமாயிற்று. நானென்ன செய்வேன்? பூ கட்டுவதை விட்டு விட்டு, இக்கல்யாணத்தை எப்படி நிறுத்தக் கூடுமென்று யோசிக்கலானேன். இந்த விவாகத்தில் தாயாருக்கு ஆநந்தம்; தந்தைக்கு உத்ஸாகம்; யாவும் லவங்கலதாவின் பிரயத்தனம். சிறியபாபு அதில் முக்கியஸ்தர். பலமான கூட்டத்துடன் ஏற்பாடுகள் நடக்கின்றன. அனைவருக்கும் ஏக சிந்தை—ஒற்றுமை. நானோ ஒரு குருடி. இதை எப்படி நிவர்த்திப்பேன்? வீட்டார் பார்த்த இடத்தில், அவர்கள் நியமித்த ஆடவனிடம்—

97. "ஸ்திரீகளை அலக்ஷியம் செய்வதுதான் காட்டுமனிதர்களின் முதல் நியாயம்." H. Devere Stacpole.

அவன் விருந்தாப்பியனுயினும் அவனிடம்—தன் கற்பையும்மானத்தையும் ஸமர்ப்பித்துவிடவேண்டுமென்பது இந்தியப் பெண்களின் தலையில் எழுதிய விதி. இதற்கு நான் எப்படித் தப்பமுடியும்? எந்த உபாயமும் தோன்றவில்லை. இந்த விசாரத்தில் நான் பூ கட்டுவதும் நின்று போயிற்று. தாய் தந்தையர்கள் நான் விவாக ஆநந்தத்தால் நிறுத்திவிட்டதாகக் கருதிக்கொண்டனர். அவர்களுக்கு என் சங்கதி என்ன தெரியும்?

என்ன தான் பெற்ற அன்னையாயிருப்பினும், ஈன்ற தந்தையாயிருப்பினும், தன் மனோ விகாரங்களையும், காதல் நிகழ்ச்சிகளையும் அவர்களிடம் சொல்லிக்கொள்ள முடியுமா? அதை விடப் பிராணனை இழப்பது மேல். சொல்வதற்குத்தான் மனது சம்மதிக்குமா? மேலும் எவ்வளவு லஜ்ஜை? எத்தனை மானக்கேடு? அந்த விஷயங்களையெல்லாம் தன் பிரேம பக்தியினிடம்—காதலனிடம் சுலபமாய் வெளியிட்டுக் கலந்து கொள்ளக்கூடுமேயன்றி இவர்களிடம் சாத்தியமா? ஒரு பெண்ணைக் குறித்து அவளுடைய சகல விஷயங்களும் தாங்கள் அறிந்தே வைத்திருப்பதாய்ப் பெற்றோர்கள் நினைத்துக் கொள்கின்றனர். அவர்கள் அறிந்ததைவிட அதிகமான விஷயங்களை—அந்தரங்கங்களை—அப்பெண்ணைக் காதலிக்கும் காதலன் நன்குணர்ந்திருப்பான். அக்காதலனுக்கு அவளைக் குறித்துத் தெரிந்த சங்கதிகளத்தனை அவளுடைய பெற்றோர்களுக்குத் தெரியாது. தெரிவிக்கவும் முடியாத மர்மங்களாகுமிவைகள். இந்த நிலைமையில் என்னிடத்திலிருந்து என்ன அறியப் போகிறார்கள்?

• சாந்தியும் ஆநந்தமுமே பிரேமையின் வடிவமாகும். ஒரு கொலையாளி தன் குழந்தையை முத்தமிடும் பொழுது, குழந்தையின் மேலிருக்கும் அன்பைத் தவிர மற்றெல்லாவற்றையும் அத்தருணத்தில் மறந்து விடுகிறான். ஒரு கொலையாளியைக் கூடப் பிரேமையானது ஸன்மார்க்கப் படுத்தி, அந்த சமயம் அவனது சிந்தை வேறெதனையும் பற்றாதிருக்கச் செய்து விடுகின்றது. பிரேம பாசத்தில் வீழ்வோரிடம் தான் கடவுள் அதிகமாக விளையாடுகின்றார். இங்கு விளையாடுகின்றா ரென்பதற்கு—சோதனை காட்டுகின்றார்—என்பது பொருள். இன்னமும் என் வாழ்வில் சோதனையா? இது நீதியா?

காதல் வெள்ளம்

எண்ணகத்தே நின்று இலங்கிடுமென் "நாதனை" நான்
கண்ணகத்தே கண்டு களிக்கு நாளெந்நாளோ ! (1)

98. "எச்சாதியினருள்ளும், ஜனஸமூகத்தில் ஸ்திரீகள் வகிக்கும் ஸ்தானமே, அச்சாதியாரின் நாகரீகத்தை அளக்கும் கருவி." Sir G. Robertson

உள்ளத்தே வந்து வந்து ஒற்றரைப்போல் நின்றேகும்
"கள்ளத்தை"க் கண்ணிணைகள் காணுநா ளேங்நாளோ! (2)

நித்திரையில் ஆதரவாய் நேரிழையார்க் கின்புதவும்
"எத்தனை"—நான் காண இசையுநா ளேங்நாளோ! (3)

பாய்புனலில் ஓடம் விட்டுப் பக்கத்தே நாமிருந்து
வாய்விட்டுப் பாடி மகிழுநாளேங் நாளோ! (4)

ஆசைமலர்கள் அழகழகாய் நானெடுத்துப்
பாசமுடன் சூடிப் பருகு நாளேங் நாளோ! (5)

கண்ணாலே வாய்மடுத்துக் "கட்டழகன்" மெய்வடிவை
எண்ணாலே மென்று இனிக்கு நாளேங்நாளோ! (6)

வேமிரதத் தீஞ்சுவையே விஞ்சிய சிந்தாமணியை
நாமிருந்து பாடி ரஸிக்கு நாளேங்நாளோ! (7)

அத்தியாயம்—6

மாரிகாலம். ஊசி நுழைவதற்குக்கூட இடமில்லாமல் இருள் கவ்வி நின்றது. ஆகாயத்தில் மேகங்கள் விடாது கர்ஜித்துக் கொண்டிருந்தன. பத்தரை மாற்றுத் தங்கம்போல் பளபளப்பாய்ப் பிரகாசிக்கும் மின்னல்! மழை ஓயாது பொழிகின்றமையால் எவரும் வெளிச்செல்லக்கூடவில்லை. கெடிகாரத்தின் இரு முட்களும் ஸதிபதிகள் போன்று தாமும் ஒன்று சேர்ந்தன. அதாவது மணி இரவு பன்னிரண்டாயிற்று. நீண்ட விழிகளையுடைய நாயகி குளிராலுண்டான நடுக்கலைத் தீர்ப்பதற்காகத் தன் நாயகனை—மனோகரனை—இறுகத் தழுவிக்கொள்கிறாள். சீதளமான நீர்த்திவலைகளால் குளிர்ந்ததும், இன்ப நுகர்ச்சியி னிறுதியில் உண்டான சிரமத்தைப் போக்குகின்றதும், கூந்தலால் மறைபட்ட பருவயுவதிகளின் கன்னப் பிரதேசத்தை முத்தமிடுகின்றதும், கேசங்களைப் பிரிக்கின்றதும், மயிர்க்கூச்சலையுண்டாக்குகின்றதும், உதடுகளை அடிக்கடி பீடிக்கின்றதுமான காற்று வெகு வேகமாய் வீசி, மனைவிகளிடம் கணவன்போல் நடந்துகொண்டிருந்தது. குங்குமப்பூவின் குழம்பால் பூசப்பட்ட சரீரங்களையுடையவர்களும், பலவிதமான கேளீவிலாஸங்களால் சிரமமடைந்தவர்களும், ரமணிகளால் தழுவிக்கொள்ளப்பட்டவர்களும், வெற்றி

99. "ஸ்திரீகள் மனம் வருந்தாமல் புருஷர் எச்சரிக்கை பெறுக. ஏனெனில், கடவுள் ஸ்திரீகள் விடும் கண்ணீரைக் கணக்கிடுகிறார்."

லைப் பாக்குகளால் சிவந்த பவளவாயினை யுடையவர்களுமான பாக்கிய ஸம்பன்னர்கள் காதல் வெள்ளத்தில் நீந்தி எழுந்து, ஜெகன் மோஹினிகளான சுந்தரிகளுடன் இன்பமாய்த் தூங்கிக்கொண்டிருந்தனர்.

கவலை வாய்ப்பட்ட என் போன்றவர்க்கு இந்த ஆநந்தத் துயில் ஏது? காதல் வெள்ளத்தில் கரை காண்கை ஏது? இரவு வெகு நேரமளவும் விழித்தபடி நின்று யோசித்துக் கொண்டிருந்தேன். நான் இனிச் செய்யவேண்டியதென்ன? நான் மனச்சோர்வு அடையக் கூடாது. என்னுடைய ஸக்தியில் அதிகமாக நம்பிக்கை வைத்து, அதிக உற்சாகத்துடன் வேலை செய்யவேண்டும். யோக்கியமான வேலை எது செய்வதிலும் அவமான மொன்றுமில்லை. மனுஷ்ய முயற்சியினால் அதைச் செய்ய சாத்தியமில்லாம லிருக்கலாம். ஆனால் கடவுள் எதையும் செய்து முடிக்கவல்லவர். உண்மையான தியாகத்தையே பகவான் விரும்புகிறார். நமது ரத்தத்தில் துவேசப் பூச்சிக ளிருக்கலாகாது. எவரிடத்திலும் சிநேக பாவமாய் இருக்க வேண்டும். அதுவே வெற்றிக்கு வழி. சித்தியடைய மார்க்கம். உத்தமோத்தமமான பாதை. கடவுளின் நியாயஸ்தலம் அவரவர் மனதிலேயே இருக்கிறது. ("The Court of God is in their Mind") கடவுள் என் ஹிருதயத்தில் குடிகொண்டிருப்பதாக நான் நம்பினால், வெளிப்படையான இடையூறுகள் என்னை எவ்விதம் துன்புறுத்தக் கூடும்?

ஈச்வரன் எனக்கொரு வழியைக் காண்பித்தான். கோபால பாபுவுக்கு முதல் மனைவி இருக்கிறாளென்று சொன்னே னல்லவா? அவள் பெயர் ரம்பா. அவள் இந்த விவாகத்துக்கு ஒப்பமாட்டாள். அவள் மகா கெட்டிக்காரி. தனக்கு சக்களத்தி வாராதபடி உபாயம் செய்ய வேண்டியதைக் கொஞ்சமும் அவள் மறந்துபோகவில்லை. ஒரு மனுஷ்யனுடைய தன்மையை யறிய அவனுடைய் குணாதிசயங்களே குறிக்காக நிற்கின்றன.

ஹீராலால் என்பவன் அவளுக்குத் தம்பியாகவேண்டும். அவளைவிட ஒன்றரை வயது சிறியவன். ஹீராலால் மத்யபானம் செய்வான். அதுவும் கொஞ்சமல்ல. எவர் இலவசமாக வாங்கிக் கொடுக்கிறார்களோ அவர்களுடைய தாஸனாய் விடுவான். அவர்கள் இஷ்டப்படியெல்லாம் நடப்பான். நல்லவர்களுக்கு நல்லவன். மூர்க்கர்களுக்கு மூர்க்கன். கஞ்சா கூட உபயோகிக்கிறானென்று கேட்டிருந்தேன். அவன் தகப்பன் வாசிக்கக் கற்றுக்கொடுக்கவில்லை. நிரக்ஷரகுக்ஷி. எவ்வேளையிலும் என்னிடம் வருவான். நான் சொல்லுகிறபடியெல்லாம் ஆடிக்கொண்டிருந்து, ஏதேனும் ஒரு சிறிய

100. "நோயாளியான அரசனிலும், திடசரீரியான சக்கிலியனே மேல்." Bickerstroff.

பூமாலையை இலவசமாகப் பெற்றுச் செல்வான். அதை விற்று உடனே மத்யபானம் செய்துவிடுவான். இது அவனுடைய நித்யப் பிரவர்த்தி. அவனை வசமாக்கிக் கொள்வது சுலபம். என் மனதில் நானா விதமான எண்ணங்கள்—யோசனைகள் தோன்றின.

ஹீராலாலும் வந்தான். மிக்க ஆதரவாக அவனை நடத்தினேன். அதில் அவன் மயங்கினான். கொஞ்சம் கஞ்சா இலையும் வாங்கி வைத்திருந்து அதை அவனுக்குக் கொடுத்தேன். அபரிமிதமாய்ச் சந்தோஷித்தான். உன் தமக்கைப் புருஷனுக்கு மற்றொரு விவாகமாமே என்றேன். "ஆம் உன்னைத்தான் ஏற்பாடு செய்திருக்கிறது, இனி எனக்கு என்ன குறைவு?" என்றான். "அப்படியல்ல. எனக்கு இந்த விவாகத்தில் சிந்தையில்லை. இதை நீ நிறுத்திவிடப் பார்த்தால் உனக்கு வேண்டியது தருகிறேன்" என்றேன். அவன் ஆச்சரியப்பட்டான். "உன் அக்காளிடம் உனக்கு ஒரு சக்களத்தி வரப் பார்த்துக்கொண்டிராதே யென்று கலக மூட்டிவிடு; நீயும் கல்யாணத்தைத் தடைசெய்யப் பிரயத்தனம் இயற்று; இந்த உபகாரம் வீண்போகாது" என்றேன். அதற்கு அவனும் பூரிப்புடன் இசைந்தான். வேண்டிய பூமாலைகளை அவனுக்குக் கொடுத்தேன். கையில் பத்து ரூபாயும் தந்தனுப்பினேன். ஏதோ பெரிய காரியம் செய்துவிட்டதுபோல் பரவசமானேன். வக்கீல் வீட்டுக்குப்போய் விட்டு வந்த மாத்திரத்தில் தங்கள் வியாஜ்யம் ஜெயித்துவிட்டதுபோல நினைத்துக்கொள்வோர் எத்தனை பேர்! ஒரு பெண்ணைப்பற்றி விசாரிப்பதாகச் சொன்ன மாத்திரத்தில்—அப்படி ஒரு கடிதம் தபாலில் வந்த மாத்திரத்தில்—தக்ஷணமே அவள் தனக்கு மனைவியாய் விட்டதுபோல் மதிமயக்கம் கொள்வோர் எத்தனை பேர்! அதற்கான ஸ்வப்பனங்கள் காண்பவர் எத்துணை ஆயிரவர்?

இந்தப் பிரயத்தனத்துக்குப் பின்பு மறுநாள் லவங்கலதா வீட்டிற்குச் சென்றேன். அவளிடம் போகவில்லை. சின்ன பாபுவின் பத்தினியான ஸரோஜினி தேவியிடம் போனேன். அவள் மிக்க அன்புடனும் உபசரித்தாள். "பிரபா! உனக்கு விவாகம்; ஸந்தோஷமாயிரு" என்றாள். நான் "விவாகத்தில் மண் விழுந்தது" என்றேன். இது உப அர்த்தம். இருவிதமான் தொனி. அவள் மிக்க துயரங்கொண்டு "ஏன்" என்று கேட்டாள். "ஸரோஜினி! நீ எனக்கு ஒரு ஸகாயம் செய்வாயா? இந்தக் குருடியின் நிர்ணயத்தை (தீர்மானத்தை) நிறைவேற்றுவிப்பாயா?" என்றேன். இவ்விதம் சொல்லும்பொழுது என்னை அறியாமலே கண்களிலிருந்து ஜலம் பெருகிவிட்டது. ஸரோஜினி மிகு பிரேமையுடனும் அதைத் துடைத்தாள். "என்ன வானாலும், என் பிராணனைக் கொடுத்தா

---

101. ஹிருதயம் ஒன்றாக வேண்டுமே தவிர, வார்த்தைகள் மூலம் ஒன்றாகிவிட்டதென்று சொல்வதிற் பயனில்லை.

கிலும் செய்கிறேன் — ரக்ஷிக்கிறேன்"—என்று விரசபதம் புரிந்தாள். "என் தங்காய்! நானே குருடி. எனக்கு இந்த ஜென்மத்தில் வெளிச்சமில்லை. புவன சுகங்களுமில்லை. என் ஜீவனம் அந்தகார மயம்; திருஷ்டி யற்றவள். எல்லாம் இருந்தும் நேத்திரங்கள் இல்லையானல் என்ன பிரயோஜனம்? பிள்ளையில்லாத பாக்கியம்போல் தான். எனக்கு இந்த ஜன்மத்தில் எவ்வித திருப்தியு மில்லை. இவ்வித திருப்தியற்றவளுக்கு, மனதிரங்கி ஒரு வஸ்துவைப் பாலிக்கக் கூடுமானல், என் ஜீவயாத்திரையில் மீண்டும் நேத்திரங்கள் பெற்றவள் போலாவேன். ஏதோ இந்தக் குருடிக்கு அதைப் பூரணம் செய்வித்து, திருப்தியற்ற இந்த ஜன்மத்தில், இவ்வகையாக அவளைப் பரிபூரண திருப்தியுறச் செய்து மகிழ்விக்க லாகாதா? நான் ஆசைப்பட்ட வஸ்துவை எனக்குக் கொடுத்து ரக்ஷிக்கக் கூடாதா?" என்றேன். மறுபடியும் கண்களில் அபாரமாய் ஜலம் தோன்றியது. ஸரோஜினி அதைத் துடைத்துக்கொண்டே, "அக்கா! வாய்விட்டுச் சொல்லு, விழுங்கி விழுங்கிப் பேசாதே. அந்த வஸ்துவினல் உன் ஜீவிதகாலம் மனே சாந்தி யடையுமானல் அதற்கு நான் ஸர்வ பிரயத்தனங்களும் செய்வேன்" என்றாள். நான் "உனக்குக் கோபமுண்டாகாதல்லவா?" என்றேன். "என் பிராணனைக் கேட்கிறுயா? இந்தா பெற்றுக்கொள்" என்றாள். "என் தங்காய்! உன் பதியையே நான் பிரேமித்தேன். அவரையே என் ஸ்வாமியாகத் தியானித்து என் ஹிருதயத்துள் வைத்தும் பூஜித்து வருகிறேன். ஏதோ அவரிடம் பூர்வ ஜென்மபந்தத்தால் பிரேமைப்பட்டு விட்டேன். இனி வேறிடத்தில் என் சிந்தை செல்லாது. கோபால பாபுவை நான் மணக்கமுடியாது. அவசியம் பிராணத்யாகம் செய்து கொள்வேன். நிச்சய மிது" என்றேன். "அக்கா! அதையா கேட்கிறுய்? என் ஜீவ ரக்ஷையையா கேட்கிறுய்? அது என் சொந்தமான பொருள் தான். ஆநந்தத்தோடும் தரத் தயார். இந்தா பெற்றுக்கொள். ஆனல் அது என் இஷ்டத்திலில்லை. பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுக்கும் பொருளல்ல, தனராசியல்ல. மற்றவர்களின் ஸம்மதமும் வேண்டும். மாமியார்களான புவனேச்வரி, லவங்கலதா இவர்களெல்லாம் இணங்கி வரவேண்டும். பெரிய காரியம். தீர்மானமாகச் சொல்லமுடியாது. என்னைப் பற்றிய விஷயத்தில் நான் உறுதிகொடுக்கத் தயார். மணமாய்விட்டால் உனக்கு இன்னும் ஒரு அன்பான தங்கைபோல் நடந்து கொள்வேன். நீ திருஷ்டி யில்லாதவள். உனக்கு எது செய்தாலும் அது எனக்குப் பெரும் புண்ணியம். ஏழைக்குத் தான் எதுவும் செய்யவேண்டும். என்னல் ஆனவரையும் இந்த நிமிஷ முதல் செய்கிறேன். ஈச்வர சங்கல்பம் எவ்விதமோ?

---

102. வாங்கிய கடனைக் கொடாவிட்டால், எந்த நட்பும் உறவும் பிரிந்து போம். எல்லாம் பணத்தில்—காணயத்தில் உளது.

உனக்கு எந்த இடத்தில் முடிவோ? ஆனாலும் தைரியத்தை விடா திரு. நீ எனக்கு சக்களத்தியாக வருவதில் எனக்குக் கொஞ்சமும் வருத்தமில்லை. பரிபூரணானந்தமே. பகவான் உன் ஸங்கல்பத்தைத் நிறைவேற்றி வைக்கட்டும்" என்றாள். ஸரோஜினியின் கர்ணாமிர்த மான பாஷிதங்களைக் கேட்டு இப்படியும் ஒரு பெண் உண்டா? என்று அதிசயித்தேன். அப்போதே விவாகம் முடிந்ததுபோல் ஆநந்திதையானேன். ஸந்தோஷத்துடன் விடை பெற்று இல்லம் சேர்ந்தேன். லவங்கலதாவைப் பார்க்கவில்லை. பார்க்கவும் மன மில்லை. மனமில்லாத காரியத்தில் பிரவர்த்தி—பிரியம்—ஏது? சில தினங்களும் கழிந்தன. ஒன்றும் முடிவு தெரியவில்லை. ஸரோ ஜினி, ஹீராலால் இவர்களின் பிரயத்தனங்கள் யாதாயிற்றோ? அந்த காரத்தில் இருந்தேன். கேவலம் மனிதன் தன்னால் எதுவும் ஆகக் கூடியதென்று நினைத்து விடுகின்றான். ஏதோ ஒன்றிரண்டு சித்திப் பதில் அகங்காரத்வம் உண்டாகின்றது. மனிதன் செய்ய முடியாத வைகள் அநந்தம்.

1. காற்று லடிக்கப்பட்டுச் சிதைந்து போன சிலந்தியின் கூட்டை முன்னிருந்த நிலைமையில் வைக்க உன்னால் முடியுமா?

2. கிளையிலிருந்து விழுந்த பழத்தைப் பழையபடி மரத்தில் ஒட்டவைக்க உன்னால் முடியுமா?

3. தாமரை மலரிலிருந்து விழுந்த அதன் இதழை அதனிடத் தில் மறுபடியும் வைத்து வளரச்செய்ய உன்னால் முடியுமா?

4. நீ பதட்டமாய் நசுக்கிவிட்ட வண்டின் இறக்கையை அத னிடத்தில் ஒட்டச் செய்ய உன்னால் முடியுமா?

5 வற்றிப்போன திராக்ஷைப் பழத்திற்கு ரஸம் உண்டாக்கி, அதை அதன் கொடியில் ஒட்டிக்கொள்ளச் செய்ய உன்னால் முடி யுமா?

6. உலர்ந்துபோன பனித்துளியைப் புஷ்பங்களின் மீது மறு படியும் வைத்துப் பிரகாசிக்கச் செய்ய உன்னால் முடியுமா?

7. ரோஜாவிலிருந்து விழுந்த இதழ்களை அதில் மறுபடியும் ஒட்டிக்கொள்ளச் செய்ய உன்னால் முடியுமா?

8. மாவை அரிசியாக்கி அதை உமிக்குள் வைத்துப் பழைய படி அதை நெல்லாய்ச் செய்ய உன்னால் முடியுமா? அப்படி நீ செய் தாலும் அந்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது முளைக்குமா?

9. உடைந்த முட்டையை அதன் பூர்வ ஸ்திதிக்குக் கொண்டு வர முடியுமா?

---

103. இன்று நமது காரியத்துக்கு அநுகூலமாய்ப் பேசியவர்கள், நாளை "எங்கே எனக்கு சவுகரியமில்லை" என்று கூறிக் கைவிடினும் விடுவர்.

10. மெழுகிலிருந்து பிழிந்தெடுத்த தேனை மறுபடியும் மெழுகில் வைத்துத் தேன்கூட்டை முன்னிருந்த உருவத்தில் அமைக்க உன்னால் முடியுமா?

11. என் கேள்விகளெல்லாம் அற்பமானவை யென்று நீ நினைக்கலாம். இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்கின்றேன்.

12. ஆத்திரத்தோடு உன் வாயைவிட்டு வெளியே வந்த ஒரு வார்த்தையை நீ அழிக்க முடியுமா?

13. உன் ஆத்திரத்தில் ஏமாற்றத்தில்—நீ இழந்து விட்ட கற்பை மறுபடியும் பெறமுடியுமா?

14. கோபத்தினால் செய்த ஒரு கோரமான கிரியையை உன்னால் அழிக்க முடியுமா?

நன்னடக்கை அல்லது நேர்மையினும் மேலான தர்மம் ஒன்றுமில்லை. அணுவளவும் பிசகாமல் நன்னெறியில் நிற்பவருக்கு உண்டாகும் ஆநந்தம், அவ்வழி விலகி நடப்பவர்களுக்கு ஒரு பொழுதும் உண்டாகாது. கொண்ட காதலினின்றும் பிறழாதிருக்கையே நன்னடத்தையாம். மனுஷ்ய எத்தனம் ஒரு சிறு துரும்பு; தெய்வ யத்தினத்தாலேயே துரும்பு தூணாக வேண்டும். தூணானால் தான் ஒரு வீட்டின் மேல் தளபாரத்தை அது தாங்க—சுமக்க—முடியும்.

விவாகம் ஸமீபித்தது. ஒருநாள் இருக்கிறது. உபாயமில்லை. மீட்சியில்லை. நாலா பக்கத்திலும் பொங்கிவரும் ஜலராசி கர்ஜித்துக் கொண்டுவருகிறது. நிச்சயமாய் முழுகிப் போவேன்.

அப்பொழுது லஜ்ஜைக்குத் தர்ப்பணம் விட்டுத் தாயின் பாதங்களின் மேல் விழுந்து அழ ஆரம்பித்தேன். கைகூப்பிக்கொண்டு எனக்குக் கல்யாணம் வேண்டாம். நான் இப்படியே கிழவியாகிறேனென்றேன். தாயார் ஆச்சரியத்துடன் எதற்காக வென்று கேட்டார். "எதற்காக"—வென்பதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. கைகூப்பிக்கொண்டழுதேன். கடைசியாகத் தந்தைக்குச் சொல்லிவிட்டார். தகப்பனார் வைது அடிக்கவந்தார். முதலில் அடிக்கிற பாத்தியதை தந்தைக்கு இருக்கிறது—பிறகே கணவனுக்கு போலும்! ஆனால் என் தந்தை இதுகாறும் என்னை அடித்ததில்லை. எதையும் நான் சொல்ல முடியாதவளானேன்.

உபாயமில்லை! விமோசனமில்லை! முழுகிவிடுவேன்!! அன்று சாயங்கிரம் வீட்டில் நான் ஒருத்தியே இருந்தேன். தகப்பனார் கல்யாணச் செலவுக்காகப் பணம் தேடப் போயிருந்தார். தாயார் சாமான்களை வாங்கச் சென்றிருந்தார். அந்த வேளையில் சிறுவ

---

104. ஒருவன் உன்வேலைக்குக்கோணல் சொல்லுகையில் அந்த சமயம் உன் வேறு எந்த வேலையையும் கூறாதே. அதையும் கோணலாக்கி விடுவன்.

ஞன வாமாசரணனும் நானும் வெறும் கதவை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தோம் யாரோ ஒருவர் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தார். யாரம்மா என்று கேட்டேன்.

உத்தரம்:—"உன் எமன்."

வார்த்தை ஏதோ கோப யுக்தமாயிருந்தது. ஆனால் குரல் ஸ்திரீயினுடையது போலிருந்தது. நான் பயப்படவில்லை. சிரித்து "என் எமன் யார் இருக்கிறான்? அப்படி இருந்தானானால் இத்தனை நாள் எங்கிருந்தான்?" என்றேன்.

ஸ்திரீக்குக் கோபம் சாந்தமாகவில்லை. அவள்—இப்பொழுது கண்டிப்பாய் அறிவாய். பெரிய விவாகக் கூப்பாடு. கெட்ட முக முடையவளே! துர்ப்பாக்கியவதியே! என்று வைய ஆரம்பித்தாள். அவள் தூஷணை முடிந்ததும், அந்த மதுரபாஷிணி "பாவி! குருடி! என் புருஷனுக்கு நீ கல்யாணமாய் என்றைய தினம் என் வீட்டிற்கு வருவாயோ, அன்றைய தினமே உனக்கு விஷத்தைக் கொடுத்துக் கொல்லுகிறே" னென்றாள். இப்படி அவள் இங்குமட்டும் சொல்லவில்லை. லவங்கலதா முதல் யாவரிடத்திலும் கூறிக் கர்ஜித்து விட்டே கடைசியில் என்னிடம் வந்தவளென்று பிறகு தெரிந்தது.

வந்த ஸ்திரீ யார்? அவள் தான் ரம்பா. கோபால பாபுவின் மனைவி. அடங்காப் பிடாரி. யாரும் அவள் வாய்க்குப் பயப்படுவார்கள். சொல்வது போலவே செய்தும் விடுவாள்: துணிந்தவள். மூர்க்க ஸ்வபாவம் அவள் ஜென்மத்தோடு பிறந்தது. வந்தவள் ரம்பா என்று தெரிந்துகொண்டபின் "உட்காரம்மா" என்றேன். இவ்விதம் கூறிவிட்டு, "கேளம்மா; உன்னோடு பேசவேண்டியது அநேகம் உண்" டென்றேன். அவள் ஆத்திரம் தணிந்து சீதளமாய் உட்கார்ந்தாள்.

நான்:—கேளம்மா தாயே! என்னுடைய இந்த விவாகத்தில் நீ எத்தனை விரக்தியாய் இருக்கிறாயோ, நானும் அத்தனை விரக்தியுள்ளவளாகத்தா னிருக்கிறேன். இது நடவாமல் இருப்பதற்கு என்ன பிரயத்தனங்களுண்டோ அதை நீயும் செய். நானும் செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால் கேவலம் குருடியால் என்ன ஆகும்? எதனால் இந்த விவாகம் நின்று போய்விடும்? அதைச் சொல்வாயா?

ரம்பா வியப்புற்றவளாய்—"அப்படியானால் உன் தாய் தகப்பனிடம் ஏன் சொல்லக்கூடாது?" என்றாள்.

நான்:—ஆயிரம் தடவை சொன்னேன், ஒன்றுமாகவில்லை.

ரம்பா:—லவங்கலதாவிடம் சொல்லிக் காலைப் பிடித்துக்கொள்ளக்கூடாதா?

---

105. ஒரு எளிய வேலையாள் மிகு பாடுபட்டுத் தொழில் செய்ய, எஜமானனோ, அவன் வேலையின் ஆரம்பத்திலிருந்து குறைகூறுகிறான். மனம் முறிந்திடுகிறது.

நான்:—அதனாலும் ஒன்றுமாகவில்லை. இந்த அபாயத்தி லிருந்து விடுதலை யாவதற்கு வேறுவழி யில்லையா ?

ரம்பா கொஞ்சம் யோசித்து, "ஆனால் ஒரு காரியம் செய்கிறாயா?" என்றாள். நான் என்ன வென்றேன். "இரண்டு நாள் ஒளிந்து கொண்டிருப்பாயா?" என்றாள். எனக்கு ஒளிந்துகொள்ள இடமெங்கே? ரம்பா மறுபடி யோசித்து என் தகப்பன் வீட்டுக்குப் போயிருப்பாயா?" என்றாள்.

ரம்பா என் ஸர்வ நாசத்துக்குப் பிரவர்த்தியுள்ள மூர்த்திமய மாய் வந்திருந்தாள். அவளது தூரெண்ணம் தெரிந்தது. என்னை வீட்டை விட்டு அப்புறப்படுத்தி "கற்பழிந்தவள்" என்ற பெயரை எனக்கு உண்டாக்கிவிட்டால், பிறகு சக்களத்தி தனக்குக் கிடையாது என்று தீர்மானித்தவளாய் இருந்தாள். பருவம் வந்த யுவதிகள் அடயாத உலகத்திற்கு முன்பு, பெரியோர்களின் அநுமதியின்றி வெளியேறல் அவர்களுச்குப் பெரிய அபமிருத்யு—எமன்—கெட்ட காரியம்.

"எனக்கு விவாகம் என்று உனக்கு யார் தெரிவித்தது"? என்றேன். எல்லாம் என் தம்பி சொன்னான். "விஷத்தைக் கொடுத்துக் குருடியைக் கொன்று விடு. இனி கொல்லப்போவதை இப்பொழுதே லவங்கதா விடமும் மற்றவரிடமும் தெளிவாகத் தெரிவித்துவிடு. நானும் உடன் வருகிறேன் என்றான். இருவருமாகச் சென்று லவங்கலதா விடமும் மற்றும் யாவரிடமும் விஷத்தைக் கொடுத்துக் கொல்வது உறுதி யென்று கூறி விட்டுத் திரும்பினோம். கடைசியில் உனக்கும் அதைத் தெரிவித்து விடவே இங்கு வந்தது. நீயோ விவாகத்தையே வெறுத்து நிற்கிறாய்—என்றாள்.

ரம்பா விடைபெற்றுச் சென்றாள். நான் செய்த அல்பகாரியம் பெரும் வெற்றியைக் கொடுத்தது. மூர்க்கர்களான மனிதர்களையும், முன் கோபிகளையும் விரோதித்துக் கொள்ளாமல்—தூரநின்றே ஒதுங்கிப் பழகுதல்—ஒரு காலத்துக்கு மற்றவர்களால் ஆகாத ஒரு காரியம் அவர்களால் சித்திக்கும்படி செய்து வைத்துவிடும். இதற்கு ஹீராலால் போதுமான சாக்ஷியம்.

சிறிது நேரத்திற்குப் பிறகு வீட்டின் வாயிலில் ஒரு மோட்டார் நின்றது. ஏழையின் குடிசைக்கு மோட்டார் வருவதேது? மோட்டார் பிரபுக்கள் மோட்டார் பிரக்களையே நாடிக் கௌரவப் பட நினைப்பால்லால், ஏழை மாக்களைத் தேடிச்செல்லுதல் எவ்விடத்தேனுமுண்டோ? சிறுமைப் படுவோரிடம் உரைபாடல் பெருமைப் படுவோர்க்குத் தாழ்வன்றோ? அதிசய நோக்குடன் வருவது எவ

106. ஒரு குடும்பத்தில் ஒருவனை விலக்கிவைக்க வேண்டுமானால் அவனுடன் பேசாமலே யிருந்து விடுவது பெரிய சமர்த்து வித்தை.

சென்று கவனித்தேன். ஒரு ரமணீமணி "அக்கா" என்று என்னைக் கட்டியணைத்து முத்த மீந்தாள். பெண்கள், பெண்களுக்கு முத்தம் கொடுத்துக் கொள்வதுபோல, புமான்கள், புமான்களை முத்துமிடுவ துண்டா? முத்தமிட முடிகிறதா? வந்த சுந்தரீ ரத்நம் ஸரோஜினி யாக இருக்கக்கண்டு பிரமித்தேன். ஆ! பெண்களுக்குள் பெண் கள் எத்தனை யன்பு கொண்டாடி மகிழ்கின்றனர்! ஆடவர்களிடத் துச் சுயநல திருஷ்டியே யன்றி வேறுண்டா? புமான்களுக்கு சிடுசிடு என்று படத்தான் தெரியும். நிற்க, ஸரோஜினி மந்தகாஸ பூர்ண சந்திர வதனியாய் என்னை நோக்கி அக்கா! உன் காரியம் ஜெயம் என்றாள். நான் ஹா! என்று ஆச்சர்ய பரவசையானேன். என் ஆநந் தத்தை எவர் அறிவார்? எங்காவது ஏழைக்குடிசைக் குருடிக்கு லக்ஷாதிபதி பதியாவனே? இன்னும் ஸ்வப்பன லோகத்திலேயே ஸஞ்சரித்தேன். ஸரோஜினி! விசேஷமென்ன? காத்திருக்கிறேன். நீயே என் வீட்டைத் தேடிவந்து விட்டாயே. இந்த ஏழையிடத்து உனக்கு இத்தனை அபாரகருணை எப்படியம்மா உதித்ததுஎன்றேன்.

ஸரோஜினி:—உன் காரியங்களுக்குத் தெய்வத்தை நம்பி யிருந்தாயா? மனுஷ்யர்களை நம்பி யிருந்தாயா?

நான்:—தலையின் மேல் தேவனிருக்கிறான். அவன் கஷ்டப் படுவோரைத் துன்பப்படுத்தமாட்டான். அவனுக்குத் தயை யுண்டு சக்தியுண்டு. ஆனதால் என்னிடம் அவசியமாய்த் தயையைக் காட் டிக் காப்பாற்றுவான். என்னைப் போன்றவருக்கு அவனுடைய கிருபையைத் தவிர வேறு யாருடைய தயவு கிடைக்கப்போகிற தென்று பாவித்துக்கொண்டேன். தெய்வத்திற்குப் பிறகு உன்னை யும் நம்பி நின்றேன்.

ஸரோஜினி:—அதிர்ஷ்ட மிருப்பின் அவரால் செய்யப்பட்ட எந்த வேலையும் சிலாகிக்கத்தக்கவைகளாகவே இருக்கும். அவர் பிரயோஜன மற்ற ஒரு பொருளை நல்ல தென்றாலும், அதற்குப் பொன்னுக்குள்ள விலையேறி விடுகிறது. அந்தப் பொன் விலைக்கு விலையாகியும் விடுகிறது. புத்தி கூர்மையுள்ளவன் எந்த இடத்தி லிருந்தாலும் பத்து பணம் சம்பாதிக்கும் திறமையுள்ளவனாகிறான். மூடன் தேசமெல்லாம் சுற்றினாலும் வெறுங் கையாகவே வருகி றான். நீ அதிர்ஷ்டத்துக்கு அதிபதி. புத்திகூர்மையிலும்சிரேஷ்டவதி.

நான்:—தங்காய்! அந்த ஸ்தோத்திரம் இருக்கட்டும். நடந்த சங்கதிகளென்ன?

ஸரோஜினி:—சூரியன் தன்னைப் பார்ப்பவரின் கண்களை அழிப் பதுபோல, கஷ்டம் வரவேண்டிய காலத்தில் தெய்வம் அவர்களின் மதியை—புத்தியை அழித்து விடுகிறது—குன்றச்செய்து விடுகிறது.

107. தன் மீது பிரிய முள்ளவர்களை மனவாதனைக் குட்படுத்தினால், அதன் அதிர்ச்சி தன்னையும் தாக்கும்.

ரம்பாவுக்கு நீ சக்களத்தியானால் அவளுக்கு விசேஷ தனராசிகள் சேரும், லவங்கலதா வாரிவாரிக் கொடுப்பார். கோபாலா பாபு உன் ஜீவிய காலம் வரையும் சௌக்யத்தையும் சம்பத்தையும் அநுபவிக்கலாம் அதை ரம்பா கெடுத்துவிட்டாள். மனைவியின் துர்ப்புத்தியால் புமான்களுக்கு உண்டாகும் நஷ்டங்களைக் கணக்கிட முடியுமா! குருடிக்கும் விவாகமா என்று ரம்பா ஆத்திரம் கொண்டாள். பிறர் மேன்மைப்படுவதைக் கண்டு பொறாமைப்படுபவர்களின் செல்வம் தானாகவே அழிந்து விடுகிறது. ரம்பாவையும் லவங்கலதா மிக்க அபிமானித்திருந்தார். அவளது உண்மைக் குணம் இப்போது தான் லவங்கலதாவுக்குத் தெரிந்தது. ஒருவரை ஒருவிசை கண்ட மாத்திரத்தில், அவருடைய குணங்களையும் நடவடிக்கைகளையும் கண்டுபிடிக்க முடிகிறதில்லை. முதலில் மிக்க ஆசாரப் பூனைகள் போல நடிக்கிறார்கள். போகப் போகத்தான் தங்கள் சொரூபத்தைக் காட்டுகிறார்கள். தங்களிடம் அன்பு வைத்துள்ளவர்கள் மீது பிறரிடம் தோஷாரோபணம் செய்யத் துணிகிறார்கள்.

நான்:—ரம்பா என்ன சொரூபத்தைக் காட்டினாள்?

ஸரோஜினி:—அவள் எமஸ்வரூபத்தைக் காட்டினாள். கோபால பாபுவுக்குத் தான் இருக்கும்போதே இன்னொரு மனைவியா? பழிக்குப் பழி அவசியம் நடக்கும், அவள் வாழ்வதைப் பார்க்கிறேன் என்று பற்களைக் கடித்துக்கொண்டாள். பழிக்குப்பழி வாங்கினால் தான் சிலர் மனம் சமாதானமடைகிறது. அதனால்—அவைகளினால் எவ்வளவு துன்பம் நஷ்டம் வரினும் பொருட்படுத்துவதில்லை. அதில் ரம்பாவும் ஒருத்தியென்பது நிச்சயம். ரம்பாவுக்குத் துணையாக ஹீராலாலும் வந்திருந்தான். குருடியை என் கணவனுக்குக் கொடுத்தால் பிறகு நான் அவளுக்கு எமன் தான். எவ்வகையிலும், எந்த பானத்திலாவது, அன்னத்திலாவது விஷத்தையவளுக்குக் கொடுத்து வேறுலகத்திற்கு அனுப்பிவிட்டு எனக்கு உண்டான புதிய கஷ்டத்தை நிவர்த்திசெய்து கொள்வேன். இது காளிமாதா அறிய சத்தியம் என்றாள். ஹீராலாலோ நானும் என் அக்காளுக்கு இதில் வேண்டிய ஸகாயஸ்தனாக நிற்பேன். உங்களுக்குப் பணம் இருக்கிறது; எங்களுக்கு எதற்கும் துணிந்தது விடுகிற பலம் இருக்கிறது. எதற்கு வெற்றியோ பார்ப்போமென்றான். ஸ்ரீமதி மாமி புவனேச்வரியிடமும், மாமனாரிடமும், சின்ன பாபு இடமும் இவ்விதமே கூறி ஆர்ப்பரித்தனர்.

நான்:—லவங்கலதா என்ன சொன்னார்?

ஸரோஜினி:—லவங்கலதா திடுக்கிட்டார். திகைத்துப்போனார். சித்தம் கலங்கினார். பெண்கள் துணிந்தால் எதுவும் செய்வார்கள்.

---

108. நாம்தான் கஷ்டப்படுகிறோமென்று நினைத்தால், நம்மைவிடப் பதின் மடங்கு கஷ்டப்படுகிறான் வேறொருவன். விரலுக்கேற்ற வீக்கம்.

அவர்களைக் கட்டுப் படுத்தி ஆபத்துக்குத் தப்புவதென்பது சாத்திய மல்ல. பெண்கள் சந்தோஷமாய்ப் பேசிச் சிரித்து அன்பு குலாவும்போது எந்தக் காரியத்திற் காகவோ தான் இந்த அபிநயம்-நர்த்தனம் செய்கிறார்களென்று நினைக்கவேண்டும். எவ்வகையிலேனும் சிரித்துக்கொண்டே ரம்பா விஷத்தைக் கொடுத்து விடுவாள்; இது நிச்சயம் தான் என்று திகில் பட்டார். ஐயோ! நான் எவ்வகையிலும் குருடிக்கு விவாகத்தை முடிப்பதாக உறுதி புகன்றேனே! அவளுடைய தாய்தந்தையர்கள் அதை நம்பி யிருக்கிறார்களே! அவர்களின் சந்தோஷம் வீணாய்ப் விட்டால் அது பெரிய ஸஞ்சலம். பாபம்! அவர்கள் ஏன் என் வாக்கை நம்பினார்கள்? அக்காரியத்தை நான் முடிவு செய்கிறேனென்று ஒருவர் தன் வாயால் பத்துதரம் சொன்னாலும்—அவர் செய்து முடிக்கும்வரை—நம்பப்படாது. தன் சொந்த முயற்சியையும் அத்துடன் இடைவிடாது செய்து கொண்டிருக்கவேண்டும். அந்த ஏழைத் தாய் தந்தையர் குருடியின் விவாகத்திற்கு என்ன முயற்சி செய்கிறார்கள்? ஒன்றுமில்லை. என்னையே நம்பி விட்டார்கள். இப்பொழுது நான் என்ன செய்யட்டும்? ரம்பா "விஷ"பதத்தைக் கூறிவிட்ட பிறகு இனி கோபாலுக்குக் கொடுப்பது முடியாத சங்கதி. அபாயகரம். நாளைக்கு ரம்பா விஷத்தைக் கொடுத்து அந்த எளிய கன்னிகை தன் பிராணனை இழந்தால் அந்தப் பழி என்னையே சேரும். இவ்வளவு பணத்தை விரயமாக்கி விவாகம் செய்து வைத்தும் அமங்களமே பிராப்தமாகும். இதற்கு முடிவு என்ன? என்று லவங்கலதா வெகுவாய்க் கலங்கி ஏதும் தோன்றாதவரானார். அந்த சமயத்தில் உன் தாய் தந்தையர்கள் அங்கு வந்தனர். அவர்களுக்கு லவங்கலதா ஸகலமும் கூறவே, அவர்கள் கலங்கிப்போய், எங்களுக்கு ஒரே பெண்; அவளை இந்த அபாய ஸ்தலத்தில் சேர்த்து, அவளை நாங்கள் இழந்து அனாதைகளாகும்படி செய்யக்கூடாதென்றனர். சிறிய பாபுவும் அங்கு வந்து இனி விவாகப் பிரயத்தனம் கூடாது. இதைவிட இந்த ஏளியவள் விவாகமில்லாமலே இருப்பதுமேல் என்றார். விவாகம் நிறுத்தப் பட்டுப் போயிற்று. உனது தாய்தந்தையர்கட்கு உண்டான துக்கம் சொல்லி முடியாது. அவர்களுக்கு எழுந்திருக்க சக்தியற்று வியாகூலத்தால் லவங்கலதாவிடமே இருக்கிறார்கள். உன் தந்தை ஆயாஸத்துடனும் சோர்ந்து படுத்துக்கொண்டு விட்டார். அவருடைய ஆசைகள் வியர்த்தமாயின. இதையெல்லாம் பார்த்து லவங்கலதாவுக்கு மனம் தாளவில்லை. அந்த அம்மையே இந்த விவாகத்துக்கு ஆரம்பம் செய்தவரும், அதிகார ஸ்தானத்தை வகித்தவருமாயிருந்தார்.

---

109. முன் பின் பரிச்சயமில்லாமலிருந்தும், 5-நிமிஷத்தில் தங்கை தமக்கைகள் போன்றும் சிநேகிதைகளாய்த் தமது அரிய ரகசியங்களைக்கூட அவர்களிடம் சொல்லிவிடுவது பெண்களின் பேதமைக் குணம்.

நான்:—எப்படியோ நல்ல காலமாய் நான் விரும்பாத பாபிஷ்ட விவாகம் தொலைந்தது. அதி சூக்ஷ்மமான பிரயத்தனத்தில் காரியம் ஸாதகமாய் விட்டது. ஒரு சிறு துரும்பும் பல் குத்த உதவும், ஹீராலாலும் இதில் உபயோகமுள்ள மனிதனுய் விட்டான். அவன் கெட்ட காரியம் கெடுதியைத் தடுப்பதில் பிரயோக மாயிற்று. என் பிரயத்னம் பாதி வெற்றியை யடைந்தது—என்று கூறி ஹீராலாலைக் கொண்டு நான் செய்த ஏற்பாடுகளை யெல்லாம் ஸரோஜினிக்கு விவரித்தேன்.

ஸரோஜினி:—அக்கா! வெகு காரியம் செய்துவிட்டாய். நீ மிக்க சதுரை. ஒரு யத்தனம் வெற்றி பெற்றது. இனி மற்றொரு பாதி ஆகவேண்டி யிருக்கிறது. ஒன்றை ஹீராலால் செய்து முடிதான். பாக்கியை நான் செய்து முடிக்கவேண்டும். முடிக்கவே பார்க்கிறேன். இன்னும் என் பிரயத்தனம் தொடங்கவில்லை. சிறிய பாபுவுக்கு மட்டும் சயன அறையில் அவரைச் சந்தித்தபோது நீ கூறிய விஷயங்கள் அனைத்தையும் கூறினேன். அதற்கு அவர் புன்னகை செய்துகொண்டு, உன் பிரியம் எப்படியிருக்கிறது? என்று என்னைக் கேட்டார். "எவ்விதமாயினும் பிரபாவை ரக்ஷிக்கவேண்டியது நமது தர்மம். கண் தெரியாதவளுக்கு இவ்வுலகத்தில் என்ன சுகம் இருக்கிறது? ஏதோ அவள் பிரேமபூர்வமாய் ஆசைப்பட்டதை நிறைவேற்றித் தானகவேண்டும். நமது பிரபுத்வ ஸக்தி அதில் தான் பிரகாஸப் படவேண்டும். தாங்கள் அவளை மணந்துகொண்டால் என் ஆத்மாவுக்குப் பரமதிருப்தி யுண்டாகும். இதைத் தாங்கள் உறுதியுடனிருந்து முடிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்து அவரது பாத கமலங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தேன். சிறிய பாபு நீ இத்துணைக் காருண்யவதியா? உனக்கு சக்களத்தி யொருத்தி வர நீயே இடம் கொடுத்துக் கொள்கிறாயா? தாயாரையும் சின்னம்மாவையும் நீயே முதலிற் சென்று கேள். எனக்கு இதில் பூரண சம்மதம்தான். நானே அன்றையதினம் லவங்கலதா இடம், "சின்னம்மா பணம் கொடு, விவாகம் செய்து கொள்கிறேன்" என்றேன். அதற்கு லவங்கலதா" வேறெந்த இடமும் கிடைக்காவிட்டால் அப்போது நம் வீட்டிலேயே குருடி விழுந்து கிடக்க ஏற்பாடு செய்யலாம்" என்றார். அதன் பின்பே கோபாலனுக்குத் தரும் பிரஸ்தாபனைகள் தோன்றியது என்றார். இவ்வளவுடன் இவ்விஷயம் நிற்கிறது. இதை முதலில் உனக்குத் தெரிவிப்பதற்காக சின்னபாபுவின் அநுமதி பெற்று ரகசியமாக உன்னிடம் இப்போது வந்தேன்.

நான்:—என் தங்காய்! கண்ணே! எனக்காக இவ்வளவு பாடு பட்டனையா? சின்னபாபுவையும் சம்மதிக்கச் செய்துவிட்டாய். உன

---

110. ஒரு கிரந்த கர்த்தாவை மித்திர பேதமாய் விரோதிக்கிறவன் அவசியம் தன்னைப் பற்றி அவரது நூலில் வரக் காண்பான்.

க்கு நான் என்ன பதில் செய்யப்போகிறேனம்மா? லவங்கலதா என்னிடம் விசேஷ வாத்ஸல்யம் கொண்டவர். நான் க்ஷேமப்படவே விவாகப் பிரயத்தனம் செய்தார். என் விருப்பத்தின்படி லவங்கலதா நடத்திவிட்டால், நான் புதிதாய்க் கண்களைப் பெற்றவளாக மகிழ்வேன். பரவச மூர்த்தியாவேன்.

ஸரோஜினி:—உன்னிடத்து மிக்க அன்பு கொண்டுள்ளேன். அந்த அன்பு ஒரு தனியன்பு. ஒவ்வொரு அன்பிலும் ஒவ்வொரு பேதம்—ஒவ்வொரு வித ருசி, இப்படிக் கலந்தே நிற்கும். எல்லோரிடத்தும் ஒரே அன்பை வைத்துள்ளேன் என்று சிலர் பறை சாற்றுகின்றனர். இது அசாத்தியம். அவர்கள் அன்பு வைத்துப் பழக்கப்பட்டவர்களல்ல வென்றே சொல்ல வேண்டும். ஒவ்வொருவரிடத்திலும் வெவ்வேறு விதமான அன்பு கொள்ளவேண்டியிருக்கிறது. ஒருவரிடத்தில் கொண்டுள்ள அன்பைப்போல இன்னொருவரிடம் காட்டுவதும் சாத்ய மில்லாத விஷயம். ஒருவரிடத்தில் வைத்திருக்கும் அன்பிற்கும் மற்றொருவரிடத்தில் வைத்திருக்கும் அன்பிற்கும் எவ்வித சம்பந்தமு மில்லாதிருக்கிறது. உன்னிடத்தில் நான் வைத்துள்ள அன்பு, நீ எனக்கு சக்களத்தியாக வருவதற்குக்கூட சம்மதித்துக் கொண்டிருக்கிறது. இவ்வித அன்பை இன்னொரு பெண்ணிடத்தில் நான் காட்ட முடியுமா? காட்டு என்று வற்புறுத்தினாலும் அதற்கு மனது ஒப்புமா?

நான் ஸரோஜினியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கப் போனேன். அவள் அதைத் தடுத்து, அக்கா! உனக்கு என்ன இந்த மூடபுத்தி? என்று வைத்தாள். அவளுடைய திட்டுகள் எனக்கு இன்பமாயிருந்தன. பூரணமான பிரேமையுள்ளவர்கள் என்ன திட்டுகள் திட்டினாலும் அவைகள் மனதிற் சென்று தைப்பதில்லை. பிரியமற்றவர்கள் ஒரு சொல் சொன்னாலும் மனதில் சுரீரென்று குத்துகின்றது. மிக்க வேதனை செய்கின்றது. ஆத்திரத்தை எழுப்பி விடுகின்றது. அதற்கேற்றதுபோல் அந்தச் சொற்கள் கொடிய விஷத்தில் தோய்ந்த கூரான அம்புகளாகவும் இருக்கின்றன. பிரேமையுள்ளவர்களின் திட்டுகளோ அவ்வித விஷமில்லாதவை. இந்திரிய சேஷ்டைகளின்றி புமான்களும் கூட சில சமயங்களில் சிறு குழந்தைகள் போல் தமது பத்தினிகளின் பக்கத்தில் சாதாரணமாய் உறங்குவதில்லையா! அந்தப் பதி பத்தினீ சயனத்தில் அப்போது கல்மிஷம், களங்கம், மதனஜ்வரம் ஏது? திட்டுகளும் அவ்விதமே பிரேமை யுள்ளவர்களிடமிருந்து வெளிப்படும்போது களங்கமற்று — விஷமற்று ஒளிர்கின்றன.

---

111. பத்திராதிபர் நல்லவரே. ஆனால் அவர் பேனா பொல்லாதது. அஞ்சாதது.

ஸரோஜினி நாளை வந்து தன்னைக் காணுமாறு கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டாள். இருவரும் ஒருவரை யொருவர் தழுவி முத்தமிட்டுக்கொண்டோம். நாங்கள் முத்தமிட்டுக் கொண்டதை எந்த புமான்கள் கண்டாலும் ஆக்ஷேபிக்க முடியாது. நீ முத்தமிடவில்லையாவென்று கற்பைப்பற்றித் தோஷம் சொல்ல முடியாது. ஸரோஜினி மோட்டாரில் புறப்பட்டுச் சென்றாள். நான் பகவானை ஸ்தோத்திரம் செய்தேன்.

அத்தியாயம்—6.

தாய் தந்தையர், தாரம், மக்களென்பவர்களால் என்ன கஷ்டம் நேரிடினும், எத்தனை விரோதம் வரினும் அவர்கள் மேலுள்ள பற்றுதல் விடாது. ஒருக்கால் நாம் வெறுத்தால், அவர்கள் விருப்புற்றிருப்பார்கள். மற்றொருகால் அவர்கள் வெறுத்தால் நாம் அதை மறந்து பிரியமாய் இருக்க நேரும். இதனால் இவர்கள் நம்மை சாகவும் ஸஹியாத, வாழவும் ஸஹியாத முக்கிய பந்துக்களா யிருக்கிறார்கள். என் பெற்றோர்கட்கு என் விவாகத்தில் எத்தனையோ பரம சந்துஷ்டி. எனக்கோ அது ஒரு ஜலப்பிரளயம் போல. ஒரு கெண்டம போல. இப்போது அவர்களுக்குத் துக்கம்; எனக்கு சந்துஷ்டி. ஆயினும் பரஸ்பரம் ஒருவரின் நன்மையை ஒருவர் கோராமலில்லை. நான் சுகப்படுவதே அவர்களின் சிந்தனை. நானும் சுகப்படவே எனக்கும் சிந்தை. ஆனால் அபிப்பிராயத்தில் மட்டுமே பேதம்.

சிலருக்கு ஏதாவதொரு துர்க்குணம் பிறவியிலேயே வாய்த்திருக்கிறது. அதை எவ்வளவு தான் திருத்தினாலும் திருந்துவதேயில்லை. இதற்கு ரம்பா திருஷ்டாந்தை யாவாள். கோபாலபாபு அவளுக்கு எவ்வளவோ சமாதானங்கள் கூறியும், தனக்கு ஒரு சக்களத்தி வரத் தான் ஒப்பமுடியாதென்று ஒரே பிடிவாதமாய்த் திரஸ்கரித்து விட்டாள். அப்படி வரின் அவளைக்கொல்வது நிச்சயம் என்று வாய்விட்டுச் சொல்லிவிட்டாள். கோபாலன் இனிஎன்ன செய்வான்?

அதன்மேல் கோபாலனும் தனக்கு மறுவிவாகம் வேண்டாமென்று தெரிவித்துவிட்டான். என் பெரிய விசாரம் தீர்ந்தது. நோயினாலும், உழைப்பினாலும், வறுமையினாலும் படும் கஷ்டத்தைவிட, இவ்வித மனோ வியாகூலம் மிக்க வாதனையானது. உலகத்தில்

---

112. கவலையோடும் நிற்கையில்,சிரிப்போடும் ஒருவன் கொஞ்சிப்பேச வருகிறான். அவன் கண்டானா நம் கவலையை?

மனமகிழ்ச்சியைவிட சம்பத்து எதுவுமில்லை. மனக் கஷ்டத்தினால் வருந்துவோருக்கு அச்சமயத்தில் ஓர் நல்ல புஸ்தகம் கிடைக்குமாயின் சற்று ஆறுதல் உண்டாகு மென்பார்கள். இவ்வுலகில் நல்ல கூட்டாளிகள் கிடைக்காவிடில், நல்ல புஸ்தகங்களே அந்த ஸ்தானத்தை வஹிக்கக் கூடியவை யென்று மகாத்மா காந்தியும் கூறுகிறார். குருடிக்குப் புஸ்தகங்களால் ஆவதென்ன? அவை அச்சிட்டிருக்கும் அழகைப் பார்த்து ஆநந்திக்க முடியுமா? பகவானே இக்குருடிக்கு ஆறுதலையுண்டு பண்ணினார். அவர் நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

சுரேந்திர பாபு எனக்குக் கிடைப்பாரென்று தோன்றுகிறது. மிக்க ருசியுள்ள வஸ்து கொஞ்சம் சாப்பிட்டாலும் திகட்டி விடுகிறது என்பார்கள். சின்னபாபு எனக்குத் திகட்டிப் போனாரா? தயாள குணம் தன் மனதிற்கும் ஆநந்தத்தைக் கொடுக்கிறது. பிறர் மனதிற்கும் ஆநந்தத்தைத் தருகிறது. சின்ன பாபுவின் தயாளத்வத்தையும் அநுக்கிரகத்தையும் என்னென்பேன்!

பிறர் விஷயத்தை நாம் நமது சொந்த வேலை போல் பாவித்து அதிகப் பிரயாசை எடுத்துக்கொண்டாலும், — லாபமில்லாமலா செய்வார்கள்,—என்கிறார்கள். ஸரோஜினி தேவி என்னிடமிருந்து எந்த நன்மையைக் கோரி இத்தனைப் பாடும் படுகிறாள்? அவள் அல்பமான என்னை மதித்து என் வீட்டுக்கு வந்தாள். அவள் அந்தஸ்தென்ன? என் அந்தஸ்தென்ன? உபகாரிகளைத் தூஷிப்பது தவறு. அது குற்றமுள்ள ஒரு குணம். பிறர் செய்த குற்றங்களைப் பலரிடமும் சொல்லிக் கொள்கிறார்களே தவிர, தங்கள் குற்றங்களை— இக்குற்றகுண முள்ளவர்கள்—எடுத்துரைக்க மறந்து விடுகிறார்கள். அதை மட்டும் மூடிவிடுகிறார்கள்.

உலகில் எத்தகைய பாக்கியங்களைப் பெற்றிருப்பினும் மாநுஷ்யஜென்மம் எடுத்தவர்களுக்கு ஏதேனுமோர் கவலை, அதிர்ப்தி நெஞ்சில் குடிகொண்டுவிடுகிறது. லவங்கலதாவுக்கு என்ன விசாரம்? ஐச்வரிய ராசிகளுக்கு என்ன குறைவு? என்னைப் பற்றிய விசாரம் அவளுக்கேன்? என் விவாகத்தில் இத்தனை பிரயத்தனமேன்? அது நின்றதில் இவ்வளவு ஸஞ்சலமேன்? தரித்திரர்களுக்கு இவ்வித உதவி புரியும் தர்மிஷ்டர்கள் எங்காவது உண்டா? எவ்விடத்திலோ கோடியில் ஒருவர். லவங்கலதா பூர்வத்தில் என்னைத் தன்வயிற்றிலிருந்து பெற்ற மாதாவா யிருக்கவேண்டும். அல்லது சென்ற ஜன்மத்தில் என் உடற்பிறப்பா யிருக்கவேண்டும். அதனால்தான் பாவம்! என்னால் அந்த அம்மைக்கு இத்தனை கஷ்டம்—பாந்தவ்யம்—பிரேமை! யாவுமே பூர்வஜென்ம பாசத்தொடர்புதான். இப்பிறப்பில் நேர்வன, தொடர்வன சூழ்வன-யாவும் முற்பிறப்புச்சம்பந்தமே செயலே.

---

113. எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டேனும் தன் வீட்டுடன் இருக்கிற சுகத்துக்கு இந்திர போகமும் எந்த விருந்தும் நிகரல்ல.

அன்றையபொழுது போயிற்று. மறுதினம் காலை எட்டுமணி யிருக்கும். என் வீட்டின் அருகே மோட்டார் வந்தது. என்னை ஸரோஜினி தேவி அழைத்து வரும்படி தெரிவித்ததாகச் சேவகன் கூறினன். காலால் நடந்து வழி பிடித்துச் சென்றவளுக்கு இப்பொழுது கனவேக மோட்டார்! பூ விற்றவளுக்கு இப்பொழுது புண்யோதய காலம்! உடனே மோட்டாரில் புறப்பட்டுச் சென்றேன். ஸரோஜினி ஓடி வந்து அன்பு பெருகத் தழுவிக்கொண்டாள். பிறகு எங்களுக்குள் ஸம்பாஷணை ஆரம்பமாயிற்று.

நான்:—எனக்கு அபயஸ்தம் உண்டா?

ஸரோஜினி:—நான் சொல்வதை முற்றிலும் கேள். இன்னும் உன் தாய்தந்தையர் இங்கே தான் இருக்கிறார்கள். மிக்க துர்ப்பலம். பாவம்! வாடி ஒடிந்து விழுந்து விட்டார்கள். சின்ன பாபுவும் நானும் லவங்கலதா இடம் சென்றோம். உன் விவாகத்தின் முடிவு என்ன என்றேன். அமங்களமாய்த் தனக்கு விவாகம் வேண்டாமென்று விட்டாள் அந்தக் குருடி; துரதிர்ஷ்டை. அப்படியே ஆகிவிட்டது. ரம்பா பொல்லாதவள். அந்த விஷயம் இத்துடன் விட்டுவிட வேண்டியதே என்றார். குருடிக்கு விவாகம் நடப்பது எப்படி என்றேன். வழி தெரியவில்லையே, இனி எவரைத் தேடுவது என்றார். பிரபாவுக்குக் கோபாலனை மணக்க இஷ்டமில்லாததால் விவாகம் வேண்டாமென்றாள். அவள் தன் நிலைமைக்கு மேற்பட்ட இடத்தில் கோரிக்கை வைத்துவிட்டு அவஸ்தைப்படுகிறாள் என்றேன். அதை விவரித்துக் கூறும்படி லவங்கலதா கேட்டார். அவள் சிறிய பாபுவுக்குப் பத்தினியாக வேண்டுமென விரும்புகிறாள். உலகத்தில் இருப்பதும் இல்லாததும் ஒன்றாய் விட்ட இந்த அந்தகார ஜீவியத்தில் தான் ஒரு திருப்தியையேனும் பெற்றுக்கொள்ள அந்தப் பாக்கியம் தனக்கு லபிக்கவேண்டுமென்கிறாள். சிறிய பாபுவும் அதற்குப் பூரண சம்மதத்துடன் இருக்கிறார் என்றேன். அதற்கு லவங்கலதா அவள் எண்ணம் எனக்கும் சற்றே தெரியும். ஆனால் உலகத்தில் பழிப்பார்களென்று பின்னடைந்தேன். ரம்பா விஷபானத்தைக் கொடுத்துக் கொல்வதாகச் சொன்ன பிறகு, என் மனம் எவரிடமும் சம்பந்தம் செய்ய ஒப்பவில்லை. எத்தகைய உத்தமோத்தமமான இடத்தில் பிரபாவைத் தந்தாலும், அவள் பிறரால் கேவலமாகப் பழிக்கப்படவே படுவாள். உலகத்தார் அவயவஹீனத்தையே பெரிதாக வைத்துப் பழிப்பது வழக்கமாய் விட்டது. பிரபா எப்படியும் குருடி என்றே தூஷிக்கப்படுவாள். எவ்வளவு சீதனம் தந்தாலும் இந்தப் பழிப்பு தீராது. வருகிற புருஷனின் குணங்கள் எப்படியோ? கல்யாணப் பெண்ணையும், மணமகனையும்

114. பிறனது கலங்கிய பரிதாப மனோநிலையை அறிந்து ஆதரவுகூறித் தாங்குவோர் அபூர்வம். தாங்குவோரைத்தான் கண்கள் தேடிச்சோர்கின்றது.

பார்த்த பார்வையில் நம்பி விடலாகாது. அது பெரிய காரியம். அன்புள்ள ஸரோஜினி! உன் பிரியம் எப்படியிருக்கிறது? இவள் உனக்கு சக்களத்தியாக வந்து உன் இன்ப ஸந்தோஷங்களில் பங்கு பெறுவதற்கு உன் மனம் சம்மதிக்குமா என்றார். அதற்கு நான் சொன்னதாவது:—"என்னை விரோதித்துக்கொண்டு எனக்கு ஒரு சக்களத்தியை நீங்கள் ஏற்படுத்தவில்லை. ஒரு புண்ணிய காரியமாக ஒரு ஜீவனுக்குத் திருப்தியைத் தருவதற்கே தர்மகுணத்தால் தூண்டப்பட்டு இப்படித் தவிக்கிறீர்கள். எனக்கும் பிரபாயிடம் ஐயோ பாவம் என்று தான் இருக்கிறது. தாங்கள் ஒப்பினால் நானும் சம்மதித்தது போலவே. மேலும் மாமாவுக்குப் பெரிய அத்தையும் தாங்களுமாக இருவர் இருக்கிறீர்கள். அது போலவே சின்ன பாபுவுக்கு இரண்டு இருந்தால் தான் தமது பிதாவுக்கு சமமாகப் பிரகாசிப்பார்" என்று கூறிச் சிரித்தேன். சின்ன பாபுவும் லவங்கலதாவும் சிரித்தார்கள். பிறகு மாமனாரிடமும் பெரிய அத்தையிடமும் கலந்துகொண்டு அதன் மேல் இதைப்பற்றிப் யோசிக்கவேண்டுமென்று லவங்கலதா கூறினர். நேற்றிரவு எல்லோரும் கூடிப்பேசினோம். லவங்கலதா சம்மதித்தால் எல்லோரும் சம்மதித்த மாதிரியே. பெரிய அத்தை புவனேச்வரி, உன் பிரியம் எதுவோ அதுவே எனக்கும் என்று லவங்கலதாவுக்குக் கூறி, உன் தர்மபுத்தி இன்னும் பெருகட்டும் என்று வாழ்த்தினர். மாமனார் ராமதாஸர் "நாம் இந்த விவாகத்தை சசீந்திரன் க்ஷேமப்படவேண்டுமென்று செய்யவில்லை. அந்த ஏழைப் பெண் சுகப்படட்டுமென்பதே நோக்கம். நமக்கு ஐஸ்வரியமிருந்து என்ன பயன்? ஏழைகள் சுகப்படாத திரவியம் நமக்கு எதற்கு? லவங்கலதா! உன் பிரியமே என்பிரியமும். எவ்விதமாவது அக்கண்ணில்லாதவள் இந்த விவாகத்தால் தனக்குக் கண்கள் வந்ததுபோல் சந்தோஷப்பட்டுக் கொள்வாளானால் அதுவே நமக்குப் பரம பாக்கியம். கண்ணில்லாத வாழ்விலும் உலகத்தில் பெரிய ஸஞ்சலம் என்ன இருக்கிறது? எப்படியேனும் அவள் திருப்தி படட்டுமென்றார். கடைசியில் உன்னைத் தருவித்துப் பேசுவதென்று தீர்மானமானது. நீ என் வீட்டு மனுஷியாய் விட்டதால் உனக்கு மோட்டார் அனுப்பினேன். வா. மேல் மாடிக்குப்போவோம். உன் தாய் தந்தையரும் லவங்கலதா இடமே இருக்கிறார்கள் என்று ஸரோஜினி யாவும் கூறினாள்.

ஹா! ஸரோஜினியின் உபகாரத்தை என்னென்று சொல்லட்டும். ஒருவனுக்கு மிக்க ஆபத்காலத்தில், அதினின்றும் தப்புவதற்கு நல்ல உபாயம் சொல்லும் ஆப்தர் கிடைப்பது எப்படி இருக்கிறதென்றால், மரணாவஸ்தைப் படும் ஒருவனுக்கு வியாதியின் உபத்திர

---

115. வெளியூரில் இருப்பவனை அது இது வாங்கிவரும்படி எழுதுகிறார்கள். அவனிடம் அதற்குப் பணம் இருக்கிறதா என்பதை அறிய மறந்துவிடுகிறார்கள்.

வத்தைப் போக்கி, தேகத்துக்குப் பலத்தையும் தேஜஸையும் பயக்கானின்ற திவ்ய ஔஷதம் போலிருக்கிறது. ஒருவனுக்கு நற்காலமுண்டானால், அந்தக் காலத்திற் கேற்ப நேசர்கள் கூடிக்கொண்டு அவனுக்கு வேண்டியதைச் செய்து முடித்துக் கொடுத்து விடுகிறார்கள். அந்தந்தக் காலத்திற்கேற்ப மனுஷ்யர்கள் ஏற்பட்டு நமக்கு உதவிகள் புரிந்து மறைந்து விடுகிறார்கள். ஸரோஜினியை அன்புடன் ஆலிங்கனம் செய்துகொண்டேன். "ஆலிங்கனம் செய்ய, மேலிங்ஙனம் வா" என்று பாடினேன். "மன்மதா! இதென்ன நீதி? மங்கை நானும் நோந்திட" என்று ஸரோஜினி என்னைச் சுட்டிக் காட்டும் தன்மையில் பாடினாள். நான் பாரத தேவியின்மீது அந்த சமயம் சில கவிதைகள் இயற்றினேன்.

இன்னிசை யாமின்பக் கடலில், எழுந்தேற்றும் அலைத்திரள் வெள்ளந்
தன்னிடை மூழ்கித் திளைப்பாள், அங்குத் தாவித் துதிப்பாளெம் மன்னை!

தீஞ்சொற் கவிதையாஞ் சோலை தனில், தெய்விக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி, மதுத் தேக்கி நடிப்பளெம்மன்னை!

வேதங்கள் பாடுவள் காணீர், உண்மை வேர் கையிற்பற்றித் துதிப்பாள்;
ஓதருஞ் சாத்திரம் கோடி, உணர்ந் தோதி யுலகெங்கும் விதைப்பாள்.

என்று கானம் செய்தேன்.

நான் கவிதைகள் புனைந்ததை நோக்கி எனக்கு வாசிக்கத் தெரியுமாவென்று நீங்கள் ஸம்சயமுறலாம். கல்கத்தாவில் குருடர்களுக் கென்றே மாலைப் பாடசாலையொன்று ஏற்பட்டிருக்கிறது. இதில் பல வருஷங்களிருந்து கற்று முதல்தரமாய்த் தேறினேன். பதிபக்தி எவ்விதம் புனித முடையதோ, அவ்விதமே தேசபக்தியும் மாண்பு சான்றது. தேசபக்தி யாதென்றும், தன் தாய் நாட்டின் நன்மை யாதென்றும் உணராதார்—தம் மதமும் கடமையும் எவையென்றும் அறியாத மௌட்டியர்களே யாவர். வங்காளத்தில் ஜென்மமெடுத்தவளுக்கு,—அவள் ஒரு குருடியாயினும் அவளுக்கு,—தேசபக்தி யில்லாது போகுமா? வந்தே மாதர கீதாமிர்தத்தை அவள் மறக்க முடியுமா?

ஸரோஜினியும் நானும் லவங்கலதா இடம் சென்றோம். அங்கு என் தாய்தந்தையரும் இருந்தனர். சின்னபாபுவும் வந்திருந்தார். புவனேச்வரி, ராமதாஸர் இவர்களுடனும் ஒரு சபை போல் பிரகாசித்தது. லவங்கலதா எங்களைப் பார்த்து, இப்பொழுதே நீங்கள் இருவரும் ஒன்றாய் விட்டீர்களா? வாருங்கள் வாருங்கள் என்றார். நான் வழக்கம்போல் லவங்கலதாவின் பக்கத்தில் அமர்ந்தேன்.

ஏனடி! சின்னபாபுவா உனக்குப் புருஷனாகவேண்டும்? அவன்

116. எத்தனைப் பரிசுத்தமாயிருப்பினும், அருகே லாவண்யயுவதிகள் செல்லக்கண்டால் புமான்களின் ஒரு கண்பார்வை அங்கு பிரவேசியாதிருப்பதில்லை.

மிகவும் பொல்லாதவனாயிற்றே; அவனையா விவாகம் செய்து கொள்கிறாய்? என்றார் லவங்கலதா. நான் என்ன சொல்லட்டும்? மௌனமாக இருந்தேன். பிறகு லவங்கலதா, உன் பிரியப்படி சின்னபாபுவுக்கே அடுத்த வெள்ளிக்கிழமை யன்று உன்னை விவாகம்செய்து வைக்க ஏற்பாடாயிருக்கிறது. மகதைச்வரியம் நிறைந்த இந்தப் பூர்வ குடும்பமானது அதன் பரம்பரையில் எந்தக் குருடியையும் விவாகம் செய்ததில்லை. உன் மேல் வைத்துவிட்ட அபிமானமானது எந்த வகையிலேனும் உனக்கு ஒரு ஆத்ம திருப்தி யுண்டாகட்டுமென்றே இந்த விவாக காரியம் இப்பொழுது நடக்கிறது என்றார். இது ஒரு நியாயாதிபதி தீர்ப்பளிக்கும் தொனியை ஒத்திருந்தது. அந்த சமயம் லவங்கலதா மிகு கம்பீராங்கனையாய் சோபித்தார். நான் அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தேன். அவர் என்னைத் தன் மடியில் உட்கார வைத்துக்கொண்டு முத்தமிட்டார்.

என் பெற்றோர்களுக்கு உண்டான ஆநந்தம் சொல்லிமுடியாது. என் தாயார் என்னைக் கட்டி முத்தமிட்டார். என் கண்ணே! சின்னபாபுவுக்கு மனைவியாகப் பிராப்தம் இருக்கும்போது, சேவக கோபாலனுக்குக் கொடுக்க நினைத்த எங்கள் பிரயத்தனம் எப்படி நிறைவேறும்? நீ அந்த விவாகம் வேண்டாமென்றபோது நாங்கள் உன் கருத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. நீ குருடியானாலும் உன் ரூபமும், வித்தையும், அதிர்ஷ்ட ராசிகளும் அமோகமா யிருக்கின்றன. நீ மங்களமாக வாழக்கடவை யென்று ஆசிமொழிகள் கூறினார். தந்தையும் என் கைகளைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு ஆநந்த பரிதரானார். ஸரோஜினி, ராமதாஸர், புவனேச்வரி, சின்னபாபு அனைவரும் என்னைப் புகழ்ந்து பேசினர். விவாகமும் உறுதியடைந்தது. இதைவிட ஒரு பெண் உலகத்தில் அநுபவிக்கக்கூடிய ஆநந்தம் என்ன இருக்கிறது? ஆயினும் ஒரு வஸ்து கிட்டுவதற்கு முன் அநுபவம் செய்கிற ஆநந்தமே பரிபூரணானந்தமாகும்.

விவாக தினமும் வந்தது. சின்னபாபு ஆசாரத் திருத்த சங்கத்தைச் சேர்ந்தவர். மிக்க தேசாபிமானி. அவர் ஒரு குருடியை விவாகம் செய்யும் விஷயம் பத்திரிகைகளி லெல்லாம் பிரசுரமானது. அவரது தயாளத்வத்தை யாவரும் வியந்து போற்றினர், பத்திரிகைகளெல்லாம் அவரைப் பாராட்டி எழுதின. விவாக வைபவம் சாமான்யமானதாக இல்லை. கல்கத்தா நகரத்திலுள்ள பிரமுகர்கள் அனைவரும் வந்து கௌரவித்தனர். பழய காங்கிரஸ் மகா சபையின் மேடையில் இடி முழக்கம்போன்று சிங்ககர்ஜனை செய்யும் ஸ்ரீசுரேந்திரநாத பானர்ஜியும் விஜயம் செய்து வாழ்த்தினார். விவாகம் மிக்க உன்னதமாய் நடந்தேறிற்று. -சின்னபாபுவின் கீர்த்தி பாரதவருஷ

117. தனக்கு உதவி செய்வதாகக் கூறியவனிடம் ஒரு ஏழை அவ்வுதவியைக் கேட்கச் செல்லும்பொழுது—அவன் மனது வேறுபட்டு விடுகிறான்.

முற்றிலும் பரவியது. மேல்நாட்டுப் பத்திரிகைகளிலெல்லாம் அவரது நாமம் ஸ்தோத்திர பூர்வமாய்ப் பிரகடிக்கப்பட்டன. என் அதிர்ஷ்டத்துக்கு அனைவரும் ஆச்சரிய முற்றனர். எதுவும் பிராப்தம் இருக்கும்போது தப்பாது. ஆரம்பத்தில் ஆத்திரம்; மத்தியில் அவஸ்தை—அவசரம்; இறுதியில் இன்பம்—சாந்தி—திருப்தி.

விவாக வைபவம் மங்களமாய் நிறைவேறிய பின்னர் நிஷேத முகூர்த்தம் ஆரம்பமாயிற்று. மெய்யன்பின் முதன் முதற் சேர்க்கையானது என்றும் நினைவு கூறற்பாலது. இதில் ஒரு ரஸமான ஸம்பவமும் நேர்ந்துகொண்டது. பள்ளியறையில் யாவும் சுபமாக முடிந்த பின் நித்திரை செய்யப்போகும் சமயத்தில் சசீந்திரரின் இரு ஹஸ்தங்களும் என் மீதிருக்க, மற்றொரு கரமும் என்னைத் தழுவிற்று. நான் திடுக்கிட்டு எழுந்தேன். இதென்ன அவமானம் என்று அந்த ஹஸ்தங்களைப் பற்றிக்கொண்டேன். ஆனால் அந்தக் கையில் ஸ்வர்ண வளையல்களும் வங்கியும் இருந்தன. அவ்வுருவத்தை ஸ்பரிசித்ததில் யுவதிபோன்றும் தென்பட்டது. நான் தான் அக்கா என்று கூறிக்கொண்டே ஸரோஜினி என்னருகில் உட்கார்ந்தாள். சசீந்திரருக்கு அது ஸரச உத்தியானவனமாய் சோபிக்கலாம். எனக்கோ மிக்க நாணமாய்விட்டது.

என்ன தான் உறவு இருந்தபோதிலும், பரஸ்பரம் நாணம் ஏதுமில்லையாயினும், இதுபோன்ற ரஞ்சித சந்தர்ப்பத்தில் அவளது பிரவேசம் நியாயமல்ல. எனக்குக் கண்கள் இல்லையாதலின் அவள் பள்ளியறையிலேயே, ஆரம்பமுதல் இருந்துகொண்டு எங்களைக் கவனித்திருந்தது எனக்குத் தெரியாது. காமோத்தீபனமான சிந்தனைகளும், காதல் நினைவுகளும், ஸயனக்கிருக ரகசியங்களும் பெற்ற தாய்க்குங்கூடச் சொல்ல முடியாதவைகளாகும். நாணம் நடுவே வந்து உபாதைசெய்யும். இவைகளைப்பற்றி விசாரிப்பதும் தர்மமல்ல. அது அவரவர்களின் தேகதர்ம அவஸ்தைகளென்பதாகக் கௌரவத்தில் விட்டு விடுவதே கிரமம். தன் சொந்த பர்த்தா இடம் நாணமற்றுச் சொல்லிக்கொள்வது போல ஈன்ற அன்னையிடத்தும் கூற இயலாதென்று ஏற்கனவே கூறியுள்ளேன். எவ்விதமும் இரண்டொன்றை மறைக்கத்தான் வேண்டியிருக்கும். ஒரு சுந்தரி ஒருவனிடத்துக் காதல் மிகுந்து நிற்பதை அக்காதலனுக்கு அவள் கூறக்கூடுமேயன்றி தன் தாயிடம் தெரிவிக்கக்கூடுமோ? மற்றும் தன் காதல் துன்பங்களும், அதன் சோதனைகளும், அவஸ்தைகளும், இன்ப பூர்த்தியும், ரமணீயமும் அக்காதலனுக்கு மட்டில் அறிவித்தல் இயலுமேயன்றி, அவ்வளவு தெளிவாக மறைபொருளின்றி

---

118. அவனுக்கென்ன பணம் பணமாக வாருகிறான் என்கிறார்கள். வரவுக்கு மேற்பட்டு அவனுக்கு இருக்கும் செலவு—கஷ்டங்களை இவர்கள் கண்டார்களா?

மற்றவர்களிடத்தில்—பெண்களிடத்தில்—மாதாவிடம் மொழிதல் சாத்தியமல்ல—முடியாது. பின்னும் ஒரு பெண்ணை ஒருவனுக்குத் தாமறுத்துவிட, அப்பெண்ணோ அவனையே கோரி, விவாகத்தின் பின்பு அவனுக்கு அர்ப்பணம் செய்யப்போகிற கற்பை இப்பொழுதே அவனுக்குத் தாரை வார்த்து அந்தரங்கத்தில் அவனது மனைவியுமாகிவிடுகிறாள். பிறகு வேறொருவனுக்கு அப்பெண்ணைப் பெற்றோர் மணமுடித்து விடுகின்றனர். இந்த அந்தரங்கக் காதல் விஷயத்தையும், விவாகத்திற்கு முன்பே தாங்கள் ஒன்றுபட்டுப்போனதையும் தான் முன்பு ரமித்த காதலனிடமல்லாமல் தாயிடமோ, மற்றப் பெண்களிடமோ கூறுதல் சாத்தியமோ? இவ்விஷயங்களில் மட்டும் அவரவர்களது அநுபவங்கள் அவர்களின் நெஞ்சிலும், அவரவர்களின் காதலனோடும் முடிகிற அம்சங்களாகவே இருக்கும். இத்துணை மறைவும் அந்தரங்கமுமான விஷயத்தில், இயற்கை அவஸ்தைகளை நேருக்கு நேராக ஸரோஜினி கண்டுகொண்ட விஷயத்தில் எனக்குப் பிராணனை விட்டுவிடலாமா வென்று கூட அத்துணை ரோஷமும், வெட்கமும், கோபமும் எழுந்தன.

அக்கா! நாம் இருவரும் ஒரு அப்பத்தைப் பங்கிட்டுக்கொண்டவர்கள். நமக்குள்ள மறைவும் நாணமும் என்ன? விநோதார்த்தமாகவே இங்கு இருந்துகொண்டேன். என் மனதில் களங்கம் ஒன்றுமில்லை. அக்கா! மனதில் கோபத்தை வைக்காதே என்றாள் ஸரோஜினி. மறுநிமிஷத்தில் நாங்கள் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டோம். சசீந்திரபாபு "இரண்டு பெண்டாட்டிக்காரன் நிண்டாட்டப்பட்டான்" என்ற அபவாதம் எனக்கு நேராதிருக்கச் செய்யுங்கள் என்றார். ஸர்வசக்தியும் எங்களிடமேதான் இருக்கிறதென்றும், நாங்கள் ஆட்டி வைத்தபடி உலகில் ஆடவர்கள் ஆடுகிறார்களென்றும் கூறிச் சிரித்தோம். ஆம்! ஆம்! ஸர்வம் ஸக்திமயம் என்றார் சசீந்திரபாபு. "நாம் இருவரும் அவருக்கு இரண்டு மாம்பழங்கள் போல" என்றாள் ஸரோஜினி. அதற்கும் ஸசீந்திரபாபு 'இரண்டு இல்லை, நான்கு, என்றார். பின்னர் அனைவரும் ஒன்றாக உறங்கினோம்.

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்து மூன்று வருடங்களாயின. மாமியாரான லவங்கலதாவுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கின்றது. எனக்கும் ஒரு ஆண்மகவு பிறந்து நான்கு மாதங்களாயின. ஸரோஜினி சென்ற வருஷமே ஒரு பெண் குழந்தையைப் பெற்றிருந்தாள். என் தாய் தந்தையர் இருவரும் லவங்கலதா இடமே தமது காலத்தை நிம்மதியாய்க் கழித்து வருகின்றனர். ராமதாஸபாபு மகோன்னதபதவியில் விளங்குகின்றார். சின்னபாபு தேஸவத்ஸலராய் கீர்த்திவந்தராய் ஒளிர்கின்றார். மாமியார் ஸ்ரீமதி புவனேச்வரி

---

119. தீபாவளிக்குத் தன் ஊர் சேரவும் ஆசையாயிருக்கிறது. தான் வரின் செய்யவேண்டிய பெருஞ் செலவுகளை நோக்க நடுக்கமாயுமிருக்கிறது.

குடும்ப நிர்வாகத் தலைவியாய்ப் பெருமையோடும் வீற்றிருக்கின்றனர். ராமதாஸரின் மூத்த புதல்வரான பெரியபாபு கல்கத்தாவில் கதர் தொழிற் சாலையை நடத்திவருகின்றார். ஸரோஜினியும் நானும் மிக்க அன்யோன்யமாக பதிபாத சேவையையே பரமபாக்கியமாகக்கொண்டு இல்லறத்துக்கேற்ற துணைவிகளாய் நடந்துகொண்டு வருகின்றோம். இறுதியில் பகவான் என் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தார். நன்மையே-யாவும் நன்மையாய் முடியின். முயற்சி மெய்வருந்தக் கூலிதரு மென்றாலும், அத்துடன் பிராப்தமும் கலந்திருக்கவேண்டும். கோபாலனுக்கு எல்லாம் கூடியிருந்தும் கடைசியில் பிராப்தம் இல்லாமற்போய் விட்டது. நான் இப்பொழுது கண்களை மீண்டும் பெற்றவள்போல் ஆநந்திதையாய் ஜ்வலிக்கின்றேன். என் ஆநந்தத்தில் உங்களுக்கும் பங்கு கிடைக்கட்டும். நீங்கள் நல்ல மனது உள்ளவர்கள். நீங்கள் என்றும் வாழ்க. இனிது உண்டாகுக. வாழ்க இல்லறம். வாழ்க காதல். வாழ்க பாரதமணித்திருநாடு. மங்களம்.

☞ ஒரு குருடிக்கு இவ்விதமாக உயர்ந்த இடத்தில் பிராப்தமிருக்கும்போது, எளிய ஸ்திதியிலுள்ள உங்களுக்கும் ஏன் அப்படிப் பிராப்தம் ஏற்படக்கூடாது? பின் வரும் பிராப்தத்தை முன்னதாகக் கண்டது யார்? உங்களுக்கும் பிராப்தம் இல்லாமற் போகாது. இருக்கவே இருக்கும். ஒரு சிறுமியிடம் அவளுடைய பிற்கால யௌவன ரமணீயம் எவ்விதம் மறைந்து நிற்கின்றதோ அவ்விதமே உங்களுடைய பிராப்தமும் இப்பொழுது மறைந்து நிற்கிறது. சூரியன் எவ்வளவு காலந்தான் மேகங்களால் மூடப்பட்டிருக்க முடியும்? எல்லாம் ஸ்வல்ப காலத்துக்கே இந்த அவஸ்தை. பிறகு ஆகுநாள் எதிர்ப்பட்டுக் கொள்ளும். இப்பொழுது ஆக்ஷேபிப்பவர்களும் காலவசத்தால் திருந்திப்போய் சம்மதப்பட்டுக் கொள்வார்கள். அப்பொழுது உன் காதலும் நிறைவேறும். ஆகவே ஒரே தீர்மானம் கொள். நல்ல காதல் செய்க. உறுதி பற்றுக. உன் நெடுநாள் அபீஷ்டமும் சீக்கிரம் சித்திக்கும். மனம் கலங்காதே. எந்த ஒரு வஸ்துவை ஸதா நினைத்துக்கொண்டிருக்கிறாயோ—எந்த ஒரு நினைவின் மீதே உன் ஆசைகளை வளர்க்கிறாயோ—அந்த வஸ்து அந்த சிந்தனா பலத்தால் நிச்சயம் கிடைத்தேதீரும். கிடைக்குமென்று நீ பூர்ணமாய் நம்பி, ஸர்வஜீவதயாபரரான கடவுளின் கருணையை நிர்மல ஹிருதயத்தோடும் பக்தியுடனும் எதிர் பார்.

பிரேமப் பிரபா

120. "வானம் மும்மாரி பொழிக; மன்னவன் கோள் நிலைதிரியாக் கோலோன் ஆகுக." (கோள்=குணம், கோட்பாடு.)

☞ டிசம்பர் மாதத்தில் பத்திரிகை வெளியாகவில்லை.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் நிறைந்த மாதப் பத்திரிகை.

ஸ்ரீ ஆதம் N. முஹம்மது இபுராஹீம் அவர்கள் ஆதாரணையில்—பிரசுரம்.

கமலம்-18	திருச்சி: ஜனவரிமீ 1923	இதழ் - 9

ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன்

இன்றைக்கு நூற்றுப் பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் 'யுனைடெட்ஸ்டேட்' ஸிலுள்ள 'கென்டக்கி' மாகாணத்தில் ஆப்ரஹாம் லிங்கன் பிறந்தார். தொடக்கத்திலே வயலில் உழவுத்தொழில்,—நம்முடைய தேசத்தில் பஞ்சமர் செய்யும் தொழில்,—செய்துகொண்டிருந்த ஆப்ரஹாம் லிங்கன் தம்முடைய சொந்த விடாமுயற்சியாலும், தைர்யத்தாலும், நல்லொழுக்கத்தாலும் யுனைடெட்ஸ்டேட்ஸ் (அமெரிக்கா) ஜனாதிபதி ஸ்தானமாகிய மஹோந்நத பதவியை எய்தினர். பூமியில் இவருடைய சரித்திரம் அத்யாச்சர்யமான சரிதைகளில் ஒன்றாகுமன்றோ? பண்ணை வேலையிலிருந்து உலகத்துச் சக்ரவர்த்திகளினும் மேம்பட்ட நிலைமை பெற்ற இந்த மனிதனை, அந்நிலையிலே கொண்டு சேர்த்த முக்கிய ரஹஸ்யம் யாது? இவரிடமிருந்த விசேஷ ஸக்தி எது எனில் ஜனநாயகக் கொள்கையில் இவருக்கிருந்த உண்மையான பற்றுதலேயாம். 'ஜனநாயகக் கக்ஷியின் ருஷி' (மூல ரிஷி) யென்று இவரை அமெரிக்கா தேசத்தார் கொண்டாடுகிறார்கள்.

அவரது மன இயல்பு அற்புதம். ருஷிய தேசத்து நவீன ரிஷியாகிய டால்ஸ்டாய் என்பவர் லிங்கனை (Lincoln) ப் பற்றிப் பேசுமிடத்தே "சிறிய யேசுகிறிஸ்து" என்று கூறுகிறார். அதாவது, அன்பே வடிவமாகக் கொண்டவரென்பது குறிப்பு. எனவே ஜனநாயகக்கக்ஷியின் முதற்கொள்கை ஸகல ஜனங்களிடத்தும் பரிபூர்ணமான அன்பு செலுத்துதல் என்பதை அறிந்து கொள்ளவேண்

தன் பொருட்டாக வரும் கீர்த்தி ஒரு கீர்த்தியாகுமோ? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ்.

டும். இதையொட்டி, 'லிங்கன்' காலத்திலிருந்த பண்டிதரொருவர்:—"நான் ஸர்வ ஸக்தியுள்ள கடவுளையும், 'ஆப்ரஹாம் லிங்கனை'யும் நம்புகிறேன்"—என்று கூறிய விஷயமும் குறிப்பிடத்தக்கது.

பள்ளிக்கூடத்துப் படிப்பே 'லிங்க'னுக்குக் கிடையாது. இருபத்துமூன்று வயதுக்குப் பிறகுதான் இவர் இங்கிலீஷ் இலக்கணம் தாமாகவே கற்றுக்கொண்டார். 'யுனைடெட் ஸ்டேட்ஸ்' ஜனப்பிரதிநிதி ஸபையில் (காங்கிரஸில்) ஸ்தானம் பெற்ற பிறகுதான் இவர் "ஜ்யாமெட்ரி" (க்ஷேத்திர கணிதம்) என்ற ஸாமான்ய கணிதப் பகுதியில் தேர்ச்சியெய்தினர். உலக வாழ்க்கையின் படைப்புக்களாகிய பள்ளிக்கூடத்தில் பெரிய பரீக்ஷை தேறினர்; மனித ஸஹவாஸம் என்ற ஸர்வகலாசாலையில் உயர்ந்த பட்டம் பெற்றார்.

அதாவது, கர்வமென்பது சிறிதேனு மின்றி, எல்லா மனிதரையும் ஸமானமாகக் கொண்டு பழகியதினின்றும் இவருக்கு அபாரமான லௌகிக அநுபவமும், லௌகிக ஞானமும் ஏற்பட்டிருந்தன. ஸாமான்ய ஜனங்களை இழிவாகவும், பிரபுக்களையும் செல்வரையும் மேலாகவும் கருதும் பிழையை இவர் அகற்றி விட்டபடியால், மானுஷிக ஞானம் இவருக்கு மிகுதி யுற்றது. இஃதே ஜனநாயகக் கக்ஷியின் இரண்டாம் தத்துவம். அதாவது ஸர்வ ஜன ஸமத்துவம்.

ஒரு ஸமயத்தில், அன்னியதேசத்து ராணுவ உத்தியோகஸ்தரொருவர் 'லிங்க'னிடம் உத்யோகம் கேட்க வந்திருந்தார். அவருடைய விருப்பத்தின்படியே அவருக்கு அமெரிக்கா ஸைன்யத்தில் வேலை கொடுப்பதாக 'லிங்கன்' ஒப்புக்கொண்டு விட்டார். அப்போது அந்த மனிதர் தம்மைக் குறித்து 'லிங்கன்' மனதில் அதிக மதிப்பேற்படும் பொருட்டாக, "நான் பிரபுக்கள் குலத்தில் பிறந்தவன்" என்று தெரிவித்தார். அதற்கு 'லிங்கன்', உடனே:—"அதனால் ஒன்றும் கேடுதி யில்லை; அது பற்றி உமக்கு மேல் ஸ்தானங்கள் கிடைப்பதில் எவ்விதத் தடைகளும் ஏற்படமாட்டா" என்றாராம்! பிரபுக்களைக் காட்டிலும் ஸாதாரண மனிதருக்குத் தகுதி அதிக மென்பதே இதன் பொருள்.

"இந்த தேசமும், இதன் ஸ்தாபனங்களும், இதில் வாசம் புரியும் பொது ஜனங்களின் உடைமையாகும்" என்றார் லிங்கன். ஒரு தேசமானது அதன் ராஜா முதலிய அதிகாரிகளுடைய உடைமை யென்பது ஸாமான்யமாக வழங்கும் கொள்கை. ஜனநாயகக் கக்ஷியின் கொள்கையோ தேசத்துக் குடையவர் அதில் பிறந்து வாழும் பொதுஜனங்களே யென்பது. இஃது ஜனநாயகக் கக்ஷியின்

எதிர் காலத்தில் இந்த மண்மீது தேவேந்திர அநுபவ சுகங்களெய்துவோ மென்று கனவுகள் காண்பதை எவர் தான் விட்டவர்?

மூன்றும் தத்துவம். "பொது ஜனங்களின் பொருட்டாகப் பொது ஜனங்களாலே நடத்தப் பெறும் பொதுஜன ஆட்சி" வேண்டுமென் பதை நன்கு ஸ்தாபனம் பண்ணிய மூலபுருஷரில் 'லிங்கன்' ஒருவர்.

ஆப்ரஹாம் லிங்கன் ஜனாதிபதி (குடியாசுப் பிரஸிடெண்ட்) ஸ்தானம் பெறுமுன்பு, ஒருமுறை அவர் "ந்யூ ஓர்லியான்ஸ்' என்ற பட்டணத்தில் ஒரு அடிமைச் சந்தைக்குப் போய்ப் பார்த் தார். "இந்த அடிமை யேற்பாட்டை நிவர்த்திக்க எனக்கு எப்போ தேனும் ஸந்தர்ப்ப மேற்பட்டால் இதை நான் மிக உக்ரமாக அடிப் பேன்" என்று சொல்லிக்கொண்டு வெளியேறினர்.

1860-ம் வருஷம் 'லிங்கன்' அமெரிக்கா ஜனாதிபதி ஸ்தானம் பெற்றார். ஏற்கெனவே அடிமை ஏற்பாட்டை ஒழிப்பதன் விஷய மாக அமெரிகாவில் கக்ஷிப் பிரிவுகள் அதிகமாகத் தோன்றி விவாதங் கள் நடந்து வந்தன. யுனைடெட் ஸ்டேட்ஸின் வட பகுதியார் அடிமை யேற்பாட்டை ஒழித்து விடவேண்டு மென்றனர். தென் பகுதியார் அங்ஙனம் செய்யின், தாம் யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங் கத்தி னின்றும் பிரிந்து தனி ராஜாங்க மேற்படுத்திக் கொள்வோ மென்றனர். இரு பகுதியாருக்கும் யுத்தம் நடந்தது. கடைசியாக 'லிங்க' னுடைய திறமை கொண்ட தலைமையின் கீழே வடபகுதிக்கு வெற்றி கிடைத்தது. எல்லா மனிதரும் சமானம்" என்ற கொள் கையில் பிறந்த அமெரிகா ராஜ்ய நீதி ஜெயமடைந்தது.

மனிதருள்ளே அடிமை—ஆண்டான் என்ற பேதம் முன்னி ருந்த உக்ர ரூபத்தி லில்லாவிடினும், நாகரிக தேசங்களில் கூட இன்றைக்கும் சற்றுத் திரை போட்ட வடிவங்களில் நடை பெற்றுக் கொண்டுதான் வருகிறது. எல்லாவிதமான அடிமைத் தன்மைகளை யும் நீக்கி, மனிதர்கள் முற்றிலும் ஸஹோதரர் போல் பரஸ்பர மதிப் புடனும், அன்புடனும் வாழ்வாராயின், மனித அரசாட்சிகள் நேர் மைப்படும்; மனித ஜாதியின், கஷ்டங்கள் நீங்கிவிடும். இந்தக் கொள்கையை ரிஷிகள் காலமுதல் நாளதுவரை எத்தனையோ மஹான்கள் போதித்து வந்திருப்பினும், இன்றுவரை இக்கொள்கை எங்கும் ஸம்பூர்ண வெற்றி பெறவில்லை. இந்நோக்கத்தை நிறைவேற் றும் பொருட்டு உலகம் எத்தனை பாடுபட நேர்ந்தாலும் படுமாக. என்ன தியாகங்கள் செய்ய நேர்ந்தாலும் செய்யுமாக. ஆப்ரஹாம் லிங்கனின் நாமம் வாழ்க.

"நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே."

ஆத்திரத்தை யடக்க ஸக்தி ஏற்படும் வரையில் நமக்கு வெற்றி கிடைக் காது. ஆத்திரத்தால் தான் சண்டை.

கர்மத்தின் ரஹஸ்யம்

நமது நாட்டிலே தொழிலற்றிருப்பதே ஞானத்தின் முடிவாகுமென்றெண்ணிப் பலர் சோம்பேரிகளாகக் காலம் கழிக்கிறார்கள். இது தவறு. கர்மம் செய்வதின் முறைமை இன்னதென்பதைப் பற்றி வேதாந்த நூலின் கோட்பாட்டை அறிந்து வைப்பது உத்தமம்.

தனியான வனப்பிரதேசங்களிலே இருந்துகொண்டு யோசனை செய்தவர்களால் மட்டுமே வேதாந்த சாஸ்திரம் எழுதப்பட்டதன்று என்பதை உபநிஷத்துகளிலே காண்கின்றோம். லௌகிக விவஹாரங்களிலே மிகவும் சுறு சுறுப்பாக வேலை செய்த அநேகர் இந்த சாஸ்திரத்தின் அரிய உண்மைகளை ஆராய்ந்து உலகத்துக்குப் போதனை செய்திருக்கிறார்கள். ஒரு தேசத்தில் ஸ்வேச்சைப்படி அரசு புரியும் சக்கிரவர்த்தியைக் காட்டிலும் அதிக சுறுசுறுப்புள்ள மனிதன் ஒருவனிருக்க முடியாது. அப்படிக் கோடிக்கணக்கான ஜனங்களின் மீது ராஜாங்கம் செலுத்தி ஓயாத தொழில் செய்து கொண்டு வந்தவர்களிலே பலர் நமது தேசத்தில் ஆழ்ந்த ஞானிகளாக விளங்கி யிருக்கின்றார்கள்.

எப்படி யோசித்தபோதிலும், இந்த வேதாந்த வித்தையானது லௌகிகத்துக்கு அளவிறந்த பலனுடையது என்பது தெளிவாகிறது. பகவத்கீதை என்ற பெயர் யாவருக்கும் தெரியும். வேதாந்த வித்தைக்கு அந்த நூலைப் போல சிறந்த வியாக்கியானம் வேறு கிடையாது. அந்தக் கீதையின் காட்சி ஓர் போர்க்களத்திலே அமையப் பெற்றிருக்கிறது. அந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலேயும் பிரகாஸிக்கும் கோட்பாடு யாதெனில், மனப்பூர்வமான ஊக்கமேயாகும். ஆனால், அந்த முறையானது ஸாந்தத்துடனே செய்யப்படவேண்டும். இதைக் கர்மத்தின் ரஹஸ்யம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இதுவே வேதாந்தத்தின் லக்ஷ்யமாகும். முயற்சியில்லாதிருந்தால் அதை ஞானத்தின் லக்ஷ்யமென்று நினைப்பது தவறு. அப்படியிருக்கும் பட்சத்தில் நம்மைச் சுற்றியிருக்கும் சுவர்களை மிகுந்த அறிவாளிகளென்று கொண்டாடவேண்டும். அவைகள் நிஷ்காம்யமாகத்தானே யிருக்கின்றன. மண்கட்டிகளும், மரக்கட்டைகளும் போலத் தொழிலற் றிருப்பவன் ஞானியாக மாட்டான்.

உலகத்தின் காரியங்களை யெல்லாம் அரிய ஊக்கத்துடனும், இன்பமுடனும், உபகார சிந்தையுடனும் நிறைவேற்றிக் கொண்டிருந்து, அதே காலத்தில் அத்தொழில்களி னிடத்தில் பற்றில்லாதிரு

நாணத்தால் தலை குனிந்து நிற்காமல், திரத்தால் தலை நிமிர்ந்து நிற்குமாறு காரியங்களைச் செய். சென்றதை மற.

ப்பவன் எவனே, அவனே ஞானியாவான் என்பதே வேதாந்த நூலின் கருத்தாகும். இதுவே கர்மத்தின் ரஹஸ்யம். இதனை மதானுசாரர்களும், தேசபக்தர்களும் சிந்தித்துணர்க.

புதியன புகுதல்

நம் தேசத்துப் பண்டிதர்களும் சாஸ்திரிகளும் உயர்குலத்து ஹிந்துக்கள் ஸமுத்திர ஸஞ்சாரம் செய்வது தோஷமென்று சாதிக்கின்றனர். கோபாலனென்பவர் அன்னிய தேசத்துக்குச் சென்று நவீன கலைப்பயிற்சி மிக்குற்றுத் திரும்புகிறார். அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்து, அவரை இளப்பமென்றும், மற்ற ஹிந்துக்கள் உயர்த்தியென்றும் அர்த்த முண்டாக்குகிறார்கள். இதுவானது, ஸ்வாதீனமும், கம்பீரமும் உள்ள மிருகராஜனை சிங்கமானது, வீட்டி லடங்கித் திருட்டுத்தனமாய்ப் பாலைக் குடிக்கும் பூனையை விட இளப்பமென்று சொல்லுவது போலாகின்றது.

பண்டிதர்களும் சாஸ்திரிகளும் கோபாலனை ஜாதிப் பிரஷ்டம் செய்வார்களானால், அது அவருக்கு எவ்விதமாயும் குறைவில்லை. அவரது கீர்த்தியும் நற்குணமும் எப்போதும் போல் பிரகாஸித்துக் கொண்டே யிருக்கும். புத்திமான்கள் அவர் செய்ததைச் சிலாகித்து, அவரைப் பின்பற்றி அவர் மாதிரி செய்ய முயலுவார்களே யன்றி, குண்டு சட்டியில் குதிரை யோட்டும் வைதிகர்களைப் பின் பற்றிச் செல்ல முயல மாட்டார்கள்.

இந்த வைதிகர்களை இகழ்ந்து பேசுவது நமது எண்ணமல்ல. அவர்களிடத்தில் பல நற்குணங்கள் இருக்கின்றன. ஆயினும் கால சுபாவத்தை நோக்கி, தேசத்துக்கு நன்மை செய்யும்படியான வழிகளில் முயற்சி செய்யும் மற்றவர்களை ஆதரித்துத் தழுவிக்கொளரவப் படுத்த வேண்டும். இதை யறியாமல் நமது மதாசாரியர்களும், மதபோதகர்களும் நடப்பார்களானால், அவர்களின் பேதமையான அபிப்பிராயங்களும் வார்த்தைகளும் மதிக்கப்படாமல்,தேசமானது, அந்நியநாடுகட்குச் சென்று அறிவு பெற்றுத் திரும்பிய பெரியோர்களின் முயற்சிகளால் முன்சென்று கொண்டு போகப்படும்படியாய் நேரும். அவ்வித நிகழ்ச்சியையே இப்போது நம் கண் முன்பு நாம் காண்கின்றோம்.

வறுமை பிடுங்கித் தின்கிறது. வீட்டிலும் கலகங்கள், கடன்களும்வேறே. இவ்வளவில் பெட்டியில் நகையும் களவு. ஆ! எத்தனை சுகம்?

பிராசீன நவீன கால பண்டிதர்கள்

பழய காலத்துக் கல்விப் பயிற்சியைக் குறிக்கும் ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் தமிழ்ப் பண்டிதர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது ஆங்கிலம் கற்றுப் புதிதாய்த் தோன்றியிருக்கும் பண்டிதர்களும் இருக்கிறார்கள். பழயகாலத்துப் பண்டிதர்கள் நீண்ட காலத்தைக் கல்வியிற் செலவு செய்திருக்கிறார்களென்று ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்களது படிப்பின் அளவு மற்ற சாமான்யருடையதைப் போன்றதல்ல. அவர்களுடைய ஞாபக ஸக்தியும் அதிசயமானது. அவர்களுடைய குணாதிசயங்கள், பொறுமை' திருப்தி, தயை முதலியவைகள் பொதுவாய் வியப்புக்குரியன. ஆனால், அவர்களுடைய கல்விப்பயிற்சியோ, தற்காலத்தவர் புதிதாய் அறிந்துகொள்ளும்படியாய் எந்தப் புதுமையையும் தெரிவிப்பதல்ல. பூர்வீக கிரந்தங்களைப் புகழ்ந்தோ, அல்லது குற்றங்குறைகள் சொல்லியோ, அல்லது வேறு பாஷையில் பெயர்த்து எழுதியோ, தாங்கள் அறிந்ததை வெளிப்படுத்துகிறார்கள். பூர்வீகப் பயிற்சி பெற்ற தற்காலப் பண்டிதர்களுக்கு உலகத்தின் சரித்திரம் தெரியாது. தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே ஸஞ்சரித்தவர்களல்ல. ஆகவே, அவர்களுடைய பயிற்சி மிகவும் குறுகினதாய் இருக்கிறதுமன்றி, ஸமூகத்தாருக்கு அவர்கள் செய்யும் ஊழியமெல்லாம், தங்களுக்குச் சம்மதமற்ற புதுமைகளைச் செய்யும் மற்றவர்கள் பேரில் குற்றம், குறைகள் சொல்லுவதிலும் பழிப்பதிலும் கழிவதாயிருக்கின்றது.

பழய காலத்துப் பண்டிதர்கள் இவ்வாறிருக்க, புதிய ஆங்கிலம் கற்ற பண்டிதர்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள்? ஆங்கிலத்தில் நன்றாய் எழுதி வாசிக்கக் கூடிய தமிழர், தங்கள் தாய்ப் பாஷையாகிய தமிழில் எழுதும் போதும், பேசும் போதும் ஆங்கில வார்த்தைகளைக் கலக்காமல் ஒரு வாக்கியமாவது பேசவும் எழுதவும் ஸக்தர்களல்ல. தற்காலக் கல்வி கற்கும் ஜனங்கள் அநேகருடைய சுறுசுறுப்பும் ஆங்கிலத்திலேயே காட்டப்படுகிறதென்றால், ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் இவர்கள் தேர்ச்சி பெறாமல் கெட்டுப் போகிறதற்குக் கேட்பானேன்? புதிய பண்டிதர்களின் நிலைமை இவ்வாறான அரை குறையே தான்.

எந்த ஜாதியானாலும், தங்களின் சொந்த தாய்ப் பாஷையில் பயிற்சி பெறாமல், அன்னிய பாஷையில் பயிற்சி கொண்டு முன்னேறியதாக உதாரணம் இல்லவே யில்லை. அதிலும் இந்தியருடைய

சிலர் பேசிக்கொண்டே யிருக்கிறார்கள், பிறகு பேச்சைக் கலகத்திலும் சண்டையிலும் கொண்டுவந்து விட்டு விடுகிறார்கள்.

நிலைமை இதுவரையில் உலகத்திலுள்ள ஜனங்களது எவருடைய நிலைமையையும் போன்றதா யிராமல்; அவர்களின் ஜாதி நூல்களிலும், சரித்திரத்திலும், பழக்க வழக்கங்களிலும் விளங்குவனவற்றைப் பெரும்பான்மையும் அசட்டை செய்து, புதிதாய் அன்னிய நாடுகளிலிருந்து வந்த நாகரிகத்தின் கருத்துகளையும் பழக்க வழக்கங்களையும் அனுஷ்டிக்க முயல்பவர்களா யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் உலகத்தில் எந்த ஜனங்களும் இருந்ததே யில்லை. ஆகையால் புதுப்பயிற்சிபெற்ற ஆங்கிலப் பண்டிதர்கள் செலுத்த வேண்டிய கடமை முற்றிலும் புதிதா யிருக்கின்றது. அவர்கள் தேசபாஷைகளை நன்கு கற்று, அவைகளின் மூலமாய் அன்னிய கருத்துகளைத் தங்களின் புராதன தர்மத்துக் கேற்றபடி அமைத்து வெளியிட வேண்டியவர்களாவர். அதற் கேற்றவாறு அவர்களின் கவலையை, தேச பாஷைகளின் இயல்பையும், நூல்களையும், நுட்பங்களையும் அறிவதிலும், அபிவிர்த்தி செய்வதிலும் செலுத்தவேண்டும்.

ஜப்பானியர் முதலானோர் ஆங்கில பாஷைபோன்ற அன்னிய பாஷைகளைக் கற்க வேண்டியவர்களா யிருந்தபோதிலும், இந்தியரைப் போலத் தாய்ப் பாஷைகளை அலக்ஷியம் செய்துவிட்டு, அன்னிய பாஷைகளின் அடிமைகளாக வில்லை. இதுதான் நம் தேசத்தின் கல்விப் பயிற்சி முதிராததற்குக் காரணம். பழய பண்டிதர்களுக்குத் தற்காலப் புதிய உலகஞான மில்லை. புதுப் பண்டிதர்களுக்கு ஸ்வபாஷா ஞானமில்லை. இவ்வாறு இவ்விரண்டு ஞானமும் கலந்து அமையாத போலிப் பயிற்சிகொண்ட ஜாதியார், எப்படி உலகத்தார் மதிக்கத்தக்க கல்விப் பயிற்சி பெற்றவர்க ளாவார்கள்?

பிரபஞ்ச விலாசம்

1. கை நோண்டியோ? சில கர்விகள் தங்களுக்கு ஸமத்துவ நிலையிலுள்ளார் லிகிதம் வரைந்திடினுங்கூட, அவர்கட்குத் தங்கள் குமாஸ்தாவைக் கொண்டு விடை விடுப்பர். இவர்கட்குக் கை நொண்டியோ என்பது வினா. நொண்டியில்லையாயினும், அதில் தங்கட்கு ஏதோ புது கௌரவம்—அந்தஸ்து முளைத்துக்கொள்வதாக இப்பெரிய (?) மனிதர்களின்—பேதைமக்களின் எண்ணம்.

2. உனக்குப் பிராப்தம் அவ்வளவுதான்:—ஓ! இனிமேல் அவனுக்குக் கடிதம் வரைந்திடேன்; எத்தனை நிருபம் வரினும் இனி அதற்கு என் விடை கிடையா என்று கூறிக்கொண்டு பிடிவாதத்துடன் இருந்துவிடுகிறாய். இதில் உன்னை மெச்சிப் புகழ்ந்து கொள்ளாதே. உனக்கு அந்த இடத்தில் பிராப்

செலவுகள் தாங்க முடியவில்லையே யென வீட்டுத் தலைவன் என்னதான் கதறினும் அவன் பிணமாய் விழும்வரை விடார்கள்,

தம் அவ்வளவுதான் என்று அப்படி நினை. ஒரு உத்தம அன்பனை—துணையை—ஸகோதரத்தை உன் செய்கையால் நீ இழந்துவிட்டதற்கு நெஞ்சுருகிக் கண்ணீர் கொள்க.

3. அதை நினைந்துப் பார்:—விரோதப்பட்டுப் பிரிந்திடுங் காலந்தனனில், வேறு மனமாகும் வேளையினில், ஒன்றுபட்டு உள்ளம் உவந்த முன் பொழுதுகளை—சென்று போன நாட்களில் அன்னோரிடத்தே கொண்ட அன்பினை நீ நினை நினை. நினைப்பையாகில், வேறுபட்டு அன்பு வற்றிய உன் தற்போதைய நெஞ்சம் நின் செயலுக்குப் பதைத்துக் கரைந்து நீராகிப் போம்.

4. பிழை நினைவதே.—அவன் உன்னையே நம்பினன். இந்தானிலத்தில் நின்னையே தன் மனப்பிணி—சோர்வு—அகற்றும் நன் மருந்தாகக் கொண்டான். எக்காலத்தும் தன் சொந்த நிதியமென நின்னைக் கருதினன். தன்னை எவ்வேளையிலும் தேற்றுவித்தற்கான ஸஞ்சீவி நீயேயென நினைப்புமிருந்தான். மாணத்தாலன்றி வேறு வகையிற் பிரிதல் இல்லையென உறுதி உள்ளம் உண்டாகி யிருந்த தவனுக்கு. * * * * இத்தகையோனை ஏனோ வெறுத்தனை? எதற்கோ அன்பு சுருங்கினை? யாதுக்கோ துவேசமிருந்தனை? இந்த அலக்ஷியங்கள் நீதியோ? பழய அன்பு எங்கேயோ? அறமேயோ நினக்கு இது? ஐயகோ! என்ன காலம்!!

5. மறந்திடாது அவன் மனம்:—ஆயிரம் முறைமுத்தமிட்டுக் கொண்ம அவ்வினிய இரவுகள் இப்போதெங்கேயோ? எப்போதும் முத்தந்தானு என்ற முத்தச் சலிப்பின் ஆநந்த உரை எங்கு போயதோ! முத்தே முத்தடாவென ஒரு முத்தத்திற்குக் கெஞ்சியதும், அதற்கு இணங்கியதும், பல முத்தங்கள் கொண்டதும், இட்டதும், ஒன்றாய் ஒரு ஸயனத்தில் உறங்கியதும், உறங்காது விடிய விடியப் பேசியதும், பிரிந்திடு போழ்தில் ரெயிலடியில் கண்ணீர் பெருக்கியதும், கதறிக் கூவியதும்—இவை யெல்லாம் மறந்திடற் பாற்றே? மறக்கவும் வசமோ? இதுகாலை அதனை நினைந்திடினும் இன்பமே பெருக்கிடுமால். இஃதனைத்தையும் யாங்ஙனே மறந்தாய்? எவ்வாறு துறந்தாய்? ஏனோ அகம் வேறானாய்? மறவாதிதனை அவன் மனம் என்றுமே.

6. இனமாகப் பெற இன்பவாசக ஏமாற்றல்:—(ஒருவர் எழுதுகிறார்) "உண்மையுள்ள ஸகோதரரே! "தங்கள் ஆநந்த கதா கல்பக"த்தைப்பற்றி (8-ம் வால்யம்) பிரஸ்தாபிக்கபடாத இடங்களில்லை. காங்கிரஸ் திட்டமாறுதலையும், சட்டசபைப் பிரவேஸத்தையும் யோசித்து யோசித்து மனம் சலித்து விட்டிருக்கும் இச்சமயம்,தங்கள் "ஆநந்த கதா கல்பகம்" படித்தால் சற்று நிம்மதி யுண்டாகக்கூடும். நான் 20-12-22-ல் கயா காங்கிரஸுக்குப் புறப்படுவதால் அதற்குள் ஒரு பிரதி ஆநந்த கதா கல்பகத்தை தயவு செய்து (இனமாக) அனுப்பும்படிக் கேட்டுக் கொள்கிறேன்."

ஐயோ பாவம்! என்று அநுதாபப்படாதவர்களின் மத்தியிலேயே கால முழுமையும் கழிக்கும்படி கடவுள் செய்துவிடுகிறார்!

காதற் பரிசு

அல்லது

சிறைவாஸ அநுபவங்கள்.

துணிவதா ?—இணங்குவதா ?—என்ற பெரும் பிரசினை யினுள் இரு காதலர்களும் பெற்ற பரிசுகளின் விநோதம்.

அத்தியாயம் 1.

துணிவதா ?—இணங்குவதா ?

"பெண் தெய்வங்களின் வேண்டுதலை மறுக்க எந்தப் பாவிக்குத் தான் மனம் வரும்? அறிவு மலர்ந்து, அன்பு காய்த்து, ஆநந்த ரஸம் பொழிவது சுதந்தர ஊற்றில் தான். ராஜவீதி இருக்கையிலே சந்து பொந்துகளின் வழியாக ஏன் செல்லவேண்டுமோ?"

"என் குமாரனை நீ மணப்பதாகில், மிகு மேன்மை வாழ்வு காண்பாய். ஞாலமிசை ஓர் அரசி போன்றும் ஒளிர்வாய். இவ்வீட்டிற்கும் நீயே நாயகமாவாய். சிந்திப்பாய் பாவாய்."

"நான் அடிமையாகவும் இரேன். 'ஆண்டை' யாகவும் இரேன். மனிதர்கள் யாவரும் அவர்தம்முள் பரஸ்பரம் ஸமானமே. மற்றொரு மனிதனை அவனுடைய ஸம்மதமின்றி ஆளத் தகுந்த அத்தனை நல்ல மனிதன் எவனுமில்லை. எவ்வகையிலும் கேடுள்ளதாகிய அநியாயம் மலிந்த உமது செய்கையில், எனது நட்புத் தொடர்பிருத்தல் எவ்வாறு சாத்தியம்? எரியுந் தழலில் எண்ணெயை வாரி வாரி விடுவதொக்கும்."

"இந்த விவாகத்தில் உனக்கு விருப்பமா? இல்லையா?"

---

121. வீட்டுக்குள் பெட்டி பூட்டப்பட் டிருப்பினும், மறந்து திறந்துள்ள சமயத்தில்—பெட்டியில் களவுபோய் விடுகிறது.

"மேன்மையார்ந்த கருவிகளைப் போற்றிக் கையாண்டு நல்வழி படச் சிந்தனை மிகும் என்னை நன்றித் துரோகமாக நடந்து கொள்ளப் போதிக்கும் நீர் ஒரு தளர்ச்சியில்லாத விரோதி. உமது குமாரரின் பொருட்டு எனது நன்மைகளைக் கூசாமல் பலியிட்டு விடுதல் நியாயமில்லை."

"சிதறிய நிலையிலுள்ள நீ உன்னுடைய தரித்திரத்தைத் தகர்க்கவேண்டுமானால் இவ்விவாகத்திற்கு இசைவதே நன்று. யான் ஒரு பிரபு என்பதையும், வேண்டிய ஐச்வரிய ராசிகள் மலிந்துள்ளன இக்குடும்பத்தில் என்பதனையும் நீ நன்குணர்வை."

"பிரபுவை மேன்மையி லுயர்த்திப் பின் ஸாதாரண மனிதனாக்கவேண்டும். பிரபுக்களைக் காட்டிலும் ஸாதாரண மனிதருக்குத் தகுதி அதிக மென்பதே என் துணிபு. ஸாமான்யரான ராமதாஸரே எனக்கு உகந்தவர். நீர் என்னை ஏமாற்ற முயலுவதில் புத்திசாலித்தன மின்மையைத் துரிதத்தில் உணருவீர்."

"இன்னும் நின் பிடிவாதம் ஒப்ந்திலதா? ராமதாஸ் தீயோன், வஞ்சகன். அவன் செய்கைக்கு விவகார வடிவமேற்படுத்திச் சிறை புகுத்தியும் ஆயது. நாளை சிக்ஷை நாள். திரும்புதல் இனி யேது? சிறைத் துன்பங்களில் தேய்வுற்று மாய்வதே அவனது முடிவு. இதில் ஐயத்துக்கிட மில்லை."

"உம்முடைய சுயநல திருப்திக்காக ராமதாஸரைப் பற்றிப் பயங்கரமான பாஷையில் வர்ணித்திருப்பது மிகவும் கெடுதல் விளைவிக்கத் தக்க செய்கை. நியாயம் செய்ய விருப்ப மற்றோர்தான் செல்வாக்கு மிகுதியு முற்றிருக்கின்றனர். என்னுடைய பரம விரோதிகளுக்குங்கூட, இயன்றவரை மனம் கன்றிப்போகாமல் மிருதுவான பாஷை பேசவேண்டுமென்பது என் விருப்பம்!"

"இணக்க வுரை யில்லையா? எதற்கும் மறுப்பு தானா? நீ விவாகத்திற்கு இசைந்திடுவதாகில் ராமதாஸனை விடுவிக்க எவ்விதத்தும் தயார். மனஸ்தாபத்தை இயன்றவரை குறைக்கும் பொருட்டு ஒரு பரிஹார வார்த்தையாகவே இதனை நான் மொழிவது. இதில் உன் பிரியம் எதுவோ?"

"மறுப்புரை கூறுமல் உமது வார்த்தையைக் கண்டன மின்றிப் பாவவிடுவது எனக்கு வருத்தத்திற்கிடமான செய்கை யாகும். உமது கை ஏறுமலும், எனது எண்ணங்களுக்குப் பங்கம் நேராமலும், இந்தப் போராட்டச் சதுரங்க விளையாட்டில் ஸமாதானமாக நீர் கலக்கும்படியானதோர் ஆட்டமாடிடவே எனது தீர்மானம்.

---

122. தன் மீது முன்னைய அன்பு தற்போதில்லை யென்றுணருகிற போது, எழுதும் கடிதங்களின் எண்ணிக்கையும் குறைந்து விடுகிறது.

முழுகிக் குளித்தால் பிறகு குளிரில்லை யென்பது தமிழ்வசனம். வருவன யாவும் வருக. எனது இந்தப் புதிய மனக்குழப்பம் இறுதியில் வெற்றியையே பெற்றிடுக. எதற்கும் நான் இதோ தயார்.''

"ஒரு சிறு துரும்பு நீ. உனக்கும் இத்தனைத் துணிவா? என்னுடனும் எதிர்ப்பா? முடிவு என்னுகிறதோ பார்.''

"என் சொந்த விவாக விஷயத்தில் என் இஷ்டப்படி நடக்க நான் உரிமை பெற்றிருக்கையில், எவ்விதத் தொடர்பு மற்ற வழிப் போக்கனாகிய நீர் இதைப் பற்றிப் பேச உமக்கென்ன சுதந்தா மிருக்கிறது? அபிப்பிராய பேதங்கள் உண்டாகும்போது, உடனே பரஸ்பரம் ஸம்சயப்படுதலும், பழி தூற்றுதலும் மிகக் கொடிய வழக்கங்களென்று நான் நிச்சயமாகவே கூறவல்லேன்.''

"வழிப்போக்கனா நான்? அதனைச் சடுதியில் உணர்வாய்.''

"ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கூத்தாடிகளுக்குள்ளே கக்ஷி பேதங்கள் மிகுகிப்பட்டால் ஊராருக்கு நல்லது. எனக்கும் உமக்கும் ஆன கக்ஷிப் பிரிவினை ராமதாஸனுக்கு நன்மையையே பயக்கிடும். என் முன் வாரீர் இனி.''

* * * * *

தீயோன் மனக்கொதிப்புடன் அவ்விடம் விட்டகன்றான். மங்கை நல்லாள் பெருமூச் செறிந்தனள். விம்மி விம்மிக் கண்ணீர் சிந்தினாள். சிந்தித்தனள் பலவாறாக. துணிவதா? இணங்குவதா? அது தான் கேள்வி. இணங்குவதும் உண்டோ? ராமதாஸனை யன்றி வேறொருவரை மணப்பதுங் கூடுமோ? கூடுமாகில் காதலித்த கற்பு என்னும்? "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கு''வது தகுதியுடைத்தோ? ராமதாஸரின் விடுதலையின் பொருட்டு இன்னொருவரை மணக்க ஒப்புவதா? அம்முறையில் விடுதலை யேற்றுத் திரும்பும் அவர், என்னை வேறொருவனின் மனைவியாகக் காணுந் தீயகாட்சியினும் சிறைத் துன்பம் அத்துணைக் கோரமானதன்று. அவர் சிறைக்கே செல்க. சென்று மீண்டு வந்து என்னைப் பெறுக. வாழ்க்கைக்கே நாசகரமான அவமான விடுதலை வேண்டா. துணிவதா என்ற பிரசினையே உயர்நல மிக்குற்றது. துணிவதே திறன். ஏன் துணியக்கூடாது? துணிந்தார்க்குச் சமுத்திரமும் முழங்கால். இறுதியில் துணிவதையே பற்றினாள் மனோன்மணி.

ராமதாஸன் சிறு நகரொன்றில் வாழ்வோன். நன்னிலைமையினனே. கல்வியும் சீலமும் இனிதமையப் பெற்றிருந்தனன். அவன் இருந்த வர்த்தகஸ்தலத்தின் தலைவர் ஒரு காரியார்த்தமாக

123. அன்பு வைத்தது ஒரு காலம். அன்பால் பிரிவாற்றாது அழுதது ஒரு காலம். இப்போதோ அவர் வெளி யன்பு. உருக்கம், அழுகை ஏது?

இராஜதானியின் தலைநகருக்கு அவனை யனுப்பினர். இதற்கு முன் ராமதாஸன் தலைமை நகருக்குச் சென்றவனல்லன். அங்கு ஆகார வசதிகட்குச் செலவுகள் விபரீதமெனக் கேள்வியுற்றிருந்தான். அதுபற்றித் தன் ஆப்த ரொருவருக்கு நிருபம் விடுக்க, அவரும் இதயம் கனிந்துத் தலைமை நகரில் தம் சார்பினரின் இல்லில் இருக்கவும், உண்ணவும் உதவி யளித்து விகிதமும் பாலித்தார். தலைமை நகரில் ராமதாஸன் தன் ஆப்தர் குறித்த மனையில் விருந்துணவு கொண்டு இன்பம் மிகுந்தான். அவ்வீட்டினருடன் பழகியவன் போன்று 'பழமை'யு மாயினன். அவ்வில்லத்தின் மற்றோர்புறம் தந்தையும் தனயையுமாக இருவர் குடியிருந்து வந்தனர். பிதா யோகி போன்றுத் தோற்றினர். அவர் நாமம் ஜெகநாதர். புத்திரி உத்தமி. நற்குணங்களுக் கெல்லாம் நாயகம். அழகில் பவளக் கொடி. ஸர்வ லக்ஷணங்களும் அமையப் பெற்று வித்வஸம்பன்னை யாய் இலங்கினள். சிறுமியின் பருவம் பதின்மூன்று. அவளது பெயர் பங்கஜா.

ஜெகநாதர் 'அருங்கலை விநோத'ர். பங்கஜம் பாச்சுவை பாவிய மொழியினள். வித்தியா ஸாகரம். ராமதாஸனோ சிற்றுடற் பேரறிவுற்ற ஓர் நம்பி. மூவரும் ஒன்றுகினர். ஒரு மனதாகினர். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' புதிய உறவினுள் காதல் புகுவதும் துரிதம். ராமதாஸன் பங்கஜமணியிடத்துக் காதல் மிக்குற்றான். பங்கஜமும் அவனைப் பாராட்டிச் சீராட்டித் தாலாட்டினள். இம்மூவரின் காலமும் வித்தியா விநோதத்திலேயே சென்று கொண்டிருந்தது. நாளாக ஆக இருவரின் காதலும் பெருக்குற்றுப் பொங்கியது. ஜெகநாதர் இவர்களின் காதல் நோக்கினர். அதனை யுணர்ந்தவராகக் காண்பித்துக் கொள்ளவில்லை. ஈசன் ஒன்று சேர்ப்பதை நாம் ஏன் பிரிக்கவேண்டும்? என்று மவுனமாய் நின்றார். ராமதாஸனும் சின்னாட்க ளிருந்து தன் ஊர் சென்றான். பிரியா மனத்தினளாய்ப் பிரிந்த பங்கஜா ராமதாஸனின் நினைவே பெரிதும் மேலிட்டாள். 'வாடினேன் வாடி, வருந்தினேன் மனத்தால்—அவர் தருங் காதலே கருதி—நாராயணா' எனப் பெருமூச்செறிந்தாள். இருவரும் பரஸ்பரம் கடிதங்களால் தம் காதலை வளர்த்துச் சென்றனர்.

ராமதாஸன் தலைமை நகரிலுள்ள காரியஸ்தலத்தின் நிர்வாகியாய் அமர்த்தப்பட்டான். பொங்கித் ததும்பிய காதல் தாகத்துடனும் தலைமை நகர் சேர்ந்து,தனது இனிய பங்கஜப் பாவையைக் கண்டான். புளகிதமுற்றான். பிரிந்து ஒன்று படுவோர்தாம் அதன் இன்பம் உணர்வார். ராமதாஸனுக்கு முன்னர் உணவளித்

124. மனத்தாங்கல்கள் யாவும் நிஷ்களங்கமான அன்பு முதிர்ச்சியால் வருவனவேயாம். அன்பு வற்றிவிடின் மனத்தாங்கல்களும் வற்றி விடுகிறது

தோர் வேற்றூர் சென்றனராக இப்பொழுது பங்கஜமே அறுசுவை யுண்டி யமர்ந்தூட்டுபவ ளாகினள். காரிகைநல்லாள் காதலினும் நல்லாள். தான் பரிமாறும் ஒவ்வொரு பிடி யன்னத்திலும் தன் காதலையும் கலந்து ஊட்டினள். அது கசக்குமோ? இனிக்குமோ? கண்டார் அறிவார். காணார் உணரார். தன் காதலுக்கினிய கற்பகமே பரிமாற, தான் போதும் போதுமென்ன, தன் இதயங் கவர்ந்த அரசி இன்னும் கொஞ்சம்—இன்னும் கொஞ்சமெனக் கொஞ்சிப் புன்முறுவல் பூத்து மீண்டும் தன் இலையில் படைத்திட, தான் அடிக்கடி சிரம் தூக்கிக் காதல்வதனங் காண—வனப்புறு தனங் காண, கண்ணோடு கண்ணோக்க, அவ்வின்பப் புசிப்புச்சுவை அமிர்த பானத்திற்குத் தானேது?

இங்ஙனம் நிகழா நிற்ப, ஜெகநாதர் நெடுந்தூரத்தே யுள்ள தோர் நகருக்குச் சென்று திரும்பவேண்டியிருந்தது. வருவதற்கு மாதம் ஒன்றாகும். பங்கஜத்தையும் உடன் அழைத்தேக விரும்பினராயினும், இருவர் தம் காதல் நோக்கித் தாம் மட்டுமே பிரயாணமானார். வீட்டின் சொந்தக்காரரான மதனகோபாலரிடத்தில் பங்கஜத்தை விட்டுச் சென்றார். மதனகோபாலருக்கு ஒரு குமாரன் உண்டு. ஜெகநாதரிடத்து ஏதோ சில மர்மங்கள் இருப்பதாக மதனகோபாலர் ஊகித்திருந்தார். அவர் தற்போது தோன்றும் வண்ணம் ஏழ்மை கொண்டவரல்லர் என்பது மதனகோபாலரின் தீர்மானம். எனவே, பங்கஜத்தைத் தன் மைந்தனுக்குக் கொள்ள நினைத்திருந்தார். இடையே ராமதாஸன் குறுக்கிட்டது அவர் மனதிற்கு வெறுப்பை விளைவித்தது. இப்பொழுது ஜகநாதர் இல்லாதிருக்கவே, இதுவே தருணமென்று பங்கஜத்தினிடம் தன் விருப்பத்தை வற்புறுத்த முற்பட்டார். பங்கஜத்திற்கு இது ஸகிக்கொணா வேதனையாக இருந்தது. தன் பிதா சென்றுள்ள நகருக்குப் பிரயாணப்பட்டுவிட ராமதாஸனின் துணையை நாடினள். இருவரும் தருணம் நோக்கினின்று ஒரு தினம் இரவு ஏழு மணிக்கு ரயில் ஏறி விட்டனர். மதனகோபாலர் இல்லத்தில் பங்கஜம் இல்லாதிருக்கவே, ராமதாஸனைக் குறிப்பிட்டுப் போலீஸுக்கு அறிவித்து, அதே இரவில் அடுத்த ஒன்பது மணி வண்டியில் புறப்பட்டு விட்டார். ராமதாஸனும் பங்கஜமும் சென்றது சாதாரண வண்டியாதலின், மதனகோபாலர் ஏறிச் சென்ற 'மெயில்' வண்டி அவர்களை எட்டிப் பிடித்துவிட்டது. மதனகோபாலர் ராமதாஸனைப் போலீஸார் வசம் ஒப்புவித்தார். நர சோரக் கேஸ் ஆக விவகார வடிவு உண்டாக்கினர். வீட்டிலிருந்த சிறுமியைத் தீய நினைவுடனும் இட்டுச் சென்று விட்டதான குற்றத்தில் ராமதாஸனைச் சிக்க வைத்தார்.

---

125. உடற் பிறப்புக்குச் சமமாக உலகில் மற்றொன்றைப் பெற இயலா. பெறினும் சுவை யற்று மனஸ்தாப ஏமாற்றத்தில் முடியும்.

நீதிஸ்தலத்தில் விசாரணையும் நிகழ்ந்தது. பங்கஜமும் விசாரிக்கப்பட, தானே ராமதாஸனை அழைத்தேகியதாக நவின்றாள். ஆயினும் அநுமதியின்றி அந்தரங்கமாய் இட்டுச்சென்ற குற்றம் ராமதாஸ னின் மீது ஏற்பட்டுவிட்டது. ராமதாஸன் சிறையில் இருந்தான் மதனகோபாலர் தமது குமாரனை மணப்பதாகில், இப்பொழுதே அவனுக்கு உடன்படுவதாகில் ராமதாஸனைத் தப்புவிப்பதாக மொழிந்தார். பங்கஜம் தன் கற்பு பாழ் படுவதிலும், தன் ஆர்வ லன் சிறையுற்றுத் திரும்புவதே நன்றென்றும், சிறை புக்கிய சிர மம் தீர, அதன் பரிசாகத் தன்னை யவருக்குக் கொடுத்துவிடுவதென் றும் மனோதிடங் கொண்டாள். மயங்கினளில்லை. 'துயருண்டோ துணிவுள்ளோர்க்கே'.

ராமதாஸனோ சிறையில் தன் காதலியை நினைத்துச் சருத் தழிந்தான். அந்நங்கை முன்பு தனக்கு விடுத்த காதற் கடிதங்களின் ரஸமான பாகங்களை ஒரு சிறு புத்தகத்தில் எழுதிவைத்திருந்தான். அக்குறிப்பு நூல் சிறைச்சாலையிற் கூட அவனுடனேயே இருந்தது. அவற்றைப் பன் முறை திரும்பத் திரும்ப வாசித்துப் புளகிதமுற் றான். அக்காதற் கடிதங்களின் குறிப்புகள் பின்வருமாறு:—

1

"எனக்கு நீ மனப்பூர்வமான அன்பை விளக்கி எழுதினால் இவ்விடம் யார் கையிலாவது அகப்பட்டு விட்டால் பெருத்த மோச மல்லவா?"

2

"அன்பைப் பற்றி எழுதவேண்டாம். குறிப்பான சங்கதி யை மட்டும் வேறொருவர் எழுதுவதுபோல் எழுதவும். வேறே கை யெழுத்தும் போடவேண்டியது. நான் உணர்ந்து கொள்வேன்."

3

"நீ எனக்கு எழுதியவைகளைச் சிரித்துக்கொண்டே வாசித்து, தேகம் சிலிர்த்துப் புளகாங்கிதம் கொண்டேன்."

4

"அன்பைக் குறித்து எழுதாமல், மவுனமாக சங்கதிகளைக் குறித்து எழுதவும். யாரும் என் பேருக்கு வரும் 'லெட்டரை' வாங் கக்கூடாதென்றும், தபாற்காரனையும் கண்டிப்பு செய்து எனக்கு வரும் 'லெட்டரை' என் எதிரில் கொடுக்கவேண்டுமென்றும் உறுதி செய்திருக்கிறேன். நீ பயப்படாமல் வீட்டு விலாஸத்திற்கு எழுதவும்."

---

126. அன்பில்லாதாரிடத்தில் அன்பு வை—அன்பு வை யென்று வற் புறுத்தினால், இல்லாத அன்பை அவர்கள் எப்படி வைக்க முடியும்?,

5

"என் அன்பின் பெருக்கே! உன்னை விட்டுப் பிரிந்து, என் மனது ஒருமைப்படவில்லை. உன் சம்பவங்களை நினைக்குந்தோறும் மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. உனக்கு என்ன தைரியம்; என்ன ஊக்கம்; உன் மனோபீஷ்டத்தை முற்றிலும் நிறைவேற்றி வைப்பேன்."

6

"2-நாளைக்கு மட்டும். லீவ் எடுத்துக்கொண்டு வியாழக்கிழமை இராத்திரி வண்டியில் ஏறி இரவு 11½-மணிக்கு இவ்விடம் வா.***"

7

"கடிதத்தை வாசித்து விட்டுக் கிழித்துவிடவும். முன்போல் கட்டுக் கட்டி வைக்கவேண்டாம்."

8

"என் அன்பைக் கொள்ளை கொண்ட உன்னை எப்பொழுது பார்ப்பேனோ தெரியவில்லை."

9

"நான் புறப்பட முடியவில்லை. வீணில் குளிர்ந்த வாடையில் ரயிலடிக்கு வந்து அல்லல் பட்டிருப்பாய். தவிர, என் மேல் கோபமும் சோகமும் அடைந்திருப்பாய்."

10

"என் வாழ்நாளே ஓர் விசித்திரமாய் நடந்து வருகிறது. ஆனால் பார்ப்பவர்கட்கு மட்டும் மாட்சியா யிருக்கும்."

11

"நீ என் லெட்டர்களை வைத்துக்கொண்டு அவமதி செய்து சந்தியில் விட்டால் அந்தப் பாவம் உன்னையே சேரும்."

12

"ஸரஸ ஸல்லாப! உல்லாஸ! என் இன்பமான காதல! என் எதிரில் நில். மவுனத்துடன் எனைப் பிரிந்து, ஏங்கவிட்டு மறைந்து யிருப்பது சரியல்ல. தேவாமிர்தமான கடிதம் கிடைத்து ஆநந்த பரவசமடையலானேன். நீ சிரிக்காதே. வாய் திறந்து பேசு. உப்பரிக்கையில் நீ என்னுடன் உரையாடினதைப் போல்—இனி எப்பொழுது சந்திப்பேனோ அறியேன்."

13

"எப்படி யிருந்தாலும் நான் மதனகோபாலருக்குப் பயப்பட மாட்டேன். கண்டிப்பாய் அறியவும். நீ தான் பயந்து அன்று மெத்தைமேல்......என்றும் பகர்ந்தது என் ஹிருதயத்தைப் பல

---

127. "அவன் முகத்திலேயே விழிக்கக்கூடாது" என்று ஏசி விட்டுப் பின்னர் கெய்யுஞ் சாதமும் படைப்பதில் என்ன பயன்?

துளைகள் செய்துவிட்டன. அத்துளைகள் அடைபட நெடுநாள் கழியவேண்டும்."

14

"என் அன்புக்கு இசைந்த ஜீவிய மாணிக்கமே! அச்சம் வேண்டாம். உள்ளதில் ஒன்றும் குறையாது. யார் யார் என்ன சொன்னாலும் நின்று விடுவது ஒன்றுமில்லை."

15

"இதற்குப் பதில் பயப்படாமல் என் மனது மகிழும்படி அன்பாக எழுதவும். வீட்டில் யாருமில்லை. சொந்தமில்லாத பாவி."

16

"நம் இருவரது கட்டையும் காஷ்ட மனுகும் வரையில் இந்த அன்பானது அணுவளவும் விலகாது. அல்லிராணியைப் போல் எவர் கைக்கும் சிக்காமல் நான் இதுவரை யிருந்து, உனக்கு ஊழ்வினைப் பயன் பொருட்டு, வசப்பட்டதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்."

17

"உன் இன்பரஸமான நிருபம் பெற்று, அகமகிழ்ந்து ஆநந்தக்கடலில் மூழ்கி, கரையைக் காணமல், அலையில் சிக்குண்டு தத்தளிக்கின்றேன். உன் கடிதம் வாசிக்க வாசிக்க சிரிப்பும் பூரிப்பும் மேன்மேலுங் கொண்டு, நிலை தடுமாறி மதிமயங்கி, கண்கள் வெறி கொண்டு, பிறகு ஒருவாறு—ஸ்டேஷனில் பிரிந்த பாவனைபோல்—கடிதத்தின் கடைசி வரி வருகிற இடம் வந்து சேர்ந்தேன்."

18

"என் பிராண காதலா! அடியாள் பேரில் நீ கொண்ட அன்பினால், லெட்டர் எழுதவேண்டி யிருந்தால், எழுதின லெட்டரை யாரிடமும் கொடுக்காமல் நீயே போஸ்டாபீஸ் சென்று போஸ்ட் செய்யவும். அப்படி சாமர்த்திய மில்லாவிட்டால் எழுதுவதை நிறுத்திவிடவும். அடியாள் பாவி. உன் அன்பான காதலி.—"

19

"என்னுருயிரே! நீ இதை வாசித்துவிட்டுக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு, சோர்ந்து அயர்ந்துவிடாதே. கிணற்று ஜலம் எங்கும் போய்விடாது. எப்படி அநேக நாள் கா—லக்ஷிப்பது?

20

"என்னைக் கைவிடாத காருண்யமுள்ள கம்பீரமான காதலா! உன்னை மறந்திருக்கச் சற்றேனும் மனத்திட மில்லாமல் திகைப்புற்றிருக்கின்றேன். இது எப்படி முடிவாகுமோ தெரியவில்லை. ஆனால்

128. எதிலும் பட்டுக் கொள்ளாது ஒதுங்கி நிற்கும் ஸகோதரத்வமும்—நட்பும் யானையுண்ட விளாங்கனி. கவலை தரும் பரிதாபக் காட்சி.

எனது மனது மாத்திரம் உனக்கு முன்பு நான் எழுதியவிதம் என் மனவுறுதி ஓரே ஸ்திரம் தான். சற்றேனும் குன்றாது."

21

"உன்னைக் கைப்பிடியாகப் பிடித்த நான் எப்படிக் கரை மரம் சேருவதென்று ஐயுறுகிறேன். நீ பலவாறு அவநம்பிக்கையுடன் எழுதியிருந்ததானது என் இதயத்தைக் கோடாரிகொண்டு பிளந்ததைப்போல் ஆகிவிட்டது. இருந்தாலும் யான் உன் மீது கொண்டிருக்கும் அன்பின் பொருட்டு என் மனத்தைப் பலஹீனப் படுத்திக் கொள்ளவில்லை."

22

"என் கட்டை இவ்விடமும், என் ஆசை உன் மேலும் குதித்துக்கொண்டிருக்கிறது. அன்பை யடக்கி வெளிக்குக் காட்டாமல் எழுதவும். இதை வாசித்துவிட்டுக் கிழித்து விடவும்."

23

"அதிக பலஹீனமா யிருக்கிறேன். என் விபாகூலம் போதாதென்று, உன்னைப் பிரிந்த வியாகூலமும் என்னைச் சூழ்ந்து, படுக்கையில் அமிழச் செய்கிறது. இரு இருதயமும் ஒற்றுமைபாக இருப்பதால், உன் வாழ்நாளும் கஷ்டமும் சுகமும் எனக்கும் பங்குண்டு. மானிடருக்குப் பணமும் சந்தோஷமுமே பலம் தாத்தக்கதென்று இப்பொழுது தெரிகிறது."

24

"கடவுள் பிரித்துவைத்து நம் மனத்தைச் சோதிக்கிறார். சிங்கங்களுக் கெல்லாம் அகப்படாத இம்மான் உன் கையில் அகப்பட்டுவிட்டதல்லவா? "ஆவு லேனிவாடு ஆவுக்கு ஏடிஸ்தே, தெங்காய லேனிவாடு தொல்வி தொல்வி ஏடுஸ்ஸாடு"—என்பது தெலுங்குப் பழமொழியாம்.

25

"அன்புடன் அநேக முத்திகளை யான் கொடுப்பதை அங்கீகரிக்கவும். நாமிருவரும் ஜலக்கிரீடையாடின நினைவு அடிக்கடி நிமிஷத்துக்கு நிமிஷம் என் மனதில் உதிக்கிறது. பூங்கொடியே! இனி நாம் இருவரும் சந்தித்துப் பரவச மடைவ தெக்காலம்? படிக்கும்போதே மவுனமயமாய்ச் சிரி. சத்தம் போட்டுச் சிரித்துவிடாதே. முத்தமிடுவதிலும் சத்தம் கூடாது. அதிகம் எழுதக் கடவுள் நேரம் அளிக்கவில்லை. கிணற்றுத் தண்ணீர் எவ்விடமும் போய்விடாது. நீ மட்டும் கவலைப்படாம லிருக்க வேண்டியது. உன்னைவிட என்

---

129. தன் வீட்டுக்கு வந்தவர்களை அவர்கள் போகும் வரையில் கடுகடுப்பது, பேசுவதை நிறுத்துவது, பின்பு அவர்கள் பிரயாணப் படுகையில் மட்டும் உபசரித்தனுப்புவது—இதுசிலர் வழக்கம்.

ஸ்திதி மேலானதென்று என்னைப் புகழ்ந்தெழுதி யிருப்பதை ஆழ்ந்து யோசித்தால்—என்ன பஞ்சதந்திரம்! என்ன நயனமொழி! ஆகா! உன்னை இப்பொழுதே கட்டித்தழுவிக் கன்னத்தைக் கடித்து விடுவேன். என் செய்வேன்! சுற்றிலும் பார்த்தால் உன்னை எங்கும் காண்கிலேன். உன் அன்புக்கிசைந்த ரமணீமணியான பங்கஜா.

26

"நான் தான் இவ்வளவு துரதிஷ்டம் கூடியிருந்தால் என் பிராண நேசரும் இப்படியாக வேண்டுமா? என் மனது பலவாறு சிதறுண்டு தத்தளிக்கிறது."

27

"ஜ—ரம் வந்து கஷ்டப்பட்டு இன்று சுகமாயிருக்கிறது. காதல் சுரத்திற்கு இந்த ஜ்வரம் எம்மட்டு? இறந்துவிடாமல் பிழைத்து விடுகிறேனே என்று கவலைப்படுகிறேன்.

28

"உன் கவலைகளும் என் கவலைகளும் தொண்டை பிடிக்கயிருந்துகொண்டு எழுத முடியவில்லை. வேலையுமில்லை."

29

"என்னுருயிரே! உன் அபூர்வமான முத்திகளை யான் அன்புடன் ஏற்றுக்கொண்டு, இன்று உனக்கு ஆயிரம் முத்தங்கள் ஈய்ந்து ரமணியகரமாய் ஸம்பாஷித்தது போன்ற ஸ்வப்பனமொன்று கண்டேன். அதில் உன்னுடன் உரையாடி இன்பங் கூர்ந்தேன்:—'நுவ்வு சத்து—வேசி—மாட்லாடுதாவு. ஜன்னல் ஸந்துலா—ஒகுரைஞு—சூஸ்துரு. நன்னி—விடுசேயி. நீ—தேக்கர (Gha)—ஒஸ்தினி—ஒக—'முத்து'—பெட்டிதினி. திவுக—போதானு" என்று கனவில் மொழிந்து மகிழ்பூத்தேன்.

30

"என் பிராணகா! ஸரஸஸல்லாபா! இந்தலெட்டர் எழுதிமுடித்துக் கவருக்குள் போடும்போது, திடீரென அடிவயிற்றிலிருந்து ஒரே எரிச்சல் கண்டு வயிறுமுழுதும் எரிந்து, திகிலடைந்து, அயர்ந்து, சற்று நிதானித்து இதை எழுதலானேன். யாருக்கு என்னவோ?—கடவுளே அறிவார்!

* * * * * *

இக்குறிப்புகள் ராமதாஸனுக்குப் படிக்கப் படிக்கப் பரவசமளித்து முடிக்க மனமெழா முதன்மையைக் கொடுத்ததால், வாசித்தவற்றையே மீண்டும் பார்க்கும்படியாக அடிக்கடி நேர, அதிலேயே தன்னை மறந்து நின்றான். தான் இருக்குமிடம் சிறை என்பது கூட அவன் மனதிற்கு அந்த ஸமயம் தோற்றவில்லை.

---

130. அலக்ஷியமாய்விட்ட இடத்தில் பழய அன்பை நினைத்துப் பின்னும் தங்குவதிலும் மானங்கெட்ட காரியம் வேறில்லை.

அத்தியாயம். ௨

சிறைப் பிரவேசம்

பகல் மூன்று மணி இருக்கும். கோர்ட்டு முழுதும் பேரிரைச்சலா யிருந்தது. "ஜூரிகளும் உன்னைக் குற்றவாளி யென்று கூறிவிட்டனராகலின், இரண்டு மாத கடினகாவல் சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறது" என்று நீதிபதி தீர்ப்பளித்தார். உடனே ராமதாஸனின் கைகளில் விலங்கிட்டனர். கோர்ட்டும் கலைந்தது. அத்தண்டனையை எதிர் பார்த்தவன் போல் இளைஞன் ஸந்தோஷமாகவே இருந்தனன். பூனை வாயிற் சிக்கிய கிளிக்கு மீட்சியு முண்டோவெனத் துணிவு மிகுந்தான். "நன்றே செய்வாய்; பிழை செய்வாய்? நானோ இதற்கு நாயகமே"— என்று கூறிய வண்ணமாக நீதிஸ்தலத்தினின்றும் வெளியில் வந்தான். போலீஸ் சேவகர் இருவரும் பின் தொடர்ந்தனர். ஏற்கெனவே ஸன்னத்தமாகக் கோர்ட்டுக்கு வெளியே யிருந்த வண்டியில் மூவரும் ஏறினர். சற்று நேரத்திற் கெல்லாம் ஒரு பெரிய கற்கோட்டையின் வாயிலில் வண்டி வந்து நின்றதும் மூவரும் இறங்கினர்.

கோட்டைக்கு முன்புறத்தில் பல அழகிய பூஞ்செடிகள் வரிசை வரிசையான சிறுசிறு ரஸ்தாக்களின் ஓரத்தில் வைக்கப்பட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தன. மேன்மாடியிலிருந்து டெலிபோன் கம்பிகள் ஆங்காங்கே போடப்பட்டிருந்தன. இரண்டு ஜெயில் வார்டர்கள் கோட்டைவாயிலில் துப்பாக்கி ஸகிதமாக உலாவிய வண்ணம் காவல் காத்து நின்றனர். சற்றுப் பெரிய உத்தியோகஸ்தரொருவர் வாசலில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவனிடம் ராமதாஸனைச் சேவகர்கள் ஒப்புவித்து விட்டுச் சென்றனர்.

இளைஞன் என்னதான் தைரியமா யிருந்தபோதிலும், தான் இப்போழுது ஓர் சாதாரணக் கைதி என்ற உணர்ச்சி நெஞ்சில் சுருக்கென்று தைத்தளவில் தன்னை யறியாத நிலையில் கண்ணீர் அருவிபோற் சொரிந்தான். உள்ளுக்குள் பெரும் வாதனையை அனுபவிப்பவனாக அவனது வதனம் பளிங்கு போல் காட்டிற்று. பெருமூச்செறிந்தான். அவனைத் தேற்றுவோ ரெவரையும் காண்கிலன். ஆற்றுவா ரொருவருமில்லாத நிலை ஒரு சிறைவாசத் துயர் போன்றதேயாமெனச் சிந்தித்தான்.

---

131. உறவாடிவிட்டோமே என்று உபசரிப்பதே யொழிய, உள்ளன்புக்காக உபசரித்த காலம் இப்போதில்லை.

அரை மணி நேரம் இவ்விதம் கழிந்தது. அங்கிருந்த "நாற்காலி மனிதர்" ஒன்றை அழுத்தினார். அதே நிமிஷத்தில் இரும்பு வளையங்களை ஒரு மனிதன் எடுத்துக்கொண்டு வந்தான். அவன் உடைகளைக் கவனித்ததில் அவனும் ஒரு கைதியாக யிருந்தான். ராமதாஸன் வந்தவனை நோக்கி, "ஸகோதரா! உன்னை நோக்கில் பெரிதும் அச்சமே விளைகின்றது; நானும் உன் நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறேன்; ஆதலின் அருள் சுரந்து மெல்லிய சிறு வளையத்தினை எனக்கு இடவேண்டும்" என்று மெதுவாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அவனும் கைதியானதால் நெஞ்சம் இளகி இலேசான ஒரு வளையத்தைக் காலில் இட்டான். வார்டர் ஒருவன் இரண்டு ஜதை ஜெயில் உடுப்பும், ஒரு குல்லாவும், புசிக்கும் கிண்ண மொன்றும், ஒரு புது மோங்தையும்—கொடுத்து விட்டு, ராமதாஸன் தரித்திருந்த ஆடை யாபரணங்களையும், அவன் சட்டைப்பையிலிருந்த பணத்தையும் ஒரு மூட்டையாகக் கட்டி "நாற்காலிமனித"ரின் எதிரில் ஒரு 'சீல்' செய்து காட்டிவிட்டு, மூட்டையை உள்ளே எடுத்துக் கொண்டு சென்று விட்டான். சில நிமிஷங்களில் மற்றொரு வார்டர் வந்து ராமதாஸனிடம் தரப்பட்ட உடுப்பை அணியச்செய்து, மொங்தையையும் கிண்ணியையும் எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, பெரிய இரும்புக் கதவைத் திறந்து உள்ளுக்கு இட்டுச் சென்றான். போகும் வழியில் ராமதாஸன் தன்னையே மாறி மாறிப் பார்த்துக் கொண்டே சென்றான். அவன் நெஞ்சம் பொங்கிக் கலங்கியது. "ஆ! சரியான கைதியாய் விட்டேன். இன்றுடன் என் ஜென்மம் பாழ். இவ்வினை எய்துதற்கோ நான் பிறந்தேன். என் பிறப்பும் பாழ்பட்டது. உலகெலாம் என்னை இகழினும் இகழ்க; என் காதற் கிளியும் என்னை இகழுமோ?" என நவின்ற வண்ணமதாக வழி நடந்தான்.

சிறைச்சாலையைச் சுற்றிலும் கோட்டையை யொப்பக் கருங்கற்களால் அமைக்கப்பட்ட வானளாவிய மாடிகள் புலப்பட்டன. இனி "விடுதலைநாள் அணுகி இதனின்றும் வெளிப்படினும், உண்மையன்பர் சிலர் தவிர, ஏனையோரனைவரும் கண்டுங் காணாமலும் "ஜெயிலுக்குப் போனவன்" எனத் தூற்றுவர். தந்தைக்கும் பெரிய அவமானம். உன் மைந்தன் சிறை புக்கிய வனன்றோ என்று எளனம் புரிவர். சபை யொன்றில் கம்பீரப் பிரஸங்கம் நிகழ்த்திடினும் சிறை புகுந்தோனெனத் தெரியின் தாழ உரைத்துக் கேவலப்படுத்துவர். கௌரவமுள்ள பரம்பரையான குடும்பத்திற்கே என்னால் ஒரு பழிச் சொல் நேர்ந்துவிட்டது. கெடுதி விளைக்க நினைத்துத் தீயது புரிந்தேனல்லேன். அதனை என் காதற்காரிகை யறிவாள்.

---

132. செய்யவேண்டிய வேலைகள் அதிக மிருக்கிறது. வந்தவருடன் பேசவேண்டியு மிருக்கிறது. அவரும் எழுந்திருப்பதாகக் காணோம்.

சரியோ, தவறோ, எனக்கு என்ன நேருவதா யிருப்பினுமே, மன சாக்ஷியின்படி ஒழுகுவதே என் வாழ்க்கையின் கடைப்பிடி. என் மனசாக்ஷி என் செயல்களை மெச்சுவதையே நான் எதனிலும் மேலாக விரும்புவேன். என் மனசாக்ஷியோடன்றோ நான் உண்பதும் உறங்குவதும் ஸதா கூடி வாழ்வதும்? என் காதலி! பங்கஜா!

"உண்ணும் ஆரமுதுமாய், மெய் உறவுமாய், உயிரும் ஆகி,
கண்ணுமாய், கருத்துமாய், செய்கருமமாய், கருமம் தன்னால்
நண்ணும் மாநிதியுமாய், அந்நல்நிதிப் பயனுமாய், என்
எண்ணும் ஆம் உன்னை நீங்கி யான் எவ்வாறு உய்வேன்!"

பெண்மணி! பங்கஜா! நான் உன்னை மீண்டும் என்று காண்பேனோ? நான் உன்னைத் தவிர வேறெவரையும் கனவிலும் கருதேன். அன்று ஆரம்ப சந்திப்பின்போது நீ புன்சிரிப்புடன் என்னை அடிக்கடி நோக்கியதை நினைத்தால், ஆஹா! நான் அப்பொழுது அடைந்ததை விட உலகத்தில் பிறிதொரு இன்பத்தை என்றுமே காண முடியாது. என்ன—என் மனத்தை இவ்விதம் பறிகொடுத்துவிட்டேன்?—என்று என்னையே நான் அத்தருணம் வினவிக்கொண்டேன். சீ! அதிரூபலாவண்யமுள்ள (பேஷான) பெண் என்றால், உடனே மயங்கிவிடுகிறதா?—அது கூடாது என்றும் என்னுள் கூறிக்கொண்டேன். ஒருவன் ஒரு பெண்ணின் மீது அழியாத காதல் கொண்டிருந்தால், அதே மாதிரியாக அப்பெண்ணும் அவன்மீது நிலைத்த மெய்க்காதல் கொண்டன்றோ இருக்கவேண்டும்? அவன்மீது அவளுக்கு உண்மையான காதலும், காதலுக்கேற்ற விநயாதிகளும் இருந்தாலன்றி அவளை விரும்புவது சரியோ? இவ்வித சம்சயத்திலும் உன்னை வைத்து வேதனை கொண்ட ஆரம்ப நாட்களைத் தற்போது கருதிடின் வெகு வெகு ருசிகரமே. உனக்கு என் மீது காதல் இருக்குமென்று ஏன் அப்போது நினைத்தேனோ அறியேன். இயற்கைச் சேர்க்கையே அங்ஙனம் கருதிட வைத்ததோ யாதோ! ஆகா! என் பிராணசுந்தரீ! உன்னை ஒரு விநாடியாகிலும் மறந்திருக்க முடியவில்லையே! என் செய்வேன்! மறுபடியும் உன்னை நான் சந்தித்தாலொழிய எனக்கு ஸமாதானம் உண்டாகாது. என் மனமும் ஆறாது. பிரிவினும் இறத்தலே நலம். இனி நான் இவ்வுலகில் இருத்தல் அடாது. மடிய—முடிய வேண்டியதே" எனப் பல பல கருதி நெஞ்சுருகினான். இறத்தல் எவ்விதமென்ற கேள்வியும் தோன்றியது.

"சிறையில் தற்கொலை கொள்ளவும் இயலா. அதற்கு சாதகமாக

---

133. ஹா! மனதார நம்பினேன். என் அன்பை யெல்லாம் செலுத்தினேன். இன்றைக்கும் அதே அன்பு தான். ஆனால் நீயோ வேற்றுருவமானாய். மறந்தாய்! பிறர் சொல் கேட்டாய். என்னைக் கைவிட்டாய்.

சிறை யதிகாரிகள் விடார். ஆயின் பட்டினி கிடந்து உயிர்விடலாம். இஃதே தருமமார்க்கம். இதனையே அநுஷ்டிக்க வேண்டும்" என உறுதிகொண்டான். சற்றே துயிலுணர நினைத்தும் நித்திரை வந்திலது. வருவது தான் யாங்ஙனம்?

தன் நகரில் தன் இல்லம் மிகச் சிறியதேயாயினும், ஒரு சிறு குடும்பம் சிறப்புடன் வாழ என்னென்ன அவசியமோ அனைத்தும் அவன் மனையில் இருந்தது. நிம்மதியுடனும் காற்றோட்டமான ஒரு அறையில் ஸ்வயேச்சையாக ஸயனித்துக்கொண்டு, தூக்கம் வருமளவும் தாய் தந்தையர்கள் பேசிக்கொள்வதை கேட்டுக்கொண்டும், வாசித்துக்கொண்டும் இருந்து பின்பு நித்தரிக்கும் வழக்கமுடையவன். அத்தகைய சுகலோலன் இவ்விருட் சிறையில் துயில் கொள்வது எவ்விதம்? அன்றியும் புது இடம். அதிலும் சிறைச்சாலை. காவல் சூழ்ந்த பூலோகநரகக் கோட்டை. இதனுள் ஒரு தனி அறை. எதுவாயினும் பசி ருசி யறியுமோ? தூக்கம் சுகம் கோருமோ? தூங்காமலிருத்தல் சாத்தியமா? எழுந்து மற்றொரு ஜதை யுடுப்பை அடியில் விரித்து, கம்பளியைத் தலையணையாகச் சுருட்டிவைத்துக்கொண்டு தலை விதி. என்று ஸயனித்தான். குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. நித்திரையும் மெல்ல மெல்ல நெருங்கியது. அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

ராமதாஸைக் குறித்து இங்கு சிறிது வர்ணனை செய்வோம். அவன் பருவம் இருபது. மரியாதையுள்ள சிறந்த யுவகன். கம்பீரமான உருவமுள்ளவன். பிரகாஸமான நேத்திரங்களும், சுருட்டையான கேஸங்களும், களங்கமற்ற முகவசீகரமு முடையவன். எக்காலத்தும் வெண்மையான ஆடைகளையே யணிபவன். காதல் உள்ளத்தினன். பெண்பாலார்க்கு ஸகோதர முறையில் கடிதங்கள் வரைந்து விடை பெறுவதில் அவனுக்கு விசேஷித்த வாஞ்சையுண்டு. அவன் பிதாவுக்குச் சிறிது நிலமும் இருந்தது. அவர்களின் சிறு குடும்பம் கவலையற்றுண்ணுதற்கான வருமானமும் வந்துகொண்டிருந்தது. அவனது பிதா சற்று வயோதிகராயினும் எவரும் கண்டு உள்ளமுவக்கும்படி யான உருவமுடையவர். வயது 50—இருக்கலாம். ஒருவருடைய ஜோலிக்கும் போகாத உத்தமர். இத்தகைய பெரியாரின் புத்திரனை ராமதாஸனுக்கு இவ்வவகதி நேருமாகில் உருகாதார் யாவர்? முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

184. மன ஒற்றுமை இருந்தாலன்றோ நம் வீட்டின் க்ஷேம லாபங்களை விசாரிக்க வைக்கும். வீண் விசாரிப்பும் உபசாரத்திற்கே.

அந்தியாயம்—3.

சிறை அநுபவங்கள்.

விடியற்காலம் ஐந்தரை மணி யிருக்கலாம். ஒரு வாத்தியகோஷம் தொனித்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. சிறைக் கைதிகளில் பெரும்பான்மையோர் ஒவ்வொரு சட்டிகளை எடுத்துக்கொண்டு வெளிவந்தனர். வார்டர்கள் பக்கத்தில் வர, யாவரும் வரிசை வரிசையாக வழி நடந்தனர். அவர்கள் சென்ற வைபவம் திருமணமங்கள வரிசை எடுத்துக்கொண்டு செல்லுகிறவர்கள் போல் தோற்றின. சிறைச்சாலையின் ஒரு ஓரத்தில் யாவரும் வந்து சேர்ந்தனர். அங்கு சில 'கக்கூஸ்கள்' இருந்தன. ஒரு பக்கத்தில் வரிசையாகச் சட்டிகளை வைத்தனர். அதில் என்ன இருக்கிறதென்று அறிந்து கொள்ள ராமதாஸனுக்கு அவசரம். பார்த்தான்—அதில் துர்க்கந்தமான மலஜலம் நிரம்பியிருந்தன. தலைவிதி யெனத் தலையில் அடித்துக் கொண்டான். ஐம்பதாயிரத்துக்கு மேல் கொண்ட அந்த சிறைக்கைதிகளில் ஒரு சிலர் 15—அல்லது 20—பெயர் இருக்கலாம்; அவர்கள் மட்டும் கக்கூஸ்களில் மலபாதை நிவர்த்திசெய்து கொண்டு பக்கத்திலிருந்த தொட்டிகளில் கால் அலம்பினர். ராமதாஸனும் இதில் ஒருவன். மற்றவர் அனைவரும் தம் அறையிலேயே மலஜலம் தத்தம் சட்டியில் கழித்துவிட்டு கௌபீனத்தை இறுக்கிக் கட்டிக்கொண்டவர்களாவர்! ஐயோ! கால்கூடக் கழுவ அவர்களுக்கு வசதிப்படவில்லை!!

பின்னர் யாவரும் தாங்கள் உணவேற்கும் மேடையண்டை சென்று தத்தம் மொந்தை போஜனபாத்திரங்களை எடுத்துக் கொண்டு வர, அன்னோ ரனைவரும் ஒருபெரிய தண்ணீர்க் குழாயண்டை கொண்டு போகப்பட்டனர். வரிசை வரிசையாகக் காலை 6½ மணிக்குள் நிறுத்தப்பட்டனர். பின்பு யாவருக்கும் ஆறிய கூழ் வார்க்கப்பட்டன. சிலருக்கு மட்டும் அரிசி கஞ்சி வார்க்கப்பட்டன. மிளகாயும் உப்பும் புளியும் மட்டுமே கலந்து இடித்த ஊர்காயும் பெற்ற பின்னர், தாங்கள் வழக்கமாகப் புசிக்கும் மேடையண்டை போய் உட்கார்ந்து உண்டனர். ராமதாஸ் கஞ்சியை வாங்கினனே யொழிய புசிக்க மனம் இசையவில்லை. அன்றியும் பட்டினி கிடந்து

---

135. முகத்தாலும் செய்கைகளாலுமே (மனம் மாறிய) ஒருவருடைய குணங்களைக் கண்டுகொள்ள முடியாதா? இது கூடவா கஷ்டம்?

உயிர் மாள்வதென்ற தன் சபதத்தையும் நினைத்துக் கொண்டான். பக்கத்திலிருந்த இருவருக்குத் தன் கஞ்சியை ஊற்றிவிட்டான். சிற்றுண்டி வைபவம் தீர்ந்தது.

காலை ஏழுமணிக்கு வேலையைத் துவக்கும் சங்குநாதம் கிளம்பிற்று. அவரவர்களுக்கு நியமித்த வேலைகளைச் செய்யப் புறப்பட்டு விட்டனர். ராமதாஸ் பருப்பில் கருப்பு, பொட்டு, தூசி முதலியனவற்றை பொருக்கி எடுத்து விடும்படியான வேலையில் விடப்பட்டான். ஸந்தோஷமாகவே வேலையைச் செய்ய ஆரம்பித்தான். ஏனெனில் தனக்கிட்டது சுலபமான வேலை. தவிர, தன்னுடன் இருபது வயதுக்குட்பட்ட 30, 40, சிறுவர்களும் உட்கார்ந்து பொருக்கிக் கொண்டிருந்தனர். பக்கத்திலிருக்கும் சிறு கைதிகளை— தன்னைப் போன்ற இளைஞர்களை—அவனவன் எவ்விதமாய் இந்தச் சிறை நரகுக்குள் வந்தான் என்ற விவரங்களை யுணர்ந்து கொள்ள ஆவலும், ஆவசரமும் கொண்டான்.

ஒரு சிறு மரக்கட்டையில் ஒரு கயிறு கோர்த்த ஜெயில்தாலியும், ஒரு சிறு அட்டைப் புஸ்தகமும் ஒரு வார்டர் கொண்டுவந்து தாலியைக் கட்டிவிட்டு, புஸ்தகத்தைக் கொடுத்துச்சென்றான். அந்த அட்டையில் பெயரும், 'கெம்ப'ரும், அரிசிபடி யென்றும், தண்டனைப்பட்ட தேதியும், விடுதலைத் தேதியும், பருப்புப் பொறுக்கும் வேலையென்றும் எழுதப்பட்டிருந்தன. ராம்தாஸின் நெம்பர் 54 நாமும் சிறிது நாள்வரை அந்த நம்பரையே ராமதாஸின் பெயராகப் பாவித்துக் கொள்வோம்.

மாஜிஸ்திரேட் ஒருவனுக்கு சிக்ஷை விதிக்கும்போது, மனுஷ்யனுடையவும் குற்றத்தினுடையவும் தாரதம்யத்தைப் பொறுத்து, சாதம், ஆறிய ரொட்டி, களிபோடவேண்டுமென்று சிறையதிகாரிகளுக்கு எழுதி விடுவதனால்தான் சிலருக்குக் களியும், சோறும் போடுகிறார்களென்று உணர்ந்து கொண்டான்.

குற்றவாளிகள் அனைவரும் ஒரே இடத்தில் வேலை செய்வார்களென்றும், ஒரே இடத்தில் புசிப்பார்களென்றும் ஒரே கட்டடத்தில், ஒரே ஹாலில் (!) யாவரும் நித்திரை புரிவார்களென்றும் நமது 54 - நினைத்திருந்தது யாவும் மாறுதலாகக் காணப்பட்டன.

---

136. தவறுகள்செய்து அதைத் திருத்திக் கொள்வதே நம் வாழ்வின் ஸூக்ஷ்ம அர்த்தம்.

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் நிறைந்த மாதப் பத்திரிகை.

(ஸ்ரீ ஆகம். N. முஹம்மது இபுராஹிம் அவர்கள் ஆதரவினையில் பிரசுரம்.)

கமலம்-18 || திருச்சி: பிப்பிரவரி மீ 1923. || இதழ்-10

ஓம் பரப்பிரம்மணே நம:

பிரேம மாலா

"ஸர்வம் பிரம்ம மயம் ஜெகத்" என்ற பரமசிலாக்கியமான வாக்கியத்தை மறவாமல் இவ்வுலக முழுவதையும் எவன் பிரம்மமாகப் பார்க்கிறானோ அவனே ஞானியாவன். அவன் தான் ஜீவன் முக்தி பெற்றவன். அவ்வாக்கியத்தை மறந்த தக்ஷணமே மாயை சூழ்ந்து கொள்ளுகிறது. மாயையினின்று நம்மை விடுவிக்க வல்லவர் பகவானேயாதலின் அவருடைய ஸாரணாவிந்தங்களை ஸதா தியானிக்கக் கடவோம்.

***

"எவன் சுகி? எவன் யோகி?" என்னும் கேள்விகட்குப் பின்வரும் ஸமாதானம் சொல்லலாம். ஆசை, கோபம் இவ்விரண்டும் அற்றவர்களே சுகிகள். அவர்களே யோகிகள். ஒரு பொருளினிடத்து ஆசை யுண்டானல், அதை அடைய வேண்டுமென்று மனம் துடிக்கிறது. ஆகவே, ஆசையால் மனம் அஸமாதானத்தை யடைகிறது. இவ்வாறே கோபம் உண்டாகும்போது மனம் துடிப்புண்டு அலைகிறது. இவ்வாறு மனம் அஸமாதானத்தை யடையாமல் எதையும் ஸஹித்துக்கொள்ளும் ஸாமர்த்தியம் எவனிடமுண்டோ அவனே சுகி. அவனே சிறந்த யோகி. எந்த விதத்திலும் மனோ ஸமாதானமே அத்யாவசிய மென்றறிந்து ஸஹித்துக் கொள்ளும் அப்யாஸத்தைச் செய்யவேண்டும். இப்படி யின்றி ஆசைக்கும் கோபத்துக்கும் மனதை ஈடுபடுத்துவோன் கஷ்டத்தை யடைகிறான். எத்தனை செல்வவந்தர்கள் ஏராளமான ஐச்வரிய ராசிகளிருந்தும் மனோ ஸமாதானமின்றி அலைகின்றனர். மனோ ஸமாதானம் அற்றோர்க்கு அத்தனை ஐச்வரிய ராசிகளாலும் என்ன பிரயோஜனம்? எவன் சுக

இன்ன மருந்து குணம் தருமென்று கூறினல், அந்த மருந்தை அவர்கள் செலவிலேயே அடையப் பார்க்கிறார்கள்.

துக்கங்களில் பற்றுதலின்றி நிற்கின்றானோ அவனே சிறந்த யோகி. அவனே உண்மையான சுகி.

***

"ஜீவனான புருஷனைப்" "புத்தி"யான ஸ்திரி கல்யாணம் செய்து கொண்டு, "விஷயாதி"களான மருந்தைக் கொடுத்துத் தன் வசப்படுத்தி, "கன்மேந்திரியங்கள்-5," "ஞானேந்திரியங்கள்-5" ஆகப் பத்து பிள்ளைகளைப் பெற்று, புருஷனுடைய பந்துக்களான 'ஸத்குணங்களை' விரட்டி விடுகிறாள். தன் தங்கையரான 'மனசை யும், மற்றப் பந்துக்களான 'துற்குணங்க'ளையும் 'தேக'மாகிய வீட்டு க்கு வரவழைத்து, தன் பத்துப் பிள்ளைகளையும் நோக்கி அவர்கட் குப் பலவித உபசாரணைகள் செய்யச் சொல்லுகிறாள். தன் மக்களு க்கு வேண்டியவரை துர்ப்போதனைகளையும் புகட்டுகிறாள். இவளு டைய மருந்தால் மயங்கிய 'ஜீவன்' அடிக்கடி 'மரண'மாகிய கட னுக்குத் தன் 'சரீர' மாகிய வீட்டை யடகு வைத்து, மறுபடியும் புதிய சரீரங்களை யடைந்து கஷ்டப்படுகிறான். கடைசியாக, தெய்வ கிருபையால் 'கோவிலாகிற' கடைக்கு வந்து, அங்கே 'இஷ்டகாம்ய பல'ஞகிய சரக்கை வாங்க வெண்ணி செட்டியாரான பகவானைத் தரிசிக்கிறான். பின்னர் அங்கே யாதொரு இச்சையுமின்றி வந்தி ருக்கும் பெரியோர்கள் இவன் வாங்கும் சரக்கைப் பழிக்கவும், இவ னுக்கே வெட்கமுண்டாகி செட்டியாரை ஸ்தோத்திரம் செய்து, அவருடைய ஆக்ஞைப்படி அப்பெரியோர்களைப் பின்பற்றி, ஆசாரி யாரை அடிபணிந்து, அவர் கொடுக்கும் 'வேதாந்த ஞான' மென் னும் மருந்தை யுண்டு மயக்கம் தெளிகின்றான்.

***

"சேக்கில் எள்ளைப் போட்டு" ஆட்டினால் சக்கை பிண்ணாக்காக வும், சாறு எண்ணெயாகவும் பிரிந்துபோம். அதுபோல் மனுஷ்யன் ஸதா ஸத்கருமங்களைச் செய்துகொண் டிருந்தால், அவனுடைய ஆணவம், மாயை முதலியன நீங்கி ஞானமாகிய ரஸம் வெளிப்படும். எப்படி எள்ளைச் செக்கில் போட்டு அரைக்காவிட்டால் எண்ணெய் உண்டாகாதோ, அப்படியே ஸத்கருமங்களைப் புரியாவிட்டால் ஞானமுண்டாக மாட்டாது. ஊசியின் பின்னே நூல் வருவது போல், ஸத் கருமங்களின் பின்னே ஞானமும் உதயமாகும்.

***

"ஞானி உலகத்தில் இருக்கலாம்." உலகம் ஞானியிடம் இருக் கலாகாது. இருப்பின் அவன் அஞ்ஞானியாகிறான். குழந்தை உல கத்தில் இருக்கிறது. உலகம் குழந்தையிடம் இல்லை. அவ்விதம் இருப்பின் சிசு, குழந்தை என்ற பெயர் மறைந்து விடுகிறது.

வீட்டில் காலைப் பலகாரத்துக்குச் சற்று நேரமாய் விட்டால், விருந் தாளி காபிஹோட்டலுக்குப் போவதாகக் கூறுகிறார். அந்த சமயம் வீட்டுக் காரரின் மனம் எப்படி யிருக்கும்?

தோணி ஜலத்தில் இருக்கலாம். ஜலம் தோணியில் இருக்கலாகாது. இருப்பினோ அது முழுகிப்போம்.

***

"மனதின் மகிமையே மகிமை." ஒருவனுக்குச் சொந்தமான பொருள்களையெல்லாம் கள்வர்கள் கைப்பற்றக்கூடும். ஆனால் மனதிலுள்ள ரத்நங்களை அபஹரிக்க இயலா. ஒருவனுடைய சரீரத்தை அங்கு மிங்கும் அசையவொட்டாமல் கட்டி வைக்கலாம். மனதைச் சிறைப் படுத்த யாரால் மாளும்? ஒருவராலும் ஆகாது. மனமானது பிரேமையாகிற பாசமொன்றினால் மட்டும் கட்டுப் படத்தக்கதேயன்றி, வேறு எவ்வித பந்தனத்தாலும் ஹிம்ஸை யாலும் கட்டுப்பட மாட்டாது. அதனாலேதான் மானஸீக பூஜை சிலாக்கியமாயிற்று. மனதைப் பகவானுக்கு ஈடுபடுத்துவதைப் போன்ற ஸத்கருமம் வேறொன்றில்லை. பக்தி யோகத்தின் பெருமையும் மனதின் மகிமையாலேதான் ஏற்பட்டது. மனதை மட்டும் உலக வின்பங்களில் அலையவிடாமல் பகவானுடைய பாதபத்மங்களிற் பதியவைத்தால் ஸர்வ ஸித்திகளும் பெறலாம்.

***

"உன்னுடையது என்னுடையது" என்னும் இரண்டு வியவகாரங்களையும் பிரித்து வைக்கும் சுவரைப் பிரீதி—பிரேமையென்னும் கோடாரிதான் இடித்து நாசமாக்கக்கூடும். ஆதலின், கடவுளினின்று நம்மை வேறாகப் பாவிக்கச் செய்யும் கர்மங்களெல்லாம் மோக்ஷ ஸாதனத்துக் குரியவையல்ல. பக்தியால் பரமனுக்கு மகிமை யுண்டு. பரமனும் பக்தியைக் கொண்டாடுகிறார். நெருப்பில் காய்ச்சுந்தோறும், சம்மட்டியா லடிக்குந்தோறும் நல்ல இரும்பு எப்படி அதிகமாய்ப் பிரகாஸிக்கின்றதோ, அப்படியே கஷ்ட முண்டாகுந்தோறும், ஆபத்து நேரும்போதும் நல்லவர்களின் தெய்வ பக்தி உலகெங்கும் பிரகாசிக்கிறது. எவன் ஈசுவரனிடம் பக்தியுள்ளவனோ, அவன் ஈசுவரனால் படைக்கப்பட்ட ஸர்வ பிராணிகளிடமும் விசுவாசம் பாராட்டுவான்.

***

"ஆசையே துக்கத்திற்குக் காரணம்." ஆசை யிருக்குமளவும் கவலை நீங்காது. கவலை யுள்ளளவும் மனம் ஓரிடத்தில் நிலை கொள்ளாது. ஸாதாரணமாய் சலித்துக்கொண் டிருக்கும் மனதுக்குக் கவலை யேற்பட்டால் அதைவிட துக்கம் வேறில்லை.

எந்த வார்த்தையை நீ வெளியில் விட நினைத்தாயோ, அதை உன் வாய்க்குள்ளேயே அடக்கிக்கொண்டால் நீ சாமர்த்தியசாலியே. இல்லையாகில் அசல் முட்டாள்.

ஸஹோதரத்வம்

ஸஹோதரத்வம் என்றால், பேதமின்றி அனைவரையும் தனது சொந்த ஸஹோதரர்கள் போலப் பரிபூரணமாய் எண்ணி, மனமார்ந்த விசுவாஸத்துடன் விளங்குவதாம்.

இதுதான் பெரியபுருஷார்த்தம். கடவுள்ஜீவகோடிகட்கு உள்ள முவந்து தந்தருளி யிருப்பது, இந்த ஸஹோதரத்வ உணர்ச்சியே. இவ்வுணர்ச்சி ஜனஸமூகத்தின் ஸுகஸ்தாபன ஹேதுகரம். இது மிக மிகப் பரிசுத்தமானது. கருணாநிதியான கடவுளின் கட்டளை. இதை ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஜாதியும் கைக்கொள்ளவேண்டும். ஸ்வதந்திர மடைவதற்கு இது ஓர் பெரிய ஸாதனம். நாட்டின் ஸ்வதந்திரத்தை நிலைநிறுத்திக் காத்து வருவதற்கு ஸஹோதரத்வமே சிறந்த வழியாகும். ஸஹோதரத்வமே ஒரு ஜாதியைத் துக்கமடையாம லிருக்கும்படிச் செய்விக்கும். ஸஹோதரத்வமே ஸந்தோஷ ஹேதுவாம். ஜனஸமூகம் இதை ஆதரிக்க வேண்டியது கடமையாகும். அது நலம் பெற இதுவே வழி.

ஸஹோதரத்வம் ஒவ்வொரு குடும்ப விஷயத்திலும் எவ்வளவு சரியோ, அவ்வளவு ஒவ்வொருஜாதியின் விஷயத்திலும் சரியானதே. ஓரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள் எப்படி எவ்வித மாச்சரியமுமின்றி ஒற்றுமையாய்க் கலந்திருந்துகொண்டு தங்களின் வீட்டுக் காரியங்களைத் தலைக்குக் கொஞ்சமாய்க் கவனித்து ஸம்சார சக்கரத்தை ஸுலபமாய் நடத்திக்கொண்டு போவார்களோ, அதே மாதிரியாய், ஒரு தேசத்தவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் ஸஹோதர வாஞ்சை பாராட்டி நடந்து வந்தால், அந்த தேசம் அடையும் நன்மைகள் எண்ணிறந்தன. அந்தத் தேசத்தில் ஒவ்வொரு மனிதனும் தன் கடமை யின்னதென்பதை நன்கறிந்து நடப்பான். ஒவ்வொருவனும் மற்ற ஒவ்வொருவனையும் ஸஹோதரனாகக் கருதி நடத்தினால், அக்கிரமச் செயல்களுக்கு இடமே கிடையாது.

ஸஹோதரத்வந்தான் ஸமத்வத்தைப் பூர்த்தி செய்விக்கும் புனித முறை. ஸஹோதரத்வம் விளங்கும் தேசமே ஸ்வர்க்க உலகம். ஸர்வாநந்த மயமான புண்ய பூமி. கடவுள் அந்நாட்டில் தான் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருந்துத் தொண்டர்களின் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்விப்பார். ஸஹோதரத்வமே எய்தற்கரிய மேன்மை. அதுவே ஜாதீய ஜனஸமூகத்தின் அஸ்திவாரக்

நல்ல பூட்டு சாவிக்குப் போடுகிற பணமும், மனைவிக்குப் போடுகிற நகையும் வீண்போகாது. அது ஸமயஸஞ்சீவி. அதன் பலன் காலத்தில் தெரியும்

கல். ஜன ஐக்கியத்தின் அழியாக் கோட்டை. அன்பின் அரு மையான வடிவம். ஸர்வோத்தமமானது.

உலகத்தில் முக்கியமாய் நம்மவர்க்குள் மதமே பிரதானமானது. இத்தகைய மதத்தில் ஸஹோதரத்வம், ஸமத்வம், ஸ்வதந்திரம் முதலிய ஜனஸமூக தத்துவங்களை நுழைத்து உலகின் நன்மைக்காகவே ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அந்த ஸஹோதரத்வத்தையே போதிக்கின்றது.

ஸ்வதந்திர மடைய தேசத்தவர்களுள் ஸமத்வம் வேண்டும். ஸமத்வம் பாராட்டி நாட்டினரை நடத்திவர ஸஹோதரத்வம் வேண்டும். ஸஹோதரத்வம் ஸம்பூரணமாய் இருந்தால்தான் ஸ்வஜனாபிமானம் உண்டாகும். ஜனாபிமான முண்டானால்தான் தேசபக்தி தழைத்தோங்கி வளரும். தேசபக்தி வளர்ந்தால்தான் நாட்டினர் நலம் பெறுவர். அப்பொழுதுதான் நாடு செழித்தோங்கும். நாட்டின்பெயர் உலகத்திற் கெல்லாம் ஒரு கண்ணியமான பெயராயிருக்கும். அப்படி யிருந்தால்தான் அந்தத்தேசத்தினர்களிடத்தில் வெளி நாடுகளில் எங்கு சென்றாலும் மரியாதை யுண்டு; செல்வாக்குண்டு; ஸஹாயம் உண்டு; ஸ்வசௌகரியமுண்டு; ஸந்தோஷ முண்டு; ஜனப் பரிவுண்டு; அனந்தம் ஸவுகரியங்களுமுண்டு.

ஸஹோதரத்வமானது ஒருநாட்டில் நிலைநிறுத்தப்பட்டால் அந்நாட்டில் எல்லாம் கிரமமாக நடைபெறும். ஜனங்களுக்கு சந்தோஷகரமான ஸர்வாநுகூலங்களும் விளையும். இவ்விதமே நாடுகளுக்கு நாடுகளும் ஸஹோதரத்வம் பாராட்டத் தொடங்கினால், உலகத்தில் போர்க் கப்பல்கள், படைகள், யுத்தக்கருவிகள் முதலான ராணுவப் படைக்கலங்களுக்கு வேலையே யில்லை. அவனவன் தன் கிரமமான அளவுக்குள்—எல்லைக்குள் இருந்துகொண்டு உலகத்தில் ஸந்தோஷமாகத் தனது வாழ்நாளைக் கழித்து ஸுகமாய் வாழ்ந்து வருவான். நியாயஸ்தலங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும், காவல் கிடங்குகளுக்கும் அந்நாட்டில் வேலையே யில்லை.

ஸஹோதரத்வம் விளங்கும் நாடே ஸகல போக பாக்கியங்களும் நிறைந்த இந்திரலோகம். அந்நாட்டு ஜனங்களோ தேவர்கள். ஸஹோதரத்வம் உள்ள நாட்டில் ஜனங்கள் பூர்ண ஸந்தோஷ சித்தர்களாய் இருப்பார்கள். நாட்டின் நலம் பெருகும். நன்மைகள் பல நடைபெறும். ஒவ்வொருவனும் தன் தன் கடமை இன்னதென்றும், அயலானிடத்தில் தான் நடந்து கொள்ளவேண்டிய கடமை

யானை நடையும், குழந்தையின் தளர் நடையும் மிகு வேக முள்ளது. பார்வைக்கு வெகு மெதுவாகத் தோற்றும். இரண்டும் இனிய நடை.

இன்னவித மென்றும் நன்கறிந்து நடந்து வருவான். தேசத்திற்கு ஒரு அபாயம் வருங்காலத்தில் அவனவன் தன் தன் சொந்த ரக்ஷணைக்காகவும், தனது தேச ஸமே ஹாதரர்களின் ரக்ஷணைக்காகவும் ஒன்று சேர்ந்து அந்த அபாயத்தைத் தொலைத்துத் தேசத்தைக் காப்பாற்றலாம். ஸ்திரீகளின் கற்பும், ஜனங்களின் நியாயமும் யாதொரு ஆபத்துமின்றி நன்றாய்ப் பாதுகாக்கப்பட்டு வரும். பஞ்சத்தாலும், பசிப் பிணியாலும் வருந்தி அகால மரணத்திற்கு ஆளாகாமல், பூர்ண ஸந்தோஷத்துடன் தேஜஸ்விகளாய் விளங்குவார்கள். அத்தகைய ஜனஸமூகத்தில் தெய்வத்தன்மை அகண்டமாக ஜ்வலிக்கும். தெய்வத்தன்மை குடிகொண்டிருக்கும் ஜனங்களிடத்தில் ஸகல ஸத்குணங்களும் பிரகாஸிக்கும் என்பது உலகறிந்த உண்மை.

நெருப்பைத் துரும்புகள் அணுகாது. நிறை நெஞ்சுடையவனைத் தரித்திரம் நெருங்காது. முன்னெச்சரிக்கை யுள்ளவனை மீசை முறுக்கும் வஞ்சகன் ஏமாற்ற இயலாது. பரிசுத்தாத்மாவைப் பாபங்கள் சூழாது. பலமுள்ளவனிடத்துத் துஷ்டர்கள் ஸமீபிக்கார்கள். அதுபோல், ஸமே ஹாதரத்வமுள்ள ஜாதியினிடத்து எந்தத் துஷ்டனும்—சகுனியும் அருகே வரான். எனவே ஒவ்வொரு ஜாதியின் ஜனஸமூகமும் கைக்கொண்டு அனுஷ்டிக்க வேண்டியது தெய்வீகமான இந்த ஸமே ஹாதரத்வமே. ஸமே ஹாதரத்வந்தான் ஜனஸமூகத்தின் ஸுகஸ்தாபனம்.

பகவத் பிரீதியாகச் செய்தல்

"ஓரிடத்தில் ரமணீயமான பல விருக்ஷங்களடர்ந்த தோட்டமும், அதனருகே பயங்கரமான வனமும், மற்றொரு விடத்தில் மலைகளும் குன்றுகளும், அவற்றிலிருந்து பெருகும் அருவிகளும் இருக்கின்றன. இவைகளைப் பார்க்கும்போது மனதுக்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாகிறதன்றோ? இருண்ட தோப்பை இராத்திரி காலத்தில் பார்க்கும்போது உள்ளம் நடுங்குகின்றது. பகற்காலத்தில் பக்ஷிகளின் சப்தமும், தெள்ளிய நீரையுடைய அருவிகளும், அவற்றில் அடுக்

குழந்தையின் கையில் பக்ஷணம் தந்து அதிலிருந்து சிறிது வாங்கித் தின்றால் அதற்கு அதிக ருசி. கீழே எறிந்ததைப் பொறுக்கியுண்டால் இன்னும் மிக மிக ருசி.

கடுக்காய் ஜலம் அருந்தும் ஆடுமாடுகளும், குளிர்ந்த காற்றும் எத்தகைய துக்கத்தையும்போக்கடித்து மனோசாந்தியை விளைக்கின்றன. இராக்காலத்தில் இப்பிரதேசமோ பீதியை விளைத்துக் கவலையையுண்டாக்கும். ஆதலின் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு சாந்தி, அதிருப்தி முதலியன ஏற்படுகின்றன. இது பிரபஞ்சத்தின் ஸ்வபாவம். இதைப் பிரகிருதி யென்றும் சொல்வர்.

ஒருவன் நமக்கு ஹிதகாரனுயும், மற்றொருவன் அஹிதத்தைத் தேடுவோனுயும் விளங்குகிறான். இது நம்முடைய பிசகா? அல்லது அவனுடைய பிசகா? உலகமுழுவதும் நல்லவர்களாலேயே நிறையட்டுமென்று ஒருவன் காத்திருந்தால் அவனுடைய விபவஹாரங்கள் எப்படி நிறைவேறும்? ஆற்றைத் தாண்டி அக்கரைக்குச் செல்லவேண்டியவன் நதிபோரத்தில் நின்று, ஆற்றிலுள்ள ஜலமெல்லாம் ஸமுத்திரத்தில் போய் விழட்டும், அப்பால் செல்லுகிறேன் என்று காத்திருந்தால் ஸாத்யப்படுமா? அதுபோல் நம்மைச் சுற்றிலுமுள்ள துஷ்ட மனிதர்களும், தீய ஜந்துக்களும் தொலையட்டுமென்று நாம் காத்திருக்க முடியாது. உலகத்தில் சுகம், துக்கம், ஸந்தோஷம், பகல், இரவு, நன்மை, தீமை ஆகிய ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள குணங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. இதுதான் மாயை எனப்படுகிறது.

சுகத்தைக் கண்டு ஸந்தோஷப்படுவதும், துக்கத்தைக் கண்டு வியஸனப்படுவதும் இயற்கையானாலும், இதை நிவர்த்திக்க முயலவேண்டும். சுகதுக்கங்கள் எப்படி யுண்டாகின்றன வென்பது கேள்வி. இந்திரியங்கள் விஷயங்களிற் செல்வதால் சுகதுக்கங்களுண்டாகின்றன. ஆதலின் கர்மேந்திரியங்களை விஷயங்களிற் செல்லாதபடியும், மனத்தைக் கண்டவாறு இழுக்காதபடியும் நாம் கவனிக்கக் கடமைப்பட் டிருக்கிறோம். இதற்காகச் சிலர் கண்ணை மூடிக்கொண்டும், காதைப் பொத்திக்கொண்டும், கையைக் கட்டிக் கொண்டும் இருக்கிறார்கள். இதனால் யாது பலன்? மனதைக் கட்ட முடியுமா? மனதை ஒரு வழியில் சிறிது நேரமாகிலும் நிறுத்த முடியவில்லையே. அது சலிக்கும் ஸ்வபாவத்தை யுடையது. மனம் சலிக்கும்போ தெல்லாம் பிரவர்த்தி யுண்டாகிறது. எப்பொழுதும் கர்மத்தைச் செய்து கொண்டே இருக்க நேரிடுகிறது. கர்மமே செய்யாம லிருந்து விடுவோமென்றாலோ—அது முடிகிறதா? பிரம்மநிஷ்டனுக்குங் கூட தேக ஸம்ரக்ஷணை அவசியம். ஆகவே சரீரத்தைக் காப்பாற்ற வேண்டிய அளவாகிலும் அன்னமும் ஜலமும் தேடவேண்டாமா? இது கர்மமன்றோ? ஆயினும் இந்தக் கர்மத்

ஒருவன் தன் பாடுகளை விஸ்தாரமாகக் கூற, அதைக் கேட்பவனே எதெதையோ யோசித்துக் கொண்டு என்னவோ நினைவிலிருக்கிறான். கேட்பதாக மட்டும் பாவனை.

தால் முக்திக்குத் தடையுண்டாகாது. ஸத்கருமத்தைப் பகவத் பிரீதியாகச் செய். அதாவது பலனைக்கோராமற் செய்தால், அதனால் ஞானமுண்டாகுமென்பது பெரியோர்களின் கொள்கை.

பலனைக் கோராமல் எப்படிக் கருமத்தைச் செய்ய முடியும்? அதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறோம். எஜமான் நித்திரை செய்ய வேண்டி வேலைக்காரன் படுக்கையை விரிக்கிறான். படுக்கையை விரிப்பது படுத்துக்கொள்ள வெனினும், வேலைக்காரன் அதை விரும்புகிறானா? இல்லை. அவன் அந்தப் படுக்கையை விரிக்கவேண்டியது தன்னுடைய கடமையாக மட்டும் நினைக்கிறான். அதுபோல், வேதத்தில் கூறியபடி ஸத்கருமங்களை அநுஷ்டிப்பது நம்முடைய கடமையேயன்றி அக்கருமங்களின் பலனை அபேக்ஷிப்பது பிசகு. எனவே, எதையும் பகவத் பிரீதியாகச் செய்து, எல்லாம் உன் அடிமை, எல்லாம் உன் உடமை, எல்லாம் உன்னுடைய செயலே என்று நம்மைப் பகவானுடைய கடாக்ஷத்திற்கு ஒப்புக் கொடுத்துவிட்டிருப்பதிலுள்ள ஆநந்தம் வேறெதனிலும் உண்டாகாது. இவ்வித மனோபக்குவத்துடன் இல்லறத்திலிருக்கு மொருவன்,—அவன் இல்வாழ்வில் விருப்பினும்,—சிரேஷ்டமான துறவறத்திலிருப்பவனாகவே கருதப்படுவான். தேச பக்தர்களுக்கும் இவ்விதமான துறவு நிலை ஆவசியகம். அது அவர்களையும் தேசத்தையும் புனிதப் படுத்தும்.

பிரபஞ்ச விலாஸம்

1. ஒரு மோசம்:—சிலர் ஊருக்குப் போக வேண்டுமென்று ஏதாவது ஒரு நகையை இரவல் வாங்கி, பிறகு அதை அடகுவைத்து வழிச்செலவுக்குப் பணம் தேடிக்கொண்டு போய் விடுகிறார்கள். பின்பு திரும்பிவந்து பணம் சேகரித்து நகையை வாங்கிக் கௌரவமாகக் கொடுத்து விடுகின்றனர்.

2. கணவனைக் கேட்டுச் செய்:—உன் வீட்டில் இருக்கும் சாமானை இரவலாக எவர் கேட்பினும் உன் கணவனைக் கேட்டுக்கொடு. அல்லது அவரைத்தான் கேட்கவேண்டும் என்று சொல்லிவிடு. நீயே தந்து, பிறகு சர்மான் வாராமல் கணவனர் கோபத்துக்கு ஆளாவதினும், உன்னை இப்போது கேட்பவர்கள் கொள்ளும் கோபம் மிக்க அல்பமானது.

---

3. மனைவி வரும் வரையில்தான் சகோதர உறவு—ஒற்றுமை—ஒரு கணக்கு. பிறகு அவனவன் தனித் தனித் குடும்பம், தனித்தனித் தனம் சேர்ப்பு. தனிக் கணக்கு.

காதற்பரிசு

அல்லது

சிறைவாச அநுபவங்கள்.

(முன் தொடர்ச்சி.)

வெள்ளைக் குல்லா:—புதிதாக ஒருமுறை சிறைச்சாலைக்கு வந்த கைதிகளுக்கெல்லாம், ஜெயிலின் ஒரு பக்கத்தில் இருக்கும் கோட்டை போன்ற பல கட்டிடங்களை அவர்களுக்கு வாசஸ்தலமாகக் கொடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டடத்திலும் மேல் மாடியிலும், கீழ்மாடியிலும், 150-கைதிகளுக்கு ஒரு கட்டடம் கொடுக்கப்பட்டு, 150—கைதிகளுக்கு இரண்டு வார்டர்கள் காவலாளிகளாக அமர்த்தப்பட்டிருந்தனர். இவ்விதம் புதிய குற்றவாளிகள் 150—பெயர்கள் வீதமாக வகுக்கப்பட்டு சுமார் 100 கட்டடங்களில் சிறை செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவருக்கும் குல்லாய் வெள்ளை நிறமாகும்.

வெள்ளைக் குல்லா II:—20-வயதுக்குட்பட்ட முதன் முறையாகப் புதிதாக வரும் இளைஞர்கட்குமட்டும் பிரத்தியேகமான ஒரு கட்டிடம் 100—பெயர்கள் அடங்கும்படியானதாய்ப் பிரத்தியேகமாக இருந்தன. அதில் 70-இளைஞர்கள்போல் சிறைப்பட்டிருந்தனர். மற்ற அறைகள் காலியாக இருந்தன. இதில் தான் **54**—ம் நெம்பர் குடியிருப்பென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இவர்களுக்கும் காவலர்கள் இருவர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களும் வெள்ளைக் குல்லா தான்.

கருப்புக் குல்லா:—ஒரு தடவைக்கு மேற்பட்டுப் பல தடவைகளில் விருந்தினராக சிறைவாஸமே சொர்க்கலோகமென்று கருதி வருபவர்களை ஜெயிலின் மறுபாகத்தில் 150—கைதிகள் கொள்ளும் படியான சுமார் 30—கட்டிடங்களில் சிறை செய்யப்பட்டிருந்தனர். பிரதி 150 பெயர்களுக்கும் காவலர்கள் இருவரே. ஒருமுறைக்கு மேற்பட்டு வந்தவர்களுக்குக் கருப்புக் குல்லா கொடுக்கப்பட்டிருந்தன.

சிவப்புக் குல்லா—(தாய்வீடு):— அந்தமான் தீவுக்கு அனுப்பப்படுவோர்களுக்கும், சிறையிலேயே ஜன்மவாஸ சிக்ஷையாகத் தண்டனை யுற்றோருக்கும் தனியாக ஒரு கட்டிடம் இருந்தது. அதில் 50—பெயர்கள் இருந்தனர். 100—அறைகள் காலியாக இருந்தன.

---

137 அன்னிய வகையில் ஸகோதரமுறையில் எழுதிக்கொள்ளும் கடிதங்கள், சில இடங்களில் பின்பு துன்மார்க்கக் கடிதங்களாகி விடுகின்றன.

அவர்களுக்கும் காவலர்கள் இருவரே. இவர்களுக்கு மட்டும் சிவப்புக் குல்லாய்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

தூக்கு (மறு உலகம்):—தூக்கிலிடப்படும் கைதிகளுக்கு 10—அறைகள் தனியாக அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஐவர் மட்டும் இருந்தனர். இவர்களுக்கும் வார்டர்கள் இருவரே. குல்லாய் வெள்ளை. தூக்கிலிடப்போகும் நிமிஷம் வரையில் சாந்த மூர்த்திகளாகவே இருக்கிறார்கள். ஆ! மிக்க பொறுமை!! மீட்சி யில்லாத முடிவாய்விட்ட நிலைமை!!!

இருட்டறை:—5, 6—அறைகள் இருக்கலாம். சுவாசம் வரப்போக மட்டும் கூரையின் உச்சியில் பலகணி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. பகலில் பார்ப்பினும் இருள் சூழ்ந்தே நிற்கும். அதில் மூட்டுப்பூச்சி, கொசு முதலியன ஏராளம். மாஜிஸ்திரேட் மிகவும் போக்கிரியான கைதியைத் தண்டிக்கும்பொழுது, வாரத்திற்கு இத்தனை தடவை இருட்டுக் கொட்டடியில் அடைக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்ட கைதிகளைமட்டும் இரவில் படுக்கவிட்டுக் காலையில் வெளியில் கொண்டுவந்து விடுவார்கள். இரவு முற்றிலும் அவர்கள் என்ன செய்வார்களென்பதை வாசிப்பவர்களின் யோசனையில் விட்டுவிடுவோம்.

அங்கவீனர்கள்:—கூன், குருடு, நொண்டி, குஷ்டம் இத்தகையோர் தண்டனை யுற்றால், அன்னோர்க்கு ஜெயிலின் ஓர் பாகத்தில் உயரமான 'காம்பவுண்ட்'டுடன் தனிக்கட்டிடமாகக் கட்டப்பட்டிருப்பதில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வேலைசெய்ய வேண்டியதில்லை. இருக்குமிடத்திற்குத்தானே போஜனம் வந்துவிடும்.

சமையல் கட்டடம்:—ஒருபுறம் கோட்டை போன்று கட்டப்பட்டு நாற்புறமும் அடுப்புகள் வைத்து, நின்றுகொண்டு சமையல் செய்யும் விதமாகவும், ஒவ்வொரு அடுப்பிலும் கால் 'டன்' விறகு வைக்க வசதியான இடமும், சுமார் 100—அடுப்புகளடங்கிய கட்டடம் ஒன்று தனியாக இருந்தது. சமைக்கப்படும் பாத்திரங்கள் அனைத்தும் இரும்பினால் செய்யப்பட்டவை.

ஆஸ்பத்திரி:—கைதிகளுக்காக சிறைச்சாலைக்குள் ஒரு ஆஸ்பத்திரி இருந்தது.

தண்ணீர்த்தொட்டி:—கைதிகள் குளிக்கும் (?) பொருட்டு ஒரு பர்லாங்கு நீளத்திற்கு, 20-அடி அகலத்திற்கு, 2-அடி உயரத்தில் ஒரு பெரியதொட்டி கட்டப்பட்டு நிறைய ஜலம் விடப்பட்டிருந்தன. பார்வைக்குப் பளிங்கு தொட்டிபோன் றிருந்தது. சுற்றிலும்

---

138. 12-வருடம் உழைத்து வீணாகி ஏமாறுவதிலும், 4-மாதம் உழைத்து அதற்குள் ஏமாறுவது மேல். அவ்வளவு துரிதத்தில் அவர்களின் வஞ்சகம் உணர்ந்து விலகுவது ஒரு மேலான மேல்,

அழகான புஷ்பச்செடிகள் இருந்தன. இந்த அழகை அநுபவிப்போர் இங்கு யாவர்?

பள்ளிக்கூடம்:—கைதிகளுக்காக ஒரு பாடசாலையும் கட்டப்பட்டிருந்தது.

நெசவுத் தொழிற்சாலை:—கைதிகள் நெய்வதற்கு நெசவுச்சாலையும், அதற்குவேண்டிய உபகரணங்களுடன் ஒரு தனிக்கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் உயர்ந்த ஜமக்காளங்கள், கம்பளங்கள் நெய்வதற்கு மட்டும் தனியாக ஒரு கட்டிடம் இருந்தது.

இரும்புப் பட்டறை:—கைதிகள் வேலை செய்வதற்கு வேண்டிய கருவிகளுடன் பிரத்தியேகமான கட்டடம் இருந்தது.

அலுமினியம் சாலை:—அலுமினியம் பாத்திரங்கள் செய்யக்கூடிய கருவிகளுடன் ஒரு பெரிய கட்டடமு மிருந்தது.

மரப்பட்டறை:—மரச்சாமான்கள் யாவும் இங்கு செய்யப்படுகின்றன. இதற்காக ஒரு தனிக்கட்டடம்.

பண்டகசாலை:—ஒரே தினத்தில் 200மூட்டை ஆரியம் நின்று கொண்டு அரைப்பதற்கு வசதியான கல் முதலியவைகள் நிரம்பிய கட்டடமும், அதைச் சேர்ந்தாற்போல் நெல்லை வேகவைத்துக் காயப்போட்டு 200 மூட்டைகள் தினம் குத்தக்கூடிய உலக்கை, குந்தாணி முதலிய கருவிகளுடன் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு அடுத்ததாய் பருப்பு பொறுக்குவதற்காக ஒரு சிறு கூடம் இருந்தது. அதனருகே காய்கறிகள் அறுப்பதற்காகப் பலகத்திகள் வைக்கப்பட்ட ஒரு பெரிய தொட்டியைப்போல் மரப்பீடம் செய்யப்பட்டு, கால்கள் வைத்து நின்றுகொண்டு அரிவதற்கு வசதியாக வைக்கப் பட்டிருந்தன.

செக்குகள்:—எண்ணெய் ஆட்டும் செக்குகள் சுமார் பத்து இருந்தன. மனிதர்கள் சுற்றுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருந்தது. இந்த செக்கில் கைதிகள் இருந்துகொண்டு செக்கை இழுத்துச் சுற்றிவருகையில் படும் பாடு பரமனே யறிவான்.

வர்த்தகசாலை:—ஜெயிலில் தயாராகும் துப்பட்டி, படுக்கை விரிப்புகள், துண்டுகள், வேஷ்டிகள், ஜமக்காளங்கள், கம்பளங்கள், மரச்சாமான், இருப்பு சாமான்கள், அலுமினியம் சாமான்கள், நல்ல எண்ணெய் ஆகிய பலவும் வெளிஜனங்களுக்கு விற்கவும், கவர்ன்மெண்ட் உத்தியோக சாலைகளுக்கு சப்ளை செய்யவும், பெரிய கட்டிடம் கட்டப்பட்டு, அதில் யாவும் வைத்து விற்க ஏதுகரமாக வர்த்தகசாலைபோல் ஒன்று ஜெயிலின் கோட்டை வாசலுக்கருகே கட்டப்பட்டிருந்தது.

---

139. ஆத்திரத்தில் ஒருவன் பிறரைத் தூற்றினால், நீயும் அவனுடன் சேர்ந்து தூற்றாதே. சமாதானம் மட்டும் பேசு. இது நல்லவனுக வழி.

தூக்குமடம்:—தூக்கில் போடுவதற்கு சாதகமான கொலைக் கருவியுடன் கூடிய ஒரு சிறந்த (?) மரமண்டபம் கோட்டை வாயி லின் மறுபக்கத்திலே உள்பாகத்தில் கட்டப்பட்டிருந்தது.

தோட்டம்:—ஜெயிலுக்குள் சேர்ந்தாற்போல் வெளிப்பக்கத் தில் பங்தோபஸ்தான உயரமாயுள்ள சுவர்களுடன் ஒரு மைல் விஸ்தீரணமுள்ள நிலம் சாகுபடி செய்து காய்கறிகள் முதலியவற் றிற்காக ஒரு தோட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அநாதைப் பிணங்கள்:—ஜெயிலில் மடியும் நாதியற்றவர்களின் சவங்களை ஜெயிலில் அதிகாரிகளே அடக்கம் செய்ய ஒரு காடும் தோட்டத்தின் ஒரு புறத்தே தனியாக விடப்பட்டிருந்தது.

முறைகள்:—(1) 150 பெயர்கள் கொண்ட ஒரு கட்டிடத்தை இருவார்டர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதன்றோ? அதில் இருக்கும் கைதிகளைக் குளிக்கவோ, சாப்பிடவோ, தூங்கவோ எங்கு கொண்டுபோனாலும் ஒரு கும்பல் வரிசையாகவே தனியாகக் கொண்டு போகவேண்டும். மற்றவர்களுடன் கலக்கக்கூடாது. கலக் கும்படி விட்டால் வார்டர்கள் சிக்ஷைக்குள்ளாவார்கள். (2) வேலை செய்யும்போது மட்டும் கருப்புக்குல்லாய்கள் தனியாகவும்,வெள்ளைக் குல்லாய்கள்—சிகப்புக் குல்லாய்கள் ஒன்றாகவும் விடப்பட்டு, மறு படியும் சாப்பிடும்போதும், இரவில் அடைக்கும்போதும் தனித் தனியாகப் பிரித்துவிடுவார்கள். (3) ஒவ்வொரு கட்டிடத்திற்கும் எதிரே 150-பெயர்கள் உட்கார்ந்து புசிக்க வசதியான இடமும் கிண்ணியை வைத்துச் சாப்பிட ஒரு அடி உயரத்தில் கல்லால் அமைக்கப்பட்ட சிறு சிறு திட்டுகளும் ஒழுங்காகவும் வரிசை யாகவும் கட்டப்பட்டிருந்தன. காலையில் கஞ்சியும் மத்தியான— சாயந்திரங்களில் சாப்பாடும் அங்குதான் வைத்துப் புசிக்கவேண்டும்.

ஆகாரம்:—பகல் 11-மணிக்கு சாப்பாடு மணி யடித்தது. உடனே யாவரும் வேலையை விட்டுவிட்டு அவரவர்கள் புசிக்கும் கூடத்திற்குவந்தமர்ந்தனர். இரும்புக்கட்டில் போன்ற ஒரு தகட்டில் சாதம் வைத்து இரு கைதிகள் தூக்கிக் கொண்டு வந்தனர். மற்றிரு வர் ஒரு அலுமினியம் அண்டாவில் குழம்பும் கொண்டுவந்தனர். சிலருக்குக் களியும், சிலருக்கு சாதமும், சிலருக்கு ரொட்டியும் பரிமாறப்பட்டன. சாதமும் களியும் அச்சில் வார்க்கப்பட்ட ஒரு உருவத்துடன் இருந்தன. சாதத்தைவிட களி கொஞ்சம் அதிகம். ஆரியமாவைக் கரைத்து ரொட்டி சுடப்பட்டிருந்தது. சாப்பாட்டுக் குப் பதிலாக இரண்டு ரொட்டிகள். பின் யாவருக்கும் ஒரே குழம்பு ஊற்றப்பட்டன. அனைவரும் ஒரு நொடிக்குள் புசித்துவிட்டனர். 54—க்கோ பசி மிகவும் அதிகம். ஆயினும் தன் தீர்மானத்தின்படி

---

140. தான் சென்ற ஊரில் தன் பழங்காதலி (!) வந்திருக்கையில், தன் அன்பனுடன் உறங்க மனம் வராது. காதலியின் வீட்டுக் கெனில் கால் கள் விரைந்து ஓடுகின்றன.

சாப்பிடவே யில்லை. இடையே ஒரு மணி நேரம் இளைப்பாறினர். பிறகு வேலை துவக்கும் மணி யடித்தது. யாவரும் தத்தம் தொழில்களைச் செய்யப் புறப்பட்டனர்.

மாலை மணி 4-இருக்கும். யாவரும் வேலையை விட்டுவிட்டுத் தத்தம் வாசஸ்தலத்திற்குச் சென்றனர். 10—நிமிஷத்தில் யாவரும் குளிக்கப் புறப்பட்டனர். நாம் முன்பு குறிப்பிட்ட பெரிய ஜலத்தொட்டியண்டை வந்து சேர்ந்தனர். கீழே நாற்புறமும் தொட்டியைச் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு கைகளால் ஜலத்தை வாரி வாரி தேகம் முழுதும் "மனித உருவங்கள்" காக்கைகள் போன்றும் இறைத்துக் கொண்டனர். என்ன கண்ராவியான காட்சி! இவ்வாறாகக் குளித்த (?) பின்பு சிலர் மட்டும் தம் உடுப்புகளில் ஒன்றிரண்டைத் துவைத்துக் கொண்டனர். யாவரும் பழயபடி தத்தம் விடுதிக்கு—கட்டுக்கடங்காத புஜபல மிகுந்த சிறையாளர்கள்—செம்மறி ஆட்டு மந்தைகள்போல் சாதுவாக இரு வார்டர்களால் ஓட்டிக்கொண்டு வரப்பட்டனர். இதற்குள் மாலை 5½-மணியாயிற்று.

புசிப்பதற்காகத் தத்தம் இடத்தில் வழக்கப்படி உட்கார்ந்தனர். யாவருக்கும் சாதம் பரிமாறப்பட்டது. இரவில் மட்டும் அனைவருக்கும் சாதம் தான். உண்டு களை தீர்ந்த பின்னர் புலிகள் குகைகளில் பதுங்குவதுபோல் தத்தம் அறைக்குள் சென்றனர். மறு நிமிஷமே கதவுகள் சாற்றப்பட்டுப் பூட்டுகள் போடப்பட்டன. ஆயிரக் கணக்கான கைதிகள்,—ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துத் தத்தம் கதைகளையும், விதிவசத்தையும் பேசிக்கொண்டு பகற் பொழுதை ஒருமாதிரியாகப் போக்கின திரளான கைதிகள்,—தனித்தனி அறைகளில் சொற்ப நேரத்தில் சந்தடியின்றி அடைக்கப்பட்டனர். இரவும் வந்தது.

இக்கைதிகள் யாவரும் மனிதர்கள் தான். பாலுண்டு வளர்ந்தவர்கள் தான். அவர்கள் வளர்க்கப்பட்ட விதங்களாலும், விதிவசத்தாலும், வேளைப் பிசகாலும், பூர்வ வினையாலும் சிறை ஜெந்துக்களாகி அல்லற்பட வேண்டிய காலம் நேர்ந்தது. கடவுளின் உலகில்—தேவலோகத்தில் 'நரகம்' என ஒன்று உளதென்பார். மனிதருலகில்—மனித அரசாட்சியில்—பூலோகவாசத்தில் சிறைச்சாலையே பெரு நரகமாம். நரகம்—நகரம் என்ற பதங்களினுள் வேறு புது எழுத்துக்கள் சேர்க்கப்படாமலே அதனில் உள்ள எழுத்துகளையே மாற்றிவிடின் நகரம் நகரமாகும்; நகரம் நரகமாகும். தேசாபிமான பரிபாஷையில் 'தவச்சாலை' என்பதும் இந்த நரகக்குழியையே தான். பட்டார்தான் அதன்பாடு உணர்வார். ஒருவனது ஜாதகத்தி

141 ஆபத்து என்றால் உடன் பிறப்பு உடனே ஓடிவரும். உடன் பிறவாத இரவல்உறவு அநுதாபக் கடிதம் மட்டும் அனுப்பிவைக்கும்.

லேயே காராக்கிரக வாஸமும்,—அது உண்டானால்,—குறிப்பிடப் பட்டிருக்குமென்பார் சோதிட நூலார்.

அத்தியாயம்—5.

சிறையில் ராமதாஸின் ஊழியம்.

ராமதாஸ் 7,8—நாட்கள் வரையில் ஆகாரமே உட்கொள்ளவில்லை. பசியின் கொடுமையும் ஸகிக்கத் திறனில்லை. முன்பு அவன் செய்துகொண்ட சபதங்கள் அனைத்தும் பறந்தன. உடனே புது உணர்ச்சிகளும் நவநவமான சிந்தனைகளும் உதித்தன. "நான் பத்தொன்பதே வயதுள்ள வாலிபன். என் வாழ்நாட்களின் பெரும்பாகம் இன்னும் எவ்வளவோ இருக்கின்றது. இதுகாறும் எந்த இன்பத்தையும் அநுபவம் செய்ததில்லை. விவாகசுகம் மிக்க மேலானதென்றும்,இகபாரம்மியமென்றும்பலர் கூறக் கேட்டிருக்கின்றேன். அந்த சுகாநுபவம் எவ்விதம் இருக்குமோ அறியேன். சிலர் ஏன் இந்த விவாகம் செய்துகொண்டோமென அலறுகின்றனராம். ஏன் அவ்விதமோ? வேறு சில பாக்கிய ஸம்பன்னர்கள் விவாகமானதும் உலகில் புது மனிதர்களாகி, எலும்பெல்லாம் வெளியில் தோற்றிக்கொண்டிருந்த தேகம் மாமிஸபர்வதமாகித் தொங்கியும் அவர்களுக்கு விழுவதாயும்,அது விவாகப் பூரிப்பின் அறிகுறியென்றும் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இவற்றையெல்லாம் உணர்வது எந்நாள்? என் உயரிய சிந்தனைகளும், மனோரதங்களும் எப்பொழுதேனும் ஓர் போதில் நிறைவேறப் பெறாதா? நான் எதற்காக வீணாய் மடியவேண்டும்? மேலும் உயிரைப் போக்கிக்கொள்ள நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது? உயிரையும் உடலையும் ஏற்கெனவே பங்கஜ சுந்தரிக்கு அர்ப்பணம் செய்துவிட்ட பின்னர் நமக்கு அவற்றில் உரிமை ஏது?" இங்ஙனமாக ராமதாஸன் பல பல கருதி யோசனையிலாழ்ந்தான். தன் எதிர்கால வாழ்க்கையில் ஏதோ ருசிகரமும் அதிர்ஷ்டமும் இருப்பதாக அவனுக்குத் தோற்றியது.

அன்று புசிக்க ஆவல் கொண்டான். அந்த மாமி! வீட்டில் சாதமும் குழம்பும் பரிமாறப்பட்டன. முன்பு சாதத்தை வெறுத்த ராமதாஸனுக்கு இப்பொழுது தேவாமிர்தம் போல் இருந்தது. பாதி சாதம் உண்டதின் பின்னர் குழம்பின் சுவையை ஆராய ஆரம்பித்

142. ஒரு பெண்ணைக் கற்பழித்த துணிகரம் மற்றொன்றுக்கும் தைரியப்படுகிறது. அதற்கே கொஞ்சுகை—ஸரசம். ஞ்சக உலகம் இது.

தான், கண்டுபிடிக்க முடியவில்லை. அக்குழம்பில் கீரைகள், பூசனி, பப்பாளிக்காய், கத்தரி, சொரக்காய் போன்ற பல வகைக் காய்கறிகள் ஒரே குழம்பு பருப்புடன் சேர்க்கப்பட்டிருந்தன. எண்ணெய் அதிகமாக இருந்தது. என்றும் புசித்திராத புது விதமாய் இருந்தது. அது அவனுக்கு மகிழ்வையே யளித்தது. பசி ருசியை யுணருமோ? கஷ்டத்தைக் காதல் அறியுமோ? முற்றிலும் புசித்து விட்டு, மாநிழலில் மற்றவர்களுடன் இளைப்பாறிக்கொண்டிருந்த சமயம், பக்கத்திலிருந்த ஒருவனை நாம் புசித்தது என்ன குழம்பு? அதற்குப் பெயரென்ன? என்று வினவினான்.

"அப்பா! இதற்கு ஜெயில் குழம்பு என்று பெயர். ஜெயில் தோட்டத்தில் கிடைக்கக் கூடிய எல்லா காய்கறிகளும் அக்குழம்பில் போடுவார்கள். நாள்தோறும் ஜெயிலில் சூப்பிரண்டெண்டு அக் குழம்பை நேரில் பார்த்துத்தான் அனுப்புகிறார். பெரிய பெரிய அண்டாக்களில் காய்கறிகள் மிளகாய், உப்பு போட்டு வேக வைத்து இறக்கிவிடுவார்கள். பின்னர் பருப்பைத் தனியாக வேகவைத்து உரலில்போட்டு அரைத்துத் தனி அண்டாவில் போட்டு தனித் தனியாக இவ்விரண்டையும் ஜெயில் அதிகாரிகளும் டாக்டரும் பார்வை யிடும் இடத்திற்குக் கொண்டு போவார்கள். பின்பு ஒரு அண்டாவுக்கு இவ்வளவு எடை பருப்பு என்று நிறுத்தி ரஸத்தில் போட்டு, அங்கேயே நல்லெண்ணெயை நன்றாகக் காய்ச்சி அளவு பிரகாரம் அதில் ஊற்றித் துடுப்பினால் நன்றாகக் கலக்கி விடுவார்கள். அங்கு சுமார் 100-பெரிய அண்டாக்களில் குழம்பும், 100—இரும்புத் தகட்டில் சாதம், களி, ரொட்டிகளும் காணப்படும். டாக்டர் சில சாதங்களை எடுத்து நிறுத்தியும் பார்ப்பார்"— என்று விவரித்துக் கூறினான்.

ஆயிரக் கணக்கான கைதிகள் தன்னுடன் இருந்தும், ராமதாஸ் ஒருவருடனும் சிநேகமாவது அன்பாவது கொள்ளவில்லை, அவனுக்கு ஒருவர் முகமும் பிடிக்கவில்லை. அவர்களின் உடையும், நடையும், தலையும், தாடிகளும், மீசைகளும், கண்களும், பார்வையும் அவனுக்கு மிக மிக வெறுப்பை விளைவித்தன. "நான் எப்போது விடுதலையாவேன்? நான் வந்து 11-நாட்கள் தானே ஆகின்றன. இன்னும் ஒரு மாதம் பத்தொன்பது நாட்களை எவ்வாறு கழிப்பது? என்ன இருந்தாலும் பகற்பொழுது ஒரு மாதிரியாகச் சென்று விடுகின்றது. பேசிக்கொண்டே வேலை செய்யலாம், இரவைக் கழிப்பது தான் மகா கஷ்டமாக இருக்கிறது; நித்திரையே வருவதில்லை. ஆ! நம் கதி இப்படியா முடியவேண்டும்? ஒரு பிச்சைக்காரன்கூட எவ்வளவோ சுதந்திரத்துடன் அழகான வீதிகடோறும் நடந்துசென்று

143. பழகிவிடின் கருப்பும் ரம்பை! நேரில் காண விடத்துங்கூட சிவப்பு உருவம் மனத்தை இழுத்துக் கருப்பை வென்று உயர்ந்து விடும்.

ஐயமேற்றுன்பான். நான் ஒரு இம்மியேனும் சுதந்திரத்துருன் அசைவதற்கில்லையே! சுதந்திரத்தை இழந்து ஒரு கைதியாக இடக்கும் நான் வந்ததெல்லாம் அநுபவித்துத்தானே தீரவேண்டும்''— என்று சோர்ந்த முகத்துடன் தனக்குஇட்ட வேலையாகிய பருப்பை ஒரு புறம் கண்ணீர் வடிய வாதனையுடனும் பொறுக்கிக்கொண்டிருந்தான். இவ்விதம்2,3,நாட்கள் கழிந்தன. பருப்பு பொறுக்கும் வேலையிலிருந்து, கம்பளிமயிரை நூற்கும் வேலையைச் செய்ய ஏவினர். ஒரு கையில் ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டும், மறுகையில் நூலாக்கிக் கொண்டும் செய்யும் வேலை சந்தோஷமாகவே ராமதாஸுக்கு 3, 4 நாட்கள் வரை தோன்றியது. பின்னர் நாள் ஒன்றுக்கு இந்தனை பவுண்டு எடை நூற்கவேண்டுமென்று கணக்கிட்டுக் கண்டிப்பும் ஆனது. வாலிபனுக்கு மனம் ஒடிந்தது. "நானோ ஏழை; அதிலும் இப்போது கைதி; கைதியிலும் சுதந்திரமற்ற கைதி; என்றாலும் அதிகாரிகள் என்னை—என் தேகத்தைச் சிறை செய்தார்கள்—அடிமைப் படுத்தினர். ஆனல்—என் ஆத்ம ஸக்தியை—அதன் தீவிர வேகத்தைக் கட்டுப்படுத்தவோ, சிறை செய்யவோ முடியாதல்லவா? அவ்வாறுகில், இன்னும் யான் இஞ்ஞாலமீது சுதந்தர மூள்ளவன்தானே? சரி, நான் இனி பணியேதும் புரியேன். அதிகாரிகள் என்னை—என் தேகத்தை—என்ன துன்புறுத்தினும் சரி—பார்க்கலாம்'' என்று தீர்மானம் செய்து கொண்டான். அன்று முற்றிலும் கம்பளி நூற்கவேயில்லை. மேஸ்திரி 54-ம் நெம்பர் நூற்கவில்லையென்று அறிக்கை செய்தான். மறுநாள் ஜெயிலரின் முன்னிலையில் நிறுத்தப்பட்டான்.

"நல்ல வாலிபன். களங்கமற்று முகம்காணப்படுகிறது இவன் குற்றம் செய்து தண்டனைப்பட்டவன் என்று நான் நினைக்கவில்லை. விதிவசம் இவ்விதம் ஆயது. இவனிடம் நாம் இரக்க முணர்த்த வேண்டும்'' என்று ஜெயிலர் மனம் இளகிச் சிந்தித்துக் கொண்டே வாலிபனை நோக்கி "நேற்று ஏன் நீவேலை செய்யவில்லை?'' என்றார்.

வாலிபன்.—"ஐயன்மீர்!என் சித்தம் செம்மையாக இலது.மூளை கலங்கிவிடுவேனே என்று நான் நினைந்துக் கொண்டிருக்கும் சமயம் தாங்கள் ஏன் வேலைசெய்யவில்லையென்று கேட்பதற்கு நான் யாது விடை கூறுவேன்? ஏதுங் தோற்றிலது எனக்கு''—என்றான்.

ஜெயிலர்,—"உன் வாசகம் உண்மை பொதிந்த உரை தானே? டாக்டரைக் கொண்டு பரிசை செய்விப்பேன். நின் உரை பொய்யாயின், உனக்கு இன்னும் வேறு பல சில்லறைத் தண்டனைகள் விதிக்கப்படும்'' என்றார்.

வாலிபன்:-"எப்படி வைத்தாலும் நன்றே நின்கருணை"-என்றான்.

---

144. தம்மைக் கற்பழித்தவர்களைத் தமது அருந்துணையெனச் சில பெண்கள் நம்பி மயங்குவர். ஆடவர்க்கோ தம்மிடம் சிக்காத பெண்களிடத்தே தான் அதிக கௌரவ சிந்தனை.

உடனே ஜெயிலரது உத்தரவின்பேரில் டாக்டரிடம் ராமதாஸ் கொண்டுபோகப்பட்டான்.

* * * * * *

ஜெயில் ஆஸ்பத்திரியில் சந்தடியில்லாத ஒரு வார்டில் ராமதாஸ் படுத்தபடி இருந்தான். ஜெயில் டாக்டரான தாயுமான் 11-மணிக்கு வந்து அவனது முகபாவத்தை யுற்று நோக்கிப் புன்சிரிப்புடன், "ராமதாஸ்! நல்ல காரியம் செய்தனை; நின் விடுதலைக்கு மாதமொன்றே யுளது; அவ்வொரு மாதத்தினையும் இங்குதானே சுககாமாகக் கழித்துவிட்டுச் சென்று விடுதற்கான வசதி செய்விக்கிறேன். அங்ஙனம் நான் செய்யாவிடில் துரிதத்திற்றுனே நீ பூரண பைத்தியத்துக்கு வந்துவிடுவாய். வியாதியின் மூலம் உணர்ந்து அதைக் களைவது நன்று. ஒரு குடும்பத்தின், மித்திரத்துவத்தின், ஒரு கலக ஆரம்பத்தின் பிரதான நிலை அறிந்து அவற்றைச் செம்மைப்படுத்திவிடின் விஷமம் ஏதும் மேற்கொண்டு நிகழா. உன்னை நான் உற்சாகப்படுத்துவதே பைத்தியத்துக்கு நன்மருந்து; சந்தோஷம் தானு?" என்ருர்.

ராமதாஸ் எழுந்துநின்று நமஸ்கரித்து, "அன்பீர்! என் சித்தம் குழம்பியிருப்பது உண்மையே. தாங்கள் இத்துணை இதயங்கனிந்து அன்பு ததும்பி மதுரபாஷிதங்கள் பொழிந்து இரக்கம் காட்டுதற்குக் கைதியாகிய நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? எங்கும் தானய் விளங்கும் எம்பெருமான் தேவரீருக்கு ஸகல மங்களங்களையும் அருளுமாறு பிரார்த்திக்கிறேன்" என்ருன். சில நிமிஷங்கள் வரை இருவரும் நிசப்தமாக நின்றனர். "கருணைப் பெருங் கடலே! தாங்கள் மற்ருேர் உபகாரமும் இயற்றிடில், நாட்கள் செல்வதுகூடத் தெரியாம லிருக்கும்; அந்தத் தர்மத்தையும் செய்யப் பிரார்த்திக்கின்றேன்" என்ருன் ராமதாஸ். அதற்கு டாக்டர் "தாராளமாகச் சொல். எவ்விதமோ நின்பால் அன்பு கூர்ந்து விட்டேன். அன்பு எதையும் செய்யவைக்கும். எத்துணை ஆபாஸத்தையும் ஸகிக்க வைக்கும். நீ கூறுவனவற்றைக் கேட்டுத்தான் தீர வேண்டும்" என்ருர். "தாங்கள்தாம் எனக்கு இந்தத் தருணம் தாய்தந்தை; ஏதாவது கதைப் புஸ்தகங்கள் இருந்து கொடுத்துவந்தால் மிக்க உபகாரம். கால சகாயம். தங்களைக் கேட்க அஞ்சுகின்றேன். க்ஷமித்தருள்க" என்ருன் ராமதாஸ். அதற்கவர் "ஆகட்டும்; ஜெயில் அதிகாரிகள் பார்வையிடுங் காலையில் ஸயனித்தவாருகவே இரு. மற்ற தருணங்களில் உன் பிரியப்படிசெய். இங்கு இருக்கும் காவலர்கட்கு உன்னைக் குறித்து அநுதாபத்துடன் கூறிவைக்கிறேன். பயப்படாமலிரு. நான் சென்றுவருகிறேன்" என்று விடைகொண்டு திரும்பினர்.

---

145. எந்த ஆடவனுக்கு அழகிய முகமோ, அவனிடத்து ரகசிய சண்டாளத்தனங்களும் இருக்கும். 1000-த்துக்கு— 999-இப்படியே.

ராமதாஸுக்குச் சிறிது மனோ நிம்மதி யுண்டாயிற்று. சிறையுள் புகுந்தும் கடவுள் இரக்கம் காட்டுவதற்கு அவரை மனதாரத் துதித்தான். டாக்டர் தாயுமான் ஜெயில் அதிகாரிகட்கு ராமதாஸ் ஒரு மாதம் சிகிச்சையிலிருக்கவேண்டுமென்றும், வைத்தியம் ஆரம்பமென்றும் கூறிவிட்டார். காலையில் ரொட்டியும், மத்தியானம் சாதமும், இரவில் பாலும் அன்னமும் தருமாறு தாயுமான் ஏற்பாடு செய்தார். அவ்விதமே ராமதாஸுக்குக் கிடைத்துவந்தன. ஆஸ்பத்திரியிலுள்ள கிணற்றில் பிரதிதினமும் ஸ்நானம் செய்துகொண்டான். டாக்டர் தம்மிடம் இருந்த சில நாவல்களையும் பத்திரிகைகளையும் அவனுக்கு உதவினார். அவற்றை வாசிப்பதில் தனது காலத்தைச் செலுத்திவந்தான். ஒரு தினம் "தமிழ் உலகு" என்ற பத்திரிகையை அவன் காண நேர்ந்தபோது அதில் பின்வரும் பாடல்கள் இருந்தன:—

சின்னஞ் சிறு பாவை யொத்த லீலா—நீ
என்னை விட்டு எங்கு சென்றாய் லீலா.

பொன்னைப் போன்ற காந்தியுள்ள லீலா—நீ
மின்னைப் போல் மறைந்ததென்ன லீலா.

சேயென்று நினைத்தேனடி லீலா—உன்னை
மாயை யென்றறிகிலேனே லீலா.

நீயே சதமென்றிருந்தேன் லீலா—என்னைப்
பேயாக்கி நீ வைத்த தென்ன லீலா.

மோகித்தேனே உன்னைக்கண்டு லீலா—என்னைச்
சோகத்தில் அமிழ்த்தினையே லீலா.

காகத்தைப் போல் கூவிநின்றேன் லீலா—என்
தாகத்தைத் தணித்திடாயோ லீலா.

மலர்ந்த புஷ்பம் போன்ற தொரு லீலா—நான்
உலர்ந்த சிறகானேனே உன் பிரிவால்.

தளர்ந்த மனத்தை அடைந்தேன் லீலா—உன்றன்
குளிர்ந்த முகம் காண்பதென்றோ லீலா.

கோட்டை யொன்று கட்டினேனே லீலா—அதில்
போட்டையோ ஓர் கல்லெடுத்து லீலா.

தீட்டிய சித்திரம் போன்ற லீலா—எனை
வாட்டுதே மிகவும் துயர் லீலா.

---

146. குறித்த நேரத்திற்குள் அறுசுவையுடன் சமையல் தயாராகி விட, வீட்டுக்காரர் படுகிற கஷ்டத்தையும், பணச்செலவையும் வந்த விருந்தாளி யறியார். அவர் நாவல் படித்துக் கொண்டிருக்கிறார்.

2

காலை வேளையிலெங்கும் நந்தலாலா—உன்
நீலகமணி காணுதடா நந்தலாலா.

சோலை வனங்களெங்கும்—உன்றன்
சோதி யொளி வீசுதடா நந்தலாலா.

பரந்த கடலினிடை நந்தலாலா—உன்றன்
சிறந்த சக்திகாணுதடா நந்தலாலா.

விரிந்த விசும் பினிடை நந்தலாலா—உன்றன்
விசித்ர சக்திதோன்றுதடா நந்தலாலா.

மலர்ந்த புஷ்பத்தினிடை நந்தலாலா—உன்றன்
மதுரக்குரல் ஓசை கேட்பேன் நந்தலாலா.

அலர்ந்த செந்தாமரையில் நந்தலாலா—உன்றன்
அழகிய முகத்தைக் காண்பேன் நந்தலாலா.

இப்பாடல்கள் ராமதாஸனுக்குப் பெருமகிழ்வை யளித்தன. அவனது காதலியின் உருவமும் அகக் கண்கட்குப் புலனாயது. "சிந்திக்கத்தித்திக்குந் தேனே! என் காதற்கொடியே! என்வாழ்வே! என் வாழ்வினுக்கோர் ஒளியே! என் இன்பமே! அன்பே! அமுதே! ஆருயிரே!" எனப் பலவாறு கூறிப் பிரலாப மனத்தினனாயினான்.

அத்தியாயம்—6

இன்னும் சில விவரங்கள்.

சிறைச்சாலையில் வேலை நேரம் காலை 7½-மணி முதல் 11-வரையிலாகும். பகல் ஒரு மணி முதல் 4-மணிவரையிலாகும். நித்திரையோ மாலை 6-மணி முதல் விடியற்காலம் 5½-மணி வரையிலாகும். ஞாயிற்றுக் கிழமையன்று ஓய்வுநாள். கருப்புக்குல்லாய்க் கைதிகளை ஒரு பெருங் கூட்டமாகத் திரட்டி, ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணி முதல் 3-மணி வரைக்கும் சிறையாளர்கள் மீண்டும் சிறை புக்கிக் கெடாவண்ணம் அன்பான அமிர்த மொழிகளால் அருமையான பிரசங்கி யொருவரின் உபன்யாசம் நிகழ்ந்தேறும்.

வெள்ளை, சிவப்புக் குல்லாய்க் கைதிகளை ஒன்றாகத் திரட்டிய மற்றொரு கூட்டத்திற்கு மாலை 3-மணி முதல் 4½-மணி வரையில்

---

147. கூடப் பிறவாத ஸகோதர (!) உறவுகள் நாமே வைத்துக் கொண்ட போலி உறவுகள். இரவல்—செயற்கை உறவுகள். இயற்கை உறவு போன்று ஆழமாக ஊன்றுவனவாகா. ஒரு சிறு வருத்தத்தில் பிரிந்துவிடும்.

மற்றொரு பிரஸங்கம் நிகழும். கைதிகளின் மனதில் நல்ல எண்ணங்கள் உதிக்கும் வண்ணம் உருக்கமான பிரஸங்கத்தை ஒரு பெரியவர் செய்வார்.

கல்வி:—இஷ்டமான கைதிகள் தினம் ஒரு மணி சிறைப்பாடசாலையில் கல்வி கற்றுக்கொள்ளும்படி வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சில தண்டனைகள்:-உத்தரவுகட்கு உள்ளடங்கி நடவாதகைதிகளுக்கு விதிக்கும் சில தண்டனைகளாவன:—(1) இரவில் கைவிலங்கிட்டு கதவுக்குப் பக்கத்தில் நிறுத்தி, வலக்கையை மார்புக்குமேல் கதவில் பூட்டிவிடுவது. இரவு முற்றிலும் நின்றுகொண்டே தன்னை மறந்த தூக்கத்தில் கனத்த கால்வலி வேதனைகளுடன் நொந்து கண்ணீர் விடவேண்டும். (2) நாள்முழுவதும் வெயிலில் மாடுகளுக்குப் பதிலாக செக்கு இழுக்கவேண்டும். (3) பகலில் தனியறையில் விட்டு ஒரு மனிதன் செய்யக்கூடிய வேலைக்குச் சற்று அதிகமாகக் கொடுத்து முழுவதும்செய்யுமாறு வற்புறுத்திச் சிக்ஷித்தல். ஒரு மூட்டை 'ஆரியம்' அறைக்கவேண்டும்.

கடுங்காவல்:—கடுங்காவலுக் காளானோர் சிறை யதிகாரிகளால் ஏவப்பட்ட எல்லா வேலைகளையும் செய்யவேண்டும். பகலில் கைதிகளுடன் மெதுவாகப் பேச இவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வாய்ப்பதுண்டு. ஜயிலுக்குச் சொந்தக்காரர்கள்போன் றிருப்போர் கடுங்காவல் பெற்றவர்கள்.

தனிக்காவல்:—ராஜீயக் கைதிகளில் சிலரை மட்டும் இதில் சேர்ப்பர். தனிக்காவல் என்று சிக்ஷிக்கப்பட்டோரும், கௌரவ கைதிகளும் இதில் அடங்குவர். வார்டர்களின் கடுமையான காவலுக்கு உட்பட்டு, தனி அறையில், அல்லது அறையைச் சேர்ந்த வெளிப்பாகத்தில் குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்குமாறு கட்டளையிடப் பெறுவர். அதிகாரிகளுக்கு இஷ்டமிருப்பின் மட்டும் இவர்கள் வாசிக்கப் புஸ்தகங்கள் முதலியன பெறலாம். இவர்கள் எவ்வித வேலையும்செய்ய வேண்டியதில்லை.

வெறுங்காவல்:—தனி அறையில் வரிசையாக விட்டு இரவும் பகலும் பூட்டிவிடுவது. புசிப்பு அளிக்கும் தருணத்தில் மட்டும் வெளியில் விட்டுப் பின் மறுபடியும் பூட்டப் படுவர். குளிக்கவும் வெளிக்குப் போகவும் கொண்டுபோகப் படுவர். சொந்த உடைகளை இவர்கள் மட்டும் அணியலாம். இவர்களுக்குக் கால்விலங்கு இல்லை. இரவும் பகலும் பூட்டப்படுவதால் பொழுது தொலைவது மிகக்கஷ்டம். ஒருவருடன் பேசக்கூட வழியில்லை. ஒரு வேலையும் செய்யவேண்டியதில்லை.

---

148. எத்துணை மனம் விட்டுப் பழகிடினும், தெரியக்கூடாதென்று மறைத்துள்ள சங்கதிகளும், நெஞ்சின் கபடமும், தவறிக்கூட வெளிவருவதில்லை. இது ஒரு ஸாகசம்.

பார்வை:—பிரதி ஞாயிற்றுக் கிழமையிலும் எல்லா கைதிகளையும் சுத்தமான உடைகளுடனும், அவரவர்கள் குறிப்புப் புஸ்தகத்துடன் வரிசையாக நிறுத்தப்படுவர். சரியாக ஏழு மணி யடித்ததும் பெரிய டாக்டரும், சூப்பிரண்டெண்டும், ஜெயிலர் போன்ற சில்லரைச் சிப்பந்திகள் முதலானோரும் கைதிகளைப் பார்வையிடுவர். கைதிகளின் நியாயமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படும் நாள் அது. தன் வேலை மிகக் கஷ்டமானதென்று கேட்டுக்கொண்டால் அவர்களது நெம்பர்களைக் குறித்துக் கொள்வார்கள். ஜ்வரம் முதலிய பிணிகளின் வசப்பட்டிருப்பின், டாக்டரால் பார்வையிடப்பட்டு சிறை ஆஸ்பத்திரிக்குச் செல்ல அநுமதிக்கப்படுவர். இறுதியில் 'சின்ன' டாக்டர் அனைவரையும் திராசில் நிறுத்தி எடைபோட்டு அவரவர்கள் புஸ்தகத்தில் குறித்து அனுப்பி விடுவார். இப்புஸ்தகங்கள் யாவும் மறுநாள் ஜெயிலதிகாரிகளின் பார்வைக்குப் போகும். வேலை கஷ்டமென்று கேட்டுக்கொண்ட கைதியின் எடை முந்தின வாரத்தை விடக் குறைந்திருந்தால் மட்டும் சுலபமான வேலை செய்ய எழுதிவிடுவர். எழுதத் தெரிந்தவர்களிடத்தில் கார்டு கொடுத்து விடுகிறார்கள். அக்ஷரஞானமற்றோருக்கு ஒரு எழுத்து உத்தியோகஸ்தர் எழுதித் தருவார். அதில் சிறைச் செய்திகள் எதுவும் எழுதப்படாதாம்.

பேச விடுதல்:—கைதிகளைக் காணவும், பேசவும் சொந்தக்காரர்கள் விரும்பி விண்ணப்பித்துக்கொண்டால், குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை பேச விடுவர். இது சிறை யதிகாரியின் இஷ்டத்தைப் பொறுத்தது. பேசப்படும்வெளியறையில் ஒரு பக்கம் சொந்தக்காரர்களையும், உள் அறையில் ஒரு பக்கம் கைதிகளையும் விட்டு, இருவருக்கும் மத்தியில் கம்பிகளால் கதவு இடப்பட்டு, ஜெயிலர் அருகே நின்று கொண்டு 20-நிமிஷம் பேசவிடுகிறார்கள். அத்தருணம் சந்தை இறைச்சல்போல் இருக்கும். துயர்மிகுங் கண்ணீர்கள் வடிந்தவா றிருக்கும். சிலர் அத்தியந்த சோகத்துடன் பேச முடியாமலே ஸ்தம்பித்துவிட 20-நிமிஷங்களும் எவ்விதமோ பறந்து போய்ப் பின்னர் கலங்கி வாடுவர். குறித்த நேரம் முடிந்தவுடன் திடீரென இருவருக்கும் மத்தியில் திறை விடப் பட்டுப்போம். பிறகு பரஸ்பரம் முகங்களைக் காணாது பிரலாபக்கூச்சல் வானத்தை முட்டிக் கிழிக்கும்வாறு எழுந்துவிடும். இதனினும் நகரவாதனை வேறில்லை. கையிற் கிடைத்தும் களிக்க இடமில்லை யென்ற பழமொழி இவ்விடத்திற்குத்தான் நன்கு பொருந்தும். இதை ஒரு ஜெயில் நாடகம் என்றே இயம்பிடலாம். பிறகு காட்சி இல்லை.

---

149. ஓ! அவள் நமக்குக் கடிதம் எழுதினாள்; இனி அவள் நமக்கு வசப்பட்டு விடுவாள்; என்று நினைக்கும் வஞ்சக ஆடவர்களே உலகில் அதிகம். கடிதம் பெரிய சத்துரு.

இனி எப்போதோ! பிழைத்து வந்த நாளில் சந்திப்பு! அதுவரையில் இருசார்பினருள்ளும் ஆயுள் என்ன நிச்சயம்?

க்ஷவரம்:—இரும்புத் தகட்டில் செய்த கத்தி. 'செத்தவன்' மூக்கைக்கூட அறுக்காதது. ஆனால் பளபளப்பாக இருக்கும். மாதம் ஒருமுறை அவசியமாக முழுமொட்டை யடித்துக் கொள்ள வேண்டும். க்ஷவரம் செய்துகொள்வதற்குள் பாதி பிராணன் போய் விடும். ஆட்டை அறுக்கும்போது எவ்வளவு கஷ்டப்படுகிறதோ, அவ்வளவும் பட்டுத்தான் தீரவேண்டும். நல்ல கத்திகளை அதிகாரிகள் தருவதில்லை. எவ்வகையிலும் சுகாநுபவம் கூடாதென்பது அவர்களின் கருத்துபோலும். க்ஷவரம் செய்யும் பிரபுக்கள் (?) நாவிதக் கைதிகளேயாம்.

தோட்டி வேலை:—மலஜலங்களைச் சுத்திசெய்யவும், மாலையில் பிரதி அறையிலும் ஒவ்வொரு சட்டி வைக்கவும் சக்கிலியக் கைதிகள் ஏவப் படுகின்றனர்.

லாகிரி வஸ்துக்கள்:—சிறையில் பொடி, புகையிலை, வெற்றிலைப் பாக்கு, சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவற்றை உபயோகிக்க வொண்ணாதெனக் கண்டிதமான ஏற்பாடு செய்யப் பட்டுளது.

புசிப்பு:—பெரும் வயிறு படைத்தவனுற்குச் சிறையுணவு பாதி வயிற்றுக்குத்தான் போதும். களி முக்கால்வயிற்றுக்குப் போதும். ரொட்டி பாதி வயிற்றுக்குமேல் சற்றே எட்டிப் பார்க்கும். ரொட்டிகளைக் கஷ்டமின்றிக் குழம்பில் துண்டித்துப்போட்டு உண்ணமுடியும். ஆனால் ரொட்டி கிடைப்பது எல்லோருக்கும் சாத்யமல்ல.

சாவிகள்.—சிறைச்சாலையின் அறைகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றனவன்றோ? பிரதியறைக்கும் பூட்டுகள் மட்டும் ஒரே மாதிரிபோலத் தோற்றும். ஆனால் சாவிகள்மட்டும் தனித்தனியாக இருக்கும். ஒரு சாவி மற்றொன்றுக்குச் சேராது. இதுதான் இதில் விசேஷம்.

அத்தியாயம்—6.

பார்வதியும் ஜெகநாதரும்.

மிகவும் கம்பீரமான தோற்றத்துடனும், ஈச்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணிறந்த பிராணிகளுள் தானே ஒப்புயர்வற்றவள் என்பதனால், ஓர் இளம் புன்னகை மேற்கொண்டெழ, தன் மெல்லிய விரல்களால் கடித உறையைத் திறந்து உள்ளிருந்த நிருபத்தை எடுக்க, நீண்ட கண்கள் கீழ்வரும் வாக்கியத்தை நோக்கின:—

150. சிவப்பு நிலாவை மணக்கவும் அவா. கருப்பு லீலாவின் மீதும் பழகிய பாச நினைவு. எவளை மணப்பது? என் செய்வேன் தெய்வமே!

பிராப்தம் தீர்ந்த என் பார்வதிக்கு,

ஆழிநீர் வண்ணன் அருள் கதித்திடுக. நல்லார்தங் கேண்மை விலையிலா நவமணி. நீயும் ஒரு நல்லாள். நின்னருள் நாடி இனிய ஸமூகம் எய்தவன் நாளொரு மூன்றில். நவகாரிகைப்பருவத்தே நங்கை பங்கஜா இலங்கிடுகின்றாள். அன்பும் அழகு உருவமைந்தன அவள்பால். அவ்வன்பு வெள்ளத்தே நீந்தி விளையாடிட நிர்மல நிருப னொருவனை அருள்கூர்ந்தனர் ஆதிபகவன். அன்னார்தங் காதலின் எல்லையை அளந்து நவின்றிட இயலா. அவர்களின் நிலையில் நாம் இருந்தால் என்ன செய்திருப்போமென்று கிஞ்சித்து ஆலோசிப்பின், அவர்களின் நடத்தையும், அது சரியா—சரித்தப்பா என்பதும் இனிது புலனாகும். அவர்களின் பிரேமை நாளுக்குநாள் வேரோடிவருகிறது. சிந்திப்பாய் சிற்றிடையாய். நின் கணவருக்கும் என் அன்பு வழங்குக.

உரியார்க்கு உரிய—ஜெகநாதன்

கடிதம் நோக்கிய கண்மணி பார்வதி கண்முத்துச் சிந்த நின்றாள். நெருக்கி யிறுக்கிய தொடர்பு சருக்கிய வினை—யோட, எம்நாடி, இது வேளை விருதோடு வருவாய் என ஜெகநாதனைத் துதித்தாள். "ஹா! கடவுளே! பிராணபதமானோர்தம்மை யெல்லாம் எக்காலத்துக்குமே தூரநாட்டினிலேயே வைத்து, கடிதம் எழுத்துகளையே அவர்கள் நெடுநாளைக்கும் காணச் செய்து, எப்போதோ ஓர் இசைந்திடு காலந்தன்னில் சந்திக்க விட்டு, சில நிமிஷங்களில் பிரித்து, இங்ஙனமே ஜீவிய காலமுற்றும் பிரிவினையே கதியாக்கி, இறந்த முகத்தையும் காட்டாது, மசானம் சென்ற மறுநாளில் அவர்கள் வியாதிப் படுக்கையிற் கிடந்த வெறுந்தரையைப் பார்த்து வயிற்றி லடித்துக்கொண்டு புலம்ப வைக்கிறாய். பரஸ்பரம் பிரேமை கொண்டு பிரீதித்ததற்கு நீர் இயற்றும் உதவி இதுவேயோ" எனப் புலம்பிக் கலங்கினாள் காதல்வல்லி.

இக்கடிதம் பார்வதிக்கு நாற்றிக்கும் சுற்றி நாட்கள் பல தாழ்த்துக் கிடைத்தது. காரணம் தபால்யந்திரத்தின் பழுதே. தபால்வழியே அனுப்புங் கடிதங்களில் முக்கிய கடிதங்கட்கே சிதைவு காண்கின்றன. தவறிவிடுகின்றன. வேறிடம் பிழைபட்டுச் சுற்றித் தலைசாய்த்துப் பின்னர் கிடைக்கின்றன. இது அவரவர் அதிர்ஷ்டம்! கடிதத்தைப் பார்வதி முடிக்கும்வேளையானது நம் ஜெகநாதர் அப்பாவைமணியின் இல்வாயிலைக்கிட்டும் சந்தர்ப்பமாயிருந்தது. பின் அந்த சுந்தரீரத்நம் வாய்விட்டுப் பேசிச் சோர்கையில், இறுதியின் போது ஜெகநாதரும் எதிரே தோற்றினார். திடுக்கிட்ட கண்மணி கண்களைத் துடைத்துக்கொண்டு பிரேம பூர்வகமாய்

151. சிலருக்குப் பேசும் போதே மீசையில்—அதை முறுக்கக் கை போகிறது. முறுக்கிக்கொண்டே பேசுகிறது. அடடா! என்ன பெருமை!!

ஜெகநாதரின் அடிபணிந்து வணங்கினுள். பாவசையானுள். "புனித ரூபனே! வருக! வருக, மங்களம் தருக. இன்பம் நிலவிடுக. நேக மார் பங்கஜா பாசமாய் க்ஷேமமா?" என்ருள்.

"மங்கை நல்லாய்! புனித மிகப்பெறு சுகுணமாலினீ! பார் வதி! என் மனுேகிட மிழந்திட ஏன் இவ்விதம் வாடி நிற்கின்ருய்? எனது உயிர்த்துணை 'யுனையல்லா திந்த உலகமதிலில்லை. நின் க்ஷேமமே—சுகவாரிநியே என் சொந்தப் பொக்கிஷம். நீ கண் கலங்கிடக் கண்டு ஸகியேன் நான்."

"பிரிந்தோர் உறுவது பெருகிய துன்பம். பிரியாதார் உறுவது பெரும்பேரின்பம். அது கருதியே நைந்து உருகியது என் உளம். தங்களின் அக்ஷாமாலையாம் லிகிதத்திற்கு எதிர்பார்த்து விழி பூத்தனன் நெடுநாள். பெற்றிலேன் அப்பெரும்பேறு பாவியேன் அந்தோ! இன்றே கண்டேன்; இன்புற்றேன்; கண்ணீர் ததும்ப நின் றேன். பழய நாள் நினைவு பன்னரிய துன்பம் பட வைத்தது."

"தாசியும் ஒரு கற்பரசியும் ஒருவனுக்கு இணங்குகின்றனர்க, விலைமகள் விரும்புவது 'இன்ப'த் தின் விலை. குலமகள் நாடுகையோ ஆத்ம ஸம்பந்தம்—இகபர சாதகமான காதல். அவ்வுத்தமக் காதல் கூர்ந்தார் பரஸ்பரம் நெஞ்சத்தின் கண்ணே என்றுமே உறைபவர். மானத தந்திபாற் பேசிக்கொள்ளவும் கூடுபவர்,—இயலுபவர். "கம்பியில்லாத் தந்தி" அவர்களுக்கே தகுதி. வெளிச் சார்பினதாய நிருபங்களாதியன அவர்பால் அத்துணை வேண்டா. கடிதம் வாரா தது கருதி அன்பு குன்றிவிடுகை எஞ்ஞான்றுமில்லை. மேலும் உள் ளன்பு மிக்குற்று ஒரு மனதாகி விகற்பம் கருதாதோர்க்குத் தான் பெரும்பான்மையும் பதில் நிருபம் வரைந்திட மிகு தாமதமாகி விடு கின்றது. நெருப்பின்றிப் புகையேது? இதற்குக் காரணமுமுண்டு. என்னதான் ஆயிரம் தவறு இழைத்திடினும், நம்மைவிட்டு அகலார் எனவும், எவ்வகையானும் மன்னிப்பாரெனவும், என்ன கோபம் நம்மீது உதிக்கினும் நேரிற் சென்ற காலத்து யாவும் மறந்து அன்புமயமாகி விடுவரெனவும், இனிமேல் அவ்விதம் செய் வதில்லை யென்று கேட்டுக்கொள்ளலாமெனவும் கருதித் துணிகின்ற ஒரு தைரியசித்தமேதான் தக்ஷணமே விடை வரைதற்கின்றி எவ் விதமோ காலகாரணமாக்கி விடுகின்றது. இதுவேண்டுமென்று செய்வ தில்லை. எவ்விதமோ நேர்ந்து நெடுநாள் கணக்கில் வந்து விடுகின் றது. மற்றவருக்கோவெனில், 'அவர்களின் சவிப்பு நமக்கு ஏன்?' என வெளிமனத்தோடு அந்தநேரமே கடிதம் எழுதவைத்துவிடுகின் றது. மேலும் ஒருமனப்பட்டோர்க்கு மனது குவிந்து அன்பு கலந்து வரைதற்கான வேளை—நேரம்—பார்த்து, அந்த நல்ல பொழுதுக்கு, எதிர் நோக்குவதிலும் நாட்கள் சென்று விடுகின்றன.

---

152. ஏன் அவனை வேலைக்கு வைத்துக்கொண்டாய்? "முன்பு நான் ஏழை யென்று எனக்குப் பெண் தர மறுத்து அவனுக்குத் தந்தனர். இப் போது இவ்விருவரில் யார் ஏழையென்று அவர்கள் உணர்வதற்கே"

பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்கள் நிறைந்த மாதப் பத்திரிகை.

(ஸ்ரீ ஆகம் N. முஹம்மது இபுராஹிம் அவர்கள் ஆதரணையில் பிரசுரம்.)

கமலம்-18 | திருச்சி: மார்ச்சுமீ 1923 | இதழ் · 11

ஓம் பரப்பிரம்மணே நம:

பிரேம மாலா

"எல்லாப் பொருள்களிலும் பகவான் இருக்கின்றார்"—என்ற மனோ நிச்சயத்துடன் நாம் அன்பு செலுத்தவேண்டும். அப்படி உள்ளன்புள்ள உத்தமர்கட்குப் பகைவனென்றும் நேசனென்றும் வித்யாஸமில்லை. பகைவனால் கெடுதியும், ஸ்நேகனால் நன்மையும் நேருவது ஸகஜமாதலின், இரண்டு மில்லாதவர்க்கு சுகதுக்கங்களில்லையாகும். வேதாந்தி ஸகல வஸ்துக்களிலும் பகவான் விளங்குவதா யெண்ணிப் பிரீதி பாராட்டுவதால், அத்தகையோர்க்கு நித்யமான ஸுகம் லபித்ததென்னலாம். எவனுக்கு விரோதியேயில்லையோ, எவனுக்கு ஸர்வ ஜனங்களும் பிரியகரர்களோ அவனுக்கு ஸந்தோஷம் அதிகம். அவனே பாக்கியவான். இவ்வளவு ஸந்தோஷமும் திருப்தியும் பகவானை வணங்குவதால் உண்டாகின்றனவாதலின் பிரதி தினமும் நாம் அவரைப் போற்றக் கடவோம்.

* * *

"மனுஷ்யனுடைய மனம் வேது அற்பமானது." அதில் பக்தியை யுண்டாக்குவதென்றால் எளிதல்ல. நினைத்தற்கரியதும், சொல்லற்கரியதுமான பிரம்மத்தைத் தியானிப்பது ஸாத்தியமல்ல. அதனால் அந்த பிரம்மம் ஸர்வ பிராணிகளிடமும் கருணைகொண்டு மனுஷ்யாவதாரமாய் அவதரித்து ஒவ்வொருவர் மனதையும் உறைவிடமாகக் கொண்டிருக்கிறது. புத்திசாலிகள் அந்த அவதாரமூர்த்தியின் கிருபையை யடையவேண்டி அவரைப் பலவிதமாய்ப் பாவித்துப் போற்றுகின்றனர்.

* * *

"உலகத்தில் பற்பல ஆச்சரியங்கள்" இருக்கின்றன. அவைகளில் அநேகம் நம்முடைய கவனத்தைக் கவராமலே போகின்றன. தெருக்களில் ஒரு பிச்சைக்காரன் மற்றொரு பிச்சைக்காரனைப் பார்த்துத் திட்டும்போது "அடே பிச்சைக்காரப் பயலே" என்கிறான். தன்னுடைய ஏழ்மையை அவன் அந்த வேளையில் மறந்து விடுகிறான் போலும். இருவர் திட்டிக் கொள்வதையும் கண்டு பணக்காரன் புன்னகை கொள்கிறான். அவனுடைய மனதில் அவ்விரண்டு அவிவேகிகளும் தங்களுடைய நிலைமையை யறியாத

மாற்றாந்தாயும் மாமியும் பெண்ணுருவின் பெருமைக்கே பழிப்பானவர்கள். இன்னோர் நன்மனத்தினராதல் அபூர்வ சம்பவம்.

வர்களென்று தோன்றிச் சிரிப்பு உண்டாயிற்று போலும். இப்படியே ஒவ்வொரு ஜீவாத்மாவும் பிறருடைய அசட்டுத்தனத்தைக் கண்டு அகமகிழுகின்றதே யன்றி, தான் தன்னுடைய ஆத்ம க்ஷேமத்தைக் கருதாமல் தன் ஆயுள் காலத்தைக் காலனிடம் ஒப்புவிக்கிறோமே யென்று வியஸனப் படுவதில்லை. இது எல்லா ஆச்சரியங்களிலும் முதன்மை யானது.

***

"மனஸ்" என்பது எல்லையற்றது. ஆகவே அதில் உதிக்கும் எண்ணங்களுக்குக் கணக்கில்லை. ஒரு வீடா யிருந்தால் அதற்கு நீளம், அகலம், உயரமுண்டு. போகமுடியாத தடையுமுண்டு. மனதுக்கு எல்லை கிடையாது. அகல நீளம் என்ற பரிமாணமில்லை. ஆதலின் மேதாவிகளா யிருப்போர் புதிய விஷயங்களை ஆயுள் பரியந்தம் எழுதிக் கொண்டே யிருக்கலாம். ஐச்வரிய ஸம்பன்னர்கள் ஏராளமான திரவியத்தை ஒரு பாங்கில் போட்டு பத்திரப்படுத்திச் சில காலம் கழித்து வட்டியும் முதலும் அடைவதுபோல, புத்திசாலிகள் அநேக கிரந்தங்களைப் படித்து அவற்றால் புத்தியை விசாலப்படுத்தி இதரர்க்கு உபயோகப்படுமாறு நல் விஷயங்களைக் கூறுவர்.

***

"குடத்தைச் செய்வதற்கு மண் வேண்டும்." அதை இளக்குவதற்குத் தண்ணீர் அவசியம். இளகிய மண்ணைக் கெட்டியாக்குவதற்குக் காற்று முக்கியம். பின்னர் அக்குடத்தைச் சூளையிற்போட்டு சுடுவதற்கு அக்கினி வேண்டும். ஆகாசத்தின் அவசியம் சொல்லவேண்டியதில்லை. ஆகவே பஞ்ச பூதங்களும் சேர்ந்து குடமாகிறது. உலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் பிரித்துப் பார்த்தால் பஞ்ச பூதங்களாகும். அவற்றைத் தவிர வேறு பொருள் ஏது? ஆயினும் நாமரூப பேதங்களால் வஸ்துக்களின் தன்மை வித்தியாஸப்படுகிறது. ஸந்தர்ப்பத்துக்குத் தக்கபடி அபிமானமும் அருவருப்பும் உண்டாவதால் எந்தப் பொருளிலும் விவேகிகள் இச்சை கொள்ளுகிறதில்லை.

***

"தேனும் பாலும் கற்கண்டும்" நாவிற்கு இன்பத்தைத் தருகின்றன. இதைப்போல் பெரியோர்களுடைய சொற்கள் செவிக்கு வெகு இன்பமாயிருக்கும். எப்போதும் சந்தோஷ சித்தர்களாய் கிருபா நோக்குடையவர்களாய், மிருது மதுர வசனங்களை யுரைப்பவர்களாயிருப்பதால் ஸாதுக்களுடைய ஸஹவாஸம் சிலாக்கியமென்றோம். துஷ்டர்களின் வாயில் தூஷணைச் சொற்கள் நிறைந்திருக்கும். பக்தர்களின் வாக்கில் பகவந் நாமங்கள் தோன்றிக்கொண்டிருக்கும். ஆதலின் பாபிகளைக் கண்டால் பாம்பைக் கண்டஞ்சுவதுபோல் பயந்து ஒதுங்கவேண்டும். அப்போதுதான் பெருமை தங்கிய மனம் கெடாமலிருக்கும்.

***

"மனுஷ்யனுக்கு அநேகவித துன்பங்களுண்டாகும்." அவற்றால் அவன் அதைர்யமடையலாகாது. சிற்பி ஒரு சிலையைச் செய்யவேண்டிக் கல்லைச் செதுக்குகிறான். ஒவ்வொரு செதுக்கிலும் ஒவ்வொரு அங்கம் ஹீனமடைவதுபோல் காணப்படுகிறது. கடைசியில் சிலை வெகுஸொகுஸாய் முடிகிறது.

அன்பொன்றுக்கே உட்படுபவனை, அந்த அன்பின்றித் தன் ஆடம்பரத்தால் மயக்க நினைப்போன் ஏமாற்றமே காண்பான்.

அதைக் கண்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் அகமகிழுகின்றனர். அதுபோல் பகவானுகிய சிற்பி நமக்கு நற்பெயரை யுண்டாக்குமாறு இடையிடையே துக்கங்களைக் கொடுத்துக்கொண் டிருக்கிறார். முடிவில் அவருடைய கருணை தெரியும். எல்லாவிதத் துன்பங்களையும் ஸஹித்து நமது கடமையைக் குறைவின்றிச் செய்து முடித்தால் நல்ல கீர்த்தியை யடைவோ மென்பதிற் சந்தேகமில்லை. ஆகவே மத்தியிலுண்டாகும் விபத்துக்களைப் பற்றி விய ஸன மடைந்து மனோ தைர்யத்தை யிழக்கலாகாதென் றேற்படுகிறது.

***

"மனம் போலிருக்கும் மாங்கலியம்" என்று ஒரு பழமொழியுண்டு. நல்ல நினைவுள்ளவர்க்கு எப்போதும் நன்மையே விளைக்கும். கெட்ட நினைவுடையோர்க்குக் கெடுதலே விளையும். உலகத்தில் பொருளை யபேக்ஷித்து நல்ல நினைவையும் கெட்டநினைவையும் கொள்ளுகின்றனர். யாசகம் வாங்குவோன் தாதாவின் செல்வம் பெருகட்டுமென்று வாழ்த்துகிறான். அவனுக்கு நல்ல நினைவு உண்டாகிறது. அதனால் வயிற்றுக்குக் கஞ்சி கிடைக்கிறது. திருடன் பிறர் பொருளை யபகரித்து அவனைத் தரித்திரனுக்கும் கெட்ட நினைவைக் கொள்ளுகிறான். ஆகவே திருடன் போலீசாரிடம் சிக்கித் தண்டனை யடைகிறான். அவரவர்கள் நினைக்கும் நினைவுக்குத் தக்கபடி சுகத்தையும் கஷ்டத்தையும் அனுபவிப்பார்கள். இதிற் சந்தேகமில்லை.

இரண்டு கருமிகள்

"முற்காலத்திலே ஒரு கருமி இருந்தான். 'என்னடா இவ்வளவு கருமியாய் இருக்கிறாயே, கை கருணைக்கிழங்காய் இருக்கலாமோ என்று அவனுடைய நண்பர்கள் அனைவரும் அவனை ஏசிப் பேசினர். இதைக் கண்டு அவன் சகிக்க முடியவில்லை. தவிர, அவனுடைய நெஞ்சமும் அடிக்கடி சலித்து வந்தது. பார்த்தான் கருமி. சரி, கொஞ்சம் தானஞ்செய்து பார்ப்போம் என்று தீர்மானித்தான். உடனே இரும்புப் பெட்டியைத் திறந்தான். கொஞ்சம் ரூபாய் எடுத்தான். ஒரு பிச்சைக்காரனையும் கூவி யழைத்தான்.

அழைத்து மென்ன? பிச்சைக்காரன் நெருங்கியவுடனே, கருமியின் மனம் மாறு பட்டுப் போயிற்று. கையிலிருந்த பணத்தை வழங்க மனம் வரவில்லை. ஆகவே கையை மூடிக்கொண்டு விட்டான். இப்படியிருக்க, அவனுடைய நண்பர்களோ 'இவன் என்ன செய்கிறான் பார்ப்போம்' என்று உற்று நோக்கி யிருந்தனர். எனவே, தனத்தை வழங்கி நண்பர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்று அவனுக்குப் பட்டது.

என்றாலும், நெடுநாளாய் இருந்து வந்த கருமித்தனம் அவனை விட்டகலுமோ? மனமிருந்தும் கை வரவில்லை. இப்படி அவன் இக்கட்டில் அகப்

தன் காரியத்திற்கு அன்புள்ளவன் போல் பசப்பி, உள்ளுக்கு அன் பற்று, சுயநலத்திற் கண்ணுயிருப்பதற்கே 'வஞ்சகம்' என்பர்.

பட்டு முன்னும் போகாமல் பின்னும் போகாமல் இருக்கையில், பிச்சைக் காரனை விளித்து "அடே என் கையைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு போ. வலுவில் தனத்தை வழங்க மனம் வரவில்லை" என்றான்.

***

இக்கதை ஒருபுறங் கிடக்க, மற்றொரு கருமியின் கதை யுளது. இவனோ தன் கையில் ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு கடைக்குப் போனான். பஜாரில் நல்ல சாமானை வாங்கவேண்டுமென்பது இவனுடைய கருத்து. அவ்வாறே கடைக்குச் சென்றான்; நல்ல சாமான்கள் விற்கும் கடையைப் பார்த்தான். என்ன வாங்கலாமென்று சிந்தனை செய்தான். இப்படி யிருக்கையில், கையை விட்டுப் போய்விடப் போகும் ரூபாயைக் கடைசியாக ஒரு முறை கண்ணால் பார்ப்போமே என்று கையைத் திறந்தான். பார்த்தான் ரூபாயை. கையிலிருந்த வியர்வையினால் ரூபாய் நனைந்திருந்தது. "ஓ! குழந்தை அழுகிறது, நம்மை விட்டுப்போக மனமில்லை. அதனால் தான் குழந்தை கண்ணீர் சிந்துகிறது" என்று கருதினான். அவ்வளவு தான் தாமதம். ரூபாயைச் செலவு செய்யவில்லை. வீட்டுக்குப் போய் விட்டான். கருமிகள் உள்ள இடத்தில் உறவினர் உபசாரமும் அன்பின் ஆதரணையும் சுருங்கும்.

பழங்கடிதத் திரட்டு

[பழங்கடிதங்களி னின்றும் ஆராய்ந்தெடுத்த நுண்ணிய குறிப்புகளாகுமிவைகள். பார்த்தருசி சேர்த்தவொரு பைந்தேன் கூடுஇது. இவற்றுள் தோன்றும் நீதி நுட்பங்களும், உலக இயற்கைகளும், ஆழ்ந்த அநுபவங்களும் உற்றுணரத்தக்கன. இது புதுமுறை.]

1. சகிப்புத் துணர்:—

"இருக்கிற பொழுதை இன்பமாய்க் கூடியவரையில் போக்கமுயன்றிடுவோம். அந்த சுபாவம் என்னுடையது. எனக்கு எவர் மீதும் வருத்தமில்லை. "சென்ற செல்க" என்பதே எனது பாடல். அதுவே என் தன்மை."

2. பல பக்கக் கடிதங்கள்:—

"உங்கள் இருவருக்கும் பல பக்கங்கள் வரைந்திடத் தெரியும். எனக்கோ அதற்கு நேரமும் சமயமும் இல்லை. பல பக்கங்களாக இருந்தால் தான் படிப்பவர் மனதிற்குத் திருப்தியை யுண்டாக்குமாம். எனக்கோ சுருங்கச் சொல்லல்தான் பிரீதி."

ஒன்று சேர்த்தவர்களுக்கே படுகுழி தோண்டுபவர்கள் பாவியிலும் பாவி. குழியும் தோண்டிக் குலாவுவோனை என்னென்று கூற?

3. அன்பின் தாரதம்மியம்.

"மனதில் பிரியமிருந்தால்,—அது ஆரம்பப்பிரியம்—நேசம்—ஆனல் தான்,—தொடர்ந்த கடிதங்கள் இடைவிடாது வேண்டும். பல நாள் வழக்கப் பட்ட பிரியத்திற்கு ஆடிக்கொரு கடிதம்—அமாவாசைக்கொரு கடிதம் போதும். மனதில் பிரியம் வைத்துச் சந்தித்த காலம் செலவிடுக. நன்ருய் வளர்ந்த மரங்களுக்கு ஜலம் ஊற்றவேண்டிய தில்லே. அதுபோலவே நமது பிரியத்திற்கும் தினசரி நிருபங்கள் வேண்டா."

4. பாசபந்தத்திற் கேற்ப உருக்கம்:—

"பாட்டியார் விஷயமாய் எனக்குள்ள கவலையில், நூற்றில் ஒரு பங் காயினும் உனக்கு ஏற்பட எவ்வித பாசபந்தத்துவமும் கிடையாதென்ற உண்மை எனக்குத் தெரியும். ஆகவேதான் அது உனக்குப் பெரிதாகப்பட வில்லே. எனக்கோ அதனினும் பெரிது வேறில்லே. பாசபந்த மிருப்பின் எந்தச் சிறிதும் பெரிதாய்த் தோன்றும்."

5. செயற்கை அழகு:—

"உன் பொட்டகிராப் கண்டேன். கால்மேல் கால்போட்டு வீற்றி ருக்கிருய். ஸாத்மீகம் என்பதே நின்னில் விளங்கிலது. நாகரீகன் போலும் ஒளிர்கின்றனே. மன்மத பாணங்களால் சுடப்பட்டு யௌவனவஸ்தை ஸகிக்க த்தாளாமல் ஒரு உத்தியானவனத்தில், அதன் குளிர்ச்சியாலேனும் ஆற்றிக் கொள்ள நினைத்திடும் சுகுண சுகிர்த சுந்தரன்போலும் படத்தில் காண்கின் ருய். வசன சாதுர்ய முகவசிகர பாலமன்மத சிருங்காரனே! இத்துணை ஆரவார சோபிதம் எவரை மயக்குதற்கோ?"

6. உத்தியோக வேளேயில் மட்டும் உத்தியோகஸ்தன்:—

"நான் எவரையும் அதிகாரம் செய்ய எண்ணியதில்லே. பேனு எடுத் தால்மட்டும்நான் வேறுவிதம். மற்ற தருணங்களில் யாவருக்கும் நண்பனே.

7. மறைந்துள்ள ரகசியம்.—

"உள் நுழைந்தால் தான் அவரவர் வாழ்க்கையின் கனதி தெரிகின் றது. ஏமாற்றமும் ஸஞ்சலமும் எங்கும் யாவருக்கும் உள்ளதே."

8. மறுவிவாக விசாரம்:—

"பெண் விஷயம் ஒன்றும் யோசனேயில்லே. என்னேப் பலர் பார்த் துப்போகிருர்கள். 20—வருஷங்கட்கு முன்னர் நான் வாசித்தது எந்த வகுப்பு என்று வினவி, அதைக்கொண்டு என் கல்வியின் ஆழத்தை நிதா னிக்க எண்ணுகிருர்கள். அக்கல்வியை விர்த்திசெய்து இடையே பெற்ற 20—வருடங்களின் அநுபவத்தைச் சிந்தித்துப் பார்க்க அவர்கட்கு நினைவு ஓடவில்லே. நான்—நீ—எனப் பலர் குதிக்கின்றனர். ஒன்றுக்கும் நான் வழி

புதுத்துடைப்பம் நன்ருய்க் கூட்டும். புதுமணப் பெண்ணும் சிலநாள் அடங்கி நடப்பாள். பின்னே? பின் எப்படியோ!

விடவில்லை. ஒவ்வொரு சொட்டு—சொல் எதற்கும் தோன்றிக்கொள்கிறது. யாரே கண்டார் மாஞர் விழியார் மனம்?"

9. மனைவி பிரிந்த தனிமை:—

"யாவரும் நின்னைப்போல் அவரவர் இல்லம் புக்கினர். மனைவியின் மரணம் விசாரிக்க வந்த கூட்டம் கலைந்தது. அக்கூட்டத்தில் மறந்திருந்த என் மனதுக்கு, இப்போது தான் 'அவள்' இல்லாத தனிமை நன்கு பிரத்தியக்ஷமாகின்றது. "எப்போதினிக் காண்பனே!"

10. பிரபஞ்ச நாடகம்:—

"நான் அவளுக்கு அழுகின்றேன். 'அவள்' எத்தனை பேருக்கு அழுதனளோ? எனக்கு எத்தனை பேர் அழக் காத்திருக்கின்றனரோ?"

11. மனம் பொறுத்துச் செய்தல்:—

"எதிலும் அவசரப்படமாட்டேன்? மனதைச் சாந்தப்படுத்தி ஆறின பிறகே எதற்கும் யோசிப்பேன்—துணிவேன்."

12. எதிரிடை உலகம்:—

"நீ சிவப்பு சுந்தரம். கருப்புக்கு சிவப்பும், சிவப்புக்குக் கருப்பும் வாய்ப்பது உலகவழச்சம். உனக்கும் அப்படித்தான் வரும். வேண்டுமானுல் பார். நன்மைக்குத் தின்மையும், உண்மைக்குப் பொய்யும்போல் கருப்பும் சிவப்பும் எதிரிடை."

13. அழகின் நஞ்சு:—

"அந்தரங்கத்தில் உன் நடவடிக்கைகள் எப்படிஎப்படியோ? வெளிக்கு நீ உத்தமாதப் பெருமாள்தான். அழகாக இருந்தவர்கள் வெகு பேரை ஏமாற்றி விட்டார்கள். அந்த மாதிரியே நீயும்."

14. புண்பட்ட மனம்:—

"ஸதா காலமும் என் கடிதங்களில் குற்றங் கண்டு, என்னை மதித்துள்ள இடங்களிலெல்லாம் கேவல மொழிகள் வழங்கும் உனக்குச் சில காலத்திற்காவது என் கடிதங்களை நிறுத்திவைக்க நினைக்கிறேன்."

15. தன்மதிப்புக் குணம்:—

"நான் என்றும் வணங்கா முடிமன்னன். அன்பு ஒன்றுக்கே வணங்குபவன். அன்பு தவறிய எவரையும் லக்ஷியம் செய்பவனல்லன். மனம் இசையாதவர்களிடத்து எனக் கென்ன வேலை?—என்னநட்பு?—என்னஉறவு?"

16. அபிப்பிராய பேதத்தில் விட்டுக் கொடுத்தல்:—

"தங்களுடைய கொள்கைக்கும் எனது கொள்கைக்கும் வித்தியாஸ

சண்டையோடு கூடிய ருசிகரமான பதார்த்தங்களைப் பார்க்கிலும், சமாதானத்தோடு கூடிய இலைக்கறியே உத்தமம்.

மிருப்பின் அவரவர் மனப் போக்கின்படி நடப்பதே முறையன்றி, கோபங் கொள்வது தகுதியன்று. ஏதோ தெரிந்தும் தெரியாமலும் பைத்திய வேளையில் ஏதாகினும் எழுதியிருப்பின் மன்னித்துக் கொள்ளுங்கள். எனது பைத்தியம் தீருங்காலம் வந்தால்தானே தீரும்? அப்போது ஒருவர் சொல்ல வேண்டியதில்லை."

17. ஏதாகினும் ஒரு உறுதி பற்றுகை:—

"மறு விவாகம் செய்துகொள்ள அபிப்பிராய மிருப்பின் தாமத மில்லாமல் செய்வது நலம். இல்லையேல், இனி வேறு விவாகம் செய்து கொள்வதில்லை யென்றுத் திட்டமாய்த் தீர்மானித்துவிட வேண்டும்."

18. விவாகத்தின் முக்கியமும் பெண்ணின் அருமையும்.

"புசிப்புக்குத் திண்டாட்டம் என்கிறாய். சீக்கிரம் (விவாகமுறையில்) ஒரு குட்டியைத் தேடிக்கொள். குட்டி வரும்வரையில் குட்டிக்கரணம் போட வேண்டியதே. இப்போது தெரியும் குட்டியின் அருமை."

19. தன்னைத்தானே யறியாது தோன்றுகிற சொல்லின் விஷமம்.—

"நீ சபித்து அவள் போக வில்லையப்பா. என் கெட்ட காலத்துக்கு உன் விளையாட்டுக் கடிதச் சொல் ஒரு சாபமாக நிறைவேறி விட்டதென் றும், ஆகவே விளையாட்டிலுங்கூட அமங்களமான பதங்களைப் பிரயோகிக் காதே யென்றும் அல்லவோ நான் எடுத்துக் கூறியது—கூறுவது?"

20. போலி மரியாதை:—

"உனக்கு நான் ஏதாவது மரியாதை வைத்திருக்கின்றேனே? அந்தப் பாழும் மரியாதை இருந்தால், மரியாதை தவறி நடந்ததான வார்த்தைகள் ஏற்படுமென்றெண்ணியே, அதைத் துவக்கத்திலேயே முற்றும் விலக்கிவிட் டேன். பிறகு பிரிவினை நேராதிருக்க இது ஒரு அநுபவ தந்திரம்."

21. விசனம்.—

"விசனப் படுவோனைத் தவிர மற்றவரெல்லாம் விசனத்தை ஜெ யிக்க முடியும்."

22. பழகிய மனம் பழகிய உறவையே தேடும்.

"உலகிலுள்ள ஸ்திரீகள் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கின்ற நற் குணங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெண் வடிவமாக்கி எனக்கு வாழ்க்கைப் படுத்தினாலும், மயக்கத்தில் தானே மரணமாகி மறைந்த என் மனோன்மணியின் பாத தூளிக்கும் அவள் நிகராகாள். வீண் விரிவு வேண் டா. எழுதி எழுதிச் சோர்ந்தன கைகள்!"

23. கடித எழுத்துகளின் நிறைவேறுமை:—

"மாந்தர் தம் வாணாளில் என்னென்னவோ கடிதங்களில் பல படத்

உண்மையன்புக்குத் தன் அன்பன் மீதெழுந்த அவதூறுக்கு ஆத்திரம் கொதிக்கும். அதை மகிழ்வுடன் கேட்பவனே அநுகூலசத்துரு.

திட்டிவிடுகின்றனர். அவற்றில் ஆயிரத்தில் ஒன்றுகூட அவர்களால் செய்ய முடிகிறதில்லை. கடிதந்தானே யென்று சுலபமாய்ப் பேசு போன போக்கில் எழுதி விடுகிறார்கள்.''

24. நிலையற்ற அன்புக்கு நிமிஷத்திலேயே பிரிவு:—

"அன்பு வைத்தால் சாகுமளவும் உறுதி பெற்றிருக்கவேண்டாமா—? நினைத்தபோது விட்டுவிடுகிற அன்பு ஒரு அன்பாமா? இனி உன் பாடு.''

25. காமமுங் காதலும்:—

"காதல் நோய் உயிருடன் கலப்பது. ஊன்றிப் பெருமரமாய் ஓங்கி வளர்வது. காமநோய் உடலைப் பற்றியது. காமத்தால் கெடும் நின்போன்ற பால்யர்களைக் காதலால் கெடுவதாய்த் தவறுதலாக வரைந்தனை. ஊரொன்று காண்கையில், கணிகையர் தெருவொன்று தேடும் சுந்தரா! விஷம மனத் தோய்! இதனை ஊன்றி யுணர்க.

26. வஞ்சக நினைவின் முடிவு:—

"எனக்கு வஞ்சகம் செய்தவர்கள் இதுவரை நன்றாக வாழ்ந்ததாக நான் கண்டதில்லை. என்னை வஞ்சிக்கிற உனக்கும் அதற்குத் தக்க பலன் சுடச்சுடப் படவேண்டிய திருக்கிறது. நான் வயிறு எரிந்து கொதிக்கும் கொதிப்பு எத்தனையோ தருணங்களில் மீறிப்போ யிருக்கிறது. அவை யனைத்தையும் வட்டியும் முதலுமாக அநுபவிக்க வேண்டிய காலம் பின்னுக்கு இருக்கவே இருக்கிறது. நீ கடவுளுக்கும், சத்தியத்துக்கும் பயந்து நடந்தால் ஏதோ சாந்தி பெறலாம்.''

27. தன் சொரூபத்தை முற்றிலும் காட்டிவிடுதல்:—

"நான் கோபத்தையோ, எரிச்சலையோ, அன்பையோ காட்டினால் முழுதுமே காட்டி விடுகிறது என் ஸ்வபாவம். நீ வெகுண்டாலும் சரி, கோபித்தாலும் சரி. அஞ்சுந்தன்மை எனக்கில்லை.''

28. வஞ்சிக்கப்பட்ட கோதிப்பில் சாபச் சொற்கள்:—

"உன்னை இதனால் பயமுறுத்துகிறேன் என்றெண்ணாதே. உன்னை வைவதாக எண்ணாதே. எனது நூலாசிரியத்துவவேலை—மனதிலிருந்து கக்கும் வேலை. ஒரு கண்ணராவியான வேலை. பரிதாப ஜீவியம். அதன் கூலியில் மண்போடக் கண்ணோட்டம் கொள்பவர்கள் என் போன்றவர்களால் சபிக்கப்படுவார்களன்றோ? எங்கள் சாபம் வீண்போகாது. பற்றாது விடாது. அதிலும் என் சொல் விஷச்சொல். வயிறு எரிந்து எழுதுகிற வார்த்தைகள் 'சும்மா வேலையற்றிராது.''

ஊருக்குச் செலவிட்டு விறகானவனை ஐயோ! எவர் மதிக்கிறார்கள்? தன்னலத்திலேயே செல்வம் திரட்டிய வஞ்சகனைத்தான் மதிக்கிறார்கள்.

நெருங்கிப் பழகியதில் தெரிந்த அநுபவங்களின் விநோதம்.

‘பணம்’ பத்திரிகையும் ஸ்ரீ டி. கே. இராஜகோபாலன் என்பவரும்.

2-2-23 ‘பணம்’ பத்திரிகைக்கு மறுப்பும் உண்மை விளக்கமும்.

ஆ! என்னே! “வளர்த்த கடா மார்பிற் பாய்ந்த வகை! நாம் நடத்திய “பணம்” பத்திரிகையிலேயே நம்மைக் குறித்து விஷமக்கூற்றுகள்! அவற்றை 2—2—23-ல் வரைந்தவர் ஸ்ரீ. டி. கே. இராஜகோபாலன் என்பவர். மனத்திருள் படிந்த அவரது ஆத்திர சிந்தையும், துவேஸ நோக்கும் அதில் நன்கு புலனாகின்றன. ஆரம்ப முதற்கொண்டே வஞ்சகசூழ்ச்சி! நம்மைக் கொண்டு “பணம்” பத்திரிகையை ஆரம்பித்துவிட்டுப் பின், நம்மை விலகவைத்துத் தாமே நடத்தக் கருதிய இவரது கபட நாடகம் தற்போது வெளிப்படை.

நாம் விலகிக் கொண்டதில் “பணம்” பத்திரிகை தாழ்ந்து விடுமோவென்ற ஏக்கம்; தளர்ந்திடா திருத்தற்காக நம்மைப் பொது ஜனமதிப்பில் குறைத்திட நோக்கம்; அதற்கே ஊக்கத்தோடும் மேற்படி வியாசத்தால் ஸ்ரீ இராஜகோபாலன் வஞ்சகமாய் முயல்கின்றார். இவர்நமக்கு ஸமமான எதிரியல்லர். இவர் திரிச்சியிலுள்ள அச்சுக் கூடங்களில் அச்சுக்கோர்க்கும் தொழில்புரியும் ஒரு ஸாதாரணக் கம்பாஸிடர். எவ்விதப் பிரபலமும் இவருக்கில்லை. அவரது ஜீவியத்தில் இப்பொழுதுதான் இரண்டு மாதப் பத்திராசிரியரானவர். இத்தகைய ஒரு மனிதர் நம்மைப்பற்றி நவின்றிடும் தகாத விஷமக் கூற்றுகளை நம்மீது போறாமையுள்ளவர்களன்றி மற்றெவருமே மதித்திடார். குற்றம் கூறப்படாத மனிதர்கள் உலகத்தில் அரிது. ஈச்வரனையே பழிப்பதற்கும் சிலர் இருக்கிறார்கள். சென்ற இருபது ஆண்டுகளாக நம்மையும், நமது சிறு ஊழியத்தையும்,

நமது பல நூல்களையும் அறிந்து அபிமானித்துள்ள தமிழ் நாட்டினருக்கு, நேற்றெழுந்த இப்புதியவர் நம்மைக் குறித்துக் கூறப் புகுவது பேதமையிலும் பேதமை!

இவர் நமக்கு 5—8—22-ல் வரைந்துள்ள கடிதத்தில்பின்வரும் குறிப்புகளைக் கண்டிருக்கிறார்:—

"என்னுடைய நிலைமை தங்களுக்கு நன்கு தெரிந்திருக்கக்கூடும். ஆடையினுலாய வெளிமயக்கேயன்றி, பிதுரார்ஜிதமாவது, சுயார்ஜிதமாவது எனக்கொன்றுமே கிடையாது. இது இரண்டும் அற்றவருக்கு கடன் கொடுப்பவர்களும் மிகவும் தயங்குவார்கள். எனினும் நாகரீக படாடோப பயங்கரமானது பலரை என்னை நம்பும்படி செய்து வருகின்றது. இந்த படாடோபம் எத்தனை காலம்வரை நீடித்திருக்கக்கூடும்.? வருமான மில்லாவிட்டால் அதிசீக்கிரம் அழிந்துவிடக் கூடுமல்லவா? வாங்கினவர்களுக்கு வட்டியாவது கொடுத்தால் தானே திருப்தி யடைவார்கள்.

***

"என்னுடைய தற்கால நிலைமையை மீண்டும் ஒருமுறை கூறிவிடுகின்றேன். சி. நாதாவினுடைய வீட்டில் சென்னையில் நான் அநுபவித்த சாப்பாட்டுச் சுகத்தினைப்போல் இதுவரையிலும் நான் எங்கும் அநுபவித்ததில்லை. அதுவும் தங்களால் ஏற்பட்ட பாக்கியமேயன்றி வேறல்ல. ஆதலால், தாங்கள் இவ்விடம் கோட்டைக்கு வந்திருந்தபொழுது, தங்களையும், சி. நாதாவையும் குறைந்தது ஒரு வாரமாவது என் இல்லத்தில் வைத்து உபசரித்து அநுப்ப வேண்டுமென்பது என்னுடைய பேரவா. மனதோ மிகவும் வேதனைப்பட்டது. என்றாலும் என்னுடைய தரித்திர தசையானது என்னை நான் நினைத்த பிரகாரம் செய்யவொட்டாமல் தடுத்துவிட்டது.

"தாங்கள் இதுவரையும் செய்துவந்த உதவிக்கும், தாங்கள் இனிச் செய்ய விருக்கும் உதவிக்கும் நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன். இந்த ஜென்மத்திலாவது அல்லது புனர்ஜென்மத்திலாவது நான் தங்களுக்கு கைம்மாறு செய்தே தீருவேன். இது நிச்சயம் நிச்சயம்."

மேற்கண்டவாறு கடிதம் நமக்கு அனுப்பி ரூபாய் 25-க்கே இசைந்து நடத்தித் தருமாறு வேண்டினர். இரக்கமும் அன்புமாய் அதற்கு இணங்கிய நமக்கு முழுத்தொகையாக ரூபாய் 25-தந்தது ஒரே ஒரு மாதந்தான். மறுமாதமோ 1, 2, 3—எனப் பல சில்லறையில் மாறிப் பாதியிலேயே நிறுத்தம் காட்டிப் பூரண வஞ்சகராயினர். தொகை வாராதெனக் கண்டு, நமது புஸ்தகங்களைப் பயிண்டு செய்யவிட்டுப் பெற்றிட முயன்றுங்கூட, இன்னும் ரூபாய் 31-12-0 வரை பாக்கி. இது சூல்தான். இன்னும் வசூல் இல்லை. இதுகாறும் வந்திலர்.

பத்திரிகை நடத்தும் முறையிலும் நாம் ஒத்துழையாமையைப் பற்றி எழுதுவதாய் ஸதா தர்க்கம். பின்னும் பலபல பொருந்தாத குதர்க்கங்கள் புரிந்து முறண்பட, பாக்கித்துப்பாக்கி ஒருபுறம் நிற்க, இந்நிலையில் விலகாதென் செய்ப?

விலகியதைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தல் கடமையன்றோ? நாம் அங்ஙனம் செய்ததற்கு, அது "பணம்" பத்திரிகை தளர்ந்து விடுவதற்காகவென விஷம அர்த்தம் கற்பிக்கின்றார். அது அவாது குறுகிய உள்ளத் தோற்றமாம்.

இரண்டாவது பாராவில் கண்டுள்ள சக்ரவர்த்தி, கற்பாசி முதலானோர் உயிர்த்திருந்த விஷயத்திற்கும், நாம் பத்திரிகையிலிருந்து, விலகிக் கொண்டதற்கும் என்ன சம்பந்தமோ, என்ன உவமையோ எவ்வாறு பொருத்தமோ தெரிந்திலது. ஊமைக்கு உளறுவாயன் போலுளது. ஒருவருக்குப் பின் ஒருவசாய் வந்து "பணம்" பத்திரிகையைநடத்துவார்களென்கிற ஸ்ரீஇராஜகோபாலன் 4—1—23-ம் தேதி கடிதத்தில், "பணம் பத்திரிகை ஆரம்பமான பின் இதுவரையில் வரவு ரூபாய் 100" தான் எனப் புலம்புவானேன்? பத்திராசிரியர்களுக்குப் பணத்தை வாரி இறைக்கும் பதிப்பாசிரியாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் இவர் ரூ 31—12—0 வரை பாக்கி வைத்துக்கொண்டுள்ள நிலையில் வாரி யிறைப்பதென்னவோ? சம்பளத்திற்கு எதிர்பார்க்கிற பத்திராசிரியர் என்னுமிவர், தமது கம்பாஸிடர் தொழிலைச் சம்பளத்தை எதிர்பாராது செய்வாரா? பத்திரிகையின் நடப்பு பதிப்பாசிரியரின் தைரிய ஊக்க நோக்கத்தால் என்கிறார். பத்திரிகாசிரியரது ஊக்கத்தால் எங்கும் பத்திரிகை நடப்பே தவிர, பதிப்பாசிரியர் வெறும் பதுமையே. மண் இன்றிக் குடம் ஏதோ? பத்திராசிரிய நாமம் பத்திரிகையின் முதலிலோ, அல்லது முக்கியஸ்தலத்திலோ இடப்பெறவேண்டியது சட்டத்தின் ஒழுங்காம். பதிப்பாசிரியர் என்று "பணம்" பத்திரிகையின் முதலிற் றோன்றியது எப்பத்திரிகையிலுங் காணப்பெறாத படாடோப நவீனமாம்.

"சுதேசமித்திர"னைப் பார்ப்பனப் பத்திரிகை யென ஸதா பழிக்குமிவர், "மித்திர"னின் அபிப்பிராயங்களை மதிப்புடன் கௌரவிக்கும் நம்மை—நமது வியாசங்களைக் கேவலப்படுத்துவதை எவருமே பொருட்செய்யார். ஆரம்பத்தில் "பணம்" பத்திரிகை ஸ்திரப்பட வேண்டி நம்மைஆகாசத்தில்தூக்கி உயர்த்தி நம்மைக்குறித்துப் பல பத்திரிகைகளில் வந்த நல்ல அபிப்பிராயங்களை யெல்லாம் அச்சிட்டு வெளியிட்டார். இப்பொழுது காரியம் ஆகிவிட்டதால், நமக்கு ஏதுமே தெரியாதென்றும், இனிமேல் இப்புதிய குருநாதரிடமிருந்து கற்றேயாக வேண்டுமென்றும், தம்மை இமயகிரிபர்வதத்தின் உச்சிக்கு உயர்த்தி நம்மைஆராய்ந்து, தாழ்த்தமுற்படுகின்றார். இக்கபடத்தினை யாரே யுணராதார்? "பிரேமமாலா" "நமது கடை" பின்னும் பலவுமாய விஷயங்கள் 'சுதேசமித்திர'னி லிருந்ததோ? வாரப் பத்திரிகைகள் தினசரிப்பத்திரிகைகளின் "குட்டிப் பத்திரிகை" களேயாகும். பிரபஞ்சச் செய்திகள் 'சுதேசமித்திர'னில் மட்டுமன்று, தினசரிப் பத்திரிகைகள் அனைத்திலும் ஏககாலத்தில் வருவதேயாகும். இங்ஙன

மாக "சுதேசமித்திரன் குட்டிப் பத்திரிகை" எனல் எங்ஙனம் பொருத்த முடையதோ? "மித்திர"னிலிருந்து இரண்டொன்று தவிர மற்றபடி அப்படியப்படியே எடுத்துப் பதிப்பித்தோமா? இல்லையே. குற்றமே காண்கின்ற இவர் மதி ஈனமதி.

நமது ஆங்கிலப் பயிற்சியைப் பழிக்கின்றார். உலகத்தையே அறிவின் உத்தியானவனமாகக் கருதி இன்புற்று விஷயங்களை ஸ்வீகரிக்கும் நமக்கு உள்ளசொற்ப ஆங்கிலத்தைக் கொண்டுதானே இதுகாறும் புரிந்த ஊழியத்திற்கும் மேலாகச் செய்ய நமக்குத் தெரியும். நாம் எம்.ஏ. பட்டதாரியல்லவென்றுஇப்பொழுதுதான் கண்டாரா? என்னே அறிவின்மை? வேண்டுமென்றே துவேஷத்துடன் வரைவதன்றோ இது? ஏன் இத்துணை ஆக்கிரமோ! இவர் அறிந்த அல்ப ஆங்கிலமுங்கூட கம்பாஸிடர் வேலையில் பயின்றதைத் தவிர, வேறெந்தப் பரீக்ஷைகளில் இவர் தேர்ந்தவரோ?"ஜனானுகூல" அச்சுக் கூடத்தில் இவருக்கு சம்பளமே தவிர வேறில்லை.

"பணம்" பத்திரிகையில் நமது நூல்களைப் பற்றி எழுதின வகையில், அதன் விலாஸம் இவர் பெயருக்கே தரப்பட்டுக் கமிஷனுக்கும் இவர் விற்றிருப்பதை ஏன் இவர் மறைப்பதோ? விற்றதற்கு இன்னும் ரூபாய் தரவில்லை. நமது சொந்தப் பத்திரிகையென மயங்கி, நமது நூல்களை அதில் குறிப்பிடப்போக—அதனையும் ஒரு குற்றமாகக் கொள்கிறார்! "பிரஜானுகூல"னில் "பணம்" பத்திரிகையை எழுதவில்லை யென்கிறார். இரண்டாம் மாதத்திலேயே இவர் அன்பற்றவராய் விட்ட நிலையில், நிதானிப்பதல்லாது என்ன எழுதுவதோ? தற்போது வரைந்துள்ளோம். திருப்தி எய்துக.

விளம்பரங்களுக்கு ஆவன நவின்றும் இவர் தாமதத்தில் இருந்தார். சந்தாதார் சேர்க்கவில்லை யென்கிறார். 12, 17, இலக்கமுள்ள "பணம்" பத்திரிகையில் நமது வேண்டுதலுடன் "திராவிடாபிமானி"யின் சந்தாதாரர்கள் அனைவருக்கும் "பணம்" பத்திரிகையனுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். அதனை மறைத்து மொழிவது கபடமன்றோ? நம்மிடத்தில் தைரிய வார்த்தைகளும், நவீனக் கருத்துகளும் கிடையாவென்கிற இவர் உரை,தமிழில் என்ன இருக்கிறதெனப் பழிக்கும் அவிவேகிகளின் உரை போன்றதாம். நமக்குத் தேசபக்தர்களிடத்து அன்பு இல்லையென்று மௌடீகமாய் மொழிகின்றார். மகாத்மாவைத் தண்டித்தது நியாயமென்கிற இவர்—மகாத்மாவின் கொள்கைகளைக் கண்டனம் செய்து இரண்டொரு புத்தகம் வெளியிட்டுள்ள இவர்—ஜட்ஜிஸ்கக்ஷி தோன்றிய நாள்முதல் காங்கிரஸையும் தேசபக்தர்களையும் பழித்துள்ள இவர்—நம்மைப் பற்றிப் பேசுதற்கு ஒரு சிறிதும் தக்கோராகார். நமது விநோதக் கதை போலித் தேசாபிமான வேஷதாரணர்களைக் குறிக்குமேயன்றி, பெரியோர்களான தேசபக்தர்களிடம், ஸ்ரீகிருஷ்ண

னிடத்துக் கோபிகைகட்கு இருந்த பிரேமையைப்போன்ற பிரேமையைக் கொண்டு வணங்கி வருபவராவோம். போலித் தேசபக்தர்களின் சூழ்ச்சிகளை வெளியிடுவது "பணம்" பத்திரிகை யொன்றே—என்று பிரசுரித்துள்ள இவர் நமது விநோதக்கதைக்கு மட்டும் குற்றம் கற்பிக்க வருகின்றார். ஊருக்கு ஒரு நியாயம், இவருக்கு ஒரு நியாயமோ? இவ்விதம் நம்மைப் பழித்துவிடில் "பணம்" பத்திரிகையின் சந்தாதாரர்கள் முன்பு இவர் உயர்ந்துவிடுவர் போலும்!

அரசாங்கக் குறைகளை எடுத்துக் கூறுவதில் நமக்கு அச்சம் என்கிறார். சட்டத்திற்கு உள்ளடங்கி வாதிப்பதே முறைமையாம்.

இவர் நம்மை மட்டும் பழிக்கவில்லை. "திராவிட"ன் "பத்திரிகையையும் பழிக்கிறார். இவர் வாலிப ஆசிரியராம். இவருக்குப் பிரத்தியேகமாய்க் கடிதம் எழுதித் திருத்தவேண்டுமாம். அங்ஙனமின்றி இவர்மீது வந்த கண்டனங்களைப் பஹிரங்கமாய்த் திராவிடன் வெளியிட்டது திராவிடனின் அறியாமையாம். இவ்விதம் "பணம்" பத்திரிகையில் எழுதியுள்ளார். என்னே இவரது பேதமை! 5—8—22-ம் தேதி கடிதத்தில் "ஆனந்தபோதினிப் பத்திராதிபர் கல்வியில் சிறந்தவரா? அல்லது அநுபவத்தில் முதிர்ந்தவரா? என்று எழுதியுள்ளார். ஏன் இவ்விதம் பழிப்பதோ?

நாம் இரவுபகல் உழைத்த உழைப்பினைக் கடவுள் அறிவார். அங்ஙனம் உழைத்துத் "தேசபக்த"னிலிருந்தும் விலகிய ஸ்ரீமான் திரு. வி. கல்யாண சுந்தரமுதலியார் போன்றவர்களுணர்வார். கம்பாஸிடரான இவர் யாங்ஙனம் உணர்வார்? 5—8—22-ம் தேதி கடிதத்தில் இவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:—

"சொந்த மூளையும் உழைப்பு மில்லாவிடினுங்கூட பிறபத்திரிகைகளிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும் பொறுக்கி எடுத்து, சமத்காரமாய் மாற்றி. ஒழுங்கு செய்வேனென்று நான் இப்பொழுது சொல்வதானது, ஒருவிதத்தில் என்னுடைய திருட்டுத்தனத்தை மறைக்காமல் உள்ளபடியே உண்மையை யுரைத்ததாக தாங்கள் கொண்டாலும் கொள்ளலாம். அல்லவென்று என்னை நானே புகழ்ந்து கொள்வதாக நினைத்தாலும் நினைக்கலாம். எது எவ்விதமாயினும் சரி."

என்கிற இவருக்கு சுயமாகச் சிந்தித்து வரைவோர்தம் சிரமம் எவ்வாறு புலனாகும்?

"பணம்" பத்திரிகைக்குப் பணம் கொடுத்துதவினோமா என்கிறார். நாம் தான் சம்பளப் பத்திராசிரியராயிற்றே. நமது பாக்கியே வாராதநிலையில் நாம் எதற்குப் பணம் தருவதோ? புரூப் முதலியன திருத்தவில்லை யென்கிறார். சென்னையிலிருந்து வந்தபின் பிரதி தடவையும் முக்கிய புரூபுகளை யெல்லாம் திருத்திக் கவனித்துள்ளதை இவர் மறைப்பானேன்? நமது விஷயங்களை ஒழுங்குபடுத்தினராம். என்ன ஒழுங்கோ? உள்ளூர் வர்த்தமானம் நாமும் வரைந்துள்

ளோம். காகிதம் வாங்கல், ஸ்டாம்பு ஒட்டுதல் முதலியன இவரே செய்தாராம். ஆஹா! பின் எவர் செய்வதோ?

தாம் ஏதோ முதல்தேதி தவறாது சம்பளம்(!)கொடுத்துவந்தவரைப் போன்று பிரமாதப்படுத்திக் கொண்டு, 15—நாள் கூடக் கெடு கொடுக்காத பத்திராசிரியர் என்று நம்மைக் குறிப்பிடுகிறார். முதல் தேதியில் இவர் கொடுத்ததுண்டா? நாம் புஸ்தகங்களைப் பயின்டுக்குத் தாராதிருந்திருப்பின் அந்தப் பணமும் வந்திராது. வந்தும் பாக்கி ரூபாய் 31—12—0 இன்னும் இருக்கிறதே! இதுதான் இவர் கிரமமாகக் கொடுத்து வந்ததோ?

திடீரென்று விஷயமனுப்பாது நிறுத்தியதாகக் கூறுகிறார். நஷ்டம் நஷ்டம் என்று ஓலமிட்டு, அடுத்தவாரம் நிறுத்திப் பார்ப்போமென்று, ஏகாதசி விடுமுறையென நிறுத்திய இவருக்கு, நாம் ஆள் அனுப்பிப் பத்திரிகை நடத்துவதைப் பற்றி என்ன யோசனையென்று எழுதிக் கேட்டதற்கு இவர் ஏதுமே வரையவில்லை. வீட்டிலிருந்த பிராணாபத்தான கலங்கிய நிலையில் நாமே நேரில் சந்திக்கவும் கூடவில்லை. நாம் கலங்கிநின்ற நிலையில் கிடக்க, இவரோ எவ்வித செய்தியும் நமக்குத் தெரிவியாமல் திடீரென்று நமது பெயரை எடுத்துவிட்டுத் தாம் ஆசிரியராய்விட்டார். மனுஷ்யனுக்கு ஆபத்து ஸம்பத்து இல்லையா? அதற்கு உருகுவதில்லையா? 3-மைல் தூரத்திலுள்ள ஸ்ரீரங்கத்திற்கு வந்து விபாசம் அனுப்பாத காரணமென்னவென்று தெரிந்து கொள்ளக்கூடாதா? தம் செயல் மறைத்து நம்மைக் குற்றஞ் சாட்டுகிறார். எவர்க்குமொரு சிறு துயரமும் புரியாத எம்மை ஏன் இங்ஙனம் ஏசுவதோ? நம்முடைய பரிசுத்தமான உள்ளமும், யதார்த்தமும் கடவுளுக்குக் கூடவா தெரியாமற் போய்விடும்?

நாம் விலகியபின்னருங் கூட, ஜனவரிமாதம் முற்றிலும் 'காபிரைட்'உரிமையுள்ள நமது "பிரேமமாலா"வை சட்டத்திற்குவிரோதமாய் இவர் பிரசுரித்துச் சென்றுள்ளார். இதனால் எத்துணை ஏராளமாய்நாம் விஷயங்கள் கொடுத்து வந்திருக்கிறோமென்பது விளங்கும். ஐ-நான் என்றநமது புனைபெயரைத் தற்போது இவர்கொண்டு, தாமே ஆரம்பமுதல் எழுதி வந்ததுபோல் மயக்குவதேனோ? நமது மொழிகளைப் பகட்டு என்கிறஇவரது உரைகளே உண்மையில் பகட்டும், துவேசமும், வஞ்சகமும் ஆம்.

"இலங்கைமுதலிய (?)தீவுகளுக்குச் சேன்ற" என்று தம்மைக் காட்டி உயர்த்திக்கொள்ளும் இவர், 'ஸிலோன் போர்ட் மெயில்' பிரதி நித்தியமும் ஏராளமான ஜனங்களை ஏற்றி இலங்கைக்குச் செல்வதை யறியாரா? "பல (?) துறைகளில் பயின்றவர்" என்று தம்மைப் பகட்டுகிறார். அன்பற்ற துறையில் நன்கு பழகியவரென்போம். "தக்கோர் பலரால் சிலாகிக்கப்பெற்றவர்"—என்கிறார்.

நெருங்கிப் பார்ப்பினன்றோ நாம் கண்டு திகைத்த பசுத்தோல் போர்த்த கபடம் வெளியாகும்? 4 அணு, 2 அணு, 1 அணு என நான்கு சிறு புத்தகங்களைத் "தெளிபொருட்டீபச்சுடர் என்ற தலைப்பில் வெளியிட்டு விட்டு "தெளிபொருட் டீபச்சுடர் ஆசிரியர்" என்று தம்மைப் பகட்டிக் கொள்கிறார். வீண் பெருமைப் பூண் புகழாற் காண் புதுமை என்னே? இவரது பகட்டான வஞ்சக விஷமமொழிகளைத் தமிழுலகம் மதியாதென்பது திண்ணம் திண்ணம்.

இங்ஙனமாக வெல்லாம் நம்மைப்பற்றி உள்ளதுமறைத்துக் கபடநாட்டியம் புரிந்து, நன்றித்துரோகமாய் வரைந்திடும் இவரை,- மாதம் இரண்டாகியும் நமது பாக்கியையேஇன்னும் தராத இவரைக் கடவுள் மன்னிப்பாராக. இனி இவரது துவேச உரைகளுக்கு நாம் ஒரு மதிப்பு கொடுத்துப் பொருட்செய்யப் போவதில்லை. இத்துவேச மொழிகளுக்கு ஏனோ நமது கவனிப்பு இனி? எமது நிர்மல உள்ளத்தினை வேண்டியவரைத் தூற்றி அவ்வகையிலேனும் ஒரு திருப்திபெறுக. ஒரு ஆத்மாவை அதன்மனம் போல்விட்டு எவ்வாற்றேனும் அதனைத் திருப்தியுறச் செய்வித்தல் மிகு புண்ய மன்றோ? எத்துணைத் தூஷிப்பினும் உண்மைக்கு எக்காலத்தும் களங்கமில்லை. அது மலைமிலிட்ட விளக்காம், அதனை மறைக்க வியலா. சூரியனைக் குடைகொண்டு தனக்கு மறைத்துக்கொள்ளுதல் இயலுமேயன்றி, உலகுக் கெல்லாம் மறைத்திட முடியுமோ? மனமொத்த மாசிலா நண்பரென மற்றவரை மதித்திட்ட பேதமையினாலே, தானே வலைப்படு மானேபோல் நாம் ஆகி, இவரது வஞ்சனை வலையினுள் வீழ்ந்து, மயங்கி, இவர்தம் 5—8—22 கடிதத்திற்காக இரக்கமும் உருக்கமுமாய் ஒரு பல்லுக்கும் பற்றாத பாக்கிய மிக மிக அல்பமான ரூபாய் 25—க்கு,—எதற்குமே இணங்க வைக்கும் தூய அன்பால்,—ஒப்பி, இசைந்து, "பணம்" பத்திரிகையை ஆரம்பிக்கும் வகை யுணர்த்தித் தொடங்கி, நடத்தி, நலம்பெறச் செய்வித்ததற்குப் பலன்—நன்றி—இதுவேயோ! இறைவனே! எங்கும் நீ இலங்குதல் மெய்யேல் இதனையும் உற்றுணர்வாயாக. உன் பாதம் துணை.

16—2—1923 எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

பிரபஞ்ச விலாஸம்.

1. காசு செலவில்லாத உபசாரம்:—"வாணும், வாணும், ஊரில் எல்லோரும் க்ஷேமமாய் இருக்கிறார்களா? பார்த்து நெடு

நாளாச்சுது, இஹி, இஹி இஹி" என்று பல்லிளித்துப் பேசி, கட்டித் தழுவி,—"போய் வருகிறீர்களா?" என்று அனுப்புவார் சிலர்.

2. நற்காலம் எப்போது?:—எவ்வளவு வரவு வந்தாலும், உடனே செலவாகி, வறுமையும் கடனுமாகவே சிலருக்கு நாட்கள் கழிகின்றன. எப்போது இக்கஷ்டம் ஒழிவதோ?

3. ஊருக்கு வருகிறது தானே:—தான் போயிருக்கிற ஊரில் ஒருவரைச் சந்தித்தால்—நமது ஊருக்கு ஒரு தடவை வந்து போகிறது தானே—என்று கேட்பதும் அழைப்பதும் எங்கும் சாதாரணம். இது உபசாரத்திற்கு அழைக்கும் பாவனையாகும். உள்ளபடி உடனே வரக்கூடியவர்களை ஒருபோதும் அழையார்.

4. ஒருவரைப் பார்த்து ஒருவர்:—என்ன அப்பா! க்ஷேமமா? என்று மட்டும் கேட்டுவிட்டு அம்மட்டில் ஒதுங்குகிற—சாப்பாட்டிற்கு அழைக்காத உறவினர்களை—தாங்களும் அப்படியே தங்கள் வீட்டுக்கு அவர்கள் வரும்போது அவ்விதமே வாய் உபசாரம் பேசி அனுப்பிவிட ஆரம்பித்துக்கொண்டார்கள் சில இடங்களில்.

6. மதியாதே:—உன்னிடத்தில் தன்னை ஒரு பெரிய பிரபு போல் காண்பித்துக்கொண்டு வெகு முறுக்காய் நிற்பவனிடத்தில், அவனுக்கும் மேற்பட்டு அவனை மதியாத நிலையில் நீயும் நில்.

7. சமயத்திற்கு வருவதில்லை:—நம் வீடு தேடி வந்தவர்களை வழியனுப்ப வெற்றிலைப் பாக்கு முதலியன வாங்கிவரச் சொல்லிச் சிலரை யனுப்பினால், வந்தவர்கள் வண்டி யேறிச்சென்று விட்ட பின்பு அவற்றை வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

8. கவலையற்ற புசிப்பு:—வயிற்றுக்கு ருசிகரமான நல்ல உணவுகள் கொடுத்தால் தான் நல்ல வேலை செய்ய முடியுமாம். புத்தியும் புஷ்டி யடைந்து கூர்மைப் படுமாம். உயர்ந்த சிந்தனைகளும், மேலான வியாபார நினைவுகளும், கௌரவ நோக்கங்களும் மேலாடி நிற்குமாம். இவ்வளவும் கவலையற்ற அந்த ருசிகரமான திருப்தியுள்ள புசிப்பானது செய்கிற வேலை யென்பது ஒரு பெண்ணின் வாய்மொழி—சொந்த அநுபவம்.

9. ஒரு எல்லை யிருக்கட்டும்:—மிகவும் வேண்டிய சிநேகிதர்களா யிருந்தாலுங்கூட, தான் வீட்டில் இல்லாத சமயத்தில் தாராளமாக உள்ளே போகவும், பெண்களிடம் பேசவும் இடம் தருவது—ஒரு சமயத்தில் மானக்கேட்டை விளைக்கும். ஊர் பொல்லாதது. அநேகமாய் ஆடவர்களும் நிச்சய புத்தியுள்ளவர்களல்ல. எதற்கும் ஒரு அளவு—நிதானம்—எல்லை யிருக்கட்டும்.

10. ஒருமித்த மனம்:—சிறந்த அன்பர்கள் நமக்காக அவர்கள் செலவு செய்தால் கூட, நம் கையிலிருந்த பணம் செலவாய் விட்டதுபோல நினைக்க வைக்கிறது. ஒரு சமயத்தில் தன் அன்பர் பணமென்றும், தன் பணமென்றும் வித்தியாசம் இல்லாமல் செலவு செய்து விட்டு சாதாரணமாய்க்—கவலையற்று இருந்து விடவும் செய்கிறது. ஹா! என்னே அன்பின் வலிமை.

காதற்பரிசு அல்லது சிறைவாச அநுபவங்கள். (முன் தொடர்ச்சி.)

"இங்கிதா! சதானந்த சாதகா! பராக்கிரம நேச கம்பீரா! ரங்கநாதமா லின்பனே! எங்கள் ஞாபகந் தந்த வாழ்விலே நன்று பேணுவோம் உன் துணை. கண்கண்ட தெய்வநீர் கருணையோர் உருவமானீர். கசடனேன் திருவுள்ள மறிய வெகு பிழைசெய்த கால மெல்லாம் பொறுத்தீர். ஜெகநாதர் என்ற நம் பெயர் கருத்துக் கிசைந்தபடியேதான். உண்ணுதிருக்கினும் நானிருப்பேன் இங்கொரு நிமிஷம்; கண்ணுரக் கடிதம் காண்கிலனுகிற் சகித்தல் கடினம். மனம் பிறந்தா லதிலோர் வழியும் பிறக்குமிது மனுஷத்தனத்தில் எளிதாம். செல்வாக் கிருக்கின்றபோது ஸத்கீர்த்தியைத் தேடுவதுதான் விவேகம். கடிதம் ஏன் இல்லை யெனப் பழிப்புரை சொல்வார்க்கு இடம் தந்து சோர்வு செய்யாமல் என் தொந்தரை யகற்றி அருள்கூர்க. வெல்வார்க்கு நேசமோரு வேலியன்றோ? தங்கட்குக் கடிதம் அனுப்பிக் கழிந்தன நெடுநாள். விடையோ அரிதாயது. ஆதலின் சோர்வுற்றேன். என்னவோ மாயம்! பற்றினேன் உம்மை. எதுக்கோ? இவ்வாதுக்குத் தானே?"

"கற்பகப் பூங்கொம்பே! ஏழையேன் செய்விண்ணப்பந்தனைச் செவியி னங்கீகரித்திடுக. திசையெங்கும் உனக்கு இணையில்லை. நீ காதவழி திவ்ய வாசம் வீசும் காமனை வெல்லும் உல்லாஸம். வாயில் ஈ நுழைவதும் தெரியாத வகையில் என் காலத்தின் கழிப்பு. அலுத்தது மனம். சலித்தது வாழ்க்கை. போயது உயர்நலம். இந்நிலைதனில் விரிவு நிருபங்கள் யாங்ஙனே? உன் ஸ்திதி எனக்கு நன்கு தெரிகின்றது. உன் விஷயம் மாத்திரமே யல்ல. வீட்டிலும் எதிலும் மனம் செல்லவில்லை. அன்று பாரதப் போராயினும் பதினெட்டு நாட்களில் முடிவு பெற்றது. என் ஜீவியப்போர் முடிவதாய்க் காணவில்லை. என்று ஒழியுமோ என் காலம் கணக்கறியேன். என்னிடம் இப்போது எவர் எது கூறினும் மனதில் ஒன்றும் படுவதில்லை. தலைபாட்டுவதிலும், பற்களை வெளியே தெரியக்காட்டிப் புன்னகைக்கு முயல்வதிலும் பிறர் கூறியனவற்றை உணர்ந்துகொ

153. வினு:—உன் உயர்ந்த உடைகள் எதற்காக? விடை;—ஊரை ஏமாற்ற. கேள்வி:—சிறிது கடன் கிடைக்குமா? பதில்:—கையில் ஒரு காசுகூட இல்லை.

ண்ட பாவனை போன்றும் நடிக்கின்றேன். என் குலக் கொழுந்தாதாகிய நீ 'தலையாட்டிப் பொம்மை' என்று எனக்கு வைத்த பெயர் இப்போதுதான் சரியாயிருக்கிறது. யாராவது எழுதிக்கொடுத்தால்—உன் கடிதங்கள் கண்டால் அத்தருணம் மனதிற்படுகிறது. என்னென்னவோ வரைந்திட நினைக்கின்றேன். சித்தமும விரைந்து பாய்கின்றது. வாயிலோரு சிரிப்பு வைத்துக்கொண்டு, மனதில் மற்றொரு கபடம் நினைக்க எனக்குத் தெரியவில்லை. பாவாய்! உன் மனத்திலுள்ளதை ஒன்றும் விடாமல் எனக்கு எழுதியனுப்பு. நான் விடை வரைந்திடாவிடினும் என்னுள்ளத்தில் போட்டுவைக்கிறேன். ஒருசமயம் விடையும் ஈகின்றேன். என் கலங்கிய மனமே எல்லாக் குற்றங்கட்கும் தாய். சந்தன களபம் பூசி சரசவசனங்கள் பேசிடும் மானே! நீயே தானே என் நிலையை யோசி. காரணம் இஃதேயன்றி ஒருக்காலும் அன்புடையார்தம்மை மறந்ததென்பது கிடையாது. மறக்கவும் முடியாது. "இன்னும் கடிதம் அவர்கட்கு எழுதவில்லையே"—என்று ஸதாகாலமும் அவர்களை நினைத்துக்கொண்டே தானிருக்க முடியும். உள்ள உண்மை இதுவேயாதலின் கடிதம் வரைந்திடாமைக்கு விகற்பம் கருதிப் பலபல நினைத்தல் ஆகாது. எனினும் பிழை என்றும் பிழைதான். இனி அது இல்லை. நேரவும் நேரா. என் ஆரணங்கே! மனம் தேறுக."

* * * * * *

ஜெகநாதர் வெகு தூரமான இடமொன்றுக்குச் சென்றிருந்தாரென்று இக்கதாரம்பத்தில் கூறினோம். அவர் புறப்படுகைக்கு முன்பு பார்வதியம்மைக்கு ஒரு கடிதம் விடுத்தார். அக்கடிதம் தபால் தவறுதலால் காலங்கடந்து அவ்வம்மையிடத்துச் சேர, அதே காலத்தில் அவரும் அங்கு பிரவேஸமானார். பரஸ்பரம் ஆர்வமிக்குற்ற பாஷிதங்கள் நிகழ்ந்தேறின. பார்வதிக்கு ராஜரத்தினம் என்றொரு குமாரனிருந்தான். அவனுக்குப் பருவம் பன்னிரண்டு. பார்வதியம்மையின் கணவர் பம்பாயிலிருந்தும் வேலைமாற்றுதலாகி மற்றோர் நகருக்கு உத்தியோக நிமித்தம் சென்றிருந்தார். வாச வசதிகள் ஸ்திரப்பட்ட பின்னர் பம்பாயிலிருந்தும் பார்வதியம்மை புறப்பட்டு வருவதென்று ஏற்பாடாகியிருந்தது. அந்த சமயமே ஜெகநாதர் அவணுற்றார். ஸதிபதிகள் இருவரையும் கண்டு பேசவே அவர் அங்கு வந்தது. பார்வதிமட்டு மிருந்தாள். பங்கஜாவின் சுக நலங்களைத் தெரிவித்தார். பார்வதி பெரிதும் அன்பு பொங்கிடக் கேட்டனள். ராமதாஸனைக் குறித்துக் குணவர்ணனை செய்து அவனுக்கே பங்கஜாவைத் தரவேண்டுமென்றார். "தாங்கள் ஸம்மதித்தால் அனைவரும் ஒப்பிய மாதிரியே" என்றாள் பார்வதி.

154: வஞ்சக மனத்தினரே அதிக உண்மையுடன் நடந்ததாகச் சொல்வர். உண்மையுடன் நடந்தோன் எதுங் கூறான்.

ராமதாஸின் படத்தையும் பார்வதிக்கு ஜெகநாதர் காண்பித்தார். பார்வதிக்கு ராமதாஸின் எழில் வதனம் மிகு பிரீதிகரமாக இருந்தது. பார்வதியம்மையின் பர்த்தாவுக்கு இவ்விவரங்கள் அனைத்தையும் வரைந்து விடுத்தனர். அவரிடமிருந்து கடிதம் வர மூன்று வாரங்கள் சென்றன. வந்த கடிதத்தில் தான் பல இடங்கட்கும் சென்று நான்கு தினங்கட்கு முன்புதான் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டதாயும், அங்கு வந்த பின்னரே கடிதம் கண்ணுற்றதாயும், உத்தம புருஷராகிய ஜெகநாதருக்குத் தனது நமஸ்காரங்களை ஸமர்ப்பிக்கும்படியும், அவர் மனம்போல் நடக்கத் தனக்கு எப்போதும் தடையில்லையென்றும், ராமதாஸனுக்கே பங்கஜத்தைத் தரலாமென்றும் வரைந்திருந்தார். வந்த காரியம் சுபமானது கண்டு ஜெகநாதர் திருப்திகூர்ந்தார். விவாகச் செலவுகட்குப் பார்வதியின் கணவர் ஒப்புக்கொண்டார். அவ்வுதவிக்காகவும் அவர் அங்கு வந்தது. பார்வதியும் தன் கணவரிடம்போய்ச் சேருதற்கு ஜெகநாதருடன் புறப்படத் தயாரானாள். இந்த ஸமயத்தில் ஜெகநாதருக்கு இரண்டு ரிஜிஸ்தர் கடிதங்கள் கிடைத்தன. அவை பின்வருமாறு:—

முதல் கடிதம்:—

அன்பின் மிக்க நல்லோய்,

வந்தனங்கள். உபய க்ஷேமம். என்னை ஹிருதய பூர்வமாய் நம்பி என் வசம் பங்கஜாவை ஒப்புவித்துவிட்டுச் சென்றீர்கள். ராமதாஸன் மிகு துன்மார்க்கன். பசுத்தோல் போர்த்த புலி. அவனைக் குறித்து நெடுநாட்களாகவே கவனித்து வந்தேன். எனது விழிப்பு அவனுக்கு மதிக்கமுடியாத கேட்டை யுண்டாக்கிற்று. நான் வெளியில் சென்றசமயம் நோக்கிப் பங்கஜாவை யழைத்துக்கொண்டு ரயில் ஏறிவிட்டனன். இக்குலப்பிரஷ்டனால் எத்தனை பேருக்கு அவமானம்? காமத்துக்கும் தீர்க்க திருஷ்டிக்கும் வெகு தூரமாகையால் இவ்வாறெல்லாம் புத்தி விபரீத வழியில் போயிற்று. மனக்கண் மாசுபடிந்து ஊன்றிப்பார்க்குந் திறனிழந்து வாசல் கடந்த பங்கஜாவையும் அவனையும் ஸமத்காரமாய் அன்றிரவே வேறோர் ஊரில் பிடித்துவிட்டேன். ராமதாஸன்மீது நர சோரக் கேஸ் ஏற்பட்டு இரண்டு மாத சிக்ஷைக்கும் அருகனானன். துஷ்டப் பிரவர்த்திக்குத் துன்பமே தண்டனை. பங்கஜா சுகமாக இருக்கிறாள். மற்றவை நேரில்.

தங்கள் அன்புள்ள மித்திரன்
மதன கோபாலன்.

---

155. 'அவன் எனக்கு என்னசெய்தான்' என்கிற மாற்றாந்தாய் 'தான் அவனுக்குச் செய்த நன்மையென்ன?' என்பதை யோசிக்கட்டும்.

இரண்டாவது கடிதம்:—

என்னுருயிர்த் தந்தையவர்களின் ஸந்நிதிக்குக் குமார்த்தி பங்கஜா சாஷ்டாங்க நமஸ்காரங்கள் புரிந்து வரைந்த பரிதாப நிருபம். "இவ்விடம் க்ஷேமம்" என்று வரைந்திடுதற்கில்லை. அவ்விடம் க்ஷேமங்களை நேரில் நவின்றிடப் பிரார்த்தனை.

என்னையும் ராமதாஸரையும் மதனகோபாலப் பாதகனிடத்து ஒப்புவித்துச் சென்றீர்கள். ராமதாஸர் சிறைவாயிற்பட்டார். யான் வீட்டினுள் ஓர் அறையில் அடைப்பட்டுள்ளேன். இது தங்களின் மனதிற்குத் திருப்தியூட்டுவதாக. ஏழையே யெனினும் விச்வாஸ பாத்திரனான தபாற் சேவகன் நித்யமும் மாடிப் பலகணிவாயிலில் என்னைக் கண்டு கண்ணீர் பெருக்குகின்றான். நேற்றிரவு பலகணி வாயிலினின்றும் யான் ஓர் கயிறுவிட, அதிற்கட்டி ஒரு சிறு பெட்டியை என்னிடத்தனுப்பிக் காத்திருந்தான். அதனில் கடிதமும் எழுது கருவிகளும் இருந்தன. அதுகொண்டு இது வரைந்து அப்பெட்டியினிடத்தே இக்கடிதத்தையும் வைத்துக் கயிற்றுடன் கீழே விடுப்பேன். தபாற் சேவகன் மகிழ்வுடன் அதைப் பெற்றுச் சென்று தங்கட்கு அனுப்புவான் என்பது திண்ணம். அகதிக்குத் தெய்வமே துணை. தாயற்ற சேயாகிய என்னை இத்துணைக் காலம் உயிருக்குயிராக வளர்த்த தாங்கள் இப்பாதகனிடத்து ஒப்புவித்துச் செல்ல யாங்ஙனம் மனம் துணிந்தீர்கள்?

தாங்கள் சென்ற மறுதினமே தன் குமாரனை மணக்குமாறு வற்புறுத்தினான் மதனகோபாலன். ஆத்திரப்பட்ட நெஞ்சானது தான் சொல்வதிலிருந்து பிறருக்கு வருத்தத்தை யுண்டுபண்ணுமென்று கவனிக்கிறதாக இருக்கவில்லை. எதையோ திருஷ்டியில் வைத்துக்கொண்டு இவ்வழியில் இறங்கிவிட்டான். பலாத்காரத்தை விடத் தன்னடக்கம் ஒரு விசேஷ ஸக்தியாகும். ஸத்தியத்தையும் அஹிம்சையையும் கைவிடுவதைக் காட்டிலும் அடிமைத்தனம் உத்தமம். அஹிம்ஸையே கீழ்நாடுகளின் தர்மம். கத்தி வீச்சு மேல்நாட்டுத் தர்மம். மேல்நாட்டுத் தர்மத்தில் துணிந்துவிட்டான் மதனகோபாலன்.

ஊசி சிறியதாயிருப்பினும், அது பெரிய யந்திரங் கொண்டு தான் தயாராகிறது. நான் சொல்லும் மொழிகள் சிறிதாயிருப்பினும், அதனைப் பெரிய யோசனையுடனும் கூட்டி உருக்கம் கலந்து இளகிய மனதுடன் யோசித்துப் பார்க்கவேண்டும்.

மதனகோபாலர் மிகுந்த சரீரப் பரபரப்புடையவர் என்று தெரிகிறது. ஒரு வினாடிப் பொழுதுகூட வீணாக்காமல் எனக்குத்

---

156. யதார்த்த அன்பினர்களை உதறிவிட்டு, வஞ்சக மனத்தினர்களிடமே 'ஆத்மார்த்த' அன்பு கொள்ளுகிறார்கள். ஏனோ?

தீங்கு விளைவிக்கத் தம்மால் கூடியதையெல்லாம் செய்து முடித்து விட்டார். பிரதிதினமும் என்னிடத்து விஷத்தைக் கக்க அவர் தவறுகிறதில்லை.

இந்த ஸகிக்கொணுத ஹிம்ஸையினின்றும் விடுபெறற் பொருட்டுத் தங்களிடம் பம்பாய்க்கு வந்துவிட ராமதாஸரை நானே யழைத்தேன். இதில் தவறு யாது? வீட்டுவாடகை பெறுதற்கு மட்டுமே மதனகோபாலன் உரியவன். மற்ற சுதந்தரம் அவனுக்கு ஏது? ராமதாஸனும் நானுமாகப் புறப்பட்டு ரயிலுக்குச் சென்றோம். நாங்கள் செல்வதை யவன் மேல் மெத்தையிலிருந்தும் கண்டான். கண்ணுற்றும் மௌன நிலையே கொண்டான். ரயில் ஏறிச்சென்ற தின்பின்னர் அவன் தொடர்ந்து வந்து எங்களை நிறுத்தி ராமதாஸ ரைப் போலீஸார் வசம் ஒப்புவித்தான். நரசோரக் கேஸ் என்ற குற் றமுஞ் சாட்டினன். யான் நீதிஸ்தலத்தில் உண்மை யுரைத்தும் பயன்பெறு தொழிந்தது. என்னை மாடியின்மேல் ஓர் அறையில் அடைத்துவிட்டான். ராமதாஸர் இரண்டு வருஷ சிறைவாசமெய் தியதாக மதனகோபாலன் கூறினன். என் மனம் படும் பாட்டினை எவர் தெரிவார்? என்னை ஈன்று மறைந்த மாதா அறிவார். கடவுள் உணர்வார்.

மதனகோபாலர் என்னை வற்புறுத்துவதில் புகுந்து, வெகு விரைவாக முன்னோக்கிச்சென்றார். அப்பொழுது என் மறுப்பாகிய ஒரு நெருஞ்சில்முள் அவர் பாதத்தில் குத்திற்று. உடனே பின்முக மாய்த் திரும்பி முன்னினும் அதிக வேகத்துடன் போய்க்கொண்டி ருக்கிறார். இனியேனும் என்னை வற்புறுத்துவதி லிருந்தும் விலகி எச்சரிக்கையுட னிருப்பதற்கு, அவருடைய அநுபவம் அவருக்கு உபயோகப்படுமோ படாதோ கடவுளுக்குத்தான் தெரியவேண்டும்.

வீட்டுத்தலைவர் ஒருவனை அடித்தால், அடிபட்டவன் செய் தது குற்றமோ, இல்லையோ, வீட்டிலுள்ள யாவரும் அவன் அடி படத் தகுந்தவனென்றே முடிவுகட்டுவார். பேசுவார். அந்நிலையில் வீட்டுடைத்தலைவனுய் இங்குள்ள மதனகோபாலன் என்னை வாட் டும் வாதைக் கிரமமுள்ள தென்பதே இங்கு உறைவார்தம் கூற்று. விலையிலாமணியே! எந்தாய்! பேதை எனக்கிந்த விசனமீந்திட லேனோ?

☞ சற்றும் தாமதியேல். ஆவி நீப்பன் யான். வருக விரைந்து.

தங்கள் அன்புள்ள புத்திரி
தாயற்ற அநாதையாகிய
பங்கஜா.

---

157. தம்செயல் மறைத்தற்காக ஒரு உத்தமனைத் தூற்றுவோர் தம் தன்மையையே வெளியிட்டுக் கொள்பவராவார்.

இவ்விரு கடிதங்களையும் ஜெகநாதர் ஸகிக்கொணு வேதனையுடன் வாசித்து முடித்தார். அவர் தேகம் நிலை கொள்ளவில்லை. தானுகவே கண்ணீர் பெருக்கடைந்தது. தம்மார்பிலே அம்புபோல் பாய்ந்தது தைத்தது. வாய்விட்டுக் கதறினுர். பார்வதியும் அலறினுள். பங்கஜா! தாயற்ற அநாதையா நீ! எனத் துடி துடித்து மூர்ச்சையாகி விழுந்தாள். வீட்டிலுள்ளவர்கள் உபசாரம் செய்து தேற்றினர்.

ஜெகநாதர் சொல்லரிய மனேவேதனையுடன் கூறலுற்றூர். என்னருமைக்கிளியை இத்தனை வருஷகாலத்திற்கு இப்போதுதான் பிரிந்தேன். அதுவும் ராமதாஸனுக்காகப் பிரிந்தேன். அவனைப் பாவி மதனன் சிறையிற் சேர்த்தனனு? எனக்கு நீதியும் தன் கடிதத்தில் உரைக்கின்றுன். வஞ்சகன், உலோபி, தூர்த்தன். ராமதாஸன் கொலைஞனே ஆகட்டும். அவனுக்கேதான் பங்கஜா. சிறைபுக்கியதில் இழிவில்லை. துன்மார்க்கத்தில் சிறைபுகவில்லை. ராம்தாஸா! நீ எவ்விதம் கலங்கினயோ? என்னை எத்தனை முறை நினைத்தனையோ? ஒரு தபசியின் தபோபலம் ஒரு அரசனுக்குக் கேடாயிருந்தது. அவரைத் தவத்திலிருந்து திருப்ப அவன் நினைத்து, ஒரு நாள் அவரிடம் சென்று, அவரை வணங்கி, கூர்மையான கத்தியொன்றை அவருக்குக் காணிக்கையாக ஸமர்ப்பித்தான். அதைக் கொண்டு அவர் ஒரு செடியின் கிளையை நறுக்கிப் பார்த்தார். கத்தி நன்றுக நறுக்கிவிட்டது. பிறகு செடியை நறுக்கிப் பார்த்தார். பிறகு ஒரு மரக்கிளையை வெட்டிப் பார்த்தார். பிறகு மரத்தை வெட்டிப் பார்த்தார். பிறகு ஜீவராசிகளை வெட்டிப் பார்த்தார். இப்படியே பெரிய கொலைஞருகிவிட்டார். கத்தி அவருடைய கையிலிருந்ததே இதற்குக் காரணம். அவரது தபோபலமும் ஸர்வநாசமானது. அரசனது எண்ணமும் சித்தித்தது. இவ்விதமே மதனகோபாலருக்கு ராமதாஸன் பங்கஜாவுடன் இருப்பது, தனது குமாரனுக்கு அவளைக் கொள்வதற்குத் தடையாய் பரமஸங்கடமாய் இருந்தது போலும். ராமதாஸனும் பங்கஜமும் செல்வதை மேல்மாடியினின்று நோக்கியும், அரசன் கத்திகொடுத்ததுபோல அவர்களைத் தடுக்காது போகும்படி விட்டுவிட்டார். பின்னர் தபசியின்மீது குற்றங்கள் தோன்றினதுபோல, ராமதாஸன் மீதும் விவகார ரூபமான பிழைகள் சார்ந்தன. தபசி கெட்டது போன்று, ராமதாஸனையும் "சிறைபுகுந்தவன்" என்ற அழியாப்பெயருக்கு உறைவிடமாக்கிவிட்டார். அரசன் பெற்ற மகிழ்வு போன்று மதனரும் இப்போது குதூகலபுருஷரானுர். எனக்குச் செய்தி எட்டாதிருத்தற்காக—பங்கஜா எதுவும் எனக்கு வராதிடாவாறு அறையில் அடைத்துவிட்டார்.

---

158. வெகு பெரிய தொகைக்கு அவனை ஏமாற்ற நினைத்தாய். சிறிய தொகையிலேயே அவன் விழித்து எச்சரிக்கையானுன்.

அவர் தீர்க்கதரிசனமும் விவேகமும் காட்டிக் காரியம் நடத்துவதாய்க் காணவில்லை. பிரதியொரு மனிதனுடைய குணத்தையும் ஒவ்வொரு ஸந்தர்ப்பத்தில் தான் அறிய நேர்கிறது. நிர்மூடன், கொாதகன், வெறிபடைத்தவன், புஷ்பத்தை நசுக்கி முகர்பவன், மூர்க்கன் என்று கூறி வயிறெரிந்தார்.

பார்வதி:—சுவானம் ஊரார் உண்டாக்கும் குப்பைமேட்டிலேறி, அதை ஸிம்ஹாஸனமென்றெண்ணி, சிறிதுநேரம் குலைத்து ஏமாந்து போவதுபோல, தாங்கள் கொடுத்த தலைமைப் பிரபுத்வத்தில் மதனன் பங்கஜாவை அதிகாரம் செய்ய முற்பட்டுக் கடைசியில் உயரக் கிளம்பிய ஆகாயவாணம் சிறு குச்சியாகக் கீழே விழுவது போலச் சிதைந்து போனன். அவன் எண்ணம் ஒருபோதும் நிறைவேருது. உடனே தங்கள் நண்பருக்குத் தந்தி கொடுத்து பங்கஜத்தை அவர் வசம் சேர்ப்பித்து விடுங்கள். நாளைப் புறப்பட்டு விடுவோம்.

பார்வதியின் கணவர் பங்கஜா இருந்த நகரிலேயே உத்தியோகத்திலமர்ந்திருந்தார். அதுவும் ஒரு நற்காலம். உடனே அவருக்குப் பின்வருமாறு ஜெகநாதர் தந்தி விடுத்தார்.

தந்தி:—

"பங்கஜா எனது இல்லத்தின் ஓர் அறையில் மதனகோபாலரால் பலாத்காரமாக அடைபட்டுள்ளாள். உடனே சென்று மீட்பித்துத் தங்கள் மனைக்கு இட்டுச்சென்று விடவும். யாவும் அவளால் விளங்கும். மதனகோபாலனை மன்னித்து விடவும். தீமைக்கு நன்மை புரிவதே சிறந்தது. நாங்கள் நாளைப் புறப்படுகிறோம்."

ஜெகநாதன்.

இத்தந்தி பார்வதியின் கணவருக்குச் சேரவே அவர் திடுக்கிட்டார். பங்கஜத்தின் நிலைக்குப் பரிதபித்துக் கண்ணீர் வடித்தார். போலீஸாருடன் திடீரென்று மதனகோபாலரின் இல்லத்திற்குட் பிரவேசித்தார். அத்தருணம் அங்கு நின்ற தபாற் சேவகனும் அவருடன் கலந்துகொண்டு, பங்கஜா அடைபட்டுள்ள அறையைக் காண்பித்தான். மதன கோபாலனைப் போலீஸார் கைதி செய்தனர். ஆயினும் விட்டுவிடும்படி கூறிவிட்டு, அறையின் கதவைத் திறக்கச் செய்து உட்புகுந்தார். பங்கஜா ஹா! பிதா! என்று அலறினாள். அம்மா; உன் தந்தையார் நாளை பம்பாயிலிருந்தும் புறப்படுகின்றார். அவர்தான் வந்து விட்டதாகக் கருதி என்னை நீ உன் பிதா என்று மயங்கினாய். உன்னை என் புத்திரி போன்றும் நடத்துவிப்பேன். என் குழந்தாய்! ஸஞ்சலம் தவிர்த்திடுக. இதோ உன் பிதாவின்

157. உன் விருப்பத்தை நிறைவேற்ற முயல்வார் போன்றும் பேசுவோர், உன் நெஞ்சின் உட்கருத்தை யறிய ஆராய்பவர்களாவார்,

தந்தி. அதன்மேல்தான் இங்கு வந்து உன்னை மீட்பித்தது. உன் கஷ்டகாலம் இன்றுடன் மாய்ந்தது. இனி இங்கு இருக்கவேண்டிய தில்லை. என் இல்லத்திற்கு வந்து உன் இல்லம் போன்று இன் புறுக என்று உரைத்துப் பங்கஜாவின் கரத்தைப்பற்றிக் கண்களில் ஒத்திக்கொண்டார். பங்கஜாவின் கரம் முற்றிலும் அவரது கண்ணீரால் நிரப்பப்பட்டு, அவர் தன்னை யறியாமலே பங்கஜத்தின் நிலையை நோக்கித் தேம்பித்தேம்பிக் கதறிவிட்டார். பிரபலமான பதவியிலுள்ள அவர் இங்ஙனம் கதறவே அனைவர் மனதும் உருகியது. மதனகோபாலரை எவ்வித நிந்தையும் கூறாமல்—"உமது ஏமாற்றமே உமக்குப் பெருந்தண்டனை. அதுவே போதிய சிக்ஷை. கடவுள் உம்மை மன்னிப்பாராக"—என்று மட்டும் உரைத்துப் பங்கஜத்துடன் திரும்பிவிட்டார். புறப்படும் தருணம் பங்கஜம் அத்தபாற் சேவகன் தன்னிடமே இருக்கவேண்டுமென்றாள். அவன் செய்த கால உதவியையும் புகன்றாள். அதற்கு அவர்—"அம்மணீ! உன் இஷ்டத்திற்கு இரண்டில்லை. நீ இட்டதே கட்டளை. உன் சேவகன் யான். நின் ஏவல் கேட்கக் காத்துக்கிடப்பவன் யான். நின் பிரியம் போன்று தபாற் சேவகனும் ஒரு பந்துபோல் நம்முடனேயே என்றும் இருக்கட்டும் என்றார். பங்கஜா, தபாற் சேவகன் இவர்களுடனும் தம்மில்லம் சேர்ந்ததும், பின்வரும் தந்தியொன்றைப் பம்பாய்க்கு ஜெகநாதருக்கு அனுப்பினர்.

தந்தி:—

"பங்கஜத்தை மீட்பித்துவிட்டேன். என் இல்லத்தில் சுகமே உறைகின்றாள். நிதானமாகப் புறப்பட்டு வரவும். அவசரமில்லை. மதனகோபாலரை மன்னிக்க உத்தரவிட்டது மட்டும் மனதுக்கு மிகவும் வருத்தம். அவ்விதமே நடத்தினேன்."

ஊழியன்.

இத்தந்தி இரவு ஏழு மணிக்கு ஜெகநாதருக்குக் கிடைத்தது. பார்வதிக்கும் ஜெகநாதருக்கும் மனது சமாதானமாயிற்று. சிறிது சாந்தமுற்றனர். பல விஷயங்களைப் பேசிய வண்ணம் அவ்விரவு கழிந்தது. மறுதினம் பார்வதி, ராஜரத்நம், ஜெகநாதர்—மூவருமாக வீட்டிலுள்ள சாமான்கள் யாவற்றுடனும் புறப்பட்டுவிட்டனர். பார்வதியின் கணவர் ரயிலுக்கு வந்திருந்து வரவேற்றார். அனைவரும் மோஹனவிலாஸுக்கு வந்து சேர்ந்தனர். பங்கஜா கண்ணீருடனும் எதிர்கொண்டு தன் பிதாவை அணைத்துக்கொண்டு கதறினாள். பார்வதி பங்கஜாவைத் தேற்றினாள்.

---

158. கண்ணே! காதல் கொண்டாய். கற்பும் தந்தாய். பின் என் ஏழ்மை கண்டாய். மனம் வேறானாய். வெறுத்தாய். மற்றொருவனை மணமாட நினைவு. இது தகுதியோ நினக்கே?

பிரஜாநுகூலன்.

அநுபவ—விநோத-நீதிகள் நிறைந்த மாதப் பத்திரிகை.
(ஸ்ரீ ஆநம். N. முஹம்மது இபுராஹீம் அவர்கள் ஆதாரணையில் பிரசுரம்.)

கமலம்-18 ‖ திருச்சி: ஏப்பிரல்மீ 1923 ‖ இதழ் - 12

நமது சந்தாதாரர்களுக்கு.

சர்வேச்வரனது அருளால், ஸர்வமத சம்மதமாய், சகல ஜன மநோகரமாய் சென்ற 18 வருடங்களாக யாதொரு தடையுமின்றி நடைபெற்று வரும் பிரஜாநுகூலன் பத்திரிகையை நீங்கள் அனைவரும் அபிமானத்தோடு ஆதரித்து வருவதற்காக உகந்த வந்தனமளித்து மிகுந்த நன்றி பாராட்டுகிறோம். சுத்தமான ஜலத்தில் மனிதனுடைய நிழல் தெரிகிறது. ஸ்படிகக் கண்ணாடியில் சாயை தெரிகிறது. நற்கருமத்தில் மனோ நிலைமை விளங்குகிறது. அது போல, நமது நேயர்களின் பத்திரிகாபிமானம் பிரஜாநுகூலனின் வருஷ சந்தாவை முன் பணமாகச் செலுத்துவதால் ஸ்பஷ்டமாகின்றது. தேனில் ஒரு துரும்பு விழுந்தால் அதை எடுக்கச் சிறிது தாமதமாகும். அதுபோல் சில அஸர்ந்தர்ப்பங்களால் பத்திரிகா பிரசுரத்திலும் தாமதம் நேர்கின்றது. முதிர்ந்த அன்பு இத்தாமதத்தை ஒரு பொருட்டாகக் கொள்ளாது. சூரியனைக் கண்டு பனி விலகுவதுபோலவும், ஞானத்தைக் கண்டு மாயை மறைவதுபோலவும், நமது சந்தா நேயர்களின் அபிமானமென்னும் ஆதித்தனுடைய தேஜோமயமான கிரஹண காந்தியால். பத்திரிகை சில வேளைகளில் தாமதமாய் வருவதாலுண்டாகும் குறையென்னும் பனி பறந்துபோமென்றெண்ணுகிறோம்.

இந்த ஏப்பிரல் மாத ஸஞ்சிகையுடன் 18-வது—வால்யம் பூர்த்திபெறுகின்றது. 19-வது வால்யம் ஜூன் மாதமுதல் ஆரம்பமாகும். இனி பிரதிமாதமும் முதல் வாரத்தில் பத்திரிகை வெளிவரும். ஆகஸ்டு மாதத்திலிருந்து 36-பக்கங்களாக்கப்படும். தமது புத்திரனின் விவாகத்திற்காகப் பிதா பலவித நகைகள் செய்வதுபோல 19-ம் வால்யத்திற் கேன்று பல அருமையான விஷயங்களைச் சேகரித்து வைத்துள்ளோம். "உயிருள்ளளவும் நம்பிக்கைக்குக் குறைவில்லை" என்ற ஆங்கிலப் பழமொழிக்கிணங்க, உத்தம சிரேஷ்டர்களான கண்ணியர்களைத் தனது அன்பர்களாகப் பெற்று 19-வது வருடமுங் கொண்டுள்ள "பிரஜாநுகூல" னுக்கு எவ்வித குறைவுமில்லை. அடுத்த ஸஞ்சிகையைப் புதுவருஷ சந்தாவுக்கு வி. பி. யில் அனுப்பப்படுமாதலின் அன்பர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டு ஆதரிக்க வேண்டுகிறோம். 'காதற் பரிசு' என்ற நாவல் ஜூலை மாத ஸஞ்சிகையில் முடிவுபெறும்.

பத்திராதிபர்.

பிரபஞ்சத்தின் சந்தைக்கடை.

பொறுந்தன்மை:—யதார்த்தமானதும் சிலாக்கிய முள்ளதுமான சரக்கு கைவசமில்லை. இருந்த சரக்கு செலவழிந்து விட்டது. வந்துள்ள புதிய சரக்கு மேலுக்கு நடிப்பாகவும், தன் காரியத்துக்குக் காட்டுகிற அபிநயமாகவும் இப்படிக் கலப்படமாய் இருக்கிறது.

சிநேகம்:—பித்தளையைச் சிலர் பொன்னென்று ஏமாற்றி விடுவது போல, அறிமுகம் என்ற சரக்கையே சிநேகம் என்ற சரக்கு போல் காட்டி உயர்த்தி மோச வியாபாரம் செய்து விடுகிறார்கள். இருப்பில் இருந்த சரக்கில் பெரும்பாகம் அழுகியும் போய்விட்டது.

மரியாதை:—எளிதில் அகப்படுகிறதில்லை. விலையும் வெகுவாய் ஏறி விட்டது. கண்ணால் மாதிரி பார்க்கக் கூடக் கிடைப்பதில்லை. பழயது கிடைப்பதும் கஷ்டம். புதுசரக்கு அவ்வளவு திடமாயில்லை.

உண்மை:—அன்னபக்ஷி எப்படி அரிதாய் விட்டதோ, அப்படியே இந்த சரக்கும் அடியோடு இப்போதில்லை. ஆனால் புஸ்தகங்களிலுள்ளும் உபதேசத்திலும் கம்மென்று குந்திக்கொண்டிருக்கிறது.

நற்குணம்:—கைவச மிருந்த சரக்கைப் புதிய சரக்குக்கு மாற்றிக் கொள்ளப்போய், இரண்டும் கெட்டு விட்டது. புது சாக்கு வெளிப்பகட்டா யிருக்கிறது. பழைய சரக்கும் அபூர்வம்.

தேசாபிமானம்:—இந்த சாயம் இப்போது நயமாக விற்கிறது. எத்தனை முறை வண்ணானுக்குப் போட்டாலும் சாயம் போகிறதே யில்லை. ஆனால் முன்பு ஒரே தினுசான சாயம் மட்டும் விற்பனையாகிப் பலருக்கும் அது உபயோகப்பட்டது. இப்போது அந்த சாயத்தில் பலவித ரகங்கள், கக்ஷிகள் உண்டாய் விட்டதால், கடைகளில் எதையும் நன்றாகப்பார்த்தே வாங்கவேண்டியிருக்கிறது. இப்போது சிலதுக்கு சாயமும் போய்விடுகிறது.

தூரப்பியாசம்:—மேனாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக வந்து இறங்குகிறது. சரக்குகளுக்கும் நல்ல கிராக்கி. விலையும் மட்டு. வீட்டிலுள்ள பணமெல்லாம் இதற்கே செலவாகி விடுகிறது.

கர்வம்:—ஒரு வீசை ஒரு பைசாவுக்கு விற்கிறது. எல்லாக் கடைகளிலும் இதையே கேட்டு வாங்குகிறார்கள்.

கௌரவப் பட்டம்:—இந்த ஒட்டுமாங்கன்றுகளைப் பயிர் செய்ய வெகுபேருக்கு ஆசை. ஆனால் ஆயிரம் ஆயிரமாகச் செலவிட்டும் பலம் கொடுப்பது இந்நாளில் மிகு அபூர்வம். புது வருஷப்பிறப்பு நாள், அரசர் பிறந்த நாள், இந்த சமயத்திலெல்லாம் இதுகாய் காய்க்கு மென்று வெகுபேர் நம்பிக் காத்து ஏமாந்து போகிறார்கள். மலடித் தன்மை இதற்கு மிகுதி.

தர்மம்:—சுயமான சரக்கு இல்லை. கடைகளில் விற்பனைக்குக்கொண்டு வருகிறார்கள். ஆனால் முற்றிலும் அழுகல்; எல்லாம் பொய்க்கலப்பு. தன் காரியத்தனம் ஜாஸ்தி. ஏதோ ஒப்புக்கு மட்டும் விலை.

யோசனை:—இந்த சரக்கை விற்பதற் கென்றே லைசென்ஸ் பெற்று முன்பு சிலர் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தற்போது அவர்களின்தொகையும் அதிகரித்துவிட்டது. யோசனைகளின் வாசனைகளும் குறைந்து விட்டது. ஆனால் கடைக்காரர்களுக்கு நல்ல வரும்படி. கொள்கிறவர்களுக்கு மட்டும் நஷ்டம் கஷ்டம். அது அவரவர் இஷ்டம், அதிர்ஷ்டம்.

காதற் பரிசு—முன்தொடர்ச்சி.

"என் கண்ணே! உன் பிதாவுக்கு வரைந்த நிருபத்தில் "தாயற்ற அநாதை" யெனப் பரிதபித்தனை. அந்த சிந்தைத் துயரம் ஒழிக. என் செல்வி! நானே இனி உனக்கு ஒரு நற்றாய். சொந்தத் தாய் போன்றும் என்னால் இயன்றவரை நடந்துகொள்வேன். எனினும், ஒரு உண்மையான தாய்க்கும், ஒரு உண்மையான உடற் பிறப்புக்கும், முதன் முதலாக இம்மானிட ஜீவியத்தில் புதிய காதலோடும் 'மனைவி' என்று வந்த மனோன்மணிக்கும் இணையாக—ஸமானமாக — இவ்வகிலமுற்றும் தேடி யலைந்திடினும் காணக் கிடைப்பதரிது. ஒரு சமயம் பூர்வ பிராப்த மிருந்து, அந்தப் பாச பந்தக் கவர்ச்சியால் 'காலம் சந்தித்து' அரிதாய் அது கிடைத்திடினும், அந்தோ! அதற்கு நேர்ந்திடும் இன்னல்கள் அநந்தமாம். பொறாமைப்பாவிகள் பலர் அதிற் குறுக்கிடுவார். வஞ்சகத் துரோகிகள் சூழ்ந்து அவ்வினிய அன்பினைக் கெடுத்திடுவார். பலபல கலகம் விளைத்திடுவார். நம்மிடமும் அந்த நீசர்கள் குலாவிக் கொண்டிடுவார். நமக்கு ஜீவாதாரமாயுள்ள அவ்வன்பின் களஞ்சியத்தினிடத்தும் நம்மைக் குறித்துக் கேவலச் சொற்கள் கொட்டிடுவார். நேரிலும் நம் அன்பினர்களைக் கண்டவிடத்து நம்மைத் தாழ்த்தித் தூற்றி வீசிடுவார். "பாவி மனிதன், ஒருநாளும் ஒரு நன்மையும் செய்யாதவன்" என்று நம்மை அவ்வன்பினர் முன்னிலையில் இகழ்ந்திடுவார். நமக்கும், நமது ஜீவதாரமாயுள்ள அவ்விடத்திற்கும் ஆகாதபடி என்னென்ன வெல்லாம் விஷமங்கள் செய்யவேண்டுமோ அவையனைத்தும் செய்து கெடுத்து, கலகம் பிரிவினை பிரலாபங்கள் விளைத்து, அந்த இடத்தில் நம்மீது கொண்டுள்ள நிஷ்களங்கமான தெய்வ அன்பினை,—விட்டுப் பிரிதற்குக் கனத்த கண்ணீர் பெருக்கிடும் பாசபந்த முதிர்ச்சியினை,—பேதித்துச் சிதைத்துச் குலைத்திட சண்டாளத்துவங்கள் புரிந்திடுவார். அன்புக் கோலை இயற்றிடுவார். இந்த நயவஞ்சகக் கிராதகப் பொறாமைத் துரோகிகளின் நீசத்துவமான பாழ்த்த ஸதியோசனைகட் கெல்லாம் அந்த "அன்பு" தப்பிப் பிழைத்து மீண்டும் உயிர்கொண்டு ஊசலாடுவது அபூர்வ ஸம்பவமே. இத்துணைச் சூழ்ச்சிகட்கும் அந்த அன்பாளர் கலங்கிடாது நம்மீது பிரேமை மிகுந்து நிற்றலும் ஆகிபகவ

---

161. உன்னுடைய முற்றிய கடை நிலையில் என் பழய அன்பையோ, நேசத்தையோ, அபிமானத்தையோ எப்படிக் காட்ட முடியும்?

னின் அருள்தான். அவ்விதஅரிய அருள் மிகுந்து, எத்தகைய பொறுமைப் பாவிகளாலும் கலைந்திட முயற்சித்துஞ் சிதைந்திடாது பெருகியே வளர்ந்திடும் மாண்புசான்ற, சிரேஷ்ட அன்பினை—பிரேமையை—என்னிடத்தில் நீ காணப் பெறலாம். எதிர் பார்க்கலாம். என்னை உனது சொந்த அன்னையாக ஏற்றுக்கொள். நானும் உன்னை என் புத்திரியாக "எக்காலத்தும்" (?) கொள்கின்றேன். இனி நைந்து வதைதல் வேண்டா. உள்ளந் தேறுக. நின் துயர் ஆற்றுக."

என்று பார்வதி கூறிப் பங்கஜாவுக்குப் பல முத்திகள் செய்து தன் மடியில் உட்காரவைத்துக்கொண்டாள். இருவர் கண்களிலும் ஆனந்த நீரூற்றுப் பெருகியது. ஈன்ற அன்னையின் அன்பு இவ்விதந்தான் ருசித்திடுமோ எனப் பங்கஜா பலவாறு மயங்கி, அப்புதுச் சுவையிற் புளகாங்கிதமுற்றாள். இதற்குமுன் பார்வதியைப் பங்கஜா பன்முறைகளிற் பார்த்திருக்கின்றாள். பார்வதியிடமே இருந்திருக்கின்றாள். ஆயினும் இந்தத் தடவைபோன்று எக்காலத்தும் பார்வதியிடம் அன்னைக்குச் சமமான பிரீதியைப் பங்கஜா கொண்டதில்லை. பார்வதியும் "உனக்கு மாதாவாக இருப்பேன்" என இதுகாறும் அன்பு பெருகக் கூறினதில்லை. ஒருவரை யொருவர் ஏற்கனவே கண்டு பன்முறை பழகியிருப்பினும், பிராணனுக்குச் சமமான பிரேமையைக் கொண்டு உள்ளம் கலந்திடுவதற்கு அதற்கான 'காலம்" சந்தித்துக்கொண்டால்தான் அது வந்து கூடுகிறது. அதற்கு முன் நேருவதில்லை. ஏதோ சாதாரணப் பார்வையே யன்றி, பிரிவு சகிக்காத அன்புப் பார்வை அப்போது தோன்றுவதில்லை. எவளோ ஒரு பெண் தெருவிற் செல்கிறாள். அவளை யொருவன் சாதாரணப் பார்வையாகப் பார்க்கிறான். அவளே கைக்குழந்தையில் தான் விட்டுச் சென்ற தனது ஏகபுத்திரியென்று அவன் பிறகு உணருகிறபோது, முன்னைய சாதாரணப் பார்வையில் அவளை நோக்க இயலுமோ? புதுவிதமான ஒரு பிரேமைப் பார்வை அவளிடத்து உதித்திடுமன்றோ? அவள் பொருட்டுத் தன் உயிரிழக்கவும் அவன் மனதொருப் படுவனன்றோ? ஆ! எதனையும் கனிய வைத்திடும்—ஒன்றுபடுத்திவிடும்—காலத்தின் பிரபாவ ஸக்திதான் என்னே! என்னே!

பார்வதியும் பங்கஜாவும் ஒன்றாக இருந்து நீராடினர். பங்கஜா தனது பிரேம அன்னையான பார்வதிக்கு முதுகு தேய்த்து விட்டாள். ஆ! பெண்பிறப்பின் பாக்கியமே பாக்கியம்! அப்பிறப்பொன்றுக்குத்தான் தன்னை ஈன்ற அன்னைக்கு எல்லா உதவிகளையும் செய்ய முடிகின்றது. விலகிய சேலையையும் எடுத்து மூடச் சுதந்தர மிருக்கின்றது அன்னைக்கு நீராட்டலாம், முதுகு தேய்க்க

162. 'இன்னுமா அதை மனதில் வைப்பது' என்பவன், தனது விஷமச் செயல்களை அத்தனை எளிதில் மறந்து விடுவரென நினைக்கிறான் போலும்!

லாம். நோயுற்றுப் படுத்த நாளில் அந்த அன்னையின் மலஜலாதிகளை அன்புடனும் வாரிடலாம், அன்னையின் வஸ்திர பூஷணாதிகளைத் தானும் அணியலாம், தன்னுடையதை அன்னைக்கும் தரலாம், தன் அந்தரங்க கஷ்டங்களனைத்தையும் நவின்றிடலாம், தனது பிரஸவத்திற்குத் தனது அன்னை வந்திருக்கிறுளென்றல், ஒரு பெண் மணியின் எல்லா விசாரங்களும் விலகி விடுகிறது. கடவுளிடத்துத் தனக்குள்ள நம்பிக்கையை ஒவ்வொரு பெண்மணியும் தன் அன்னையிடத்து வைத்து வணங்குகிறுள். ஆண் உருவினிடத்து இத்துணைப் பொருத்தத்தினை அத்துணைத் தெளிவாகக் காண இயலா. (?) "அண்ணு! உள்ளே வாராதே; அம்மா ஸ்நானம் செய்கிருர்" என்று பெண்ணுருக்கொண்ட ஒரு தங்கை தனது தமயனை நோக்கிக் கூறின், ஆண்உருவு படைத்த அவன் அப்படியே நின்று விடவேண்டியதுதான். "உள்ளே வரக்கூடாது" (No Admison) என்ற சொல்லுக்கு அங்கணமே பணிந்துவிட வேண்டியதுதான். ஆனால், பெண்ணுருவோ எச்சமயத்தும் தன் அன்னைக்கு உதவி செய்திட இயலும். ஆதலின் ஆண்உருவிலும் பெண்ணுருவே அன்னைக்குத் துணைபுரிதலில் ஒருபடி உயர்ந்ததாமென்ப.

அன்று பகலில் ஜெகநாதருக்கும் பங்கஜாவுக்கும் பார்வதி அன்னம் பரிமாறினுள். இருவரும் உண்டு எழுந்த பின்னர், பங்கஜா புசித்த இலையில் பார்வதி தான் அன்னம் பரிமாறிக்கொண்டு என்றுமில்லாத ஆசையுடனும் அன்பு பொங்கிட உண்டாள். அன்பு முதிர்ந்த இடத்தில் எச்சில் சேர்க்கையும் ஒட்டிக்கொள்கிறது. ஒரு கைக்குழந்தையின் எச்சில் வீட்டின் எல்லா பாத்திரங்களிலும் பதார்த்தங்களிலும் கலந்துநிற்கவே செய்யும். எச்சில் பேதம் தோன்ருதிருத்தற்கே,—அந்த அன்பு முதிர்ச்சியின் விளக்கத்திற்கே,—கணவனுண்ட பின் அவனது இலையில் மனைவியும் உண்பதாம். காதலர்கள் இதழோடு இதழ்பொருந்திச் சுவைத்திடும் எச்சிலும், முற்றிய,—தம்மையே மறந்த,—பரிபூரண இன்பாநுபவ சூட்சும தத்துவ ரகசியமாம். மகாத்மாக்களின் எச்சிலைப் "பிரஸாதம்" என்பர். காதலர்களின் எச்சிலை "இதழமிர்தம்" என்பர். குழந்தையின் எச்சிலைத் "தேவானுக்கிரகம்" என்பர். தன் குழந்தையின் எச்சிலையுண்ணத் தனக்குப் பிராப்தம் இருக்க வேண்டுமென்பர். இதனுல் நாம் 'எச்சிலை' உயர்த்திப் பேசுவதா யெண்ணற்க. எச்சில் பெரிய அசங்கிதம் தான். அது பெரும் விஷம்தான். எனினும், அந்த அசங்கிதங்களினின்றுங்கூட, மிகப் பெரிய அன்பு தத்துவங்களையும், பிரேமபாந்தவ்ய ஊற்றினையும் தோன்றச்செய்துள்ள பகவத் சூட்சும நியமத்தின் ஒரு விளக்கத்தைத் தெளிவுறுத்தவே இங்கு நாம் இக்

163. மித்திர பேதகர்களின் வஞ்சகத்திற்கு நடுங்கி விலகிடில், "இது என்ன புதுமனித தோரணை"யென அதற்கும் ஒரு குற்றம் கற்பிக்கின்றனர்.

குறிப்புரை தந்ததாம். அருவெறுக்கப்படும் அசங்கித வஸ்துக்கள் பயிர்களுக்கு அரிய உணவும் எருவுமாதலும், அசங்கிதங்களினின்று அன்பின் ஊற்று எழுதலும் ஆ! என்ன பெரிய அதிசய அற்புதம்! பகவத் சிருஷ்டியே ஒரு விசித்திரந்தான். சிந்திக்குந்தோறும் அது தித்திப்பு தான். அந்தத் தித்திப்புச் சுவைநயத்தினை யுன்றி யுணர்ந்து பருகுவார்க்கு ஐயனின் படைப்புகளனைத்தும் வற்றாத பெரியதோர் இன்பக் களஞ்சியமாம். ஆநந்த மங்கள சோபனமாம்.

இதுநிற்க, பார்வதியையும் ஜெகநாதனையும் 'தபாற்சேவகன்' வந்து வணங்கினான். அவனது காலகன்றிக்கு மகிழ்ந்து ஆசிகள் வழங்கினர். இவ்வின்பப் பெருக்கினூடே நமது ராமதாஸனின் சிறைத்துன்பமும் கலந்து அவர்களை வருத்தியது. அவனது விடுதலை நாளை எதிர்நோக்கி நின்றனர். ஜெகநாதர் பின்வரும் பாடலை மிகு உருக்கத்துடனும் பாடினர்:—

*மனந்தளரேல்.

"கன்னான் பிறந்தான் சிறை வீட்டில் காலங் கருதிக் கதிவழியே
எண்ணங்கடந்த துன்பமெலா மேற்றன் நோற்றன் ஈனருக்கும்,
மண்ணின் றறங்கள் வளர்ந்தோங்க வதைத்தான் பகவர்தமைப் போரில்
தன்னொன்றிருத்தி மனமுடைந்து தளரேல், தளரேல், தளரேலே."

---

* இப்பாடல் ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி ஐயரவர்கள் அருளியது.

164. எவன் எதை உணரவில்லையோ அது அவன் பொருளன்று. கீதை.
கோழை இறப்பது பலமுறை. வீரன் இறப்பது ஒரு முறை. ஷேக்ஸ்பியர்.

அத்தியாயம். 7

விடுதலை வேட்கை.

பிறரைச் சகிக்காத குணம் இப்பொழுது வியாபகமடைந்து விட்டாற்போல் எந்நாளு மிருந்ததில்லை. மதன கோபாலரின் 'ஸகிக்காத' தன்மையால் சொல்லரிய துன்பம் சூழப்பெற்ற பரம நிரபராதியாகிய ராமதாஸனின் காலம் சிறைச்சாலையின் ஆஸ்பத்திரியிலேயே கழிந்தது. ஞாலாராய்ச்சியிலேயே பொழுதுபோயது. அவனது குணப்பெருமையில் ஈடுபட்டு டாக்டர் தாயுமான் அவனை மிக்க அன்புடனும் நடத்தியது ஸகஜமேயாகும். விடுதலைக்கு மூன்றே நாட்கள் இருந்தன. சிறைப்பொழுதுகள் குறையக் குறைய, தேதிகள் செல்லச் செல்ல அது கைதிகளுக்கு மிக்க ஆநந்தம். பிரதிதினத்தையும் விரலிட்டு எண்ணிக்கொண்டே யிருப்பர். ஜன்மபூமியின் விடுதலைக்கு முற்படும் தேசபக்தர்களின் ஆவலும் இவ்விதமே அதிதீவிரமுள்ளது. மனைவியைத் 'தாய் வீட்டுக்கு' அனுப்பிவிட்டு அவள் வரவுக்குக் காத்து நாள் கணக்கு எண்ணிடும் கணவனின் எதிர் பார்ப்பும் இவ்விதமே எப்போது எப்போதென்று எண்ணி ஏங்கி நிற்கும். அத்துடன் கைக்குழந்தை யொன்றும் மனைவியிடம் இருந்து விட்டாலோ—கேட்கவே வேண்டாம்.

ராமதாஸனுக்குத் தாயுமான் செய்த உதவி மிகவும் பெரிது. அவனது சிறைவாஸ விருத்தாந்தமும் அவர் அறிந்து வைத்திருந்தார். அவனது குணசீலங்கள் அவருக்குப் பேருவகை யளித்தன. எவரும் நட்பு கொண்டு விரும்பக்கூடிய அவனது வசீகரவதனம் தாயுமானையும் பணிய வைத்தது. அதிகாரிகள் பார்வையிடும் தருணத்தில் ஸயனித்தவாறிருந்து, அவர்கள் சென்றதின் பின்னர் புஸ்தகபாணியாக இருப்பான். அதிகாரிகள் இவனது முகச்சாயலையும், எத்தனைதரம் அழைப்பினும் வாய் திறவாமையையும் நோக்கி சித்தப்பிரமையுள்ளவ னென்றே கருதினர். எவ்விதமோ போயது பொழுது.

நாளை காலை விடுதலை நாள். மனம் பூரித்தான். பங்கஜத்தின் வதனத்தை இனி காணலாமென என்று மில்லாத புளகித மெய்தினான். முகமே பரவசமிகுதியால் மாறுபட்டுப் போயிற்று. பொங்கிய புன்னகை வதனத்தின்கண் பிரகாசித்தது. புதிய ஊக்கமும் நவீன சுறுசுறுப்பும் கொண்டான். மாலையும் கழிந்தது. இரவும்

165. இறைவா! எப்படி வைத்தாலும் நன்றே நின்கருணை.

தொடங்கியது. நித்திரை வந்ிலது. தன்னை மறந்த துயிலில் தன் காதலியைக் கனவிலே அடிக்கடி கண்டான். விழித்துக் கொள்வான். நாளை காண்போமென்ற களிப்பால் இன்பக்கடலில் குளிப்பான். பகவானைப் பலவாறு துதித்தான். விடியற்காலம் 3-மணி இருக்கும். அவனை யறியாமலே பெரும் நித்திரையின் வசமானுன்.

பொழுதும் புலர்ந்தது. காலைக்கடன் வழக்கம்போல் முடித்துக்கொண்டான். விடுதலையின் மகிழ்வை எதிர் நோக்கி நிற்கையில் ஒரு வார்டர் வந்தான். பரப்பரப்புடன் எழுந்து டாக்டரின் அறைக்குட் சென்று, தனக்கு விடை தரவேண்டுமென்றும் பிரார்த்தித்து, அவரது உபகாரங்களுக்காக அவரைப் புகழ்ந்து துதித்து நன்றி யுணர்வோடும் வணங்கினுன். டாக்டர் அவனுக்கு ஓர் அழகிய படத்தைக் கொடுத்துச் சென்று வரும்படி அன்புடன் இனிய வசனங்கள் மொழிந்தார். படத்தை நோக்கியதும், அது பங்கஜாவின் படமாக இருந்தது. அப்படியே பிரமித்து நின்றுன். டாக்டர் அவனைத் தேற்றி, இவ்வுலகில் அவனுக்கு உகந்த பொருள்—அரும் பெரும் பரிசு—பங்கஜாவைவிட வேறில்லை யாதலின், அப்படத்தையே தேடித் தான் மனமுவந்து அளித்ததாக நவின்றுர். அடங்காப் பெருமகிழ்வுடனும் அப்படத்தை இருகரங்களாலும் ஏந்தி மார்பில் அணைத்தவாறு டாக்டரிடம் விடைபெற்றுக் கொண்டான். 'பங்கஜாவின் படம் டாக்டரிடம் எவ்வாறு வந்ததென்று அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. நற்சகுனம் இதுவென்று பூரித்தான்.

சிறைச்சாலையின் வாயிற்படி யருகே சென்றதும் அவனது உடைகள் கழற்றப்பட்டன. விலங்குகள் கத்தரிக்கப்பட்டன. 'தாலி'யை அறுத்துவிட்டனர். அவன் சிறைப்பிரவேச தினத்தன்று அணிந்துவந்த உடைகளை அவன் வசம் கொடுத்தனர். கிரமப்படி தரித்துக்கொண்டான். சட்டைப் பையில் முன்பு போட்டிருந்த மூன்று ரூபாய்களையும் நேரில் கொடுத்துவிட்டனர். பெரிய வாசலைத் திறந்ததும் வெளியில் ராமதாஸை விட்டார்கள். பகவானைத் துதித்த வண்ணமே சிறைச்சாலையின் எல்லையைக் கடந்து பாதையோரத்துக்கு வந்தான். ஜெகநாதரும், தன் தாய்தந்தையரும் அங்கு தனக்காக எதிர்பார்த்து நிற்பதைக் கண்டான். ஓ—வென்று கதறிய வண்ணம் அவர்கள் மீது சாய்ந்தான். தன் பெற்றோர்களையும் ஜெகநாதரையும் இறுகத் தழுவிக்கொண்டு கண்ணீர் விடுத்தான். அவனை ஸாந்தமான பாஷிதங்களால் தேற்றி, தபாராய் உடன் கொண்டுவந்திருந்த வண்டியில் ஏற்றினுர்கள். பூந்தோட்டத்தெரு மோஹனவிலாஸுக்கு வண்டி சென்றது. ஜெகநாதரை நோக்கி "அன்பான மாமா! பங்கஜா சௌக்கியமா?" என்று கண்ணீர் பெருக

---

166. தனது மித்திரபேதம் நியதென நினைப்பதில்லை. அதை வெளியிட்ட உத்தமனையேகெட்டவனென்று எண்ணுகிறுன். இம்மடமைஎன்னே!

வினவினான். அதற்கு ஜெகநாதர்—" அவள் உன் பிரிவினால் நலிவுற்று அன்றுமுதல் படுக்கையிலேயே கிடக்கின்றாள். ஆகாரமேயில்லை. உன்னை நித்தமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்" என்று மெல்லிய குரலிற் கூறினார் வண்டியும் வாயிற்படியருகே வந்துநின்றது. வீட்டுக்குள் பிரவேசிக்கு முன் ஜெகநாதர் ராமதாஸின் செவியில் ஒன்றைக் கூறினார். அப்படியே பிரமித்து நின்றான். டாக்டர் தாயுமானைச் சிந்தித்துக் கரங்குவித்து வணங்கினான். பார்வதியம்மை எதிரே தோன்றி அவன் கரங்களைப் பற்றி "என் பிரிய தம்பி! வருக, வருக" என்று இனிய மொழிகள் இயம்பி, அவனை அழைத்துக்கொண்டு மேல்மாடிக்குச் சென்றாள். அங்கு பங்கஜா மிக்க பலஹீனத்துடனும் படுக்கையிற் கிடந்தாள். ராமதாஸன் அளப்பரிய சோகத்துடனும் அலறினான். பங்கஜாவை அந்நிலையில் எழுப்ப மனமிலாது ஒரு சோபாவில் உட்கார்ந்தான். மறு நிமிஷத்தில பங்கஜா கண்விழித்துக்கொண்டு, அருகே ராமதாஸனைக் காணவும், மிகு ஆவலுடனும் எழுந்து அவன் மேற் சாய்ந்தாள். கண்ணோடு கண்ணோக்கின. "எப்பொழுது வந்தாய்? (**When you come**?) என் நாதா! என் மீது வைத்த காதலுக்கோ இத்தனைப் பாடுகள்! காதலுக்காகவோ இச்சிறை! புண்ணுகி நெஞ்சம் புலம்பி இவ்வாறெல்லாம் படப் பாமன் விதித்தனனோ?" எனக் கதறிக் கரைந்துருகினாள் கல்யாணி. ஜெகநாதரும் பார்வதியும் நமது காதலர்களைத் தேற்றி ஸாந்தப்படுத்த முயன்றனர்.

அன்றிரவு ஏழு மணிக்கு டாக்டர் தாயுமான் "மோஹன விலாஸு"க்கு வந்தார். "மோஹனவிலாஸ மாளிகை அக்கனவானுடையதே. ஒரு மாதத்திற்கு முன்னர்தான் அதைக் கிரயத்திற்கு வாங்கினார். டாக்டர் தாயுமான் தான் நமது பார்வதியின் அருமைக் கணவராவர். இதையே ராமதாஸனின் செவியில் ரகசியமாக ஜெகநாதர் அவன் "மோஹனவிலா"ஸுக்குள் வந்த தருணம் நவின்றார். ராமதாஸன் தாயுமானின் அடிபணிந்து வணங்கினான். "எனக்கு ஏன் இந்த சொந்தமான பொருத்தத்தை இத்தனை நாளும் கூறவில்லை" யென்று வினவினான்.

அதற்கு டாக்டர் தாயுமான் நவின்றதாவது:—ராமதாஸா! நீ இன்னொன்று உணராமலே சிறை ஆஸ்பத்திரியில் உனக்கு அநுகூலங்கள் செய்வித்து உன்னைச் சிகிச்சையில் இருத்திய மறுநாள் ஜெகநாதரின் தந்தியைப் பெற்றேன். அதன்படி பங்கஜாவை வை மதனகோபால ரிடமிருந்து விடுவித்து என்னுடைய இந்த மோஹன விலாஸுக்குக் கொண்டுவந்து விட்டேன். பங்கஜத்தால் உன்னைப் பற்றிய யாவும் உணர்ந்து, என்னை யறியாமலே இரக்கம்

பொங்கி எழுந்து கருணையோடும் என்னால் காக்கப்பட்ட நீயே அந்த ராமதாஸன் என்று தெரியவரவும் மிக்க வியப்புற்று நின்றேன். அன்றுமுதற் கொண்டு உன்னை மிகமிக அன்புடனும் சிறையில் கவனித்து வந்தேன். பிரதிதினமும் உனைக்குறித்த செய்திகளைப் பங்கஜாவுக்கு நான் தெரிவித்து வந்ததனால், அவளும் பிராணனைக் கையிற் பிடித்துக்கொண்டு ஜீவித்தாள். உனக்கு அதிக பிரிவாற்றாமை தோன்றுமென்றே இவ்விஷயங்களேதும் கூறினேனில்லை. இன்று காலையில் நீ என்னிடம் விடைபெற்றுச் செல்ல வந்தபோது, எற்கெனவே பங்கஜா விடமிருந்து பெற்று வந்த படத்தை உன் கையிற் கொடுத்து உன்னை மகிழ்வித்தேன். அதனினும் சிறந்த பரிசு உனக்கு வேறேதும் இல்லையன்றோ? பங்கஜாவின் படத்தைச் சிறையிற் கண்டாய். இங்கு பங்கஜாவையே கண்டாய். இனி என்றும் உனக்குச் சொந்தமுடையவளாக நீ பங்கஜத்தை விரைவில் பெறுவாய். கடவுளின் கருணையை எதிர்நோக்கிக் காத்திரு" என்றார். ராமதாஸனின் பரவசம் சொல்லவுங் கூடுமோ?

அத்தியாயம்—8.

சிறை சேர்த்தவனும் சிறை சேர்தல்.

மதனகோபாலர் ஒரு மாதமாக ஊரில் இல்லை. பல இடங்கட்கும் சென்றிருந்து திரும்பினார். ஜெகநாதர் வந்திருப்பதை யறிந்ததும் அவரைக் காணப் பழய ஆவலுடனும் 'மோஹன விலா'ஸுக்கு வந்து சேர்ந்தார். இது தந்திரத்திலும் பெரிய தந்திரமாம். ஒருவனுக்குக் கெடுதியையும் செய்து விடுகிறது. அவனுக்குப் படுகுழியும் தோண்டி விடுகிறது. அவனை மீளக்கூடாத விபத்திலும் சிக்கவைத்து விடுகிறது. கண்டபடி வசைமாறிகள் வழங்கித் தூற்றவும் தூற்றி விடுகிறது. ஒன்று சேர்த்து வைத்தவனுக்கே ஓரவஞ்சகமும் புரிகிறது. இவ்வளவும் செய்துவிட்டு அவனிடமும் வந்து அன்பு குலாவுகிறது—கொஞ்சுகிறது — முத்தமிடுகிறது — பிரிய நயவசனங்கள் பேசுகிறது—சிரிக்கிறது—சிந்தை களித்து விருந்து செய்கிறது —தன் ஊருக்கும் வருமாறு அழைக்கிறது—'அண்ணா' என்கிறது —'சாஷ்டாங்க நமஸ்காரங்கள். என்கிறது—ஸதா அவனுடன்

168. நிஷ்களங்க ஹிருதயமென்றநினைவினால் அன்று ஊறிய உள்ளன்பினை, இன்று பயங்கர விஷம மனிதனெனத் தெளிகையிலும் கொள்தல் கூடுமோ?

கூடிக் குலாவுவது—எதுந் தெரியாத பூனை போலிருப்பது—அவனது உள் மர்மங்களை யாராய்வது—அவனுடன் ஏக ஸயனங்கொள்கிறது—இன்னும் அவன் உருப்படாதிருக்க நெஞ்சிற்குள்ளே வகை தேடிக்கொண்டு வெளியில் மட்டும் வெகு வெகு விஸ்வாசக் கொக்காக நிற்கிறது—இது சிலருடைய தந்திர இந்திர ஜால ஸாகசமாம். அதில் மதனகோபாலரும் ஒருவராதலின் ஜெகநாதரிடத்து மீண்டும் அன்பு குலாவுவதற்கு அன்று அங்கு நெருங்கினர். ராமதாஸையும் பங்கஜாவையும் ஒருங்கே காணவும் அவர் திடுக்கிட்டார். ராமதாஸன் வந்ததெப்போதென வியப்பு தோன்ற வினவினர். பங்கஜா ஆத்திரம் பொங்கிட, "ராமதாஸர் சிறையிலேயே மடிந்திடாமல் ஜீவனுடன் திரும்பியது உங்கள் மனதிற்கு வேதனையாக இருக்கிறதா?" என்று வினவினள்.

ஜெகநாதர்:—மதனகோபால புண்ணியனே! இதுகாறும் கண்ணில் தென்படாது இன்றுதான் என்முன் வந்தீர். ராமதாஸனுக்கே பங்கஜா வென்ற எனது நிச்சய உறுதியை உமது உள்ளமும் அறியும். நேரில் நவின்று முள்ளேன். அங்ஙனமாக, அவனைச் சிறை புக விடுத்தமை தெய்வ சம்மதமாகுமா? உமது கொடிய காரியங்களை நான் ஆத்திரத்துடனும் கண்டிக்கின்றேன். என் தேகத்தின் ஒவ்வொரு நாடியும் இந்தக் கொடுமையை எதிர்த்து நிற்கின்றது.

பங்கஜா:—மதனரே! விவாகத்திற்கு முன்னரே தங்களின் குமாரனுடன் ஸம்பந்தப்பட்டால் தான் ராமதாஸருக்கு விடுதலை என்றீர். காலமே—கடவுளே அவருக்கு விடுதலை கிடைக்கச் செய்து விட்டது. சோழர்கள் செங்கோல் நடாத்திய காலத்தில் காவேரிப் பட்டணத்தில் ஓர் பதுமை இருந்ததாம். நியாய ஸ்தலத்தில் நீதி பிறழ்ந்திடுமாயின், அப்பதுமையின் கண்களிலிருந்து ஸதா நீர் வடியுமாம். இப்பொழுது இங்கு அவ்விதம் ஒரு பதுமை இருப்பின் உமது செயல்களுக்கு இராப்பகலும் அது ஓயாமல் அழுதுகொண்டே யிருக்கவேண்டிவரும். என் வயிறு கொதிக்கையில் உங்கள் வாழ்வு நிலைக்குமா?

ராமதாஸன்:—நானும் பங்கஜாவும் புறப்பட்டது தெரிந்தும், அப்பொழுதே தடுத்திடாமல், நாங்கள் ரயில் ஏறிய பின்பு எங்களுக்கு வியவகார வடிவம் ஏற்படுத்திப் போலீஸார் பார்வையிற்பட வைப்பானேன்? இதில் நீர் கண்ட பலனென்னவோ? எத்துணைத் துன்புறுத்தப் பட்டாலும் ஆத்திரம் எழக் கூடாது நெஞ்சில் எனில் அது யாங்ஙனே? பெண் பன்றியின் பொறுமையை நரிகள் எப்படிப் பரீக்ஷித்து அதன் குட்டிகளை யெல்லாம் எவ்விதம்

169. ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டு, "எப்படி அது நடந்ததோ தெரியவில்லை, எனக்கே வியப்பாகிறது" எனக்கடிதம் எழுதுவர் விஷமிகள்.

கொள்ளை கொண்டு போகின்றனவோ, அவ்விதமே பங்கஜாவை என்னிலிருந்தும் பிரித்து அவளை அபகரித்திட நினைத்தீர். அது முடிந்ததா?

மதனகோபாலர்:—(புன்னகை ததும்ப) பெண் பன்றியின் உவமை விளங்கவில்லை. விவரித்து நவின்றிடுக. கேட்போம்.

ராமதாஸர்:—தாங்கள் புன்னகையொளிர் வதனமாய் விளங்குதல் தங்களின் கபட புத்தியை இன்னும் அதிகமாய்த் தெரிவிக்கின்றது. முகவிலாஸமோ அமிர்தம். வசனங்களோ இன்பக் களஞ்சியம். உள்ளமோ படுவிஷம். கசாப்புக்காரன் ஆட்டைக் தடவிக் கொடுக்கும் பாவனை. எத்துணை ஆத்திரம் நெஞ்சில் உதிக்கினும் அவற்றையெல்லாம் மறைத்து விட்டு மந்தகாஸ பூர்ண சந்திரவதனமாய் ஒளிர்தல் பெரிய இந்திரஜித்து வித்தை. வஞ்சகத்தில் கைதேர்ந்தோர்க்கே இங்ஙனம் நடித்தல் இயலும். இவர்தம் மனத்துள் உறையும் சிந்தனைகள் எக்காலத்தும் வெளிப்படா. பிறர் மனத்தை ஊடுருவிப் பாய்ந்து அவர்களின் விஷயங்களைத் தாங்கள் கிரகித்துக் கொள்ள முயல்வரேயன்றி, தங்களின் அகத்து நினைவுகளை எஞ்ஞான்றும் வெளிவரச் செய்யார். அதில் தாங்களும் ஒருவர். அதிகமாய்க் கானகத்தில் நன்கு பழகித் தேறிய பெண் பன்றிக்கும் தன் கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள்ள முடியவில்லை. இப்பெண் பன்றிகள் சமீபத்திலிருக்கும் காடுகளிலேயே பிரசவிக்க வேண்டியிருக்கிறபடியால், அது தன் குட்டிகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டு அரைத் தூக்கத்திலிருக்கும் போது, நரிகள் எப்படியோ தெரிந்து கொண்டு, இப்பன்றியைக் கூட்டமாய் வந்து சூழ்ந்து கொள்ளுகின்றன. பிறகு ஊளையிட்டுக் கொண்டே ஒரு நரி ஹிம்ஸிக்கத் தொடங்கி, சண்டைசெய்து ஒரு பன்றிக்குட்டியைக் கொண்டு போகின்றது. இந்நரியை ஆத்திரத்துடனே பின் தொடர்ந்து பெண் பன்றி போகும் போது, மற்ற நரிகள் மற்றக் குட்டிகளையும் கொண்டுபோய் விடுகின்றன. இந்த விதமாய்ப் பெண் பன்றி தன் குட்டிகளை யெல்லாம் ஒருங்கே இழந்துவிட நேர்கின்றது. விதிவசத்தை நினைத்துப் பொறுமைப் படுவதல்லால் வேறு என்செய்ய? தாங்கள் தான் நரி. நான் பெண் பன்றி. பங்கஜாவோ பெண்பன்றியின் குட்டிகளாகும். எவ்விதமோ எனக்கு வியவகார வடிவம் கற்பித்து விட்டுப் பங்கஜாவைத் தங்களின் ஸ்வாதீனம் செய்துகொண்டீர். அது முற்றுப்பெற்றதா? மிதிக்கப்பட்ட புழுவும் கடிக்கும் என்பதை ஏன் மறந்தீர்?

பார்வதி:—ஐயா! மதனரே! பங்கஜாவை ராமதாஸர் இட்டுச் சென்றது பிசகுதான். அவனைச் சிறை செய்ததும் சரிதான். இதை

170. பிறர் இயற்றிய நூல்களையும் பத்திரிகைகளையும் பழிப்போர், அத்தொழிலைச் செய்கையில் தான் சிரமம் இத்துணையெனக் காண்பர்,

நீர் ஜெகநாதருக்குத் தெரிவிக்க வேண்டுமன்றோ? அவ்வாறு ஏன் செய்யவில்லை? ஜெகநாதருக்கு அறிவித்திருப்பின்,ராமதாஸனுக்குத் தான் தன் குமாரத்தி பங்கஜாவைத் தரப்போவதாகக் கோர்ட்டுக்கு வந்து கூறியிருப்பாரன்றோ? ராமதாஸனுக்கும் விடுதலை கிடைத் திருக்குமன்றோ? அவ்விதம் விடுதலைக்கு மார்க்கம் ஏற்படாதிருக் கவே ஜெகநாதருக்கு எதுவும் தெரிவியாது மறைத்தீர். பங்கஜாவும் தன் தந்தைக்குக் கடிதம் எழுதிவிடாதவாறு அவளையும் ஒரு அறை யில் அடைத்தீர். தெய்வம் தான் உமக்குக் கூலி கொடுக்கவேண்டும்.

ஜெகநாதர்:—வஞ்சித்துக் கெடுக்கும் துரோகிகளின் வாழ்வு நிலைத்திடாது. மனதார ஈச்வர சாக்ஷியாய் உழைத்தவனை, அவன் உழைப்புக்குக் குறைவுகள் பேசி நிமிஷநேரத்தில் அவனை ஒதுக்கி விடுபவனைத் தெய்வம் கேட்காமல் விடாது. நல்ல காலத்திற்கு இத்துற்சிந்தனை யுண்டாகாது. இனி என் இல்லத்துவாயிலை மிதிக் காதீர். உமது முகத்தில் விழிப்பதே பாபம்.

மதனகோபாலர் ஏதும் பேசவில்லை. தக்ஷணமே மௌன மாக எழுந்து வெளியில் வரவும், வீட்டின் வாயிற்படி அவரது உச் சியில் பலமாகத் தாக்கியது. தின க்ஷௌரம் செய்து கொள்ளும் கௌரவம் உள்ளவராதலால், விரலுக்கேற்ற வீக்கமாக அடியும் பலமாய்ப்பட்டு இரத்தம்பெருகி, முகமெல்லாம் உதிரமாக அத்து டன் வெளியில் வந்தார். அதே நிமிஷத்தில் அவரைப் போலீஸார் ஒரு வாரண்டைக் காண்பித்துக் கைது செய்தனர். எதற்காக வா ரண்டு என்று மதனகோபாலர் கேட்க, பல இன்ஸியூர் கம்பெனி களை லேடி மேரியுடன் மோசம் செய்ததற்காக வென்று போலீஸார் கூறினர். அதைச் செவியுற்றதும் மதனகோபாலர் திடுக்கிட்டு அப் படியே அசைவற்று நின்றார். மறுநிமிஷத்தில் போலீஸார் அவரை அசையச்செய்து கைவிலங்கிட்டபடி அழைத்துச் சென்றனர். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்ற அறவுரை பொய்க்குமோ?

அத்தியாயம். 9

ஒடிந்து விழுந்த ஒரு குடும்பம்.

வஞ்சித்து வாழ்ந்தார் யார் வையக மீது? பாவி துரியோ தனனும் பார்மிசை கதறியே தியங்கி மயங்கி மடிந் தான். நீடிய காலமல்லாது நிமிஷப் போழ்திற்றனே நீர்மேற் குமிழிபோன்றும் அன்னோர் நிலை குலைந்து

171. விவாகத்திற்கு முன்பே நமக்குத்தெரிந்து பழகிய குழந்தை நம் நண்பனின் மனைவியாயின், அவன் வீடு நமக்குத் தாராளமே.

கெடுவால். அணைந்திடுந் தீபம் அதிகமே ஒளிவிட்டு மின்னல் போன்று அன்னவர் தம் வாழ்க்கையாம். வஞ்சகமிக்காளர் தமது வாழ்வு விளங்கி சீர் செல்வம் சிறப்பு காண்கை சின்னஞ்சிறு போதுக்கேயாம். பின்னர் எழுநிலை மாடம் கால் சாய்ந்து வீழ்வதாம். வஞ்சித்தொழுகும் மதியிலிகாள்! வாழ்வென்ன கண்டீர் நீவிர்? பின்வருவன தேர்ந்திலீர். நாளை நேர்வன ஓர்ந்திலீர். இன்றைய லாபத்திற்கே இறுமாப்பு மிகுவீர். இறுதியில் இமைப்போதினில் இருநிதியனைத்தும் இழந்து இன்னல் காண்பீர். இருந்த இடமும் வேறாகி, வேறற்ற மரமாகி, இசைந்த பொருத்தமும் வருத்தமாகிப் புன்கதிக்கே புகுவீர் உண்மை. வஞ்சித்த மதனகோபாலன் கதை கேண்மோ. அவன் வாழ்வழிந்தான். வசையே மிகுந்தான். சிறையுஞ் சார்ந்தான். வினை வீண் போமோ?

மதனகோபாலர் "லைப் இன்சூரன்ஸ் கம்பெனி"களை மோசம் செய்ததற்காகக் கைதியானு ரென்பதைக் கேட்கவும், ஜெகநாதருக்குத் தமது பூர்வ சரிதம் ஞாபகத்திற்கு வந்தது. ராமதாஸனை நோக்கி, எனது தந்தை இந்த "லைப் இன்சூரன்ஸ் கம்பெனி"யை ஏற்படுத்தாதிருந்தால், நான் எத்துணையோ செல்வநிலையில் வீற்றிருப்பேன் என்றார். அதை விவரமாக ராமதாஸனும் பங்கஜாவும் கேட்க விரும்பினர். ஜெகநாதரும் தமது பிதாவை நினைத்துத் தம் கண்களைத் துடைத்துக்கொண்டு கூறலுற்றார்.

என் தந்தை மிகு சீமானவர். பரம்பரைச் செல்வராவர். பிரபுவுமாவர். அவர் சிலருடன் சேர்ந்து இலங்கை, பர்மா, ஹைதராபாத் இம்மூன் றிடங்களிலும் ஜீவன அபய நிதி என்னும் லைப் இன்சூரன்ஸ் (Life Insurance Company) கம்பெனிகளை ஏற்படுத்தி மிகு பிரபலமாக விளங்கினர். இந்தக் கம்பெனிகளிற் பதிவு செய்து கொள்பவர்கள் இவ்வளவு தொகை தாங்கள் இறந்த பின்பு இன்னுருக்குக் கொடுக்கவேண்டு மென்று குறிப்பிட்டு, அத்தொகைக்கேற்ப மூன்று மாதத்திற்கு ஒருதரமாகத் தங்களின் ஜீவிய காலமுற்றும் ஒரு குறித்த தொகை செலுத்தி வரவேண்டும். தமக்குப் பின்பு ஐயாயிரம் ரூபாய் தரவேண்டு மென்று பதிவு செய்து கொண்டவர் ஆயிரம் ரூபாய் மட்டுமே செலுத்தி யிறந்திருப்பினும் அவருக்கு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தே யாகவேண்டும். ஆயினும் இவ்விதம் அதி துரிதத்தில் மரணமாவோர் சிலரே யாதலின் லாபமே பெரிதும் விருத்தியடைந்து வந்தது. இவ்வாறான நிலையில் இலங்கையில் ஒருபெரிய சீமான் ஒரு லக்ஷம் ரூபாய்க்குத் தன்னைப், பதிவு செய்து கொண்டு கிரமமாக சந்தாவைச் செலுத்தி வந்தான். எழாவது மாதத்தில் ஜ்வரம் காரணமாக எத்துணையோ சிகிச்சை

172. யாவரும் நித்திராமாய்கையிற் கிடப்ப, நூலாசிரியனே அந்த மாய்கையை விலக்கிக்கொண்டு இரவு முற்றும் நூல் வரைகிறான்.

கள் செய்தும் பயன்படாது இறந்தான். இறக்கவும் உடனே லக்ஷம் ரூபாய் அவன் மனைவிக்குக் கொடுக்கும்படியானது. அதற்கு அடுத்த வருஷத்தில் பர்மாவில் ஒருவன் இதே மாதிரியாக இரண்டு லக்ஷம் ரூபாய்க்குத் தன்னைப் பதிவு செய்து கொண்டு ஒன்பதாவது மாதத்தில் மரணமானான். நஷ்டம் தாங்குதற்கு முடியாது போயிற்று. இரண்டு லக்ஷம் ரூபாய் அவனது மனைவிக்குக் கொடுக்கும்படியாயிற்று. அதற்கு அடுத்த வருஷத்தில் ஹைதராபாத்தில் மற்றொரு துரதிர்ஷ்டம் வாய்த்தது. அங்கு குபேர சம்பத்துடன் வாழ்ந்த பிரபு ஒருவர் மூன்று லக்ஷத்திற்குத் தன்னைப் பதிவு செய்துகொண்டார். ஒரு வருஷம் வரையில் சந்தா செலுத்தி வந்தார். ஸதா வயிற்றுப் போக்கினாலேயே அவர் மெலிந்து அதனாலேயே பிராணனைத் துறந்தார். கம்பேனி விதிப்படி அவரது மனைவிக்கு மூன்று லக்ஷம் ரூபாய் தர நேர்ந்தது. ஒரு மூன்று வருஷங்களுக்குள்ளாக ஆறு லக்ஷம் ரூபாய் நஷ்டம் வந்து விடவே, என் தந்தைக்கு இருந்த வீடும், நிலங்களும், பொருளும் யாவும் தோற்றுப் பரம தரித்திரதிசைக்கு வந்து விட்டார். அவருடன் கூட்டாக நின்ற மூவரில் இருவர் தற்கொலை செய்துகொண்டு விட்டனர். ஒருவர் பைத்தியம் பிடித்தவராகி மூன்றாவது மாதத்தில் உயிர் துறந்தார். பர்மா, இலங்கை, ஹைதராபாத் மூன்றிடங்களிலுமிருந்த கம்பேனிகள் மூடப்பட்டுப் போயின. மிகு தரித்திர திசைக்கு வந்துவிட்ட என் பிதா ஒரு கிராமத்தில் மறைந்து தம் வாணாட்களைக் கழித்து வந்தார். இக்கிராம வாழ்க்கையில் இடிமேல் இடியாக எனது அன்னையும் காலஞ்சென்றனர். எனது பிதா அவளைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாது என்று மாங்கல்யத்துடனேயே வைத்துத் தகனம் செய்யுயாறு கூறிவிட்டார். அவ்விதம் செய்திடில் மறுவிவாகம் அவர்கள் செய்து கொள்ளலாகாது என்பது ஸமூக ஏற்பாடு. சாஸ்திர விதி. என் தாயாருக்குப் பால் கொடுத்து வளர்த்த அம்மை என் தாயாருடனேயே இருந்தனராதலின் அந்த விருத்தாப்பிய அம்மையே என்னை வளர்த்து வந்தனள். என் தாயுடன் பிறந்த சகோதார் ஒருவர் உண்டு. கோபண்ணா என்பது அவர் பெயர். கோபத்தில் அண்ணாவாகவே இருந்தார். என் மாதாவின் அந்தியத்தில், என் பிதாவால் இடப்பட்ட ஆபரணங்களையும், மாதாவின் தாய் வீட்டில் போடப்பட்ட பூஷணங்களையும் கோபண்ணா கைப்பற்றிக் கொண்டார். ஜெகநாதனுக்கு விவாகமாகும்பொழுது அவையனைத்தையும் போட்டு விடுவதாகக் கூறினார். என் தந்தையோ தமது மனைவி போன துயரத்தில் மூழ்கி வாழ்க்கையில் வெறுப்புற்று நின்றனராதலின், நகைகள் விஷயமாகக் கோபண்ணா கூறியதைச் சரி என்று

---

173. இனி உங்களுக்கும் நல்ல காலம். உலகத்துக்கும் நல்ல காலம். போனபொருள் வரும். நாளை நன்னாள்.

ஒப்புக்கொண்டார். இங்கு மற்றொரு அநுபவமும் கூறுதல் பொருந்தும். ஒருவனிடமிருந்து சில குறித்த பொருள்களை அபகரிக்க வேண்டுமென்றாலும், அவன் தன் உயிருக்குச் சமமாகக் கருதியுள்ள நால்களையோ, அவனது நிவியத்தையோ, மற்றெதனையோ கொள்ளைகொண்டுவிட விரும்பினும், அவன் தனது பிராணதாரமான ஒருவரைப் பறிகொடுத்து விட்டு, அந்த இழந்த துக்கத்தில் தனது ஸ்ரீயத்தைப் பழித்துக்கொண்டு வாழ்க்கையில் மிகவெறுப்புடன் நியங்கி நிற்கும் சந்தர்ப்பத்தில், இரவலாகவோ, இனமாகவோ, தனக்குத் தருமாறு வற்புறுத்தியோ கேட்டுப் பெற்றுக்கொண்டு விடுதல் மிகவும் எளிதான காரியம். அவனோ உலகவிரக்தியில் மூழ்கிச் சலிப்புற்றுள்ள வேளை அது. எதைக் கேட்பினும் கொடுக்கிற சந்தர்ப்பமாகும். அதனை யறிந்து தருணம் நோக்கிச் சுறண்டிக்கொண்டு சென்றுவிடும் சமயதந்திர ஸஞ்சீவிகள் வெகு பேர் உளர். இவற்றில் எனது தாய் மாமனான கோபன்னுவும் ஒருவராதலின், பிற்காலம் எனக்குத் தருவதாகக் கூறி என் மாதாவின் ஆபரணங்களைத் தன்னிடமே நிறுத்திக் கொண்டார். என் பிதாவோ "அவளோ சென்றுவிட்டாள்; பின் ஆபரணங்கள் எதற்கு? ஜெகநாதனுக்குப் பருவம் வந்தபோது கோபன்னுவே தனது குமாரத்திக்கு அணிவித்து ஆபரணங்களோடு பெண்ணையும் அவனுக்குக் கொடுத்துவிடுகிறாள். நமக்கு அந்தக் கவலை எதற்காக?" என்று இருந்துவிட்டார். ஆபரணங்கள் ஐயாயிரத்திற்கு மேலும் பெறும். என்னையும் எனது மாமனாரின் வீட்டிற்கே அனுப்பி விட்டார். மாமாவின் குமார்த்தியும் நானும் ஒன்றாக வளர்ந்துவந்தோம். அடிக்கடி என் பிதாவினிடம் சென்று வருவேன். என் தாய்க்குப் பால் கொடுத்து வந்த அம்மையே என் பிதாவுக்கு அன்னம் சமைத்து உபசரித்து வந்தாள். மனிதர்களுக்கு இவ்விதமே ஆபத்துகள், துயரங்கள் ஏக காலத்தில் அடுக்கடுக்காய்த் தோன்றிக் குடும்பத்தையே, வாழ்க்கையையே படுக்கவைத்து விடுகின்றது. மீண்டும் மீளவோட்டாத நிலையில் கிடத்திவிடுகின்றது. பட்ட காலிலேயே படும் நிலையில் ஆகிவிடுகின்றது. ஒரு படி தவறினால் ஒன்பது படியும் தவறிப் பாதாளத்தில் விழவைத்துவிடுகின்றது. இவ்வாறான நிலையில் எனது பால்யகாலம் மிகமிக வறுமையுடன் என் தாய் மாமனாது வீட்டிலேயே சென்றுகொண்டிருந்தது—என்று ஜெகநாதர் தமது பூர்வகதையைக் கூறி முடித்துத் தமது தந்தையை நினைத்துக் கண்ணீர் சிந்தினார். பார்வதியும் டாக்டர் தாயுமானும் கூடக் கண்ணீர் நிறம்பினர்.

ராமதாஸ்:—உங்களுடைய தந்தைக்கு நேர்ந்த நஷ்டங்கள் மிகு விசித்திரம். ஏதோ ஒரு கபடம் அதில் இருக்கிற தென்று

---

174. தன் விஷமம் நிறைவேறுதகாலே, அதை யுணர்ந்துவிட்டவனிடம், "தங்கள் ஜோலிக்கே இனி வரமாட்டேன்" என்கிறான். இது மெய்யா?

எனக்குத் தோற்றுகின்றது. இலங்கையில் நேர்ந்த நஷ்டம் **1890**-ம் வருஷத்தில் என்றும், அங்கு தன்னைப் பதிவு செய்து கொண்டு இறந்தவனின் பெயர்-சிவனடிபாதம் என்றும் நினைக்கிறேன். இது சரியாயிருப்பின் கள்வன் சிக்கிய மாதிரியே.

ஜெகநாதர்:—ஆம், ஆம். சிவனடிபாதம் என்பவனே இலங்கையில் பதிவு செய்து கொண்டு இறந்தவன். நீ கூறும் வருஷமும் பொருத்தமே. **1890** தான். இதனை யெப்படி யுணர்ந்தாய்?

ராமதாஸ்:—மிக்க சந்தோஷம். எனக்கு இனி வெற்றிதான். மற்ற இரு நஷ்டங்களுக்கும் விவரம் கூறுகிறேன். பர்மாவில் பதிவு செய்து கொண்ட பர்மியனின் பெயர் புத்தா என்பதாகும். **1892**-ம் வருஷத்தில் அவன் மரணமடைந்தான். இது சரிதானா?

ஜெகநாதர்:—என்ன ஆச்சரியம்! வெகு பொருத்தமாய்க் கூறுகின்றனையே?

ராமதாஸ்:—இனி ஹைதராபாத்தில் பதிவு செய்து கொண்டு மரித்தவன் ஒரு மகம்மதியனாவன். அவன் பெயர் ஹைதர்ஆலி என்பதாம். அவன் இறந்தது **1893**-ம் வருஷத்திலாகும். என் கணக்கு விவரம் பொருந்தி யிருக்கிறதா?

ஜெகநாதர்:—எவ்விதம் இவற்றை யெல்லாம் உணர்ந்தாய்? வெகு காலத்திற்கு முன்பு நிகழ்ந்த இவற்றினை உனக்குத் தெரிவித்தோர் யாவர்?

ராமதாஸ்:—(மிக்க ஆநந்தத்துடன்) என் பகைவன் தொலைந்தான். என்னைப் பலபல துன்பம் படவைத்த பாதகன் இனி பழிக்குப்பழி வாங்கப்படுவான். பகவான் துராத்மாக்களை ஒருமிக்க அழிப்பதில்லை. அவர்கள் எவ்வளவுக்குப் பாப மூட்டையைச் சுமக்க இயலுமோ அவ்வளவுக்கும் விட்டுக் கொடுத்து இறுதியில் அவர்களைப் பாதாளத்தில் அமிழ்த்தி விடுகிறார். இனி என் பக்கம் வெற்றிதான். இத்தனை உருவங்களும் விதம் விதமாய்ப் புனைந்தவன் மதனகோபாலன் தானென எனக்குத் தெளிவாகின்றது. இனி அவனுக்கு மீட்சியில்லை. தாங்களும் இதில் சிரத்தை வகிக்க வேண்டும்.

ஜெகநாதர்:—வெகு காலத்திற்கு முந்திய ஸம்பவம் இது. இறந்த பின்பு ஒருவன் மீண்டும் பிழைத்தான் எனல் யாங்ஙனம் பொருந்தும்? மதனகோபாலன் மீது இக்குற்றத்தைச் சாட்டுதல் எவ்விதம்? குற்றம் உண்மையில் நிகழ்ந்திருப்பினுங்கூட, அதற்கும் சாட்சிகள் இல்லா விடத்து அது ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

---

175. ஒன்று கேட்டு, அது மறுக்கப்படில், இப்படிச்சொல் வருமென எதிர்பார்க்க வில்லையென ஏசுவர். அவர்களை எதிர்பார்க்கக் கூறியது யார்?

இந்நிலையில் மதனகோபாலனே என ருசுப்பித்தல் சாத்தியமன்று. பர்மாவில் இறந்த 'புத்நா' என்பவரின் படம் என் தந்தையிடமிருந்ததைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன். அந்தப் படத்துடன் மதனகோபாலனின் தற்போதைய போட்டோ படமும் பொருந்தியிருக்கிறதா வெனப் பார்க்க வேண்டும் என்றார்.

உடனே அவ்விருபடங்களையும் வைத்துப் பொருத்தம் பார்த்ததில், இரண்டும் உருவில் ஒத்து நின்றன. ஜெகநாதர் திகைத்தார். ராமதாஸன் உத்ஸாக புருஷனானான். பங்கஜா பழிக்குப்பழி அவசியம் நடக்கவேண்டும்; நான் நிலத்தில் சிந்திய கண்ணீர் வீண்போகாது என்றாள். மதனகோபாலனின் விசாரணையில் அனைவரும் கண்ணோட்டம் செலுத்தி நின்றனர்.

அத்தியாயம்—10

"உலகமறியாத ரகசியம்."

மதன கோபாலர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்றும், விசாரணையின் முடிவு யாதென்றும் வாசகர்கள் கேட்கின்றனர், அது ஒரு பெருங்கதை. அதையே ஒரு நாவலாகவும் இயற்றிடலாம். அவரது விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்து தீர்ப்பும் கூறியானது. அந்த விவரங்களை இங்கு சுருக்கமாய்த் தெரிவிக்கின்றோம்.

மதன கோபாலர் பிறந்த இடம் கும்பகோணம். அவருக்குக் கோபாலன் என்று பால்யத்தில் பெயர். தாய் தந்தையர் இளமைமையிலேயே காலஞ்சென்றுவிட, உறவினரின் வீட்டில்வளர்ந்து வந்தான். அந்த சமயத்தில் தஞ்சாவூரில் கோவிந்தசாமிராவ் என்பவர் முதன் முதலாகத் தமிழ் நாடகக் கம்பெனியொன்றை ஏற்படுத்த, அதில் சேர்ந்துகொண்டு சில காலம் நடித்து வந்தான். அங்கிருந்து பின் போலீஸுக்குத் தாவினான். அதில் ஒரு குற்றம் செய்து வேலையை இழந்துவிட, அப்பால் ராணுவத்தில் சேர்ந்து சீனாவில் நடந்த பாக்ஸர் கலகத்தின்போது இந்தியாவிலிருந்தும் சென்ற இந்தியத் துருப்புகளுடன் இவனும் சீனாவுக்குச் சென்றுவிட்டான். பாக்ஸர் கலகம் ஓய்ந்த பின்னர் ராணுவத்தைவிட்டுத்தப்பி எங்கோ மறைந்துவிட்டான். வெகு காலம் வரையில் அவன் சென்ற இடம் தெரிய

---

176. சந்தர்ப்பங்கள் வாய்க்காதோ? சரி, சந்தர்ப்பங்களை நான் உண்டாக்கிக் கொள்வேன். நெப்போலியன்.

வில்லை. "மார்கட்வேயின்" என்னும் ஆங்கிலவித்வான் ஒருவர்- "ஒருவருக்கும் தெரியாத வழிகளும் பயன்படாத தந்திரங்களும் சீன தேசத்தாருக்கே மிக்கப் பிரியமானது" என்று எழுதியிருக்கிறார். அந்தப் பயன்படாத வழிகளில் ஒன்றை மதனகோபாலன் உப யோகித்து மிகுந்த கியாதியையும் திரவியத்தையும் அடைய முற் பட்டான். வெகுகாலம் வரைக்கும் தெரியாது மறைந்திருந்த அவன் ஒரு சீனதேசப் பிரபுவைப்போல் பெக்கிங் நகரத்தில் ஒரு பெரிய பங்களாவை வாங்கிக்கொண்டு வசித்திருந்தான். இவன் மறைந்திருந்த காலத்தில் சீனக் கிராமங்களில் சீனர்களுடன் வசி த்து அவர்களின் பாஷையைக் கசடறக் கற்று மிக்க வணக்கத்தையு மடைந்தான். பிறகு ஒரு பௌத்த ஸந்நியாசியாகத் திருந்தி ஜால வித்தைகளைக் கற்றான். சைன தேசத்துச் சில குருக்கள் செய்வது போல் மனோ நிக்ரஹத்தால் வெகு நாள் உயிர்போனவன்போல் இருக்கும் ஸக்தியை யடைந்தான். அப்படி மூச்சடக்கி யிருக்குங் காலத்தில், நாடியாவது, ஹிருதயத்தின் அடியையாவது, மூச்சாவது கண்டுபிடிப்பது வெகு கஷ்டம். தேகம் ஜில்லிட்டுத் தடிபோல் ஆகி விடுகிறது. வைத்தியர்கள் பார்த்தால் அவன் இறந்தானென்று ஸந் தேகம் இல்லாமற் சொல்லிவிடுவார்கள். சீனதேசத்து மனிதர்கள் செய்வதுபோலவே மதனகோபாலனும் அந்தத் தந்திரத்தில் தேர் ந்தவனானான். அதன்பிறகு சில நாட்களுக்கெல்லாம் பௌத்த மடத்திலிருந்தும் வெளிப்பட்டு, அமெரிக்கா தேசத்திலிருக்கும் ஸான்பிரான்ஸிஸ்கோ என்னும் ஊரை நோக்கிக் கப்பல் மார்க்க மாய்ப் புறப்பட்டுவிட்டான். அவன் யதேஷ்டமாய்ப் பணமுள்ள ஒரு பிரபு போல் நடித்து, அங்கு ஒரு பாதி சீனதேசப் பெண் ணான மேரி என்பவளை விவாகம் செய்துகொண்டான். அந்தப் பெண் பிரான்ஸிஸ்கோவில் பிறந்ததால் அவள் அமெரிக்கா தேசத்து ஜனங்களில் ஒருத்தியானாள். அதன்பிறகு அவர்கள் இருவரும் அதைவிட்டு சிகாகோவுக்குப் போயினர். அங்கே அவன் பதினாயிரம் பவுன்களுக்கு லைப் இன்ஷியூரென்ஸ் செய்தான். அதாவது அவன் இறந்துவிட்டால் அவனது மனைவிக்கு மேற் கண்ட தொகையை லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனியார் கொடு க்கவேண்டு மென்று ஒப்பந்தம் செய்துகொள்வதாகும். ஒப்பந் தத் தொகையின் அளவுக் கேற்ப மாதா மாதம் ஒரு குறித்த தொகை மேற்கண்ட கம்பெனிக்குச் செலுத்திவர வேண்டும். சிறி தே செலுத்தி இறந்து விடினும் கம்பெனியார் முழுத்தொகையும் கொடுக்கவேண்டியதே. இவ்வித ஒப்பந்தம் செய்ததற்குப் பின்பு சில மாதங்கள் கழிந்தன. அவனுக்கு ஜுரம் தோன்றித் தேக

---

177. ஊரார் பேசுவார் பலவாறாக. தாமேபட்டு அனுபவிப்பாரன்றோ அறிவார் தனியாக.

அசௌக்கியம் ஏற்பட்டது. வைத்தியர்கள் வந்து பார்த்தும் பயன் படாமல் சில நாளைக்குப் பிறகு அவன் இறந்தான். அவன் தேகத்தை ஓர் பெட்டியில் வைத்து அடக்கம் செய்ததையும் வைத்தியர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவனுடைய பார்யையான அந்த சீனப் பெண் விமர்சையாய் அவனுடைய கிரியைகளை நடத்தி முடித்ததும் இன்ஷியூரென்ஸ் பணங்களைப் பெற்றுக்கொண்டு சிகாகோவை விட்டுப் போயினள்.

இந்த ஸம்பவம் நடந்ததற்குப் பின்பே, மதனகோபாலன் சீனாவில் பெரியப் பிரபுவாக அந்த சீனப் பெண்ணுடன் விளங்கிக்கொண்டிருந்தான். சீனாவிலிருந்த லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனியொன்றில் எண்ணாயிரம் பவுனுக்குத் தன் பெயரை இன்ஷியூரென்ஸ் செய்துகொண்டான். சில மாதங்கட்குப் பிறகு கடுஞ் சுரத்தால் இறந்துபோக, பழய வழக்கப்படி அடக்கஞ் செய்யப்பட, அவன் மனைவியான சீனப்பெண்ணும் அந்த எண்ணாயிரம் பவுன்களையும் இன்ஷியூரென்ஸ் கம்பெனியாரிடமிருந்து பெற்றுக்கொண்டு நியூயார்க்கு நகரத்துக்குச் சென்றுவிட்டாள்.

சில காலத்திற் கெல்லாம் மிஸ்டர் வார்ட் என்னும் ஒருவர் நியூயார்க்கில் லைப் இன்ஷியூரென்ஸ் செய்துகொண்டு அதே மாதிரி இறந்தார். வேறு அநேகம் மரணங்கள் அமெரிக்காவில் இதே மாதிரி நடக்கவே, அந்தந்த இன்ஷியூரென்ஸ் கம்பேனிக்காரர்கள் ஸந்தேஹித்து, எல்லா கேஸ்களிலும் பணம் வாங்குபவள் ஒரு சீனப்பெண்பிள்ளையாகவே யிருக்கக்கண்டபடியால், முதலில் அவள் பேரில் ஸந்தேகப்பட்டார்கள். அவளே புருஷர்களை விஷம் வைத்துக்கொன்று விடுகிறளோ வென்று விசாரித்தார்கள். பிறகு அந்த இறந்தவர்கள் புதைத்து வைத்த இடங்களைத் தோண்டிப் பார்க்கையில், அவர்களை யடக்கம் செய்திருந்த பெட்டிக்குள் சவத்தைக் காணமல் கற்கள் அடங்கிய சாக்குகளால் நிறப்பப்பட்டிருப்பதைக் கண்டார்கள். இந்த மோசத்திற்குக் காரணங்களை யோசிக்கக் கம்பெனிக்காரர்களுக்கு மிக்க ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. உடனே அந்த சீனப்பெண்ணை அவள் ஏறிச்சென்ற கப்பலிலேயே சிறை செய்துவிட்டனர். அவளிடம் ߵ-பவுன்கள் மட்டுமே இருந்தன. வேறு ஒரு பைசாகூட அவளிடம் இல்லை. அவ்வளவு பணமும் வெளி நாட்டுக்குச் சிறுகச் சிறுக அனுப்பி விடப்பட்டதாகத் தெரிந்தது. கடைசியாக அவளை மிகவும் தொந்தரை செய்து கேட்டபோது, மதன கோபாலனின் பூர்வ நடவடிக்கைகளும் விருத்தாந்தங்களும் வெளிப்பட்டன. பிறகு இதுவரை காணப்படாத அந்த மனிதனே—இறந்துபோனது

178. தனக்கு வராத சொத்து அழிந்து போகட்டுமென்று எண்ணுவார் சிலர். என் அத்தனை ஆத்திரமோ?

போல் பாசாங்கு செய்யும் வித்தையால் டாக்டர்களை ஏமாற்றி மோசங்கள் செய்திருக்கிறனென்றும் ஏற்பட்டது.

இந்த ஸம்பவங்கட்குப் பிறகு சீனப்பெண் எப்படியோ தப்பித்துக்கொண்டு இந்தியாவுக்கு வந்துவிட்டாள். மதனகோபாலரும் இராஜதானியின் தலைமை நகரத்தில் அவளுடன், அவளுக்கும் தனக்கும் பிறந்த குமாரனுடன் ஆடம்பரமாய் வாழ்ந்தார்.

இவர்கள் வீட்டிற்கே ஜெகநாதர் பங்கஜாவுடன் குடியேறினர். தான் திருடி அசல் வீடு நம்பாள் என்பது பழமொழி. தாம் கெட்டதுபோலவே மற்றவரும் கற்பு குலைந்திருப்பர் என்று சில தீய நடத்தை யுடைய பெண்கள் கருதுவது வழக்கம். அவ்விதமே மதனகோபாலரும் ஜெகநாதரைக் குறித்தும், அவரது தனித்த ஏகாங்கியான வாழ்க்கையைக் குறித்தும் பலநாள் சிந்தனை செய்தவாறிருந்தார். தம்மைப் போலவே ஏதோ பெருங் குற்றங்கள் செய்து இங்கு ஜெகநாதர் மறைந்து வசிக்கின்றரென்றும் கருதினர். ஆகவே பங்கஜாவைத் தமக்கு சீனப்பெண்ணினிடமாகப் பிறந்த குமாரனுக்குக் கொடுத்து விவாகத்தை நடத்துவிக்கத் தீர்மானித்திருந்தார். இந்த சமயத்தில் ராமதாஸன் அங்கு வந்து ஸந்தித்துக் கொள்ளவே காரியங்கள் வேறு வழியில் திரும்பிவிட்டன.

ராமதாஸன் தலைமை நகருக்கு வந்தபோது அவனுக்கு நகர விநோதங்களைக் காண்பிக்கத் துணையாய்ச்சென்று திரிந்தவர்களுள் மதனகோபாலரின் குமாரனை சௌந்தரராஜனும் ஒருவனவன். அவன் ஸதா ஸ்திரீலோலன். மிகு கபடன். பிறரிடம் வாங்கிய பணத்தைத் திருப்பித்தந்து அறியான். தனது தந்தைக்குத் தெரியாது வேண்டிய ரூபாய்களை எடுத்துச் சென்று மனம் போல் செலவிடுவான். இவ்வாறாக, ஒரு நாட்காலையில் மதனகோபாலரின் பெட்டிகளைப் பணத்திற்காகச் சோதித்து வருகையில் ராமதாஸன் அங்கு திடீரென்று வந்தான். வந்த சமயம் ராமதாஸன் பார்வைக்கு ஒரு பொட்டகிராப் புஸ்தகம் அகப்பட, அதன் முதற்பக்கத்தில் 'உலகமறியாத ரகசியம்' என்று எழுதப்பட்டிருந்தது. அதனை ரகசியமாய் எடுத்துக்கொண்டு ராமதாஸன் வெளியில் வந்து ஓரிடத்தில் பத்திரப்படுத்திவிட்டு, மீண்டும் சௌந்தரராஜனிடம் சென்றான். அதே சமயம் மதனகோபாலர் அங்கு வந்துசேர்ந்தார். அவரது காலடியோசையைக் கேட்டதும் சௌந்தரராஜன் வெகு பக்குவமாகப் பெட்டியை மூடி விட்டு அப்பெட்டிக்குப் பின் பக்கம் பதுங்கி மறைந்துவிட்டான். மதனகோபாலர் தம்அறையின் வாயிற்படிக்கு வெளியில் ஒரு காலும், உள் ஒரு காலுமாக ராமதாஸன் நிற்பதை நோக்கி ஸம்சயித்துச் சினக்குறிப்புடன் நின்றார்.

---

179. "நான் வீட்டிலே இல்லாளாக—இல்லற வாழ்வும் பேறுகளும் இல்லாளாக—நின்றேன்."

ராமதாஸன் பிறகு அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டான். அன்றிரவு ராமதாஸன் தான் எடுத்து வந்த புஸ்தகத்தைச் சோதிக்கையில் மதனகோபாலரின் உருவமாகப் பல படங்கள் பலவிதமான ஜாதி பேதங்களுடன் எடுக்கப்பட்டும், அதன் கீழ்ப் பல விதமான பெயர்கள் கொடுக்கப்பட்டும் இருந்தன. ராமதாஸனுக்கு ஸம்சயம் அதிகரித்து, மதனகோபாலர் ஒரு பெருங்கள்வனா யிருக்கவேண்டுமென மதித்தான். அப்புஸ்தகத்தை ரகசியமாகவே போலீஸாருக்கு அனுப்பி விட்டான். போலீஸ் அதிகாரிகட்கு இப்புஸ்தகம் கிடைக்கவே, வெகு காலத்திற்கு முன்பு பத்திரிகைகளில் வந்து பழமைப்பட்டுக் கண்டுபிடிக்கப் படாமல் மறைந்து போன கேஸ் ஞாபகத்திற்கு வந்தது. தங்களுக்குப் போட்டோ புஸ்தகம் அனுப்பியது எவரென்று கவனித்ததில் ராமதாஸ் என்று மட்டும் பெயர் குறிக்கப்பட்டு விலாஸம் ஏதும் காணப்படவில்லை. கடைசியில் அவர்கள் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டு மதனகோபாலர் என்பவருக்கே அவ்வுருவம் பொருத்தமுள்ளது என்று கண்டுகொண்டு அவர்மீது கண்ணோட்டம் வைத்தனர். மிகப் பெரிய மனிதராதலின் உடனே கைதுசெய்யப் படவில்லை. போலீஸார் தன்னைக் கவனிப்பதைக் கண்டு மதனகோபாலரும் வெளியூரில் மறைந்திருந்தார். பின்பு கலவரம் ஏதுமில்லை யென்று நினைத்தவராய்த் தலைமை இராஜதானிக்கு வந்து, அன்றுமாலையில் ஜெகநாதரைக் காண அவரது இல்லம் சேர்ந்தார். இவர் ஊர் வந்து விட்டதைப் போலீஸார் உணர்ந்துகொண்டு மோஹனவிலாஸ மாளிகையிலேயே மதனகோபாலரைக் கைது செய்தனர். இவர் கைதியானதை யுணர்ந்ததும் இவரது மனைவியான சினப்பெண் இவாது வீட்டுமேல் மாடியில் தற்கொலை புரிந்து கொண்டாள். கேஸ் வெகு விரிவாக நடைபெற்றது. மதனகோபாலர் தாம் மோசமாய்த் தேடிய திரவியங்களை, மோசமே புரியும் மோஹனங்கிகளுக்கு ஏராளமாய் வழங்கி மோகனவாழ்வில் செலவிட்டு விட்டாரெனத் தெரிந்தது. அர்பத்நட்கம்பேனி முழுகியபொழுது இவரது எட்டு லக்ஷம் ரூபாயும் போய்விட்டதாகக் கணக்குகளால் தெரிந்தன. தற்போது பல பாங்குகளிலும் இடப்பட்டும், கைவசம் ரொக்கமாகவும் கூடிய தொகை லக்ஷத்து நாற்பதினாயிரம் போல் இருப்பதாகத் தெரிந்தது. அதனைக் கவர்ன்மெண்டார் கைப்பற்றிக்கொண்டனர். மதனகோபாலருக்கு ஏழு வருடக்கடின சிறைக்குத் தீர்ப்பாயது. அதைக் கேட்டதும் நடுங்கினர். இனி அவர் இறந்ததாய்ப் பாசாங்குசெய்யும் பக்ஷத்தில் அவரது சரீரத்தில் நாலைந்து இடங்களில் பழுக்கக் காய்ச்சிய கம்பிகளால் சூடு இடப்பட்டபின்னரே,

---

180. சிலரது ஆறுதல் வசனங்கள்—மரமேறி விழுந்தவனைக் கிடா ஏறி மிதிப்பது போலிருக்கும்.

இரண்டு தினங்கள் பொறுத்துத் தேகம் அழுகிய நாற்றம் தோன்றிய பின்பே, வெகு பாதுகாப்பான இடத்தில் புதைத்து, அந்த இடத்திற்குக் காவலும் இடப்படவேண்டு மென்று நீதியதிபர் தமது தீர்ப்பில் கண்டிருந்தார்.

இவ்வளவும் நிகழ்ந்தேறிய பின்னர், ஜெகநாதர் தமது தந்தையார் மதனகோபாலரால் மோசம்போன முன் விவரங்களைப் பூர்வ ஆதாரவுகளுடன் நீதிஸ்தலத்தில் விண்ணப்பித்துக் கொண்டார். மதனகோபாலரால் மோசம்போன லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளுக்குப் பாகித்துக் கொடுப்பதற்காகவென்று ஏற்பட்ட விகிதத்தில் சற்று அதிகமாகவே ஜெகநாதருக்கு முப்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும்படி தீர்ப்பாயிற்று. இவ்விஷயத்தை வெளிக்குக் கொண்டு வந்த ராமதாஸனுக்குக் கவர்ன்மெண்டார் மூவாயிரம் ரூபாய் ஸன்மானித்து, மதனகோபாலரின் ஏவுதலால் அவன் சிறை புக நேர்ந்ததையும் நிவர்த்திசெய்து பரிசுத்தவானாக்கினர். மதனகோபாலரின் குமாரனை சௌந்தர ராஜனுக்கு ஜெகநாதர் இரண்டாயிரம் ரூபாய்கொடுத்துப் புத்திசாலித்தனமாக ஜீவித்துக் கொள்ளும்படி கூறி யனுப்பி விட்டார். அவன் மதனகோபாலரின் பூர்வ பந்துக்களிடம் போய்ச் சேர்ந்தான். ஜெகநாதர் தமக்குக் கிடைத்த முப்பதினாயிரத்தில் இரண்டாயிரம் சௌந்தரராஜனுக்குப் போகப் பாக்கி இருபத்தெண்ணாயிரம் ரூபாயையும் ராமதாஸனுக்குக் கொடுத்துவிட்டார். அவனது பெற்றோர்கள் ஜெகநாதரின் உதாரத்வத்தைக் கண்டு, சுயநலமே மலிந்த இந்நாளில் இத்தகைய புனித உருவமும் உண்டோவென வியப்பெய்தி அடிபணிந்து போற்றினர். பங்கஜாவுக்கும் இராமதாஸனுக்கும் விவாகதினம் நிச்சயமாகி இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. அனைவரும் ஆநந்தகரமாக நாட்களைப் போக்கிவந்தனர். நன்மனத்தினர் எங்கும் நன்மையையே காணப்பெறுவர். வஞ்சக மனத்தினர் இறுதியில் தம்மையே வஞ்சித்துக் கொண்டு, செய்தொழில் சுருங்கி, மதி குறைந்து, மாண்பு ஒழிந்து மாள்வர். மண்ணோடு மண்ணாகி மறைவர். மதனகோபாலரின் வஞ்சகப்பெருமை யனைத்தும் ஒரு நிமிஷ காலத்தில் தானே தேய்ந்து சாய்ந்தது. உள்ளத்தில் ஸத்தியமும் தயையும் அன்புமில்லாது போலிப்பெருமை பாராட்டிக் கொள்தலால் எத்துணைக் காலத்திற்குத்தான் உலகை மயக்க முடியும்? வீண் பெருமைப் பூண் புகழாற் காண் புதுமை என்னே?

"ருசிகண்ட பூனை உரியைத் தாவும்" என்னும் பழமொழிப்படி கிரமமாகவோ அக்கிரமமாகவோ பொருளை ஸம்பாதிக்கும். வழியையறிந்த மனிதர்கள் அதைச் சுலபத்தில் விடமாட்டார்கள். கிரமமான

---

181. நீங்கள் காரியத்தில் முடிக்கவேண்டும். சும்மா ஆசையை நீளத்தில் விடுகிறதில் பிரயோஜனமில்லை.

வழியானால் எவ்வித பாதகமுமில்லை. கிரமத்தவறான வழியிற் சென்று திரவியத்தை ஸம்பாதிப்பது மட்டும் என்றைக்கேனும் ஒரு தினத்திற்குப் பெருங்கேட்டை விளைக்கும். அக்கிரம வழியில் செல்வோர்க்கு எப்போதும் ஈசன் கிருபை செய்வார் என்பது பிசகு. ஒரு ஸமயம் அக்கிரமிகள் ஜெயமடைவது மற்றொரு ஸமயம் நாசமடைவதற்குக் காரணமேயன்றி வேறில்லை. சில ஆடுகளைப் பலி யிடுமுன் ஆகாராதிகள் போட்டுக் கொழுப்பேற்றுவது வழக்கம். அதுபோல், பகவானும் மகா பாபிகளைத் தண்டிக்கு முன் அவர்களுடைய அக்கிரம காரியங்களுக்கு ஸகாயம் செய்வது போல் தோற்றம் காண்பிப்பது ஸகஜம் போலும்.

அத்தியாயம்—11.

ஜெகநாதரின் பூர்வ காதல்.

பங்கஜாவுக்கும் ராமதாஸனுக்கும், ருத்ரோத்காரி வருஷம் சித்திரை மாதம் 17-ம் தேதிக்குச் சரியான 29—4—1923ல் ஆதிவாரம், சுக்கில பக்ஷம், சதுர்தசி, அஸ்த நக்ஷத்திரமும் சித்தியோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7½ நாழிகைக்கு மேல் 13½ நாழிகைக்குள்ளாக மிதுன லக்கினத்தில் விவாக முகூர்த்தம் நடத்துவதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது. விவாகத்திற்கு முன் தினமாகிய சனிக்கிழமையன்று ஒரு மஹா சபை கூடிற்று. ஜெகநாதரின் மாமனாரான கோபன்னாவும் வந்திருந்தார். டாக்டர் தாயுமான் தமது புன்னகை ததும்பிய வதனத்தோடும் கம்பீரநாயகமாய் விளங்கினார். ஜகநாதர் பங்கஜாவை யழைத்துக்கொண்டு சபையின் மத்தியில் வந்துநின்று பின்வருமாறு கூறினார்:—

* * * * *

கண்யர்காள்!

'ஆகித்தந்தை யனைவர்க்கு மொருவனைப் கூறப்படும் அவ்வுயர் முறையதனால், எல்லா உயிரும் என் ஸகோதரமென உல்லாஸத்தோடும் உரைக்கும் இயல்பினேன்.' எங்கும் எவ்விடத்தும் அன்பு ஒன்றையே காண ஆவலுறும் தன்மையினேன். அவ்வன்புக்கே முடி தாழ்த்துவதல்லால், மற்ற எக்காலத்தும் எவர்க்கும் எதற்கும் வணங்காக் கொள்கையினேன். நெஞ்சினில் வஞ்சகச்

---

182. வறுமை தன் அன்பனின் விவாகத்தைக் கூடச்சென்று பார்க்காதபடி செய்து விடுகிறது.

சிந்தை யோங்கினரிடத்து அக்கணமே விலகிவிடும் குணத்தினேன். எவர்க்கும் எத்தீங்கும் இழைத்தறியேன். இன்னல் நினைந்தறியேன். இறும்பூது என்றுமே என் வாணாளில் கொண்டிலேன். காதல் ரஸம் கண்டதன்றிப் பருகியறியேன். அதன் சுவை தெரியேன். உள்ள நாளெல்லாம் சிறுமைக்கே இடனாயினேன். காதலித்த நங்கையையும் பிரிந்தேன். செல்வத்தில் விளங்கிய என் தந்தையாரின் செல்வமெல்லாம், மதனகோபாலனின் சூழ்ச்சியால் ஒழிந்திட அவர் வறுமையானார். அத்தரித்திர வாழ்க்கையில் என் மாமனின் குமாரத்தியை எனக்குக் கேட்டனர் என் பிதா. எனக்கு எவ்விதச் செல்வமும் இல்லையென்றும், தங்குதற்கே இடமற்ற அநாதையெனவும் புகன்றார் என் மாமனார். இவ்வனாதைக்குத் தன் குமாரத்தியைத் தருவது எங்ஙனம் எனறார். என்றவருக்கு நான்—அவரிடத்தில் வெகுகாலத்திற்குமுன் கொடுத்துவைத்துள்ள என் மாதாவின் ஆபரணங்களைக் கூறினேன். பவுன் பத்து ரூபாயாக இருந்தநாளில் அந்த நகைகள் ஏழாயிரம் ரூபா மதிப்புடையதாதலின், இப்போது பவுன்—பதினைந்து ரூபாயான பின், இன்னும் அதன் பெறுமானம் அதிக விலை யுடையதாகுமெனப் புகன்றேன். அத்துணைப் பூஷணங்கள் இருக்கையில் அனாதை என்பது எங்ஙனம் என்றேன். கொதித்தது கோபம் மாமனாருக்கு. மிஞ்சினார். என் புத்திரியைத் தரேன் என்றுமே இவனுக்கு எனச் சபதங்கள் ஓங்கினார். பேதைச் சிறுவனின் சொற்களைப் பொருட் படுத்தலாமோ, மறந்தொழிக அதனை—யெனக் கெஞ்சினார் என் பிதா. செல்வச் செருக்கில் உறவுச் சீர் கருதிடாத கபோதி மாமனாருக்கு என் பிதாவின் நயவசனங்கள் கண்ணிய மொழிகளாகச் செவியில் ஏறுமோ? மாமனார் பிடிவாதம் அதிகமே கொண்டார். வாக்குவாதம் வரையறையின்றி வளர்ந்தது. முடிவில் எனக்கு என் மாமனின் குமார்த்தி இல்லையெனவே தீர்ந்தது. என் மாதாவின் பூஷணங்களும் தருவதில்லை யெனச் சாற்றித் தூற்றினார். துவேசம் பெருகியது. ஆறுதலுக்கு வகையொன்றுங் காணேன். தேறுதலுக்குத் தெளிவு ஏதுமே தென்படவில்லை. இச்சிறுமை படவோ பிறந்தேன்—இருந்தேன்—என் செய்கேன் பாவியேன்! எங்ஙனம் என் காதலியை மறப்பதோ? அதனினும் உயிர் துறப்பதோ சுலபம். சின்னஞ் சிறு போதினில் சிரித்துச் சிரித்துச் சிந்தை மகிழ்ந்து கலந்து விளையாடிய காலந்தனில் மாமனின் புத்திரியும் நானும் ஒரு சபதம் கொண்டோம். இருவரும் ஸதிபதிகளாவதென்று சத்தியங்கள் செய்துகொண்டோம். இப்போது இருவரும் ஒன்றாய் உள்ளோம்; ஓரிடத்தில்தானே வசிக்கின்றோம்; உண்ணுகையும் உறங்குகையும் யாவும் ஒன்றாகவேதான்; கடைசிநாள் வரையும் இருவருக்கும் ஓர் இல்லமே யாக,

183. ஒரு நகையை அடகுவைத்துப் பணம் வாங்க நினைக்கையில், அது காணாமற் போயின் எத்தனை கஷ்டம்.

ஒரு கைக்கு மற்றொரு கை துணையாக—ஈசனருள் விதித்திடவேண்டும். நமக்குள் பிரிவேயின்றி, இன்பமே மிகுந்து, அன்பே பொங்கி ஆனந்த வாழ்வில் அமருகை எத்துணையதோர் மேன்மை? நாம் காதல் சிறக்க, கண்ணியம் சிறக்க, கருத்துகள் சிறக்க, கனம் ஓங்கி வாழ்தல் எத்துணைப் பெரும்பாக்கியம்! முயற்சியோடும் திடசித்தமாய் உறுதி மேற்கொண்டு நடத்தும் காரியத்திற்குக் கடவுளின் அருள் இயற்கையில்தானே சுரக்கும். அது சுரந்திடுங் காலை பிறந்திடும் மணவேளை. பறந்துவிடும் ஒருங்கே நம் துன்பங்கள் யாவும். சிறந்திடுவோம் அருங்காதல் தவம் வளர்த்து வாழ்க்கையில் நாம். இங்ஙனமாகப் பல நாட்கள் நாங்கள் இருவரும் பேசிப் பேசி நேசித்து நின்றோம். அவையெல்லாம் இன்று வீண்போயின. சிறு சிறு ஆசைகளோடும் பல பல பகுதிகள் கொண்டு காதல் நிறம்பிய யௌவன நெஞ்சம் இப்பேரிடியை ஏற்று நிற்றல் எவ்வாறு? வாழ்க்கையோ முறிந்துபட்டது. இருண்டன என் கண்கள். உலகம் எங்கணும் இருட்படலம் கவ்வியது போன்றும் தோற்றியது. எதுவுமே இனி எனக்கு இவ்வுலகில் இல்லையென ஆனது. உயிர் சோர்ந்து, உடலம் சுருங்கி, உள்ளம் ஒடுங்கி, உட்புகுந்த கருத்துகளெல்லாம் வாடித் தவித்தேன். பின் வெற்றுடம்புடன் என் பிதாவின் இல்லம் சேர்ந்தேன். தேறுதல் உரைத்தார் என் தந்தை. வேறிடத்தில் பேசி மணம் செய்விப்பதாய்க் கூறினர். மறுத்தனன் அதனை நான். என் தந்தாய்! என் அன்னையிடத்துத் தாங்கள் கொண்ட காதல் எத்துணை ஆழமுடையது? அதனாலன்றோ தாங்கள் அவ்வம்மைக்குப் பின் வேறு மணம் செய்ய மறுத்து விட்டீர்கள். ஏக பத்தினீவிரதமே கொண்டீர்கள். இன்னும் தாங்கள் என் அன்னையை மறக்கவில்லை இந்நிலை பற்றிய தாங்கள்—காதலுறுதி புணர்த்திய தாங்கள்—என் காதலின் உறுதிக்கும் கௌரவம் கடாக்ஷித்திடவேண்டும். வேறு எவரையுமே நாடேன் இனி. இதுஎன் அன்னைமீது ஆணையாக—என்றேன். என்ன செய்வார் என் பிதா? என் அன்னை விருப்பின் இவ்விதம் ஆமோ எனக்கலங்கினர். பெண் கண் மூடியதும் பெண்ணைக் கொண்டவர்கள் பெண் தந்தோரை மறப்பது ஒருவிதமாக, இனி, பெண் மரித்ததும் அப் பெண்ணின் தாய்வீட்டார் பெண்ணைக் கொண்டோரையும் மறந்து ஒதுக்குவது மற்றொன்றாகவும் உலக அனுபவத்தில் இருந்துவருகின்றது. அவ்வகையில் தன் மனைவி மறைந்ததும், அம்மனைவியின் உறவினரும் சம்மை அலக்ஷியமாய் ஒதுக்கி மறந்தகாயினரா எனச் சிந்தித்து என் பிதா மிக மிக நொந்தார். என் காதல் உறுதியும் நோக்கி, கவலை மிகுந்தார்.

---

184. பணத்திற்கே மதிப்பு உணர்த்தும் இடத்தில் அன்பு காட்டி மதிப்பு பெற முடியாது. உலகம் அப்படி.

☞ இத்துடன் வரும் புது வருட வி. பி-களை அன்புடன் உடனே ஒப்புக்கொள்ள வேண்டுகிறோம்.

பிரஜாநுகூலன்.

அநுபவ—விநோத-நீதிகள் நிறைந்த மாதப் பத்திரிகை.
(ஸ்ரீ ஆதம். N. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் ஆதரவையில் பிரசுரம்.)

கமலம்-19 | திரிச்சி: ஜூன்மீ 1923 | இதழ்-1

'பிரஜாநுகூல'னின் 19-வது வருடம்.

கடவுளின் கிருபையாலும், நமது அன்பர்களின் ஆசியாலும் நமது இனிய குழந்தையான "பிரஜாநுகூலன்" தனது பத்தொன்பதாவது பிராயத்தைப் பெற்றுள்ளான். அவனை ஆர்வத்துடனும் ஆதரித்து வரும் கண்ணிய சிரேஷ்டர்கள் அனைவருக்கும் நமது வந்தனமும் வாழ்த்துதலும் வழங்குகின்றோம். "பிரஜாநுகூலன்" பத்திரிகை சென்ற பதினெட்டு வருடங்களாகத் தமிழ் நாடெங்கணும் உலவிப் புகழ் வாய்ந்துளது. மிகச் சிறியதான தனது அங்கத்தைக் கொண்டு தனது ஸக்திக்கு இயன்றவரையில் தமிழ் மக்களிடத்திலே இனிய தொண்டு புரிந்து வந்துளது. உலகத்தின் இயற்கைகளையும், ஆழ்ந்த ரகசியங்களையும், அநுபவ ஞானங்களையும் ஒரு சேரத் திரட்டிக் கொடுப்பதே இப்பத்திரிகையின் நோக்கம். இக்கருத்திற்கிசைய இப்பத்திரிகையில் பிரசுரமாகிப் புஸ்தக உருக்கொண்டெழுந்த நூல்கள் பலவாகும். இத்துணைக்கும் நமது அன்பர்கள் இப்பத்திரிகையை இடைவிடாது ஆதரித்துவரும் ஊக்கமே காரணம்.

இப்பத்தொன்பதாவது வருடத்தில் "பிரஜாநுகூல"னை இன்னும் இனியதாகவும் சிறப்பாகவும் நடத்தத் தீர்மானித்துள்ளோம். அதன் பக்கங்கள் 32-க்குமேலும் உயருமாறு ஆகஸ்டு மாதமுதல் அதிகப்படுத்தப் பட்டுள்ளன. ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் ஒவ்வொரு புதிய துப்பறியும் நாவல்கள் தோன்றி அற்புதந் தரும். பிரேமமாலா இன்னும் ஸ்வாரஸ்யமாய்த் தொடர்ந்து பிரசுரமாகும். வழக்கம்போல் "பிரபஞ்சவிலாஸ"மும் நிறைந்து பரிமளிக்கும். இதுகாறும் வெளிவந்திராத "காதம்கடிதங்கள்" தேனினும் இனிய செந்தமிழ் நடையில் பல பக்கங்கள் கொண்டதாய்ப் பிரதி தடவையும் ஜ்வலிக்கும். சித்திரப்படங்களும் இனி சேர்க்கப்படும். "விகடமாமா"வும் இடையிடையே தோன்றுவார். உலகக் குறிப்புகளும் வரும். நமது ஸக்திக்கு இயன்றவரையில் இப்பத்திரிகையை இன்னும் விநோதமும் விசேஷமுமுடையதாய்ச் சிறப்பிக்க ஆவல் கொண்டுள்ளோம். நமது அன்பிற்கினிய கையொப்ப நேயர்கள் வழக்கம்போல் தங்களின் புதுவருட சந்தாவைச் செலுத்திப் "பிரஜாநுகூலன்" பத்திரிகையை என்றும் ஆதரித்து ஊக்கம் ஊட்டுமாறு வேண்டுகிறோம்.. அனைவருக்கும் மங்களம் உண்டாகுக.

பத்திராதிபர்.

பிரபஞ்ச விலாஸம்

1. வாழ்க்கை.—ஒருவரது பிரபஞ்ச வாழ்க்கையானது மற்றவர்களுக்குக் காம்பீர மயக்காகத் தான் தோற்றுகிறது. ஆனால் சுகநிலையும் கடனும் எக்கமுமோ ஆங்காங்கு ஒரே அளவாகவே இருக்கிறது.

2. அநாதை:—தெருவிற் செல்லும் ஒருவனைக் கேவல நோக்குடன் பார்க்கிறோம். ஆனால் அவனை நம்பிக்கொண்டு ஒரு பெரிய குடும்பம் அவன் வரவுக்குக் காத்திருக்கிறது.

3. அடங்கி விடுவான்:—சிலர் தமது பிள்ளைகள் ஊர் சுற்றுவதும், பணத்தைச் செலவழிப்பதுமா யிருந்தால், விவாகம் செய்து விட்டால் எல்லாம் அடங்கி விடுவானென்று விவாகம் செய்கிறார்கள். அப்பொழுது அவன் இன்னும் உல்லாஸ புருஷனாய்விடுகிறான்!

4. மாறுதல்:—நாம் நேசிக்குமுன் ஒருவனுக்கு விவாகமாகியிருப்பின் அந்த நண்பன் தனது நேச நிலையினின்றும் வழுவான். நேசித்த பின் அவனுக்கு விவாகமானால், விவாகத்திற்குப் பின்னர் அவனது நட்புச்சீர், அவனது மாறுதல் எவ்விதமாமோ?

5. கடவுளின் உதவி:—வேறு கதியில்லை யென்று ஒருவன் கண்கலங்கும் போது, அவன் நினையாத ஒருவரை அவனுக்கு உதவிசெய்யக் கடவுள் அனுப்புகிறார். அவர்கள் தங்களின் சொந்த கஷ்டங்களை மூடிக்கொண்டு அவனுக்கு உதவிசெய்ய வந்து விடுகிறார்கள். இது ஆச்சரியம்!

6. பணமும் மகவும் முக்கியம்:—எவ்வளவு கல்வி, சாமர்த்திய மிருப்பினும், அதிக வயதாகிவிடின் பயன் இல்லை. கைப்பொருளாவது ஸத்புத்திரனாவது இல்லாவிடில் அவர்கள் பாடு கஷ்டமே.

7. பந்துக்கள்:—தாங்கள் பெண் கொடுத்த—பெண் வாங்கின இடங்களுடன் மட்டும் ஒட்டிக்கொண்டு, மற்ற உறவினர்களை அன்னியர்கள் போல நினைக்கின்றனர்.

8. சச்சரவு:—பணத்தால் தாய்க்கும் மகனுக்கும் சச்சரவு. மனைவிக்கும் கணவனுக்கும் வாதம். இருவரும் மனமொத்த குடும்பம் உலகில் மேலான ஒரு பாக்கியம்.

9. இதுதானா சமயம்:—தலைப்பாகை தரித்து ஆபீஸுக்குச் செல்லும் சமயத்தில் ஏதாவது கேட்டுப் புருஷர்களுடன் சண்டையிட்டு முகம் கோணுவது சில பெண்கள் வழக்கம். அதற்கு வேறு சமயமில்லையா?

10. வழக்கம்:—ஒருவர் வழக்கமாய்ப் புசிக்கும் ஆகாரம் வாய்வு, பித்தம் எவ்வாறாலும் ஒரு கெடுதலும் விளைவதில்லை. மற்றவர்க்கோ—?

11. அனைவரையும் தழுவி நில்:—ஒரு குடும்பத்தில் ஒருவருடைய ஆதரவு பூரணமாயிருந்தால் மற்றவர்களை அலக்ஷியம் செய்வார் சிலர். ஒருக்கால் மிக்க பிரிய முள்ளவர்களும் கைவிடக் கூடுமாதலால் எல்லோருடைய தயவும் வேண்டியதே.

12. மனம் வருகிறதில்லை:—நம்வீட்டுக்கு வந்தவர்களை உபசரிக்க ஒருவரைக் கடைக்கு அனுப்பினால், நல்ல வஸ்துக்களாய் வாங்க அவர்களுக்கு மனம் வருகிறதில்லை. அவர்களைச் சேர்ந்தவர்களுக்கானால் வேறு மாதிரி.

காதற் பரிசு—முன்தொடர்ச்சி.

என் தந்தை.—உன் வார்த்தைகளின் தத்துவங்களைக் கவனிக்கையில், உன் மாதாவைத் துறந்த காலத்தில்,மறுவிவாகத்தை மறுத்து என்னில் துடிப்பை யுண்டாக்கிய புதிய ஸக்திகளின் வேகத்தை நீ நன்குணர்கின்று யென்று காண்கிறது. அபாயகரமான ஒரு வியாதியைப் போக்கத் திறமையற்றவன் என்று ஏற்பட்டுவிட்ட ஒரு வைத்தியனைப்போல் நான் இருக்கிறேன். ஒன்று, நான் உனக்கு வேறிடத்தில் மணம் செய்துவைக்க வேண்டும். அல்லது நீ கோரிய பெண்ணையே முடிக்க அதிகத் திறமை சம்பாதித்துக் கொள்ளவேண்டும். என் சாந்தத்தைச் சோதிக்கக் கூடிய தருணமிது. வாதத்திற்குப் பிரதிவாதம் உண்டு. பிடிவாதத்துக்கு மறுவாதம் ஏது? உன் மாமனிடத்து போக்கியப் பொறுப்பாவது அந்தரங்க சுத்தியாவது இல்லை. என் வார்த்தைகள் பாலைவனத்தில் போட்ட சத்தமாகிவிடாமல் தன்னுடைய போக்கைத் திருத்திக் கொள்வானென்று எண்ணினேன். ஆனால் நிகழ்ந்த விஷயங்கள் அவனுடைய கேவலமான சிறு புத்தியைக் காட்டுவனவா யிருக்கின்றன. என் செய்வது?

என் தந்தைக்கும் எனக்கும் இவ்வாறான சம்பாஷணைகள் நடந்துகொண்டிருக்கையில் கடிகாரமும் மணி பன்னிரண்டு அடித்தது. அத்தருணத்தில் ஒரு பெண்மணி ஓடிவந்து என் கால்களைப் பற்றிக்கொண்டு கதறினாள். அவளே என் காதலி. என் மாமனின் குமார்த்தி. அவளை அந்நேரத்திற் காணவும் திடுக்கிட்டுத் திகைத்தேன். என் தந்தை வியப்புடன் அச்சுந்தரியைத் தமது மடியில் உட்காரவைத்துக் கொண்டு,“அம்மா! நீ யாருடன் வந்தாய் என்று வினவினார்.

சுந்தரி.—என் தந்தையின் வாதங்கள் அனைத்தையும் கேட்டேன். தெரிந்தேன். என் மாமாவை விட்டொரு கணமும் நான் இரேன். என் மாமாவையே மணப்பேன். இல்லையேல் உயிர் துறப்பேன். எவ்விதத்தும் என்னை மாமாவுக்கே தரவேண்டும். நீங்கள் ஒப்பினால் இருக்கிறேன். மறுத்தால் நதியில் வீழ்ந்துக் கடவுள்பதம் சேர்கின்றேன். இந்த ஜென்மத்தில் இவ்வளவுதான் எனத் தீர்மானித்துக் கொள்கிறேன். யாவரும் உறங்கிய தருணம் நோக்கி ஓடி வந்துவிட்டேன். கவலை யுள்ளார்க்கு நித்திரை வருமோ? எவ்விதத்தும் என்னை ஏற்றருளல்வேண்டும். என்று கதறினாள்.

---

185. எவ்வளவு அன்பும் இன்பமும் நிறைந்த உலகமிது. கடவுளை வழிபட்டு நல்வழி நடப்போருக்கு எங்கும் இன்பமே.

என் தந்தை இவ்வுரை கேட்டுச் சுந்தரியின் கரங்களைக் கண்களில் ஒற்றியவராய் விம்மி விம்மி அழுதார். யானும் கண்ணீர் ஆறுய்ப் பெருக்கினேன்.

என் தந்தை.—என் இனிய குழந்தாய்! என் செல்வமே! என் கண்ணே! நீ இங்ஙனம் வீட்டைவிட்டு வருவது தகுமோ? இரவில் யுவதியான நீ தனித்து வந்ததை உலகம் என்னென்று கருதும்? லோகாபவாதம் பெரிதன்றோ? வீட்டுக் கடங்கியன்றோ, பெற்றோர்க்கு உட்பட்டன்றோ பெண்கள் இருத்தல் வேண்டும்? குழந்தாய் சாந்தப்படு. உன் கண்ணில் நீர் பெருகினால் என் கண்ணில் ரத்தம் பெருகும். அந்த ஒருத்தி—உன் அத்தை—ஜெகநாதனின் தாய்-இருந்தனளாகில்—இத்துணைக் கஷ்டங்கள் சேரா. பிரபஞ்சமே ஸ்திரீ ஸத்தியால் இயங்குகின்றது. அவள் போகவும், உறவு யாவும் போய், இருந்த அற்ப சொற்பமும் இன்று இல்லையென்றாயது என்று புலம்பினர்.

சுந்தரி.—யான் வீட்டை விட்டு எங்கு ஓடினேன்? என் மாமாவிடம்தானே வந்தேன். என்னைக் கற்பழிந்தவளென்றும் வேறெவ்விதமாகவாயினும் உலகம் தூற்றட்டும். அது எனக்கு சம்மதம். என்னை யங்கீகரிக்க என் மாமா இருக்கையில் உலகத்து அபிப்பிராயம் எனக்கு எதற்காக? இன்று புகழும் உலகம் நாளை காலை வாரித் தூற்றும். நாளைத் தூஷிக்கும் ஞாலம் இன்று ஏற்றிப் போற்றி புரிந்து துதி கொண்டாடும். உலகப் புகழ்ச்சியை நான் மதிக்கவில்லை. என் காதலையே மதிக்கின்றேன். காதலில் சத்தியம் கொண்டவர்கள் தெய்வத்தின் ஆணைக்கு மட்டும் அஞ்சுவர். உலகுக்கு அஞ்சார். என் மாமா! உனக்காக உயிரையும் கொடுக்கிற காதலி நான் இருக்கையில் என்னைவிட்டு வேறொருத்தியை நினைப்பது ஞாயமா? என்னைக் கொலை செய்துவிட்டு வேறொரு பெண்ணிடத்துக்குச் செல். அரிச்சந்திரனல் வெட்டுண்டுமடிய அந்த சந்திரமதி எத்துணையோ சந்தோஷ சித்தத்துடனு மிருந்தாள். அதைப் போலவே இப்பொழுதும் நான். காதலுற்ற பின் ஆயிரம் பிழை அக்காதலன் செய்திருப்பினும் அக்காதலி நினையாள். அதுவே உண்மைக் காதல். என் காதலைக் கலைத்துவிடாதே. என் உயிர் போய்விடும் என்று கதறினள்.

நான் என்ன விடை கூறுவது? சுந்தரியின் கரங்களைப் பற்றிக்கொண்டு அலறினேன்.

என் தந்தை.—என் கண்ணே! சிலருடைய ஜென்மம் வீண் பழிபாவத்திற்கெல்லாம் இடனாக்கி விடுகிறது. யாவரும் தூற்ற,

---

186. "எல்லாம் ஒன்று" என்று நீ எண்ணுவதனால் உண்டாகும் நன்மை "வேறு வேறு" என்று எண்ணுவதனால் உண்டாவதில்லை.

அவர்களோ களங்கமற்று நிற்க, பின் தூற்றிய உலகம் வெகுநாட் கழிந்து உண்மை தெளிகிறது. தற்போதைய என் நிலை இவ்விதமே. லக்ஷ்மீ தேவதையைப் போன்று ஒளிரும் நின்னை இருகரங்களாலும் ஏற்று என் இல்லத்தை யலங்கரிக்க எத்துணையோ அவா. உன்னையும் ஜெகநாதனையும் இணைபிரியாத் தம்பதிகளாகக் காண— அதைக் கண்டு, என் மனைவி பிரிந்த துயரத்தை ஆற்றிக்கொள்ள— இதுகாறும் எத்துணையோ தாகம் மிகுந்து காத்து நின்றேன். இன்று உன் தந்தை வேற்று மனிதரானார். மறுத்துவிட்டார். என் ஜீவியம் சீக்கிரம் தீர்ந்துவிடும். இனி ஒரு மாதத்திற்குமேல் நான் ஆவி தரிப்பது கஷ்டம். இத்தகையோன், என் செல்வமே! உனக்கென்ன உறுதியைக் கூறுவேன்? என்று சோர்ந்து கீழே விழுந்தார். மூர்ச்சித்தார்.

*　　*　　*　　*　　*

நான்.—என் பிரிய சுந்தரி! காதல் என்பது வெளியிடுதற்குச் சொற்கள் கிட்டாத மகா வேக மனோ மர்மங்களுள் ஒன்று. ஒரு வாழ்க்கையின் ஜீவஸக்தியே அதனுள் அடங்கி விடுகிறது. நிறைவேறிய காதலோ, பொங்கிய பால் மீண்டும் தன்னுள் அடங்கப் பெற்றுச் சுவை மிகுந்ததாகுந் தன்மைபோல், அதன் ஜீவஸக்தி ஓர் அளவுக்குட்பட்டதாகி ஸர்வஸக்தி தத்துவமும்கொண்டு கம்பீரமாய்ச் சோபிக்கின்றது. நிறைவேறாத காதலோ மனமுடைந்து வாழ்வுடைந்து தாழ்வடைந்து மாறுதல் மிகுந்து வினைசூழ்நாள் போல் ஆகிப் பொங்கிய பால் அனைத்தும் வெளியேறி வீணாவதுபோன்று பாழ்த்திடுந் தன்மையதாகும். மேலும், காதலித்த இடத்தில் அங்கும் காதலிருப்பினன்றோ காதல் சிறக்கும். ஒருவர் காதலிக்க, மற்றவர் மறுக்க, இதுவே பல இடத்தும் நிகழ்ச்சி. இருவரும் மனமொத்து ஒன்றான காதலுக்கோ நமக்கு நேர்ந்ததுபோல் பெரியோர் விரோதம் சூழ்கின்றது. கண்ணே! என்னைக் காதலித்துக் காத்தருள்க என்றேன் அந்த நாள் நின்னை. "என்னை யறியாதுண்டான ஆநந்தம்—அது என்னவாயிருக்கலாம்?—அதற்குத்தான் காதல் என்பதோ?"—என்று என் இதயங் குளிரப் பேசினாய் நீ. அத்தருணம் என் உள்ளத்திலே நினைவுகள் புதிது புதிதாய்க் கிளைத்தன. என் இரத்தத்திலே இளமை ஏற்பட்டது. அத்தியந்த உத்ஸாகத்துடனும் நின்றேன். அது அந்நாள் நிகழ்ச்சி. இன்றைக்கோ?—அது கனவு. என் செய்வேன் பாவி நான்?

*　　*　　*　　*　　*

இத்தருணத்தில் என் தந்தையும் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். சுந்தரியையும் என்னையும் தமது கண்களால் நோக்கினார்.

---

187. பேதம் என்கிற விதை உள்ளவரையில் உன்னை யறியாமலே நீ நிலைமையில், பக்ஷபாதமாய் நடத்தலில் இறங்கிவிடுவாய்.

இப்படியே இருவரையும் வைத்து நலுங்கிடக் கண்டு மகிழ்வேனே என்று ஆற்றாமையுடன் மொழிந்தார். தெருக்கதவு மூடப்பட்டிருக்கவில்லை. திறந்தபடியேதான் இருந்தது. இரவு மணியும் இரண்டு அடித்தது. அத்தருணத்தில் எனது மாமனாரும் பின்னும் சிலருமாக உட்புகுந்தனர். சுந்தரியை வீட்டில் காணாது எங்கும் தேடிவிட்டு இங்கு வந்ததாகத் தெரிந்தது. மாமனார் என்னை நோக்கி, "ஜெகநாதா! என்ன காரியம் செய்தனை? இவ்விதம் சுந்தரியை யழைத்து வந்தது சரியா?" என்று சீறினார். அதற்கு நான், "மாமா! என்னைத் தாங்கள் அன்புடன் வளர்த்தீர்கள். இந்த சரீரம் தங்களுடையது. நான் தரித்துள்ள வஸ்திரம் தங்களுடைய தானமாகும். தாங்கள் என்னிடத்து இப்பொழுது அன்பு மாறினும், என் பிராணனுள்ளளவும் தங்களிடத்து யான் கொண்டுள்ள பிரேம வாத்ஸல்யம் வேறுபடாது. தங்களின் ஆணையை மீறி நான் ஏதும் செய்யேன். என்னால் எவர்க்கும் ஒரு சிறு துன்பமும் அணுகிடவொண்ணாதென்பதே என் சித்தாந்தம். தங்கள் குமார்த்தியே வலிய வரினும் தங்களின் கருத்துக்கு விரோதமாக நான் அவளை ஏற்கேன். இது கடவுளறிய சத்தியம். தங்களின் புத்திரிகாரத்தினமே தான் தனித்து இவ்விரவில் இங்கு வந்தாள். அதற்குப் பிதா வருந்தி அது தகாத செய்கையெனக் கண்டித்தார். இவ்வளவில் தாங்களும் வந்து விட்டீர்கள். என் எல்லையின்னது தான் என்று உணராமலே என் மாதாவின் பூஷணங்களைப் பற்றிப் பேசி விட்ட என்னைக் கடிந்திடாது மன்னிப்பீர்களா? எவ்விதத்தும் என்னை க்ஷமித் தருளவேண்டும்". எனப் பாதங்களில் வீழ்ந்து வணங்கிப் பிரார்த்தித்தேன்.

என் தந்தை:—அப்பா! கோபன்னா! கோபம் வேண்டாம். உன் குமார்த்தி தானாகவே தான் வந்தாள். ஜெகநாதன் அவளை அழைத்து வரவில்லை. அவளது துணிகரத்தைக் கண்டித்து என் வியஸனம் உணர்த்தினேன். ஆயின் அவள் அதைப் பாராட்டவில்லை. சிறுபோது முதற்கொண்டு என் மடியிலேயே உறங்கி, என்னை அடித்தும், கிள்ளியும், கேலிகள் செய்தும் என்னுடன் விளையாடியும், நான் செல்லுமிடங்களிலெல்லாம் கூடத் திரிந்தும் இங்ஙனம் பழகிய கண்மணியாதலின் என் கோபத்திற்கு அவள் அஞ்சவில்லை. என்னையே அதிகாரம் செய்வதற்குப் பிறந்த தங்க விக்கிரகம் நான் கோபிப்பதை ஒரு பொருட்டாக் கருதுமா? எனக்குப் பயந்து நடக்குமா? என்னையும் ஒரு தோழிப் பெண்ணாகக் கருதிக்கொண்டு விளையாடுகிற கண்மணிக்கு என்னிடத்தில் எவ்வாறு புதிய மரியாதை யுண்டாகும்? நான் அவளுக்கு ஒரு பணியாள் போன்றும், கூலியாள் போன்றும் அடங்கி நடப்பவனாதலின், அவள் தனித்து வந்த

---

188. இவ்வுலகம் எல்லாம் உன்னுடைய அழியா உடம்பாகவும், நீ இவ்வுலகத்துக் கெல்லாம் அழியாத உயிராகவும் பார்.

தவறுதலை அதிகமாய்க் கண்டிக்க எனக்கு ஸக்தி ஏற்படவில்லை. நீயோ பெற்ற தந்தை, பாத்தியஸ்தன். உன் பிரியப்படி கண்டித்துக்கொள். ஸர்வ சுதந்தரத்துவமும் உனக்கு உண்டு. எங்களுக்கு என்ன உண்டு? நாங்கள் அநாதைகள். தெய்வம் விட்டவழி. இவ்வளவுடன் என் வமிஸம் பாழ். குலவிருத்தி பூர்த்தி பெற்றது. உன் தமக்கையின் குடும்பம் ஜெகநாதனுடன் ஒழிந்தது. அவனுக்கு இனி விவாகமில்லை. இத்துணைத் துற்கதியில் உன் தமக்கையின் குடும்பம் க்ஷீணித்து நாசமுற நாங்கள் உனக்குச் செய்த பிழை என்ன? ஏதோ சிறு பையன் அறியாது பதறித் தன் தாயின் நகைகளைப் பற்றிப் பேசிவிட்டனன். அவ்வளவே, அதற்குப் பொறுத்துக் கொள்ளக்கூடாதா? அவனே உன் பாதங்களில் வீழ்ந்து வணங்குகிறான். உனக்கு அவனிடத்து மனம் இளகவில்லையா? இத்துணைக் கடின சித்தம் கூடாது. தெய்வ சம்மதமாகாது. உன் தமக்கை இறக்கும்போது ஜெகநாதனுக்கு உன் குமாரத்தியைத் தருமாறு கூறி, அதுவே இறுதிவாக்காகக் கண்களை மூடினாள். அதையேனும் சிந்தித்துப் பார். பிறகு உன் பிரியம்போல் செய்க என்றார்.

சுந்தரி.—அப்பா! நானே தான் வந்தேன். மாமா என்னையழைத்து வரவில்லை. நான் தனித்து எப்படி வரலாமென்பீர்கள்? இவ்வுலகில் நான் தனித்தேதான் இருக்கின்றேன். தாயற்றபோதே சீர் அற்றது. உயிருடன் தாய் இருப்பினும் கூட, அந்த அன்னை வேற்று மனதாகித் தான் ஈன்ற மக்களையே விரோதித்து, அல்லது பழைய அன்பிலிருந்தும் விலகி, பிறரிடத்துக் கேவலமாகப் புறங்கூறத் துணிந்து அன்னிய நிலையில் திரும்பிவிடின்—அப்போதுங்கூட உயர் நலம், கீர்த்தி, மதிப்பு இவைகளும் கெட்டுவிடுகின்றன. அங்ஙனம் அந்த அன்னை மாறியதும் நம்தலைவிதியென்றே வெறுப்புடல் கொண்டு காலத்தை நொந்து கழிக்க நேர்கிறது. ஒரு பெண்ணுக்குத் தாயற்றுவிடின் இவ்வுலகில் அவள் தனித்த திக்கற்ற பேதை தான். எனவே தனித்த வாழ்விலுள்ள நான் தனித்து வந்தது பெரும்பிழையாகாது. என்னை வியபிசாரி என உலகம் ஒதுக்கித் தள்ளினும், என் மாமா என்னைச் சுமங்கலி வாழ்க்கையில் இருத்தித் தனது மனைவியாக ஏற்றுக்கொள்ள—நான் கிழவியாய் விட்டகாலத்துங்கூட—சம்மதிக்கக் காத்திருக்கிறானதால், உலகச் சொல்லைப் பற்றிய கவலை எனக்கில்லை. என் இஷ்டப்படி நீங்கள் என்னை விட்டால் ஆயிற்று, இல்லையாகில் தற்கொலை செய்து கொண்டுவிட்டு உங்களின் அதிகாரத்துக்குத் தப்பித்துக்கொள்ள—விடுதலை பெற—எனக்குத் தெரியும். பிராணனுடன் இருந்தால் தானே தந்தை கணவன் இவர்களின் அதிகாரம்? பிராணனை முடித்துக்கொண்டுவிட்

---

189. கடவுள் யார்? நம்மால் காணப்பட்ட இவ்வளவையும் கடந்தவர் கடவுள். அவரது இனிய குழந்தை நீ.

டால் நீங்கள் என்ன செய்யமுடியும்? பெற்றுவிட்டமட்டில் பூர்ண சுதந்தரத்தையும் கொண்டு விட்டதான தன்மையில் மகிழ்ந்து விடுகின்றதாங்கள்—தங்களைப்போல நானும் ஒரு மானிடப் பிறவிதான் என்றும், எனக்கும் சில விருப்பங்கள், எண்ணங்கள் தனித்து இருக்கலாமென்றும், அவற்றை உள்ளன்புடன் வினவி, என் கருத்துக்கு இசைந்தும், சில சில திருத்தி ஒழுங்கு படுத்தியும் செல்ல வேண்டுமென்றும் என் கருதவில்லையோ? இந்தப் புருஷ ராஜ்யத்தில் பெண்களுக்குத் திக்கில்லையா? பிதாவின் சொத்து சுதந்தரம் தான் பெண்ணுக்கு இல்லை. அவளை ஒருவனுக்கு விவாகம் செய்துகொடுத்ததுடன் அவளைப் பற்றிய விசாரம் தீர்ந்தொழிந்தது. சொத்து சுதந்தரம் இல்லாவிடினும், மற்ற சுதந்தரங்கள் கூடவா மண்ணாகி விட்டன? வீண் பிடிவாத சிந்தைவேண்டாம். மனம் இளகி சந்தோஷமான காரியத்தைச் சந்தோஷமாகச் செய்யுங்கள்—என்று வணங்கினாள்.

இவ்வளவுக்கும் என் மாமனார் ஏதுங் கூறினாரில்லை. மௌன நிலையிலேயே நின்றார். சிறிது நேரத்திற்குப் பின்னர் தாம் சென்று வருவதாகக் கூறிவிட்டுத் தம்முடன் வந்தவர்களுடன் புறப்பட்டுச் சென்றார். சுந்தரியை அவர் அழைத்துச் செல்லவில்லை. சுந்தரியும் அவருடன் போகவில்லை. என் பிதாவின் மீது சாய்ந்து கொண்டு ஒய்யாரமாகக் கால் நீட்டியவாறு இருந்தாள். வளர்த்தவர்களிடத்தில் வளர்ந்த மக்கள், மரியாதையின் தோற்றம் இன்னது என்று கருதாதவர்களாகி விடுவதில், அவர்கள் எது செய்யினும் பேதமுடையதாக வளர்த்தவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் தோற்றுவதில்லை. ஆனால் அது பிறர் கண்கட்கு விஷமமுள்ளதாக, மரியாதைத் தாழ்வானதாகப் படுகின்றது. அதற்கு யாரென்ன செய்யலாம்?

இங்கு என் மாமனாரின் மௌனநிலையை என்னென்று கருத? எவ்வாறு அதற்கு அர்த்தம் கற்பிப்பது? இது தான் பெரியகஷ்டம். சில குடும்பங்களில் தலைவர்கள் எதற்கும் உம்-உம்-என்று மௌன நிலையாகவே உத்தரம் சாற்றுகின்றனர். அதற்குப் பொருள் என்னவென்றே தெரிகிறதில்லை. ஒப்பினரென்றோ, ஒப்பவில்லையென்றோ எவ்விதமாகவும் கருதக்கூடவில்லை. யோசிப்போம்—பார்ப்போம்—நல்லது கவனிக்கிறேன்—வந்தாலும் வரலாம்—ஆகட்டும் என்று இவ்விதமே பிடிகொடாதவாறாகச் சிலர் பேசத்தொடங்கி, அதில் ஏதோ தங்கட்கு மிக்க கௌரவம் ஏற்பட்டுவிடுவது போல் கருதிக் கொள்கின்றனர். இரவு போஜனத்திற்கு வருகிறீர்களா என்றால் ஏதோ பார்க்கலாம் என்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம் செய்வது? வருவார் என நம்பி யாவும் சித்தமாய் வைத்திருந்தால் அந்த

---

190. உலகம் என்பது யாது? நாமும் நம்மால் அறியப்படும் பொருள்களும் ஆம். முயற்சியுள்ளவனுக்கே உலகம்.

சமயம் வருவதில்லை. வரார் எனக் கருதி வெறுமனே இருந்துவிடின் இரவு ஒரு மணிக்குமேல் வந்து கதவைத்தட்டுகிறார்கள். அந்நேரத்தில் என்ன தயாரித்துப் பரிமாறுவது? நான் தான் வருவதாகக்கூறினேனே—நீங்கள் கவனிக்கவில்லை—என்று கதைகளை யாரம்பித்துக் கொள்கிறார்கள். எப்பக்கம் செல்லினும் படுகுழி! எதில் வீழ? எதற்காக இத்துணைப் பிடிவாதமோ?-வஞ்சக நிலையோ?—பிடிகொடாத சொல்லோ?-இரண்டர்த்தமாய் இயம்புவதோ?-என்ன இதில் கௌரவமோ? இவ்வகையில் என் மாமனாரின் மௌனத்தை எவ்விதமாகக் கொள்வதோ? ஏதோ அவர் மனம் திரும்பியிருப்பதாகவே என்பிதா சிறிது நம்பிக்கை கொண்டார். சுந்தரியும் அவ்விதமே கருதினாள். என் மனதோ ஊசலாடிய நிலையில் நின்றது. உண்மையில் அவர் கோபமுள்ளவராகில் தமது குமார்த்தியைத் தம்முடன் இட்டுச் சென்றிருக்க வேண்டும். அவ்விதம் செய்யாதுவிட்டுச் சென்றதே இங்கு சாதகமாகவும் சிந்திக்க இடம் வைத்தது. வஞ்சகர்கள் தங்களின் காரியங்களில் பேதம் நினைக்க இயலா வண்ணமாக வெளிப் பார்வைக்குத் தாங்கள் உத்தமர்களாகத் தோற்றிக் கொள்வதற்கு ஆங்காங்கு சில மாயப்பொடிகளைத் தூவிவைத்து விடுகிறார்கள். அவர்களைப் பற்றிப் பேதமாக நினைக்க முயல்கையில், இவ்வஞ்சக—மாயப் பொடிகள்-சந்துகள்-இடையே குறுக்கிட்டு நமது நினைப்பை உறுதிகெடவிட்டுச் சலிக்கச் செய்து—"அவர்களும் வஞ்சகம் நினைப்பார்களா? ஒருகாலும் இராது—நாம்தான் பேதமாய் நினைக்கிறோம்"—என்று நம்மையே நாம் குத்திக்கொண்டு புத்திசொல்லிக் கொள்ளும்படியான வகையில் மனத்தை அலைக்க வைத்துச் சிந்தனையைச் சிதறச் செய்து விடுகின்றது.

இது இங்ஙனமாக, மறுநாட்காலையில் என் பிதா சுந்தரியை வண்டிவைத்து அழைத்துச் சென்று அவளுடைய பிதாவின் வீட்டில் விட்டுவிட்டார். அதன்பின்பு எவ்விதமான ஸம்பாஷணைகளும் நடக்கவில்லை. நான் என் தந்தையிடமே இருந்து கொண்டேன். பிரதிதினமும் சுந்தரியிடம் சென்று வருவேன். இவ்வாறாக நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

---

191. அறியாக் காலத்தில் நம்பிச் செய்வதெல்லாம் பக்தி என்பர். பிறகு அறிந்து செய்வதெல்லாம் ஞானம் என்பர்.

அத்தியாயம்—12

பிரிந்த காதலர்.

(ஜெகநாதர் கூறுவது—முன் தொடர்ச்சி.)

சென்ற அத்தியாயத்திற் கண்ட சம்பவங்கள் நிகழ்ந்த மறு வாரத்தில், மாமனார் வீட்டில் மங்களவாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. வெகு ஜனக் கூட்டம் சூழ்ந்திருந்தது; நானும் தந்தையுமாக ஏதோத்ஸவ மொன்றுக்குச் சென்றுவிட்டு மாலையில் திரும்பினேம். மங்களவாத்தியங்கள் கேட்டுத் திகைப்புற்றோம். மிக்க ஐச்வர்யவந்தரான ஒரு கனவானின் குமாரனுக்கு சுந்தரியைத் தரத் தீர்மானித்தான தென்றும் நாளையதினம் முகூர்த்தமென்றும் தெரிந்து கொண்டோம். இனி கோபன்னாவின் முகத்திலேயே நான் விழித்திடேன் எனச் சபதம் கூறினார் தந்தை. கோபன்னாவின் அன்றைய மௌன நிலைக்கு இதுதான் பொருள்போலும். என்னே அவரது வஞ்சகம்! ஏதோ அவர் மனம் திரும்பியதாக நினைத்ததும் மண்ணுபது. இனிச் செய்வதென்ன? நான்மட்டும் இரவில் மாமனார் வீட்டுக்குச் சென்று ரகசியமாய் சுந்தரியைச் சந்தித்தேன். என்னைக் கண்டதும் கதறியழுதாள். இருவரும் அந்தரங்கமாய்த் தோட்டத்திற்குச் சென்று ஏதேதோ பேசியவாறு கலங்கினேம். ஒன்றும் முடிவுக்கு வரவில்லை.

நான்.—ஏது மாமா இவ்விதம் வஞ்சகரானார்? இனி என் கதி என்ன? உண்மையை ஒப்புக்கொள்வது அவமானகரமாக இருந்த போதிலும் அதைச் செய்வதே பெருந்தன்மையாகும். அப்பெருந் தன்மையுடன் என் மாதாவின் நகைகளைப்பற்றிய விஷயத்தை அவர் ஒப்புக்கொள்வாரென்று நம்பியே நான் அதைப் பேச முற்பட்டேன். அதற்கு வேற்றுமை கற்பித்து, அவரும் புது வார்ப்படமாய் விட்டார். நாளை உன் விவாக நாள். அது எனக்கு என் வாழ்க்கையின் இறுதி நாள்.

சுந்தரி:—மனம் திரும்புவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அவருக்குக் குறிப்பிடுவதே நேர்முறையாகும். இன்னும் முயன்று பாருங்கள்.

நான்:—இத்துணைக்கடின சித்தம் எங்கும் கண்டதில்லை. ஈன்று வளர்த்த அன்னைகள்கூட அவ்விதக் கடின சித்தங்கள் கொண்டு கல்லுருவாய் விட்ட காட்சிகள் இரண்டோரிடத்துக் கண்டதுண்டு.

---

192. கடவுளைப்பற்றிய வேறு கொள்கைகளை நீ நம்பாவிட்டாலும், "அவர் ஒருவர் உண்டு" என்று அவ்வளவு நம்பு.

என் அனுபவத்தில் மாமாவிடம் நேரே கண்டேன். ஒருவன் தூக்கு முன்னிலையில் தன் பிராணனை விடுகிற சமயத்தில் மற்றொருவன் அக் கவலையே சிறிது மின்றி விருந்துண்டுக் களிக்கின்றான். என் ஜீவியம் மசானத்தில் வைத்துச் சுட்டெரிக்கப்படும் தினத்தில் மற்றொருவன் உன்னை மணந்து ஆநந்த வாழ்வில் அமர்கிறான். ஒருவர் கஷ்டத்தை மற்றவர்கள் எப்படி யறியப் போகிறார்கள்? என்றேன்.

* * * * *

"அறிவதற்கு எவருமில்லா விடினும், எல்லாம் அறிந்த கடவுள் பார்த்துக்கொண்டு தானிருக்கின்றார் அக்கடவுளின் பிரதிநிதியாக வந்த நானும் நெடுநேரமாக உங்களின் ஸம்பாஷணைகளைக் கவனித்துக் கண்ணீர் விட்டவாறு இங்கு நின்றுகொண்டிருக்கிறேன். என்னிடத்தில் வேண்டிய தனக்குவியலுண்டு. உங்களுக்கு என்னால் ஆகும் உதவிகள் அனைத்தும் செய்ய இத்தருணமுதல் என் ஜீவிய இறுதிவரைக்கும் சித்தமா யுள்ளேன்"

என்று கூறிக்கொண்டு ஒரு அழகிய வாலிபன் எங்கள் முன்பு வந்தான். இருவரும் திடுக்கிட்டோம். அவனது நற்குணத்திற்கு வியந்தோம்.

வாலிபன்.—காதலைக் கதைகளில்தான் கண்டேன். நேரில் உணர்ந்திலேன். இன்று உங்களிடத்தில் தெரிந்தேன். காதலுக்குத் தெய்வங்களெல்லாம் துணை நின்றுதவும் என்பார் கதாசிரியர்கள். அவ்விதமே காதலித்த ஸ்திரீ புமான்களுக்குள் விவாகம் நிறைவேறியதாகத் தங்கள் கட்டுக் கதைகளையும் அன்னோர் முடித்துள்ளார். உங்கள் காதலுக்கும் அந்த வெற்றி சித்திக்குமாக.

நான்.—என் அன்பனே! என் ஏழ்மையே காதலுக்குத் தடையாயிற்று. மேலும் நான் என் மாமனின் வீட்டிலேயே ஸதா காலமும் இருந்துவிட்டமையால் இவ்வாறு மதிப்பில் தாழ்ந்து கேவலம் ஒரு இலங்கை, மலேயா நாட்டு இந்தியக் கூலிபோல் ஆனேன். நான் வெகுதூர நாட்டிலிருந்து, என் தந்தையும் தக்க நிலையிலிருந்து, அந்த கௌரவத்துடன் இங்குவந்து பெண் கேட்டிருப்பின் உடனே தர என் மாமனார் சித்தமாய் விடுவர். நான் என் மாமனது வீட்டிலேயே இருந்துவிட்டதில் கொல்லைப் பச்சிலை மருந்துக்கு உதவாதென்பதுபோல, நானும் அவர் கண் முன்பு அல்பமானவனாகிவிட்டேன். அவரது மனோபாவமே மாறிவிட்டது. தென்னை மரத்திலேற ஒருவனைச் சிறிது தூக்கிவிடலாம். உச்சிக்குப் போகும் வரையில் தூக்கிவிட முடியாது. அவரது பாதங்களிலும் வீழ்ந்து வணங்கினேன். அதற்குமேல் என்ன விதமாய் அவரைப் பிரார்த்

193. "கடவுள் செயல்" என்பதை ஒப்பாதவன் கூட, தன் ஸக்திக் குறைவை ஒப்புக்கொள்கிறான். அதுவே கடவுள் செயல்.

நித்துங்கொள்வது? இனி அவர் சித்தத்தின்படி யென்று விட்டுவிட வேண்டியதே—எனக்கூறி, ஆதிமுதல் நடந்தவைனத்தும் சவிஸ்தாரமாக நவின்றேன்.

வாலிபன்.—சுதந்தரக் காதலின் பொருட்டு நாம் தியாகம் செய்யக்கூடாதது ஒன்றுமே யில்லை யென்கிற உணர்ச்சி உங்களுக்கு ஏன் இன்னும் உண்டாகவில்லை? எதற்காக இன்னும் மாமா, மாமா—என்று உட்பட்டுக் கிடக்கிறீர்கள்? உங்களுக்கும் சம்மதம், உங்களின் காதலிக்கும் சம்மதம், அவ்வளவு தான் இங்கு வேண்டிய விஷயம். நீங்கள் இருவரும் விதிமுறைப்படி மணந்துகொள்ளவும், வாழ்க்கையில் அமரவும், அதன் பின் ஜீவியம் நடத்தவும் வேண்டிய திரவியத்தை நான் வழங்குகின்றேன். என் கண்கள் குளிர, உள்ளம் புளகிக்க நீங்கள் ஆநந்தவாழ்வி லிருப்பதைக் காண்பது எனக்கு மகா பாக்கியம். பொருளும் போகங்களும், போலி உறவின் முறைகளும்சுதந்தரத்துடன் ஒப்பிடுகையில் துரும்புபோல்பாவிக்கப்படும். சரீரத்துக்குச் சுதந்தர மில்லாமலிருப்பினும் ஆத்மா சுதந்தரமுள்ளதென்பது நம்மையாள வந்த மஹாத்மாவின் உபதேசம். உங்களுடைய காதலிபக்கத்தின் முடிவான நோக்கம் பலிக்கும்படிசெய்ய, உங்கள் மனசாக்ஷிப்படிக் காரியங்கள் நடத்துதற்கு சக்திகளைத் தேடிக்கொள்ளுங்கள். விசனித்துக் கொண்டு கிடந்ததை விட்டு இனியேனும் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்ய முற்படுங்கள். இன்றிரவே புறப்படுங்கள். நூறு மைல்களுக்கப்பாலுள்ள ஒரு நகருக்குச் சென்று தேவாலயத்திலே உங்களின் விவாகத்தை நடப்பித்து விடலாம். நாளையதினம் நல்ல முகூர்த்தம். எனக்கு நாளைய தினம் தான் இங்கு விவாகம். அந்த விவாகம் பின்னர் நிகழட்டும். முதலில் உங்களின் விவாகத்தை நானே நடத்தி முடிக்கிறேன். பணம் பத்தும் செய்யும். இன்றிரவு 12-மணி வண்டியில் ஏறினால் நாளைகாலை ஓர் நகரம் சேரலாம். ஆங்கு பணத்தால் யாவும் சித்தமாகித் திருமணமும் நடந்தேறிவிடும். அப்பால் இந்த மாமன் செய்வது என்ன இருக்கிறது? கோர்ட்டுக்குப் போனால் போகட்டும். பெண் தானே சம்மதித்து மணந்தாள் என்றும், அதற்கான சுதந்தர வயது வந்துவிட்டதென்றும் நிரூபிக்க நம்மால் முடியும். "நான் வரேன்—கிறிஸ்து மதத்தில்தான் சேருவேன்" என்று பாதிரிகளின் வசப்பட்ட பெண் நீதிஸ்தலத்தில் கூறுகையில் பெற்றோர் செய்வதென்ன இருக்கிறது? நீதிபதியின் தீர்ப்பும் பாதிரிகள் பக்கத்துக்கு அநுகூலமாகவே பெண்ணின் சார்பாய் முடிந்துவிடுவது பல இடங்களிலும் நேரிற் கண்ட சம்பவம். அதனினும் இது கேடு நிறைந்ததன்று. வேறு யோசனை வேண்டாம். புறப்படுங்கள்.

---

194. விகாரத்தைக் கண்டு நீ விகாரத்தை அடையாதே. உன் சாந்தத்தைக் கண்டு அவர்கள் சாந்தம் அடையட்டும்.

நான்:—என் அரிய நண்பனே! நீ மனிதனா? அல்லது மானிட வுருவம் தாங்கிய தேவபுருஷனா? தேவ தத்துவங்கள் உனது வீர நெஞ்சில் நிறைந்து காண்கின்றன. இந்த அடிமை நாட்டில் சுதந்தர தாகத்துடன் நீ எங்ஙனம் உற்பவித்தாய்?

வாலிபன்:—எங்கணும் சுதந்திர ஜோதி வியாபித்துள்ள இந்நாளில் நீங்கள் எதற்காகப் பேடிகள் போன்றும் கலங்கிக் காதற் சுதந்தரத்தைக் கொலை செய்ய வேண்டும்? என்னைப் புகழ்வது ஒரு புறம் இருக்கட்டும். புறப்படுங்கள் உடனே.

நான்:—என் மாமாவுக்கு நான் துரோகம் செய்யலாமா? பசியுண்டுபண்ணக்கூடிய ஒரு வஸ்துவை ஆகாரத்திற்குப் பதிலாக உட்கொள்ள முடியுமா? விரோதப்படுத்தி கொண்டு இன்ப வாழ்வா? அன்னிய மதத்தைப் புதிதாகத் தழுவினவர்களுக்கு முதலில் விசேஷ ஊக்கம் இருக்குமென்று சொல்லுவார்கள். அவ்விதமே எங்கள் காதலின் வெற்றியிலே எத்தகைய விரோதத்தையும் லட்சியம் செய்யாமல் பிரதமத்தில் ஸந்தோஷிக்க இயலும். ஆனால் பிறகோ பந்து ஜன விரோதத்தைச் சிந்தித்து மனம் மெலியும். அவர்களால் உபசரிக்கப்படாத—ஆதரிக்கப்படாத நிலையில் என்ன சுகம் இருக்கிறது? மாமாவை விரோதிக்க என் மனம் சுலபத்தில் இணங்காது.

வாலிபன்:—மாமா பெரியவர் தான். பெரியவர்களும் கால பேதத்தில் பூர்வ வினையால் வேற்றுமனிதர்களினும் கேடடைந்தவர்களாய் மாறிப் பிடிவாத மூர்க்கத்தில் முறண்படுகையில், மனித ஸக்திக்கும் மீறி எவ்வாறு பொறுப்பது? பழய மாமாவாக யிருந்து பழய அன்பு முதிர்ச்சியில் அவர் நின்றனராயின், அப்பொழுது அவரை விரோதித்துக்கொள்தல் நன்றித் துரோகமாகும்? இப்பொழுதோ புதிய மாமா. வேற்றுருவம். அன்பற்ற வடிவம். உருகாத கல் நெஞ்சம். இளகாத கொடூர மனம். விட்டுக்கொடுக்காத பிடிவாதம். மூர்க்க சுபாவ சந்தர்ப்பம். அக்கிரமப் பிரவர்த்தி. தவறு வழியில் சித்தம். சத்தியம் விலகிய பாதை. தர்மம் கருதாத வழி. தயாள மற்ற தன்மை. இவ்வித நிலையில் இன்னும் அவருக்கு உட்படுவதேனோ?

சுந்தரி.—(என்னைப் பார்த்து) அவர் கூறுவது முற்றிலும் சரி. நீங்கள் அவரது வாக்கைப் பரிபாலனம் செய்யுங்கள். இப்பொழுதே ரயிலுக்குப் புறப்படுவோம்: அதுதான் இந்த விபத்திலிருந்தும் தப்புவதற்கு வழி. என் மீது இரக்கம் வைத்து மனம் திரும்புங்கள்.

நான்.—மாமா உன்னை ஈன்று வளர்த்ததற்கு அந்த அருமையை யுணராமல், நேற்றுத் தோன்றிய நப்பக மற்ற அன்னிய

---

195. கீர்த்திக்கே டணம் செலவிடுவர். புண்ணியத்திற்கு ஒதுங்கிடுவர். தற்கால தேச நிலை இதுவே.

னை—நிமிஷத்துக்கு நிமிஷம் மாறக்கூடிய ஒரு காதலனுடன் ஓடி விடுவது நியாயமா?

சுந்தரி.—எந்த அன்னியனுடனும் நான் ஓடவில்லை. என் சொந்தமான—என் பிராணனான—என் கண்ணுக்குக் கண்ணான—என் கற்பக விருக்ஷமான—என் வாழ்வுக்கோர் அணிகலமான—என் ஆசைகட்கு விருந்தான என் பிரிய மாமாவுடன் ஓடுவதன்றி, அவரையே என் பிராணபதியாக நான் வரிப்பதன்றி, வேறெந்தத் துணிகரமும் அக்கிரமமும் செய்துவிடவில்லை—(என்றுகூறி எவ்விதமும் எங்கள் விவாகத்தை நிறைவேற்றி வைத்து எங்கள் காதலுக்குப் புத்துயிர் தரவேண்டுமென்று வாலிபனை நோக்கிப் பிரார்த்தித்து அவனது பாதகமலங்களில் வணங்கினாள்.)

வாலிபன்.—(சுந்தரிக்குத் தைரியம் கூறிவிட்டு என்னை நோக்கி) உங்கள் மாமாவுக்கு நீர் துரோகியாதல் கூடாதென்பது உங்கள் கொள்கை. இங்கு நான் ஒரு உதாரணம் தருகிறேன். விவாகம் செய்துகொள்ள நினைத்து அதற்காக ஏராளமாய்ப் பணத்தை வாரிக் கொட்டுமொருவன், தனது தாய் ஸகோதரர் யாவரும் தனது புது வாழ்க்கைக்குத் துணையாயிருந்து தன்னைச் சுகப்படச் செய்வார்களென்ற நம்பிக்கையினாலேயே துணிகிறான். இத்துணை நம்பியவனை விவாகமான பின்னர் கைவிட்டு, அவனது மனைவியையும் பரமதுவேசியாக நினைத்து நடத்தி, தான் காட்டிய ஸதாகால துவேசம் காரணமாக அவளையும் தன்னிடத்தில் துவேசமுள்ளவளாக ஆக்கிவிட்டு, காலையில் எழுந்ததும் கலகமான நிலையில் வீட்டை வைத்து, தன் குமாரனைப் பார்த்து, "உன் பாடு, அவள் பாடு, நாங்கள் ஏன் நடுவில்—எப்படியாவது போங்கள்—அவளிடத்தில் எனக்கென்ன வார்த்தை?—எப்பொழுது அவள் வந்தாளோ அப்பொழுதே அவளைச் சேர்ந்த மனுஷ்யனாக நீயும் ஆய்விட்டாய்—உனக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை" என்று கூறி விலகிக்கொள்வாராயின், விவாகம் புரிந்தவன்—இது தான் கல்யாண சுகமா?—என்று வாய்விட்டலறவேண்டியதே. இது அவனை நம்பவைத்துப் பின் ஏமாற்றும்,—ஏறவிட்டு ஏணியை வாங்கும்,—துரோகமன்றோ? அதுபோலவே தான் இங்கும் இளமை முதலாய் உங்கட்கே தமது பெண்ணைத் தருவதாக ஆசை வசனங்கள் இயம்பி, நீங்களும் காதல்கூர்ந்து முற்றியபின், இப்போது தர மறுத்து எந்த சண்டாளனுக்கோ நானா விவாகம் செய்ய முயன்றுள்ள துரோகமும், நம்பவிட்டு, ஏறவிட்டு ஏணி வாங்கும் மாதிரிதான். இத்தகைய மாமாவுக்கு நீங்கள் உட்படுகை கூடாது. அப்பெண்ணின் கலங்கிய நிலை என்னால் சகிக்கக்கூடவில்லை. என் கால்களில் விழுந்துக் கெஞ்சுகையில் நான் எட்டியுதைப்

196. வெளிப்படையாய்த் தோற்றாத ஒரு விஷயம், நீ ஸம்சயித்து ஆழ்ந்து அதைக் கவனிக்கையில் உடனே பிரகாசமாகும்.

பது சரியா? அவ்விதம் செய்யுமாறு நீங்கள் நடப்பது ஞாயமா? நேரமாகிறது புறப்படுங்கள். என்னவோ உங்கள் இருவரிடத்தும் எனக்குத் திடீரென்று அன்பு உதித்துவிட்டு உங்களை இப்படிக் கெஞ்சுகின்றேன். இது பகவத் ஸங்கல்பம். அந்தப் பெண் என் கால்களில் வீழ்ந்தாள். நான் அவள் பிரார்த்தனையை நிறைவேற்று மாறு உங்களை வேண்டி உங்களின் கால்களில் விழுந்து வணங்கு கின்றேன் (என்று வணங்கினன்.)

நான்:—என் மாமனரிடத்தில் அவரது அநுமதியின்றி அவரது குமார்த்தியை மணப்பதில்லை யென்று ஆணையிட்டுத் தந்துள்ளேன். அந்த ஆணை நான் கடவேன். இப்பொழுது அவர் மனம் வேறு பட்டுவிடினும், என்னை வளர்த்து இங்கிலேயில் உருவாக்கியவர் அவரே யாவார். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செயதல் கூடாது. அவர் வயிறெரிந்து கொதிக்கையில் என் வாழ்வு நில்லாது. அவரது குமார்த்தி என்னிடத்தில் கொண்டுள்ள காதலினும் பதின்மடங்கு அவள்மீது நான் கொண்டிருக்கின்றேன். ரகசியத்தில் தன் கற்பை எனக்கு அர்ப்பணம் செய்துவிடுவதாக ஆயிரமுறை என்னிடத்து அவள் கூறினள். எனக்கு வேண்டியது காதலேயன்றி, அப் பெண்மணியே யன்றி, அல்பமான சிற்றின்பமும் சேர்க்கையும் எனக்கு, எதற்காக? நான் காமுகனன்று. காமத்தால் கண் கலங்கி அவளது உருவில் மயங்கி அவளை விரும்புகிறேனில்லை. காதலுக்கே அவளை விரும்புவது. அவள் இன்னொருவனது மனைவியாய்விட்ட காலத்தும், என் கடைசிநாள் வரையும் அவளிடத்துக் கொண்ட காதலை நான் மறவேன். அவளது ஆத்மாவும் அவளது காதலும் எனக்கே சொந்தம். அவளது வெற்றுடல் மட்டும் அவளை மணப்பவனுக்குச் சொந்தம். அந்த வெற்றுடலை மணந்து, அந்த உடலினிடத்தே தோன்றும் யௌவனத்தையும் சிற்றின்பத்தையும் அப்புது மணமகன் நுகர்ந்து அநுபவித்துக் கொள்ளட்டும். அவ்வளவே யன்றி அவளது ஆத்மாவையும் காதலையும் அப்புது மணமகன் கொள்ளை கொள்ள எஞ்ஞான்றும் இயலா. நானே ஆடவன்; தனித்து விவாக மின்றி ஜீவியப்போரைக் கழித்து விடமுடியும். அவளோ அவ்வித மன்று. ஒருபெண் தனித்தவாழ்க்கையில் விவாகமற்று நின்றுவிடுகை ஸமூக ஸம்பிரதாய விரோதம். உலக நிந்தைக்கு ஆஸ்பதம். வசைக்கு இருப்பிடம். ஆதலின் என்னைப்போல் விவாக மற்றிருக்கைக் கூடாது. அவளுக்கு விவாகம் நடந்தேயாக வேண்டும். அதற்கு எனது மனஸ்பூர்வமான (?) சம்மதமும் உண்டு. ஆயினும் மனஸ்பூர்வமான என்ற பதப் பிரயோகம் சத்தியமுள்ள தல்ல—பொருந்திய தல்ல என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். வேறு வழி—விதி—

197. உள்ளன்பினர் தம் கடிதத்தில் சச்சரவிடுவதே யன்றி, நேரில் கண்டால் யாவும் பரிகாரமாகி சந்தோஷமாய் வரவேற்க நேர்கிறது.

கதி—யின்மையால் இந்த விஷயம் இப்படித்தான் முடிவுக்கு வரவேண்டியிருக்கின்றது. வேறு பாதையுமில்லை. மீட்சியுமில்லை. என்செய்வேன் ஏழைமானிடப் புழு.

நான்:—(சுந்தரியை நோக்கி) என் கண்ணே! கஷ்டகாலத்தில் உன் ஆதாவைத்தான் நம்பியிருக்கிறேன். நீ எவரை மணப்பினும், கண்யமான முறையில் காதல் மறவாது நின்று, கட்டுப்பாடாகக் கற்பு உறுதிகொண்டு வாழ்வோமாக. இதனினும் கதிமோட்சம் நமக்கு வேறில்லை யென்று கதறினேன்.

சுந்தரி:—என் மாமா! என்ன சொன்னீர்கள்? நான் வேறொருவரை மணக்கவா? தாங்கள் வாயிலிருந்தும் இந்தக் சொல் வரலாமா? நமக்கும் இத்துற்கதி நேருமா? கடவுள் இல்லையா? தர்மம் இல்லையா? நியாயம் இல்லையா? நம் காதல் பாழ்தானு? பாவி நான் உங்கட்கென்ன அபராதம் செய்தேன்? என்னைக் கைவிடக்கூடாது மாமா.

நான்:—என் செய்வேன் என் கண்ணே! எனக்கு ஏதுந் தோற்றிலதே? இவ்வாலிபரின் போதனை மார்க்கத்தில் நடக்கவும் பிரியமே. அவ்வாறு செய்யின் உன் தந்தை என்னிடத்தில் ஒரு சத்தியம் செய்துள்ளார். அதைநான் இதுகாறும் உனக்குக் கூறவில்லை. அதை நினைக்கில் என் உள்ளம் நடுங்குகின்றது.

சுந்தரி:—அது என்ன சத்தியம் மாமா?

நான்:—நீ அன்றிரவு தனித்து என் இல்லத்திற்கு வந்துவிட, மறுதினம் உன்னை உன் வீட்டிற்கு அனுப்பி வைத்தோமன்றோ? அன்று பிற்பகலில் உன் தந்தை என்னை ஒரு தேவாலயத்திற்கு அழைத்துச் சென்று ஈச்வர ஸந்நிதியின் முன்பாக, "ஜெகநாதா! என்னை ஏமாற்றியோ, என்னை யறியாமலோ, என் குமார்த்தியை எவ்விடத்திற்கேனும் அழைத்துச் சென்றோ, என் அநுமதியின்றி நீ அவளை மணம் செய்துகொள்ளத் துணிவாயாகில்—செய்துகொண்டாயாகில்—இந்த ஈசன் அறிய—அதோ எரியும் திருவிளக்கு அறிய—நான் உடனே தற்கொலை செய்துகொண்டு உயிர் விடுவேன். இது சத்தியம் என்று அடித்து ஆணைகள் பல இட்டார். உங்கள் அநுமதியின்றி நான் எதற்கும் துணியேன் என்று நானும் அவருக்கு ஸத்தியம் செய்து தந்தேன். இப்பொழுது இவ்வாலிபரின் பிரியப்படி நடப்பின் அவசியம் உன் தந்தை தனது அகங்காரப் பெருமிதத்தால் குளம் குட்டைகளில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டு விடுவார். இது திண்ணம். அவரது மூர்க்க ஸ்வபாவம் இன்று நேற்றல்ல. என்றுமே தெரிந்துவைத்த சங்கதியே. நம்மிருவரையும் இளமைமுதல் வளர்த்த அவரைக் கொன்றுவிட்டு நாம்

198. சிறைச்சாலை யாவது மிகவும் குறைந்த உணவைக் கொடுத்து நிறைந்த வேலையை வாங்கும் அடிமைத் தொழிற்சாலை.

என்ன வாழ்வு வாழப் போகின்றோம்? இதை என் பிதாவுக்குக் கூறினேன். அவரும் என்னை எச்சரித்து அவன் போனவழி போகட்டும்—பிராப்தம் போல் நிகழட்டும்—நீ துணிந்து ஊர் எங்கும் அபகியாதியை உண்டாக்கிவிடாதே என்றார். இங்கிலேயில் நாம் வேற்றாருக்குச் சென்று விவாகம் முடித்துக் கொள்தல் தகுதியுடைத்தாமா? நமக்கு அதிர்ஷ்டமிருந்து நமது விவாகத்தைக் கேட்டும் அவர் உயிர்த்திருப்பாராகின் அது சந்தோஷமே. ஆனால் என்ன நிச்சயம்? முன்கோபியை—மூர்க்கனை—எவ்விதம் நம்புவது? ஒரு சமயம் அவர் தற்கொலைசெய்து கொண்டு விட்டால் அப்பொழுது என் செய்வது? இது விஷ பரீக்ஷையாகும். விஷம் கொல்லுமா கொல்லாதா வென்று வாயிலிட்டுப் பார்ப்பது போன்ற பயங்கரச் செய்கையாகும். இவ்விதப் பயங்கரத்துடன் செய்துகொண்டிடும் விவாகத்தில் என்ன இன்ப மகிழ்வு நிலவிடப் போகின்றது? என் மோஹன மானே! நீயே யோசி.

சுந்தரி கலங்கினாள். எதுவும் கூற அவளுக்குத் தோன்றவில்லை. வாலிபனும் திகைத்து நின்றான். சில நிமிஷங்கள் வரையில் நிசப்தம். மௌனக்காட்சி.

வாலிபன்:—நான் ஒன்று கூறுகின்றேன். ஏழ்மையினாலன்றோ இத்துணைத் துவேசம்? எனக்குத் தெரிந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் கடை இவ்வூரில் உண்டு. அவரிடம் விஷயம் தெரிவித்துக் கைம்மாற்றாக ஐயாயிரம் ரூபாய் வாங்கித் தங்களிடம் தருகிறேன். இதைத் தங்கள் குமார்த்தியின் பேருக்கு எழுதி வைத்துவிட்டு எனக்குப் பெண் தாருங்கள் என்று சென்று கேட்கக் கூடாதா?

சுந்தரி.—ஆகா! இது சமய உசித சாதுர்யம். செய்து பார்க்கலாம். இத்துணை யன்பு நம்மீது கொள்ள இந்தப் புருஷ சிரேஷ்டர் யார்? இவர் என்ன மனிதனா? அல்லது மாய்கையா?

நான்.—என் அன்பனே! எவ்வளவு சீக்கிரத்தில் நாம் நண்பர்களாய் விட்டோம். சேருங்காலம் வந்தால் அப்படியாய் விடுகிறது. என் தந்தையின் மூலம் அந்த ஐயாயிரத்தையும் அனுப்புவதே மேல்.

வாலிபனும் அதற்கு இசைந்தான். சுந்தரியை இரண்டு மணி நேரம் பொறுத்துத் தோட்டத்திற்கு வருமாறு வீட்டிற்குள் அவளை யனுப்பிவிட்டு இருவருமாகச் சென்று செட்டியாரிடம் ஐயாயிரம் கேட்டோம். எவ்விதமேனும் விவாகம் நடந்தால் தாம் ஒரு கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்துவித்தது போல் மகிழ்வதாய்க் கூறிக் குறித்த ஐயாயிரமும் தந்தார். என்

---

199. சிலர் விவாகமான பின் மனைவி மாமியார் பக்கம் சேர்ந்து கொண்டு, அவர்களைப் பற்றி ஏதாவது பேசிடின் சண்டைக்கு வருகிறார்கள்

பிதாவினிடம் வந்து அதைத் தந்து என் மாமாவிடம் அவளை யனுப்பினேம்.

* * * * *

என் பிதா.—கோபன்ன! நான் ஏழையென்று தானே திரஸ்கரித்தாய். எவ்விதமோ சிரமப்பட்டு என் குமாரனின் விவாகத்திற்காகவேனும் என் பழய பாக்கித் தொகைகளில் ஏதாயினும் வேண்டுமென்று பலரிடம் அலைந்து இந்த ஐயாயிரத்தையும் சேகரித்தேன். இதை உன் குமாரத்தியின் பேருக்கு எழுதிவிட்டு ஜெகநாதனுக்கு அவளைத் தந்து என் ஆத்மாவுக்கு ஒரு திருப்தியைக் கொடு. என் ஜென்மத்தில் நான் கடைசியில் கேட்கும் பிரார்த்தனை இது.

கோபன்ன.—அத்தான்! அது முடியாத விஷயம். ஜெகநாதனுக்கு என் குமார்த்தியைத் தருவதில்லை யென்று ஈச்வர ஸந்நிதியில் ஆணையிட்டு சபதம் செய்துகொண்டேன். என்னைமீறி நீங்கள் எவ்விதமேனும் என் பெண்ணை யபகரிப்பதாகில் உடனே என் வாய்க்குள் சுட்டுக்கொண்டு மடிய இதோ இக்கைத்துப்பாக்கியையும் என்னருகேயே வைத்துக் கொண்டுள்ளேன். இவ்விதம் நான் தற்கொலை செய்துகொள்ளப் போவதைக்கூட ஜெகநாதன் எதிரில் ஈச்வர ஸந்நிதானத்தில் பேசிச் சத்தியம் செய்துள்ளேன். ஒரு சாண் பையனுக்கு அத்தனை வார்த்தையா? அவன் அவளை இழக்க—மறக்கவேண்டியது தான். வேறு விவாகமானல் செய்து வைக்கிறேன். அவனது தாயின் நகைகளையும் போட்டு மேலுக்கு நாலாயிரம் ரூபாயும் செலவிடுகிறேன். ஆனல் என் பெண்ணை மட்டும் நான் தரேன். தெய்வ சாட்சியாக இது சத்தியம். அப்படியே நடப்பேன். அவ்விதம் நிகழாவிடில் உடனே நான் தற்கொலை புரிந்து கொள்தல் திண்ணம். இது ஒரு பரீக்ஷை. எப்படி முடிகிறதென்பதைத் தான் பார்க்கப்போகிறேன். ஜெகநாதனை நான் கைக்குழந்தையிலிருந்தும் வளர்த்ததற்கு என்னைத் தற்கொலை செய்து கொள்ள விடுகிருன? அல்லது என்னை ஜீவிக்க வைக்கிருன? அது தெரியவேண்டும். இன்றிரவு எட்டு மணிக்குத் தோட்டத்திற்குச் சென்ற என் பெண் பத்துமணி வரையும் ஜெகநாதனுடன் பேசிக்கொண்டிருந்தாளென்று விட்டு வேலைக்காரி கூறினள். நான் ஒன்றும் தடுக்கவில்லை. ஏதாகினும் மீறி என் பெண்ணைக் கற்பழிக்கும் பக்ஷத்தில், ரகசியத் தாலி கட்டும் பக்ஷத்தில் என்னைச் சுட்டுக் கொள்ளத் துப்பாக்கியுடன் உட்கார்ந்திருந்தேன். ஒரு மணிக்கு முன்பு தான் என் குமாரத்தி இங்கு வந்தாள். கோயிலில் தற்கொலைச் சத்தியம் புரிந்த துண்டா என்று என்னைக் கேட்டாள். ஆம் என்று கூறி துப்பாக்கியையும் காண்பித்து விட்டு, என்னைப் பச்சைப் பல்லாக்கில் மசானத்துக்கு அனுப்பிவிட்டு அவளை

---

200. கடிதம் எழுதிச் சச்சரவு படுதலைவிட, கடிதம் எழுதாத மவுனநிலை மிக்க ஆறுதல் தாவல்லது.

நீ மணந்து கொள் என்றேன். அவள் அலறியழுதாள். உங்களைச் சுட்டுக் கொள்வதன் முன்பு, என்னையே நான் தற்கொலை செய்து கொண்டுவிட்டால் அப்பொழுது என்ன செய்வீர்கள் என்று கேட்டாள். எவ்விதமேனும் நீ அவனுக்கு மனைவியாகா திருக்க வேண்டியது தான் என் நோக்கம் என்றேன். அவள் மௌனமாய்ச் சென்றாள். இவ்வித என் மனோ நிலையில் நான் உங்கட்கு என்ன விடை கூறுவது? இது பயனற்ற முயற்சி. ஜெகநாதனுக்குத் தருவதை விட ஒரு பறப்பயலுக்குக் கொடுப்பேன்—என்றார்.

என் தந்தை.—குருவியின் மீது இராமபாணம் தொடுத்தது போன்று சிறு பையனாகிய ஜெகநாதனின் மேல் இவ்வளவு வைராக்கியம் வைத்துவிட்டாய். இனி நான் இறந்தாலும் உன் முகத்தில் விழிப்பதில்லை. இதுவே கடைசி முறை உன்னைப் பார்ப்பது—என்று கூறிவிட்டு வெளியில் வந்துவிட்டார்.

சுந்தரி இவற்றையெல்லாம் கண்ணீர் சோர—உள்ளம் வாட அருகே நின்று கேட்டுக்கொண்டிருந்தாள்.

***   ***   ***

ஆகா! இத்துணை விபரீதங்கட்கும் நான் ஆத்திரத்தில் பேசிவிட்ட நகைகளைக் குறித்த அச்சிறு சொல்லன்றோ காரணமாயது? ஒரு சிறு சொல் எத்துணை விரோதங்களுக்கு மூலாதாரமாகிவிடுகிறது? எத்துணைக் குடும்பங்களைச் சின்னபின்னமாகப் பிரித்துவிடுகின்றது. எத்தனை விரோதங்களை எழுப்பி விடுகின்றது? "பாவி மனிதன்—ஒரு நன்மையும் செய்யாதவன்" என்று பிறரிடத்தில் ஒருவனைப் பற்றித் தூற்றும்போது, கேட்கவேண்டியவனுக்கு அவ்வார்த்தை எட்டிவிடுகிறபோது அவன் மனம் என்ன பாடுபட்டுப் போகிறது? ஒரு சிறு சொல் மாமிக்கும் மருகிக்கும் எத்துணை விரோதம்மூட்டிவிடுகிறது. காலமுற்றும் தன்னை ஆதரித்தவனை "தமக்கையின் குமாரன் என்று கருதி நீ ஆதரிக்கவில்லை; உன் மாதாவுக்காகப் பயந்து ஏதோ ஆதரித்ததைத் தவிர வேறில்லை; நீயும் வஞ்சகனே" என்னும்போது, பாடுபட்டு உழைத்தவனின் மனம் எத்துணை ஆயிரம்சுக்கல்களாகச் சிதறிவிடுகின்றது? பெற்ற தாயே தன்னை நம்பாது அன்னியனாகக் கருதித் தூற்றுகையில் அந்தக் குமாரனின் மனம் என்ன பாடு படுகிறது? தன் தமக்கையையிழந்த ஒருவன் மற்றொரிடத்தில் தமக்கை யுறவு கொள்ளப்போக, அதை வேறொரு வஞ்சகன் பிரித்து வேர் அறுத்து வெந்நீர்விடப் பார்க்கையில், அதற்காக அவ்வஞ்சகன் உபயோகிக்கும் விஷமக் கடிதச் சொற்கள் எத்துணைப் பொல்லாப்பினைப்—பிளவை—யுண்டுபண்ணி விடுகிறது! தனது இல்லத்திற்கு வந்தவனை தனது ஏழ்மையுணவில் மனதார

201. நம் எதிரியின் கருத்தைச் சிதைக்க, அவன் இடும் துன்பங்களினால் சிறிதும் கலக்கமுறாமல் அலக்ஷியமாய் இருத்தலே நல்ல வழி.

உபசரித்து அனுப்பியிருக்கையில், அவன் ஊர்சென்று—"நான் இச் சமயம் வந்ததில் சிற்சில இனங்களில் புதிய தினுசாகவே நடந்து கொண்டீர்கள்; பழய அன்பைக் காணமுடியவில்லை; மொத்தத்தில் தாங்கள் முன்போல் இல்லையென்று சொல்லலாம்" என்று கடிதம் எழுதிவிடுக்கும்போது, உண்மையாக நடந்துகொண்டவனின் மனம் எத்துணை வாதனைப்படுகிறது? இவ்விதமே கேட்கக்கூடாத இடத்தில் ஒரு சொல்லைக் கேட்டுவிடுவதில் பிராணனை விட்டுவிடலாமாவென்று தோன்றுகிறது. ஆயிரம் ஒருவருக்குச் செய்யினும் ஒரு சிறு சொல் அவ்வளவையும் வீணாக்கிவிடுகிறது. பிராணனுக்குச் சமமாக அன்பு வைத்த இடத்தில் அன்பற்ற வார்த்தைகள் உதிக்கையில் ஆவியே கலங்கிச் சோர்கின்றது. தான் நம்பிக்கொண்டிருக்கிற இடத்திலிருந்து துவேஸச் சொற்கள் எழுகையில், அவனது வாணாள் மரக்கலமே தத்தளித்துப் போகின்றது. தன்னிடத்தில் சகல நன்மைகளையும் பெற்றுக்கொண்டு ஒருவன் தூற்றுகையில் ஐயோ! கடவுளே என்று வாய்விட்டலறுகிறான். நேற்றுத் தாலி கட்டிக்கொண்டு வந்த ஒருத்தி பல விதமாய் மீறித் தூற்றுகையில் அக்குடும்பத்தில் நெடுங்காலம் இரத்த சம்பந்தத்தோடும் ஒட்டியிருந்தவர்கள் அந்த அன்னியச் சொற்களைக் கேட்பதற்குத் தாளாமல் குடும்பத்திலிருந்து தங்களைப் பிரித்துக்கொண்டு கண் காணாத இடத்துக்குப் போய் வேறாகி விடுகிறார்கள். ஒரு சிறு சொல் ஒருவனைத் தூக்குப் போட்டுக் கொள்ளச் செய்கிறது. ஒரு சிறு வார்த்தை ஒருவனை மனம் வெறுத்து அந்நிய தேசங்கட்கு ஓடிவிடச்செய்கிறது. ஒரு சிறு சொல் பெரிய கலகத்திற்கும், கொலை பழி பாவங்கட்கும் வழிவைத்துவிடுகிறது. தனது உயிருக்குயிராக நினைத்து, தனது சொந்தத் தம்பியென்று மனதார எண்ணி, எவ்வளவோ ஆவலுடனும் ஒருவனுடைய விவாகத்தைக் காணப் பல வருடங்களாகக் காத்திருக்க, அவன் வஞ்சகனாகிப் பேசிவிடுகிற—எழுதிவிடுகிற சொல்லானது அவன் விவாகத்திற்கே போகாதபடி செய்துவிடுகிறது. "அப்படிச் சொன்னானல்லவா என்னை" என்று ஒரு சிறு சொல் காலமுழுதும் கலங்க வைத்துவிடுகிறது. ஒருசிறு சொல் இனி அவர்களின் முகத்தை எக்காலத்துக்கும் பார்ப்பதில்லை பென்று சொல்லவைத்து விடுகிறது. ஒரு சிறு சொல் குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்தது போலாய்விடுகிறது. ஆசையுடன் வீட்டுக்கு வந்திருக்கிறவர்களைப் பார்த்து அன்பற்றுத் தூற்றுகிற ஒரு சிறு சொல், உடனே பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவர்களை ரயிலேற வைத்துவிடுகிறது. ஒரு சிறு சொல்லே ஒருவனைப் பிரிந்திட வைக்கிறது. அந்த ஒரு சிறு சொல்லே ஒரு பெருங்குடும்பத்தை—சச்சரவை—பிரிவினையின்றும் காக்கவைத்து ஒன்றுபடுத்தி

---

202. தேசபக்தி என்றால் குடும்ப விசாரங்கள் ஒழிந்த நேரத்தில் கொஞ்சம் சிரத்தை காட்ட வேண்டிய விஷயமென்று தான் நினைக்கிறார்கள்.

விடுகிறது. அந்திய காலத்தில் ஒருவனுக்குக் கூறும் சிறு சொல் அவ்விதமே காலமுற்றும் உட்பட்டு அவனை அடிமையாக நடக்க வைத்து விடுகிறது. ஒரு சிறு சொல்லே ஒரு பெரும் உத்தியோக பதவியைத் தேடிக் கொடுக்கிறது. அந்த ஒரு சிறு சொல்லே பெரும் பதவியை இழக்கவைக்கிறது. வாழ்வைத் தருவதும் அச்சிறு சொல் தான். வாழ்வை யழிப்பதும் அச்சிறு சொல்தான். இவ்விதமே நெடுக வியாக்கியானிக்கலாம். உலகத்தின் அநுபவங்கள் இவ்வாறான நிலையில் இருக்கையில் என் கெட்ட கால வசத்தால் என் தாயின் நகைகளைக் குறிப்பிட்டுப் பேசப்போக, அதனால் என் காதலை நான் தற்கொலை செய்துகொள்ளும்படியாக நேர்ந்துவிட்டது. ஆ! இது எத்தனைத் துரதிர்ஷ்டவசம்! எதிர்பார்த்துக் காத்த, ஆவல் மிகுந்த, இன்பம் ததும்பிய வாழ்க்கைக்கு இது எத்துணையதோர் பேரிடி? நான் ஏன் அப்படிப் பேசினேன் என்று இப்பொழுது சித்த மழிகின்றேன். இப்போது ஏங்கி என் செய்ய? அந்தப் புத்தி, யோசனை அப்போதிருக்கவேண்டும். ஆத்திரத்தில் கற்பை யிழந்து பின் அங்கலாய்ப்பதால் என்ன பிரயோஜனம்? ஒரு சிறு சொல்லின் வேகத்தையும், அதன் விஷம விளைவுகளையும் ஆழச் சிந்திக்கையில் எப்படியப்பா இந்த உலகத்தில்—குற்றமே காணும் உலகத்தில்—ஜீவிப்பதென்று தத்தளிக்கவைத்து விடுகின்றது. ஒரு சிறு சொல்லில் இத்துணைக் கேடுபாடுகள் நிறைந்துள்ளன வென்பதைச் சிந்தித்து வெகு ஜாக்கிரதையுடன் அதைச் செலவிடுங்கள். என் அநுபவத்திலிருந்தும் நீங்கள் இந்த எச்சரிக்கை பெறுங்கள்.

*** *** ***

மறுபடியும் நாங்கள் மூவரும் தோட்டத்தில் சந்தித்தோம். ஆ! கடைசி சந்திப்பு இது. அப்பொழுது இரவு மணி மூன்று இருக்கும். காதல் தோற்றிய பின்பு அதன் நிறைவேறாக் கலக்கத்தாலும் இரவுத்துயில் கெடுகின்றது. நிறைவேறிய காதலிலும் இன்பக் களிப்பால் நித்திராபங்கம் பிராப்தமாகின்றது. காதல் தோன்றா முன்னும், தோன்றி அதன் அலைகள் ஓய்ந்து கிழமான பின்னுமே சுக நித்திரைக்கு இடமேற்படுகிறது.

நான்.—என் பிரிய சுந்தரி! இனி நமது முடிவு என்ன? என்று புலம்பினேன்.

சுந்தரி.—என் மாமா! நான் தற்கொலை செய்துகொள்ள இஷ்டப்படுகிறேன். ஆனால் படித்துவிட்ட பாழும் படிப்பினால் மத விரோதமான அத்தீய செயலுக்கு அஞ்சுகிறேன். பிசாசாகத் திரிந்து ஸஞ்சரித்து அவதிப்படக் கலங்குகிறேன்.

203. தூக்கு சிக்ஷை:— கடவுள் அளித்த உயிரை மனிதன் அழித்து விடுகிறான். அப்படிச் செய்வது நியாயமென்று தர்மமென்று நினைக்கிறான்.

வாலிபன்.—என் அன்பரே! கண்ணியமுள்ள கற்பரசியே! உங்கள் இருவருக்கும் ஈச்வர சாக்ஷியாக நான் இங்கு சில வார்த்தைகள் கூறுகிறேன். என்னை இன்னானென்று உங்கட்கு இன்னும் தெரியவில்லை. நீங்களும் இன்னாரென்று உணராமலேதான் இத்தனைப் பேச்சுகளையும் நடத்தினேன். என்னால் ஆனமட்டும் மனஸ்பூர்வமாகப் பாடுபட்டேன். விஷயம் மூர்க்கத்தனமான பிடிவாதத்தில் மூழ்கி நிற்கிறது. ஜெகநாதருக்குக் கொடுத்த ஐயாயிரம் ரூபாயையும் நான் திரும்பிப் பெறமாட்டேன். திரும்பித் தர வரின் நமது நட்பு முறிந்ததென்று கொள்ளவேண்டும். நம் அன்பு என்றும் பிளவுபடாது நீடூழிகாலம் நிலைத்திருப்பதாக. ஒரு ஆச்சரியகரமான விஷயமொன்று சிறிதுநேரத்திற்கு முன்புதான் அறிந்துகொண்டேன். பெண்கள் நாயகமே! உனக்கு நாளையதினம் விவாகமன்றோ? உன்னை மணக்க வந்துள்ள துன்மார்க்கனை, பாதகனை, உன் காதலையும் உன் நெடுநாட் சிந்தனைகளையும் கொலைசெய்திடத் தோன்றியுள்ள கிராதகனை நீ நேரில் அறிவாயா? அப்பாவியின் முகம் உனக்குத் தெரியுமா?

சுந்தரி.—அவரை என்றும் நான் கண்டதில்லை. விவாகப் பிரயத்தனங்கள் எனக்குக்கூடத் தெரியாமல அத்தனை மர்மமாக நடந்திருக்கின்றன. என் பிதா மிக்க கபடமுள்ளவராகிவிட்டார். இன்று மத்தியானத்துக்கு மேல் தான் விவாகம் என்று எனக்குத் தெரியும். நிச்சயதார்த்தம் செய்து கொள்வதற்காக மங்கள வாத்தியங்கள் தொனித்தன. என்னைச் சிங்காரிக்க வருகையில் நான் அதற்கு ஒப்பாது கிணற்றில் வீழ்ந்து விட்டதால், என்னைத் தூக்கி எடுத்துப் போன என் பிராணனை இந்த உடலில் மீண்டும் புகுத்த நெடுநேரமாயது. ஆதலின் நிச்சயதார்த்தம் நடக்கவில்லை. இந்த விஷயம் வீட்டுக்கு அப்பால் வெகு தொலைவில் இத்தோட்டத்தில் நடந்ததால் என் பிதா எவருக்கும் தெரியாவண்ணம் மறைத்து விட்டார். விவாகத்திற்கென வந்திருப்போருக்கு இது விஷயம் தெரியாது. நாளை விவாகத்திற்கு இன்று நிச்சயதார்த்தம் அத்துணை ஆவசியகமில்லையென்று கூறிச் சமாளித்துவிட்டாா.

வாலிபன்.—கிணற்றில் கூட விழுந்து விட்டனையா? ஐயோ! பாவம். பெண்மணி! உன்னை மணக்க வந்த சத்துரு நான் தான் என்றும், எனக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட பெண் நீ தான் என்றும் சிறிது நேரத்திற்கு முன்பு தான் அறிந்தேன். இனி உன்னை மணந்த பின்னரே நான் காதல் கொள்ளவேண்டும். இது சுவையற்றது. ஜெகநாதரைப் போலக் காதல் கொண்டு மணத்தலே சுவை மிகுந்தது ஆயினும் காதலித்து ஏமாறிப் புண்ணுவதிலும், கா

---

204. ஒரு காரியத்தைப் பூர்த்தியாகச் செய்ய எண்ணினால், துளியேனும் மனதில் சஞ்சலம் அடையக்கூடாது. அடையின் யாவும் பாழ்.

தல் கொள்ளாதிருந்து புதிதாய் மணந்து அதன் பின் காதல் பாராட்டுவதில் வீண் சஞ்சலத்திற்கும் ஏமாற்றத்துக்கும் இடனின்றித் தப்புவிக்க வழியிருக்கிறது. இவ்வொரு நலத்தைத் தவிர்த்து வேறெவ்வித சுகிர்தமும் இதனில் காணப்படா. ஜகநாதருக்கு விரோதமாக நின்னை மணந்து உயிர் வாழ என் உள்ளம் இசையாது. அஃது அறனுமாகாது. எனவே விவாகப் பிரயத்தனத்தை நிறுத்திவிடச் செய்து உன் தந்தையை ஏமாறவைக்க நான் தீர்மானித்து விட்டேன்.

இதனைக் கேட்டதும் நானும் சுந்தரியும் பிரமித்து நின்றோம். ஏதும் பேசத் தோன்றவில்லை.

நான்.—என் அன்பரே! தாங்கள் தானு மணமகன்? ஆச்சரிமே! அதிசய சம்பவமே இது. தங்கட்கே குறிக்கப்பட்ட பெண்மணியை எனக்குத் தீர்மானிக்கவா இத்துணைப் பாடும் பட்டீர்கள். இந்த விதமான சித்தவிருத்தி காணக் கிடைத்தல் அரிது. துக்கத்தின்மேல் துக்கமும் அதிசயத்தின் மேல் அதிசயமும் எழுகின்றன.

வாலிபன்.—உலகில் காணப்படாத சித்தவிருத்தி என்னில் ஏதும் நேர்ந்துவிடவில்லை. சுந்தரியே எனக்குக் குறிப்பிடப்பட்டவள் என்று நான் அறிந்திருந்து, உங்களின் ஸம்பாஷணைகளையும் மறைவிலிருந்து கேட்டு, அதன் மீது உங்களுடைய காதலை நிறைவேற்றுதற்கும் முயன்றிருப்பேனுகில், அந்த வகையில் என் நலத்தை விட்டுக் கொடுத்துப் பிறர் நலமே நாடி, பீஷ்மரைப் போல் நடந்திருப்பேனுகில் என்னைப் புகழ்ந்துகொண்டாடல் தகும், தக்கதுமாகும். இங்கு அவ்விதமில்லை. எவரோ அன்னியரொன்று அம்மட்டில் அன்புணர்த்திப் பாடுபட்டுப் பின் பணத்திற்காகச் செட்டியார் வீட்டுக்குச் செல்லும் மார்க்கத்தில் ஜெகநாதரது மாமனுரின் பெயரை வினவ, அதிலிருந்து அவரது ஒரே பெண்ணையே ஜெகநாதர் காதலித்திருப்பதாகத் தெரிந்துகொண்டேன். அப்பெண்ணையே எனக்குக் குறித்திருப்பதையும் ஊகித்துக் கொண்டேன். ஆதலின் என்னைச் சாமான்ய சித்தவிருத்தியுள்ளவனென்றே கொள்ளல் வேண்டும்.

சுந்தரி.—நீங்கள் ஊகித்துக்கொண்ட பின்னர், உங்களுக்காகவென்று நிச்சயித்துள்ள பெண் என்று தெரிந்த பின்னர், அப்பெண்ணை எவரோ ஒரு அன்னியருக்குத் தர ஐயாயிரம் ரூபாய் செட்டியாரிடம் வாங்க உங்கள் மனம் எப்படித் துணிந்தது? உங்களின் விவாகம் பங்கமடைகிறதென்று தெரிந்து கொண்டுதானே ஐயாயிரம் ரூபாய் வாங்கினீர்கள். இவ்விதமான தேவகுணம் உல

205. ஒருவரது பேச்சிலிருந்தும் மனோநிலை விளங்கும். மனோநிலைமைக்கேற்ப அவர் செயலும் சொல்லும் இருக்கும்.

கில் அரிதன்றோ? நீங்கள் மனித குணத்தைக் கொண்டில்லையே யென்றும், கேவலம் தேவகுணத்தை ஏற்று நிற்கின்றீர்களே யென்றுந்தான் உங்களை இங்கு இகழ்கின்றோம்.

வாலிபன்.—அன்பு நிறைந்தோர் தம்மைச் சேர்ந்தவர்களை ஆகாசத்தில் தான் தூக்கிவைத்துப் பேசுவார்கள். அன்பு தோன்றிக் கொண்டதும் குற்றத்தை யாராய்வதற்குக் கண்கள் இல்லாமல் குருடாய் விடுகின்றது. ஆகலின் மண் என்றும் பொன் என்றும் அந்த அன்புக்குத் தோற்றுவதில்லை.

நான்.—நீங்கள் இருவரும் வாக்குவாதம் செய்து கொள்வது மிக்க ரஸமுடையதாகவே இருக்கின்றது. என் பிரிய அன்பனே! எனக்கு ஒரு வரம் வேண்டும். அதை இன்ன தென்று கேளாமலே முன்னதாகத் தருதாய் ஆணையிட்டுக் கூறவேண்டும்.

வாலிபன்.—உங்களிருவரின் காதல் மீது ஆணையாக, கடவுள் மீது ஆணையாக, என் வாழுள் இறுதி வரைக்கும் எதைது கேட்பினும் அவற்றை யெல்லாம் உங்களிருவருக்கும் வழங்கச் சித்தமாயுள்ளேன். வேண்டியது கேட்டுக் கொள்ளுங்கள்.

நான்.—என் வாழுள் இறுதிவரைக்கும் நான் கேட்பதெல்லாம் வழங்குவதாயுரைக்கும் மஹா புருஷனே! ஐயாயிரம் ரூபாய்களை அரைக்கணத்தில் எண்ணித் தீர்த்துத் திரும்பப்பெற மறுக்கும் தேவகுமாரா! என் ஐயனே! நான் காதலித்த கண்மணியை நான் காப்பாற்றவேண்டிய கடமை என்னைச் சேர்ந்திருக்கின்றது. நாளைக்கு அக்கண்மணி வேறு ஆடவனை மணந்து கண் கலங்கினளாயின் என் ஆவி கலங்கும். என் பிராணனை விட்டு விடுவேன். வேறு புது இடத்தில் அவர்களின் மனமறிந்து நடந்து நற்பெயர் பெற இப் பேதைப் பெண்ணுக்கு ஏதும் தெரியா. தாயில்லாக் குழந்தையிது. தகப்பனின் மூர்க்க குணத்தால் தற்போது கொலை செய்யப் படுகிறது. கிணற்றிலும் விழுந்து மடியத் துணிந்து விட்டாள். விழுந்தும் விட்டாள். இப்பொழுதுபிழைத்தெழுந்து நம்முன்பு வந்து நிற்கிறாள். இன்னும் விளையாட்டுச் சுபாவம் அவளை விடவில்லை. மரியாதை யறிந்து நடந்துகொள்ள அவள் இனிதான் கற்றுத் தேற வேண்டும். ஏதும் தெரியாத பேதைக் கிளி. நான் சொன்னபடி நடக்கும் கமலம். என்னை அதிகாரமே செய்து அவள் நடந்துவந்தாள். நான் அவளுக்கு உட்பட்டுப் பணியாள்போல் நடந்துவந்தேன். இத்தகைய குணவதி எனக்கு இல்லையெனத் தீர்ந்துவிட்ட போது, அவள் தக்க இடத்தில் கொடுக்கப்பட்டு மனம் வாடாதிருக்கவேண்டுமே யென்று என்னுள்ளம் தத்தளித்து நிற்கிறது.

---

206. அவனவன் தன் வீட்டுக்காரியத்தளவில் ஒதுங்கிக் கொள்த லென்ற சிந்தனை தேச முன்னேற்றத்துக்குப் பெருந்தடை.

என் பிராண மித்திரரே! நான் காதலித்த இக்கண்மணியைத் தங்கட்கு ஸமர்ப்பிக்கின்றேன். தாங்கள் அவளை மணந்தால் எனக்குப் பரம திருப்தி. நானும் அடிக்கடி வந்து கண்டுபோக வசதி ஏற்படும். எங்களுக்குள் நாங்கள் எத்துணை அன்பு குலாவிடினும், எங்களின் கற்பைப் பற்றிய ஸம்சயம் உங்கள் நெஞ்சில் இந்த ஜன்மத்தில் வந்து புகாது. எங்கள் காலமுழுமைக்கும் தாராளமாய்க் கலந்து கண்ணீர் வடிக்கவும், மனோசாந்தி பெறவும், நீங்கள் அவளுக்குக் கணவரானால் தான் சாத்தியமாகும். தன்னல மறுத்த தியாகியும், தேவகுணம் வாய்ந்தவரும், வீரக்குழந்தையுமான தாங்கள் தான் அவளுக்கு நாயகராகவேண்டும். உங்களின் பாத நிழலில் நாங்கள் இருவரும் இருந்துவருகிறோம். வேறோர் இடத்தில் அவள் வாழ்க்கைப் பட்டால், அவ்வீட்டுவாயிலை மிதிக்க என் கால்கள் கூசும். அதை விடப் பிராணனை விடுவது மேலென்று தோற்றும். நான் ஜீவனுடன் இருக்கவேண்டில் என் கண்மணியைக் காணாது உயிர்தரியேன். ஆதலின் என் ஐயனே! என் அன்பே! என் அரசே! நீர் தான் அவளை மணத்தல் வேண்டும். இதுவே நான் வேண்டும் வரன்.

வாலிபன் ஏதும் கூறத் தோன்றாது கண்ணீர் வடிந்தபடியே திகைத்து மயங்கிக் கலங்கித் தவித்துச் சோர்ந்து வாடி நின்றான்.

சுந்தரி.—ஆபத்ஸகாயரே! தாங்கள் என் ஜீவாதாரமான மாமாவின் வார்த்தைகளுக்கு ஒப்புக்கொள்ளுங்கள். அவளைக் காணாதிருக்க என் மனம் ஸகியாது. வேறோர் இடத்திலாகில் என் கற்பின் மீது ஐயம் கொள்வார். அது நிச்சயத்திலும் நிச்சயம். தேவகுணம் நிரம்பியுள்ள தாங்கள் ஒருவர் மட்டுமே என் கற்பில் ஐயப்படாதிருக்க முடியும். ஒருவருக்கொருவர் காதலித்த கருத்துகள் நிறைவேறாது போய்விடினும், பரஸ்பரம் கண்ணால் காணக்கூடக்கொடுத்து வைக்காத பாபிகளாகவா போகவேண்டும். அந்தப் பாதச்சூழ்வினையும் கூட எங்களுக்குள் நேர்ந்து விடவேண்டாம். உங்களையும் என் மாமாவையும் அன்றி எனக்கு வேறு துணையில்லை. கிணற்றில் விழுந்தவள் அப்பொழுதே போயிருப்பேன். என்னைப் பிழைக்க வைத்துவிட்டு இந்த வேடிக்கைகள் எல்லாம் பார்க்கிறார்கள். மற்றவர்கள் வேடிக்கை பார்க்கட்டும். நீங்கள்கூட வேடிக்கை பார்க்கவேண்டாம் என்று கதறி யழுதாள்.

வாலிபன் நிலத்தைப் பார்த்தவண்ணமாகச் சோர்ந்து உள்ளம் தடுமாறிக் கண்களை மூடியபடி நின்றான்.

நான்:—என் அன்பனே! என் அரசே! என் துணையே

---

207. அன்பு இல்லாமல் மனிதன் வாழ்வது கஷ்டம். தன் கஷ்டங்களைக் கூறி ஆறுதல் பெற ஒரு இடம் வேண்டும்.

என்னை விரோதிக்கக் கூடாதென்று தானே சுந்தரியை மணக்க மறுக்கிறாய். நானே என்னுடையவும், அவளுடையவும் க்ஷேமத்தைக்கருதி சுயநலத்தினாலேயே தூண்டப்பட்டு, உனக்கு அவளை ஸமர்ப்பிக்கும்போது நீ அங்கீகரிக்கத் தடையென்ன இருக்கிறது? ஆதலின் நீ ஆணையிட்டு ஒப்பிய வரத்தைத் தந்தருள்க.

வாலிபன்:—உங்களின் அருங்காதலியைச் நான் அபகரிப்பது நன்றித் துரோகமன்றோ? இந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தம் எது? எந்த நரகில் நான் அவதிப்படவேண்டுமோ? என் மனம் கலங்குகின்றது. இச்செய்கை எனது நட்பைக் காட்டுதலாகாது. வஞ்சக நட்பாகும். இப்பெண்மணியை வேறிடத்தில் கொடுத்தால் நீங்களும் நானும், இப்பெண்மணியும் கூட இப்போதுள்ள அன்புகெடாதிருக்கலாம். சற்றுப் பொறுமையுடன் யோசியுங்கள்.

நான்:—வேறெவரையும நான் நம்பமுடியாது. நீ தான் ஒப்பியாக வேண்டும். அது எனக்குச் செய்த பெரும் நன்றியாகக் கொள்வேன்.

சுந்தரி:—என் மாமாவைக் கைவிட்டு விடவேண்டாம். அவர் ஒரு அறியாத பேதை. என்னையே நம்பிக்கிடந்தவர். கபடம், சூது, வாது எதனிலும் அவர் பழகவில்லை. அதனால்தான் என்னையவர் இழந்துபோனார். மனத்திலுள்ளதை வெளியில் சொல்லிவிடும் குழந்தையைப் போன்றவர். அவரது மனம் புண்படத் தாங்கள் நடக்கவேண்டாம். நீங்கள் இறுதிநாள் வரையும் மாமாவுக்குத் தொண்டராய் ஊழியம் புரியத் தக்கவர் என்பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். என் பிரிய மாமா ஒரு மகத்துவமுள்ளவராக மதிக்கிற ஒருவரிடத்தில் என் கற்பைக் கொடுக்க எனக்கும் சம்மதமே தாங்கள் வேறு பல பல யோசிக்கவேண்டாம்.

நான்:—சுந்தரியே தன் வாய் திறந்து தன் கருத்தைக் கூறிவிட்டாள். இருவரும் மனமொத்துத் தங்களின் அடிமையாகின்றோம். ஒப்புக்கொள்க.

வாலிபன்:—நான் இனிக் கூறுவதென்ன இருக்கிறது? உங்களின் பிரியப்படியே சரி: என் ஜீவகாலமுற்றும் என்னைப் பிரியாதிருப்பதாக சத்தியம் தந்தால் இதனை ஒப்புக்கொள்கிறேன்.

☞ (அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

---

208. சிறிய பத்திரிகை, சிங்காரப் பத்திரிகை, அனுபவப் பத்திரிகை, காவல் பத்திரிகை, விநோதப் பத்திரிகை, நல்ல பத்திரிகை, வெகுகாலப் பத்திரிகை—பிரஜாநுகூலன் பத்திரிகை. அதை நீ நேசி.